திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள்							
91 நாட்கள்	8.72	7.69	10.01	7.51	4.69	8.16	32.64
364 நாட்கள்	10.17	8.90	11.20	8.45	5.05	8.24	29.27
வைப்பு வீதங்கள்							
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்	8.17	9.07	8.81	8.20	5.80	4.94	14.06
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம்	10.46	11.48	10.85	10.05	7.14	5.94	18.49
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம்	11.17	10.06	10.94	8.89	4.93	6.45	23.07
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம்	11.44	10.65	11.27	9.17	5.08	6.67	23.73
தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வீதம்	4.25	4.00	4.00	4.00	3.50	3.50	3.00
தேசிய சேமிப்பு வங்கியின் 12 மாத நிலையான வைப்பு வீதம்	11.00	11.00	10.50	9.83	5.25	5.50	12.00
கடன் வழங்கல் வீதங்கள்							
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் - வாராந்தம்	11.52	11.55	12.09	9.74	5.81	8.61	27.24
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்	13.20	13.88	14.40	13.59	10.29	9.87	18.70
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம்	13.94	14.31	14.54	12.80	8.38	9.48	26.20
மூலதனச் சந்தை							
அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100)	6,228.3	6,369.3	6,052.4	6,129.2	6,774.2	12,226.0	8,489.7
எஸ் அன்ட் பீ எஸ் எல் 20 சுட்டெண் (2004 திசெம்பர் = 1,000)	3,496.4	3,671.7	3,135.2	2,937.0	2,638.1	4,233.3	2,635.6
வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. மில்லியன்)	176,935	220,591	200,069	171,408	396,882	1,173,157	686,602
இலங்கையல்லாதோரின் தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்)	338	17,655	-23,239	-11,735	-51,356	-52,648 (ர)	30,625
சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்)	2,745.4	2,899.3	2,839.5	2,851.3	2,960.7	5,489.2	3,847.2

(ஒள) ஐ.அ.டொலர்களிலுள்ள மொ.உ.உ. மதிப்பீடுகளின் அடிப்படையில்

(க) வெளிநாட்டு ரொடி முதலீடுகள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள் வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

(ங) பன்னாட்டு நாணய நிதியத்தின் வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் வழிகாட்டி (2003)இற்கு இணங்க கொடுகடன் பணியிடலை உள்ளாங்குவதற்காக ஒட்டுமொத்த படுகடன் பணி விகிதங்கள் மீள்வகைப்படுத்தப்பட்டன

(ச) பன்னாட்டு நாணய நிதியத்தின் அலகு கணக்கிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமை

(ஞ) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரையிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியாக பிரதிபலிக்கப்படுகிறது

(ட) உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தை கணிப்பிடுவதற்காக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. கூடையினுள் உள்ளடக்கப்பட்ட நாணயங்களின் நாடுஞடனான பணவீக்க வேறுபாடுகளுக்கு பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதத்தை சீராக்குவதன் மூலம் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிப்பிடப்படுகின்றது

(ண) நிதி அமைச்சின்படி 2020இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2019இன் சில இறைத்துறை புள்ளிவிபரங்கள் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டன

(த) 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரயியல் கையேட்டிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கான வழிகாட்டுதல்களின்படி, 2019இலிருந்து கூரைகடந்த வங்கியியல் அலகுகளில் வதிவாரோர் வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறி உடமைகள் வெளிநாட்டு கடனின் கீழ்வகைப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு வங்கியியல் அலகுகளில் வதிவோர் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறி உடமைகள் உள்நாட்டு கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன

(ந) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் வெளிநின்ற பொதுப் படுகடனை தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை திகதியான, 2022 ஏப்பிரல் 12 இற்கு பின்னர் பல்வேறு நிலுவையிலுள்ள படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரசு படுகடன் நீக்குகின்றது. இடைக்கால கொள்கைக்கு அமைவாக மூலதனவாக்கத்திற்கு உணர்ப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்துடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் இத்தகைய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன.

(ப) அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற நிலுவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ம) கடைசிக் கடன் வழங்குனராக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி முற்பணங்கள் வழங்கும் வீதம்

(ய) சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் கீழ் வரையிலக்கணப்படுத்தப்படுவதுடன் பணத்தொகையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். சந்தை வீதமானது 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரையிலக்கணப்படுத்தப்படுவதுடன் இணங்கப்பட்ட வட்டி வீதம் அல்லாத வர்த்தக கொடுக்கலவாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000இற்கு அதிகமான பகுகடனை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களால் நிறுவப்பட்ட எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மத்திய வங்கியின் நாணயச் சபை சட்டவீதம் மற்றும் சந்தை வீதத்தை தீர்மானிக்கின்றதுடன் அரசாங்க வர்த்தமானியில் ஒவ்வொரு ஆண்டுக்கானதும் திசெம்பர் மாதத்தில் வெளியிடுகின்றதுடன் எதிர்வரும் ஆண்டிற்கும் இது பிரயோகிக்கப்படும். 2023ற்கான சட்டவீதம் மற்றும் சந்தை வீதம் ஆண்டிற்கு 16.97 ஆகும்

(ர) திருத்தப்பட்டது

முதன்மைச் சமூகக் குறிகாட்டிகள்

பௌதிக தோற்றமும் காலநிலையும்

அமைவிடம்

வடஅகலக்கோடு 5^0 55' இற்கும் 9^0 50' இற்குமிடையில்
கிழக்குநெடுங்கோடு 79^0 31' இற்கும் 81^0 53' இற்குமிடையில்

தூரம்

433 கி.மீ. (269 மைல்கள்) வடக்குத் தெற்காக
226 கி.மீ. (140 மைல்கள்) மேற்குக் கிழக்காக

உயரம்

ஆகக்கூடிய உயரம் 2,525 மீற்றர்கள் (8,284 அடி)

பரப்பு

மொத்தப்பரப்பு	:	65,610 ச.கி.மீ.
நிலப்பரப்பு	:	62,705 ச.கி.மீ.
உள்நாட்டு நீர்ப்பரப்பு	:	2,905 ச.கி.மீ.

காலநிலை

தாழ் நிலம்	:	ஆகக் குறைந்தது 24.4^0 செ - ஆகக் கூடியது 31.7^0 செ
மலை நாடு	:	ஆகக் குறைந்தது 18.4^0 செ - ஆகக் கூடியது 26.9^0 செ
ஆண்டு மழைவீழ்ச்சி (சராசரி) மி.மீ	:	2021 : 2,312
		2022 : 1,966

குடித்தொகையும் முக்கிய புள்ளிவிபரங்களும்

குடித்தொகை புள்ளிவிபரங்கள் (அ)

நடுவாண்டுக் குடித்தொகை ('000) (2022)	:	22,181
வயதுப் பரம்பல் ('000) (2022)		
0 - 14 ஆண்டுகள்	:	5,603
15 - 64 ஆண்டுகள்	:	14,840
65 ஆண்டுகளுக்கு மேல்	:	1,738
குடித்தொகை அடர்த்தி (2022)	:	சதுர கிலோ மீற்றருக்கு 354 ஆட்கள்
செப்பமற்ற பிறப்பு வீதம் (2022)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 12.4
செப்பமற்ற இறப்பு வீதம் (2022)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 8.1
இயற்கை அதிகரிப்பு வீதம் (2022)	:	ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 5.0
சிசுமரண வீதம் (2015)	:	ஒவ்வொரு 1,000 பிறப்புகளிற்கு 7.5 (திருத்தப்பட்டது)
தங்கியிருப்போர் வீதம் (2022)	:	49.4%
சராசரி குடியிருப்பு அளவு (2019) (ஆ)	:	3.7 ஆட்கள்

தொழில்நிலை (2022)

தொழிலிலுள்ள ஆட்கள் ('000) (ஈ)	:	8,148
வேளாண்மை	:	26.5%
கைத்தொழில்	:	26.5%
பணிகள்	:	47.0%
அரசதுறை ஊழியர்கள் ('000) (உ)	:	1,394
அரசதுறை	:	84.8%
அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகள்	:	15.2%

வருமானப் பங்கீடு (ஆ)

குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் (2019)	:	0.46
சராசரி குடும்ப அலகு வருமானம் (2019)	:	மாதமொன்றிற்கு ரூ. 76,414
இடைய குடும்ப அலகு வருமானம் (2019)	:	மாதமொன்றிற்கு ரூ. 53,333

வறுமை (ஆ)

நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கிலோ கலோரி (2019)	:	2,120
தலைக்குரிய வறுமைச் சுட்டெண் (இ)	:	14.3 (2019)
	:	16.0 (2016)
	:	22.5 (2012/13)

மனித அபிவிருத்திச் சுட்டெண் (2021)	:	0.782
189 நாடுகளிடையேயான நிலை	:	73
இலங்கை சுவீட்ச சுட்டெண் (2021)	:	0.796
பொருளாதார மற்றும் வணிக காலநிலை துணைச் சுட்டெண்	:	0.825
மக்களின் நல்வாழ்வுத் துணைச் சுட்டெண்	:	0.786
சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண்	:	0.777
பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (2017)	:	75.5 ஆண்டுகள்

கல்வி அறிவு வீதம் (2021) (ஈ)

சராசரி	:	93.3%
ஆண்	:	94.3%
பெண்	:	92.3%

பௌதிக, சமூக மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள்

	அலகு	2022
போக்குவரத்து		
தேசிய வீதிகளின் நீளம் (ஏ மற்றும் பீ)	கி.மீ.	12,225
கடுகதிப் பாதைகளின் நீளம்	கி.மீ.	312.6
தொழிற்பாட்டிலிருக்கும் புகைவண்டிப் பாதையின் நீளம் (2020)	கி.மீ.	1,648
மின்வலு		
மின்னூட்டல் மட்டம் (2016)	சதவீதம்	99.3
தலைக்குரிய மின்வலுப் பாவனை	கிலோ வாற்று மணி	654.6
தொடர்பூட்டல்		
தொலைபேசி அடர்த்தி		
நிலையான இணைப்புக்கள்	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	12.0
செலூலர் தொலைபேசி உட்பட	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	142.0
இணைய அடர்த்தி (ஊ)	ஒவ்வொரு 100 ஆட்களுக்கு	97.7
ஒரு அஞ்சல் அலுவலகத்தினால்		
சேவையாற்றப்படும் சராசரி குடித்தொகை	எண்ணிக்கை	5,365
நிதியியல் உட்கட்டமைப்பு		
வங்கிகள்		
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கிளைகள் (எ)	எண்ணிக்கை	2,924
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளைகள் (ஏ)	எண்ணிக்கை	706
பாவனையிலுள்ள கொடுகடன் அட்டைகள்	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு	9,264
வங்கித்தொழில் அடர்த்தி	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் கிளைகள்	16
ஏனைய நிதியியல் நிறுவனங்கள்		
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கிளைகள்	எண்ணிக்கை	1,832
சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கிளைகள் (ஏ)	எண்ணிக்கை	02
உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் கிளைகள்	எண்ணிக்கை	124
தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், காசு மீள்சுழற்சி பொறிகள் மற்றும் காசு வைப்புப் பொறிகள்	ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு	32

	அலகு	2022
நீர் வழங்கலும் சுத்திகரிப்பும்		
பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர்	சதவீதம்	96.0
குழாய் நீரைப் பெறுவோர்	சதவீதம்	60.4
பொதுக்கல்வி		
பள்ளிக்கூடம் ஒன்று உள்ளடக்கும் பிரதேசம் (ஐ)	ச.கி.மீ.	6.5
மாணவர்/ஆசிரியர் விகிதம் (ஐ)	எண்ணிக்கை	16.8
வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (தரம் 1-9)	சதவீதம்	94.8
ஆரம்ப வகுப்புக்களில் அனுமதி பெற்றோரின் தேறிய விகிதம் (ஒ)	சதவீதம்	95.3
பல்கலைக்கழக கல்வி (ஓ)		
மாணவர்/ஆசிரியர் விகிதம்	எண்ணிக்கை	20.2
வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (வயது 18 -22 ஆண்டுகள்) (ஔ)	சதவீதம்	9.3
க.பொ.த உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு முன்னேற்றம்		
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்	சதவீதம்	62.9
அனுமதி தகுதி பெற்றோரின் சதவீதமாக (2021)	சதவீதம்	22.6
கல்வி மீதான அரச செலவினம் (க)	மொ.உ.உ இன் சதவீதமாக	1.5
பொதுச் சுகாதாரம்		
வைத்தியசாலை படுக்கைகள்	ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு	3.5
வைத்தியர் ஒருவருக்கான நபர்கள்	எண்ணிக்கை	1,054
தாதிகள்	ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு	18.4
சுகாதாரம் மீதான அரசின் செலவினம்	மொ.உ.உ இன் சதவீதமாக	1.3

குறிப்பு : 2022இற்கான தரவுகள் தற்காலிகமானவை

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களம்

(ஆ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டினை (2019) அடிப்படையாகக் கொண்டது

(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டில் 2019இல் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுச் சுற்றில், முன்னர் 2002 ஆண்டின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையிலமைந்த உத்தியோகபூர்வ வறுமைக் கோடானது 2012/13 ஆண்டு குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளைப் பயன்படுத்தித் திருத்தப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினது திருத்தத்துடன் தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணும் திருத்தப்பட்டுள்ளது

(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் காலாண்டு தொழிற்படை அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட புள்ளிவிபரங்கள்

(உ) நிதி அமைச்சின் முகாமைத்துவ பணிகள் திணைக்களத்தின் தரவினை அடிப்படையாகக் கொண்டது.

(ஊ) செல்லிட இணைய சேவைகள் உள்ளடங்கலாக

(எ) மாணவ சேமிப்பு அலகுகள் நீங்கலாக அனைத்து வங்கித்தொழில் பிரிவுகளும்

(ஏ) இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தலுக்கு பிறகு

(ஐ) அரச பாடசாலைகள் மட்டும்

(ஒ) அரச மற்றும் தனியார் பாடசாலைகள் மட்டும்

(ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான பல்கலைக்கழகங்களின் விபரங்கள்

(ஔ) மாணவர்களின் உள்ளக அனுமதிகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது

(க) பொது மற்றும் உயர்கல்வி மீதான அரச செலவினம்

1

பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

1.1 பொது நோக்கு

இலங்கைப் பொருளாதாரமானது பொதுமக்களின் பதற்றம் மற்றும் அரசியல் கிளர்ச்சி இரண்டிற்கும் வழிவகுத்த கடுமையான பொருளாதார இன்னல்களைக் கொண்ட அதன் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகக் கடினமான ஆண்டிற்கு 2022இல் முகங்கொடுத்தது. பொருளாதாரத்தின் வலுவற்ற நிலைப்பாடுகள், நிலைமை மேலும் தீவிரமடையாமலிருப்பதனை முன்கூட்டியே தடுப்பதற்கு அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் உடனடியானதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான கொள்கை முன்னெடுப்புக்களைத் தேவைப்படுத்தின. பரிகார வழிமுறைகள் பரந்தளவிலான குடிமக்களைக் குறுங்காலத்தில் பாதிப்படையச் செய்திருந்த போதிலும் மிகைப் பணவீக்கம் போன்ற கட்டுப்பாடற்ற பொருளாதார உறுதிநிலையற்றதன்மை, மிகவும் ஆழமான மட்டமொன்றிற்குப் பொருளாதார செயற்பாடு சரிவடைதல், பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்குமான மோசமான பின்விளைவுகளுடன் நாடு உலகின் ஏனைய பகுதியிலிருந்து முற்றுமுழுதாகத் துண்டிக்கப்படுதல் போன்ற சாத்தியமான அழிவுமிக்க பின்விளைவுகளிலிருந்து பொருளாதாரத்தையும் பொருளாதார முகவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இவை தேவையாகவிருந்தன. இந்த முயற்சிகளின் விளைவுகள் 2022இன் இறுதியிலிருந்து கைகூடத்தொடங்கின. சமூகப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதனை நோக்காகக் கொண்டு நடைமுறைக்கு சாத்தியமானதொரு சமநிலைக்கு நாடு குறுங்காலத்தில் நிலைமாறிக்கொள்ள முடிந்துள்ள வேளையில் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட உதவிகள் பொருண்மியப்படத் தொடங்கியுள்ளன.

வரவு செலவுத்திட்ட மீதி மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு என்பவற்றில் நீடித்து நிலவிய பற்றாக்குறைகளுடன் கூடிய நிலைபேறற்ற பேரண்டப்பொருளாதார மாதிரியினை நடைமுறைப்படுத்தி உலகளாவிய மற்றும் உள்நாட்டு மூலங்கள் இரண்டிலிருந்தும் தோற்றம்பெற்ற எண்ணற்ற பாதிப்படையக்கூடிய தன்மைகளினால் தடுமாறியதன் காரணமாக 2022இன் ஆரம்பமளவில் பொருளாதாரம் அதன் தாங்கியிருப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தி முடிந்திருந்தது. பொருளாதாரத்தின் உள்ளார்ந்த பலவீனங்கள் கொள்கை பிறழ்வுகளினால் மேலும் தூண்டப்பட்டு நாட்டினைப் பன்முகங்கொண்ட பேரழிவினை நோக்கிச் செலுத்தின. பொருத்தமற்ற நேரத்திலான வரிக்குறைப்புக்கள், சேதன வேளாண்மையைத் துரிதமாக பின்பற்றுவதற்கான முன்னேற்பாடுகளற்ற முயற்சி, கறைபடியாத படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் பதிவினைப் பேணிக் கொள்வதற்கான வீணான முயற்சிகளிற்கு மத்தியில் நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகள் துரிதமாக வற்றிப்போனமை, செலாவணி வீத சீராக்கத்தில் தாமதம் மற்றும் பல்வேறு முன்கூட்டிய எச்சரிக்கைச் சமிக்ஞைகளில் கவனஞ்செலுத்தத் தவறியமை போன்றவை பொருளாதாரம் முழுவதிலும் பாரிய அதிர்ச்சியலைகளுக்குக் காரணமாயின. இதன் விளைவாக, ஏனையவற்றிற்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக்கான தீவிரமான பற்றாக்குறை மற்றும் அழுத்தம் மிகுந்த வெளிநாட்டுப் செலாவணி வீதம் போன்றவற்றுடன் சென்மதி நிலுவையின் மிதமிஞ்சிய அழுத்தங்கள், இலக்கிலிருந்து தொடர்ந்து விலகிச் செல்கின்ற பணவீக்கம், வாழ்வாதாரங்கள் அதிகமாக இழக்கப்பட்டமைக்கு மத்தியில் தளர்வடைந்த பொருளாதாரச் செயற்பாடு, பாரியளவிலான இறைச் சமமின்மைகள், அசாதாரணமான உயர் இடர்நேர்வு மிகையுடன் நிலைபேறற்ற மட்டங்களை அடைந்த பொதுப்படுகடன், வெளிநாட்டு நிதியிடல்களிற்கான அணுகலைத் தடைப்படுத்திய நாட்டிற்கான தரமிடலின் பாரிய தரம் குறைத்தல்கள், முன்னெப்பொழுதுமில்லாதவாறு உயர்வடைந்த சமூகப் பொருளாதார மற்றும் சமூக அரசியல் பதற்றங்கள் மற்றும் சடுதியாக சீர்குலைந்த வியாபார நம்பிக்கை போன்றவற்றினால் நாடு பாதிப்பிற்குள்ளாகியது. அத்தியாவசிய பண்டங்களின் பற்றாக்குறைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பங்கீடு, விரிவடைந்த வாழ்க்கைச் செலவினம் மற்றும் உற்பத்திச் செலவினம், நலனோம்புகை மற்றும் வாழ்வாதாரங்களின் இழப்பு போன்றவற்றிற்கு மத்தியில் வியாபாரங்களும் பொதுமக்களும் ஒரே மாதிரியாக கடுமையான இன்னல்களுக்குட்பட்டனர். இதன்

1

விளைவாக, சமூகக் கிளர்ச்சி சடுதியாக வெளிப்பட்டு அரசியல் உறுதிப்பாடின்மையினைத் தோற்றுவித்து, பொருளாதாரத்தினை முன்னெப்பொழுதுமில்லாத நெருக்கடியிலிருந்து விலக்கி வழிநடத்துவதற்கான கொள்கை முன்னுரிமைகளை மீளவரையறை செய்ய வேண்டிய அவசர தேவையொன்றினை ஏற்படுத்தியது.

கட்டியெழுப்பப்பட்ட சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் 2022 மார்ச்சு ஆரம்பத்தில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்திற்கு ஓர் அளவிடப்பட்ட திருத்தம் அனுமதிக்கப்பட்டது. எனினும், அதன் பின்னரான செலாவணி வீதத்தின் மிதக்கவிடலானது ஊக நடத்தையின் காரணமாக பாரியளவிலான தேய்மானத்திற்கு வழிவகுத்தது. கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்காகவும் வலுவான தொடர்பூட்டல் உபாயத்துடன் இணைந்து 2022 ஏப்பிறலில் மத்திய வங்கி தீவிரமான நாணயக்கொள்கை இறுக்கமாக்கலினைப் பின்பற்றிய வேளையில், 2022 ஏப்பிறலளவில் பயன்படுத்தத்தக்க ஒதுக்குகள் வற்றிப்போனமைக்கு மத்தியில் செலாவணி வீதத்தினை உறுதிநிலைப்படுத்துவதற்கான வழிமுறையினையும் மேற்கொண்டது. இதேவேளையில், வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் போதுமற்றதன்மை மற்றும் அலுவல்சார் ஒதுக்குகளின் கணிசமானளவில் தாழ்ந்த மட்டங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய வங்கியானது முடியுமான வரை உயர்ந்தளவில் வெளிநாட்டு செலாவணியினைச் சந்தைக்கு வழங்கியது. மேலும், பொருத்தமான கட்டுப்பாட்டு வழிமுறைகளினூடாக அத்தியாவசிய இறக்குமதிகளினை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்களை மட்டுப்படுத்தல் போன்ற வழிமுறைகளை மத்திய வங்கி முன்னெடுத்த வேளையில் திருப்பியனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் மாற்றல்கள் மீது உரிமம்பெற்ற வங்கிகளினால் மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் செலாவணி கட்டாயமாக விற்கப்பட வேண்டிய தேவைப்பாட்டினைத் தொடர்ந்ததுடன் ஒரே நாளுக்குள்ளேயான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான நாளாந்த வழிகாட்டலினை வழங்குவதனைத் தொடங்கியது. மேலும், மத்திய வங்கியின் தொடர்ச்சியான நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் பின்பற்றல் காத்திரமான தொடர்பூட்டலுடன் இணைந்து கடுமையான சமூகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தின.

பல மாத கால தயக்கத்தின் பின்னர் அரசாங்கமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவினை நாடுவதற்கு 2022 ஆரம்பத்தில் வழிமுறைகளை முன்னெடுத்தது. பன்னாட்டு நாணய நிதியமானது இலங்கையின் பொதுப்படுகடன் நிலைபேறற்ற மட்டங்களிலிருப்பதாக ஏற்கனவே மதிப்பிட்டிருந்தமையினால் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான ஏதேனும் நிதியிடல் ஆதரவானது பொதுப்படுகடனை மீள்கட்டமைப்பதற்கான முயற்சிகளினால் முன்னிகழ்வுற வேண்டியிருந்தது. அதன் பின்னர், படுகடன் பணிக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான இயலளவில்லாத சிக்கலான நிலையினை அரசாங்கம் எட்டிய போது 2022 ஏப்பிறல் நடுப்பகுதியில் படுகடன் ஸ்தம்பித நிலையொன்றினை அறிவித்ததுடன் அதன்மூலம் இடைக்கால வழிமுறையொன்றாக வெளிநாட்டுப் படுகடன் முக்கியமாக, இருபுடை மற்றும் வர்த்தகப் படுகடன், மீளச்செலுத்தலினை இடைநிறுத்திய வேளையில், வெளிநின்ற படுகடனை மீளக்கட்டமைப்பதற்காக அலுவல்சார் மற்றும் தனியார் கடன்கொடுநர்களின் ஆதரவினை வேண்டிநின்றது. உடனிகழ்வாக, அரசிறையினை மேம்படுத்தல், செலவினத்தைக் கட்டுப்படுத்தல், அரசிற்குச் சொந்தமான முக்கிய வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல், வலு நிரம்பலினைப் பங்கீடு செய்தல் போன்ற பல்வேறு முயற்சிகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளையில் அத்தியாவசிய செலவினங்களுக்காகவும் மிகவும் பாதிப்படையக்கூடிய பிரிவினருக்கு ஆதரவளிப்பதற்கும் இருபுடை மற்றும் பல்புடை பங்காளர்களிடமிருந்து குறைநிரப்பு நிதியினை நாடியது. 2022 செத்தெம்பரில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான அலுவலர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டதனைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட படுகடனின் நிலைபெறத்தக்க இலக்குகளுக்கு ஒத்திசைவாக படுகடனை மீளக்கட்டமைப்பதனை நோக்கி அலுவல்சார் கடன்கொடுநர்களிடமிருந்து நிதியிடல் உத்தரவாதத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் தொடரப்பட்டன. இலங்கையினை மீட்சிப் பாதையிலிடுவதனை இலக்காகக் கொண்ட அதேவேளையில் பல தசாப்தங்களாக நாட்டின் வளர்ச்சி உத்வேகத்தினை மட்டுப்படுத்திய அமைப்பியல்சார் தடைகளைத் தீர்ப்பதனையும் இலக்காகக்கொண்ட பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்துடன் கூடிய ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன் தொகை கொண்ட 48 மாத கால விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை 2023 மார்ச்சில் அனுமதியளித்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பல்வேறு இலக்குகள் அடையப்படவிருப்பதுடன் பொருளாதாரத்தில் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை அடைந்து கொள்வதனை நோக்கிய பாதையில் படுகடன் மீள்கட்டமைப்பினூடாக பொதுப் படுகடன் நிலைபேறான நிலையை மீளமைத்தல் முக்கியமானதொரு நிகழ்வாகவிருக்கும். எனினும், படுகடன் மீள்கட்டமைப்பானது நிதியியல் துறைக்கு குறுங்கால சவால்களைத் தோற்றுவிக்கக்கூடுமென்பதுடன் அவை அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் முன்கூட்டிய அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய தேவையிருப்பதுடன் அதன்மூலம் எதிர்வரும் காலத்தில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு வலுப்படுத்தப்படும்.

அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளும் சீர்திருத்தங்களும் இதுவரையிலும் குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்றுக்கொடுத்துள்ளன. பணவீக்கம் 2022 செத்தெம்பரில் வரலாற்று ரீதியான உச்சத்தினை அடைந்ததனைத் தொடர்ந்து வரவேற்கத்தக்க பணவீக்க வீழ்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளதுடன் வெளிநாட்டுச் செலாவணி வீதமானது

வரைபடம் 1.1


2022இல் சமூகப் பொருளாதார நெருக்கடி, உறுதிப்பாட்டை மீளக்கட்டியெழுப்புவதை நோக்கிய கொள்கை நடவடிக்கைகள் மற்றும் பெறுபேறுகள்



நாணயக் கொள்கையின் கணிசமான இறுக்கமாக்கல்

நம்பகத்தன்மையானதும் வெளிப்படையானதுமான கொள்கை வழிமுறைகள் நெருக்கடி மேலும் மோசமடைவதை தடுத்ததுடன் சமூகப் பொருளாதார உறுதிப்பாட்டை மீட்டெடுத்தன

- சந்தை வழிகாட்டலின் ஊடாக செலாவணி வீதத்தை உறுதிப்படுத்தல்
- படுகடன் ஸ்தம்பிதநிலையின் அறிவிப்பு மற்றும் படுகடன் மீள்கட்டமைப்பை ஆரம்பித்தல்
- அத்தியாவசிமானவற்றிற்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குதல்
- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றிற்கான பேச்சுவார்த்தை
- வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ரூபா திரவத்தன்மை முகாமைத்துவம்
- கணிசமானளவிலான இறை இறுக்கமாக்கல்
- இறக்குமதிக் கட்டுப்பாடுகள் / எல்லை வைப்புத் தேவைப்பாடுகள்
- சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்தல்
- தொடர்ச்சியான நிதியியல் துறை மேற்பார்வை
- அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள்



ஒருங்கிணைந்த கொள்கை நடவடிக்கைகளின் விளைவுகளானது 2022இன் பின்னைய பகுதியிலிருந்து நிகழ்ந்து வருவதுடன் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான உதவி பொருண்மையமாக ஆரம்பிக்கும் வரை நடைமுறைக்கு சாத்தியமான சமநிலைக்கு நாடு நிலைமாறிக் கொள்ள முடிந்தது



1

2022இன் முதலரையாண்டு காலப்பகுதியில் கடுமையாகத் தேய்வடைந்த பின்னர் தொடர்ச்சியாக உறுதியானதாகக் காணப்பட்டதுடன் 2023 ஆரம்பப்பகுதியில் ஒரு பெறுமான உயர்வினைப் பதிவுசெய்துள்ளது. மேலும், அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான திரட்சியுடன் இணைந்து வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மிதமாகக் காணப்பட்டு அதன்மூலம் 2023 மார்ச்சு ஆரம்பத்தில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் நெகிழ்ச்சித்தன்மையினை மீள்நிலைப்படுத்துவதனை இயலச்செய்தது. எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்களின் வழமைக்குத்திரும்புதல் மற்றும் 2023 காலப்பகுதியில் படுகடன் மீள்கட்டமைப்பு பூர்த்தியடைதல் மற்றும் அரச துறையில் பரந்துபட்ட சீர்திருத்தங்கள் போன்றன மேம்பட்டதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான பொருளாதார வாய்ப்புக்களை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கு வழியமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாறு முழுவதிலும் மீண்டெழுந்த அத்தகைய பேரண்டப்பொருளாதார தோல்விகளுக்கு மத்தியில் நாடு புரிந்துகொள்ளத் தவறிய பல பாடங்களை 2022ஆம் ஆண்டின் சமூகப் பொருளாதார நெருக்கடி எடுத்துக்காட்டியது. தரவினை அடிப்படையாகக் கொண்ட கொள்கை உருவாக்கத்தின் இன்றியமையாததன்மை, தற்காலிக கொள்கைப் பரிசோதனைகளின் மோசமான தாக்கங்கள், குறுகிய நோக்கங்கொண்ட ஜனரஞ்சக கொள்கைகளின் கடுமையான நலனோம்புகை மீதான தாக்கங்கள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பகுப்பாய்வுகள், நன்கு தாபிக்கப்பட்ட பொருளாதார அடிப்படைகள் மற்றும் வல்லுனர்களின் அபிப்பிராயங்களையும் புறந்தள்ளிய கொள்கைத் தாமதங்களின் செலவினம் போன்றவற்றினை இந்தப்பொருளாதார நிகழ்வானது மீள்வலியுறுத்தியுள்ளது. காலந்தாழ்த்திய அமைப்பியல் சீர்திருத்தங்களின் ஒரே நேரத்திலான திருத்தத்தின் செலவினத்தினைப் பொதுமக்களும் வியாபாரங்களும் பெருமளவில் தாங்கவேண்டியிருந்தது. இப்பின்னணியில், கடந்த ஏழரை தசாப்தங்களாக பொருளாதாரத்தில் வேரூன்றியிருந்த இடையறாத அமைப்பியல் தடங்கல்களைத் தீர்ப்பதற்கு இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் ஏனைய அனைத்து ஆர்வலர்களும் இன்றியமையாத சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தமது ஆதரவினை வழங்குவது அவசியமாகும். அத்தகைய சீர்திருத்தங்களை நிறைவேற்றத் தவறுவது இடையறாத மீட்டெடுப்புக்கள், வெளிநாட்டுக் கடன்பாடுகளின் முடிவில்லாத சுழற்சி, மீண்டெழுகின்ற படுகடன் மீள்கட்டமைப்புடன் இணைந்து நிலைபேறற்றதும் உயர்ந்தளவிலான தளம்பலடைகின்றதுமான வியாபாரச் சுழற்சிகள் போன்றவற்றிற்கு வழிவகுத்து, குடிமக்கள் மீதான தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்தி, நாடு நீண்ட கால பொருளாதார முன்னேற்றம் மற்றும் செழிப்பினை அடைந்து கொள்வதனைத் தடைசெய்யும். எனவே, எதிர்வரும் காலப்பகுதியில் நெருக்கடியொன்றினைத் தவிர்ப்பதற்கு தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான நாட்டின் முயற்சிகளில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்டவை உள்ளடங்கலாக நிலையானதும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதுமான கொள்கைகள் நேரகாலத்துடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அட்டவணை 1.1

பேரண்டப்பொருளாதார செயலாற்றம் (2018-2022)

குறிகாட்டி	அலகு	2018	2019	2020	2021 (அ)	2022 (ஆ)
உண்மைத்துறை (இ)						
உண்மை மொ.உ.உ. வளர்ச்சி	%	2.3	-0.2	-4.6	3.5 (ஆ)	-7.8
நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உற்பத்தி	ரூ.பில்	15,352	15,911	15,672	17,600 (ஆ)	24,148
தலைக்குரிய மொ.உ.உ. (ஈ)	ஐ.அ.டொ.	4,372	4,082	3,858	3,997 (ஆ)	3,474
வெளிநாட்டுத்துறை						
வர்த்தக நிலுவை (இ) (ஈ)	மொ.உ.உ. இன் %	-10.9	-9.0	-7.1	-9.2	-6.7
நடைமுறை கணக்கு நிலுவை (இ) (ஈ)	மொ.உ.உ. இன் %	-3.0	-2.1	-1.4	-3.7	-1.9
திரண்ட நிலுவை	ஐ.அ.டொ.மில்	-1,102.9	376.6	-2,327.7	-3,966.6	-2,806.1
வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள்	ஐ.அ.டொ.மில்	6,919.2	7,642.4	5,664.3	3,139.2	1,897.6
இறைத்துறை (இ)						
நடைமுறை கணக்கு நிலுவை	மொ.உ.உ. இன் %	-1.1	-3.4 (உ)	-7.5	-7.3	-6.4
ஆரம்ப நிலுவை	மொ.உ.உ. இன் %	0.6	-3.4 (உ)	-4.4	-5.7	-3.7
திரண்ட இறை நிலுவை	மொ.உ.உ. இன் %	-5.0	-9.0 (உ)	-10.6	-11.7	-10.2
மத்திய அரச படுகடன் (ஊ)	மொ.உ.உ. இன் %	78.4	81.9	96.5	100.1	113.8 (எ)
நாணயத்துறை மற்றும் பணவீக்கம்						
விரிந்த பண வளர்ச்சி (M_{2b}) (ஏ)	%	13.0	7.0	23.4	13.2	15.4
தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (M_{2b} இல்) (ஏ)	%	15.9	4.2	6.5	13.1	6.2
ஆண்டுச் சாராசரிப் பணவீக்கம் (ஐ)	%	4.3	4.3	4.6	6.0	46.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மார்ச 2023இல் வெளியிடப்பட்ட (தள ஆண்டு 2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன
(ஈ) 2015 இலிருந்து காலாண்டு சராசரி செலவாணி வீதத்தைப் பயன்படுத்தி கணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்க டொலரின் நியதிகளில் காணப்படும் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது
(உ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன
(ஊ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் கொண்ட திறைசேரிமுறிகள் உள்ளடங்கலாக. இதில், 2017 சனவரி 01 இல் ரூ. 21,778 மில்லியனும் 2022 சனவரி 01இல் ரூ. 25,217 மில்லியனும் முதிர்ச்சியடைந்ததுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 31,446 மில்லியனாகும்.
(எ) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் வெளிநின்ற பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை திகதியான, 2022 ஏப்பிறல் 12 இற்கு பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இடைக்கால கொள்கைக்கு அமைவாக மூலதனவாக்கபட வேண்டுமென கருதப்படுகின்ற பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்துடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி


1.2 2022இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்

உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சியை மறுதலையாக்கிய உள்நாட்டு மற்றும் உலகளாவிய சிக்கல்களுக்கு மத்தியில் இலங்கைப் பொருளாதாரமானது முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியின் அடுத்தடுத்த தாக்கங்களால் பிரதானமாக உந்தப்பட்டு சுதந்திரத்திலிருந்து அதன் ஆழமான பொருளாதாரச் சுருக்கமொன்றை 2022இல் பதிவுசெய்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளிற்கமைவாக, உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021இன் 3.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. தொடர்ச்சியாக நிலவிய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளின் காரணமாக ஆழமாக வேரூன்றிக் காணப்பட்ட இரட்டைப் பற்றாக்குறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நீண்டகால பேரண்டப்பொருளாதார பலவீனங்களானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேலும் மோசமடைந்து காணப்பட்டதோடு காலத்திற்கு பொருத்தமற்றதும் தேவையற்றதுமான வரி மற்றும் வேளாண்மைக் கொள்கைகளின் சீர்திருத்தங்களுக்கு மத்தியில், ஆண்டுகளாக, குறிப்பாக அண்மைய ஆண்டுகளில், இத்தகைய சமநிலையற்ற தன்மைகளை நிவர்த்தி செய்வதில் காணப்பட்ட கொள்கைத் தாமதங்களின் தாக்கத்தை பிரதிபலித்தன. வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகளானது தடைகளுக்குள்ளான நிரம்பல் சங்கிலி, நீண்டகால மின் துண்டிப்பு, இறக்குமதிகளின் மட்டுப்பாடுகளிற்கு மத்தியில் காணப்பட்ட மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உற்பத்திச் செலவின் அதிகரிப்பு போன்றவற்றிற்கு வழிவகுத்து பொருளாதார நடவடிக்கைகள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும், உயர்வடைந்த உலகளாவிய வலு விலைகள் மற்றும் செலாவணி வீத தேய்மானம் என்பவற்றிற்கு மத்தியில் முக்கிய பயன்பாடுகளின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பித்தக்க மேல்நோக்கிய திருத்தங்களானது நிரம்பல்பக்க அழுத்தங்களை அதிகரித்த அதேவேளையில் உயர்வடைந்த பணவீக்கம் மற்றும் வரி அதிகரிப்புக்கள் என்பன மக்களின் செலவழிக்கத்தக்க வருமானத்தைப் பாதித்தன. இப்பின்னணியில், உயர்பணவீக்கத்திற்கும் பொருளாதாரத்தின் மந்தநிலைக்கும் வழிவகுத்திருக்கக்கூடிய முக்கிய பொருளாதார அழிவொன்றை முன்கூட்டியே தடுக்கும் நோக்குடன் அரசாங்கமும் மத்திய வங்கியும் பல்வேறு கட்டுப்படுத்தல் மற்றும் நிவாரண கொள்கை வழிமுறைகளை முன்னெடுத்தன. அண்மைக் காலத்தில் சில கணிசமான திருத்தச் செலவுகள் காணப்பட்ட போதும், சென்மதி நிலுவையின் அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்கான ஏனைய வழிமுறைகளுடன் இணைந்து காணப்பட்ட குறிப்பிடத்தக்க நாணயக்கொள்கை இறுக்க வழிமுறைகளும் எரிபொருள் ஒதுக்கீட்டு முறைமைகளுடன் கூடிய வரி மற்றும் பயன்பாட்டு விலைகளில் ஏற்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத இறைச் சீர்திருத்தங்களும், கேள்விப் பக்கங்களுடன் தொடர்புடைய மிகையான விலை அழுத்தங்களை கட்டுப்படுத்தவும் வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளை மேம்படுத்தவும் வெளிநாட்டு மற்றும் இறைத் துறை அழுத்தங்களை குறைக்கவும் பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவும் உறுதிப்பாட்டை நோக்கி பொருளாதாரத்தை வழிநடாத்தவும் உதவிபுரிந்தன. அதேவேளை, அரசாங்கமானது நிதி ஏற்பாட்டிற்காக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஆதரவை நாடியுள்ளதுடன் இடைக்கால வழிமுறையொன்றாக படுகடன் ஸ்தம்பிதநிலையை அறிவித்து படுகடன் சீரமைப்பு தொடர்பில் இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுடன் பேச்சுவார்த்தையொன்றில் உள்ளது. அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் இத்தகைய விரைவானதும் தீர்வுமிக்கதுமான வழிமுறைகளானது பொருளாதார நடவடிக்கையின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தில் நிலையான நம்பிக்கையை ஏற்படுத்தவும் உதவி புரிந்தன.

2021இன் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சியை மறுதலையாக்கி 2022இல் உண்மைப் பொருளாதாரம் பரந்தளவிலான சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது. 2019இலிருந்து மந்தமான செயலாற்றங்களைக் காண்பித்திருந்த வேளாண்மைத் துறையானது 2022இல் 4.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இது, பிரதானமாக இரசாயன வளமாக்கிகள் மற்றும் ஏனைய வேளாண் இரசாயனங்களின் கடுமையான பற்றாக்குறைகள், அதிகரித்த மூலப்பொருள் செலவுகள்

வரைபடம் 1.2
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

1

அட்டவணை 1.2

நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)

பொருளாதார நடவடிக்கை	ரூ.பில்லியன்		மொ.உ.உ இன் பங்கு (%)		வளர்ச்சி (%)		வளர்ச்சிக்கான பங்களிப்பு (%)	
	2021(இ)	2022	2021(இ)	2022	2021(இ)	2022	2021(இ)	2022
வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி	**949.9**	**906.5**	**7.3**	**7.5**	**0.9**	**-4.6**	**0.1**	**-0.3**
வேளாண்மை மற்றும் காடாக்கல்	812.4	783.4	6.2	6.5	0.8	-3.6	0.1	-0.2
மீன்பிடி	137.6	123.1	1.1	1.0	1.5	-10.5	0.0	-0.1
கைத்தொழில்	**3,937.9**	**3,309.8**	**30.2**	**27.5**	**5.7**	**-16.0**	**1.7**	**-4.8**
சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்	288.0	198.7	2.2	1.7	1.4	-31.0	0.0	-0.7
தயாரிப்பு	2,247.2	1,963.3	17.2	16.3	7.4	-12.6	1.2	-2.2
மின்வலு, எரிவாயு, நீர் மற்றும் கழிவு கையாளல்	230.0	220.0	1.8	1.8	2.2	-4.3	0.0	-0.1
கட்டடவாக்கம்	1,172.8	927.7	9.0	7.7	4.4	-20.9	0.4	-1.9
பணிகள்	**7,414.3**	**7,265.1**	**56.9**	**60.5**	**3.5**	**-2.0**	**2.0**	**-1.1**
மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணிகள் நடவடிக்கைகள்	3,149.8	3,230.3	24.2	26.9	1.3	2.6	0.3	0.6
தகவல் மற்றும் தொடர்பூட்டல்	421.8	415.9	3.2	3.5	18.0	-1.4	0.5	0.0
நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட உரிமை உள்ளடங்கலான உண்மைச் சொத்து நடவடிக்கைகள்	1,375.3	1,163.3	10.5	9.7	7.5	-15.4	0.8	-1.6
தொழிற்தகைமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள்	1,294.6	1,286.3	9.9	10.7	1.8	-0.6	0.2	-0.1
பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள்	1,172.8	1,169.4	9.0	9.7	2.2	-0.3	0.2	0.0
அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்	**12,302.1**	**11,481.4**	**94.4**	**95.5**	**4.0**	**-6.7**	**3.7**	**-6.3**
மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி	735.9	536.5	5.6	4.5	-3.6	-27.1	-0.2	-1.5
சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	**13,037.9**	**12,017.8**	**100.0**	**100.0**	**3.5**	**-7.8**	**3.5**	**-7.8**
வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம்	-294.1	-304.2			12.6	-3.5		
சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்	**12,743.8**	**11,713.6**			**4.0**	**-8.1**		

(அ) மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது (2015 தள ஆண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களம்

அதேபோன்று நிரம்பல் வலையமைப்புக்கள் மீதான இடையூறுகள் என்பவற்றை பிரதிபலித்தது. ஆண்டுக் காலப்பகுதியில், வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட இவ் ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்கு அரிசி, தேயிலை, காய்கறிகள், விலங்கு உற்பத்தி மற்றும் கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியியல் துணைத் துறைகள் பாரியளவில் பங்களிப்புச் செய்த அதேவேளை, எண்ணெய்ப்பசையுள்ள பழங்கள் அத்துடன் காடாக்கல் மற்றும் மரக்குற்றியாக்கல் என்பன வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. 2022இல், மூலப்பொருட்களில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறைகளுக்கும் அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகளுக்கும் மத்தியில், பிரதானமாக கட்டடவாக்கம் மற்றும் தயாரிப்பு ஆகிய துணைத் துறைகளின் நலிவடைந்த செயலாற்றத்தின் காரணமாக கைத்தொழில் துறையானது ஆண்டிற்காண்டு அடிப்படையில் 16.0 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது. வலு நெருக்கடி மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகள் என்பவையும் கைத்தொழில் துணைத் துறைகளின் செயலாற்றத்தை சிக்கலுக்குள்ளாக்கின. கைத்தொழில் துறையின் 28.0 சதவீதத்திற்கு வகைகூறும் கட்டடவாக்கத் துறையானது 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 20.9 சதவீத சுருக்கமொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, மொத்த கைத்தொழில் துறையின் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறும் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகள் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 12.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. 2022இல், தயாரிப்புத் துறையினுள், நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்பு, மற்றும் உணவு, குடிவகைகள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்பு முறையே 58.2 சதவீதம் மற்றும் 14.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்த அதேவேளை, புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் ஏனைய தோல் சார்ந்த உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்புத் துணைத் துறைகள் 8.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, 2022இல் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் 31.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டுச் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றை அறிக்கையிட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைத் தொடர்ந்து பணிகள் துறை நடவடிக்கையில் ஏற்பட்ட படிப்படியான இயல்புநிலை மூலம் ஆதரவளிக்கப்பட்டு 2022இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் பணிகள் துறைகளில் மீண்டெழும் தன்மையான செயலாற்றம் காணப்பட்ட போதிலும், அதன்பின்னர் தீவிரமடைந்த பொருளாதார சிக்கல்களானது பணிகள் துறையின் மேலதிக விரிவாக்கத்தை தடைப்படுத்தி 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 2.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கத்தை தோற்றுவித்தது. ஆண்டு காலப்பகுதியில், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிவகைகள், அதேபோன்று பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து துணைத் துறைகள் முறையே 27.0 சதவீதம் மற்றும் 3.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சிகளுடன் கூடிய வலுவான மீளெழுச்சியொன்றை எடுத்துக்காட்டிய போதும், பணிகள் துறைச் செயலாற்றமானது மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வியாபாரம், நிதியியல் பணிகள், மற்றும் உண்மைத் துறை நடவடிக்கைகள் போன்ற துணைத் துறைகளின் குறிப்பிடத்தக்க சுருக்கங்களால் மட்டுப்படுத்தப்பட்டது.

அட்டவணை 1.3
நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு-முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

விடயம்	ரூ.பில்லியன்		வளர்ச்சி (%)		மொ.உ.உ இன் சதவீதமாக (%)	
	2021(இ)	2022	2021 (இ)	2022	2021 (இ)	2022
1. உள்நாட்டு கேள்வி	**18,901.2**	**25,005.2**	**13.6**	**32.3**	**107.4**	**103.6**
1.1 நுகர்வு	12,434.3	16,700.6	8.4	34.3	70.6	69.2
தனியார்	10,769.7	14,973.3	9.4	39.0	61.2	62.0
பொது	1,664.6	1,727.3	2.3	3.8	9.5	7.2
1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்)	6,467.0	8,304.6	25.1	28.4	36.7	34.4
2. தேறிய வெளிநாட்டு கேள்வி	**-1,301.0**	**-857.5**	**-34.7**	**34.1**	**-7.4**	**-3.6**
பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி	2,980.3	5,187.9	23.2	74.1	16.9	21.5
பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி	4,281.3	6,045.4	26.5	41.2	24.3	25.0
3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)	**17,600.2**	**24,147.7**	**12.3**	**37.2**	**100.0**	**100.0**
4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1)	**5,165.9**	**7,447.2**	**22.9**	**44.2**	**29.4**	**30.8**
தனியார்	6,456.3	8,987.6	19.9	39.2	36.7	37.2
பொது	-1,290.4	-1,540.4	-9.3	-19.4	-7.3	-6.4
5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ)	**-395.5**	**-621.4**	**6.5**	**-57.1**	**-2.2**	**-2.6**
6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)	**1,034.7**	**1,159.5**	**-10.1**	**12.1**	**5.9**	**4.8**
7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)	**5,805.1**	**7,985.3**	**17.7**	**37.6**	**33.0**	**33.1**
8. சேமிப்பு - முதலீட்டு இடைவெளி						
உள்நாட்டு சேமிப்பு - முதலீடு (4-1.2)	-1,301.0	-857.5				
தேசிய சேமிப்பு - முதலீடு (7-1.2)	-661.9	-319.3				
9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ) (உ)	**-661.9**	**-319.3**				

(அ) மொ.உ.உ மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 தள ஆண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான ஏதேனும் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்
(உ) ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் கணிப்பிடப்படுகின்ற மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதியின் வருடாந்த மதிப்பீடுகளுக்காக, இவ்வறிக்கையின் 5ஆம் அத்தியாயத்தின் 5.1ஆம் அட்டவணையை தயவுசெய்து பார்க்கவும். இம்மதிப்பீடானது, செலாவணி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தளம்பலின் காரணமாக, 2022இல் உள்நாட்டு நாணய நியதிகளில் கணிப்பிடப்படுகின்ற அதையொத்தவற்றுடன் வேறுபட்டு காணப்படுகின்றது


மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பெயரளவு நியதிகளில், ஆண்டு காலப்பகுதியில் பாரியளவான சுருக்கியை பிரதிபலிக்கும் வகையில், இலங்கைப் பொருளாதாரம் முன்னைய ஆண்டின் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 37.2 சதவீதமான கணிசமான விரிவாக்கமொன்றை பதிவுசெய்தது. எனினும், வெளிநாட்டுச் செலாவணியின் பாரியளவான தேய்மானத்தின் காரணமாக ஐ.அ.டொலர் நியதிகளில் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவானது 2021இன் ஐ.அ.டொலர் 88.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 77.1 பில்லியனாகச் சுருக்கமடைந்தது. 2022இல் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியும் 2021இன் ஐ.அ.டொலர் 3,997 இலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 3,474க்கு வீழ்ச்சியடைந்தது. செலவின அணுகுமுறைக்கமைவாக. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 69.2 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினமானது 2021இன் 8.4 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 34.3 சதவீதத்தால் விரிவடைந்து, பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த பெயரளவு வளர்ச்சிக்குப் பாரியளவில் பங்களிப்புச் செய்தது. இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட கடுமையான பணவீக்க அதிகரிப்பை பிரதிபலித்து, 2022இல் வீட்டுத்துறைச் செலவினமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.4 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 39.0 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அரசாங்கச் செலவினமும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் முதலீட்டுச் செலவீனம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்காண்டு அடிப்படையில் 28.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கமைய, பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீடானது முன்னைய ஆண்டின் 36.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 34.4 சதவீதத்தில் காணப்பட்டது. உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட பெறுமானத் தேய்வினால் வலுவாக்கப்பட்ட ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்கவொரு விரிவாக்கத்தின் தாக்கத்தையும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளிற்கும் மந்தமடைந்த கூட்டுக் கேள்விகளிற்கும் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகளினதும் தாக்கத்தையும் பிரதிபலித்து, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறை விலைகளில் காணப்படும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேறிய வெளிநாட்டுக் கேள்வி ஆண்டிற்காண்டு அடிப்படையில் 34.1 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டு காணப்பட்டது. இதற்கமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக காணப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் தேறிய பெயரளவு வெளிநாட்டு மீதி 2021இன் -7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் -3.6 சதவீதமாகக் காணப்பட்டது.

1


வலுவிழந்த பேரண்டப் பொருளாதார நிலைப்பாடுகளினால் தொழிலாளர் உற்பத்தித்திறனுக்கு சவால்கள் ஏற்பட்ட போதும் 2022இல் பொருளாதாரத்தில் காணப்படும் தொழிலின்மை மட்டங்கள் சிறிதளவில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. தொழில்புரியக்கூடிய வயதினர் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக காணப்படும் தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக தொழிற்படாத குடித்தொகையின் அதிகரிப்பொன்றுடன் 2021இன் 49.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 49.8 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. ஆண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 71.0 சதவீதத்திலிருந்து 2022இல் 70.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. சாதகமான விதத்தில், பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2021இன் 31.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 32.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. எது எவ்வாறிருப்பினும், 2022இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுக் காலப்பகுதியில் தொழிலின்மை வீதத்தில் அதிகரித்த போக்கொன்று அவதானிக்கப்பட்ட போதும் வருடாந்த தொழிலின்மை வீதமானது 2021இன் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள், இடைக்கிடையோன மின்துண்டிப்புக்கள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளால் ஏற்பட்ட உள்ளீடுகளின் பற்றாக்குறைகள் என்பவற்றால் ஏற்பட்ட நிரம்பல் வழிகளுக்கான தொடர்ச்சியான இடையூறுகள் என்பன ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தொழிலாளர்களின் உச்சகட்ட பயன்பாட்டிற்கு தடையை ஏற்படுத்தி பொருளாதாரத்திற்கான பெறுமதி கூட்டலில் ஏற்படுகின்ற மெதுவடைவிற்கு பகுதியளவில் பங்களித்தன. இதற்கமைய, தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு மொத்த பெறுமதி கூட்டப்பட்டவையின் (2015 விலைகளில்) நியதிகளில் அளவிடப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறனானது 2021இன் தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.768.08 இலிருந்து 2022இல் தொழில்புரிந்த மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.686.57 ஆக 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 1.3
முதலீடு மற்றும் சேமிப்பு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.4
தொழிலின்மை வீதம்



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நுகர்வோர் விலை பணவீக்கம் 2022 செத்தெம்பரில் வரலாறு காணாத உயர்வொன்றை அடைந்து, பின்னர் இறுக்கமான நாணய நிலைமைகளின் தாக்கத்தையும் நிரம்பல்பக்க இடையூறுகளின் படிப்படியான தளர்த்தலையும் உணர்ந்து குறைவடைகின்ற பாதையொன்றைத் தொடங்கியது. 2022 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாதக் காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்கமானது துரிதமான அதிகரிப்பு பாதையொன்றில் காணப்பட்டதுடன் நிரம்பல்பக்க இடையூறுகள், நிருவகிக்கப்பட்ட விலைகளுக்கான துரிதமான சீராக்கங்கள், இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானம் என்பவற்றால் ஏற்பட்ட உணவு, வலு மற்றும் போக்குவரத்துத் துறைகள் என்பவற்றில் ஏற்பட்ட விலை உயர்வுகள் மற்றும் அத்தகையவற்றின் கசிவுத் தாக்கங்கள் போன்ற பல்வேறு துறைகளிலிருந்தான விலை அழுத்தங்களையும் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட நாணயக் கடன் வசதியின் பின்தங்கிய விளைவின் காரணமாக ஏற்பட்ட திரண்ட கேள்வி அழுத்தங்களையும் பிரதிபலித்தது. எனினும், இறுக்கமான நாணய கொள்கையினதும், உணவு மற்றும் வலு என்பவற்றின் விலைகளை தணிப்பதுடன் இணைந்து அத்தியாவசிய இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்தல் போன்ற ஏனைய கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளினதும் கணிசமான தாக்கமானது 2022இன் பின்னைய காலப்பகுதியிலிருந்து முதன்மை பணவீக்கத்தின் வேகத்தை மிதமடையச் செய்ய உதவியது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணால் (கொ.நு.வி.சு, 2013=100) அளவிடப்பட்டவாறான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.1 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 69.8 சதவீதத்திற்கு துரிதமடைந்து பின்னர் 2022 திசெம்பரில் 57.2 சதவீதமாக மிதமடைந்தது. ஒத்த போக்கைத் தொடர்ந்து, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (தே.நு.வி.சு, 2013=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு பணவீக்கம் 2021இன் இறுதியல்

சிறப்புக் குறிப்பு 01
இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை


2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலான உயர்ந்த பணவீக்கமானது ஒரு உலகளாவிய நிகழ்வாகும். தீவிரமான நாணயக் கொள்கைத் தளர்த்தல் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து இறை ஆதரவுகளின் காலம் தாழ்த்திய தாக்கங்கள், உக்ரேனின் மீதான ருசியாவின் ஊடுருவலினால் தீவிரமடைந்த எண்ணெய் மற்றும் எண்ணெயல்லாப் பண்டங்களின் பற்றாக்குறைகள் மற்றும் வழங்கல் சங்கிலியிலான சிக்கல்களுடன் கூடிய இயலளவு வரையறைகள் போன்றவற்றினைப் பிரதிபலித்து உலகளாவிய பணவீக்கம் 2022இல் 8.8 சதவீதத்திற்கு விரைவடைந்தது (ப.நா.நிதியம், 2023). உலகளாவிய மற்றும் உள்நாட்டுக் காரணிகளால் பாதிப்புக்குள்ளாகி இலங்கையும் 2022ஆம் ஆண்டில் முன்னெப்பொழுதுமில்லாத மட்டங்களில் பணவீக்கத்தினை எதிர்கொண்டு சுதந்திரத்திற்குப் பின்னரான அதன் விலைகளில் பாரியளவிலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. எனினும், 2022இன் இறுதிப்பகுதியில் பணவீக்கமானது அதன் உச்சமட்டங்களிலிருந்து மிதமடைவதற்குத் தொடங்கி, பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைகளின் ஆரம்ப அறிகுறிகளைக் காட்டியது. இச்செயல்முறையானது பல்வேறு காரணிகளால் ஆதரவளிக்கப்பட்டு, இறுதியாக எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களிற்கு பணவீக்கத்தினை கீழ்நோக்கிக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பின்னணியில், பல்வேறு தவறான கருத்துக்களும் தவறான விளக்கங்களும் வெளிக்கொணரப்பட்டு குழப்பத்திற்கு வழிவகுத்து பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களைப் பாதிப்பதனால் பணவீக்கம், பணவீக்க வீழ்ச்சி, கடந்தகால உலகளாவிய பணவீக்க வீழ்ச்சிச் சந்தர்ப்பங்களின் பண்புகள் மற்றும் மிக முக்கியமாக இலங்கையில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

பணவீக்கம் பற்றிய எண்ணக்கரு

பணவீக்கத்திலான மாற்றமானது சிலவேளைகளில் விலைமட்டத்திலான மாற்றமாக தவறாக விளங்கிக்கொள்ளப்படுகின்றது. பொதுவிலைமட்டமென்பது ஒரு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்திலுள்ள அனைத்து விலைகளினதும் சராசரியொன்றினால் பிரதிபலிக்கப்படுகின்றது. இலங்கையில் விலைகளின் மட்டத்தின் அளவீடாக பொதுவாக பயன்படுத்தப்படுவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகும். மாறாக, பணவீக்கமென்பது பொது விலைமட்டமானது ஒரு காலப்பகுதியில் அதிகரிக்கின்ற வீதமாகும். இது, பொதுவாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் சதவீத மாற்றத்தினைக் குறிக்கின்றது. ஆகவே, கடந்த காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து பணவீக்கத்திலானதொரு குறைவு பொது விலை மட்டத்திலான குறைவினை கட்டாயமாக குறிக்குமென்பதில்லை. மாறாக, இது பொது விலை மட்டத்தின் அதிகரிப்பிலான வேகத்திலானதொரு குறைவாகும்.

பொதுவாக பணவீக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அளவீடுகள் ஆண்டுக்காண்டு மற்றும் மாதத்திற்கு மாத அடிப்படையிலான மாற்றங்களாகும். பணவீக்கத்தின் மாதத்திற்கு மாத அளவீடானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுமிடத்து, கரிசனையிற் கொள்ளப்படுகின்ற மிக அண்மைய மாதத்தின் விலை அசைவுகள் தொடர்பான ஒரு மதிப்பீட்டினை வழங்குகின்றது. எனவே, இந்த அளவீடானது, 'விலையின் உத்வேகம்', அல்லது 'பணவீக்கத்தின் உத்வேகம்' எனவும் குறிப்பிடுகின்றது.

வரைபடம் சி.கு. 1.1
கொ.நு.வி.சுட்டெண்ணினதும் பணவீக்கத்தினதும் அசைவுகள்



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

எனினும், நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான மாற்றமானது தற்போதைய மாதத்தின் விலை மாற்றங்கள் மற்றும் ஒரு வருடத்திற்கு முன்னர் பதிவிடப்பட்ட விலை மாற்றங்கள் போன்ற இரு காரணிகளில் தங்கியுள்ளது. பின்னைய கூறானது 'தளத் தாக்கம்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இது, ஆண்டுக்காண்டுப் பணவீக்கத்தின் மாற்றத்திற்கு தள ஆண்டில் (அதாவது ஒரு வருடத்திற்கு முன்னர்) மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்திலிருந்து எழுகின்ற பங்களிப்பாகும். கொ.நு.வி. சுட்டெண்ணின் (அடிப்படை: 2013=100)[1] அண்மைய அசைவுகள் மற்றும் ஆண்டுக்காண்டு பணவீக்கம் போன்றவை வரைபடம் சி.கு 1.1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தரப்பட்ட மாதமொன்றில், ஆண்டுக்காண்டுப் பணவீக்கமானது தொடர்புபட்ட மாதத்தின் நுகர்வோர் விலைச் சுட்டெண் (அதாவது திசெம். 2022) மற்றும் 12 மாதங்களிற்கு முன்னர் அதன் பெறுமதி (அதாவது திசெம்.2021) போன்றவற்றில் தங்கியுள்ளது.

மேலும், ஆண்டுக்காண்டு பணவீக்கத்திலான மாற்றமானது தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்திலிருந்து (உத்வேக விளைவு) பன்னிரண்டு மாத காலத்திற்கு முன்னரான காலப்பகுதியின் மாதத்திற்கு மாத அடிப்படையிலான பணவீக்கத்தினை (தளத் தாக்கம்)[2] கழிப்பதன் மூலம் அண்ணளவாக கணிக்கப்பட முடியும்.

1 கொ.நு.வி.சுட்டெண்ணின் (2013=100) தொகுத்தலானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2023 பெப்பிரவரி மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டு கொ.நு.வி.சுட்டெண் (2021=100) இனால் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. கொ.நு.வி.சுட்டெண் (2021=100)இனை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 2023 சனவரியில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது

2 கீழே கணித ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதனைப் போன்று ஆண்டுக்காண்டு பணவீக்கம் (π_t) தரப்பட்ட மாதத்தில் நுகர்வோர் விலைச் சுட்டெண் (p_t) மற்றும் 12 மாதங்களின் முன்னர் அதன் பெறுமதி (P_{t-12}) போன்றவற்றில் தங்கியிருக்கும்.

$$\pi_t = \left[\frac{P_t - P_{t-12}}{P_{t-12}}\right] \times 100 \approx [\ln P_t - \ln P_{t-12}] \times 100$$

ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் கணித ரீதியான பிரதிநிதித்தவமானது மடக்கைப்படுத்தும் போது (ln), இரண்டு அடுத்தடுத்த மாதங்களில் ஆண்டுக்காண்டு பணவீக்கத்திற்கிடையிலான வேறுபாடு பின்வருமாறு எழுதப்படலாம்


$$\pi_t - \pi_{t-1} \approx \{[\ln P_t - \ln P_{t-12}] - [\ln P_{t-1} - \ln P_{t-13}]\} \times 100$$

$$\pi_t - \pi_{t-1} \approx \{[\ln P_t - \ln P_{t-1}] - [\ln P_{t-12} - \ln P_{t-13}]\} \times 100$$

கருத்திற்கொள்ளப்படும் மாறி (அதாவது பணவீக்கம்) சதவீதத்தில் சிறிய எண்ணாகவிருக்கும் போது மாத்திரமே மடக்கைப்படுத்தப்பட்டு அண்ணளவாக்கப்படுவது பொருத்தமானதாகவிருக்குமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1

வரைபடம் சி.கு. 1.2
உத்வேகம் மற்றும் தளத்தாக்கங்களின் நியதிகளில் பணவீக்கத்தின் இயக்கவாற்றல்
(கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டது, 2013=100)



எனவே, பணவீக்கத்தின் பரிமாணத்தினை, விசேடமாக எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையினை, மதிப்பிடுவதற்கு கடந்த ஒரு வருடகாலப்பகுதியின் விலை மட்டங்களிலான அசைவுகள், அதாவது தளத்தாக்கம் மற்றும் விலை மட்டங்களின் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பாதை, அதாவது எதிர்பார்க்கப்படும் விலை உத்வேகம், தொடர்பானதொரு விளக்கத்தினை ஒருவர் கொண்டிருக்க வேண்டும். வரைபடம் சி.கு. 7.2 அண்மைக் காலங்களில் உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் போன்ற நியதிகளில் பணவீக்கத்தின் பரிமாணங்களைக் குறித்துக்காட்டுகின்றது. ஆண்டுக்காண்டு பணவீக்கத்தின் மாதந்த மாற்றமானது, குறிப்பாக ஆண்டுக்காண்டுப் பணவீக்கம் சிறியளவில் காணப்படும் காலப்பகுதியில், உத்வேகத்தின் தாக்கம் மற்றும் தளத்தாக்கத்தின் கூட்டுத்தொகைக்கு அண்ணளவாக்கப்படமுடியுமென்பதனை வரைபடம் விளக்குகின்றது.

இலங்கையின் பணவீக்கத்தின் மூலங்கள்

திறந்த பொருளாதாரமாக இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்கமானது உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கத்தின் தொகுப்பாக விளங்குகின்றது. உள்நாட்டுப் பணவீக்கமானது கேள்விப்பக்கக் காரணிகள், நிரம்பல்பக்க காரணிகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் பணவீக்கம் தொடர்பான பொருளாதார முகவர்களின் எதிர்பார்க்கைகள் போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றது. கேள்விப்பக்கக் காரணிகள் பொதுவாக வளர்ச்சியடைகின்ற பொருளாதாரம், எதிர்கால விலை அசைவுகள் தொடர்பான பொதுமக்களின் எதிர்பார்க்கைகள் மற்றும் பொருளாதாரத்தின் கூட்டுக் கேள்வி நிலைப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதனை இலக்காகக்கொண்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் (அதாவது நாணயக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை) போன்றவற்றின் விளைவுகளாகவுள்ள வேளையில், நிரம்பல்பக்க காரணிகள் அரசாங்கத்தின் நிரம்பல் பக்கக் கொள்கைகள் அல்லது இயற்கை அனர்த்தங்கள், உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் ஏனையவை போன்ற சில வெளியகச் சூழ்நிலைகளின் விளைவுகளாகவிருக்க முடியும். இலங்கை மக்கள் ஒரு கணிசமானளவு இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை நுகர்வு செய்வதனால் நாட்டின் பணவீக்கமானது உலகப் பண்ட விலைகளின் அசைவுகளினாலும் பாதிப்படைகின்றது. மேலும், வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் பணவீக்கத்தினைப் பாதிக்கின்றன. உதாரணமாக, ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்மானமடைவது (அநேகமான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் நியதிகளில் பெறுமதியிடப்படுவதனால்) உள்நாட்டு நாணய நியதிகளில் இறக்குமதிகளின் விலையை அதிகரிக்கும்.

பணவீக்க வீழ்ச்சி என்றால் என்ன?

பணவீக்க வீழ்ச்சி என்பது ஒரு பொருளாதாரத்தில் பொது விலை மட்டத்தின் அதிகரிப்பு வீதத்திலானதொரு மெதுவடைதலாகும். இன்னொரு வகையில், இது ஆண்டுக்காண்டு பணவீக்கத்திலான உறுதியான குறைவாக வரைவிலக்கணப்படுத்தப்பட முடியும். பணவீக்க வீழ்ச்சியென்பது பொதுவாக பணவீக்கம் விரும்பப்பட்ட மட்டத்தினை அடைந்து விலை உறுதிப்பாடு மீட்டெடுக்கப்படும் வரையில் குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையில் இடம்பெறுமொரு செயல்முறையாகும். ஒரு உயர்ந்த பணவீக்க நிகழ்வினைத் தொடர்ந்து வருகின்ற பணவீக்க வீழ்ச்சியானது பொது விலை மட்டத்தின் உறுதியான குறைவினைக் குறிக்கின்ற பணச்சுருக்கத்திலிருந்து வேறுபட்டதென்பதனை கருத்திற்கொள்வது அவசியமாகும். பணவீக்க வீழ்ச்சியானது விலைகள் மெதுவான வீதத்தில் இன்னமும் அதிகரிப்பதனை குறிப்பதுடன் தாழ்ந்த மட்டத்திலான பணவீக்கத்திற்கு வழிவகுக்கும்.

பொதுவாக, படிப்படியான பணவீக்க வீழ்ச்சியானது இறுக்கமான நாணயக் கொள்கையினாலும் அதேபோன்று வழங்கல் நிலைப்பாடுகள் சாதகமாக மாறுவதனாலும் ஏற்படுகின்றது. இறுக்கமான நாணயக் கொள்கையின் குறிக்கோள் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு மீளக் கொணர்வதும் அதன்பின்னர் அதனை நிலைநிறுத்துவதுமாகும். பணவீக்க வீழ்ச்சிக் கொள்கைகள் மெதுவடையும் பொருளாதாரச் செயற்பாடு மற்றும் உயர்வடையும் தொழிலின்மை போன்ற நியதிகளில் குறுங்காலத் தாக்கங்களுடன் தொடர்புபட்டிருக்க முடியும். எனினும், உயர்ந்த பணவீக்கத்தினால் ஏற்படும் திரிபுபடுத்தல்கள் குறைக்கப்படும் நியதிகளில் பொருளாதாரத்திற்கான நீண்டகால நன்மைகள் குறுங்காலத் தாக்கங்களினை எதிரீடு செய்கின்றன. அதேவேளை, நவீன பொருளாதாரத்திற்கு நீடித்த பணச்சுருக்கமானது உயர்ந்தளவில் கேடுவிளைவிக்கக் கூடுமென்பதனால், பணவீக்க வீழ்ச்சி நிகழ்வுகளின் காலப்பகுதியில் எதிர்கால பணச்சுருக்கம் பற்றிய அச்சுறுத்தல்களைப் பற்றி கொள்கை வகுப்பாளர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் (Bernanke, 2012).

உலகளவில் கவனிக்கத்தக்கதான பணவீக்க வீழ்ச்சி நிகழ்வுகள் பல காணப்பட்டன. 1980களின் ஆரம்பத்தில், போல் வொல்கர் (Paul Volcker) ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியின் தலைவராகவிருந்த போது ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்கத்திற்கான குறைப்பானது பரவலாக கலந்துரையாடப்பட்ட பேரண்டப் பொருளாதார விளைவாகும் (வொல்கர் பணவீக்க வீழ்ச்சியென பொதுவாகக் குறிப்பிடப்படும்). 1970களிலும் 1980களின் ஆரம்பித்திலும் ஐக்கிய அமெரிக்காவின் பொது விலைமட்டங்கள் கணிசமானளவு உயர்வடைந்தன. எனினும், ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தீவிரமான நாணயக் கொள்கை வழிமுறைகளினைத் தொடர்ந்து வருடாந்தப் பணவீக்கம் 1980இல் உச்சமட்டமான 13.5 சதவீதத்திலிருந்து 1983 அளவில் 3.2 சதவீதத்திற்கு கீழ் நோக்கிக் கொண்டுவரப்பட்டது. இக்காலப்பகுதியில், ஐக்கிய அமெரிக்காவானது இரு பொருளதார மந்தங்களை எதிர்கொண்டதுடன் இவை பணவீக்க

வீழ்ச்சிக் கொள்கைகளினால் பங்களிப்புச் செய்யப்பட்டதாக கருதப்படுகின்றன. எனினும், "வொல்கர் பணவீக்க வீழ்ச்சியானது" அமெரிக்காவில் 1980களிலும் 1990களிலும் நீண்ட பொருளாதார விரிவாக்கங்களுக்கு அத்திவாரமிட்டது. இதேவேளையில், ஜப்பானும் ஜேர்மனியும் 1970களின் பிற்பகுதியில் ஆரம்பத்தில் உயர்ந்த பணவீக்க மட்டங்களை அனுபவித்தன. எனினும், இரு நாடுகளும் ஏனைய முன்னேற்றங்கண்ட பொருளாதாரத்துடன் ஒப்பிடுமிடத்து தாழ்ந்த பணவீக்கத்தினைப் பதிவுசெய்தன. நீண்ட காலத்தில் பணவீக்கமொன்று நாணயம் சார்ந்த நிகழ்வொன்றாக இருக்குமெனும் புரிதலினை அடிப்படையாகக் கொண்டு, தொடர்புபட்ட அரசாங்கங்களினதும் நாணய அதிகார சபைகளினதும் வலுவான ஒழுக்காற்றானது பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்றது (Nelson, 2007). மேலதிகமாக, உற்பத்தித்திறன் மேம்பாடும் பணவீக்க வீழ்ச்சி செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யமுடியும். காத்திரமான நிரம்பல் பக்கக் கொள்கைகளினூடாக நீண்டகாலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளார்ந்த ஆற்றலின் விரிவாக்கத்தின் காரணமாக கூட்டுக்கேள்வியின் அழுத்தங்கள் குறைக்கப்படலாம். மேலும், 1970களிலும் 1980களின் தொடக்கத்திலும் உயர்ந்த மட்டங்களிலிருந்து உலகளாவிய பணவீக்கத்தின் கணிசமான வீழ்ச்சிக்கான சாத்தியமான காரணங்களாக உயர்ந்த உற்பத்தித்திறன், ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், மற்றும் அதிகரித்த உலகமயமாக்கல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன (Rogoff,2004)


இலங்கையில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சி செயல்முறை

இலங்கையின் பணவீக்கம் 2022 செத்தெம்பரில் 70 சதவீதமானளவிலான (ஆண்டுக்காண்டு) அதன் உச்ச மட்டங்களிலிருந்து மெதுவடையத் தொடங்கி எதிர்பார்க்கப்பட்டதனைப் போன்று பணவீக்க வீழ்ச்சி செயல்முறை தொடங்கியிருப்பதனை உறுதிப்படுத்தியது. பொருளாதாரக் காரணிகளின் நியதிகளில், இந்தச் செயல்முறையானது இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகளின் காரணமாக மெதுவடைந்த கூட்டுக் கேள்வி நிலைப்பாடுகள், உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள், மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம், உலகளாவிய பண்ட விலைகள் வழமைக்குத் திரும்புதல், மற்றும் உள்நாட்டு விலைகளில் அத்தகைய குறைப்புக்களின் காலந்தவறாத ஊடுகடத்தல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புள்ளிவிபர ரீதியில் இந்த பணவீக்க வீழ்ச்சி செயல்முறையானது உத்வேகத்தின் தாக்கம் மற்றும் தளத்தாக்கம் போன்ற இரண்டினாலும் செல்வாக்கு செலுத்தப்படுமெனவும், தளத் தாக்கத்தின் பங்களிப்பு உயர்வானதாகவிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பணவீக்கத்தின் மூலங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்திகள் போன்றவற்றின் நியதிகளில் புள்ளிவிபரக் காரணிகளின் தாக்கங்களில் மதிப்பிடப்படமுடியும். மற்றும் 2024இல் உலகளாவிய பணவீக்கம் வீழ்ச்சியடையுமென பன்னாட்டு நாணய நிதியம் (2023) எதிர்பார்க்கின்றது. உலகளாவிய பண்டவிலைகளில் எதிர்பார்க்கப்படும் மெதுவடைதலானது உள்நாட்டு விலைகளுக்கு காலந்தவறாமலும், வெளிப்படையாகவும் ஊடுகடத்தப்படுமாகவிருந்தால் 2023இல் இறக்குமதிப் பணவீக்கத்தில் விலை உத்வேகத்தினை கணிசமானளவு தாழ்ந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும். மேலதிகமாக, மேம்பட்ட சென்மதி நிலுவைகளுக்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு இந்த விடயத்தில் துணைபுரியும். ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமான உயர்வு தொடருமாகவிருந்தால் இறக்குமதிப் பணவீக்கத்தினை குறைப்பதற்கும் இத்தகைய இறக்குமதியுடன் தொடர்புபட்ட இரண்டாங்கட்ட தாக்கங்களினைக் குறைப்பதற்கும் துணைபுரிந்து அதன்மூலம் பணவீக்க வீழ்ச்சி செயல்முறைக்கு ஆதரவளிக்கும். இதேவேளையில், 2022இல் இலங்கை ரூபாவின் கணிசமான பெறுமானத்தேய்வினையும் உலகளாவிய பண்டவிலைகளின் அதிகரிப்பினையும் பிரதிபலித்து இலங்கையின் இறக்குமதி விலைகள் விகிதாசாரமற்ற அளவில் அதிகரித்தன. இது, இறக்குமதிப் பண்டங்களின் விலைகளில் குறிப்பாக 2022 நடுப்பகுதியில் உயர்ந்த மாதத்திற்கு மாத அதிகரிப்புக்களுக்கு வழிவகுத்தது. 2023ஆம் ஆண்டில், இது கணிசமான நேர்மறையான தளத்தாக்கத்தினூடாக இறக்குமதிப் பணவீக்கத்தில் சாதகமான தாக்கம் செலுத்தி பணவீக்க வீழ்ச்சி பாதைக்கு ஆதரவளிக்கும் (வரைபடம் சி.கு 1.2 இனைப் பார்க்கவும்). மறுபுறத்தில், உள்நாட்டுப் பணவீக்கத்தினைப் பொறுத்தவரையில் முன்னெப்பொழுதுமில்லாத நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் வழிமுறைகள் மற்றும் தீவிரமான இறுக்கமான இறைக் கொள்கை நிலைப்பாடு போன்றவற்றின் காரணமாக விலை உத்வேகம் கணிசமானளவு தாழ்ந்ததாக காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடந்த சில மாதங்களாக உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் சில மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. விளைவாக, உணவுப் பணவீக்கத்தின் விலை உத்வேகம் சில மாதங்களில் எதிர்க்கணியப் பெறுமதிகளைப் பதிவுசெய்தது. மேம்பட்ட நிரம்பல்பக்க நிலைப்பாடுகள் 2023 முழுவதிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது, பணவீக்கத்தினை தாழ்ந்த மட்டங்களுக்கு கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும். இதேவேளையில் பல்வேறு வழிகளில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதேபோன்று 2022இலும் 2023இன் ஆரம்பத்திலும் பயன்பாடுகளின் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அவற்றின் இரண்டாங்கட்ட தாக்கங்களுடன் இணைந்து பொது விலைமட்டத்தில் ஒரே நேரத்திலான மேல்நோக்கிய திருத்தங்களுக்கு வழிவகுத்தன. மேலும், உள்நாட்டு நிரம்பல் நிலைப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட சென்மதி நிலுவை நெருக்கடியுடன் தொடர்புபட்ட பல பற்றாக்குறைகள் மற்றும் தடைகளினால் 2022இல் நிரம்பல்பக்க காரணிகள் கணிசமானதாக தொடர்ந்துமிருந்தன. நிரம்பல் தடைகள் மற்றும் வரி மற்றும் கட்டணங்களின் திருத்தங்களின் காரணமாக உள்நாட்டு விலைகளின் மாதத்திற்கு மாத அதிகரிப்புக்கள் ஒரு கணிசமான தளத்தாக்கத்தின் வாயிலாக 2023இல் பணவீக்கத்தினை சாதகமாகப் பாதிக்கும் (வரைபடம் சி.கு 1.2 இனைப் பார்க்கவும்). எனவே, எதிர்வரும் காலத்தில் உள்நாட்டு பணவீக்கத்தின் மிதமடைதலானது மந்தமான விலை உத்வேகம் மற்றும் கணிசமான தளத் தாக்கத்தின் சேர்க்கையினால் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறக்குமதி மற்றும் உள்நாட்டுப் பணவீக்கம் இரண்டினதும் எதிர்பார்க்கப்படும் பரிமாணங்களின், அத்துடன் ஏனையவற்றிற்கு மத்தியில் மேம்பாட்டையும் நிரம்பல் நிலைப்பாடுகளின் விளைவான நாட்டின் ஒட்டுமொத்தப் பணவீக்கமானது 2023 இல் நிலைபேறான அடிப்படையில் குறைந்து எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிப் பாதை அடையப்படுவதனை இயலச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1

வரைபடம் சி.கு. 1.3
முதன்மைப் பணவீக்க எறிவுகள்
கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு,%)




*குறிப்பு: 2022 ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டு வரையான தேதல்செய்யப்பட்ட தரவுகளானது கொ.நு.வி.சு (2021=100) அடிப்படையாகக் கொண்ட அதேவேளை 2023ஆம் ஆண்டின் முதலாம்காலாண்டிற்கான தரவின் மீது கொ.நு.வி.சு (2021=100) அடிப்படையாகக் கொண்டவையாகும். எறிவுகளானது அனைத்து கிடைப்பனவாகவுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

இலங்கை மத்திய வங்கியின் பணவீக்க வீச்சு வரைபடமானது நம்பிக்கை இடைவெளிகளின் வடிவில் காலாண்டு அடிப்படையில் எதிர்காலப் பணவீக்கம் தொடர்பான எறிவுகளை வெளிப்படுத்துகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் எதிர்வுகூறல் காலப்பகுதி அதிகரிக்கும் போது நிச்சயமற்றதன்மையின் பரிமாணம் விரிவடைவதுடன் பணவீக்க எதிர்வுகூறலினைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினை விளக்குகின்றன. இலங்கை மத்திய வங்கியின் கொ.நு.வி.சு சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக்கொண்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் அண்மைய எறிவுகளை வரைபடம் சி.கு 1.3 பணவீக்க வீச்சு வரைபடத்தின் வடிவில் எடுத்துக்காட்டுகின்றது.

2022இல் உச்சமடைந்து விட்டதாக மதிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய பணவீக்கமானது கணிசமான நாணய இறுக்கமாக்கல் மற்றும் அதன் விளைவான செயற்பாடுகளின் மெதுவடைதல், நிரம்பல் சங்கிலிகள் வழமைக்குத் திரும்புதல் மற்றும் வலுவினதும் ஏனைய பண்டங்களினதும் விலைகள் மிதமடைதல் போன்றவற்றின் விளைவாக 2023இல் வீழ்ச்சியடையுமெனவும் 2024இல் மந்தமான மட்டங்களில் தொடர்ந்துமிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் பணவீக்க எறிவுகள் அவற்றின் மிக அண்மைய நாணயக் கொள்கை அறிக்கைகளின் பிரகாரம் வரைபடம் சி.கு 1.4

வரைபடம் சி.கு. 1.4
உலகளாவிய பணவீக்க வீழ்ச்சி எறிவுகள்



மூலம்: அவுஸ்திரேலியா - நாணயக் கொள்கை அறிக்கை மார்ச். 2023
ஐக்கிய இராச்சியம் - நாணயக் கொள்கை அறிக்கை பெப். 2023
ஐரோப்பிய பிரதேசம் - ஐரோப்பிய மூலதை வலுவலர் பேரவைப்பொருளாதாரம் எறிவுகள் தி.செ. 2022
இந்தியா - நாணயக் கொள்கை அறிக்கை செத். 2022
தாய்லாந்து - நாணயக் கொள்கை அறிக்கை கா4 2022

எடுத்துக்காட்டுகின்றது. வரைபடமானது 2022இல் பல நாடுகளில் மத்திய வங்கிகளின் பணவீக்க இலக்குகளிற்கு மேலாக பணவீக்கம் கணிசமானளவு அதிகரிப்பதனைக் காட்டுகின்றது. எனினும், இலங்கையினைப் போன்று இந்த நாடுகளிலும் 2023இல் ஒரு ஒத்திசைவான வகையில் விரைவானதொரு பணவீக்க வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் பணவீக்க எதிர்வுகூறல்களின் வகிபாகம்

நாட்டின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையானது நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகளினால் வலுவூட்டப்படும். ஒரு பொருளாதாரத்திலுள்ள ஆர்வலர்களினால் எதிர்பார்க்கப்படும் விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் வீதத்தினை பணவீக்க எதிர்பார்க்கைகள் பிரதிபலிக்கின்றன. எதிர்பார்க்கைகள் செலவிடல், கடன்பாடுகள் மற்றும் முதலீட்டு தீர்மானங்களினை இன்று பாதிக்குமென்பதால் பொதுமக்கள் பணவீக்கம் எந்தளவில் இருக்குமென்று எதிர்பார்ப்பதில் உண்மையான பணவீக்கம் பகுதியளவில் தங்கியிருப்பதனால் பணவீக்க எதிர்பார்க்கைகள் முக்கியமானவை. எனவே, பணவீக்க எதிர்பார்க்கைகள் நடுத்தர கால பணவீக்க இலக்கினை விட உயர்வாகக் காணப்படுமானால் பொருளாதார ஆர்வலரின் தற்பொழுது காணப்படும் எதிர்பார்க்கைகளை மாற்றியமைப்பதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுடன் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறை தொடர்புபடுகின்றது. 2022இல் உயர்ந்த பணவீக்க நிகழ்வுடன் இலங்கையில் பணவீக்க எதிர்பார்க்கைகள் குறிப்பிட்டளவில் நிலைகுலைந்தன. எனினும், பரிகார நாணயக் கொள்கை வழிமுறைகளின் முன்கூட்டிய நடைமுறைப்படுத்தலுடன் நடுத்தரகால பணவீக்க எறிவுகளின் பிரசுரிக்கப்பட்டமை உள்ளடங்கலாக காத்திரமானதும் வெளிப்படையானதுமான நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயத்துடன் இணைந்து பொதுமக்களிடையே பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் தொடர்ச்சியானதொரு குறைப்பு அவதானிக்கப்பட்டது. இது, மறுபுறுத்தில் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதில் துணைபுரிந்து, பணவீக்க வீழ்ச்சி செயல்முறை முன்னேற்றமடைகின்ற வேளையில், மேலும், மேம்பாடுகள் எதிர்பார்க்கப்படமுடியுமென்பதுடன் மத்திய வங்கியின் பணவீக்க இலக்கிற்கு இசைவாக நடுத்தரகால பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதனை நிச்சயப்படுத்தும்.

குறுங்காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரையான பணவீக்க பாதையின் மதிப்பீட்டினை அடுத்தடுத்து தொடர்பூட்டுவது பணவீக்க வீழ்ச்சி செயல்முறையின் முக்கியமானதொரு கூறாகும். இந்த வகையில், மத்திய வங்கி கிரமமான நாணயக் கொள்கை மீளாய்வுகளினைத் தொடர்ந்தும் ஏனைய பொருத்தமான அதிகாரபூர்வ அறிவிப்புக்களிலும் பணவீக்க வீச்சு வரைபடத்தினை தொடர்ந்தும் வெளியிடும். நடுத்தரகால பணவீக்க எதிர்வுகூறலுக்கும் பணவீக்க இலக்கிற்குமிடையிலான ஏதாவதொரு வேறுபாடு அந்த இடைவெளியினை நிரப்பச் செய்வதற்கான கொள்கை வழிமுறைகளைத் தேவைப்படுத்தும். பணவீக்கப் பாதையின் அடுத்தடுத்த மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டல் விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதிலும் பேணிக்கொள்வதிலும் மத்தியவங்கியின் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றாகவும் தொழிற்படுகின்றது.

மேலும், 2023இன் இரண்டாமரைப்பகுதியிலிருந்து முன்னோக்கிய அரையாண்டு அடிப்படையிலான நாணயக் கொள்கை அறிக்கையினை மத்திய வங்கி பிரசுரிக்கத் தொடங்கும். பணவீக்கத்தின் நடுத்தர கால எறிவுகள் மற்றும் எறிவுகளிற்கு

அடிப்படையாக அமைந்த காரணிகள் மற்றும் வெளியிடப்பட்ட எதிர்வுகூறலுக்கும் உண்மைப் பணவீக்கத்திற்குமிடையே ஏதாவது வேறுபாடு காணப்படின் அது தொடர்பான விளக்கம் போன்றவற்றை இந்த அறிக்கையானது முக்கியமாக காட்சிப்படுத்தும்.


மேற்கூறப்பட்டதனைப் போன்று பணவீக்க வீழ்ச்சி செயல்முறைக்கான முக்கிய காரணியாகவமைவது மத்திய வங்கியின் நம்பகத்தன்மையாகும். இது, பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தவதில் துணைபுரியும். மத்திய வங்கியின் நம்பகத்தன்மையானது மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்த வகையில், புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட சட்டவாக்கமானது, மத்திய வங்கியின் சுயாதீனத்தினையும் நம்பகத்தன்மையினையும் மேம்படுத்துவதில் அளப்பரிய பங்களிப்புச் செய்து அதன்மூலம் தற்போதைய பணவீக்க வீழ்ச்சி நிகழ்விற்கு ஆதரவளிப்பதுடன் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதனை மேலும் வலுப்படுத்தும்.

References

1. Bernanke, B. S. (2002). Deflation: Making Sure" It" Doesn't Happen Here, Remarks by Governor Ben S. Bernanke Before the National Economists Club, Washington, DC November, 21.
2. International Monetary Fund (IMF), (2023). World Economic Outlook Update Jan 2023: Inflation Peaking amid Low Growth, Washington, DC: International Monetary Fund.
3. Nelson, E. (2007). The Great Inflation and Early Disinflation in Japan and Germany. International Journal of Central Banking, 3(4), 23-76.
4. Rogoff, K. (2004). Globalization and Global Disinflation, Federal Reserve Bank of Kansas City conference on Monetary Policy and Uncertainty: Adapting to a Changing Economy.

பதிவுசெய்யப்பட்ட 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பர் இறுதியளவில் 73.7 சதவீதத்தையும் 2022இன் இறுதியளவில் 59.2 சதவீதத்தையும் பதிவுசெய்தது. மாற்றமடைந்துவரும் செலவீன போக்குகளிற்கு வசதியளிக்கும் பொருட்டும் சந்தையில் கிடைப்பனவாகவுள்ள பொருட்களினதும் பணிகளினதும் மாற்றங்களை ஒருங்கிணைக்கும் பொருட்டும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் இரண்டினதும் அடிப்படை ஆண்டை 2013இலிருந்து 2021ஆக திருத்தியமைத்தது. 2022இன் பின்னைய பகுதியில் அவதானிக்கப்பட்ட முதன்மைப் பணவீக்கத்தின் கீழ்நோக்கிய போக்கானது 2023 காலப்பகுதியிலும் தொடர்ச்சியடைந்தது. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2023 மாச்சில் மேலும் 50.3 சதவீதத்திற்கு குறைவடைந்த போதும் 2023இன் மாச்சு மாதக் காலப்பகுதியில் கணிப்பிற்குட்பட்டு வருகின்ற மின்வலு விலைத் திருத்தத்தின் முழுமையான தாக்கத்தின் காரணமாக அண்மைய மாதங்களை விட மெதுவான வேகத்திலேயே குறைவடைந்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2021=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 53.6 சதவீதத்தில் காணப்பட்டது. இலங்கை ரூபாவின் உயர்வுடன் அண்மையில் சில இறக்குமதிப் பொருட்களின் விலைகளை மேலதிகமாகத் தளர்த்துவதற்கான சமிஞ்ஞைகள் அவதானிக்கப்பட்டமை மற்றும் 2023 மாச்சின் பின்னைய பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெற்றோலிய விலைகளின் திருத்தங்கள் வருகின்ற மாதங்களில் பணவீக்க வீழ்ச்சியை விரைவுபடுத்துவதற்கு உதவக்கூடும். தளம்பலடையும் உணவு மற்றும் வலு விலைகள் என்பவற்றை நீக்கி அடிப்படையான கேள்வி அழுத்தங்களை அளவிடுகின்ற மையப் பணவீக்கமும் கீழ் நோக்கிய போக்கை எடுத்துக்காட்டி 2022இன் செத்தெம்பரின் இறுதிவரையான ஒன்பது மாத காலப்பகுதியில் அதிகரித்தது. மையப்பணவீக்கம் அதிகரித்தமைக்கு அண்மைய காலத்தில் நாணயத் தளர்த்துகையின் காலங்கடந்த விளைவிலிருந்து தோன்றுகின்ற உயர்வடைந்த கேள்வி, இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட உயர்வு, அதேபோன்று உணவகங்கள் மற்றும் விடுதிகள், நலம் மற்றும் கல்வி போன்ற உணவல்லா வகைப்படுத்தல்களின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் என்பவை காரணமாக அமைந்தன. இதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் 47.7 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்ட மையப்பணவீக்கமும் 2021இன் திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 10.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 திசெம்பரில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 57.5 சதவீதத்திற்கு விரைவடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தைப் போன்று, 2023இன் முன்னைய காலப்பகுதியில் மையப்பணவீக்கமும்

வரைபடம் 1.5
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) (அ)



(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முறையே 2023 சனவரியிலும் 2023 பெப்புருவரியிலும் வெளியிப்பட்ட தரவுகளிலிருந்து தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் புதிய தள ஆண்டைக் 2021=100 கொண்டு வெளியிடு செய்ய ஆரம்பித்ததுடன் பழைய தள ஆண்டைக் 2013=100 கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினதும் வெளியீட்டை இடைநிறுத்தியது. இதற்கமைய, வரைபடத்தில் 2023 சனவரியில் ஆரம்பமாகின்ற தரவுகளானது புதிய தள ஆண்டை, 2021=100 கொண்ட தொடர்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1


கீழ்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது. இதற்கமைய, ஆண்டிற்காண்டு மையப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2021=100) 2023 மார்சு அளவில் 39.1 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை, ஆண்டிற்காண்டு மையப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2021=100) 2023 பெப்புருவரியில் 50.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களையும் பாதாகமான பணவீக்க எதிர்பார்க்கைகளையும் தீர்ப்பதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வலுவான கொள்கை வழிமுறைகளே இத்தகைய தொடர்ச்சியான மையப் பணவீக்க குறைப்பிற்கு காரணமாக அமைந்தன. அதேவேளை, 2022 செத்தெம்பர் வரை பணவீக்கம் விரைவடைந்த காலப்பகுதியில் அதிகரித்த மட்டங்களில் காணப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகளானது பணவீக்க வீழ்ச்சிக் காலப்பகுதியில் கீழ்நோக்கிய போக்கை பெருமளவில் தொடர்ந்தது.

வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள், குறைவடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மற்றும் செலாவணி வீதத்தின் மிகைப்படுத்தல் என்பவற்றிற்கு மத்தியில், இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2022இல் கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து, மேலும் மோசமடையும் நிலைமையை தடுப்பதற்கும் வெளிநாட்டு நிலுவையை மீளமைப்பதற்கும் அநேகமான கொள்கை வழிமுறைகளை அவசியப்படுத்தியது. 2022இன் ஆரம்ப காலப்பகுதியில், இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுடன் படுகடன் மறுசீரமைப்பு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முடிவுறாதிருந்தநிலையில், அரசாங்கமானது நிதியை ஏற்பாடுசெய்வதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து உதவியை நாடியதுடன் இடைக்கால வழிமுறையொன்றாக படுகடன் ஸ்தம்பித நிலைமையை அறிவித்தது. அரசாங்கமும் மத்திய வங்கியும் உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கு முயற்சிகளை எடுத்த அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களை மட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தன. கணிசமாக இறுக்கமடைந்த நாணயக் கொள்கையினதும் மெதுவடைந்த கேள்வி நிலைமைகளினதும் தாக்கத்தை பிரதிபலித்து இறக்குமதிக் கேள்வியானது குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. தற்போதுள்ள கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடரப்பட்ட அதேவேளை, இறக்குமதி முன்னுரிமைப்படுத்தல்களின் தொடரொன்று முன்னெடுக்கப்பட்டது. இக்கட்டுப்பாடுகளானது, தற்காலிகமாக இரத்துச் செய்தல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள் மீது உரிம மற்றும் எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை விதித்தல் என்பவற்றை உள்ளடக்கின. அத்துடன், போலிச் சந்தை நடவடிக்கைகளை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதி கொடுப்பனவு முறைமைகள் மீது கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. மூலதனத் தன்மையைக் கொண்ட சில வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டன. மேலும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக பணத்தை அடிப்படையாகக்கொண்ட மற்றும் பணமல்லாதவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்களூடாக முறைசார்ந்த வழிகளூடான தொழிலாளர் பணவனுப்பல்கள் ஊக்குவிக்கப்பட்டன. பாரியளவான செலாவணி வீத தேய்மானம் திறந்த கணக்கு நியதிகள் போன்ற குறிப்பிட்ட கொடுப்பனவு நியதிகளின் கீழ் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், மற்றும் இறக்குமதிகளுக்கான மிதமடைந்த கேள்வி என்பன அலுவல்சார்ந்த செலாவணி வீதங்களுக்கும் பணமாற்றுநர்களாலும் உத்தியோகபூர்வமற்ற சந்தையினாலும் வழங்கப்படும் வீதங்களுக்குமிடையிலான பாரிய இடைவீச்சின் திருத்தமொன்றிற்கு வழிவகுத்தது. இது, முறைசார்ந்த வழிகளினூடான பணவனுப்பல்களை மேலும் ஊக்குவித்தது. இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமையினாலும் ஏற்றுமதி வருவாய்கள் தாக்குபிடிக்குந்தன்மையாக காணப்பட்டமையினாலும் 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் கணிசமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பணிகள் கணக்கில் காணப்படும் மிகை ஓரளவிற்கு அதிகரித்தது. எனினும், வான்வழி மற்றும் கடல்வழி சரக்கு, போக்குவரத்து, மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறைக்கான பணிகள் உட்பாய்ச்சல்கள் என்பவை உள்ளடங்கலாக பணிகள் கணக்கிலுள்ள அனைத்து வேறு துறைகளானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமாக மிதமடைந்து காணப்பட்டன. 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கணிசமான மேம்பாட்டிற்கு மத்தியில், 2022இல் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகையானது குறைவடைந்த அதேவேளை, அட்டுறு அடிப்படையில் தொகுக்கப்பட்ட முதலாந்தர வருமானக் கணக்கு பற்றாக்குறையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக் காலப்பகுதியில் சிறிதளவில் மிதமடைந்தது. இத்தகைய அபிவிருத்திகளுடன். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2021இன் 3.7 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து 2022இல் 1.9 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியாக சுருக்கமடைந்தது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (முதலாந்தரச் சந்தைக் கொள்வனவுகள் உள்ளடங்கலாக) மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பவற்றிற்கான தேறிய வெளிநாட்டு முதலீட்டு

உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில், நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களானது அரசாங்கத்திற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, 2022இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. எனினும், இது, பயன்படுதன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுக்குச் சமமான சீன மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட பரஸ்பரப் பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றது. 2022ஆம் காலப்பகுதியில், மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 2.1 பில்லியனைப் பிரதானமாக உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான கட்டாய விற்பனைகளிடமிருந்து ஈர்த்துக்கொண்ட அதேவேளை, ஐ.அ.டொலர் 2.7 பில்லியனை எரிபொருள், நிலக்கரி, எரிவாயு போன்ற அத்தியாவசிய பண்டங்களை இறக்குமதிச் செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணியை நிறைவேற்றுவதற்காக வழங்கியது. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய வங்கியானது கடுமையான சவால்மிக்க சூழ்நிலைகளின் கீழும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணியை முகாமை செய்வதில் பிரதானமாக பங்களிப்பை ஆற்றியது. அதேவேளை, வெளிநாட்டு நிதியிடல் மூலங்களுக்கான அணுகல் வசதியின்மை மற்றும் வர்த்தக படுகடனின் பாரியளவான பெறுமதி மாற்றங்கள் என்பவற்றின் தாக்கத்தை பிரதிபலித்து, 2022இன் இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது 2021இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 51.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 49.7 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், அரசாங்க மொத்த வெளிநாட்டுப் படுகடனானது, சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட அரசாங்கத்தால் வழங்கப்படும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக அதையொத்த மட்டங்களில் காணப்பட்டது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசாங்கமானது எரிபொருள், மருந்துப்பொருட்கள் மற்றும் வளமாக்கிகள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பல்வேறு பிரதேச நாடுகளிலிருந்து பல எண்ணிக்கையிலான அவசர கொடுகடன் வசதிகளைப் பெற்று கணிசமான வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களை தோற்றுவித்தது. இருபுடை மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுக்கான படுகடன் பணிக்கொடுப்பனவின் தற்காலிகமான இடைநிறுத்துதலானது குறைந்தளவிலான வெளிநாட்டுக் கடனின் மீள்கொடுப்பனவுகளின் பேரில் சில அவகாசத்தை

வரைபடம் 1.6
சென்மதி நிலுவை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வழங்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மையில் ஏற்பட்ட கணிசமான பற்றாக்குறையானது செலாவணி வீதம் மீது அழுத்தங்களை தோற்றுவித்து, 2022 மாச்சின் ஆரம்பத்தில் செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கத்தை நாணயச் சபை மூலம் மேற்கொள்வதற்கு தேவைப்படுத்தியது. எனினும், அதனைத் தொடர்ந்து, சந்தை ஊகமானது செலாவணி வீதத்தில் மிதமிஞ்சும் தன்மையை தோற்றுவித்தது. இதற்கமைய, 2022 ஏப்பிறல் இறுதியளவில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 41.4 சதவீதத்தால் கணிசமாக தேய்வடைந்தது. 2022 மே மாத நடுப்பகுதியிலிருந்து, மிகையான ஊகத்தின் காரணமாக ஏதேனும் கணிசமான ஒரு நாளுக்குள்ளான தளம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது வங்கிகளுக்கிடையிலான நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணி வீதத்திற்கு ஏற்புடைய நடுத்தர வீதம் மற்றும் வேறுபாட்டு எல்லை என்பவற்றை வெளியிடுவதன் மூலம் சந்தை வழிகாட்டலை வழங்கத் தொடங்கியது. இவ்வழிமுறையானது அன்றைய நாளிலிருந்து செலாவணி வீதத்தை உறுதிப்படுத்துவதில் காத்திரமிக்கதாக காணப்பட்டதுடன் மிகையான தேய்மானம் மற்றும் நாணயத்தின் தளம்பல் என்பவற்றின் பாதகமான பேரண்டபொருளாதார தாக்கங்களைத் தணிப்பதற்கு உதவியது. இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, நாணயக் கூடைகளுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவையும் அதன்மூலம் வெளிநாட்டுப் போட்டித்தன்மையையும் அளவிடுகின்ற பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களும் குறிப்பிடத்தக்களவில் தேய்வடைந்தன. ஒட்டுமொத்தமாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களானது 100 சுட்டெண் புள்ளிகளுக்கு கீழான எல்லைகளுக்கு கீழே கணிசமானளவில் வீழ்ச்சியடைந்து செலாவணி வீதம் பன்னாட்டு வர்த்தகத்திற்கு போதுமானளவில் போட்டித்தன்மைவாய்ந்து காணப்படுகின்றது என்பதற்கான சமிஞ்ஞையைக் காட்டியது.

1

வரைபடம் 1.7
செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

2023 மார்ச்சில், இலங்கையானது 2,286 மில்லியன் தொகை கொண்ட (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3,000 மில்லியன்) சிறப்பு எடுப்பனவு உரிமையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று ஒப்புதலை உறுதிப்படுத்தியதுடன் 2023இன் மார்ச்சின் பிற்பகுதியில் 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 333 மில்லியன்) தொகை கொண்ட சிறப்பு எடுப்பனவு உரிமையின் முதலாவது தொகுதி இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2022 செத்தெம்பரில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டத்திற்கான பன்னாட்டு நாணய நிதியத்துடன் அடைந்த அலுவலர் மட்ட ஏற்பாட்டைத் தொடர்ந்து, இலங்கையானது நிதியிடல் உத்தரவாதங்களை உறுதிப்படுத்துவதற்கு இருபுடை கடன்கொடுநர்களுடன் கலந்துரையாடலொன்றை ஆரம்பித்த அதேவேளை, வர்த்தக கடன்கொடுநர்களுடன் சிறந்த முறையிலான நம்பத்தக்க பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. மேலும், இலங்கையானது, பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலை கையகப்படுத்துவதற்கு தேவையான அனைத்து முந்தைய நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டை நிறைவேற்றுவதை நோக்கி, பல்வேறு சாதகமான அபிவிருத்திகள் 2023இன் முன்னைய காலப்பகுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையின் நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்குடனும் மத்திய வங்கியின் நெகிழ்வான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தையினால் உந்தப்பட்ட செலாவணி வீதமொன்றை மீளமைக்கும் நோக்குடனும் மத்திய வங்கியானது நாளாந்த மாறுபாட்டு எல்லையை படிப்படியாக தளர்த்த ஆரம்பித்த அதேவேளை, 2023 மார்ச்சு முன்னைய காலப்பகுதியிலிருந்து உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டை முற்றாக அகற்றுவதற்கு முன்னர், அத்தகைய தேவைப்பாட்டைத் தளர்த்தியது. பணிகள் துறைக்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சொத்துப் பட்டியலுக்கான நிதியியல் உட்பாய்ச்சல்கள், மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு இறுதியடைந்ததைத் தொடர்ந்து சந்தை நம்பிக்கையை திரும்பப்பெற்றமை என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை திரவத்தன்மை 2023இன் ஆரம்பகாலத்திலிருந்து மேம்படுவதற்கு ஆரம்பித்தது. மேம்பட்டுவருகின்ற வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளின் தாக்கத்தை பிரதிபலித்து, செலாவணி வீதமானது 2023 மார்ச்சின் முன்னைய காலப்பகுதியில் பாரிய உயர்வை காட்டி, 2022இன் முன்னைய காலப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்ட செலாவணி வீதத்தின் மிகைப்படுத்தலை சரிசெய்ததுடன் மத்திய வங்கியின் தலையீட்டினூடாக கணிசமான கொள்வனவுகளுடன் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்ப உதவியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 மார்ச்சு இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.7 பில்லியனிற்கு வலுவடைந்ததுடன் 2023 மார்ச்சு இறுதியிலுள்ளவாறு இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 10.9 சதவீதத்தால் உயர்வடைந்து மேம்பட்ட சந்தை எண்ணப்பாங்குகளைத் தோற்றுவித்தன. செலாவணி வீதத்தை தீர்மானிக்கையில் அனுமதிக்கப்பட்ட பாரியளவான நெகிழ்ச்சித்தன்மையைப் பிரதிபலித்து, இலங்கை ரூபா 2023 மார்ச்சின் பின்னைய காலப்பகுதியிலிருந்து சில தளம்பல்களைக் காட்டியது.

அரசாங்கத்தின் உள்நாட்டு நிதியிடல் தேவைகளுக்கு உதவும் நோக்குடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியை வரவுசெலவுத் திட்ட ஆதரவை அமைப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. எனினும், படுகடன் சீரமைப்பிற்கு உட்படாததும் மத்திய வங்கியின் ஒதுக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயக் கடப்பாடுகளை மீளச்செலுத்துவதற்கான சென்மதி நிலுவை கிடைக்கப்பெற்றதன் காரணமாகவும் அத்தியாவசிய இறக்குமதிகளை நிதியளிப்பதற்கு வசதியளிக்கக்கூடிய அலுவல்சார் ஒதுக்குகள் சாத்தியமாக வலுப்படுத்தப்பட்டதன் காரணமாகவும் இதுவரை கிடைக்கப்பட்ட பெறுகைகளானது சென்மதி நிலுவைக் கட்டுப்பாடுகளை பாதுகாப்பதற்கு உதவிபுரியும்.

இறைத் துறை அபிவிருத்திகள்

அரசாங்கமானது இறைத் துறை பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை தீர்ப்பதற்கான பிரதான இறை சீர்திருத்தங்களை முன்னெடுத்த அதேவேளை, நடுத்தர காலத்தில் படுகடன் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுப் படுகடனை

சிறப்புக் குறிப்பு 02
பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

இலங்கையின் பொருளாதாரமானது உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுடன் இணைந்து அமைப்பியல் பேரண்டப் பொருளாதாரப் பிரச்சனைகளினால் ஏற்படுத்தப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் உறுதியற்ற நிலைமைகளில் அடிக்கடி ஏற்படும் சம்பவங்களுக்குட்பட்டு வருகிறது. உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்துடன் 2020 இலிருந்து கடுமையாக பலவீனமடைந்த நிலைமைகள் அரசியல் முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுடன் சேர்ந்து பொருளாதாரத்திற்கு மேலதிக அழுத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் விளைவாக, நாடு கடுமையான சென்மதி நிலுவை இடர்ப்பாடுகளை அனுபவித்ததுடன் அதனைத் தொடர்ந்து 2022இல் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிறந்த உறுதித்தன்மையினை நோக்கி பொருளாதாரத்தினை வழிப்படுத்துவதற்காக, 2022இன் ஆரம்பத்திலிருந்து பல கொள்கைத் தலையீடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பேரண்டப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துகின்றமைக்கு உட்பட்டு, நிதியியல் உதவிகளைக் கோருதல் மற்றும் பொதுப்படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீண்டும் அடைந்து கொள்ளும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளுடன் தொடர்பான விடயங்களை ஆரம்பித்தல் என்பன இப்பயணத்தினை நோக்கி எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாக இருந்தன. இலங்கை, சென்மதி நிலுவைக்கு ஆதரவளித்தல் மற்றும் அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் என்பன உட்பட, பல்வேறு நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் அநேக ப.நா. நிதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் நுழைந்திருக்கிறது. எனினும், முன்னைய சந்தர்ப்பங்களைப் போலன்றி, இலங்கை ஒருபோதும் உணர்ந்திராத மோசமான பொருளாதார நிலைமைகளின் கீழ், 2022இன் ஆரம்பத்தில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளுக்காக ப.நா.நிதியத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. கொள்கைத் தலையீடுகளின் வெற்றியானது மிக உயர்ந்த படுகடன் சுமை அதேபோன்று விடாப்பிடியான பாரிய இறை மற்றும் சென்மதி நிலுவை நிதியிடல் தேவைப்பாடுகள் என்பனவற்றினால் தடைப்பட்டது. நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாக குறைவடைந்தமை, வெளிநாட்டு நிதியிடலுக்கான அணுகுவழிகள் இலங்கைக்கு அடைக்கப்பட்டுவிட்டமை என்பனவற்றின் காரணமாக புதிய நிதி திரட்டல்களை மேற்கொள்வதும் ஏற்கனவேயுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதும் பெரும் சவாலாயின. அலுவல்சார் ஒதுக்குகள் கிட்டத்தட்ட பூஜ்ய மட்டத்திற்கு குறைவடைந்து போயின. செலாவணி வீதங்கள் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு தேய்வடைந்தன. பொதுமக்கள் எரிபொருள், மின்வலு மற்றும் இன்றியமையாத இறக்குமதிப்பொருட்களைப் பெற்றுக்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டது. கேள்வி அழுத்தங்கள் மற்றும் நிரம்பல் பற்றாக்குறைகளின் காரணமாக பொது விலை மட்டங்கள் புதியதொரு மட்டத்திற்கு உயர்ந்து போயின. நிதியியல் முறைமை உறுதிப்பாடு அச்சுறுத்தல்களுக்குள்ளாகியதுடன், 2022 தொடக்கத்தில் சமூகப் பொருளாதார மோதல்கள் மீண்டும் மீண்டும் உருவாக்கின. இப்பின்னணியில், வெளிநாட்டு உதவியுடன் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்கான அவசியம் தேவைப்பட்டதுடன் இலங்கை அதிகாரிகள் ப.நா. நிதியத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தனர். உத்தேச பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை இறுதிப்படுத்துவது தொடர்பில் ஓராண்டிற்கும் மேலாக ப.நா. நிதிய அலுவலர் குழுவுடன் மேற்கொண்ட தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட முன்கூட்டிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டமை மற்றும் அலுவல்சார் கடன் வழங்குவோரிடமிருந்து நிதியியல் உத்தரவாதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2023 மார்சு இறுதியில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஒப்புதலைப் பெறுவது இயலுவதாயிற்று. இப்பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைப் பண்புகள், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள், எதிர்வரும் காலப்பகுதியிலான சீர்திருத்தங்கள் தொடர்பிலான நாட்டின் கடப்பாடுகள், இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நான்காண்டு காலப்பகுதிக்கு தொடர வேண்டியதன் அவசியம் என்பன பின்வரும் பிரிவுகளில் ஆராயப்படுகின்றன.

நிகழ்ச்சித்திட்டத்தின், குறிக்கோள்கள் மற்றும் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதியின் நடைமுறை


தற்போதைய ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்திற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு உதவும் விதத்தில் பயன்படுத்தப்படுவதற்காக சிஎஉ 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையினைப் பகிர்ந்தளிப்பதுடன் இது 48 மாதங்களுக்கு வியாபித்துச் செல்லும். எவ்வாறாயினும், விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பெறுகைகள் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை குறைநிரப்புவதன் மூலம் சென்மதி நிலுவையை பாதுகாக்கவும் உதவக்கூடும். பகிர்ந்தளிப்புக்கள் அரையாண்டு மீளாய்வுகள் மற்றும் அதனைத் தொடர்ந்து நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு ஒன்பது தொகுதிகளாக சமமாகப் பிரிக்கப்படும். சபையின் ஒப்புதலைத் தொடர்ந்து முதல் தொகுதி உடனடியாக 2023 மார்சில் பெறப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பெருமளவிற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதேயாகும். இவ்வொட்டுமொத்தப் பொருளாதார உறுதிப்பாட்டினை, படுகடன் உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்துக் கொள்ளுதல் அதிகரித்த அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரசிப்படுத்தல், விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்ளுதலும், வெளிநாட்டு தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புதலும் நிதியியல் உறுதித் தன்மை, ஊழலினால் பாதிக்கப்படும் தன்மைகளைக் குறைத்தல் மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சியை அதிகரித்தல் ஆகிய இன்றியமையாத துறைகளின் மீது வலுவான தூண்களைக் கட்டியெழுப்புவதினூடாகப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

முன்கூட்டிய நடவடிக்கைகள் மற்றும் அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகள்

2022இன் தொடக்கத்தில் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதிக்கான பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதிலிருந்து 2023 மார்சு வரை ஒன்பது முன்கூட்டிய நடவடிக்கைகளை இலங்கை பூர்த்திசெய்துள்ளதுடன் அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகளைப் பூர்த்திசெய்வதற்கான பொறிமுறைகளையும் உருவாக்கியிருக்கிறது. இம்முன்கூட்டிய நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வது, விரிவாக்கப்பட்ட

1

வரைபடம் சி.கு 2.1
ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அமைப்பியல் அடிப்படை அளவுக் குறியீடுகள்



மூலம்: ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் (EFF) கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய

நிதிய வசதியின் கீழ் அடுத்துவரும் நான்கு ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தவுள்ள பரந்த சீர்திருத்தங்களுக்கான பாதையை இடுவதற்கான கருவியாக இருக்கும். இலங்கையினால் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டிருக்கின்ற முன்கூட்டிய நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2023 காலப்பகுதியில் இறைத்திரட்சிக்கு ஆதரவளிப்பதற்கான அரசிறை வழிமுறைகளுக்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல், 2022இற்கான வரவு செலவுத்திட்டத்தினைத் திருத்துவதற்காக பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல், 2023 ஒதுக்கீட்டு மசோதாவைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல், தன்னியக்கமான மாதாந்த சில்லறை எரிபொருள் விலைச் சீராக்கத்திற்காக அமைச்சரவை ஒப்புதலைப் பெறுதல், அரையாண்டு செலவு மீட்பினை அடிப்படையாகக் கொண்ட மின்வலு விலைச் சீராக்கத்தினை தன்னியக்கப்படுத்தல், புதிய மத்திய வங்கிச் சட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தல், மத்திய வங்கியின் நெருக்கடி முகாமைத்துவ அதிகாரங்களின் முக்கிய கூறுகளை வலுப்படுத்துவதற்காக வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தல், வங்கித்தொழில் துறையின் பாதிக்கப்படக்கூடிய தன்மையை கண்டறிவதற்கு சுயாதீனமான நிறுவனமொன்றினை வாடகைக்கு பெறல், உண்மை கொள்கை வீதங்களை உறுதியான முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக 100 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, மூன்று முக்கிய உடனடியான வழிமுறைகளும் நடைமுறைக்கிடப்பட்டதுடன் இது, நிகழ்ச்சித்திட்ட வழியலகுகளுடன் இசைந்து செல்லப்பட்ட 2023 ஆம் ஆண்டின். வரவு செலவுத்திட்டத்தின் பாராளுமன்ற ஒப்புதல், 2023 அரசிறை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டவாக்கத் திருத்தங்களுக்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்தல் மற்றும் வங்கிகளுக்கான அவசரகால திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை இற்றைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், இலங்கை

வரைபடம் சி.கு 2.2


இலங்கை: உத்தேச கணியம்சார் செயலாற்றப் பிரமாணம், தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம் மற்றும் குறிகாட்டி இலக்குகள
(வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஆண்டின் ஆரம்பத்திலிருந்தான ஒன்றுசேர்ந்த தொகை)

		2022	2023			
உத்தேச கணியம்சார் செயலாற்றப் பிரமாணம்		திசெ. இறுதியில் உண்மையானவை	மாச்சு இறுதியில் குறிகாட்டி இலக்குகள்	யூன் இறுதியில் செயலாற்றப் பிரமாணம்/ குறிகாட்டி இலக்குகள்	செத். இறுதியில் குறிகாட்டி இலக்குகள்	திசெ. இறுதியில் செயலாற்றப் பிரமாணம்/ குறிகாட்டி இலக்குகள்
மத்திய அரசாங்க ஆரம்ப நிலுவை (தளம்)	ரூ.பில்	**-895**	-56	-113	-160	-209
நிகழ்ச்சித்திட்டம் தேறிய அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கு நிகழ்ச்சித்திட்டம் (தேறிய பன்னாட்டு ஒதுக்கு, தளம், கால முடிவில் இருப்பு)	ஐ.அ.டொமில்	**-3,540**	-3,188	-2,830	-2,068	-1,592
மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் (உச்ச எல்லை, காலமுடிவில் இருப்பு)	ரூ.பில்	**2,834**	2,890	2,890	2,840	2,740
மத்திய அரசாங்கத்தின் செலவின நிலுவை இருப்பு (எல்லை)	ரூ.பில்	**60**	30	0	0	0
உத்தேச தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம் (நிகழ்ச்சித்திட்ட தொடக்கத்திலிருந்து ஒன்றுசேர்ந்தவை						
நிதியல்லா அரச துறைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் (உச்சம்)	ஐ.அ.டொமில்	**0**	0	0	0	0
உத்தேச குறிகாட்டி இலக்குகள்						
மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறை (தளம்)	ரூ.பில்	**1,751**	650	1,300	2,100	2,940
மத்திய அரசாங்கத்தின் சமூக செலவிடல் (தளம்)	ரூ.பில்	**142**	35	70	120	187
எரிபொருட்கள் மற்றும் மின்வலுவிற்கான வர்த்தகமல்லா கடப்பாட்டுச் செலவு (அரசாங்க மாற்றல் நீங்கலாக) (உச்சம்)	ரூ.பில்	**-**	0	0	0	0
திறைசேரி உத்தரவாதங்கள் (உச்சம்)	ரூ.பில்	**1,159**	1,700	1,700	1,700	1,700

மூலம்: நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் (EFF) கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

1

வரைபடம் சி.கு 2.3
உத்தேச நாணயக் கொள்கை, ஆலோசனை விதி
கொ. நு. வி. சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்



மூலம்: ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

இறை, அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் சீர்திருத்தங்கள், நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகள், இறைத்துறை மற்றும் ஆளுகையுடன் தொடர்பான சீர்திருத்தங்கள் என்பன தொடர்பாக பல அமைப்பியல் அடிப்படை அளவுக்குறியீடுகளை நடைமுறைக்கிடுமாறு இலங்கை கேட்டுக்கொள்ளப்பட்டது. இவை வரைபடம் சி.கு 2.1இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றங்களைக் கண்காணித்தல்

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் செயலாற்றமானது கணியம்சார் செயலாற்றப் பிரமாணம், வெளிநாட்டு நிலுவைகள் மற்றும் உறுப்புரை கடப்பாடுகளுடன் தொடர்பான தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணம், குறியீட்டு இலக்குகள் மற்றும் நாணயக் கொள்கை ஆலோசனை விதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்தையுமுள்ளடக்கிய பொறிமுறையின் நியதிகளில் கண்காணிக்கப்படும். இலங்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் கணியம்சார் செயலாற்றப் பிரமாணம் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் ஆரம்ப மிகை, தேறிய பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதனூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டத்தினை மேம்படுத்தல், அத்துடன் மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்படும் தேறிய கொடுகடனைப் படிப்படியாக கட்டம் கட்டமாக அகற்றுதல் என்பன தேவைப்பாடுகளாகவுள்ளன. தொடர்ச்சியான செயலாற்றப் பிரமாணமானது வெளிநாட்டுப் படுகடன் மீதான புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகளின் ஒன்றுதிரளாதவைகளின் மீது பிரயோகிக்கப்படுகிறது. இது அதிகாரிகளினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படவுள்ளதுடன் கண்காணிக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை உடனடியாக ப.நா. நிதியத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். மேலும், மற்றைய கணியம்சார் செயலாற்றப் பிரமாணம் நடைமுறை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் மாற்றல்களைச் செய்வது மீதான கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது தீவிரப்படுத்தல்களைத் தடைசெய்வது பன்முக நாணய நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் அல்லது திருத்தியமைத்தல் ப.நா.நிதிய உடன்படிக்கையின் உறுப்புரை VIII உடன் இணங்கிச் செல்லாத இருபுடை கொடுப்பனவு உடன்படிக்கைகளை முடிவுறுத்தல் மற்றும் சென்மதி நிலுவை நோக்கங்களுக்காக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது தீவிரப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. நாணயக் கொள்கை

வரைபடம் பி 2.4
வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் (2022 – 2027)

ஐ.அ.டொலர்

	2022	2023	2024	2025	2026	2027	மொத்தம் 2022-27
நிதியியல் இடைவெளி (அ)	-2,834	-4,939	-4,843	-5,018	-3,608	-3,911	-25,153
நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் (ஆ)	2,834	4,939	4,843	5,018	3,608	3,911	25,153
ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட வசதி	0	663	665	663	662	329	2,982
பன்னாட்டு நிதியியல் நிறுவன வரவு செலவுத்திட்ட உதவி	0	900	850	700	700	600	3,750
உலக வங்கி		250	400	400	400	300	1,750
ஆசிய அபிவிருத்தி வங்கி		650	450	300	300	300	2,000
ஏனையவை		0	0	0	0	0	0
படுகடன் சட்ட இசைவுத்தாமதம் வெளிநாட்டு நிலுவை ஒன்றுசேர்ந்தவை	2,834						2,834
படுகடன் நிவாரணம்		3,376	3,328	3,655	2,246	1,482	14,087
நாட்டிற்கான முறி (சந்தை அணுகல்வசதி)		0	0	0	0	1,500	1,500
பற்றாக்குறை (அ + ஆ)	0	0	0	0	0	0	
மொத்த பன்னாட்டு ஒதுக்குகள்	1,898	4,431	6,128	8,520	10,888	14,208	
செயற்றிட்டக் கடன்கள்	1,473	1,400	1,542	1,585	1,633	1,682	

மூலம் : ப.நா.நிதியம் (2023) இலங்கை: விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாடொன்றின் கோரிக்கை - பத்திரிகை வெளியீடு, அலுவலர் அறிக்கை மற்றும் இலங்கைக்காக நிறைவேற்றுப் பணிப்பாளர் வழங்கிய அறிக்கை

ஆலோசனை விதியும் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடையும் விதத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களை எய்துவதற்கு இலங்கை உறுதியான பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப்பிட்ட இலக்கிட்ட திகதிகளில் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கத்தினைக் கண்காணித்தல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், குறிகாட்டி இலக்குகள் மத்திய அரசாங்கத்தின் வரி அரசிறை, சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செலவிடல், எரிபொருள் மற்றும் மின்வலுவிற்கான வர்த்தகமல்லா கடப்பாடுகளின் செலவு அதேபோன்று திறைசேரி உத்தரவாதம் என்பன மீது முக்கியமாக குறித்துரைக்கப்பட்டுள்ளன. மிக முக்கியமான விடயம் யாதெனில் நியாயமான கால வரையறைக்குள் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவுசெய்யும் நோக்குடன் நீடித்துநிலைத்திருக்கும் படுகடனை அடைந்துகொள்வதில் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு படுகடன் மறுசீரமைக்கப்படுவதன் மீதான முன்னேற்றம் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்ட மீளாய்விலும் மதிப்பீடு செய்யப்படும். நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான கணியம்சார் செயலாற்றப் பிரமாணமும் தகவல் தொழில்நுட்பமும் வரைபடம் பி 2.2இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி மற்றும் நிதியிடல் மூலங்கள்

நிகழ்ச்சித்திட்டமானது ஐ.அ.டொலர் 3.75 பில்லியன் தொகை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான வரவு செலவுத்திட்ட ஆதரவுடன் கூடிய மேலதிக நிதியிடல் ஆதரவை உத்வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதில், ஐ.அ.டொலர் 900 மில்லியன் 2023இல் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் பொருளாதாரத்தின் மீட்சியும் ஏற்பட்டு தாங்கிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டதும் இலங்கை 2027இல் நாட்டிற்கான முறிகளை வழங்கும் நியதிகளில் பன்னாட்டுச் சந்தைகளில் நிதிகளைத் திரட்டக்கூடிய அணுகுவழிகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மூலவளங்கள், வெளிநாட்டுப் பொதுப்படுகடன் தீர்ப்பனவு இலகுவாக்கப்படுவதுடன் சேர்ந்து வெளிநாட்டு நிதியிடல் இடைவெளியினைக் குறைக்கும் என்பதுடன் இலங்கை அதன் மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்பவும் அனுமதிக்கும்.

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

ப.நா. நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் எதிர்பார்க்கப்படும் முக்கிய பெறுபேறுகளில் சில வருமாறு:

- **நீடித்துநிலைத்திருக்கும் படுகடன் தன்மையினை எய்துதல்:** நீடித்துநிலைத்திருக்கும் படுகடன் தன்மையினை எய்துவதற்கு இலங்கை குறித்துரைக்கப்பட்ட படுகடன், நிதியிடல் மற்றும் படுகடன் தீர்ப்பனவுடன் தொடர்பான இலக்கிடல்கள் என்பனவற்றை அடைந்து கொள்வது அவசியமாகும். மேலும், படுகடன் மறுசீரமைப்புச் செய்முறை நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதியில் நிதியிடல் இடைவெளி நிரப்பப்பட்டுவிட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு படுகடன் குறைப்பினை உறுதிப்படுத்தல், மீண்டும் மீண்டும் வரும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்தல், படுகடன் தீர்ப்பனவுத் தேவைகளிலிருந்து வெளிநாட்டு அழுத்தங்களின் புதுப்பிக்கப்பட்ட கட்டியெழுப்பல்களை தவிர்த்தல் என்பன அவசியமாக இருக்கும். இத்தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வது கடன் வழங்குவோர் மற்றும் பன்னாட்டு சமூகத்தினரின் பார்வையில் இலங்கையின் படுகடனானது உறுதித்தன்மை வாய்ந்த மட்டமொன்றிற்கு திரும்பியிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும். இதன்மூலம் இலங்கையின் எதிர்காலக் கடன்பாடுகளுடன் இணைந்துள்ள இடர்ப்பாடுகளும் இடர்நேர்வு மிகைகளும் குறைக்கப்படும்.

  ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையின் பகுப்பாய்வின்படி, படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை இலக்குகள் இலங்கையினால் படுகடன் மறுசீரமைப்பு செய்முறையினூடாகப் பெற்றுக்கொள்ளப்படுவது அவசியமாகும். அவை பின்வருமாறு:

  - **படுகடன் இருப்பு:** 2032 அளவில் பொதுப்படுகடன், மொ.உ.உற்பத்தியின் 95 சதவீதத்திற்கு கீழே வீழ்ச்சியடையும்.
  - **நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பின்னைய மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள்:** 2027 - 2032 காலப்பகுதியில் மத்திய அரசாங்கத்தின் ஆண்டிற்கான மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் சராசரியாக மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்திற்கும் கீழே இருக்கும்.
  - **நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பின்னைய வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன் தீர்ப்பனவுகள்:** 2027 - 2032 காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டிலும் மத்திய அரசாங்கத்தின் சராசரி ஆண்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி படுகடன் தீர்ப்பனவுகள் மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் குறைவாக தொடர்ந்தும் இருக்கும்.
  - **நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் இடைவெளிகள்:** 2023 - 2027 காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவின் குறைப்பு வெளிநாட்டு நிதியிடல் இடைவெளி பூர்த்தி செய்யப்படுவதற்கு போதுமானதாக இருத்தல் வேண்டும்.
- **மேம்பட்ட இறைச் செயலாற்றமும் ஒழுக்காற்றும்:** இறைத் துறை மற்றும் தொடர்பான அமைப்பியல் அடிப்படைக் குறிகாட்டிகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தில் வழங்கப்பட்ட வலியுறுத்தலுடன், அரசிறையை அதிகரிக்கின்ற வழிமுறைகளூடாகவும் மற்றும் செலவினங்களை மேலும் சிக்கனப்படுத்துவதன் மூலமும் இறை இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு இறைத்திரட்சியை அரசாங்கம் பிடிவாதமாகப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னோக்கிச் செல்கையில், பற்றாக்குறையினை நாணய மயப்படுத்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காணப்படுவதனால் அத்தகைய தேவைப்பாடுகள் எழாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் கிடைக்கத்தக்கதாகவுள்ள இடையேற்பாட்டுக் காலத்தில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது. அதேநேரம் இறை வருமானத்திலிருந்து தேவையற்ற விதத்தில் நிதி கசிந்து செல்வதனை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற பரந்த அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கட்டுப்படுத்துதல் வேண்டும்.

1

- **அதிகரித்தளவிலான ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் கட்டமைப்பிற்கான சட்ட ரீதியான மாற்றங்கள்:** உத்தேச மத்திய வங்கிச் சட்டம், வங்கித்தொழில் சட்டம் மற்றும் ஏற்கனவேயுள்ள சட்டங்களுக்கான திருத்தம் போன்ற புதிய சட்டவாக்கங்கள் நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான நிறுவன ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊழலுக்கெதிராக ஐக்கிய நாடுகளின் தீர்மானத்திற்கு இணங்கிச் செல்கின்ற விதத்தில், தென்னாசியாவில் முதற்றடவையாக இவ்வாறானதொரு ஊழலுக்கெதிரான சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளமையானது சுயாதீனமான ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு வசதியளிக்கும். வரவு செலவுத்திட்ட உருவாக்கச் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் அரச நிதியியல் பொறுப்புக்கூறும் பொறிமுறையினை அதிகரிப்பதற்கும் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டமொன்று இயற்றப்படும்.
- **சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களைச் மறுசீரமைத்தல்:** அண்மைக் காலத்தில் செலவிடல் மற்றும் நன்மைபெறுநர்கள் என்பவற்றுடன் தொடர்புடைய சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் மக்களை உள்ளடக்கிக் கொள்வதிலும் தெரிவுசெய்வதிலும் முன்னேற்றங்களை அடைய இன்னமும் கணிசமான வாய்ப்புக் காணப்படுவது அடையாளம் காணப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் கட்டமைப்பில் நிலவுகின்ற பிரச்சனைகளைப் பரிசீலனையில் கொண்டு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடானது. இந்நிகழ்ச்சித்திட்டமானது சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வினைத்திறன், உள்ளடக்கும் செயற்பரப்பு மற்றும் இலக்கிடல் என்பனவற்றினை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை குறித்துரைத்திருக்கிறது.
- **விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைதல்:** மத்திய வங்கி, பொருத்தமான நாணயக் கொள்கை நடவடிக்கையினூடாக, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் பணவீக்கத்தினை மீண்டும் இலக்கிடப்பட்டதொரு மட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு உறுதியான பணவீக்க வீழ்ச்சிப் பாதையில் செலுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைய எதிர்பார்க்கிறது. இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக, அரசாங்கத்திற்கான நாணய நிதியிடலைக் கட்டம் கட்டமாக நிறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விலை உறுதிப்பாட்டுக் கடப்பாடானது செலாவணி வீதங்களில் கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணுவதற்கும் எதிர்கால அதிர்வுகளை எதிர்த்து நிற்கும் விதத்தில் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பவதற்கும் உதவும்.
- **நிதியியல் நிறுவனங்களையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் வலுப்படுத்தல்:** இலங்கையின் நிதியியல் முறைமை அரச துறைக்குப் பெருமளவிற்கு வெளிப்படுத்தலுக்குட்பட்டுள்ளது என்றும் அத்துடன் மிதமான முறையில் மூலதனமயப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றும், படுகடன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து பொருண்மிய மூலதனம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினை அது எதிர்நோக்கக் கூடும் என்ற கருத்தினை ப.நா.நிதியம் கொண்டிருக்கிறது. இதன்விளைவாக, நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பின் விளைவாக கணிசமானளவு மூலதன மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைகளை வங்கிகள் எதிர்நோக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சொத்துக்களின் தர மீளாய்வினைத் தொடர்ந்து முறையியல் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மூலதனத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கும் அரசுக்குச் சொந்தமான வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்குமான திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. அதேவேளை, இலங்கையின் நிதியியல் முறைமையினை கூடியளவிற்கு வீரியமுடையதாக்குவதற்கு நிதியியல் துறை மேற்பார்வையும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பும் வலுப்படுத்தப்படும்.

இக்குறித்துரைக்கப்பட்ட நன்மைகளுக்குப் புறம்பாக, ப.நா. நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை, நாட்டிற்கான தரமிடல் உயர்வுகளின் சாத்தியம், சந்தைகளை அணுகுவதற்கான வழிகள் மீளத்திறக்கப்படுகின்றமை போன்ற இன்னும் பல விடயங்களூடாகப் பல சாதகமான கசிவுத் தாக்கங்களைப் பொருளாதாரத்திற்கு கொண்டுவரும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் சவால்மிக்க தன்மைகளைப் பரிசீலனையில் கொள்கையில், அதிகாரிகள் அதிகளவு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுடன் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி முழுவதிலும் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கடப்பாடுகளைக் காட்டுதல் வேண்டும். அத்துடன் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியில் அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், குறிப்பாக சீர்திருத்த வழிமுறைகள் தொடர்பில் ஆரம்பத்தில் காணப்படக்கூடிய விரும்பத்தகாத தன்மைகளையும் அதன் விளைவாக ஏற்படும் மக்களின் இணக்கமற்ற தன்மைகளையும் பரிசீலனையில் கொண்டு ஆரம்பத்தில் தியாகங்கள் மேற்கொள்வது எவ்வாறு நீண்ட காலப் பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கும் என்பது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்கு அப்பாலான சீர்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரல்

நிகழ்ச்சித்திட்டம் பெருமளவிற்கு வெற்றி பெறுவது, நீண்ட காலம் புறக்கணிக்கப்பட்டிருந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தபடுகின்றதோ அந்தளவில் தங்கியிருக்கும். அமைப்பியல் சீர்திருத்தங்கள் பொருளாதாரத்தின் போட்டித்தன்மையினை உத்வேகப்படுத்தி, உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான அடித்தளத்தினை வழங்குவதற்கும் மூலவளங்களைப் பயன்படுத்துவதில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் வளர்ச்சியின் உள்ளார்ந்த வளத்தினை உயர்த்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன. இலங்கையினால் தற்போது எதிர்நோக்கப்படும் பொருளாதார நெருக்கடிகளின் கடுமையான தன்மையானது நீண்ட காலமாகக் காணப்படும் அமைப்பியல் பிரச்சனைகளை ப.நா.நிதிய

நிகழ்ச்சித்திட்டங்களிலுள்ள சீர்திருத்த நிகழ்ச்சிநிரலுக்கப்பால் தீர்ப்பதற்கு தனிப்பட்ட தன்மையுடன்கூடிய அரசியல் நோக்கமற்ற ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கைகளினூடாக தீர்ப்பது அவசியமானது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பில், சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமானது தொழில்நுட்பவியல் புத்தாக்கங்களினூடாக உற்பத்தித்திறனையும் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனையும் மேம்படுத்தல், வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளில் பன்முகத்தன்மையினை அதிகரிப்பதன் மூலம் உலகம் முழுவதும் வர்த்தகம் மற்றும் முதலீடுகளுடனான பொருளாதார இணைப்புக்களை அதிகரித்தல். சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறைகள் உள்ளிட்ட சாத்தியமான ஏற்றுமதித் துறைகளுக்கான பணிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல் என்பனவற்றினை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். அரச நிறுவனங்களின் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதிப்படுத்துவது, நாட்டின் நீண்ட காலம் நிலைத்திருக்கும் பொருளாதார நலன்புரிகளை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பான அதிகாரிகளினால் கொள்கை வடிவமைப்பிற்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் கிடைக்கத்தக்க சட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதும் சட்டக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதும் அவசியமாகும். இவை இலங்கை சாத்தியமானளவிற்கு விரைவான காலக்கட்டமைப்பிற்குள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதனை உறுதிப்படுத்துவதற்கு ப.நா.நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிலுள்ள சீர்திருத்தங்களின் நிகழ்ச்சிநிரலைப் பூரணப்படுத்துவதாக அமையும்.

முடிவுரை


இலங்கை 1965 இலிருந்து பதினாறு கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் இருந்து வந்தபோதும் ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு சில மட்டுமே அதிகாரிகளினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு குறிப்பாக, நீண்டகால நலன்புரியினை விரிவாக்குவதனை இலக்காகக் கொண்ட வலி மிகுந்த பேரண்டப் பொருளாதார திருத்தங்கள் மற்றும் வரவேற்கப்படாத கொள்கைகளைத் தேவைப்படுத்துகின்ற அமைப்பியல் சீர்திருத்தங்களுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதில் போதியளவு கட்டுப்பாடுகள் காணப்படாமையே காரணமாகும். ஆகவே, இலங்கை அதன் கொள்கை உருவாக்கத்திலுள்ள இச்சீர்திருத்தங்களை உள்ளக மயப்படுத்துவதும் தற்போதைய ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள சீர்திருத்தங்களின் முக்கிய பகுதிகளை நடைமுறைக்கிடுவதும் அதேபோன்று நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பாலான சீர்திருத்தங்கள்/ கூடுமான வரை நேரகாலத்துடன் பொருளாதாரத்தினைப் பெருமளவிற்கு உறுதித்தன்மையையும் உயர்ந்த வளர்ச்சியையும் கொண்ட பாதைக்கு திருப்பும் விதத்தில் மாற்றியமைப்பதும் தவிர்க்க முடியாததாக இருக்கும் அதேவேளையில் இது பிரச்சனைகளிலிருந்து மீள்வதற்கும் எதிர்காலத்தில் பல சுற்றுக்களைக் கொண்ட படுகடன் மறுசீரமைப்பிற்கும் ப.நா. நிதியத்தினை மீண்டும் மீண்டும் நாடுவதனையும் தவிர்க்கும்.

உசாத்துணைகள்

International Monetary Fund. (2023). Sri Lanka: Request for an Extended Arrangement Under the EFF - Press Release; Staff Report; and Statement by the Executive Director for Sri Lanka. 116. International Monetary Fund, Washington D.C.

சீரமைப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டுள்ளது. 2022இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் தாழ்ந்த அரசிறை சேகரிப்பின் காரணமாகவும் உயர்வான உள்நாட்டு வட்டி வீதங்கள் மற்றும் உயர்வான பணவீக்கம் என்பவற்றின் விளைவால் ஏற்பட்ட அளவுக்குமிஞ்சிய செலவினங்களின் காரணமாகவும் 2022ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் அடையப்படமுடியாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளையும் இறைத் திரட்சி முயற்சிகளையும் வலுப்படுத்தும் நோக்கில் 2022 ஏப்பிறலிலிருந்து பல இறைத் திரட்சி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியதுடன் 2022 செத்தெம்பரில் 2022இன் வரவுசெலவு திட்டத்திட்டத்திற்கான பாராளுமன்ற ஒப்புதலைப் பெற்றது. 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளாலும் பொருளாதாரத்தில் அதிகரிக்கப்பட்ட விலை மட்டங்களாலும் ஆதரவளிக்கப்பட்டு, 2022இல் அரசாங்க வருமானம் ரூ.1,979.2 பில்லியனாக 35.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், பாரிய சுருக்கியுடன் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் கணிசமான அதிகரிப்பின் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான அரசிறையானது 2021இன் 8.3 சதவீதத்திலிருந்து 2022இல் 8.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வருமான வரிகள், பெறுமதி சேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வை மற்றும் குடிவகை மற்றும் சிகரெட்டுக்கள் மீதான காலால் தீர்வை என்பவற்றிலிருந்து அதிகரித்த அரசிறை திரட்டலானது

வரைபடம் 1.8
இறைத்துறை செயலாற்றத்தின் சுருக்கம்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

1

அரச வரி வருமானத்தில் ஏற்பட்ட பெயரளவு வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்தது. எவ்வாறாயினும், இறக்குமதி தீர்வை, சிறப்புப் பண்ட தீர்வை, மற்றும் பண்ட ஏற்றுமதி உதவுதொகை திட்டம் என்பவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்பானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிச் செலவினம் மிதமடைவதின் தாக்கத்தை தோற்றுவித்தது. அதேவேளை, வரியல்லா வருமானத்திலிருந்தான சேகரிப்பானது உயர்வான கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அத்துடன் 2021ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றின் அடிப்படையில் மத்திய வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட இலாபம் என்பவை தொடர்பில் அதிகரித்தது. 2022இன் இரண்டாம் அரையாண்டிலும் 2023இன் முன்னைய காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகள் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் முழுத்தாக்கத்தினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறுத்தில், அரசாங்க செலவினத்தை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளுக்கு மத்தியில், பெயரளவு நியதிகளில் அரசாங்க செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் 2022இல் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 27.0 சதவீதத்தால் அதிகரித்தது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கச் செலவினமானது முன்னைய ஆண்டின் 20.0 சதவீதத்திலிருந்து 2022இல் 18.5 சதவீதத்திற்கு குறைவடைந்தது. மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்கு உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் தொடர்பான உயர்வான செலவினம் பங்களிப்புச் செய்தது. அதேபோன்று, மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலும் குறிப்பாக, வளமாக்கியையும் திரவப்பெற்றோலிய எரிவாயுவையும் இறக்குமதிசெய்வதற்கு உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கடனாக வழங்குவதற்கும் இந்திய கொடுகடன் வசதியூடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு கடனாக வழங்கல் தொடர்பில் ஆண்டுக்காண்டு 23.1 சதவீதம்கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கமைய, பெயரளவு நியதிகளில் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் ரூ.2,057.9 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.2,460.0 பில்லியனை எடுத்துக்காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, இறைப் பற்றாக்குறையானது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக 2021இன் 11.7 சதவீதத்திலிருந்து 2022இல் 10.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் குறைச் சேமிப்பை பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது, 2021இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,290.4 பில்லியன்) 7.3 சதவீதத்திலிருந்து 2022இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,540.4 பில்லியன்) 6.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முதன்மைப் பற்றாக்குறையானது இறைத் திரட்சி வழிமுறைகளின் தாக்கத்தை பிரதிபலித்து, 2021இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 1,009.5 பில்லியன்) 5.7 சதவீதத்திலிருந்து 2022இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ரூ. 894.8 பில்லியன்) 3.7 சதவீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பெயரளவு நியதிகள் இரண்டிலும் சுருக்கமடைந்தது.

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட படுகடன் ஸ்தம்பதநிலை மற்றும் பாதகமான நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களின் தாக்கத்தைத் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியிடலானது 2022இல் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு பிரதானமாக உள்நாட்டு நிதியிடல் மூலங்களில் குறிப்பாக, வங்கித்தொழில் துறையில் அரசாங்கம் தங்கியிருப்பதற்கு கட்டாயப்படுத்தியது. இதற்கமைய, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், உள்நாட்டு மூலங்களினூடாக தேறிய நிதியிடல் 2021இன் மொத்த நிதியிடலின் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.8 சதவீதம்) 100.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், மொத்த நிதியிடலின் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.4 சதவீதம்) 82.7 சதவீத தொகையாகவிருந்தது. இலங்கை மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களின் நேரடி வழங்கல் மற்றும் அரச பிணையங்கள் மீது குறைவடைந்த சந்தை நாட்டத்திற்கு மத்தியில் திறைசேரி உண்டியல் ஏலங்களில் மத்திய வங்கியின் நேரடி கோரிக்கைகளின் காரணமாக 2022இல் ரூ.1,338.4 பில்லியன் தேறிய நிதியிடலை பதிவுசெய்து அரசாங்கத்தின் பெருமளவான நிதியிடல் மூலமாக தொடர்ந்தும் செயற்பட்டது. பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் பொதுமக்களின் இன்னல்களை குறைப்பதற்காக பெறப்பட்ட பல்புடை மற்றும் இருபுடை நிதியிடலின் காரணமாக, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.424.8 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதம்)

வரைபடம் 1.9
வெளிநின்ற மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

தொகையாகவிருந்தது. 2021இல், வெளிநாட்டு நிதியிடல் ரூ.13.9 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதம்) கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றை பதிவுசெய்தது. அதேவேளை, பாராளுமன்ற ஒப்புதலுடன் 2022 யூனில், திறைசேரி உண்டியல்கள் இருப்பின் எல்லையானது ரூ. 3000 பில்லியனிலிருந்து ரூ. 4,000 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டதுடன் உயர்ந்த சந்தை வட்டி வீதங்களின் காரணமாக முகப்புப் பெறுமதி நியதிகளில் அதிகரித்த கடன்பாட்டுத் தேவைப்பாட்டினால் இவ்வெல்லை 2022 நவெம்பரில் ரூ. 5,000 பில்லியன் மேலும் அதிகரிக்கப்பட்டது.

2022இன் இறுதியளவில் வெளிநின்ற மத்திய அரசு படுகடனானது 2021இன் இறுதியளவில் காணப்பட்ட ரூ.17,614.2 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 100.1 சதவீதம்) ரூ. 27,492.0 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 113.8 சதவீதம்) அதிகரித்தது. செலாவணி வீதத்தின் கடுமையான பெறுமானத்தேய்வினதும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் கீழ் முன்னதாக பதிவுசெய்யப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட படுகடன் பொறுப்புக்கள் மத்திய அரசின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்டதினதும் காரணமாக இவ்வதிகரிப்பானது பாரியளவான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் தாக்கத்தை பிரதிபலித்தது. 2022இன் இறுதியளவில் பெயரளவு நியதிகளில், உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் என்பன முறையே 35.5 சதவீதத்தாலும் 91.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. அதேவேளை, 2021இன் இறுதியளவில் காணப்பட்ட 62.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் இறுதியளவில் 57.9 சதவீத பங்குடன் உள்நாட்டு படுகடன் இருப்பின் உள்ளடகக்கத்திற்கு திறைசேரி முறிகளின் பங்கு தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை, நீண்ட கால அரசாங்கப் பிணையங்களுக்கான குறைந்தளவான சந்தை நாட்டமும் உள்நாட்டு படுகடன் சீரமைப்பின் சாத்தியத்தன்மை மீது காணப்படும் ஊகமும் 2022இன் இறுதியளவில் திறைசேரி உண்டியல்களில் ரூ. 4,113.9 பில்லியனுக்கான கணிசமான அதிகரிப்பொன்றைத் தோற்றுவித்தது.


முக்கியமாக குறைவான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் போதியளவற்ற வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்கள் என்பவற்றிற்கு மத்தியில், அண்மைய மற்றும் நடுத்தரக் காலத்தில் அதிகரித்த மொத்த நிதியிடல் தேவைகள் மற்றும் பாரியளவான படுகடன் பணிக்கொடுப்பனவுக் கடப்பாடுகள் என்பன நிலுவையிலுள்ள படுகடன் சீரமைப்பு முயற்சிகளுக்கு மத்தியில் இருபுடை மற்றும் வர்த்தக படுகடனின் பணிக்கொடுப்பனவை இடைநிறுத்துவதற்கு 2022 ஏப்பிறல் 12 அன்று இடைக்கால கொள்கையொன்றாக படுகடன் ஸ்தம்பிதநிலையை அறிவிப்பதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ.786.3 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதம்) கொண்ட வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2022இல் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.487.4 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதம்) ஆக வீழ்ச்சியடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், உள்நாட்டு வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பு மற்றும் உள்நாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் முக்கிய காரணமாக 2022இல் உள்நாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளானது 2021.இன் ரூ.1,594.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் (மொ.உ.உற்பத்தி 9.1 சதவீதம்) ரூ.2,510.3 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 10.4 சதவீதம்) அதிகரித்தன. இதற்கமைய, 2022இல் மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகளானது 2021இன் ரூ.2,380.6 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 13.5 சதவீதம்) ரூ.2,997.6 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 12.4 சதவீதம்) அதிகரித்தன. 2022இல், வட்டிக் கொடுப்பனவுகளும் மூலதன மீள்செலுத்துகைகளும் முறையே மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதம் மற்றும் 5.9 சதவீதம் கொண்ட தொகையாகவிருந்தன. அரசாங்க பிணையங்கள் சந்தையின் எண்ணப்பாங்குகளை தளர்வுறச் செய்கின்ற உள்நாட்டுப் படுகடன் சீரமைப்புடன் ஒருங்கிணைந்த கரிசனைகளை தணிக்கும் பொருட்டு 2023இன் மாச்சின் பின்னைய காலப்பகுதியில் உள்நாட்டுப் படுகடன் மேம்பாட்டு அளவீடுகள் பற்றிய மேலதிக தகவல்களை அரசாங்கம் பகிர்ந்தது. அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடன் சீரமைப்பு உத்தியை அண்மைய காலத்தில் கடன்கொடுநருக்கு அறிவிக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் எதிர்பாக்கப்பட்ட படுகடன் நிலைபெறத்தக்க இலக்குகளுடன் இணைந்து படுகடன் சீரமைப்பு செயல்முறை துரிதப்பட்டது.

நாணயத் துறை அபிவிருத்திகள்

2022இன் ஏப்பிறலில் 700 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்புடன் இலங்கை மத்திய வங்கியானது 2022ஆம் ஆண்டுமுழுவதும் இறுக்கமான நாணயக்கொள்கை நிலைப்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. அத்தகைய பாரியளவான நாணயக்கொள்கை இறுக்கமடைதலானது அதிகரித்து வருகின்ற பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்தல், வெளிநாட்டுத்துறையிலுள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை தீர்த்தல் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைபெற்றதாக்குதல் போன்றவற்றைத் தேவைப்படுத்தி அதன்மூலம் சாத்தியமானதொரு மிகைப் பணவீக்கத்தையும் பொருளாதார நடவடிக்கையின் நீண்டகால இழப்பீட்டினையும் தடுத்தது. அதற்கமைய, 2021இன் ஓகத்தில் நாணய இறுக்கமடைதல் சுழற்சி ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து, மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன 2022இன் இறுதிவரையான காலப்பகுதியில் 10 சதவீத புள்ளிகளால்

1


வரைபடம் 1.10
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் மற்றும்
தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரிக்கப்பட்டன. 2022 ஏப்பிறலில் 700 அடிப்படைப் புள்ளிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதங்களின் முன்னெப்பொழுதுமில்லாத மேல்நோக்கிய சீராக்கமானது, பணவீக்க அழுத்தங்களினால் உந்தப்பட்ட கேள்வியின் மேலதிக கட்டியெழுப்புதலை கட்டுப்படுத்துவதற்கு உதவிபுரிந்து அதன்மூலம் பாதகமான பணவீக்க எதிர்பார்ப்புக்களின் அதிகரிப்புக்களை முன்கூட்டியே தடுத்து, வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தங்களை தளர்த்தி அத்துடன் சந்தை வட்டி வீதக் கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முரண்பாடுகளில் திருத்தங்களை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட கடன்வழங்கல் உற்பத்திகள் மீதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதும் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அகற்றுதல் உள்ளடங்கலான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு இறுக்கமான நாணய நிலைமைகளுக்கான கொள்கை வட்டி வீத மாற்றங்களை காத்திரமான முறையில் கடந்து செல்வதை இயலுமைப்படுத்தியது. அதேவேளை, அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு அரசாங்கத்தின் தேறிய வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், வங்கித்தொழில் முறைமையிலிருந்து பொதுமக்கள் மூலமான தேறிய நாணய எடுப்பனவுகள் வசதியளிப்பதற்காக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய வாங்கல்-விற்றல் பரஸ்பரப் பரிமாற்றங்களின் முதிர்ச்சிகள் என்பவற்றின் காரணமாக உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை மட்டங்கள் குறிப்பாக 2022இன் முதலரைக் காலப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வான பற்றாக்குறை மட்டங்களிலேயே காணப்பட்டன. எவ்வாறாயினும், தேவையடிப்படையில் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதற்கு மத்தியில், மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் அரச பிணையங்களின் முதன்மை கொள்வனவுகளின் தாக்கத்தையும் உயர்ந்த வைப்பு வட்டி வீதங்களுடன் வங்கித்தொழில் முறைமைக்கான நாணய வைப்புக்களின் அதிகரிப்பை பிரதிபலித்து 2022இன் பின்னைய காலப்பகுதியில் உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மையில் படிப்படியான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பை வேகமாகக் கடந்துசெல்லல், உள்நாட்டு பணச் சந்தையில் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் உயர்த்தப்பட்ட இடர்நேர்வுக் கட்டுப்பணம் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022இல் சந்தை வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் கணிசமானளவில் அதிகரித்தன. அரசாங்கத்தின் அதிகரித்த கடன்பாட்டுத் தேவைகளுக்கும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக் கரிசனைகளினைச் சுற்றியுள்ள சந்தை நிலைமைகளின் அதிகரித்த நிச்சயமற்ற தன்மைகளுக்கும் மத்தியில் முக்கிய கொள்கை வட்டி வீதங்களில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளானது கொள்கை வட்டி வீதங்களுக்கும் ஏனைய சந்தை வட்டி வீதங்களுக்குமான சீராக்கத்திற்கு விகிதாசாரமற்ற விதத்தில் கணிசமானளவில் அதிகரித்தது. மேலும், தேவையடிப்படையில் திறந்த சந்தை செயற்பாடுகளினூடாக வங்கிகளுக்குத் திரவத்தன்மையை வழங்குகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் துணைநில் வசதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அதிகமாகத் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கான வழிமுறைகள் 2023இன் சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன்மூலம் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையின் பகிர்ந்தளிப்பில் சமச்சீரற்ற தன்மைகள் குறைக்கப்பட்டன. இதன்விளைவாக, உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை மற்றும் வங்கிகளுக்கிடையிலான அழைப்பு மற்றும் மீள்கொள்வனவுச் சந்தைகள் என்பவற்றின் செயற்பாடு ஓரிரவில் மேம்படுத்தப்பட்டன. மேம்படுத்தப்பட்ட ரூபாய் திரவத்தன்மை நிலைமைகளுடனும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் வெற்றிகரமான இறுதிப்படுத்துகையின் எதிர்பார்ப்பில் முதலீட்டாளர் மனோபாவத்தின் மேம்பாட்டுடனும் இணைந்து 2022இன் இறுதியிலும் 2023இன் முற்பகுதியிலும் அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்கதொரு மிதமடைவொன்று அவதானிக்கப்பட்டது. 2022இன் பின்னைய பிற்பகுதியிலிருந்து ஏனைய சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக தளர்வடைய ஆரம்பித்து, சந்தை வட்டி வீதங்களின் ஒழுங்கற்ற மேல்நோக்கிய சீராக்கம் திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட வசதியின் ஏற்பாட்டின் இறுதிப்படுத்தலுடன் முன்னோக்கிச் செல்லும் பொருட்டு, அனைத்து 'முன்னைய நடவடிக்கைகளையும்' நிறைவேற்றுவதற்கான அவசியத்தினதும் கொள்கை வட்டி வீதங்களை மேலும் இறுக்குவதற்கான தேவை பற்றி பன்னாட்டு நாணய நிதிய ஊழியர்களினால் எழுப்பப்பட்ட கரிசனைகளினதும் படி, 2022இன் செத்தெம்பரில் ஊழியர்மட்ட உடன்படிக்கையின் இறுதிப்படுத்தல் காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தினால் முன்மொழியப்பட்ட மிகப்பெரிய முன்நோக்கிய சீராக்கத்துடன் ஒப்பிடுகையில், 2023 இன்

வரைபடம் 1.11
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் (அ)




(அ) 2022 மார்ச்-மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கணிசமான தேய்மானம் அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாச்சின் ஆரம்பத்தில், மத்திய வங்கியும் பன்னாட்டு நாணய நிதிய ஊழியர்களும் இணக்கப்பாடொன்றை அடைந்து, 100 அடிப்படைப்புள்ளிகளால் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தனர். இத்தகைய கொள்கை நடவடிக்கையுடன், மத்திய வங்கியானது கொள்கை வட்டி வீதங்களுக்கும் உயர் சந்தை வட்டி வீதங்களுக்குமிடையிலான பரவலினை குறைக்கவேண்டிய தேவையை சந்தைக்குத் தொடர்பூட்டிய அதேவேளை, உள்நாட்டு மீள்கட்டடவாக்க அளவீடுகளை பற்றி அதிகமான தகவல்கள் கிடைப்பெற்றமையால் இடர்நேர்வு கட்டுப்பணத்தின் சாத்தியமான கீழ்நோக்கிய சீராக்கத்தை எடுத்துக்காட்டியது. சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, கொள்கை வட்டி வீதங்களுக்கும் ஏனைய சந்தை வட்டி வீதங்களுக்குமிடையிலான பரவலினை எதிர்பார்க்கப்பட்டவாறு சுருக்கமடையச்செய்தன. அதேவேளை, 2023 மாச்சில் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை அளவீடுகள் மீதான அதிகளவான தகவல்களினை அரசாங்கம் பகிர்ந்தமையானது அதனைத்தொடர்ந்து திறைசேரி உண்டியல் விளைவுகளில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க சீராக்கத்திற்கு வழிவகுத்தது.

வரைபடம் 1.12
விரிந்த பண (M_{2b}) வளர்ச்சி மற்றும் பங்களிப்பு (அ)



(அ) 2022 மார்ச்-மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கணிசமான தேய்மானம் அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அரச துறைக்கான கொடுகடனின் கணிசமான விரிவாக்கத்திற்கும் வெளிநாட்டு நாணய வடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கொடுகடனின் மீள்மதிப்பீட்டு விளைவுகளுக்கு மத்தியில் 2022இன் முற்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் துரிதப்படுத்தப்பட்ட விரிந்த பண நிரம்பலின் (M_{2b}) வளர்ச்சியானது அதன்பின் குறைவடைந்து தனியார் துறைக்கான கொடுகடனின் சுருக்கத்திற்கு பாரியளவில் வகைகூறியது. 2022இன் இறுதியளவில், ஆண்டிற்காண்டு அடிப்படையிலான (M_{2b}) இன் வளர்ச்சி 15.4 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபாவின் பெறுமானத்தேய்வின்[1] தாக்கத்திற்கு சீராக்கப்பட்டதும் அதையொத்த விதத்திலான வளர்ச்சி 2021இன் இறுதியின் 13.2 சதவீதத்திலிருந்து 2022இன் இறுதியில் ஏறத்தாழ 7 சதவீதத்திற்கு மெதுவடைவதற்கு மதிப்பிடப்பட்டது. ரூபாவின் கணிசமான பெறுமானத்தேய்விற்கு மத்தியில், பிரதானமாக வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களினதும் முற்பணங்களினதும் மீள்மதிப்பீட்டு விளைவுகளின் தொடர்பில் 2022இன் முன்னைய காலப்பகுதியில், உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடன் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதும், உரிமம்பெற்ற வங்கிகளால் தனியார் துறைக்கு விரிவாக்கப்பட்ட கொடுகடனானது இறுக்கமான நாணயக் கொள்கைக்கும் பொருளாதார நடவடிக்கைக்கும் பதிலிறுப்பாக 2022இன் நடுத்தர காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. இதற்கமைய, 2022இன் இறுதியளவில், தனியார் துறைக்கு விரிவாக்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 6.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது (ரூபாவின் பெறுமானத்தேய்வை[2] சீராக்கிய பின்னர் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.3 சதவீத சுருக்கமொன்றிற்கு மதிப்பிடப்பட்டது). இருப்பினும், குறைந்த அரசிறை மற்றும் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகியவற்றிற்கு மத்தியில், 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமைகள் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது உள்நாட்டு நிதியிடல் மீது குறிப்பாக மத்திய வங்கி மீது அரசாங்கம் தொடர்ச்சியாகத் தங்கியிருக்கும் தன்மையை பிரதிபலித்து, குறிப்பிடத்தக்களவில் விரிவாக்கப்பட்டது. 2021இன் ரூ.1,284.4 பில்லியன் விரிவாக்கத்திற்கு மேலதிகமாக, 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமைகள் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது இத்தகைய விரிவாக்கத்தை அநேகமாக நோக்கி பங்களிப்புச் செய்த மத்திய வங்கி மூலமான தேறிய அரசு கொடுகடனுடன் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரூ.1,638.7 பில்லியனால்

1 இப்பின்னணியில், பண நிரம்பலானது 2022 பெப்புருவரியில் நிலவிய செலாவணி வீதத்தை பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறித்துரைக்கப்பட்ட மீதிகள் மூலம் மதிப்பிடப்படுகின்றது.

2 இப்பின்னணியில், தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியானது 2022 பெப்புருவரியில் நிலவிய செலாவணி வீதத்தை பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு கொடுகடன் மூலம் மதிப்பிடப்படுகின்றது.

1

கணிசமானளவில் அதிகரித்தது. வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனும் தமது நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் மீள்மதிப்பீட்டு விளைவுகளையும் பிரதிபலித்து, குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. அதேவேளை, சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைப்பனவாகவிருந்ததன் காரணமாக, 2022இன் முன்னைய காலப்பகுதியில் படுகடனை மீள்கொடுப்பனவு செய்வதற்கும் ஆண்டு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களுக்கு நிதியிடுவதற்கும் அலுவல்சார் ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டமையால் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உந்தப்பட்டு வங்கித்தொழில் முறைமையிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களானது 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கணிசமாக சுருக்கமடைந்தது. எவ்வாறாயினும், 2022இன் பின்னைய காலப்பகுதியில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் சிறிதளவான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், 2022இல் குறிப்பாக ஆண்டின் பின்னைய காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் முன்னேற்றமொன்று பதிவுசெய்யப்பட்டது.

நிதியியல் துறை அபிவிருத்திகள்

தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஏற்படும் பல்முனையான சிக்கல்களுக்கு மத்தியில், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டது. 2022இன் ஏப்பிறலில் இருபுடை மற்றும் வர்த்தக படுகடன் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் மீதான ஸ்தம்பிதநிலையின் அறிவிப்புடன் இணைந்து நாட்டிற்கான கீழ்நோக்கிய தரமிடல்கள், வங்கித்தொழில் துறையின் நாட்டிற்கான உயர்ந்த வெளிப்படுத்துகை, பொருளாதாரச் சுருக்கம், கடுமையான வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறை மற்றும் உயர்மட்டப் பணவீக்கம் என்பன நிதியியல் துறையின் நடவடிக்கைகளில் மீது கணிசமானதும் முன்னெப்பொழுதுமில்லாததுமான பாதகமான தாக்கத்தை உருவாக்கின. எவ்வாறாயினும், ஆண்டுக் காலப்பகுதியில் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மை என்பன நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கு வசதிப்படுத்தின. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், வீழ்ச்சியடையும் கொடுகடன் தரமிடல்கள், திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், அதிக குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்ட குறைந்த மட்ட இலாபத்தன்மை மற்றும் சிதைவடைகின்ற மூலதன தாங்கிருப்புக்கள் என்பவற்றிலிருந்து எழுகின்ற அதிகரிக்கும் சவால்களுக்கு மத்தியில் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாடு பேணப்பட்டது. கொடுகடன் வளர்ச்சியின் சுருக்கம், வீழ்ச்சியடையும் இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களால் குறித்துக்காட்டப்பட்ட செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பவற்றிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியில் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்பு என்பவற்றுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தமது விரிவாக்கத்தை தொடர்ந்தும் மேற்கொண்டன. அதேவேளை, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில், காப்புறுதித் துறையானது காப்புறுதி ஊடுருவலில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சொத்துத் தளம் மற்றும் மொத்த எழுத்து மூலமான கட்டுப்பணம் என்பவற்றின் நியதிகளில் மிதமான வளர்ச்சியை அறிக்கையிட்டது. பொருளாதார நெருக்கடியிலிருந்து தோன்றிய சிக்கல்களின் பிரதான காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாகநிதியக் கம்பனிகள், ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் வேறு துணைத் துறைகள் என்பன கலப்புச் செயலாற்றமொன்றை காட்டின.

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், நிதியியல் சந்தைகளும் பல்புடையான துறைகளிலிருந்து அழுத்தங்களை தாங்கியதுடன் 2022இன் பின்னைய காலப்பகுதியிலிருந்து மீளெழுவதற்கான சமிஞ்ஞைகளைக் காட்டின. 2022ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக உயர்ந்த மட்ட பற்றாக்குறையில் காணப்பட்ட பணச் சந்தை திரவத்தன்மையானது மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் பிரதான காரணமாக 2022இன் இறுதியளவில் கணிசமாக மேம்பட்டது. அதேவேளை, பணச் சந்தை நடவடிக்கைகளானது நிதியங்களை கடனாகப் பெறுவதற்கும் மிகையான நிதியங்களை வைப்பிலிடுவதற்கும் மத்திய வங்கியால் வழங்கப்படும் துணைநில் வசதிகள் மீது பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்சியான தாக்குபிடிக்குந்தன்மையுடன் மந்தமான செயலாற்றமொன்றைப் பதிவுசெய்தது. 2023இன் முன்னைய காலப்பகுதியிலிருந்து துணைநில் வசதிகள் மீது தங்கியிருப்பதை மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் ஒருநாளுக்குள்ளேயான அழைப்புப் பணச் சந்தையையும் மீள்கொள்வனவு சந்தையையும் செயற்படுவதற்கு பாரியளவில் உதவிபுரிந்தன. 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சென்மதி நிலுவை அழுத்தங்களினதும் சாதகமற்ற சந்தை எண்ணப்பாங்குகளினதும் காரணமாக பாரியளவான வெளிநாட்டுச் செலாவணித் தேய்மானத்துடன் கடினமான திரவத்தன்மை நிலைமைகளை உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அனுபவித்த அதேவேளை, 2023இன் ஆரம்ப காலப்பகுதியிலிருந்து பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட வசதி ஏற்பாட்டை இறுதிசெய்வதைத் தொடர்ந்து காணப்பட்ட சாதகமான சந்தை எண்ணப்பாங்குகளுடன் இணைந்து, செலவாணி வீதங்கள்

தொடர்பான நாளாந்த சந்தை வழிகாட்டலை அகற்றுவதற்கும் மத்திய வங்கிக்கான வெளிநாட்டுச் செலவாணி கட்டாய விற்பனைகளை அகற்றுவதற்குமான வழிமுறைகளுடன் முன்னேற்றங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. நிலவுகின்ற பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் பின்னடைவிற்கெதிரான நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் பாதகமான சந்தை எண்ணப்பாங்குகளுக்கான உயர்வான விளைவுகளையும் பிரதிபலித்து 2022ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பங்குரிமைச் சந்தை மிகக் குறைவான செயலாற்றமொன்றை பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஆண்டுக் காலப்பகுதியில் பங்குரிமைச் சந்தை தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. சவால்மிக்க பொருளாதாரச் சூழ்நிலையின் கீழ் நிதியியல் உட்கட்டமைப்பானது நிதியியல் துறையின் தொழிற்பாட்டிற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போர் மற்றும் சீனாவில் கொவிட்-19 நோய்த்தொற்றின் மீளெழுச்சி என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற உயர்வடைந்த பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரே நேரத்திலான கொள்கை இறுக்கமாக்கலின் காரணமாக 2022இல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் சடுதியாகக் குறைவடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன. 2023 சனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம், உலகப் பொருளாதார வளர்ச்சியினை 2021இல் மதிப்பிடப்பட்ட 6.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.4 சதவீதமாக விளங்கி குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியினைப் பதிவுசெய்யுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. உயர் பணவீக்கமானது குடியிருப்பாளரின் கொள்வனவு செய்கின்ற ஆற்றலினைச் சிதைவடையச் செய்ததுடன் நம்பிக்கையினையும் பாதித்த வேளையில் துரிதமான நாணயக்கொள்கை இறுக்கமடைதல் கேள்வியினைப் பாதித்தமையினால் 2022இல் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பொருளாதார நிலைமைகள் கணிசமானளவு மோசமடைந்து காணப்பட்டன. ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரானது ஐரோப்பியப் பிராந்தியத்தில் கடுமையான வலு நிரம்பல் இடையூறுகளைத் தோற்றுவித்து, வலு விலைகளையும் சில உணவுப் பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்ததுடன் அதன்மூலம் உற்பத்தியினையும் நுகர்வினையும் பாதிப்படையச்செய்து நிச்சயமற்றதன்மையினைத் தூண்டியது. பாரிய மற்றும் தொடர்ச்சியான கொவிட்-19 பரவல்கள் மற்றும் அதனுடன் இணைந்த முடக்கல்கள் என்பவற்றிற்கு மத்தியில் 2022இல் சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தன. மேலும், இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகள், உயர் பணவீக்கத்திற்கு மத்தியில் குறைவடைந்த நுகர்வோர் செலவிடல், மெதுவடைந்த வெளிநாட்டுக் கேள்வி மற்றும் ருசியா-உக்ரேன் மோதலிலிருந்தான கசிவுகள் என்பவற்றின் காரணமாக தோற்றம் பெற்றுவருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றின் நடவடிக்கைகள் 2022இல் சடுதியாக வீழ்ச்சியடைந்தன.

பணவீக்கத்திற்கு எதிரான உலகளாவிய ரீதியிலான போராட்டத்திற்கு மத்தியில் இறுக்கமடைகின்ற நிதியியல் நிலைமைகள் மற்றும் ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரின் தொடர்ச்சி போன்றவை 2023இல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் சீனாவின் மீள் திறத்தலானது இத்தாக்கத்தினைப் பகுதியளவில் எதிரீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 சனவரியின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம், உலகளாவிய வளர்ச்சி 2023இல் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமெனவும் அதன் பின்னர் 2024இல் 3.1 சதவீத மேல்நோக்கிய திரும்பலொன்றினைப் பதிவு செய்யுமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி 2022இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதத்திலிருந்து 2023இல் 1.2 சதவீதத்திற்குச் சடுதியாக வீழ்ச்சியடையுமென ஊகிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயப் பொருளாதாரங்கள் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியன உள்ளடங்கலாக பெரும்பாலான முன்னேற்றங்கண்ட

அட்டவணை 1.4

உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)

விடயம்	2021 (ஆ)	2022 (இ)	2023 (எறிவு)	2024 (எறிவு)
உலக வெளியீடு	**6.2**	**3.4**	**2.9**	**3.1**
முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள்	5.4	2.7	1.2	1.4
ஐக்கிய அமெரிக்கா	5.9	2.0	1.4	1.0
ஐரோப்பிய பிராந்தியம்	5.3	3.5	0.7	1.6
ஐக்கிய இராச்சியம்	7.6	4.1	-0.6	0.9
யப்பான்	2.1	1.4	1.8	0.9
தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள்	6.7	3.9	4.0	4.2
தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா	7.4	4.3	5.3	5.2
சீனா	8.4	3.0	5.2	4.5
இந்தியா	8.7	6.8	6.1	6.8
உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)	**10.4**	**5.4**	**2.4**	**3.4**
விலை அசைவுகள்				
நுகர்வோர் விலைகள்				
முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள்	3.1	7.3	4.6	2.6
தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள்	5.9	9.9	8.1	5.5
பண்டங்களின் விலைகள்				
எண்ணெய்	65.8	39.8	-16.2	-7.1
எரிபொருள் அல்லாதவை	26.4	7.0	-6.3	-0.4

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) மதிப்பீடுகள்

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சனவரி 2023), பஞா.நிதியம்

1

பொருளாதாரங்கள் 2023இல் மெதுவான வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருக்குமென எதிர்வுக்கூறப்பட்டுள்ளன. இருப்பினும், இறுக்கமான நாணயக்கொள்கை காரணமாக ஏற்பட்ட சவால்களின் தளர்வு மற்றும் வலுச் சந்தைகள் உறுதிநிலையினையடைதல் என்பன காரணமாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சியானது 2024இல் மிதமானளவில் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தாழ்ந்தளவிலான வெளிநாட்டுக் கேள்வியானது முக்கியமாக புடவைகள் மற்றும் ஆடைகள் போன்ற முக்கிய வகைகளின் குறைவடைந்த ஏற்றுமதிகளைத் தோற்றுவிக்கக்கூடுமென்பதனால் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மெதுவடைந்த பொருளதார நடவடிக்கையானது இலங்கையின் ஏற்றுமதிகளில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கான பாரியளவிலான ஏற்றுமதி நாடுகளாகத் தொழிற்படுவதனால், இப்பிராந்தியங்களிலிருந்தான கேள்வியில் ஏற்படும் ஏதேனும் குறைப்பு ஏற்றுமதிச் செயலாற்றத்தில் கணிசமானளவிலான எதிர்க்கணிய தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடுமென்பதுடன் அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிப்படையச் செய்யும். மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வருமான மட்டங்களில் தாழ்ந்தளவிலானதொரு வளர்ச்சியானது அத்தகைய நாடுகளிலிருந்து வருகின்ற உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் நகர்வுகளில் குறைப்பொன்றிற்கு வழிவகுக்கக்கூடும். அதேவேளை, முக்கியமாக தோற்றம்பெற்று வருகின்றதும் அபிவிருத்தியடைந்து வருகின்றதுமான ஆசியாவில் குறிப்பாக, சீனாவில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி வீதங்கள் மற்றும் ருசியாவிற்கான எறிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான வளர்ச்சி வீதம் என்பன காரணமாக தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் பொருளாதார நடவடிக்கைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதத்திலிருந்து 2023இல் 4.0 சதவீதத்திற்கு சிறிதளவினால் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றின் ஏறத்தாழ அரைவாசியில் 2022இல் காணப்பட்டதிலும் பார்க்க 2023இல் பொருளாதார வளர்ச்சி தாழ்ந்தளவில் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இறுக்கமடைகின்ற நிதியியல் நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்கள் என்பவற்றிற்கு மேலதிகமாக, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மெதுவடைந்த கேள்வி நிலைமைகளிலிருந்தான கசிவுகள் மற்றும் தொடர்ச்சியான இறைத் திரட்சி வழிமுறைகள் என்பன உள்ளடங்கலாக பன்முக சவால்களுடன் தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் போராடி வருகின்றன. சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்ற துறைகளில் குறிப்பாக கட்டடவாக்கத்துடன் தொடர்புடைய துறைகளில் இலங்கை இரு நாடுகளுடனும் நீண்டகால பொருளாதார இணைப்புக்களைக் கொண்டுள்ளமையினால், சீனாவின் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்பு மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பன இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடும்.

உலகளாவிய பணவீக்கம் 2022இல் உச்சத்தினை எட்டியிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளதுடன் பலவீனமடைகின்ற கேள்வி மற்றும் தளர்வடைகின்ற பண்ட விலைகள் என்பவற்றிற்கு மத்தியில் 2023இல் தளர்வடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2023 சனவரியின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் இற்றைப்படுத்தலின் பிரகாரம் உலகில் நுகர்வோர் விலைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.8 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 2022இல் உயர்வடைந்து செல்கின்ற பணவீக்கமானது கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளின் இணைப்பொன்றினைப் பிரதிபலித்து, கேள்விப் பக்கத்தில் உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து மிகத் தளர்வான நாணய மற்றும் இறை ஆதரவின் காலங்கடந்த விளைவுகள் விடாப்பிடியான விலை அழுத்தங்களுக்குப் பங்களித்தன. நிரம்பல் பக்கத்தினைப் பொறுத்தவரையில், முக்கிய பண்டங்களின் பற்றாக்குறைகள், ருசியா மற்றும் உக்ரேனிற்கிடையிலான போரினால் மிகைப்படுத்தப்பட்டதுடன் இணைந்து இயலளவு வரையறைகள் மற்றும் நிரம்பல் சங்கிலி இடையூறுகள் என்பன உயர்ந்தளவிலான விலைகளுக்குக் கணிசமானளவில் பங்களித்தன. இருப்பினும், கணிசமானளவிலான நாணய இறுக்கமடைதல், மெதுவடைகின்ற நடவடிக்கைகள், தளர்வடைகின்ற நிரம்பல் சங்கிலி இடையூறுகள் மற்றும் வலு மற்றும் ஏனைய பண்டங்களின் மிதமடைகின்ற விலைகள் என்பவற்றின் விளைவாக பணவீக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கமைய, உலகளாவிய பணவீக்கம் 2023இல் 6.6 சதவீதத்திற்கும் 2024இல் 4.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும், பணவீக்க எதிர்வுகூறல் மட்டங்கள் ஏறத்தாழ 3.5 சதவீதம் கொண்ட நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களிலும் பார்க்க இன்னமும் உயர்வடைந்து காணப்படுகின்றன. 2022இல் உள்நாட்டு விலை அதிகரிப்புக்கள் மீதான இவ்வுலகளாவிய விலைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்து காணப்பட்டமையினால் மிதமடைகின்ற உலகளாவிய வலு மற்றும் ஏனைய பண்ட விலைகள் இலங்கைக்கு நன்மை பயப்பதாயமையும். உலகளாவிய விலைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மிதமடைதலானது காலந்தவறாத மற்றும் வெளிப்படையான சீராக்கங்களின் ஊடாக உள்நாட்டு விலைகளில் கொண்டுவரப்பட்டால் இறக்குமதிசெய்யப்பட்ட பணவீக்கம் கணிசமானளவிலான தாழ்ந்த மட்டமொன்றில் பேணப்படக்கூடுமென்பதுடன் இது நாட்டில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறைக்கு ஆதரவளிக்கும்.

உலகெங்கிலுமுள்ள பல்வேறு மத்திய வங்கிகள் அதிகரித்து வருகின்ற பணவீக்க அழுத்தங்கள் மற்றும் சாதகமற்ற பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு 2022 காலப்பகுதியில் தமது முக்கிய கொள்கை வீதங்களை உயர்த்தி, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய தூண்டுதல்களினைப் படிப்படியாக மீளப்பெறத் தொடங்கின. பணவீக்கமானது 2021இலிருந்து எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க வேகமாகவும் மிகவும் விடாப்பிடியாகவும் அதிகரித்துள்ளது. 2022இல், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பணவீக்கமானது 1982இலிருந்தான அதன் உயர்ந்தபட்ச வீதத்தினை எட்டியது. அதிகரித்து வருகின்ற விலை அழுத்தங்கள் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் மற்றும் பெரும்பாலான தோற்றம்பெற்று வருகின்ற சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் முழுவதிலும் ஒத்திசைந்த நாணயக் கொள்கை இறுக்கமடைதலினைத் தூண்டியுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பெடரல் நிதியங்கள் வீதத்தினை ஏறத்தாழ பூச்சியத்தில் வைத்திருந்த ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ஒதுக்கானது பெடரல் நிதியங்கள் இலக்கிடல் வீதத்தினை 2022இல் 425 அடிப்படைப் புள்ளிகளினால் கணிசமானளவில் உயர்த்தியதைத் தொடர்ந்து 2023இன் இதுவரையான காலப்பகுதியில் 50 அடிப்படைப் புள்ளியொன்றினால் அதிகரித்தது. மேலும், பெடரல் ஒதுக்கானது உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் உருவாக்கிய தளர்த்தப்பட்ட நிதியியல் நிலைமைகளை விளைவற்றதாக்குவதற்கான நகர்வில் அதன் திறைசேரிப் பிணையங்கள், முகவராண்மைப் படுகடன் மற்றும் முகவராண்மை ஈடுகளினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் என்பவற்றின் கையிருப்புக்களைத் தொடர்ந்து குறைத்தது. இதற்கொத்ததாக, பலவீனமான பொருளாதார வளர்ச்சியினை எதிர்வுசெய்தமைக்கு மாறாக இங்கிலாந்து வங்கியானது வங்கி வீதத்தினை 2022இல் மொத்தமாக 325 அடிப்படைப் புள்ளிகளினாலும் 2023இன் இதுவரையான காலப்பகுதியில் 75 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதிகரித்து 2008இன் பிற்பகுதியிலிருந்தான உயர்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்தது. ஐரோப்பிய மத்திய வங்கியும் அதன் கொள்கை வட்டி வீதங்களை 2022இல் பதிவுசெய்யப்பட்ட பூச்சிய மட்டமொன்றிலிருந்து 2023 மார்ச்சளவில் 3.5 சதவீதத்திற்கான வலுவானதோர் அதிகரிப்பினை நடைமுறைப்படுத்தியது. மேலும், ஐரோப்பிய மத்திய வங்கியானது ஐரோப்பிய முறைமையின் சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதன் பிணைய இருப்புக்களில் குறைப்பொன்றினை அறிவித்தது. மேலும், முக்கிய முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் 2023 மற்றும் பெரும்பாலும் 2024இல் எதிர்பார்க்கப்பட்ட பாதை மற்றும் தொடர்கின்ற இறுக்கமான நாணய நிலைமைகள் என்பன தொடர்பிலான முன்னோக்கிய வழிகாட்டலினை வழங்கின. பல்வேறு நாடுகளில் விளைவு வளையி முழுவதிலும் வட்டி வீதங்கள் அதிகரித்துள்ள வேளையில், தொழிலாளர் சந்தைகளின் உத்வேகம் மெதுவடைந்து செல்வதுடன் வீட்டுச் சந்தைகள் தணிவடைந்து செல்கின்ற சமிக்ஞைகளைக் காண்பிக்கின்றமையினால் உண்மைப் பொருளாதார நடவடிக்கை மற்றும் நிதியியல் சந்தைகள் என்பன நாணய நிலைமைகளின் இறுக்கமடைதலிற்கு பதிலிறுத்தியுள்ளன. ஆயினும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் இறுக்கமான நாணயக் கொள்கையானது இலங்கை உள்ளடங்கலாக தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றிற்கான மூலதனப் பாய்ச்சல்கள் மீது தாக்கத்தினைச் செலுத்தக்கூடும். அதேவேளை, பெரும்பாலான தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகளும் அதிகரித்துச் செல்கின்ற பணவீக்க அழுத்தங்களுக்கு எதிராகப் போராடுவதற்கு 2022இல் இறுக்கமான கொள்கைகளைப் பின்பற்றின. அதற்கமைய, ஏனையவற்றிற்கிடையில், இந்திய ரிசர்வ் வங்கி, மலேசியா நெகாரா வங்கி, தாய்லாந்து வங்கி, பிலிப்பைன்ஸ் மத்திய வங்கி மற்றும் இந்தோனேசிய வங்கி என்பன பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022இலும் அதேபோன்று 2023இன் முற்பகுதியிலும் அவற்றின் அடிப்படைக் கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்தன. மாறாக, நீடிக்கப்பட்ட கொவிட்-19 முடக்கல்கள் மற்றும் உண்மைச் சொத்துத் துறையிலுள்ள பிரச்சனைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தினை மீளெழுச்சியடையச் செய்கின்ற முயற்சியில், சீன மக்கள் வங்கி 2022இல் நாணயக் கொள்கையினைத் தொடர்ந்தும் தளர்த்தியது.

உயர்வடைந்த வட்டி வீதங்கள் குறிப்பாக அரச பிணையங்கள் மீதான உயர் விளைவு வீதங்களுக்கு மத்தியில், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வங்கித்தொழில் துறை நிதியியல் நெருக்கடிசார் சமிக்ஞைகளைக் காண்பித்தது. 2023 மார்ச்சில், ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சிலிக்கன் வலி வங்கி முறிவடைந்து, ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் இரண்டாவது பாரியளவிலான வங்கி முறிவடைதலினையும் 2008இல் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னரான மிகப்பெரிய வங்கி முறிவடைதலினையும் பதிவுசெய்தது. பெடரல் ஒதுக்கானது அதிகரித்து வருகின்ற பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022இல் வட்டி வீதங்களைச் சடுதியாக உயர்த்தியமையினால், ஐக்கிய அமெரிக்க திறைசேரி பிணையங்களின் சந்தைப் பெறுமதியானது கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. பல வங்கிகள் ஐக்கிய அமெரிக்க திறைசேரி பிணையங்களின் முதலீடுகளை வைத்திருந்தமையினால், சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது அவற்றின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் இழப்புகளை ஏற்படுத்தி, மூலதன ஒதுக்குகளைக் குறைத்து அவற்றின் ஐந்தொகைகளைப் பலவீனப்படுத்தியது. சிலிக்கன் வலி வங்கியின் கடன்வழங்கல் சொத்துப்பட்டியலானது நிதியியல் தொழில்நுட்ப கம்பனிகளையும் தொடக்கநிலை வணிகங்களையும் பாரியளவில் சார்ந்திருந்ததன்

1

விளைவாக அதன் ஒன்றுசேர்ந்த இடர்நேர்வினை உயர்வடையச் செய்தது. பாரிய ஐக்கிய அமெரிக்க வங்கிகளின் ஒன்றுசேர்வினால் மீட்கப்பட்ட பெஸ்ட் றிபப்ளிக் வங்கி உள்ளடங்கலாக பல்வேறு ஐக்கிய அமெரிக்க வங்கிகளும் இதே நிகழ்வின் காரணமாக நிதியியல் நெருக்கடியைச் சந்தித்தன. மேலும், மறைக்குறி நாணயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அதன் அதிகரித்த வெளிப்படுத்துகை காரணமாக 2023 மார்ச்சில் ஐக்கிய அமெரிக்காவின் சில்வர்கேட் வங்கியும் முறிவடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்காவின் சிக்னேசர் வங்கியின் தொழிற்பாடுகளும் அதே காரணத்திற்காக ஒழுங்குமுறைப்படுத்துனர்களினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இம்முறிவுகளுக்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில், ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கு மற்றும் ஐக்கிய அமெரிக்க அரச முகவராண்மைகள் என்பன நிதியியல் நெருக்கடியிலுள்ள வங்கிகளிற்கான திரவத்தன்மைக் கிடைப்பனவினை நிச்சயப்படுத்துவதற்கும் முறிவடைந்த வங்கிகளின் வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கும் தொடர் வழிமுறைகளை அறிவித்தன. ஐக்கிய அமெரிக்க வங்கித்தொழில் துறை தவிர, சுவிட்சர்லாந்தினைத் தளமாகக்கொண்ட உலகளாவிய முதலீட்டு வங்கி மற்றும் நிதியியல் பணிகள் நிறுவனமான கிரெடிட் சூயிஸ் ஆனது 2023 மார்ச்சில் நிதியியல் நெருக்கடிசார் சமிக்ஞைகளைக் காண்பித்தது. இருப்பினும், நிதிகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சுவிஸ் தேசிய வங்கியினால் வழங்கப்பட்ட அவசரக் கடன் வசதியொன்றின் மூலம் அதன் முறிவு தவிர்க்கப்பட்டது. கிரெடிட் சூயிஸ் பின்னர் சுவிட்சர்லாந்தின் பாரியளவிலான வங்கித்தொழில் நிறுவனமான சுவிட்சர்லாந்தின் யூனியன் வங்கியினால் கையகப்படுத்தப்பட்டதுடன் இது சுவிஸ் தேசிய வங்கியினாலும் சுவிஸ் அரசாங்கத்தினாலும் துரிதமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றாகும். மேலும், தற்போதைய வங்கித்தொழில் நெருக்கடியானது முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் சந்தைப் பீதியினைத் தூண்டியுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய வங்கித்தொழில் துறைகளின் பங்குப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க நட்டங்களைத் தோற்றுவித்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் ஒதுக்கு, கனேடிய வங்கி, இங்கிலாந்து வங்கி, ஜப்பானிய வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சுவிஸ் தேசிய வங்கி என்பன உலகளாவிய நிதியியல் முறைமையின் திரவத்தன்மைக் கரிசனைகளைத் தீர்ப்பதற்கும் எல்லைகளுக்கிடையிலான சீரான தீர்ப்பனவுகளை நிச்சயப்படுத்துவதற்கும் துணைநில் ஐக்கிய அமெரிக்க டொலர் திரவத்தன்மைப் பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாடுகளினூடாக திரவத்தன்மை வழங்கலினை மேம்படுத்தும் பொருட்டு 2023 மார்ச்சில் ஒருங்கிணைந்த நடவடிக்கையொன்றினை அறிவித்தன. ஆயினும், உலகளாவிய வங்கித்தொழில் நிறுவனங்களின் தற்போதைய நெருக்கடி மற்றும் அதன் விளைவான கசிவுத் தாக்கங்கள் என்பன பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்குக் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய இடர்நேர்வு மூலமொன்றாக மாறக்கூடும் என்பதுடன் அதன் கசிவுகள் தோற்றம்பெற்று வருகின்ற சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தக்கூடும். மேலும், இது முக்கிய மத்திய வங்கிகள் தமது கொள்கை நெறிப்படுத்தல் அல்லது ஏதேனும் எதிர்கால கொள்கை வீத சீராக்கங்களின் வேகம் என்பவற்றினை மீள்பரிசீலனை செய்வதனை உருவாக்கக்கூடுமென்பதனால் இந்நிதியியல் நெருக்கடியானது உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்ற இறுக்கமான நிதியியல் நிலைமைகளிலிருந்தான விலகலொன்றிற்கு வழிவகுக்கக்கூடும். அதேவேளை, நிதியியல் நெருக்கடியினைத் தீர்ப்பதற்கான பாரியளவிலான திரவத்தன்மை வழங்கலானது முன்னோக்கிச் செல்கின்ற கேள்வி அழுத்தங்களை மீளத் தொடக்கி உலகம் முழுவதும் பெருமளவில் நம்பப்படுகின்ற பணவீக்க வீழ்ச்சிப் போக்குகளை அச்சுறுத்தக்கூடும்.

உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள், ஒன்றுதிரண்டதோர் அடிப்படையில், உலகளாவிய வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றதிலும் பார்க்க குறைவாகவும் பணவீக்கம் எதிர்பார்க்கப்படுகின்றதிலும் பார்க்க உயர்வாகவும் இருப்பதற்கான சாத்தியத்தினைக் குறிக்கின்றன. மேல் நோக்கிய பக்கத்தில், குறிப்பாக உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இறை உதவியினாலான மிகையளவிலான தனியார் சேமிப்புக்களின் இருப்பினால் ஆதரவளிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த கேள்வி அத்துடன் மிகவும் இறுக்கமான தொழிலாளர் சந்தைகள் மற்றும் வலுவான ஊதிய வளர்ச்சி என்பவை நுகர்வில் அதிகரிப்பொன்றிற்கான வாய்ப்பினையளிக்கின்றன. மேலும், முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் தொழிலாளர் சந்தை நிலைமைகளில் தளர்வு, தணிந்து செல்கின்ற ஊதியப் பணவீக்கம் மற்றும் பொருட்களின் விலைகளில் சடுதியானதொரு வீழ்ச்சி என்பன காரணமாக ஏற்பட்டுள்ள விரைவான பணவீக்க வீழ்ச்சியானது மற்றுமொரு சாதகமான பெறுபேறாகும். இருப்பினும், பல கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் 2023இல் உலகளாவிய தோற்றப்பாட்டினை பாதிக்கக்கூடும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீடித்த விளைவுகள் மற்றும் ஆழமடைந்து செல்கின்ற உண்மைத் துறை நெருக்கடி என்பவற்றின் மத்தியில் சீனாவின் மெதுவானதொரு மீட்சியானது தாழ்ந்தளவிலான கேள்வி மற்றும் நிரம்பல் பக்க பிரச்சனைகள் தொடர்பில் உலகின் ஏனைய பகுதிகளில் கசிவுத்தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். போர் மேலும் தீவிரமடைதலானது வலு மற்றும் உணவு விலைகளில் சாத்தியமான துரித அதிகரிப்பொன்றிற்கு வழிவகுக்கக்கூடுமென்பதனால் ருசியா-உக்ரேன் நெருக்கடியானது குறிப்பாக, ஐரோப்பா மற்றும் குறைந்தளவில் வருமானமீட்டுகின்ற நாடுகளுக்கு இடர்நேர்வின் முக்கியமானதொரு மூலமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. அதிகரித்து வருகின்ற எண்ணிக்கையிலான நாடுகள் தற்போது ஒன்றில் படுகடன் நெருக்கடியில் அல்லது அத்தகைய நெருக்கடியின் உயர் இடர்நேர்வில் காணப்படுகின்றன. இது, குறைந்தளவிலான வளர்ச்சி மற்றும் உயர்ந்தளவிலான கடன்பாட்டுச் செலவுகளுடன் இணைந்து, இப்பொருளாதாரங்களின் பாதிப்படையக்கூடிய தன்மைகளை

மோசமடையச்செய்து, உலகளாவிய தோற்றப்பாட்டினைப் பாதிப்படையச்செய்யக்கூடும். அதேவேளை, தொழிற்சந்தையின் தொடர்ச்சியான இறுக்கம் மற்றும் உக்ரேனில் நடைபெற்ற போரின் விளைவாக உணவு மற்றும் வலு என்பவற்றிற்கான ஊகிக்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான விலைகள் அல்லது சீனாவின் பொருளாதாரத்தில் விரைவானதொரு மீளெழுச்சி என்பன காரணமாக பணவீக்கமானது மீண்டுமொருமுறை அதிகரித்து உயர்வடைந்த மட்டங்களில் விடாப்பிடியாயிருந்து, பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தப்படாத மட்டங்களுக்கு இட்டுச்செல்லக்கூடும். மேலும், நிதியியல் நிலைமைகளில் ஏதேனும் முன்கூட்டிய தளர்வடைதல் மற்றும் நிதியியல் சந்தையின் தளம்பல்நிலை மற்றும் புவிசார் அரசியல் கூறாக்கத்துடன் இணைந்த அதிகரிப்பு என்பன உலகளாவிய தோற்றப்பாட்டிற்கான ஏனைய கீழ்நோக்கிய இடர்நேர்வுகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன. மேலும், உலகளாவிய வங்கித்தொழில் முறைமையில் தற்போதுள்ள நெருக்கடி மற்றும் சாத்தியமான கசிவுத்தாக்கங்கள் என்பன உலகளாவிய வளர்ச்சியின் தோற்றப்பாடு மற்றும் நிதியியல் நிலைமைகள் என்பவற்றிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளின் முக்கியமானதொரு மூலமாக மாறக்கூடும்.

1.4 பேரண்டப்பொருளாதார தோற்றப்பாடு[3]

இலங்கைப் பொருளாதாரத்தின் நடுத்தரக் காலத் தோற்றப்பாடானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் குறித்துக்காட்டப்பட்டுள்ள பேரண்டப்பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற செயலாற்றப் பிரமாணம் மற்றும் கட்டமைப்புசார் அளவிடல்கள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றின் காலந்தவறாத மற்றும் வினைத்திறனான நிறைவேற்றுகையில் பாரியளவில் தங்கியுள்ளது. காலந்தவறாத மற்றும் நிலையான முறையில் சீர்திருத்தங்களை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதானது, எதிர்வருகின்ற காலப்பகுதியில் தூண்டுதலளிக்கின்ற வியாபார சூழலொன்றினை உருவாக்குவதற்கு அத்தியாவசியமானதாயமையும். மேலும், பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாட்டின் அடிப்படைச் சூழ்நிலையினை அடையப்பெறலானது எதிர்பாராத வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு உட்பட்டிருக்கக்கூடும். கடந்த காலத்தில் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நடுத்தர காலப் பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு கட்டமைப்புசார் தடைகளைச் சீராக்குவதற்குத் தேவையான சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென ஊகித்திருந்தது. இருப்பினும், தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாமையானது கடந்த காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட சாதகமான பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாட்டினை அடைந்து கொள்வதனைத் தாமதப்படுத்தியது. சுதந்திரத்திற்குப் பின்னரான பொருளாதாரப் பயணத்தில் இலங்கை முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையொன்றினை எட்டியுள்ளமையினால் நீண்டகால தாமதமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைசார் அர்ப்பணிப்பும் அத்தகைய தீர்க்கமான சீர்திருத்தங்களுக்கான பொதுமக்களது ஆதரவும் அடுத்துவருகின்ற காலப்பகுதியில் மேலோங்குமென்ற நியாயமான எதிர்பார்ப்பொன்று தற்போது காணப்படுகின்றது. இருப்பினும், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகள் முடிவடைகின்ற காலம், மறுசீரமைப்பிற்குப் பின்னரான பொருளாதார மீட்சியின் வேகம் மற்றும் பரிமாணம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட இலக்குகளின் வெற்றிகரமான நிறைவு போன்றவற்றுடன் தொடர்புடைய சாத்தியமான இடர்நேர்வுகள் காரணமாக எதிர்பார்க்கப்படுகின்ற நடுத்தர கால பாதை நிச்சயமற்றதன்மைகளினால் நிறைந்துள்ளது. இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் முன்னேற்றமானது குறிப்பிடத்தக்கதாகும். சீர்திருத்த நிகழ்ச்சி நிரலைத் தொடருவதற்கான கொள்கை வகுப்பாளர்களின் உறுதிப்பாடு மற்றும் வேதனையளிக்கின்ற சீர்த்திருத்தங்களைத் தொடருவதற்கான தேவையினைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளல் என்பன நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் நிலைத்திருக்கக்கூடிய உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கு இன்றியமையாதவையாகும்.

இலங்கைப் பொருளாதாரம் 2022இல் அவதானிக்கப்பட்ட அதன் ஆழ்ந்த பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து படிப்படியாக மீட்சியடைவதற்குத் தயாராக உள்ளது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுத்தல், படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மை, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொண்டு வருதல் அதேவேளையில், ஏழ்மை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினர் மீதான பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தினைத் தணித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பேரண்டப்பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இம்மீட்சியானது ஊக்கமளிக்கப்படும். அதேவேளை, அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்பட்ட

3 இப்பிரிவில் வழங்கப்பட்டுள்ள நடுத்தர கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பானது 2023 செத்தெம்பர் இறுதிப் பகுதிக்கு முன்னரான படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவின் மூலம் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான மேலதிக உதவியினைப் பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பினை உருவாக்குதல் உள்ளடங்கலாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சியின் அனுமானத்துடனான கொள்கைச் சூழ்நிலையின் அடிப்படையிலமைந்துள்ளது. இலங்கைக்கான பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளில் கிடைக்கத்தக்கதான தகவல்கள் மற்றும் அடிப்படையிலமைந்த எடுகோள்களின் வேறுபாடுகள் காணப்படக்கூடுமென்பதனைக் குறிப்பிடுவது பொருத்தமானதாயமைகின்றது.

1

அட்டவணை 1.5

நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பு (அ)

குறிகாட்டி	அலகு	2021 (ஆ)	2022(இ)	2023	2024	2025	2026	2027
உண்மைத்துறை (ஈ)								
உண்மை மொ.உ.உ. வளர்ச்சி	%	3.5 (இ)	-7.8	-2.0	3.3	4.0	4.5	5.0
நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ.	ரூ.றில்	17.6 (இ)	24.1	28.5	31.0	33.8	37.1	40.9
தலைக்குரிய மொ.உ.உ.	ஐ.அ.டொ.	3,997 (இ)	3,474	3,489	3,621	3,811	4,030	4,281
மொத்த முதலீடு	மொ.உ.உ. இன் %	36.7 (இ)	34.4	34.9	35.4	35.9	36.4	36.9
உள்நாட்டு சேமிப்புகள்	மொ.உ.உ. இன் %	29.4 (இ)	30.8	30.9	30.8	32.0	33.0	33.8
தேசிய சேமிப்புகள்	மொ.உ.உ. இன் %	33.0 (இ)	33.1	33.8	34.1	34.6	35.3	36.0
வெளிநாட்டுத்துறை (ஈ)								
வர்த்தக இடைவெளி	மொ.உ.உ. இன் %	-9.2	-6.7	-6.9	-7.4	-6.7	-6.1	-5.9
ஏற்றுமதிகள்	ஐ.அ.டொ. பில்	12.5	13.1	14.1	15.5	17.1	18.8	20.2
இறக்குமதிகள்	ஐ.அ.டொ. பில்	20.6	18.3	19.4	21.6	22.9	24.4	26.0
நடைமுறை கணக்கு நிலுவை	மொ.உ.உ. இன் %	-3.7	-1.9	-1.1	-1.3	-1.2	-1.1	-0.9
வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள்	இறக்குமதி மாதங்கள்	1.8	1.2	3.0	3.4	3.8	4.2	4.5
இறைத்துறை (ஈ) (உ)								
மொத்த அரசிறை மற்றும் கொடைகள்	மொ.உ.உ. இன் %	8.3	8.3	11.0	13.3	14.9	15.0	15.1
செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	மொ.உ.உ. இன் %	20.0	18.5	19.0	19.7	19.9	19.9	19.6
நடைமுறைக் கணக்கு மீதி	மொ.உ.உ. இன் %	-7.3	-6.4	-4.5	-2.1	-0.7	-0.4	0.0
ஆரம்ப மீதி	மொ.உ.உ. இன் %	-5.7	-3.7	-0.7	0.8	2.3	2.3	2.3
திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை	மொ.உ.உ. இன் %	-11.7	-10.2	-8.0	-6.4	-5.0	-4.8	-4.5
மத்திய அரச படுகடன்	மொ.உ.உ. இன் %	100.1	113.8	100.0	101.6	103.3	102.2	97.6
நாணயத் துறை மற்றும் பணவீக்கம்								
விரிந்த பண வளர்ச்சி (M_{2b}) (ஊ)	%	13.2	15.4	10.5	10.9	10.8	10.7	10.2
தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (M_{2b} இல்) (ஊ)	%	13.1	6.2	0.9	8.5	9.5	10.5	10.5
ஆண்டுச்சராசரிப் பணவீக்கம்	%	6.0 (எ)	46.4(எ)	20.6(ஏ)	5.0 (ஏ)	5.0 (ஏ)	5.0 (ஏ)	5.0 (ஏ)

(அ) 2023 மார்சு இறுதிவரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்தினைக்களத்தால் 2023 மாச்சில் வெளியிடப்பட்ட (தள ஆண்டு 2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(உ) பன்னாட்டு நாணய நிதிய எறிவுகள் (மறுசீரமைப்பு நிகழ்வு)
(ஊ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(எ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது
(ஏ) கொ.நு.வி.சுட்டெண் (2021=100) அடிப்படையிலானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

முன்கூட்டிய உறுதிப்பாட்டு வழிமுறைகள் கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் சுழற்சியான பணவீக்கம் மற்றும் செலாவணி வீதத் தேய்மானம் என்பவற்றினை வரையறைக்குள் வைத்திருப்பதற்குத் துணைபுரிந்ததுடன் அதன்மூலம் பொருளாதாரம் மேலும் நிலைகுலைவதனைத் தடுத்தன. இம்மேம்பாடுகள் உள்நாட்டு நிரம்பல் பக்க அபிவிருத்திகள் மற்றும் தளர்வடைகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை அழுத்தங்களின் இலகுபடுத்தல் என்பவற்றுடன் இணைந்து அண்மைக்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கான உத்வேகமொன்றினை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகள் மற்றும் சென்மதி நிலுவைத் தடைகள் 2023இல் மீட்சி வேகத்தினை மெதுவடையச் செய்யக்கூடும். நாட்டின் வர்த்தக வளர்ச்சி வாய்ப்புக்களை தடைப்படுத்தக்கூடியதும் எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்கமிழக்கச்செய்யக்கூடியதுமான 2023இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் பரந்த அடிப்படையிலான மெதுவடைதல் மற்றும் சடுதியாக அதிகரித்து வருகின்ற நிதியியல் சந்தை நெருக்கடி என்பவற்றிலிருந்து தோற்றம்பெறக்கூடிய உலகளாவிய சவால்களைப் பொருளாதாரம் எதிர்கொள்ளக்கூடும். இருப்பினும், 2023 மாச்சில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஏற்பாட்டிற்கான ஒப்புதலைத் தொடர்ந்து ஏற்பட்ட மேம்பட்ட மனோபாவங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் அதன் விளைவான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் உறுதிப்பாடு என்பவற்றினால் 2023இன் பிற்பகுதியிலிருந்து உத்வேகத்தினை மீட்பதற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட வளர்ச்சி மேம்பாட்டு உபாயங்களை நிறுவுவதன் மூலம் வளர்ச்சி உத்வேகம் நடுத்தர காலத்தில் உயர்வடைந்த உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மை வடிவமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையொன்றினூடாக படுகடன் நீடித்துநிலைத்திருக்கின்ற தன்மையின் மீட்டெடுத்தலானது நாட்டிற்கான தரமிடல்கள் மேம்பட்டவுடன் வெளிநாட்டு நிதியிடல் வாய்ப்புக்களுக்கான இடைவெளியினை உருவாக்கும் வேளையில் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கணிசமானளவிலான நிதியிடல்

ஆதரவானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் முதலீட்டாளர் நம்பிக்கையினை வலுப்படுத்துவதில் துணைபுரியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கத்தின் எறிவுசெய்யப்பட்ட உறுதிப்பாடானது நடுத்தர காலத்திலான முதலீடுகளுக்கு உகந்த சூழலொன்றினை உருவாக்கக்கூடிய வேளையில் செலாவணி வீதத்தில் பாரியளவிலான நெகிழ்வுத்தன்மையானது அடுத்து வருகின்ற காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறை மற்றும் பொருளாதாரத்தில் வர்த்தகப் போட்டித்தன்மையில் உறுதிப்பாட்டினைத் தூண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், எதிர்பார்த்ததிலும் பார்க்க தாழ்ந்தளவிலான வெளிநாட்டுக் கேள்வி மற்றும் உலகளாவிய நிரம்பல் சங்கிலிப் பிரச்சினைகளின் தொடர்ச்சி என்பன இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் தாமதமாக இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான இடர்நேர்வினை ஏற்படுத்தக்கூடும். வினைத்திறன்மிக்க மற்றும் போதுமானளவிலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேம்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்துவதானது தாக்குபிடிக்கின்ற தன்மையினைக் கட்டியெழுப்புவதுடன் தனிப்பட்டவர்கள் பொருளாதார மேம்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைப் பற்றிப்பிடிப்பதனை இயலச்செய்து, நடுத்தர காலத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதாரத்தின் மீட்சியும் வளர்ச்சியும் காலங்கடந்த கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினை வழிநடாத்திச் செல்கின்ற கொள்கை வகுப்பாளர்களின் உறுதியான அர்ப்பணிப்பில் தங்கியுள்ள வேளையில், பொருளாதாரத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினைப் பயன்படுத்துவதற்கும் குடித்தொகையின் அனைத்துப் பிரிவுகளிற்குமிடையே வளர்ச்சியின் நன்மைகள் நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் பாரபட்சமற்ற அடிப்படையிலான பகிர்ந்தளிப்பினை வசதிப்படுத்துவதற்கும் வழிவகுக்கும் பொருட்டு கொள்கையின் தொடர்ச்சி மற்றும் நிச்சயத்தன்மை என்பன தொடர்ந்தும் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகள் காரணமாக ஏற்பட்ட மெதுவடைந்த கூட்டுக் கேள்வி, உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஆகிய இரண்டிலுமான நிரம்பல் இடையூறுகள் குறைவடைதல் அதனுடனினைந்து சாதகமான புள்ளிவிபர தளத் தாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, 2023இல் விரைவான பணவீக்க வீழ்ச்சிப் பாதையினைத் தொடர்ந்து, பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களில் உறுதிநிலையினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரியளவிலான நாணய இறுக்கமடைதலானது தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் என்பதுடன் அதன்மூலம் கேள்வி அழுத்தங்களை வரையறுக்கும் வேளையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகள் அண்மைய எதிர்காலத்தில் பொதுமக்களின் செலவிடல் வலுவின் கணிசமானளவிலான குறைப்பொன்றிற்கு வழிவகுக்கலாம். அதேவேளையில், வளமாக்கி மற்றும் எரிபொருள் என்பவற்றின் மேம்பட்ட கிடைப்பனவானது நிரம்பலுடன் தொடர்புடைய தடைகளைத் தளர்த்துவதற்குப் பங்களிக்கும். இலங்கை ரூபாவின் வலுவடைதலானது தொடர்ந்து நீடித்திருக்குமானால் அண்மைக் காலத்தில் தாழ்ந்தளவிலான விலை அழுத்தங்களிற்குப் பங்களிக்கக்கூடும். இக்காரணிகள், சாதகமான புள்ளிவிபரத் தளத் தாக்கத்துடன் இணைந்து, குறுங்காலத்தில் பணவீக்கத்தைக் கணிசமாகக் குறைப்பதற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைய மின்சார தீர்வைத் திருத்தங்களின் இரண்டாம் சுற்று தாக்கங்கள் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையை பாதிக்கக்கூடுமெனினும், பொதுமக்களின் குறைந்தளவிலான செலவிடல் வலு மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளின் சூத்திரத்தின் அடிப்படையிலமைந்த கீழ்நோக்கிய திருத்தம் என்பன அத்தகைய பணவீக்க அழுத்தங்களைப் பாரியளவில் எதிரீடு செய்வதற்குத் தொழிற்படக்கூடும். பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனைய பல்புடை முகவராண்மைகள் என்பவற்றிலிருந்தான நிதியிடல் ஆதரவு படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுடன் இணைந்து அத்தியாவசிய தேவைகளை முன்னுரிமையளிக்கின்ற விதத்தில் நடைமுறையிலுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நாடு படிப்படியாகத் தளர்த்த முடியும் என்பதுடன் அதன்மூலம் நிரம்பல் தடைகளை மேலும் தளர்வடையச்செய்யும். இருப்பினும், அத்தகைய தளர்விற்குப் பின்னர் செலாவணி வீதத்தின் மீதான சாத்தியமான தேய்மான அழுத்தமானது பொது விலை மட்டத்தினை விரைவாகப் பாதிக்கக்கூடுமென்பதனால், அதனைக் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படலாம். அதேவேளை, முன்மொழியப்பட்ட மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கமானது மத்திய வங்கிக்கு அதிகளவிலான சுயாதீனத்தினை அனுமதித்து, நாணய நிதியிடலைக் கட்டுப்படுத்துவதுடன் அதன்மூலம் பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளை முகாமைசெய்வதனை இலக்காகக்கொண்ட கொள்கைகளை வலுப்படுத்தும். உலகளாவிய நிரம்பல் நிலைமைகள் நடுத்தர காலத்தில் இயல்புநிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அண்மைய நிதியியல் நெருக்கடி மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற உக்ரேன்-ருசியா போரின் போக்கு மற்றும் தாக்கம் என்பன பெருமளவிலான நிச்சயமற்றதன்மையினைத் தொடர்ந்தும் கொண்டுள்ளன. உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகளில் ஏற்படும் ஏதேனும் சாத்தியமான அதிகரிப்பானது இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையை மெதுவடையச்செய்வதற்கான சாத்தியப்பாட்டினைக்

1

சிறப்புக் குறிப்பு 03
"இலங்கை மத்திய வங்கி சட்டத்தின்" சிறப்புக்கூறுகள்

பின்னணி

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டமானது உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டையும் மையப்படுத்திய பல குறிக்கோள்களுடன் 1950ஆம் ஆண்டில் சிலோன் மத்திய வங்கியை (இது, 1985ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது) நிறுவியது. நாணய விதிச் சட்டமானது எக்ஸ்டர் அறிக்கையின் [1]பரிந்துரைகளின் அடிப்படையில் வரையப்பட்டது. எவ்வாறாயினும், ஒத்திசைவில்லாத பல குறிக்கோள்களை எய்துவதிலும் மத்திய வங்கித்தொழில் போக்குகளுக்கமைவாக பேணுவதிலுமுள்ள இடர்பாடுகளையும் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது 2000ஆம் ஆண்டின் ஆரம்பகாலங்களில் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றில் கால்பதித்தது. அதற்கமைய, இரு மையக் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றைப் பேணுவதற்கு இக்குறிக்கோள்கள் சீரமைக்கப்பட்டன.

புதிய மத்திய வங்கிச் சட்டமொன்றிற்கான தேவை

மத்திய வங்கியின் குறிக்கோள்களை பிரதானமாக சீரமைத்த மேலே குறிப்பிடப்பட்ட 2002இன் திருத்தம் தவிர, நாணய விதிச் சட்டம் கடந்த 74 ஆண்டுகளாக அனைத்தையுமுள்ளடக்கிய வகையில் மீளாய்வு செய்யப்படவுமில்லை திருத்தப்படவுமில்லை. பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொதுவாக மத்திய வங்கித்தொழிலின் பரிணாமவளர்ச்சி என்பவற்றிற்கு மத்தியில் நாணய விதிச் சட்டத்தின் பல ஏற்பாடுகள் பன்னாட்டளவிலான சிறந்த நடத்தைகளுக்கமைவாக மீள் மதிப்பீட்டையும் திருத்தங்களையும் அவசியப்படுத்தின. இலங்கையில் மத்திய வங்கியின் சுயாதீனம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல் மற்றும் நீடித்த விலை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குவதற்கு இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினை வரைவதற்கு இது வழியமைத்தது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நிதியியல் துறை மற்றும் பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வை என்பவற்றை வலுப்படுத்துமெனவும் மத்திய வங்கியின் ஆளுகையை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. நாணய விதிச் சட்டத்திற்கான திருத்தங்களும் அதனைத்தொடர்ந்த இலங்கை மத்திய வங்கிச் சட்டமும் மத்திய வங்கித்தொழிலில் பன்னாட்டு ரீதியாக சிறந்த நடத்தைகளுக்கு இசைவாக இருக்குமெனவும் நாணய விதிச் சட்டத்தில் ஏற்கனவே காணப்படுகின்ற குறைபாடுகளை தீர்க்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் முக்கிய சிறப்புக்கூறுகள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நாணய விதிச் சட்டத்துடன் ஒப்பிடுகையில் பிரதானமாக மத்திய வங்கியின் குறிக்கோள்கள், நாணயக் கொள்கைக் கட்டமைப்பு, அதன் ஆளுகை மற்றும் நிறுவனசார் கட்டமைப்பு, பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கியை அங்கீகரிக்கின்றமை அத்துடன் பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் மத்திய வங்கியின் பொறுப்புக்கூறல் ஆகிய பல துறைகளில் பல முக்கிய திருத்தங்களைக் கொண்டுள்ளது.

முதன்மைக் குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாடு


நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இரு சமமான முக்கியத்துவமளிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கெதிராக, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கும் பேணுவதற்கும் முன்னுரிமையளிக்கின்றது. எதிர்காலத்தில் குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கத்தை கொண்டுசேர்ப்பதற்கு மத்திய வங்கி அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் என்பதனை இது உறுதிசெய்கின்றது. பணவீக்கமானது குறைவாக இருக்கின்றபோதும் குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் பொருளாதாரம் நன்கு செயலாற்றும் என்பதனை அனுபவங்கள் காண்பிக்கின்றன வட்டி வீதங்களை உறுதியான மட்டங்களில் பேணுவதற்கு குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கம் உதவுகின்றது. பொருளாதாரமொன்று அதன் வாய்ப்புமிக்க வளர்ச்சிப்பாதையினை எய்துவதற்கு அவ்வாறான சூழல் இயலச்செய்கின்றது. மேலும், முதன்மைக் குறிக்கோளை அடைந்து கொள்வதில் மத்திய வங்கியானது வெளியீட்டினையும் அதன் வாய்ப்புமிக்க மட்டத்தை நோக்கி நிலைநிறுத்துவதையும் கருத்திற்கொள்ளும். பணவீக்கத்தினை பணவீக்க இலக்கினை அண்மித்து நிலைப்படுத்துகின்ற அதேவேளை, உண்மைப் பொருளாதாரத்திற்கான இடையூறினைக் குறைப்பதனை நோக்காகக் கொண்ட நெகிழ்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு அமைவாக இவ்வேற்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டினதும் கவனம் தேவைப்படுகின்றதும் அத்துடன் ஏதாவதொரு பக்கத்தினை பக்கத்தையும் பரிசீலனையிற்கொள்கின்ற கொள்கைத் தீர்மானம் இரண்டிற்குமிடையே ஈடுகட்டலுக்குட்படுகின்ற அரிதான சந்தர்ப்பத்தில், மத்திய வங்கியானது அதன் விலை உறுதிப்பாடு என்ற முதன்மைக் குறிக்கோளை முன்னுரிமைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளுகைக் கட்டமைப்பு

நாணய விதிச் சட்டத்தின் கீழ் ஏனைய கொள்கை மற்றும் தொழிற்பாட்டு தீர்மானங்களுடன் சேர்த்து நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாணயச் சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் கீழ் ஆளுகைச் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை என்ற பெயரிலான தீர்மானத்தை மேற்கொள்ளும் இரு சமாந்தர சபைகளுக்கு அதிகாரங்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன. இங்கு, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு நெகிழ்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்புடன் இணைத்து நெகிழ்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பை வகுத்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நாணயக் கொள்கைச் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதேவேளை நாணயக் கொள்கை தவிர்ந்த மத்திய வங்கியின் பொதுவான கொள்கையினை நிர்ணயிப்பதற்கு ஆளுகைச் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

1 ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் முறைமையின் புகழ்பெற்ற பொருளியலாளரும் சிலோன் மத்திய வங்கியின் முதலாவது ஆளுநராகவும் இருந்த ஜோன் எக்ஸ்டர் மூலம் எக்ஸ்டர் அறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/Exter%20Report%20-%20CBSL.pdf ஊடாக பார்வையிடலாம்.

வரைபடம் சி.கு. 3.1
மத்திய வங்கியின் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் ஆளுகையும் ஒழுங்கமைப்பும்



இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், திறைசேரிக்கான செயலாளர் மத்திய வங்கியின் தீர்மானம் மேற்கொள்ளும் ஏதேனும் குழுக்களில் இனிமேலும் உறுப்பினராக இருக்கமாட்டார். எவ்வாறாயினும், பாரிய இறை-நாணய-நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிசெய்யும்பொருட்டு, ஒருங்கிணைப்புச் சபையொன்று தாபிக்கப்பட்டு ஒருங்கிணைப்புச் சபையின் உறுப்பினர் ஒருவராக திறைசேரிக்கான செயலாளர் இருப்பார். மத்திய வங்கியின் ஏனைய தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்ற அத்துடன் நிதியியல் துறை மற்றும் வேறு கொள்கைகளை வகுக்கின்ற ஆளுகைச் சபையிலிருந்து நாணயக் கொள்கைச் சபையினை வேறுபடுத்துவதும் இரு உள்ளக உறுப்பினர்கள் (துணை ஆளுநர்கள்) மற்றும் வெளிவாரி நிபுணர்களுடனான சபையின் தொழில்நுட்ப ரீதியான பிரதிநிதித்துவமும் வினைத்திறன்மிக்க நாணயக் கொள்கை வகுத்தலை வசதிப்படுத்துகின்றது. நாணயக் கொள்கை வகுத்தல் மீது தேவையான அறிவினையும் நிபுணத்துவத்தையும் கொண்ட வெளிவாரி மற்றும் உள்ளக உறுப்பினர்கள் இருசாராருடனும் கூடிய நாணயக் கொள்கைச் சபையினைக் கொண்டிருப்பது பன்னாட்டளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். அத்துடன், முதன்மைக் குறிக்கோளை அடைவதற்கு பிரத்தியேகமாக தீர்மானம் மேற்கொள்ளும் குழுவொன்றினைக் கொண்டுள்ளமையானது ஆரம்பகட்டங்களில் கொள்கை கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கான வசதியினை உறுப்பினர்களுக்கு வழங்குவதுடன் அதன்மூலம் நாணயக் கொள்கை வகுத்தல் வலுப்படுகின்றது.

மேம்பட்ட மத்திய வங்கித் சுயாதீனம் பொறுப்புக்கூறலும்

மத்திய வங்கியின் கொள்கை மற்றும் தொழிற்பாட்டு தீர்மானமெடுத்தலில் அதன் சுயாதீனத்தையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்தும் பரந்த நோக்குடன் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியில் கொள்கை மேற்கொள்வதில் அதிக தொழிற்பாட்டு சுயாதீனத்தை வலியுறுத்துகின்ற நிர்வாக மற்றும் நிதியியல் சுயாதீனத்தை உறுதிசெய்கின்ற திட்டவட்டமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. ஆளுநர், ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நாணயக் கொள்கை குழு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் மீதான வெளிவாரிச் செல்வாக்குகள் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் முற்றுமுழுதாகத் தடுக்கப்பட்டுள்ளன.

நாணயக் கொள்கை வகுத்தலில் சுயாதீனத்தினை உறுதிசெய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் தீர்மானமெடுத்தல் குழுக்களில் ஏதேனும் வடிவில் அரசாங்கப் பிரதிநிதித்துவம் இல்லாமையினை உறுதிசெய்கின்றது. எனினும், தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் நிதியியல் உறுதிப்பாடு அல்லது பொருளாதாரச் செயற்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்ற நிகழ்வுகள் பற்றிய அபிப்பிராயங்களை பரிமாற்றுவதற்கும் ஒருங்கிணைப்புச் சபை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை மத்திய வங்கியானது அரசாங்கத்தின் நிதியியல் ஆலோசகராகவும் இறை முகவராவும் வங்கியாளராகவும் தொடர்ந்தும் இருக்கும். எனினும், கடந்தகாலங்களில் நாணயக் கொள்கை மீது பாரிய முட்டுக்கட்டையாகவிருந்த நாணயக் கொள்கை வகுத்தல் மீதான இறை ஆதிக்கமானது இறைப் பற்றாக்குறையின் கட்டுப்படுத்தப்பட்ட நாணய நிதியிடல் மற்றும் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணம் வழங்குவதன் மீதான கட்டுப்பாடு என்பன வாயிலாகத் தடுக்கப்பட்டுள்ளது இது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் வெற்றிக்கு அத்தியாவசியமானதாகும். அதற்கமைய, அரசாங்கத்திற்கு, ஏதேனும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனத்திற்கு அல்லது ஏதேனும் வேறு அரச நிறுவனத்திற்கு நேரடியாக அல்லது நேரடியற்ற கொடுகடன்களை வழங்குவதிலிருந்து மத்திய வங்கி கட்டுப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ள செலவுகளுக்கானவை நீங்கலாக அரசாங்கம் சார்பில் செலவுகளை மேற்கொள்ளாது இருப்பதற்கும் அத்துடன் அரசாங்கத்தினால், அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது ஏதேனும் வேறு அரச நிறுவனத்தினால் வழங்கப்படும் பிணையங்களை முதலாந்தரச் சந்தையில்[2] கொள்வனவு செய்யாதிருப்பதற்கும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட புதிய நேரடி கொடுகடன்களுக்கான பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஆண்டின்[3] தொடக்கத்தில் நிதிச் செலவினங்களுக்கு அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களை வழங்குவதை இலங்கை மத்திய வங்கிச் சட்டம் அனுமதிக்கின்றது. வழங்கப்பட்ட அத்தகைய தற்காலிக முற்பணங்களின் செலுத்தவேண்டிய தொகை

2 தற்போதைய இறைசார் தடங்கல்களைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி மூலமான அரசாங்கப் பிணையங்களின் முதலாந்தரச் சந்தை கொள்வனவுகள் மீதான தற்காலிக தளர்த்தல் சட்டத்தின் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியினுள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

3 தற்காலிக ஏற்பாடு அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் செலுத்தவேண்டிய கொடுகடன் தொடர்பான பரிகாரத்தை உள்ளடக்கியுள்ளது.

1

கடந்த முன்னுறுகின்ற நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களின் வருவாயின் 10 சதவீதத்தை விஞ்சாதிருத்தல் என்பதுடன் சந்தையுடன் தொடர்புபட்ட வட்டி வீதங்களில் வருவாயீட்டப்படும்.

தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சுயாதீனத்திற்குத் தேவையான சுயாதீனத்தை வழங்குகின்ற அதேவேளை அதன் கொள்கைகள், பெறுபேறுகள் மற்றும் தோல்விகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களிற்கும் மத்திய வங்கியின் மிகுந்த பொறுப்புக்கூறலை இலங்கை மத்திய வங்கிச் சட்டம் உறுதிசெய்கின்றது. அதிகார வேறாக்கத்தினை உருவாக்குகின்ற அத்துடன் அதிகாரி எவரும் அதிகளவு அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தவில்லை என்பதை உறுதிசெய்கின்ற பரீட்சிப்புக்களும் சமப்படுத்தல்களும் சுயாதீனத் தீர்மானம் மேற்கொள்ளலை மேம்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும் பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவதற்கும் முக்கியமாகும். ஆகவே, இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நியதிச்சட்ட பொதுமக்கள் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள், பாராளுமன்றத்திற்கு அறிக்கைகளை காலக்கிரமத்துடன் சமர்ப்பித்தல், பாராளுமன்றத்தினால் அல்லது ஏதேனும் அதன் குழுக்கள் மூலம் காலக்கிரமத்தில் ஆளுநர் விசாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடுகள் என்பவற்றை நோக்காகக்கொண்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. இந்நோக்கில் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் மத்திய வங்கிக் குறிக்கோள்களை அடையப்பெறுதல் என்பன மீது மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடையும் நியதிகளில் எவையேனும் தோல்விகளுக்கான காரணங்கள், அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு என்பவற்றைக் குறித்துரைத்து பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் பல அறிக்கைகளை மத்திய வங்கி சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல்

மத்திய வங்கி, 2015 தொடக்கம் நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் இரண்டினதும் அம்சங்களுடன்கூடிய கலப்பு நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றினைப் பின்பற்றியதன் பின்னர் 2020இல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை பின்பற்றியது. எனினும், நாணய விதிச் சட்டத்தின் கீழ் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கான நிபந்தனைகள் வசதிப்படுத்தப்பட்டிருந்தும் கூட இலங்கையில் தொடர்புடைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நாணய விதிச் சட்டம் திட்டவட்டமாக அங்கீகரிக்கவில்லை. மத்திய வங்கிச் சட்டமானது நிபந்தனைகளை இயலச்செய்து நெகிழ்ச்சித்தன் ந்த பணவீக்க இலக்கிடலின் முறைசார்ந்த பின்பற்றுதலுக்கு ஏற்பாடு செய்கின்றது. இவ்வொழுங்கேற்பாட்டின் கீழ் பணவீக்க இலக்கு மற்றும் முக்கிய பிரமாணங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சரும் இணைந்து கையொப்பமிடப்பட்டு அத்தகைய உடன்படிக்கைத் திகதியிலிருந்து ஒருவார காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படும். நாணயக் கொள்கைக் கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நாணயக் கொள்கைச் சபை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொருத்தமான நாணயக் கொள்கையினையும் நாணயக் கொள்கைச் சாதனங்களையும் நிர்ணயித்து நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக அத்தகைய சாதனங்களை சீர்படுத்துவதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கும். பணவீக்க இலக்கும் தொடர்புடைய பிரமாணங்களும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் அவ்வாறான வேறு இடைவெளிகளில மீளாய்வுசெய்யப்படும். மேலும், தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு பணவீக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு பணவீக்க இலக்கினை நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கி தவறுகின்றவிடத்து, நாணயக் கொள்கைச் சபை நிதியமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வறிக்கை பொதுமக்களுக்கும் கிடைக்கப்பெறச்செய்யப்பட வேண்டும். அதேவேளை, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியானது பணவீக்கத்தின் அண்மைக்கால அசைவுகள், பணவீக்க மூலங்கள் அத்துடன் பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள் மற்றும் அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை விளக்கி ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் நாணயக் கொள்கை அறிக்கையொன்றினை வெளியிடுதல் வேண்டும்.

நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் தீர்மானம் அத்துடன் பேரண்ட முன்மதியுடைய அதிகாரம்

நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல், உரிமமளித்தல், பதிவுசெய்தல் அத்துடன் மேற்பார்வைசெய்தல் அதேபோன்று நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு நிதியியல் நிறுவனங்களின் தீர்மானங்கள் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்புமிக்க உயர்மட்ட நிதியியல் நிறுவனமாக மத்திய வங்கி தொடர்ந்தும் இருந்துவருகின்றதும். மேலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது பேரண்ட முன்மதியுடைய கொள்கைக்கு அமைவாக நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கும் நோக்குடன் மத்திய வங்கிக்கு பேரண்ட முன்மதியுடைய அதிகாரத்தினை அளிக்கின்றது. இந்நோக்கில் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவொன்றினை மத்திய வங்கி நிறுவும் என்பதுடன் நிதியியல் முறைமையினைப் பாதிக்கின்ற இனங்காணப்பட்ட ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுகள் ஒன்றுசேர்வதைத் தணிப்பதற்கு பேரண்ட முன்மதியுடைய கொள்கையினைப் பரீட்சிப்பதற்கும் சீராக்க வழிமுறைகள் மீது தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குகின்ற அதேவேளை பேரண்ட முன்மதியுடைய கொள்கை[4] நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைக்குமென நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழு எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுப் படுகடன் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பொதுப் படுகடன் முகாமைத்துவம் பற்றிய மத்திய வங்கியின் முகவர் தொழிற்பாடானது பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மையுடன் தொடர்புடைய இயைபான சட்டம் அல்லது அலுவலகம் தொழிற்பாட்டிற்கு வந்தவுடன் மத்திய வங்கியின் பொறுப்பாணையிலிருந்து நீக்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், அத்தகைய திகதி வரை மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராக படுகடன் முகாமைத்துவத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

4 பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் பற்றி மேலும் தகவல்களுக்கு சிறப்புக்குறிப்பு 10 இனைப் பார்க்கவும்.

1

சாராம்சம்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் சுயநிர்ணயம் எல்லா நேரங்களிலும் மதிக்கப்பட்டு உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை பேணுகின்ற அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்ற பொறுப்பாணை அளிக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு மத்திய வங்கி மூலம் சுயாதீனமாக கொள்கை வகுத்தலையும் நடைமுறைப்படுத்தலையும் இயலச்செய்கின்றது. அதே சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது மத்திய வங்கியின் அதிக பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையினையும் வலியுறுத்தி பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் அது பதிலளிக்கத்தக்கதாக்குகின்றது. முதன்மையாக பொறுப்பாணையளிக்கப்பட்ட விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளுடன் மத்திய வங்கியின் அதிகரித்த பொறுப்புக்கூறல் உயர்ந்ததும் தளம்பலடைகின்றதுமான பணவீக்கத்திலிருந்தும் அதனுடன் தொடர்புபட்ட வட்டி வீதங்களின் சடுதியான அசைவுகளினதும் தீங்குபயக்கும் தாக்கங்களிலிருந்து நாட்டினைப் பாதுகாப்பதுடன் நீடித்து நிலைத்திருக்கும் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும்.

உசாத்துணைகள்

1. Central Bank of Sri Lanka – A Bill (7 March 2023)
2. Jegajeevan, S. (2023) Why do we need independent and publicly accountable central bank?, Daily FT. Available at: https://www.ft.lk/columns/Why-do-we-need-independent-and-publicly- accountable-central-bank/4-745738. (Accessed on 10 March 2023).

கொண்டுள்ளது. உலகின் பெரும்பாலான முக்கிய மத்திய வங்கிகள் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு 2023 முழுவதும் 2024இன் முற்பகுதியிலும் இறுக்கமான நாணய நிலைமைகளைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், உலகளாவிய நிதியியல் நிலைமைகளில் ஏற்படும் தளம்பல் நிலைமைகள் உலகளாவிய நாணயக் கொள்கையின் நடத்தையை ஓரளவு பாதிக்கக்கூடும். நிலவுகின்ற உயர் பணவீக்கத்தினை 2023இன் பிற்பகுதியளவில் ஒற்றை இலக்க மட்டங்களை நோக்கிக் குறைப்பதற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இருப்பினும், இறை மற்றும் வெளிநாட்டுத்துறைத் தாங்கியிருப்புக்களை நீடித்துநிலைத்திருக்கும் தன்மையில் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளுடன் இணைந்து பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சி மற்றும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்ததன்மையினை மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பன நடுத்தர காலத்தில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான கருவியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

நாணயக் கொள்கையானது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கொள்கைக் கட்டமைப்பொன்றின் கீழ் நடுத்தர காலப்பகுதியில் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதில் தொடர்ந்தும் கவனஞ்செலுத்தும் வேளையில், பொருளாதார வளர்ச்சியினை அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்ததன்மையினை நோக்கி உறுதிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தும். சாதகமான பணவீக்கத் தோற்றப்பாடு, மேம்படுகின்ற உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் குறுங்காலத்தில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த படுகடன் மறுசீரமைப்பு உபாயம் தொடர்பிலான நிலுவையிலுள்ள அறிவிப்புடன் உள்நாட்டுப் படுகடனைக் கையாள்தல் குறித்த 2023 மார்ச்சு 30 அன்று வெளியிடப்பட்ட பொது அறிவிப்பிற்குப் பின்னர் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புக் கரிசனைகள் மீதான நிச்சயமற்ற தன்மை பாரியளவில் நீக்கப்பட்டுள்ளமையினால் அரச பிணையங்களுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையில் குறைப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள், குறிப்பாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் வைப்பு மற்றும் கடன்வழங்கல் உற்பத்திகள் ஆகிய இரண்டிற்கும் பிரயோகிக்கத்தக்க சந்தை வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், பணவீக்க அழுத்தங்கள் போதியளவிலும் நம்பகமான வகையிலும் கட்டுப்படுத்தப்படும் வரையிலும் பணவீக்க எதிர்பார்க்கைகள் மத்திய வங்கியின் பணவீக்க நோக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நிலைநிறுத்தப்படும் வரையிலும் நாணய நிலைமைகள் தொடர்ந்தும் போதுமானளவில் இறுக்கமாகக் காணப்படும். வைப்பு வட்டி வீதங்கள் அவற்றின் உச்சளவிலான மட்டங்களிலிருந்து குறைவடைதலுடன் வங்கித்தொழில் துறையினால் திரட்டப்பட்ட வைப்புக்களின் வளர்ச்சி எதிர்வரும் காலப்பகுதியில் தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, ஒப்பீட்டளவில் உயர் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, அதன் ஒட்டுமொத்த இருப்பினைக் குறுங்காலத்தில் சுருக்கமடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற இயல்புநிலைக்குத் திரும்புதல், பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான மீட்சி மற்றும் வியாபார மனோபாவங்களின் மேம்பாடுகள் என்பவற்றுடன் தனியார் துறைக்கான கொடுகடன் 2023இன் பிற்பகுதியிலிருந்து விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, எதிர்பார்க்கப்படுகின்ற இறைச் சீராக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நிதியிடலின் பெறுகை என்பன வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல் குறிப்பாக, எதிர்வருகின்ற காலப்பகுதியில் நாணய நிதியிடலின் மீதான அரசாங்கத்தின் தங்கியிருத்தலைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளில் திட்டமிடப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுடன்

1

இணைந்து அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் மற்றும் வங்கித்தொழில் துறையின் மீதான அவற்றின் தங்கியிருத்தலைப் படிப்படியாகக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் சாதகமாயமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் அதன் வெளிநாட்டு ஒதுக்குகளைப் படிப்படியாக மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்து நிலைகளின் (தேறிய பொறுப்புக்கள்) மேம்படுத்தல்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு, வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை எதிர்வருகின்ற காலப்பகுதியில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிச் செல்கையில், நாணயக் கொள்கையின் நடத்தையானது முன்னோக்கிய பார்வை மற்றும் தரவினால் உந்தப்பட்ட அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையிலமைந்து தொடரும் என்பதுடன் இது உள்நாட்டு மற்றும் உலகளாவிய அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் எறிவுகளினால் ஆதரவளிக்கப்படும். புதிய தகவல்கள் கிடைப்பனவாகவுள்ளமையினாலும் கிடைப்பனவாகவிருக்கும் பட்சத்தில், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியின் கொள்கைகளிலும் உபாயங்களிலும் நேரகாலத்துடனான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். விலை உறுதிப்பாட்டின் மீட்டெடுப்பு மற்றும் அதன்பின்னர் குறைந்த மற்றும் நிலையான மட்டமொன்றில் பணவீக்கம் பேணப்படுகின்றமை என்பன வட்டி வீதங்களின் பாரியளவிலான தளம்பல்களினை நீக்கும் என்பதுடன் இது பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான வியாபார திட்டமிடலினையும் முதலீடுகளினையும் இயலச்செய்கின்ற சூழலொன்றினை உருவாக்கும். மத்திய வங்கிச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கத்துடன் மத்திய வங்கியின் சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மேலும் வலுப்படுத்தப்படும் என்பதுடன் அதன்மூலம் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துகின்ற அதன் முதன்மை நோக்கத்திற்கு ஆதரவளிக்கும். அதேவேளை, தற்போதைய பொருளாதார நிலைமைகள் மற்றும் தோற்றப்பாடு என்பன குறித்து வினைத்திறனான மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டலினூடாக மத்திய வங்கி பொதுமக்களுடனான ஈடுபாட்டினைத் தொடர்ந்து முன்னெடுக்கும். மத்திய வங்கி, பொருளாதாரத் தோற்றப்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் தெரிவிப்பதற்கு முன்னோக்கிய பார்வையிலான நாணயக் கொள்கை அறிக்கையொன்றினையும் வெளியிடுவதற்கு தொடங்கும் என்பதுடன் அதன்மூலம் நாணயக்கொள்கை நடவடிக்கைகள் தொடர்பிலான வெளிப்படைத்தன்மையினை மேலும் மேம்படுத்தும்.

2023 மற்றும் அதற்கப்பாலுமான காலப்பகுதிக்கான வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடானது படுகடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் தோற்றப்பாடு என்பவற்றின் மீது பாரியளவில் தங்கியிருக்கும். பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் முன்னோக்கிச் செல்கையில் சில வர்த்தகக் கட்டுப்பாடுகளின் சாத்தியமான தளர்வு என்பவற்றினால் தூண்டப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகளில் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்பொன்றுடன் வர்த்தகப் பற்றாக்குறை 2023இல் மிதமானளவில் விரிவடையக்கூடும். வெளிநாட்டுத்துறைக் கேள்வியினைச் சாத்தியமானளவு மெதுவடையச்செய்யக்கூடிய ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றில் சாத்தியமான பொருளாதார வீழ்ச்சியொன்றினாலும் 2023இற்கான வர்த்தகப் பற்றாக்குறையின் எதிர்வுகூறல் பாதிக்கப்படக்கூடும். மேலும், உக்ரேன்-ருசியா போரின் ஏதேனும் மேலதிக தீவிரமடைதலானது உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளைப் பாதித்து அதன்மூலம் இறக்குமதிச் செலவினத்தினை அதிகரிக்கக்கூடும். சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களில் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்புடன் 2023இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் உள்நாட்டுப் பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற குறைப்பு என்பவற்றுடன் ஏனைய பணிகள் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடு என்பவற்றுடன் பணிகள் கணக்கு மிகை 2023இல் அதிகரிக்கக்கூடும். முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் நாணயக் கொள்கை இறுக்கமடைதலினால் கடன்பாட்டுச் செலவுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான அதிகரிப்பின் காரணமாக 2023இல் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவு விரிவடையக்கூடும். வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காக நாட்டிலிருந்தான தொடர்ச்சியான உயர்ந்தளவிலான புறப்படுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்பு என்பன காரணமாக 2023இல் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் சாத்தியமானளவிலான விரிவாக்கமானது பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளினால் தணிக்கப்பட்டு, 2023இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மிதமான மட்டத்தில் தொடர்ந்திருக்கக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்கும். குறித்த சில உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் மீளாரம்பம், எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் முதலீடு பல்புடை

மற்றும் இருபுடைப் பங்குடமையாளர்களிடமிருந்தான ஏனைய வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்களுடன் இணைந்து நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2023இல் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வுட்பாய்ச்சல்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்துடனான பொருளாதார ஈடுபாட்டு வாய்ப்புகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வெற்றிகரமான முன்னேற்றத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத்துறை நீடித்துநிலைத்திருக்கின்ற பாதையொன்றிற்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதியின் வளர்ச்சியானது இறக்குமதிகளின் அதிகரிப்பினை விஞ்சிக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் வர்த்தகப் பற்றாக்குறை நடுத்தர காலப்பகுதியில் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, உலகளாவிய பொருளாதாரத்தின் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் உலகெங்கிலுமுள்ள மக்களின் அதிகரித்த நடமாட்டத்துடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் தனது உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த தன்மையினை அடையும் விதத்தில் விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற சுற்றுலாக் கைத்தொழில் துறையின் வாய்ப்புகளிலிருந்து இலங்கை பயனடையக்கூடும். இது, போக்குவரத்துப் பணிசார் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற மீளெழுச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்கின்ற பணிகள் துணைத்துறையில் உயர் வளர்ச்சியுடன் இணைந்து, பணிகள் கணக்கிலுள்ள மிகையினை நடுத்தர காலத்தில் வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகளில் எதிர்பார்க்கப்படும் குறைப்புடன், முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை எதிர்வருகின்ற காலப்பகுதியில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களுக்காக நாட்டிலிருந்தான புறப்படுகைகளில் படிப்படியான முன்னேற்றம், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் உத்தியோகபூர்வ வழிகளினூடாக பணவனுப்பல்களின் பாய்ச்சலில் தொடர்ச்சியான மீட்சி என்பவற்றுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் நடுத்தர காலத்தில் நிலையாக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது நடுத்தரக் காலத்தில் நீடித்துநிலைத்திருக்கின்றதன்மையிலான குறைந்த மட்டமொன்றிற்குப் படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கொழும்புத் துறைமுக நகரம், கொழும்பு மேற்கு கொள்கலன் முனைக்கோடிகள் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற கைத்தொழில் வலயங்களின் அபிவிருத்தி என்பவற்றிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற படுகடனல்லாத உட்பாய்ச்சல்களுடன் நிதியியல் பாய்ச்சல்கள் நடுத்தர காலப்பகுதியில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்பின் வெற்றிகரமான இறுதிப்படுத்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினைத் தொடர்ந்து மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையினால் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் பேரண்டப்பொருளாதாரச் செயலாற்றத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற மேம்பாடு மற்றும் சாதகமான முதலீட்டாளர் மனோபாவங்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு சொத்துப்பட்டியல் முதலீடு மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதியிடல் பாய்ச்சல்கள் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் நடுத்தர காலத்தில் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடுத்தர கால இறை இலக்குகளை அடையும் நோக்குடன் இறைத் திரட்சி மற்றும் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான அதன் திடசங்கற்பத்தினைத் தொடர அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான ஆரம்ப மிகைகளை அடைவதுடன் 2027 ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தினை விஞ்சுகின்ற பேராவல்மிக்க அரசிறை இலக்கொன்றினை அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நோக்கினை அடையும் பொருட்டு, ஏனையவற்றிற்கிடையில், பெறுமதிசேர் வரி வீதம், தொலைத்தொடர்பூட்டல் தீர்வை மற்றும் தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி வீதங்கள் என்பவற்றினை உயர்த்துதல், பெறுமதிசேர் வரி மற்றும் தனியாள் வருமான வரித் தளத்தினை விரிவுபடுத்துதல், பெற்றோலிய உற்பத்திகள், மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் மீதான கலால் தீர்வையினை அதிகரித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வையினை விதித்தல் போன்றவற்றினூடாக வலுவான அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளை அரசாங்கம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது. அண்மைய ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட மோசமான அரசிறைச் செயலாற்றப் போக்கினை மாற்றியமைப்பதன் மூலம் அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதியில் இவ்வரசிறை மேம்பாட்டு வழிமுறைகள் நன்மைகளை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை இலக்குகளை அடையும் பொருட்டு அரசிறை நிர்வாக வழிமுறைகளை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், ஏற்கனவே கடுமையான வரிச்சுமைக்கு உட்பட்டுள்ள வரி செலுத்துவோர் பிரிவுகளிற்கு ஓரளவு நிவாரணத்தினையளிப்பதும் மிக அவசியமானதாகும். இதேவேளை, இறைப் பற்றாக்குறையைக்

கட்டுப்படுத்துவதற்கு இன்றியமையாததான செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் அரசாங்கம் படிமுறைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், மூலதனச் செயற்றிட்டங்களிற்கு முன்னுரிமையளித்தல், உற்பத்தித்திறனற்ற மீண்டெழும் செலவினங்களை அடையாளங்காணல் மற்றும் கட்டுப்படுத்தல், அரச துறை ஆட்சேர்ப்பினை வரையறுத்தல், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் மேம்பட்ட இலக்கிடல் மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் விரைவான நிறைவு என்பன அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நடுத்தர காலப்பகுதியில் இறைத் திரட்சி முயற்சிகளை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், பொருளாதார நடவடிக்கைகள் மீதான ஏதேனும் சாத்தியமான எதிர்மறைத் தாக்கத்தினைக் குறைப்பதும் இன்றியமையாததாகும். முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவடைதலானது அரசாங்கத்தின் படுகடன் பணிச் சுமையில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்றினைத் தோற்றுவித்து, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றவாறு 2027-2032 காலப்பகுதியில் வருடாந்த மொத்த நிதியிடல் தேவைகளை சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்குக் கீழாக மட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசாங்கத்தின் வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2027-2032 காலப்பகுதியில் ஏதேனும் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்குக் கீழாகப் பேணப்பட்டு, அதன்மூலம் படுகடன் பணிக்கொடுப்பனவு அழுத்தங்கள் பாரியளவிற்குத் தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பொதுப் படுகடனானது 2032 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 95 சதவீதத்திற்குக் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் பேரவல்மிக்க ஆரம்ப மிகைப் பாதையானது படுகடன் திரட்சியை நடுத்தர காலத்தில் குறைப்பதற்குத் துணைபுரியும். அதே நேரத்தில், உபாயமற்ற அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் முதலீடுகளை திரும்பப் பெறுதல் மற்றும் பயன்பாடுகளுக்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைகளின் தொடர்ச்சி மற்றும் ஏனைய அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் சீர்திருத்தங்கள் என்பன அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் வினைத்திறனை மேம்படுத்துமெனவும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மீதான அத்தகைய நிறுவனங்களின் சுமையைக் குறைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இறை விதிமுறைகளை மேலும் வலுப்படுத்தும் புதிய பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்கத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க நிதியிடல்களின் முகாமைத்துவமானது மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்மொழியப்பட்ட படுகடன் மறுசீரமைப்புச் செய்முறையின் நிறைவடைதல் மற்றும் பொதுத்துறையில் வினைத்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கான பரந்த அடிப்படையிலமைந்த பொருளாதார சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் இறைத் துறைச் செயலாற்றமானது நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டு, அதன்மூலம் பல தசாப்தங்களாக பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்திய பொருளாதார வளர்ச்சிக்கெதிரான பெரும் தடைகளைத் தீர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் அபிவிருத்தியடைந்து வருகின்ற உலகின் மிகுந்த நம்பிக்கையூட்டுகின்ற நாடுகளிலொன்றாக விளங்கிய இந்நாட்டினை உறுதியான சமூகப் பொருளாதார முன்னேற்றங்களையும் சுபீட்சத்தினையும் நோக்கி வழிநடத்திச் செல்வதற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டமையின் காரணமாக இன்று இந்நாடு பல்வேறுபட்ட நெருக்கடிகளை வெற்றி கொள்வதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது. சுதந்திரத்திற்குப் பின்னர் அநேக முன்முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் வலுவானதும் முரண்பாடற்றதுமான தேசிய கொள்கைக் கட்டமைப்பொன்று இல்லாமையின் காரணமாக முன்னேறுவதில் இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்தது. இதன் மூலம் மோசமான பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம், வழிவழியாக வந்த பிரச்சனைகளைப் பிரதிபலிக்கின்ற நீடித்த இரட்டைப் பற்றாக்குறைகள், மெதுவான பரிணாமம், மாற்றங்களுக்கு இசைந்து கொடுக்கும் நெகிழ்வுத்தன்மை, நிலைமாற்றம் என்பனவற்றினைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாக முன்னேற்ற வேகத்தினை குறைவடையச் செய்து, குறிப்பாக, மிக அண்மிய தசாப்தங்களில் அயல் பொருளாதாரங்களை விட மிக அதிகளவிற்குப் பின்தங்கச் செய்துவிட்டது. மூன்று தசாப்தங்களாக நீண்ட உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமை புதியதொரு ஆரம்பத்தினை நாட்டிற்கு வழங்கிய போதும், தொலைநோக்கற்ற கொள்கைகளும் சரியான கொள்கை நடவடிக்கைகளையும் சீர்திருத்தங்களையும் நடைமுறைக்கிடுவதில் ஒத்திசைவு நிலைமை காணப்படாமையும் பெரும் எண்ணிக்கையான சமூக அரசியல் மற்றும் பேரண்டப் பொருளாதாரச் சவால்களுடன் சேர்ந்து பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தினை அடைவதனைத் தடுத்தன. இச்சவால்களில் அநேகமானவற்றையும் நீண்ட காலப் பிரச்சனைகளையும் வெற்றி கொள்வதற்கு கொள்கை வகுப்போரும் தொடர்பான அதிகாரிகளும் சாத்தியமான வலி நிரம்பிய, ஆனாலும் மிக இன்றியமையாத சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதனை ஆரம்பிப்பது அவசர தேவையாகவுள்ளது. மிக முக்கியமான விடயம் யாதெனில் நெருக்கடியொன்று அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் சீர்திருததங்களை நடைமுறைப்படுத்துவதற்கும்

பல வாய்ப்புக்களை அதாவது பொருளாதாரத்தினை மீளச்சீர்செய்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்றது. இந்நீண்ட காலப் பிரச்சனைகளில் சிலவற்றைத் தீர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட பல வழிமுறைகள் பாராட்டப்பட வேண்டிய வேளையில் நடுத்தர காலத்தில் அமைப்பியல் சீர்திருத்தங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டதாக இருப்பது அவசியம் என்பதுடன் எஞ்சியுள்ள நடவடிக்கைகள் அரசியல் நிகழ்ச்சிநிரலைக் கவனத்திற் கொள்ளாது அத்தகைய அண்மைக்கால நடவடிக்கைகள் நடுத்தர கால நிகழ்ச்சிநிரலுடன் இணைக்கப்பட வேண்டும்.

நீண்ட காலமாக காலங்கடந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான இலங்கையின் தீர்க்கமும் கடப்பாடும் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் பொருளாதாரத்தின் போக்கினை வடிவமைக்கின்ற முக்கிய காரணியாக இருக்கும். 2023 மார்ச்சில் ஒப்புதலளிக்கப்பட்ட ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐ.அ.டொலர் 3 பில்லியன் மற்றும் மற்றைய பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் உதவியுடன் சேர்ந்து, முன்னொருபோதுமில்லாத நாட்டின் படுகடன் மற்றும் சென்மதி நிலுவை நெருக்கடிகளிலிருந்து கிட்டிய காலத்தில் பொருளாதாரம் நிலைமாறிச் செல்வதற்கான கொள்கை இடைவெளியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், எதிர்காலத்தில் அத்தகைய நெருக்கடிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதும் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலத்தில் பொருளாதார மீட்சியின் உறுதித்தன்மையும் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்ட பேரண்டப் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலின் மீதே தங்கியிருக்கிறது. இதற்கு வலுவான அரசியல் மற்றும் கடப்பாடு பக்கபலமாக அமைவது அவசியமாகும். இப்பேரண்டப் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் மிக முக்கியமான கூறுகளாக (i) இறை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்வதனையும் இறை ஒழுக்காற்றினை வலுப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட அரசிறையினால் பிரதானமாக வழிநடத்தப்படும் பேராவல்மிக்க இறைத்திரட்சியும் அதனுடனிணைந்து சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, இறை நிறுவனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்கள் (ii) பொதுப்படுகடனை மீண்டும் உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு உபாயங்கள் (iii) அதிகளவு செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையுடன் விலை உறுதிப்பாட்டினை மீண்டும் அடைவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான பல்முனை கொண்ட உபாயங்கள் (iv) நிதியியல் உறுதித்தன்மையினை பாதுகாப்பதற்கான கொள்கைகள் (v) ஆளுகை மற்றும் ஊழல்களினால் பாதிக்கப்படும்தன்மைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய சீர்திருத்தங்கள் (vi) இலங்கையின் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தினை வெளிக்கொணர்வதற்கான பரந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் என்பன உள்ளடங்குகின்றன. 1965 இலிருந்து இலங்கை பதினாறு ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஈடுபட்டிருந்தபோதும், அத்தகைய பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு சில மீளாய்வுகளின் பின்னர் அவசர அவசரமாக கைவிடப்பட்டதன் காரணமாக இந்நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிகரமான நிறைவு மற்றும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றின் வரலாறு நலிவடைந்ததாகவே காணப்படுகின்றது. இது இடர்ப்பாடான பொருளாதார காலங்களில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் நுழைவதும் பொருளாதாரத்தில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டதும் உரிய காலத்திற்கு முன்னதாகவே வெளியேறுவதும் போன்ற பயனற்ற சுழற்சியினையே தோற்றுவித்திருக்கின்றன. இத்தகைய பின்னணியில், தற்போதைய ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஒவ்வொரு மீளாய்வின் போதும் எதிர்பார்க்கப்பட்ட கால வரையறைக்குட்பட்ட இலக்கினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் கொள்கை வகுப்பாளர்கள் அதிகரித்த கடப்பாடுகளையும் ஒழுக்காற்றினையும் காட்ட வேண்டியமை மிக முக்கியமான விடயமாக அமைகின்ற வேளையில் மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டல்களூடாக தேவையான பொருளாதாரச் சீராக்கங்களுக்கு பொதுமக்களின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதும் முக்கியமானதாகும். இது நீண்ட காலம் புறக்கணிக்கப்பட்டிருந்த அமைப்பியல் சீராக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்றமை மட்டுமன்றி, கடுமையான தளம்பல்களுக்கும் அடிக்கடி ஏற்படும் வலி மிகுந்த சீராக்கங்களுக்கும் உட்படாமல் நடுத்தர காலத்தில் வலுவானதொரு வளர்ச்சிப் பாதைக்கு மாறிச் செல்லும் விதத்தில் பொருளாதாரத்தினை காலூன்றச் செய்வதற்கும் உதவும். தேவையான அமைப்பியல் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது அவசரகால நிதியிடல் தேவைகளுக்காக ப.நா.நிதியத்தினை மீண்டும் மீண்டும் அணுகுவதனையும் படுகடன் மறுசீரமைப்பு தேவைப்பாடுகளையும் தவிர்த்துவிடும். 2022இன் அநேகமான காலப்பகுதியில் மோசமான நிலைமையிலிருந்து பொருளாதார நிலைமைகள் விரைவாக வழமைக்குத் திரும்புகின்றமை மேலே குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, முன்னைய ப.நா.நிதிய நிகழ்ச்சித்திட்டங்களைப் போலன்றி, பெருமளவிற்கு வலி நிரம்பிய சீர்திருத்தங்கள் தற்போதைய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டமையினால் அத்தகைய சீர்திருத்தங்களை இனித் தொடர்வது ஒப்பீட்டு ரீதியில் சுமுகமானதாகவிருந்து அதன்மூலம் தற்பொழுது இடம்பெற்றுவரும் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பொருளாதாரத்தினை இயலச்செய்யும்.

1

முன்னோக்கிப் பார்க்கையில், மறுசீரமைப்புக் காலத்திற்கு பின்னர் வெளிநாட்டு படுகடனின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கு இலங்கை வெளிநாட்டு நிதியிடலைக் காத்திரமான விதத்தில் முன்னுரிமைப்படுத்திக் கொள்வதும் பயன்படுத்திக் கொள்வதும் மிக அவசியமாகும். இலங்கை 2007 இலிருந்து இன்றுவரை மொத்தமாக ஐ.அ.டொலர் 17.6 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் 2001 இலிருந்து இன்று வரை ஐ.அ.டொலர் 17.2 பில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளையும் வழங்கியிருக்கிறது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினதும் இலங்கை அபிவிருத்தி முறிகளினதும் பெறுகைகள் அவை வழங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் மாத்திரம் முக்கியமாக அபிவிருத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வேளையில் அதன் பின்னர் வழங்கப்பட்ட பெறுகைகளின் பெரும்பங்கும் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு அல்லது முக்கியமாக பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் அரசின் மொத்த நிதியிடல் தேவைகளை உயர்வடையச் செய்த வெளிநாட்டுப் படுகடன் தொகை காரணமாக ஏற்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கும் அத்தகைய படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் முக்கியமாக பயன்படுத்தப்பட்டன. இது உலக சந்தையிலிருந்து வர்த்தக வீதங்களில் மேலதிக வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைகளை கட்டாயப்படுத்தியது. இதன்படி, நாட்டிற்கான பன்னாட்டு தரமிடல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைப்பாடுகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுக்கு மத்தியில் இலங்கையின் படுகடன் உபாயம், உயர்ந்தளவு வர்த்தக வெளிநாட்டு நாணயப் படுகடனின் மீது தங்கியிருப்பதிலிருந்து பங்குரிமை மூலதனத்தினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு நிதியிடலுக்கு மாற்றமடைய வேண்டியது அவசியம். வெளிநாட்டு நிதியிடல் கலப்பு மற்றும் உபாயம் போன்றவை அத்தகைய நிதிகளைப் பயன்படுத்துவதற்கான நோக்கத்தினையும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை உருவாக்குவதற்கான இயலாற்றலை மேம்படுத்துவது பற்றிய நோக்கங்களை அடையாளம் காண்பதன் மூலம் கவனமாக உருவாக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, புதுப்பிக்கத்தக்க வலு போன்ற உபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டங்களுக்குள் வெளிநாட்டு நிதியினைக் கவருவது இறைத் துறை மற்றும் வெளிநாட்டுத் துறையின் மீது அளவுக்கதிகமான அழுத்தங்களை ஏற்படுத்தாமல் வலுத் துறையின் பாதிக்கப்படும்தன்மைகளைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாக இருக்கும். மேலும், ஏதேனும் வடிவில் படுகடன் நிதியிடலை நாடுவதற்கான எதிர்கால முயற்சிகள், எதிர்காலத்தில் படுகடனால் பாதிக்கப்படும் தன்மைகள் எழக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் செலவு மற்றும் நன்மைகளுக்கெதிராகவும் அத்தகைய நிதிகளுக்கான அவசியத்தின் அடிப்படையிலும் பக்கசார்பற்று மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

நாட்டினை உலகளாவிய நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகளுக்கு திறப்பதற்கு முன்னர், ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் எடுத்துக்காட்டப்பட்ட படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும். ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட வசதியின் ஏற்பாடுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள படுகடன் உறுதித்தன்மை இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகளை விரைவான முறையில் இறுதிப்படுத்துவது அவசியமாகும். 2023 மார்ச்சு இறுதியில் உள்நாட்டுப் படுகடன் மீது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு அறிவித்ததனைத் தொடர்ந்து இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பு உபாயங்களை பகிரங்கமாக அறிவிக்கும் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமையானது படுகடன் மறுசீரமைப்புச் செய்முறைகள் நேரகாலத்துடன் ஆரம்பிக்கப்படுவதனை இயலுமைப்படுத்தும். 2023 செத்தெம்பருக்கு முன்னதாக இச்செய்முறையினை இறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரும் கூட பன்னாட்டுத் தரமிடலில் ஏற்படக்கூடிய ஏதேனும் முன்னேற்றங்கள் படிப்படியாக மாத்திரமே செய்முறைப்படுத்தப்படும் என்பதுடன் பொருளாதாரத்தினை வெற்றிகரமாக மீளக்கட்டியெழுப்புவதன் மீது இது தங்கியிருக்கும். நாடுகள் மறுசீரமைப்பினை மேற்கொண்ட பின்னர் நாட்டிற்கான தரமிடலை மேம்படுத்துவதற்கும் இருபுடை மற்றும் வர்த்தக கடன்வழங்குவோரிடமிருந்து வெளிநாட்டு நிதியிடலைக் கவர்ந்து கொள்வதற்கும் முன்னதாக நம்பிக்கையினைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கும் என்பதனையும் பன்னாட்டு அனுபவங்கள் காட்டுகின்றன. இப்பின்னணியில், நாடு படுகடன் நிதியிடலிலிருந்து நடுத்தர காலத்தில் வெளியேறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதுடன் பங்குரிமை மூலதன நிதியிடல் போன்ற படுகடனை உருவாக்காத நிதியிடல் மூலங்களை முக்கியமாக வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் அரச தனியார் பங்குடமை ஏற்பாடுகளூடான மூலங்களூடாகக் கவர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இழப்புக்களை ஏற்படுத்துகின்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மாற்றியமைப்பதற்காகவும் இறைச் சுமையினை ஒழித்துவிடுவதற்காகவும் நீண்ட காலமாகத் தேவைப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைந்து மேற்கொள்வது அவசியமாக இருப்பதுடன் இதன் மூலம், இறை மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் இந்நிறுவனங்களிலிருந்து எழும் இடர்நேர்வுகள் கட்டுப்படுத்தப்படும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மின்வலு, பெற்றோலியம், நீர், வங்கித்தொழில், போக்குவரத்து, விமானப் போக்குவரத்து போன்ற எண்ணற்ற உபாய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற பொருளாதாரத் துறைகளில் முக்கிய வகிபாகங்களை

ஆற்றுகின்ற போதும் இந்நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க பங்கு தொடர்ந்தும் தொழிற்பாட்டு வினைத்திறனின்மை, மோசமான ஆளுகை மற்றும் தவறான முகாமைத்துவம், பொறுப்புக்கூறும் மற்றும் வெளிப்படைத்தன்மை குறைவாக இருத்தல், நலிவடைந்த சந்தை சார்ந்த தன்மைகள் மற்றும் மிகையான தொழிற்படை என்பன உள்ளிட்ட பரந்தளவு பிரச்சனைகளினால் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கின்றன. இதையொட்டி, இப்பிரச்சனைகள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பலயீனமான நிதியியில் செயலாற்றத்தினை அதிகரித்து அதன் காரணமாக அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் மீதும் மிக அண்மையில் சில தனியார் வங்கிகளின் மீதும் அவற்றின் மோசமான தாக்கங்கள், மூலதன உள்ளீடுகளினூடாக அரச நிதி இழக்கப்படுதல், அரசாங்கத்தின் நிகழத்தக்க பொறுப்புக்கள் அதிகரித்தல் மற்றும் பொதுமக்களுக்கான பணிகளின் கேள்விக்குரிய தரம் என்பனவற்றினூடாக நாட்டிற்கு பல்வேறு விதமான பேரண்டப் பொருளாதார சுமைகளை ஏற்படுத்தி வருகின்றன. எடுத்துக்காட்டாக, 2022 இறுதியில் வங்கித்தொழில் துறையிலிருந்தான அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் ரூ.1.7 றில்லியனாக[4] விளங்கிய வேளையில் அரசாங்கம் 2022 காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையின் திரவத்தன்மை அழுத்தங்களைத் தளர்த்துவதற்காக பங்குரிமை மூலதனமாக ரூ.80 பில்லியனை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இலங்கையிலுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பொதுவாக பாராளுமன்றச் சட்டமொன்றினால் நிறுவப்படும் போது பல அரசிற்குச் சொந்தமாக தொழில்முயற்சிகள் கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருப்பதன் மூலம் பாராளுமன்றத்தின் மேற்பார்வையினைப் புறக்கணிப்பதற்கான சாத்தியத்தினை வழங்குகின்றது. மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவற்றின் நிதியியல் கணக்குகள் உரிய நேரத்திலான தயாரிப்பதும் இக்கூற்றுக்களை வெளிப்படுத்துவதும் பெருமளவிற்கு இடம்பெறுவதில்லை என்பதனால் வெளிப்படைத்தன்மையும் பொதுமக்களுக்கான நுண்ணாய்வுகளும் பாதிக்கப்படுகின்றன. மோசடி, ஊழல், தவறான முகாமைத்துவம் மற்றும் சில நிறுவனங்களில் காணப்படும் கவனக்குறைவுகள் போன்ற பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்ட போதிலும் இத்தகைய பிரச்சனைகள் தொடர்புபட்ட சபை மட்டங்களிலும் பாராளுமன்றக் குழு மட்டங்களிலும் நேர காலத்துடன் தீர்க்கப்படவில்லை. மேலும், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஜனரஞ்சகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயன்படுத்தியிருக்கின்றன. உதாரணமாக, வலு, பெற்றோலியம், நீர், போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கிய பொதுப் பயன்பாடுகள் மற்றும் அரச துறை பணிகள் நீண்ட காலமாக செலவினை மீட்கத்தக்க விலைகளிலும் பார்க்க கீழேயே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த இலக்கிடப்படாத உதவுதொகைகளின் செலவுகள் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் தாங்கப்பட்டமையானது பாரிய ஒன்றுதிரண்ட இழப்புக்களை விளைவித்திருப்பதுடன் இவை மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல்களினால் பெருமளவிற்கு ஈடுசெய்யப்பட்டன. செலவினைப் பிரதிபலிக்காத விலைகள் நாட்டின் முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான நிதியியல் செயலாற்றத்திற்கும் மோசமான சந்தை சார்ந்த தன்மைகளுக்கும் முக்கிய காரணமாக இருந்து வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துப் பிரச்சனைகளும் இலாபம் தரும் வர்த்தக ரீதியான தொழில்முயற்சிகளாக தொழிற்படுவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கவில்லை என்பதுடன் அதன்மூலம் அரசாங்கம், வங்கிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையற்ற சுமையை ஏற்படுத்தியுள்ளன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்பெறுகைகள் கடந்த காலத்தில் உறுதித்தன்மையற்ற உயர்ந்த மட்டங்களை அடைந்த போது அரசாங்கத்தின் அரசிறைச் சேகரிப்புக்களைப் பயன்படுத்தி அத்தகைய படுகடன் சுமைகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ரூ.884.1 பில்லியன் கொண்ட வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் (ஐ.அ.டொலர் 2,434.8 மில்லியன்) 2022 இறுதியில் மத்திய அரசாங்கத்தின் படுகடனாக ஈர்த்துக்கொள்ளப்பட்டது. மேலும், சீன எக்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, எயார்போட் அன்ட ஏவியேஷன் சேர்விஸஸ் பிறைவேற் லிமிடெட் என்பனவற்றின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எட்டுக் கடன்களின் வெளிநின்ற நிலுவையான ரூ.518.3 பில்லியன் (ஐ.அ.டொலர் 1,427.3 மில்லியன்) கொண்ட தொகை 2022 இறுதியில் மத்திய அரச படுகடனுக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டது. இப்பின்னணியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறன், நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றினை மேம்படுத்துவதற்காக அவற்றுடன் தொடர்பான நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் அதிகளவிற்குத் தேவைப்படுகின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை நிதியியல் ஆற்றல் வாய்ந்தனவாகச் செய்வதற்கான அவசியத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகள் பல முக்கியமான பொது வசதிகளின் செலவினைப் பிரதிபலிக்கும் விலைத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு விதந்துரைத்திருக்கின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் வினைத்திறனற்ற தன்மைகளை உயர்ந்த விலைகளின் மூலம் பொதுமக்கள் மீது சுமத்தாமல்

4 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய அரசாங்கத்தின் படுகடனாக ஈர்த்துக்கொள்ளப்பட்ட அரசாங்கம் உத்தரவாதமளித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடனின் வெளிநின்ற நிலுவையினை இது உள்ளடக்குகின்றது.

1

அதிகரித்த வருமானத்தை உருவாக்குவது மட்டுமன்றி செலவுகளைக் குறைப்பதற்கு கடினமாக முயல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வெளிப்படையான தன்மைகளை தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு அத்தகைய விலையிடல் பொறிமுறைகள் அவசியமாகின்றன. மேலும், உபாய ரீதியற்ற அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரையில் அத்தகைய தொழில்முயற்சிகளின் இறைச் சுமையினைக் குறைப்பதற்கும் மேம்பட்ட நிறுவன ரீதியானதும் மற்றும் வர்த்தக வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கும் உரித்து நீக்கம் செய்யப்படுவதற்காக அல்லது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதற்காக பரிசீலனையில கொள்ளப்படுதல் வேண்டும். எஞ்சியுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிறுவன ரீதியான வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறும் தன்மையும் பொறுப்பாணையூடாகவும் கிரமமான பாராளுமன்ற மேற்பார்வையினூடாகவும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு பிணிக்கப்பட்ட நிறுவன ரீதியான இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். இதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் முகாமைத்துவம் பொறுப்புக்கூறத்தக்க தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சபைகளினாலும் முகாமைத்துவத்தினாலும் ஊழியர்களினாலும் பெறப்படுகின்ற ஊக்குவிப்புக்களும் நன்மைகளும் அவர்களது செயலாற்றம் மற்றும் நிறுவன ரீதியான இலக்குகளின் சாதனை என்பனவற்றுடன் இணைக்கப்படுதல் வேண்டும். இதன்படி, அத்தகைய தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தில் வளர்ச்சி வசதிப்படுத்துநராக தோற்றம் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தொடர்ந்தும் கடப்பாடுடையதாக இருப்பது அவசியமானதாகும். மேலும், அரசாங்கத்தினால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவாறு மின்வலுத் துறையின் தொழிற்பாட்டு வினைத்திறனை எய்துவதற்கு வலுத் துறைக்கு மின் உருவாக்கம், ஊடுகடத்தல் மற்றும் விநியோகித்தல் துணைத் துறைகள் என்பனவற்றை வெவ்வேறாக்குவதற்கான கடுமையான சீர்திருத்தங்கள் தேவைப்படும். இலங்கை மின்சார சபை போன்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தனியார் துறை வலு வழங்குனர்களுடன் செய்துகொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் இலங்கை மின்சார சபைக்கு செலவினை ஏற்படுத்தும் மிதமிஞ்சிய அனுகூலங்களை அத்தகைய கம்பனிகளுக்கு மாற்றப்படாமலிருப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இந்நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் எவ்வித தாமதமுமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டிய அதேவேளை, மத்திய அரச நிதிகளின் மீதான சுமையும் குறைக்கப்படுதல் வேண்டும்.

வரி விதிப்புக் கொள்கைகள் மற்றும் வரி நிருவாகம் என்பனவற்றிற்கான சீர்திருத்தங்களும் சட்டத்திற்கு இணங்கியொழுகின்ற கட்டமைப்பினை வலுப்படுத்துவதும் அரசாங்கத்தின் அரசிறை இலக்குகளை எய்துவதற்கு மிக முக்கியமானவையாக இருப்பதுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் பேரண்டப் பொருளாதார நிலுவை மீண்டும் அடையப்படும். அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் விடாப்பிடியாகக் காணப்படும் குறைந்த அரசிறைச் செயலாற்றத்தினை அங்கீகரிக்கும் விதத்தில், அரசாங்கம் வரி வீதங்களை அதிகரிப்பதற்கும் அதேவேளையில் வரித் தளத்தினை விரிவாக்குவதற்கும் ஏற்கனவே பல வழிமுறைகளை பின்பற்றியிருக்கிறது. எனினும், நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையொன்றின் மீது அரசிறைச் திரட்சியை மேலும் உயர்த்துவதற்கு மேம்பட்ட தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பங்களை கொண்ட பிரயோகங்களுடன் தொடர்பான மேலதிக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். இலங்கையில் வரி முறைமை முக்கியமாக ஒவ்வொரு ஆண்டிலும் காணப்படும் அரசிறை வீழ்ச்சியின் பற்றாக்குறையின் பின்னணியில் குறுங்கால தீர்வினை இலக்காகக் கொண்ட நிரந்தரமற்ற மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கொள்கை மாற்றங்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பின்னோக்கிய மிகை வரி விதிப்புக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும் வியாபார மொத்தப் புரள்வு மீதான வரிகள் மீதான அரச கொள்கைகள் அடிக்கடி மாற்றப்படுவதும் அத்தகைய நிரந்தரமற்ற வரிக் கொள்கைகளுக்கு சிறந்த உதாரணமாகும். இதன் விளைவாக, வரிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதும் வரிப் பொறுப்புக்களை எதிர்வுகூறுவதும் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சிக்கலான விடயமாக மாறியிருப்பதுடன் இது தன்னிச்சையான வரி இணங்குவிப்புக்களைப் பேணுவதிலிருந்தும் வரி செலுத்துவோரை ஊக்கம் குன்றச் செய்கிறது. பலயீனமான வரி நிருவாக முறைமையானது இலகுவாக வரி விதிக்கக்கூடிய துறைகளிலிருந்து உயர்ந்த வரி அரசிறையினைத் திரட்டக்கூடியதாக இருக்கின்றவிடத்து வரிகளின் சுமை பொதுமக்களிடையே நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற வலையமைப்பு சமத்துவமான வரி முறைமையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். இதன்படி, அரசாங்கத்தின் அரசிறையின் தேவைப்பாடுகள், நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்கள், வரிக் கொள்கைகளின் சமத்துவம், மற்றும் வரி செலுத்துவோர், வரி நிருவாகத்தர் ஆகிய இருவருக்குமான வசதி என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு நாட்டில் வரிக் கொள்கைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். அதேவேளை, நிருவாகச் செலவுகளைக் குறைத்தல்,

வரித் தவிர்த்தல், வரி ஏய்ப்பு மற்றும் பல்வேறுபட்ட வரி மோசடிகள் என்பனவற்றைக் குறைக்கும் விதத்தில் வரி நிருவாகம் பலப்படுத்தப்படல் வேண்டும். அரசாங்கத்திற்கு கணிசமான அரசிறை இழப்புகளைத் தோற்றுவித்த அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையில் காணப்படும் தற்போதைய பலயீனங்கள் விரைவான முறையில் சீர்செய்யப்படுகின்ற வேளையில் நேரடி மற்றும் மறைமுக வரிகள் இரண்டினதும் வரி அரசிறைச் சேகரிப்புக்களுக்காக புதிய தொழில்நுட்பவியல்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் அவசியமாகும். உதாரணமாக அதேநேர பொருட்பட்டியலின் அறிமுகம் பெறுமதி கூட்டல் மற்றும் மொத்தப் புரள்வு வரி தொடர்பான மோசடிகளைத் தடைசெய்ய உதவுவதுடன் வரிக் கணக்காய்வினை வினைத்திறனுடன் மேற்கொள்ளவும் வாய்ப்புக்களை வழங்குகிறது. மேலும், அரசிறைச் சேகரிப்பு முகவர்கள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சொத்துக்களைப் பதிவுசெய்யும் நிறுவனங்கள் என்பனவற்றின் தரவுத் தளத்தினை இணைப்பது வரி ஏய்ப்பினைக் குறைக்க உதவும் என்பதுடன், இதன் மூலம் வரி செலுத்துபவர்களின் தளம் விரிவடைகிறது. பேரேட்டுத் தொழில்நுட்பம், ஒருங்கிணைக்கப்பட்ட சுங்க முகாமைத்துவ முறைமைகள், சரக்கு ஸ்கானர்கள் மற்றும் தடங்காண் கருவிகள் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களின் அறிமுகமானது நாடு-கடந்த வரி ஏய்ப்புக்களை குறைக்க பல நாடுகளுக்கும் உதவியுள்ளன. இலங்கை பாரிய முறைசாரா துறையினைக் கொண்டிருப்பதுடன் இதனை வரி வலையமைப்பிற்குள் அடக்கிக் கொள்வது கடினமாகவுள்ள வேளையில், தனிப்பட்டவர்களினாலும் வியாபாரங்களினாலும் செய்யப்படும் காசுக் கொடுப்பனவுகளூடாகப் பெறப்படும் வருமானங்களை இறைச் சேகரிப்பு முகவர்களினால் கண்டறிந்து கொள்ள முடியாதாகையால் முறைசார்ந்த துறையிலுள்ள பலரும் வரி ஏய்ப்புக்களைச் செய்கின்றனர். ஆகவே, 'காசற்ற பொருளாதாரத்தினை' ஊக்குவிப்பதன் மூலம் அரசிறைச் சேகரிப்பு முகவர்கள் வரி ஏய்ப்பாளர்களையும் அதேபோன்று பினாமி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுபவர்களையும் கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இதேவேளையில், அதிகளவு நேரம் விரயம் செய்வதும் வரி சேகரிப்பு முகவராண்மைகளினை அவற்றின் வரி சேகரிப்பு இலக்குகளினை அடைந்து கொள்வதனை தடுப்பதுமான தற்போதைய மேன்முறையீட்டு மற்றும் குறைகளை கையாளுகின்ற செய்முறையினால் வரி சேகரிப்பு செய்முறை கணிசமானளவு பாதிக்கப்படுகின்றது. வரித் தவிர்ப்பு, வரிகளினை செலுத்தாமை மற்றும் வரி ஏய்ப்பாளர்களுக்கு நீடிக்கப்பட்ட காலக்கெடு வழங்கப்பட்டமை தொடர்பில் தீர்க்கப்படாத பல எண்ணிக்கையிலான வழக்குகளிருப்பதாகத் தெரிகின்றது. வெளிப்படைத்தன்மை நோக்கங்களுக்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களமானது நிலுவையிலுள்ள மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைகளை கிரமமாக வெளியிடுவது வரி சேகரிப்பினை துரிதப்படுத்துவதில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வதனை இயலச்செய்யும். மேலும், வினைத்திறன்மிக்க மேன்முறையீட்டுச் செய்முறையின் அறிமுகம் வரிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நியாயாதிக்கச் செய்முறைகளை விரிவுபடுத்துவதுடன் அரசாங்கத்திற்கு ஏற்படும் வரி இழப்புக்களைக் கடுமையாகக் குறைக்கும். இது தவிர, தன்னிச்சையான இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதற்கு, கடுமையான தண்டப் பணங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வேளையில் வரி செலுத்துவோருக்குப் பொருத்தமான வழிகாட்டலுடன் பணிகளை மேம்படுத்த வேண்டும். தனியாள் வருமான வரிக் கூற்றுக்களையும் தனியாள் வருமான வரிக் கொடுப்பனவுகளையும் இலத்திரனியல் ரீதியாக கோப்பிடுவது கட்டாயமானதாக்குவதற்கு அரசாங்கம் அண்மையில் எடுத்த முயற்சிகள் வரி நிருவாக்கத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வரவேற்கத்தக்க முன்முயற்சிகளாகும். வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த அதன் முயற்சிகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும். இது, அரசாங்கம் வரித் தளத்தினை விரிவாக்குவதனை இயலுமைப்படுத்தும் என்பதுடன் தற்போதுள்ள வரி செலுத்துவோருக்கு கணிசமான சுமைகளை ஏற்படுத்தாமல் வரி வருமானத்தினையும் உயர்த்தும்.

நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் உறுதியான இறைத்திரட்சியை உறுதிப்படுத்துவதற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வலிமிகுந்த வரிச் சீர்திருத்தங்கள் பொருத்தமான செலவின முகாமைத்துவ உபாயங்களினால் நிறைவாக்கப்படுதல் வேண்டும். அரச நிதிகளை மேம்படுத்துவதற்கு வரிச் சீர்திருத்தங்கள் தவிர்க்க முடியாதனவாக இருக்கின்ற போதும், செலவினக் கட்டுப்பாடுகளும் சிக்கனப்படுத்தல் உபாயங்களும் இல்லாமையின் காரணமாக வினைத்திறனற்ற அரச செலவின நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேலதிக வரிகளிலிருந்தான அரசிறை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்குமென்பதனால் அத்தகைய வழிமுறைகள் வினைத்திறன்மிக்க அரச செலவின சீர்திருத்தங்களுடன் இணைந்திருந்தாலொழிய அவை எதிர்விளைவுகளையே தரும். செலவினங்களின் கணிசமான பங்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியம் மற்றும் உதவுதொகைகள், அத்துடன் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதனால் இலங்கையில் அரச செலவினத்தின் பாரிய பங்கொன்று நெகிழ்ச்சித்தன்மையற்ற விதத்தில் தொடர்ந்தும் காணப்படுகிறது. எனினும், பொருத்தமான செலவின முகாமைத்துவ நுணுக்கங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வசதியினை உருவாக்க முடியும். அரசாங்கத்தின் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும் பொழுது அதிகரிக்கின்ற வரவு செலவுத்திட்ட செயன்முறைகள்[5] போன்ற பாரம்பரிய

5 அதிகரித்துச் செல்லும் வரவு செலவுத்திட்டபடுத்தல் செய்முறையில், முன்னைய ஆண்டின் வரவு செலவுத்திட்டம் அடிப்படையொன்றாகக் கருதப்படுவதுடன் இவ்வடிப்படைக்கான சீராக்கங்கள் தற்போதைய தொழிற்பாட்டு மட்டங்களைப் பேணுவதற்காக குறிப்பிட்ட சதவீதங்கள் தன்னிச்சையான அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1

வரவு செலவுத்திட்ட உத்திகள் கூடியளவிற்கு நவீனத்துவமும் காத்திரமானதுமான பதிலீட்டுக்கருவிகள் மூலம் பிரதியீடு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அதாவது பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்டப் பொறிமுறையானது[6] தேவையற்ற மற்றும் உற்பத்தித்திறனற்ற நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கும் அத்தகைய செலவினங்களை நீக்கி விடுவதற்கும் அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தக் கூடியதாக இருக்கின்ற வேளையில் பொருளாதாரத்தின் அழுத்தம் மிக்க தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அருமையாகவுள்ள மூலவளங்களை ஒதுக்குவதனையும் இயலச்செய்வதன் மூலம் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பாதை உருவாக்கப்படுகிறது. பூச்சியத்தினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்ட உத்திகளைப் பயன்படுத்தும் செய்முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற வேளையில், இவ்வரவு செலவுத்திட்டப்படுத்தல் செய்முறையினைக் காத்திரமான விதத்தில் பின்பற்றவும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒன்றிணைந்த திரண்ட முயற்சிகள் அவசியமாகும். விசேடமாக வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பதில் பங்களிக்கின்ற செலவிடல் முகவராண்மைகளின் அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், அனைத்து செலவிடல் முகவராண்மைகளினதும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேலோட்டமான பொதுப்படையான அணுகுமுறையினை விதிப்பதற்குப் பதிலாக, அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலிலுள்ள ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கைக்கும் முன்னுரிமையளிக்கும் விதத்தில் அதன் மூலவளத் தேவைப்பாடு மற்றும் மூலவளங்களின் கிடைப்பனவு என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு உரிய வழிமுறைகளை நடைமுறைக்கிடல் வேண்டும். வினைத்திறன் வாய்ந்த செலவிடல் முகவராண்மைகள் தேவையான மூலவளங்களைப் பெறுவதனைக் காத்திரமான விதத்தில் உறுதிப்படுத்தும் அதேவேளை, வினைத்திறனற்றவர்கள் அவர்களது காத்திரமான தன்மைகளை மதிப்பிடுமாறும் சிக்கன வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படும் பொருட்டு செலவிடல் சிக்கனப்படுத்தல்களை நடைமுறைப்படுத்தும் போது தனிப்பயன்வாய்ந்த மற்றும் ஒவ்வொரு விடயமாக மதிப்பிடும் முறை தேவைப்படுத்தப்படுகிறது. அதேவேளை, மூலதனச் செலவினத்தினை முன்னுரிமைப்படுத்தல் "பணத்திற்கான பெறுமதி" இனை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டியிருப்பதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலிலுள்ள செயற்றிட்டங்களின் முக்கியத்துவம், மூலதனச் செலவினச் செயற்றிட்டங்களுக்கான நிதி காத்திரமான விதத்தில் ஒதுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு திறவுகோலாகும். ஆகவே, மேம்பட்ட வரவு செலவுத்திட்டப்படுத்தல் உத்திகளும் மூலவளங்களின் சிக்கனமான ஒதுக்கங்களும் ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் நிகழ்ச்சித்திட்ட வழி அலகுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் அரசாங்கம் ஆரம்ப மீதி மிகைகளை எய்துவதற்கு மிக இன்றியமையாதனவாக இருக்கும்.

அண்மைய பொருளாதார நெருக்கடிகளினால் நாட்டின் வலுப் பாதுகாப்பு சவாலுக்குட்பட்டமையானது வலுத் துறையில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையினை வலியுறுத்தியது. வெளிநாட்டு அதிர்வுகளுக்கு வலுத்துறை தாக்குப்பிடிக்கும் தன்மை மிகக் குறைவாக இருப்பதனையும் பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகின்ற போதும் வலு உருவாக்கம் மட்டுப்படுத்தப்பட்டளவில் பன்முகப்படுத்தப்பட்டிருப்பதனையும் பிரதிபலித்து மின்வலு மற்றும் ஏனைய வலுப் பணிகளின் வழங்கல் 2022இல் பெருமளவிற்கு தடங்கலுற்று நீண்டநேர மின்சாரத்தடை மற்றும் கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள் என்பனவற்றுடன் சேர்ந்து வலு நெருக்கடிக்கு வழிவகுத்ததுடன் இதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. நீர்மின்வலுவானது வலு உருவாக்கத்தில் மிகச் செலவு குறைந்த வலு உருவாக்க மூலமாக இருந்த போதும் நீர்மின்வலு உருவாக்கத்தின் மீது இலங்கை தொடர்ந்தும் பெருமளவிற்கு தங்கியிருப்பது, காலநிலை இயக்கவாற்றலுக்கு கடுமையாக பாதிப்படையக்கூடியதன்மையின் காரணமாக மின்வலு வழங்கலின் உறுதித்தன்மை நியதிகளில் கரிசனைக்குரியதாக இருக்கிறது. மேலும், வலு உருவாக்கம் நிலக்கரி மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் போன்ற இறக்குமதி செய்யப்பட்ட வெப்ப மின்வலு மூலங்கள் மீது பெருமளவிற்கு தங்கியிருப்பதன் காரணமாக உலகளாவிய வலு விலைகளின் தளம்பல்களுக்கு வலு உருவாக்கமும் பெருமளவிற்குள்ளாகிறது. வலு உருவாக்கத்திற்காக மரபு வழியற்ற புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை விரிவாக்குவதற்கு அநேக முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், புதுப்பிக்கத்தக்க வலுத் துறையிலுள்ள தனியார் முதலீட்டாளர்கள் பல நிறுவனங்களிலிருந்தான ஒப்புதல்களைப் பெறுவதில் காணப்படும் கடினமான தன்மைகள், சூழல்தாக்க கரிசனைகள் அதேபோன்று தீர்வை முறைமைகளிலுள்ள பதிவுகளில் கிரமமான திருத்தங்கள் செய்யப்படாமை போன்ற எண்ணற்ற சவால்களினால் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கின்றமையானது மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலுத் துறையில் தனியார் துறையினால் வழிநடத்தப்படும் விரிவாக்கத்தினை இடையூறுகளுக்குள்ளாக்குகின்றது. இப்பின்னணியில், வலு உருவாக்க மூலங்களின் கிடைப்பனவிற்கும் இம்மூலங்களின் உருவாக்கச் செலவுகளுக்குமிடையில் சமநிலையொன்றினை ஏற்படுத்தி முன்னோக்கிச் செல்கையில் வினைத்திறன்மிக்க கலப்பு உருவாக்கமொன்றினைத் தெரிவுசெய்வதனை

6 பூஜ்சியத்தினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டப்படுத்தல் என்பது ஒருவிதமான வரவு செலவுத்திட்டப்படுத்தல் உத்தியாகும். இதில் அனைத்து செலவினங்களும் புதிய காலப்பகுதிக்கு அல்லது பூஜ்யத்திலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கும் எதிர் முன்னைய வரவு செலவுத்திட்டத்திற்குமிடையில் நியாயப்படுத்தப்பட்டு தேவையான விதத்தில் சீராக்கப்படுகின்றன.

இயலுமைப்படுத்துவதற்கு அவசரமான வழிமுறைகள் தேவையாகவுள்ளன. கலப்பு உருவாக்கத்தில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை விரிவாக்கும் பொருட்டு இலங்கையில் அபரிமிதமாகக் காணப்படும் சூரிய சக்தி, காற்று போன்ற சுத்தமான வலு மூலங்களுக்காக ஒழுங்குவிதிகள் மற்றும் வரி விதிப்பு, போதுமான உட்கட்டமைப்பு மற்றும் சிறந்த ஆளுகை மற்றும் பல விடயங்கள் மீதான நேரடியான அணுகுமுறைகளுக்கான மூலதனச் சூழலைத் தூண்டி வசதியளிப்பதன் மூலம் தனியார் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து முதலீடுகளைக் கவர்ந்து கொள்வது இன்றியமையாததாகும். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கு முதலீட்டாளர் வழிகாட்டல் - 2022 இன்படி, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுத் துறை உயர்ந்த முதலீட்டு உள்ளாந்த வளத்துடன் முன்னுரிமைத் துறைகளிலொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது, புதுப்பிக்கத்தக்க வலுத் துறையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு இலக்கிடப்பட்ட வழிமுறைகளுக்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது. இது தொடர்பில் கொள்கை வகுப்போர் சக தரப்பினரிடையேயான வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளை இயலுமைப்படுத்துவதன் மீதும் தனியார் துறைக்கான வலு சுழற்சி வசதிகளின் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். இது புதுப்பிக்கத்தக்க வலுத் துறைக்கான சந்தையில் தீர்மானிக்கப்பட்ட விலையிடலை உறுதிப்படுத்தும். அதேநேரம் மின்கடத்தல் மற்றும் விநியோக வலையமைப்பினை அபிவிருத்தி செய்யும் வடிவிலமைந்த வலு உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், வலு உருவாக்க வசதிகளை தரமுயர்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல், திறன் வாய்ந்த மின்தொகுதி முகாமைத்துவம் மற்றும் வலு களஞ்சியப்படுத்தல் தீர்வுகள் என்பன வலு இழப்புக்களைக் குறைப்பதற்கும் வலு வழங்கலின் நம்பகத்தன்மையினை அதிகரிப்பதற்கும் அவசியமாகும். அதேவேளை, கலப்பு தொழில்நுட்பவியல் போன்ற ஊர்திகளின் எரிபொருள் சிக்கனத்தினை உயர்த்துவதற்கான தொழில்நுட்பவியலை அறிமுகப்படுத்துவதனூடாக போக்குவரத்துத் துறையின் வலுச் சிக்கனம் மேம்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், போக்குவரத்துத் துறையில் வலு நுகர்வினைக் குறைப்பதற்கு பொதுப் போக்குவரத்து முறைமையினை மேம்படுத்தி விரிவுபடுத்துவதற்கு கூடியளவு ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்கை அணுகுமுறை அவசியமாகும். இதன்படி, நகரப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக ஏற்படும் வலு விரயத்தினைக் குறைக்கும் நோக்குடன் பொதுப் போக்குவரத்து முறையும் வீதி உட்கட்டமைப்பும் திருத்தியமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படல் வேண்டும். அத்துடன் வலுச் சிக்கனம் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான பொதுமக்களிடம் விழிப்புணர்வினை அதிகரிப்பதும், வீட்டுத் துறை, வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களில் வலுச் சிக்கன நியமங்களை நடைமுறைப்படுத்தல் என்பன வலு சிக்கனத்துடன் பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்தும். இடையூறுகள் எதுவுமில்லாமல் வலு வழங்கலின் கிடைப்பனவினை மேம்படுத்துவதன் மூலமும் வாடிக்கையாளர்கள் தாங்கக்கூடிய விலையில் அதிகரித்து வருகின்ற வலுவிற்கான கேள்வியைப் பூர்த்திசெய்தல் மூலமும் வலுப் பாதுகாப்பினை அடையமுடியும். இது தொடர்பில் நிரம்பல் மற்றும் கேள்வியில் திடீரென ஏற்பட்ட மாற்றங்களுக்கு சரியான விதத்தில் பதிலிறுத்தும் விதத்தில் வலுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அண்மிய காலத்தில் அதிகரிக்கும் தேவை காணப்படுகிறது. அதேபோன்று, நீண்ட காலத்தில் பொருளாதார அபிவிருத்தியுடனும் சுற்றாடல் தேவையுடனும் இணைந்து செல்லும் விதத்தில் முதலீடுகளைப் பேணிக் கொள்வதற்கு மேலாக பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒன்றிணைந்த முயற்சியும் இன்றியமையாதவையாகும்.

அரச செலவின முகாமைத்துவத்தின் மேற்பார்வையினை வலுப்படுத்துவதற்கும் இறைத் துறையின் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரிப்பதற்கும் நிறுவனரீதியான மற்றும் சட்டவாக்க சீர்திருத்தங்களும் அதேபோன்று விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தலும் அவசியமாகின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் இறை விதிகள் இலங்கையில் இயற்றப்பட்ட போதும் அவை பின்பற்றப்படாமையானது தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் முன்மதியற்ற இறை முகாமைத்துவத்திற்குக் காரணமாயிற்று. ஆகவே, எய்தக்கூடிய இலக்குகளுடன் பிணைக்கப்பட்ட இறை விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு சட்டவாக்க சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகின்ற அதேவேளையில் அத்தகைய விதிகளுக்கு இணங்கிக் கொள்ளக்கூடிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை விசேடமான முறையில் அடையாளம் கண்டு கொள்ளுதல் வேண்டும். ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் இயற்றப்படவுள்ளதுடன் இது நிதி அமைச்சினதும் செலவிடல் முகவராண்மைகளினதும் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் குறித்துரைப்பதுடன் தகவல் மற்றும் பொறுப்புக்கூறும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்யும். மேலும், அரச நிறுவனங்கள் செலவிடல்களை வரவு செலவுத்திட்டத்திற்குள் மட்டுப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவது மட்டுமன்றி வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் உத்வேகப்படுத்தலும் வேண்டும். மேலும், அரச நிறுவனங்களுக்கும் அரச அலுவலர்களுக்கும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புக்கூறும் தன்மையும் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் நம்பகத்தன்மையினை உயர்த்துவதற்கும் சிறந்த ஆளுகைக்கு ஆதரவளிப்பதற்குமாக கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும். மேலும், ப.நா.நிதிய

1

- விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் தீர்மானத்துடன் இசைந்து செல்கின்ற விதத்தில் ஊழலுக்கெதிரான சட்டவாக்கம் ப.நா.நிதியத்திலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் அறிமுகப்படுத்தப்படும். ஊழல் உணர்வுச் சுட்டெண்[7] - 2022 இன்படி 180 நாடுகளில் இலங்கை 101ஆவது வரிசையில் அமைந்து உயர்ந்த மட்ட ஊழலைப் பிரதிபலித்திருப்பதனைக் கருத்திற்கொள்ளும்போது இது குறிப்பாக ஏற்புடையதாயுள்ளது. ஊழல் கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் நடவடிக்கை முறைகளின் வெளிப்படைத் தன்மைகளையும் வலுப்படுத்துவது உற்பத்தித்திறனற்ற அரச செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதில் முக்கியமான பங்கினையாற்ற முடியும். எனவே, எதிர்காலத்தில் அரச நிதி மற்றும் ஊழல் கட்டுப்பாட்டு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் மேற்பார்வை செய்வதற்கான தொடர்ச்சியான கடப்பாடுகளுடன் கூடிய இறை முன்மதியுடைய தன்மை இறைத்திரட்சி வழிமுறைகளுக்கு பொதுமக்களின் ஆதரவினைத் திரட்டிக் கொள்வதற்கும் இறைத் துறையின் ஒட்டுமொத்த நீடித்துநிலைத்திருக்கும்தன்மை மற்றும் ஒழுக்கவிழுமியங்களை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு மையமாகவிருக்கும்.

உள்நாட்டுப் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதன் மூலமும் ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை வலுப்படுத்துவதன் மூலமும் ஏற்றுமதித் துறைக் கொள்கைகள் பொருட்களினதும் பணிகளினதும் தரத்தினை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துவது அவசியமாகும். 2022இல் இலங்கை வரலாற்றிலேயே மிக உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களைப் பதிவுசெய்த போதும் அத்தகைய வருவாய்கள் இப்பிராந்தியத்திலுள்ள இதேயளவு பொருளாதாரங்களினால் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி அளவுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதேயாகும். உற்பத்திகளின் நுட்பம் ஒரே நிலையில் தேங்கிக் காணப்படுகின்றமை மற்றும் அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு என்பனவற்றின் காரணமாக இலங்கையின் போட்டித்தன்மை குறைவடைந்து இலங்கையின் உற்பத்திகள் உலகளாவிய சந்தையில் சந்தைப் பங்குகளை இழந்து வருகின்றன. ஏற்கனவேயுள்ள போட்டித்தன்மை வாய்ந்த அநுகூலங்களை ஏற்றுமதி வருமானம் மற்றும் உற்பத்தித்திறனை உத்வேகப்படுத்தும் விதத்தில் அதிகரிப்பதன் மூலம் உயர்தர உற்பத்திகளை உற்பத்தி செய்வது உலகளாவிய சந்தையில் போட்டியிடுவதற்கு உதவும். ஏற்றுமதிக் கைத்தொழில்கள் சிறப்பியல்வாக்கம், பெறுமதிகூட்டல், வர்த்தக நாமம் மற்றும் ஏற்றுமதிப்பொருட்களின் தரம் என்பனவற்றை இலக்காகக் கொண்டிருப்பது அவசியமாகவுள்ள வேளையில் அளவுசார் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். குறைந்த உற்பத்திச் செலவில் உயர்ந்த பெறுமதிகூட்டல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளின் ஆதரவுடன் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் புத்தாக்கங்களுக்கு வழிவகுத்தல் என்பனவற்றுடன் சேர்ந்த மேம்பட்ட தரமான பொருட்களின் ஏற்றுமதி மீது ஏற்றுமதிக் கொள்கைகளை ஊக்குவிப்பது அவசியமாகும். ஏற்றுமதித் துறைகளின் புத்தாக்கங்களை அடையாளம் காண்பதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் எளிய வடிவிலான உற்பத்தியிலிருந்து சிக்கலான உற்பத்திகளுக்கு மாறிச் செல்வது அவசியமாகும். அத்துடன் பிராந்திய மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலியினைப் பயன்படுத்திக் கொள்ளும் குறிக்கோளுடன் இலங்கை அதன் உற்பத்தித் தரத்தினை உயர்த்திக் கொள்ளுவதும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் சந்தைப் பங்குகளைக் கவர்ந்து கொள்வதும் அவசியமாகும். மேலும், உள்ளீடுகளின் தரம் முடிவு உற்பத்திகளின் தரத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பதனால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கு போட்டித்தன்மை மிக்க பதிலீடுகளை வழங்கக்கூடிய மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கும் அரசாங்கம் ஊக்குவிப்புக்களை வழங்குவது அவசியமாகும். மேலும், அண்மைய ஆண்டுகளில் வேளாண்மை ஏற்றுமதிகளில் அவதானிக்கப்பட்ட கீழ் நோக்கிய போக்கு, உலகளாவிய போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு வேளாண்மை உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துகின்ற முக்கியத்துவத்தினை தேவைப்படுத்துகிறது. இது தொடர்பில், உலகளாவிய சந்தைகளில் வலுவான தரத்தினையும் வர்த்தக நாம அநுகூலங்களையும் உருவாக்கும் பொருட்டு உலகளாவிய சந்தை உற்பத்திகளை விசேடமாக வேளாண்மை உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மீது கொள்கைகளும் வழிமுறைகளும் வலியுறுத்தப்படல் வேண்டும். அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சியின் இயலாற்றலை மேம்படுத்துவதற்கு வேளாண்மையாளர்களின் சங்கங்களின் முறையினைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் குறைந்த செலவில் உயர்ந்த உற்பத்திகளினூடாக பொருளியல் சிக்கனத்தினை அடையமுடியும். உயர்ந்த விளைச்சலுடன் கூடிய பயிர் பெருக்கத்தினை மேம்படுத்துவதன் மீது தேசிய மட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி உபாயத்தினை அபிவிருத்தி செய்வதும் வேளாண்மையாளர்களின் மட்டத்தில் சிறந்த தரத்தினை ஊக்குவிப்பதும் அவசியமானவையாக இருக்கும். முக்கிய வேளாண்மைப் பிராந்தியங்களில் வர்த்தகம் சார்ந்த ஏற்பாடுகளை நிறுவுவதும் களஞ்சியசாலை வசதிகளின் தேவைகளை மேம்படுத்துவதும் வேளாண்மை உற்பத்திகளின் அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைக்கும். மேலும், நிறுவன ரீதியான தரத்தினை உயர்த்துதல், தாராளமானதும் நிலையானதுமான வர்த்தக கொள்கைகளைப் பேணுதல் ஏற்றுமதி துறைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை ஊக்குவித்தல், ஏற்றுமதியை தரமுயர்த்தும் விதத்தில் இயலாற்றல் கொண்ட மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல், தர உயர்வினை மேற்கொள்ளும் விதத்தில்

7 குறைந்தமட்ட ஊழலைக் கொண்ட நாடு ஊழல் உணர்வுச் சுட்டெண்ணில் முதலாவது இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும்.

உள்நாட்டுச் சூழலைத் தூண்டுதல் என்பன மீது கொள்கைகள் கவனம் செலுத்தப்படுகின்ற வேளையில் உயர்தரச் சந்தைகளை அணுகுவதும் மேம்படுத்தப்படல் வேண்டும்.

தேசிய வர்த்தக கொள்கைகளின் கணிசமான மீள் ஆற்றுப்படுத்தலினூடாக பாரிய இறக்குமதிகளின் மீது தங்கியிருப்பதிலிருந்தும் விலகி கூடியளவிற்கு ஏற்றுமதி சார்ந்த தன்மைக்கு மாறுவதற்கு தியாகங்களுடன் கூடிய அமைப்பியல் சீராக்கங்கள் நாட்டிற்குத் தேவையானதாகும். இலங்கை நுகர்வு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கும் முக்கிய ஏற்றுமதிகளின் உற்பத்திகளுக்கு தேவையான உள்ளீடுகளுக்கும் உள்நாட்டு உற்பத்திக்கும் இறக்குமதிகளின் மீதே பெருமளவிற்கு தங்கியிருக்கிறது. 2009 இலிருந்து இறக்குமதிகள் மீதான செலவினம் ஏறத்தாழ இரண்டு மடங்காகியிருக்கிறது. அதேவேளை, ஏற்றுமதிக் கூடையின் உள்ளமைப்பு தசாப்தங்களாக அதேமட்டத்திலே காணப்பட்டு, பாரம்பரிய வேளாண்மை ஏற்றுமதிகள் மற்றும் ஆடை போன்ற குறைந்த பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறமையைக் காட்டுகிறது. 2018 யூலையில் தொடக்கி வைக்கப்பட்ட திருத்தப்பட்ட தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022, புத்தாக்கம் மற்றும் முதலீடுகளினால் தூண்டப்பட்ட ஏற்றுமதி மையமொன்றிற்கு இலங்கையை கொண்டு செல்வதனை இலக்காகக் கொண்டிருந்தது. இது வசதியேற்பாடுகள், தகவல் மற்றும் ஊக்குவிப்பு, தேசிய தர உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சியாண்மை என்பனவற்றினூடாக அனைத்து ஏற்றுமதித் துறைகளுக்குமான வியாபாரச் சூழலை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தது. தேசிய ஏற்றுமதி உபாயத்தின் குறிப்பிட்ட பொறுப்பாணையாக, தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நலச் சுற்றுலா உள்ளிட்ட ஆறு ஏற்றுமதித் துறைகளில் புத்தாக்கங்களையும் பன்முகத்தன்மைகளையும் ஊக்குவிப்பதாக இருந்தது. ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான தொழிலாளர்களை வழங்குவதுடன் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்த்தல், நிலையான இறக்குமதிக் கொள்கைகள், தெளிவானதும் வெளிப்படையானதுமான வரிக் கொள்கைகள், இலங்கைக்குள் முதலீடுகளைக் கவர்வதற்காக வெளிநாட்டு அரசாங்கங்களை அணுகுதல், இளைஞர்களிடையே தொழில்முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல் என்பன வர்த்தகப்படுத்தத்தக்க துறையில் உடனடி முன்னுரிமைகளுக்குரிய சில முக்கிய விடயங்களாகக் காணப்படுகின்றன. சென்மதி நிலுவை நெருக்கடிகளின் காரணமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் இடைநிறுத்துவதற்கும் வழிமுறைகள் தேவையாக இருந்தன. எனினும், இறக்குமதிகளில் தங்கியிருப்பதனை குறைத்துக் கொள்வதன் மூலமும் பொருளாதாரத்திலுள்ள கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலமும் அத்தகைய அவ்வப்போது தேவைப்படும் வழிமுறைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளமுடியும். இடைநிலை உள்ளீடுகளின் சாத்தியமான பின்னோக்கிய ஒருங்கிணைப்பு, உள்நாட்டுப் பதிலீடுகளுடன் இன்றியமையாதன அல்லாத நுகர்வுப்பொருட்களைத் தெளிவாக அடையாளம் கண்டு ஊக்கமிழக்கச் செய்தல், இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட சலுகைகளை நீக்குதல், சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தினைப் பேணுதல் என்பன இது தொடர்பில் முக்கியமான விடயங்களாகவுள்ளன.

தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் நாட்டின் அபிவிருத்தி உபாயங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உயர் முன்னுரிமைக்குரிய விடயமாக அடையாளம் காணப்பட்டு வந்த போதும் பரிமாணம் மற்றும் வளர்ச்சி நியதிகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொடர்பில் கடந்த ஒரு சில தசாப்தங்களாக இலங்கையின் அனுபவம் ஏமாற்றம் தருவதாகவே காணப்படுகிறது. மிகத் தாராளமான வரி விடுப்புக்கள் வழங்கப்பட்ட போதும் 2010 இலிருந்து சராசரியாக ஆண்டொன்றிற்கு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீடாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.2 பில்லியனை மட்டுமே இலங்கையினால் கவர்ந்த கொள்ளக்கூடியதாக இருந்தது. அத்துடன் மற்றைய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்திக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் விகிதம் கணிசமானளவிற்கு குறைவாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. தற்போதைய இலங்கைப் பொருளாதாரத்தின் பின்னணியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கான தடங்கல்கள், உயர்ந்த கம்பனி வருமான வரி வீதங்கள், தொழிலாளர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் உள்ளிட்ட உயர்ந்த உற்பத்திச் செலவு, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்ளின் பற்றாக்குறை, உடனடியாக கிடைக்கத்தக்க காணிகள் இல்லாமை, நிருவாகப் படிமுறைகள் பல்மட்டத்திலான ஒப்புதல் நடவடிக்கை முறைகள், ஊழல் புலப்பாடு என்பனவற்றின் காரணமாக கம்பனிகள் அவற்றின் தளங்களை இலங்கைக்கு மாற்றுவதற்கான ஊக்குவிப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இத்துறைக்கு, மற்றைய விடயங்களுடன் ஏற்புடைத்தான நிறுவன ரீதியான அமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவற்றை ஒருங்கிணைப்பது போன்ற அரசாங்கத்தின் அண்மைய முயற்சிகள் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாகும். இருப்பினும், வினைத்திறன் மிக்கதொரு முறையில் முதலீடுகளை கவர்வதற்கும் ஒப்புதல்களை வழங்குவதற்கும் அத்தகைய அதிகாரசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது முக்கியமானதாகும். அதேநேரம், சிநேகபூர்வ நாடுகளுடன் நெருக்கமான இராசதந்திர உறவுகளைப் பேணுவது வலுப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் போன்ற ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதும் பரந்தளவு கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தும் உபாய முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு

1

நிதியிடுவதற்கு முதலீட்டு வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கான கருவியாக இருக்கும். நாட்டின் முதலீட்டுத் தேவைகள் தெளிவாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் வாய்ப்பினைக் கொண்ட முதலீட்டாளர்களிடையே இவை ஊக்குவிக்கப்பட வேண்டியதுடன் அத்தகைய முதலீடுகளுக்கான ஒப்புதல்களும் நடைமுறைப்படுத்தல்களும் ஒரே கூரையின் கீழான அணுகுமுறையினைப் பின்பற்றுவதனூடாக விரைவுபடுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில் 2022 ஒத்தோபரில் முதலீட்டுச் சபையின் கீழ் நிறுவப்பட்ட முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையம் வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கையாகும். முதலீட்டு ஒப்புதல் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், முதலீட்டாளர் வசதிப்படுத்தலுக்காக முகவராண்மைகளுக்கிடையிலான இணைப்புக்களை அதிகரித்தல் என்பன மூலம் முதலீட்டாளர்களுக்கு வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குவதற்கான பிரத்தியேகமான நிலையமாக முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையம் விளக்குகிறது. முதலீட்டினை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புத்தன்மையினை உருவாக்காத உட்பாய்ச்சல்களைக் கண்டறிவது முன்னோக்கிச் செல்கையில் இலங்கைப் பொருளாதாரத்தின் மீளெழுச்சி உபாயத்தின் முக்கிய கூறுகளிலொன்றாக இருத்தல் வேண்டும்.

இலங்கை சுற்றுலாவினை தீவிரமாக ஊக்குவிக்கின்ற இத்தருணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும் சுற்றுலா மீதான வருவாய்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான பொருத்தமான வலையமைப்பும் அவசிய தேவையாகவுள்ளன. வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுவதற்கும் சுற்றுலா வருவாய்களிலிருந்தான 2011 இலிருந்து காணப்படும் பாரிய வர்த்தகப் பற்றாக்குறைச் சுமையினை பகுதியளவில் ஈடுசெய்யவும் இலங்கை சுற்றுலாத் துறையில் பெருமளவிற்கு தங்கியிருந்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றமையால் சுற்றுலா வருவாய்களிலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாடு முயற்சித்தல் வேண்டும். எனினும், சுற்றுலா விடுதிகளினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் விமான நிலையத்தின் வெளிச்செல்லும் அளவீடு என்பனவற்றின் அடிப்படையில், சுற்றுலாப் பயணி ஒருவரின் விருந்தினர் இரவுகளின் சராசரி எண்ணிக்கை, நாளொன்றிற்கு இலங்கையில் சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி செலவிடல் போன்றவற்றின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் சுற்றுலாவிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்றன. எனினும், நாளொன்றிற்கான செலவிடலை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படும் இவ்வெளிச்செல்லும் அளவீட்டின் பெறுபேற்றின்படி, இப்பிராந்தியத்திலுள்ள பிரபல்யமான சுற்றுலா சேரிடங்களிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் உயர்வானதாக இருக்கின்றமையானது இதன் துல்லியத்தன்மை பற்றி கேள்வி எழுப்புவதாகவுள்ளது. அத்துடன் நாளாந்த செலவிடலானது சுற்றுலாப் பயணிகளின் வேறுபட்ட வகைகள், தங்குமிட வசதியின் வகை மற்றும் வருகைதரும் நாடுகளின் தன்மை போன்ற மற்றைய பல காரணிகளிலும் தங்கியிருக்கிறது. ஆகவே, சுற்றுலாத் தொழில் துறையின் ஆர்வலர்களினால் தனித்தனியாக எவ்வளவு பணம் ஈட்டப்பட்டு வருகிறது என்பதனை துல்லியமான முறையில் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான தகவல் வலையமைப்பு இன்றியமையாததாகும். ஐக்கிய நாடுகளிலிருந்தான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ், தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் சுற்றுலா அபிவிருத்திச் சபை என்பனவற்றின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா சென்மதிக் கணக்கு, சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களைச் சிறந்த முறையில் மதிப்பீட்டுக் கொள்வதற்கு ஆதரவளிக்கக்கூடுமெனினும் இது இன்னமும் இலங்கையில் அபிவிருத்தி செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. மேலும், பல சுற்றுலாப் பயணிகள் அவர்களது தங்குமிட வசதியை எயார்பீஅன்ட்பீ, அகொட மற்றும் புக்கிங்.கொம் போன்ற இணையத்தளங்களூடாக முன்பதிவுசெய்து கொள்வதனால் தகவல்களைப் பெறுவதற்கு இவை பயன்மிக்கனவாகவுள்ளன. அதேவேளை, தங்குமிட வசதிகளை முன்பதிவு செய்து கொள்வதற்கும் சுற்றுலா தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குமாக சுற்றுலாப் பயண செயலியொன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் உருவாக்கப்பட்டு வருகின்றது. எனினும், குறிப்பாக கொடுப்பனவுகளைச் செய்யும் போது, தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் விசுவாசக் கழிவுகளைப் பெற்றுக் கொள்வது என்பன தொடர்பான விடயங்கள் என வரும் போது நன்கறியப்பட்ட செயலிகளூடாகச் செய்யப்படும் முன்பதிவுகளை சுற்றுலாப் பயணிகள் அதிகம் நம்புகின்றனர். ஆகவே, பன்னாட்டு இணையத்தளங்கள் மற்றும் செயலிகளூடாகச் செய்யப்படும் முன்பதிவுகளூடாக இவ்விணையத்தளங்களிலும் செயலிகளிலும் பட்டியலிடப்பட்டுள்ள முறைசாரா தங்குமிட வசதியை வழங்குபவர்களூடாகவும் நாட்டிற்குள் ஏற்படும் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைகளைக் கண்டறிந்து கொள்ளும் அதேவேளையில் உள்ளூர் முன்பதிவு இணையத்தளங்களையும் செயலிகளையும் அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும். மேலும், சுற்றுலாக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரினதும் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை வங்கித்தொழில் முறைமையில் பதிந்து கொள்வதற்கும் பொருத்தமான பொறிமுறையொன்று அவசியமாகின்ற வேளையில் துறையில் காணப்படும் உயர்ந்தளவான முறைசாரா தன்மைகளை நீக்கிவிடுவதற்கு பதிவு செய்யப்படாத நிறுவனங்களை முறைமையில் உள்ளடக்கிக் கொள்வது விரைவுபடுத்தப்படல் வேண்டும்.

தொழில்சார் நிபுணர்களினதும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களினதும் பாரிய புலம்பெயர்வு குறிப்பிட்ட கைத்தொழில்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கக்கூடும் போல் தோன்றுவதுடன் அது உற்பத்தியாக்கத்திறனிலும் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தி மீட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைப் பாதிக்கக்கூடும். மோசமான பொருளாதார நெருக்கடிகளினால் மருத்துவர். பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், தகவல் தொழில்நுட்ப தொழில்சார் நிபுணர்கள் போன்ற தகைமைபெற்றவர்களின் பாரிய புலம்பெயர்வு தூண்டப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரங்களின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் பதிவுசெய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை, 2015 இலிருந்து 2019 வரையான பரந்த காலப்பகுதியின் ஆண்டுச் சராசரியான 226,510 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 311,056 இற்கு 37 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தொழில்சார் நிபுணர்களின் புலம்பெயர்வு எண்ணிக்கையில் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்பு 87 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. இது தொடர்பான அலுவல்சார் புள்ளிவிபரங்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாகக் காணப்படுகின்ற போதும் தொழிலுக்காக தற்காலிகமாக புலம்பெயர்ந்தவர்களுக்குப் புறம்பாக, நிரந்தரமான மனித மூலதன வெளிச்செல்கை 2022 இலிருந்து மிக முனைப்பானதாகக் காணப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள புள்ளிவிபரங்கள், மொத்த தொழிலாளர் புலம்பெயர்வின் ஒரு பங்காக, தொழில்சார் நிபுணர்களின் எண்ணிக்கை போருக்குப் பின்னைய காலத்தில் உறுதியாக அதிகரித்து சராசரியாக 20 சதவீதத்திற்கு மேற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தமையை எடுத்துக்காட்டியது. இலங்கையில் மூளைசாலிகளின் வெளியேற்றம் பற்றிய முக்கிய நிகழ்வு தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மிக முன்னமேயே காணப்பட்டமையினை இது எடுத்துக்காட்டுகின்றது. தற்போதைய பின்னணியில், பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாக பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறையின் நிச்சயமற்றதன்மைகளுக்கிடையில் உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைத்தரம் குறைவடைந்தமை இலங்கையர்களை புலம்பெயரத் தூண்டியுள்ளது. நீண்ட காலமாகக் காணப்படும் நாட்டின் அமைப்பியல் பிரச்சனைகள் நலக் கவனிப்பு, சட்ட நடைமுறைப்படுத்தல், அரச நிருவாகம், பொதுப் போக்குவரத்து இன்னும் பிற போன்ற நிறுவன ரீதியான கட்டமைப்பினை கடுமையாக நலிவடையச் செய்திருப்பதுடன் சமூகப் பொருளாதார நிலைமைகளை மோசமடைவதற்கும் பங்களித்துள்ளன. வேலையாட்களின் பாரிய வெளிநோக்கிய புலம்பெயர்வு வியாபார நடவடிக்கைகளை தடங்கலுறச் செய்ததுடன் அத்தகைய நிபுணர்களின் இழப்பு புதிய ஊழியர்களை தொடர்ச்சியாக பயிற்றுவிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியதுடன் கணிசமான நேரத்தினையும் மூலவளங்களையும் தேவைப்படுத்தியதுடன் குறுங்காலத்தில் இயலாற்றலினையும் வெளியீடுகளையும் இழப்பதற்கு இட்டுச்சென்றது. உண்மையில் சில ஆய்வுகளின்படி, புதிய ஊழிர்களை ஆட்சேர்ப்புச் செய்து பயிற்சியளிப்பதற்கு ஏற்படும் செலவு, புதிய ஊழியர்களை உத்தம மட்டத்திற்கு பயிற்சியளிக்கும் வரை வெளியீட்டில் ஏற்படும் இழப்பின் காரணமான செலவில் 20 சதவீதத்திற்கு மேல் இருக்கும்[8]. ஒட்டுமொத்த வயது முதிர்ந்த குடித்தொகையினரை விசேடமாகக் கவனத்தில் கொள்கையில், நாட்டின் உற்பத்தித்திறன் இழப்பின் காரணமாக, பாரிய தேர்ச்சிபெற்ற புலம்பெயர்ந்தவர்களின் நீண்ட காலத் தாக்கம் கணிசமானதாக இருக்கும். மேம்பட்ட வலையமைப்பு, தேர்ச்சி மாற்றல் மற்றும் பணவனுப்பல்கள் காரணமாக மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் ஏற்படும் சாதகமான கசிவுத் தாக்கமும் ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.[9] எனினும், இலங்கையின் பின்னணியில், செலவுகள் அத்தகைய நன்மைகளை விஞ்சிக் காணப்படக்கூடும். அண்மிய கடந்த காலத்தில் புலம்பெயர்ந்த பெரும்பாலான தனிப்பட்டவர்கள் பன்னாட்டு ரீதியாக தொழில்புரியக் கூடியவர்களாக இருப்பதுடன் உயர்ந்த தகைமை கொண்ட ஆளணியினராகவும் கணிசமான தொழில்முயற்சி இயலாற்றல் கொண்டவர்களாகவும் இருப்பதனால் சில சமயங்களில் அவர்களது புலம்பெயர்வு சில ஏற்றுமதி வியாபாரங்கள் உட்பட, முழு வியாபாரமும் வேறிடத்தில் அமைக்கப்படுவதற்கு அல்லது மூடப்படுவதற்கு காரணமாகலாம். இதன் விளைவாக அத்தகைய வெளிமுக புலம்பெயர்வுகளின் பொருளாதாரச் செலவு, தொடர்பான தனிப்பட்டவர்களின் நேரடிப் பங்களிப்பின் இழப்பினை விட பெருமளவு விஞ்சியதாகக் காணப்படும். அரச துறையில் தொழில்சார் நிபுணர்கள் கிடைக்காமையானது எதிர்காலத்தில் தேர்ச்சியின் இடைவெளியினை அதிகரிக்குமென்பதனால் இதன் மூலம் அத்தகைய நிறுவனங்கள் பலவற்றில் வினைத்திறனின் குறைந்த மட்டம் விரிவடையக்கூடும். வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பொறுப்பேற்பதற்காக சம்பளமற்ற விடுப்பினைப் பெறுவதற்கு அரச ஊழியர்களை அனுமதிப்பது போன்ற அரச துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட அண்மைய மாற்றங்கள் நிறுவனம் மற்றும் தேர்ச்சியின் அளவு மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் நிபுணத்துவம் என்பனவற்றினைப் பொறுத்து கணிசமானளவிற்கு வேறுபடக்கூடுமெனினும், இது, இப்பிரச்சனைகளை மேலும் பெரிதாகக்கூடும். இவ்வேலையாட்களின் பங்களிப்பு இழக்கப்படுவதன் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படும் செலவிற்குப் புறம்பாக, இலவசக் கல்வி மற்றும் நலக் கவனிப்பு என்பனவற்றை இலவசமாக வழங்குவதன் மீது செய்யப்பட்ட

8 Oxford Economics, (2014). The cost of brain drain: understanding the financial impact of staff turnover, February [Online] (Accessed 22 March 2023).

9 Docquier, F. and Rapoport, H., (2012). Globalization, brain drain, and development. Journal of Economic Literature, Vol. 50, No. 3.;
Gibson, J. and McKenzie, D., (2012). The economic consequences of 'brain drain' of the best and brightest: Microeconomic evidence from five countries. The Economic Journal, Vol. 122, No. 560.

1

முதலீட்டிலிருந்து போதியளவு பயன் கிடைக்காமையின் காரணமாக நாடு கணிசமான இழப்புக்களைத் தாங்க வேண்டியிருக்கிறது. பல துறைகளில் குறைபாடுகள் காணப்பட்ட போதும் அதன் பிரசைகளுக்கு பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குகின்ற உலகிலுள்ள நாடுகளின் சிறிய குழுமத்திடையே இலங்கையும் ஒன்றாகும். எனினும், இப்பாரிய முதலீட்டிலிருந்து நாடு முழுமையான நன்மைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்காமைக்கு மூளைசாலிகளின் வெளியேற்றமும் முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்குகின்றது. இப்பிரச்சனைகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட துறைகள், அவர்களது ஊழியர்களை தடுத்து நிறுத்துவதற்காக சம்பள உயர்வு, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வேலைச் சூழல், வரிச் சுமையைக் குறைப்பதற்கான காசல்லா நன்மைகள், பணவீக்கத்துடன் இணைக்கப்பட்ட கூலிகள் மற்றும் ஐ.அ.டொலருடன் இணைக்கப்பட்ட கூலிகள், அதேபோன்று இன்னும் பல விடயங்களை உள்ளடக்கிய பல நன்மைகளைக் கொண்ட குறுங்கால வழிமுறைகளைப் பின்பற்றின. அத்தகைய குறுங்கால வழிமுறைகள் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைக் கட்டுப்படுத்த உதவக்கூடும். எனினும், நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியை உருவாக்குவது உட்பட, வாழ்க்கைத்தரத்தினை பாதிக்கும் பொருளாதாரத்திலுள்ள நீண்ட கால அமைப்பியல் பலயீனங்களைச் சீர்செய்வதற்கு கடந்த ஆண்டில் விரைவடைந்த மூளைசாலிகளின் வெளியேற்றம் தொடர்பான முக்கிய நிகழ்வினை முடிவிற்குக் கொண்டு வருவது மிக இன்றியமையாததாகும். மேலும், பாரிய புலம்பெயர்விற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் அண்மைய காலத்தில் தேவையான துறைகளுக்கு தேர்ச்சிபெற்ற வெளிநாட்டு நிபுணர்களுக்காக நாட்டைத் திறந்துவிடும் சாத்தியம் பற்றி அரசாங்கம் கண்டறிதல் வேண்டும். அத்தகைய முயற்சிகளுடன் சேர்த்து, விசேட நன்மைகள் திட்டம், தகைமைபெற்ற ஆளணியினருக்காக ஆராய்ச்சி நிதியிடல் போன்ற இலக்கிடப்பட்ட வழிமுறைகள் புலம்பெயர்ந்த தொழில்சார் நிபுணர்கள் நாட்டிற்குத் திரும்புவதற்கு உந்துதலளிக்கும்.

அண்மைக் காலத்திலும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளின் போதும் பொருளாதாரத்திலுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளிடையே நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையும் காணப்படுகின்றமையானது ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்கும் நலன்புரிக்குமாக இத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவது முக்கியமானதொன்றாக வலியுறுத்தப்படுகின்றது. இலங்கையில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் 2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், 2020 மற்றும் 2021இல் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, அதனைத் தொடர்ந்து 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற தொடர்ச்சியாக இடம்பெற்ற மோசமான நிகழ்வுகளுடன் கடந்த பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட சவால்களையும் தாங்கிக் கொண்டிருக்கின்றன. பரந்தளவிலான துறைகளில் தொழிற்படுகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றைய பல காரணிகளுடன் நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையே குறைவடைந்த கேள்வி, உயர்வடைந்து செல்லும் பணவீக்கம் மற்றும் கூலிகள், தேய்வடைந்த செலாவணி வீதம், மூலப்பொருட்கள் கிடைக்காமை, மின்வலு மற்றும் ஏனைய பயன்பாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறு மற்றும் உயர்வடைந்த நிதியியல் செலவு போன்றவற்றினால் மோசமான முறையில் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக தேசிய வெளியீடு, தொழில்நிலை மற்றும் வாழ்வாதாரம் என்பன கடுமையாகப் பாதிக்கப்பட்டமையானது இவ்விடர்ப்பாடு மிகுந்த காலப்பகுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவும் விதத்தில் அவசரமான மீட்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினைத் தோற்றுவித்தது. காசுப்பாய்ச்சல் சவால்களை தற்காலிகமாக வெற்றி கொள்வதற்காக பெறப்பட்ட கடனின் மீது சலுகைகளை வழங்குதல், படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குதல் போன்ற பல வழிமுறைகள் இத்துறைக்கு வழங்கப்பட்டன. எனினும், சாதகமற்ற நிதியியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை எதிர்த்து நிற்பதற்கேற்ற விதத்தில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் இயலாற்றலையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் அதிகரிப்பதற்கு நீடித்த தீர்வுகள் இன்றியமையாதனவாகும். இதற்கமைய நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியிடல் பரிசீலனைகளுக்கு உதவுவதற்காக, இன்றியமையாத தேவைப்பாடாக அடையாளம் காணப்பட்ட கொடுகடன் உத்தரவாத நிறுவனமொன்றினை நிறுவுவது இறுதிக் கட்டத்தினை அடைந்திருப்பதுடன் அதனை விரைந்து நிறுவுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. கொடுகடன் உத்தரவாத நிறுவனம் தொழிற்படத் தொடங்கியதும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியிடல் தடைகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்து முன்னோக்கிப் பயணிக்கின்ற வேளையில், இணைந்து காணப்படும் கொடுகடன் இடர்நேர்வுகள் பகிரப்படும் என்பதனால் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்க ஊக்குவிக்கப்படும். மேலும், வங்கிகளும் கொடுகடன் நிறுவனங்களும் கூட அவற்றின் கடன்வழங்கல் தொழிற்பாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை முன்னுரிமைத் துறையாக அடையாளம் காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இது துறைக்கான நிதியிடலைக் கிடைக்கச் செய்யவும் உள்ளூர் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை பாரியளவு தொழில்முயற்சிகளாக மாறுவதற்கு உதவும் பொருட்டும் தொடர்பான அதிகாரசபைகள் ஏற்கனவேயுள்ள பன்னாட்டு தொடர்புகளையும் வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளின் அநுகூலங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், இதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடனும்

பன்னாட்டு வர்த்தகத்துடனும் ஒருங்கிணைக்கப்படுவதற்கும் வழி ஏற்படுத்தப்படுகிறது. அத்தகைய வாய்ப்புக்கள் உலகளாவிய தரத்தினை அடைவதற்கு அவர்களுக்கு உதவுவது மட்டுமன்றி நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் அதிகரிப்பதற்கும் பங்களிக்கின்றது. இம்முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கும் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கும் அதேவேளையில் வர்த்தக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான தேர்ச்சியும் இயலாற்றலும் கட்டியெழுப்பப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் இது உலக சந்தைக்கான வாசலைத் திறந்து விடுகின்றது. அத்துடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வளர்ச்சியைப் பேணும் பொருட்டு அரசாங்கமும் தொடர்பான அதிகாரசபைகளும் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அதிகார படிமுறை, சிவப்பு நாடா என்பனவற்றை தளர்த்துகின்ற வழிகளின் மூலம் தொழில்முயற்சியாண்மை இயலுமைப்படுத்துகின்ற சூழலையும் சுற்றாடலியலையும் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட முன்னெடுப்புக்கள் தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கட்டியெழுப்புவதற்கும் சாதகமற்ற சமூகப் பொருளாதார அபிவிருத்திகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்கும் பயன்மிக்க வியாபார தொழில்முயற்சிகளாகவும் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவுபவையாகவும் இருப்பதற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவக்கூடுகின்ற வேளையில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொதுப்படையான அணுகுமுறை உத்தமமற்றதாக இருக்கக்கூடும். ஆகவே, பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் உள்ளார்ந்த வளத்தினை வெளிப்படுத்துகின்றதும் பொருளாதாரத்திற்குச் சாதகமான முறையில் பங்களிக்கக் கூடியதுமானவற்றை ஆற்றலற்றதும் குறைந்த உற்பத்தித்திறன் கொண்டதுமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலிருந்து அடையாளம் கண்டு அங்கீகரிப்பதற்கான பொறிமுறையொன்று நடைமுறைக்கிடப்படல் வேண்டும். ஆற்றலற்றதொன்றிற்கு உதவுவது ஆரோக்கியமற்றதும் செலவுடையதுமாகும் என்பதனால் பயன்மிக்க நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை இலக்கிட்டு அவற்றிற்கு உதவியளிக்கப்படல் வேண்டும். மேலும், குறிப்பாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பில் மற்றைய விடயங்களுடன் கடன் தீராற்றலற்ற சட்டங்களை உருவாக்குவதும் அவற்றை மேலும் வலுப்படுத்துவதும் தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

கடந்த அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலைகளில் ஏற்பட்ட விகித சமமற்ற அதிகரிப்பினைப் பரிசீலனையில் கொள்கையில், உள்நாட்டு வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்நாட்டு விலைகளில் காணப்படும் கீழ் நோக்கிய போக்கின் நெகிழ்ச்சியற்றதன்மை கரிசனைக்குரியதொன்றாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. கடந்த ஆண்டு காலப்பகுதியில் அல்லது முன்னர் பல உணவு மற்றும் உணவல்லா விடயங்களின் விலைகள் பெற்றோலிய எண்ணெய், வாயு மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினால் மிக நெருக்கமாக தூண்டப்பட்டு கடுமையாக அதிகரித்தமைக்கு உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் உடனடியாகவும் கூடுதலானளவிற்கு முழுமையாகவும் ஊடுகடத்தப்பட்டமையும் உள்நாட்டு நாணய தேய்வும் காரணங்களாகின. எனினும், உலகளாவிய விலைகளில் செய்யப்பட்ட குறைப்புக்கள், ஏற்பாடுகளின் செலவில் குறைப்பு, தொழிற்பாட்டுச் செலவுகளில் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீதங்களின் அண்மைய முன்னேற்றங்களைப் பதிலிறுத்தும் விதத்தில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி விலைகளில் நியாயமான காலதாமதத்தின் பின்னர் கூட முழுமையாகப் பிரதிபலிக்கப்படவில்லை. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளில் நிலவுகின்ற நிச்சயமற்றதன்மை விலைகள் கீழ் நோக்கிக் குறைக்கப்படாமல் இருப்பதற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக இருக்கின்றவிடத்து பழைய பொருட்பட்டியலில் காணப்படும் உயர்ந்த விலைகள், முன்னரே இணங்கிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை, கொள்கைகளின் போக்கு தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட நம்பகத்தன்மை, சாதகமான அபிவிருத்திகளின் நிலைத்திருக்கும்தன்மை தொடர்பான கரிசனைகள் மற்றும் குறைந்த கேள்வியுடன் தொடர்புபட்ட வருமான இழப்புக்களின் ஒரு பகுதி ஈடுசெய்கின்றமை என்பனவற்றின் காரணமாக வணிகர்கள் விலைகளைச் சீராக்குவதற்கு தயக்கம் காட்டலாம். இருப்பினும் கூட, ஒட்டுமொத்த பொருளாதார நிலைமைகளில் உறுதித்தன்மை திரும்பியதன் முழுமையான நன்மைகள் அடையப்பட வேண்டுமாயின் இறக்குமதிகள் தொடர்பான பொருட்கள் மற்றும் பணிகளின் அதிகரித்த விலைகள் பொருளாதார உறுதிப்பாட்டுடன் சேர்த்து கீழ் நோக்கிச் சீராக்கப்படுதல் வேண்டும். விலைகளில் செய்யப்படும் பொருத்தமான அசைவுகளுடன் கேள்வி நிலைமைகள் வழமைக்கு திரும்புமென்பதனால் அத்தகைய சீராக்கங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை பயப்பதாக அமையும். அதேவேளை, உலகளாவிய விலை அபிவிருத்திகள் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுகின்ற முக்கிய மார்க்கமாக விளங்கும் வலு விலைகளின் சீராக்கம் இது தொடர்பில் இன்றியமையாததொரு காரணியாக விளங்குகிறது. தற்பொழுது இடம்பெறுகின்றவாறு உள்நாட்டு வலு விலைகளை உலகளாவிய விலைகளுடன் இணைப்பதும் வெளிப்படையான சீராக்கமும் உள்நாட்டு வலு விலைகள் ஊகிக்கக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும். இது, வியாபாரங்கள் தமது எதிர்காலச் செலவுகளை நம்பிக்கையுடன் திட்டமிடுதற்கும் ஒட்டுமொத்த விலை மட்டங்களில் உறுதிப்பாட்டினை ஏற்படுத்தவும் உதவுவதுடன் இதன் மூலம் எதிர்பாராத பணவீக்க அழுத்தங்களின் இடர்நேர்வுகள்

1

குறைக்கப்படுவதுடன் பணவீக்க எதிர்பார்ப்புக்களை முகாமைப்படுத்தவும் பங்களிக்கின்றது. பணவீக்க இலக்குகளை நிர்ணயிக்கவும் மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கை தீர்மானங்களுக்கு உதவவும் வலுவான பணவீக்க எறிவுகளைத் தயாரிப்பது மிக இன்றியமையாததாகும். இவ்வெறிவுகள் உலகளாவிய விலை அசைவுகளை எடுகோள்களாகக் கொண்டிருப்பதனால் உள்நாட்டு விலைகளில் உலகளாவிய விலைப் போக்குகள் சரியான முறையில் பிரதிபலிக்கப்படுவது கொள்கைத் தவறுகளை மட்டுப்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும். மேலேயுள்ளவற்றினைக் கருத்திற் கொண்டு, உள்நாட்டு வலு விலைச் சீராக்கங்களுடன் தொடர்புபட்ட அதிகாரசபைகள் உட்பட, தொடர்பான அதிகாரசபைகளும் நுகர்வோர் அலுவல்சார் அதிகாரசபை போன்ற ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளும் பொருட்களின் இறக்குமதி செய்யப்பட்ட விலைகள் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றவிடத்து கீழ் நோக்கிய விலைச் சீராக்கங்கள் நியாயமான முறையில் ஊடுகடத்தப்பட வேண்டும். அத்தகைய ஊடுகடத்தல்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு விரைந்த பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையுடன் சேர்ந்து வாழ்க்கைச் செலவினைக் குறைக்க உதவும்.

இலங்கைப் பிரசைகளின் நலன்புரி மீது ஆழமான பொருளாதார நெருக்கடிகளின் நீடித்த தாக்கங்கள் கணிசமானவையாக விளங்கி, மிகப் பாதிக்கப்படக்கூடிய குழுமங்களின் நலன்புரிகளை உறுதிப்படுத்துகின்ற கொள்கை உபாயங்கள் மீள உருவாக்கப்பட வேண்டியதன் அவசர தேவையை வலியுறுத்தின. பொருளாதார நெருக்கடிகளின் சுமை விகிதசமமற்ற விதத்தில் பாதித்திருக்கின்றது. பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையினரின் வாழ்க்கை நிலைமைகள் வாழ்வாதாரம் இழக்கப்பட்டமை, பணவீக்கம் விரைவுற்றமை மற்றும் ஏனைய விடயங்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட மார்க்கங்களினூடாக பெருமளவிற்கு மோசமடைந்தன. இலங்கைக்கான இற்றைப்படுத்தப்பட்ட தேசிய வறுமைக்கோடு 2022இல் ரூ.13,777 இற்கு உயர்வடைந்து 74 சதவீதம் கொண்ட வருடாந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இவ்வுயர்வானது அடிப்படை உணவு, ஆடை மற்றும் புகலிட வடிவங்களிலான இன்றியமையாதனவற்றின் செலவுகள் உயர்வடைந்து ஆளொருவருக்கான குறைந்தபட்ச மாதாந்தச் செலவின் அதிகரிப்புக்களைக் காட்டியது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் வீட்டுத்துறையினரின் உணவுப் பாதுகாப்பு அளவீட்டின்படி, 85 சதவீதமான குடித்தொகையினர் பணத்தினைக் கடன்படல், கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவிடலைக் குறைத்தல், சேமிப்புக்களைக் செலவிடல் அல்லது கொடுபட வேண்டிய படுகடன் கொடுப்பனவுகளைப் பிற்போடுதல் போன்ற வாழ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட செலவுகளைச் சமாளிக்கும் முறைகளினூடாகவே வாழ்வைக் கொண்டு நடத்துகின்றனர். தொழில் நிலையின் பாரிய பங்கு முறைசாரா துறையில் அமையப் பெற்றிருக்கின்ற வேளையில் குடித்தொகையினரில் 14.3 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற வேளையில் நெருக்கடியின் பாரிய தாக்கம் பாரதூரமானதாகவிருப்பதுடன் அது அநேக மக்களை வறுமைக்குள் தள்ளிவிடக் காரணமாகிறது. அத்துடன் தற்போதைய நெருக்கடி குடித்தொகை குழுவினரிடையே சமூகப் பொருளாதார சமமற்ற தன்மைகளை விரிவுபடுத்தி தலைமுறை ரீதியாக வறுமையினைத் தூண்டும். ஏனெனில் இது வீட்டுத் துறையினர் வறியவர்களாக மாறும் போது செல்வத்தின் திரட்சியினைக் குறைத்து கல்வி மற்றும் நலக்கவனிப்பு மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் இதன் விளைவாக, அவர்களது எதிர்கால வருமான உருவாக்கத்திற்கான இயலாற்றலையும் பாதித்து அதன் மூலம் நச்சுவட்டமொன்றை உருவாக்குகிறது. இப்பின்னணியில், குடித்தொகையிலுள்ள பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரைப் பாதுகாப்பதற்கு தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் கீழ் உதவுதொகை மட்டங்களை அதிகரித்தமையின் மூலம் வறுமை மட்டங்கள் மேலும் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்கும் அரசாங்கம் பல்வேறு பல வழிமுறைகளை எடுத்ததுடன் மற்றைய விடயங்களுடன் பன்னாட்டு நிதியிடல் முகவர்களின் உதவியுடன் காசு மற்றும் பண்டங்களை வழங்கிய போதும் அவற்றின் பலயீனமான இலக்கிடலின் காரணமாக அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் வினைத்திறன சவாலுக்குள்ளாகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து பாதிக்கப்படக்கூடிய சமூகத்தினரும் அதேபோன்று நாட்டின் வறுமையின் விளிம்பிலுள்ள குழுவினரும் தொடர்ந்தும் வருமான இழப்பின் பிடியிலிருக்கின்ற வேளையில் நம்பகமான இற்றைப்படுத்தப்பட்ட தரவுத்தளமின்மையினால் அரச உதவியினை தீவிரமாக நாடுகின்ற குடித்தொகையிலுள்ள ஆங்காங்கே காணப்படும் புதிய வறிய பிரிவினரை அடையாளம் காண்பதிலான தாமதம் மட்டுப்படுத்தப்பட்ட இறை நிதிகளினதும் வெளிநாட்டு ஆதரவுகளினதும் வினைத்திறனற்ற பகிர்வுக்கு வழிவகுத்தது. ஆகவே, உண்மையான நன்மைபெறுநர்களுக்கு உரிய நேரத்தில் நன்மைகள் போய்ச் சேர்வதனை உறுதிப்படுத்துவதற்கு, நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் தேவையான மக்களின் பதிவேடொன்றினை உருவாக்குவதற்காக ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளை விரைவுபடுத்துவது இன்றியமையாததாகும். அதேவேளை, நலன்புரி நன்மைகள் சபையினைத் தொழிற்படுத்தல் உட்பட ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பான சீர்திருத்தங்களைப் பூர்த்தி செய்தல், சமூகப் பதிவேடொன்றினை உருவாக்குவதற்கும் அதேபோன்று புதிய நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் தற்போது இடம்பெற்றுவரும் முயற்சிகளுடன் சேர்த்து தகைமைப் பிரமாணங்களை

அபிவிருத்தி செய்வது, பொருளாதார நெருக்கடி மற்றும் கொள்கை சீர்திருத்தங்களின் பாதிப்பிலிருந்து பாதிப்படக்கூடிய மக்களுக்கு உதவியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ் நலன்புரி நன்மைகள் முறைமை மற்றும் தகைமைப் பிரமாணங்களுக்கு 2023 மே அளவில் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வது போன்ற சீர்திருத்தங்களைத் தொழிற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் மீதான செலவிடலின் கீழ் மட்டத்தினை விரிவுபடுத்துவதற்கான அதன் திட்டம் என்பன நீண்ட கால அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்கு மிக முக்கியமானதாக இருக்கும். இச்சீர்திருத்தங்களைத் தொடரும் அதேவேளையில் பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் பல்துறைக் கொள்கை அணுகுமுறைகளை நடைமுறைக்கிடுவது வறுமையினை ஒழிப்பதற்கு முக்கியமானவையாக அமையும். இதன் மூலம் குடித்தொகையிலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களின் நன்மைகள் சமமாக கிடைப்பது உறுதிப்படுத்தப்படும். மேலும், பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் தொடர்பில் வீட்டுத்துறையினரிடம் அளவீடொன்றினை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடத்துவதற்கு அரசாங்கத்தினால் அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் வரவேற்கத்தக்கதாகவுள்ளதுடன் இது பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய தரவுத்தளங்களும் அளவீட்டில் கண்டறியப்படும் விடயங்களும் மேம்பட்ட தரம், போதுமான தன்மை மற்றும் சரியான நேரத் தகவல்களை என்பனவற்றினூடாக வறுமையை ஒழிப்பதன் மீதான கொள்கைத் தலையீடுகளின் காத்திரமான தன்மையினை இயலுமைப்படுத்தும். இதன் மூலம் எதிர்காலத்தில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலமைந்த கொள்கைத் தீர்மானங்கள் வலுப்படுத்தப்படுவதுடன் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலையமைப்பு பொறிமுறையினை மேம்படுத்துவதும் முக்கியமானதாகும். இதன் கீழ், இலத்திரனியல் வங்கித்தொழில் முறைமைகள், கொடுப்பனவு அட்டைகள் அதேபோன்று இலத்திரனியல் அடையாள தேர்வு என்பனவூடாக உதவுதொகை பகிர்ந்தளிப்பு பொறிமுறையினை இலத்திரனியல் மயப்படுத்துவது நலன்புரிக் கொடுப்பனவுகளின் வினைத்திறனற்ற தன்மையினதும் சாத்தியமான கசிவுகளையும் குறைப்பதற்கு உதவும். மேலும், அரசின் செலவின சிக்கனமயப்படுத்தல் முயற்சியின் பின்னணியில், செலவினத்தின் பயன்களை மேம்படுத்துவதற்கு, தற்போதுள்ள வறுமை ஒழிப்பு உபாயங்களை முழுமையாக மதிப்பீடு செய்வது அவசியமாகும். அத்தகைய மதிப்பீடொன்று அரசாங்கம் தனியார் துறை மற்றும் தொடர்பான பல்புடை அமைப்புக்களின் ஒத்துழைப்பினை நாட வேண்டிய துறைகளை அடையாளம் கண்டுகொள்ள உதவும். வறுமை ஒழிப்பு முயற்சிகள் வேளாண்மைத் துறையிலுள்ள பெறுமதி கூட்டல்களை மேம்படுத்தல், எதிர்கால வருமான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுவினருக்கான கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தல், தொழில் சந்தையில் பெண்களின் பங்கேற்பினை மேம்படுத்துவதுடன் கூடிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல் அதேபோன்று வருமான மட்டங்களில் படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கிசைவாக தற்போதுள்ள பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முறையியல் சார்ந்த கொள்கை கட்டமைப்பினைப் பின்பற்றுதல் போன்ற ஏனைய பல துறை தலையீடுகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

வலுவான பொருளாதார மீட்சியையும் வளர்ச்சியையும் தொடங்குவதற்கு நாட்டிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு, தேசிய கொள்கை திட்டமிடல் பொறிமுறை மற்றும் முழுமையான நடைமுறைப்படுத்தல் வலுப்படுத்தப்பட வேண்டும். நாட்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டினையும் மேம்படுத்துவதற்கான முக்கியமான இடர்ப்பாடு யாதெனில் நிலையான கொள்கை இல்லாமையேயாகும். இது, பொருளாதார மற்றும் நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் வியாபாரங்கள் எதிர்கால திட்டமிடல்களை மேற்கொள்வதிலும் தீங்குபயக்கிறது. அரசாங்கங்கள் மாறுவது முக்கியமான கொள்கை மாற்றங்களைக் கொண்டு வருவதனால் நிலையான தன்மையினைப் பேணுவதற்கு கொள்கை உருவாக்கத்தினை அரசியல் வட்டத்திலிருந்தும் முழுமையாக வேறுபடுத்துவது அவசியமாகும். தேசிய திட்டமிடல் அனைத்து மூலவளங்களும் உச்சமட்டத்தில பயன்படுத்தப்படுகின்ற வகையில் பொருளாதாரம் முழுவதிலுமுள்ள உற்பத்தித்திறன் மேம்பாடுகளின் மீது கவனம் செலுத்தல் வேண்டும். தேசிய திட்டமானது ஒவ்வொரு துறையிலுமுள்ள அரச துறை மற்றும் தனியார் துறை இரண்டிலுமுள்ள வல்லுநர்களினால் உருவாக்கப்படுவது அவசியமென்பதுடன் அது பின்பற்றப்படுவதற்கு முன் பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதற்கு, ஒருங்கிணைப்பான விளைவுகள் காணப்படும் போது உபாயக் கொள்கை தொகுதிகளை அபிவிருத்தி செய்வது முக்கியமானதாகும். உதாரணமாக, ஊட்டச்சத்து வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு உற்பத்திகள், நிலப் பயன்பாடு மற்றும் அத்துறைகளில் உச்சமட்ட பெறுபேறுகளை உறுதிப்படுத்தக்கூடிய காலநிலை மாற்றங்களின் தாக்கங்களை எதிர்த்து நிற்கக்கூடிய தன்மைகளை வலியுறுத்துகின்ற சூழல் கொள்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதனையும் அங்கீகரிக்கின்ற கொள்கை அத்துடன், ஏற்றுமதிக் கொள்கைகள் வெளிநாட்டு அலுவல்கள், முதலீட்டு ஊக்குவிப்பு, கைத்தொழில் மற்றும் வேளாண்மை கொள்கைகளுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். அதேவேளையில், கனிப்பொருள் பயன்பாட்டுக் கொள்கை கைத்தொழில் கொள்கையுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். ஏற்றுமதிகள், முதலீடுகள், தொழிலாளர்

1

பணவனுப்பல் மற்றும் வெளிநாட்டு நிதியிடல் என்பனவற்றிற்கு ஒரு சில இருபுடை பங்காளர்களில் அளவுக்கதிகமாக தங்கியிருப்பது பாதிக்கப்படும் தன்மை அதிகரிப்பதற்கு காரணமாகி வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு மற்றும் முக்கியமாக நாட்டின் இறையாண்மையின் மீது இது பெருமளவிற்கு எதிரொலிக்கக்கூடும். சுயாதீனமான கொள்கை கண்காணிப்பு பொறிமுறையொன்று நடைமுறையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விரும்பத்தக்க பெறுபேறுகளை அடையக்கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறும் தனிப்பட்டவர்கள் அதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அண்மைய ஆண்டுகளாக அரச துறை, வங்கித்தொழில் முறைமை மீது அதிகளவிற்கு தொடர்ச்சியாக தங்கியிருப்பது தனியார் துறை முதலீடுகள் இல்லாமல் போவதற்கு வழிவகுத்து, பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தி நிதியியல் முறைமையின் மீது இறுக்கங்களைத் தோற்றுவித்தது. மோசமான இறைச் செயலாற்றம் மற்றும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டு நிதியிடலை அணுகும் வழி இழக்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை நிதியிடலுக்கும் படுகடன் தீர்ப்பனவுகளுக்கும் உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னர் மத்திய வங்கியையும் அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளையும் அரசாங்கம் நாடுவது அவசியமாயிற்று. அதேவேளை, எரிபொருள் மற்றும் மின்வலுவின் கிரமமான சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட விலைத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதமும் வினைத்திறனற்ற தன்மையுடனும் தாழ்ந்த உற்பத்தித்திறனுடனும் தொடர்புபட்டுள்ள மரபுவழிப் பிரச்சனைகளும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை நிதியியல் ரீதியாக பலயீனப்படுத்தின. இது அரசின் கஜானாவின் மீதும் அதேபோன்று முழு வங்கித்தொழில் முறைமையிலும் சுமையினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, பல ஆண்டுகளாக அத்தகைய தொடர்ச்சியாகக் காணப்பட்ட நிதியிடல், அரச துறைக்கான வங்கித்தொழில் துறையின் கடன் வெளிப்படுத்துகை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு இடர்நேர்வினை ஏற்படுத்தியது. மேலும், அதிகரித்துவரும் அரச துறைக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகள் சந்தை வட்டி வீதங்களின் மீது மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்த வேளையில், அரச துறையின் மிகையான நிதியிடல் பணவீக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்கும். நாணய நிதியிடலினூடாக அரசாங்கத்தினால் பெறப்பட்ட கணிசமான நிதியும் உற்பத்தித்திறனிலும் வெளியீட்டிலும் எந்தவொரு ஈடான முன்னேற்றத்தினையும் காட்டாத கடன்பாடுகள் வடிவில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட நிதியும் விலைகளின் மீது மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவிக்கும். ஆகவே, இது நாணயக் கொள்கையின் காத்திரமானதன்மையை, குறிப்பாக நாணயக் கொள்கை நிலை இறுக்கமாக இருக்கும் நேரத்தில் பாதிக்கும். இவ்வத்தியாயத்தில் முன்னர் குறிப்பிடப்பட்டவாறு அண்மைய நிவாரண வழிமுறைகள் வங்கித்தொழில் முறைமையின் மீது அரச துறை தங்கியிருப்பதனைக் குறைக்கக்கூடும். அதேவேளை, அரச துறை நிதிகளை அதிகரிப்பதற்காகவும் மிகையான வங்கி நிதியிடலுக்கான தேவையினை குறைப்பதற்காகவும் மேலும் வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். செயலாற்றத்தினால் தூண்டப்படும் அரச துறையானது உற்பத்தித்திறனை அதிகரித்து நிதியியல் சாத்தியத்தன்மையினை உயர்வடையச் செய்வதன் மூலம் வங்கி நிதியிடலுக்கான தேவையினைக் குறைக்கிறது. அதேவேளை, மேம்பட்ட உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் நாட்டின் நிலையில் ஏற்படும் உயர்வினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமானது இருபுடை மற்றும் பல்புடை கடன்வழங்குநர்களிடமிருந்து குறைந்த செலவிலான நிதியிடலைப் பெற்றுக் கொள்வதில் தீவிரமாக ஈடுபடுதல் வேண்டும். இதன் மூலம் நிதியிடலுக்காக உள்நாட்டு வங்கித்தொழில் முறைமை மீது தங்கியிருப்பது குறைவடையும். அத்துடன், அரசாங்கத்திற்கு பல்புடை நிதியிடல் மீளத்தொடங்கும் போது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வேறு நிதியிடல் மூலங்களை, பெரும்பாலும், மூலதனம் மற்றும் செயற்றிட்ட அடிப்படையிலான நிதியிடல் மூலங்களைக் கண்டறிதல் வேண்டும். மாற்று ஏற்பாடாக, அரசாங்கம் இழப்புக்களை ஏற்படுத்துகின்ற, ஆனால், உபாயம்மிக்க அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை அரச - தனியார் பங்குடமை ஏற்பாடுகளினூடாக இலாபம் தரும் தொழில்துறைகளாக மாற்றுவது பற்றி பரிசீலித்தல் வேண்டும். இது தனியார் துறைக்கு முகாமைத்துவ நிபுணத்துவத்தினைக் கொண்டுவந்து அத்தகைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் உயர்வடையச் செய்யும். மேலும் அரச துறையில் காணப்படும் தேவையற்ற விரயத்தினையும் ஊழலையும் குறைப்பதும் தொடர்பான துறைகளில் அனுபவமும் நிபுணத்துவமும் கொண்ட தகைமையும் ஆற்றலும்மிக்க அலுவலர்களை நியமிப்பதும் அவசியமாகும். இவ்வழிமுறைகளின் பெறுபேறாக, உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையின் மீது தனியார் துறை தொடர்ச்சியாக தங்கியிருக்கும் தன்மை குறைந்து போகும் என்பதுடன் இதன் மூலம் வங்கித்தொழில் முறையில் அருமையாகக் காணப்படும் இந்நிதிகளை தனியார் துறையின் உற்பத்தியாக்க நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கான பரந்த வசதிகளையும் வாய்ப்பினையும் வழங்கும்.

அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கொள்கைத் தலையீடுகளின் காரணமாக இலங்கையில் உணவு வழங்கல் முறைமையில் அதிகரித்துவரும் பாதிக்கப்படும் தன்மையின் அண்மைய அனுபவங்கள், உள்நாட்டு வேளாண்மைத் துறையில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும்

நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் ஒருங்கிணைக்கப்பட்டதும் நிலையானதுமான கொள்கை அணுகுமுறைகளைக் கொண்டிருப்பது தொடர்பில் வலுவான கடப்பாடுகளுக்கான தேவையினை வலியுறுத்துகிறது. தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் உதவுதொகை நியதிகளில், குறிப்பாக வளமாக்கி உதவுதொகை, உத்தரவாத விலைகள், உயர் விளைச்சலைத்தரும் இனங்களின் விநியோகம் மற்றும் வேளாண் விரிவாக்கப் பணிகள் போன்ற இதன் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த பல தசாப்த காலமாகக் காணப்படும் விரிவான தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்பட்ட போதும் நாட்டின் வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறன் தொடர்ச்சியாக தேக்க நிலையில் காணப்பட்டதுடன் காலநிலை மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அதிர்வுகளினாலும் பாதிக்கப்படுகின்றது. வளமாக்கி உதவுதொகைகளுக்கான ஏற்பாடு வேளாண்மைத் துறையில் மிக முக்கியமான தலையீடாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன் இது நாட்டில் உயர்ந்த அரசியல் ரீதியில் உணர்வுபூர்வமான விடயமாகவும் மாறியிருக்கிறது. இதன் மூலம் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அத்தகைய கொள்கைகள் சரியான பெறுபேறுகளை விளைவிக்கின்றனவா என்பதனைக் கருத்திற் கொள்ளாது அத்தகைய கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டன. இதன்படி, இரசாயன வளமாக்கிகள் மிகையாகப் பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் சேதனப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதற்கும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதும் வினைத்திறன் மிக்கதுமான வளமாக்கி கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான வளர்ந்துவரும் தேவை காணப்படுகின்ற வேளையில் நாட்டின் இறக்குமதிச் செலவின் மீதான சுமை குறைக்கப்படுகிறது. இருப்பினும், 2021இல் இரசாயன வளமாக்கி இறக்குமதிகள் மீதான சடுதியான தடை நாட்டின் முக்கிய உணவு உற்பத்தியின் மீது தீங்கு பயக்கும் தாக்கத்தினை ஏற்படுத்தி 2022இல் பெரும்பாலும் உணவு நெருக்கடிகளுக்கு வழிவகுத்தது. இது வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை வறிதடைந்தமையின் காரணமாக உணவு இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமையுடன் மேலும் மோசமாயிற்று. இருப்பினும் கூட, வளமாக்கி தடை ஆறு மாதங்கள் நடைமுறையிலிருந்ததன் பின்னர், வேளாண்மையில் சேதனமல்லா வளமாக்கியின் பயன்பாட்டினைப் படிப்படியாக கட்டம் கட்டமாக குறைக்கும் தேவை அடையாளம் காணப்பட்டமையினால் வளமாக்கித் தடை இரத்துச் செய்யப்பட்டது. விலைக் கட்டுப்பாடு மீதான கொள்கைகள் உணவு ஒவ்வொருவரும் தாங்கிக் கொள்ளக்கூடியதும் அணுகத்தக்கதுமான விதத்தில் காணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப்பிடத்தக்க வகிபாகமொன்றினை ஆற்றக்கூடியதாக இருந்த போதும் 2022இல் காணப்பட்ட உணவுப் பற்றாக்குறைகளிற்கு மத்தியில் இலங்கையில் காணப்பட்ட விலை அழுத்தங்கள் ஆர்வலர்களிடையேயான இணைப்புக்கள் போதாமல் இருந்தமையினையும் விலை அழுத்தங்களையும் அதேபோன்று பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தோன்றிய உணவு வழங்கலின் உயர்வடைந்து செல்லும் செலவுக்கூறுகளையும் தவிர்ப்பதற்கு தாக்குபிடிக்கக்கூடிய தாங்கிருப்புக்கள் இல்லாமல் போனமையைப் பிரதிபலித்து அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாடுகள் உணவு விலைகளைத் தளர்த்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிகளையே காட்டின. வேளாண்மையாளர்களுக்கு உதவும் விதத்தில் உயர்ந்த விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 2022இன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் போதுமான நிதி இல்லாமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை வழங்கத் தவறிவிட்டது. மேலும், மனித நுகர்விற்கு அரிசி அதிகளவு கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் நெல்லை அல்லது அரிசியை விலங்குத்தீன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதன் மீதான தடை இறக்குமதி செய்யப்பட்ட விலங்குத் தீன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைத்தமையின் காரணமாக கோழி வளர்ப்புத் துறை மோசமான விளைவுகளைக் சந்தித்தது. இது, கோழிப் பண்ணை உற்பத்திகளுக்கான விலைகளில் ஏற்பட்ட மிகையான அதிகரிப்புக்களுக்கு பகுதியளவில் பங்களித்ததுடன் இதன் காரணமாக உணவின் தரமும் பாதிக்கப்பட்டது. இது நாட்டின் உணவுப் பாதுகாப்பின் முக்கிய அம்சமாக இருக்கிறது. பொதுமக்களுக்கு தாங்கக்கூடிய விலையில் கோழிப் பண்ணை உற்பத்திகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக உயர்ந்தபட்ச விலைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்திய போதும் சந்தையில் கோழிப் பண்ணை உற்பத்திகளுக்கான பற்றாக்குறை ஏற்பட்டமையானது கிடைப்பனவு தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவித்தது. வேளாண்மைத் துறைக்காக அவ்வப்போது செய்யப்படும் மற்றும் தனித்தனியான கொள்கை வகுப்பில் காணப்படும் தவறுகளின் பால் கவனத்தை ஈர்க்கும் விதத்தில், இலங்கையின் அண்மைய அனுபவங்கள் நடைமுறைக்கிடப்பட்ட வேளாண்மைக் கொள்கைகளில் பெரும்பாலானவை எதிர்விளைவுகளைக் கொண்டனவாக இருப்பதனைக் காட்டின. இலங்கை, உணவில் முழுமையாக தன்னிறைவடையாததாக இருக்கின்ற போதும் நாடு உணவுக் கிடைப்பனவு, விலையின் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை, அணுகக்கூடிய தன்மை மற்றும் உறுதிப்பாட்டு நியதிகளில் உணவுப் பாதுகாப்பு பிரச்சனைகளினால் அண்மைய தசாப்தங்களில் அச்சுறுத்தப்படவில்லை. 2021 - 2022 காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட அவ்வப்போதைய கொள்கைகளைத் தொடர்ந்து நெல் மற்றும் காய்கறிகளின் அறுவடையில் காணப்பட்ட தொடர்ச்சியான இழப்பு அல்லது குறைவு காரணமாக இலங்கை உணவுப் பாதுகாப்பின்மை நிலைமைகளை அனுபவித்ததுடன் இது இன்றுவரை குறைந்த அளவில் தொடர்ந்து வருகின்றது. இப்பிரச்சனைகளை வேளாண்மைச் சமூகத்தினரின் ஆலோசனையுடன் கட்டுப்படுத்துவது அவசியம் என்பதுடன் நாட்டின் உணவுத்

1

தேவைப்பாடுகளின் இன்றியமையாத முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு சாத்தியமானளவிற்கு விரைவாக தீர்க்கப்பட வேண்டும். வேளாண்மைச் சமூகத்தினருக்கு அரசாங்கத்தின் உத்தேச கொள்கைகள் பற்றி விளக்கமளிப்பது அவசியமாகவுள்ளதுடன் வேளாண்மை அணுகுமுறைகள் பற்றி பயிற்சியளிக்கப்படுதலும் வேண்டும். வேளாண்மைத் துறையில் காணப்படும் அபாயகரமான இந்நிலைமை அபிவிருத்திக்கு நிரந்தர வசதிப்படுத்தல்களை வழங்கும் விதத்திலும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்திலும் வேளாண்மையுடன் தொடர்பான அனைத்து அரச நிறுவனங்கள், தனியார் துறை ஆர்வலர்கள் மற்றும் வேளாண்மைத் துறை சார்ந்த வேளாண்மையாளர்களிடையே அதிகரித்த இணைப்புடன் வேளாண்மைத் துறைக்கான முழுமையானதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான உபாயத்திற்கான தேவையைக் காட்டுவதாகவுள்ளது. அத்தகைய பரந்த அடிப்படையிலான கொள்கை அணுகுமுறைகள் தாழ்ந்த வேளாண்மை உற்பத்தித்திறன் அறுவடைக்குப் பின்னரான உயர்ந்த இழப்புக்கள், உத்தம அளவிலும் குறைந்த வேளாண்மை நடைமுறைகள், தாழ்ந்த பெறுமதி கூட்டல்கள், விலைப் பிறழ்வுகள் மற்றும் வேளாண்மை உற்பத்திகளின் நலிவடைந்த சந்தைப்படுத்தல் என்பன தொடர்பான ஆழமாக வேரூன்றிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் இலக்கிடப்படுதல் வேண்டும். இதன் மூலம் வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலியிலுள்ள ஆர்வலர்களுக்கு ஆரோக்கியமான வருமான மட்டங்களை உருவாக்குவதற்கான இயலாற்றலையுடைய நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறையின் உருவாக்கத்தினை இயலுமைப்படுத்துகின்ற வேளையில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க சூழல் முறைமை முகாமைத்துவம் என்பனவும் உறுதிப்படுத்தப்படும்.

நீண்ட காலமாக காலந்தாழ்த்தப்பட்ட காரணிச் சந்தைச் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது நெருக்கடியை உடனடுத்த காலப்பகுதியில் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் வளர்ச்சியைப் பேணி வளர்ப்பதற்கும் இன்றியமையாததாகும். நாட்டின் காணி மற்றும் தொழிற்சந்தைகள் தொடர்ந்தும் சவால்களை எதிர்நோக்குவதுடன் கொள்கைகளின் நெகிழ்ச்சியற்ற தன்மை, அத்தகைய துறைகளில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் போதுமானதற்ற தன்மை என்பன உலகளாவிய சந்தையில் தோற்றம்பெற்ற கணிசமான வாய்ப்புக்களை நாடு பயன்படுத்திக் கொள்ள தடையாக விளங்குவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சுமுகமான பாய்ச்சலையும் தடைசெய்கின்றன. தொழிற்சந்தையில் தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் ஊழியர்களைப் பாதுகாக்கும் நாட்டத்தினைக் கொண்டுள்ளன. இது தொழிற்படையின் பயன்பாடு மற்றும் உற்பத்தித்திறன் இரண்டின் மீதும் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். அதேவேளையில் அரச துறைத் தொழில் பங்களிப்பல்லா ஓய்வூதியத் திட்டத்துடன் கூடிய கவர்ச்சிகரமான ஓய்வூதிய நன்மைகளை வழங்குவது கூடியளவு உற்பத்தித்திறன் மிக்க துறைகள் மற்றும் நடவடிக்கைகளினை நோக்கி தொழிலாளர் நகர்வதனை ஊக்கமிழக்கச் செய்கிறது. மேலும், தொழிற்சந்தையில் நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய வேலை நேரங்கள் இல்லாமை மற்றும் இறுக்கமான வேலை மணித்தியாலங்கள், இயலாமை, பால்ரீதியான தடைகள் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊதியப் பொதிகள் இல்லாமை, தொழிற்படையில் காணப்படும் தேர்ச்சி இடைவெளி போன்ற தொழிற்சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்படும் இறுக்கமான தன்மைகள் கடந்த பல தசாப்தகாலமாக தொழில் பெறக்கூடிய ஆற்றலையும் தொழிலாளர் உற்பத்தித்திறனையும் பெருமளவிற்கு பாதித்து வருகின்றன. எனவே, இலங்கையின் பொருளாதாரம் மீளெழுச்சியுறுவதற்கு வசதியளிக்கும் பொருட்டு, பன்னாட்டு தொழில் நியமங்களுக்கு நிகரான விதத்தில் தொழிற்சந்தை சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் நவீனமயப்படுத்தி தாராளமயப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இக்கட்டமைப்பிற்குள், தொழிற்சந்தை தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கான முக்கிய கொள்கைகள் வேலையிலிருந்து நீக்குவதுடன் தொடர்புபட்ட செலவு, வேலையை முடிவுறுத்தல்/ இலகுவாக நிறுத்துதல், தற்காலிகமான தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், குறைந்தபட்ச மற்றும் சட்டபூர்வமான ஓய்வூதிய வயது தொடர்பில் நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குதல், வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலத்துடன் ஓய்வூதிய வயதை இணைத்தல் மற்றும் பெண்களை வேலைக்கமர்த்துவதனை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அதேநேரம், இவ்வொழுங்குவிதிகள் சமகாலத் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான விதத்தில் தொழில் வாய்ப்பிற்கான தோற்றம்பெற்று வருகின்ற துறைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டிய அதேவேளையில், தொழிலின்மை காப்புறுதித் திட்டங்கள், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த வேலை நேரங்கள், பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து மற்றும் நாளாந்தம் பராமரிப்பு/ பிள்ளைப் பராமரிப்பு இடங்கள் போன்ற தேவையான தூண்டுதல்கள் மூலம் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை அதிகரிப்பதற்கு தூண்டுலளிக்கப்படல் வேண்டும். மேலும், நெருக்கடி காலத்தில் மிகையான மனித மூலதனம் வெளியேறுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைகள் தேவையாக இருப்பதுடன், உலகளாவிய ரீதியில் திறமைசாலிகளைக் கவர்வதற்கும் நாட்டின் தொழிற்சந்தையில் காணப்படும் தேர்ச்சி இடைவெளிகளைக் குறைப்பதற்கும் தற்போதுள்ள குடிவரவு விதிகளை மீளாய்வு செய்வது அவசியமாகிறது. குடும்ப வாழ்க்கையிலும் புலம்பெயர்பவரின் நல விடயங்களிலும் எதிர்பாராத இடையூறுகளை விளைவிக்கும் பொருளாதாரச் சரிவின் தாக்கம் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு தொழிலாளர் புலம்பெயர்வின் மீது

கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது. காணிச் சந்தையும் பல்வேறுபட்ட காணிச் சட்டங்களினால் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு மட்டங்களிலான சொத்துரிமை முறைமை, பல்வேறுபட்ட காணிச் சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களின் பிரசன்னம், காணி முகாமைத்துவத்துடன் தொடர்பான முகவர்களினால் பின்பற்றப்படும் வெவ்வேறுபட்ட விதிகள், காணி உறுதியில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் செயற்றிட்டங்களுக்கு காணிகளைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலைப் பெறுவதில் காணப்படும் நீண்ட மற்றும் வினைத்திறனற்ற நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களின் காரணமாக நீண்ட தடைகளை எதிர்நோக்குகிறது. செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படாத/ உற்பத்தியாக்கமற்ற காரணிகளைப் பயன்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்கு கிடைக்கத்தக்க காணிகளை முகாமைப்படுத்துவதில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்படுகின்ற பல்வேறு நிறுவனங்களையும் தனியொரு நிறுவனத்தின் கீழ் ஒன்றுதிரட்டுவதற்கான மையப்படுத்தப்பட்ட முகவராண்மையை நிறுவுவதுடன் இணைந்து, காணிகளுக்காக ஏற்ற சட்ட நடைமுறைப்படுத்தல்களை ஒழுங்குமுறைப்படுத்துவது காணிச் சந்தையில் தற்போதுள்ள சிக்கல்களை இலகுபடுத்தப் பங்களிக்கும். மேலும், நாட்டில் முதலீடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு தெளிவானதும் மயக்கமற்றதுமான சொத்துடமையினை உறுதிப்படுத்துகின்ற மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தரவுத் தளமானது காணித் தரவுத் தளத்தினை அணுகுவதனை மேம்படுத்துவதன் மூலம் காணி ஒதுக்கீட்டுச் செய்முறையில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மைகளை தீர்க்கும். இது தொடர்பில் இலத்திரனியல்-காணிப் பதிவேட்டினை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முயற்சி வரவேற்கத்தக்கதொன்றாகக் காணப்படுவதுடன் இது வசதி, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க காணிப் பதிவு என்பனவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் அரச முகவர்கள், தனியார் துறை மற்றும் பொதுமக்கள் உட்பட தேவையான தரப்பினர்கள் காணித் தகவல்களையும் தொடர்பான பணிகளையும் விரைவாக அணுகுவதற்கான வசதியையும் வழங்குகிறது. மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய காணிப் பயன்பாட்டு கொள்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதும் காணி நிருவாக முறைமைகளை வலுப்படுத்துவதும் நாட்டில் காணிச் சந்தை காத்திரமான முறையில் தொழிற்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். ஆகவே, தொழில் மற்றும் காணிச் சந்தையில் காணப்படும் காலம் தாழ்த்தப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவது காரணிச் சந்தையில் ஒதுக்கு மற்றும் பயன்பாட்டு வினைத்திறன்களை அதிகரிக்கக்கூடும். இதன் மூலம் பொருளாதாரத்தின் தொழில்நிலை, முதலீடு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி வேகம் உத்வேகப்படுத்தப்படும்.

இலங்கை அதன் பொருளாதாரத்தினை டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு மாற்றுவதற்கான பெருமளவு உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கின்றதுடன் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியை வசதிப்படுத்துவதற்கு, டிஜிட்டல் யுகத்தின் நன்மைகளைத் திறந்து விடுவதுண்டு உலகளாவிய டிஜிட்டல் துறையின் அபிவிருத்திகளை விரைவாக வாங்கிக்கொள்வது இன்றியமையாததாகும். டிஜிட்டல் பொருளாதாரமானது, தொழில்நுட்பத்தினால் தூண்டப்படும் பொருளாதார மாதிரியொன்றினைப் பிரசன்னப்படுத்துகின்றவிடத்து, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றமை பரந்தளவு பொருளாதார வினைத்திறனை விளைவிப்பதுடன் அதிகரித்த இணைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை, பொதுமக்களுக்கான அதிகரித்த வசதி, மூலவளங்களை ஒதுக்குவதில் பெருமளவு வினைத்திறன், தரவுகளை அதேநேரத்திலேயே அணுகும் தன்மை என்பன சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைப் பதிலிறுப்புக்களையும் அபிவிருத்திகளை விரைவுபடுத்துவதனையும் இயலுமைப்படுத்தியது. இத்துறையில் பல உலகாளவிய கம்பனிகள் தொழிற்பாடுகளை நிறுவியுள்ளமை, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மைக்கான புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளமை என்பனவற்றின் காரணமாக இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரம் படிப்படியாக உயர்ந்து வருவது மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள், இ-அரச பணிகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு அபிவிருத்தியூடாக பின்டெக் என்பனவற்றின் பரந்த வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, டிஜிட்டல் தொழில்நுட்பவியல் பின்பற்றப்படுவதனை விரைவுபடுத்தியதுடன் அநேக வியாபாரங்களும் தனிப்பட்டவர்களும் தொழில் மற்றும் தொடர்பூட்டலுக்காக இணையவழித் தளத்தினை நாடினர். மேலும், இ-அரச பணிகள் மக்கள் ஈடுபாடுகளை சிறந்த முறையில் இலகுபடுத்தியிருப்பதுடன் வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் அதிகரித்த வேளையில், பின்டெக் நிதியியல் பணிகளின் புத்தாக்கத்திற்கும் நிதியியல் உள்ளடக்க வசதிகளை மேம்படுத்துவதற்குமான வாய்ப்புக்களை வழங்கியது. அதேவேளை, நாடு முழுவதிலுமுள்ள பின்தங்கிய சமூகத்தினருக்கு தாங்கக்கூடிய விதத்தில் இணையத்தள இணைப்புக்களையும் டிஜிட்டல் கல்வி அறிவு பயற்சியையும் வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட இலங்கையின் டிஜிட்டல் வசதிக்குட்படுத்தல் பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களுடன் படிப்படியாக நிலைமாற்றத்தினை எடுத்துக்காட்டியது. டிஜிட்டல் அரசாங்கம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பணிகள் ஆகிய மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் முன்முயற்சியான தேசிய டிஜிட்டல் நிலைமாற்ற உபாயம் (2021 - 2024) இது தொடர்பில் வரவேற்கத்தக்கதொரு விடயமாகக் காணப்படுகிறது. அதேவேளை, 2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தனியாள் தரவுப் பாதுகாப்புச்

1

சட்டம், 2023 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்கள் என்பன டிஜிட்டல் பரிமாற்றத்தின் இன்றியமையாத கூறுகளாக விளங்குகின்றன. பொருளாதாரத்தினை டிஜிட்டல் மயப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றத்தினை அடைந்திருக்கின்ற போதும் நாடு டிஜிட்டல் மாற்றங்களுக்குட்படுவது, இணையத்தள தாங்கிக் கொள்ளும் தன்மை, இணையத்தள செலவின் தரம், இ-அரசாங்கம். இ-பாதுகாப்பு மற்றும் இ-வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்வின் டிஜிட்டல் தரச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 2022இல் 117 நாடுகளில் இலங்கை 89 இடத்தில் தரமிடப்பட்டதன் மூலம் அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்திலேயே இது இன்னமும் காணப்படுவதனைப் பிரதிபலிக்கின்றது. டிஜிட்டல் மயப்படுத்தல் உத்வேகத்தனை ஒன்றுதிரட்டுவதற்கு பல துறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்கு கணிசமான இடமிருப்பதனால் வெற்றி கொள்ளப்பட வேண்டிய சவால்கள் இன்னமும் இருக்கின்றன. இதன்படி, இலங்கை டிஜிட்டல் உட்கட்டமைப்பில் முதலீடுகளைச் செய்தல், டிஜிட்டல் ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கும் பொருட்டு டிஜிட்டல் அறிவினையும் தேர்ச்சி அபிவிருத்தியையும் மேம்படுத்தல், புத்தாக்கங்களை ஊக்குவிக்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலைக்கு ஆதரவளிக்கும் தன்மையினை உருவாக்குதல், தொழில்நுட்பவியல் மாற்றல்களையும் வெளிநாட்டு முதலீடுகளையும் ஊக்குவித்தல் போன்ற முன்னேற்றத்தினை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்தல் வேண்டும். டிஜிட்டல் மயப்படுத்தலானது இலங்கை அதன் பொருளாதாரத்தில் பாதுகாப்பு வலையமைப்பின் கீழ் வறிய மக்களை தெரிவு செய்வதிலுள்ள குறைபாடு வரி நிருவாகம் சவால்கள் மற்றும் கண்காணிப்பிலுள்ள நிரம்பல் மார்க்கங்களில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மை, சந்தைப்படுத்தலுக்கான தடைகள், அரசாங்க துறைக்குள் காணப்படும் இணைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைப் பிரச்சனைகள் போன்ற அமைப்பியல் தடைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பொன்றினை வழங்குகின்ற வேளையில், பொருளாதாரத்தின் மனித மூலதனத்தில் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுக்கான அநேக வாய்ப்புக்களை உருவாக்குகிறது. மேலும், டிஜிட்டல் மயப்படுத்தல் அணுகுவதற்கான தன்மையினை அதிகரிப்பதுடன் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிக்குள் ஒருங்கிணைக்கப்படுவதற்கான வசதிப்படுத்தல்களையும், இறுதியாக கணிசமான சந்தை வாய்ப்புக்களை நாடு பெற்றுக்கொள்வதற்கான இயலாற்றலையும் எதிர்காலத்தில் பொருளாதார மீட்சியை தூண்டுவதையும் உயர்த்துகின்றது. அரசாங்கம் டிஜிட்டல் உருவாக்கத்தினைத் தூண்டுகின்ற போதும் தனியார் துறை டிஜிட்டல் அபிவிருத்தியில் கணிசமானளவு. பொறுப்புக்களைக் கொண்டிருக்கிறது. இது தொழில்நுட்வியல் பரிணாம வளர்ச்சியுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் சமூகத்தில் டிஜிட்டல் பயன்பாட்டினைப் பரந்தளவிற்கு ஊக்குவிக்கும் விதத்தில் பல்வேறு மட்டங்களிலும் காணப்படும் டிஜிட்டல் ஏற்றத்தாழ்வினை நிவர்த்திசெய்யும் நோக்குடனான முதலீடுகள், புத்தாக்கம், தொழில்நுட்பவியல் மாற்றல்கள் மற்றும் மனித மூலதன அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்குகிறது. இதன்படி, அரசாங்கம், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், சட்ட அதிகாரிகள் மற்றும் தனியார் துறையின் உள்ளிட்ட அனைத்துப் ஆர்வலர்களிடையேயுமான தீவிரமான பங்களிப்புடன் பன்முகத்தன்மை கொண்டதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான நிலையான அணுகுமுறையொன்று பாதுகாப்பானதும் நம்பகமானதுமான டிஜிட்டல் முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு மிக அவசியமாகும். இது தற்போது காணப்படும் டிஜிட்டல் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் பொருளாதார நடவடிக்கைகளின் ஏனைய கொத்தணிகளுக்கும் சமகாலத்தில் சாதகமான கசிவுத் தாக்கங்கள் உருவாக்குகின்றது. சைபர் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றுவதற்கான அவசியம் காணப்படுவதுடன் இது பரந்தளவு நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் கட்டமைப்பதற்கும் உதவும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அயராத முயற்சியும் உறுதித்தன்மைக்கும் வளர்ச்சிக்குமான உபாயப்படுத்தல்களும் இன்றியமையாதனவெனினும் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு சுற்றாடலைப் பேணுவதும் இன்றியமையாததாகும். நீண்ட காலமாகக் காணப்படும் காடழிப்பு, மனித - யானை மோதல், சட்டத்திற்கு மாறான சுரங்கமகழ்தல், ஒழுங்கமைக்கப்படாத கழிவுகளைக் கொட்டுதல், காபன் வெளியேற்றம் மற்றும் காட்டு விலங்குகளினால் ஏற்படும் பயிர் இழப்புக்கள் மற்றும் வானிலை இடையூறுகள் போன்ற சுற்றாடல் பிரச்சனைகள் அநேக சமூக - பொருளாதார எதிர்க்கணிய விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. அண்மைய தசாப்தங்களில் இலங்கை கணிசமான வெப்ப உயர்வினைக் கொண்டுள்ள வேளையில் வருடாந்தம் கடுமையானதும் தொடர்ச்சியானதுமான வரட்சி நாட்களையும் அதிகளவிற்கு அனுபவித்து வருவதனை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. பல பன்னாட்டு ஆய்வுகள் காலநிலை மாற்றங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளிலொன்றாக இலங்கை இருப்பதனை அடையாளம் கண்டுள்ளன. கடந்த இரண்டு தசாப்தங்களாக பொருளாதாரமானது வெள்ளம், வரட்சி, ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மாதிரிகள், வெப்ப அலை, மண்சரிவு மற்றும் கிருமித்தொற்று போன்ற காலநிலையுடன் தொடர்பான பிரச்சனைகளினால் குறிப்பிடத்தக்களவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உயர்வடைந்துவரும் வெப்பமும் சமுத்திரம் அமிலமாவதும் பொதுமக்களின் பிரதான புரதச்சத்து மூலமாகவும் அதேவேளையில் ஏற்றுமதி வருமானங்களையும் உழைக்கின்ற மீனின் கிடைப்பனவினைப் பாதித்துள்ளன. உணவு வழங்கல் இழப்பு மறுபுரத்தில் பணவீக்கம், கிராமிய

வேளாண் சமூகத்தினரின் தாழ்ந்த நலன்புரி என்பனவற்றிற்கு வழிவகுப்பதுடன் உணவு இறக்குமதிக்கு பயன்படுத்தும் வெளிநாட்டு நாணயத்தினை அருந்தல் மற்றும் வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருமானத்தினையும் இழத்தல் போன்றவற்றிற்கும் இட்டுச் செல்கின்றது. இலங்கை அதிகளவிற்கு நீர்மின்வலுவில் தங்கியிருப்பதனையும் (2022இல் 33.7 சதவீதம்) மழைவீழ்ச்சி போக்கில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களையும் பரிசீலனையில் கொள்கையில் வலு உருவாக்கத்தின் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கம் கடுமையானதாகவுள்ளது. இலங்கையின் விடாப்பிடியான வெளிநாட்டு நாணயக் பற்றாக்குறை மற்றும் வலுப் பாதுகாப்பின்மை என்பனவற்றை கவனத்தில் கொள்கையில், உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்வடையும் போது இப்பிரச்சனை கடுமையாகிறது. மேலும், வெளிநாட்டு நாணய பற்றாக்குறையின் காரணமாக மின்வலு உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் எண்ணெய்யின் பங்கினை அதிகரிக்க முடியாமல் இருப்பதன் காரணமாக வருடாந்தம் வலு உருவாக்கத்திற்காக 2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கும் கூடுதலான நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகின்றது. மோசமான காலநிலை, இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சுற்றாடல் மாசுபடுதல் என்பன இலங்கை துரதிஷ்ட வசமாக பெருமளவிற்கு தங்கியிருக்கும் சுற்றுலா மீது எதிர்க்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. அரசாங்கமும் மத்திய வங்கியும் தாமதத்துடன், சூழல் பாதுகாப்பிற்கான முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து சூழலுக்கு ஏற்படும் மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன் சூழல் பாதுகாப்பு ஆதரவு நடவடிக்கைகளுக்கான நேரடி நிதிப் பாய்ச்சல்களையும் வழங்கின. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி வழிகாட்டல் மற்றும் வகைப்படுத்தலை உருவாக்குவதற்காக மத்திய வங்கி உலக வங்கியின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பணியாற்றியது. காலநிலை சுபீட்சத் திட்டமொன்று அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டது. சூழலின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்கு முதலீடுகளைச் செய்வதற்கு நாட்டின் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதும் அவசியமாகும். காலநிலை, வளிமண்டலம் வெப்பமடைதல், காடுகளைப் பாதுகாத்தல், வன ஜீவராசிகள், கனிப்பொருள் மூலவளங்கள், மாசடைதல் போன்ற அனைத்துச் சூழல் அம்சங்களையும் உள்ளடக்கிய சூழல் பற்றிய பரந்தளவிலான மையப்படுத்தப்பட்ட

காலக்கிரமமான அறிக்கையிடலொன்று அடையாளம் காணப்பட்ட திகாரசபையொன்றினை பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யப்படுவது அவசியமாகும். இது, சூழல் பற்றிய கரிசனைகள் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்திக் கொள்ளவும் கொள்கை நடவடிக்கைகளைக் காத்திரமான முறையில் ஒருங்கிணைக்கவும் உதவும். புதுப்பிக்கத்தக்க வலு, நீர் முகாமைத்துவம், கழிவு முகாமைத்துவம் மற்றும் பல விடயங்கள் போன்ற துறைகள் மீது நேர்க்கணியமான கசிவுத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சூழல் நட்புறவுச் செயற்றிட்டங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பில் வெளிநாட்டு முதலீடுகளையும் கொடைகளையும் கவர்தல் வேண்டும். நீடித்துநிலைத்திருக்கக் கூடியதும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்காக பசுமை மற்றும் நீல செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கு உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். சுற்றாடல் பாதுகாப்பின் மனவுணர்வுகளை எடுத்துக்காட்டுவது பல்புடை, இருபுடை மற்றும் பொறுப்புமிக்க தனியார் துறை கொடைவழங்குநர்களிடமிருந்து பல சலுகை நிதியிடல்களுக்கான தெரிவுகளை திறந்துவிடும். இது, படுகடனின் நிலைபேறான தன்மையை மீண்டும் அடைந்து கொள்வதற்கான தற்போதைய முயற்சிகளுக்கு வலுச் சேர்ப்பதாக அமையும். நீண்ட காலத்தில் சுற்றாடல் பற்றிய பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரிப்பதற்காக சூழலுக்கேற்பட்ட சேதத்திற்கான சீராக்கங்களைச் செய்வதனால் கணிக்கப்படுகின்ற மொ.உ.உற்பத்தியான பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றிற்கான தேவை கண்டறியப்படல் வேண்டும்.

தற்பொழுது இடம்பெற்று வருகின்ற படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்ற வேளையில், வளர்ச்சியின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீட்சி பொருளாதாரத்தின் முக்கிய துறையில் மிகத் தேவையான சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்வதிலேயே தங்கியிருக்கிறது. மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டின் வளர்ச்சி வாய்ப்பின் மீது படுகடன் மறுசீரமைப்பின் சாத்தியமான தாக்கம் பற்றிய சான்றுகள் கலப்பானதாகக் காணப்படுகின்றன. படுகடன் மறுசீரமைப்புச் செய்முறை முதலீட்டாளர் மற்றும் வியாபாரங்களின் நம்பிக்கை மோசமடைகின்ற தன்மை, வர்த்தகக் கடன்களை போதுமானளவிற்கு அணுகமுடியாமை, குறைவடைந்த நாட்டிற்கான தரமிடலுடன் இணைந்த உயர்ந்த கடன்பாட்டுச் செலவுகள் மற்றும் குறைவடைந்த அரசாங்க செலவினம் போன்ற எதிர்க்கணியமான பொருளாதார தாக்கங்களுடன் இணைந்து காணப்படுகிறது. எனினும், படுகடன் மறுசீரமைப்பு நடுத்தர காலத்தில் அரச கடன்பாடுகள் குறைவடைவதற்கு உதவும் என்பதுடன் தனியார் துறை முதலீடுகளுக்கான கொடுகடன் கிடைப்பனவினையும் அதிகரிக்கும். இது சாதகமான வளர்ச்சிக்கான தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். பொருளாதார வளர்ச்சி நாடு அதன் படுகடன் கடப்பாடுகளைச் செலுத்துவதற்கான இயலாற்றலில் தாக்கம் செலுத்துமென்பதால் படுகடனை மறுசீரமைப்பு காலத்திற்குப் பின்னைய காலத்திலும் மறுசீரமைப்பிற்கு பின்னரும் கூட பொருளாதார வளர்ச்சி முக்கிய காரணியாகத் தொடர்ந்தும் காணப்படும். நாடு அதன் பொருளாதார வளர்ச்சியை மீளெழுச்சிப்படுத்தத் தவறும்

1

போது அதன் படுகடன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதும் மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் இதேபோன்ற நிலைபேறற்ற பிரச்சினைகளுக்குள் மீண்டும் வீழ்ந்துவிடாமல் படுகடன் மீள்தோற்றப்பாட்டினை நன்மைகளை நிலைநிறுத்திக் கொள்வதும் கூடியளவிற்கு இடர்ப்பாடானதாக இருக்கும். படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரான காலப்பகுதியில் நாடொன்றின் பொருளாதாரச் செயலாற்றம் வளர்ச்சிக்கான உள்வாரி அல்லது வெளிவாரி தடைகள் காரணமாக ஏற்படக்கூடிய சாதகமற்ற பொருளாதார நிலைமைகள் கடன்வழங்கியோருடன் உடன்படிக்கைக்குவரும் போது அல்லது மீள்தோற்றபாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது இடர்ப்பாடானதாக இருக்குமிடத்து ஏற்படக்கூடிய நடைமுறைச் சவால்கள் ˙ குறிப்பாக வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதனை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் விரும்பத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறும் போது காணப்படும் போதுமானதற்ற கொள்கை வழிமுறைகள் மற்றும் படுகடன் நெருக்கடி காலப்பகுதியில் உயர்வாக இருக்கக்கூடிய சாத்தியத்தினைக் கொண்ட அரசியல் உறுதிப்பாடின்மை மற்றும் இதனைத் தொடர்ந்து முதலீட்டாளர் நம்பிக்கை குறைவடையக்கூடிய தன்மை என்பனவற்றின் காரணமாக அதன் உள்ளார்ந்த மட்டத்தினை விட வீழ்ச்சியடையக்கூடும். வேறுபட்ட அளவுகளுடனான வெற்றியுடன் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைத்தலின் பின்னர் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்தியிருப்பதற்கு பல நாடுகள் உதாரணமாகவுள்ளன. அயர்லாந்தில், 2010இல் அதன் படுகடன் மறுசீரமைப்பின் பின் வளர்ச்சி ஆதரவிற்காக அரசாங்கம் வரிக் குறைப்புக்கள், அதிகரித்த அரச செலவிடல் மற்றும் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைந்த அமைப்பியல் சீர்திருத்தங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பல வீச்சுக்களிலான கொள்கை வழிமுறைகளை நடைமறைப்படுத்தியது. இவ்வழிமுறைகள், உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியுடனும் தொழில்நுட்பத் துறையில் காணப்பட்ட மீளெழுச்சியுடனும் சேர்ந்து கேள்வியின் உத்வேகத்திற்கு உதவியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தன. மற்றொரு உதாரணம் ஈகுவடோர். இது, அதிகரித்த அரச செலவிடல், உட்கட்டமைப்பில் முதலீடு மற்றும் இலக்கிடப்பட்ட சமூக செலவிடல் நிகழ்ச்சித்திட்டம் உட்பட வளர்ச்சியை உத்வேகப்படுத்தும் நோக்குடன் தொடர்ச்சியாக பல கொள்கைகளை நடைமுறைப்படுத்திய நாடு அண்மைய ஆண்டுகளில் இறை பேணுவதில் சவால்களை எதிர்நோக்கிய போதிலும், இந்நடவடிக்கைகளை மறுசீரமைத்தலின் பின்னர் கேள்வியை தூண்டுவதற்கு உதவியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தன. பாரியளவிலான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக சவால்களை எதிர்நோக்கிய போதும் இலங்கை மீண்டும் வலுவுடன் பின்னடைவுகளிலிருந்து மீண்டுகொள்ளக்கூடிய குறிப்பிடத்தக்க இயலாற்றலை எடுத்துக்காட்டியது. இம்மீளெழுச்சிக்கு நாட்டின் வலுவான கலாச்சாரம் சமூக அமைப்பு, அதேபோன்று உயர் கல்வி மற்றும் தேர்ச்சியைக் கொண்ட தொழிற்படை என்பன காரணங்களாக அமைந்தன. இலங்கையின் மீளெழுச்சி அதன் மக்களினதும் நிறுவனங்களினதும் பலத்திற்கும் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும் ஒரு சான்றாக விளங்குவதுடன் படுகடன் மறுசீரமைப்பிற்குப் பின்னரான எதிர்கால வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வலுவான அடித்தளமொன்றினையும் வழங்குகிறது. இருப்பினும் விரைவான வளர்ச்சியை மீட்டுக் கொள்வதில் இன்னமும் பல சவால்கள் காணப்படுகின்றன. முதலாவது, இலங்கை குறிப்பிட்ட வகையிலான கடன்களை மீளச்செலுத்தாமை தொடர்பிலும் தற்பொழுது ஈடுபடுகின்ற மறுசீரமைப்பு செய்முறைகளிலும் முதலாவது அனுபவத்திற்கு முகம் கொடுத்துள்ளது. அனுபவம் போதியளவில் இல்லாமை படுகடன் மறுசீரமைப்பினை கவனமாக திட்டமிடுவதிலும் அதனை நிறைவேற்றுவதிலும் மீளெளுச்சி பெறுவதற்காக மறுசீரமைப்பிற்குப் பின்னரான உபாயங்களை உரிய நேரத்தில் வடிவமைப்பதிலும் சில குறைபாடுகள் காணப்படக்கூடும். மேலும், மற்றைய பல நாடுகளைப் போலன்றி, இலங்கையின் நிலைப்பாடு மிகச் சிக்கலானதாகக் காணப்படுகின்றது. அரச படுகடனின் நிலைபேறற்ற தன்மையும் அதன் விளைவாக முன்கூட்டிய கடன் செலுத்தத்தவறியமையுடன் இணைந்து சென்மதி நிலுவை நெருக்கடி உயர்ந்த பணவீக்கம், குறிப்பிடத்தக்களவிற்கு நலிவடைந்த நாணயம், சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் குழப்பநிலை உள்ளிட்ட பல உறுதியற்றதன்மையினையும் இடர்ப்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே, எடுக்கப்பட்டதும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுமான வழிமுறைகளும் இப்பன்முகத்தன்மை கொண்ட நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விடயங்களையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மீண்டும் அடைந்து கொள்வதன் மீது பெருமளவு கவனம் செலுத்துபவையாகவும் இருக்கின்றனவே ஒழிய வளர்ச்சி ஊக்குவிப்புக்களை இலக்காகக் கொண்டிருக்கவில்லை. எனவே, படுகடன் மறுசீரமைப்பு மீதான முன்னேற்றங்களுக்குச் சமாந்தரமாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆர்வலர்களின் உதவியுடன் வளர்ச்சியை அதிகரிக்கின்ற தொலைநோக்கு உபாயமொன்றினை அரசாங்கம் உருவாக்குவது இன்றியமையாதனவாகும். ப.நா. நிதியத்திடமிருந்தும் ஏனைய பல்புடை முகவர்களிடமிருந்தும் கிடைக்கும் நிதியியல் உதவிகள் இலங்கையில் நம்பிக்கையினை மீளக் கட்டியெழுப்புவதற்கான வலுவான அத்திவாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான சாதனங்களாக இருக்கும். தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசாங்கத்தினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் சீர்திருத்தங்களும் மறுசீரமைப்புக்களும் இத்துறையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் உயர்த்த உதவும் வேளையில் மறைமுகமாக தனியார் துறைக்கும் ஆதரவளிக்கின்றது. ஊழலுக்கெதிராகப் போராடுவதும் சட்டமும் ஒழுங்கும் பின்பற்றப்படுவதனை மேம்படுத்துவதும் இன்றியமையாத இயலுமைப்படுத்துநர்களாக

இருக்கின்றன. எது எனினும் இதற்கான கோரல் பரந்த சமூகத்திலிருந்து உருவாகுவது அவசியம் என்பதுடன் இது வியாபாரம் செய்யக்கூடிய சூழ்நிலையினை சந்தேகத்திற்கு இடமின்றி மேம்படுத்துமென்பதுடன் இதன் மூலம் முதலீட்டிற்கான சேரிடம் என்ற கவர்ச்சிகரமான பெயரையும் நாடு பெறும். வேளாண்மை, கைத்தொழில், பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் போன்ற துறைகள் மீதான தேசிய கொள்கைகளை உருவாக்குவதும் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதும் வளர்ச்சிக்கு சாதகமாக அமையும். படுகடன் மறுசீரமைப்பு இலங்கை பொருளாதாரம் மீண்டும் உறுதிப்பாட்டினைப் பெறுவதற்கு மிகத் தேவையான இடைவெளியினை ஐயத்திற்கு இடமின்றி வழங்கும். எனினும், இவ்விடைவெளியினை நிலைநிறுத்திக் கொள்வதும் இதன் பொருளாதார உள்ளார்ந்த வளத்தினை அடைந்து கொள்வதும் இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தின் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான திறவுகோலாக அமையும்.

இப்பின்னணியில், கடந்த பல ஆண்டு காலமாக எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சனைகளில் சிலவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே எடுக்கப்பட்ட வழிமுறைகள் அங்கிகரிக்கப்படுகின்ற அதேவேளையில் பொருளாதாரம் படிப்படியானதும் நீடித்துநிலைத்திருக்கக் கூடியதுமான பொருளாதார மீட்சியை அடைவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏனைய நீண்ட காலப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வெற்றி கொள்வதற்குமான உபாயங்களை வடிவமைப்பதற்கு அரசாங்கமும் தொடர்பான அதிகாரிகளும் கொள்கை வகுப்போரும் ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்தல் வேண்டும். ப.நா.நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடனான ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் இத்தருணத்தில் நாட்டினைப் பற்றிப் பிடித்திருக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் சர்வரோக நிவாரணியாக இருக்கமாட்டாது என்பதனை உணர்ந்து கொள்வது பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் மிக அவசியமாகும். நாடு அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடன் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைக்கிடுவதன் மூலம் வழிவழியாக வந்த இத்தவறான நடவடிக்கைகளை சீர்செய்து கொண்டு அதிலிருந்து மீண்டு கொள்வதற்கு இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வது நாட்டிற்கு அவசியமாகும் என்பதுடன் இதன் மூலம் மீண்டும் மீண்டும் விணையெடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். ஆகவே, தேவையான இறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கும் அதனைச் நடைமுறைப்படுத்துவதற்கும் நாட்டின் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தினை மேம்படுத்துவதற்கு விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை மீண்டும் அடைவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் அதேவேளையில், வெளிநாட்டு தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் பொதுப்படுகடனின் நிலைபேறான தன்மையினை மீண்டும் அடைந்து கொள்வதற்கும் அத்துடன் மிக முக்கியமாக ஊழலைக் குறைப்பதற்கும் அதேவேளையில் பொருத்தமான சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டங்களூடாகப் பாதிக்கப்படக்கூடிய குழுமத்தினருக்கு ஆதரவளிப்பதற்கும் அனைத்து ஆர்வலர்களின் விடாமுயற்சியும் ஊக்கமும் தேவையாகவுள்ளன. இச்செய்முறையில் பொதுமக்கள் உட்பட, எல்லா ஆர்வலர்களுக்கும் நாட்டிற்கு எது சிறந்தது என்பது பற்றி அறிவிப்பதுடன் மேலே குறிப்பிடப்பட்ட சீர்திருத்தத் தூணங்கள், குறுங்கால அரசியல் நன்மைகளுக்காக பயன்படுத்தப் படவில்லை என்பதனைக் கூட்டாக உறுதிப்படுத்தல் வேண்டும். இது, பொருளாதாரம் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பயணத்தில் உறுதியாக முன்னேறிச் செல்வதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் நாட்டின் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினையும் பாதுகாத்துக் கொள்ளும்.

2

தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை

2.1 பொதுநோக்கு


இலங்கையின் பொருளாதாரமானது 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, சுதந்திரத்திற்குப் பின்னைய பொருளாதாரத்தால் அனுபவிக்கப்பட்ட முன்னொருபோதுமில்லாத மோசமான பொருளாதார நெருக்கடிகளின் பின்னணியில் மிக ஆழமான சுருக்கத்தினைப் பதிவுசெய்த அதேவேளை முன்மதியான கொள்கைத் தலையீடு சாத்தியமான நெருக்கடி ஆழமடைதலைத் தடுத்தது. ஆரம்பத்தில் பொருளாதார நெருக்கடி சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையில் ஏற்பட்ட கடுமையான குறைப்புக்கு வகைகூறி நுகர்வுப்பொருட்கள், எரிபொருள் மற்றும் மின்சாரம் உட்பட வலு உற்பத்திகளின் வழங்கலுக்கு இடையூறுகளையும் மற்றும் பல்வேறு கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளில் பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தி பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. பணவீக்க அழுத்தத்தைத் தடுக்க கொள்கை வட்டி வீதங்களில் முன்னொருபோதுமில்லாத விதத்தில் சரிசெய்தல் மற்றும் நெருக்கடி மேலும் மோசமடைவதைத் தடுக்க அந்நியச் செலாவணி வெளியேறுவதைக் குறைக்க அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற கடுமையான ஆனால் அத்தியாவசியமான கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தை இச் சூழ்நிலை நிர்ப்பந்தித்தது. இந்த நடவடிக்கைகள் கேள்வி அழுத்தங்களை குறைப்பதற்கும், நிரம்பல் பக்க இடையூறுகளைக் குறைப்பதற்கும் பங்களித்து, தொழில்களுக்கு தேவையான எரிபொருள் மற்றும் பொருள் உள்ளீட்ட அத்தியாவசிய இறக்குமதிகள் கிடைப்பதை மேம்படுத்தி, பொருளாதாரத்தை படிப்படியாக ஸ்திரப்படுத்தியது. பொருளாதார அழுத்தங்களை பிரதிபலிக்கும் விதத்தில், கைத்தொழில், பணிகள் மற்றும் வேளாண்மை ஆகிய மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டில் சுருக்கமடைந்தது. தயாரிப்பு, கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவு கைத்தொழில் நடவடிக்கைகள் சுருக்கமடைய வழிவகுத்த வேளையில், குறிப்பாக, வதிவிடச் சொத்துடமை, காப்புறுதி மற்றும் நிதியியல் பணிகள் உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கங்கள் பணிகளின் நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்ததுடன் அது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலா வருகைகளில் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மீட்சியின் சாதகமான கசிவுகளை விஞ்சிக் காணப்பட்டது. எரிபொருள் வழங்கலில் காணப்பட்ட இடையூறுகளின் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளின் செயலாற்றம் குறைவடைந்தமை, விலங்குத்தீன் பற்றாக்குறையின் காரணமாக விலங்கு உற்பத்திகள் குறைவடைந்தமை, வளமாக்கிப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட அரிசி மற்றும் காய்கறிகளின் உற்பத்தி என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மழுங்கடித்துவிட்டன. முக்கிய தொழிலாளர் சந்தை குறிகாட்டிகளில் சாதகமான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும் இந் நிலைமை தொழிலாளர் உற்பத்தித்திறனில் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. செலவினப் பக்கத்தில், நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இரண்டும் 2022இல் விலை மட்டங்களில் ஏற்பட்ட உயர்வினால் தூண்டப்பட்டு நடைமுறை விலைகளில் கணிசமானளவிற்கு வளர்ச்சியடைந்தன. எனினும், நிலையான விலைகளில், முதலீடு மற்றும் நுகர்வுப் பொருட்கள் இரண்டும் சுருக்கமடைந்தமைக்கு கொள்வனவுச் சக்தி தேய்வடைந்தமை, உயர்வடைந்து செல்லும் பணவீக்கத்தின் கீழ் முதலீடுகள் நிறுத்தப்பட்டிருந்தமை மற்றும் உயர்ந்த கடன்பாட்டுச் செலவுகளும் தூண்டுதலாக அமைந்தன. மறுபுறத்தில், இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சியின் பயனாக பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியானது பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டு நடைமுறை விலைகளில் தேறிய வெளிநாட்டு கேள்வி முன்னேற்றம் கண்டது. இறக்குமதியில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வளர்ச்சிக்கு வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை குறைவடைந்தமை, அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ரூபாவின் கடுமையான தேய்வு மற்றும் குறிப்பிடத்தக்க இறுக்கமான நாணயக்கொள்கை என்பன காரணங்களாயமைந்தன.

2

2.2. மொத்த உள்நாட்டு உற்பத்தி,[1] மொத்த தேசிய வருமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

2022ஆம் ஆண்டுப்பகுதியில் நிலையான (2015), சந்தை விலைகளில் (இதனகத்துப் பின்னர் 'நிலையான விலைகள்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொ.உ.உற்பத்தி 2021இல் பதிவு செய்யப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வரலாற்றில் மிகஉயர்வான வீதமான 7.8 சதவீதத்தால் சுருக்கமடைந்த அதேவேளை மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான கொள்கை நடவடிக்கைகள் நாடு எதிர்கொண்டிருந்த பாதகமான பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க உதவியது. அதேவேளை நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி (இதனகத்துப் பின்னர் 'நடைமுறை விலைகள்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022இல் ரூ.24,147.7 பில்லியனாக (ஐ.அ.டொலர் 77.1 பில்லியன்) மதிப்பிடப்பட்டது. இது 2021இல் ரூபா நியதிகளில் பதிவுசெய்யப்பட்ட ரூ.17,600.2 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 88.5 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022இல் 327.2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாக இருந்தது. நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட

வரைபடம் 2.1
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது மொ.உ.உற்பத்தியை உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பிடுகிறது.

அட்டவணை 2.1
நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

பொருளாதார நடவடிக்கை	வளர்ச்சி (%)		வளர்ச்சிக்கான பங்களிப்பு (%)		மொ.உ.உ இன் சதவீதமாக (%)	
	2021 (இ)	2022	2021 (இ)	2022	2021 (இ)	2022
வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்	**0.9**	**- 4.6**	**0.1**	**- 0.3**	**7.3**	**7.5**
தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக)	2.8	- 21.6	0.00	- 0.04	0.2	0.1
அரிசியின் வளர்ச்சி	- 11.8	- 13.0	- 0.11	- 0.11	0.8	0.8
காய்கறிகளின் வளர்ச்சி	- 1.7	- 8.4	- 0.02	- 0.07	0.8	0.8
கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி	- 7.3	1.8	- 0.00	0.00	0.0	0.0
பழவகைகளின் வளர்ச்சி	- 10.8	0.5	- 0.07	0.00	0.6	0.6
எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு)	11.2	8.6	0.08	0.07	0.8	0.9
தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்)	8.5	- 15.9	0.05	- 0.09	0.6	0.5
ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை)	- 16.2	- 9.1	- 0.00	- 0.00	0.0	0.0
வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி	4.5	3.3	0.03	0.02	0.8	0.8
இறப்பரின் வளர்ச்சி	6.2	- 6.7	0.01	- 0.01	0.2	0.2
ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி	- 9.5	2.0	- 0.02	0.00	0.2	0.2
விலங்கு உற்பத்தி	8.2	- 12.9	0.06	- 0.09	0.7	0.7
தாவர இனவிருத்தி	30.8	8.3	0.00	0.00	0.0	0.0
வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள்	14.2	14.7	0.03	0.03	0.2	0.3
காடாக்கலும் குத்திகளும்	4.4	16.1	0.01	0.05	0.3	0.4
மீன்பிடித்தல்	1.5	- 10.5	0.02	- 0.11	1.1	1.0
கைத்தொழில்	**5.7**	**- 16.0**	**1.7**	**- 4.8**	**30.2**	**27.5**
சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்	1.4	- 31.0	0.03	- 0.68	2.2	1.7
தயாரிப்பு	7.4	- 12.6	1.23	- 2.18	17.2	16.3
மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்	4.9	- 5.9	0.07	- 0.09	1.4	1.5
நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	- 17.8	0.6	- 0.02	0.00	0.1	0.1
சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள்	- 3.3	3.9	- 0.01	0.01	0.2	0.2
கட்டடவாக்கம்	4.4	- 20.9	0.39	- 1.88	9.0	7.7
பணிகள்	**3.5**	**- 2.0**	**2.0**	**- 1.1**	**56.9**	**60.5**
மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள்	1.3	2.6	0.31	0.62	24.2	26.9
தகவல் மற்றும் தொடர்பூட்டல்	18.0	- 1.4	0.51	- 0.05	3.2	3.5
நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள்	7.5	- 15.4	0.76	- 1.63	10.5	9.7
தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள்	1.8	- 0.6	0.18	- 0.06	9.9	10.7
பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள்	2.2	- 0.3	0.20	- 0.03	9.0	9.7
அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை	**4.0**	**- 6.7**	**3.7**	**- 6.3**	**94.4**	**95.5**
உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரிகள்	- 3.6	- 27.1	- 0.2	- 1.5	5.6	4.5
சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை	**3.5**	**- 7.8**	**3.5**	**- 7.8**	**100.0**	**100.0**
வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம்	12.6	- 3.5				
சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்	**- 4.0**	**-8.1**				


(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


வரைபடம் 2.2

தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை வரைபடம் - 2022

இலங்கைப் பொருளாதாரமானது முன்னொருபோதுமில்லாத பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் கடுமையான சுருக்கத்தை பதிவுசெய்தது...



உற்பத்தி அணுகுமுறை




பணிகள் -2.0% ↑
முக்கிய செலுத்திகள்: உண்மைச் சொத்து மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளின் சுருக்கம்

கைத்தொழில் -16.0% ↑
முக்கிய செலுத்திகள்: தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கம்

வேளாண்மை -4.6% ↑
முக்கிய செலுத்திகள்: அரிசியின் வளர்ச்சியில் மற்றும் விலங்கு உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கம்

மானியங்களை கழித்த வரிகள் -27.1% ↑

செலவின அணுகுமுறை



தனியார் நுகர்வு 39.0% ↑
முக்கிய செலுத்திகள்: உணவு மற்றும் போக்குவரத்து மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு


அரசாங்க நுகர்வு 3.8% ↑
முக்கிய செலுத்திகள்: சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வி மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 28.4% ↑
முக்கிய செலுத்தி: மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

தேறிய ஏற்றுமதிகள் 34.1% ↓
முக்கிய செலுத்தி: உண்மைப் பெறுமதியில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு

- பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 74.1% ↑
- பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 41.2% ↑

வருமான அணுகுமுறை



- ஊழியர்களின் நட்டஈடு 32.6% ↑
- மொத்த தொழிற்பாட்டு மிகை 36.0% ↑
  - தேறிய தொழிற்பாட்டு மிகை 36.8% ↑
  - நிலையான மூலதனத்தின் நுகர்வு 31.2% ↑
- மொத்த கலப்பு வருமானம் 45.4% ↑
  - தேறிய கலப்பு வருமானம் 46.4% ↑
  - நிலையான மூலதனத்தின் நுகர்வு 23.0% ↑
- உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் 30.4% ↑

தொழிற்சந்தை குறிகாட்டிகள



தொழிற்படை

8.553 மில். (2021)
8.547 மில். (2022)



பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத குடித்தொகை

8.581 மில். (2021)
8.615 மில். (2022)



தொழிற்படை பங்கேற்பு வீதம்

49.9% (2021)
49.8% (2022)



தொழில்புரிவோர் குடித்தொகை

8.114 மில். (2021)
8.148 மில். (2022)



தொழிலின்மை வீதம்

5.1% (2021)
4.7% (2022)



வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கான புறப்பாடுகள்

122,264 (2021)
311,056 (2022)

2

இவ்வுயர்ந்த வளர்ச்சி மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.5 சதவீதத்திலிருந்து 2022இல் 48.8 சதவீதத்திற்கு அதிகரித்த திடீர் உயர்வினால் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த விலைமட்டங்களின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது.

உலகின் ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் மதிப்பிடப்படும் மொத்தத் தேசிய வருமானம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 12.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 36.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் உலகின் ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் தேய்வடைந்தமையால் மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சி நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினையே பிரதிபலித்தது.

தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2021இன் ரூ.794,376 (ஐ.அ.டொலர் 3,997) உடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,088,667 (ஐ.அ.டொலர் 3,474) இற்கு அதிகரித்தது. ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தூண்டுதலாக அமைந்த வேளையில் ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா கணிசமானளவிற்கு தேய்வடைந்தமையே காரணமாகும். அதேவேளை, தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் 2021இன் ரூ.776,523 (ஐ.அ.டொலர் 3,907) உடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,060,654 (ஐ.அ.டொலர் 3,388) இல் மதிப்பிடப்பட்டது.

2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

2022இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதிகூட்டல்களில் 43.6 சதவீத பங்கினை பிரதிநிதித்துவம் செய்கின்ற நிதியியல்லாத கூட்டுத்தாபனங்கள் துறை மிகப் பெரிய பங்களிப்பாளராக விளங்கியது. இதன்படி நிதியியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை முன்னைய ஆண்டின் 14.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 38.7 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான மிகப்பெரும் பங்களிப்பாளராக தொடர்ந்தும் இருந்த வேளையில் வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்பினை வழங்கின. அதேவேளை, வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் துறைகள் 2022இல் முறையே 42.5 சதவீதத்தினாலும் 7.1 சதவீதத்தினாலும் 52.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன.


2.4 உற்பத்தி, கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் பிரச்சனைகள்

வேளாண்மை

2022 காலப்பகுதியில் வளமாக்கி மற்றும் ஏனைய வேளாண் இரசாயனங்கள் உள்ளிட்ட வேளாண்மை உள்ளீடுகளின் கடுமையான பற்றாக்குறை, உற்பத்தி செலவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மற்றும் எரிபொருள் வழங்கலில் காணப்பட்ட இடையூறு என்பன ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளைப் பாதித்து குறைந்த செயலாற்றத்திற்கு வழிவகுத்தன. இதன்படி, பெறுமதிகூட்டல் நியதிகளில் 2022இல் வேளாண்மை நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு மொத்த மீன்பிடி, அரிசி மற்றும் விலங்கு உற்பத்தி வளர்ப்புக்களில் ஏற்பட்ட கணிசமான சுருக்கங்களே முக்கிய காரணமாகும். மேலும், தேயிலை, காய்கறிகள், ஏனைய தானியங்கள் மற்றும் இறப்பர் என்பனவற்றின் பயிர்ச்செய்கை இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும்கூட,

வரைபடம் 2.3

2022இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சிறப்புக்குறிப்பு 4
தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்[1]

அறிமுகம்

தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் என்பது பொருளாதாரமொன்றின் உண்மைத் துறை அபிவிருத்திகளை அவை பிரதிபலிப்பதனால் பொருளாதார பகுப்பாய்வுகளிலும் அதேபோன்று கொள்கை வகுப்பதிலும் இன்றியமையாத உள்ளீடுகளாகக் காணப்படுகின்றன. ஆகையினால், தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கிரமமான அடிப்படை ஆண்டு மாற்றும் செயன்முறைகளூடாக காலப்போக்கில் பொருளாதாரத்தில் மற்றும் பொருளாதாரமொன்றின் விலைக் கட்டமைப்புக்களில் மாற்றங்களுக்கு வசதியளிப்பது அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. உத்தியோகபூர்வ தொகுப்பாளர் எனும் வகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2010 கொண்ட முன்னைய அடிப்படை ஆண்டினை மாற்றீடு செய்து தேசிய கணக்குகள் மதிப்பீடுகளிற்கான அடிப்படை ஆண்டாக 2015ஆம் ஆண்டை இற்றைப்படுத்தியுள்ளது. இந்தத் தேவையை நிறைவேற்றுமுகமாக இலங்கையின் தேசிய கணக்குகளின் அடிப்படை ஆண்டு வரலாற்றில் அவ்வப்போது, அதாவது 1958, 1963, 1975, 1990, 2002, 2010 மற்றும் சமீபத்திய 2015 வரை திருத்தப்பட்டு வருகின்றன. இவ்வடிப்படை ஆண்டு மாற்ற செயன்முறையுடன் இணைந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தியுள்ளதுடன் தொகுப்பு முறையியல்களையும் மேம்படுத்தியுள்ளது.

உற்பத்தி வரம்பையும் பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தையும் விரிவுபடுத்தல்

பல பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கம் பிந்திய அடிப்படை ஆண்டு மாற்றச் செயன்முறையின் போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முக்கிய உள்ளடக்க விரிவுபடுத்தல்களிலொன்று தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கைத்தொழில் நடவடிக்கைகளினுள் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்பட்ட பணியின் சதவீதத்தினை கருத்திற்கொண்டு 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டம் தொடர்பிலான காணி மீட்புப் பணியினை உட்சேர்த்தலாகும். இது மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளிலும் 2014 - 2019 காலப்பகுதியின் போதான தொடர்புடைய மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களிலும் கணிசமான தளம்பல்களுக்கு வழிவகுத்துள்ளது. பல வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் அநேகமான உள்ளடக்கம் இவ் அடிப்படை மாற்றியமைக்கும் செயன்முறையின் கீழ் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ் உள்ளடக்க மேம்பாடுகளுடன் இணைந்து உற்பத்தி அணுகுமுறையுடன் தொடர்புடைய அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் 2010 தொடர்களின் கீழ் இருந்த 48 பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பதிலாக 49 பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் பரவல் செய்யப்பட்டுள்ளன. புதிய அடிப்படை ஆண்டின் கீழ் வெவ்வாறாக *தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மை ஆதரவு* நடவடிக்கைகளின் மதிப்பீட்டிற்கு இது சாட்டத்தக்கதாகவுள்ளது. வேளாண்மை நடவடிக்கைகளைக் கருத்தில்கொள்கையில், *பழவகைகளின் வளர்ச்சி, எண்ணெய்ப்பனை, பூக்கன்றுகளின் இனவிருத்தி, வீட்டுத்தேவைக்கென குற்றிகளின் உற்பத்தி மற்றும் வேளாண்மை துணை நடவடிக்கைகள்* போன்றவற்றின் உள்ளடக்க முறைமைகளில் மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பணிகள் நடவடிக்கைகள் தொடர்பில் *தகவல் தொழில்நுட்பம், களஞ்சியச் செயற்பாடுகள், ஒளிபரப்புச் செயற்பாடுகள், துரித அஞ்சல் சேவைகள் மற்றும் நிதியியல் பணிகள்* ஆகிய துறைகளின் உள்ளடக்கமும் இவ் அடிப்படையாண்டு மாற்றச் செயன்முறையின் போது விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

முறையியல் மேம்பாடுகளும் புதிய தரவு மூலங்களைப் பயன்படுத்தலும்

அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கும் செயன்முறையின் போது, *வேளாண்மைத் துணை நடவடிக்கைகள், காடாக்கல் மற்றும் மரம் வெட்டுதல், பூக்கும் தாவரங்களின் மரக்கன்று விருத்தி, தயாரித்தல், நிர்மாணம், மின்சார உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை, தங்குமிடச் சேவைகள், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகள்* போன்ற பல பொருளாதார செயற்பாடுகளை மதிப்பிடுவதில் பல்வேறு முறையியல் மேம்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன. மேலும், *பொருளாதார தொகைமதிப்பு 2013/14, தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் இயலச்செய்யப்பட்ட பணிகள் கணக்கெடுப்பு அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின்* பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுடன் தொடர்புபட்ட வருமானத் தகவல்கள் உள்ளடங்கலாக புதிய தரவு மூலங்களும் 2015 அடிப்படை ஆண்டின் கீழ் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மதிப்பீடுகளைத் தொகுப்பதில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய அடிப்படை ஆண்டின் கீழ் மாறாத விலைகளில் பல பொருளாதார நடவடிக்கைகளுக்கான மதிப்பீடுகளைத் தொகுக்கையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் "தனிச் சுருக்கி முறை" இற்குப் பதிலாக "இரட்டைச் சுருக்கி முறை" இனை பின்பற்றியது[2].

2015 அடிப்படை ஆண்டிற்கு தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை அடிப்படை ஆண்டு மாற்றம் செய்வதன் மூலமான முக்கிய விளைவுகள்

அடிப்படை ஆண்டுத் திருத்தமானது பொருளாதாரத்தின் அளவு (மொ.உ.உற்பத்திப் பெறுமதி), மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் மற்றும் பிரதான பொருளாதார நடவடிக்கைளின் பங்குகள்

அட்டவணை சி.கு. 4.1
அண்மைய மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படை ஆண்டு மாற்றங்களின் ஒப்பீடு

	2002	2010	2015
நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி (ரூபா. மில்லியன்)	1,636,036.6	6,413,668.5	11,566,987.4
அளவு மாறுதல் % (நடப்பு விலைகளில்)		14.4%	5.6%

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

1 "தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றிமைத்தல்" என்ற தலைப்பின் கீழ் வைப்பகத்தில் (மலர் 7, இதழ் 7 - 9) வெளியிடப்பட்ட இக்கட்டுரையின் விரிவான பதிப்பைத் தயாரிக்கையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களையும் ஆக்கபூர்வமான பின்னூட்டல்களையும் இலங்கை மத்திய வங்கி பாராட்டுகின்றது.


2 "தனிச் சுருக்கி முறையின்" கீழ் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு இரண்டும் ஒரேமாதிரியான விலைச் சுட்டெண்ணைப் பயன்படுத்தி சுருக்கம் செய்யப்பட்ட அதேவேளை "இரட்டை சுருக்கி முறை" இல் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு என்பன மாறா விலை மதிப்பீடுகளை மிகச்சரியாகத் தொகுப்பதற்கு இரு வேறுபட்ட விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்தி சுருக்கம் செய்யப்பட்டுள்ளன.

2

போன்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பிரதான பொருளாதார செயன்முறைகளின் பங்கு போன்ற பல பொருளாதாரக் குறிக்காட்டிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 2010 இனைக் கொண்ட முன்னயை அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடுகையில் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மாறாத விலைகளில் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் அளவு மாறுதலைக் குறித்துக் காட்டியது. இதற்கு, விலைகளில் படிப்படியான வளர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 விலைகளுடன் 2010 அடிப்படை ஆண்டு விலைகள் மாற்றீடு செய்யப்பட்டமை அதேபோன்று உள்ளடக்கம் மற்றும் முறையியல் மேம்பாடுகள் என்பன காரணமாக அமைந்தன. இதனைத் தொடர்ந்து, நேரொத்த மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களும் அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக் கருத்திட்டம்* தொடர்பிலான காணி மீட்புப் பணியினை சேர்த்தமை 2014 - 2019 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தி மட்டத்திலும் அதேபோன்று வளர்ச்சி வீதங்களிலும் கணிசமான மாறுதலுக்கு வகுத்துள்ளமை அட்டவணை சி.கு. 4.1 மற்றும் வரைபடம் சி.கு. 4.1 இலும் முன்னிலைப்படுத்தியுள்ள தரவுகளில் வெளிப்படுகிறது.


மேலும், வரைபடம் அடிப்படை ஆண்டுத் திருத்தத்துடன் இணைந்து அதன் முக்கிய கூறுகளிலிருந்து அதாவது வேளாண்மை, கைத்தொழில், பணிகள் மற்றும் பொருட்கள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகள் என்பவற்றிலிருந்து மொ.உ.உற்பத்திக்கான பங்களிப்பு மாற்றமடைந்துள்ளது. விசேடமாக, வரைபடம் சி.கு. 4.2 இல் காட்டப்பட்டவாறு, கைத்தொழில் நடவடிக்கைகளில் பங்கில் அதிகரிப்புடனும் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகளினதும் பங்கில் வீழ்ச்சியுடன் இது இடம்பெற்றது.

வரைபடம் சி.கு. 4.1
நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களின் ஒப்பீடு (2010 முதல் 2021 வரை)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 4.2
நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்புக்களின் ஒப்பீடு - 2015 மற்றும் 2021



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து, வரவசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் போன்ற மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளும் திருத்தப்பட்டுள்ளன. பொதுவாக, அடிப்படை ஆண்டை மாற்றும் செயன்முறையானது சிறப்பாக சான்று அடிப்படையிலமைந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஏற்கனவே காணப்படுகின்ற பொருளாதாரக் கட்டமைப்பின் பொருளாதாரப் புள்ளிவிபரங்களின் அதிகம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகுதியினை கொள்கை வகுப்பாளர்களுக்கும் வேறு ஆர்வலர்களுக்கும் வழங்குகின்றது. எவ்வாறாயினும், அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை கருதும் போது மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் மீது நீண்டகாலம் நிலைத்திருக்கும் நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற தாக்கத்திலிருந்து ஒருதடவை நிகழ்வுகளின் தாக்கத்தை வேறுபடுத்திப் புரிந்துகொள்வதும் அவற்றை பொருத்தமான விதத்தில் மதிப்பீடு செய்வதும் மிகவும் முக்கியமாகும்.

உசாத்துணைகள்


1. Department of Census and Statistics. Key Findings of Rebased GDP Estimates (Base year 2015). Available at: http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/2015/Reports/Key_findings.

2. Thilangani, U.K.T. and Liyanage, D.N. (2022), 'Rebasing of National Accounts Estimates to Base Year 2015', News Survey, vol. 42, no. 03, pp. 2-8, Available at: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/satahana/News_Survey_2022_03.pdf.

காடாக்கல் மற்றும் மரங்களைக் குற்றிகளாக்குதல், வேளாண்மை ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் எண்ணெய் பசை பழவர்க்கங்கள் (தெங்கு உட்பட), வாசனைத்திரவியங்கள் மற்றும் பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தது. எனினும், சாதகமானதொரு விடயமாக வேளாண்மை உள்ளீடுகள், எரிபொருள் என்பனவற்றின மேம்பட்ட கிடைப்பனவு மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின்[2] வேளாண்மைப் பிரிவு தொடர்பான உற்பத்தி மற்றும் கேள்வி துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.

2 வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூறுகளுக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னனி நிறுவனங்களின் பதிலிறுப்புகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

வரைபடம் 2.4
வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

வேளாண்மைத் துறையின் உற்பத்தியை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணானது[3] 2022இல் கணிசமான சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. ஒட்டுமொத்த வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண், 2021இன் 2.1 சதவீத ஆண்டுக்கு ஆண்டு அடிப்படை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 19.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இவ் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு நெல், தேயிலை, இறப்பர், மற்றும் விலங்கு வளர்ப்பு மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்கள் உள்ளடங்கலாக அநேகமான துணைச் சுட்டெண்கள் பங்களிப்புச்செய்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பழங்கள் துணைச் சுட்டெண்ணானது தெங்குத் துணைச் சுட்டெண்ணுடன் இணைந்து கணிசமான மேம்பாடொன்றைப் பதிவுசெய்தது.

3 2022இலிருந்து, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணானது இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணை மாற்றீடு செய்தது.

அட்டவணை 2.2
வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டென்
(2002 = 100) (அ)

விடயம்	2021	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2020/21	2021/22 (ஆ)
மொத்தச் சுட்டெண்	**199.1**	**160.4**	**2.1**	**-19.4**
தேயிலை	96.6	81.1	7.5	-16.0
இறப்பர்	84.9	78.3	-1.7	-7.8
தெங்கு	126.9	137.9	1.1	8.7
நெல்	180.1	118.6	0.6	-34.1
தானியங்கள்	1,473.9	838.1	50.1	-43.1
ஏனைய உணவுப் பயிர்கள்	179.7	162.1	17.2	-9.8
மரக்கறிகள்	200.4	185.5	-7.2	-7.4
பழங்கள்	180.0	322.4	-15.5	79.1
விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திகள்	180.1	175.2	3.5	-2.7
சிறு ஏற்றுமதிப் பயிர்கள்	193.0	188.5	4.7	-2.3

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) 2022 முதல், இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணால் பிரதியீடு செய்யப்படுகின்றது.
(ஆ) தற்காலிகமானது

நெல்

வளமாக்கிகள் பற்றாக்குறை உள்ளடங்கலாக கடுமையான நிரம்பல் பக்க இடையூறுகளுக்கு மத்தியில், நாட்டின் மொத்த நெல் உற்பத்தியானது 2022இல் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2017இலிருந்தான தாழ்வான வருடாந்த உற்பத்தியைப் பதிவுசெய்தது. 2021இன் பிற்பகுதியில் சேதன வளமாக்கிகளினதும் ஏனைய வேளாண் இரசாயனங்களினதும் இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்ட போதிலும், இவ் கட்டுப்பாட்டின் தொடர்ச்சியானது தேவையான வளமாக்கிகளை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு செலாவணி பற்றாக்குறையுடன் இணைந்து நாட்டில் கடுமையான வளமாக்கித் தட்டுப்பாட்டைத் தோற்றுவித்து, ஏனையவற்றிற்கு மத்தியில் நெல்த் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடையைத் தொடர்ந்து, 2022இல் வருடாந்த நெல் உற்பத்தியானது 3.4 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 34.1 சதவீத வீழ்ச்சியொன்றை பதிவுசெய்தது. இது மொத்த உற்பத்தியின் 57.0 சதவீதத்திற்கு வகைகூறும் 2021/2022 பெரும்போக காலத்தில் ஏற்பட்ட 36.9 சதவீத வீழ்ச்சியினதும் 2022 சிறு போக கால நெல் அறுவடையில் ஏற்பட்ட 30.0 சதவீத சரிவினதும் ஒன்றிணைந்த பெறுபேறாகக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப் பரப்பு 1,114,246 ஹெக்டேயர்களுக்கு 1.1 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த அதேவேளை 2022இல் சராசரி நெல் விளைச்சல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஹெக்டேயரொன்றிற்கு 4,571 கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் 3,045 கிலோகிராம்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் இப்பருவகாலங்களில் உள்ளீட்டு பற்றாக்குறை மற்றும் உற்பத்தித்திறன் மெதுவடைவு என்பவற்றின் தாக்கத்தை பிரதிபலித்தது. 2022இல் மொத்த நெல் உற்பத்தி 2.1 மில்லியன் மெட்ரிக் தொன்களைக் கொண்ட அரிசிக்குச் சமமானதாகவும் 11 மாதங்களுக்கு வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்விக்குச்[4] சமமானதாகவும் காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் அரிசிக்கான பற்றாக்குறைகளிலிருந்து தோன்றுகின்ற விலை அழுத்தங்களை தடுப்பதற்கும் நாட்டில் ஒட்டுமொத்த அரிசிக்கான தேவைப்பாட்டை நிறைவுசெய்கின்ற அதேவேளை உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் ஆண்டு காலப்பகுதியில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான வழிமுறைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. இதற்கமைய,

4 போதியளவு மட்டம் என்பது வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின அளவீட்டு - 2019 இல் மதிப்பீடு செய்யும் சராசரி வீட்டுத்துறை அரிசிக்கான நுகர்வை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நாட்டின் உண்மையான அரிசிக்கான கேள்வியானது வீட்டுத்துறை உணவகங்கள் மற்றும் விடுதிகள், அரிசி சார்ந்த உணவுக் கைத்தொழில்கள் போன்ற ஏனைய மூலங்களுக்காக அரிசிக்கான கேள்வியானது வருமான மற்றும் செலவின அளவீட்டின் சராசரி வீட்டுத்துறை அரிசி நுகர்வு மதிப்பீட்டை விட கணிசமாக அதிகமாக இருக்கலாம்.

அட்டவணை 2.3
நெல்த்துறை புள்ளிவிபரங்கள்

விடயம்	அலகு	2021 (அ)			2022 (ஆ)		
		பெரும்போகம்	சிறுபோகம்	மொத்தம்	பெரும்போகம்	சிறுபோகம்	மொத்தம்
விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	770	501	1,272	776	482	1,258
அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	762	497	1,259	766	480	1,246
அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	682	445	1,127	685	429	1,114
உற்பத்தி	'000 மெற்றிக்தொன்	3,061	2,088	5,150	1,931	1,462	3,393
	'000 புசல்கள்	146,720	100,079	246,799	92,555	70,050	162,605
எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் (இ)	கி.கி./ எக்டேயர்	4,492	4,692	4,571	2,819	3,407	3,045
வழங்கப்பட்ட கொடுகடன் (ஈ)	ரூ.மில்	8,603	4,449	13,052	-	-	12,454
அரிசி இறக்குமதிகள் (உ)	'000 மெற்றிக்தொன்	-	-	147	-	-	783
இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல் (உ)	'000 மெற்றிக்தொன்	-	-	216	-	-	1,152

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது
(ஈ) 2022இலிருந்து, பயிர்ச்செய்கைக்காக முதன்மை வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன்களின் தரவுகளானது பெரும்போகம் மற்றும் சிறுபோக பருவகாலங்களிற்கென தனித்தனியாக கிடைப்பனவாக இல்லை
(உ) ஆண்டுக்கான பெறுமதி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


முன்னைய ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட 147,091 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ 783,420 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசி இறக்குமதி செய்யப்பட்டன. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக்களுடனும் சிறுபோக பருவகாலத்திலிருந்தான அறுவடையுடனும் உள்நாட்டில் கிடைப்பனவாகவுள்ள அரிசிக்கான இருப்புக்கள் படிப்படியாக அதிகரித்தமையால், சில வகைகளைத் தவிர்ந்த அரிசியின் இறக்குமதி மீதான தடையொன்று 2022 திசெம்பர் 09 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் விதிக்கப்பட்டது.

2022இன் காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட சரிவுடன் இணைந்து அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகள் அபரிமிதமான நெல் மற்றும் அரிசி விலைகளைத் தோற்றுவித்தது. 2021இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக, 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் தாழ்வான உற்பத்தியால் ஏற்பட்ட நிரம்பல் பற்றாக்குறைகளாலும் சந்தையில் நிலவிய நிரம்பல் பற்றாக்குறை பற்றிய சந்தை ஊகங்களிலிருந்து தோன்றிய அதிகரித்த கேள்வியாலும் பாரியளவில் உந்தப்பட்டு 2022இன் முன்னைய காலப்பகுதியில் நெல் விலைகள் மேலதிக அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. விலைத் தளம்பலைக் குறைப்பதற்கும் நிலையான நிரம்பலொன்றைப் பேணுவதற்கும் நெல் மற்றும் அரிசிச் சந்தைகளில் அரசாங்கம் இடையிடையில் தலையீடுசெய்தது. இதற்கமைய. நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் சம்பா, நாட்டரிசி மற்றும் கீரி சம்பா என்பவற்றின் கிலோகிராம் ஒன்றிற்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலைகள் முறையே, ரூ.92.00, ரூ.90.00 மற்றும் ரூ.95.00 என்பவற்றிற்கு அதிகரிக்கப்பட்டன. 2021/2022 பெரும்போகக் காலப்பகுதியிலிருந்து ஏறத்தாழ 71,280 மெற்றிக் தொன்களை கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இயலுமாக இருந்தது. மேலும், நெல் துறையில் அதிகரிக்கும் உற்பத்திச் செலவைக் கருத்திற்கொண்டு, நெல் சந்தைப்படுத்தல் சபையானது 2022 சிறுபோகத்தில் சம்பா, நாட்டரிசி மற்றும் கீரி சம்பா என்பவற்றின் கிலோகிராம் ஒன்றிற்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலைகளை முறையே ரூ.125.00, ரூ.120.00 மற்றும் ரூ.130.00 என்பவற்றிற்கு அதிகரித்தது. எவ்வாறாயினும், நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குரிய நிதி பற்றாக்குறையாக இருந்ததன் காரணமாக புதிய உத்தரவாதப்படுத்தப்பட்ட விலைகளின் கீழ் நெல் சந்தைப்படுத்தல் சபையால் ஏறத்தாழ 7,076 மெற்றிக் தொன்கள் நெல்லை மட்டுமே கொள்வனவு செய்ய இயலுமாகவிருந்தது. இதனால், வேளாண்மையாளர்கள் தமது நெல்லை தாழ்ந்த விலையில் தனியார் ஆலையாளர்களுக்கு விற்பதை கட்டாயப்படுத்தியதுடன் 2022இன் பின்னைய பகுதியை நோக்கி மிதமான நெல் விலைகளுக்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், அனைத்து நெல் வகைகளினதும் சராசரி விலைகளானது 2021இல் அவதானிக்கப்பட்ட விலை மட்டங்களிற்கு அதிகமாகவே காணப்பட்டது. சம்பா நெல் வகையின் சராசரி விலை 2021இல் பதிவு செய்யப்பட்ட கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.65.32 இலிருந்து கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.108.69 ஆக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 66.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவுசெய்த அதேவேளை, 2022இல் நாடு நெல் வகையின் சராசரி விலையும் 2021இல் பதிவு செய்யப்பட்ட கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.57.61 இலிருந்து கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.103.87 ஆக அதிகரித்து முன்னைய ஆண்டை விட 80.3 சதவீத அதிகரிப்பை ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பதிவுசெய்தது. நெல் விலைகளின் ஒத்த போக்கைத் தொடர்ந்து, 2022இன் பிற்பகுதியில் சில மிதமடைதல்களிற்கு மத்தியில், 2022 முழுவதும் அரிசி வகை விலைகளும் மேல் நோக்கிய போக்கொன்றைக் காண்பித்தன. இதற்கமைய, சம்பா மற்றும் நாடு என்பவற்றின் சில்லறை விலைகளானது 2021இன் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.136.52 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.116.56 ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே கிலோகிராமொன்றிற்கு

ரூ.209.19 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.213.36 ஆக காணப்பட்டன. அதேவேளை, உள்நாட்டுச் சந்தையில் அரிசி நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு மத்தியில் அரிசிக்கான சில்லறை விலைகளில் ஏற்படும் மிகையான தளம்பலைத் தீர்ப்பதற்காக அரசாங்கமானது அரிசி வகைகளுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விதித்தல் மற்றும் அரிசி இறக்குமதிகளூடாக நிரம்பலை ஊக்குவித்தல் உள்ளடங்கலாக பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. இதற்கமைய, 2022 மே 02 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாட்டரிசி, சம்பா மற்றும் கீரி சம்பா என்பவற்றுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.220.0 கிலோகிராமொன்றிற்கு ரூ.230.00 கிலோகிராமொன்றிற்கு ரூ.260.00 ஆக விதிக்கப்பட்டன. தொடர்ச்சியாக அதிகளவான விலைகளின் தாக்கத்தை தடுப்பதற்கு, அரசாங்கமானது 2023 மார்சு மற்றும் ஏப்பிறல் மாதத்தில் குறைந்தளவான வருமானத்தை ஈட்டுகின்ற குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு 10 கிலோகிராம் கொண்ட அரிசியை பகிர்ந்தளிக்கும் நோக்குடன் 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் கிலோகிரமொன்றிற்கு ரூ.100.00 இல் வேளாண்மையாளர்களிடமிருந்து நாடு வகை நெல்லை கொள்வனவு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தொடங்கிவைத்தது.

வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட சமகால பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு 2022இல் அரசாங்கத்தால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, துறையின் நீண்ட கால உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரசாயன வளமாக்கி மற்றும் வேளாண் இரசாயனங்களின் இறக்குமதித் தடை மற்றும் வளமாக்கிகளை இறக்குமதி செய்வதற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மை என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற வளாமாக்கி கிடைப்பனவின் பற்றாக்குறையின் பாதகமான விளைவுகளை

வரைபடம் 2.5
அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சங்கம்
இலங்கை மத்திய வங்கி

உரியவாறு கருத்திற்கொண்டு, அரசாங்கமானது 2022இன் மூன்றாம் காலாண்டிலிருந்து இரசாயன வளமாக்கிகளை வழங்குவதற்கான வழிமுறைகளை துரிதப்படுத்தியது. இதற்கமைய, அரசாங்கமானது 2022இன் சிறுபோக பயிர்ச்செய்கைக்காக இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 65,000 மெற்றிக் தொன்களைக் கொண்ட யூரியாவை கொள்வனவு செய்த அதேவேளை, 2022 சிறுபோக காலப்பகுதியில், நெல் வேளாண்மையாளர்களுக்கான யூரியாவானது 50 கிலோகிராம் கொண்ட யூரியா சாக்குப் பையொன்று ரூ.10,000.00 எனும் மானிய விலையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2022/2023 பெரும்போக காலப்பகுதிக்காகவும் எதிர்வருகின்ற காலப்பகுதிக்காகவும் டிரிப்ள் சுப்பர் பொசுபேற்று (TSP) மற்றும் பொற்றாசியம் முரைட்டு (MOP) போன்ற தேவைப்படும் யூரியாவை காலக்கிரமமாக வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு பல்வேறு உதவி நிகழ்ச்சித்திட்டங்களூடாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு உள்ளடங்கலாக பல்வேறு பன்னாட்டு அமைப்புக்களுடன் பலதரப்பட்ட ஒருங்கேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் நெற்ப் பயிர்ச்செய்கைக்காக ஏறத்தாழ 100,000 மெற்றிக் தொன்களைக் கொண்ட யூரியாவை பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கத்திற்கு இயலுமாகவிருந்ததுடன் இதன் மூலம் நெற்த் துறை மீண்டெழுவதற்கும் கணிசமாக பங்களிப்புச் செய்தது. மேலும், கிளைபோசேற்றை களைகொல்லியை உள்நாட்டு பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அமைச்சரவையானது 2022/2023 பெரும்போகக் காலப்பகுதியில் வேளாண்மை நோக்கத்திற்காக தேவையான கிளைபோசைற்று அளவை ஆறு மாத காலப்பகுதிக்கு இறக்குமதி செய்வதற்கான ஒப்புதலை 2022 செத்தெம்பரில் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் சில மாவட்டங்களில் நெற் கதிர்களின் பழுப்பிற்கு வழிவகுக்கின்ற ஊட்டச்சத்து குறைபாடுகளை தவிர்ப்பதற்கு வளமாக்கிகளையும் வேறு சேதன துணைநிரப்பிகளையும் வழங்குவதனூடாக அவசர வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பூச்சிகொல்லி மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான நீடித்தகளப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சிறப்பாக செயலாற்றுகின்ற இனங்களைத் தெரிவு செய்வதற்கான அரிசி வகைப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் 2022 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதுடன் குறுங்காலப்பயிர், அதிகளவான விளைச்சல் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளல் போன்ற விசேட பண்புகளுடன் கூடிய நான்கு புதிய அரிசி வகைகள் 2022இல் வெளிக்கொணரப்பட்டன. இத்தகைய நான்கு புதிய வகைகளினுள் ஒரு வகை அரிசி பிஸ்கெட் உற்பத்திகள் போன்ற கைத்தொழில் நோக்கத்திற்காக விசேடமாக வெளியிடப்பட்டது. தளத்திற்குரிய களைகொல்லி முகாமைத்துவத்தினூடாக துல்லிய முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியில், வயல்கள் தொடர்பில் பிரதான

களைகொல்லிகளையும் அத்தகைய களைகொல்லிகளின் தாக்கத்தையும் அடையாளம் காண்பதற்கு பல்புடைநிரல்வழி கொண்ட ட்ரோன் பிம்பத் (multispectral drone image) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வயல் மேடுகளில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

தேயிலை

உள்நாட்டு ரீதியில் வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயங்களினதும் கடுமையான பற்றாக்குறையின் காலங்கடந்த விளைவின் காரணமாக 2022இல் தேயிலை உற்பத்தியானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 16.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட விளைச்சல் இழப்புக்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திய குறிப்பாக யூரியாவை அடிப்படையாகக் கொண்ட இரசாயன வளமாக்கிகள் மற்றும் களைகொல்லிகள் போன்ற இரசாயன வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயனங்களினதும் கிடைப்பனவின்மை எடுத்துக்காட்டப்பட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் பயிர் விளைச்சலில் ஏற்பட்ட பெருமளவான வீழ்ச்சி பற்றிய பூர்வாங்க ஆய்வானது தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தால் நடாத்தப்பட்டது. இதற்கமைய, மொத்த உற்பத்தியில் முறையே ஏறத்தாழ 22 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்த உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை உற்பத்தியானது 2022இல் முறையே 13.8 சதவீதத்தாலும், 21.2 சதவீதத்தாலும் மற்றும் 15.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சிறுஉடமையாளர் துறையின் சராசரி விளைச்சலானது 2021இல் அறிக்கையிடப்பட்ட ஹெக்டேயரொன்றிற்கு 1,414 கிலோகிராமொன்றுடன் ஒப்பிடுகையில் ஹெக்டேயரொன்றிற்கு 1,193 கிலோகிராமாக ஆக குறைவடைந்ததுடன் சராசரி விளைச்சலில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2022இல் தேயிலைத் துறையானது இரசாயன வளமாக்கிகளினதும் வேறு வேளாண்மை உள்ளீடுகளின் உள்நாட்டுப் பற்றாக்குறையுடன் ஒன்றிணைந்த அதிகரித்த விலையின் காரணமாகவும் எரிபொருள். மின்சாரம் மற்றும் நீர் உள்ளடங்கலான பயன்பாட்டு விலைகளின் மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாகவும் உயர்வான உற்பத்திச் செலவை அனுபவித்துள்ளதுடன் இதன்மூலம் உலகளாவிய தேயிலைச் சந்தைகளில் நாட்டின் போட்டித்தன்மை தடைப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2022இல் தேயிலை உற்பத்தியின் மதிப்பிடப்பட்ட செலவானது 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கிலோகிராமொன்றிற்கு ரூ.20.00 ஆல் ரூ.639.00 ஆக அதிகரித்து காணப்பட்டது.

2022இல் கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலையின் விலைகளானது வரலாற்று ரீதியாக உயர்ந்தளவு மட்டத்தை அடைந்ததுடன் ஆண்டு முழுவதும் அதிகரித்த மட்டத்திலேயே காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் தேயிலையின் சராசரி விலையானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.619.15 இலிருந்து கிலோகிராமொன்றிற்கு ரூ.1,270.50 ஆக 105.2 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதற்கமைய, 2022இல் உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை என்பவற்றுக்கான சராசரி தேயிலை விலைகளானது முறையே 94.6 சதவீதம், 93.5 சதவீதம் மற்றும் 110.8 சதவீதம் அதிகரிப்பை அறிக்கையிட்டன. மேலும், 2022இல் பச்சை இலைகளுக்காக சிறுஉடமையாளர்களால் பெறப்பட்ட சராசரி விலையும் 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.93.67 உடன் ஒப்பிடுகையில் ரூ.182.07 ஆக கணிசமாக அதிகரித்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது (கப்பலேற்றல் பெறுமதி) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.63 உடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5.03 ஆக 8.7 சதவீதத்தால் அதிகரித்தது. ஆண்டு காலப்பகுதியில் சராசரி தேயிலை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் கொழும்பு தேயிலை ஏலத்திற்கு வழங்கப்பட்ட அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவில் பங்களிப்புச் செய்த அதேவேளை இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வும் ரூபா நியதிகளில் இவ்விலை உயர்விற்கு பங்களித்திருந்தது.

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் உற்பத்தித்திறன், பெறுமதிசேர்ப்பு, மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு, 2022இல் பல்வேறு வழிமுறைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைத் தேயிலைச் சபையானது தமது பச்சைத் தேயிலை வழங்குநர்களுக்காக வளமாக்கியைக் கொள்வனவு செய்வதற்கு தேயிலைத் தொழிற்சாலைகளை இயலுமைப்படுத்தி 8.0 சதவீத வட்டியில் சலுகைக் கடன்திட்டமொன்றை தொடங்கியிருந்தது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கைத் தேயிலைத் சபையானது தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் உதவுதொகை திட்டத்தின் கீழ், ரூ.16.9 மில்லியனை 38 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு பகிர்ந்தளித்து, உற்பத்திச் செயன்முறையின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்தகைய தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது. தேயிலை நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான மீள்நடுகை உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ரூ.56.4 மில்லியன் தொகையை இலங்கைத் தேயிலைச் சபை வழங்கிய அதேவேளை 204 ஏக்கர் கொண்ட நடுத்தரளவு தேயிலை நிலங்களில் தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதற்காக ரூ.24.5 மில்லியன் உதவுதொகையையும் வழங்கியது. தேயிலை நடுகை மற்றும் புதிய பயிர்நடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிர் புனரமைப்பு உதவுதொகை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுடன் தொடர்பில் தேயிலை சிறு உடமையாளர்கள் அபிவிருத்தி அதிகார சபையால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் 912 ஹெக்டேயர்களைக் கொண்ட தேயிலை நிலங்கள் மீள் நடுகை

செய்யப்பட்டதுடன் 408 ஹெக்டேயர்களைக் கொண்ட புதிய நிலங்களும் தேயிலை நிலங்களாக மாற்றப்பட்ட அதேவேளை தேயிலைத் தோட்டங்களை மீள்நிரப்புகின்ற செயன்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. ஆண்டு முழுவதும் தேயிலை உடமையாளர்களுள் விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கிய முயற்சிகளானது ஆலோசனை பணிகளூடாக மேற்கொள்ளப்பட்டன. தேயிலை ஆராய்ச்சி நிறுவனமானது தனது உபாய திட்டங்களுடன் இணங்கியொழுகும் விதத்தில் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பணிக்கருத்திட்டங்கள் என்பவை தொடர்பில் தொடர்ந்தும் முயற்சி எடுத்தது. இதற்கமைய ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் தேயிலை நிலங்களுக்கு பொருத்தமாக மோட்டார் மயப்படுத்தப்பட்ட தெரிவுசெய்யக்கூடிய தேயிலை அறுவடை இயந்திரத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தல், வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களில் பயிர்களை நடுகை செய்வதன் மூலமாக மேம்படுத்தப்பட்ட விதைகளை அறிமுகப்படுத்துவதை அதிகரிப்பதற்கு விதைத் தோட்டங்களை உருவாக்குதல், தேயிலைப் பயிர்ச்செய்கையில் நுண்ணுயிர் உயிரிப் பூச்சிகொல்லிகளை வர்த்தகமயப்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் புதிய தேயிலை வகைகளின் தாய்த் தாவர பிரதேசங்களை விரிவுபடுத்தல் போன்ற விசேட கருத்திட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

இறப்பர்

இறப்பர் வளருகின்ற பிரதேசங்களில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள், வளமாக்கிகளின் பற்றாக்குறை மற்றும் பெஸ்ராலோற்றியோப்சிஸ் நோயின் பரவல் என்பவற்றின் இணைந்த விளைவுகளால் பெருமளவில் உந்தப்பட்டு இறப்பர் உற்பத்தியானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 2022இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதிர்வடையாத இறப்பர் பயிர் நடுகைகளில் வளமாக்கிகளின் பற்றாக்குறையின் தாக்கம் கணிசமாக காணப்பட்டதுடன் பயிர்களின் பால் சேகரிப்பு நிலையில் தாமதத்தை ஏற்படுத்துகின்றதும் எதிர்வரும் காலங்களில் நிலத்தின் உற்பத்தி திறனை குறைக்கின்றதுமான குறையான மர வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. மேலும் ஆண்டு காலப்பகுதியில் வோளாண்மை இரசாயனங்களின் பற்றாக்குறையானது இறப்பர் பயிர்செய்கையில் பெஸ்ராலோற்றியோப்சிஸ் நோயின் கடுமையான தாக்கத்தினை தோற்றுவித்து ஏறத்தாழ 40,000 ஹெக்டேயர் கொண்ட இறப்பர் பயிர்ச்செய்கைகளைப் பாதித்து 0-10 சதவீத வீச்சைக் கொண்ட வெளியீட்டு விழ்ச்சியை பாதிப்படைந்த பிரதேசங்களில் தோற்றுவித்தது. இதற்கமைய 2022இல் மொத்த இறப்பர் உற்பத்தியானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.8 சதவீதத்தால் 70.9 மில்லியன் கிலோகிராமுக்கு வீழ்ச்சியடைந்தது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் உற்பத்தியின் பிரதான வகைப்படுத்தல்களுக்கு மத்தியில் மொத்த இறப்பர் உற்பத்தியின் 49.0 சதவீதத்திற்கு வகை கூறும் தட்டை இறப்பர் உற்பத்தியானது 9.6 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்த அதேவேளை ஏனைய இறப்பர் வகைப்படுத்தல்களின் உற்பத்தியானது 11.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிறேப் இறப்பர் உற்பத்தியானது 3.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2022இல் உள்நாட்டு இறப்பர் விலைகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு மத்தியில், இறப்பர் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் பால் சேகரிப்பு வரையறைகள் என்பன உற்பத்தியில் நம்பத்தக்க முன்னேற்றங்களைத் தடுத்தது. அதேவேளை, பால் சேகரிப்பு நாட்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக சராசரி இறப்பர் விளைவு, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்தால் ஹெக்டேயர் ஒன்றிற்கு 665 கிலோகிராமாக குறைவடைந்தது. அண்மைய ஆண்டுகளில் இறப்பர் உற்பத்திச் செலவானது அதிகரித்து காணப்பட்டு 2022இன் இறுதியளவில் கிலோகிராமொன்றிற்கு ரூ.288.00 தொகையை பதிவுசெய்ததுடன் முன்னைய ஆண்டிலிருந்து 30.3 சதவீத அதிகரிப்பொன்றையும் பதிவுசெய்தது. 2022இல், கைத்தொழில் துறையினரின் பச்சை இறப்பர் உள்நாட்டு நுகர்வானது 12.4 சதவீதத்தால் 117.3 மில்லியன் கிலோகிராமாக சுருக்கமடைந்தது. இது, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று குறைந்தமையால் உள்நாடு மற்றும் உலகளாவிய இரு சந்தைகளிலும் மருத்துவ கையுறைகளிற்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமை காரணமாகவிருந்தது.

கொழும்பு இறப்பர் ஏலத்தில் பிரதான இறப்பர் வகைகளின் விலைகளானது 2022இன் முதலாம் அரையாண்டில் உலகளாவிய சந்தையில் ஏற்பட்ட சாதகமான கேள்வியால் உந்தப்பட்டு வரலாற்று ரீதியில் உயர்ந்த மட்டங்களை அடைந்தது. கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் (RSS1) சராசரி விலையானது 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.460.78 இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு ரூ.595.00 ஆக அதிகரித்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 29.1 சதவீத அதிகரிப்பை பதிவுசெய்த அதேவேளை லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகளும் 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.626.32 இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு 44.2 சதவீதத்தால் ரூ.903.27 ஆக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இருப்பினும், ஆண்டின் பிற்பகுதியில், உள்நாடு மற்றும் உலகளாவிய இரு சந்தைகளிலும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களுக்கான பலவீனமான கேள்வியின் காரணமாக இறப்பர் விலைகள் வீழ்ச்சியடையும் போக்கொன்றில் காணப்பட்டன. இதற்கமைய, 2022இன் இறுதியில் கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் சராசரி விலைகளும் லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகளும் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.517.67 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.628.33 காணப்பட்டது. இறப்பரின்

2

கப்பலேற்றல் சராசரி விலையும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.72இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.73 ஆக சிறிதளவு அதிகரித்து காணப்பட்டது.

2022இல் இறப்பர் துறையின் உற்பத்தித் திறனையும் பெறுமதி சேர்ப்புக்களையும் மேம்படுத்துவதற்கான உபாயங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகமானது இறப்பர் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான தமது முயற்சியில் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறுபட்ட ஆய்வுக் கற்கைகளை நடாத்தியது. ஆண்டு காலப்பகுதியில், குறிப்பாக மரபுசார பிரதேசங்களில் உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் ஊழியர் பற்றாக்குறையைக் கையாளுதல் ஆகிய நோக்குடன் கூடிய இடைவெளிகளுடனான பால் சேகரிப்பு முறைமைகளைப் பின்பற்றுதல் பற்றிய ஆய்வு நடாத்தப்பட்டது. இதன் விளைவாக, சிறு உடமையாளர்களாலும் பயிர்நடுகை கம்பனிகளாலும் உரிமையாக்கப்பட்ட ஏறத்தாழ 1,600 ஹெக்டேயர்களைக் கொண்ட இறப்பர் நிலங்கள் 'நான்கு நாட்களுக்கு ஒருமுறையான பால் சேகரிப்பு முறைமை' ஆக மாற்றப்பட்டன. இலை நோய்களால் ஏற்படும் கணிசமான விளைச்சல் இழப்புக்களைத் தடுப்பதற்கான முயற்சியாக அத்தகைய நோய்களுக்கெதிரான எதிர்ப்புத் தன்மை கொண்ட இனங்களை அடையாளங் காண்பதற்கான நடவடிக்கைகள் 2022இல் நிறைவுசெய்யப்பட்ட அதேவேளை, நிலைபெறத்தக்க இறப்பர் பயிர்ச்செய்கைக்காக காலநிலைக்கெதிரான எதிர்ப்புத் தன்மை கொண்ட இனங்களை அடையாளங் காண்பதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் வேளாண்மையாளர்களுக்கு மத்தியில் மெதுவான வீதத்தில் வெளிவரக்கூடிய வளமாக்கிகளைப் பிரயோகித்தல் மற்றும் தாவரங்கள் ஊட்டச்சத்துக்களை ஈர்த்துக்கொள்வதை மேம்படுத்தல் என்பற்றிற்கான மேம்படுத்தப்பட்ட உத்திகள் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்காகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களானது மொனராகல, மிந்தேனிய, மதுகம, ஹொரண, புலத்சிங்கள, களுத்தறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டன. மேலும், ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமானது புதிய பயிர்நடுகை மற்றும் மீள்மரநடுகை என்பவற்றின் ஊடாக இறப்பர் பயிர்ச்செய்கை நிலப்பரப்பை விரிவுபடுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. புதிய பயிர்நடுகை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவதாக நிறுவப்பட்ட இறப்பர் விளைச்சலில் இறப்பப் பால் அறுவடை 2022இல் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு வகையான இறப்பர் அடிப்படையிலான பயிர்களுக்கிடையிலான முறைமைகளைப் பிரபல்யப்படுத்தவும், பயன்படுத்தப்படாத நிலங்களில் பயிர்களை பல்வகைப்படுத்தவும் பல்வேறு மாதிரித் தளங்களில் தள விளக்கக்காட்சிகள் மூலமான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, பயிர்ச்செய்கையின் செலவு

அட்டவணை 2.4
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

வகை	அலகு	2021 (அ)	2022 (ஆ)	மாற்றம் (%) 2020/21 (அ)	2021/22 (ஆ)
1. தேயிலை					
1.1 உற்பத்தி (இ)	மில் கி.கி	299.5	251.5	7.4	-16.0
- தாழ் நிலம்	மில் கி.கி	183.2	155.0	7.8	-15.4
- மத்திய நிலம்	மில் கி.கி	51.0	40.2	9.1	-21.2
- உயர் நிலம்	மில் கி.கி	65.3	56.3	5.0	-13.8
1.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	267	267	0.3	0.2
1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	267	267	0.3	0.2
1.4 உற்பத்திச் செலவு (ஈ)	ரூபா/கி.கி	618.49	638.99	13.2	3.3
1.5 சராசரி விலை					
- கொழும்பு ஏலம்	ரூபா/கி.கி	619.15	1,270.50	-2.3	105.2
- ஏற்றுமதி (க.ஏ.பெ)	ரூபா/கி.கி	920.76	1,643.11	6.2	78.5
1.6 மீள்நடுகை	எக்டேயர்கள்	1,123	1,239	38.3	10.3
1.7 புதிய பயிரிடுகை	எக்டேயர்கள்	696	476	61.9	-31.6
1.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொ.உ.உ.இன் %ாக	0.6	0.5	4.8	-8.8
2. இறப்பர்					
2.1 உற்பத்தி	மில் கி.கி	76.9	70.9	-1.7	-7.8
- தட்டை இறப்பர்	மில் கி.கி	38.4	34.8	-1.7	-9.6
- கிரேப் இறப்பர்	மில் கி.கி	13.9	14.5	7.4	3.9
- ஏனையவை	மில் கி.கி	24.5	21.7	-6.2	-11.7
2.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	139	139	0.6	-0.1
2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ)	'000 எக்டேயர்கள்	113	107	-6.1	-5.9
2.4 உற்பத்திச் செலவு	ரூபா/கி.கி	221.00	288.00	3.5	30.3
2.5 சராசரி விலை					
- கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1)	ரூபா/கி.கி	460.78	595.00	31.1	29.1
- ஏற்றுமதி (க.ஏ.பெ)	ரூபா/கி.கி	540.77	841.72	52.8	55.7
2.6 மீள்நடுகை (ஊ)	எக்டேயர்கள்	1,522	1,264	55.9	-16.9
2.7 புதிய பயிரிடுகை (ஊ)	எக்டேயர்கள்	1,188	489	58.2	-58.9
2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொ.உ.உ.இன் %ாக	0.2	0.2	2.6	1.2
3. தெங்கு					
3.1 உற்பத்தி	காய்கள் மில்	3,120	3,391	11.7	8.7
- உலர்ந்த தேங்காய் துருவல்	காய்கள் மில்	298	314	31.8	5.2
- தேங்காய் எண்ணெய்	காய்கள் மில்	211	445	340.6	110.7
- ஏனையவை	காய்கள் மில்	2,607	2,628	3.6	0.8
3.2 மொத்த நிலப்பரப்பு	'000 எக்டேயர்கள்	505	505	0.2	0.0
3.3 உற்பத்திச் செலவு	ரூபா/காய்	26.96	27.21	23.6	0.9
3.4 சராசரி விலை					
- உற்பத்தியாளர் விலை	ரூபா/காய்	71.88	74.86	17.7	4.1
- ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ)	ரூபா/காய்	65.36	84.54	24.2	29.3
3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ)	எக்டேயர்கள்	4,709	5,481	-11.7	16.4
3.6 புதிய பயிரிடுகை (ஐ)	எக்டேயர்கள்	9,622	13,913	20.3	44.6
3.7 கூட்டப்பட்ட பெறுமதி (உ)	மொ.உ.உ.இன் %ாக	0.8	0.9	7.4	17.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள்:
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்புத் தேயிலைத் தரகர்கள் சங்கம்
இலங்கை வர்த்தக சம்மேளனம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தமையால், உதவுதொகையின் அளவை சீர்செய்யாமல் உதவுதொகை நிதியங்களின் ஏற்பாட்டிற்காக தவணைகளின் எண்ணிக்கையை எட்டிலிருந்து ஐந்தாக குறைக்கும் பொருட்டு, 2022 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மீள்நடுகை மற்றும் புதிய மரநடுகை என்பவற்றிற்கான உதவுதொகை திட்டங்களுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியியல் ஆதரவுடன் இறப்பர் பட்டையை முறையாக முகாமை செய்வதனூடாக நிலைபெறத்தக்க அறுவடை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்

திட்டங்களின் தொடரொன்று நடாத்தப்பட்டது. அதேவேளை, இறப்பர் துறையில் பெறுமதி சேர்ப்பை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்டு, ஆண்டு காலப்பகுதியில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களையும் அதேபோன்று இறப்பர் சிறுஉடமையாளர்களையும் இலக்குவைத்து இறப்பர் உற்பத்தி தயாரிப்புத் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன்மூலம், உலகளாவிய பெறுமதிச் சங்கிலியில் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர்களின் ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தெங்கு

2021 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக தெங்குத் துறையானது 2022இல் அதன் மிக உயர்ந்த வருடாந்த உற்பத்தியைப் பதிவுசெய்தது. இதற்கமைய, 2022இல் காய் உற்பத்தியானது 3,391 மில்லியன் காய்களாக அதிகரித்து, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு மேலதிகமாக 8.7 சதவீத ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பை பதிவுசெய்தது. இவ்வுற்பத்தி அதிகரித்தமைக்கு பிரதானமாக தேங்காய் வளர்கின்ற பிரதேசங்களில் காணப்படும் உகந்த வளி வெப்பநிலையுடன் இணைந்து 2021இலிருந்து பெறப்பட்ட மழைவீழ்ச்சி பெருமளவில் துணையளித்தது. இத்தகைய சாதகமான தாக்கங்களானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெங்குப் பயிர்ச்செய்கை தொடர்பான இரசாயன வளமாக்கிகளை மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் பிரயோகித்ததன் உடனடியான எதிர்மறைத் தாக்கத்தை எதிரீடு செய்தது. அதிகரித்த காய் உற்பத்தியுடன், தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றத்தை காட்டின. இதற்கமைய, துருவல் தேங்காய் உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 33,289 மெற்றிக் தொன்களிலிருந்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.2 சதவீதத்தால் 35,030 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் இரண்டினதும் இறக்குமதி மீதும் விதிக்கப்பட்ட தடைகளையும் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான போதுமான காய்களின் கிடைப்பனவையும் பிரதிபலித்து 2022இல் தேங்காய் எண்ணெய் உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 59.4 சதவீதத்தால் 68,590 மெற்றிக் தொன்களாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் தேங்காயப் பால்மா உற்பத்தியும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.8 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை, தேங்காய் களி மற்றும் தேங்காய் பால் உற்பத்திகளானது முறையே 12.5 சதவீத மற்றும் 0.9 சதவீத சுருக்கங்களைப் பதிவுசெய்தன. 2022இல் தெங்கு துறையில் ஏற்பட்ட முன்னேற்றமான செயலாற்றத்திற்கு மத்தியில், 2022இல் இரசாயன வளமாக்கியின் போதியளவற்ற பயன்படுத்துகையின் காலங்கடந்த விளைவானது அண்மைய எதிர்காலத்தில தெங்கு விளைச்சலை பாதிக்கக்கூடும். எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டு முழுவதும் பெறப்பட்ட சாதகமான மழைப்பொழிவின் காலங்கடந்த விளைவானது போதியளவற்ற வளமாக்கியை பிரயோகப்படுத்துவதன் எதிர்மறைத் தாக்கங்களை எதிரீடு செய்யக்கூடும்.

முன்னேற்றங்கண்ட தெங்கு உற்பத்திக்கு மத்தியில், தெங்கு மற்று தெங்கை அடிப்படையாகக்கொண்ட பொருட்களின் விலைகளானது 2022ஆம் ஆண்டு முழுவதும் அதிகரித்த மட்டத்தில் காணப்பட்டன. தெங்கின் சராசரி சில்லறை விலையானது 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.9 சதவீதத்தால் காயொன்றிற்கு ரூ.91.36 ஆக அதிகரித்து வரலாற்று காணாத தேங்காய் விலைகளை அடைந்ததுடன் 2022இன் பிற்பகுதியில் ரூ.100.00ஐ விஞ்சிக் காணப்பட்டது. கொழும்பு தெங்கு ஏலத்தில் தேங்காயின் சராசரி ஏல விலையானது 2021இன் காயொன்றின் விலையான ரூ.56.51இலிருந்து 6.4 சதவீத அதிகரிப்பொன்றாக 2022இல் காயொன்றிற்கு ரூ.60.14 ஆகப் பதிவுசெய்யப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டுச் சந்தைகளில் காணப்படும் துருவிய தேங்காய் விலையும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.3 சதவீதத்தால் கிலோகிராமொன்றிற்கு ரூ.538.75 ஆக சிறிதளவில் அதிகரித்தது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட 29.2 சதவீத அதிகரிப்புடன் தேங்காய் எண்ணெயின் சராசரி சில்லறை விலையானது 2022இல் 750 மில்லிலீற்றர் போத்தலொன்றுக்கு ரூ.520.19 ஆக 17.3 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், 2022இல் துருவல் தேங்காய், தேங்காய் எண்ணெய், மற்றும் கொப்பரா என்பவற்றின் ஏற்றுமதி அளவு குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்தான சாதகமான ஆதரவைத் தோற்றுவித்தது.

தெங்குத் துறையை முன்னேற்றுவதை நோக்காக்கொண்ட பல்வேறு முன்முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலுடன் தெங்குத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கிய அரசாங்கத்தின் முயற்சிகளானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையானது தற்போதுள்ள தெங்கு நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அதிகளவில் விளைச்சலை ஈட்டுகின்ற தென்னங்கன்றுகளை வழங்குவதற்கான பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்தது. ஆண்டு காலப்பகுதியில், அதிகளவான விளைச்சலை ஈட்டுகின்ற 'கப்சுவாய' கலப்பு தென்னங்கன்றுகளை உருவாக்குதற்கு தேங்காய் விதைக்கான புதிய தோட்டத்தை உருவாக்குகின்ற அதேவேளை, 'கப்ருவான' கலப்பு வகையை உருவாக்குவதற்கும் கினியம விதைத் தோட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புதவற்கும் கை மூலமான மகரந்தச் சேர்க்கை நிகழ்ச்சித்

2

திட்டமானது சிலாபம் பிளான்டேசன் லிமிடெட்டுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. உதவுதொகை வீதத்தில் தெங்கு விதைகள் வழங்கல், தென்னை நிலங்கள் புனரமைப்பதற்கான உதவுதொகைகள், மீள்நடுகை, கீழ் பயிரிடுகை, மற்றும் புதிய பயிரிடுகை உதவுதொகைகள், உள்ளடங்கலாக பல்வேறு உதவுதொகை திட்டங்கள் 2022இல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. 2022இல் வெள்ளைப் பூச்சியின் அதிகரித்த தீவிரத்தன்மைய காணப்பட்டமையால் தங்கொட்டுவ, நாத்தாண்டிய மற்றும் வென்னப்புவ உள்ளடங்கலான பல்வேறுபட்ட பிரதேசங்களில் வெள்ளைப் பூச்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை கட்டுப்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று நடாத்தப்பட்ட அதேவேளை, இரசாயனங்களையும் உயிரியல் வளமாக்கிகளையும் பயன்படுத்தி வெள்ளைப் பூச்சி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களும் வழங்கப்பட்டன. மேலும், தேங்காயைச் செயன்முறைப்படுத்தும் தொழிற்சாலைகளின் இடையூறற்ற தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு போதுமான எரிபொருளை வழங்குவதன் மூலம் அத்தகைய தொழிற்சாலைகளில் எரிபொருள் பற்றாக்குறையின் தாக்கத்தை தணிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, தெங்குக் கைத்தொழிலில் பெறுமதி சேர்ப்புக்களை ஊக்குவிக்கக்கூடியதும் நாட்டின் தெங்குக் கைத்தொழிலுக்காக உலகளாவிய சந்தையில் அதிகளவான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதுமான 'சிலோன் கொக்கநட்' எனும் வர்த்தக நாமம் உலகளாவியா ரீதியில் பிரபல்யம் அடைவதை விரிவடைவடையச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

உள்நாட்டு வழங்கல் சங்கிலிகள் மற்றும் வளமாக்கிகளின் கிடைப்பனவு என்பவற்றில் காணப்படும் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் 2022இல் தொடர்ந்தும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியின் வளர்ச்சி உத்வேகம் தொடர்ச்சியடைந்தது. ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளிற்கமைவாக, சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 143,165 மெற்றிக் தொன்களிலிருந்து ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 186,962 மெற்றிக் தொன்களாக 30.6 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. அதிகரித்த உலகளாவிய கேள்விக்கு மத்தியில் சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கும் உள்நாட்டு ரீதியில் அதிகரித்த விலைகளை முறியடிப்பதற்கும் மத்தியில் இறக்குமதிச் செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக பல்வேறு சிறு ஏற்றுமதி பயிர்களை இறக்குமதி செய்தல் தொடர்பான தடைகளை பேணுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானமானது இத்தகைய பயிர்களை தீவிரமாக பயிரிடுவதற்கு வேளாண்மையாளர்களை தூண்டியதுடன் துறையின் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தோற்றுவித்தது. 2022இல் கருவா, கராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, சாதிக்காய், பாக்கு மற்றும் வெற்றிலை இலைகள் என்பவற்றின் உற்பத்தியானது வளர்ச்சிகளை எடுத்துக்காட்டிய அதேவேளை, மிளகு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வேளாண்மை பயிர்த் துறையின் மொத்த ஏற்றுமதி அளவானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.0 சதவீத சுருக்கமொன்றை பதிவுசெய்த அதேவேளை, ரூபா நியதிகளில் ஏற்றுமதி வருவாய்களானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 44.8 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து காணப்பட்டது. 2022இல் கறுவா ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 50.1 சதவீத கணிசமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் பாரியளவான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

ஆண்டு காலப்பகுதியில், சிறு ஏற்றுமதி வேளாண்மைத் துறையை வலுப்படுத்துவதற்கு அரச அதிகாரசபைகளால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிலிருந்து சிலோன் கறுவாவிற்கு புவிசார் குறியீட்டுச் சான்றுபடுத்தலை பெற்றுக்கொள்வதற்கு 2022இல் பல்வேறு பொது மற்றும் தனியார் துறை ஆர்வலர்களின் ஆதரவுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை மூலமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது இலங்கைக்கு தனித்துவமாக கூறப்படும் உற்பத்திப் பொருளின் தேர்ச்சி மற்றும் தனித்துவமான பண்புகளின் உலகளாவிய அங்கீகாரத்தை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மரபுசாரா பிரதேசங்களில் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர் நடுகையை விரிவுபடுத்துவதற்கு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் நடாத்தியது. பயிர்செய்கை நிலப்பரப்பை விரிவுபடுத்தும் நோக்குடன் இத்தகைய அடையாளங்காணப்பட்ட பிரதேசங்களில் மிளகு, பாக்கு, இஞ்சி, மஞ்சள் மற்றும் வெற்றிலை போன்ற சிறு ஏற்றுமதி பயிர்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. சேதனப் பயிர்ச்செய்கைகளை அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்தல், சிறந்த வேளாண்மை முறைகள், சிறந்த உற்பத்தி முறைகள் என்பவையும் உற்பத்தித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

ஏனைய களப் பயிர்கள்

2021இல் அபரிமிதமான அறுவடையைத் தொடர்ந்து, வளமாக்கிகளினதும் ஏனைய வேளாண்மை இரசாயனங்களினதும் உள்நாட்டுப் பற்றாக்குறைகள் மற்றும் வழங்கல் சங்கிலி இடையூறுகள் என்பவற்றால் பெருமளவில் தூண்டப்பட்டு ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியானது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றை பதிவுசெய்தது. 2022ஆம்

ஆண்டு காலப்பகுதியில், வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயனங்களினதும் பற்றாக்குறைக்கு மத்தியில் ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதிகளூடாக பெருமளவில் தணிக்கப்பட்டு நாட்டின் இறக்குமதிச் செலவினத்தை அதிகரித்தது. இதற்கமைய, 2022இல் ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தியானது 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட 37.8 சதவீதத்தினதும் 2022 சிறுபோக காலப்பகுதியின் 36.8 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 37.5 சதவீதத்தால் 526,803 மெற்றிக் தொன்களாக குறைவடைந்தது. வேளாண்மை உள்ளீடுகளின் பற்றாக்குறைகளினதும் அதிக செலவினதும் காரணமாக சோள உற்பத்தியானது 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 259,040 மெற்றிக் தொன்களாக 45.2 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சோள உற்பத்தியின் வீழ்ச்சியுடன் விலங்குத் தீவன கைத்தொழிலுக்கான கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு சோள இறக்குமதியானது 2021இன் 22,724 மெற்றிக்தொன்களிலிருந்து 2022இல் 190,686 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. 2022இல் உருளைக்கிழங்கு உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 47,614 மெற்றிக் தொன்களுக்கு 37.3 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையீல் உருளைக் கிழங்கு இறக்குமதிகள் 31.8 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டது. மேலும், பெரிய வெங்காய உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 73.0 சதவீதத்தால் 17,799 மெற்றிக் தொன்களுக்கு கணிசமாக குறைவடைந்ததுடன் 2022இல் பெரிய வெங்காயங்களின் இறக்குமதியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீதத்தால் 263,781 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. அத்துடன், குரக்கன், கௌபி, மற்றும் சோயா அவரை போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியானது விரிவுகளைப் பதிவுசெய்த அதேவேளை, சிவப்பு வெங்காயம், பாசிப்பயறு, உழுந்து, நிலக்கடலை, எள்ளு மற்றும் பச்சை மிளகாய்கள் என்பவற்றின் உற்பத்தியானது வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரசாங்கமானது ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் மேம்படுத்தப்பட்ட உணவு பாதுகாப்பிற்கான வழியை வகுப்பதற்குமான தமது முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கமைய, வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வழிமுறைகளை நிறுவியது. இத்தகைய வழிமுறைகளானது இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களூடாக மிளகாய், வெங்காயம், குரக்கன், கௌபி, உழுந்து, மற்றும் பாசிப்பயறு போன்ற ஏனைய களப்பயிர்களின் புதிய வகைகளை உருவாக்குதல், அனைத்து விதந்துரைக்கப்பட்ட பயிர் வகைகளையும் பேணுதல், விதந்துரைக்கப்பட்ட பயிர்களின் விதை உற்பத்தி, ஏனைய களப் பயிர்களுக்கான தொழில்நுட்ப விதந்துரைப்புக்களை வழங்குதல், மண் பரிசோதனைப் பணிகள் மற்றும் தொழில்நுட்பத்தை பரப்புதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. எவ்வாறாயினும், வளமாக்கிகள் மற்றும் பூச்சிகொல்லிகள் போன்ற வேளாண்மை உள்ளீடுகளின் போதுமான வழங்கலொன்றை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்ளடக்குகின்ற தேசிய மட்ட ஏனைய களப் பயிர் உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனைத்து ஏனைய களப் பயிர்களினதும் நிரம்பலை மேம்படுத்துவதற்கும், சிறந்த தரமுடைய விதை உற்பத்தி, மற்றும் சிறந்த மண் மற்றும் பயிர் முகாமைத்துவ நடத்தைகள் என்பவற்றை ஊக்குவிக்கின்ற அதேவேளை உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்ய சாத்தியமாகவுள்ள ஏனைய களப் பயிர்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை குறைப்பதற்கு வழங்கல் சங்கிலி வழிகளை வலுப்படுத்துவதற்கும் போதுமான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காய்கறிகள்

உள்நாட்டு வளமாக்கிகள் மற்றும் வேளாண்மை இரசாயனப் பற்றாக்குறைகள், வழங்கல் சங்கிலியின் பகிர்ந்தளிப்பு மற்றும் அதிகரித்த உற்பத்திச் செலவுகள் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022இல் காய்கறி வழங்கல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. காய்கறிகளின் மொத்த உற்பத்தியானது, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1,669,515 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 1,588,256 மெற்றிக் தொன்களுக்கு 4.9 சதவீதத்தினால் குறைவடைந்நது. 2021/2022 பெரும்போக காலப்பகுதியில், முன்னைய பெரும்போகத்தை விட 6.5 சதவீதத்தினால் காய்கறிகள் உற்பத்திகள் 815,482 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 2022 சிறுபோக உற்பத்தியும் 2021இன் தொடர்புடைய பருவகாலத்துடன் ஒப்பிடுகையில் 772,773 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 3.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக குறைவான உற்பத்தி மற்றும் இடைநிலை வழங்கல் சங்கிலி பகிர்ந்தளிப்பு என்பவற்றின் காரணமாக 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் காய்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டன. பருவகாலமல்லாத பயிர்ச்செய்கை மற்றும் தீவிரமடைந்த எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக 2022ஆம் ஆண்டு மே மற்றும் யூன் மாதங்களில காய்கறி விலைகள் மேலும் அதிகரித்து காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் ஓகத்து மற்றும் செத்தெம்பர் ஆகிய காலப்பகுதியில் வேளாண்மை உற்பத்திகளின் போக்குவரத்திற்கான எரிபொருள் வழங்கலின் காரணமாகவும் சந்தைக்கு கொண்டு வரப்பட்ட பருவகால அறுவடைகளின் காரணமாகவும் 2022 யூலையிலிருந்து உள்நாட்டுச் சந்தையில் காய்கறிவிலைகளில் மிதமான தன்மையொன்றினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், அதிக மழைவீழ்ச்சி, சிக்கல்மிக்க சேகரிப்பு

2

நிலை மற்றும் போக்குவரத்து வசதி ஆகியவை காரணமாக 2022 இன் பிற்பகுதியை நோக்கி காய்கறிகளின் விலைகள் பரந்தளவில் அதிகரித்தன. அதேவேளை, ஐ.அ.டொலர் 26.7 மில்லியன் பெறுமதி கொண்ட 15,835 மெற்றிக் தொன் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், நீடித்து நிலைபெறத்தக்க விதத்தில் உள்நாட்டு காய்கறிகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரச அதிகாரசபைகளினால் பல்வேறான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில், புதிய காய்கறி வகைகளின் அபிவிருத்தி, பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட காய்கறி வகைகளின் அறிமுகம், காய்கறி உற்பத்திற்கான மண்வள முகாமைத்துவம், காய்கறி உற்பத்தியில் பூச்சி மற்றும் நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கான தொழிநுட்ப அபிவிருத்திகள் மற்றும் துறையின் உற்பத்தி மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய நோக்கத்துடன் காய்கறி பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவ நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஊக்குவித்தல் உள்ளடங்கலாக ஆண்டு காலப்பகுதியில் வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற தோட்டக்கலை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் பல்வேறான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

பழங்கள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளிற்கமைவாக, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பழ உற்பத்தியானது கலப்புச் செயலாற்றமொன்றைப் பதிவுசெய்தது. 2022இல், பழங்கள் உற்பத்தியானது முன்னைய ஆண்டை விட தோடம்பழம், எலுமிச்சை, றம்புட்டான், ஆணைக்கொய்யா மற்றும் முலாம்பழம் என்பவற்றின் உற்பத்தியில் கணிசமான சுருக்கத்துடன் 26.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை மாம்பழம், பப்பாளி, வாழைப்பழம் மற்றும் அன்னாசி என்பன உற்பத்தியில் அதிகரித்து காணப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 37.6 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வாழைப்பழம் மற்றும் பப்பாளி உள்ளடங்கலான 41,526 மெற்றிக் தொன்களைக் கொண்ட பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 42.2 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 32,591 மெற்றிக் தொன்கள் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பல பழங்களை இறக்குமதி செய்வதன் மீது அரசாங்கம் விதித்துள்ள வரையறைகள் காரணமாக உள்நாட்டு ரீதியில் விளையும் பழங்களுக்கான தேவை அதிகரித்துள்ள போதிலும், உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இயலாற்றல், வழங்கல் சங்கிலிச் சிக்கல்கள் ஆகியவை உள்நாட்டுப் பழத் துறையின் சாத்தியமான விரிவாக்கத்திற்கு இடையூறாக காணப்பட்டன. உள்நாட்டு பழ உற்பத்தியாளர்களின் இயலாற்றலையும் அதேபோன்று உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு வழங்கப்படும் பழங்களின் தரத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதின் முக்கியத்துவமானது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு நியதிகளுக்கமைவாகவும் அதேபோன்று குடித்தொகையின் ஊட்டச்சத்து நலனோம்புகையின் நியதிகளுக்கமைவாகவும் தேசிய பொருளாதாரத்திற்கு பழத்துறையின் கணிசமான பங்களிப்பின் அவசியம் மீள்வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக வேளாண்மை உள்ளீடுகள் தொடர்பிலும் அறுவடை தொடர்பிலும் சிறந்த வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல், உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமிடையில் நேரடி இணைப்புக்களை உருவாக்குதல், ஒப்பந்த வேளாண்மை முறைமையை உருவாக்குதல், துறையில் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல், பழத்தை பாதுக்காப்பதற்கும், சேகரிப்பதற்கும் பெறுமதி சேர்ப்பதற்குமாக முன்னேற்றப்பட்ட உட்கட்டமைப்பை இயலுமைப்படுத்தல் என்பன துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவதற்கு அத்தியாவசியமாக காணப்பட்டன. இதற்கமைய, உள்நாட்டு பழ உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது பழநடுகை தொடர்பிலும் பழநடுகையின் விருத்தி தொடர்பிலும் ஆலோசனைகளில் ஈடுபட்டதுடன் பழக்கன்று நடுகைக்காக உற்பத்தி தொழில்நுட்பங்கள் தொடர்பில் ஆலோசனை பணிகளை வழங்குதல், பூச்சி மற்றும் நோய் என்பவற்றை பரிசோதித்தல், பரிந்துரைக்கப்பட்ட பழ வகைகளின் சிறந்த தரமான பயிரிடுகை பொருட்களை வழங்குதல் என்பவற்றுடன் பல்வேறு ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடாத்தியது. அதேவேளை, வேளாண்மைத் திணைக்களத்தின் இயற்கை வள முகாமைத்துவ மையமானது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் மாம்பழம், வாழைப்பழம், மாதுளை, அன்னாசி, றம்புட்டான் மற்றும் முள்நாறிப்பழம் உள்ளடங்கலாக ஆறு பழக் கன்றுகளை பயிரிடுவதின் சாத்தியமான பிரதேசங்களை மதீப்பீடு செய்து விவரணையாக்க நடவடிக்கைகளை நிறைவுசெய்தது.

சீனி

உள்நாட்டு வளமாக்கிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் சீனிக் கைத்தொழில் பல்வேறு பின்னடைவுகளை அனுபவித்ததனால், 2019இலிருந்து பதிவுசெய்யப்பட்ட சீனி உற்பத்தியின் மேல்நோக்கிய போக்கானது 2022இல் தடைப்படுத்தப்பட்டது. மொத்த சீனி உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 80,555 மெற்றிக்தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் 78,857 மெற்றிக்தொன்களுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீத சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தியானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் முறையே 29.0 சதவீதத்தினாலும் 20.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து

மொத்த சீனி உற்பத்தியின் வருடாந்த வீழ்ச்சிக்கு பங்களித்தது. எனினும், 2022 காலப்பகுதியில் கல் ஓயா மற்றும் எத்திமலை சீனித்தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தியானது முறையே 27.4 சதவீதத்தினாலும் 36.2 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு விரிவடைதலொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, கல் ஓயா, செவனகல, பெல்வத்த மற்றும் எத்திமல ஆகியவற்றின் சீனி உற்பத்திகள் முறையே, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 36.2 சதவீதத்திற்கும், 16.0 சதவீதத்திற்கும், 30.6 சதவீதத்திற்கும் அத்துடன் 17.2 சதவீதத்திற்கும் வகைகூறின. ஆண்டு காலப்பகுதியில், நான்கு தொழிற்சாலைகளினால் முகாமை செய்யப்படும் கரும்பு பயிர்ச்செய்கையின் (முளைவிட்டவை) மொத்த அளவு 2.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியது. அதேவேளை, கரும்பு பயிர்ச்செய்கைக்கான கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் பிரதிபலித்து நான்கு தொழிற்சாலைகளின் சராசரி விளைச்சலானது 11.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இதற்கமைவாக, சராசரி விளைச்சல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஹெக்டேயர் ஒன்றுக்கு 67.2 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் ஹெக்டேயர் ஒன்றுக்கு 59.7 மெற்றிதொன்களாகக் காணப்பட்டது. சீனி ஆராய்ச்சி நிறுவகத்தின் படி, 2022 இறுதியளவில் மொத்த உள்நாட்டுச் சீனித் தேவைப்பாட்டின் ஏறத்தாழ 15.0 சதவீதம் மாத்திரம் உள்நாட்டு உற்பத்தியினால் பூர்த்தி செய்யப்பட்டதுடன் எஞ்சியுள்ள கேள்வி இறக்குமதிகளினூடாகப் பூர்த்திசெய்யப்பட்டது.

உள்நாட்டு சீனித் தொழிற்சாலையை வலுப்படுத்துவதை இலக்காகக்கொண்டும் உள்நாட்டு சீனித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இறக்குமதிகள் மீது மிகையான தங்கியிருத்தலை குறைக்கும் பொருட்டும் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. உள்நாட்டு உற்பத்திக்கான பாரியளவான சாத்தியப்பாட்டையும் உள்நாட்டு தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு உள்நாட்டு சீனிப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு சீனி ஆராய்ச்சி நிறுவகமானது உள்நாட்டு சீனித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்ட அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. உள்நாட்டு சீனி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முதன்மை முன்னுரிமையாகப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களை விரிவுபடுத்தி தொழிற்சாலை இயலாற்றலை மேம்படுத்துவதற்கான தேவைப்பாட்டை கருத்திற்கொண்டு, 2022 ஆரம்பப்பகுதியில் லங்கா சுகர் கம்பனி (பிறைவட்) லிமிடெட்டின் துணை நிறுவனமாக வெலி ஓயா சீனித் தொழிற்சாலை என்ற புதிய சீனித் தொழிற்சாலையை தாபிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. அதேவேளை, கந்தளை சீனித் தொழிற்சாலையை மீளத் தாபித்தலுடன் தொடர்புடைய முன்னேற்றமானது சட்ட சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் மிதமடைந்து காணப்பட்டது. கிளிநொச்சியில் வண்ணார்க்குளத்தில் கருப்பட்டி உற்பத்திக்காக விசேடமாக வெளியிடப்பட்ட புதிய வகையுடன் கூடிய நாற்றுக் கரும்புப் பெருக்க நாற்றுமேடையொன்றை தாபிக்கும் பணியும் 2022 காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்தது. நிலைபெறத்தக்க நாற்றுக்கரும்பு உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கலியைத் தாபிப்பதற்கான நாற்றுக்கரும்பு கொள்கையை உருவாக்குவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேவேளை உள்நாட்டு சீனித் தொழிற்சாலை கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் கொள்கை வழிகாட்டல்களை எடுத்துரைப்பதற்கு விசேட பணிக்குழுவொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

விலங்கு வளர்ப்பு

2022இல் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சவால்களினால் விலங்கு வளர்ப்புத் துறையின் செயலாற்றம் தடைப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், விலங்குத் தீவினங்களின் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி, மேய்ச்சல் தரை மற்றும் தீவனப் பயிர்ச்செய்கைக்காக தேவைப்படும் இரசாயன வளமாக்கிகள் பற்றாக்குறை, பொருளாதாரத்தின் கடுமையான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை பற்றாக்குறையினால் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளில் காணப்பட்ட சிக்கல்கள் என்பன காரணமாக ஏற்பட்ட விலங்குத் தீவனங்களின் பற்றாக்குறையினாலும் உயர்ந்தளவான செலவினாலும் ஒட்டுமொத்த பாற்பண்ணைப் பெறுமதிச் சங்கலி கடுமையாக பாதிக்கப்பட்டது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம், மொத்தத் தேசிய பால் உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2021இல் பதிவுசெய்யப்பட்ட 513 மில்லியன் லீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 506 மில்லியன் லீற்றர்களுக்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2022இல் பசும்பால் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 419 மில்லியன் லீற்றர்களுக்கு 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை எருமைப்பால் உற்பத்தி ஆண்டிற்கு அண்டு அடிப்படையில் 0.8 சதவீதத்தினால் 87 மில்லியன் லீற்றர்களுக்கு சிறிதளவான சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, பசும்பால் உற்பத்தியின் சராசரிச் செலவு 2021இல் பதிவுசெய்யப்பட்ட லீற்றரொன்றுக்கு ரூ.69.30இலிருந்து, 2022இல் லீற்றரொன்றுக்கு ரூ.80.50இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு பால் மாவின் பற்றாக்குறையுடன் இணைந்து திரவப்பாலுக்கான அதிகரிக்கப்பட்ட கேள்வி மற்றும் பால்மா விலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வின் காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் முறைசார் மற்றும் முறைசாரா பால் சந்தைகள் இரண்டிலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட திரவப்பாலுக்கான உயர்ந்தளவான விலையினை பண்ணையாளர்கள் பெற்றுக் கொண்டனர். இதற்கமைவாக, பசும்பாலின் லீற்றரொன்றிற்கான சராசரிப் பண்ணை விலையானது 2021இல் ரூ.98.00இலிருந்து 2022இல் ரூ.115.00இற்கு 17.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 ஆண்டு காலப்பகுதியில், நெல் மற்றும் சோளத்தின்

2

உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை சிக்கல்களுக்கு மத்தியில் தீவனப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தீவனப் பொருட்களின் குறைப்புக்களைத் தொடர்ந்து கோழி வளர்ப்புக்கான போதிய தீவனப் பொருட்கள் தொடர்பான பிரச்சனைகளுடன் கோழி வளர்ப்புத் துறை சிக்கல்களைத் தொடர்ந்தும் எதிர்கொண்டது. இதன்விளைவாக, முட்டை உற்பத்தியானது 2021இல் உற்பத்தி செய்யப்பட்ட 1,954 மில்லியன் முட்டைகளுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2022இல் 1,849 மில்லியன் முட்டைகளுக்கு 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தரவுகளின் படி, முட்டைக்கான உற்பத்திச் செலவு 2021இல் ரூ.18.07இலிருந்து 2022இல் ரூ.38.10இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து காணப்பட்டது. இதற்கிடையில், கோழி இறைச்சி உற்பத்தியானது 2021இல் 236,790 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் 228,130 மெற்றிக் தொன்களுக்கு 3.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, கோழி இறைச்சியின் உற்பத்திச் செலவு, 2021இன் கிலோகிராமொன்றுக்கு ரூ.434.19இலிருந்து 2022 காலப்பகுதியில் கிலோகிராமொன்றுக்கு ரூ.965.66இற்கு அதிகரித்தது. 2022இல், முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி மீது அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளை விதித்தபோதிலும், குறிப்பாக முட்டை வழங்கலில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறைகளும், இதன்விளைவாக ஏற்பட்ட இருப்புக்களின் பதுக்கல்களும் ஆண்டுமுழுவதும் முட்டை விலையை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைந்தது. மேலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஆட்டிறைச்சியின் உற்பத்தி 9.2 சதவீதத்தினால் 2,730 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த அதேவேளை, 2022இல் பன்றியிறைச்சியினதும் மாட்டிறைச்சியினதும் உற்பத்திகள் முறையே 5.3 சதவீதத்தினாலும் 21.4 சதவீதத்தினாலும் முறையே 9,300 மெற்றிக் தொன்களுக்கும் 21,890 மெற்றிக் தொன்களுக்கும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 2.5
கால்நடைத்துறை புள்ளிவிபரங்கள்

துணைத்துறை	2021 (அ)	2022 (ஆ)	மாற்றம் (%) 2020/21 (அ)	2021/22 (ஆ)
1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்)	1.5	1.5	2.6	-0.8
கறவைப் பசுக்கள்	1.1	1.1	2.5	-0.3
எருமைகள்	0.3	0.3	3.2	-2.5
2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்)	513.3	506.4	4.4	-1.3
பசும்பால்	425.4	419.2	2.8	-1.5
எருமைப்பால்	87.9	87.3	12.9	-0.8
3. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்)	98.00	115.00	19.5	17.3
4. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்)	1,953.7	1,848.6	4.5	-5.4
5. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ)	236.8	228.1	9.5	-3.7

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

விலங்குவளர்ப்பு தொழிற்துறை எதிர்கொண்ட சமகால சவால்களைக் கருத்திற்கொண்டு, துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் 2022 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியடைந்தன. அண்மைய ஆண்டுகளில் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியில் இலங்கை ஏறத்தாழ தன்னிறைவு கொண்டதாக காணப்பட்டதனால், உள்நாட்டு நுகர்வுத் தேவைப்பாடுகள் பெரும்பாலும் உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்திசெய்யப்பட்ட அதேவேளை, ஏற்றுமதிச் சந்தைக்கு நம்பிக்கைக்குரிய கைத்தொழில் துறையொன்றாக மேம்பட்டுள்ளது. எவ்வாறெனினும், தீவனப் பொருட்களின் கிடைப்பனவின்மை மற்றும் உயர்த்தப்பட்ட செலவு என்பன உற்பத்தி கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்தி, இவ்விலங்குப் புரதங்களின் வழங்கல் குறைப்பாடுகளுக்கு வழிவகுத்தது. இப்பின்னணியில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து, சோளம் மற்றும் விலங்குத் தீவன உற்பத்திக்கான ஏனைய பொருத்தமான தானியங்களை இறக்குமதி செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நாட்டின் வெளிநாட்டு கணக்குகளிலுள்ள சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் உள்நாட்டு விலங்கு வளர்ப்பு உற்பத்தித் துறையும் ஊக்குவிக்கப்பட்டது. மேலும், இலங்கையில் தற்போதுள்ள பசுக்களின் மரபணு ஆற்றலை மேம்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விலங்கு வளர்ப்பு (பாற்பண்ணை) இனப்பெருக்க செயற்றிட்டம், மருத்துவ மற்றும் உப மருத்துவ முலையழற்சிகளைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், மற்றும் பாதம் மற்றும் வாய் சம்பந்தப்பட்ட நோய், இரத்தக்கசிவு செப்டிசீமியா, பிளக்குவாட்டர் தொற்றுநோய் மற்றும் விலங்குகளிலிருந்து மனிதருக்கு பரவும் பற்றீரியா (புருசெல்லா) நோய்களுக்கு எதிரான பண்ணை விலங்குகளுக்கான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு செயற்றிட்டங்களை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் முன்னெடுத்தது. மேலும், ஐக்கிய அமெரிக்காவின் வேளாண்மைத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி உதவியுடன் பாற்பண்ணை தயாரிப்பாளர்களின் உற்பத்தித்திறனையும் அவர்களின் உற்பத்திகளின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்ட சந்தை சார்ந்த பாற்பண்ணை செயற்றிட்டமும் செயற்பாட்டிலிருந்தது.

மீன்பிடி

பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியில் 2022 காலப்பகுதியில் மீன்பிடித் துறையானது பின்னடைவொன்றை அனுபவித்தது. குறிப்பாக கடல் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக, உள்நாட்டு எரிபொருள் பற்றாக்குறையினால் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் சங்கிலிகள் தொடர்பில் ஏற்பட்ட இடையூறுகளினால்

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

துணைத்துறை	2021	2022 (அ)	மாற்றம் (%)	
			2020/21	2021/22 (அ)
கடல்	332	281	1.5	-15.4
கரையோரம் மற்றும் களப்பு	178	149	-2.4	-16.2
கடற்கரையிலிருந்து தொலைவில்	153	131	6.3	-14.5
நன்னீர் மீன்பிடி	104	117	2.4	11.9
பிடிப்பு	81	95	-4.3	17.5
பண்ணை மீன் வளர்ப்பு	9	8	-10.2	-15.7
இறால் வளர்ப்பு பண்ணைகள்	14	14	95.8	-2.3
மொத்தம்	436	397	1.7	-8.9

(அ) தற்காலிகமானது

மூலம்: கடற்தொழில் அமைச்சு

முக்கியமாகத் தூண்டப்பட்டு, கடந்த ஆண்டுடன் ஒப்பிகையில், 2022இல் மொத்த மீன் உற்பத்தி 397,230 மெற்றிக் தொன்களுக்கு 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைவாக, 2022இல் மொத்த மீன் உற்பத்தியின் ஏறத்தாழ 71 சதவீதத்திற்கு வகைகூறிய கடல்மீன் உற்பத்தியானது 2022இல் 280,610 மெற்றிக் தொன்களுக்கு 15.4 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. எனினும், நீர்நிலைகளின் பொருத்தமான முகாமைத்துவம் மற்றும் நீர்நிலைகளில் அதிகரித்த இருப்புகள் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு மீன்பிடித் துறை முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்து 2021இன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தியில் 11.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பை விளைவித்தது. அதிகரித்த ஏற்பாட்டுச் செலவுகளின் விளைவாக 2022இல் மீன் வகைகளின் சில்லறை விலைகள் பெருமளவில் உயர்ந்து காணப்பட்ட அதேவேளை, 2021இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்திலும் நவெம்பரிலும் மண்ணெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் ஆண்டின் பிற்பகுதியில் விலைகளை உயர் மட்டத்தில் வைத்திருந்தது. மீன்பிடி அமைச்சின் படி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மொத்த மீன் ஏற்றுமதிகள் 3.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, துறையின் குறைந்தளவான செயலாற்றமொன்றைப் பிரதிபலித்த அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில், அளவு நியதிகளில், மீன் இறக்குமதிகள் 25.7 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றை பதிவுசெய்தது. வலு நெருக்கடிக்கு மத்தியில், மீன்பிடித் துறையானது பல்வேறு பின்னடைவுகளை எதிர்கொண்டதுடன் கொந்தளிப்பான காலங்களில் தொடர்ச்சியான மீன்பிடி நடவடிக்கைகளை உறுதிசெய்து அதன்மூலம் கடுமையான பொருளாதார அதிர்வுகளிலிருந்து பாதுகாத்து மீன்பிடி கைத்தொழில்களின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு தூண்டியது. இதற்கமைவாக, கையேடு முறைமையை இயலச்செய்வதன் மூலமாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கான எரிபொருள் வழங்குதல் உறுதிப்படுத்தப்பட்ட அதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் இருப்புக்களை விநியோகிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையொன்றில் முக்கிய மீன்பிடி பிராந்தியங்களில் நிரப்பு நிலையங்கள் இனங்காணப்பட்டன.

2022 காலப்பகுதியில் மீன்பிடி உட்கட்டமைப்பு தளத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைவாக, மீன்பிடி அமைச்சானது பல்வேறு மீன்பிடித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்த அதேவேளை, நிலையான மீன்பிடி நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கு சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்திருந்தது. வெல்லன்கர மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானப்பணிகள் 2022மார்சில் நிறைவுசெய்யப்பட்டதுடன் 2022 காலப்பகுதியில் கந்தார மீன்பிடித் துறைமுகம், பலப்பிட்டிய மீன்பிடித் துறைமுகம், மற்றும் ரேவக்கை மீன்பிடித் துறைமுகம் உள்ளடங்கலாக பல்வேறு துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கடலோரப் பகுதிகளில் இயற்கை மீன்களின் தொகையை அதிகரிப்பதற்கு பல்வேறு நீர்த்தடாகங்களைச் சுத்தம்செய்து ஆழப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நீர்த்தடாக பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆண்டு காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்த அதேவேளை, அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களை குறைப்பதுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேவேளை, உள்நாட்டு மீன் மற்றும் உயிரின வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேசிய உயரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது. இது மீன் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. நீர்த்தேக்க இருப்புகளுக்கு தேவைப்படும் மீன் குஞ்சு வழங்கலை அதிகரிப்பதற்கு அம்பாறை, திருகோணமலை, மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட மூன்று மீன் இனப்பெருக்க அலகுகள் தாபிக்கப்பட்டதுடன் இவ்வலகுகள் உள்நாட்டிற்கு மீன் குஞ்சுகளின் தொடர்ச்சியான நிரம்பலை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மீன் குஞ்சிற்கு பின்னரான பருவ வளர்ச்சிக்கு உதவுவதற்காக சிறியளவிலான மீன் குஞ்சு உற்பத்திப் பிரிவுகளை மேம்படுத்தல் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களைப் புனரமைத்து மேம்படுத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. இறால் வளர்ப்பு நாட்டில் மிகவும் இலாபம் தரத்தக்க மீன்வளர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக மாறியமையால் சாத்தியமான அனைத்து பிரதேசங்களிலும் இறால் வளர்ப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, வினைத்திறன்மிக்க நீர் மீள்சுழற்சி முறைமையொன்றை அறிமுகப்படுத்தி பண்ணைப் பிரதேசங்களின் உயிரியல் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலமாக இறால்

2

அட்டவணை 2.7
முக்கிய உணவுப் பண்டங்களின் கிடைப்பனவு

விடயம்	அலகு	2010			2021 (அ)			2022 (ஆ)		
		உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)	உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)	உற்பத்தி	இறக்குமதிகள்	தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு)
அரிசி (இ)	'000 மெ.தொன்	3,011	126	152	3,203	147	151	2,081	783	129
சோளம்	'000 மெ.தொன்	162	16	9	472	23	22	259	191	20
கோதுமை	'000 மெ.தொன்	-	1,051	51	-	1,319	60	-	817	37
பெரிய வெங்காயம்	'000 மெ.தொன்	59	158	10	66	257	15	18	264	13
சீனி	'000 மெ.தொன்	31	548	28	81	582	30	79	460	24
உருளைக் கிழங்கு	'000 மெ.தொன்	52	130	9	76	117	9	48	154	9
உடன் மீன்	'000 மெ.தொன்	385	14	19	436	10	20	397	4	18
பசும்பால்	மில்லியன் லீற்றர்கள்	192	-	9(ஈ)	425	-	19(ஈ)	419	-	19(ஈ)
தேங்காய் எண்ணெய்	'000 மெ.தொன்	65	3	3	43	99	6	69	14	4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.68 மெற்றிக்தொன் அரிசி
(ஈ) ஆண்டொன்றிற்கான லீற்றர்கள்


மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - செவனகல அலகு
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - பெல்வத்தை அலகு
கல்லோயா (ஹிங்குரான) சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்
எத்திமல பிளான்ரேஷன் (தனியார்) லிமிட்டெட்
கடற்றொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை, புத்தளத்திலுள்ள இறால் பண்ணைகளுக்காக டச்சு கால்வாயை தூர்வாறுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மின்சார வழங்கலை நிறுவுதல் போன்ற நடவடிக்கைளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இறால் பண்ணைக்கு மேலதிகமாக, வர்த்தக ரீதியான நீர் உயிரின வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு கடற்சாதாழை, கடற்பாசி, கடலட்டை மற்றும் பால்மீன் பண்ணை வளர்ப்பு என்பன அபிவிருத்தியடைந்து வந்தன. தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் புத்தளம் கடற்பிரதேசங்களில் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட கடற்பாசி வளர்ப்பு நடவடிக்கைகளை வசதிப்படுத்தியது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலுள்ள கடலட்டை ஏற்றுமதி கிராமங்களில் கொத்தணி அடிப்படையிலான கடலட்டைப் பண்ணைகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்ட அதேவேளை மன்னாரிலும் நீர் உயிரின வளர்ப்பு வலயமொன்றைத் தாபிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அலங்கார மீன் உற்பத்தியின் உயர்ந்தளவான பெறுமதியை அதிகரித்து, அதன்மூலம் வெளிநாட்டு வருவாய்களை அதிகரிப்பதை இலக்காகக்கொண்டு, தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது புதிய அலங்கார மீன் வளர்ப்பை அபிவிருத்தி செய்தல், இனப்பெருக்கத்திற்காக மீன் குஞ்சுகளை வழங்குதல், நோய் நிர்ணய செயற்பாடுகள், பயிற்சியளித்தல், மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் உள்ளடங்கலாக அலங்கார மீன் உற்பத்தி தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டது. மேலும், பங்கதெனியாவில் கடல்சார் அலங்கார மீன் இனப்பெருக்க நிலையமொன்றை தாபிப்பதற்கும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில்

வங்கித்தொழில் முறைமையில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் பற்றாக்குறையின் விளைவாக காணப்பட்ட நீண்ட கால வலு நெருக்கடி மற்றும் முக்கிய மூலப்பொருட்களுக்கான பற்றாக்குறையுடன் இணைந்து உயர்ந்த பணவீக்கச் சூழல்களின் காரணமாக கொள்வனவுச் சக்தியில் ஏற்பட்ட தேய்வினைத் தொடர்ந்து நிலவிய குறைவடைந்த கேள்வி நிலைமைகள் 2022 காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளைப் பெருமளவிற்குப் பாதித்தன. கொள்கைத் தலையீடு ஆண்டின் பிற்பகுதியில் நிரம்பல் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த உதவிய போதிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலுமிருந்தும் தோன்றிய இப்பல்வேறு சவால்களின் காரணமாக கைத்தொழில் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீதம்

வரைபடம் 2.6
கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)
மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 16.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளின் குறைவடைந்த செயலாற்றம் கைத்தொழில் நடவடிக்கைகளின் சுருக்கத்திற்கு வழியமைத்த வேளையில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள், மின்வலு, வாயு, நீராவி மற்றும் வழிச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்து கைத்தொழில் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாகப் பின்னடைவதனை மேலும் தீவிரப்படுத்தின. எனினும், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள், வடிகால், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பங்களித்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கைத்தொழிலுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் உற்பத்தி மற்றும் கேள்வித் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

தயாரிப்பு

உள்நாட்டு அதிர்வுகளுக்குப் பெருமளவிற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய புடவை தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான உற்பத்திகள் தவிர்ந்த, அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் சுருங்கியமைக்கு நீடிக்கப்பட்ட மின்வெட்டுக்கள், எரிபொருள் மற்றும் முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை, ஏற்பாட்டுப் பிரச்சனைகள் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பனவற்றின் மோசமான தாக்கங்களே காரணமாகும். இதன்படி, ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளினதும் பெறுமதிகூட்டல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 12.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளின் மிகப்பெரும் பங்களிப்பாளராகவுள்ள உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு 2022இல் 14.2 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு சுருக்கமடைந்து ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்திற்கு வழிவகுத்தது. மேலும், ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், அடிப்படை உலோகம் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பன பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கின. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மற்றும் மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்[5] என்பன இவ்வாண்டுப்பகுதியின் சராசரியின் மீது சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 2.7
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)



(அ) இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி


கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதி சேர்த்தலானது 2022இல் எதிர்மறையான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்ததுடன், இது இலங்கைப் பொருளாதாரம் அனுபவிக்கும் முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து உருவாகும் பல்வேறு நெருக்கடிகளுக்கு காரணமாக அமையலாம். மோசமான பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில், மூலப் பொருட்களின் பற்றாக்குறைகள், சீர்குலைந்த போக்குவரத்து வலையமைப்புக்கள், தடைப்பட்ட மின்சார வழங்கல், அதிகரித்த உள்ளீட்டு விலைகள் போன்றன உள்ளடங்கலாக பன்முகப்பட்ட சவால்களை தயாரிப்புத் துறை எதிர்கொண்டது. இது ஆண்டு காலப்பகுதியில் துறையின் செயலாற்றத்தில் மோசமான தாக்கமொன்றை ஏற்படுத்தியது. பணவீக்க அதிகரிப்பு மற்றும் கையாளத்தக்க வருமானத்தின் உண்மைப் பெறுமதி குறைவடைதல், தயாரிப்புத் துறையின் செயலாற்றத்தில் மேலும் தடையேற்படுதல் என்பனவற்றுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில், ஒட்டுமொத்த சந்தை கேள்வியானது தளர்வுற்றது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, மொத்த கைத்தொழில் துறையின் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறிய ஒட்டுமொத்த தயாரிப்புத் துறையானது, கடந்த ஆண்டின் 7.3 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

5 கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது முந்தைய மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் பொருட்டு முன்னனி நிறுவனங்களை உள்ளடக்கிய கருத்து அளவீட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட ஓர் வியாபித்தல் சுட்டெண்ணாகும்.

2

வரைபடம் 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
(2015=100)

பிரிவு	கை. உ. சுட்டெண்ணில் நிறை ஏற்றங்கள் (%)	2021 (அ)	2022 (ஆ)	மாற்றம் (%) 2020/21 (அ)	மாற்றம் (%) 2021/22 (ஆ)
1. உணவு உற்பத்திகளின் தயாரிப்பு	35.2	109.3	93.1	0.2	-14.8
2. குடிபானங்களின் தயாரிப்பு	3.8	106.0	127.5	9.8	20.3
3. புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு	1.7	77.9	83.2	8.0	6.8
4. புடவைகளின் தயாரிப்பு	3.3	128.7	101.5	25.9	-21.1
5. அணியும் ஆடைகளின் தயாரிப்பு	19.8	95.4	100.5	17.5	5.3
6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு	0.3	78.6	87.4	1.3	11.2
7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்களின் தயாரிப்பு, வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்களின் தயாரிப்பு	0.2	82.5	81.0	15.0	-1.8
8. தாள் மற்றும் தாள் உற்பத்திகளின் தயாரிப்பு	1.7	86.5	49.0	5.8	-43.4
9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு	1.4	117.9	112.1	4.8	-4.9
10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு	7.4	71.1	30.0	-26.8	-57.8
11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு	4.1	89.8	98.6	-4.7	9.8
12. அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகளின் தயாரிப்பு	0.1	117.9	102.5	12.6	-13.1
13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் தயாரிப்பு	5.7	102.9	92.7	35.7	-9.9
14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு	7.8	137.4	113.5	23.0	-17.4
15. அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு	2.4	133.6	88.1	20.7	-34.1
16. பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு	1.3	124.6	72.0	23.5	-42.2
17. இலத்திரனியல் சாதனங்களின் தயாரிப்பு	2.0	81.4	65.1	20.6	-20.0
18. பொறி மற்றும் இயந்திர உற்பத்திகளின் தயாரிப்பு வே.எ.வ.	0.7	122.0	139.1	18.6	14.0
19. தளபாட உற்பத்தி	0.8	77.5	63.3	0.7	-18.3
20. ஏனைய உற்பத்திகள்	0.3	69.6	69.6	6.0	-
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்		104.2	91.6	7.3	-12.1

வே.எ.வ - வேறு எங்கும் வகைப்படுத்தப்படாதவை
(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உணவு உற்பத்திகள், புடவைகள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், மற்றும் அடிப்படை உலோக உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்பின் துணைத் துறைகள் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்து, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த சுருக்கத்திற்கு பெருமளவு பங்களிதன. எனினும், அவ்வவ்போது அவதானிக்கப்பட்ட தற்காலிக இடையூறுகள் காணப்பட்ட போதிலும், சுட்டெண்ணின் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு பங்களிக்கும் அணியும் ஆடைகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், தோல் மற்றும் தொடர்புடைய உற்பத்திகள், மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற துணைத் துறைகள் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.

2022இல் உணவுத் தயாரிப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, குடிபான தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வலுவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மூன்றில் ஒரு பங்கிற்கு வகைகூறிய உணவு உற்பத்திகளின் துணைத் துறையானது 2021இன் 0.2 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைத் தொடர்ந்து, 2022இல் 14.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. உணவு உற்பத்தி துணைத் துறையின் குறைந்த செயலாற்றமானது முக்கியமாக, வழங்கல் சங்கலி மற்றும் விநியோக வழிகளில் ஏற்பட்ட நெருக்கடியால் தூண்டப்பட்ட இடையூறுகளுடன், அரிசி தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திகள், பால் மா, கோதுமை மா, பாண் மற்றும் தேயிலை போன்ற உற்பத்திகளின் வீழ்ச்சி, மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் அதிகரித்த செலவு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் என்பனவற்றினால் தூண்டப்பட்டிருந்தது. மறுபுறம், மதுபானம், பியர் மற்றும் மென் குடிபானங்கள் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஏனைய துணைத் துறைகளுக்கு மத்தியில் குடிபானங்களின் துணைத் துறையின் தயாரிப்புச் செயலாற்றமானது குறிப்பிடத்தக்க விரிவடைதலைப் பதிவுசெய்தது. இதற்கமைவாக, குடிபானத் தயாரிப்பு நடவடிக்கைகள், 2021இன் 9.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கு மேலாக, 2022இல் 20.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2022இன் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த சாதகமான செயலாற்றம் இருந்தபோதிலும், 2022இன் நான்காம் காலாண்டு பகுதியில் துறைச் செயலாற்றத்தில் சிறிதளவான மிதமடைலொன்று அவதானிக்கப்பட்டது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் இரண்டாவது பாரிய துணைத் துறையாக விளங்கும் அணியும் ஆடைகள் தயாரிப்பானது உலகளாவிய வழங்கல் சங்கலியின் மீட்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, 2022இல் சாதகமான மீட்சியொன்றைப்

வரைபடம் 2.9
இயலளவுப் பயன்பாடு



பதிவுசெய்த அதேவேளை, புடவைகள் துணைத் துறை சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது. இதற்கமைவாக, அணியும் ஆடைகளின் துணைத் துறையின் தயாரிப்பானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022இல் 5.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. அணியும் ஆடைகள் துறை தொடர்பிலான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், ஏற்பாட்டுச் சிக்கல்கள், மற்றும் மின்சாரத் தடைகள் போன்ற மோசமான தாக்கங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு கொள்கைத் தீர்மானங்களினால் பெருமளவில் ஈடுசெய்யப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஏற்றுமதியாளர்கள் ஐ.அ.டொலர்களைப் பயன்படுத்தி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருளை நேரடியாக வாங்குவதை அனுமதித்தமை மற்றும் மூலப்பொருள் இறக்குமதிகளுக்கான தீர்வைச் சலுகைகளை வழங்கியமை என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, செலாவணி வீதத்தின் தேய்மானமும் குறிப்பாக இலங்கையின் முக்கியமான ஏற்றுமதி இடங்களில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான உலகளாவிய மீட்பும் அணியும் ஆடை துணைத்துறையின் ஏற்றுமதி வருமானத்தில் சாதமான விளைவை ஏற்படுத்தியது. எனினும், புடவைகள் உற்பத்திகளின் தயாரிப்பானது உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பின்னர் 2021இல் 25.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் வலுவான மீட்சியொன்றைப் பதிவுசெய்த போதும், முடிக்கப்பட்ட துணி, அச்சிடப்பட்ட துணி மற்றும் தேங்காய் நார் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பெரிதும் தூண்டப்பட்டு, 2022இல் ஏறத்தாழ 21.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது.

ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் தயாரிப்பு, அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு, மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் துணைத் துறைகள் என்பனவற்றில் ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட கணிசமானளவு சுருக்கங்களுடன் 2022இல் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றைப் பதிசெய்தன. இதற்கமைவாக, 2021இல் 20 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிகளைப் பதிவுசெய்த ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் தயாரிப்பு, அடிப்படை உலோகங்களின் தயாரிப்புத் துணைத் துறை மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் துணைத் துறை என்பன ஆண்டு காலப்பகுதியில் முறையே, 17.4 சதவீதத்தினாலும், 34.1 சதவீதத்தினாலும், 42.2 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. உள்நாட்டு கட்டுமானத் துறையின் குறைந்தளவான கேள்வி காரணமாக இத்துணைத் துறைகளின் உற்பத்திகளுக்கான கேள்வியில் சுருக்கம் ஏற்பட்டது. அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களை இடைநிறுத்துதல், அதிகரித்துவரும் மூலப்பொருள் செலவுகள், மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து இவை பல்வேறு பின்னடைவுகளை எதிர்கொண்டன. சீமெந்து, கூரை தாள்கள், தரை ஓடுகள், நெளி தாள்கள் மற்றும் கூரை ஓடுகள் போன்றவற்றின் உற்பத்தியானது கட்டுமானத் துறையிலிருந்து குறைந்தளவான கேள்வியைப் பிரதிபலித்து 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிசெய்தது. இது ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் செயலாற்றத்தை மோசமாகப் பாதித்தது. அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில், அடிப்படை இரும்பு மற்றும் உருக்கு, உருக்குத் தளபாடம் ஆகியவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் அடிப்படை உலோகங்களின் தயாரிப்புத் துறை மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை என்பனவற்றில் ஏற்பட்ட ஒட்டுமொத்த சுருக்கத்திற்கு பெருமளவில் பங்களித்தன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் 7 சதவீதத்திற்கு மேலாக வகைகூறும் கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறையின் தயாரிப்பானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 2022இலும் சுருக்கமொன்றை பதிவுசெய்தது. இதற்கமைவாக, கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 57.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து, 2016 தொடக்கம் வரலாற்றில் பாரியளவான சுருக்கத்தைப் பதிவுசெய்திருந்தது. உள்நாட்டுச் சந்தையின் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மத்தியில், மசகெண்ணெய்யின் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி காரணமாக ஆண்டு காலப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையங்களின்


2

நீண்டகால நிறுத்தல்களினால் இவ்வீழ்ச்சி பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. இதற்கமைவாக, டீசல், பெற்றோல் மற்றும் உலையெண்ணெய் உள்ளடங்கலாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் 2022இல் வீழ்ச்சியடைந்தன. எனினும், ஆண்டு காலப்பகுதியில் கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தியின் தயாரிப்பானது பெப்புருவரி, யூன், ஓகத்து, செத்தெம்பர் மற்றும் திசெம்பர் போன்ற மாதங்களில் மாதத்திற்கு மாத அதிகரிப்புகளைப் பதிவுசெய்தது.

தோலுடன் தொடர்புடைய உற்பத்திகள், மற்றும் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பின் துணைத் துறைகள் 2022 காலப்பகுதியில் சாதகமான வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன. தோலுடன் தொடர்புடைய உற்பத்திகளின் துணைத் துறையின் தயாரிப்பானது 2021இன் 1.3 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், முடிக்கப்பட்ட தோல், இயற்கையான தோல் ஜாக்கெட்டுகள் மற்றும் காலணிகளின் உற்பத்திகளின் விரிவாகத்தினால் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையலில் 11.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் துணைத் துறையின் தயாரிப்பும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. பிளாத்திக் பை மற்றும் சலவைத் தூள் உற்பத்திகளின் அதிகரிப்பானது இவ் வளர்ச்சிக்கு பங்களித்தன.

இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள் துணைத் துறையின் தயாரிப்பும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புகள் துணைத் துறையின் தயாரிப்பும் ஆண்டு காலப்பகுதியில் சுருக்கங்களைப் பதிவுசெய்தன. இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகளின் தயாரிப்பானது 2021இன் 35.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு விரிவடைதலொன்றைப் பதிவுசெய்த போதும் 2022இல் 9.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கொவிட்-19 பாதிக்கப்பட்டவர்கள் குறைந்ததைத் தொடர்ந்து மருத்துவ இறப்பர் கையுறைகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் முக்கியமாக இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள் துணைத் துறையில் சுருக்கம் ஏற்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரயர்கள், சிப்புகள், இறப்பர் தொகுதி மற்றும் இறப்பர் தாள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைப்பும் இச்சுருக்கத்திற்கு பங்களித்தது. அதேவேளை, மருத்துவப் பொருட்களுக்கும் ஏனைய சுகாதாரத்துடன் தொடர்புடைய பொருட்களுக்குமான தூண்டப்பட்ட கேள்வியுடன் நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து படிப்படியான விரிவாக்கமொன்றைக் காண்பித்த அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புகள் துணைத் துறையின் தயாரிப்பானது 2022 காலப்பகுதியில் 13.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது.

வரைபடம் 2.10
2022இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு



குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன
மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மரப்பொருட்கள் (தளபாடங்கள் நீங்கலாக), மின்சார சாதனங்கள், தளபாடங்கள், கடதாசி, மற்றும் கடதாசிப் பொருட்கள், மற்றும் அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க தயாரிப்புக்கள் போன்ற ஏனைய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் துணைத் துறைகள் சுருக்கங்களைப் பதிவுசெய்திருந்தபோதிலும், புகையிலை உற்பத்திகள் மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் துணைத் துறைகளின் தயாரிப்பானது 2022இல் விரிவடைதல்களைப் பதிவுசெய்தன. நெளி கடதாசிகள், அட்டைப் பெட்டிகள், கடதாசிப் பைகள், மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் உற்பத்தியில் ஏற்பட்ட குறைவடைதல் காரணமாக, கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்களின் துணைத் துறையின் தயாரிப்பானது 2022இல் மிதமான செயலாற்றமொன்றைக் காண்பித்திருந்தது. இதற்கமைவாக, கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் துணைத் துறையானது 2022இல் 43.4 சதவீதம் கொண்ட கணிசமானளவு ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நாணயத் தாள்கள் மற்றும் பத்திரிகை அச்சிடுவதிலுள்ள வீழ்ச்சிகளுடன் இணைந்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க துணைத் துறையும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.9 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது. மின்சார உபகரணங்களின் தயாரிப்பின் ஒட்டுமொத்த செயலாற்றமானது மின்சார பெனல் பலகைகள், மற்றும் சுருள் சாதனங்களுக்கான குறைவடைந்த கேள்வி காரணமாக மின்சார உபகரணங்களின் தயாரிப்பின் ஒட்டுமொத்த செயலாற்றமும் 2022இல் பாதிப்படைந்திருந்தது. எனினும், இயந்திரம் மற்றும் உபகரண துணைத் துறையின் தயாரிப்பானது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 18.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 காலப்பகுதியில் 14.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப்

பதிவுசெய்தது. அதேவேளை, சிகரெட்டுக்களின் தயாரிப்பின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பும் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது.

கைத்தொழில் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

ஆண்டு காலப்பகுதியில், பல்வேறு கொள்கை முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதனூடாக கைத்தொழில் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளித்த அதேவேளை பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து மீட்சியடைய கைத்தொழிலத் துறைக்கு துணையளித்தது. இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான அனைத்தையுமுள்ளடக்கியதும் முழுமையானதுமான கொள்கை கட்டமைப்பை நிறுவும் நோக்குடன், 2023-2048 வரையான காலப்பகுதிக்கான கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை கைத்தொழில் அமைச்சு நிறைவுசெய்தது. மேலும், கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையானது உலகளாவிய போட்டித்தன்மையை கொண்டதும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற தேசிய கைத்தொழில் தளமொன்றைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திகான தேசிய கொள்கையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு, கண்காணிப்பிற்கான நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பு, பொறிமுறைகள், மற்றும் காலமுறையான மீளாய்வுகளை நடாத்துவதற்கான முறையியல் போன்றன உள்ளடங்கலாக, மூலோபாய நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் 5 ஆண்டுகால இடைவெளிகளுக்காக தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 பெப்புருவரியில், 2023-2027 வரையான காலப்பகுதிக்கான மூலோபாய நடைமுறைப்படுத்தல் திட்டத்துடன் இணைந்து நிறைவுசெய்யப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திக்கான கொள்கை ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேவேளை, 2012இல் நிறுத்தப்பட்ட பொது தனியார் பங்குடைமை திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டி கடதாசி ஆலைகளில் உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்கு 2022 பெப்புருவரியில் அமைச்சரவை ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டமானது அதன் முதற்கட்ட அபிவிருத்தியில் ஐ.அ.டொலர்கள் 16 மில்லியன் கொண்ட முதலீடொன்றை உள்ளடக்கியதுடன் இயந்திரத்தையும் உட்கட்டமைப்பையும் தரமுயர்த்துவதன் மூலமாக நேரடி மற்றும் நேரடியற்ற சந்தைகளுக்கு கைத்தொழில் சார்ந்த தரக் கடதாசிகளை தயாரிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. இத்தொழிற்சாலை, 2024இல் அதன் எதிர்பார்க்கப்பட்ட நிறைவடைதலின் போது ஆண்டுக்கு ஏறத்தாழ 74,000 மெற்றிக் தொன்கள் கொண்ட கடதாசி உற்பத்தியை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டு காலப்பகுதியில், பொது தனியார் பங்குடைமை மாதிரியொன்றின் கீழ், குருஞ்சத்தீவு உப்பளத்தில் தொழிற்பாடுகளை மீளஆரம்பித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இச்செயற்றிட்டத்தை நிறைவுசெய்தவுடன், உப்பளங்களில், ஆண்டிற்கு ஏறத்தாழ 30,000 மெற்றிக் தொன்கள் கொண்ட உப்பு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வாகனம் தயாரித்தல், பொருத்துதல், உதிரிப்பாகங்களைத் தயாரித்தல் எனபனவற்றுக்கான நியம தொழிற்படுத்தல் நடைமுறை வழிகாட்டல்களை உள்நாட்டு வாகனங்களின் உள்ளகப் பொருத்துதல் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. 2022ஆம் ஆண்டின் இறுதியில், 20 தயாரித்தல் கம்பனிகள், நியம தொழிற்படுத்தல் நடைமுறைகளின் கீழ் பதிசெய்யப்பட்டிருந்த அதேவேளை ஆண்டு காலப்பகுதியில், 10,490 வாகனங்கள் பொருத்தப்பட்டன. இதற்கிடையில், இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம், பன்னாட்டு பங்காளருடன் கூட்டிணைந்து 2022இல் இலங்கையின் முதல் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்கப் பூங்காவை தாபித்தது. இப் பூங்கா, நாட்டில் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்கத்தின் வரலாற்று நிலையமாக காணப்பட்டு இலங்கைக்கான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முதலீட்டை கவருமெனவும் இதன்மூலம் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளுக்காக இலங்கையின் ஆற்றலை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட 'சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி இணைப்பு தளமானது' 2022 ஒத்தோபரில் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களின் நிதியியல் அறிவையும் வியாபார முகாமைத்துவ இயலுமைகளை மேம்படுத்துவதற்கு பெண்கள் வழிநடத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பில் குறித்த கவனத்துடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மத்தியில் அறிவு, திறன்கள் மற்றும் வலையமைப்பிற்கான அடைதலை இத்தளம் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 'நிபுணத்தா உதான நிகழ்ச்சித்திட்டம்' ஆரம்பிக்கப்பட்டு பிராந்தியத்தின் தொழிற்கல்வி பயிற்சி தேவைப்பாடுகளை வழங்கும்பொருட்டு வடமேற்கு மாகாணத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. அதேவேளை, மாத்தறையிலுள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தியும் செயற்பாட்டிலிருந்தது. எனினும், 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்கத்தின் இறுக்கமான வரவுசெலவுத் திட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, 2022 ஏப்பிறல் தொடக்கம் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

2

ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் முதலீட்டு சபையும் வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்கு பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்த அதேவேளை ஏற்றுமதி சார்ந்த உள்நாட்டு தயாரிப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக ஊக்குவித்தது. 2022இற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது 'தேசிய பொதியிடல் நிலையத்தை' மீளச் செயற்படுத்தவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இது பன்னாட்டு சந்தைகளுக்கு ஏற்றவாறு உள்நாட்டு பொதியிடல் பொருட்களையும் வடிவமைப்புக்களையும் ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், ஆடைகள், மாணிக்கம் மற்றும் ஆபரணம், மின்சாரம் மற்றும் மின்சார உற்பத்திகள், இறப்பர் அடிப்படைப் பொருட்கள், மற்றும் படகு மற்றும் படகு கட்டுதல் போன்றன உள்ளடங்கலாக, பல்வேறு தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதித் துறைகளை ஊக்குவிப்பதற்கு 2022-2026 வரையான காலப்பகுதிக்கான தேசிய ஏற்றுமதி நாமமொன்றையும் ஊக்குவிப்புத் திட்டமொன்றையும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை உருவாக்கியது. மேலும், ஏற்றமதித் துறைகளின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு கருத்தியல் முன்னுரிமைகளை இனங்காண்பதற்கு 24 முக்கிய ஏற்றுமதித் துறைகளை உள்ளடக்கி, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் 2021இல் நியமிக்கப்பட்ட ஏற்றமதி மதியுரைக் குழுக்களினால் ஆண்டுகாலத்தில் கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி சார்ந்த வியாபாரங்களின் ஊக்குவிப்பை இலக்காகக்கொண்டு, வர்த்தகச் சந்தைகள், சந்தை இணைப்பு உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்பூட்டல் அமர்வுகள், மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன உள்ளடங்கலாக, ஊக்குவிப்பு நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. அதேவேளை, முதலீட்டுச் சபையானது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தொழில்முயற்சிகளை ஆதரவளிக்கும் நிறுவனங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் தளமாக செயலாற்றுவதற்கு புதிய வியாபாரத் தரவுத்தளமொன்றை நிறுவியதுடன் அவர்களின் வரவிருக்கும் முன்மொழிவுகள் அல்லது புத்தாக்கங்களுக்கான பொருத்தமான பங்காளர்களை நாடியது. மேலும், முதலீட்டாளர்களுக்கு வியாபாரம் செய்வதை எளிதாக்கும் வேறுபட்ட முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலமாக முதலீட்டு அனுமதி செயன்முறையை ஒழுங்குமுறைப்படுத்தி துரிதப்படுத்துவதற்கு 'முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையமொன்று' நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

உள்நாட்டு கைத்தொழில் துறையை வசதிப்படுத்தவதற்குரிய பல்வேறு முயற்சிகளை ஏனைய அரசாங்க முகவராண்மைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தின. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி வியாபாரங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற வர்த்தக நாமத்தை மேம்படுத்துவதற்கான தமது முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்தது. இந் நோக்கத்திற்காக, தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது மாவட்ட மட்ட மற்றும் பிரதேச வர்த்தகச் சந்தைகளை முன்னெடுத்து மாத்தளை மாவட்டத்தில் முதல் 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற உரிமக் கடையைத் திறந்து வைத்தது. 2022இல், தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது 1,292 தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் அதன் 'பிராந்திய தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்' மூலமாக 957 வியாபாரங்கள் மற்றும் 1,573 வியாபார விரிவாக்கங்களை உருவாக்குவதற்கு ஆதரவளித்த அதேவேளை, உணவு நீரகற்றல், தேன், விளாம்பழம் மற்றும் ஏனைய பருவகால பொருட்கள், பலாப் பழம், மற்றும் நாணல் மற்றும் பனைமரம் போன்ற பல்வேறு கைத்தொழில் கொத்தணிகளுக்கு கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதேவேளை, 'கைத்தொழில் 2022' தேசிய கைத்தொழில் கண்காட்சியானது 2022 பெப்புருவரியில் 20 கைத்தொழில்களின் பங்கேற்புடன், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்டது. இது உள்நாட்டு கைத்தொழில் அதிபர்களுக்கு புதிய சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு ஆதரவளித்தது. மேலும், நாட்டின் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் 'சிறந்த தேசத்திற்கான தொடக்க' (Getup Startup for a Wealthy Nation) முயற்சியும் தொடங்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான 'தொழில்முனைவோர் கழக' முயற்சி, மற்றும் தொழில்முனைவோர் எதிர்கொண்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கான 'ஆலோசனை மையங்கள்', மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் கைத்தொழில் அதிபர்களை நோக்கி நேரடி முதலீட்டுக்கான இணைய அடிப்படையிலான 'முதலீட்டாளர் குழாம்' போன்றன உள்ளடங்கலாக முயற்சியாண்மைகளை ஊக்குவிக்கின்ற பல்வேறு அம்சங்களை இந்நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை செல்லிட தொலைபேசி செயலி மற்றும் பதிலளிப்பு இலக்கத்தையும் அறிமுகப்படுத்தி கைத்தொழில் அதிபர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்குமிடையிலான நெருங்கிய தொடர்பை வசதிப்படுத்துவதற்கான தளமொன்றை உருவாக்கியது. அதேவேளை, நாடு முழுவதும் சிறிய அளவிலான தொழில்முனைவோரை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு உற்பத்தித்திறன் வாய்ந்த மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தொடர்ந்தும் நடாத்தியது.

பயிற்சியளித்தல் மற்றும் ஊக்குவிப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தல் மூலமாக நாட்டில் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்களின் கைத்தொழில்களுக்கு கைத்தொழில் சம்மேளனம் தொடர்ந்தும் ஆதரவளித்தது. ஆண்டு காலப்பகுதியில், வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு பல்வேறு வர்த்தக பிரதிநிதித்துவம், வலையமைப்பு நிகழ்வுகள்,

பன்னாட்டு செயலமர்வுகள், மற்றும் கலந்துரையாடல் கூட்டங்கள் போன்றனவற்றை இலங்கை வர்த்தக சம்மேளனம் தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. மேலும், 'எல்லைகள் முழுவதும் வர்த்தகம் செய்வதற்கான வியாபார உத்திகள்' என்ற தொனிப்பொருளின் கீழ், இலங்கை வர்த்தக சம்மேளனமானது ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வர்த்தக அறிவை அதிகரிப்பதற்கு பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மையுடன் கூட்டிணைந்தது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனமானது சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறைக்கு அறிவூட்டி வலுவூட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் காணப்பட்டு நாடளாவிய ரீதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்திருந்தது. பெண்களின் முயற்சியாண்மையை மேம்படுத்துவதன் மூலம் மேம்பட்ட வர்த்தக வாய்ப்புக்களை வலையமைப்பதை இலக்காகக் கொண்டு இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் 2022 காலப்பகுதியில், அரசாங்க அதிகாரசபைகள், பிராந்திய சம்மேளனங்கள், மற்றும் பன்னாட்டு ஒழுங்கமைப்புகள் என்பனவற்றுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டது.

தொழில்நுட்ப மேம்பாடுகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்ட அரசாங்கத்தின் முயற்சிகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்தன. அரசாங்கத்தின் ஒட்டுமொத்த முயற்சிகளை நிறைவுசெய்யும் வகையில், தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவகமானது உள்நாட்டு தயாரிப்பு கைத்தொழில்களில் தொழில்நுட்பத்தையும் ஆய்வையும் பயன்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கு தொழில்நுட்பப் பரிமாற்றல் கொள்கையொன்றை உருவாக்கியது. மேலும், தனியார்துறை கம்பனியொன்றுடன் கூட்டிணைந்து தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவகமானது கைத்தொழில் நோக்கங்களுக்காக பாசிகளைப் பயன்படுத்தி உயிரியல் டீசல் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தியதுடன் வேளாண்மை அபிவிருத்திகள் முயற்சிகளுக்காக 280,000 ஏக்கர்கள் கொண்ட வயல்களுக்கு உயிரியல் வளமாக்கியை அறிமுகப்படுத்தியது. அதேவேளை, இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனமானது வலு, மேம்பட்ட பொருட்கள், கனிமங்கள், புடவைப் பொருட்கள், மற்றும் செயன்முறைகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டது. மேலும், இலங்கையில் புலமைச் சொத்துக்களை வர்த்தகமயப்படுத்துவதுடன் தொடர்புடைய இடைவெளிகளை இனங்காண்பதில் விசேட கவனத்தை செலுத்தி, புத்தாக்கம் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு ஆண்டுமுழுவதும் பல்வேறு நடவடிக்கைகளில் தேசிய புத்தாக்க முகவராண்மை தீவிரமாகப் பங்கேற்றது. தேசிய விஞ்ஞான மன்றமானது ஆராய்ச்சி அறிஞர்களுக்கு பல்வேறு ஆராய்ச்சி கொடைகளை தொடர்ந்து வழங்கி 2022 காலப்பகுதியில் புதிய உற்பத்தி அபிவிருத்தி முயற்சிகளை வசதிப்படுத்தியது.

அரசாங்கமானது நெருக்கடியுடன் தொடர்புடைய சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதற்கு கைத்தொழில்களை தொடர்ந்து வசதிப்படுத்திய அதேவேளை கைத்தொழில் துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதிப்படுத்தியது. கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள் நிலவிய காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக வசதிப்படுத்தும் முகமாக இலங்கை போக்குவரத்து சபையின் முகாமைத்துவக் களஞ்சியத்தினூடாக கைத்தொழில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கான விதந்துரைப்பு கடிதங்களை வழங்குவதற்கு கைத்தொழில் அமைச்சு வழிமுறைகளை முன்னெடுத்தது. மேலும், உள்நாட்டு தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளித்து அவர்களின் தொழிற்பாடுகளை தக்கவைப்பதற்கான ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கு இந்திய கொடுகடன் வசதியின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வசதிகள் வழங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு துணையளித்தது. அதேவேளை, முன்னெப்பொழுதுமில்லாத பேரண்டபொருளாதார அழுத்தங்களினாலும் கொவிட்-19 நோய்த்தொற்றினாலும் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைக் கருத்திற்கொண்டு, 2022 யூலையிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்கு சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக, அனைத்து பொருளாதாரத் துறைகளிலுமுள்ள பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு விடயத்திற்கு விடயம் அடிப்படையில் பொருத்தமான கொடுகடன் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளையும் வங்கியல்லா நிதியியல் நிவனங்களையும் இலங்கை மத்திய வங்கி கேட்டுக்கொண்டது. மேலும், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில், 'சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் கொடுகடன்வசதி' கடன் திட்டத்தின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 13.5 மில்லியன் கொண்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியின் பகிர்ந்தளிக்கப்படாத தொகையானது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அவசரப் பதிலிறுப்பு முயற்சிகளுக்காக மீள்ஒதுக்கீடு செய்யப்பட்டது. வேளாண்மை, சுற்றுலா மற்றும் ஏனைய ஏற்றுமதி சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தளவு தொழில்முயற்சிகளுக்கு சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்திலும் நியாயமான எல்லையொன்றிலும் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில், வசதியான தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவது இவ் மீள்ஒதுக்கீட்டின் முதன்மை குறிக்கோளாக காணப்பட்டது. மேலும், மூலப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக ஆடைத் தயாரிப்பாளர்கள் எதிர்கொண்ட சவால்களைக் கருத்திற்கொண்டு உள்நாட்டில் தயாரிக்கப்படாத தேவையான துணைப்பொருட்களையும் பொருட்களையும் இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கு 2022 ஓகத்தில் அமைச்சரவை ஒப்புதலளித்தது.

2

கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

நிரம்பல் மற்றும் கேள்விப்பக்க தடங்கல்கள் இரண்டினதும் காரணமாக கட்டடவாக்க நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு 2022இல் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20.9 சதவீதம் கொண்ட சுருக்கத்தினை ஏற்படுத்தின. மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள் அதிகரித்துச் செல்லும் உள்ளீட்டுச் செலவுகளுடன் இணைந்தமை, குறைவடைந்த நிரம்பலர் கொடுகடன் மற்றும் நிறைவடைந்த அரசின் செயற்றிட்டங்கள் மீது செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் என்பனவற்றுடன் சேர்ந்து கட்டடவாக்க நடவடிக்கைகளிலுள்ள வழங்கல்பக்கப் பிரச்சனைகளுக்கு வழிவகுத்தன. இது, அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் இடைநிறுத்தப்பட்டமையிலிருந்தும் தனியார் துறை முதலீடுகளைக் கட்டுப்படுத்திய உயர்ந்த வட்டி வீதச் சூழ்நிலைகளிலிருந்தும் தோன்றிய வழங்கல்பக்க இடையூறுகளினால் மேலும் அதிகரித்தது. கட்டடவாக்கத் துறையில் காணப்பட்ட குறைந்த செயலாற்றம் கட்டுமானத்துடன் தொடர்பான குறிகாட்டிகளிலும் பிரதிபலித்தது. இதன்படி, நாட்டின் மொத்த சிமெந்து கிடைப்பனவு, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 35.9 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதியும் 2021இன் 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 35.8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. மேலும், தனிப்பட்ட வீடமைப்புக் கட்டுமானங்களுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடனும் 2022 திசெம்பர் இறுதியில் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, மண் அகழ்வு போன்ற கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்ற முக்கியமாக சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 31.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. மேலும், இரத்தினக்கல் அகழ்வுகளின் பின்னடைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இரத்தினக்கல் ஏற்றுமதி அளவுகள் 2022இல் 8.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.


மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு

மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 4.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் நிரம்பல் இடையூறுகள் மற்றும் மேல்நோக்கிய விலைத் திருத்தங்களினால் கணிசமாக பாதிக்கப்பட்ட மின்வலு, வாயு, நீராவி மற்றும் வளிச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 5.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள், வடிகால், கழிவு சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் முறையே 0.6 சதவீதத்தினாலும் 3.9 சதவீதத்தினாலும் அதிகரித்து 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.8 சதவீதம் மற்றும் 3.3 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்தன.

பணிகள்

பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் நீண்ட கால வலு நெருக்கடி, பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் உயர் பணவீக்கம் என்பனவற்றினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட பணி நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 2.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்கு உண்மைச் சொத்து, காப்புறுதி, நிதியியல், மனித ஆரோக்கியம் மற்றும் தொழில்சார் பணிகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் தூண்டுதலாக அமைந்தன. மேலும், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புதல் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தன. எனினும், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணிகள் கணிசமாக வளர்ச்சியடைந்தமைக்கு சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றின் மீட்சி முக்கிய காரணமாக அமைந்த வேளையில், போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கல்வி, பொது நிருவாகம், அஞ்சல் மற்றும் கூரியர் பணிகள் சாதகமான பங்களிப்புக்களைப் பதிவுசெய்தன. இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்தம் திரட்டப்படும் பணிகள் நடவடிக்கைகளுக்கான உற்பத்தியாளர் முகாமைத்துவச்


வரைபடம் 2.11
பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.12
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)



(அ) இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சுட்டெண் பணி நடவடிக்கைளில் காணப்பட்ட அபிவிருத்திகளை எடுத்துக்காட்டியது. மேலும், பணிகள் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் விற்பனைத் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

வழங்கல்பக்க இடையூறுகள் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பன மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை மழுங்கடித்து பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினைத் தோற்றுவித்தன. 2021/2022 பெரும்போக காலத்தில் குறைந்தளவு அறுவடையிலிருந்து தோன்றிய வழங்கல் பின்னடைவுகள், நுகர்வுப்பொருள் இறக்குமதிகள் உள்ளிட்ட இறக்குமதி அளவுகளில் கணிசமான சுருக்கத்தினைத் தோற்றுவித்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள், எரிபொருள் நிரம்பலுக்கு ஏற்பட்ட இடையூறுகள் என்பன இவ்வாண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்படுவதற்கு காரணமாயின. உயர்ந்த பணவீக்கச் சூழ்நிலையின் கீழ் கொள்வனவு வலு மோசமடைந்தமையின் காரணமாக குறைவடைந்த கேள்வி, வரிகள் மற்றும் பொதுப் பயன்பாட்டுத் தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர்ந்த வட்டி வீதங்களின் காரணமாக நுகர்வோர் கொடுகடன்கள் குறைவடைந்தமை என்பன சூழ்நிலையினை குறிப்பாக, ஆண்டின் பின்னரைப்பகுதியில் மேலும் தீவிரப்படுத்தின.

போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பின்னரான மீட்சியால் பெறுமதிகூட்டப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. போக்குவரத்துடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்கள் மற்றும் இலங்கைப் புகைவண்டி என்பனவற்றினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர்கள் 2022இல் கணிசமானளவிற்கு உயர்வடைந்து எரிபொருள் செலவு மற்றும் பொதுப் போக்குவரத்திற்கு எரிபொருள் வழங்கலில் காட்டப்பட்ட முன்னுரிமை என்பனவற்றின் காரணமாக பொதுப் போக்குவரத்து முறைக்கான கேள்வி அதிகரித்தமையைப் பிரதிபலித்தன. மேலும், வான் போக்குவரத்துப் பணிகள், இவ்வாண்டுப்பகுதியில் சிறிலங்கன் எயார்லைன்சின் பயணிகள் கி.மீற்றர்கள் மற்றும் சரக்கு கி.மீற்றர்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு சுற்றுலா நடவடிக்கைகளின் மீட்சியுடன் படிப்படியாக மீட்சியடைந்தன. எனினும், துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளினைப் பரிசீலனையில் கொள்கையில் கொள்கலன் கையாளல் (இருபது அடிக்குச் சமனான அலகுகளின் நியதிகளில்), சரக்குக் கையாளல் என்பன இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு உலகளாவிய வர்த்தக அளவுகள் மெதுவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என்பனவற்றின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 27.0 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. வலுப் பற்றாக்குறை மற்றும் சமூக அமைதியின்மையின் காரணமாக ஏற்பட்ட தடங்கல்களுக்கு மத்தியிலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இந்நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தன. உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட தேய்வு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகக் கவர்ச்சிகரமான விடுமுறைச் சுற்றுலாத் தலமாக இலங்கையை மாற்றியது. மேலும், அநேக சுற்றுலா விடுதிகள் குறிப்பாக, எரிபொருள் பற்றாக்குறை நிலவிய காலப்பகுதியில் போக்குவரத்து வசதிகளை இலவசமாக வழங்குவது உள்ளிட்ட பிரத்தியேகமான பொதிகளை வழங்கின. எனினும், இலங்கைப் பொருளாதார நெருக்கடியின் எதிர்மறையான தாக்கங்கள் பற்றி குறிப்பிட்ட பன்னாட்டு ஊடகங்களினால் சுற்றோட்டப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் பல வெளிநாட்டு அரசாங்கங்களினால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையுடன் கூடிய பயண ஆலோசனைகள் இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாத் தொழில் துறையின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்கின. மேலும், கியூஆர்

குறியீட்டு முறைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான எரிபொருள் கிடைத்தமை, நீண்ட தூர பயணங்களிலிருந்து உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை தடைசெய்தது.

நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

2

நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2021இன் 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 15.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு அனைத்து மூன்று நடவடிக்கைகளினதும் பெறுமதிகூட்டல்களில் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கமே காரணமாகும். உயர்ந்த வட்டி வீத சூழல் கொடுகடனுக்கான ஒட்டுமொத்தக் கேள்வியை குறைத்த வேளையில், இக்காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த விலை மட்டங்கள், நிலையான விலைகளைப் பரிசீலனையில் கொள்ளும் போது இப்பணிகளின் பெறுமதிகூட்டல்களைப் பாதித்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீட்டில் எடுத்துக்காட்டப்பட்டவாறு உயர்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் நலிவடைந்த பொருளாதார நிலைமைகளின் கீழ் கடன்பாட்டாளர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மோசமடைந்தமையின் முக்கிய காரணமாக கடன் வழங்குவதற்கான விருப்பம் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் 2021இன் 7.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 11.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்த வேளையில் வதிவிடச் சொத்துடமையை உள்ளடக்கிய உண்மைச் சொத்து நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 12.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகளும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 26.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 47.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமைக்கு ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைந்த செயலாற்றமே முக்கிய காரணமாக அமைந்தது.

தகவல் மற்றும் தொடர்பூட்டல்

உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மற்றைய பல பொருளாதார நடவடிக்கைகளை விஞ்சிக் காணப்பட்ட தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட கேள்வி வழமைக்குத் திரும்பியமை மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்கள் மெதுவடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2021இல் பதிவுசெய்யப்பட்ட 21.0 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2022இல் 0.3 சதவீதத்தினால் சிறிதளவில் சுருக்கமடைந்தன. மின்வலு மற்றும் எரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட தடங்கல்கள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களில் காணப்பட்ட பற்றாக்குறை என்பனவும் இந்நடவடிக்கைகளைப் பாதித்தன. இதன்படி, இப்பிரிவின் பிரதான பங்களிப்பாளரான தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 2.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு உலகளாவிய கேள்வி மெதுவடைந்தமை மற்றும் இக்காலப்பகுதியில் நிலவிய நீண்ட கால மின்வெட்டு போன்ற வழங்கல்பக்கப் பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டன. அதேவேளை, தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 14.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் பணிகள் மீது விதிக்கப்பட்ட வரிகள் மீதான மேல் நோக்கிய திருத்தத்துடன் சேர்ந்து உயர்ந்த பணவீக்க நிலைமைகளின் காரணமாக கொள்வனவுச் சக்தி மோசமடைந்தமையிலிருந்து தோன்றிய குறைவடைந்த கேள்வியே காரணமாகும்.

ஏனைய பணிகள் நடவடிக்கைகள்

நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார நடவடிக்கைகளின் பாதிப்புக் காரணமாக 2022இல் பெரும்பாலான ஏனைய பணி நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் சுருக்கமடைந்தது. இந்நடவடிக்கைகளில் பெரும்பாலானவை ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட நிரம்பல் பற்றாக்குறையினால் முக்கியமாக பாதிக்கப்பட்டனவெனினும் அதே நடவடிக்கைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் குறைவடைந்த கேள்வி நிலைமைகளினால் பாதிக்கப்பட்டன. இதன்படி, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் 2022இல் முறையே 4.0 சதவீதத்தினாலும் 11.0 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தமைக்கு ஒப்பீட்டு ரீதியில் சாதகமற்ற வியாபாரச் சூழல் காணப்பட்டமையே காரணமாகும். கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட ஆண்டு காலப்பகுதியில் உயர்மட்டங்களில் வளர்ச்சியடைந்த மனித சுகாதார நடவடிக்கைகள் 2022இல் 8.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, கல்வி, பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, அஞ்சல் மற்றும் கூரியர் பணிகள் 2022இல் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன.

2.5 செலவினம்

பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்களைக் கொண்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 32.3 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய உயர்ந்த மட்டங்களில் காணப்பட்ட விலைகளே பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் நுகர்வுச் செலவினம் 2021இன் 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 34.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுச் செலவினமும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 25.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 28.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில், நடைமுறை விலைகளில் வெளிநாட்டுக் கேள்வி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 34.7 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கு மாறாக 2022இல் 34.1 சதவீதத்தினால் மேம்பட்டது. இதற்கு இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பணிகளில் காணப்பட்ட 41.2 சதவீத வளர்ச்சியை விஞ்சி ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பணிகள் இவ்வாண்டுப்பகுதியில் 74.1 சதவீத கணிசமான வளர்ச்சியை பதிவுசெய்தமையே காரணமாகும். நடைமுறை விலைகளில், ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்த வர்த்தக மாற்று விகிதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி திரவப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் முக்கிய ஏற்றுமதி அமைவிடங்களின் நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சியினால் ஏற்றுமதி இலாபம் அடைந்தமையும் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தது. இதன்படி, நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகை மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பன 2021இன் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 37.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

நிலையான விலைகளில், மொத்த உள்நாட்டுச் செலவினம் கணிசமானளவிற்கு சுருக்கமடைந்தமைக்கு கொள்வனவுச் சக்தி தேய்வடைந்தமை, முதலீடு மற்றும் நுகர்வு இரண்டினையும் ஊக்கமிழக்கச் செய்த உயர்ந்த வட்டி வீதச் சூழல் மற்றும் பொருட்களின் பற்றாக்குறை என்பன பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன. இதன்படி, நுகர்வு மற்றும் முதலீடுகள் இரண்டின் மீதான செலவினம் 2022இல் முறையே 7.5 சதவீதத்தினாலும் 24.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து மொத்த உள்நாட்டுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 13.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தைத் தோற்றுவித்தது. அதேவேளை, நிலையான விலைகளில், தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது அளவு நியதிகளில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாக 2022இல் 101.1 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியுடன் நேர்க்கணிய தன்மையொன்றிற்குத் திரும்பியது. இதன் விளைவாக, நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2021இன் 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அட்டவணை 2.9
மொத்த கேள்வி (அ)

விடயம்	நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்)			நிலையான (2015) விலைகள் (ரூ.மில்)		
	2020 (ஆ)	2021(ஆ)(இ)	2022 (இ)	2020 (ஆ)	2021 (ஆ)(இ)	2022 (இ)
அ. உள்நாட்டுக் கேள்வி	11,469,129	12,434,283	16,700,557	9,127,604	9,293,726	8,596,156
நுகர்வு	0.6	8.4	34.3	-4.9	1.8	-7.5
(% மாற்றம்)	5,168,381	6,466,957	8,304,627	4,349,587	4,544,089	3,412,566
மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்	-4.8	25.1	28.4	-0.6	4.5	-24.9
(% மாற்றம்)	16,637,510	18,901,240	25,005,184	13,477,191	13,837,815	12,008,722
மொத்த உள்நாட்டு கேள்வி	-1.1	13.6	32.3	-3.6	2.7	-13.2
(% மாற்றம்)						
ஆ. வெளிநாட்டுக் கேள்வி	2,418,542	2,980,263	5,187,941	1,961,341	2,159,760	2,380,539
பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்	-30.3	23.2	74.1	-29.6	10.1	10.2
(% மாற்றம்)	3,384,516	4,281,313	6,045,399	2,842,981	2,959,641	2,371,412
பொருட்களினதும் பணிகளினதும் ,றக்குமதிகள்	-22.9	26.5	41.2	-20.1	4.1	-19.9
(% மாற்றம்)	-965,975	-1,301,049	-857,458	-881,640	-799,881	9,127
தேறிய வெளிநாட்டுக் கேள்வி	-5.1	-34.7	34.1	-14.1	9.3	101.1
(% மாற்றம்)						
	15,671,535	17,600,191	24,147,726	12,595,550	13,037,934	12,017,849
இ. மொத்த கேள்வி	-1.5	12.3	37.2	-4.6	3.5	-7.8
(% மாற்றம்)						

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2

நுகர்வு

பொருளாதாரத்தின் மிகப்பெரும் செலவினக் கூறான நுகர்வுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 34.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு நுகர்வு விலைகளில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும். இதன்படி, 2022இன் மொத்த நுகர்வுச் செலவினத்தில் 89.7 சதவீதத்திற்கு வகைகூறிய தனியார் நுகர்வுச் செலவினம் நுகர்வுப்பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் விளைவாக, பெரும்பாலும் அனைத்து தனியார் நுகர்வுச் செலவின வகைகளிலும் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, அரச நுகர்வுச் செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடைந்து மொத்த நுகர்வு வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்தது.

உண்மை நியதிகளில் வீட்டுத்துறையினரின் நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சி நுகர்வோர் கொள்வனவுச் சக்தியில் ஏற்பட்ட தேய்வு மற்றும் வழங்கல் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக நடைமுறை விலைகளில் தனியார் துறை நுகர்வுச் செலவினம் 2021இன் 9.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 39.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உயர்ந்த பணவீக்கம் தூண்டுதலாக அமைந்தது. உணவு மற்றும் மதுசாரமல்லாத குடிவகைகள் மற்றும் போக்குவரத்து வகைகளைக் கொண்ட முக்கிய தனியார் துறைச் நுகர்வுச் செலவினத்திலிருந்து குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களை அவதானிக்க முடிந்ததுடன் இவை இவ்வாண்டுப்பகுதியில் முறையே 25.9 சதவீதத்தினாலும் 69.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. 2022இல் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப்பொருட்களின் விலை மட்டங்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட தேய்வும் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பெயரளவு வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. மேலும், வலு விலைகளில் ஏற்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள் வீட்டுத்துறைச் செலவினத்தை பல வகைகளில் குறிப்பாக போக்குவரத்து மற்றும் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் என்பனவற்றின் மீது அதிகரித்ததோடு இது பெரும்பாலான தனியார் துறை நுகர்வுச் செலவினங்களிலும் பிரதிபலிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் ஒன்றுசேர்ந்த மற்றும் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் உள்ளடக்குகின்ற நடைமுறை விலைகளிலான அரசாங்க நுகர்வுச் செலவினம் 2021இன் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரமென்பவற்றை உள்ளடக்கிய அரசாங்கத்தின் தனிப்பட்ட இறுதிச் செலவினம் 2021இன் 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. மேலும் பொதுமக்கள்

அட்டவணை 2.10
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

	வகை	மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%)			வளர்ச்சி (%)	
		2020 (ஆ)	2021 (ஆ)(இ)	2022 (இ)	21/20 (ஆ)(இ)	22/21 (இ)
1.	உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள்	31.4	33.4	30.2	16.2	25.9
2.	வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள்	1.9	1.7	1.4	0.5	10.8
3.	புடவையும் காலணியும்	7.4	4.2	5.1	-38.0	70.7
4.	வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள்	10.3	10.2	8.1	8.6	10.8
5.	தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு	1.6	1.8	1.5	26.4	18.3
6.	நலம்	2.7	3.7	3.1	48.4	16.9
7.	போக்குவரத்து	21.3	21.2	25.9	9.0	69.8
8.	தொடர்பூட்டல்	1.0	1.1	0.8	15.5	-0.3
9.	பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம்	3.2	3.2	3.0	9.1	31.1
10.	கல்வி	1.7	1.6	1.5	5.6	26.6
11.	விடுதிகள் மற்றும் உணவகங்கள்	2.8	3.4	5.1	30.6	109.0
12.	பல்வகைப் பொருட்களும் பணிகளும்	15.1	15.0	15.9	8.7	47.4
13.	வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள்	1.0	0.5	0.7	-38.6	68.8
14.	கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள்	1.3	1.0	2.3	-18.2	225.7
	மொத்த தனியார் நுகர்வுச் செலவு	100.0	100.0	100.0	9.4	39.0

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது


மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பணிகள், பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு போன்ற முழுச் சமூகத்திற்கும் கூட்டாக நன்மையளிக்கும் பணிகள் மீதான செலவினங்களை உள்ளடக்குகின்ற பிரதான அரச நுகர்வு செலவின வகையான அரசாங்கத்தின் ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2021இன் 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் மெதுவான வீதத்தில் 1.7 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது.

முதலீடு

நடைமுறை விலைகளில் முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி 2021இன் 25.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 28.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உண்மை நியதிகளில் முதலீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்த போதும் முதலீட்டுப் பொருட்களின் விலைகள் கணிசமாக உயர்வடைந்தமையே காரணமாக அமைந்தது. முதலீட்டுச் சூழல் இவ்வாண்டுப்பகுதியில் வலுவான பாதகமான தன்மைகளை எதிர்நோக்கியமைக்கு உயர் வட்டி வீத சூழல், பொறி மற்றும் ஏனைய மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த செலவு என்பன காரணங்களாக அமைந்தன. இது வெளிநாட்டுச் செலாவணியின் பற்றாக்குறை மற்றும் உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட கடுமையான தேய்வு அரசினால் நிதியிடப்பட்ட கட்டவாக்கச் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மேலும் தீவிரமடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில், முதலீட்டுச் செலவினத்தின் முக்கிய பங்களிப்பாளரான மொத்த நிலையான மூலதன உருவாக்கமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விலைகளில் 21.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கட்டடவாக்க மூலப்பொருட்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் அதிகரித்த செலவினமே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. அதேநேரம் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், விலைமதிப்பு மிக்க பொருட்களின் அகற்றலைக் கழித்த கையேற்புக்கள் என்பனவும் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன.

வரைபடம் 2.13
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின்
வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)



(அ) கடன்கள் உள்ளடங்கலாக
மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு கிடைக்கப்பெற்ற கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2021ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 780.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,075.6[6] மில்லியனுக்கு 37.9 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

6 இது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட பெறுகைகளை உள்ளடக்குவதுடன் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்கப்படுவதன் காரணத்தால் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். அதற்கிணங்க, 2022இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 1,181 மில்லியனாகும்.

அட்டவணை 2.11
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பவற்றின்
கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

	செயற்றிட்ட எண்ணிக்கை		மதிப்பிடப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்)						மதிப்பிடப்பட்ட தொழிலாளர் (எண்ணிக்கை)	
	2021 (அ)	2022 (ஆ)	2021 (அ)			2022 (ஆ)			2021 (அ)	2022 (ஆ)
			வெளிநாடு	உள்நாடு	மொத்தம்	வெளிநாடு	உள்நாடு	மொத்தம்		
முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்)										
ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்	135	160	347,871	166,184	514,056	282,842	263,529	546,371	25,632	26,177
பிரிவு 17இன் கீழ் (இ)	130	158	346,878	165,735	512,613	281,789	262,707	544,496	25,459	26,013
பிரிவு 16இன் கீழ்	5	2	993	449	1,442	1,054	821	1,875	173	164
பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ)	93	142	41,305	74,130	115,436	327,810	188,864	516,674	21,685	21,685
பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ச)(உ)	1,875	1,922	2,258,989	2,021,406	4,280,395	2,420,110	2,055,046	4,475,156	486,362	வி.கி.
வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ச)	2,735	2,718	651,662	1,057,348	1,709,010	662,641	1,059,813	1,722,454	459,828	461,371
பிரிவு 17இன் கீழ் (இ)	2,100	2,116	625,665	1,020,523	1,646,188	637,450	1,029,961	1,667,412	375,007	380,939
200 ஆ.தொ. நி.திட்டத்தின் கீழ்	116	107	505	25,639	26,143	503	18,714	19,217	56,543	52,513
பிரிவு 16இன் கீழ்	519	495	25,492	11,187	36,679	24,688	11,137	35,825	28,278	27,919
கைத்தொழில் அமைச்சு										
பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ச)	3,259	3,451	-	-	209,366	-	-	204,600	வி.கி.	வி.கி.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ச) ஆண்டின் இறுதியில் ஒன்றுசேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

2

முதலீட்டுச் சபைகளுக்கான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் ஏறத்தாழ 54.0 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2022இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஒட்டுமொத்த விரிவடைதலுக்கு பெருமளவில் பங்களித்து, 2022இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மேலும், முறையே வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் ஏறத்தாழ 34.0 சதவீதத்திற்கும் 13.0 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தயாரிப்புத் துறை மற்றும் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் விரிவாக்கங்களைப் பதிவுசெய்தன. எனினும், வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2022இல் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. 1978இன் 4ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப்பெறுமதி ரூ.546.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, கடந்த காலத்தின் ரூ.514.1 பில்லியனிலிருந்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 6.3 சதவீதம் கொண்ட விரிவடைதலொன்றைக் காண்பித்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதிகள் 2022 காலப்பகுதியில் முறையே ரூ.35.8 பில்லியனாகவும் ரூ.1,667.4 பில்லியனாகவும் காணப்பட்டன.

மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

பொருளாதாரத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்களை உள்ளடக்கிய மூலவளங்களின் கிடைப்பனவு 2021இல் பதிவுசெய்யப்பட்ட 14.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 38.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால்


அட்டவணை 2.12
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

விடயம்	சதவீதப் பங்கு %		வளர்ச்சி %	
	2021 (இ)	2022	2021 (இ)	2022
அ. மூலவளங்கள்	80.4	80.0	12.3	37.2
மொத்த உள்நாட்டு உற்பத்தி	19.6	20.0	26.5	41.2
பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள்	100.0	100.0	14.8	38.0
மொத்தம்				
ஆ. பயன்பாடு				
நுகர்வு	56.8	55.3	8.4	34.3
மொத்த நிலையான மூலதனவாக்கம்	21.2	18.7	15.8	21.9
பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம்	8.4	8.8	57.2	44.9
பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி	13.6	17.2	23.2	74.1
மொத்தம்	100.0	100.0	14.8	38.0

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.14
2022இல் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)



(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியடைந்தன. இது தொடர்பில் உள்நாட்டு மூலவளங்களைப் பிரசன்னப்படுத்துகின்ற மொ.உ.உற்பத்தி 2022இல் 37.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், வெளிநாட்டு மூலவளங்களான இறக்குமதிகள் 2021 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 41.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த விலைகள் காரணமாயமைந்தன. எனினும், நிலையான விலை மதிப்பீடுகளைப் பரிசீலனையில் கொள்கையில், மொ.உ.உற்பத்தியும் இறக்குமதிகளும் 2022இல் சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை, பெரும்பாலான கிடைக்கத்தக்க மூலவளங்கள் நுகர்வு நோக்கங்களுக்கே பயன்படுத்தப்பட்டதுடன் இவை 2022இன் நடைமுறை விலைகளில் மொத்த மூலவளப் பயன்பாட்டில் 55.3 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் முதலீடு மற்றும் ஏற்றுமதிப் பங்குகள் முறையே 27.5 சதவீதமாகவும் 17.2 சதவீதமாகவும் காணப்பட்டன.

சேமிப்புக்கள்

நடைமுறை விலைகளில் நாட்டின் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இவ்வாண்டுப்பகுதியில் மேம்பட்டன. இதன்படி, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 22.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 44.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் அரசின் குறைச் சேமிப்புக்கள்

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ)(ஆ)

விடயம்	ரூ.மில்லியன்		வளர்ச்சி (%)		மொ.உ.உ.இன் சதவீதமாக (%)	
	2021 (இ)	2022	2021 (இ)	2022	2021 (இ)	2022
1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	17,600,191	24,147,726	12.3	37.2	100.0	100.0
2. நுகர்வுச் செலவினம்	12,434,283	16,700,557	8.4	34.3	70.6	69.2
தனியார்	10,769,655	14,973,295	9.4	39.0	61.2	62.0
அரசு	1,664,627	1,727,261	2.3	3.8	9.5	7.2
3. முதலீடுகள்	6,466,957	8,304,627	25.1	28.4	36.7	34.4
4. உள்நாட்டுச் சேமிப்புக்கள்	5,165,908	7,447,170	22.9	44.2	29.4	30.8
தனியார்	6,456,349	8,987,618	19.9	39.2	36.7	37.2
அரசு	-1,290,441	-1,540,448	-9.3	-19.4	-7.3	-6.4
5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி	-1,301,049	-857,458	-34.7	34.1	-7.4	-3.6
6. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம்	-395,539	-621,353	6.5	-57.1	-2.2	-2.6
7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ)	1,034,694	1,159,474	-10.1	12.1	5.9	4.8
8. தேசிய சேமிப்புக்கள்	5,805,063	7,985,291	17.7	37.6	33.0	33.1

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

விரிவடைந்தமைக்கிடையிலும் தனியார் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு தூண்டுதலாக அமைந்தது. இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2022இல் 30.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. அதேவேளை, ரூபா நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்த வேளையில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளின் இணைந்த பெறுபேறாக, தேசிய சேமிப்பு 2021இன் 17.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 37.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் சேமிப்புக்களில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2022இல் வீழ்ச்சியடைந்தது.

2.6 வருமானம்

பொருளாதாரத்தின் மிகப்பெரும் கூறாக விளங்குகின்ற மொத்த கலப்பு வருமானம், 2021இல் பதிவுசெய்யப்பட்ட 11.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 45.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34.6 சதவீத்திற்கு வகைகூறியது. அதேவேளை, இரண்டாவது மிகப்பெரும் கூறாக விளங்குகின்ற மொத்த தொழிற்பாட்டு மிகை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 36.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஏனைய முக்கிய வருமான மூலத்தின் நியதிகளில், ஊழியர்களுக்கான இழப்பீடு உற்பத்தி மீதான உதவுதொகையினைக் கழித்த வரிகள் என்பன

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ)(ஆ)

விடயம்	சதவீதப்பங்கு (%)									
	2021 (இ)					2022				
	நிதியல்லா கூட்டுத்தாபனம்	நிதிக் கூட்டுத்தாபனம்	பொது அரசாங்கம்	வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள்	மொத்த பொருளாதாரம்	நிதியல்லா கூட்டுத்தாபனம்	நிதிக் கூட்டுத்தாபனம்	மத்திய அரசாங்கம்	வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள்	மொத்த பொருளாதாரம்
ஊழியர்களின் நட்டஈடு	45.6	6.5	26.5	21.4	100.0	47.7	10.2	21.7	20.5	100.0
மொத்த தொழிற்பாட்டு மிகை	84.6	12.1	3.3	0.0	100.0	86.4	11.3	2.4	0.0	100.0
மொத்த கலப்பு வருமானம்	-	-	-	100.0	100.0	-	-	-	100.0	100.0
உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்	74.5	10.4	-	15.2	100.0	73.2	10.7	-	16.1	100.0
அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு	43.5	6.2	9.2	41.1	100.0	43.6	6.8	7.1	42.4	100.0

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் விரிவடைந்தன. அதேவேளை, நிறுவன ரீதியான துறை வகைப்படுத்தலைப் பரிசீலனையில் கொள்கையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை மிகப் பெரிய வருமான உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறையினருக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள், பொது அரசாங்கம், மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம் என்பன விளங்கின.

2

2.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

குடித்தொகை

2022இல் குடித்தொகை தொடர்ந்து அதிகரித்த போதும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது குறைந்த வீதத்தில் காணப்பட்டது. இதன்படி, பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகை மதிப்பீடுகளின்படி, 2022இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 22.181 மில்லியன் என மதிப்பிடப்பட்டு 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, நடுவாண்டுக் குடித்தொகையில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த மேல் மாகாணம் 2022இன் நடுவாண்டுக் குடித்தொகையில் 28.0 சதவீதம் கொண்ட உயர்ந்த பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறியது. அதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் தென் மாகாணங்கள் முறையே குடித்தொகையில் 12.7 சதவீதத்திற்கும் 12.2 சதவீதத்திற்கும் வகைகூறின. மேலும், 2022இல் வட மாகாணம் நடுவாண்டுக் குடித்தொகையின் மிகக் குறைந்த பங்கான 5.3 சதவீதத்திற்கு வகைகூறியது. குடித்தொகை வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் குடித்தொகை அடர்த்தியும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட சதுர கிலோமீற்றர் ஒன்றிற்கான 353 மக்களிலிருந்து 2022இல் சதுர கிலோமீற்றர் ஒன்றிற்கு 354 மக்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைப் பின்பற்றும் விதத்தில் பெண்களின் குடித்தொகை ஆண்களின் குடித்தொகையிலும் பார்க்க தொடர்ந்தும் உயர்வானதாகக் காணப்பட்டது.

அட்டவணை 2.15

மாகாண அடிப்படையிலான குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ)(ஆ)

மாகாணம்	2021		2022	
	குடித்தொகை '000 நபர்கள்	அடர்த்தி	குடித்தொகை '000 நபர்கள்	அடர்த்தி
மேல்	6,219	1,731	6,209	1,728
மத்திய	2,811	504	2,812	504
தென்	2,696	501	2,702	502
வடக்கு	1,165	141	1,173	141
கிழக்கு	1,783	190	1,788	191
வடமேல்	2,592	345	2,592	345
வடமத்திய	1,402	144	1,406	144
ஊவா	1,400	168	1,408	169
சப்ரகமுவ	2,088	424	2,091	425
மொத்தம்	22,156	353	22,181	354

(அ) தற்காலிகமானது
(ஆ) நடுவாண்டுக் குடித்தொகை தரவுகள் 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும வீடமைப்பு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மூலம்: பதிவாளர் நாயகம் திணைக்களம்

தொழிற்படை

2022இல் பொருளாதார ரீதியாக செயற்படாத குடித்தொகை 2021 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை தொழிற்படை அளவீட்டின்படி தொழிற்படையில் வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்தது. வீட்டுத்துறை குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் பொருளாதார ரீதியாக செயற்படாத குடித்தொகை முன்னைய ஆண்டின் 8.581 மில்லியனிலிருந்து 2022இல் 8.615 மில்லியனுக்கு அதிகரித்தவிடத்து பொருளாதார ரீதியாகச் செயற்படும் குடித்தொகையினைப்[7] பிரசன்னப்படுத்துகின்ற தொழிற்படை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.553 மில்லியனிலிருந்து 2022இல் 8.547 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகளுடன் வீட்டுத்துறைக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2021இன் 49.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 49.8 சதவீதத்திற்கு

7 ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஒரு வாரக் காலப்பகுதியில் தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (15 வயதும் அதற்கு மேலும்) ஆட்களைக் குறிப்பிடுவதே தற்போதைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் உள்ள குடித்தொகை ஆகும்.

அட்டவணை 2.16

குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

விடயம்	2021	2022 (ஆ)				
		கா 1	கா 2	கா 3	கா 4	வருடாந்தம்
குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள்	17,134	17,105	17,126	17,186	17,230	17,162
தொழிற்படை '000 ஆட்கள்	8,553	8,762	8,576	8,430	8,421	8,547
தொழிலுள்ளோர்	8,114	8,389	8,177	8,010	8,015	8,148
தொழிலற்றோர்	440	373	399	419	406	399
தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ)	49.9	51.2	50.1	49.0	48.9	49.8
ஆண்	71.0	71.8	70.9	70.4	69.0	70.5
பெண்	31.8	33.6	32.1	31.0	31.6	32.1

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை
(ஆ) தற்காலிகமானது
(இ) குடும்ப அலகுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ஆண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் 71.0 சதவீதத்திலிருந்து 2022இல் 70.5 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் சாதகமானதொரு விடயமாக பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் 31.8 சதவீதத்திலிருந்து 2022இல் 32.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் காணப்பட்ட பால் இடைவெளி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 39.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 38.4 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

தொழில்நிலை

தொழில்புரியும் குடித்தொகை[8] முன்னைய ஆண்டின் 8.114 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.148 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளுடன் தொடர்பான தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. கைத்தொழில் நடவடிக்கைளில் காணப்பட்ட தொழில்நிலை முன்னைய ஆண்டின் 2.109 மில்லியனிலிருந்து 2022இல் 2.158 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் பணிகளிலுள்ள தொழில்நிலை முன்னைய ஆண்டின் 3.791 மில்லியனிலிருந்து 2022இல் 3.831 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், வேளாண்மையிலுள்ள தொழில்நிலை முன்னைய ஆண்டின் 2.213 மில்லியனிலிருந்து 2022இல் 2.159 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளிலுள்ள தொழில்நிலையின் பங்குகள் முன்னைய ஆண்டின் 26.0 சதவீதம் மற்றும் 46.7 சதவீதங்களிலிருந்து 2022இல் முறையே 26.5 சதவீதத்திற்கும் 47.0 சதவீதத்திற்கும் அதிகரித்தவிடத்து வேளாண்மையிலுள்ள தொழில்நிலையின் பங்கு முன்னைய ஆண்டின் 27.3 சதவீதத்திலிருந்து 2022இல் 26.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழில்நிலை நியதிகளில் பொதுத் துறை ஊழியர்கள், சுயதொழில்புரிவோர் மற்றும் கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்கள் எண்ணிக்கை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்த அதேவேளை தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. அதேவேளை, 2022 காலப்பகுதியில் தனியார் துறையானது 42.9 சதவீதம் கொண்ட பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான தொழில் உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத்தொடர்ந்து மொத்த தொழில்நிலையில் 33.1 சதவீதத்திற்கு சுயதொழில்புரிவோர் வகைகூறினர்.

முகாமைத்துவ பணிகள் திணைக்களத்தின் தரவின் பிரகாரம் மொத்த பொதுத் துறை தொழில்நிலை 2022இல் 1.394 மில்லியனாக இருந்தது. இது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் அத்துடன் அரசசார் நிறுவனங்கள் என்பனவற்றிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகின்றது. அந்தவகையில் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் தொழில்நிலை வீழ்ச்சியடைந்த காரணத்தினால் பொதுத்துறை தொழில்நிலை 2021இன் 1.401 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியை பதிவு செய்தது.

அட்டவணை 2.17
பொதுத்துறை தொழில்நிலை

துறை	2021 (அ)	2022 (ஆ)	சதவீத மாற்றம் 2022/2021 (ஆ)
அரசு	1,181,422	1,181,766	0.0
அரசசார்	219,838	212,117	-3.5
பொதுத்துறை	**1,401,260**	**1,393,883**	**-0.5**


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

தொழிலின்மை

தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.1 சதவீதத்திலிருந்து 2022இல் 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிலற்ற குடித்தொகையும்[9] முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.440 மில்லியனிலிருந்து 2022இல் 0.399 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, ஆண்களின் தொழிலின்மை 3.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில் பெண்களின் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 7.9 சதவீதத்திலிருந்து 2022இல் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், க.பொ.த. உயர்தரம் மற்றும் அதற்குமேற்பட்ட வகையினதும் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், இளைஞர்

வரைபடம் 2.15
தொழிலின்மை வீதம் (சதவீதம்)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

8 ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியர்களாக, தொழில்தருநர்களாக, சொந்தத் தொழில்புரிபவர்களாக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராக பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகின்ற போதிலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

9 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் மற்றும் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலொன்றினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்பொன்றினை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுவர்.

2

அட்டவணை 2.18
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

தொழில்வாய்ப்பு	2020		2021 (அ)		2022 (ஆ)	
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்
மொத்த தொழிலிலுள்ளோர்	53,711	100.0	122,264	100.0	311,056	100.0
மூலத்தின்படி						
உரிமம்பெற்ற முகவர்கள்	18,065	33.6	41,805	34.2	123,420	39.7
ஏனையோர்	35,646	66.4	80,459	65.8	187,636	60.3
பால் வகையின்படி						
ஆண்	32,500	60.5	81,110	66.3	186,965	60.1
பெண்	21,211	39.5	41,154	33.7	124,091	39.9
மனிதவலு வகையின்படி						
தொழில் வல்லுநர்கள்	2,957	5.5	8,373	6.8	14,307	4.6
நடுத்தர மட்டம்	1,496	2.8	4,256	3.5	8,130	2.6
எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர்	2,496	4.6	6,540	5.3	12,134	3.9
தேர்ச்சி பெற்ற தொழிலாளர்	16,664	31.0	40,174	32.9	92,836	29.8
ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்	789	1.5	1,930	1.6	4,133	1.3
தேர்ச்சியற்ற தொழிலாளர்	13,987	26.0	31,676	25.9	105,509	33.9
வீட்டுப் பணிப்பெண்கள்	15,322	28.5	29,315	24.0	74,007	23.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

(15 - 24 ஆண்டுகள்) தொழிலின்மை வீதமும் முன்னைய ஆண்டின் 26.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 22.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு


வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றோரின் எண்ணிக்கை 2021இன் 122,264 இலிருந்து 2022இல் 311,056 இற்கு 154.4 சதவீதத்தினால் கணிசமானளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார கஷ்டங்கள் ஓரளவிற்கு வகைகூறின. இதன்படி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்ற ஆண்கள் மற்றும் பெண்கள் தொழில் வாய்ப்பிற்காகப் புறப்பட்டுச் சென்றவர்களின் மொத்தத் தொகையில் முறையே 60.1 சதவீதத்திற்கும் 39.9 சதவீதத்திற்கும் வகைகூறின. இதே போக்கினைத் தொடர்கின்ற விதத்தில் தொழில்சார் நிபுணத்துவம், மத்திய மட்டம், எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானர்வர்கள், தேர்ச்சி, ஓரளவு தேர்ச்சி, தேர்ச்சியற்றவர்கள் மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் ஆகிய அனைத்து தேர்ச்சி வகைகளின் கீழும் புறப்பட்டுச் சென்றவர்களின் தொகை அதிகரித்தமைக்கு தேர்ச்சியற்ற தேர்ச்சியுடைய மற்றும் வீட்டுப்பணிப்பெண் வகைகளிலிருந்து கிடைத்த முக்கிய பங்களிப்பே காரணமாகும். மத்திய கிழக்குப் பிராந்தியமே 2022இன் முக்கிய வெளிநாட்டு தொழில் வாய்ப்புச் சேரிடமாக தொடர்ந்தும் காணப்பட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் மொத்த

வரைபடம் 2.16
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்



மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம் 2.17
முக்கிய நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்



மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

எண்ணிக்கையில் 84.7 சதவீதத்திற்கு வகைகூறியது. கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் மற்றும் குவைத் என்பன 91.3 சதவீதத்திற்கு வகைகூறின.

தொழிலாளர் உற்பத்தித்திறன்

வேலை செய்த மணித்தியாலமொன்றிற்கு மொத்த பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் (2015 விலைகளில்) அளவிடப்படுகின்ற தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.768.08 இலிருந்து 2022இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.686.57 இற்கு 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேலைசெய்த மணித்தியாலம் அதிகரித்தமையினால் 2022இல் தொடர்ந்து மொத்த பெறுமதிகூட்டல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். இதன்படி, கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளிலுள்ள தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான முறையே 922.15 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.945.97 இலிருந்து 2022இல் முறையே வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.759.85 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.839.85 இற்கு வீழ்ச்சியடைந்தன. மாறாக, வேளாண்மை மொத்த பெறுமதிகூட்டல் மற்றும் வேலைசெய்த மணித்தியாலம் இரண்டிலும் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் வேளாண்மை நடவடிக்கைகளிலுள்ள தொழிலாளர் உற்பத்தித்திறன் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. இதன்படி, தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இன் ரூ.243.04 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.243.94 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. உற்பத்தித் திறன் மட்டங்களின் நியதிகளில் பணிகள் நடவடிக்கைகள் தொழிலாளர் மூலவளங்கள் மிகுந்த வினைத்திறனை தொடர்ந்தும் எடுத்துக் காட்டி, மிக உயர்ந்த தொழிலாளர் உற்பத்தித் திறனைப் பதிவுசெய்ததுடன் அதனைத் தொடர்ந்து கைத்தொழில் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் காணப்பட்டன.

3

பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

3.1 பொதுநோக்கு

குறிப்பிடத்தக்க சமூகப்பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தி, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி மற்றும் மானிட நெருக்கடிகளுக்கு வழிவகுத்த கடுமையான சென்மதி நிலுவை மற்றும் நாட்டிற்கான படுகடன் நெருக்கடிகளுக்கு மத்தியில், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளின் வழங்கலானது 2022 காலப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத சவால்களை எதிர்கொண்டது. அரசிற்குச் சொந்தமான பல்வேறு வியாபாரத் தொழில்முயற்சிகளில் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலின் அறிமுகம் உள்ளடங்கலாக, நிரம்பல் மற்றும் கேள்வி ஆகிய இரண்டிலுமான முகாமைத்துவ உபாயங்களின் நடைமுறைப்படுத்தலுடன் 2022இன் பிற்பகுதியில் பொருளாதாரப் பணிகளின் வழங்கலில் சில மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளைப் பொருளாதார சவால்களுக்கு மத்தியில் வழங்குவதிலுள்ள உயர்வடைந்தளவிலான பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் பொதுத்துறையில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களின் துரித நடைமுறைப்படுத்தலிற்கான தேவையினை எடுத்துக்காட்டின. குறிப்பிடத்தக்க மின்வெட்டுக்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள், குறிப்பாக 2022இன் நடுப்பகுதியில், சமூகப் பொருளாதார நடவடிக்கைகளில் முன்னெப்பொழுதுமில்லாத இடையூறுகளை ஏற்படுத்தி 2022 காலப்பகுதியில் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் பாரியளவிலான பின்னடைவொன்றினைத் தோற்றுவித்தன. இருப்பினும், நீரின் உருவாக்கத்தின் அதிகரித்தளவிலான பங்களிப்பு, மற்றும் எரிபொருள் நிரம்பலிற்கான கியுஆர் (QR) குறியீட்டு முறைமையின் அறிமுகம், சமையல் எரிவாயு இறக்குமதிக்கான வெளிநாட்டு நிதியியல் உதவியினைப் பெறுதல், காலதாமதமாக மேற்கொள்ளப்பட்ட விலைச் சீராக்கங்களின் பின்னரான எரிபொருள் உற்பத்திகள் மற்றும் மின்சாரத்தின் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களின் அமுல்படுத்துகை ஆகியன உள்ளடங்கலாக நிரம்பல் மற்றும் கேள்வி சமமின்மைகளைத் தீர்க்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பவற்றிற்கு மத்தியில் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வலு நெருக்கடியின் தீவிரத்தன்மை மெதுவடைந்தது. இதற்கமைய, பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டுச் சில்லறை விலைகள் 2022இல் பல்வேறு சுற்றுக்களாகத் திருத்தப்பட்டதுடன், இது ஏனைய காரணிகளுக்கு மத்தியில் 2022 மேயிலிருந்து உலகளாவிய வலு விலைகளின் அசைவுகளைப் பிரதிபலிக்கும் விலையிடல் சூத்திரமொன்றின் அடிப்படையிலமைந்திருந்தது. எட்டு வருட கால இடைவெளிக்குப் பிறகு 2022 ஓகத்தில் மின்சாரத் தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் 2023இலிருந்து அரையாண்டுத் தீர்வை திருத்தப் பொறிமுறையொன்றின் நிறுவலுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2023 பெப்புருவரியில் மீண்டும் திருத்தப்பட்டது. 2022 செத்தெம்பரில் நீர்த் தீர்வைகளும் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன. 2022 காலப்பகுதியில் ஒட்டுமொத்த விலை மட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் இணைந்து இவ்விலைத் திருத்தங்கள், பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புக்களுக்கு குறிப்பிடத்தக்க அழுத்தமொன்றினை ஏற்படுத்தியதுடன் அதன்மூலம் வறுமை மட்டங்களை மோசமடையச்செய்தன.

உட்கட்டமைப்பு வசதிகள் மீது முதலீட்டுச் செலவுகளை செய்வதற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட இடைவெளி 2022 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டது. சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிடைப்பனவிற்கு ஏற்பட்ட இடையூறுகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய நிர்மாண நடவடிக்கைகளைப் பாதித்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் நாடு பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை எய்தியுள்ளது. இருப்பினும், கொள்வனவு தாமதங்களுக்கு மத்தியில் மருந்தாக்கல் மற்றும் ஏனைய மருத்துவ

நிரம்பல்களில் ஏற்பட்ட பற்றாக்குறையினால் சுகாதாரத் துறை பாதிக்கப்பட்ட அதேவேளையில் மருந்தாக்கல்களின் பற்றாக்குறையின் தீவிரத்தன்மையினை ஓரளவு குறைக்க வெளிநாட்டு நிதியியல் உதவி துணைபுரிந்தது. 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி முறைமையில் வலு நெருக்கடி மற்றும் கொவிட்-19 காரணமாக ஏற்பட்ட இடையூறுகள் பாரியளவில் தணிக்கப்பட்டமையினால் கல்விசார் நடவடிக்கைகள் மீளெழுச்சியடைந்தன. இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாக கல்விசார் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடைக்கிடையிலான இடையூறுகளினால் கற்றல்சார் இழப்புகளின் தாக்கம் தொடர்ந்தும் நீடித்த அதேவேளையில் பின்தங்கிய பின்னணியிலிருந்தான பிள்ளைகளிடையே கல்விசார் பெறுபேறுகளில் சமமின்மைகளை விரிவுபடுத்தியமையானது கல்விசார் முறைமையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான தேவையினை எடுத்துக்காட்டியது. பொருளாதார இடையூறுகளினாலும் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மெதுவடைதலினாலும் பாதிப்பிற்குள்ளாகி அதிகரித்துவருகின்ற வறுமைக் குடித்தொகையின் காரணமாக வறுமை ஒழிப்பில் காணப்பட்ட முன்னேற்றம் தடைப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் பரந்தளவிலான விளைவுகளையும் குடித்தொகையின் பின்தங்கிய பிரிவுகளின் வாழ்க்கை நிலைமைகளையும் கருத்திற்கொண்டு, சமூக பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களின் கீழ் நிவாரணம் வழங்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில், அத்தகைய திட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் பயனாளிகளின் இலக்கிடலை நெறிப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியின் விடாப்பிடியான சமூக பொருளாதார விளைவுகள் நடுத்தர காலத்தில் பௌதீக மற்றும் மனித மூலதனம் ஆகிய இரண்டினதும் வளப்படுத்தலினூடாக தாங்கியிருக்கின்ற தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் ஒப்புறவுமிக்க முறையொன்றில் பொருளாதாரத்திலுள்ள பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கான அவசியத்தினை எடுத்துக்காட்டியது.

3


3.2 பொருளாதார உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

பெற்றோலியம்

2022இல் நாட்டில் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக்கு மத்தியில் எரிபொருளுக்கான உள்நாட்டுக் கேள்வியனைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கம் கடுமையான மட்டுப்பாடுகளை எதிர்கொண்டது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் கொள்வனவு நடைமுறையானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறைந்தளவிலான திரவத்தன்மையுடன் இணைந்து அதன் மோசமடைந்த நிதியியல் நிலைமை காரணமாக கடுமையாகச் சவாலுக்குட்பட்டதுடன் அதன்மூலம் நாட்டில் எரிபொருள் நெருக்கடியொன்றினைத் தோற்றுவித்தமையானது கடுமையான சமூக அமைதியின்மையொன்றிற்கு வழிவகுத்தது. ஒழுங்குமுறையற்ற எரிபொருள் விநியோகம் மற்றும் எரிபொருள் கிடைப்பனவின் நிச்சயமற்ற தன்மையால் தூண்டப்பட்டு மக்கள் கையிருப்புக்களை அதிகளவில் பதுக்கியமை மற்றும் எரிபொருள் நிரப்புவதற்கான நீண்ட வரிசைகள் என்பவற்றிற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கைகளின் தடங்கலற்றதன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு எரிபொருள் இறக்குமதிகளின் இன்றியமையாமையினைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வழங்குவதன் மூலம் காலந்தவறாத எரிபொருள் கொள்வனவிற்குத் தொடர்ந்து வசதியளித்தது. மேலும், இலங்கை அரசாங்கம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவிற்கு நிதியளிப்பதற்காக இந்திய இறக்குமதி ஏற்றுமதி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட குறுங்கால கொடுகடன் வசதியினைப் பெற்றுக்கொண்ட வேளையில் நாட்டில் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்திய அரச வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொடுகடன் வசதியின் ஐ.அ.டொலர் 200 மில்லியனையும் அதற்குப் பயன்படுத்தியது. இதேவேளை, 2022 மேயில், பெற்றோலிய உற்பத்திகளுக்கான விலையிடல் சூத்திரமொன்றின் நடைமுறைப்படுத்தலிற்கு அமைச்சரவை ஒப்புதலளித்ததுடன் அதற்கிணங்க பொருத்தமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் சூத்திரமொன்றினை வகுப்பதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. 2018இல் பின்பற்றப்பட்ட விலையிடல் சூத்திரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்தமையினால் 2022 மேயிலிருந்து பின்பற்றப்பட்ட விலையிடல் சூத்திரம் அதனைத்தொடர்ந்து 2022 திசெம்பரில் இரத்துசெய்யப்பட்டது. இதேவேளை, ஏற்றுமதியாளர்கள், மின் உருவாக்க நிறுவனங்கள், சுற்றுலாப் பணி வழங்குநர்கள், உரிமம்பெற்ற தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குநர்கள் மற்றும் ஐ.அ.டொலரில் கொடுப்பனவுகளை ஏற்காத ஏனைய நிறுவனங்கள் ஆகியோருக்கு ஜெயா கொள்கலன் முனையத்திலுள்ள எண்ணெய்க் களஞ்சியத்தின் ஊடாக குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் உற்பத்திகளை நிரம்பல் செய்வதற்கு பல்வேறு நீர்க்கல உரிமம்

வரைபடம் 3.1

பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் செயலாற்றம்




3

வைத்திருப்போருக்கான ஒப்புதலை மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு அளித்தது. 2022 யூலை முற்பகுதியில், எரிபொருளிற்கான உத்தரவாதமளிக்கப்பட்ட ஒதுக்கீடொன்றிற்குட்பட்டு, எரிபொருள் கொள்வனவிற்கு ஐ.அ.டொலரில் கொடுப்பனவு செய்வதன் மூலம் இலங்கையில் வியாபாரப் பதிவுடன் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்ட முன்னுரிமைபெற்ற நுகர்வோரின் பதிவினை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது. போக்குவரத்துத் துறைக்கான தொடர்ச்சியான எரிபொருள் நிரம்பலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு, தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் குறியீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், 2022 யூலை மாத பிற்பகுதியிலிருந்து வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்திற்கு அமைவாக அதன் சொந்த நிரப்பு நிலையங்களினூடாக எரிபொருள் நிரம்பல்செய்யப்பட்ட முறைமையொன்றினை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியது. 2022 ஓகத்து 01 தொடக்கம் நடைமுறைக்கு வந்த தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் குறியீட்டு முறைமையின் கீழ், விதந்துரைக்கப்பட்ட வாகன வகைகளுக்கு வாராந்த ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதுடன் அதன்மூலம் வரையறுக்கப்பட்ட எரிபொருள் கிடைப்பனவைச் சிக்கனப்படுத்தி, கடுமையான மட்டுப்பாடுகளின் கீழ் நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழிற்சாலைகள், வேளாண்மைத் துறை மற்றும் மீன்பிடித் துறை ஆகியவற்றின் எரிபொருள் நிரம்பலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2022 ஒத்தோபர் தொடக்கத்தில் சுற்றுலாப்பயணிகளுக்கான எரிபொருள் உரிமத்திற்கான முற்கொடுப்பனவு அட்டை முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழில் துறையின் மீட்சியினை வசதிப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியிலுள்ள நிலையங்களில் எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட முற்கொடுப்பனவு அட்டையொன்றினை சுற்றுலாப்பயணிகள் பயன்படுத்துவதனை வசதிப்படுத்தியது. அதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2022இன் பிற்பகுதியில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் என்பவற்றின் இறக்குமதிக்காக களஞ்சிய தொகுதி எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிய களஞ்சிய முனைக்கோடிகள் லிமிட்டெட் என்பவற்றின் களஞ்சிய முனையங்களிலிருந்து பெறப்பட்ட அளவுக்கான பகுதி பகுதியிலான கொடுப்பனவுகளில் தாமதங்களேதுமின்றி எரிபொருள் சரக்குகளை இறக்குவதனை இயலச்செய்தது. இவ்வேற்பாடானது வரையறைகள் காணப்பட்ட போதிலும், தொடர்ச்சியான எரிபொருள் நிரம்பலினை வசதிப்படுத்தியதுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல் பற்றாக்குறைகளை பாரியளவில் குறைக்கத் துணைபுரிந்தது.

உலகளாவிய பொருளாதார மெதுவடைதலின் மீதான அதிகரித்துவருகின்ற கரிசனைகளைத் தொடர்ந்து, ஆண்டின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கீழ்நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்ட போதிலும், கிழக்கு ஐரோப்பாவில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் அதன் விளைவாக இறுக்கமடைந்த உலகளாவிய எண்ணெய் நிரம்பல் நிலைமைகள் என்பவற்றினால் முதன்மையாக உந்தப்பட்டு 2022இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன. உலகில் பெற்றோலிய உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதியாளர்களுள் ஒன்றான ருசியா மீது மேற்கத்தேய நாடுகளினால் விதிக்கப்பட்ட தடைகளின் காரணமாக, நாளாந்த விலைகள் (பிறென்ட்) 2008 யூலையிலிருந்து முதற்தடவையாக 2022 மார்ச்சில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 140இனை எட்டியதுடன் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் மசகெண்ணெய் விலைகள் அதிகரித்துச் செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்தன. இருப்பினும், 2022இன் இரண்டாம் அரையாண்டின் தொடக்கத்திலிருந்து, உலகெங்கிலுமுள்ள முக்கிய மத்திய வங்கிகளினால் உலகளாவிய வலுசக்திக் கேள்வியினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டு பின்பற்றப்பட்ட தீவிரமான நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் வழிமுறைகள், சீனாவில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட கொவிட்-19 கட்டுப்பாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உபாய ஒதுக்குகளிலிருந்து மசகெண்ணெய்யின் கணிசமானளவிலான விடுவிப்பு என்பவற்றுடன் இணைந்து, மெதுவடைந்து செல்கின்ற உலகளாவிய வளர்ச்சி காரணமாக விலைகள் வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்தன. 2022 ஒத்தோபரில் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு மற்றும் அதன் நட்பு நாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திக் குறைப்பு அறிவிப்பு, 2022 திசெம்பரில் ருசிய மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையுடன் இணைந்து ஜீ7 நாடுகளினால் ருசிய மசகெண்ணெய் மீதான விலைக்கான உயர்ந்தபட்ச வரையறை விதிப்பு மற்றும் சீனாவில் கேள்வி மீட்சி தொடர்பிலான சமிக்ஞைகள் என்பவற்றுடன் 2022இன் இரண்டாம் அரையாண்டின் பிற்பகுதியில் மேல்நோக்கிய அழுத்தங்களின் குறுகிய நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டன. சராசரி மசகெண்ணெய் விலை (பிறென்ட்) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 70.80 சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 99.06இற்கு 39.9 சதவீதத்தினால் அதிகரித்தது. வெஸ்ட் டெக்சஸ் இன்டர்மீடியட் விலையும் உயர்வடைந்து செல்கின்ற போக்கொன்றினைக் கொண்டிருந்ததுடன் 2021இல் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 67.94 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 94.41 சராசரியொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் 2023இன் முதலாம் காலாண்டில் சிறிதளவிலான மிதமடைதலொன்றினைக் காண்பித்தன. பெற்றோல் 92, பெற்றோல் 95, தன்னியக்க டீசல், சிறப்பு

வரைபடம் 3.2
உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் போக்குகள்




டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன உள்ளடங்கலாக முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் சராசரி உலகளாவிய விலைகள் 2022இல் 40 தொடக்கம் 75 சதவீத வீச்சினுள் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தன. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் அதிகரித்துச் செல்கின்ற போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை 2021இல் பதிவுசெய்யப்பட்ட சராசரியாக பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 68.86 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 100.11இற்கு 45.4 சதவீதத்தினால் அதிகரித்தது.


கேள்வி முகாமைத்துவ உபாயத்தின் பகுதியொன்றாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நட்டங்களைத் தீர்க்கின்ற வேளையில், 2022 மார்ச்சிலிருந்து பெற்றோலிய உற்பத்திகளின் பல்வேறு சுற்றுக்களிலான விலை திருத்தங்கள் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விற்கப்பட்ட முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் பெற்றோலிய உற்பத்திகளின் உலகளாவிய விலைகளின் உயர்வடைதலுக்கு ஏற்ப 2022 மார்சு, ஏப்பிறல், மே, யூன், மற்றும் நவெம்பர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. உலகளாவிய சந்தைகளில் விலை வீழ்ச்சிகளினைத் தொடர்ந்து, 2022 யூலை, ஓகத்து, ஒத்தோபர் மற்றும் திசெம்பர், மற்றும் 2023 சனவரி மற்றும் மார்சு ஆகிய மாதங்களில் பெற்றோலிய விலைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கீழ்நோக்கித் திருத்தப்பட்டன. மேலும், குறிப்பிடத்தக்களவு மானியமளிக்கப்பட்ட வீதமொன்றில் மண்ணெண்ணெய்யினை விற்பனை செய்வதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட கணிசமானளவிலான நட்டங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2022 ஓகத்து இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மண்ணெண்ணெய்யின் சில்லறை விலை குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கிச் சீராக்கப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைத் திருத்தங்களினைத் தொடர்ந்து, லங்கா ஐஓசி பிஎல்சியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைகளுடன் அதன் விலைகள் இசைந்து செல்லும் விதத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளைப் பதினொன்று சுற்றுக்களாக மேல்நோக்கியும் எட்டு சுற்றுக்களாகக் கீழ்நோக்கியும் திருத்தியது. இதேவேளை 2022 திசெம்பரில் அரச படுகடன் கையிருப்பிற்கு மாற்றப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் கையிருப்புடன் தொடர்புடைய படுகடன் பணிக்கொடுப்பனவுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு 2023 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் முக்கிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிகள் மீது லீற்றரொன்றிற்கு ரூ.25.00 கொண்ட கலால் தீர்வையொன்றினை அரசாங்கம் விதித்தது. இதற்கமைய, ஒக்ரேன் 92 மற்றும் ஒக்ரேன் 95 பெற்றோல் மீதான கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.52.00 இற்கு அதிகரித்த வேளையில், சிறப்பு டீசல் மற்றும் தன்னியக்க டீசல்

வரைபடம் 3.3
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்




வரைபடம் 3.4
லங்கா ஐஓசி பிஎல்சியின் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளுக்கான திருத்தங்கள்



என்பவற்றிற்கு ஏற்புடையதாகின்ற தீர்வையானது 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் லீற்றரொன்றிற்கு முறையே ரூ.38.00 மற்றும் ரூ.31.00 இற்கு அதிகரித்ததுடன் அதன்மூலம் உள்ளூர்ப் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் உயர்வடைந்தன.

ஆண்டு காலப்பகுதியில் குறைந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை, உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் உயர்வடைந்த விலைகள், எரிபொருள் பங்கீடு மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியில் குறைந்தளவிலான இறக்குமதிகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவு 2022 காலப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. உள்நாட்டுச் சந்தையில் நிரம்பலினையும் கேள்வியினையும் சீராக்கும் நோக்கில் 2022 ஓகத்திலிருந்து கியுஆர் குறியீட்டின் அடிப்படையிலமைந்த எரிபொருள் பங்கீட்டு முறைமையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கேள்வி முகாமைத்துவ உபாயங்களை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டது. 2022இல், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் மொத்த பெற்றோலிய விற்பனைகள் 13.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த வேளையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரம்பல் இடையூறுகளுக்குட்பட்ட மத்தியில் லங்கா ஐஓசி பிஎல்சியின் விற்பனை அளவுகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினை மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் பதிவுசெய்தன. போக்குவரத்துத் துறைக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகள், மொத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகளில் 73 சதவீதமாக விளங்கி, 17.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த வேளையில், வான்வழித் துறைக்கான விற்பனைகள் 9.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமையானது

வரைபடம் 3.5
பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள்



மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி

அட்டவணை 3.1
பெற்றோலியத் துறையின் செயலாற்றம்

விடயம்		2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2021 (அ)	2022 (ஆ)
இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ)					
மசகு எண்ணெய்		1,182	649	-29.1	-45.1
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்		4,553	3,927	13.0	-13.8
நிலக்கரி		2,206	1,707	-15.1	-22.6
திரவப் பெற்றோலிய வாயு		422	290	-3.3	-31.2
உள்நாட்டு திரவப் பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ)		17	6	-34.1	-65.8
இறக்குமதிகளின் பெறுமதி (ச.உ.செ)					
மசகு எண்ணெய்	(ரூ.மில்)	123,865	157,408	15.0	27.1
	(ஐ.அ.டொ.மில்)	625	484	7.2	-22.6
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்	(ரூ.மில்)	564,681	1,294,311	75.5	129.2
	(ஐ.அ.டொ.மில்)	2,840	4,048	63.0	42.5
நிலக்கரி	(ரூ.மில்)	55,118	99,949	37.1	81.3
	(ஐ.அ.டொ.மில்)	278	365	27.8	31.3
திரவப் பெற்றோலிய வாயு	(ரூ.மில்)	64,436	75,882	47.1	17.8
	(ஐ.அ.டொ.மில்)	324	234	37.2	-27.8
மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.உ.செ.)					
	(ரூ.மில்)	13,645	32,573	62.2	138.7
	(ஐ.அ.டொ.மில்)	68.86	100.11	51.1	45.4
பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ)		853	641	7.0	-24.9
பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூ.மில்)		100,975	177,194	46.7	75.5
	(ஐ.அ.டொ.மில்)	506	568	35.6	12.2
உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ)		4,447	3,833	-3.3	-13.8
இதில் பெற்றோல் (92 ஒக்டேன்) (இ)		1,238	1,119	8.7	-9.6
பெற்றோல் (95 ஒக்டேன்)		116	69	-3.5	-40.7
தன்னியக்க டீசல் (ஈ)		1,875	1,693	7.1	-9.7
சிறப்பு டீசல்		75	78	8.2	5.0
மண்ணெண்ணெய்		185	98	5.6	-46.9
உலையெண்ணெய்		720	496	-25.8	-31.1
அவுட்டூர்		224	246	18.6	9.8
நப்தா		11	32	-93.5	203.6
உள்நாட்டு விற்பனைகள் - திரவப் பெற்றோலிய வாயு ('000 மெ.தொ.)		457	294	-3.3	-35.6
உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்)					
பெற்றோல் (92 ஒக்டேன்)		177.00	370.00	29.2	109.0
பெற்றோல் (95 ஒக்டேன்)		207.00	510.00	28.6	146.4
தன்னியக்க டீசல்		121.00	420.00	16.3	247.1
சிறப்பு டீசல்		159.00	510.00	20.5	220.8
மண்ணெண்ணெய்		87.00	365.00	24.3	319.5
உலையெண்ணெய்					
800 செக்கன்கள்		110.00	320.00	57.1	190.9
1,500 செக்கன்கள்		110.00	320.00	57.1	190.9
திரவப் பெற்றோலிய வாயு (ரூ/கி.கி)					
லிட்றோ வாயு		214.00	368.80	79.2	72.3
லாவ்ஸ் வாயு		227.20	424.00	90.2	86.6
பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/ பீப்பாய்)					
பிறெண்ட்		70.80	99.06	63.3	39.9
வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியட் (WTI)		67.94	94.41	70.8	39.0
பெற்றோலியம் மற்றும் ஏனைய திரவங்கள்					
உலக எண்ணெய் நிரம்பல் (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்)		95.7	99.9	1.9	4.3
உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்)		97.1	99.4	5.6	2.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்ஸ்ரா பிரிமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எக்ஸ்ராமைல் டீசல் உள்ளடங்கலாக

மூலங்கள்:
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
வரையறுக்கப்பட்ட லங்கா மராயன் (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்றோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாவ்ஸ் காஸ் பீஎல்சீ
இலங்கைச் சுங்கம்
புளூம்பேர்க்
ஐக்கிய அமெரிக்கா வலுத் தகவல் நிர்வாகம்

2021இல் கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட தளத்தாக்கத்தினைப் பிரதிபலித்தது. வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை காரணமாக வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரம்பலிற்கு மத்தியில் சாதகமான நீர்த்தேக்க மட்டங்கள் மற்றும் மின் வெட்டுக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு நீர்மின் உற்பத்தி மீதான அதிகரித்தளவிலான தங்கியிருத்தலானது ஆண்டு காலப்பகுதியில் மின் உருவாக்கத் துறையிலிருந்தான எரிபொருள் கேள்வியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. இதற்கமைய, மின் உருவாக்கத்திற்கான எரிபொருளின் விற்பனைகள், மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 6.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.

வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையின் காரணமாக கிரமமான மசகெண்ணெய் இறக்குமதியின்மையால் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை அடிக்கடி முடக்கப்பட்டதன் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் சுத்திகரிப்பிலிருந்தான வெளியீடு 2022இல் 55.4 சதவீத குறிப்பிடத்தக்க ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. 2022 காலப்பகுதியில், சுத்திகரிப்பு தொழிற்பாடுகளுக்கான மசகெண்ணெய்யின் கிடைப்பனவின்மையின் காரணமாக ஏறத்தாழ 225 நாட்களுக்கு சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை தொடர்ந்தும் மூடப்பட்டிருந்தது. இதற்கமைய, ஒட்டுமொத்த மசகெண்ணெய் செயன்முறைப்படுத்தலானது 58.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், டீசல், பெற்றோல், எரிபொருள் எண்ணெய் மற்றும் நப்தா போன்ற முக்கிய உற்பத்திகளின் சுத்திகரிப்பு ஆலை வெளியீடானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் முறையே 65.4, 68.8, 45.7 மற்றும் 71.2 சதவீதங்களினால் சுருக்கமடைந்தன.

2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் அநேகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களுக்கு மத்தியில், செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்வடைதலின் காரணமாக ஏற்பட்ட நட்டங்களின் காரணமாக பாரியளவில் உந்தப்பட்டு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் 2022இல் மேலும் மோசமடைந்தது. கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நட்டங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.3 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.6.2 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டமையானது, உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில் குறிப்பிடத்தக்க தளம்பல்களிற்கு மத்தியில் விலைத் திருத்தங்களின் தாக்கத்தினைப் பகுதியளவில் பிரதிபலித்தது. 2022 மார்ச் தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான பெயரளவு தேய்வடைதலானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ.527.0 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க செலாவணி வீத வேறுபாட்டு நட்டமொன்றினை விளைவித்து, அது நிதியியல் செயலாற்றத்தின் மீது நிறையேற்றப்பட்டு 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.81.8 பில்லியன் கொண்ட நட்டத்துடன் (வரிகளுக்கு முன்னர்) ஒப்பிடுகையில் 2022இல் ரூ.615.1 பில்லியன் கொண்ட ஒட்டுமொத்த நட்டமொன்றினைப் (வரிகளுக்கு முன்னர்) பதிவுசெய்தது. இருப்பினும், மாதாந்த அடிப்படையில், செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைச் சீராக்கங்கள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களின் படிப்படியான உறுதிப்பாடு என்பன காரணமாக 2022 யூலையிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமொன்றினைத் (வரிக்கு முன்னர்) தொடர்ந்தும் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலினை மேம்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக ஐ.அ.டொலர் 2.5 பில்லியனாக விளங்கிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடன் கையிருப்பினை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன், வங்கித்தொழில் துறைக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் இறக்குமதி உண்டியல்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.4 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ஐ.அ.டொலர் 0.2 பில்லியனிற்குக் குறைவடைந்தது. பொது நிறுவனங்களிடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வெளிநின்ற வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகள் 2021 இறுதியிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.220.3 பில்லியனிற்கு ரூ.59.3 பில்லியன் தொகையினால் அதிகரித்தன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற மொத்த வர்த்தகக் கிடைக்கப்பெறத்தக்கவைகளில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட முறையே 38.6 சதவீதத்திலிருந்தும் 51.5 சதவீதத்திலிருந்தும் 2022 இறுதியில் முறையே 49.3 சதவீதமாகவும் 31.1 சதவீதமாகவும் விளங்கின. செலாவணி வீதத்தின் சடுதியான தேய்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான சிறிலங்கன் எயார்லைன்ஸின் பொறுப்புக்களின் சமநிலைச் சீராக்கத்துடன் சிறிலங்கன் எயார்லைன்ஸிலிருந்தான வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் ரூபாப் பெறுமதி 2022 ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

இலங்கையில் பெற்றோலிய கைத்தொழில் துறையின் வினைத்திறன் மற்றும் செயலாற்றம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் சட்ட அமுலாக்கங்கள் 2022இல் நடைமுறைப்படுத்தப்பட்டன. நாட்டில் எரிபொருள் வழங்கலினை

சீராக்கும் பொருட்டு, பொருளாதார நடவடிக்கைகளில் கடுமையான தாக்கமொன்றுடன் நாடு கொண்டிருந்த முன்னெப்பொழுதுமில்லாத எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பல தளர்வு உத்திகள் பின்பற்றப்பட்டன. இதற்கமைய, அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில், உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி, பகிர்ந்தளிப்பு மற்றும் விற்பனை செய்தல் என்பவற்றிற்கு சாத்தியமான வியாபார மாதிரியொன்றினை ஆராயும் பொருட்டு, பெற்றோலிய் உற்பத்தி நாடுகளில் நிறுவப்பட்ட கம்பனிகள் உள்ளடங்கலாக புதிய எரிபொருள் வழங்குநர்களிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்துகைகள் கோரப்பட்டன. இச்செய்முறை 2022 ஒத்தோபர் 26இலிருந்து நடைமுறைக்கு வந்த 2022ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகளின் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கத்துடன் முழுமைப்படுத்தப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் நிதியியல் மட்டுப்பாடுகளுடன் முதன்மையாகத் தடைப்பட்டு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் மிதமான முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தன. பண்டாரநாயக்கா பன்னாட்டு விமான நிலைய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பகுதியொன்றாக, புதிய சுற்றுவட்டப் பிரதேசம் E இற்கான நிலத்திற்குக் கீழான எரிபொருள் குழாய் முறைமையினை நிறுவுதல், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள சுற்றுவட்டப் பிரதேசங்களான A, B மற்றும் C என்பவற்றில் நிலத்திற்குக் கீழான எரிபொருள் குழாய் முறைமையின் உதிரிப்பாகங்களை மாற்றியமைத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி மற்றும் ரின்கோ பெற்றோலியம் டர்மினல் (தனியார்) லிமிட்டெட் ஆகியவற்றின் பங்குபற்றுதலுடன் திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் களஞ்சியத்தின் அபிவிருத்திக்கான உடன்படிக்கை 2022 சனவரி 06 அன்று கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய, 2022இல், ரின்கோ பெற்றோலியம் டர்மினல் (தனியார்) லிமிட்டெட்டானது அதன் கண்காணிப்பினுள் வருகின்ற 61 தாங்கிகளை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இது தொடர்பில், 10 களஞ்சிய தாங்கிகளின் சுகாதார மதிப்பீடும் விரிவான சாத்திய ஆய்வொன்றும் 2022இல் முன்னேற்றங்கண்டன. ஆண்டு காலப்பகுதியில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றினைத் தயாரித்து, திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் களஞ்சியத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பூர்வாங்க நடவடிக்கைகளாக நிலத்திலுள்ள தடைகளை அகற்றுதல் மற்றும் நில அளவீட்டினை மேற்கொள்ளல் ஆகியவற்றிற்கான கொள்வனவு செய்முறையொன்றினையும் உருவாக்கியது. இதேவேளை, அரசாங்கத்தின் கரைகடந்த ஐதரசன் காபன் கண்டறிதல், மேம்பாடு மற்றும் உற்பத்திப் பணிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பாக, இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையில் முன்னோக்கிய பெற்றோலிய கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, கரைகடந்த ஐதரசன் காபன் ஆய்வுத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் அதன் ஆணையினை வலுப்படுத்துவதில் இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை தனது ஈடுபாட்டைத் தொடர்ந்தது. மேலும், பன்னாட்டுத் தொகுதி எல்லை நிர்ணய செய்முறைகள் மற்றும் தற்போதைய கைத்தொழிற்துறைப் போக்குகள் என்பவற்றின் மீளாய்வினைத் தொடர்ந்து, மன்னார், காவேரி மற்றும் இலங்கையின் நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மூன்று பாரியளவிலான தொகுதிகளினுள் ஏறத்தாழ 900 சிறிய தொகுதிகளை உள்ளடக்கிய புதிய கரைகடந்த ஐதரசன் காபனைக் கண்டறியும் தொகுதி வரைபடமொன்று வடிவமைக்கப்பட்டு 2022 யூலையில் வர்த்தமானியிடப்பட்டது. நில அதிர்வுத் தரவுகள் பல சந்தர்ப்பங்களில் பகுப்பாய்விற்குட்பட்டதுடன் இலங்கையில் பெற்றோலிய கண்டறிகைக்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் துறைசார் நிபுணர்களினால் அரசாங்கத்திற்கு பல தசாப்தங்களிற்கு மேலாக தெரிவிக்கப்பட்டன. இன்னும் ஒத்த செய்முறை மீள நடந்தேறுவதுடன் அடுத்தடுத்த அரசாங்கங்களின் கீழ் ஊக்குவிப்புச் செலவுகள் உறப்படுகின்றன. நாட்டின் ஐதரசன் காபன் படிவுகளின் மீதான எரிவாயு அல்லது எண்ணெயின் உண்மையான கண்டறிதலானது இதுவரை புலப்படவில்லை. எனவே, இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையானது வினைத்திறன்மிக்கதொரு ஆய்வாளருடன் ஈடுபடுவதனையும் அண்மைய எதிர்காலத்தில் எண்ணெய்/எரிவாயுவின் கண்டறிதலானது தொடங்கப்படுவதனை நிச்சயப்படுத்துவதனையும் நோக்காகக் கொள்ளவேண்டும்.

முக்கியமாக 2022இன் முதலரைப் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக நாட்டில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பல் கணிசமானளவு இடையூறுக்குட்பட்டு, நகரத்திலும் நகர்சார் பகுதிகளிலும் வாழும் குடியிருப்பாளர்களைப் பாரியளவில் பாதித்தது. இருப்பினும், உலக வங்கியிடமிருந்தான நிதியியல் உதவியுடன் வங்கியியல் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகள் திரவ பெற்றோலிய எரிவாயுவின் இறக்குமதிக்கு உதவியதுடன் அதன்மூலம் உள்நாட்டுச் சந்தையில் திரவ பெற்றோலிய எரிவாயு நிரம்பலின் இயல்புநிலை மீட்டெடுக்கப்பட்டது. 2022 ஓகத்தில், உள்நாட்டு திரவ பெற்றோலிய எரிவாயு விலைகளை நிர்ணயிப்பதற்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய சூத்திரமொன்றின் பின்பற்றுதலிற்கு அமைச்சரவை


ஒப்புதலளித்ததுடன் இதன் அமுலாக்கம் 2022 ஓகத்திலிருந்து தொடங்கப்பட்டது. லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் 2022 ஏப்பிறல், யூலை, நவெம்பர் மற்றும் திசெம்பர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் உள்நாட்டு விலைகளை மேல்நோக்கித் திருத்தியதுடன் உலகளாவிய விலைத் தளர்த்தலினால் 2022 ஓகத்து, செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 சனவரி ஆகிய மாதங்களில் விலைகளைக் கீழ்நோக்கித் திருத்தியது. அவற்றினைப் பின்பற்றி, லாப் கேஸ் பிஎல்சி நிறுவனம் உள்நாட்டு விலைகளை 2022 ஓகத்து மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 சனவரி ஆகிய மாதங்களில் மூன்று கீழ்நோக்கிய திருத்தங்களுடன் 2022 மாச்சு மற்றும் யூன் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மூன்று முறை மேல்நோக்கித் திருத்தியது. மேலும், திரவ பெற்றோலிய எரிவாயு இறக்குமதிகளுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 7.5 சதவீதத்திலிருந்து இறக்குமதிச் செலவின் 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

உலகளாவிய வலுச்சக்தி விலைகளின் ஒட்டுமொத்தப் போக்கினைப் பின்தொடர்ந்து, 2022 மே தொடக்கம் குறிப்பிடத்தக்களவிலான மிதமடைதலொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 காலப்பகுதியில் சராசரி உலகளாவிய திரவ பெற்றோலிய எரிவாயு விலைகள் தொடர்ந்தும் உயர் மட்டங்களில் காணப்பட்டன. உலகளாவிய சந்தைகளில் திரவ பெற்றோலிய எரிவாயுவின் சராசரி விலை (30:70 என்ற புரொபேன்: பியூடேன் விகிதத்தின் அடிப்படையில்), உலகளாவிய வலுச்சக்தி சந்தையில் உயர்வடைந்த நிரம்பல் பக்க இடர்நேர்வுகள் காரணமாக 2022 ஏப்பிறலில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 954 ஆக உயர்வடைந்து, 2022 திசெம்பரில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 650இற்கு ஏறத்தாழ 31.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, உலகளாவிய நுகர்வுக் கேள்வியில் மிதமடைதலினைப் பிரதிபலித்தது. இருப்பினும், சீனாவில் கொவிட்-19 கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் உலகளாவிய கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட உயர்விற்கு மத்தியில் 2023 முதற் காலாண்டில் உலகளாவிய திரவ பெற்றோலிய எரிவாயு விலைகள் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 700இற்கு அதிகமாக தொடர்ந்தும் காணப்பட்டது.

மின்வலு

வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் நீர்த்தேக்க மட்டங்களில் வீழ்ச்சி என்பவற்றிற்கு மத்தியில் மின்சார உருவாக்கத்திற்கான எரிபொருள் மற்றும் நிலக்கரி பற்றாக்குறையினால் 2022இல் மின்சார வழங்கல் பாதிப்படைந்தது. இது மின்சாரத் துறையில் குறிப்பிடத்தக்க கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளைத் தேவைப்படுத்தி, குறிப்பாக மாச்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் நீண்ட நேர மின் தடையை ஏற்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளைக் கடுமையாக பாதித்தது. இதற்கமைய, 2022இன் முற்பகுதியில் குறைந்தளவிலான நீர்த்தேக்க நீர் மட்டங்களுக்கு மத்தியில் கேள்வி முகாமைத்துவ உத்தியொன்றாக 2022 பெப்புருவரி தொடக்கம் நாளாந்த அட்டவணையிடப்பட்ட மின்வெட்டுகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டது. 2022 ஏப்பிறல் முற்பகுதியில் மின்வெட்டுகளின் நீளம் நாளொன்றிற்கு 10 மணி நேரத்திற்கும் மேலாக அதிகரித்தமையானது, வறண்ட காலநிலை நிலைமைகள், எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல் அழுத்தங்களுக்கு மத்தியில் மின் உருவாக்கத்திற்கான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நாட்டில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி அழுத்தங்களின் காரணமாக எரிபொருளைக் கொள்வனவு செய்வதில் காணப்பட்ட தாமதம் என்பன காரணமாக நீர்த்தேக்க நீர் மட்டங்களில் சடுதியான வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது. 2022 மே தொடக்கம் செத்தெம்பர் வரையான மாத காலப்பகுதியில் பெய்த அடைமழையானது பாரியளவிலான நீர்மின் உருவாக்கத்தின் ஊடாக மின்சார வழங்கலிற்கு ஆதரவளித்ததுடன் அதன்மூலம் அனல் மின்சார வளங்களின் மீதான உயர்ந்தளவிலான தங்கியிருத்தலினைக் கட்டுப்படுத்தியது. இதற்கமைய, எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் அட்டவணையிடப்பட்ட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்பவற்றின் காரணமாக நுரைச்சோலை நிலக்கரி மின் ஆலையின் சில அலகுகளின் இடைக்கிடையேயான மூடுதல்கள் என்பவற்றிற்கு மத்தியில் பல்வேறு அனல் மின்சார ஆலைகள் அடிக்கடி பணிநிறுத்தங்களுக்கு உட்பட்ட போதிலும் தூண்டுதலளிக்கின்ற காலநிலை போக்குகளின் கீழ் நீர்த்தேக்கங்களின் சாதகமான மட்டங்களுடன் 2022 மேயிலிருந்து நாளொன்றிற்கு ஒன்று தொடக்கம் மூன்று மணித்தியாலங்கள் வரை மின் வெட்டுக்கள் படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்டன. சாதகமான நீர்த்தேக்க மட்டங்கள் காணப்பட்ட போதிலும், 2022 செத்தெம்பரிலிருந்து 2023 ஏப்பிறல் வரை நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்ட காலப்பகுதியில்

வரைபடம் 3.6
மின்வலு உற்பத்திக் கலவை



மூலம்: இலங்கை மின்சார சபை

நிலக்கரிக் கொள்வனவுச் செய்முறையில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக மின்சார வழங்கலில் பாதிக்கப்படக்கூடியவர்களின் எண்ணிக்கை 2022இன் பிற்பகுதியில் அதிகரித்தன. வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைகள், இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல் பிரச்சனைகள் மற்றும் நிலக்கரி கொள்வனவு நடைமுறையில் காணப்பட்ட பிரச்சனை என்பன நிலக்கரிக் கப்பலேற்றங்களில் தாமதங்களை எற்படுத்தின. மின்சாரம் வழங்கலில் பாதிப்படையக்கூடிய தன்மைகளைத் தணிக்கும் பொருட்டு, நிலக்கரிக் கொள்வனவினை சீராக்கும் பொருட்டு அதிகாரிகளினால் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், 2022 செத்தெம்பரிலிருந்து நிலக்கரி இறக்குமதிக்கு அவசியமான வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கும் பொருட்டு கடன்கரைப்பு நிதியமொன்றினை தாபிப்பதன் மூலம் நிலக்கரிக் கொள்வனவினை மத்திய வங்கி தொடர்ந்து வசதிப்படுத்தியது. இருப்பினும், உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் படிப்படியான மேம்பாட்டுடன் இணைந்து நிலக்கரி நிதியத்திற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு செய்தலானது 2023 முற்பகுதியில் நிறுத்தப்பட்டது.

ஆண்டு காலப்பகுதியில் அனல் மின் உருவாக்கத்திற்கு அவசியமான நிலக்கரி மற்றும் எரிபொருள் இறக்குமதிகளுக்கான இடையூறுகளின் விளைவொன்றாக, 2022இல் மொத்த மின்சார உருவாக்கமானது 4.6 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கமைய, மொத்த மின்வலு உருவாக்கமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 16,716 ஜிகாவாற்று மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 15,942 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த நீர்மின் உற்பத்தி, எரிபொருள் எண்ணெய்யின் அடிப்படையிலமைந்த மின் உற்பத்தி மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி என்பன 2021உடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் முறையே 5,364 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 4.9 சதவீதத்தினாலும் 2,467 ஜிகாவாற்று மணித்தியாலங்களுக்கு 6.3 சதவீதத்தினாலும் 5,174 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 6.3 சதவீதத்தினாலும் குறைவடைந்தன. மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடாக மின் உற்பத்தியானது மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் 2,937 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 0.5 சதவீத சிறியளவிலான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மொத்த மின்வலு உருவாக்கத்திற்கு நீர், எரிபொருள், நிலக்கரி மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகியவற்றின் பங்களிப்புக்கள் முறையே 33.6, 15.5, 32.5 மற்றும் 18.4 சதவீதங்களாக விளங்கி, ஆண்டு காலப்பகுதியில் செலவு கூடிய அனல் மின் வளங்களிலும் பார்க்க குறைந்த செலவில் மீள்புதுப்பிக்கத்தக்க வளங்கள் மீதான அதிகரித்த தங்கியிருத்தலைப் பிரதிபலிக்கின்றது. மேலும், இலங்கை மின்சார சபையானது மொத்த மின்வலு உருவாக்கத்தில் ஏறத்தாழ 76.7 சதவீதமாக விளங்கிய வேளையில், எஞ்சியவை

அட்டவணை 3.2
மின்வலுத் துறையின் செயலாற்றம்

விடயம	2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2021 (அ)	2022 (ஆ)
நிறுவப்பட்ட இயலளவு (மெ.வா.)	4,186	4,084	-1.9	-2.4
நீர்மின் (இ)	1,383	1,413	-	2.2
எரிபொருள் எண்ணெய் (ஈ)	1,087	924	-14.3	-15.0
நிலக்கரி	900	900	-	-
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ)	817	847	14.3	3.7
உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (கி.வா.ம.)	16,716	15,942	6.4	-4.6
நீர்மின் (இ)	5,640	5,364	44.2	-4.9
எரிபொருள் எண்ணெய் (ஈ)	2,634	2,467	-37.0	-6.3
நிலக்கரி	5,519	5,174	-4.1	-6.3
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (உ)	2,922	2,937	56.6	0.5
இலங்கை மின்சார சபையின் மொத்த விற்பனைகள் (கி.வா.ம.)	15,214	14,520	6.5	-4.6
வீடு மற்றும் வணக்கத்தலம்	5,320	5,124	2.9	-3.7
கைத்தொழில்	4,822	4,334	15.8	-10.1
பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி	3,342	3,415	3.2	2.2
தெரு விளக்குகள்	97	97	-9.8	-0.1
லங்கா மின்சாரக் கம்பனிக்கு மொத்த விற்பனை	1,633	1,550	1.7	-5.1
லங்கா மின்சாரக் கம்பனியின் விற்பனை (கி.வா.ம.)	1,603	1,559	-1.3	-2.7
வீடு மற்றும் வணக்கத்தலம்	717	699	-3.0	-2.6
கைத்தொழில்	306	266	9.6	-13.2
பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி	557	569	-4.5	2.2
தெரு விளக்குகள்	23	26	3.4	10.7
இலங்கை மின்சார சபையின் திரண்ட ஊடுகடத்தல் மற்றும் பங்கீட்டு இழப்பு (%)	9.0	8.9	-1.1	-0.7
பாவனையாளர்களின் எண்ணிக்கை ('000) (ஊ)	7,401	7,531	2.6	1.7
இதில் வீடு மற்றும் வணக்கத்தலங்கள்	6,411	6,509	2.2	1.5
கைத்தொழில்	73	75	4.2	2.5
பொது நோக்கம், அரசு மற்றும் விடுதி	915	944	5.5	3.2

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) சிறிய நீர் மின்வலு நிலையம் நீங்கலாக
(ஈ) சுயாதீன வலு உற்பத்தியாளர்கள் உள்ளடங்கலாக
(உ) சிறிய நீர்மின் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவைக் குறிக்கிறது
(ஊ) லங்கா மின்சார கம்பனியின் நுகர்வோர் உள்ளடங்கலாக

மூலங்கள்: இலங்கை மின்சார சபை
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி


சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இதேவேளை, மொத்த மின்வலு உருவாக்கத்தின் விகிதாசாரமொன்றாக ஒட்டுமொத்த ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு நட்டம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.9 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டது. 2023 இன் முற்பகுதியிலிருந்து, பருவகால வறண்ட காலநிலையின் தொடக்கத்தினால் நீர்த்தேக்க மட்டங்களில் ஏற்பட்ட துரித குறைவடைதல் காரணமாக அனல் மின்சார மூலங்களின் மீது மின் உருவாக்கம் முக்கியமாகத் தங்கியிருந்தது.

மின் தடைகள் மற்றும் முக்கிய பயனாளர் வகைகளிலிருந்தான கேள்வியின் சுருக்கம் என்பவற்றினால் உந்தப்பட்டு, மொத்த மின்சார விற்பனைகள் 2022இல் 14,520 ஜிகாவாற்று மணித்தியாலங்களிற்கு 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியுடன் இணைந்து 2022இன் முற்பகுதியில் மின்சார விற்பனைகளில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், மின் தடைகள் காணப்பட்டதன் காரணமாக மின்சாரத்தின் நுகர்வு அளவுகள்

அதன்பின்னர் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. மின் துண்டிப்புக்களின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, வீட்டு, கைத்தொழில் மற்றும் அரச வகைகளுக்கான விற்பனைகள் ஆண்டு காலப்பகுதியில் முறையே 3.7, 10.1 மற்றும் 8.3 சதவீதங்களாக சுருக்கங்களினைப் பதிவுசெய்தன. 2021இல் தாழ்ந்த புள்ளிவிபரத் தளத்தாக்கத்தின் முதன்மைக் காரணமாக, விடுதிகள் மற்றும் பொது நோக்கத்தினைக் கொண்ட வகைகளுக்கான மின்சார விற்பனைகள் முறையே 11.7 சதவீதம் மற்றும் 2.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைப் பின்பற்றுவதற்கான அவசியத்தினை அடையாளங்கண்டு, இலங்கை மின்சார சபையானது வலுப் பயன்பாடு குறித்த துல்லியமான மற்றும் நிகழ்நேர விற்பனைத் தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு திறன்மானி வாசிப்புத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றினை ஆரம்பித்த வேளையில், பயனர்களுக்கு தமது நுகர்வு மட்டங்களை அறிவித்தது. இருப்பினும், திறன்மானி வாசிப்புக் கருவிகளின் உயர் செலவுகள், நுகர்வோர்களிடையே விழிப்புணர்வின்மை மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளின் காரணமாக இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. வினைத்திறன் வாய்ந்த மானி வாசிப்பு முறைமையொன்றினை இயலுமைப்படுத்துவதனையும் பட்டியலிடல் நடைமுறையிலுள்ள சிக்கல்களைக் குறைப்பதனையும் உரிய விதத்தில் கருத்திற்கொண்டு, நிகழ்நேர அடிப்படையில் துல்லியமான வலுப் பயன்பாட்டுத் தரவு சேகரிப்பதற்கு இலங்கை மின்சார சபையின் துரித வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலானது தொடர்ந்தும் முக்கியமானதொன்றாகக் காணப்படுவதுடன் அதன்மூலம் இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல்கள் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் நிதியியல்சார் சிக்கல்களை மேலும் மோசமடையச்செய்யும் மின் உருவாக்கத்தின் உயர்வடைந்து செல்கின்ற செலவினைக் கருத்திற்கொண்டு எட்டு ஆண்டு காலத்திலானதோர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 2022இல் மின்சார தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. 2022 ஓகத்து 10 அன்று, சராசரியாக 75 சதவீத மேல்நோக்கிய திருத்தமொன்றுடன் மின்சாரத் தீர்வைகள் திருத்தப்பட்ட வேளையில் 0-30 அலகுகள் மற்றும் 31-60 அலகுத் தொகுதிகள் கொண்ட குறைந்த நுகர்வு வகைகளுக்கான நிலையான கட்டணத்தில் சலுகைகளை அனுமதிப்பதன் மூலம் குறைந்தந்தளவிலான வருமானம் ஈட்டுகின்ற குடும்பங்களின் வலு கட்டுப்படியாகும் தன்மையினைக் கருத்திற்கொண்டது. இருப்பினும், இம் மேல்நோக்கிய திருத்தத்திற்குப் பின்னரும், இலங்கை மின்சார சபை அவற்றின் நிதியியல் கூற்றுக்களில் பிரதிபலித்தவாறு நிதியியல் செயலாற்றத்தின் சமநிலை மட்டமொன்றினை அடைவதற்குத் தவறியமையானது, இலங்கை மின்சார சபையின் நிதியியல் ஆற்றலினை நிச்சயப்படுத்தும் பொருட்டு கிரமமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலைத் திருத்தங்களின் தேவைப்பாட்டினை எடுத்துக்காட்டியது. அத்தகைய பரிசீலனையுடன், தீர்வை சீராக்கத்தின் அடிப்படையிலமைந்த தன்னியக்க செலவு மீட்சியொன்றினூடாக 2023இலிருந்து அரையாண்டு தீர்வைத் திருத்தப் பொறிமுறையொன்றினைத் தாபிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. அதற்கமைய, மின்சாரத் தீர்வைகள் 2023 பெப்புருவரி 15இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சராசரியாக 66 சதவீதத்தினால் மீண்டும் திருத்தப்பட்டன. இத்தீர்வைத் திருத்தத்தின் கீழ், மொத்த நுகர்வோரில் 75 சதவீதத்திற்கும் அதிகமாக விளங்கும் மாதமொன்றிற்கு 0-90 அலகுகளை நுகரும் வீட்டு நுகர்வோர் வகைக்கான நிலையான மற்றும் வலு வீதங்கள் ஆகிய இரண்டும் கணிசமானளவில் அதிகரித்தது. அதற்கமைய, 90 அலகுகளின் மாதாந்த நுகர்விற்குக் கீழுள்ள நுகர்வோர் வகைகளுக்கான மின்சார அலகொன்றின் விலை 160 சதவீதத்திலிருந்து 275 சதவீத வீச்சினுள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. மேலும், பயன்பாட்டின் அடிப்படையிலான தொகுதி வகைப்பாட்டிற்கமைய, பொது நோக்கு, விடுதி மற்றும் அரசாங்கம் போன்ற ஏனைய துறைகளில் மின்சார அலகொன்றின் விலை 70 தொடக்கம் 100 சதவீதம் வரை மேல்நோக்கித் திருத்தப்பட்டுள்ள வேளையில், இவ்வண்மைய திருத்தக் காலப்பகுதியில் கைத்தொழில்துறை வகையின் கீழான நுகர்வோர் தொகுதிகள் மின்சாரத்தின் அலகு விலையில் 25 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. மின்சாரத் தீர்வைகளின் அண்மைய மேல்நோக்கிய திருத்தத்திற்கு மத்தியில், இலங்கை மின்சார சபையின் 2023இற்கான கிலோ வாற்று மணித்தியாலமொன்றிற்கான ரூ.48.74 கொண்ட மதிப்பிடப்பட்ட சராசரி விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் குறித்த சில நுகர்வோர் வகைகள் மானியமளிக்கப்பட்ட வீதங்களையே தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், இலங்கை மின்சார சபையின் அனைத்தையுமுள்ளடக்கியதொரு மறுசீரமைத்தலின்றி வாடிக்கையாளர்களுக்கு எவ்வித நன்மையும்

வரைபடம் 3.7
மின்வலுவிற்கான சராசரி செலவுகள் மற்றும் சராசரி தீர்வைகள்



மூலம்: இலங்கை மின்சார சபை

அட்டவணை 3.3
மின்வலுவின் சராசரி செலவுகள் மற்றும் சராசரி தீர்வைகள்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2021 (அ)	2022 (ஆ)
இலங்கை மின்சார சபையின் சராசரி செலவு (ரூ./கிவாம)	9.61	20.35	-7.1	111.8
நீர்மின்	1.72	1.80	-26.2	4.7
எரிபொருள் எண்ணெய்	32.03	67.69	10.4	111.3
நிலக்கரி	12.43	27.32	14.4	119.8
தனியாரின் சராசரி செலவு (ரூ./கிவாம)	21.67	32.04	-5.5	47.9
எரிபொருள் எண்ணெய்	30.35	69.65	10.2	129.5
பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு	16.22	14.98	-14.6	-7.6
திரண்ட சராசரி செலவு (ரூ./கிவாம)				
உருவாக்க நிலையில்	12.38	23.01	-11.5	85.9
விற்பனை நிலையில்	19.42	33.65	-10.4	73.3
சராசரித் தீர்வை (ரூ./கிவாம)	16.35	21.25	-2.2	30.0
வீடு	14.91	19.11	0.3	28.2
பொதுப் பயன்	23.42	27.36	-2.0	16.8
அரசு	18.25	23.84	1.1	30.6
கைத்தொழில்	14.70	20.63	-0.9	40.3
வீடுதி	17.79	21.39	-1.9	20.2

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மின்சார சபை

சென்றடையாது. தீர்வைகளின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் உயர்ந்தளவிலான உற்பத்திச் செலவினையும் சமூகத்தின் சில பிரிவினரால் மின்சார பட்டியல் கொடுப்பனவுகளைத் தாங்கிக்கொள்ள முடியாமை காரணமாக சமூக அமைதியின்மைகளினையும் தோற்றுவித்தன. இவ்வகையில், குறித்த சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் செலுத்தப்படாத பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு, சர்ச்சைக்குரிய பட்டியல்கள் கொடுப்பனவுகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும்.

அனல் மின்வலு உருவாக்கத்தின் செலவு உயர்வடைந்த போதிலும், நீர்மின் உற்பத்தியின் மீதான அதிகரித்த தங்கியிருப்பு மற்றும் மின்சாரத் தீர்வைகளுக்கான மேல்நோக்கிய திருத்தங்கள் என்பன 2022இல் இலங்கை மின்சார சபையின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்த உதவின. அதற்கமைய, தீர்வைத் திருத்தத்துடன் இணைந்து காசுப்பாய்ச்சல் மேம்பாடுகளின் பகுதியளவிலான காரணத்தினால் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு நட்டமானது 2022 ஓகத்திலிருந்து மிதமடைந்தது. இருப்பினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இலங்கை மின்சார சபை 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.34.6 பில்லியன் கொண்ட நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.272.9 பில்லியன் நட்டமொன்றினை அறிக்கையிட்டது. இது ரூ.94.7 பில்லியன் பெறுமதியான நுரைச்சோலை நிலக்கரி வலு நிலையத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் மீள்மதிப்பீட்டு நட்டத்தை உள்ளடக்கியுள்ளது. இலங்கை மின்சார சபை. வங்கிகளிலிருந்தான் குறுங்கால படுகடன் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்குமான ஏனைய வெளிநின்ற பொறுப்புக்கள் என்பன 2021 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட 289.0 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.361.9இற்கு அதிகரித்தன. இதேவேளை, புதுப்பிக்கத்தக்க வலு கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு 2021இன் பிற்பகுதியிலிருந்து இலங்கை மின்சார சபையின் மூலம் தீர்ப்பனவு செய்யப்படாத கொடுப்பனவு நிலுவைகள் ரூ.37.3 பில்லியனாக விளங்கியமையானது புதுப்பிக்கத்தக்க துறையின் பங்களிப்பினை மின்வலு உருவாக்கத்திற்கு விரிவாக்குவதற்கானதொரு தடையாக தொடர்ந்தும் காணப்பட்டது. இதேவேளை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அடையாளங்காணப்பட்ட பொறுப்புக்களை அரசாங்கத்தின் ஐந்தொகைக்கு மாற்றுவதுடன் அதன்மூலம் அத்தகைய நிறுவனங்களின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையினை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் கீழ், ஏழு செயற்றிட்டங்களின் கீழான ரூ.61.0 பில்லியன் தொகையிலான கடன் பகிர்ந்தளிப்பு மற்றும் நுரைச்சோலை செயற்றிட்டத்தின் ரூ.85.6 பில்லியன் தொகையிலான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஆகிய இலங்கை மின்சார சபையின் பொறுப்புகளை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் மொத்த நீண்ட காலப் பொறுப்புக்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.541.2 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.346.0 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. கிரமமான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்வைத் திருத்தங்களுடன் இணைந்த இவ்வழிமுறைகளுடன் இலங்கை மின்சார சபையின் காசுப்பாய்ச்சல்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்மூலம் மின்சாரத்திற்கான கேள்வியினை இடையூறுகளின்றி பூர்த்தி செய்வதனை இயலுமைப்படுத்தும் வேளையில், அரசாங்க காசுப்பாய்ச்சல்கள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரம் என்பன மீதான சுமையினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவையான மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தொடர்ச்சியான தாமதங்கள் காரணமாக, மின்சார மற்றும் வலுத் துறையில் ஏற்பட்ட உயர்வடைந்த பாதிக்கப்படக்கூடிய தன்மைகள், 2022இல் குறிப்பிடத்தக்க சமூக பொருளாதார செலவுகளை ஏற்படுத்தியதுடன், அதன்மூலம் நாட்டின் வலுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்துவதற்கான மறுசீரமைப்புக்களின் துரித நடைமுறைப்படுத்தலிற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டியது. மின்சார மற்றும் வலுத் துறையை அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் சுமையொன்றாக அன்றி பொருளாதார ரீதியாக ஆற்றல்வாய்ந்த துறையொன்றாக மாற்றும் நோக்கில் அரசாங்கம் 2022இல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. 2022இல் நிதி, கொள்கை உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கின்ற அலகு, இலங்கை மின்சார சபை உள்ளடங்கலாக அரசிற்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை மறுசீரமைப்பதனை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை,

வலுத்துறையினை நீடித்துநிலைத்திருக்கின்றதொரு முறையில் அபிவிருத்தி செய்வதற்கும், பொருத்தமான விதந்துரைகளை முன்வைப்பதற்கும், தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தலினை துரிதப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டலினை வழங்குவதற்கும் இலங்கை மின்சார சபையின் முக்கிய தொழிற்பாடுகளான உருவாக்கம், ஊடுகடத்தல், பகிர்ந்தளிப்பு மற்றும் ஏனைய தொழிற்பாடுகளைப் பிரிப்பதன் ஊடாக இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு உள்ளடங்கலாக கொள்கைகளையும் உபாயங்களையும் அடையாளம் காண்பதற்கு 2022 ஓகத்தில் அமைச்சரவைத் துணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கமைய, 'அடுத்த தசாப்தத்திற்கான தேசிய வலு வாய்ப்புக்கள், உபாயங்கள் மற்றும் வழிகாட்டுதல்' குறித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு 2022இன் பிற்பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், 2022-2041இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டமானது 2022இல் தயாரிக்கப்பட்டது. இவ்வபிவிருத்தித் திட்டம் 2030 ஆண்டளவில் மொத்த மின்சார உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை 70 சதவீதத்திற்கு விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், 2050 ஆண்டளவில் மின்வலு உருவாக்கத்தில் காபன் சமநிலைமைக்கு உறுதியளிப்பதுடன் புதிய நிலக்கரி மின்வலு ஆலைகளின் நிர்மாணத்தினை நிறுத்தி தூய வலு மூலங்களிலிருந்து இயலளவினை விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023-2042இற்கான இற்றைப்படுத்தப்பட்ட நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டமானது அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க வரைவு செய்யப்பட்டு 2022 செத்தெம்பரில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கான ஒப்புதல் 2023 பெப்புருவரியில் பெறப்பட்டது. இதேவேளை, 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் வளர்ச்சியினை வசதிப்படுத்தும் பொருட்டு நடைமுறைத் தடைகளை நீக்கித் திருத்தப்பட்டு 2022ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மின்சாரச் (திருத்தம்) சட்டமாக 2022 யூனில் வெளியிடப்பட்டது.

வலு மூலங்களைப் பன்முகப்படுத்துதல் மற்றும் உற்பத்தி இயலளவினை விரிவுபடுத்துதல் என்பன எதிர்வருகின்ற காலப்பகுதியில் அதிகரித்துச் செல்லும் வலுக் கேள்வியினை பூரணப்படுத்துவதில் அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றன. பல்வேறு புதிய மின்வலு ஆலைகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்களும் செயற்றிட்டங்களும் குறைந்தளவிலானதொரு வேகத்திலேனும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. மரபார்ந்த நிலக்கரி மற்றும் எரிபொருள் அடிப்படையிலமைந்த மின்வலு உருவாக்கத்தின் பொருளாதார மற்றும் சூழல் தாக்கங்களினைக் கருத்திற்கொண்டு, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு போன்ற புதிய வலு மூலங்களை உள்ளடக்குவதன் மூலம் வலுக் கலவையினைப் பன்முகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய, கெரவலப்பிட்டியில் 300 மெகாவாற்று சோபதனவி திரவ இயற்கை வாயு வலு ஆலை நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இது 2024இல் தொழிற்படத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டியில் இரண்டாவது 300 மெகாவாற்று திரவ இயற்கை வாயு வலு ஆலைக்கான பூர்வாங்கச் செய்முறையும் முன்னெடுக்கட்டு வருவதுடன் இது 2025 தொடக்கம் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023-2042 இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்ட வரைவிற்கமைய, 200 மெகாவாற்று இயலளவு கொண்ட உள்ளக தகன இயந்திர ஆலை மற்றும் 100 மெகாவாற்று இயலளவு கொண்ட எரிவாயு சுழலி ஆலை (அனல்மின்னின் அடிப்படையிலமைந்த) என்பன முறையே 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் மின்கட்டமைப்பிற்குள் சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், 2023-2042 இற்கான நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம், பல்வேறு பழைமைவாய்ந்த அனல்மின் ஆலைகளின் அட்டவணையிடப்பட்ட கைவிடலுடன் நாட்டின் நிறுவப்பட்ட இயலளவினை விரிவுபடுத்தும் பொருட்டு, பல்வேறு அனல்மின் வலு ஆலைகள் மற்றும் திரவ இயற்கை வாயு வலு ஆலைகள் எதிர்வருகின்ற ஆண்டு காலப்பகுதியில் மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும். அதேசமயம், வலு ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு முறைமை என்பன நட்டங்களினைக் குறைப்பதற்கும், மின்கட்டமைப்பிற்கு மேலதிக வலு மூலங்களை இணைப்பதற்கும் மற்றும் முறைமையின் நம்பகத் தன்மையினைப் பேணுவதற்கும் பல்வேறு செயற்றிட்டங்களின் மூலமாக விரிவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன.

செலவுமிக்க அனல்மின் வலு மீதான தாங்கியிருப்பினைக் குறைக்கும் நோக்குடன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைசார் பிரச்சனைகள் என்பவற்றின் புறநிலைத் தன்மையிலமைந்த பகுப்பாய்விற்குட்பட்ட புதிய மீள்புதுப்பிக்கத்தக்க வலு ஆலைகளை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய, 35 மெகாவாற்று பிரோட்லேன்ட் நீர்மின்வலுச் செயற்றிட்டம் 2022 இறுதியில் இறுதிக்கட்டத்தினை அடைந்த அதேவேளையில் உமா ஓயா (120 மெகாவாற்று), மொரகொல்ல (31 மெகாவாற்று), ஜின் கங்கா (20 மெகாவாற்று) மற்றும் தல்பிட்டிகல (15 மெகாவாற்று) போன்ற ஏனைய நீர்மின்வலுச் செயற்றிட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. 2021இன் நடுப்பகுதியளவில் பாரியளவிலான 100 மெகாவாற்று மன்னார் காற்றாலையின் இணைப்பினைத் தொடர்ந்து, தற்போதுள்ள ஆலைக்கான நீடிப்பொன்றாக 50 மெகாவாற்று மன்னார் காற்றாலைப் பூங்கா மற்றும் மன்னாரில் ஏனைய இரண்டு காற்றாலைகள் (கட்டம் II மற்றும் III, ஒவ்வொன்றும் 100 மெகாவாற்று) என்பன உள்ளடங்கலாக பல்வேறு புதிய காற்றாலைச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும், வேரவில் காற்றாலைச்

செயற்றிட்டம் (200 மெகாவாற்று), கரைச்சி காற்றாலைத் செயற்றிட்டம் (100 மெகாவாற்று), பொன்னாலை காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (100 மெகாவாற்று) மற்றும் மாந்தை மேற்கு காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (100 மெகாவாற்று) உள்ளடங்கலாக மீள்புதுப்பிக்கத்தக்க மின்வலு வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் (2021-2026) குறித்துக் காட்டப்பட்டுள்ள சாத்தியம் வாய்ந்த பகுதிகளில் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பூர்வாங்க கட்டத்தில் காணப்படுகின்றன. வலுப் பூங்கா அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ், 233 மெகாவாற்று காற்றாலை வலு இயலளவு மற்றும் 150 மெகாவாற்று சூரிய வலு இயலளவு கொண்ட பூநகரி மீள்புதுப்பிக்கத்தக்க வலுப் பூங்காச் செயற்றிட்டத்திற்காக 100 மெகாவாற்று காற்றாலை மின்வலு இயலளவினை நிறுவுவதற்கான ஆரம்ப அபிவிருத்தி வழிமுறைகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. 100 மெகாவாற்று சியம்பலாண்டுவ சூரிய வலுச் செயற்றிட்டத்தின் நிர்மாணமானது ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், மின்வலு நிலையத்தினை வினைத்திறன்மிக்க விதத்தில் வடிவமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தரவுகளைத் திரட்டுவதற்குச் செயற்றிட்டப் பகுதியில் வானிலை நிலையமொன்று நிறுவப்பட்டது. மேலும், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சூரிய வலு இயலளவினை விரிவுபடுத்துவதற்காக பாரியளவிலான சூரிய வலுச் செயற்றிட்டங்களுக்கான சாத்திய ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. சூரிய பால சங்கிராமயவின் கீழ், மேல் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய முறைமையின் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கு மேலதிகமான இயலளவு 2022இல் ஏறத்தாழ 231 மெகாவாற்றாக விளங்கி, அதேசமயம் ஏறத்தாழ 32 மெகாவாற்று இயலளவு கொண்ட செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதற்கான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டன. இதற்கமைய, இச்செயற்றிட்டத்தின் கீழ் தேசிய மின்கட்டமைப்பிற்கு அதன் தொடக்கத்திலிருந்து மொத்தமாக ஏறத்தாழ 670 மெகாவாற்று மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளது. அரச கட்டிடங்களில் சூரிய மேல் கூரைகள், குறைந்த வருமானம் கொண்ட வீட்டு அலகுகள் மற்றும் சமய ஸ்தலங்கள் என்பவற்றிற்கான வலுக் களஞ்சிய வசதிகளுடன் கூடிய சூரிய சக்தி தொகுதிகள் மற்றும் நேர்மாற்று நீர் சுத்திகரிப்பு ஆலைகள் என்பவற்றின் நிறுவுதல் மற்றும் 135 மெகாவாற்று சூரிய சக்தி இயலளவினை இணைப்பதற்கான மிதவை சூரிய சக்தி முன்னோடிச் செயற்றிட்டங்கள் என்பன ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 2022இல் ஆரம்பிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்தான ஐ.அ.டொலர் 11 மில்லியன் நிதியுதவியுடன் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய யாழ்ப்பாணத் தீவுகளில் கலப்பு மீள்புதுப்பிக்கத்தக்க வலு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்றிட்டம் சூரிய ஒளி, காற்று, டீசல் மற்றும் லித்தியம்-அயன் சேமிப்பு மின்கலங்கள் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட கலப்பு மின்வலு ஆலைகளை உள்ளடக்கும் என்பதுடன் 2024இன் முற்பகுதியளவில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த காலங்களில் செலவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களினைக் கருத்திற்கொண்டு, மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையை ஊக்குவிக்கின்ற நோக்கில், இலங்கை மின்சார சபையின் மீள்புதுப்பிக்கத்தக்க வலு கொள்வனவுகளுக்கு ஏற்புடையதாகின்ற தீர்வை முறைமை 2012இலிருந்து முதல் முறையாக, 2022 செத்தெம்பரில் திருத்தப்பட்டது. இதேவேளை, சூரிய சக்தி உருவாக்கத்தின் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் 2023இன் முற்பகுதியில் சூரியக் கல மாற்றிகளின் இறக்குமதிகளுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது. 2022இல் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையினை விரிவுபடுத்துவதற்கான பல்வேறுபட்ட முயற்சிகள் காணப்பட்ட போதிலும், மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் அபிவிருத்தியானது துறையின் முன்னேற்றத்தினைத் தடுக்கின்ற பல இடையூறுகளுடன் தொடர்ந்தும் போராடியது. ஏனையவற்றிற்கிடையில், உயர்ந்தளவிலான மூலதனச் செலவுகள் மற்றும் இறக்குமதிச் செலவுகள், சிறியளவிலான மின்வலு உற்பத்தியாளர்களுக்கு பணம் செலுத்துவதில் காணப்பட்ட தாமதம், தேசிய ஊடுகடத்தல் மின்கட்டமைப்பின் இயலளவு மட்டுப்பாடுகள் போன்றன நாட்டின் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் விரிவாக்கத்திற்குத் தொடர்ந்தும் தடையாக அமைந்தன. இப்பின்னணியில், நாட்டின் வலுப் பாதுகாப்பினை நீடித்து நிலைக்கின்ற முறையில் நிச்சயப்படுத்தும் பொருட்டு மீள்புதுப்பிக்கத்தக்க வலு முதலீடுகளுக்குத் தூண்டுதலளிக்கின்ற சூழலொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு மின்சாரம் மற்றும் வலுத் துறையில் உள்ள சகல ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் இன்றியமையாதனவாகும்.

இலங்கையின் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அதிகாரசபை நாட்டில் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. வலு வினைத்திறன் தன்மையினை மேம்படுத்துதல், வலு விரயத்தினைக் குறைப்பதன் மூலம் வலுப் பாதுகாப்பினை ஊக்குவித்தல், தூண்டுதலளிக்கின்ற கொள்கைகளை உருவாக்குதல், வலுவுடன் தொடர்புடைய தகவல்களை முகாமை செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், நீடித்து நிலைத்திருக்கின்ற வலுத் துறையில் அவசியமான முதலீடுகளை நிச்சயப்படுத்தல் மற்றும் சமூகத்தினை வலு உணர்திறன்மிக்கதாக மாற்றுதல் ஆகிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுவின் சகல வடிவங்களினையும் அபிவிருத்தி செய்வதில் இலங்கையின் நீடித்து நிலைத்திருக்கின்ற வலு அதிகாரசபை தொடர்ந்தும் ஈடுபட்டது. வலு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புச் செயற்றிட்டங்கள், வள இணைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் கொள்கை ஆலோசனைச் செயற்றிட்டங்கள் என்பன

ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில் வலுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்துகின்ற நோக்குடன் 2024-2029இற்கான மீள்புதுப்பிக்கத்தக்க வலு வள அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் திருத்தமும் 2022இல் தொடங்கப்பட்டது. ஐரோப்பா மற்றும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் இலங்கையில் மீள்புதுப்பிக்கத்தக்க வலுத் தொழில்நுட்பங்களுக்கான பயிற்சி மையச் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது. ஐரோப்பிய வங்கி, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் கீழ் தாங்கிக்கொள்ளக்கூடிய செலவில் சூழல் நேய புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்களிற்கான நிதியிடல் காணப்படுவதுடன் தொடர்புடைய நாடுகளினால் பின்பற்றப்படும் வெளிப்படையான செய்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பொறுத்து இது பயன்படுத்தப்படலாம். இத்திட்டங்களை முன்கூட்டியே அணுகுவதற்குரிய முயற்சிகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

வீதி அபிவிருத்தி

அரசாங்கத்தின் வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகளின் முன்னேற்றமானது 2022ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டமையானது காசுப் பாய்ச்சல் அழுத்தங்களுக்கு மத்தியில் இறுக்கமான இறை நிலைமைகளைப் பிரதிபலித்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது விரைவுப் பாதைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகள் என்பவற்றைப் பராமரித்தல், விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டடவாக்கம் மற்றும் இயற்கைப் பேரழிவுகளினால் சேதமடைந்த பாதைகளை மீட்டெடுத்தல் என்பனவுடாக வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு ஏறத்தாழ ரூ.195.4 பில்லியன் பெறுமதியினைப் பல்வேறு நடவடிக்கைகளின் மீது உறப்படுத்தியது. இதற்கமைய, விரைவுப் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதில் உறப்பட்ட செலவினம் ஆண்டு காலப்பகுதியில் முறையே ரூ.34.4 பில்லியன் மற்றும் ரூ.145.0 பில்லியன் பெறுமதியாகவிருந்த அதேவேளையில் பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டடவாக்கத்தின் மீது ரூ.6.6 பில்லியன் தொகை செலவிடப்பட்டது. செலவினைக் கட்டுப்படுத்துதல் தொடர்பிலான அரசாங்க முயற்சிகளின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்ட போதிலும், உறப்பட்ட செலவினமானது 2022இற்கான ரூ.247.8 பில்லியன் கொண்ட இறுதிப்படுத்தப்பட்ட ஆண்டு ஒதுக்கீட்டின் கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, கடந்த சில ஆண்டுகளில் பாதை வலையமைப்பு விரிவாக்கத்தில் காணப்பட்ட முதலீட்டுப் பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கும் வகையில், A மற்றும் B வகுப்பு வீதிகளை உள்ளடக்கிய தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட்ட விரைவுப் பாதைகளின் மொத்த நீளம் என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில 2022 இறுதியிலுள்ளவாறு முறையே 12,225 கிலோமீற்றர் மற்றும் 312.6 கிலோமீற்றர் ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டன.

ஆண்டு காலப்பகுதியில் விரைவுப்பாதை வலையமைப்பு அபிவிருத்தியின் முன்னேற்றமானது தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டது. பெரும்பாலும் அரசாங்கத்தின் கடுமையான நிதியியல் வரையறைகள் காரணமாக, கடவத்தையிலிருந்து தம்புள்ளை வரையிலான மத்திய விரைவுப் பாதையின் ஒட்டுமொத்த நிர்மாணப் பணிகள் 2022இல் குறைந்தளவிலான முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தன. 2022ஆம் ஆண்டின் இறுதியளவில், கடவத்தை தொடக்கம் மீரிகம வரையிலான நெடுஞ்சாலைப் பகுதி 2021இன் இறுதியில் 19.4 சதவீதத்திலிருந்து 34.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றமொன்றினை அடைந்திருந்தது. மேலும், மீரிகமவிலிருந்து குருநாகல் வரை நீடிக்கின்ற மத்திய விரைவுப் பாதையின் பிரிவு II ஆனது 2022 சனவரி நடுப்பகுதியில் நிறைவடைந்து பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. அதேவேளை, கஹதுடுவ தொடக்கம் பல்மதுல்ல வரை நீடிக்கின்ற ருவன்புர விரைவுப் பாதை மற்றும் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரை நீடிக்கின்ற பகுதி என்பவற்றின் நிர்மாணப் பணிகள் 2022இல் மெதுவானதொரு வேகத்தில் முன்னேற்றமடைந்தன. மேலும், நெடுஞ்சாலைகள் அமைச்சின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ருவன்புர விரைவுப் பாதையின் II மற்றும் IIIஆம் கட்டங்களின் சாத்திய ஆய்வினை மறுபரிசீலனை செய்தது. மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிகரித்துச் செல்கின்ற உள்ளீட்டுச் செலவுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியில் திரவத்தன்மைப் பற்றாக்குறை போன்ற தடைகள் எதிர்கொள்ளப்பட்ட போதிலும், நெடுஞ்சாலை வலையமைப்பிற்குத் துறைமுக நகரினையும் காலி முகத்திடலினையும் இணைக்கின்ற துறைமுக அணுகல்வசதியின் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டத்தின் நிர்மாணமானது ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022 இறுதியளவில் 54.3 சதவீத பௌதீக முன்னேற்றத்தினை அடைந்தது.

விரைவுப் பாதைகளுடன் இணைந்த ஒட்டுமொத்த வாகனப் போக்குவரத்து 2022இல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. கொட்டாவையிலிருந்து கொடகம வரையான மற்றும் பலுவையிலிருந்து மத்தள வரையான தெற்கு விரைவுப் பாதையில் நாளாந்தம் பயணிக்கின்ற வாகனங்களின் சராசரி எண்ணிக்கையானது முறையே 28,448 மற்றும் 6,425 ஆக முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலிருந்து 2022இல் முறையே 13.3 சதவீதம் மற்றும் 18.2 சதவீதத்தினால் மெதுவடைந்து, எரிபொருள் பற்றாக்குறைகளின் தாக்கத்தினைப்

பிரதிபலித்தது. வெளிச்சுற்று விரைவுப் பாதையும் 2021இல் அறிக்கையிடப்பட்ட 37,219 பயணித்த வாகனங்களிலிருந்து 28,291இற்கு 24.0 வீதத்தினால் போக்குவரத்து நடமாட்டங்களில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்தது. அதேவேளை, கொழும்பு கட்டுநாயக்க விரைவுப் பாதையில் நாளாந்தம் பயணிக்கின்ற வாகனங்களின் சராசரி எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 14.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், விரைவுப் பாதைகளிலிருந்தான வருவாய்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ.7.9 பில்லியனிற்கு 10.1 சதவீத குறைவொன்றினைப் பதிவுசெய்து வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், புதிதாகத் திறக்கப்பட்ட மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான மத்திய விரைவுப் பாதைப் பகுதியானது 2022இல் நாளொன்றிற்கு சராசரியாக 9,106 வாகனங்களை ஈர்த்து ரூ.703.8 மில்லியன் வருவாய்களை உருவாக்கியமையானது, பரிசீலனைக்குட்பட்ட காலப்பகுதியில் விரைவுப் பாதைகளிலிருந்தான வருடாந்த வருவாய்களின் ஒட்டுமொத்த வீழ்ச்சியினைப் பகுதியளவில் எதிரீடு செய்திருந்தது.

வீதி வலையமைப்புகள் மற்றும் பாலங்கள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் 2022 காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் முன்னேற்றமடைந்தன. ஆண்டு காலப்பகுதியில், தெற்கு வீதி இணைப்புச் செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் பதுளை - செங்கலடி வீதி மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் (A005) லுணுகல - பிபிள பகுதியின் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுச் செயற்றிட்டத்தின் கட்டம் I மற்றும் கட்டம் II, கண்டி பல்மாதிரிப் போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய இணைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் என்பன உள்ளடங்கலாக ஏனைய பல வீதி அபிவிருத்தித் திட்டங்கள் இவ்வாண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. 2022இல் தேசிய வீதிகளில் சில பாலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் பாலதக்ஷ மாவத்தை மற்றும் சேர் சிதம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, நீதிபதி அக்பர் மாவத்தைப் புகையிரதக் கடவை மற்றும் உத்தரானந்த மாவத்தை புகையிரதக் கடவை ஆகியவற்றை இணைக்கின்ற மேம்பாலங்களது பணிகளும் குறைவானதொரு வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன.

வீதிப் பயணிப் போக்குவரத்து


எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் செலவு உயர்வடைதல்கள் என்பவற்றிற்கு மத்தியில், கொவிட்-19 இடர்நேர்வுகளின் தளர்த்தலுடன் பொதுமக்களது நகர்வின் படிப்படியான இயல்பு நிலையினைப் பிரதிபலிக்கும் வகையில் வீதிப் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகள் 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டன. இதற்கமைய, இலங்கைப் போக்குவரத்து சபையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பன 2021இலும் பார்க்க ஆண்டு காலப்பகுதியில் முறையே 41.2 சதவீதத்திற்கும் 141.0 சதவீதத்திற்கும் கணிசமானளவு அதிகரித்தன. 2022இல் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6,932இற்கு 1.2 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்ததுடன் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு எவ்வித புதிய பேரூந்துகளும் ஒதுக்கப்படவில்லை. இக்காலப்பகுதியில், இலங்கைப் போக்குவரத்து சபையினால் தொழிற்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சராசரி எண்ணிக்கை 4,279இற்கு 216.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் இது இலங்கைப் போக்குவரத்து சபையின் பொதுப் போக்குவரத்துத் தொழிற்பாடுகளுக்காக வினைத்திறன்மிக்க விதத்தில் கிடைப்பனவாயிருந்த மொத்த வாகனங்களில் ஏறத்தாழ 84.2 சதவீதமாகக் காணப்பட்டது. இதேவேளை, ஆண்டு காலப்பகுதியில், தனியார் துறையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பனவும் முறையே 24.4 சதவீதத்தினாலும் 23.4 சதவீதத்தினாலும் அதிகரித்துக் காணப்பட்டன. தனியார் துறையினால் தொழிற்படுத்தப்பட்ட பேரூந்துகளின் சராசரி எண்ணிக்கை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 9,053 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 9,807இற்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் பேரூந்துத் தொழிற்பாடுகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்குள்ளேயான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2022 இறுதியளவில் முறையே 3,129 மற்றும் 16,733 ஆகப் பதிவுசெய்யப்பட்டன.

எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட உயர்வைத் தொடர்ந்து பொதுப் போக்குவரத்துக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொதுப் போக்குவரத்துத் துறையில் மேம்பாடுகள் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டன. 2022 ஆண்டு காலப்பகுதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போக்குவரத்து வசதிகளைத் தடையின்றி வழங்குவதனை நிச்சயப்படுத்துவதற்கு அதன் கிரமமான செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில், பொதுப் போக்குவரத்தின் தரத்தினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட பல்வேறு முயற்சிகளிலிருந்த முன்னேற்றம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எதிர்கொள்ளப்பட்ட நிதியியல் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழான சிசு செரிய மற்றும் நிசி செரிய ஆகிய இரண்டு சிறப்புப் பேரூந்துச் சேவைகள் முறையே 52 மற்றும் 25 என்றவாறு அவ்விரண்டு சேவைகளுக்கும் வழங்கப்பட்ட புதிய சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டன. இதற்கமைய, 2022 இறுதியிலுள்ளவாறு, சிசு செரியவின் கீழ்

1,617 சேவைகளும் நிசி செரிய பேரூந்து சேவைத் திட்டத்தின் கீழ் 219 சேவைகளும் தொழிற்படுத்தப்பட்டன. இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு புதிய செயற்றிட்டமொன்று தொடங்கப்பட்ட போதிலும் 2022இற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது எரிபொருள் விலை உயர்வுகளுக்கு மத்தியில் தனியார் பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளின் செலவின அதிகரிப்புடன் அதிகரித்துச் செல்கின்ற கேள்வியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சிசு செரியவின் கீழ் புதிய சேவைகளை வசதியளிக்கப் போதுமானதாக இருக்காமையினால் அது மானியமற்ற விலைகளைக் கொண்டிருந்தது. 2022 காலப்பகுதியில், பொதுப் போக்குவரத்துத் துறையில் தடங்கலற்ற தன்மையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு தனியாரிற்குச் சொந்தமான பயணிகள் போக்குவரத்து பேரூந்துகளுக்கும் பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளுக்கும் போதியளவிலான எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதேவேளை, தனிநபர்கள் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைத் தேர்ந்தெடுப்பதனை கட்டாயப்படுத்திய எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தங்கள் என்பவற்றிற்கு மத்தியில், 2022இல் பொதுப் போக்குவரத்து வசதிகளுக்கான கேள்வியில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. ஏனையவற்றிற்கிடையில் அதிகரித்த எரிபொருள் விலைகள் மற்றும் வரிச் சீர்திருத்தங்களுக்கு மத்தியில் வருமானங்களின் மிதமானதன்மை என்பவற்றுடன் பொதுப் போக்குவரத்து வசதிகளுக்கான கேள்வி எதிர்காலத்தில் மேலும் விரிவடையக்கூடும். இது நாட்டின் பொதுப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்கான அவசரக் கொள்கை வழிமுறைகளைத் தேவைப்படுத்தலாம்.

ஆண்டு காலப்பகுதியில், பேரூந்துக் கட்டணங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைத் திருத்தங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ஏழு சுற்றுக்களாகத் திருத்தப்பட்டன. இதற்கமைய,

வரைபடம் 3.8
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்



மூலம்: போக்குவரத்து திணைக்களம்

அட்டவணை 3.4
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்

விடயம்	2021	2022 (அ)	வளர்ச்சி வீதம் (%) 2021	2022 (அ)
உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்.)	33,850	20,510	-83.3	-39.4
பேரூந்துகள்	281	404	-51.4	43.8
மோட்டார் கார்கள்	3,495	1,489	-83.4	-57.4
முச்சக்கர வண்டிகள்	2,093	36	-70.7	-98.3
இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள்	771	760	-91.9	-1.4
உந்து சுருளிகள்	8,011	9,060	-94.7	13.1
சரக்குக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள்	4,432	1,832	12.5	-58.7
நில ஊர்திகள்	14,764	6,929	77.8	-53.1
குவாட்சி சுருளிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள்	3	-	-99.4	-

(அ) தற்காலிகமானது
மூலம்: போக்குவரத்துத் திணைக்களம்

ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஐந்து சுற்றுக்களிலான திருத்தங்களில் குறைந்தபட்ச பேரூந்துக் கட்டணம் ரூ.17.00இலிருந்து ரூ.40.00இற்கு அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், கடந்த இரண்டு திருத்தச் சுழற்சிகளுடன், குறைந்தபட்ச பேரூந்துக் கட்டணம் 2022 இறுதியளவில் ரூ.34.00 இற்குக் குறைக்கப்பட்டது. சாதாரண, சொகுசு மற்றும் அரைச் சொகுசுப் பேரூந்துச் சேவைகளின் கட்டணங்கள் ஆண்டு காலப்பகுதியில் அநேகமாக இரட்டிப்படைந்து காணப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், எரிபொருள் விலைகளில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்பிற்கு ஏற்ப சிசு செரிய, நிசி செரிய, மற்றும் கமி சரிய சேவைகளின் பேரூந்துக் கட்டணம் ரூ.134.00, ரூ.45.00 மற்றும் ரூ.89.00 என்பவற்றிற்கு முறையே 135.1 சதவீதத்தினாலும் 136.8 சதவீதத்தினாலும் 134.2 சதவீதத்தினாலும் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன.

வருவாய்ப் பக்கத்தில் சாதகமான மேம்பாடுகள் காணப்பட்ட போதிலும் இலங்கைப் போக்குவரத்து சபையின் நிதியியல் செயலாற்றம் 2022 காலப்பகுதியில் தொடர்ந்தும் பலவீனமடைந்து காணப்பட்டது. பேரூந்துக் கட்டணங்களில் பல்வேறு சுற்றுக்களாக மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களினால் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் வருவாயில் சில சாதகமான மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட போதிலும் உயர் எரிபொருள் விலைகளுக்கு மத்தியில் செலவினங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க விரைவுபடுத்தலினால் அத்தகைய தாக்கங்கள் எதிரீடு செய்யப்பட்டன. கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் போக்குவரத்து சபையின் மொத்த வருமானம் 2022இல் ரூ.69.3 பில்லியனிற்கு 147.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், மொத்த செலவினமும் ரூ.69.5 பில்லியனிற்கு ஏறத்தாழ 123.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் போக்குவரத்து சபை முன்னைய ஆண்டில் பதிவுசெய்த ரூ.3.1 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.0.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைப் பதிவுசெய்தது. பேரூந்துக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட

அட்டவணை 3.5
போக்குவரத்து துறையிலுள்ள அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் முக்கிய பண்புகள்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%) 2021 (அ)	2022 (ஆ)
1. இலங்கை போக்குவரத்துச் சபை				
தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	248	350	-19.7	41.2
பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	6,225	15,000	-27.8	141.0
மொத்த வருவாய் (ரூ.மில்லியன்)	28,035	69,258	-10.2	147.0
தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்)	31,089	69,545	-7.0	123.7
தொழிற்பாட்டு இலாபம்(+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்)	-3,054	-287	-38.6	90.6
2. இலங்கைப் புகையிரதப்				
தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000)	6,281	10,510	-21.4	67.3
பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	2,158	6,602	-44.7	205.9
சரக்குத் தொன் கிலோமீற்றர்கள் (மில்லியன்)	162	139	41.3	-14.2
மொத்த வருவாய் (ரூ.மில்லியன்)	2,679	11,076	-41.3	313.5
தொழிற்பாட்டுச் செலவு (ரூ.மில்லியன்)	12,979	23,513	-11.2	81.2
தொழிற்பாட்டு இலாபம்(+)/நட்டம்(-) (ரூ.மில்லியன்)	-10,300	-12,437	-2.5	-20.7
3. சிறிலங்கன் எயார்லைன்ஸ்				
பறந்த மணித்தியாலங்கள்	50,287	84,325	20.9	67.7
பறந்த பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)	2,868	11,042	-21.2	285.0
பயணிகள் சுமைக்காரணி (%)	36	74	-36.0	106.8
நிறை சுமைக்காரணி (%)	74	64	19.6	-13.8
சரக்கு (மெ.தொ. '000)	93	88	66.0	-5.4
வேலைவாய்ப்பு (எண்ணிக்கை)	5,732	5,572	-11.7	-2.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: இலங்கைப் புகையிரதம் சேவைகள்
இலங்கை போக்குவரத்துச் சபை
இலங்கை வான்வழிப் போக்குவரத்து அதிகாரசபை

சடுதியான மேல்நோக்கிய சீராக்கங்களைக் கருத்திற்கொண்டு பருவகால பயணச் சீட்டுக்களுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்களுக்கான மானியம் வழங்கப்பட்ட பருவகால பயணச் சீட்டுக்களுக்களை வசதிப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவித்தொகை 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.5.3 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.6.1 பில்லியனிற்கு அதிகரித்த வேளையில், பொருளாதார ரீதியாக பயன்குறைந்த பயண வழிகளுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்ட உதவித்தொகை 2021இல் அறிக்கையிடப்பட்ட ரூ.5.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.2.7 பில்லியனாக விளங்கியது. 2023இன் முற்பகுதியில், இலங்கைப் போக்குவரத்து சபை இந்திய கொடுகடன் வசதியின் கீழ் பெற்றுக்கொண்ட 125 புதிய பேரூந்துகளில் 75 பேரூந்துகளைப் பிராந்திய டிப்போக்களிடையே பகிர்ந்தளித்த வேளையில், போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் 50 பேரூந்துகள் பதிவு செய்யப்பட்டன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இலங்கைப் போக்குவரத்து சபையுடன் இணைந்து பயணிகளின் வசதிக்காக முன்கொடுப்பனவு அட்டைகளை வழங்குவதற்கான திட்டமொன்றினை ஆரம்பித்ததுடன் 2023 பெப்புருவரி மாத முற்பகுதியில் தெற்கு விரைவுப் பாதையில் கொட்டாவையிலுள்ள மாகும்புர பல்மாதிரிப் போக்குவரத்து நிலையத்திலிருந்து காலி வரையில் பயணிக்கின்ற தனியார் பேரூந்துகளுக்கான முன்னோடித் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் வீதிப் பயணிகள் துறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து புகையிரதப் பயணிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2022 ஆண்டு காலப்பகுதியில் போக்குவரத்துத் திணைக்களமும் உள்ளெரிகின்ற இயந்திரத்திலான முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பவற்றின் மின்னேற்றுதலுடன் தொடர்புடைய பூர்வாங்கப் பணிகளை ஆரம்பித்தது.

2020 தொடக்கம் நடைமுறையிலுள்ள மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, 2022இல் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கமைய, மோட்டார் வாகனங்களின் புதிய பதிவுகள் 2022இல் 39.4 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்தமையானது மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் உந்து ஊர்திகள், முச்சக்கர வண்டிகள், சரக்குப் போக்குவரத்து ஊர்திகள் மற்றும் நில ஊர்திகள் என்பவற்றின் பதிவில் ஏற்பட்ட சுருக்கங்களைப் பாரியளவில் பிரதிபலித்தது. ஆயினும், 2021 உடன் ஒப்பிடுகையில், ஆண்டு காலப்பகுதியில் உந்து ஈருருளிகளினதும் பேரூந்துகளினதும் பதிவுகள் முறையே 13.1 சதவீதத்தினாலும் 43.8 சதவீதத்தினாலும் அதிகரித்து காணப்பட்டது.

புகையிரதப் போக்குவரத்து

2022 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைப் புகையிரதம் மிதமடைந்த தொழிற்பாட்டு மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தமையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொதுமக்களது நகர்வின் படிப்படியான மீட்டெடுத்தலினைப் பிரதிபலித்தது. இலங்கைப் புகையிரதத்தின் மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் தூரம் மற்றும் பயணிகள் கிலோமீற்றர் தூரம் என்பன 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 67.3 சதவீதத்தினாலும் 205.9 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டன. இருப்பினும், சரக்குக் கி.மீ. தூரமானது கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 161.6 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் 138.7 மில்லியன் மெ.தொன் கி.மீ. தூரத்திற்கு 14.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

2022இல் இலங்கைப் புகையிரதத்தின் நிதியியல் செயலாற்றமானது தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டது. தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் புகையிரதத்தினால் உறப்பட்ட தொழிற்பாட்டு நட்டமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.10.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு


காலப்பகுதியில் ரூ.12.4 பில்லியனிற்கு மேலும் உயர்வடைந்தது. இலங்கைப் புகையிரதத்தின் மொத்த வருவாய்கள் ரூ.11.1 பில்லியனாக விளங்கிய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.4 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. 2022 யூலை தொடக்கம் நடைமுறைக்குவந்த புகையிரதக் கட்டண உயர்விலிருந்து தோற்றம்பெற்ற பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் இதற்கு முதன்மைக் காரணமாயமைந்தன. அதேவேளை, இலங்கைப் புகையிரதத்தின் மொத்த செலவினம் ரூ.2.1 பில்லியனிலிருந்து ரூ.42.5 பில்லியனிற்கு அதிகரித்ததுடன் இது ஆண்டு காலப்பகுதியில் எரிபொருள் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய சீராக்கங்களுடன் மீண்டெழுகின்ற செலவினத்தில் ஏற்படுத்தப்பட்ட கணிசமானளவிலான அதிகரிப்பிற்கு முதன்மையாகப் பங்களித்திருக்க முடியும். ஆண்டு காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் ரூ.23.5 பில்லியனிற்கு 81.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், மூலதனச் செலவினம் ரூ.19.0 பில்லியனிற்கு 30.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து காணப்பட்டது. எரிபொருள் விலை சீராக்கங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பயணிகள், சரக்குகள் மற்றும் அஞ்சல்கள் என்பவற்றின் போக்குவரத்திற்கான புகையிரதக் கட்டணங்கள் ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 2022 யூலை 12 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கான சீரானதும் தொடர்ச்சியானதுமான போக்குவரத்து வசதிகளை நிச்சயப்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பினையும் பணிகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கைப் புகையிரதம் மிதமானதொரு வேகத்தில் முன்னெடுத்தது. இருப்பினும், நிதியியல் மட்டுப்பாடுகளுடன், புகையிரதப் பாதை வலையமைப்புக்கள், புகையிரதத் தொகுதிகள் மற்றும் சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் என்பவற்றுடன் தொடர்புடைய சகல பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மெதுவான வேகத்தில் முன்னேற்றமடைந்தன. 2022 ஓகத்தில், இலங்கைப் புகையிரதம் கொழும்பிற்கும் பதுளைக்குமிடையில் இயங்குகின்ற 'எல்ல ஒடிஸி' நகரங்களுக்கிடையிலான அதி விசேட சொகுசுப் புகையிரதத்தினை அறிமுகப்படுத்தியதுடன் இது சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில் பயணிகளுக்குப் பெருமளவு சௌகரியத்துடன் உலகின் மிகவும் அழகிய புகையிரதப் பயணமொன்றினை வழங்குகின்றது. 100 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைப் புனரமைப்பதற்கான செயற்றிட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022 இறுதியளவில் 50 பயணிகள் புகையிரதப் பெட்டிகள் சேவையினுள் மீளறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், 2017இல் பெறப்பட்ட இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 160 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்தன. அதேவேளை, புகையிரதப் பாதைகளின் புனரமைப்பு, புகையிரத நிலையங்களினதும் பாலங்களினதும் பராமரித்தல், தளங்களின் விரிவுபடுத்துதல் மற்றும் சமிக்ஞையிடல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் முறைமைகளை வழங்குதல் என்பவற்றுடன் தொடர்புடைய பல்வேறு செயற்றிட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

வான்வழிப் போக்குவரத்து

கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து உலகம் மீட்சியடைந்து வருவதனால் உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்பட்ட படிப்படியான மீட்டெடுத்தலுடன் வான்வழிப் போக்குவரத்துத் துறையின் செயலாற்றமானது 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டது. இதற்கமைய, 2022இல் பயணிகளின் வருகைகளானது உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கைகளின் மீளாரம்பம் மற்றும் 2021இல் காணப்பட்ட தாழ்ந்தளவிலான புள்ளிவிபர தளம் என்பவற்றினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு 5.5 மில்லியனிற்கு 266.8 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில், சரக்குக் கையாளல் 166,969 மெற்றிக்தொன்களிற்கு 9.3 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு சுருங்கியது. 2022 இறுதியளவில், நாட்டில் 33 பன்னாட்டு விமான நிலையங்களும் ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களும் தொழிற்பாட்டிலிருந்தன. பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம் ஆண்டு காலப்பகுதியில் 41,547 வானூர்தி நடமாட்டங்களுக்கு 70.7 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்ததுடன் வானூர்தி நடமாட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 42,196இற்கு 68.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இது சுற்றுலாத் துறையின் மீளெழுச்சிக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் ருசியா, உஸ்பெகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் தாய்லாந்தில் ஆகிய நாடுகளிலிருந்து புதிய விமானங்களை ஈர்ப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளினால் முக்கியமாக வசதியளிக்கப்பட்டது. அதேவேளை, எயார்

வரைபடம் 3.9
விமானப் பயணிகள் மற்றும் விமான சரக்கு கையாளல்



மூலம்: இலங்கை வான்வழி போக்குவரத்து அதிகாரசபை

அட்டவணை 3.6
வான்வழித் துறையின் செயலாற்றம்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%)	
			2021 (அ)	2022 (ஆ)
1. பயணிகள் (இ)	1,500,078	5,502,539	-36.8	266.8
சிறிலங்கன் எயார்லைன்ஸ்	857,158	3,295,841	-30.8	284.5
வெளிநாட்டு எயார்லைன்ஸ்	642,920	2,206,698	-43.4	243.2
2. சரக்கு கையாளுதல் (மெ.தொ)	184,139	166,969	35.3	-9.3
சிறிலங்கன் எயார்லைன்ஸ்	93,195	88,170	66.0	-5.4
வெளிநாட்டு எயார்லைன்ஸ்	90,944	78,799	13.8	-13.4
3. வானூர்திகளின் அசைவுகள் (எண்ணிக்கை) (ஈ)	25,090	42,196	-1.9	68.2
பண்டாரநாயக்க ப.வி.நி.	24,336	41,547	-2.4	70.7
மாத்தளை ரா.ப.வி.நி.	722	266	43.0	-63.2
யாழ்ப்பாண ப.வி.நி.	32	383	-77.1	1,096.9

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) இடைநிற் பயணிகள் நீங்கலாக
(ஈ) உள்நாட்டு விமான அசைவுகள் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கை வான்வழி போக்குவரத்து அதிகாரசபை

பிரான்ஸ், சுவிஸ் பன்னாட்டு எயார்லைன்ஸ், அலையன்ஸ் எயார் என்பன உள்ளடங்கலாக பல பன்னாட்டு விமானங்களின் தொழிற்பாடுகள் இலங்கையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. உள்நாட்டு விமானப் பயணிகள் போக்குவரத்து கணிசமானளவிலான வளர்ச்சியொன்றினை 2022 இல் பதிவுசெய்தது. குறிப்பாக 2022 நடுப்பகுதியில் உள்நாட்டு எரிபொருள் பற்றாக்குறைகளினால் வான்வழிப் போக்குவரத்து நடவடிக்கைகள் சவாலுக்குட்படுத்தப்பட்ட போதிலும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அரசாங்கத்துடன் இணைந்து ஆண்டு முழுவதும் வானூர்தித் தொழிற்பாடுகளுக்கான உறுதியான எரிபொருள் நிரம்பலை நிச்சயப்படுத்தும் பொருட்டு விமான நிலையங்கள் மற்றும் கைத்தொழில் துறையிலுள்ள ஏனைய ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் நெருக்கமான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தது. அதேவேளை, இலங்கை விமான நிலையங்களுக்கு அதிகளவிலான விமான சேவைகளை ஈர்க்கும் பொருட்டு புதிய எயார்லைன்ஸ் மற்றும் தற்போதுள்ள தொழிற்படுத்துநர்களுக்கான நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான தீர்வை மற்றும் தரையிறக்கம் மற்றும் நிறுத்தி வைத்தல் கட்டணங்கள் ஆகியவற்றில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

கடுமையான பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சில தடங்கல்களுக்கு மத்தியில், பல்வேறு வான்வழிப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கட்டடவாக்கப் பணிகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் வான்வழிப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) நிறுவனம் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் முனையக் கட்டிடத்தில் புனரமைப்பு மற்றும் மீள்வடிவமைப்புச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு, தற்போதுள்ள இயலளவினை வினைத்திறனாகப் பயன்படுத்த முயற்சித்தது. மேலும், இறக்குமதிச் சரக்கு முனையக் கட்டிடத்தின் நிர்மாணம், பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பாதைகளை மாற்றியமைத்தல் மற்றும் பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் இலத்திரனியல் கடைத்தொகுதிக்கான பிணைக்கப்பட்ட பண்டகசாலைச் செயற்றிட்டம் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டன. மேலும், பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் ஒழுங்கான அபிவிருத்தியினை நிச்சயப்படுத்தும் பொருட்டு, அடுத்த 30 ஆண்டுகளுக்கான வான்வழிப் போக்குவரத்துக் கேள்விகளைத் தளர்த்துவதற்குப் புதிய விமான நிலைய முதன்மைச் செயற்றிட்டமொன்றினை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, கொழும்பு இரத்மலானை பன்னாட்டு விமான நிலையத்தின் 2030ஆம் ஆண்டை நோக்கிய முதன்மைச் செயற்றிட்டத்தின் கீழ் மேலதிக சுற்றுவட்டப் பாதையொன்றுடனான புதிய விமான நகர்வுப் பாதைக் கட்டுமானச் செயற்றிட்டம் 2022 மாச்சில் நிறைவு செய்யப்பட்டது.


சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிதியியல் செயலாற்றமானது ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான தொழிற்பாட்டு நட்டங்களைப் பதிவுசெய்த வேளையில், நடவடிக்கைகள் ஓரளவு மேம்பட்டமையானது பயணத்திற்கான வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய நாட்டத்தினைப் பிரதிபலித்தது. தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் படி, சிறிலங்கன் எயார்லைன்ஸின் தொழிற்பாட்டு நட்டமானது 2021இன் திசெம்பர் இறுதியில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.15.6 பில்லியன் கொண்ட நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் தொடர்புடைய காலப்பகுதியில் ரூ.4.4 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டுக் காணப்பட்டது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், சிறிலங்கன் எயார்லைன்ஸின் வருவாய்கள் 222.9 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் தொழிற்பாட்டுச் செலவினம் 176.0 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கையில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் வான்வழிப் போக்குவரத்து எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அதனைத் தொடர்ந்து வானூர்திகளின் பொது மீள் எரிபொருளேற்றுவதற்கான எரிபொருளின் கிடைப்பனவின்மையெனும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரகடனத்துடன் விமான நிலையங்கள் 'எண்ணெய்த் தொட்டிகளை' நாடியதுடன் மீள் எரிபொருளேற்றுவதற்காக ஏனைய தரிப்பிடங்களின் ஊடாக தொழிற்பட்டமையானது உயர்ந்தளவிலான செலவினங்களைத் தோற்றுவித்தது. சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிதியியல் மட்டுப்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற இறைச் சுமையைக் கருத்திற்கொண்டு, கணிசமானளவிலான பங்குகளையும் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினையும் வெளிப்படைத் தன்மையிலமைந்த பெறுகைச் செய்முறையொன்றினூடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முதலீட்டாளர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சிறிலங்கன் எயார்லைன்ஸினையும் அதன் துணை

நிறுவனங்களையும் மறுசீரமைப்பதற்கான முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைப்புச் செய்கின்ற பிரிவானது சிறிலங்கன் எயார்லைன்ஸினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்குக் குறித்தொதுக்கப்பட்டது.

துறைமுகப் பணிகள்


2022இல் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மத்தியில் இறக்குமதிக் கேள்வியின் மிதமடைதலினால் துறைமுக நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆண்டின் முதலாம் காலாண்டில் சாதகமான செயலாற்றமொன்று பதிவுசெய்யப்பட்ட போதிலும், துறைமுக நடவடிக்கைகள் 2022இல் ஒட்டுமொத்த சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தமையானது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் ஆழ்ந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் துறைமுகத் தொழிற்பாடுகள் மீதான நலிவடைந்த பன்னாட்டு நம்பிக்கை என்பன காரணமாக உள்நாட்டு இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, உலகளாவிய வர்த்தக அளவுகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட மிதமடைதலும் ஆண்டு முழுவதும் துறைமுக நடவடிக்கைகள் மீதான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இதற்கமைய, ஒட்டுமொத்த கொள்கலன் கையாளல் மற்றும் சரக்கு கையாளல் நடவடிக்கைகள் முறையே 5.3 சதவீதம் மற்றும் 8.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்காண்டு அடிப்படையிலான சுருக்கங்களைப் பதிவுசெய்த வேளையில், கப்பல் வருகைகளும் 2022 காலப்பகுதியில் 2.6 சதவீத ஆண்டிற்காண்டு அடிப்படையிலான சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த போதிலும், ஆண்டின் பிற்பகுதியில் சில மேம்பாடுகள் காணப்பட்டன. கொழும்பு துறைமுகத்தின் சகல முனையங்களும் சரக்குக் கையாளல் மற்றும் கொள்கலன் கையாளல் ஆகிய இரண்டிலும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளன. கொழும்பு

வரைபடம் 3.10
கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் கப்பல் வருகைகள்



மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபை

வரைபடம் 3.11
துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றம்



மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபை

பன்னாட்டு கொள்கலன் முனைக்கோடி, ஜெயா கொள்கலன் முனைக்கோடி, ஐக்கிய கொள்கலன் முனைக்கோடி மற்றும் கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் முதலாவது துறைமுக மேடை என்பன உள்ளடங்கலாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனைக்கோடி என்பன கையாண்ட மொத்த கொள்கலன்களின் அளவில் முறையே 46.4 சதவீதத்திற்கும் 28.1 சதவீதத்திற்கும் 25.5 சதவீதத்திற்கும் மற்றும் கொழும்புத் துறைமுகத்தில் கையாண்ட மாற்றிக் கப்பலேற்றுகின்ற கொள்கலன்களில் முறையே 45.3 சதவீதத்திற்கும் 28.6 சதவீதத்திற்கும் 26.1 சதவீதத்திற்கும் வகைகூறின. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மொத்த ஊர்திக் கையாளலானது 2022 காலப்பகுதியில் உள்நாட்டு ஊர்திக் கையாளலுடன் தொடர்புடைய குறைந்தபட்ச நடவடிக்கைகளுக்கு மத்தியில் மாற்றிக் கப்பலேற்றுகின்ற நோக்கங்களுக்கான அதிகரித்த ஊர்திக் கையாளலுடன் விரிவடைந்து காணப்பட்டது. இதற்கமைய, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 2022இல் 558,188 ஆக விளங்கி, 13.1 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில், ஊர்திக் கப்பலேற்றல்கள் மொத்த ஊர்திக் கையாளலின் 99.8 சதவீதமாக விளங்கி, 13.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்த வேளையில், 1,137 ஊர்திகள் மாத்திரமே மோட்டார் வாகன இறக்குமதி மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடுகளுடன் உள்நாட்டு நோக்கங்களுக்காகக் (அதாவது இறக்குமதிகள்) கையாளப்பட்டன.

துறைமுக உட்கட்டமைப்பு மற்றும் பணிகள் என்பவற்றின் அபிவிருத்தியானது நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. இதற்கமைய, கொழும்புத் துறைமுகத்துடனும் பிராந்திய துறைமுகங்களுடனும் தொடர்புடைய முக்கிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 2022இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. கிழக்கு கொள்கலன் முனைக்கோடியின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டதுடன் மண் அகழ்வு

அட்டவணை 3.7
துறைமுகப் பணிகளின் செயலாற்றம்

விடயம்	2021	2022 (அ)	வளர்ச்சி வீதம் (%) 2021	2022 (அ)
1. வருகை தந்த கப்பல்கள் (எண்ணிக்கை)	4,180	4,073	-3.6	-2.6
கொழும்பு	3,675	3,648	-3.4	-0.7
காலி	14	7	-36.4	-50.0
திருகோணமலை	117	95	-13.3	-18.8
அம்பாந்தோட்டை	374	323	-	-13.6
2. கையாளப்பட்ட மொத்தச்சரக்கு ('000 மெ.தொ)	109,369	100,376	6.3	-8.2
கொழும்பு	103,824	96,170	6.3	-7.4
எஸ்ஏஜீரி	24,062	22,731	-3.3	-5.5
சிஐசீரி	42,400	41,717	13.6	-1.6
இதுஅ	37,362	31,722	5.3	-15.1
காலி	106	1	-73.8	-98.9
திருகோணமலை	3,190	2,089	3.8	-34.5
அம்பாந்தோட்டை	2,249	2,116	28.5	-5.9
3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.க.அ.) (ஆ)	7,249	6,862	5.8	-5.3
எஸ்ஏஜீரி	1,839	1,752	-1.8	-4.7
சிஐசீரி	3,212	3,184	11.3	-0.9
இதுஅ	2,198	1,926	4.8	-12.4
4. மாற்றிக் கப்பலேற்றல் கொள்கலன் கையாளல் ('000 இ.ச.அ) (ஆ) (இ)	6,050	5,832	4.9	-3.6
எஸ்ஏஜீரி	1,573	1,523	-2.1	-3.2
சிஐசீரி	2,600	2,640	13.4	1.5
இதுஅ	1,877	1,670	0.6	-11.1

(அ) தற்காலிகமானது
(ஆ) இ.ச.அ = இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகள்
(இ) மீட்டமைத்தல் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கைத் துறைமுக அதிகாரசபை

மற்றும் நில மீட்சி என்பவற்றுடன் தொடர்புடைய 30 சதவீதப் பணிகள் 2022 இறுதியளவில் நிறைவடைந்தன. அதேவேளையில், செயற்றிட்டத்தின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீட்டாளர், உள்நாட்டு முதலீட்டாளர் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை ஆகியோருக்கிடையிலான 35 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகின்ற கட்டுமானம்-செயற்படுத்தல்-மாற்றல் உடன்படிக்கை இறுதிப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, கொழும்பு துறைமுகத்தின் மேற்குக் கொள்கலன் முனைக்கோடியின் நிர்மாணப் பணிகள் 2022 நவெம்பரில் தொடங்கப்பட்டன. கிழக்குக் கொள்கலன் முனைக்கோடி மற்றும் மேற்குக் கொள்கலன் முனைக்கோடி என்பன முறையே 2025 மற்றும் 2027 ஆண்டளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டு முனைக்கோடிகளும் நிறைவடைந்தவுடன், கொழும்புத் துறைமுகத்தின் மதிப்பிடப்பட்ட வருடாந்த இயலளவு ஏறத்தாழ 6 மில்லியன் பெறுமதியான இருபது அடிக்கு நிகரான அலகுகளினால் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது துறைமுகத் துறையில் எதிர்காலக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குப் பாரியளவில் துணைபுரிந்து, கொழும்புத் துறைமுகம் அதன் உபாய ரீதியிலான புவிசார் அமைவிடத்திலிருந்து பயன்களைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும். மேலும், கொழும்பு வடக்குத் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான சாத்திய ஆய்வு மற்றும் புதிய துறைமுக தொடர்பூட்டல் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க வடிவமைப்பு மற்றும் சாத்திய ஆய்வு என்பனவும் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. காங்கேசன்துறைத் துறைமுகத்தை பன்னாட்டு வர்த்தகத் துறைமுகமொன்றாகப் புனரமைப்பதற்கு முன்னெடுக்கப்படுகின்ற பணிகளுக்கு மேலதிகமாக, காங்கேசன்துறைக்கும் தென்னிந்தியாவின் பாண்டிச்சேரிக்கும் இடையிலான படகுச் சேவையொன்றினை ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டத்திற்கு 2022 செத்தெம்பரில் அமைச்சரவை ஒப்புதலளித்தது. இது தொடர்பாக, வடிவமைப்பு, கட்டுமானம், செயற்படுத்தல் மற்றும் மாற்றல் உடன்படிக்கையின் கீழ் பயணிகள் முனையத்தினை அபிவிருத்தி செய்வதற்கான பரிசோதனைசார் ஏற்பாடுகள் மற்றும் முன்மொழிவுக்கான கோரிக்கை ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றங்கண்டன. இதேவேளை, முதலீட்டாளர்களின் தெரிவுப் பட்டியலின் நிறைவடைதலினைத் தொடர்ந்து, காலி துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் முன்மொழிவுக்கான கோரிக்கையினையும் செயற்றிட்ட உடன்படிக்கையினையும் தயாரிக்கும் பணிகள் முன்னேற்றமடைந்து காணப்பட்டன.


செலாவணி வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வடைதலினால் ஆதரவளிக்கப்பட்ட அதிகரித்த வருவாயினால் பாரியளவில் உந்தப்பட்டு துறைமுக நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு மத்தியில் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் நிதியியல் செயலாற்றமானது 2022இல் மேம்பட்டுக் காணப்பட்டது. 2022 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வந்த இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் துறைமுக கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தமும் வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பகுதியளவில் பங்களித்தன. மேலும், இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் முனைக்கோடி முகாமைத்துவ முறைமை மற்றும் பயிற்சி முயற்சிகள் என்பவற்றின் ஆதரவுடன் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மணித்தியாலத்திற்கான சுமை தூக்கி உற்பத்தித்திறனுடன் தொடர்புடைய துறைமுக நடவடிக்கையின் வினைத்திறன் தன்மை முன்னைய ஆண்டிலும் பார்க்க 2022இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுக் காணப்பட்டது. இதற்கமைய, இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மொத்த வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.68.4 பில்லியனிற்கு 50.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ள வேளையில், தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.43.7 பில்லியனிற்கு 33.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபை 2021இல் பதிவுசெய்த ரூ.25.6 பில்லியன் கொண்ட வரிகளுக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.57.0 பில்லியனாகக் காணப்பட்டது.

தொடர்பூட்டல் பணிகள்

உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கை என்பன காணப்பட்ட காலப்பகுதியில் உயர்வடைந்திருந்த தொடர்பூட்டலுக்கான கேள்வியானது 2022இன் பிற்பகுதியில் ஏற்பட்ட மெதுவடைதலின் காரணமாக

தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றமானது மிதமடைந்து காணப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து பின்பற்றப்பட்ட பணி, கல்வி மற்றும் ஏனைய நாளாந்த நடவடிக்கைகளுக்கான இணையவழித் தளங்களின் அடிப்படையிலான முறைமையின் தடங்கலற்ற தன்மையினால் பாரியளவில் உந்தப்பட்டு, 2022இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வலுவான வளர்ச்சி உத்வேகமொன்றினை தொலைத்தொடர்பூட்டல் துறை பதிவுசெய்தது. இருப்பினும், பொதுமக்களின் நகர்வு படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியமை மற்றும் பணி மற்றும் கல்விசார் நடவடிக்கைகளுக்கு நேரடியாக சமுகமளித்தலிலான மீளாரம்பம் என்பவற்றினைத் தொடர்ந்து, 2022இன் பிற்பகுதியில் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, தொலைத்தொடர்பூட்டல் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய சீராக்கமானது 2022இன் பிற்பகுதியில் துறைச் செயலாற்றத்தின் மிதமடைதலுக்குப் பகுதியளவில் பங்களித்தது. பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் 6.3 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்த போதிலும், 2022இல் 7.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. ஆண்டு காலப்பகுதியில், செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களும் 3.7 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்ததுடன் செல்லிடத் தொலைபேசி மற்றும் பொருத்தப்பட்ட இணைய இணைப்புக்களை உள்ளடக்கிய மொத்த இணைய இணைப்புக்கள் 2.0 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமடைந்தன. 100 நபர்களுக்கான இணைப்புக்கள் மூலம் அளவிடப்பட்டவாறு, பொருத்தப்பட்ட மற்றும் செல்லிடத் தொலைபேசி ஊடுருவல் என்பன முறையே 12.0 மற்றும் 142.0 ஆக விளங்கிய அதேவேளை, இணைய ஊடுருவல் 2022இன் இறுதியளவில் 97.7 ஆக விளங்கியது. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் நீக்கலுடன் 2021 ஒத்தோபரிலிருந்து வீழ்ச்சியடைந்து சென்றுகொண்டிருந்த மொத்த தரவுப் பயன்பாடானது 2022

வரைபடம் 3.12
தொலைபேசி மற்றும் இணைய நுழைவு



மூலங்கள்: இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 3.8
தொலைத்தொடர்பூட்டல் துறையின் செயலாற்றம்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)	வளர்ச்சி வீதம் (%)	
			2021 (அ)	2022 (ஆ)
பொருத்தப்பட்ட தொலைபேசி பணிகள் (எண்ணிக்கை) ('000)	2,852	2,651	9.1	-7.0
சேவையிலுள்ள கம்பிவழித் தொலைபேசி இணைப்புக்கள்	1,264	1,263	1.5	-0.1
கம்பியல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள்	1,587	1,388	16.1	-12.5
செல்லிடத் தொலைபேசிகள் (எண்ணிக்கை) ('000)	29,959	28,838	4.2	-3.7
இணையத்தளத் தொடர்புகள் (எண்ணிக்கை) ('000) (இ)	22,106	21,668	26.1	-2.0
நுழைவு (ஈ)				
பொருத்தப்பட்ட தொலைபேசிகள்	12.9	12.0	8.0	-7.1
செலூலர் தொலைபேசிகள்	135.2	130.0	3.1	-3.8
இணையம் (இ)	99.8	97.7	24.8	-2.1


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) செல்லிடத் தொலைபேசி இணையத் தொடர்புகள் உள்ளடங்கலாக
(ஈ) 100 நபர்களுக்கான தொடர்புகள் என வரையறுக்கப்பட்டுள்ளது

மூலங்கள்: இலங்கைத் தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மாச்சிலிருந்து ஆரம்பித்து ஆண்டு காலப்பகுதியில் படிப்படியான அதிகரிப்பொன்றினைக் காண்பித்தது. மேலும், கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகளினால் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறுகளுக்கு மத்தியில், தொலைவிலிருந்து பணி மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நகர்வுடன் 2022 யூலையில் தரவுப் பயன்பாட்டில் சடுதியான உயர்வொன்று பதிவுசெய்யப்பட்டது.

பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற இலத்திரனியல் நிலைமாற்றத்தினை வசதிப்படுத்தும் பொருட்டு 2022இல் இலத்திரனியல் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்துவதில் அரசாங்கமும் ஏனைய முக்கிய ஆர்வலர் நிறுவனங்களும் தொடர்ந்தும் ஈடுபட்டன. இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 'கமட சன்னிவேதனய' எனும் செயற்றிட்டத்தின் ஊடாக நாடு முழுவதும் இலத்திரனியல் பணிகளுக்கான தடங்கலற்ற அணுகலை நிச்சயப்படுத்தும் பொருட்டு நாடளாவிய ரீதியில் 4G கவரேஜ் வலையமைப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 2021 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் 10 மாவட்டங்களில் 276 கோபுரத் தளங்களை நிறுவுதலானது ஆரம்பத் திட்டமாகக் காணப்பட்ட போதிலும், பொருளாதார அழுத்தங்களின் முதன்மைக் காரணமாகச் செயற்றிட்டத்தினை 2026 ஆண்டளவில் நிறைவுசெய்வதற்கு மீள்திட்டமிடப்பட்டது. 2022இன் இறுதியளவில், இச்செயற்றிட்டத்தின் கீழ், 38 கோபுர தளங்கள் நிறைவு செய்யப்பட்டு ஊடுகடத்தப்பட்டு செயற்பாட்டிலிருந்தன. இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2023 ஆண்டளவில் வர்த்தக ரீதியிலான 5G சேவைகளை இயலச்செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதேவேளை, 2022 மாச்சில்

வரைபடம் 3.13
அகலப்பட்டை தரவுப் பயன்பாடு



3

2022ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய தரவுப் பாதுகாப்புச் சட்டவாக்கத்தினைச் சட்டவாக்கம் செய்த முதலாவது தென்னாசிய நாடாக இலங்கை திகழ்ந்தது. 2023இல் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவுதலுடன் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் வினைத்திறனான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் செய்முறையொன்றின் மூலம் பொதுமக்களின் தகவல்களைப் பாதுகாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது அரசாங்க நிறுவனங்களின் பணி வழங்கலின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் தொழிற்துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் 'தேசிய இலத்திரனியல் நிலைமாற்ற உபாயத்தின்' கீழ் முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தியது. ஆண்டு காலப்பகுதியில், லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0, லங்கா அரசாங்க கிளவுட் 2.0, இலங்கையின் தனித்துவமான இலத்திரனியல் அடையாளப்படுத்தல் கட்டமைப்புச் செயற்றிட்டம், தொழில்நுட்ப வியாபித்தல் செயற்றிட்டம் மற்றும் இலத்திரனியல் ரீதியாக அனைத்தையுமுள்ளடக்கிய இலங்கைக்கான இயலளவு அபிவிருத்தி போன்ற பாரியளவிலான செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையின் கண்ணோட்டத்தின் கீழ் 23 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், தேசிய உபாயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேலும் 17 செயற்றிட்டங்களுக்கான தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மை தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை வழங்கியது. மேலும், தொலைத்தொடர்பூட்டல் துறையின் அபிவிருத்தியில் மைல்கல்லொன்றினைப் பதிவுசெய்து, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மையானது ஏனைய இரு முன்னணி தனியார் துறைத் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப கம்பனிகளுடன் இணைந்து தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் முறைமையினை நடைமுறைப்படுத்தியது. தேசிய எரிபொருள் உரிமத்திற்கான கியுஆர் முறைமையானது 2022இல் பெற்றோலிய எண்ணெய்ப் பகிர்ந்தளிப்புடன் இணைந்த சமூக பதற்றங்களைத் தளர்த்துவதில் கருவியொன்றாகக் காணப்பட்டதுடன் இது ஏனைய பொதுப் பணிகளை இதற்கு நிகரான தளங்களுக்கு நிலைமாற்றுவதற்கு ஊக்கமளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் தேய்வடைதலிலிருந்து தோற்றம்பெற்ற உயர்வடைந்த தொழிற்பாட்டுச் செலவினைக் கருத்திற்கொண்டு தொலைத்தொடர்பூட்டல் கட்டணங்கள் 2022 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, தரவு, குரல் அழைப்பு மற்றும் பே-டீவி (pay-Tv) இணைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய கட்டணங்கள் 20 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், பயன்பாட்டுக் கட்டணங்கள் மாற்றமின்றிக் காணப்பட்டன.

2022 காலப்பகுதியில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட இடையூறுகள் காரணமாக அஞ்சல் திணைக்களத்தின் செயலாற்றம் தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்பட்டது. நாடளாவிய ரீதியில் 8,157 வழங்கல் பிரதேசங்களை உள்ளடக்குகின்ற விதத்தில் 653 பிரதான அஞ்சல் அலுவலகங்கள், 3,342 உப அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் 140 முகவர் அஞ்சல் அலுவலகங்கள் என்பனவூடாக அஞ்சல் பணிகள் வழங்கப்பட்டன. அஞ்சல் திணைக்களமானது புத்துருவாக்க பணி அணுகுமுறைகளினூடாக அதன் பணி வழங்கலை தொடர்ந்தும் மேம்படுத்திய வேளையில், சமூக ஊடக தளங்களின் வாயிலாக அத்தகைய பணிகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வினை ஊக்குவிக்கவும் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்கமைய, 2020இல் மீள ஆரம்பிக்கப்பட்ட 'வழங்கலின் போதான காசுக் கொடுப்பனவு' சேவைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.34.0 மில்லியன் கொண்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.269.0 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வருமானமொன்றினைப் பதிவுசெய்தன. நான்கு ஆண்டுகளுக்கும் மேலானதோர் இடைவெளிக்குப் பின்னர், அஞ்சல் பணிகளுடன் தொடர்புடைய போக்குவரத்துச் செலவு உயர்வுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிநாட்டு அஞ்சல் வீதங்களுக்கான திருத்தங்களுடன் இணைந்து, உள்நாட்டு அஞ்சல் வீதங்கள் 2022 ஓகத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதற்கமைய, உள்நாட்டுச் சாதாரண அஞ்சல் சேவை மற்றும் குறைந்தபட்ச பதிவு கட்டணம் என்பவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்க குறைந்தபட்ச அஞ்சல் கட்டணங்கள் முறையே ரூ.35.00 மற்றும் ரூ.30.00 இனால் முறையே ரூ.50.00 மற்றும் ரூ.60.00 இற்கு அதிகரித்த வேளையில், ஏனைய அஞ்சல் சேவைகளுக்குப் பிரயோகிக்கத்தக்க அநேகமான கட்டணங்கள் ஆண்டு காலப்பகுதியில் மேல்நோக்கி உயர்த்தப்பட்டன. இம்முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், 2022இல் அஞ்சல் திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதியியல் நிலைமை தொடர்ந்தும் நலிவடைந்து காணப்பட்டது. அஞ்சல் திணைக்களத்தின் தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம்,


வருவாய்கள் ரூ.9.3 பில்லியனிற்கு 29.6 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும், ரூ.16.1 பில்லியனிற்கு 15.3 சதவீதத்தினால் அதிகரித்த உயர்ந்தளவிலான தொழிற்பாட்டுச் செலவினமானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.7.2 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.7.0 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைத் தோற்றுவித்தது. அஞ்சல் திணைக்களத்தின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்கான கிரமமான அஞ்சல் கட்டணத் திருத்த பொறிமுறைகளிற்குப் புறம்பாக, நாட்டில் அஞ்சல் சேவையின் வளர்ச்சியடைந்து வருகின்ற நுகர்வோர் தேவைகளைக் கருத்திற்கொண்டு, ஏனையவற்றிற்கிடையில் விரிவடைந்த சேவைப் பன்முகப்படுத்தன்மையின் ஊடாக தன்னியக்கச் சேவை, இணையவழிச் சேவை, 'ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குத் தொடர்ச்சியாக சுவட்டினைப் பின்பற்றிச் செல்லல்', வாடிக்கையாளரிடம் வந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சேவை ஆகிய வடிவங்களில் நவீன தொழில்நுட்பம், புத்துருவாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளில் உயர்ந்தபட்ச அனுகூலத்தினைப் பெற்றுத்தருகின்ற விரிவான நவீனமயமாக்கலை அஞ்சல் திணைக்களம் தேவைப்படுத்துகின்றது.

நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம்

2022 காலப்பகுதியில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குழாய் நீரிற்கான வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்வியைப் பூர்த்தி செய்ய பாதுகாப்பான மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நீரை வழங்குவதற்கான அதன் பணிகளை விரிவுபடுத்தியது. 153,217 புதிய நீர் வழங்கல் இணைப்புகளின் வழங்கலுடன், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிர்வகிக்கப்பட்ட மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை ஆண்டு காலப்பகுதியில் 2.9 மில்லியனிற்கு அதிகரித்தது. இதற்கமைய, பாதுகாப்பான குடிநீரிற்கான அணுகல் வசதியினைக் கொண்டுள்ள குடித்தொகையின் சதவீதம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 94.4 சதவீதத்திலிருந்து 2022இல் 96.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், மொத்த குழாய் நீரிற்கான உள்ளடக்கம் 2022இல் குடித்தொகையின் 60.4 சதவீதமாக விளங்கியது. மேலும், நாட்டின் வருமானமல்லாத நீர்ப் பயன்பாட்டின் விகிதாசாரம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.8 சதவீதத்திலிருந்து 2022இல் 25.2 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆண்டு காலப்பகுதியில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் மேம்பாட்டு முயற்சிகள் நிதியியல் மட்டுப்பாடுகளினாலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடின்மையினாலும் தடைப்பட்டமையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் மெதுவான வேகத்திலான முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தது. இலங்கையின் குழாய் நீர் உள்ளடக்கம் 2025 ஆண்டளவில் 79 சதவீதத்திற்கு அதிகரிப்பதனை நோக்காகக் கொண்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மாபெரும் அபிவிருத்திச் செயற்றிட்டமான 'அனைவருக்கும் நீர்' எனும் செயற்றிட்டமானது அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2022இல் நிறுத்தப்பட்டது. மாறாக, தற்போதுள்ள நீர் வழங்கல் செயற்றிட்டங்களின் இயலளவினையும் பகிர்ந்தளிப்பு விரிவாக்கத்தினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு ஆண்டு காலப்பகுதியில் 'இயலளவு மேம்பாடு மற்றும் பகிர்ந்தளிப்பு விரிவாக்கச்' செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. இதேவேளை, 2017இல் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்த பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டமானது மாத்தளை நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள 90,000 குடும்பங்களுக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்குகின்ற அதேவேளையில், காலிக் கொத்தணிச் செயற்றிட்டம் மற்றும் கொழும்பு நீர் வழங்கல் சேவையின் செயற்றிட்டம் I ஆகிய மேம்பாட்டுச் செயற்றிட்டங்களும் 2022 இல் நிறைவடைந்தன. மேலும், அலவ்வ, பொல்கஹவெல, பொத்துஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்றிட்டம் மற்றும் மாத்தறை நீர் வழங்கல் செயற்றிட்டம்-கட்டம் IV ஆகியன 2022இல் முறையே 94.0 சதவீத மற்றும் 93.1 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினை எய்திய வேளையில், இவ்விரு செயற்றிட்டங்களும் 2023இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்றிட்டங்களின் நிறைவடைதலினைத் தொடர்ந்து, இச்செயற்றிட்டங்கள் தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 20 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளன. மேலும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டமானது இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள 300,000 பயனாளிகளின் நீர்த் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதனை நோக்காகக் கொண்டதுடன் 2022 இறுதியளவில் 71.4 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மெதுவான வேகத்திலான முன்னேற்றம் காரணமாக ஏனைய பல்வேறு நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் ஏறத்தாழ பத்து முக்கிய நீர் வழங்கல் செயற்றிட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட நிறைவுக் காலக்கெடுவும் நீடிக்கப்பட்டது.

10 ஆண்டு காலப்பகுதியிலானதோர் இடைவெளிக்குப் பின்னர் 2022இல் நீர் மற்றும் கழிவு நீர் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதியியல் செயலாற்றத்தினை வலுப்படுத்தத் துணைபுரிந்தது. நாட்டில் நீர் வழங்கலிற்கும் நீர் உட்கட்டமைப்பினைப் பராமரிப்பதற்குமான அதிகரித்து வருகின்ற செலவினையும் நீர்த் தீர்வைகளுக்கான கிரமமான திருத்தங்களின்மையினால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் உறப்பட்ட அதன் விளைவான நிதியியல் நட்டங்களையும் கருத்திற்கொண்டு, நீர் மற்றும்

வரைபடம் 3.14
நீர் வழங்கலின் நிலைமை



3

கழிவு நீர்த் தீர்வைகளை 2022 செத்தெம்பர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. இதற்கமைய, குடியிருப்பாளர் வகைக்கான பயன்பாட்டுத் தீர்வைகள் ஏறத்தாழ 70.0 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டதுடன் பயனாளர்களின் சகல வகைகளுக்குமான அடுக்கு நீர்த் தீர்வை முறைமை கணிசமானளவில் அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், சமூர்த்தி பெறுநர்கள் போன்ற குறை வருமான நுகர்வோருக்கு பிரயோகிக்கக் கூடிய தீர்வைகள் பாடசாலைகள், சமய மற்றும் தொண்டு நிறுவனங்கள் போன்ற வகைகளுக்கு பிரயோகிக்கக் கூடிய தீர்வை வீதங்களுடன் இணைந்து தொடர்ந்தும் பாரியளவில் மாற்றமின்றிக் காணப்பட்டன. மேலும், புதிய நீர் இணைப்புகளுக்கான கட்டணங்களும் 2022 ஒத்தோபர் 17 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இத்திருத்தங்களுக்குப் பகுதியளவில் பங்களித்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தொழிற்பாட்டு நட்டம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3.1 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1.2 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிச் செல்கையில், நீர்த் தீர்வைகள் கிரமமாக அட்டவணையிடப்பட்ட கால இடைவெளிகளில் திருத்தச் செய்முறைக்கு உட்படுத்தப்படுவது இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் அதன்மூலம் நீண்ட காலத்திற்கு மக்களின் நலன் மற்றும் நலனோம்புகையைப் பாதுகாக்கும் பொருட்டு நாட்டின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார முறைமையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மை நிச்சயப்படுத்தப்படும்.

நீர்ப்பாசன திணைக்களம் 2022இல் வேளாண்மை மற்றும் குடியிருப்பு நோக்கங்களுக்கான நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது. ஆண்டு காலப்பகுதியில், நீர்ப்பாசன திணைக்களம் ரூ.3.8 பில்லியன் மொத்த செலவொன்றினை ஏற்படுத்துகின்ற 19 முக்கிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களை முன்னேற்றமடையச் செய்ததுடன் இதில் உமா ஓயா நீரோட்டத் திசை அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு ரூ.2.0 பில்லியனும் யான் ஓயா செயற்றிட்டத்திற்காக ரூ.616.3 மில்லியனும் செலவிடப்பட்டது. உமா ஓயா நீரோட்டத் திசை அபிவிருத்திச் செயற்றிட்டம் 2022 இறுதியளவில் 74.1 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினை எட்டியது. ஆண்டு காலப்பகுதியில் ரூ.1.1 பில்லியன் செலவினை ஏற்படுத்தி, புனரமைப்பினூடாக நீர்ப்பாசன நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கும் அனைத்து மாவட்டங்களிலும் ஏறத்தாழ 250,000 குடும்பங்களின் நலனுக்காக தாங்கிகளினதும் அணைக்கட்டுக்களினதும் இயலளவினை மேம்படுத்துவதற்குமான முயற்சியில் 'வாரிசௌபாக்கியா தேசிய செயற்றிட்டம்' முன்னேற்றங்கண்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ், ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் கருத்திற்கொள்ளப்பட்ட 739 தாங்கிகள்/அணைக்கட்டுக்களுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 598 தாங்கிகளின் புனரமைப்பு நிறைவுசெய்யப்பட்டது. மேலும், பெரமடுவ நீர்த்தேக்கச் செயற்றிட்டம் மற்றும் பதவிய மற்றும் வஹல்கட திட்டங்களின் புனரமைப்புப் பணிகள் ஆகியன உள்ளடங்கலாக பல நடுத்தரளவிலான நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களின் பௌதீகப் பணிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2022இல் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை, நாட்டில் 80 நீர்ப்பாசனத் திட்டங்களில் நிலம், நீர் மற்றும் பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் பொருட்டு நீர்ப்பாசன முறைமை வினைத்திறன் தன்மைகளை மேம்படுத்தும் நோக்கில் 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட 'உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம்' வரையறுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அட்டவணை 3.9
தேசிய நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல்

விடயம்	2021	2022 (அ)	வளர்ச்சி வீதம் (%)	
			2021	2022 (அ)
மொத்த நீர் வழங்கல் திட்டங்கள் (எண்ணிக்கை) (ஆ)	337	339	1.8	0.6
காலப்பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட மொத்த புதிய இணைப்புக்கள் (எண்ணிக்கை)	192,087	153,217	56.5	-20.2
மொத்த இணைப்புக்கள் (எண்ணிக்கை) (ஆ)	2,752,324	2,905,541	7.5	5.6
மொத்த நீர் உற்பத்தி (மி.க.மீ) (இ)	815	818	4.2	0.4
வருவாயற்ற நீர் (சதவீதம்)				
கொழும்பு நகரம்	34.8	24.1	-11.4	-30.6
முழுத்தீவும்	25.8	25.2	4.8	-2.3
பாதுகாப்பான குடிநீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்)	94.3	96.0	1.2	1.8
பாதுகாப்பான குழாய் நீரின் கிடைக்குந்தன்மை (சதவீதம்) (ஈ)	54.2	60.4	2.1	11.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மி.க.மீ = மில்லியன் கன மீற்றர்கள்
(ஈ) ஏனைய அதிகாரசபைகளினால் முகாமைத்துவம் செய்யப்படும் முறைமைகள் உள்ளடங்கலாக

மூலம்: தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

3.3. சமூக உட்கட்டமைப்புக் கொள்கைகள், நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் செயலாற்றம்

சுகாதாரம்

நாட்டின் சுகாதார வழங்கல் 2022 ஆண்டு காலப்பகுதியில் சமகால சவால்களுடன் தொடர்ந்தும் போராடியது. 2022இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட கொவிட்-19 தொற்றுக்குள்ளாகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையில் எழுச்சியொன்று காணப்பட்டபோதிலும், இறுதியாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நோய்ப்பரவலின் தீவிரத்தன்மை குறைவடைந்தது. 2021இன் இறுதியில் ஓமிக்ரோன் திரிபின் பரவலுடன், கொவிட்-19 தொற்றுக்குள்ளாகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை 2022 ஏப்பிறல் இறுதி வரை வலுவான அதிகரிப்பொன்றினைக் காண்பித்ததுடன் 2022 யூலையளவில் படிப்படியான வீழ்ச்சியொன்றினைத் தொடர்ந்தது. அதன் பின்னர், அதிகளவில் தொற்றுக்குள்ளாகக்கூடிய மற்றும் அதிகளவு நோயெதிர்ப்பைத் தடுக்கும் திரிபாக அறியப்படுகின்ற ஓமிக்ரோன் பீஏ. 5 எனும் துணைத் திரிபின் ஊடுகடத்தல் 2022 இறுதியில் குறைவடைவதற்கு முன்னர் 2022 யூலை மாத நடுப்பகுதியில் தீவிரமடைந்தது காணப்பட்டது. சுகாதார அமைச்சின் பிரகாரம், 2023 மார்ச்சு நடுப்பகுதியிலுள்ளவாறு, 672,048 கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்கள் அறிக்கையிட்ட அதேவேளை, இறப்புக்களின் எண்ணிக்கை 16,831 ஆகக் காணப்பட்டது. இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தொற்றுக்குள்ளானவர்களினதும் இறப்புக்களினதும் எண்ணிக்கை அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டமையானது வைரஸ் தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உபாயங்களின் வெற்றிகரமான செயற்படுத்தலைக் குறித்துக்காட்டியது. நாடு முழுவதும் தடுப்புமருந்தின் துரித வழங்கலுடன் இணைந்து நகர்வு மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளி வழிமுறைகள் என்பன நாட்டில் பன்முக நோய்ப்பரவலைக் கையாள்வதற்குத் துணைபுரிந்தன. 2023 மார்ச்சு நடுப்பகுதியிலுள்ளவாறு, தேசிய தடுப்பூசியேற்றும் செயற்றிட்டமானது 12 வயதிற்கு மேற்பட்ட குடித்தொகையில் ஒரு தடுப்பூசியையேனும் ஏற்றிக்கொண்ட 97.1 சதவீத மற்றும் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்ட 83.6 சதவீத குடித்தொகையினரை வெற்றிகரமாக உள்ளடக்கியிருந்தது. 2023 மார்ச்சு நடுப்பகுதியில் முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்ட குடித்தொகையில் 55.7 சதவீதமானோர் முதலாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுள்ளதுடன் முதலாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்ட 2.5 சதவீத குடித்தொகையினர் இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டனர். பைசர் இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளலானது பொது மக்களுக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கு முன்னர், முதிய குடித்தொகையினரையும் நோயெதிர்ப்புக் குறைபாடுள்ள தனிப்பட்டவர்களையும் முன்னுரிமைப்படுத்தி 2022 மேயில் கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், இரண்டாம் பூஸ்டர் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட முன்னேற்றமானது 2022 இறுதியளவில் தொடர்ந்தும் பின்னடைவினை சந்தித்தமையானது, பூஸ்டர் தடுப்பூசிக்கான பொதுமக்களின் மெதுவடைந்த முன்னுரிமைகளைப் பகுதியளவில் பிரதிபலித்தது. அனைத்து ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சியினூடாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் வெற்றிகரமாக கட்டுப்படுத்தலுக்கு மத்தியில், எதிர்வரும் காலப்பகுதியில் இத்தகைய சுகாதார அவசரநிலைகளின் ஏதேனும் மீளெழுச்சி சுகாதார முறைமையின் மீது அழுத்தங்களைச் செலுத்தும் என்பதுடன் இது கொள்வனவு நடவடிக்கைகளிலுள்ள பிரச்சனைகளின் காரணமாக மருத்துவ நிரம்பல்கள் மற்றும் மருந்துகளில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளின் காரணமாக ஏற்கனவே ஆபத்தான நிலையில் சிக்குண்டுள்ளது. முன்னோக்கிச் செல்கையில், நாட்டினது சுகாதார முறைமையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்கான அவசியத்தை உணர்ந்து, சுகாதார உட்கட்டமைப்பில் அரசாங்கத்தின் முதலீட்டிற்கு மேல் சுகாதாரத் துறையில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் அதேவேளையில் சுகாதாரக் கொள்வனவு செய்முறையை நெறிப்படுத்தல் மற்றும் தன்னியக்கமாக்கல் என்பனவூடாக வெளிப்புற அதிர்வுகளுக்கு சுகாதார முறைமையின் தயார்நிலையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுகாதார முறைமையானது 2022 ஆண்டு காலப்பகுதியில் நாடு ஏனைய தொற்று நோய்களின் பரவலுக்குள்ளாகின்ற நிலையால் சுமைகளுக்குள்ளாகியிருந்தது. டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 35,924 நோயாளர்களின் எண்ணிக்கையிலிருந்து 76,689இற்குக் கணிசமானளவு தீவிரமடைந்ததுடன் டெங்குடன் தொடர்புடைய

அட்டவணை 3.10
சுகாதாரத்துறைப் பணிகளின் முக்கிய பண்புகள்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)
1. அரசாங்கம் (எண்ணிக்கை)		
மருத்துவமனைகள் (மேற்கத்தேய மருத்துவத்தைக் கையாள்பவை)	618	617
படுக்கைகள்	78,228	78,228
ஆரம்ப நலக்கவனிப்பு பிரிவுகள்	542	544
மருத்துவர்கள்	20,209	21,045
துணை மருத்துவ தொழில் புரிபவர்கள்	648	642
தாதிமார்கள்	39,091	40,775
உடன் கவனிப்பாளர்கள்	8,334	8,310
2. ஆயுர்வேதம் (எண்ணிக்கை)		
மருத்துவமனைகள்	118	119
படுக்கைகள்	5,444	5,345
தகுதிபெற்ற ஆயுர்வேத மருத்துவர்கள்	1,806	2,303
பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் (இ)	26,183	26,650

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆயுர்வேத ஆணையாளர் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்டது

மூலங்கள்: சுகாதார அமைச்சு
ஆயுர்வேத திணைக்களம்

சிறப்புக்குறிப்பு 5

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கெதிராகப் போராடுதல்

3

அறிமுகம்


2022இன் பொருளாதார நெருக்கடிகளினால் அதிகரித்த பல பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளின் காரணமாக வீட்டுத்துறையினரின் அதிகரித்த உணவுப் பாதுகாப்பின்மையின் காரணமாக சிறுவரிடையே உயர்வடைந்து செல்லும் ஊட்டச்சத்துக் குறைபாடு கரிசனைக்குரிய முக்கிய கொள்கையாக மாறியிருக்கின்றது. உலக சுகாதார நிறுவனத்தின்படி, ஊட்டச்சத்துக் குறைபாடென்பது உட்கொள்ளப்படும் ஊட்டச்சத்தின் குறைபாடுகள் அல்லது மிகைகள், அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் சமமற்ற தன்மை, அல்லது தவறான ஊட்டச்சத்து பயன்பாடு என்பனவற்றைக் குறிப்பதுடன் இது குறைந்தளவு ஊட்டசத்து கூடியளவு ஊட்டசத்து என்ற இரட்டைச் சுமைகளை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்துக் குறைபாடு படிப்படியான உடல் மெலிவு (உயரத்திற்கு நிறை குறைவாக இருத்தல்) வளர்ச்சிக் குறைவு (வயதிற்கேற்ற உயரம் இல்லாமை) குறைந்த நிறை (வயதிற்கேற்ற நிறை இல்லாமை) நுண்ணிய ஊட்டச்சத்துக் குறைபாடுகள் போன்ற வடிவங்களில் இடம்பெறுகிறது. அளவுக்கதிகமான ஊட்டச்சத்து என்பது ஆரோக்கிய இடர்நேர்வாகும். இது, மனித உடலில் அசாதாரண அல்லது மிகையான கொழுப்பு ஒன்றுசேர்வதனால் உருவாகுவதுடன் இது அளவுக்கதிகமான நிறைகளைத் தோற்றுவித்து இறுதியில் உடற்பருமன் தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது. குடித்தொகையினரிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு வளர்ச்சியைப் படிப்படியாகக் குறைத்துவிடும் காரணியொன்றாக நீண்ட காலமாக நோக்கப்படுவதுடன் இது மனித மூலதன உற்பத்தியாக்கத்தின்மீது நேரடியாக செல்வாக்குச் செலுத்துவதுடன் நீண்ட காலத்தில் மனித மூலதனத்தினைப் பெருக்குவதன் மீது தலைமுறைகளிடையே தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது. ஐக்கிய நாடுகளின் உணவு வேளாண்மை அமைப்பின் உணவு மற்றும் வேளாண்மை (2013) நிலை தொடர்பான அறிக்கையின்படி, ஊட்டச்சத்துக் குறைபாடு உலகளாவிய சமூக மற்றும் பொருளாதாரத்தின் மீது மதிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் 3.5 றில்லியன் கொண்ட சுமையினை ஏற்படுத்துகிறது. இது ஏறத்தாழ ஆளொருவருக்கான ஐ.அ.டொலர் 500 இற்குச் சமமானதாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித மூலதனத்தின் முக்கியமான வகிபாகத்தினைக் கவனத்தில் கொள்கையில், ஊட்டச்சத்தின் குறைபாட்டுப் பிரச்சனை உலகளாவிய கவனத்தினைக் குறிப்பிடத்தக்களவில் ஈர்த்திருப்பதுடன் பிலெத்தோறா என அழைக்கப்படும் செங்குருதி மிகை நோயிற்கான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது உலகம் முழுவதும் இந்நோயினைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தது. இலங்கை அதன் முதலாவது தேசிய ஊட்டச்சத்துக் கொள்கையினை 1986இல் நடைமுறைப்படுத்தியதுடன் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் குறைப்பதற்கும் குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலைமையினை மேம்படுத்துவதற்குமாக பல்வேறுபட்ட ஊட்டச்சத்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மானிட அபிவிருத்திக் குறிகாட்டிகளின் மேம்பட்ட நிலைமைகளுக்கு மத்தியிலும் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் அப்படியே தேக்கநிலையில் இருப்பது ஊட்டச்சத்து தலையீடுகளில் காணப்படும் குறைபாடுகளையும் பொருளாதாரத்தில் விடாப்பிடியாகக் காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளையும் காட்டுகிறது. இப்பின்னணியில், குடித்தொகையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முரண்பாடுகள், உலகளாவிய நோய்தொற்றினாலும் அதன் பின்னர் ஏற்பட்ட உணவு விலைகளின் திடீர் உயர்வு, வலு நெருக்கடிகளின் கரணமாக வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள், உணவுப் பண்டங்களில் காணப்பட்ட பற்றாக்குறை, வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டமை மற்றும் செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் பல காரணங்களின் மூலம் மேலும் பெரிதாகியது.

நெருக்கடிகளுக்கு முன்னர் சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டின் நிலைமை

சுதந்திரத்திற்குப் பின்னர், உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டங்கள் போன்றன தொடர்பில், பல்வேறு திட்டங்களூடாக மக்களின் சமூகப் பொருளாதார நலனோம்புகைகளை உயர்த்துவதற்கும் இலங்கை பல்வேறு முயற்சிகளையும் ஆரம்பித்திருக்கிறது. அவை பாடசாலை உணவு வழங்கல், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு/ காசுப்படிகளை வழங்குதல், திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம், சுகாதார முறையில் பாடசாலை நீர்வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அயடின் கலந்த உப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அநேக தசாப்தங்களாகப் பின்னிப்பிணைந்துள்ள இம்முயற்சிகளினதும் கடப்பாடுகளினதும் தாக்கங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1975 இலிருந்து 1995 வரையான காலப்பகுதியில் சிறுவரிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு வீழ்ச்சியடைந்ததுடன் ஐந்து வயதிற்கும் குறைவான பிள்ளைகளிடையேயான ஊட்டச்சத்துக் குறைபாடு 1975இன் 49.9 சதவீதத்திலிருந்து 1995இல் 26.1 சதவீதத்திற்கு குறைவடைந்த வேளையில், நிறை குறைந்த பிள்ளைகளின் குடித்தொகை 1975இன் 57.3 சதவீதத்திலிருந்து 1995இல் 29.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதற்கான முன்னேற்றம் கடந்த ஒரு சில தசாப்தங்களுக்கும் மேலாக மிதமடைந்து காணப்படுகிறது. அண்மைய குடித்தொகையியல் மற்றும் சுகாதார அளவீடு - 2016இன்படி ஐந்து வயதிற்கும் குறைவான பிள்ளைகளிடையே பரவியுள்ள உடல்மெலிவு நோய் 15.1 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்படுவதன் மூலம் பிள்ளைகளிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் அபாயகரமான மட்டமொன்றினை அடைகிறது. அத்துடன் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் 1995/96 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட அளவீட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமெதனையும் காட்டவில்லை. உலக வங்கியின் புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே காணப்படும் உடல்மெலிவு நோய் தென்னாசிய பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே இரண்டாவது மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கையை தரப்படுத்தியிருக்கிறது. மேலும் இவ்வயது குழுவினரிடையே நிறை குறைந்த பிள்ளைகள் 2000ஆம் ஆண்டில் 20.0 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளிடையேயும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமெதுவும் பதிவுசெய்யப்படவில்லை.

அதேவேளை, நாட்டில் பிராந்தியங்களிடையேயும் பொருளாதாரத் துறைகளிலும் பரவியுள்ள ஊட்டச்சத்துக் குறைபாட்டில் காணப்படும் விடாப்பிடியான சமமற்ற தன்மை ஊட்டச்சத்து முரண்பாடுகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல்

வரைபடம் சி.கு 5.1
சிறுவர் ஊட்டச்சத்து குறைவு நிலை
(5 வயதிற்கு கீழ்) (1975 - 2016)



மூலம்: தொலைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இருப்பதனை எடுத்துக்காட்டின. வதிவிடத் துறைகளைப் பொறுத்தவரை பெருந்தோட்டத் துறை மிகவும் பாதிக்கப்பட்ட துறையாக இருப்பதுடன் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவரிடையே வளர்ச்சி குன்றிய மற்றும் நிறை குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கையின் பரவல் மிக உயர்வாகக் காணப்பட்டது. குடித்தொகையியல் மற்றும் சுகாதார அளவீடு - 2016இன் படி நகரப் பிரதேசங்களிலுள்ள 14.7 சதவீதத்தினருடனும் கிராமப் பிரதேசங்களிலுள்ள 17.0 சதவீதத்தினருடனும் ஒப்பிடுகையில் பெருந்தொட்டத் துறையிலுள்ள பிள்ளைகளில் ஏறத்தாழ 31.7 சதவீதத்தினர் வளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்பட்டனர். மேலும், பெருந்தோட்டத் துறையிலுள்ள ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளில் 29.7 சதவீதத்தினர் நிறை குறைந்தவர்களாகக் காணப்பட்டனர். மாவட்டங்களிடையே ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளிடையே காணப்படும் நிறை குறைந்த மற்றும் வளர்ச்சி குறைந்த பிள்ளைகளிடையே காணப்படும் நிறை குறைந்த மற்றும் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் உயர்ந்த எண்ணிக்கை நுவரெலியா மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டது. ஊட்டச்சத்தில் பிரதேச அமைப்புக்களிடையே காணப்படும் சமமற்ற தன்மைகளுக்கு பொருளாதார பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வியைப் பெறக்கூடிய தன்மை, இணைப்புத் தன்மைகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. எடுத்துக்காட்டாக, தாய்மாரின் கல்வி மட்டம், பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, பட்டப்படிப்பு அல்லது அதற்குமேற்பட்ட கல்வித் தகைமையைக் கொண்ட தாய்மாரின் பிள்ளைகள் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட முறையே 12.1 சதவீதம் மற்றும் 10.0 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறைசார்ந்த கல்வியைப் பெறாத தாய்மார்களுக்குப் பிறந்த பிள்ளைகளிடையேயான குன்றிய வளர்ச்சி மற்றும் நிறை குறைந்த பரவல் முறையே 37.6 சதவீதமாகவும் 33.9 சதவீதமாகவும் காணப்பட்டன. வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின அளவீடு -2019இனை அடிப்படையாகக் கொண்ட இலங்கை சிறுவர் ஊட்டச்சத்துக் குறைவு வறுமைச் சுட்டெண்கள் 0 - 4 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளில் மூன்றிலொரு பங்கினர் ஊட்டச்சத்து குறைபாட்டினைக் கொண்டவர்களாகவோ நிறை குறைந்தவர்களாகவோ அல்லது வளர்ச்சி குறைந்தவர்களாகவோ இருப்பதனைக் காட்டியது. அதேவேளை, நீடித்துநிலைத்திருத்தல் அறிக்கை 2022 (சஞ்ஜே மற்றும் மற்றையவர்கள், 2022) இலங்கை பட்டினியினை 2030 அளவில் பூஜ்ய மட்டத்திற்கு குறைப்பதனை நோக்கிய முன்னேற்றத்தில் பின்தங்கியிருப்பதனைக் காட்டியிருப்பதுடன் இது எதிர்பார்க்கப்பட்டவாறு நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கினை அடைய போதுமானதாக இல்லை.

சிறுவர் ஊட்டச்சத்து நிலை மீது நடைமுறைப் பொருளாதார நெருக்கடியின் தாக்கம்

ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான[1] ஐக்கிய நாடுகள் சிறுவர் அவசரகால நிதியக் கோட்பாட்டுக் கட்டமைப்பு, பொருளாதாரக் காரணிகளை ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான மிக முக்கியமான அடிப்படைக் காரணிகளிலொன்றாக அடையாளம் கண்டிருப்பதுடன் இது குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலையின் மீது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். குழப்பகரமான பொருளாதார நிலைமைகள் குறிப்பாக, வழங்கல் மார்க்கங்களுக்கும் உணவு முறைமைகளுக்கும் அதேபோன்று மக்களின் வருமான மார்க்கங்களுக்கும் இடையூறாக விளங்கி அதன் மூலம் வீட்டுத்துறையினர் ஊட்டச்சத்துமிக்க உணவினை அடைவதற்கும் அதனைப் பெற்றுக்கொள்வதற்குமான இயலளவினைக் குறைவடையச் செய்து, குடித்தொகையினரின் ஊட்டச்சத்து நலனோம்புகைகளை நேரடியாகப் பாதிக்கிறது. பொருளாதார அதிர்வுகள் விளிம்பு நிலையிலுள்ள குடித்தொகையினரை கலோரி அதிகரித்த ஆனால் ஊட்டம் குறைந்த உணவினை நுகர்வதற்கு முன்னுரிமையளிக்கின்றமையினால் அது உணவின் தரத்தின் தேய்விற்கு வழியமைத்து இறுதியாக அதிகரித்த ஊட்டச்சத்துக் குறைவினை ஏற்படுத்துகிறது.

இலங்கை, மோசமான பொருளாதார மந்தம் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது பற்றியும் அதிகரித்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடற்ற தன்மை முன்னொருபோதுமில்லாத விதத்தில் பாரிய சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை உருவாக்குவது பற்றியும் இது குடித்தொகையின் ஊட்டச்சத்து நலனோம்புகைகளில், குறிப்பாக சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளில் மோசமான தன்மைகளை விளைவித்து தலைமுறை தலைமுறையாக சுமையினைக் கொண்டிருக்கும் என்பது தொடர்பில் ஆழமான கரிசனைகளை தோற்றுவிக்கின்றது என்பதற்கு உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குகிறது. நெருக்கடிகள் தூண்டிய நிரம்பல் சங்கிலி இடையூறுகள், கடுமையான வழங்கல் பற்றாக்குறைபாடுகளினால் உள்நாட்டு உணவு உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து காணப்படும் உயர்ந்த செலவு என்பனவற்றின் காரணமாக இலங்கையில் 2021இன் பிற்பகுதியிலிருந்து உணவு விலைகள் அதிகரிக்கத் தொடங்கி, 2020 இறுதியின் 22.1 சதவீதம் மற்றும் 2021இல் 9.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த பணவீக்கமான 94.9 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன் 2022இன் பிற்பகுதியிலிருந்து உணவுப் பணவீக்கத்தில் ஓரளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதும் உணவு விலைகள் 2022இல் உயர்வாகவே காணப்பட்டன. பணவீக்கத்தில் ஏற்பட்ட உயர்வு, வீட்டுத்துறையினரின் உண்மை வருமானத்தில் கணிசமான தேய்வினை ஏற்படுத்திய வேளையில் குறிப்பாக, வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டமையின் மூலம் நெருக்கடிகள் வீட்டுத்துறையினரின் சுமையினை பெரிதாக்கியமையினால்

1 ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான உடனடிக் காரணங்களாக தரம் குறைந்த உணவு எடுப்பனவுகள் (தரம்/ அளவு) உடற்பயிற்சிகள் இல்லாமை மற்றும் நோய் நிலைமைகள் என்பன காணப்பட்ட வேளையில், வீட்டுத்துறையினரின் பாதுகாப்பற்ற உணவு, சிறுவர், பெண்கள் பற்றி போதியளவு கவனம் செலுத்தப்படாமை, குறைந்த சுகாதாரப் பணி வழங்கல் மற்றும் ஒரே இடத்தில் இருக்கும் வாழ்க்கை முறை மற்றும் நடத்தைகள் என்பன ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கான முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன. ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அடிப்படைக் காரணங்களாக சமூகக் கலாச்சரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் காரணிகளும் அதேபோன்று காலநிலை வேறுபாடுகளும் தீவிரமான வானிலை நிலைமைகளும் காணப்படுகின்றன. இக்காரணிகள் உணவின் கிடைப்பனவு மற்றும் தாங்கக்கூடிய தன்மை இரண்டையும் பாதிக்கக்கூடும்.

3

முறைசாரா துறையினரின் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டன. முறைசாராத் துறை தொழில்நிலையில் 58.4 சதவீதத்திற்கும் வறுமை மட்டத்தில் 14.3 சதவீதத்திற்கும் வகைகூறுவதனால், வாழ்வாதாரம் பொருளாதார உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை என்பன குழப்பநிலையின் மீது சாத்தியமான விளைவுகளைக் கணிசமான அளவில் ஏற்படுத்தும். இது வீட்டுத்துறையினர் நெருக்கடிக் காலத்தல் மாற்று ஏற்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் நிலைமைகளைச் சமாளிப்பதற்கு நிர்ப்பந்திக்கும்.

அனைத்து ஒன்பது மாகாணங்களிலுமுள்ள 2,137 அளவீடுகளை உள்ளடக்கிய உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் கணனியினால் உதவப்பட்ட தொலைபேசியூடான நேர்விளம்பலூடாக தொடர்பு கொண்டு சேகரிக்கப்பட்ட தரவுச் சேகரிப்பு அணுகுமுறையின்படி வீட்டுத்துறை நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையினால் 2022இல் இறுதியில் பாதிக்கப்படக்கூடியதாக இருந்ததுடன் குடித்தொகையில் 68 சதவீதத்தினர் உணவின் அளவினை மட்டுப்படுத்துதல், உணவின் எண்ணிக்கையினைக் குறைத்தல், முன்னுரிமை குறைந்த உணவுகளில் தங்கியிருத்தல் என்பனவூடாக தமது உணவினைச் சமாளிக்கும் உபாயங்களைப் பின்பற்றினர். அதேவேளை, ஏறத்தாழ 40 சதவீதமான குடித்தொகையினர் கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவிடலைக் குறைத்துக் கொண்டமையின் மூலம் அவர்களது அடிப்படை வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடத்த வேண்டியவர்களாக இருந்தமையினால் இது இறுதியில் நீண்ட கால ஊட்டச்சத்து நிலைமைகளையும் நலனோம்புகைகளையும் பாதிக்கும். ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலை தொடர்பில், 2022 ஒத்தோபரில் 'ஊட்டச்சத்து' மாதம் என்ற கோட்பாட்டின் கீழ் நடத்தப்பட்ட சுகாதார அமைச்சின் குடும்ப நலப் பணியகத்தின் அண்மை அலுவல்சார் மதிப்பீடுகளில் பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலை 2022இல் மோசமடைந்த தன்மையினை எடுத்துக்காட்டியதுடன் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் வீட்டுத்துறை நலனோம்புகைகள் வீழ்ச்சியடைந்தமையினையும் பிரதிபலித்தது. ஐந்து வயதிற்குக் குறைவான வகையிலுள்ள பிள்ளைகளுக்கான குறிப்பாக, வளர்ச்சி குன்றிய உடல் மெலிந்த மற்றும் நிறை குறைந்த பிள்ளைகள் தொடர்பாக அனைத்து முக்கிய ஊட்டச்சத்து குறிகாட்டிகளும் மோசமான தன்மையினையே எடுத்துக்காட்டின. தேசிய மட்டத்தில் ஐந்து வயதிற்குக் குறைந்த நிறை குறைந்த பிள்ளைகளின் சதவீதம் 2021இன் 12.2 சதவீதத்திலிருந்து 2022இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளிடையே வளர்ச்சி குன்றிய மற்றும் உடல் மெலிந்தவர்களின் சதவீதம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 7.4 சதவீதம் மற்றும் 8.2 சதவீதத்திலிருந்து 2022இல் முறையே 9.2 சதவீதத்திற்கும் 10.1 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எனினும், பிள்ளைகளிடையேயான நிறை கூடிய தன்மை 2022இல் சில முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது.

அட்டவணை சி.கு 5.1


2022இல் பிள்ளைகளின் ஊட்டச்சத்துக் குறைவு நிலை

குறிகாட்டி	5 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் சதவீதம்						
	2016	2017	2018	2019	2020	2021	2022
நிறை குறைவு	15.6	14.5	14.3	14.0	13.1	12.2	15.3
குன்றிய வளர்ச்சி	9.2	9	8.9	8.4	8.2	7.4	9.2
உடல்மெலிவு	11.3	11.1	10.2	9.9	8.6	8.2	10.1
அதிக நிறை	0.5	0.5	0.6	0.6	0.8	0.8	0.6

மூலம்: குடும்ப நலப் பணியகம், சுகாதார அமைச்சு

வரைபடம் சி.கு 5.2

மாவட்ட மட்டத்திலான ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகளின் மோசமான நிலை



மூலம்: குடும்ப நலப் பணியகம், சுகாதார அமைச்சு

அளவீட்டின்படி பிள்ளைகளின் ஊட்டச்சத்துக் குறைவு அனைத்து மாவட்டங்களிலும் மோசமடைந்திருப்பது, தற்போது நாடு முழுவதிலும் பிள்ளைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து முரண்பாடுகளை பெரிதாக்கும். அறிக்கையிடப்பட்ட 22.8 சதவீதத்துடன் நுவரெலியா மாவட்டம் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் உயர்ந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் 5.1 சதவீதமாகக் காணப்பட்டனர். மேலும், ஐந்து வயதிற்குட்பட்ட வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பொறுத்தவரை நுவரெலிய மாவட்டம் 23.9 சதவீதமான மிக உயர்ந்த வீதத்தினைப் பதிவுசெய்த வேளையில் கொழும்பு மாவட்டம் வளர்ச்சிய குன்றிய பிள்ளைகள் தொடர்பில் 9.8 சதவீதமான குறைந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. இது, அரச முயற்சிகளின் தலையீடுகளுக்கு மத்தியிலும் ஊட்டச்சத்து முரண்பாடுகள் நாட்டில் பாதிக்கப்படக்கூடிய தன்மையில் இருப்பதனை எடுத்துக்காட்டியதுடன் இவ்வேற்றத்தாழ்வுகள் சரியான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டாலொழிய பொருளாதார நெருக்கடிக் காலத்தில் மேலும் மோசமடையும் போல் தெரிகிறது.

அரசாங்கத்தின் பதிலிறுப்புக்கள்

குடித்தொகையின் ஊட்டச்சத்து நிலையின் மீது பொருளாதார மற்றும் உணவு நெருக்கடிகள் தோற்றுவிக்கும் சேதம் விளைக்கும் தாக்கங்களை ஒழிப்பதற்கும் ஊட்டச்சத்து குறைவு நிலைமைகள் மேலும் மோசமடைவதனைக் குறைப்பதற்குமாக 2022 - 2024 காலப்பகுதிக்காக அவசரகால ஊட்டச்சத்து திட்டமொன்று சுகாதார அமைச்சினால் உருவாக்கப்பட்டது. திட்டமானது உணவு கிடைப்பனவு மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய சமமற்ற தன்மை, பாதிக்கப்படக்கூடிய குழுமத்தினருக்கான சுகாதார முறைமைப்

பணிகளில் காணப்படும் இடைவெளி மற்றும் ஊட்டச்சத்துப் பிரச்சனைகளைத் தடுப்பதில் தொடர்பூட்டல் மற்றும் வலுவூட்டல் இடைவெளிகள் போன்ற நெருக்கடியான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன்படி, திட்டத்தின் அடையாளம் காணப்பட்ட உபாயங்கள் மற்றும் முக்கிய நடவடிக்கைகளை திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஆர்வலர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் நடைமுறைப்படுத்தலின் ஒவ்வொரு மட்டத்திலும் கண்காணிப்புச் செய்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, குறைந்த வருமானங்களைக் கொண்ட கர்ப்பிணித் தாய்மார். பாலூட்டும் தாய்மார், பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பன்னாட்டு முகவர்களின் உதவியுடன் வாழும் ஊட்டச்சத்துக் குறைந்த மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய பாதிக்கப்படும் குடித்தொகையினரை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தினால் பல நிதியியல் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் வீட்டுத்துறையினருக்கான உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்த வேளையில் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு சமச்சீரான உணவுகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. அதேவேளை, குடும்ப நலப் பணியகத்தினூடாக வழங்கப்பட்ட ஏனைய சுகாதாரப் பணிகளுடன் சேர்த்து கடுமையான ஊட்டச்சத்துக் குறைவான பிள்ளைகளுக்காக துணை மருத்துவம் சார்ந்த உணவுகளும் வழங்கப்பட்டன.

சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை ஒழிப்பதற்கான கொள்கை நிகழ்ச்சிநிரல்

சிறுவர் ஊட்டச்சத்து இன்மையினை ஒழிப்பதற்கு தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட கொள்கை முன்முயற்சிகள் சடுதியாக ஏற்படும் சமூகப் பொருளாதார அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிப்பதற்கு போதுமானவையாக இருக்கவில்லை. இது. பல்வேறு துறை சார்ந்த கட்டமைப்புடன் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதனையும் ஊட்டசத்துக் குறைவினை ஒழிப்பதனையும் இலக்காகக் கொண்ட உபாயங்களை மீள் உருவாக்குவதற்கான தேவையை வலியுறுத்துகிறது. இது தொடர்பில் குறுங்கால நடுத்தர கால மற்றும் நீண்ட கால தீர்வுகளுக்கான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டிய அதேவேளையில் ஏற்கனவேயுள்ள ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் இடைவெளிகள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். குறுங்கால தீர்வுகள் உணவு விலைகளில் ஏற்படும் உயர்வு காரணமாக ஏற்படும் எதிர்மறையான வருமானத் தாக்கங்களை பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குதல், ஏற்கனவேயுள்ள சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் இழப்பீடு செய்வதனை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அதேவேளை, விரும்பத்தக்க பெறுபேறுகளை எய்துவதற்கு பொருத்தமான வெளியேறல் பொறிமுறையுடன் இந்நலன்புரி நன்மைகள் இலக்கிடப்படல் வேண்டும். அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் ஊட்டச்சத்து தலையீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இறை இடைவெளியே இருப்பதனைக் கவனத்தில் கொள்கையில் அண்மைக் காலத்தில் பாதிக்கப்படக்கூடிய துறைகளிடையேயான பட்டினியைக் குறைப்பதற்கு கொடை வழங்கும் முகவர்களிடமிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் உணவு உதவிக்கான வழிகளைத் தீவிரமாகக் கண்டறிவது மிக முக்கியமானதாகவுள்ள அதேவேளையில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிப்படையாகக் கண்காணிக்கப்படுவதும் மதிப்பிடப்படுவதும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். 'சனசமூக சமயலறை' போன்ற ஊக்கமளிக்கும் சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஊட்டச்சத்துக் குறைப்பிற்கான பரந்தளவு காரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, அத்தகைய நடவடிக்கைகள் பொதுவான தளமொன்றினை வழங்குவதனால் இவை நன்மையளிப்பனவாக இருக்கக்கூடும். கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் ஊட்டச்சத்தினைப் மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் அவசரகால நிதியியல் முறைமை அணுகுமுறையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு சிறுவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை ஒழிப்பதற்கான நீண்ட கால உபாயங்கள் ஐந்து முறைமைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். உணவு முறைமை, சுகாதார முறைமை, நீர் மற்றும் சுத்திகரிப்பு முறைமைகள், கல்வி முறைமை மற்றும் சமூக பாதுகாப்பு முறைமைகளே அவை. இதன்படி, உணவு முறைமை சீர்திருத்தங்கள் மற்றும் முதலீடுகளை இது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முறையொன்றில் ஊட்டச்சத்துமிக்க பாதுகாப்பு உணவினை கிடைக்கத்தக்க விதத்திலும் தாங்கக்கூடிய விலையொன்றில் வழங்குவது முக்கியமாகவுள்ள வேளையில் குடும்பங்களுக்கு சிறந்த உணவுத் தெரிவுகளையும் இயலுமைப்படுத்தும். இது தொடர்பில் மக்களுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்குவதற்கு நாட்டின் உணவு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெறுவது அவசியமாகும். இவை கூடியளவு புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளுடன் சேர்த்து வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல், வேளாண்மைத் துறையில் கூடியளவு பெறுமதிகூட்டல்கள், உணவு முறைமைகளுக்கு இறக்குமதிகளில் தங்கியிருப்பதனைக் குறைத்தல், காலநிலை மாற்றங்களை எதிர்த்துநிற்கக்கூடிய உணவுப் பயிர்களை அறிமுகப்படுத்தல் குறிப்பாக, ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள் உற்பத்திகளை பிரபல்யப்படுத்துவதன் மூலம் பரந்தளவு ஊட்டச்சத்துக்களைக் கொண்ட பெறுமதிமிக்க உணவுகளை ஊக்குவித்தல் வேளாண்மைத் துறை உதவுதொகைகளை மீள சமநிலைப்படுத்தல் மற்றும் வரிக் கொள்கைகள் வேளாண் பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்தல் அதேபோன்று அவசரகால உணவு வகைகளை எதிர்கொள்வதற்குப் போதுமான தாங்கிருப்புக்களைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

பொதுமக்களிடையே சாதகமான பல ஊட்டச்சத்து நடைமுறைகளைப் பேணி வளர்க்கும் விதத்திலான பங்களிப்புக்களுக்குப் புறம்பாக, சுகாதார முறைமையானது ஊட்டச்சத்துக் குறைபாட்டினைத் தவிர்ப்பதற்கும் அதற்கான சிகிச்சைகளுக்குமான தளங்களை வழங்கும் விதத்தில் அதன் வகிபாகத்தினை ஆற்றுவதற்கு மேம்படுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில், நலம் மற்றும் ஊட்டச்சத்துப் பணிகளை அணுகுவதனை விரிவாக்கும் நோக்குடன் அடிப்படைச் சுகாதாரம் ஊட்டச்சத்துப் பணிகளின் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது அவசியமானதாகவுள்ள அதேவேளையில் மிகப் பின்தங்கிய சமூகத்தினருக்காக அடிப்படை ஊட்டச்சத்துப் பொதியினை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும். மேலும், கல்வியும் ஊட்டச்சத்துக் குறைபாடும் வலுவான தலைகீழான தொடர்புகளைக் கொண்டிருப்பதனால் குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையினரை இலக்காகக் கொண்டு கல்வியில் முதலீடு செய்வது இன்றியமையாயதாகக் காணப்படுகிறது. பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டங்களைத்

தீர்மானிப்பதில் பெண்களின் கல்விக்கான முதலீடு இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றவிடத்து கல்வியூடாக உருவாக்கப்படுகின்ற பெண்களுக்கான வருமான வாய்ப்புக்கள் வீட்டுத்துறையினரின் ஊட்டச்சத்துப் பாதிக்கப்படும் தன்மைக்கு உதவும்.

நெருக்கடிகளின் காரணமாக, சிறுவர் ஊட்டச்சத்துக் குறைவு தொடர்பாக மீண்டெழுந்துள்ள அச்சுறுத்தல்களின் விளைவாக ஏற்படக்கூடிய பாரிய செயல் கொண்ட சமூகப் பொருளாதார விளைவுகளைப் பரிசீலனையில் கொள்கையில், இலங்கையில் சிறுவர்களிடையேயான ஊட்டச்சத்துக் குறைபாட்டினை அகற்றுவதற்கு குறுங்காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான பரந்த உபாயங்களை மீள் உருவாக்குவதன் மீது கொள்கை வகுப்பாளர்கள், இது தொடர்பில் குறிப்பாக, அரசாங்கம், சுகாதார முறைமைகள், கல்வி முறைமைகள் உணவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர்கள் நாட்டின் அனைத்துப் பிரசைகளிடமிருந்துமான ஆதரவு என்பன கொள்கைகளை நடவடிவக்கைகளாக மாற்றுவதற்குத் தொடர்ந்தும் முக்கியமானவைகளாக இருக்கும். இதன் மூலம் சிறுவர்களின் ஊட்டச்சத்து நிலைமைகள் உயர்த்தப்படுவதற்கு உதவியளிக்கப்படுகிறது. இவ்வொன்று திரண்ட முயற்சிகள் ஊட்டச்சத்து உபாயங்களை வடிவமைத்தல் தற்போதுள்ள ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களின் இயலாற்றலை வலுப்படுத்தல் மற்றும் அத்தகைய முன்முயற்சிகளுக்கான நிதிகளைத் திரட்டுதல் என்பன தொடர்பில் ஆர்வலர்களுக்கிடையேயான இணைப்புக்களை வலுப்படுத்தும். அதேவேளை, ஊட்டச்சத்துக்களுக்கான சிறுவர்களின் உரிமையினை பாதுகாப்பதற்கு தரவு மைய சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் செய்முறைப்படுத்தப்படல் வேண்டும்.


உசாத்துணைகள்

1. Department of Census and Statistics (2016) Demographic and Health Survey Report [Online]. Available at: http://www.statistics.gov.lk/(Accessed: 10 Feb 2023)
2. Family Health Bureau, Ministry of Health (2022) Nutritional Month Report [Online]. Available at: https://www.fhb.health.gov.lk/ (Accessed: 08 Feb 2023)
3. Food and Agriculture Organization of the United Nations (2013) The State of Food and Agriculture [Online]. Available at: https://www.fao.org/ (Accessed: 10 Feb 2023)
4. Jayawardena, P.(2020) A Proactive Path to Combat Malnutrition in Sri Lanka[Online].Available at: https://www.ips.lk/ (Accessed: 15 Feb 2023)
5. Sachs, J. Lafortune, G. Kroll, C. Fuller, G. and Woelm, F. (2022) Sustainable Development Report 2022. From Crisis to Sustainable Development: the SDGs as Roadmap to 2030 and beyond [Online]. Available at: https://dashboards.sdgindex.org (Accessed: 10 Feb 2023)
6. United Nations Children's Fund (2020) Nutrition for Every Child. UNICEF Nutrition Strategy 2020-2030 [Online]. Available at: https://www.unicef. org/ (Accessed: 25 Feb 2023)
7. Weerahewa, J. (2018) Food Policies and Nutrition Transition in Sri Lanka: Historical Trends, Political regimes, and options for Interventions[Online]. Available at https://www.researchgate.net/ (Accessed: 19 Feb 2023)
8. World Food Programme (2022) Sri Lanka Food Security Monitoring-Remote Household Food Security Survey [Online]. Available at: https://reliefweb.int/ (Accessed: 01 Mar 2023)
9. World Health Organization (2016).Strategic Action Plan to reduce the double burden of malnutrition in the South-East Asia Region 2016–2025 [Online]. Available at: https://www.who.int/ (Accessed: 22 Feb 2023)

இறப்புகள் 2021இல் 28 இறப்புகளிலிருந்து 72இற்கு அதிகரித்தன. உயர்ந்தளவிலான குடித்தொகை அடர்த்தி காரணமாக டெங்கு பரவுகின்ற இடர்நேர்வு கணிசமானளவில் காணப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உயர்ந்தளவிலான நோயாளர்களின் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டது. 2022இல் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு பூச்சிக்கொல்லிகளிலும் எரிபொருளிலும் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக டெங்கு தடுப்பு வழிமுறைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட இடைவெளிகள் பாரியளவில் பங்களித்திருந்தன. இத்தகைய பற்றாக்குறைகளின் நீடிப்பானது 2023இன் முற்பகுதியில் டெங்குத் தொற்றின் மேல்நோக்கிய போக்கில் தொடர்ச்சியொன்றினை ஏற்படுத்தலாம். உலக சுகாதார அமைப்பினால் பொது சுகாதாரப் பிரச்சனையொன்றாகக் காணப்பட்ட யானைக்கால் நோயினை இலங்கை இல்லாதொழித்துள்ளதாக 2016இல் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், 2022இல் ஏறத்தாழ 73 யானைக்கால் தொற்றுநொயாளர்கள் அறிக்கையிடப்பட்டுள்ளனர். நாட்டின் யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டமானது பரீட்சிப்புக்குப் பின்னரான கண்காணிப்புக் கட்டத்திலுள்ளதுடன் இது 2030 ஆண்டளவில் நோய்ப் பரவலை முற்றிலும் தடுப்பதற்கான இலக்கினை நிர்ணயித்துள்ளது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட 6,946 மஞ்சள் காமாலை தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2022இல் தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 6,970ஆக அறிக்கையிடப்பட்ட வேளையில், இரத்தினபுரி, கேகாலை, காலி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து உயர்ந்தளவிலான தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டது. உலக சுகாதார அமைப்பினால் 2016இல் இலங்கை மலேரியா பரவாத நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் தளர்த்தலினைத் தொடர்ந்து அதிகரித்தளவிலான எல்லைகளுக்கிடையிலான ஊடுகடத்தின் விளைவொன்றாக 2021இல் பதிவுசெய்யப்பட்ட 26 தொற்றுநோயாளர்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் வேறு நாடுகளிலிருந்து வந்த 37 மலேரியா தொற்றுநோயாளர்கள் அறிக்கையிடப்பட்டுள்ளமையானது நாட்டில் மலேரியாவின் நம்பத்தகுந்த மீளெழுச்சி மீதான கரிசனைகளை எழுப்புகின்றது.

மோசமடைந்த சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு மத்தியில் சுகாதாரத் துறையானது தொற்றாத நோய்களால் உருவாக்கப்பட்ட சவால்களால் தொடர்ந்தும் போராடியது. ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மை, புகைப்பிடித்தல், மது மற்றும் போதைப்பொருள் நுகர்வு மற்றும் மனநலப் பாதிப்பு போன்ற வாழ்க்கைமுறை இடர்நேர்வுக் காரணிகள் காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் தொற்றாத நோய்களில் வலுவான உயர்வொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. தொற்றாத நோய்களின் தடுப்பு, நோயினைக் கண்டறிதல், கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய பொது விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் சுகாதார அமைச்சு தனது ஈடுபாட்டினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. இதற்கமைய, இலங்கையில் தொற்றாத நோய்களைத் தடுப்பதற்கும்

வரைபடம் 3.15
வருடாந்த டெங்கு தொற்றாளர்கள் மற்றும் இறப்புக்கள்



மூலம்: சுகாதார அமைச்சு

கட்டுப்படுத்துவதற்குமான திருத்தப்பட்ட தேசியக் கொள்கை மற்றும் உபாயக கட்டமைப்பானது பொதுமக்களின் கருத்துக்காக வெளியிடப்பட்ட வேளையில் இலக்கிடப்பட்ட திட்டமிடல் மற்றும் பணி ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாகத் தீங்கினைத் தடுப்பதற்கான உபாய தலைமைத்துவத்தினை வழங்கும் பொருட்டு 2022இல் விபத்து தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பல்துறை உபாய செயற்றிட்டம், இலங்கை 2021-2025 அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. தொற்றாத நோய்களின் குறிகாட்டியினைக் குறைக்கின்ற நோக்குடன் குறிப்பாக இளைஞர் குடித்தொகையினை இலக்காகக்கொண்டு பல்வேறு பௌதீக நடவடிக்கை ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள் மற்றும் ஆரோக்கியமான உணவுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், முன்கூட்டிக் கண்டறிதல் மற்றும் தடுத்தல் உள்ளடங்கலாக முதன்மைப் பராமரிப்பு மட்டத்தில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது. இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் புற்றுநோயை முன்கூட்டிக் கண்டறிதல் நிலையமொன்று தொழிற்பட ஆரம்பித்தது. இருப்பினும், நாட்டில் மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் குறைவடைந்த கிடைப்பனவிற்கு மத்தியில், தொற்றாத நோயாளிகளுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிப்பது சவாலானதொன்றாகுமென்பது நிரூபிக்கப்பட்டள்ளதுடன் இது சனத்தொகையில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்கள் மீதான விகிதாசாரமற்ற சுமையினை உருவாக்கியது. இப்பின்னணியில், சுகாதார அவசரநிலைகளுக்கான தேவைப்பாடுகளையும் போதியளவிலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் வழங்கலினையும் முன்னுரிமைப்படுத்தும் வேளையில் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படுகின்ற மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவ நிரம்பல்களிற்கான முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பிரசைகளின் நலனோம்புகையினை ஊக்குவிக்கும் பொருட்டு நாட்டில் சுகாதார முறைமையின் செயற்றிறனை மேம்படுத்துதல் என்பவற்றிற்கான கடுமையான தேவையொன்று காணப்படுகின்றது.

சுகாதார பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்ற முயற்சிகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய, முதன்மை மருத்துவக் கவனிப்பு நிறுவனங்களின் ஊடாக தரமான பணிகளை வழங்கும் பொருட்டு முதன்மை சுகாதார முறைமை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி ஐந்து வைத்தியசாலைகளில் முதன்மை சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வலுப்படுத்தப்பட்டன. 2022இல் களுத்துறை மற்றும் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பணிகளை நிறுவும் நடவடிக்கைகள் முன்னேற்றங்கண்டன. மேலும், இரத்தினபுரி, கராப்பிட்டிய மற்றும் மொனராகலை போன்ற அரசாங்க வைத்தியசாலைகளின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்துகின்ற நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்களும் முன்னேற்றங்கண்டன. மேலும், பக்கவாத சிகிச்சைக்கான தேசிய மையமொன்றாக முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் தேசிய மாதிரி நிலையமொன்றின் நிர்மாணப் பணிகள் 2022 ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, சுகாதாரத் துறையில் மானிட மூலதன இயலளவினைக் கட்டியெழுப்புவதனை இலக்காகக் கொண்ட செயற்றிட்டங்கள் தொடரப்பட்டன. சுகாதாரத் துறையில் உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த தொழில்சார் நிபுணர்களின் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு, இடைக்காலக் கொள்கை ஏற்பாடொன்றாக, மருத்துவ ஆலோசகர்கள், அரச வைத்திய அதிகாரிகள், பல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கான ஓய்வுபெறும் வயது 2022 திசெம்பர் 12 தொடக்கம் மேலும் ஓராண்டிற்கு நீடிக்கப்பட்டதுடன் இது 2023 திசெம்பர் 31 வரை கொள்கை ஏற்புடையதாகக் காணப்படும். அதற்கு மேலதிகமாக, சுகாதாரத் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக அரச ஊழியர்கள் வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக ஐந்தாண்டு கால ஊதியமற்ற விடுமுறையினை அனுமதிக்க அரசு தீர்மானித்தது. இருப்பினும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுகாதாரத் துறையிலிருந்து உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த தொழிலாளர்கள் இடம்பெயர்தலின் அதிகரித்துவரும் போக்குகள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொது சுகாதார பணிகளைத் தொடர்வதில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடுமென்பது உயர்ந்தளவிலான ஆற்றல்வாய்ந்த மருத்துவ தொழில்சார் நிபுணர்களையும் விசேட நிபுணர்களையும் நாட்டினுள் தக்கவைத்துக்கொள்வதற்கான உடனடியான கொள்கைப் பதிலிறுத்தலினைப் பரிந்துரைக்கின்றது.

இலங்கையில் நோய்த்தடுப்பு மற்றும் நோய் குணப்படுத்தல் பணிகள் ஆகிய இரண்டிலுமான சுகாதார வழங்கலில் தனியார் துறை தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க வகிபாகமொன்றினைக்

3

கொண்டிருந்தது. 5,602 மொத்தப் படுக்கை இயலளவுடன் பதிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 2022 இறுதியளவில் 250 ஆக விளங்கிய வேளையில், ஆறு புதிய முழுநேர தனியார் வைத்திய வளாகங்கள்/மருந்தகங்கள்/சிகிச்சை நிலையங்கள் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டன. 2022இல் கொவிட்-19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை முழுமையடைச் செய்யும் வகையில், சுகாதார அமைச்சின் ஒப்புதலுடன் 25 இடைநிலைக் கவனிப்பு மையங்கள் மற்றும் மூன்று கொவிட்-19 சிகிச்சை நிலையங்கள் என்பன தனியார் வைத்தியசாலைகளினால் தொழிற்படுத்தப்பட்டதுடன் 13 தனியார் ஆய்வுகூடங்களில் பீசீஆர் மற்றும் துரித அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. மருத்துவ நிரம்பல் பற்றாக்குறைக்கு மத்தியில் பொது வைத்தியசாலைகளினால் வழங்கப்பட்ட கிரமமற்ற சுகாதாரப் பணிகளின் வரம்புகளைக் கருத்திற்கொண்டு, பெரும்பாலான மக்கள் 2022 காலப்பகுதியில் தனியார் வைத்தியசாலைகளினால் வழங்கப்பட்ட பணிகளைத் தேர்ந்தெடுத்தனர். இருப்பினும், மருத்துவ நிரம்பல்கள், மருந்துகள், ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான செலவுடன் இம்மருத்துவப் பணிகளின் கட்டணம் விஞ்சியளவிலான தொகைகளுக்கு சடுதியாக உயர்வடைந்துள்ளமையானது, தனியார் சுகாதார வசதிகளுக்கான தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறையிலுள்ள பலவீனத்தினைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுகின்ற தனிநபர்கள், தனியார் சுகாதார வசதிகளுக்கான அவர்களின் சாதாரண அணுகலைத் தவிர்க்கும் நிலை காணப்பட்டது. இச் சூழலில், சகலருக்கும் சுகாதாரத்திற்கான சமமான அணுகல் வசதியினை நிச்சயப்படுத்தும் பொருட்டு பின்தங்கிய குழுக்களிற்கான பொதுச் சுகாதாரப் பணிகளின் வழங்கலின் நலன்களைப் பாரியளவிலான சமரச இணக்கமின்றி, பொது சுகாதார வழங்கலினை முழுமையடையச் செய்யும் பொருட்டு தனியார் துறையின் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துவதனையும் தனியார் சுகாதார பணி வழங்குநர்களுடன் தொடர்புடைய அங்கீகாரக் கொள்கைகளை நெறிப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்ட கொள்கைகள் மூலம் தனியார் சுகாதாரத் துறையை விரிவடையச்செய்வதானது தொடர்ந்தும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

கல்வி

எரிபொருள் நெருக்கடியினால் தூண்டப்பட்ட இடையூறுகள் மற்றும் கல்வி முறைமை மீதான கொவிட்-19 குறுக்கீடுகள் என்பவற்றின் நீங்கலுடன் 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக மீளெழுச்சியடைந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2020இலிருந்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி மையங்கள் என்பவற்றின் இடைக்கிடையிலான மூடுதலினைத் தொடர்ந்து, 2022இன் தொடக்கத்தில் நேரடியான கல்வி நடவடிக்கைகள் மீள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு எரிபொருள் வழங்கல்களில் காணப்பட்ட கடுமையான பற்றாக்குறையிலிருந்து தோற்றம்பெற்ற போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாக 2022இன் இரண்டாம் காலாண்டின் முற்பகுதியில் கல்விசார் நடவடிக்கைகள் மீண்டும் தடைப்பட்டன. நாடளாவிய ரீதியில் காணப்பட்ட போக்குவரத்து இடர்பாடுகளுக்கு மத்தியில் 2022 யூன் மாத நடுப்பகுதியில் கல்வி நடவடிக்கைகள் இணையவழித் தளங்களுக்கு மாற்றப்பட்டன. இருப்பினும், ஆண்டு காலப்பகுதியில் நாடு எதிர்கொண்ட கிரமமான மின்வெட்டுகளினால் இவ்விணையவழிக் கல்வி முறைமைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எரிபொருள் நிரம்பலுடன் தொடர்புடைய பிரச்சனைகளுக்கான சில தீர்வுகளுடன், 2022இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக மீட்சியடைந்தமையானது 2022 ஓகத்திலிருந்து முழு நேர அடிப்படையிலான நேரடியான கல்விசார் நடவடிக்கைகளைத் தொடங்க அனுமதித்தது. ஆண்டு காலப்பகுதியில் நேரடியான கல்விசார் நடவடிக்கைகள் மீள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2020 தொடக்கம் கல்விசார் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடைக்கிடையிலான இடர்பாடுகளினால் ஏற்பட்ட கற்றல் இழப்புகள் தொடர்ந்தும் நீடித்தன. கல்விசார் உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அணுகல்வழியில் ஏற்கனவே இருக்கின்ற சமமின்மைகளைக் கருத்திற்கொள்கையில், இவ்விடர்பாடுகள் கற்றல் பெறுபேறுகளில் மிகவும் பாதகமான விளைவுகளை உருவாக்கக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வேறுபட்ட பொருளாதார மற்றும் சமூக பின்புலங்களிலும் புவியியல்சார் அமைவிடங்களிலுமுள்ள பிள்ளைகளுக்கு இடையிலான கல்விசார் பெறுபேறுகளில் சமமின்மைகளை விரிவடையச்செய்யும். 2021-2022 காலப்பகுதியிலிருந்து கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட இலங்கையிலுள்ள 03ஆம் தர மாணவர்களின் கல்வியறிவு மற்றும் எண்ணியலறிவு என்பவற்றில் அடிப்படைத் திறன்களின் அடைவு மட்டங்கள் மீதான மதிப்பீட்டின் பிரகாரம் கல்வியறிவில் ஒவ்வோர் அடிப்படைத் திறனையும் அடையப்பெற்ற மாணவர்களின் சதவீதம் மாதிரியின் ஏறத்தாழ 6 சதவீதமாக மாத்திரம் காணப்பட்ட வேளையில் எண்ணியலறிவில் சகல திறன்களினையும் அடையப்பெற்ற மாணவர்களின் சதவீதமும் 7 சதவீதமாகத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. மேலும், கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நாட்டில் முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியின் கசிவுத் தாக்கங்கள் என்பவற்றினைத் தொடர்ந்து நீடித்த பாடசாலை மூடுதல்கள் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்களுக்கு மத்தியிலான பாடசாலை இடைவிலகல்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. 2020இற்கான கிடைப்பனவாகவுள்ள அண்மைய தரவுகளிற்கமைய, ஆரம்பப் பிரிவிலான பாடசாலை இடைவிலகல்களின் எண்ணிக்கை 2019இல் பதிவுசெய்யப்பட்ட

அட்டவணை 3.11
பொதுக் கல்வியின் முக்கிய பண்புகள்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)
1. பாடசாலைகள் (எண்ணிக்கை)	11,088	11,082
அரச பாடசாலைகள்	10,146	10,134
முதலாந்தர	3,893	3,883
இரண்டாந்தர	6,253	6,251
இதில் தேசிய பாடசாலைகள்	396	396
ஏனைய பாடசாலைகள்	942	948
பிரிவேனா	819	823
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	123	125
2. மாணவர்கள் (எண்ணிக்கை) (ஈ)	4,260,466	4,236,207
அரச பாடசாலைகள்	4,048,937	4,024,207
ஏனைய பாடசாலைகள்	211,529	212,000
பிரிவேனா	70,310	70,500
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	141,219	141,500
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
3. ஆசிரியர்கள் (எண்ணிக்கை) (ஈ)	256,676	வி.கி.
அரச பாடசாலைகள்	241,054	வி.கி.
ஏனைய பாடசாலைகள்	15,622	வி.கி.
பிரிவேனா	7,347	வி.கி.
தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் (இ)	8,275	வி.கி.
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
4. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) (உ)	304,105	301,519
5. மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம்		
அரச பாடசாலைகள்	17	வி.கி.
ஏனைய பாடசாலைகள்	14	வி.கி.
சர்வதேச பாடசாலைகள்	வி.கி.	வி.கி.
6. முதலாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 1 - 5)	வி.கி.	வி.கி.
7. இரண்டாந்தர தேறிய அனுமதி விகிதம் (தரம் 6 - 11)	வி.கி.	வி.கி.
8. வயது குறித்துரைக்கப்பட்ட அனுமதி விகிதம் (தரம் 1 - 9)	வி.கி.	வி.கி.
9. ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் (எண்ணிக்கை)	8	8
10. ஆண்டுக்காலப்பகுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (எண்ணிக்கை)	வி.கி.	வி.கி.
11. தேசிய கல்வியியற் கல்லூரிகள் (எண்ணிக்கை)	19	19
பயிற்சி ஆசிரியர்கள் (எண்ணிக்கை)	வி.கி.	வி.கி.
ஆண்டுக்காலப்பகுதியில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை	வி.கி.	வி.கி.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட தேவைகளுடனான சிறுவர் பாடசாலைகள் (இந்த எண்ணிக்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகள் நீங்கலானது)
(ஈ) சர்வதேச பாடசாலைகளிலிருந்தான தரவுகள் நீங்கலாக
(உ) அரச பாடசாலைகள் மட்டும்

மூலம்: கல்வி அமைச்சு

8,834இலிருந்து 9,269இற்கு அதிகரித்துள்ளது. இச் சூழலில், பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்கள் பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் நிலைமையைச் சமாளிப்பதற்கான உத்தியொன்றாகக் கல்விச் செலவுகளைக் குறைப்பதற்கு விரும்புவதனால், 2022இல் பாடசாலை இடைவிலகல்கள் மேலும் அதிகரிக்கக்கூடும். அதேவேளை, எழுது பொருட்கள் மற்றும் ஏனைய பாடசாலைப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் 2022 காலப்பகுதியில் காணப்பட்ட குடியிருப்பாளர்களின் நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் துரிதமாக அதிகரித்த பணவீக்கத்தினால் இப்பொருட்களின் அதிகரித்துச் செல்கின்ற விலைகள் என்பன காரணமாக குறைந்தளவிலான வருமானம் ஈட்டுகின்ற குடியிருப்பாளர்களிலிருந்தான பிள்ளைகள் மேலும் இடர்பாடுகளை எதிர்கொண்டமையானது கற்றல் பெறுபேறுகளில் விரிவடைந்து செல்கின்ற சமமின்மைகளின் சாத்தியமான இடர்பாடுகளைக் குறித்துக்காட்டியது. மறுபுறம், மாற்று மதிப்பீட்டு முறைகளைப் பின்பற்றுவதற்கும் பாடத்திட்டங்களில் குறிப்பிடத்தக்க சமரச இணக்கங்களை சீராக்குவதற்கும் பதிலாக, தேசிய மட்டத்திலான பரீட்சைகளின் பிற்போடலானது, குறுங்காலத்தில் மாணவர்களின் காலந்தவறாத கல்விசார் முன்னேற்றத்தினைத் தடுப்பதுடன் நீண்ட காலத்திற்கு நாட்டின் உற்பத்தித்திறன் வாய்ந்த மனித மூலதனத் தளத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கரிசனைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்கள் அனுபவித்து வருகின்ற இடர்பாடுகளின் தொடர்ச்சியான தன்மையினைக் கருத்திற்கொண்டு, பொதுக் கல்வி முறைமையிலுள்ள சகல மட்டங்களிலுமுள்ள மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளில் ஏற்படுகின்ற இடையூறுகளின் தாக்கத்தினையும் உயர் கல்வியைத் தொடர்தல் மற்றும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுடன் தொடர்புடைய இவ்விடையூறுகளின் வாழ்நாள் முழுவதுமான தாக்கங்களினையும் உரிய முறையில் கருத்திற்கொண்டு எதிர்காலக் கொள்கைகள் சீராக்கப்பட வேண்டும். ஆதலால், இணையவழிக் கற்றல் பெறுபேறுகளின் தரம் மற்றும் உட்கட்டமைப்புத் தளம், புதிய மதிப்பீட்டு முறைகள் மற்றும் அனைத்து கல்விசார் மட்டங்களிலும் தொழிற்படைத் திறன் விருத்திற்கான பாடத்திட்டங்களின் தரமுயர்வு என்பவற்றினை மேம்படுத்தும் வேளையில், நாட்டின் துறைசார் முன்னுரிமைகளுக்கமைவாக அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்ததொரு முயற்சியும் தேவைப்படுகின்றது.

2022இல் பொதுக் கல்விக்கான சமத்துவமான அணுகல் வசதியினை மேம்படுத்துவதற்கும் இலங்கையில் கல்விப் பணிகளின் தரம், ஆளுகை மற்றும் பணி வழங்கல் என்பவற்றை உயர்வடையச் செய்வதற்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், கல்வி அமைச்சு கல்வி ஆர்வலர்களுடன் இணைந்து, பாடத்திட்டத்தையும் கற்றல் மறுசீரமைப்புக்களையும் நடைமுறைப்படுத்துதல், எதிர்கால கற்றல் தேவைகளைக் கண்டறிதல், கற்றல்சார் இழப்புகளை மீட்டெடுப்பதற்கான உதவிகளை வழங்குதல் மற்றும் அத்தியாவசிய கற்றல்சார் தேர்ச்சிகளைப் பெறுதல் மற்றும் ஆசிரிய விருத்திச் செய்முறையினை தரநிலைப்படுத்தல் என்பவற்றுடன் அதன்மூலம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொதுக் கல்வியின் தரத்தை உயர்த்துவதனை நோக்காகக் கொண்ட தற்போதைய கல்வி முறைமையினை தொடர்ந்து மீளாய்வு செய்தது. தேசிய கல்வி நிறுவனம் 2024இல் 1, 6 மற்றும் 10ஆம் தர மாணவர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற புதிய பாடத்திட்ட மறுசீரமைப்புக்களில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. 'புதிய தேசிய பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம்' மற்றும் 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்றிட்டம் போன்ற பிற முயற்சிகளும்

அட்டவணை 3.12
பல்கலைக்கழகக் கல்வியின் முக்கிய பண்புகள் (அ)

	விடயம்	2021 (ஆ)	2022 (இ)
1.	பல்கலைக்கழகங்கள் (எண்ணிக்கை)	17	17
2.	ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் (எண்ணிக்கை)	19	19
3.	மாணவர்கள் (இளநிலை பட்டதாரிகள்) (எண்ணிக்கை) (ஈ)		
	பல்கலைக்கழகங்கள் (உ)	119,068	128,638
	நிறுவகங்கள்	3,611	3,712
	திறந்த பல்கலைக்கழகம்	28,824	28,591
4.	மொத்த அலுவலர்கள் (அனைத்துப் பல்கலைக்கழகங்கள்) (எண்ணிக்கை)		
	கல்விசார்	7,004	7,204
	கல்விசாராதோர்	13,164	13,150
5.	மாணவர்கள்/ ஆசிரியர்கள் விகிதம்	19.4	20.2
6.	வயது குறித்துரைக்கப்பட்ட இளநிலை பட்டதாரி மாணவர்களின் உள்ளெடுப்பு விகிதம் (19-23 வருடங்கள்) (ஈ)	8.9	9.3
7.	க.பொ.த (உ.த.) இருந்து பல்கலைக்கழகங்களுக்கு முன்னேற்றம்		
	பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் (%)	62.47	62.89
	தகுதி பெற்றோர் சதவீத அடிப்படையிலான அனுமதி (%)	22.58	வி.கி.
8.	பட்டம் பெற்ற மாணவர்கள் (எண்ணிக்கை) (ஊ)	36,012	வி.கி.
	முதற் பட்டம்	25,890	வி.கி.
	பட்டமேற்படிப்பு பட்டம்	10,122	வி.கி.
9.	முதற் பட்டத்திற்கான புதிய அனுமதிகள் (எண்ணிக்கை) (எ)	43,927	வி.கி.
10.	பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் (எண்ணிக்கை)	194,366	171,497

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள்
மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) வெளிவாரிப் பட்ட கற்கை நெறிகள் நீங்கலாக
(உ) திறந்த பல்கலைக்கழகம் நீங்கலாக
(ஊ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக
(எ) வெளிவாரிப் பட்டம் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் நீங்கலாக

முன்னெடுக்கப்பட்டன. நாடு முழுவதுமுள்ள 525 பாடசாலைகளில் உயர்தரக் கற்கைகளுக்கான 'தொழில்முறைப்' பிரிவின் வழங்கலுடன் 2022இல் '13 வருட கட்டாயக் கல்விக்' கொள்கை மேலும் வலுப்பெற்றது. 2022இல், தொழில்முறைப் பிரிவின் கீழ் கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த ஏறத்தாழ 8,000 மாணவர்கள் நிறுவனசார் பயிற்சிக்கு நெறிப்படுத்தப்பட்ட வேளையில் ஆண்டு காலப்பகுதியில் ஏழாவது உயர்தரக் கல்விப் பிரிவாக தொழிற்கல்விப் பிரிவினை நிறுவும் பொருட்டு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, 2021 தொடக்கம் நடைமுறையிலிருந்த இணையவழிச் செயற்றிட்டங்களின் தொடர்ச்சியுடன், ஆண்டு காலப்பகுதியில் நேரடியான கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் தேவைக்கேற்ப கலந்த கற்றல் அணுகுமுறையொன்றின் ஊடாக கல்விசார் நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. கல்வி அமைச்சு ஆங்கில மொழித் தேர்ச்சியினை உயர்த்தும் பொருட்டு 'மூட்ல்' தளத்தினூடாக 'செவிமடுக்கின்ற மற்றும் பேசுகின்ற திறன்களை மேம்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல்' பயிற்சிச் செயற்றிட்டத்தினை முன்னெடுத்ததுடன் 2022இல் நாடளாவிய ரீதியிலான ஏறத்தாழ 150 பயிற்சியாளர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தது. ஜேர்மன் மற்றும் பிரஞ்சு போன்ற வெளிநாட்டு மொழிகளில் தேர்ச்சியினை வளர்த்துக்கொள்வதனை நோக்காகக் கொண்ட செயற்பாடுகள் ஆண்டு காலப்பகுதியில் கல்வி அமைச்சின் 'இ-தக்ஷலாவ' கற்றல் முகாமைத்துவ முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டன. 2021இல் நடைபெறவிருந்த அனைத்து தேசிய ரீதியிலான பரீட்சைகளையும் 2022இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் அரசாங்கம் நடாத்தி முடித்த அதேவேளை, 2022 ஓகத்தில் நடைபெறவிருந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையினையும் உயர்தரப் பரீட்சையினையும் முறையே 2022 திசெம்பர் மற்றும் 2023 சனவரி மாதங்களுக்குப் பிற்போடப்பட்டன. 2022 திசெம்பரில் நடைபெறவிருந்த சாதாரண தரப் பரீட்சை குறிப்பிடத்தக்க சமரச இணக்கங்களேதுமின்றி 2023 மே மாதத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையானது 2022இல் கலப்புப் பொறிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கல்விசார் நடவடிக்கைகளின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்த பெருமுயற்சியினை மேற்கொண்ட வேளையில், நாட்டின் உயர் கல்வி உட்கட்டமைப்புத் தளத்தினை வலுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், அரச பல்கலைக்கழகங்கள் அவற்றின் கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுத்து, நேரடியான கல்விசார் நடவடிக்கைகளுடன் இணைந்து கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து நிறுவப்பட்ட லங்கா கல்வி மற்றும் ஆய்வு வலையமைப்பு இணையவழித் தளத்தின் கீழ் பின்பற்றப்பட்ட கற்றல் முறையினைத் தொடர்ந்ததுடன் அதன்மூலம் உயர் கல்வித்துறையில் பொருளாதார இடையூறுகளின் பாதகமான விளைவுகளைக் குறைத்தன. கல்வி நடவடிக்கைகளின் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்தும் வேளையில், பொருளாதார நெருக்கடியினால் விதிக்கப்பட்ட நிதியியல் மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் கல்விசார் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்துவதற்கு அதிகாரிகள் திடசங்கற்பம் பூண்டனர். இதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் இரண்டு புதிய கணணிப் பீடங்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடமொன்றிற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில், எட்டுப் பல்கலைக்கழகங்களில் 14 புதிய துறைகளுக்கும் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், இளமாணி சிறப்புப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், முதுமாணி பட்டப்படிப்புகள்

மற்றும் வெளிவாரியான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏறத்தாழ 54 புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2022இல் ஒப்புதலளிக்கப்பட்டன. இதேவேளை, ஆங்கில மொழியில் பல்கலைக்கழகப் பரீட்சையினை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குத் தேசிய மட்டத்திலான பரீட்சையொன்று நடாத்தப்பட்டது. இப்பரீட்சை முடிவடைந்தவுடன் தேசிய மட்டத்திலான சான்றிதழொன்றினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கலை, மானிடவியல் மற்றும் அழகியல் ஆகிய பிரிவுகளில் இளமாணி பட்டதாரிகளின் எதிர்கால வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகங்களில் மானிடவியல், கலை மற்றும் அரங்கேற்றக் கலைப் பீடங்களில் தகவல் தொழில்நுட்பத் துறைகளை நிறுவுவதற்கான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

2022இல் தொழிலாளர் சந்தையின் இயக்கவாற்றல் வாய்ந்த கேள்வியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதில் தனியார் துறை முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருந்தது. 2022 இறுதியளவில், பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனங்களாக கல்வி அமைச்சின் அரசல்லா உயர் கல்விப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட 24 எண்ணிக்கையிலான அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அவை 221 எண்ணிக்கையிலான ஒப்புதலளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கின. ஆண்டு காலப்பகுதியில், புதிய நிறுவனமொன்று பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 34 எண்ணிக்கையிலான புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன. இதேவேளை, 2022 ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினதும் புதிய நிறுவனங்களினதும் மீளாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பட்டப்படிப்பினை வழங்குகின்ற நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச தரநியமங்களை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் தயாரிப்பு மற்றும் அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்ட மீளாய்வு என்பன ஆண்டு காலப்பகுதியில் நிறைவடைந்தன.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையானது பொருளாதாரத்தின் சமகால ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. 2022 இறுதியளவில், 526 பொது நிறுவனங்கள் மற்றும் 610 தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை நிறுவனங்கள் என்பவற்றுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையில் 1,136 பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்பட்டன. பல்வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பாடச் செயற்பரப்புக்களை உள்ளடக்கி 3,043 ஒப்புதலளிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சிக் கற்கைநெறிகளை இந்நிறுவனங்கள் வழங்கின. ஆண்டு காலப்பகுதியில், மாணவர்களைத் தகுதிபெறச் செய்வதற்கு 117,954 தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பொருளாதார நெருக்கடியினால் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகளுக்கு மத்தியில், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு பயிற்சி வழங்குதல், மதிப்பீடு மற்றும் சான்றிதழ் நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அநேகமான பயிற்சி நிறுவனங்கள் கலந்த கல்வி முறைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்தியதுடன் பயண நேரம் மற்றும் நிதியியல் செலவு, தங்குமிடச் செலவு மற்றும் ஏற்பாடுகளின் செலவு என்பவற்றைக் குறைக்கும் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த கற்றல் முறை ஊக்குவிக்கப்பட்டது. அதேவேளை, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினை ஆளுகின்ற சபை உலகளாவிய தொழில் சந்தையில் 'பராமரிப்பாளர்' துறையின் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற தன்மையை ஒப்புக்கொண்டு, பதிவுச் செய்முறையை துரிதப்படுத்தும் பொருட்டு 'பராமரிப்பாளர்' பயிற்சிக் கற்கைநெறிகளை வழங்குகின்ற பயிற்சி நிறுவனங்களிற்கான ஒப்புதல்களை வழங்கியது. மேலும், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பயிற்சித் துறையானது 05/2022 இலக்க தேசிய தொழிற்தகைமைச் சுற்றறிக்கையினை வெளியிட்டு, 2022 நவெம்பர் 01இலிருந்து ஆரம்பிக்கின்ற பல்வேறு தேசிய தொழிற்தகைமை மட்டங்களுக்கான தொழில் ஆற்றல் பயிற்சியினை வசதிப்படுத்தியமையானது, எதிர்கால வேலைவாய்ப்புக்களுக்கான விரைவான பின்பற்றுதலொன்றினை வழங்குகின்றது.

அட்டவணை 3.13
மூன்றாம் நிலை மற்றும் தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கிய பண்புகள்

விடயம்	2021	2022 (அ)
1. பதிவு செய்யப்பட்ட மூன்றாந்தர தொழில்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (எண்ணிக்கை) (ஆ)	1,071	1,136
அரசு	478	526
தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள்	593	610
2. அங்கீகாரம் பெற்ற மொத்த கற்கை நெறிகள் (எண்ணிக்கை)	3,014	3,043
அரசு	2,387	2,370
தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள்	627	673
3. வழங்கப்பட்ட தேசிய தொழில் பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் (எண்ணிக்கை)	45,033	117,954
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்	4,633	9,782
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபை	7,441	50,029
தொழிற்பயிற்சி அதிகார சபை	17,253	25,432
தேசிய இளைஞர் பணிகள் ஆணைக்குழு	3,897	4,903
தனியார்	11,809	27,808

(அ) தற்காலிகமானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு

மூலம்: மூன்றாம் நிலை மற்றும் தொழில்நிலைக் கல்வி ஆணைக்குழு

3

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

அரசாங்கத்தின் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் 2022இல் தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டமையானது, இறுக்கமான இறை இடைவெளியின் தாக்கம் மற்றும் மூலப்பொருட்களின் நிரம்பல் பற்றாக்குறை அதேபோன்று ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணத் துறையில் உள்ளீடுகளின் விலை உயர்வு ஆகியவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. பொதுத் தனியார் பங்குடமை ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்றிட்டங்களின் பூர்வாங்கப் பணிகள் ஆண்டு காலப்பகுதியில் நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும், நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வத்தளை மற்றும் நிட்டம்புவ பிரதேசங்களில் நடுத்தர வருமான ஈட்டுகின்றவர்களுக்கான வீடமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மற்றும் கடுவெல கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக நான்கு முக்கிய செயற்றிட்டங்கள் அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் அழுத்தங்களின் காரணமாக 2022இல் இடைநிறுத்தப்பட்ட வேளையில், ஹிக்கடுவை மற்றும் நாவலப்பிட்டியில் திட்டமிடப்பட்ட குறைந்த வருமானம் ஈட்டுகின்றவர்களுக்கான வீடமைப்புச் செயற்றிட்டங்களும் வரவு செலவுத்திட்ட மட்டுப்படுத்தல்களின் காரணமாக நிறுத்தப்பட்டன. இருப்பினும், ஆண்டு காலப்பகுதியில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்ட குடித்தொகையின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் பொருட்டு இந்திய அரசாங்கத்திலிருந்தான நிதியுதவியுடன் பல்வேறு வீடமைப்புச் செயற்றிட்டங்களைத் தொடர்ந்த வேளையில், அதேபோன்று அரசினால் நிதியிடப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, 'ஒபட கெயக் - ரட்ட ஹெடக்', 'மிஹிந்து நிவஹன', மற்றும் 'விரு சுமிதுரு' ஆகிய வீடமைப்புச் செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகள் மிதமான வேகத்திலேனும் தொடர்ந்தன.

ஆழ்ந்த பொருளாதார நெருக்கடியுடன் இணைந்த நிதியியல் மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் 2022இல் மெதுவானதொரு வேகத்தில் தொடர்ந்து முன்னேற்றங்கண்டன. நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை நாட்டின் உட்கட்டமைப்புத் தளத்தினை மேம்படுத்தும் பொருட்டு நகரத்தை அழகுபடுத்தல் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி முயற்சிகள் உள்ளடங்கலாக நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நகரக்குடியிருப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் (சியக் நகர) ஏறத்தாழ 180 செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டது. ஹோமாகம தொழில்நுட்ப நகரத்தில் ஐந்து வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டத்தின் கீழ், கொட்டாவையிலிருந்து மஹேன்வத்தை வரையான புதிய அணுகல் வீதி ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. நதிக்கரை புனரமைப்பு மற்றும் மீள் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் மீள் கட்டமைப்பு போன்றன உள்ளடங்கலாக ஏனைய பல்வேறு முக்கிய செயற்றிட்டங்களும் 2022 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, 2022 இறுதியளவில் 90.0 சதவீத திரண்ட பௌதீக முன்னேற்றமொன்றினை எய்தின. மேலும், நகர்ப்புற வெள்ளப்பெருக்கு பிரச்சனைகளைத் தீர்ப்பதனை இலக்காகக் கொண்டதும் கொழும்பு மாநகரப் பகுதியை உலகத் தரம் வாய்ந்த நகரமொன்றாக அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் தொடர்புடையதுமான பாரிய கொழும்பு நகர்ப்புற அபிவிருத்திச் செயற்றிட்டம் 2022இன் இறுதியளவில் 99.6 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், நிர்மாணப் பணிகளின் நிறைவின் பின்னர், கொழும்பு தாமரைக் கோபுரம் 2022 பெப்புருவரி 28 அன்று இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதற்கமைய, அதன் தொழிற்பாடுகள் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமொன்றான கொழும்பு தாமரைக் கோபுரம் (பிறைவேற்) லிமிடெட்டிற்கு ஒப்படைக்கப்பட்டன. கொழும்பு தாமரைக் கோபுரமானது 2022 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்ட அதேவேளையில் வளாகத்தினுள் பொழுதுபோக்கு வலயமொன்றினை உருவாக்குவதற்குப் பல்வேறு தனியார் முதலீட்டாளர்களுடனான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் 2022இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு பல மைல்கற்களை அடைந்தன. அதற்கமைய, முழுச் செயற்றிட்டத்திற்கான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் 2022 ஏப்பிறலில் வர்த்தமானியிடப்பட்டதுடன் உபாய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள், கரைகடந்த கம்பனிகள், அங்கீகாரமளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் தீர்வையற்ற சில்லறைத் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடைய முக்கிய விதிமுறைகள் 2022இல் இறுதிப்படுத்தப்பட்டன. இருப்பினும், துறைமுக நகரில் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் பன்னாட்டுப் பாடசாலைகளை நிறுவுவதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு, 2022இன் பிற்பகுதியில் அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் திருத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்தியத்தின் முதலாவது நகர்புற தீர்வையற்ற வர்த்தக மையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பூரணப்படுத்தப்பட்டதுடன் துறைமுக நகரின் தீர்வையற்ற பயணிகள் நுழைவு முறைமையும் உருவாக்கப்பட்டு வருவதுடன் இது 2023 நடுப்பகுதியில் அங்குரார்ப்பணம்

செய்துவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 74 துண்டங்களில் 42 துண்டங்களின் நிலத் தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பத் தயாரிப்பு என்பன கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டக் கம்பனியினால் நிறைவு செய்யப்பட்டமையானது, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு செயற்றிட்டக் கம்பனிக்கு நிறைவுச் சான்றிதழ்களினை வழங்குவதனை இயலச்செய்த வேளையில், கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா மாவட்டத்தின் ஆறு துண்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் விற்கப்பட்டன. அரசிற்குச் சொந்தமான இரு வங்கிகள் உள்ளடங்கலாக நான்கு வங்கிகளுக்கான உரிமங்கள் தொடர்புடைய அனைத்து விதிமுறைகள் மற்றும் முன்தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு இணங்க தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு வழங்கப்பட்டன. முதலீட்டாளர் விசாக்கள், வேலைவாய்ப்பு விசாக்கள் மற்றும் வதிவிட விசாக்கள் ஆகிய மூன்று வகையான விசாக்களும் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், விசா பெறுவதற்கான விண்ணப்பம் மற்றும் ஒப்புதல் செய்முறைகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து நெறிப்படுத்தப்பட்டு தன்னியக்கப்படுத்தப்பட்டன. மேலும், கொழும்பு பன்னாட்டு நிதியியல் மையத்தின் கட்டம் I, மெரினா உலாவுமேடை வர்த்தக மையம், மெரினா உணவகம் மற்றும் அதிசொகுசு மனைகள் உள்ளடங்கலாக பல்வேறு செயற்றிட்டங்களுக்கு சவூதி அரேபியாவைத் தளமாகக் கொண்ட கம்பனியொன்றிடமிருந்து முதலீட்டு ஆதரவினைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் 2022இன் இறுதிப் பகுதியில் நடைபெற்றன.

வறுமை ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு வலையமைப்புக்கள்

பொருளாதார மந்தநிலைக் காலப்பகுதியில் ஏற்பட்ட பல்பக்கங்களிலிருந்தான உயர்வடைந்த பொருளாதார பாதிக்கப்படக்கூடிய தன்மைகளுடன் வறுமை ஒழிப்பில் இலங்கையின் முன்னேற்றமானது ஸ்தம்பிதமடைந்துள்ளது. தேசிய மட்டத்திலான வறுமை ஒழிப்பில் பாராட்டத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்ட போதிலும், குடித்தொகையில் கணிசமானளவிலானதொரு பகுதியினர் பல்வேறு பரிமாணங்களில் குறிப்பிடத்தக்க வருமான சமமின்மைகளுடன் இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். 2019 ஆண்டளவில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டின் பிரகாரம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடித்தொகையின் சதவீதத்தினை 2002இல் பதிவுசெய்யப்பட்ட 46.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், 2019இல் கிராமப்புறத் துறையில் பதிவுசெய்யப்பட்ட 15.0 சதவீதத்துடனும் நகர்ப்புறத் துறையில் பதிவுசெய்யப்பட்ட 6.0 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் பெருந்தோட்டத் துறையில் வறுமை மட்டம் 33.8 சதவீதமாகத் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டமையானது பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுகளைப் பிரதிபலிக்கின்றது. வீட்டுத் துறையினரின் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2019ஆனது 20 சதவீத ஏழ்மையிலுள்ளவர்கள் நாட்டின் மொத்த வீட்டுத்துறையினரின் வருமானத்தில் 4.6 சதவீதத்தினை மாத்திரமேயுள்ள அதேவேளை குடித்தொகையில் 20 சதவீத செல்வந்த மக்கள் மொத்த வீட்டுத்துறையினரின் வருமானத்தில் ஏறத்தாழ 51.3 சதவீதத்தினைப் பெற்றுள்ளதாக எடுத்துக்காட்டியமையானது, நாட்டில் வருமான சமமின்மைகளின் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பிரச்சினையின் தீவிரத்தன்மையினை மீள் உறுதிப்படுத்துகின்றது. இவ்வறுமைப் புள்ளிவிபரங்கள் நாட்டின் குடித்தொகையில் குறிப்பிடத்தக்கதொரு பகுதியினர் அண்மைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னரே வறுமையினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தனரென்பதனைச் சுட்டிக்காட்டின. இப்பின்னணியில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து குடித்தொகையின் வறுமையிலுள்ள குழுவினர் பொருளாதார அதிர்வுகளுக்குப் பாரியளவில் ஆளாகியுள்ள அதேவேளை, அவர்களது பாதிப்படையக்கூடிய தன்மைகள் 2022 ஆண்டு முழுவதும் மோசமடைந்த பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான பொருளாதார இடையூறுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவடைதல் என்பன அவர்களது வருமான மட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் மீதான நெருக்கடியுடன் இணைந்த விரும்பத்தகாத விளைவுகளுடன், நெருக்கடிக்கு முன்னரே வறுமைக் கோட்டினை நோக்கிச் சென்றுகொண்டிருந்த குடித்தொகையின் குறித்த சில பிரிவுகளை மேலும் பாதித்துள்ளன. இதேவேளை, நுகர்வோர் விலைகளின் உயர்வடைதலானது பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்கள் மீது கடுமையான தாக்கமொன்றினை ஏற்படுத்தி, ஏற்கனவே இருக்கும் வருமான சமமின்மைகளை மோசமடையச் செய்தது. குடித்தொகையின் தற்போதைய பாதிப்படையக்கூடிய தன்மையினைப் பிரதிபலிக்கின்ற வகையில், தேசிய வறுமைக் கோடானது 2022 திசெம்பர் இறுதியளவில் ரூ.13,777.00இனை அண்மித்து, 2022 காலப்பகுதியில் பணவீக்கத்தில் காணப்பட்ட உயர்வுடன் இணைந்து ஏறத்தாழ 74.1 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்காண்டு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. 2022 திசெம்பரில், மாவட்ட வறுமைக் கோடுகள் முறையே ரூ.13,311.00 மற்றும் ரூ.13,174.00 ஆக தொடர்ந்தும் காணப்பட்ட கிளிநொச்சி மற்றும் மொனராகலை போன்ற கிராமப்புற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட வறுமைக் கோடு ரூ.14,500.00 இனை விஞ்சிக் காணப்பட்டமையானது நகர்ப்புறங்களில் வாழ்க்கைச் செலவில் பணவீக்கத்தின் விகிதாசாரமற்ற தாக்கத்தினை எடுத்துக்காட்டியது.

நீண்டகால நெருக்கடி மற்றும் தொடர்புடைய பொருளாதார இடையூறுகள் என்பன குடியிருப்பாளர்களின் நிதியியல் இயலளவினை இழக்கச்செய்தது மட்டுமன்றி, குடித்தொகையின் பின்தங்கிய குழுக்களிடையே உணவுப் பாதுகாப்பின்மையும்

3

மந்த போசணையினையும் அதிகரித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு என்பன இணைந்து வெளியிட்ட 2022 செத்தெம்பரில் பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுப் பணிக்குழுவின் விசேட அறிக்கையின் படி, இலங்கையில் மதிப்பிடப்பட்ட 6.3 மில்லியன் தொகையிலான மக்கள் மிதமான தன்மையிலிருந்து மிகவும் கடுமையான தன்மையிலான உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சினையினை எதிர்கொண்டுள்ளனர். போதுமாந்தன்மையிலான உயிர்காக்கின்ற உதவி மற்றும் வாழ்வாதாரத்திற்கான ஆதரவு இன்றி இம்மக்களின் நிலைமை மேலும் மோசமடையக்கூடும். இப்பின்னணியில், அரசாங்கம் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி உதவிக்கான தரப்படுத்தல் முன்னேற்றக்கொள்கைத் திரும்பலொன்றினைத் தேர்ந்தெடுத்ததுடன் அதன்மூலம் பன்னாட்டு அபிவிருத்தி உதவியிலிருந்து சலுகை அடிப்படையிலான நிதியிடலிற்கான அணுகலினைப் பெற்ற வேளையில், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் பசி மற்றும் வறுமைக்கு எதிரான பாதுகாப்பினை வழங்குவதற்கும் ஏனைய பல்புடை அபிவிருத்தி உதவிகளிலிருந்தான ஆதரவைப் பெற்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற புதிய ஏழ்மைக் குழுக்களின் சாத்தியமான தோற்றத்தின் விளைவாக, பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களுக்காக குடித்தொகையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் இலக்கிடலை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, 2022இல் பல்புடை முகவராண்மைகளிலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் 'முன்னேற்றங்கண்ட சகலரையும் பங்குபற்றச்செய்யும் நலன்புரி' செயற்றிட்டத்தின் கீழ், சமூகப் பதிவேடொன்றின் நிறுவுதலைத் துரிதப்படுத்துவதற்கான வழிமுறைகளை நலன்புரி பயனாளர் சபை ஆரம்பித்தது. இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக வங்கியின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டத்திலிருந்தான நிதியியல் உதவியுடன் 2023 யூன் இறுதியளவில் நலன்புரி பயனாளர் தகவல் முறைமையினை நிறுவுவதற்கும் ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையினை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் கீழ் நலன்புரிப் பயனாளர் கொடுப்பனவுகளுக்கான தகைமையை நிர்ணயிப்பதற்கான தெரிவுச் செய்முறை 2022 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேளையில், குடியிருப்பிற்கு நேரில் சென்று தரவு சரிபார்த்தலும் 2023இன் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், நலன்புரிப் பயனாளர் தகவல் முறைமைக்கான தரவுகளைத் திரட்டுவதற்கான ஆரம்ப விண்ணப்ப செய்முறை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வேளையில், 3,726,596 விண்ணப்பதாரர்களின் அடிப்படை தகவல்கள் 2022 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்டன. சமூக நலன்புரி பயனாளர்களின் தகைமையின் தொடர்ச்சியான மதிப்பீடொன்றினை நிறுவுவதனையும் இறுதியில் குடியிருப்பாளர் பொருளாதார நிலையினை வலுப்படுத்துவதன் மூலம் நலன்புரிச் செயற்றிட்டத்திலிருந்து வெளியேறுவதற்கான உரிய பொறிமுறையொன்றினை உருவாக்குவதனையும் இச்செயற்றிட்டம் நோக்காகக் கொண்டுள்ளது. 2023இன் முற்பகுதியில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் பல முக்கிய அரச நிறுவனங்களுடன் இணைந்து, வாழ்க்கை நிலைமைகளில் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு குடியிருப்பாளர் அளவீடொன்றினை நடாத்துவதற்கான படிமுறைகளைத் தொடங்கியது. எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களுக்கான உதவிகள் காலந்தவறாது சென்றடைவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு தேவைப்பாட்டினையுடையவர்களை அடையாளம் காண்பதற்கான சமூகப் பதிவேடொன்றின் உருவாக்கத்தினைத் துரிதப்படுத்துவதற்கான அவசரத் தேவையொன்றும் காணப்படுகின்றது. நலன்புரிச் செயற்றிட்டகளை இலத்திரனியல் மயப்படுத்தலுடன் இணைந்த இத்தகைய தரவுத்தளத்தை உருவாக்குவதானது தரவின் தரம், போதுமாந்தன்மை மற்றும் காலக்கெடு என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கான வினைத்திறன் வாய்ந்த கொள்கைத் தலையீடுகளை இயலச்செய்யும் வேளையில், எதிர்காலத்தில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தீர்மானங்களை ஒரே நேரத்தில் வலுப்படுத்தும்.

அட்டவணை 3.14

பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்

ஆண்டு	திவிநெகும / சமூர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம்		சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (அ)	
	குடும்பங்கள் (எண்ணிக்கை) (ஆ)	பெறுமதி (ரூ.மில்லியன்) (இ)	பயனாளர்கள் (எண்ணிக்கை) (ஆ)	பெறுமதி (ரூ.மில்லியன்)
2018	1,384,021	39,239	329,047	5,490
2019	1,800,182	44,660	300,246	5,279
2020	1,770,086	52,434	238,034	4,751(ஈ)
2021	1,760,485	55,400	250,848	5,248
2022 (உ)	1,760,485	120,988 (ஊ)	வி.கி.	3,690

(அ) கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கானது
(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(இ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக
(ஈ) திருத்தப்பட்டது
(உ) தற்காலிகமானது
(ஊ) பல்புடை உதவியின் கீழாக வழங்கப்பட்ட மானியங்கள் உள்ளடங்கலாக

மூலங்கள்: சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

குறைந்த வருமானம் ஈட்டுகின்ற குடியிருப்பாளர்களின் சமூக பொருளாதார நலனோம்புகையினை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கம் தற்போதுள்ள பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டங்களை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுத்தது. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கத்தின் முதன்மைப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டமான சமுர்த்தி உதவித்தொகைச் செயற்றிட்டத்தின் காசு மாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1.7 மில்லியன் பயனாளிக் குடும்பங்களுக்கும் ஏனைய பயனாளர் வகைகளுக்கும் மொத்தமாக ஏறத்தாழ ரூ. 120 பில்லியன் தொகையினைப் பகிர்ந்தளித்தது. ஏழ்மைக் குடியிருப்பாளர்கள் மீது உலகளாவிய நோய்த்தொற்றின் விகிதாசாரமற்ற மற்றும் உடனடித் தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு, 2022இற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத்திற்கிணங்க, 2022 பெப்புருவரி தொடக்கம் பயனாளிகளின் குடும்பங்களுக்கான மாதாந்த சமுர்த்திக் கொடுப்பனவினை குடும்பமொன்றிற்கு ஏறத்தாழ 28 சதவீதத்தினால் அரசாங்கம் அதிகரித்தது. இதற்கமைய, ரூ.3,500, ரூ.2,500 மற்றும் ரூ.1,500 கொண்ட குடும்ப அலகு உதவித்தொகைகள் குடும்பமொன்றிற்கு முறையே ரூ.4,500, ரூ.3,200 மற்றும் ரூ.1,900 இற்கு அதிகரித்தன. பல்புடை முகவராண்மைகளிலிருந்தான நிதியியல் உதவியுடன், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் 2022 மேயிலிருந்து நவெம்பர் வரை அவசரகால காசு பரிமாற்றச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டு, வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோய் வகைப்பாடுகளுக்கான உதவித்தொகைச் செயற்றிட்டத்திற்காக காத்திருப்புப் பட்டியலிலிருந்த தற்போதுள்ள சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ரூ.3,000 இலிருந்து ரூ.5,000 வீச்சினுள் உதவித்தொகைகளை வழங்கியது. இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக வங்கியிலிருந்தான நிதியியல் உதவியுடன் 2.6 மில்லியன் பயனாளிக் குடும்பங்களுக்கிடையே ஏறத்தாழ ரூ.38.5 பில்லியனை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் பகிர்ந்தளித்த வேளையில், ஆசிய அபிவிருத்தி வங்கி 3.0 மில்லியன் பயனாளிக் குடும்பங்களிடையே ரூ.45.5 பில்லியன் தொகையினைப் பகிர்ந்தளிப்பதற்கான நிதியியல் உதவியினை வழங்கியது. மேலும், உலக உணவுச் செயற்றிட்டத்திலிருந்தான வசதிப்படுத்தலுடன் குறைந்த வருமானம் ஈட்டுகின்ற கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பெண்களின் தலைமையிலான குடும்பங்கள், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள தனிநபர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களின் ஊட்டச்சத்து நலனோம்புகையினை நிச்சயப்படுத்தும் பொருட்டு ஆண்டு காலப்பகுதியில் மற்றுமொரு நிதியியல் உதவிச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டம் அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார், மொனராகலை, காலி, முல்லைத்தீவு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 41,710 குடும்பங்களை உள்ளடக்கியதுடன் 2022 இறுதியளவில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதி ரூ.625.7 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, குடும்பமொன்றிற்கு ரூ.10,000 கொண்ட நேரடிப் பண உதவியொன்று 2022 ஓகத்தில் களுத்துறை மாவட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இது ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களை உள்ளடக்கியிருந்தது. ஆண்டு காலப்பகுதியில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக வாழ்வாதாரம், சமூகம் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி என்பவற்றினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட பல்வேறு செயற்றிட்டங்களில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் தொடர்ந்து ஈடுபட்டது. நிதிப் பரிமாற்றல்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வாடிக்கையாளர் உறவுமுறைத் தொகுதிக்கான மென்பொருள், சமுர்த்தி அதிகாரிகளுக்கான செல்லிடச் செயலி மற்றும் பயனாளிகளுக்கான அதிகளவிலான வங்கித்தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற புதிய உபாயங்கள் பின்பற்றப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், நெருக்கடி காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு நிதியியல் விடுவித்தலொன்றினை வழங்கும் பொருட்டு மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சிறிய படகு உரிமையாளர்களுக்கும் பெருந்தோட்டப் பகுதிகளில் மின்சாரம் இல்லாதவர்களுக்கும் மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக ஏனைய பல்வேறு சமூக நலன்புரிப் பொதிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. மேலும், உணவுப் பாதுகாப்பினை நிச்சயப்படுத்தல் மற்றும் பிள்ளைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டின் புதுப்பிக்கப்பட்ட இடர்நேர்வுகளைத் தடுத்தல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடையும் பொருட்டு, கிராமப்புற பொருளாதார புனரமைப்பு மையங்களை மேம்படுத்துவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையொன்று 2022 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதேவேளை, மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு கர்ப்பகாலத்தின் இறுதி 06 மாதங்களுக்கும் பாலூட்டும் முதலாவது 04 மாதங்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைகளில் பதிவுசெய்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் கொடுப்பனவாக ரூ.2,000 இனை தொடர்ந்து வழங்கியது. முன்பள்ளி வயதிற்குட்பட்ட குறைந்த எடையினையுடைய பிள்ளைகளின் ஊட்டச்சத்து மட்டத்தினை மேம்படுத்துவதற்கான முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவுத் திட்டமும் சிறுபராயத்திற்கு முந்தைய மேம்பாடு தொடர்பிலான உலக வங்கியின் செயற்றிட்டத்திலிருந்தான நிதியியல் ஆதரவுடன் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் பல்வேறு வறுமை ஒழிப்புச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், இலங்கை பல்பரிமாணங்களில் கணிசமானளவிலான வருமான சமமின்மைகளை இன்னும் கொண்டிருப்பதானது, அதன் பிரசைகள் திடீர் சமூக பொருளாதார பின்னடைவுகளினால்

மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையொன்றினை ஏற்படுத்தியுள்ளது. ஆதலால், வறுமை ஒழிப்பிற்கான கொள்கை அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்வதானது அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்தியினை அடைவதற்கான நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் முக்கியமானதொரு முயற்சியாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. தேசிய சமூகப் பதிவேட்டினை நிறுவுவதானது தேவைப்பாட்டினையுடைய துறைக்கு வளங்களைச் சேர்ப்பதன் மூலம் சிறந்த வளப் பயன்பாட்டிற்கு ஆதரவளிக்கும். கட்டமைப்பானது கிரமமான அடிப்படையில் பதிவேட்டினைப் புதுப்பிப்பதில் பாரியளவிலான நெகிழ்ச்சித்தன்மைக்கு அனுமதிக்கப்படல் வேண்டும். மேலும், குறுங்காலத்தில் குடித்தொகையின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் மீதான நெருக்கடியினால் உந்தப்பட்ட சுமைகளைத் தீர்க்கின்ற வேளையில், நன்கு கவனம் செலுத்தப்பட்ட துரித வாழ்வாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இக்குடித்தொகைக் குழுக்களின் நீண்ட கால தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துதல் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன் இது எதிர்காலத்தில் அரசாங்க மானிய செயற்றிட்டங்கள் மீதான அவர்களின் தங்கியிருத்தலினைக் குறைக்கும். மேலும், வறுமை ஒழிப்புக் கொள்கைகள் குடித்தொகையில் ஏற்படுகின்ற குடித்தொகையியல் மாற்றங்கள் அத்துடன் இயற்கைப் பேரழிவுகள், சுகாதார அவசரநிலைகள் போன்றவற்றை கருத்திற்கொள்ள வேண்டும். முறைசாரா துறையில் பணிபுரிந்த குடித்தொகையின் பாரியளவிலான பங்கினைக் கருத்திற்கொண்டு, குறிப்பாக, வயது முதிர்ந்த குடித்தொகையின் பின்னணியில், ஓய்வூதிய நிதியங்களை நிறுவுவதற்கும் ஊக்குவிப்பதற்குமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலானது அரசாங்கத்தின் மீது மேலதிக நிதியியல் அழுத்தத்தை ஏற்படுத்தாமல், அவர்களது ஓய்வூதியத்தின் போது இச்சமூகங்களின் எதிர்காலத்தினைப் பாதுகாக்கத் துணைபுரியும். மேலும், கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றில் வளர்ச்சியடைந்து வருகின்ற சமமின்மைகள் முன்னுரிமை அடிப்படையொன்றில் தீர்க்கப்பட வேண்டும் என்பதுடன் அதன்மூலம் பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள குடித்தொகையினால் எதிர்கொள்ளப்படுகின்ற வறுமையின் நச்சுச் சுழற்சி உடைத்தெறியப்படும். பொருளாதார நெருக்கடியின் விளைவாக, குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் ஆகிய இரண்டிலும் மோசமடைந்து செல்கின்ற வறுமை மட்டங்களைக் கட்டுப்படுத்துகின்ற கொள்கைக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு, எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி மீட்சி மற்றும் முன்னேற்றம் என்பவற்றின் பயன்கள் நாட்டின் அனைத்துப் பிரசைகளுக்கும் சமத்துவ அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதானது நிச்சயப்படுத்தப்பட வேண்டும். மிக முக்கியமாக, பாதிப்படையக்கூடிய தேவையுடையோருக்கு நலன்புரிப் பொதிகளை வழங்குவதிலுள்ள அரசியல் மற்றும் ஏனைய தலையீடுகள் குறைந்தபட்சளவிற்குக் குறைக்கப்பட வேண்டும்.

சுற்றாடல்

2022இல் தேசிய சூழல் கொள்கை வெற்றிகரமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட வேளையில், நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால சூழலியல்சார் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினைப் பாதுகாப்பதற்கு நிலையான கொள்கைக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிலம் மற்றும் நீர் வளங்கள், உயிர்ப்பல்வகைமை மற்றும் சூழல் முறைமைகள், கடலோர மற்றும் கடல் வளங்கள், சூழல் மாசடைதல் தடுப்புக் கட்டுப்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம், காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய சூழலியல்சார் சவால்கள், கட்டமைக்கப்பட்ட சூழல் மற்றும் பசுமை அபிவிருத்தி மற்றும் குறுக்குவெட்டுச் சிக்கல்கள் மற்றும் சவால்கள் ஆகிய ஏழு கருப்பொருள் பகுதிகளின் கீழ் முன்மொழியப்பட்ட கொள்கைத் தலையீடுகளை உள்ளடக்கிய தேசிய சூழல் கொள்கையின் நடைமுறைப்படுத்தலை முன்னெடுக்கும் பொருட்டு அமைச்சரவை 2022 யூனில் சுற்றாடல் அமைச்சிற்கு ஒப்புதலளித்தது. தேசிய சுற்றாடல் கொள்கையானது நன்கு வரையறுக்கப்பட்ட கொள்கை கட்டமைப்பொன்றின் மூலம் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்தியினை இயலச்செய்கின்ற நிலைமைகளை உருவாக்குவதற்கான சுற்றாடல் வளங்களின் நீடித்துநிலைத்திருக்கின்ற பயன்பாடு, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை நிச்சயப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தேசிய சுற்றாடல் கொள்கையினை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன், ஆண்டு காலப்பகுதியில் 2022-2030இற்கான தேசிய சுற்றாடல் நடவடிக்கைத் திட்டம் இறுதிப்படுத்தப்பட்டு, தேசிய சுற்றாடல் கொள்கையின் கொள்கை அறிக்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளாக மாற்றுகின்ற உபாயங்கள் அடையாளம் காணப்பட்டன.

பொருளாதார மீட்சிச் செய்முறையில் இயற்கை வளங்களின் நீடித்துநிலைத்திருக்கின்ற மற்றும் வினைத்திறனான பயன்பாட்டின் மீதான கவனம் செலுத்தலை வலுப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினதும் சுற்றாடல் அமைச்சினதும் குறிப்பிடத்தக்க முயற்சிகளுடன் ஏனைய பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 2050ஆம் ஆண்டளவில் தேறிய பூச்சிய காபன் நிலையை அடையும் பொருட்டு, 2022இல் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பிலான மாநாட்டில் இலங்கையின் காலநிலை செழிப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைக்கான காலநிலை தொடர்பிலான வெளிநாட்டு முதலீட்டினைக் கவரும் வேளையில் காலநிலை மாற்றத்தினை விரைவுபடுத்தி பசுமைவீட்டு வாயு வெளியேற்றத்தினைக் குறைப்பதில் இலங்கையின் காலநிலை செழிப்புத் திட்டமானது தேசிய முதலீட்டு உபாயமாகச் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2022இல்,

வலு வினைத்திறன், புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாடு மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையிலான குளிரூட்டல் தீர்வுகள் உள்ளடங்கலாக குளிரூட்டல் துறை (குளிரூட்டல் மற்றும் குளிரேற்றம்) மேம்பாடுகள் மூலம் பசுமைவீடு வாயு வெளியேற்றத்தினைக் குறைக்கின்ற நோக்கிலமைந்த தேசிய குளிரூட்டல் கொள்கையின் முதலாம் வரைவு நிறைவு செய்யப்பட்டது. மொன்றியல் ஒப்பந்தத்திற்கான கிகாலி திருத்தத்தின் கீழ் உடன்பட்டதற்கிணங்க ஐதரசன் புளொரோ காபனைப் படிப்படியாகக் குறைப்பதற்கான நாட்டின் திட்டத்தினை இக்கொள்கை வசதிப்படுத்துகின்றது. 2022இல், அதன் தனித்துவமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த சூழலினைப் பாதுகாப்பதற்கான நாட்டின் முயற்சிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க முன்னோக்கிய நகர்வுடன், 'இலங்கையில் சூழல்சார் உணர்திறன் வாய்ந்த பகுதிகளில் தேசியக் கொள்கைக்கான' அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் இது அதிகளவிலான உயிர்ப்பல்வகைமை, ஈரநிலங்கள் மற்றும் கடலோர வலயங்கள் ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக சூழல்சார் உணர்திறன் வாய்ந்த பகுதிகளின் பாதுகாப்பினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆண்டு காலப்பகுதியில் சூழலினைப் பாதுகாப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. தேசிய வெளியகற்றல் மற்றும் வெளியேற்றல் தேவைப்பாடுகளுக்கு இணங்க குறித்த கைத்தொழில்துறைத் தொழிற்பாடுகளிலிருந்து சூழலிற்கான வெளியகற்றல்கள் மற்றும் வெளியேற்றங்களினை தடுப்பதற்கும் குறைப்பதற்கும் சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறையினை மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடைமுறைப்படுத்தியது. 2022இல், தற்போதுள்ள சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறையினை வலுப்படுத்தும் பொருட்டு, விதந்துரைக்கப்பட்ட செயற்பாட்டுப் பட்டியல் மற்றும் சூழல் பாதுகாப்பு உரிம விதிமுறைகள் என்பன முறையே இல. 2264/18 மற்றும் இல. 2264/17 வர்த்தமானி அறிவிப்புக்களின் மூலம் திருத்தப்பட்டன. 2022 இறுதியிலுள்ளவாறு, மொத்தமாக 19,160 கைத்தொழிற்சாலைகள் மற்றும் 786 முதலீட்டுச் சபை நிறுவனங்கள் சூழல் பாதுகாப்பு உரிமத்தின் கீழ் உரிமங்களைப் பெற்றுள்ளன. மேலும், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகள் என்பனவூடாக செயற்றிட்டங்களின் சாத்தியமான சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கான அதன் ஆணையினை முன்னெடுக்கும் பொருட்டு, 2022இல் ஏழு சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளுக்கும் 237 ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒப்புதலளித்தது.

பேரழிவுகளுக்கான நாட்டின் தயார்நிலையினை மேம்படுத்தும் பொருட்டு சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடனும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடனும் இணைந்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2019இல் தொடங்கப்பட்ட வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற செயற்றிட்டத்தினை முன்னெடுத்தது. ஆண்டு காலப்பகுதியில், இச்செயற்றிட்டத்தின் கீழ், உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் குருநாகல், அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் உணரியின் அடிப்படையிலமைந்த வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற சாதன அலகுகள் நிறுவப்பட்டு, தற்போது முன்னெடுக்கப்படுகின்ற வளியின் தரத்தினைக் கண்காணிக்கின்ற செயற்றிட்டம் வலுப்படுத்தப்பட்டது. இதேவேளை, 2022 திசெம்பரில், நாட்டின் பல பகுதிகளில் வளிமண்டலத்தின் தரம் மோசமடைந்து, எல்லை கடந்த வளி மாசடைதல் விளைவுகளுக்குள்ளானமையானது கண்டறியப்பட்டதுடன் பொதுமக்கள் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டனர். இத்தகைய சவால்களுக்கான இலங்கையின் உயர்ந்தளவிலான வெளிப்படுத்துகை மற்றும் அத்தகைய சூழ்நிலைகளில் பின்பற்றும் பொருட்டு வழிகாட்டல்களுக்காக நிறுவப்பட்ட கட்டமைப்பின் பற்றாக்குறை என்பவற்றை அடையாளங்கண்டு, கல்வி அமைச்சானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஏனைய பல ஆர்வலர்களுடன் இணைந்து அவசர நிலையிலான பதிலிறுப்பு நடவடிக்கைத் திட்டமொன்றினை உருவாக்கத் தொடங்கியது. இத்தகைய முக்கியமான காலகட்டங்களில் வரையறுக்கப்படக்கூடிய உள்ளூர் வெளியேற்ற மூலங்களை இச்செயற்றிட்டம் அடையாளப்படுத்துகின்றது. மேலும், இயற்கைப் பேரழிவுகளின் சமூக பொருளாதார தாக்கத்தினைக் குறைப்பதற்கு ஆண்டு காலப்பகுதியில் பேரழிவினைத் தணிக்கின்ற செயற்றிட்டங்களில் அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபட்டனர். 2022 ஆண்டு காலப்பகுதியில் பொது மக்கள், தொடர்பான பேரழிவு முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகியோர் முன்கூட்டிய தயார்படுத்தல்களினை மேற்கொள்ளும் பொருட்டு வளிமண்டலவியல் திணைக்களம் 568 வானிலை எச்சரிக்கைகளினையும் ஆலோசனைகளையும் வழங்கியது. இதேவேளை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது அதன் மண்சரிவு இடர்நேர்வினைத் தணிக்கின்ற வழிமுறைகளின் பகுதியொன்றாக 2022இல் நுவரெலியாவில் இரண்டு மண்சரிவு தளங்களினையும் கொழும்பு மாவட்டத்தில் மற்றொன்றையும் கட்டமைப்பு ரீதியாக தணிக்கின்ற இயலுமையினைக் கொண்டிருந்ததுடன் கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 480 சதுர கி.மீ. பரப்பளவினை உள்ளடக்கிய மண்சரிவு அபாயமேற்படுகின்ற இடங்களை வரைபடமாக்குவதற்கான அதன் செயற்றிட்டத்தினை ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

உலகம் சுற்றுப் பொருளாதாரத்தையும் அதற்கப்பாலும் நோக்கி வேகமாக நகர்கின்றது. காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் இலங்கை உள்ளடங்கலாக பல நாடுகளினால்

நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே பல நாடுகள் அவற்றை அனுபவித்தும் உள்ளன. பாரிஸ் ஒப்பந்தம் (2015), ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு 26 (2021) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு 27 (2022) என்பன காலநிலை மாற்றத்தின் கடுமையான பேரழிவுகளுக்கு உள்ளாகக்கூடிய நாடுகளுக்கு நிதியிடுவதற்குத் தயாராக உள்ளன. இலங்கையும் இவ்வம்சங்களில் கவனம் செலுத்துவதும் அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை முன்கூட்டியே தயார் செய்வதும் மேற்குறிப்பிட்ட உச்சி மாநாடுகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆளுகைசார் கோட்பாடுகளுடன் இசைந்து செல்வதும் அவசியமாயுள்ளது. பொருளாதார உட்கட்டமைப்பானது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் இலங்கை இசைந்து செல்ல வேண்டிய பகுதியொன்றாகக் காணப்படுவதுடன் இணக்கம் தெரிவித்த நாடுகள் ஒதுக்கப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான, முதன்மையாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்களுக்கான நிதியிடலைப் பெற்றுக்கொள்ள முடியும். இது நீண்ட செய்முறையொன்றாக காணப்படுவதனால், உலகளாவிய ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கை கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

3

4

விலைகளும் கூலிகளும்

4.1 பொதுநோக்கு

அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிலைகளில் தோன்றிய பாதகமான நிரம்பல் அதிர்வுகள், ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான ரூபாவின் தேய்மானம் மற்றும் கடந்த சில ஆண்டுகளின் நாணயத் தளர்வின் நீடித்த தாக்கம் என்பனவற்றின் காரணமாக 2022ஆம் ஆண்டு முழுவதும் முன்னொருபோதுமில்லாத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இருந்தபோதிலும், மத்திய வங்கியால் தொடரப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையை தொடர்ந்தும், நிரம்பல் நிலைமைகள் இலகுவானமையினாலும் விலைமட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் ஆண்டிறுதியில் மிதமடைந்தது. உள்ளீடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பல் மற்றும் அதிகவிலை காரணமாக வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் ளரிபொருள் தட்டுப்பாடுகளால் விநியோக வலையமைப்பில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரித்தது. இதேவேளை, உலகளாவிய ரீதியில் பண்டங்களின் விலை அதிகரிப்புக்கள், உயர்வான கப்பற்சரக்குக் கட்டணங்கள் மற்றும் குறிப்பாக இலங்கை ரூபாவின் கூர்மையான தேய்மானம் என்பன இறக்குமதி செய்யப்பட்ட உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க உயர்வுகளை ஏற்படுத்தி பொதுவிலை மட்டத்தின் மீது குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. மேலும், நிருவகிக்கப்பட்ட விலைகளில் செலவுப் பிரதிபலிப்பு திருத்தங்களும், பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான மேல்நோக்கிய திருத்தங்களும், சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு அறிமுகப்படுத்தப்பட்டமையும் உணவு மற்றும் உணவல்லா வகையின் விலை அதிகரிப்புக்களை அதிகமாக்கியது. எனினும், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகளின் சாதகமான அபிவிருத்திகளால் இப்பாதக நிலைமைகள் ஆண்டின் இறுதியில் தணிந்தது. இறுக்கமான நாணயக் கொள்கை அளவீடுகள் தொடர்ந்தமை கேள்வித்தூண்டல் பணவீக்க அழுத்தங்களை குறைத்த வேளையில் உள்ளீடுகளின் கிடைக்கும் தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றம் உள்நாட்டு உற்பத்தி நிரம்பலை அதிகரித்ததனூடாக பொதுவிலை மட்டத்தின் அதிகரிப்பின் வேகத்தை குறைத்தது. பன்னாட்டு சந்தையில் பண்ட விலைகள் மிதமடைந்ததற்கு மத்தியில், வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சந்தை வழிகாட்டலுக்கு பதிலிறுத்தும் வகையில் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட உறுதித்தன்மை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை மிதமடையச் செய்து ஆண்டிறுதியை நோக்கிய பொதுவிலைமட்டத்தின் மீதான அழுத்தத்தை மேலும் குறைத்தது. இவ்வபிவிருத்திகளை பிரதிபலிக்கும் விதத்தில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சுட்டெண் 2013=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சுட்டெண் 2013=100) இனை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 செத்தெம்பரில் உச்சமடைந்து அதன்பின்னர் பணவீக்க வீழ்ச்சிப் பாதையை முன்னெடுத்தது. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணினால் (உ.வி.சுட்டெண், 2018 கா4 = 100) அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் 2022 ஓகத்து வரை அதிகரித்து அதன்பின்னர் ஆண்டிறுதியை நோக்கி வீழ்ச்சியடைந்தது. கூலிகளைப் பொறுத்தவரை முறைசார்ந்த மற்றும் முறைசாராத் தனியார் துறைகள் மற்றும் அரச துறையில் பெயரளவு கூலிகளில் 2022இல் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

முறைசார் தனியார் துறையின் ஆகக்குறைந்த கூலிகளின் திருத்தத்தாலும், முறைசாரா தனியார் துறையினரால் அதிகரித்த வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அவர்களால் கோரப்பட்ட அதிகரித்த கூலிகளாலும் அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு கொடுப்பனவாலும் பெயரளவு கூலிகளில் அதிகரிப்பு ஏற்பட்டது. எனினும், அவர்களது உண்மைக் கூலிகள் அதிகரித்த விலைகளுடன் கூலிகள் முழுமையாக திருத்தப்பட்டமையால் வீழ்ச்சியடைந்து பொருளாதாரத்தில் கூலி விலைச் சுழற்சியொன்று ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

4.2 விலைகள்

பொது விலை மட்டத்தில் அசைவுகள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்[1] ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்டவாறான பொது விலை மட்டம் 2022 காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்த போக்கில் சென்று, 2022 மார்சு மற்றும் செத்தெம்பருக்கிடையில் சடுதியான விரைவடைதலைக் காண்பித்த போதிலும் இறுக்கமான நாணயக் கொள்கை அளவீடுகளால் மொத்தக் கேள்வி அழுத்தங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடனும் நிரம்பல் நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விளைவுகளுடனும் இணைந்து ஆண்டிறுதியில் மிதமடைந்தது. உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் பொருட்களின் விலைகளின் அசைவுகள் 2022 ஆண்டுகாலப்பகுதியில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமைகளுக்கு அதாவது, உள்நாட்டு வேளாண்மைத் துறை கணிசமாக நலிவடைதல், ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானம், உள்நாட்டுச் சந்தையில் போதியளவில் வெளிநாட்டு நாணயம் கிடைக்கப்பெறாமை, உலக சந்தையில் உயர்வடைந்த பண்ட விலைகள், எரிபொருள் பற்றாக்குறை அத்துடன் உயர்வான எரிபொருள் செலவுகள், உயர்வான கப்பற்சரக்கு கட்டணங்கள் என்பவற்றுக்கு உணர்வுமிக்கதாகவிருந்தன. இதேவேளை சில பொருட்களுக்காக சந்தை அடிப்படையிலான விலையிடல் சூத்திரங்களைப் பின்பற்றுதல், நிருவகிக்கப்படும் பண்டங்களுக்கான மேல்நோக்கிய விலைத் திருத்தங்கள் மற்றும் பல்வேறு வரிவிதிப்புக்களிலும் அதிகரிப்பு என்பனவும் பொது விலைமட்டத்தின் அதிகரிப்புகளுக்கு பங்களித்தன. எனினும், வளமாக்கியுடன் தொடர்புடைய பிரச்சனைகளின் மூலம் தீவிரமடைந்த உணவு விலைகள் மீதான மேல்நோக்கிய அழுத்தம் சிறந்த நிரம்பல் நிலைமைகள் காணப்பட்டதன் காரணமாக மிதமடைந்த அதேவேளை வங்கிகளுக்கிடையேயான வெளிநாட்டு செலவாணி சந்தைக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டலினால் பங்களிக்கப்பட்டு செலாவணி வீதம் நிலை பெற்றமை 2022இன் பிந்தியபகுதியினை நோக்கி உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களின் விலைகள் தளர்வடைய பங்களித்தன.

உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள், 2022 சனவரி முதல் செத்தெம்பர் வரை சடுதியாக அதிகரித்து அதன் பின்னர் சிறிதளவு வீழ்ச்சியடைகின்ற போக்கினைப் பின்பற்றின. அதேவேளை, தளம்பலடையும் உணவு[2] மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள்[3] இரண்டின் விலைகளும் 2022 காலப்பகுதியில் உணவு வகையின் விலைகளில் அசைவுக்குப் பங்களித்தன. உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட உணவு வகைகளின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளுக்கு இரசாயன வளமாக்கி கிடைக்கப்பெறாமை மற்றும் இரசாயன வளமாக்கி கையிருப்புகளின் நிலவிய மிகவும் உயர்வான சந்தை விலைகள் மூலம் பிரதானமாக வழிவகுத்த 2021/2022 பெரும்போக அறுவடையில் வீழ்ச்சியின் காரணமாகத் தோன்றிய குறைவான வழங்கல் நிலைமைகள் பிரதான காரணமாக அமைந்தன. பின்னர் இரசாயன வளமாக்கிகளைப் பயன்படுத்தி வழமையான பயிர்ச்செய்கை நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் முயற்சித்தபோதிலும், சிறுபோக அறுவடையினை அதன் வழமையான விளைச்சல் மட்டத்திற்கு உயர்த்துவதற்கு இயலாதிருந்தது. அதேவேளை, அவ்வப்போதான அத்துடன் கணிசமான எரிபொருள் விலை உயர்வுகள் காரணமாக அதிகரித்த போக்குவரத்து செலவுகளும் மற்றும் பாதகமான வானிலை நிலைமைகளுடன் தொடர்புடைய வழங்கல்பக்க பிரச்சனைகள் என்பனவும் உள்நாட்டு உணவு விலைகள் மீது கணிசமான மேல்நோக்கிய அழுத்தத்தினை தீவிரப்படுத்தின. உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் இரண்டினதும் விலைகள் 2022 யூலை வரை கணிசமாக அதிகரித்து, உள்நாட்டு அரிசி வகைகள் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விதிப்பதற்கு அரசாங்கத்தை அவசியப்படுத்தியது. அதற்கமைய, 2022 மே 02 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உள்நாட்டு சம்பா மற்றும் நாட்டு அரிசி வகை மீது முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.230 மற்றும் கிலோகிராமொன்றிற்கு


1 உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்களாகிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மாதாந்த அடிப்படையில் தொகுக்கிறது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டுத்துறையினர் மத்தியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளை எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளைக் குறித்துக்காட்டுகின்றது. கொநுவிசு (2013=100) மற்றும் தேநுவிசு (2013=100) என்பவற்றைத் தொகுத்தல் நிறுத்தப்பட்டு 2023 பெப்புருவரி மற்றும் 2023 சனவரி தொடக்கம் முறையே தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கொநுவிசு (2021=100) மற்றும் தேநுவிசு (2021=100) மூலம் பதிலீடுசெய்யப்பட்டது.

2 தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

3 தளம்பலடையும் உணவுப்பொருட்கள் தவிர்ந்த உணவுப் பொருட்கள்

வரைபடம் 4.1
விலைகள் மற்றும் கூலிகளின் அசைவுகள் - 2022

2022 இல் விலைகள் முன்னொருபோதுமில்லாத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் உண்மைக் கூலிகள் கடுமையாக தேய்வடைந்தன...



(அ) கொ.நு.வி.சு. (2013=100) இன் பொருட்களின் 2021 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2022இல் விலைகளின் சதவீத மாற்றம்

(ஆ) நிறையிடல்கள் கொ.நு.வி.சு. (2013=100) மற்றும் கே.நு.வி.சு. (2013=100) தொடர்களை அடிப்படையாகக் கொண்டது.

(இ) தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கு என்பவற்றை உள்ளடக்குகின்றது.


(ஈ) ஏனைய உணவானது தளம்பலடையும் உணவுப்பொருட்கள் தவிர்ந்த உணவுப் பொருட்கள் இனை உள்ளடக்குகிறது.

(உ) குறிப்பிடப்பட்டுள்ள பெயரளவு மற்றும் உண்மையான கூலிகளின் மாற்றம் என்பது 2022 மற்றும் 2021 இன் சராசரிக்கு இடையிலான சதவீத மாற்றத்தைக் குறிக்கிறது.

(ஊ) கூலி நிர்ணய சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற முறைசார் தனியார்துறை ஊழியர்களின் கூலிகள்.


ரூ.220 மற்றும் 2022 யூன் 10 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உள்நாட்டு சிவப்பு பச்சை அரிசி மற்றும் வெள்ளை பச்சை அரிசி மீது கிலோகிராமொன்றிற்கு ரூ.210 உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன. அதன் பின்னர், உள்நாட்டு அரிசி வகைகளின் விலைகளில் வீழ்ச்சிப்போக்கு அவதானிக்கப்பட்ட அதேவேளை, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வெளிநாட்டு அன்பளிப்புக்களாக அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற அரிசி தொகையின்

வரைபடம் 4.2
வாராந்த சில்லறை விலைகள் - அரிசி



மூலம் : இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 4.3
வாராந்த சில்லறை விலைகள் - மரக்கறிகள்



(அ) போஞ்சி, கரட், கோவா, பீட்ரூட், லீக்ஸ், தக்காளி மற்றும் முள்ளங்கி என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்
(ஆ) கத்தரி, பூசணி, பயற்றங்காய், வெண்டி, மற்றும் புடோல் என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்


மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.4
வாராந்த சில்லறை விலைகள் - தேங்காய் (நடுத்தர அளவு)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.5
வாராந்த சில்லறை விலைகள் - மீன் (அ)




(அ) கெலவல்லா, தலபத், பாரை, பலயா, மல்லட், சியர், சுறா, சாளை, உருளை, நெத்திலி, கும்பலவா மற்றும் லின்னா என்பவற்றின் வாராந்த சராசரி விலைகள்


மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலவச விநியோகத்தின் பகுதியளவான காரணத்தினால் கேள்வி குறைவடைந்தமையினால் அதேகாலப்பகுதியில் இறக்குமதிசெய்யப்பட்ட அரிசி வகைகளின் விலைகளும் இதனையொத்த போக்கினைப் பின்பற்றியிருந்தன. 2022இன் முன்னைய மாதங்களில் காய்கறி விலைகள் வீழ்ச்சியடைந்த போக்கினைக் காண்பித்த போதிலும், எரிபொருள் பற்றாக்குறைகள், உயர்வான போக்குவரத்துச் செலவுகள், பாதகமான வானிலை நிலைமைகள் அத்துடன் வளமாக்கி மற்றும் விவசாய இராசாயனங்கள் கிடைக்கப்பெறும்தன்மை மட்டுப்படுத்தப்பட்டமை என்பன காரணமாக ஏப்பிறல் மற்றும் யூன் மாதங்களுக்கிடையில் விரைவடைந்தன. இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் காய்கறி விலைகள் உயர்வடைந்து காணப்பட்ட போதிலும், 2022 யூலை மற்றும் செத்தெம்பருக்கிடையில் சிறிதளவு வீழ்ச்சிப் போக்கினை அது காண்பித்தது. அதேவேளை, உயர்வான உற்பத்திச் செலவு, கோழித் தீன், கனிமப்பொருட்கள் மற்றும் மருந்துத் துணைப் பொருட்கள் பற்றாக்குறை காரணமாக கோழி இறைச்சியின் விலை, 2022 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தது. மேலும், ஏப்பிறல் வரை நிலையாகக் காணப்பட்ட உடன் மீன் விலைகள், சாதகமற்ற வானிலை நிலைமைகளுக்கு மத்தியில் எரிபொருட்களின் பற்றாக்குறை மற்றும் உயர்வடைந்த விலைகள் மூலம் தோற்றம்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைகளின் காரணமாக 2022 செத்தெம்பர் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதன்பின்னர், கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளித்து மண்ணெண்ணெய் வழங்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சியினால் பகுதியளவில் துணையளிக்கப்பட்டு மீன் விலைகள் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் குறைவடைந்தன. 2022 காலப்பகுதியில் அதிகரித்த உற்பத்திச் செலவு காரணமாக முட்டை விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதேவேளை, முட்டை விலைகள் நியாயமற்று உயர்வடைவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு, 2022 ஓகத்து 19 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் வெள்ளை முட்டைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.43 கொண்ட உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டன. இருந்தும், பண்டிகைக்கால கேள்வி மூலம் பகுதியளவில் தோற்றுவிக்கப்பட்டு, முட்டையொன்றுக்கான விலை 2022இன் இறுதிக்காலாண்டில் தொடர்ச்சியாக அதிகரித்து, ரூ.50 இனை அண்மித்துக் காணப்பட்டது.


வரைபடம் 4.6
வாராந்த சில்லறை விலைகள் - உருளைக்கிழங்குகள்




வரைபடம் 4.7
வாராந்த சில்லறை விலைகள் - இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம்



வரைபடம் 4.8
வாராந்த சில்லறை விலைகள் - சீனி மற்றும் கோதுமைமா



வரைபடம் 4.9
வாராந்த சில்லறை விலைகள் - பருப்பு



வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை, உலகளாவிய பண்ட விலைகளின் அதிகரிப்பு, உயர்வான கப்பற்சரக்குக் கட்டணங்கள் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினைக் கருத்திற்கொண்டு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பன மூலம் இறக்குமதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, 2022 மாச்சில் செலாவணி வீதம் மிதக்கவிடப்பட்டமையுடன் உள்நாட்டுச் சந்தையில் இறக்குமதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கான விலைகள் மிதமிஞ்சி அதிகரிக்கப்பட்டதைக் கருத்திற்கொள்வது குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை, உலக சந்தையின் சில பண்டங்களின் விலைகள் ஆண்டுகாலப்பகுதியில் சீனி, பருப்பு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு போன்று அத்தியாவசிய இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களின் விலைகளின் மட்டங்கள் உயர்வடைவதற்குத் தாக்கம்செலுத்தின. 2022 யூன் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மீது விதிக்கப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.20 கொண்ட விசேட பண்ட அறவீட்டுடன் உள்நாட்டு பெரிய வெங்காய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 2022 செத்தெம்பர் 23 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பெரிய வெங்காயத்தின் மீது விதிக்கப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.50 கொண்ட விசேட பண்ட அறவீடு உள்நாட்டு பெரிய வெங்காய பருவகாலம் முடிவுற்றதன் பின்னர் 2022 திசெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் கிலோகிராமொன்றிற்கு ரூ.10 ஆக திருத்தம் செய்யப்பட்டது. மேலும், 2022 காலப்பகுதியில் கோதுமை மா, பாண் மற்றும் பால்மா என்பவற்றின் விலைகள் அவ்வப்போதான மேல்நோக்கிய விலைத்திருத்தங்களுக்கு வழிவகுத்து சந்தை சக்திகள் மூலம் நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. கோதுமை மாவின் விலைக்கு மேல்நோக்கிய திருத்தங்கள் மேற்கொண்டமை 450 கிராம் பாண் ஒன்றின் ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 80 இலிருந்து விலையை 2022 திசெம்பர் அளவில் ரூ.140 - ரூ.200 வீச்சில் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. அதேவேளை, கோதுமை மாவின் விலையில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புகளுக்கு மேலதிகமாக, திரவப்பெற்றோலிய எரிவாயு மற்றும் மின்சாரம் என்பவற்றின் விலை அதிகரிப்புக்கள் காரணமாக ஏனைய வெதுப்பக உற்பத்திகளும் 2022இல் பல குறிப்பிடத்தக்க விலைத் திருத்தங்களுக்கு உட்பட்டன. மேலும், உலகளாவிய சந்தையில் விலை அதிகரிப்புக்கள் மற்றும் உயர்வான கப்பறசரக்குக் கட்டணங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு,

4

அட்டவணை 4.1

தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு 2022இல் மேற்கொள்ளப்பட்ட நிருவகிக்கப்பட்ட விலைத்திருத்தங்கள்

விடயம்	அலகு	திருத்தப்பட்ட விலை (ரூபா)	நடைமுறைப்படுத்திய திகதி
பால்மா			
இறக்குமதி செய்யப்பட்டது			
அங்கர்	400 கிராம்	790.00	19.03.2022
	400 கிராம்	1,020.00	05.04.2022
	400 கிராம்	1,160.00	16.06.2022
	400 கிராம்	1,240.00	05.10.2022
உள்நாட்டு	400 கிராம்	495.00	10.03.2022
ஹய்லன்ட்	400 கிராம்	625.00	12.04.2022
	400 கிராம்	850.00	23.06.2022
	400 கிராம்	950.00	05.10.2022
திரவ பெற்றோலிய வாயு			
லிற்றோ காஸ் லங்கா லிமிற்றட்	12.5கி.கிராம்	4,860.00	27.04.2022
	12.5கி.கிராம்	4,910.00	11.07.2022
	12.5கி.கிராம்	4,664.00	09.08.2022
	12.5கி.கிராம்	4,551.00	06.09.2022
	12.5கி.கிராம்	4,280.00	06.10.2022
	12.5கி.கிராம்	4,360.00	06.11.2022
	12.5கி.கிராம்	4,610.00	06.12.2022
லாவ்ஸ் காஸ் பி.எல்சி	12.5கி.கிராம்	4,199.00	20.03.2022
	12.5கி.கிராம்	6,850.00	05.06.2022
	12.5கி.கிராம்	5,800.00	18.08.2022
	12.5கி.கிராம்	5,300.00	11.10.2022
எரிபொருள்			
பெற்றோல் (92 ஒக்டேன்)			
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	184.00	07.02.2022
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	204.00	26.02.2022
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	254.00	11.03.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1 லீற்றர்	254.00	12.03.2022
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	303.00	26.03.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	338.00	18.04.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	420.00	24.05.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	470.00	26.06.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	450.00	17.07.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	410.00	02.10.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	370.00	17.10.2022
தன்னியக்க டீசல்			
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	124.00	07.02.2022
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	139.00	26.02.2022
லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	214.00	11.03.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1 லீற்றர்	176.00	12.03.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	289.00	18.04.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	400.00	24.05.2022

(தொடர்ச்சி)

அட்டவணை 4.1 (தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு 2022இல் மேற்கொள்ளப்பட்ட நிருவகிக்கப்பட்ட விலைத்திருத்தங்கள்

விடயம்	அலகு	திருத்தப்பட்ட விலை (ரூபா)	நடைமுறைப்படுத்திய திகதி
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	460.00	26.06.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	440.00	17.07.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	430.00	01.08.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	415.00	17.10.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	430.00	13.11.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன்	1 லீற்றர்	420.00	06.12.2022
மண்ணெண்ணெய்			
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1 லீற்றர்	340.00	22.08.2022
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்	1 லீற்றர்	365.00	13.11.2022
ஆகக்குறைந்த பேருந்துக் கட்டணம்		17.00	05.01.2022
		20.00	15.03.2022
		27.00	20.04.2022
		32.00	25.05.2022
		40.00	01.07.2022
		38.00	20.07.2022
		34.00	05.08.2022
ஆகக்குறைந்த புகையிரதக் கட்டணம்		20.00	25.07.2022
மின்சாரம் நிலையான கட்டணம்			
< 60 அலகுகள்	0-30	120.00	10.08.2022
	31-60	240.00	10.08.2022
> 60 அலகுகள்	0-60	-	10.08.2022
	61-90	360.00	10.08.2022
	91-120	960.00	10.08.2022
	121-180	960.00	10.08.2022
	180 இற்கு மேல்	1,500.00	10.08.2022
மின்சாரம் - அலகுக் கட்டணம்			
< 60 அலகுகள்	0-30	8.00	10.08.2022
	31-60	10.00	10.08.2022
> 60 அலகுகள்	0-60	16.00	10.08.2022
	61-90	16.00	10.08.2022
	91-120	50.00	10.08.2022
	121-180	50.00	10.08.2022
	180 இற்கு மேல்	75.00	10.08.2022
நீர் - வீட்டுக்குரிய			
அலகுக் கட்டணம்	0-5	20.00	01.09.2022
	6-10	27.00	01.09.2022
	11-15	34.00	01.09.2022
	16-20	68.00	01.09.2022
	21-25	99.00	01.09.2022
	26-30	150.00	01.09.2022
	31-40	179.00	01.09.2022
	41-50	204.00	01.09.2022
	51-75	221.00	01.09.2022
	75 இற்கு மேல்	238.00	01.09.2022

மூலங்கள்: பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
இலங்கை மின்சார சபை
தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

400 கிராம் இறக்குமதிசெய்யப்பட்ட பால் மாவின் விலை நான்கு சந்தர்ப்பங்களில் மேல்நோக்கிய திருத்தம் செய்யப்பட்டது. மேலும், உயர்வான உற்பத்திச் செலவின் காரணமாக 400 கிராம் உள்நாட்டு பால்மா பொதியொன்றின் விலையும் பல தடவைகள் மேல்நோக்கி திருத்தம் செய்யப்பட்டது. பருப்பு, வெள்ளைச் சீனி, கருவாடு போன்றவற்றின் விலைகள் 2022இன் முதலரைப்பகுதியில் கணிசமாக அதிகரித்த போதிலும் உலகளாவிய சந்தையில் இப்பண்டங்களின் விலைகளில் குறைவடைதலின் பிரதான காரணமாக ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் அவற்றின் விலைகள் தளர்வடைந்தன. மேலும், இறக்குமதி கேள்வியை குறைப்பதற்க்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை அளவீடுகளும் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் அவதானிக்கப்பட்ட நிலைபெறுதலும் 2022இன் பிந்திய பகுதியை நோக்கி இறக்குமதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகள் மிதமடைவதற்குக் காரணமாயின. எனினும், 2022 ஒத்தோபர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டினை விதித்தமை ஆண்டின் இறுதியை நோக்கி உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகள் மீது சில மேல்நோக்கிய அழுத்தத்தினை உண்டுபண்ணியது.

2022இல் எதிர்கொண்ட உள்ளக மற்றும் வெளிவாரி பொருளாதார வீழ்ச்சியின் விளைவாகத் தோன்றிய செலாவணி வீதத்தின் கடுமையான தேய்மானம் மற்றும் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை போன்ற பாதகமான நிலைமைகளின் பிரதான காரணமாக 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காண்பித்தன. எரிபொருள் விலைகள் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), திரவப் பெற்றோலிய எரிவாயு (லிட்றோ) என்வனவற்றின் விலைகளும் பேருந்துக் கட்டணங்களும் அரசாங்கத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட போதிலும், ரூபாவின் பெறுமானத் தேய்வு உள்ளடங்கலாக நடைமுறைச் சந்தை விலைகளைப் பிரதிபலித்து இவற்றின் விலைகள் பல மேல்நோக்கிய திருத்தங்களுக்கு உட்பட்டன. அதற்கமைய, பெற்றோல் (92 ஒக்டேன்) மற்றும் ஊர்திகளுக்கான டீசல் ஆகிய இரண்டின் விலைகளும் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினாலும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியினாலும் பல விலைத்திருத்தங்களுக்கு உட்பட்டன. 2022 செத்தெம்பர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினாலும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியினாலும் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மீதான விலைத் திருத்தங்கள் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட புதிய விலையிடல் சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பதைக் குறிப்பிடுவது முக்கியமாகும். எரிபொருள் விலை உயர்வுகளுக்கு பதிலிறுத்தி, பாடசாலை வேன், வாடகை வண்டி மற்றும் முச்சக்கரவண்டி கட்டணங்களும் 2022இல் பல தடவைகள் மேல்நோக்கிய விலைத்திருத்தங்களுக்குட்பட்டன. எனினும், ஊர்திகளுக்கான டீசல் விலைகளின் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தங்களைத் தொடர்ந்து, பேருந்துக் கட்டணங்கள் 2022 யூலை 20 மற்றும் 2022 ஓகத்து 05ஆம் திகதிகளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முறையே 2.23 சதவீதத்தினாலும் 11.14 சதவீதத்தினாலும் இரு தடவைகள் கீழ்நோக்கி திருத்தம்செய்யப்பட்டன. மேலும், மண்ணெண்ணெய் விலையும் ஆண்டுகாலப்பகுதியில் கணிசமான விலை அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்து இரு மேல்நோக்கிய விலைத்திருத்தங்களுக்குட்பட்டிருந்தது. எரிபொருள் பற்றாக்குறைகளினதும் விலை அதிகரிப்புக்களினதும் தாக்கங்கள் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறைக்கும் ஊடுகடத்தப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு துறையிலும் காணக்கூடியதாகவுமிருந்தது. ஏறத்தாழ நான்கு ஆண்டுகளின் பின்னர் 2022 யூலை 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் புகையிரதக் கட்டணங்கள் மேல்நோக்கிய திருத்தத்திற்குட்பட்டமை அவதானத்தில் கொள்ளப்படவேண்டும். மேலும், ரூபா தேய்மானத்தினதும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளினதும் தாக்கத்தினை எடுத்துக்காட்டி, வாகன உதிரிப்பாகங்களின் விலைகளும் வாகன நன்நிலைப்படுத்தல் செலவுகளும் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தன. 12.5 கிலோகிராம் நிறையுடைய திரவப்பெற்றோலிய எரிவாயு சிலின்டர் ஒன்றின் விலை பல தடவைகள் திருத்தம்செய்யப்பட்டு 2022இல் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களில் ஒட்டுமொத்த அதிகரிப்பினைத் தூண்டியது. ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக மாற்றமின்றிக் காணப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் அதன் பிறப்பாக்கச் செலவு மற்றும் விநியோகச் செலவு என்பவற்றை எதிரீடுசெய்யும் பொருட்டு, 2022 ஓகத்து 10 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சராசரியாக 75 சதவீதத்தினால் கணிசமாக அதிகரிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஏறத்தாழ 10 ஆண்டுகளாக திருத்தம் செய்யப்படாதிருந்த நீர்க் கட்டணங்கள் 2022 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கிய திருத்தத்திற்குட்பட்டன. பிரதானமாக, ரூபா தேய்மானம், உலகளாவிய பண்ட விலை உயர்வுகள், உயர்வடைந்த போக்குவரத்துச் செலவுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் மூலம் அத்தகைய பொருட்கள் கிடைக்கப்பெறும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டமை என்பன காரணமாக 2022 காலப்பகுதியில் வீட்டுப் பேணுகை மற்றும் உபகரணங்கள் தொடர்ச்சியான விலை அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. மேலும், வாடகைக் குடியிருப்பாளர்களின் குறைவடைகின்ற கொள்வனவு சக்தியின் பகுதியளவிலான காரணமாக வீட்டு வாடகை, 2022 ஏப்பிறலில் சிறிய அதிகரிப்பொன்றினை மாத்திரம் பதிவுசெய்தது. தனியார் மருத்துவச் சேவைக் கட்டணங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளுக்கான கொடுப்பனவுகள் போன்ற தொடர்புடைய நுகர்வோர் கூடையில் உள்ளடக்கப்பட்ட நலன் தொடர்பான செலவுகள் ஆண்டு காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தன. மேலும், 11.25 சதவீதமாகவிருந்த தொலைத்தொடர்பு அறவீடு, 2022 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும்


வகையில் 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. மேலும், 2022 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கும் பின்னர் 2022 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் 15 சதவீதத்திற்கும் திருத்தம் செய்யப்பட்ட அதேவேளை சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டின் அறிமுகமும் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளை மேலும் அதிகரிக்கச்செய்தது. எரிபொருள், திரவப்பெற்றோலிய எரிவாயு போன்ற பல இறக்குமதிசெய்யப்பட்ட முக்கிய பொருட்களின் விலைகளையும் மின்சாரம் மற்றும் நீர், பேருந்து மற்றும் புகையிரதக் கட்டணங்கள், தொலைத்தொடர்பு மற்றும் அஞ்சல் கட்டணங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளின் விலைகளையும் பொதுமக்களுக்கான நிவாரண வழிமுறையொன்றாக முக்கிய மேல்நோக்கிய திருத்தங்களின்றி நிலையான மட்டங்களில் பேணுகின்ற அரசாங்கத்தின் நடைமுறை தற்போதைய பொருளாதார நிலைமைகளின் கீழ் அநேகமாக சாத்தியமற்றதாகத் தோற்றம்பெற்றது. நிருவகிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அவற்றின் குறைவான மட்டங்களில் செயற்கையாகக் கட்டுப்படுத்தாது உலகளாவிய விலைத் தளம்பல்களுக்கும் செலாவணி வீதத்தின் அசைவுகளுக்கும் ஏற்ப அவற்றுடன் தொடர்புடைய விலைத் திருத்தங்கள் ஆண்டாண்டாக படிப்படியாக திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாயின், 2022 காலப்பகுதியில் நிகழ்ந்த சடுதியான மேல்நோக்கிய திருத்தங்களின் தாக்கத்தினை வாடிக்கையாளர்களுக்கான குறைவான சுமையினைக் கடத்துவதன் மூலம் தணித்திருக்கக்கூடியதாகவிருந்திருக்கும். விலை மானியங்களை வழங்குகின்ற போது, நாட்டின் நடுத்தர மற்றும் நீண்டகால பொருளாதார மீட்சியினைத் தடைப்படுத்தாதவிதத்தில் பொருளாதாரத்தின் அனைத்து வகுப்பினர்களினதும் வலிமைகளையும் பலவீனங்களையும் அரசாங்கம் முறையாகப் பரிசீலனையில்கொள்ள வேண்டும் என்பதும் முக்கியமாகும்.

நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100), 2022 சனவரியில் 158.4 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2022 திசெம்பரில் 243.2 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்தது. 2022 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவில் அவதானிக்கப்பட்ட விரைவடைந்த வேகத்திற்கு 2022 யூன் தவிர, உணவல்லா வகையிலிருந்து தோன்றிய உயர்வான பங்களிப்புடன் உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலும் அவதானிக்கப்பட்ட மாதாந்த விலைகள் காரணமாக அமைந்தன. ஒத்தோபர் மற்றும் நவெம்பரில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில்

வரைபடம் 4.10
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு – 2022



(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

மாதாந்த வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டமைக்கு உணவு வகை முக்கியமாகப் பங்களித்திருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தொடர்கள் அறிமுகப்பட்டதிலிருந்து உணவு மற்றும் உணவல்லா வகைகளில் முறையே 18.9 மற்றும் 9.4 சதவீதங்களைக் கொண்ட அதிகூடிய மாதாந்த அதிகரிப்புக்களுடன் ஒன்றிணைந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அதிகூடிய மாதாந்த மாற்றம் 2022 யூனில் 12.8 சதவீதமாகப் பதிவாகியது. அந்த வகையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2013=100) அளவிடப்பட்டவாறான ஆண்டுக்காண்டு முதன்மை பணவீக்கம் 2022 ஜனவரியில் 14.2 சதவீதத்தில் இருந்து 2022 செத்தெம்பரில் வரலாற்றில் அதியுச்ச 69.8 சதவீத்தினை பதிவு செய்து அதிகரித்தது. இருப்பினும், அது 2022 ஒத்தோபரிலிருந்து எதிர்பார்த்ததை போல குறைவடையும் பணவீக்கப் பாதையை நோக்கிச் சென்று 2022 திசம்பர் இல் 57.2 சதவீத்தினை எட்டியது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

2022 சனவரியில் 166.0 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100), 2022 திசெம்பரில் 256.3 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கிசைவாக உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் விலைகளில் அசைவுகள் 2022 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட மாதாந்த அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், 2022 ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட மாதாந்த அதிகரிப்பானது உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளினால் பிரத்தியேகமாகத் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, உணவு வகையிலுள்ள பொருட்களின்

சிறப்புக்குறிப்பு 6
நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை 2021ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்

இலங்கையில் அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களைத் தொகுக்கும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை 2013ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டாக இற்றைப்படுத்தியுள்ளது. சர்வதேச தரநியமங்களுக்கும் சிறந்த நடத்தைகளுக்கும் அமைவாக கிரமமான இடைவெளிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அடிப்படை ஆண்டை மாற்றுவது, சமகால நுகர்வோர் செலவிடும் விதங்களை மிகவும் துல்லியமாகப் பிரதிபலிப்பதற்கு அத்தியாவசியமானதாகும். இதன் விளைவாக, அடிப்படை ஆண்டை மாற்றுவதானது நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் விசேடமாக பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையில் உள்ள பொருட்களினதும் பணிகளினதும் முக்கியத்துவத்தினை அல்லது பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மையினைக் குறித்துக்காட்டுகின்ற நிறை கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் தரமுயர்த்தப்படுவதற்கு வழிவகுக்கின்றது. மேலும், பிந்திய நுகர்வு விதத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் புதிய பொருட்களைச் சேர்த்தல் அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற பொருட்களை அகற்றுதல் என்பவற்றுடன் கூடையின் உள்ளமைப்பும் திருத்தம்செய்யப்படுகின்றது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்களை (2021=100) என்ற, அதாவது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் 2023 பெப்புருவரியிலிருந்து வெளியிட்டது. 1952இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைப் பொறுத்தவரையில், இது சுட்டெண்ணின் நான்காவது அடிப்படை ஆண்டு மாற்றமாகக் காணப்பட்டு, 1952, 2002, 2006/07, 2013 மற்றும் 2021 தொடர்பு ஆண்டுகளுடன் ஐந்து கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் தொடர்களை உருவாக்கியுள்ள அதேவேளை தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அடிப்படை ஆண்டான 2013 உடன் 2021ஆம் ஆண்டானது அதன் முதலாவது தொடரின் பின்னர் இடம்பெறுகின்ற இரண்டாவது தொடராகும். அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் சுட்டெண் கணிப்பு முறையியல் இற்றைப்படுத்தப்பட்டது. இதில் தற்போது நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் (2021=100) இரு கட்டங்களில் கணிக்கப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில், அடிப்படையான சுட்டெண்கள் தொகுக்கப்படுகின்ற அதேவேளை உயர்மட்டச் சுட்டெண்கள் இரண்டாம் கட்டத்தில் தொகுக்கப்படுகின்றன. ஆரம்பச் சுட்டெண்கள் கேத்திரகணிதவியல் முறைகளைப் பயன்படுத்தி அல்லது ஜேவோன்ஸ் சூத்திரத்தைப் (Jevons Formula) பயன்படுத்தி தொகுக்கப்படுகின்ற அதேவேளை உயர்மட்டச் சுட்டெண்கள் யங் சூத்திரத்தைப் (Young Formula) பயன்படுத்தி தொகுக்கப்படுகின்றன. இரு நுகர்வோர் விலைச்சுட்டெண்களினதும் முக்கியத்துவக் கட்டமைப்பு, வீட்டலகொன்றுக்கு ஏற்படுகின்ற அனைத்து வகையான நுகர்வு செலவினத்தையும் உள்ளடக்கிய 2019இல் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட வீட்டலகு வருமானம் மற்றும் செலவின அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது. அதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021=100) இரண்டினதும் நிறைத் தொடர்பு ஆண்டு 2019 ஆகும். மேலும், 2018 சனவரி தொடக்கம் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட விலைகள் சுட்டெண்ணைக் கணிக்கும்போது விலை தொடர்பாக பயன்படுத்தப்பட்டன. சுட்டெண் 100 இற்கு சமமாக்கப்பட்ட காலப்பகுதியான சுட்டெண் தொடர்பு காலப்பகுதி 2021 ஆகும். அலுவல்சார் விலைச்சுட்டெண்களின் முக்கிய அம்சங்கள் அட்டவணை சி.கு. 6.1 இல் தரப்பட்டுள்ளன.

உணவு வகையின் நிறை குறைவடைந்த அதேவேளை, உணவல்லா வகையின் நிறை அதிகரித்தமை அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் இரு நுகர்வோர் விலைச்சுட்டெண்களிலும் நிறைக் கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முக்கிய மாற்றமாகும். அதற்கமைய, அடிப்படை ஆண்டு மாற்றச்செயன்முறை மூலம்


அட்டவணை சி.கு. 6.1
அலுவல்சார் நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் முக்கிய அம்சங்கள்

விடயம்	கொ.நு.வி.சு (2013=100)	கொ.நு.வி.சு (2021=100)	தே.வ.வி.சு. (2013=100)	தே.வ.வி.சு. (2021=100)
சுட்டெண் குறியீட்டு ஆண்டு	2013	2021	2013	2021
நிறை குறியீட்டு ஆண்டு	யூலை 2012 - யூன் 2013	சனவரி 2019 - திசெம்பர் 2019	யூலை 2012 - யூன் 2013	சனவரி 2019 - திசெம்பர் 2019
புவியியல் உள்ளடக்கம்	கொழும்பு மாவட்டத்தின் அனைத்து நகர்புறமும்	கொழும்பு மாவட்டத்தின் அனைத்து நகர்புறமும்	இலங்கையின் அனைத்து மாகாணங்களும்	இலங்கையின் அனைத்து மாகாணங்களும்
வீட்டலகு ஒன்றின் அளவு	3.9	3.8	3.9	3.7
சராசரி மாதாந்த நுகர்வு செலவு (ரூ.)	ரூ. 60,364.73	ரூ. 91,880.34	ரூ. 32,142.69	ரூ. 50,728.60
சுட்டெண் புள்ளி ஒன்றின் பெறுமதி	603.65	918.8	321.43	507.29
பிரதான வகைகள்	12	12	12	12
உபவகைகள்	105	105	105	105
பொருட்களின் எண்ணிக்கை	392	426	407	485
மொத்த நிறையின் சதவீதம்				
உணவு	28.24	26.23	44.04	39.22
உணவல்லா	71.76	73.77	55.96	60.78
விலை சேகரிப்பு நிலையங்கள்	14	10	ஒவ்வொரு மாவட்ட நகரத்திலும் 3 வீதம்	ஒவ்வொரு மாவட்ட நகரத்திலும் 3 வீதம்

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்


4

வரைபடம சி.கு. 6.1
கொ.நு.வி.சு (2013=100) இலிருந்து கொ.நு.வி.சு (2021=100) இற்கு நிறையிடல் கட்டமைப்பில் மாற்றம்




மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.2
தே.நு.வீ.சு (2013=100) இலிருந்து தே.நு.வி.சு (2021=100) இற்கு நிறையிடல் கட்டமைப்பில் மாற்றம்




மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.3
கொ.நு.வி.சு (2013=100) மற்றும் கொ.நு.வி.சு (2021=100) என்பவற்றின் மாதத்துக்கு மாத சதவீத மாற்றல்களின் அசைவுகள்



மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 6.4
தே.நு.வி.சு (2013=100) மற்றும் தே.நு.வி.சு (2021=100) என்பவற்றின் மாதத்துக்கு மாத சதவீத மாற்றல்களின் அசைவுகள்



மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உணவு வகையின் நிறை 28.24 சதவீதத்திலிருந்து 26.23 சதவீதத்திற்கு குறைவடைந்த அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உணவு வகையின் நிறை 44.04 சதவீதத்திலிருந்து 39.22 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அடிப்படை ஆண்டு மாற்றம் செய்கையில் பாண் (விசேட), சிறகவரை மற்றும் தர்பூசணி போன்ற பொருட்கள் உணவு வகைக்கு சேர்க்கப்பட்ட அதேவேளை நெத்தலி, நண்டு, நல்லெண்ணெய் போன்ற பொருட்கள் அகற்றப்பட்டன. அதேவேளை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் உணவல்லா வகையின் நிறை முறையே 71.76 சதவீதத்திலிருந்து 73.77 சதவீதத்திற்கும் 55.96 சதவீதத்திலிருந்து 60.78 சதவீதத்திற்கும் அதிகரித்தது. அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் மேசைகள், ஆடைகளுக்கான தையல் கட்டணங்கள் போன்றன உணவல்லா வகைக்கு சேர்க்கப்பட்ட அதேவேளை சுருட்டு, உருக்கு அலுமாரி, உலர்ந்த பெட்டரிகள் போன்ற பொருட்கள் அகற்றப்பட்டன. வீடமைப்பு, நீர், மின்சாரம், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் உணவு மற்றும் மதுசாரமல்லா குடிபானங்கள் அத்துடன் போக்குவரத்து துணை வகைகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய விலைச்சுட்டெண்கள் இரண்டின் அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் அவற்றின் செலவினப் பெறுமதியின் பொருட்களில் முன்னுரிமை வகைகளாக தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இரு விலைச்சுட்டெண்களின் நியதிகளிலும் சுட்டெண் ஒன்றையொன்று மேவும் காலம், 2022 சனவரிக்கும் 2022 திசெம்பருக்கும் இடைப்பட்டதாகும். அதற்கமைய, அவற்றின் தற்போதைய மற்றும் முன்னைய அடிப்படை காலப்பகுதியுடனான நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் இரண்டினதும் மாதத்திற்கு மாத சதவீத மாற்றங்களின் ஒப்பீடு சி.கு. 6.3 மற்றும் சி.கு. 6.4 ஆம் வரைபடங்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. இவ்வரைபடங்களின் பிரகாரம், அடிப்படை ஆண்டுகளுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு அடிப்படைகளின் கீழும் நிறைக் கட்டமைப்பு மற்றும் பொருட்கள் அத்துடன் பணிகள் கூடைகளின் உள்ளமைப்பு என்பவற்றின் சிறிதளவான வேறுபாடுகளின் காரணமாக பெருமளவில்

மிகக்குறைவானதாகும். எவ்வாறிருப்பினும், பல்வேறு பொருளாதார முகவராண்மைகளினாலும் பொருளாதார தீர்மானமெடுத்தல் செயன்முறை நியதிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் முக்கிய பங்காற்றுவதால் நிலவுகின்ற நுகர்வு விதங்கள் துல்லியமாக பிரதிபலிக்கின்றனு என்பதை உறுதிசெய்வதற்கு குறித்த கால இடைவெளிகளில் நுகர்வோர் விலைச்சுட்டெண்களுக்கு அடிப்படை ஆண்டு மாற்றச்செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

உசாத்துணை

1. *Department of Census and Statistics. A Briefing on the Rebased Colombo Consumer Price Index (Base 2021=100) for Sri Lanka. Available at: http://www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/MonthlyCCPI/Techinical_Note*


2. *Department of Census and Statistics. A Briefing on the Rebased National Consumer Price Index (Base 2021=100) for Sri Lanka. Available at: http://www.statistics.gov.lk/InflationAndPrices/StaticalInformation/NCPI/NCPITecnical Note*

விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் காரணமாக அதனைத்தொடர்ந்து வந்த மாதத்தில் மாதாந்த மாற்றத்தில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உணவல்லா வகையில் அவதானிக்கப்பட்ட மாதாந்த விலை அதிகரிப்பானது உணவு வகையில் மாதாந்த விலை வீழ்ச்சியினால் எதிர்மறையாக்கப்பட்டதனால் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் நவெம்பரிலிருந்து 2022 திசெம்பர் வரை மாற்றமின்றிக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடங்கப்பட்டதிலிருந்து உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலும் அதிகூடிய மாதாந்த அதிகரிப்புக்கள் முறையே 2022 யூனில் 14.2 சதவீதத்தினையும் மேயில் 8.6 சதவீதத்தினையும் பதிவுசெய்தமை கவனத்திற்கொள்ளப்படவேண்டும். அந்த வகையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2013=100) அளவிடப்ப பட்டவாறான ஆண்டுக்காண்டு முதன்மை பணவீக்கம் 2022 ஜனவரியில் 16.8 சதவீதத்தில் இருந்து 2022 செத்தெம்பரின் 73.7 சதவீத்திற்கு தொடர்ச்சியாக அதிகரித்து அதன் பின்னர் 2022 திசம்பர் இல் 59.2 சதவீத்தினை அடைந்தது.

உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படுகின்ற உள்நாட்டு பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற சராசரி விலைகளினால் அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (2018 கா4=100), 2022 சனவரியில் 137.4

வரைபடம் 4.11
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த சதவீத மாற்றத்துக்கான பங்களிப்பு – 2022




(அ மின்சாரம், திரவ பெற்றோலிய வாயு, எரிபொருள், பஸ் கட்டணம் மற்றும் புகையிரத கட்டணம் என்பவற்றை உள்ளடக்கிய உணவல்லா வகையின் நிருவகிக்கப்பட்ட பொருட்கள்
(ஆ) உணவல்லா வகையில் நிருவகிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2022 திசெம்பரில் 251.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 2022 காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கின்ற போக்கொன்றினைக் காண்பித்தது. அதிகூடிய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த தயாரிப்பு துணைத் துறை மூலம் பிரதானமாகப் பங்களிக்கப்பட்டு, உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் பெப்புருவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் விரைவடைந்த வேகத்தில் சென்றது, இருந்தும் 2022இன் எஞ்சிய காலப்பகுதியில் நிலையாகக் காணப்பட்டது. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணில் வேளாண்மை துணைத் துறை 2022 சனவரியில் 164.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்து ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் மிகவும் வேகமாக அதிகரித்து, அதன்பின்னர் நிலையாகக் காணப்பட்டு 2022 திசெம்பரில் 238.6 சுட்டெண் புள்ளிகளை அடைந்த அதேவேளை, தயாரிப்பு துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் 2022 சனவரி மற்றும் திசெம்பரில் முறையே 135.3 மற்றும் 257.0 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்து 2022 செத்தெம்பர் மற்றும் நவெம்பரில் மாத்திரம் மாதாந்த வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தது. 2022 சனவரியில் 103.3 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த பயன்பாட்டு வசதி (மின்சாரம், எரி வாயு, நீராவி மற்றும் வளிச்சீராக்கி வழங்கல் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம்) துணைத் துறையிலுள்ள உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களில் மேல்நோக்கிய திருத்தங்கள் காரணமாக ஓகத்து மற்றும் செத்தெம்பரில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2022 திசெம்பரில் 174.2 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணினால் (உ.வி.சு., 2018

வரைபடம் 4.12
உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் அசைவு



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

கா4=100) அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் பணவீக்கம் 2022 ஓகத்து வரையில் அதிகரித்து அதன்பின்னர் குறைவடைந்து 2022 திசெம்பரில் 89.0 சதவீதத்தினை அடைந்தது.


4.3 கூலிகள்

முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார், மற்றும் அரசாங்கத் துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் உயர்வான விலைகளுக்கு குறைவாக கூலிகள் திருத்தப்பட்டமையினால் தேய்வொன்றினைக் காண்பித்த அதேவேளை, அனைத்துத் துறைகளிலுமுள்ள ஊழியர்களின் பெயரளவு கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன. முறைசாரா தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவு கூலிகள் அதிகரித்தமைக்கு வாழ்க்கைச் செலவு கணிசமாக உயர்வடைந்தமையின் காரணமாக உயர்வான கூலிகளுக்கான கேள்வி முக்கிய காரணமாக அமைந்த அதேவேளை அரசாங்கத் துறையின் அனைத்து ஊழியர்களுக்கும் ரூ.5,000 கொண்ட விசேட கொடுப்பனவினைச் செலுத்தியமை அரசாங்கத் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகளில் அதிகரிப்பின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

தனியார்த் துறை கூலிகள்

முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (2018=100) 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிகரித்த போக்கொன்றினைக் காட்டியது. அதற்கமைய, முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018 = 100), 2021இன் 9.2 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022இல் 24.5 சதவீதத்தினால் பெயரளவு நியதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. துணை நடவடிக்கைகளின் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நியதிகளில் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் பெயரளவு நியதிகளில் முறையே 27.6 சதவீதத்தினாலும், 22.4 சதவீதத்தினாலும், 26.4 சதவீதத்தினாலும் அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2022 நவெம்பருக்கானவை தவிர மாதாந்த அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தது. ஆண்டுகாலப்பகுதியில் வாழ்க்கைச் செலவில் சடுதியான அதிகரிப்பின் காரணமாக நாளாந்த கூலி உழைப்போர்கள் மூலம் கூலிக்கான கேள்விகள் இவ்வதிகரிப்புக்களுக்கு பிரதான காரணமாக அமைந்தது. நவெம்பரில் பதிவாகிய வீழ்ச்சிக்கு கைத்தொழில் (தயாரித்தல் மற்றும் நிருமாணம்), பணிகள் (மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்; மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பழுதுபார்த்தல்; தங்குமிட மற்றும் உணவுப் பணிச் செயற்பாடுகள்; அத்துடன் சிகை அலங்காரம் மற்றும் ஏனைய அழகுக்கலைகள்) ஆகிய இரண்டுடனும் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் பிரதான காரணமாகவிருந்தது. மேலும், 2022இல் தொழிலாளர் கேள்வி மற்றும் வழங்கல்பக்க பேச்சுவார்த்தைகள், பொருளாதார நடவடிக்கையின் குறிப்பிடத்தக்களவு சுருக்கமானது தனிப்பட்ட கொடுப்பனவு இயலளவினைக் கருத்திற்கொண்டு முடி வெட்டுதல் மற்றும் அழகுக்கலைகள் போன்ற சில செலவிடத்தக்க நடவடிக்கைகளைவிட சில தேவைகளை வாடிக்கையாளர் முன்னுரிமைப்படுத்தல் மற்றும் திரவப்பெற்றோலிய எரிவாயு, எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்ற பயன்பாட்டுச் சேவைகளின் பற்றாக்குறையான வழங்கல் காரணமாக குறைக்கப்பட்ட பணியாற்றும் மணித்தியாலங்கள் போன்ற ஆண்டுகாலப்பகுதியில் நிலவிய தடைகள் காரணமாக முறைசாராத் துறை நாளாந்தக் கூலிகள் வீழ்ச்சியடைவதில் முக்கிய பங்காற்றின. இதற்கு மேலதிகமாக, சீமெந்து, கோதுமை மா போன்ற மூலப் பொருட்கள் கிடைக்காமை காரணமாக கல் அறுத்தல், ஏனைய சீமெந்துப் பொருட்களை உருவாக்குதல், வெதுப்பகம் மற்றும் உணவகச் செயற்பாடுகள் போன்ற சில நடவடிக்கைகள், தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் வாழ்வாதாரத்தை பாதித்தது. ஒட்டுமொத்தமாக உயர்வான பணவீக்கச் சூழல் காரணமாக முறைசாரா தனியார் துறை ஊழியர்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இன் 15.7 சதவீதம் கொண்ட உண்மைக் கூலித் தேய்வினை அனுபவித்தனர்.

வரைபடம் 4.13
2021இல் முறைசாரா தனியார் துறை கூலி விலைச் சுட்டெண்ணின் அசைவு 2022 (பெயரளவு)



மூலம்: இலங்கை மத்திய வங்கி

கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர் = 100) அளவிடப்பட்டவாறான முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள[4] ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2022இல் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தது. பெயரளவு கூலி வீதச் சுட்டெண்ணானது 2021இன் ஆரம்பத்தில் நிலவிய குறைவான புள்ளிவிபர தளத்தாக்கத்தின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல்

4 கூலி நிர்ணய சபைகளினால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகளை அளவிடும் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகிறது.

9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த கூலி முறையே தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடல் மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திற்கான கூலி தொடர்பான கூலி நிர்ணய சபைகள் ஊடாக 2021 மார்ச 05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.1,000 ஆக அதிகரிக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மேலும், தனியார் துறையின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளமானது 2021 ஓகத்து 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2016ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச கூலிகள் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தத்தின் மூலம் ரூ.10,000 இலிருந்து ரூ.12,500 ஆகவும் குறைந்தபட்ச நாளாந்தக் கூலி ரூ.400 இலிருந்து ரூ.500 இற்கும் அதிகரிக்கப்பட்டது. அதேவேளை, பிரதானமாக 2022இல் நிலவிய உயர்வான பணவீக்க சூழல் காரணமாக முறைசார்ந்த தனியார் துறையின் உண்மை கூலி வீதச் சுட்டெண் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 22.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அரசாங்கத் துறைக் கூலிகள்

வாழ்க்கைச் செலவு உயர்வடைவதற்கான நிவாரணமொன்றாக நிதி அமைச்சினால் 2022இன் தொடக்கத்தில் அனைத்து அரசாங்கத் துறை ஊழியர்களுக்கும் ரூ.5,000 கொண்ட விசேட கொடுப்பனவினைச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் 2022 சனவரியில் அவர்களது சம்பளங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தத்தின் ஊடாக நீக்கப்பட்டன. அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் (2016=100) அளவிடப்பட்டவாறான, அரசாங்கத் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2022 சனவரியில் இரு ஆண்டுகளின் பின்னர் அதிகரித்து அதன்பின்னர் மாற்றமின்றிக் காணப்பட்டன. அதற்கமைய, அரச துறை கூலி வீதச் சுட்டெண் (2016=100) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 16.1 சதவீதத்தினால் பெயரளவு நியதிகளில் அதிகரித்தது. எனினும், பணவீக்கத்தின் அபிவிருத்திகள் காரணமாக அரசாங்கத் துறை ஊழியர்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 20.6 சதவீதம் கொண்ட உண்மைக் கூலி தேய்வினை அனுபவித்தனர்.

5

வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

5.1 பொதுநோக்கு

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்து போனமை, செலாவணி வீதங்களின் பாரிய தேய்வு, மற்றும் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறை போன்றவற்றிற்கு மத்தியில் கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுடன் 2022இல் இலங்கையில் வெளிநாட்டுத் துறை முன்னொருபோதுமில்லாத சவால்களை எதிர்நோக்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் தோற்றம்பெற்ற திரவத்தன்மையின் கடுமையான பற்றாக்குறை ஏனையவற்றிற்கிடையே, பெற்றோலியம், சமையல் எரிவாயு, மருந்துப்பொருட்கள், மற்றும் வளமாக்கி போன்ற அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளுக்கு தடைகளை ஏற்படுத்தி, அதன்மூலம் சமூகப் பதற்றங்கள் உயர்வடைந்து நிச்சயமற்ற அரசியல் நிலைமைகளுக்குக் காரணமாகியது. விடாப்படியான எதிர்மறைக் கசிவுத் தாக்கங்களைத் தடுப்பதற்கு நாணயக் கொள்கையின் கடுமையான இறுக்கமடைதல், 2022 ஏப்பிறல் நடுப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு செய்வதனை இடைக்காலமொன்றிற்கு இடைநிறுத்துதல், குறிப்பிட்ட இறக்குமதிகள் மற்றும் கொடுப்பனவு நியதிகளை தற்காலிகமாக இடைநிறுத்துதல், தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள், மற்றும் மூலதனப் பாய்ச்சலின் முகாமைத்துவ வழிமுறைகள் மீதான எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை விதித்தல் என்பனவற்றை உள்ளடக்கிய முக்கியமான கொள்கைத் தலையீடு தேவைப்படுத்தப்பட்டது. 2022 ஏப்பிறலில் இலங்கை பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. 2022 செத்தெம்பரில் பணியாளர் மட்ட உடன்படிக்கை அடையப்பட்டு, 2023 மாச்சில், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதியிடலைப் பெற்றுக்கொள்ளுவதன் ஒரு பகுதியாக பொதுப் படுகடன் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதை இலக்காகக்கொண்டு, பொதுப் படுகடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் வழிமுறைகளை முன்னெடுத்தது. வெளிநாட்டு நிதியிடல் உட்பாய்ச்சல்கள் மற்றும் உயர்ந்தளவிலான நியாயமற்ற கொடுகடன் தரமிடல்கள் குறைவடைந்தமைக்கு மத்தியிலும் தற்காலிக இடைநிறுத்தல்களினால் தொடர்ச்சியான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் பாதிக்கப்படாத அதேவேளையில், அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதிக்கு வசதியளிக்கும் பொருட்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை எடுப்பனவு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. கொடுகடன் தொடர்களின் மூலமும் பல்புடை அபிவிருத்திப் பங்காளர்களின் மூலமும் நட்பு நாடுகளிலிருந்து நிதியுதவியும் கிடைக்கத்தக்கதாகவிருந்ததுடன் அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்கும் உதவியது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் ஏற்பட்ட கடுமையான அழுத்தங்களை கருத்திற்கொண்டு, 2022 மாச்சு தொடக்கத்தில், செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கமொன்று நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்டது. எனினும், அதன் பின்னரான மிதக்கும் செலாவணி வீதம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் பாதகமான சந்தை மனோபாவங்கள் போன்றவற்றின் காரணமாக செலாவணி வீதத்தில் பாரிய தேய்வொன்றை தோற்றுவித்தது. மத்திய வங்கி 2022 மே நடுப்பகுதியிலிருந்து நடுவீதத்தினையும் மாறுபடும் அளவினையும் வெளியிட்டமையின் மூலம் உடன் செலாவணி வீதத்தின் மீது சந்தை வழிகாட்டலை வழங்கத் தொடங்கியமை ஒரு நாளுக்குள்ளேயான கணிசமான தளம்பல்களிலிருந்து செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்கு உதவியது.

வெளிநாட்டுத் துறையில் அழுத்தங்களை முகாமைத்துவம் செய்வதற்கு தேவைப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகக் கொள்கைகள், செலாவணி வீதத்தில் ஏற்பட்ட கடுமையான தேய்வு மற்றும் இறுக்கமான நாணய மற்றும் இறை நிலைமைகள் என்பனவற்றினால் கடுமையாக குறைவடைந்த இறக்குமதி செலவினத்துடன் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட பாரிய சுருக்கத்தினால் வழிவகுக்கப்பட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2022இல் குறிப்பிடத்தக்களவில் மிதமடைந்தது. அதேவேளை, ஏனையவற்றிற்கிடையே, ஆடைகள் உள்ளிட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டு வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பணிகள் கணக்கிலுள்ள வர்த்தகத்தின் மிகை ஓரளவிற்கு அதிகரித்தவேளையில், ஏனைய அனைத்துப் பணிகள் துணை துறை வகைகளுக்குமான உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இன் பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டவேளையில், முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில், சிறிதளவு மிதமடைந்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்பட்டது.

2022இல் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றிலேயே மிக உயர்ந்த பெறுமானத்தேய்வினைத் தொடர்ந்து, இலங்கை ரூபா 2023இன் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க உயர்வினைக் காட்டியதன் மூலம் பாரியளவிலான மிகைப்படுத்தப்பட்ட நிலைமைகள் ஓரளவிற்குச் சரிசெய்யப்பட்டன. இவ்வுயர்விற்கு, முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட ஏற்பாட்டை இறுதிப்படுத்துவதை நோக்கிய மேம்பட்ட சந்தை மனோபாவங்கள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகளில் மேம்பாடுகள், மற்றும் மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணியை கட்டாய விற்க வேண்டும் என்ற தேவைப்பாடுகளை தளர்த்தல் அதனைத்தொடர்ந்து நீக்குதல் போன்றவை ஆதரவளித்தன. எதிர்பார்க்கப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாடு மற்றும் தளர்த்தப்படுகின்ற சென்மதி நிலுவை அழுத்தங்கள் என்பவற்றுடன், பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டுத் துறை நடவடிக்கையானது எதிர்வரும்காலத்தில் இயல்புநிலையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதியை நிலையான வகையில் முன்னேற்றமடையச் செய்ய உதவுவதுடன் இதன்மூலம், எதிர்வரும்காலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதை வசதிப்படுத்தும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான உருவாக்கம் மற்றும் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு, அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான மேலதிக நிதியிடலைப் பெறுதல், அத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட

அட்டவணை 5.1
சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

விடயம்	ஐ.அ.டொ. மில்லியன்		ரூ. மில்லியன்	
	2021 (அ)	2022 (ஆ)	2021 (அ)	2022 (ஆ)
நடைமுறை கணக்கு (தேறிய)	-3,284	-1,453	-656,314	-316,154
வர்த்தக நிலுவை	-8,139	-5,185	-1,617,274	-1,502,420
ஏற்றுமதிகள்	12,499	13,106	2,486,943	4,234,913
இறக்குமதிகள்	20,637	18,291	4,104,218	5,737,333
பணிகள் (தேறிய)	1,586	2,110	316,424	644,934
பெறுகைகள்	2,475	3,062	493,320	952,999
கொடுப்பனவுகள்	889	953	176,896	308,066
முதலாந்தர வருமானம் (தேறிய)	-1,959	-1,874	-390,158	-618,071
பெறுகைகள்	116	249	22,965	84,209
கொடுப்பனவுகள்	2,075	2,124	413,122	702,280
இரண்டாந்தர வருமானம் (தேறிய)	5,228	3,496	1,034,694	1,159,404
இரண்டாந்தர வருமானம்: வரவு	5,498	3,793	1,088,388	1,253,677
தொழிலாளர் பணவனுப்பல்கள்	5,491	3,789	1,087,188	1,252,504
அரசாங்க மாற்றல்கள்	6	3	1,200	1,173
இரண்டாந்தர வருமானம்: செலவு	270	296	53,694	94,272
மூலதன கணக்கு (தேறிய)	25	19	5,009	6,123
மூலதன கணக்கு: வரவு	50	38	9,850	11,909
மூலதன கணக்கு: செலவு	24	19	4,841	5,786
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)	-3,259	-1,433	-651,305	-310,030
நிதியியல் கணக்கு (தேறிய)	-4,211	-1,946	-844,973	-538,153
நேரடி முதலீடு: சொத்துக்கள்	17	15	3,468	4,892
நேரடி முதலீடு: பொறுப்புகள்	592	898	117,894	309,142
சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்	-	-	-	-
சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்	-1,547	355	-305,900	168,647
பங்கு மூலதனம்	-232	137	-46,061	30,342
படுகடன் பிணையங்கள்	-1,315	218	-259,838	138,305
நிதியியல் பெறுதிகள்	-	-	-	-
ஏனைய முதலீடு: சொத்துக்கள்	387	1,302	77,454	390,162
நாணயம் மற்றும் வைப்புகள்	306	514	62,761	152,168
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	257	282	51,199	89,293
ஏனைய பெறத்தக்க கணக்குகள்	-176	506	-36,506	148,700
ஏனைய முதலீடு: பொறுப்புகள்	3,053	776	615,978	183,589
நாணயம் மற்றும் வைப்புகள்	4,016	272	810,195	-9,248
கடன்கள்	-1,503	-92	-299,296	51,432
மத்திய வங்கி	-57	-140	-11,377	-48,316
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	-2,152	-1,645	-429,506	-495,847
மத்திய அரசாங்கம்	873	1,679	174,382	580,605
ஏனைய துறைகள்	-167	13	-32,795	14,989
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	-426	-895	-87,405	-279,812
ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்	180	1,492	34,713	421,218
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	787	-	157,771	-
ஒதுக்கு சொத்துக்கள்	-2,517	-1,234	-497,923	-271,828
நாணய தங்கம்	-212	-152	-42,734	-38,820
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	123	-118	24,635	-41,965
ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை	-	-58	-	-20,980
ஏனைய ஒதுக்கு சொத்துக்கள்	-2,428	-906	-479,823	-170,064
நாணயம் மற்றும் வைப்புகள்	1,536	-895	300,122	-166,305
பிணையங்கள்	-3,967	-11	-780,435	-3,691
ஏனைய கோரல்கள்	3	...	490	-69
தேறிய பிழைகளும் தவறுகளும்	-952	-513	-193,669	-228,122
திரண்ட நிலுவை (இ)	-3,967	-2,806	-745,312	-1,087,831
மொ.உ.உ. இன் சதவீதமாக				
வர்த்தக நிலுவை	-9.2	-6.7		
பொருட்கள் மற்றும் பணிகள் (தேறிய)	-7.4	-4.0		
நடைமுறை கணக்கு மீதி	-3.7	-1.9		
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)	-3.7	-1.9		


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது
தொடர்பில் அட்டவணை 5.12 பார்க்குக

மூலம்: இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 5.1

வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்


வெளிநாட்டுத்துறை முன்னொருபோதுமில்லாத சவால்களை 2022 இல் எதிர்கொண்டது...



2022 காலப்பகுதியில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான கேள்வியை அடைவதற்கு வெளிநாட்டு செலாவணியை மத்திய வங்கி சந்தைக்கு வழங்கியது...




2022 மார்ச்சு - மே காலப்பகுதியில் மிகைப்படுத்தலிற்கு பின் வழிகாட்டல் வீச்சைச் சூழ்ந்து **வெளிநாட்டுச் செலாவணி** நிலைப்படுத்தப்பட்டது...




2022 ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டங்களிற்கு வீழ்ச்சியடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 மார்சிலிருந்து படிப்படியாக கட்டியெழுப்பப்பட்டது...

வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கம் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் என்பனவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, **நடைமுறைக்கணக்கு** பற்றாக்குறை 2022 இல் வீழ்ச்சியடைந்தது...






நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்டப் பொறுப்புகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன...




நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பின் காரணமாக **வெளிநாட்டுப் படுகடன்** குறைவடைந்தது...

ஐ.அ.டொலர் நியதிகளில் வெளிப்படுத்தப்படும் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் குறிப்பிடத்தக்க சுருக்கத்தின் முக்கிய காரணமாக மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஆண்டுக்காலப்பகுதியில் அதிகரித்தது.



வரைபடம் 5.2
சென்மதி நிலுவை



மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிதிய வசதியின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் மற்றும் கிட்டியகாலத்தில் படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையை நிறைவுசெய்தல் என்பன முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்துமெனவும் நாட்டினுடைய பன்னாட்டு தரப்படுத்தல்களை முன்னேற்றுமெனவும் எதிர்பார்க்கப்படுவதுடன் இதன்மூலம், எதிர்வரும் காலத்தில், வெளிநாட்டுத்துறையின் உறுதிப்பாடு மேலும் வலுவடையும்.

5.2 நடைமுறைக் கணக்கு நிலுவை

வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமை, பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மீட்சி, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவில் மிதமடைந்தமை மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை சுருக்கமடைந்தமை போன்றவற்றுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் சுருக்கமடைந்தது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் விரிவடைந்தமை மற்றும் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் சுருக்கமடைந்தமை என்பனவற்றுடன் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை பெருமளவிற்கு சுருக்கமடைந்தது. இது, ஏனையவற்றிற்கிடையில், கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கை மிதமடைந்தமை மற்றும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகள் போன்றவற்றின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையினால் நன்மையளிக்கப்பட்டு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, முக்கியமாக ஆடைகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற வகைகளில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதே மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டவேளையில், நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட கணிசமான சுருக்கத்தினால் தூண்டப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது. வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையின் முன்னொருபோதுமில்லாத பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு வழிமுறைகளும் அதேபோன்று பொருளாதார நடவடிக்கையின் சுருக்கத்துடன் இணைந்து இறக்குமதிக்கான கேள்வி குறைவடைந்தமையும் செலாவணி வீதம் கடுமையாக தேய்வடைந்தமையினைத் தொடர்ந்து இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையும் இறக்குமதிகள் குறைவடைந்தமைக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. ஒருங்கிணைவாக, உள்நாட்டு வழங்கல்பக்க இடையூறுகள் படிப்படியாக மறைந்து போனமை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான கரிசனைகள் தளர்வுற்றமையுடன் உலகளாவிய பயண நடவடிக்கைகள் கணிசமானளவிற்கு அதிகரிக்கத் தொடங்கியமை என்பனவற்றின் முக்கிய காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மீட்சியடைந்து பணிகள் கணக்கு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. எனினும், வான் மற்றும் கடல் சரக்கு போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறைக்கான பணிகளின் உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிகள் கணக்கிலுள்ள அனைத்து ஏனைய துறைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் கணிசமானளவிற்கு குறைவடைந்து காணப்பட்டன. முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களின் சிறிய அதிகரிப்புக்கு மத்தியில் வங்கிகளின் உயர்வடைந்த பன்னாட்டு வட்டி வீதங்கள் மற்றும் வெளிநாட்டுச் சொத்து நிலைமைகள் என்பனவற்றின் விளைவாக வங்கித்தொழிற்துறைக்கு உயர்வடைந்த வட்டி உட்பாய்ச்சல்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவில் மிதமடைந்தது. இருப்பினும், இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இன் பின்னரைப்பகுதியில் மீளெழுச்சியுற்றதெனினும் 2021 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு குறைந்தளவு மட்டத்தினையே பதிவுசெய்தது. ஒட்டுமொத்தமாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 3,284 மில்லியனுடன் ஒப்பிடுகையில் (மொ.உ.உற்பத்தியில் 3.7 சதவீதம்) 2022இல் ஐ.அ.டொலர் 1,453 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியில் -1.9 சதவீதம்) சுருக்கமடைந்தது.

5.2.1 வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு வர்த்தக நிலுவை

வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2010இற்குப் பின்னர் 2022இல் குறைந்தளவில் பதிவுசெய்யப்பட்டமையானது, 2022இற்கான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் ஏற்பட்ட

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

விடயம்	2021 (அ)			2022 (ஆ)		
	வரவு	செலவு	தேறிய	வரவு	செலவு	தேறிய
பொருட்கள் மற்றும் பணிகள்	14,974	21,526	-6,552	16,169	19,244	-3,075
பொருட்கள்	12,499	20,637	-8,139	13,106	18,291	-5,185
பொது வணிகம்	12,499	20,636	-8,138	13,106	18,289	-5,183
நாணயமல்லா தங்கம்	-	1	-1	-	2	-2
பணிகள்	2,475	889	1,586	3,062	953	2,110
போக்குவரத்து	608	256	352	676	333	343
கடல்வழி போக்குவரத்து	450	150	300	410	137	272
சரக்குத் தொகுதி	450	150	300	410	137	272
வான்வழி போக்குவரத்து	158	106	52	266	195	71
பயணிகள்	108	89	19	221	180	41
சரக்குத் தொகுதி	50	17	33	46	15	30
பயணம் (இ)	507	239	268	1,136	244	893
கட்டுமானம்	10	11	-1	9	11	-2
காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும்	20	37	-17	19	36	-18
நிதியியல் பணிகள்	95	102	-7	92	96	-5
தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள்	1,201	171	1,030	1,097	161	936
தொலைத்தொடர்புகள்	32	31	2	31	28	3
கணனி பணிகள்	1,168	140	1,028	1,066	133	933
ஏனைய வியாபார பணிகள்	16	17	-1	15	16	-1
அரச பொருட்கள் மற்றும் பணிகள் வே.எ.கு.	19	57	-38	18	56	-38
முதலாந்தர வருமானம்	116	2,075	-1,959	249	2,124	-1,874
ஊழியர்களுக்கான நட்டஈடு	30	74	-43	30	69	-39
முதலீட்டு வருமானம்	86	2,002	-1,916	220	2,055	-1,836
நேரடி முதலீடு	16	567	-551	15	532	-517
பங்கு இலாபங்கள்	12	278	-266	12	418	-407
மீள் முதலிடப்பட்ட வருவாய்கள்	4	289	-285	3	114	-111
சொத்துப் பட்டியல் முதலீடு	-	830	-830	-	784	-784
பங்கு மூலதனம்	-	25	-25	-	29	-29
வட்டி	-	805	-805	-	755	-755
குறுங்காலம்	-	...	...	-	1	-1
நீண்டகாலம்	-	805	-805	-	754	-754
ஏனைய முதலீடு	43	605	-562	200	738	-538
ஒதுக்கு சொத்துக்கள்	27	-	27	5	-	5
இரண்டாந்தர வருமானம்	5,498	270	5,228	3,793	296	3,496
பொது அரசாங்கம்	6	-	6	3	-	3
தொழிலாளர் பணவனுப்பல்கள்	5,491	270	5,221	3,789	296	3,493
நடைமுறை கணக்கு	20,587	23,871	-3,284	20,211	21,664	-1,453
மூலதன கணக்கு	50	24	25	38	19	19
மூலதன மாற்றல்கள்	50	24	25	38	19	19
பொது அரசாங்கம்	11	-	11	6	-	6
கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை	38	24	14	32	19	13
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு	20,637	23,896	-3,259	20,249	21,682	-1,433

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

மூலம்: இலங்கை மத்திய வங்கி


வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. வர்த்தகப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 8,139 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 5,185 மில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு, வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகிய இரண்டும் காரணங்களாக அமைந்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா பாரியளவிற்கு தேய்வடைந்தமையின் தாக்கம், உயர்வடைந்த பணவீக்கத்திற்கு மத்தியில் வட்டி வீதங்கள் உயர்வடைந்தமை மற்றும் உண்மை வருமானம் தேய்வடைந்தமை போன்றவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில், தனியார் துறைக்கான கொடுகடனில் காணப்பட்ட பாரியளவு வீழ்ச்சிக்கு மத்தியில் குறைவடைந்த நடவடிக்கை மற்றும் கூட்டுக் கேள்வி நிலைமைகள், மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்களின் காரணமாக இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான நிருவாக வழிமுறைகள் என்பன உள்ளடங்கலாக பல்வேறுப்பட்ட காரணிகள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இறக்குமதிச் செலவினங்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்வு ஏற்றுமதியாளர்களுக்கான ரூபா வருமானத்தினை அதிகரித்தமை, ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளின் இறக்குமதிக்கு முன்னுரிமையளித்தமை, உலகளாவிய சந்தையில் காணப்பட்ட உயர்ந்த பண்ட விலைகள், ஆண்டின் முதலரைப்பகுதியில் ஆடை போன்ற முக்கிய ஏற்றுமதிப்பொருட்களுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வி, மற்றும் சில ஏற்றுமதி நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிருவாக வழிமுறைகள் என்பன ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குப் பங்களித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2021இன் 9.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 6.7 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம், வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

ஏற்றுமதிச் செயலாற்றம்

அதிகரித்துச் செல்லும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சவால்களுக்கு மத்தியில், சாதகமான செலாவணி வீதம், இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்கு நிதியளிக்கும்போது ஏற்றுமதி கைத்தொழில்களுக்கு முன்னுரிமையளித்தமை, மற்றும் உலகளாவிய பண்ட விலைகளின் உயர்வு என்பனவற்றால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு வணிகப்பொருள் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை பதிவுசெய்து, 2022இல் ஐ.அ.டொலர் 13 பில்லியன் கொண்ட மட்டத்தினை விஞ்சிக் காணப்பட்டது. இதற்கமைய, வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 13,106 மில்லியனை அடைந்து 4.9 சதவீதம் கொண்ட

வரைபடம் 5.3
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)




வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வேளாண்மை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தவேளை கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் இரண்டினதும் வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இம்முன்னேற்றத்திற்குப் பங்களித்திருந்தது. செலாவணி வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வு மற்றும் உலகளாவிய சந்தையில் குறிப்பாக, 2022இன் பெரும்பாலான காலப்பகுதியில் ஆடைகளுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வி, இரத்தினக்கற்களின் ஏற்றுமதியுடன் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்தி வலுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், மற்றும் பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்களின் அதிகரித்த ஏற்றுமதிகள் என்பன கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. உலகளாவிய நடவடிக்கைகள், குறிப்பாக இலங்கையின் பாரிய ஏற்றுமதிச் சந்தைகளின் நடவடிக்கைகள், குறைவடைந்தமையின் காரணமாக உலகளாவிய கேள்வி குறைவடைந்தமைக்கு மத்தியில் 2022 செத்தெம்பரிலிருந்து ஏற்றுமதி வருவாய்களின் மிதமான தன்மையொன்று அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. ஏற்றுமதிச் சுட்டெண்களின் அசைவுகள் எடுத்துக்காட்டுகின்றவாறு, அளவுகள் மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பு ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய்கள் 2021இன் 14.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 17.0 சதவீதத்திற்கு மேம்பட்டன.

மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 80 சதவீதப் பங்கிற்குப் பங்களிப்பாளராக விளங்கும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 9,702 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 10,465 மில்லியனுக்கு 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2022இன் பிற்பகுதியில் வருவாய்களில் மிதமான தன்மைகள் காணப்பட்டமைக்கு மத்தியிலும் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகள், முன்னணி ஏற்றுமதி வருவாய் ஈட்டுநராகத் தொடர்ந்தும் விளங்கி, மொத்த ஏற்றுமதிகளில் 45 சதவீதத்திற்கும் அதிகமானளவிற்கு வகைகூறின. இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், மற்றும் பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் (முக்கியமாகப் பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள்) என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2022இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தன. நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் அளவு சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியவேளையில் உயர்ந்த மசகெண்ணெய் விலைகளின் காரணமாக ஏற்பட்ட விலைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. கொவிட்-19 இடர்நேர்வுகள் குறைவடைந்தமைக்கு மத்தியில் வீட்டுத்துறையினரின் கையுறைகளுக்கான கேள்வி குறைவடைந்தமையின் காரணமாக 2022இல் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து 2021இன் மட்டத்திற்கு கீழாக ஐ.அ.டொலர் 1 பில்லியனைப் பதிவுசெய்தது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (முக்கியமாக விலங்கு அல்லது மரக்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய்) ஏற்றுமதிகளிலும் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன.

போதுமான வளமாக்கி கிடைக்காமையின் காரணமாக ஏற்பட்ட காலங்கடந்த தாக்கத்தின் முக்கிய விளைவாக 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 5.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கத்துடன் வேளாண்மை ஏற்றுமதிகளின் வருவாய்களில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. சராசரி விலைகளில் அதிகரிப்பு காணப்பட்டபோதும் அளவுகளில் ஏற்பட்ட பாரிய குறைப்பு காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த அளவுகள் (முக்கியமாக மிளகு மற்றும் கராம்பு) மற்றும் குறைவடைந்த விலைகள் (கறுவா) இரண்டினதும் காரணமாக வாசனைத்திரவியங்கள் குறைந்த ஏற்றுமதி

வரைபடம் 5.4
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்



அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

வகை	2021		2022 (அ)		பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன்	ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் %	மாற்றத்திற்கான பங்களிப்பு %
	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %	பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	பங்கு %			
வேளாண்மை ஏற்றுமதிகள்	**2,729.5**	**21.8**	**2,568.0**	**19.6**	**-161.5**	**-5.9**	**-26.6**
தேயிலை	1,324.4	10.6	1,258.8	9.6	-65.6	-5.0	-10.8
தெங்கு	425.2	3.4	400.3	3.1	-25.0	-5.9	-4.1
வாசனைத் திரவியங்கள்	454.8	3.6	368.7	2.8	-86.0	-18.9	-14.2
கடலுணவு	274.1	2.2	269.0	2.1	-5.1	-1.8	-0.8
சிறு வேளாண்மை உற்பத்திகள்	148.8	1.2	178.8	1.4	30.0	20.2	4.9
இறப்பர்	42.2	0.3	41.4	0.3	-0.8	-1.8	-0.1
மரக்கறிகள்	28.5	0.2	26.7	0.2	-1.9	-6.6	-0.3
தயாரிக்கப்படாத புகையிலை	31.6	0.3	24.4	0.2	-7.2	-22.8	-1.2
கைத்தொழில் ஏற்றுமதிகள்	**9,702.0**	**77.6**	**10,465.3**	**79.8**	**763.3**	**7.9**	**125.6**
புடவைகளும் ஆடைகளும்	5,435.1	43.5	5,952.0	45.4	516.9	9.5	85.0
இறப்பர் உற்பத்திகள்	1,050.4	8.4	977.0	7.5	-73.4	-7.0	-12.1
பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்	500.9	4.0	580.9	4.4	80.1	16.0	13.2
பெற்றோலிய உற்பத்திகள்	506.4	4.1	568.0	4.3	61.6	12.2	10.1
உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை	586.9	4.7	519.5	4.0	-67.4	-11.5	-11.1
இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள்	276.7	2.2	450.6	3.4	173.9	62.8	28.6
இரசாயன உற்பத்திகள்	223.2	1.8	223.5	1.7	0.3	0.1	0.1
அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள்	156.4	1.3	176.7	1.3	20.3	13.0	3.3
விலங்குத் தீன்	149.4	1.2	170.5	1.3	21.1	14.1	3.5
மரம் மற்றும் தாள் உற்பத்திகள்	129.9	1.0	136.9	1.0	7.0	5.4	1.2
ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்	686.8	5.5	709.6	5.4	22.8	3.3	3.8
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	**44.5**	**0.4**	**50.0**	**0.4**	**5.5**	**12.3**	**0.9**
வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்	**22.6**	**0.2**	**23.2**	**0.2**	**0.6**	**2.6**	**0.1**
மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)	**12,498.6**	**100.0**	**13,106.4**	**100.0**	**607.9**	**4.9**	**100.0**

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

5

வருவாய்களைப் பதிவுசெய்தன. தெங்குடன் தொடர்பான உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த உள்ளீட்டு ஏற்றுமதி விலைகளே காரணமாகும். எனினும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிட்ட உற்பத்திகளின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான பாக்கு ஏற்றுமதிகள் மற்றும் எள்ளின் ஏற்றுமதிகள் அதிகரித்தமையானது சிறுவேளாண்மை ஏற்றுமதித் துறையின் இவ்வளர்ச்சிக்கு வழியமைந்தது.

கனிப்பொருள் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் அதிகரித்தன. கனிப்பொருள் ஏற்றுமதிகளின் கீழ் காணப்பட்ட பெரும்பாலும் அனைத்துத் துணைத் துறைகளும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தவேளையில் ரைட்ரேனியம் தாதுக்களிலிருந்தான வருவாய்கள் இம்முன்னேற்றத்திற்கு முக்கியமாகப் பங்களித்திருந்தன. இலங்கையின் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2022இன் மொத்த ஏற்றுமதிகளில் 0.4 சதவீதம் கொண்ட சிறிய பங்கொன்றிற்கு வகைகூறின.

இறக்குமதிச் செயலாற்றம்

குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அருந்தல் தன்மை, குறைவடைந்த கேள்வி நிலைமைகள், செலாவணி வீதத்தின் பாரிய தேய்வு மற்றும் இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான நிருவாக வழிமுறைகள் என்பனவற்றின் தாக்கத்தினை பிரதிபலித்து உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்வடைந்தபோதிலும் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டுப்பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால்


தூண்டப்பட்டு இறக்குமதிகள் மீதான செலவினம் 2021இன் ஐ.அ.டொலர் 20,637 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 18,291 மில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மைக் கட்டுபாடுகள், குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள், மற்றும் செலாவணி வீதங்களின் கடுமையான தேய்வினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்நாட்டு விலைகள் அதிகரித்தமை, அரசாங்கத்தினாலும் (குறிப்பிட்ட இறக்குமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, பல்வேறுபட்ட கொடுப்பனவு நிதியங்களின் கீழான குறிப்பிட்ட இறக்குமதிகள் இடைநிறுத்தப்பட்டமை, இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமை, குறிப்பிட்ட பொருட்கள் மீதான இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டமை போன்றவை உட்பட) மத்திய வங்கியினாலும் (குறிப்பிட்ட பொருட்கள் மீது அளவு வைப்புத் தேவைப்பாடுகள் மற்றும் இறுக்கமான நாணய மற்றும் கொடுகடன் நிபந்தனைகள் பேணப்பட்டமை உட்பட) நடைமுறைப்படுத்தப்பட்ட நிருவாக வழிமுறைகள் என்பனவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. எனினும், பெற்றோலிய எண்ணெய் உட்பட, உலகளாவிய சந்தையில் பண்ட விலைகள் 2022இல் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமையானது முக்கியமாக எண்ணெய் இறக்குமதிகளால் தூண்டப்பட்டு இடைநிலைப்பொருட்கள் மீதான உயர்ந்த செலவினத்திற்கு வழியமைத்தது. நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022இன் பிற்பகுதியில் உயர்வடைந்து செல்லும் போக்கினைக் காட்டியமையானது அரசாங்கத்தினால் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையின் தாக்கத்தினையும் இறக்குமதிகளுக்கான பருவகாலக் கேள்வியையும் எடுத்துக்காட்டியது. இறக்குமதி அளவு மற்றும் அலகிற்கான பெறுமதி ஆகிய சுட்டெண்களின் அசைவுகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, கடந்த ஆண்டிலும் பார்க்க 2022இல் அலகுப் பெறுமதியின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமை குறைந்த அளவுகளில் பிரதிபலித்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதிச் செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021இன் 23.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 23.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உயர்ந்த உலகளாவிய உணவுப் பண்டங்களின் விலைகளுக்கு மத்தியிலும் குறைந்த இறக்குமதி அளவுகளின் விளைவாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.5 சதவீத மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் (அரிசி மற்றும் கோதுமை மா போன்ற), குடிபானங்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் தவிர்ந்த மிக முக்கியமான உணவு வகைகளின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 2022இல் தேங்காயெண்ணெயின் இறக்குமதி அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியும் 2021இல் காணப்பட்ட உயர்ந்த புள்ளிவிபரத் தளமும் எண்ணெய் மற்றும் கொழுப்பின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2022இல் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. மேலும், சராசரி இறக்குமதி விலைகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டமைக்கிடையிலும் குறைந்த இறக்குமதி அளவுகளால் தூண்டப்பட்டு 2022இல் பாற்பண்ணை உற்பத்திகள், பருப்பு வகை மற்றும் சீனி என்பன மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது. மாறாக, வளமாக்கிப் பற்றாக்குறையின் பாதிப்பினால் உள்நாட்டு அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2021இனைவிட 2022இல் ஏறத்தாழ 300 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்களின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினால் வழிவகுக்கப்பட்டு, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,205 மில்லியனுக்கு 44.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. 2021இல் கொவிட்-19 நோய்த்தடுப்பு மருந்துகள் மீதான உயர்ந்த செலவினத்தின் புள்ளிவிபரவியல் தளத் தாக்கத்தினை பகுதியளவில் பிரதிபலித்து மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஏனையவற்றிற்கிடையில், 2022 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அவசரமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளையும் வங்கித்தொழில் முறைமையில் காணப்பட்ட கடுமையான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினையும் பிரதிபலித்து, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் வகையின் கீழான அனைத்து ஏனைய துணைத் துறைகளும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தன.

முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் 2022இல் ஐ.அ.டொலர் 3,030 மில்லியனுக்கு 32.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2010இற்குப் பின்னரான

வரைபடம் 5.5
இறக்குமதிகளின் உள்ளடக்கம்



அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

வகை	2021 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	2021 பங்கு %	2022 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன்	2022 (அ) பங்கு %	பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன்	ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் %	மாற்றத்திற்கான பங்களிப்பு %
நுகர்வுப் பொருட்கள்	**3,848.7**	**18.6**	**2,813.0**	**15.4**	**-1,035.7**	**-26.9**	**44.1**
உணவும் குடிபானங்களும்	1,666.5	8.1	1,607.9	8.8	-58.6	-3.5	2.5
அரிசி	73.0	0.4	292.5	1.6	219.4	300.5	-9.4
சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள்	288.8	1.4	257.8	1.4	-31.0	-10.7	1.3
பால் உற்பத்திகள்	317.7	1.5	225.3	1.2	-92.4	-29.1	3.9
பருப்புவகை	143.0	0.7	116.9	0.6	-26.1	-18.2	1.1
தேங்காய் எண்ணெய்	166.1	0.8	27.2	0.1	-138.9	-83.6	5.9
ஏனையவை	677.8	3.3	688.3	3.8	10.4	1.5	-0.4
உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்	2,182.2	10.6	1,205.1	6.6	-977.1	-44.8	41.6
மருத்துவ மற்றும் மருந்தாங்கல் பொருட்கள்	882.5	4.3	533.4	2.9	-349.1	-39.6	14.9
புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள்	221.3	1.1	215.6	1.2	-5.7	-2.6	0.2
வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள்	161.2	0.8	116.3	0.6	-45.0	-27.9	1.9
வீட்டுப் பாவனை உபகரணங்கள்	257.1	1.2	85.5	0.5	-171.6	-66.7	7.3
தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள்	382.9	1.9	69.0	0.4	-313.9	-82.0	13.4
ஏனையவை	277.2	1.3	185.4	1.0	-91.8	-33.1	3.9
இடைநிலைப் பொருட்கள்	**12,308.9**	**59.6**	**12,438.8**	**68.0**	**129.8**	**1.1**	**-5.5**
எரிபொருள்	3,742.9	18.1	4,896.8	26.8	1,153.9	30.8	-49.2
புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள்	3,066.9	14.9	3,065.2	16.8	-1.8	-0.1	0.1
இரசாயன உற்பத்திகள்	1,074.4	5.2	966.2	5.3	-108.2	-10.1	4.6
பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள்	765.7	3.7	650.8	3.6	-114.9	-15.0	4.9
தாள், அட்டை மற்றும் அதன் பொருட்கள்	468.9	2.3	465.9	2.5	-3.0	-0.6	0.1
இறப்பர் மற்றும் அதன் பொருட்கள்	400.7	1.9	334.7	1.8	-66.0	-16.5	2.8
அடிப்படை உலோகங்கள்	866.4	4.2	323.2	1.8	-543.3	-62.7	23.2
ஏனைய இடைநிலைப் பொருட்கள்	1,922.9	9.3	1,736.0	9.5	-186.9	-9.7	8.0
முதலீட்டுப் பொருட்கள்	**4,462.7**	**21.6**	**3,030.5**	**16.6**	**-1,432.2**	**-32.1**	**61.0**
பொறி மற்றும் கருவிகள்	2,809.5	13.6	1,969.0	10.8	-840.5	-29.9	35.8
கட்டடப் பொருட்கள்	1,248.9	6.1	926.3	5.1	-322.5	-25.8	13.7
போக்குவரத்துக் கருவிகள்	398.5	1.9	132.1	0.7	-266.4	-66.8	11.4
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	5.8	0.03	3.0	0.02	-2.8	-47.9	0.1
வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்	**17.1**	**0.1**	**8.8**	**0.05**	**-8.3**	**-48.8**	**0.4**
மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)	**20,637.4**	**100.0**	**18,291.0**	**100.0**	**-2,346.4**	**-11.4**	**100.0**

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மிகக் குறைந்த செலவினமொன்றினைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கைகள் மிதமடைந்தமை மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் காணப்பட்ட கணிசமான தடைகளுக்கு மத்தியில் இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பவை முதலீட்டுப்பொருட்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக பங்களித்தன. பொறிகள் மற்றும் கருவிகள், கட்டடவாக்கப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய முதலீட்டுப்பொருட்களின் அனைத்து மூன்று முக்கிய வகைகளினதும் அவற்றின் பெரும்பாலான துணை வகைகளினதும் இறக்குமதிச் செலவினத்தில் கணிசமான 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. மின்னியல் உந்திகள் மற்றும் மின்உருவாக்கத் தொகுதிகள் மீதான செலவினம் அதிகரித்தவேளையில் அலுவலக இயந்திரங்கள் (முக்கியமாக கணனிகள்), பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக மின்கடத்தி தொடர்பான துணைக்கருவிகள்) என்பன மீதான செலவினங்களின் வீழ்ச்சியானது பொறிகள் மற்றும் கருவிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வழியமைத்தது. இரும்பு மற்றும் உருக்கு, சீமெந்து, மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் (முக்கியமாக கல்நார்) என்பன கட்டடவாக்க பொருட்களின் இறக்குமதியின் வீழ்ச்சிக்கு வழியமைத்தவேளையில் வேளாண்மை உழுப்பொறிகள், தாங்கிகள் மற்றும் பவுசர்கள் மற்றும் புகையிரத சாதனங்கள் என்பன போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வழியமைத்தன.

குறைந்த பொருளாதார நடவடிக்கையின் விளைவாக பெரும்பாலான துணை வகைகள் பரந்த அடிப்படையில் வீழ்ச்சியுற்றமைக்கிடையிலும் எரிபொருள் மீதான உயர்ந்த செலவினம் காரணமாக மொத்த இறக்குமதிகளில் 68 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் சிறிதளவால் அதிகரித்தது. இதற்கமைய, இடைநிலைப்பொருட்களின் செலவினம் 2021

உடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 12,439 மில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் அதிகரித்தது. எரிபொருள் பங்கீட்டு முறை மற்றும் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலைச் சீராக்கங்கள் போன்ற கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலை பிரதிபலித்து, மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (திரவப் பெற்றோலிய வாயு உட்பட) மற்றும் நிலக்கரி உள்ளடங்கலாக அனைத்து துணைத் துறைகளினதும் இறக்குமதி அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தபோதிலும் அனைத்து துணைத் துறைகளுக்குமான இறக்குமதி விலைகளின் அதிகரிப்பின் முக்கிய காரணமாக இறக்குமதிக் கூடையில் மிகப் பெரிய இறக்குமதி விடயமாக விளங்கும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது. பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட விலை அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலை 2021இன் பீப்பாயொன்றிற்கான ஐ.அ.டொலர் 68.86 இலிருந்து 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 100.11 இற்கு அதிகரித்தது. எனினும், 2022இல் மசகெண்ணெய் அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்டதால் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதிகள் மூலம் நாட்டின் தொகை வடிவிலான பெற்றோலியத் தேவை பூர்த்திசெய்யப்பட்டது. 2021 உடன் ஒப்பிடுகையில் குறைந்த இறக்குமதி அளவுகள் காணப்பட்டமைக்கிடையில் 2022இல் வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியமைக்கு சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்தது. அதேவேளை, இறக்குமதிகளில் இரண்டாவது பெரிய விடயமாக விளங்கும் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பெருமளவிற்கு மாற்றமின்றி காணப்பட்டது. மாறாக, அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு) மற்றும் கோதுமை என்பன பெருமளவில் வீழ்ச்சியடைந்ததுடன் இடைநிலைப்பொருட்களின் கீழுள்ள மற்றைய முக்கிய துணைத் துறைகள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. மேற்குறிப்பிட்டவற்றின் விளைவாக எரிபொருள் அல்லா இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 12.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வர்த்தக மாற்று விகிதம்

இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்கும் வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க இறக்குமதி விலைச் சுட்டெண் உயர்ந்த வேகத்தில் அதிகரித்தமையினால் 2022இல் மேலும் தேய்வடைந்தது. ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளினதும் விலைச் சுட்டெண்களில் காணப்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரிப்பதற்கு பங்களித்த வேளையில், இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளினது உயர்ந்த விலைகளுக்கு உயர்ந்த உலகளாவிய எரிபொருள் விலைகள் வழியமைத்து ஒட்டுமொத்த இறக்குமதி விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கு முக்கியமாக வகைகூறின. எனவே, வர்த்தக மாற்று விகிதம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 86.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 11.6 சதவீதத்தினால் தேய்வடைந்து, ஏற்றுமதிகளின் அலகொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்படக்கூடிய இறக்குமதிகளின் தொகை தேய்வடைந்துள்ளமையினை எடுத்துக்காட்டியது.

ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் என்பனவற்றின் ஒட்டுமொத்த நடத்தைகளுக்கு 2022 காலப்பகுதியில் வர்த்தக அளவுகள் கணிசமாகப் பங்களித்தன. வேளாண்மை ஏற்றுமதிகள் தவிர்ந்த, ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளுக்குமான அளவுச் சுட்டெண்கள் மேம்பட்டவேளையில், அனைத்து முக்கிய வகைகளுக்குமான இறக்குமதி அளவுச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தமையானது 2022இல் ஒட்டுமொத்த செலவினத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது.

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

விடயம்	2018	2019	2020	2021	2022 (அ)
சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)	4,959	4,740	4,028	4,553	3,927
1ஆம் காலாண்டு	1,382	1,199	1,249	1,378	1,184
2ஆம் காலாண்டு	1,207	1,206	678	1,008	935
3ஆம் காலாண்டு	1,317	1,211	1,123	865	853
4ஆம் காலாண்டு	1,054	1,124	978	1,302	954
கோதுமை	1,297	1,159	1,404	1,307	583
1ஆம் காலாண்டு	412	164	272	323	208
2ஆம் காலாண்டு	329	318	285	288	129
3ஆம் காலாண்டு	285	292	498	335	80
4ஆம் காலாண்டு	271	385	348	360	167
மசகு எண்ணெய் (ஆ)	1,674	1,842	1,667	1,182	649
1ஆம் காலாண்டு	283	461	464	274	179
2ஆம் காலாண்டு	459	460	265	368	80
3ஆம் காலாண்டு	461	461	568	362	199
4ஆம் காலாண்டு	471	460	370	178	191
சீனி	645	556	683	582	460
1ஆம் காலாண்டு	205	140	193	293	119
2ஆம் காலாண்டு	166	153	108	140	68
3ஆம் காலாண்டு	119	100	209	14	131
4ஆம் காலாண்டு	154	164	172	136	143
வளமாக்கி	861	707	952	412	363
1ஆம் காலாண்டு	256	148	88	114	37
2ஆம் காலாண்டு	154	142	294	182	32
3ஆம் காலாண்டு	225	238	126	17	84
4ஆம் காலாண்டு	226	179	444	98	210
அரிசி	249	24	16	147	783
1ஆம் காலாண்டு	203	8	8	3	270
2ஆம் காலாண்டு	37	3	2	4	156
3ஆம் காலாண்டு	2	5	2	3	249
4ஆம் காலாண்டு	7	8	4	137	108


(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வர்த்தகத்தின் போக்கு

முக்கிய வர்த்தக பங்காளர்களுடனான மொத்த வர்த்தகம் (ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும்) 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கையின் வர்த்தகப் பங்காளர்கள் பரந்தளவு மாற்றங்களெதுவுமின்றி காணப்பட்டன. பெறுமதி நியதிகளில், 2022இல் இந்தியா இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவும் சீனாவும் காணப்பட்டதுடன், இவை ஒன்றுசேர்ந்து இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 41 சதவீதத்திற்கு வகைகூறின. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு உதவியளிப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்கள் பயன்படுத்தப்பட்டதனால் இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனை விஞ்சிய வேளையில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஒவ்வொன்றுடனுமான வர்த்தகம்

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஐ.அ.டொலர் 3.5 பில்லியனை விஞ்சின. கொவிட்-19இன் விளைவாக சீனாவின் வழங்கல் சங்கிலியில் காணப்பட்ட இடையூறுகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில்

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

வகை	பெறுமதிச் சுட்டெண்			அளவுச் சுட்டெண்			அலகுப் பெறுமதிச் சுட்டெண்		
	2021	2022 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %	2021	2022 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %	2021	2022 (ஆ)	ஆண்டுக்காண்டு மாற்றம் %
ஏற்றுமதிகள்									
வேளாண்மை ஏற்றுமதிகள்	118.4	111.4	-5.9	101.1	93.1	-7.9	117.1	119.7	2.1
தேயிலை	92.0	87.4	-5.0	87.2	76.6	-12.1	105.5	114.1	8.2
இறப்பர்	24.3	23.9	-1.8	29.3	29.2	-0.01	83.2	81.7	-1.8
தெங்கு	256.7	241.7	-5.9	188.1	193.5	2.9	136.5	124.9	-8.5
வாசனைத்திரவியங்கள்	219.5	178.0	-18.9	146.9	116.2	-20.9	149.4	153.1	2.5
சிறுவேளாண்மை உற்பத்திகள்	208.3	250.3	20.2	188.4	240.9	27.9	110.6	103.9	-6.0
கைத்தொழில் ஏற்றுமதிகள்	159.3	171.8	7.9	183.2	194.9	6.4	86.9	88.1	1.4
புடவைகள் மற்றும் ஆடைகள்	162.1	177.5	9.5	140.6	144.6	2.8	115.3	122.7	6.5
பெற்றோலிய உற்பத்திகள்	192.4	215.8	12.2	282.8	189.2	-33.1	68.0	114.1	67.7
இறப்பர் உற்பத்திகள்	188.7	175.5	-7.0	112.6	106.6	-5.3	167.6	164.7	-1.7
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	183.7	206.3	12.3	111.4	114.2	2.5	164.8	180.7	9.6
மொத்த ஏற்றுமதிகள்	145.0	152.0	4.9	156.9	163.0	3.9	92.4	93.3	0.9
இறக்குமதிகள்									
நுகர்வுப் பொருட்கள்	155.5	113.7	-26.9	127.8	104.8	-18.0	121.7	108.5	-10.9
உணவு மற்றும் குடிபானங்கள்	126.0	121.5	-3.5	125.5	133.4	6.3	100.4	91.1	-9.2
உணவல்லா நுகர்வுப் பொருட்கள்	189.5	104.7	-44.8	130.4	71.9	-44.8	145.3	145.5	0.1
இடைநிலைப் பொருட்கள்	152.9	154.5	1.1	152.0	121.1	-20.3	100.6	127.6	26.9
எரிபொருள்	123.1	161.0	30.8	134.2	106.8	-20.4	91.7	150.7	64.3
வளமாக்கி	65.9	114.9	74.4	74.5	68.1	-8.6	88.4	168.6	90.7
இரசாயன உற்பத்திகள்	206.6	185.8	-10.1	177.3	142.8	-19.4	116.6	130.1	11.6
கோதுமை மற்றும் சோளம்	157.6	114.2	-27.5	134.2	90.4	-32.7	117.4	126.4	7.6
புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள்	169.5	169.4	-0.1	153.9	142.3	-7.6	110.2	119.1	8.1
பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள்	181.0	153.9	-15.0	169.5	135.3	-20.2	106.8	113.7	6.5
வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள்	38.0	54.0	41.9	41.9	46.0	9.9	90.9	117.3	29.1
முதலீட்டுப் பொருட்கள்	162.0	110.0	-32.1	230.6	162.8	-29.4	70.3	67.6	-3.8
கட்டடப் பொருட்கள்	152.0	112.7	-25.8	154.5	99.2	-35.8	98.3	113.7	15.6
போக்குவரத்துக் கருவி	67.3	22.3	-66.8	46.7	19.8	-57.6	144.2	112.7	-21.9
பொறி மற்றும் கருவிகள்	210.1	147.2	-29.9	359.0	265.4	-26.1	58.5	55.5	-5.2
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	174.5	90.8	-47.9	142.6	77.7	-45.5	122.3	116.9	-4.4
மொத்த இறக்குமதிகள்	153.9	136.4	-11.4	162.2	126.0	-22.4	94.9	108.3	14.1
வர்த்தக மாற்று விகிதம்							97.4	86.1	-11.6

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது


மூலம்: இலங்கை மத்திய வங்கி

நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமை என்பனவற்றின் பகுதியளவிலான காரணமாக சீனாவிலிருந்தான இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தமையினால் சீனாவுடனான மொத்த வர்த்தகம் 2022இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. ஐக்கிய இராச்சியம், மலேசியா, ஜேர்மனி, ஐக்கிய அரபு எமிறேட்ஸ், மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கியமான ஏனைய வர்த்தக பங்காளர்களாக 2022இல் விளங்கி ஒவ்வொரு நாடும் ஐ.அ.டொலர் 1 பில்லியனிற்கு அதிகமாக வகைகூறின. அதிகளவு எரிபொருள் இறக்குமதிகளால் வழிவகுக்கப்பட்டு ருஷியாவுடனான மொத்த வர்த்தகம் 2022இல் அதிகரித்தபோதிலும் ருஷியாவிற்கும் உக்ரேனுக்குமிடையிலான புவிசார் அரசியல் பதற்றங்கள், 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் உக்ரேனுடனான மொத்த வர்த்தகத்தினை அரைவாசியாக்கியுள்ளது. இந்தியா, சீனா, மலேசியா, மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் குறிப்பிடத்தக்களவு வர்த்தகப் பற்றாக்குறைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்டவேளையில், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் கனடா போன்ற நாடுகளுடன் குறிப்பிடத்தக்க வர்த்தக மிகைகள் பதிவுசெய்யப்பட்டு முக்கிய நாடுகள் அடிப்படையிலான வர்த்தக நிலுவைகள் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. வர்த்தகத்தின் போக்கு கடந்த தசாப்த காலத்திற்கு மேலாக பெருமளவிற்கு ஒரே மாதிரியாக காணப்படுவதுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான புதிய சந்தைகளை, குறிப்பாக இப்பிராந்தியத்தில் பன்முகப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து கொள்வது அவசியமாகும்.

ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கான ஏற்றுமதிகளின் சேரிடங்களாகத் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 2022இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வகைகூறின. ஐக்கிய அமெரிக்கா ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுக்கும் அதிகப் பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளுடன் தொடர்ந்தும் இலங்கை ஏற்றுமதிகளின் தனிப்பெரும் வாங்குநராகத் விளங்கி வருவதுடன் இது மொத்த ஏற்றுமதிகளில் 25.3 சதவீதத்திற்கும் வகைகூறுகிறது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (7.3 சதவீதம்), இந்தியா (6.6 சதவீதம்), ஜேர்மனி (5.7 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.9 சதவீதம்) என்பன காணப்படுகின்றன. அதிகரித்த ஏற்றுமதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் (ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் அவுஸ்திரேலியா தவிர்ந்த) இலங்கையின் முதல் பத்து ஏற்றுமதி நாடுகள் உட்பட பெரும்பாலான நாடுகளிலிருந்தான வருவாய்கள் 2022இல் அதிகரித்தன. 2022இல் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 42 சதவீதப் பங்குடன் ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கான தனிப்பெரும் பாரிய ஆடை ஏற்றுமதி நாடாகத் தொடர்ந்தும் விளங்கியது. ஆடைகளுக்குப் புறம்பாக, முக்கியமாக இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களுக்கு வகைகூறின. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பன ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திகளாகக் காணப்பட்டன. இந்தியாவிற்கான ஏற்றுமதிகளில் விலங்குத்தீன், வாசனைத்திரவியங்கள், புடவைகள், மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பன முனைப்பானவைகளாகக் காணப்பட்டன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மிக முன்னணிப் பிராந்தியமாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியம் 2022இன் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகைகூறியதுடன், மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய விடயங்களாக இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மற்றும் தேயிலை என்பன காணப்பட்டதுடன் இவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய ஒன்றிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை திட்டத்தின் (ஜிஎஸ்பி+) கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டன. 2022இல் மத்திய கிழக்கு மற்றும் பிரதானமாக ருஷியா உட்பட பொதுநலவாய சுதந்திர நாடுகள் என்பன தேயிலைக்கான முக்கிய ஏற்றுமதி சேரிடங்களாக விளங்கி கூட்டாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்குப் பங்களித்தன.

ஆசிய நாடுகளிலிருந்தான ஒட்டுமொத்த இறக்குதிகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தபோதிலும் இலங்கை இறக்குமதிகளின் முக்கிய மூலங்களாக இந்நாடுகளில் அநேகமானவை தொடர்ந்தும் விளங்கின. இந்தியா, 2018இற்குப் பின்னர் இறக்குமதிகளின் பாரிய மூலம் என்ற

வரைபடம் 5.7
நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ.மில்லியன்)




அதன் நிலையினை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டதுடன் இந்தியாவினால் வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்களின் கீழ் செய்யப்பட்ட இறக்குமதிகளால் உதவியளிக்கப்பட்டு, 2022இன் மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 25.9 சதவீதப் பங்குடன் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுக்கும் கூடுதலான இறக்குமதிகளைப் பதிவுசெய்தது. இதற்கமைய, இந்தியாவிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 2.4 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் அரிசி இறக்குமதிகள் முக்கியமாக உதவின. அதேவேளை, 2022இல் சீனாவும் மலேசியாவும் இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரும் இறக்குமதி மூலங்களின் நாடுகளாக விளங்கி முறையே ஏறத்தாழ 18.0 சதவீதம் மற்றும் 5.3 சதவீதம் பங்குகளுக்கு வகைகூறின. சீனாவிலிருந்தான பொறி மற்றும் கருவிகள், மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (கொவிட்-19 தடுப்பூசிகள்), தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள்), மற்றும் கட்டட மூலப்பொருட்கள் போன்ற பெரும்பாலான முக்கிய இறக்குமதி விடயங்கள் மீதான செலவினம் 2022இல் வீழ்ச்சியடைந்தது. மலேசியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், மற்றும் உணவுத் தயாரிப்புக்கள் காணப்பட்ட வேளையில், பெற்றோலிய உற்பத்திகள் மலேசியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 65 சதவீதத்திற்குப் பங்களித்தன. இறக்குமதி மூலங்களாக சிங்கப்பூரும் ஐக்கிய அரபு எமிறேட்சும் தொடர்ந்தும் விளங்கி 2022இல் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றிருந்தன. 2022இல் சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிறேட்சு இரண்டிலுமிருந்தான முக்கிய இறக்குமதிகள் பெற்றோலிய உற்பத்திகளையும் இரசாயன உற்பத்திகளையும் உள்ளடக்கியிருந்தன. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த இறக்குமிச் செலவினங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் முதல் பத்து இறக்குமதி மூலங்கள் (இந்தியா, மலேசியா, ருஷியா மற்றும் சிங்கப்பூர் தவிர) உட்பட முக்கிய இறக்குமதி மூலங்களுடன் தொடர்பான செலவினம் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.


வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

நாடு முன்னொருபோதுமில்லாத விதத்தில் 2022இல் மோசமான பொருளாதாரச் சரிவினைக் காட்டியமைக்கிடையிலும் அனைத்து ஆர்வலர்களினதும் முயற்சிகளின் ஆதரவுடன் வணிகப்பொருள் வர்த்தகத் துறை தொடர்ந்தும் செழிப்பானதொரு

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்



வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்



நிலையில் காணப்பட்டது. செலாவணி வீதத்தின் தேய்வு ஏற்றுமதித் துறைக்கு பெருமளவிற்கு நன்மையளித்த அதேவேளை தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தமை மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்பட்டமை என்பன ஏற்றுமதித் துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையுடன் விளங்குவதற்கு உதவியன. வர்த்தகத் துறைக்கு வசதியீனமானதொன்றாக விளங்கிய போதும் ஏனையவற்றிற்கிடையில் ஏற்றுமதிப் பெறுகைகளை தாய்நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் அவற்றை மாற்றும் தேவைப்பாடுகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், மற்றும் அளவுத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமை போன்ற குறிப்பிட்ட கொள்கை வழிமுறைகள் உத்தரவளிக்கப்பட்டன. இவை, சுதந்திரத்திற்குப் பின்னர் காணப்பட்ட மோசமான சென்மதி நிலுவை நெருக்கடிக்கிடையில் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களினதும் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாக அமைந்தன. தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளின் நியதிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டவேளை விரைவான முறையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான பேச்சுவார்தைகள் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கம் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் அனைத்து வர்த்தகப் பேச்சுவார்த்தைகளையும் கையாள்வதற்காக பன்னாட்டு வர்த்தக அலுவலகமொன்றினையும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் இணைப்புக்களை பேணுவதற்காக வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான முகவரொன்றினையும் நிறுவுதல் மற்றும் வர்த்தகச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தினை மீளறிமுகப்படுத்தல் போன்ற பல வர்த்தக ஆதரவுக் கொள்கைகளை அறிவித்தது. ஏற்றுமதிகளுக்கும் குறிப்பிட்ட இறக்குமதிகளின் பதிலீடுகளுக்கும் ஆதரவளிப்பதற்காக, எதிர்காலத்தில் பொருளாதாரம் மீட்சியடைந்து வருவதனால் நிலையானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான கொள்கைகளும் அவற்றைச் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடுவதும் வலுவான தேவைப்பாடாகவுள்ளது. பேரண்டப்பொருளாதார தோற்றப்பாட்டில் காணப்படும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுடன் ருஷியா-உக்ரேனிய போர், உயர்ந்த பணவீக்கம், இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் உலகளாவிய சந்தைகளில் காணப்படும் மந்தம் தொடர்பான அச்சம் என்பன 2022இன் பின்னரைப்பகுதியின் கூடியளவு சவால்களைத் தோற்றுவித்தபோதும் 2022இன் முதலரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரம் கொவிட்-19இன் எதிர்மறையான பரவல்களிலிருந்து மீண்டும் எழுச்சியுற்றது. இதன் விளைவாக, உலக வர்த்தக அமைப்பானது உலக வணிகப்பொருள் வர்த்தக அளவின் வளர்ச்சி (2021இன் 9.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியிலிருந்து 2022இல் 3.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் எனவும் அது 2023இல் 1.0 சதவீதத்திற்கு மிதமடையக்கூடும் எனவும் மதிப்பிடப்பட்டது. இப்பின்னணியில், நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலத்தில் எதிர்கால உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை வெற்றி கொள்வதற்கு நிலையான முறையில் கூடியளவிற்கு நிலைத்திருக்கக்கூடிய கொள்கைத் தலையீடுகள் அதிகாரிகளினால் வழங்கப்படுகின்ற அதேவேளை அண்மிய காலத்தில் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு தீவிரமான கொள்கைகள் முக்கியமானதாகும். உயர்ந்த உற்பத்திச் செலவுகள் போன்ற வழங்கல்பக்க தடைகளை குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஆதரவுடன் சாத்தியமான உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் உற்பத்தி வலையமைப்புகளை பயன்படுத்திக் கொள்ளுவதற்கு புத்தாக்கத்தால் வழிவகுக்கப்பட்ட ஏற்றுமதி நோக்குநிலையை வலுப்படுத்தல், பெறுமதிகூட்டல்களை மேம்படுத்தல், நிறுவன ரீதியான கட்டமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்தல், படிமுறையிலமைந்த நிருவாகத் தடைகளை நீக்குதல், மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழல்களை உருவாக்குதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

இறக்குமதிச் செலவினங்களை முகாமை செய்வதற்கு குறிப்பிடத்தக்க வர்த்தகக் கொள்கை வழிமுறைகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன. 2022இன் முதற்காலாண்டுப்பகுதியின் உயர்ந்த இறக்குமதிச் செலவினம் மற்றும் செலாவணி வீதத்தின் மீதான முன்னொருபோதுமில்லாத அழுத்தம் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் 2022இன் முதலரைப்பகுதியில் இறக்குமதிக்கான கேள்வியைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்தன. இதற்கமைவாக, உரிமம் வழங்கும் தேவைப்பாடுகள், மற்றும் 2022 மாச்சு காலப்பகுதியிலிருந்து இறக்குமதி வரிகளின் அதிகரிப்பு போன்ற வழிமுறைகளை அரசாங்கம் விதித்த வேளையில், மத்திய வங்கி 2022 மாச்சிலிருந்து செலாவணி வீதத்தில் கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்ததுடன் 2022 மேயிலிருந்து குறிப்பிட்ட இறக்குமதிகளின் மீது 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாடுகளையும் விதித்தது. முறைசாரா மார்க்கங்களினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இறக்குமதிக் கொடுப்பனவுகளையும் சமாந்தரச் சந்தைகளிலிருந்து செலாவணி வீதத்தின் மீது தோன்றுகின்ற அழுத்தங்களையும் கட்டுப்படுத்தும் பொருட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆரம்பக் கணக்குகள், சரக்குக் கணக்குகள், ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் என்பனவற்றின் பயன்பாட்டின் மீது கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, ஏற்பாவணங்களுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு நியதிகளுக்கெதிரான ஆவணங்கள், ஏற்றுமதிகளுக்காகப் பயன்படும் அத்தகைய ஆவணங்கள் நீங்கலாக, வர்த்தக வங்கிகளுடனான முன்னேற்பாடுகளின் கீழ் மாத்திரம் செய்யப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டவேளையில் 2022 மே 20இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆரம்பக் கணக்கு/

சிறப்புக்குறிப்பு 7
ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதையும் மாற்றுவதையும் கண்காணித்தல்

அறிமுகம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவல் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் பாதகமான அபிவிருத்திகள் என்பவற்றுக்கு மத்தியில் அண்மைய ஆண்டுகளில் எதிர்பாராத சவால்களின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சியுடன் இலங்கையின் வெளிநாட்டுத் துறை தீவிரமடைந்த பாதிக்கப்படும் தன்மைகளை எதிர்கொண்டது. பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பியதை முன்னிலைப்படுத்தி அதிகரித்த இறக்குமதிகள், சுற்றுலாத் துறை வருவாய்களில் மிதமடைதல் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவடைதல் என்பன காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது. நாட்டின் நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தல் தரங்குறைக்கப்பட்டமையானது உயர்வான படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளுக்கு மத்தியில், உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான பெறுவழியினைத் தடைப்படுத்தி நிலைமையை மேலும் மோசமாக்கியது. குறைவடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் காரணமாக வெளிநாட்டுத் துறையில் அதிகரிக்கின்ற சமமின்மைகளைப் பரிசீலனையில் கொண்டு, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை நிறைவாக்குவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. அத்தகைய தேவைப்பாடுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் அமுல்படுத்தும் நோக்குடன் 2021ஆம் ஆண்டில் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் அத்தகைய பெறுவனவுகளை இலங்கை ரூபாய்களுக்கு மாற்றுதல் என்பவற்றை கட்டாயப்படுத்தி விதிகளை (அட்டவணை சி.கு. 7.1) தாபித்தமையினை இது உள்ளடக்குகின்றது.

ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தொடர்பிலான கொள்கைகளின் பரிணாமம்

எந்தவொரு நாட்டிற்கும் வெளிமூல அதிர்வுகளுக்கெதிரான தாங்குதளங்களை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் மிகமுக்கிய மூலமொன்றினை ஏற்றுமதிகள் தோற்றுவிக்கின்றன. ஏற்றுமதிகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, இலங்கையில் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் உறுதியான ஏற்றுமதித் துறையினைக் கட்டியெழுப்புவதற்கு ஆக்கபூர்வமான கொள்கைகளை செயற்படுத்தின. எனினும், சென்மதி நிலுவைகள் மீது முழுபலத்தையும் பிரயோகிக்காத விதத்தில் ஏற்றுமதித் துறையின் உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்படுவதை ஒரு நாடு உறுதிசெய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான தேவையானது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 1973 காலப்பகுதியின் தொடக்கத்தில் விதிக்கப்பட்டதுடன் 1993 வரை தொடர்ந்தது. நாட்டிற்கு அனுப்புவதற்கும் ஒப்புவிப்பதற்குமான இத்தேவைப்பாடு நடைமுறைக்கணக்கு கொடுக்கல்வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்தி நாட்டின் உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்வதன் பாகமாக 1994ஆம் ஆண்டின் பன்னாட்டு நாணய நிதிய உடன்படிக்கையின் VIII ஆம் உறுப்புரையின் ஏற்றுக்கொள்ளலைத் தொடர்ந்து தாராளமயப்படுத்தப்பட்டது. அதற்கமைய, ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் அதனை இலங்கையில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது ரூபாவில் வைத்திருப்பதற்கு அல்லது வெளிநாட்டு வங்கியொன்றில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அவற்றை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2016 ஏப்பிறலில் நாட்டிற்கு அனுப்பும் தேவைப்பாடு மீள அறிமுகப்படுத்தப்பட்டு, தொடக்கத்தில் ஏற்றுமதித் திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் இலங்கைக்கு பெறுகைகளை அனுப்புவதற்கு ஒவ்வொரு பொருட்கள் ஏற்றுமதியாளரையும் தேவைப்படுத்தியது. அதனைத்தொடர்ந்து, இது 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் இயற்றப்பட்டதுடன் இவ் ஒழுங்குவிதிகள் மீள அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2019 ஒத்தோபரில் 180 நாட்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதார அயல் நாடுகளாக கருத்திற்கொள்ளக்கூடிய சில பிராந்தியப் பொருளாதாரங்களும் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவை உச்சப்படுத்துவதை உறுதிசெய்வதற்கு அத்தகைய நாடுகள் இதனையொத்த கொள்கைகளை நடைமுறைப்படுத்தின என்பதைக் குறிப்பிடுவது உசிதமாகும் (அட்டவணை சி.கு. 7.2).

ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதற்கு ஏற்றுமதிப் பெறுகைகள் எவ்வாறு துணையளிக்கின்றன

ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்பட்டவுடன் பெறுகைகளின் பாகம் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் போன்ற வெளிநாட்டு நாணயத்தில் உள்ள கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும். வெளிநாட்டுச் செலாவணியின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு[1] மீதி விற்பனை செய்யப்படுமாயின், அத்தகைய பெறுகைகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு சேர்க்கப்பட்டு, திரவத்தன்மையினை அதிகரிக்கின்றது. இதே போன்று தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலாத் துறை வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் போன்ற அதிகாரமற்ற வணிகர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற வேறு வெளிநாட்டுச் செலாவணி மூலங்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு சந்தைத் திரவத்தன்மை அதிகரிப்பிற்கு பங்களிக்கும். வங்கித்தொழில் முறைமையானது அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளிற்கு அதாவது நடைமுறை மற்றும் மூலதனத் தன்மை இரண்டு வகையிலும் பல்வேறு தேவைகளுக்கும் இடமளிக்கவேண்டும். அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயம் இதற்காகப் பயன்படுத்தப்படும். இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்வதன்

1 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஒரு வங்கி

அட்டவணை சி.கு. 7.1
நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக வழங்கப்பட்ட விதிகள்

விதிகளின் பெயர்	முக்கிய அம்சங்கள்
201.02.18 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள்	• கப்பலேற்றத் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் தொடர்பிலும் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொள்ளல். • அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் கிடைத்ததன் மீது உடனடியாக மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல்.
2021.03.09 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (01ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்)	• கிடைப்பனவின் 14 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல்.
2021.04.09 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (02ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்)	• கிடைப்பனவின் 30 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 10 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல்.
2021.05.28 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (03ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்)	• கிடைப்பனவின் 30 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்திற்கு குறையாது இலங்கை ரூபாய்களாக மாற்றுதல்.
2021.10.28 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (01, 02, 03 மற்றும் 04ஆம் இலக்க முன்னைய விதிகளின் ஏற்பாடுகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன)	• இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதிசெய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் கட்டாயமாகப் பெறுதல். • அத்தகைய பெறுகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை இலங்கை ரூபாய்களாக கட்டாயமாக மாற்றுதல்.
2022.03.11 அன்று வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க விதிகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன)	• இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் கட்டாயமாகப் பெறுதல். • அத்தகைய பெறுகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை இலங்கை ரூபாய்களாக கட்டாயமாக மாற்றுதல். • ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்தி உள்நாட்டு வழங்கல்களுக்கான கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டதுடன் உபாய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான விலக்களிப்புக்கள் அனுமதிக்கப்பட்டது.
2022.08.12 அன்று வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விதிகளின் திருத்தம்)	• சேவை ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் இலங்கைக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்கான தேவைப்பாடு அகற்றப்பட்டது.

மூலம் அதன் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பலாம். ஏற்றுமதிப் பெறுகைகளின் முக்கிய அநுகூலம் சென்மதி நிலுவை மீது அழுத்தத்தை ஏற்படுத்தாத படுகடனற்ற உட்பாய்ச்சல்களை அவை உருவாக்குவதாகும்.

நாணயவிதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை அனுப்புவதன் மீது தற்போது காணப்படுகின்ற விதிகள்

இலங்கை ரூபாவின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு வழிவகுக்கக்கூடிய பன்னாட்டு ஒதுக்குகளில் எதிர்பார்க்கப்பட்ட கடுமையான வீழ்ச்சியினைக் கருத்திற்கொண்டு, நிலைமையினைப் பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கியானது நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தேவைப்பாடுகளுக்கான விதியினை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக அவசியமான கொள்கைகளை பின்பற்றுவதன் வாயிலாக உடனடி வழிமுறைகளை எடுத்தது (அட்டவணை சி.கு. 7.1).

தற்போது காணப்படுகின்ற விதிகளின் (அட்டவணை சி.கு. 7.1) பிரகாரம், அனைத்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் அல்லது இலங்கைக்கு வெளியில் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையினுள் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும். மேலும், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் அத்தகைய பெறுகைகளை வியாபாரத்தின் தமது வெளிநாட்டு நாணயத் தேவைகளுக்காக இடமளித்து உள்நாட்டு செலாவணிச் சந்தையின் திரவத்தன்மையில் உடனடித் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் பயன்படுத்தியதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை கட்டாயமாக இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு[2] வேண்டப்பட்டுள்ளனர். அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாவன: குறித்த ஏற்றுமதி தொடர்பில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள், பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணய மீள்பெறுகை அல்லது நிதியங்களின் மாற்றல், அனுமதிக்கப்பட்ட கடன்பெறுதல்களின் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் மீளச்செலுத்தல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள், உள்நாட்டு வழங்குநர்களுக்கான அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள், வதியாத முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபக் கொடுப்பனவுகள், இலங்கையில் தொழில்புரிகின்ற வெளிநாட்டவர்களுக்கான சம்பளங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட ஒரு மாத கடமைப் பொறுப்புக்கள்.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு இவ்விதிகள் மூலம் விதிக்கப்பட்ட மாற்றுதல் தேவைப்பாடுகள் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்யப்பட்டு திருத்தப்படுகின்றன.

2 அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளை பயன்படுத்துவதன் மீது, ஏற்றுமதியாளர்கள் தமது நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் உள்நாட்டு நாணயத் தேவைப்பாடுகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றி அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் ஏதேனும் எஞ்சியவை தொடர்ந்துவரும் மாதத்தின் ஏழாம் (7ஆம்) நாளன்று அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாக மாற்றப்படுதல் வேண்டும்.

அட்டவணை சி.கு. 7.2

தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தொடர்பிலான முக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள்

நாடு	நாட்டிற்கு அனுப்பும் தேவைப்பாடு	பொருட்கள்/ சேவைகள் ஏற்றுமதிகளுக்கு ஏற்புடைமை	மாற்றுதல் தேவைப்பாடு
இந்தியா	15 மாதங்களுக்குள்	பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும்	வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் தமது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் 100 சதவீதத்தை வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கணக்கில் ஒன்றுசேர்ந்தவைகள் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது முன்னோக்கிய கடமைப்பொறுப்புக்களுக்காக மீதிகளை பயன்படுத்துவதற்கு சீர்செய்யப்பட்டதன் பின்னர் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்னர் ரூபாய்களாக மாற்றப்படவேண்டும்.
வங்காளதேசம்	7 மாதங்களுக்குள்	பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும்	உயர்வான இறக்குமதி உள்ளடக்கத்துடன் கூடிய தயாரிக்கப்பட்ட ஆடைகளின் மற்றும் ஏனைய பொருட்களின் ஏற்றுமதிகளில் 85 சதவீதமும் ஏனைய வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளின் 40 சதவீதமும்
பாகிஸ்தான்	6 மாதங்களுக்குள்	பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும்	பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளின் 85 சதவீதம் - 98 சதவீதம் மற்றும் சேவைகள் ஏற்றுமதிப் பெறுகைகளின் 65 சதவீம்
மலேசியா	ஏற்றுமதிப் பெறுகைகள் றிங்கிட் 200,000 இனை விஞ்சாவிடின் 24 மாதங்களுக்குள் அத்துடன் வேறு விடயங்களில் 6 மாதங்களுக்குள்	பொருட்கள் மாத்திரம்	2021 ஏப்பிறல் தொடக்கம் ஏற்றுமதியாளர்கள் தமது வெளிநாட்டு நாணய காசுப்பாய்ச்சல் தேவைகளுக்கமைவாக ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றலை முகாமை செய்யலாம். 2018 இற்கு முன்னர் ஏற்றுமதிப் பெறுகைகளின் 75 சதவீதம் மாற்றப்படவேண்டியிருந்தது.
தாய்லாந்து	1 ஆண்டிற்குள்	பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும்	ஐ.அ.டொலர் 1 மில்லியனுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைக் கொண்ட ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு கட்டாயமாக அனுப்பப்படவேண்டும் என்பதுடன் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதன் பின்னர் உடனடியாக தாய் பாத் ஆக மாற்றப்பட வேண்டும்.
துருக்கி	180 நாட்களுக்குள்	பொருட்கள் மாத்திரம்	ஏற்றுமதிப் பெறுகைகளின் குறைந்தது 80 சதவீதம் வங்கியொன்றுக்கு விற்பனை செய்யப்படவேண்டும்.

மூலங்கள்: பன்னாட்டு நாணய நிதியத்தின் செலாவணி ஏற்பாடுகள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் மீதான ஆண்டறிக்கை 2020
உரிய மத்திய வங்கிகளின் இணையத்தளங்கள்

இவ்விதிகளின் தேவைப்பாடுகளின் பிரகாரம், மாதாந்த ஏற்றுமதிப் பெறுகை கிடைப்பனவுகளை கண்டிப்பாக கண்காணிப்பதற்கும், நாட்டிற்கான அனுப்பல்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மாற்றப்படுவதை உறுதிசெய்வதற்கும் குறித்த பொருட்கள்/ பணிகள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய அதிகாரமளிக்கபட்ட கொடுப்பனவுகளா எனச் சரிபார்ப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வேண்டப்பட்டுள்ளனர். தற்போது, ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல்கள் தொடர்பிலான காலமுறையான தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு கைமுறையாக அறிக்கையிடப்படுவதுடன் விதிகளின் ஏற்பாடுகளுடன் முழுமையான மற்றும் கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் வழங்கப்படுகின்ற பதிவேடுகளை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் பரிசோதிப்பதுடன் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளுகின்றது. ஏற்றுமதியாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தொடர்பில் விதிகளுடன் ஏதேனும் இணங்காமையினை கண்காணித்து அதற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு வெளிநாட்டு செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு இவ்விதிகள் அதிகாரமளிக்கின்றன.

அதற்கமைய, அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும், நாட்டிற்கு அனுப்பும் இறக்குமதிப் பெறுகைகள் மற்றும் மாற்றுதல்கள் மீதான பின்வரும் மாதாந்த தகவல்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அடுத்துவருகின்ற மாதத்தின் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாகச் சமர்ப்பிக்கின்றனர்.

- அனைத்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் அத்துடன்/ அல்லது இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் கிடைக்கப்பெற்ற நாட்டிற்கு அனுப்பப்படும் ஏற்றுமதிப் பெறுகைகள்.
- கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியன் மீது வெளிநாட்டு நாணயத்தின் இலங்கை ரூபாய்க்கான மாற்றுதல்.
- 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்பப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தான அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள்.
- ஏற்றுமதிப்பெறுகைகளிலிருந்து உள்நாட்டு வழங்குநர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் அவற்றின் மாற்றுதல்களும்.
- ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவது மீதான விதிகளின் தேவைப்படுத்தலுக்கமைவாக கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்பப்படாத ஏற்றுமதிப் பெறுகைகள்.
- கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்குதல் திகதியிலிருந்து 180 நாட்களை விஞ்சி கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல்கள்.

விதிகளுடனான இணங்குவித்தலை கண்காணித்தல்

மாதாந்த அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் அறிக்கையிடப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்பாத ஏற்றுமதியாளர்களை அதற்கான காரணங்களை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி கோருகின்றது. பதில்களின் அடிப்படையில், இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை அனுப்பும் தேவைப்படுத்தல் மீதான விதிகளுடன் இணங்கியொழுகாத ஏற்றுமதியாளர்களுக்கு சட்ட நடவடிக்கையைத் தொடுக்கும்

5

சாத்தியப்பாடு இலங்கை மத்திய வங்கியினால் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவது கண்டிப்பாக கண்காணிக்கப்படுவதுடன் விதிகள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிப்பதை உறுதிசெய்யும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் பற்றிய மாதாந்த கண்காணித்தலுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைக் கோருவதன் மூலம் அவர்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் மீது அவர்கள் மீது இலங்கை மத்திய வங்கி விசாரணைகளை நடாத்துகின்றது. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் அறிக்கையிடப்பட்ட தகவல்களை சரிபார்ப்பதற்கு இது இலங்கை மத்திய வங்கியை இயலச்செய்துள்ளதுடன் தரவுகளை அறிக்கையிடுதலை சீரமைப்பதற்கும் வசதி ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவதும் மாற்றுவதும் விதிகளுக்கமைவாகக் காணப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதற்கு அதிகாரமளிக்கபட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள், உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள், உள்நாட்டு வழங்குநர்கள் மூலமான மாற்றுதல்கள் போன்றவை மீது விசேட விசாரணைகளும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், தற்போது காணப்படுகின்ற விதிகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அவற்றுடனான கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கும் ஏற்றுமதியாளர்களுடன் ஒருவருக்கொருவர் சந்திப்புக்களையும், துறைவாரியான சந்திப்புக்களையும், இணங்குவித்தல் அலுவலர்களுடனான சந்திப்புக்களையும், ஏற்றுமதித் துறைகளின் வேறு ஆர்வலர்களுடனான கலந்துரையாடல்களையும் இலங்கை மத்திய வங்கி நடாத்தியது.

விதிகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தியமை அதனைத்தொடர்ந்த கண்டிப்பான கண்காணித்தலுடன் இணைந்து, 2021 ஒத்தோபர் தொடக்கம் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது (வரைபடம் சி.கு.7.1). 2022 காலப்பகுதியில் வணிகப் பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 17,755.8 மில்லியன் தொகையுடையதாகவிருந்த அதேவேளை பொருட்கள் ஏற்றுமதியினை நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 14,595.7 மில்லியனாகவும் பணிகள் ஏற்றுமதியினை நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 3,160.1 மில்லியன் கொண்ட தொகையாகவுமிருந்தது. 2022ஆம் ஆண்டிற்கான வணிகப் பொருள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதி ஐ.அ.டொலர் 16,168.8 மில்லியனாக இருந்தது.


அதேவேளை, நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் சதவீதமாக வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட மாதாந்த மொத்த மாற்றுதல்கள் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் 20.6 சதவீதம் - 28.5 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிலிருந்தன (வரைபடம் சி.கு.7.2 மற்றும் வரைபடம் சி.கு.7.3). அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துதல் மீதான கவனமிக்க மேற்பார்வை ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் நாட்டிற்கு அனுப்பப்பட்டவற்றின் மாற்றுதலில் படிப்படியாக அதிகரிப்பொன்றினை இயலச்செய்துள்ளது. வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மாற்றப்பட்ட பெறுமதி 2022ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4,220.2 மில்லியனாகவிருந்ததுடன் ஐ.அ.டொலர் 3,614.6 மில்லியன் தொகையுடைய வணிகப்பொருட்களின் மாற்றலையும் ஐ.அ.டொலர் 605.6 மில்லியன் தொகையுடைய சேவை ஏற்றுமதிகளின் மாற்றலையும் உள்ளடக்கியிருந்தது.

வரைபடம் சி.கு. 7.1
ஏற்றுமதிகள், வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளின் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் என்பவற்றின் போக்கு




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கைச் சுங்கம்

வரைபடம் சி.கு. 7.2
வணிகப் பொருள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதலின் போக்குகள்: 2022 சனவரி – திசெம்பர்



மூலம்: இலங்கை மத்திய வங்கி


வரைபடம் சி.கு. 7.3
சேவைகள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதலின் போக்குகள்: 2022 சனவரி – திசெம்பர்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 7.4

ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை பற்றிய பொதுநோக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை

ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதை வினைத்திறனுடன் கண்காணிக்கும் தேவையினைக் கருத்திற்கொண்டு, தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலமைந்த தன்னியக்கமான கண்காணித்தல் முறையொன்றான ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை 2022 யூனில் தொடங்கப்பட்டது. விதிகள் அறிமுகப்படுத்தப்பட்ட குறிக்கோளை அடைந்துகொள்ளும் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்படுவதையும் ஏற்றுமதிப் பெறுகைகளின் உள்நாட்டு நாணயத்திற்கான மாற்றலையும் கண்காணிப்பதை இம்முறைமை வசதிப்படுத்துகின்றது. கைமுறையாக தரவு செயன்முறைப்படுத்தலைக் குறைத்தல் மற்றும் பல்வேறு கட்டங்களிலும் தரவுப்பகுதிவு இரு தடவை நிகழுதல் போன்றவற்றைக் குறைப்பதன் வாயிலாக அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தலின் வினைத்திறனையும் இம்முறைமை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆகியன இம்முறைமையின் மூன்று முக்கிய பங்கேற்பாளர்களாகும். நாட்டிற்கு வெளியில் கப்பலேற்றப்படுகின்ற அனைத்து ஏற்றுமதிகள் பற்றிய விபரங்களை இலங்கைச் சுங்கம் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமைக்கு பகிர்கின்ற அதேவேளை அத்தகைய ஏற்றுமதியாளர்களுடன் இணைந்த பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் பற்றிய விபரங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமைக்கு அறிக்கையிடுகின்றனர் (வரைபடம் சி.கு.7.4). அதற்கமைய, ஏற்றுமதிகள் பற்றிய மிகத் துல்லியமான விபரங்கள் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்படாதவிடத்து அதனைக் கண்டுபிடிப்பதை இம்முறைமை வசதிப்படுத்தி இணங்காத ஏற்றுமதியாளர்களுக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கும் வசதியளிக்கும்.

2022 யூனில் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை தொடர்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் சுங்கப் பிரகடனங்கள் CUSDECs[3] அடிப்படையிலமைந்த ஏற்றுமதி பணவனுப்பல் தரவுகளின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் தரவேற்றும் செயன்முறையிலுள்ளவை போன்று இனங்காணப்பட்ட சில தொழில்நுட்பக் குறைபாடுகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. தகவல் வழங்குவதை எளிமைப்படுத்துவதற்காக தற்போது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஏற்றுமதியாளர்களை இணைக்கின்ற தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, சுங்கப் பிரகடனங்களுக்கெதிராக ஏற்றுமதிக் கிடைப்பனவுகள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் செம்மையினைப் பொருத்துதல் என்பவற்றிலிருந்தான தடைகள் விசேடமாக திறந்த கணக்கு கொடுக்கல்வாங்கல் மீதானவை குறைக்கப்படும். ஆகையினால், ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்பும் கண்காணித்தல் பொறிமுறையின் வினைத்திறனை இம்முறைமை மேம்படுத்தும் என்பதுடன் எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்களை இணைக்கின்ற தேசிய முறைமையொன்றினூடாக நாட்டினுள் ஏற்றுமதிப் பெறுகைகள் அனுப்படுவதைச் சீரமைக்கும்.

இம்முறைமையூடாக ஏற்றுமதி கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்து பின்தொடரும் வெற்றியானது முறைமையின் அனைத்து ஆர்வலர்களினதும் செயல்திறன்வாய்ந்த ஒத்துழைப்பின் மூலம் மாத்திரமே அடையப்பெறக்கூடியதாகவிருக்கும். ஆகையினால், இத்தேசிய முயற்சியின் வெற்றியை நோக்கிப் பணியாற்றுவது இம்முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களினதும் பொறுப்பாகும்.

3 சுங்கப் பிரகடனங்கள்

உசாத்துணை

1. Central Bank of Sri Lanka Annual Reports
2. Rules on Repatriation of Export proceeds into Sri Lanka

சரக்கு கணக்குக் கொடுப்பனவு நியதிகளின் மீதான இறக்குமதிகள் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டது. இது, வங்கித்தொழில் முறைமைக்குள் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவினை மிக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பயன்படுத்த உதவியது. எனினும், அத்தகைய வரையறுப்புக்களின் காரணமாக உள்நாட்டுச் சந்தைகளில் காணப்படும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பனவற்றின் பற்றாக்குறையினைக் கருத்திற்கொண்டு, 2022 யூனிலிருந்து குறிப்பிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிக்காக பல்வேறு தளர்த்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கிடைக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி மீது மேலும் அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம், 2022 ஓகத்தில் குறிப்பிட்ட நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட்களை முக்கிய இலக்காகக் கொண்டு தற்காலிக இடைநிறுத்தல்கள் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் விதித்தபோதும் 2022 செத்தெம்பரில் பல்வேறு தளர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் அத்தகைய கட்டுப்பாடுகளின் காத்திரமான தன்மை குறைக்கப்பட்டது. எனினும், இவ்வழிமுறைகள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் அழுத்தங்களை முகாமை செய்வதற்கு மிக முக்கியமானவையாக இருந்தன.

2022 காலப்பகுதியில் வெளிநாட்டுத்துறைக்கு நிறுவன ரீதியான உதவியை மேம்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஆர்வலர்களிடையே காணப்பட்ட மோசமான இணைப்பு, தேசிய ஏற்றுமதி உபாய நடவடிக்கைத் திட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் போதுமானதாக இல்லாமை போன்ற விரைவான நடைமுறைப்படுத்தல்களுக்கு பாதிப்பாக விளங்கிய தடைகளை நிவர்த்தி செய்துகொண்டு தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கமைவாக, விரும்பத்தக்க இலக்குகளை 2027 அளவில் எய்துவதற்கு, தற்போதைய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தேவையான சீராக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கேற்ப தேசிய ஏற்றுமதி உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் செயன்முறை மீளாய்வு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் நேரடியான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் ஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தக தகவல்களையும் சந்தைப் புலனாய்வுகளையும் தொடர்ந்து வழங்கியது. வர்த்தக சம்மேளனமும் ஏற்றுமதியாளர்களை அங்கீகரித்தல், மற்றும் ஏற்றுமதி விருதுக் கொண்டாட்டங்களை நடத்துதல் என்பன மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்புக்களுக்குப் பங்களித்தவேளையில் கொள்கைகளை வகுப்பதிலும் மனக்குறைகளைக் கையாள்வதிலும் அரச மற்றும் தனியார் துறை ஆர்வலர்களிடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்கு உதவுகின்றது. இலங்கை கட்டளைகள் நிறுவனம் தேசிய நியமங்களை வடிவமைக்கும் மற்றும் அவற்றைத் தரமுயர்த்தும் செயற்பாட்டில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. இது தொடர்பில் இலங்கை கட்டளைகள் நிறுவனம், 2022இல் 204 நியமங்களை வெளியிட்டதுடன் 128 நியமங்களைத் திருத்தியது. பல்வேறு உற்பத்திகளுக்காகவும் புதிய பரீட்சிப்பு வசதிகளும் பரீட்சிப்பு முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டவேளை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தர உத்தரவாதப்படுத்தலை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை கட்டளைகள் நிறுவனம் பல வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களையும் ஆய்வுகூடங்களையும் பதிவுசெய்தது. சவால்மிக்க சந்தைச் சூழ்நிலைக்கிடையில் தேய்வடைந்த செலாவணி வீதத்தால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏறத்தாழ ரூ.70 மில்லியன் பெறுமதியான காப்புறுதி வியாபாரங்களை அறிக்கையிட்டது. தனியொரு கூரையின் கீழான தேசிய தளம் இன்னும் தொழிற்படாமையினால் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக இலங்கைச் சுங்கம் ஏறத்தாழ 15 அரச ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களை சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமையுடன் ஒருங்கிணைப்பதற்கான அதன் வழிமுறைகளைத் தொடர்ந்தது. அதேவேளை, இலங்கைச் சுங்கம் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அதன் நடவடிக்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி, 2023 சனவரி அளவில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான ஒட்டுமொத்த முன்னேற்றத்தினைக் காட்டியது. இலங்கைச் சுங்கம் தொடர்பான விடயங்களை விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்காக 2021 பெப்புருவரியில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையினை சனாதிபதியிடம் 2022 யூனில் கையளித்தது. அறிக்கையானது, பொறுப்புக்களை ஆற்றும் போது சுங்கத்தின் நிருவாக மற்றும் தொழிற்பாட்டுச் செய்முறைகளை எவ்வாறு காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் மேற்கொள்வது என்பது தொடர்பிலான விதந்துரைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

முன்னுரிமைகளுக்கான பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் 2022இல் மாற்றமின்றி காணப்பட்டபோதும் ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்கள் 2021இனை விட மேம்பட்டுக் காணப்பட்டன. இலங்கை, பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் கீழ் நன்மைகளை 2022இல் தொடர்ந்தும் பெற்றவேளையில் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பனவற்றினால் வழங்கப்பட்ட வசதிகள் இலங்கையின் மொத்த முன்னுரிமை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 72 சதவீதத்திற்கு பங்களித்திருந்தன. இலங்கை,

தற்போதைய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ இன் செல்லுபடிக் காலம் 2023 இறுதியில் முடியும் வரை அதிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறது. அதேவேளை, தற்போதைய சுழற்சி வட்டத்தில் ஏற்கனவேயுள்ள இருபத்தேழு கூட்டத்தொடர்களுக்கும் மேலதிகமாக ஆறு புதிய பன்னாட்டு கூட்டத்தொடர்களுடன் 10 ஆண்டுகள் சுழற்சி வட்டத்தினைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டம்+ 2024 சனவரி 01 இலிருந்து 2033 திசெம்பர் 31 வரை நடைமுறையிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்கள் ஆறு புதிய கூட்டத்தொடர்களை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருப்பதனால் இலங்கை மீள விண்ணப்பிக்கக்கூடிய நிலையில் காணப்படுகிறது. இலங்கை, ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ இன் நன்மைபெறுநராக இருப்பதனால், 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய தீர்வை மற்றும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தின் முன்னுரிமைத் திட்டம் என்பனவற்றின் கீழ் ஐக்கிய இராச்சியத்திற்கான அதே தீர்வையற்ற சலுகைகளையும் தொடர்ந்தும் அனுபவித்தது. எனினும், ஐக்கிய இராச்சியம் 2023இல் நடைமுறைக்குவரும் "அபிவிருத்தியடைந்த நாடுகளின் வர்த்தகப்படுத்தல் திட்டம்" என்ற அதன் புதிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தினை 2022 ஓகத்தில் அறிமுகப்படுத்தியது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகப்படுத்தல் திட்டத்தின் விரிவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதிலிருந்து 3 ஆண்டுகளிற்கு இலங்கை நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ருஷிய கூட்டமைப்பு, அவுஸ்திரேலியா, கனடா, துருக்கி, சுவிற்சிலாந்து, நோர்வே மற்றும் நியூசிலாந்து போன்ற வேறு பல நாடுகளினால் வழங்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களிலிருந்து ஏற்றுமதிகளுக்கான அவற்றின் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்பட்டபோதும் இலங்கை தொடர்ந்து நன்மைகளைப் பெற்றது. இலங்கையின் குறுகிய ஏற்றுமதித் தளம் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களில் குறைந்த உற்பத்தி உள்ளடக்கம் என்பன அத்தகைய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் முழு நன்மைகளை பெற்றுக்கொள்வதிலிருந்து இலங்கையைத் தடுக்கின்றன.

2018 இலிருந்து தொடர்ந்தும் இயங்காதிருந்த வர்த்தகப் பேச்சு வார்த்தைகளை மீளத்தொடங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தவேளை 2022இல் இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் செயலாற்றம் திருப்திகரமற்றதாக காணப்பட்டது. இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்ற இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை நன்மையடைந்தது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடான இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்பனவற்றிற்கான ஏற்றுமதிகள் 2022இல் மொத்த ஏற்றுமதிகளில் முறையே 65 சதவீதமாகவும் 73 சதவீதமாகவும் விளங்கி உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றின் கீழான இறக்குமதிகள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாக விளங்கியதுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் முறையே 3 சதவீத (ஐ.அ.டொலர் 119 மில்லியன்) மற்றும் 4 சதவீத (ஐ.அ.டொலர் 13 மில்லியன்) பங்குகளை மாத்திரம் கொண்டிருந்தன. அதேவேளை, வர்த்தகத் திணைக்களம் ஆடைகள் மீதான 8 மில்லியன் துண்டுகள் கொண்ட தற்போதைய அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை அகற்றுவது அல்லது அனுமதிப் பங்கினை மேலும் அதிகரிப்பது உட்பட, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரச்சனைகள் பற்றி ஆர்வலர்களினால் முன்மொழியப்பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கும் விதத்தில் தீர்வையற்ற வழிமுறைகளின் தொகுப்பினை 2022இல் இற்றைப்படுத்தியது. சீனாவிற்கான குறைந்தளவு ஏற்றுமதிகளால் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை மற்றும் மெக்சிக்கோவிற்கான குறைந்த கறுவா ஏற்றுமதிகளால் வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை என்பனவற்றின் கீழான வர்த்தகம் மிதமடைந்தமையுடன் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் பிராந்திய வர்த்தக உடன்படிக்கையின் கீழான வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் தொடர்ந்தும் குறைந்த மட்டங்களிலேயே காணப்பட்டவேளையில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்தியத்தின் கீழான ஏற்றுமதிகள் 2022இல் வீழ்ச்சியடைந்தன. தற்போதுள்ள பிராந்திய உடன்படிக்கைகளைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்கு பிராந்தியத்திலுள்ள அயல்நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்துவதன் மீது கூடுதலான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதனை தேவைப்படுத்தியவேளையில், அனைத்தையுமுள்ளடக்கிய பிராந்திய பொருளாதாரப் பங்குடமை போன்ற புதியதும் பரந்தளவிலானதுமான பிராந்திய பங்குடமைகளுக்குள் நுழைவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதும் இன்றியமையாததாகும். 2018இல் உடன்படிக்கை எட்டப்பட்டதிலிருந்து தொழிற்படத் தொடங்குவதற்குத் தவறிப்போன, சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மீளாய்வு செய்முறையினை விரைவுபடுத்துவதற்காக 2022இல் புதுப்பிக்கப்பட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, நேரகாலத்துடன் சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அடையாளம் காணப்பட்ட திருத்தங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2023இன் ஆரம்பத்தில் சிங்கப்பூருடன் மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வர்த்தகக் கொள்கை மாற்றங்களில் நிலையற்றதன்மை, தீர்வையற்ற தடைகள் மற்றும் உற்பத்தி பன்முகப்படுத்தல்

அட்டவணை 5.7
இலங்கையின் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்

முன்னுரிமை உடன்படிக்கை	2021	2022 (அ)			முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் (ஏற்றுமதியின் அளவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது)
	பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)	பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)	வளர்ச்சி (%)	பங்கு (%)	
முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ)	4,312.6	4,314.7	0.05	81.4	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், கடலுணவு
இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை+ உள்ளடங்கலாக) (ஆ)	2,402.1	2,440.3	1.6	46.0	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள்
ஐக்கிய அமெரிக்கா (இ)	677.8	719.0	6.1	13.6	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள்
ஐக்கிய இராச்சியம்	680.7	659.0	-3.2	12.4	ஆடைகள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, தேயிலை
ருசிய கூட்டாட்சி (ஈ)	132.9	125.7	-5.4	2.4	தேயிலை, இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீட்ற உற்பத்திகள், ஆடைகள், கடலுணவு
அவுஸ்திரேலியா	103.5	97.0	-6.2	1.8	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, தெங்கு உள்ளீட்ற உற்பத்திகள்
கனடா	87.9	86.2	-2.0	1.6	ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு
யப்பான்	87.6	80.7	-7.9	1.5	தேயிலை, கடலுணவு, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தெங்கு உள்ளீட்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள்
துருக்கி	74.1	45.3	-38.8	0.9	தேயிலை, இறப்பர் உற்பத்திகள், ஆடைகள், இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள்
ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை	66.1	61.6	-6.8	1.2	
2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை	525.8	561.5	6.8	10.6	விலங்குத் தீனி, சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, ஆடைகள், மர மற்றும் காகித உற்பத்திகள்
1975 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (உ)	238.6	228.4	-4.3	4.3	ஆடைகள், தேயிலை, இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீட்ற உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள்
1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை	91.8	62.5	-32.0	1.2	வாசனைப் பொருட்கள், விலங்குத் தீனி, தெங்கு உள்ளீட்டு/ உள்ளீட்ற உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள்
2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை	62.3	56.6	-9.0	1.1	சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், இயற்கை இறப்பர், தெங்கு உள்ளீட்ற உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள்
2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம்	101.6	75.2	-26.0	1.4	வாசனைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், ஆடைகள், புடவைகள், இரசாயன உற்பத்திகள்
1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை	1.4	1.5	1.9	0.03	இறப்பர் உற்பத்திகள், தேயிலை, இயற்கை இறப்பர், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை
முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்	**5,334.2**	**5,300.4**	**-0.6**	**100.0**	
இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக	**42.7**	**40.4**			

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்குப் பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ஐக்கிய அமெரிக்கா ஜீ.எஸ்.பீ. 2020இல் காலாவதியானதிலிருந்து ஜீஎஸ்பீ தகைமைபெற்ற ஏற்றுமதிகளை காண்பிப்பதுடன் பின்னோக்கிய அடிப்படையுடன் மீள புதுப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஈ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(உ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை வர்த்தகத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

போதுமானளவிற்கு காணப்படாமை என்பன தற்போதுள்ள இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்துவதற்கு தடையாக விளங்குகின்றன. அதேவேளை, தாய்லாந்து (இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை), சீனா (சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை) மற்றும் இந்தியா (பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை) என்பனவற்றுடனான அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீளத்தொடங்குவதற்கான கலந்துரையாடல்கள் 2022இல் தொடர்ந்தன. தாய்லாந்துடனான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2023 சனவரியில் நிறைவடைந்த வேளையில், சீனா மற்றும் இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளின் மேலதிகச் சுற்றுக்கள் 2023இன் முன்னரைப்பகுதியில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022இல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு புதிய தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், எதிர்கால வர்த்தக உள்ளார்ந்த வளம், குறிப்பாக ஆடைத் துறைக்கான வாய்ப்புக்கள் உயர்வாக இருக்கும் இந்தோனேசியா மற்றும் வங்காளதேசத்துடனான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் உடன்படிக்கையினை மேற்கொள்ளவும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. உலக வர்த்தக அமைப்பின் 12ஆவது அமைச்சரவை மட்டத்திலான மாநாடு 2022 யூனில் ஜெனிவாவில் வெற்றிகரமாக முடிவடைந்து மீன்பிடி மீதான உதவித்தொகைகள், அவசரகால விடயங்களுக்கு உலக வர்த்தக அமைப்பின் பதிலிறுத்தல், உலக வர்த்தக அமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் பல விடயங்கள் தொடர்பான தொடர்ச்சியான முடிவுகளை உள்ளடக்கி "ஜெனிவா பொதி" என்ற வடிவத்தில் பல்புடை ரீதியாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் பாதுகாக்கப்படுகின்றன.

5.2.2 பணிகள் கணக்கு

சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2022இல் பணிகள் கணக்கின் வர்த்தகம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த மிகையினைப் பதிவுசெய்தது. எனினும், சரக்குப் போக்குவரத்துப் பணிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் உட்பட, பணிகள் கணக்கிலுள்ள அனைத்து மற்றைய துணைத் துறைகளும் குறிப்பிடத்தக்க சுருக்கங்களை பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளின் விளைவாக, பணிகள் கணக்கிலுள்ள மிகை 2021இன் ஐ.அ.டொலர் 1,586 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2,110 மில்லியனாக விளங்கியது.

பயணம் மற்றும் சுற்றுலா

ஏனையவற்றிற்கிடையே, அதிகரித்த சமூகப்பதற்றங்கள், எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் வலு கிடைக்காமை, மற்றும் பயண ஆலோசனைகள் என்பனவற்றிற்கு மத்தியில், முன்னொருபோதுமில்லாத தடங்கல்களின் விளைவாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பாதிப்புக்களுக்கிடையிலும் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022இல் உறுதியான மீட்சியொன்றினைப் பதிவுசெய்தன. இம்மீட்சிக்கு, முக்கிய பயண நாடுகளினால் விடுக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையுடன் உயர்ந்த உலகளாவிய நோய்த்தடுப்பு மருந்து ஏற்றல் வீதங்கள், அதிகரித்த வான் பயண இணைப்புக்கள் என்பன துணைபுரிந்தன. குறிப்பிடத்தக்க செலாவணி வீத தேய்வு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் என்பனவும் பயணத்திற்கான கவர்ச்சிமிக்க சேரிடமாக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொள்ள உதவின. 2021இன் பிற்பகுதியிலிருந்து உத்வேகம் பெறத் தொடங்கிய சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் உயர்வடைந்த சமூகப் பதற்றங்கள், உள்நாட்டுப் பயணத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு, மற்றும் இவற்றின் விளைவாகத் தோன்றிய எதிர்மறையான விளம்பரங்கள் மற்றும் முக்கியமான சந்தை மூலங்களினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் என்பனவற்றினால் பாதிக்கப்படுவதற்கு முன்னதாக, 2022 மார்ச்சில் உச்சத்தினைத் தொட்டது. உள்நாட்டுக் காரணிகளுக்குப் புறம்பாக, உக்ரேன்-ருஷ்யப் போரின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கசியும் தாக்கங்கள், மற்றும் சீனாவில் வெளிமுகப் பயணங்கள் தடைசெய்யப்பட்டமை என்பனவும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளினது மீட்சியை எதிர்க்கணியமாகப் பாதித்தன. எனினும், சமூகப் பதற்றங்கள் படிப்படியாக மறைந்தமையின் காரணமாக சில நாடுகள் அவற்றின் பயண ஆலோசனைகளின் கடுமையான தன்மையினைக் குறைத்துக் கொண்டமையின் விளைவாக 2022 ஒத்தோபரிலிருந்து வருகைகள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதுடன் 2023இன் ஆரம்பத்தில் அதன் உத்வேகம் அதிகரித்தது. பல்வேறு பன்னாட்டு வான் பயண நிறுவனங்கள், ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள், மற்றும் கடற்பயண சுற்றுலா என்பனவற்றை மீண்டும் ஆரம்பித்தமையும் அதேபோன்று அநேக நாடுகளில் காணப்பட்ட உலகளாவிய ஊக்குவிப்புக்களும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் புத்துயிர் பெறுவதற்குப் பங்களித்தன. இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021இன் 194,495 இலிருந்து 2022இல் 719,978இற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னர் இலங்கை ஆண்டிற்கு சராசரியாக 2 மில்லியனுக்கும் கூடுதலான சுற்றுலாப் பயணிகளின் வருகையினைப் பதிவுசெய்திருந்தது. இது, இலங்கையின் சுற்றுலா நடவடிக்கையின் உள்ளார்ந்த மட்டத்தினை எய்துவதற்கு இன்னமும் விரைவாக மீட்சியடைய வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய மூலமாக ஐரோப்பா தொடர்ந்தும் விளங்கியவேளையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான தனிப்பெரும் மூலமாக இந்தியா தொடர்ந்தும் காணப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின்படி, 432,226 சுற்றுலாப் பயணிகளுடன் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 60 சதவீதத்திற்கு ஐரோப்பா வகைகூறியதுடன், அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன. 2022இல், 213,537 சுற்றுலாப் பயணிகளுடன் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 30 சதவீதத்திற்கு வகைகூறி ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியம், வருகைக்கான இரண்டாவது மிகப்பெரிய மூலமாக விளங்கியது. நாடுகளின்படியான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் நியதிகளில், இந்தியா 123,004 வருகைகளுடன் 2022இல் முன்னணி சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மூலமாக விளங்கியதுடன் மொத்த வருகைகளில் 17 சதவீதத்திற்கும் வகைகூறியது. இதனைத் தொடர்ந்து ருஷியா (91,272), ஐக்கிய இராச்சியம் (85,187), ஜேர்மனி (55,542), மற்றும் பிரான்ஸ் (35,482) என்பன காணப்பட்டதுடன் இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து மொத்த வருகைகளில் 54 சதவீதத்திற்கு வகைகூறின.

சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 507 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,136 மில்லியனாக விளங்கி வரவேற்கத்தக்க வருடாந்த வளர்ச்சி வீதமான 124.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இல் எய்தப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் மட்டத்திற்கும் மிகக் கீழேயே காணப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் செலவிடல் மற்றும் தங்கியிருக்கும் காலம் தொடர்பில் இலங்கை சுற்றுலா

அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் 2022இல் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரிச் செலவிடல் 2021இன் நாளொன்றுக்கான ஐ.அ.டொலர் 172.6 உடன் ஒப்பிடுகையில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 169.0 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, சுற்றுலாப் பயணி ஒருவரின் தங்கியிருக்கும் சராசரிக் காலம் 2021இன் 15.1 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 9.3 நாட்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2021இல் தங்கியிருக்கும் காலம் உயர்ந்தளவில் காணப்பட்டமைக்கு, கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தடுத்து வைக்கப்படவேண்டிய காலத்தின் தேவைப்பாடு முக்கிய காரணமாக அமைந்தது. அதேவேளையில், இலங்கையில் வதிவோரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிமுகப் பயணம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் மிதமான மட்டமொன்றில் அமைந்து நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

முதலீட்டாளர்களினால் செயற்றிட்டங்கள் தாமதப்படுத்தப்பட்டமை மற்றும் அளவுகள் குறைக்கப்பட்டமை அதேபோன்று சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் கட்டுமானக் கைத்தொழில்களில் காணப்பட்ட இடையூறுகள் என்பனவற்றின் காரணமாக 2022இல் சுற்றுலாத் துறையின் முதலீடுகள் பாதிக்கப்பட்டன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2022இல் 1,054 அறைகளைக் கொண்ட கொள்ளளவுடன் ஐ.அ.டொலர் 68 மில்லியன் தொகையுடன் சுற்றுலாத் துறை தொடர்பில் 42 புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்களை அனுமதிக்காகப் பெற்றுக் கொண்டது. 2021 உடன் ஒப்பிடுகையில், 2022இல் பெறப்பட்ட செயற்றிட்டங்களினது முதலீட்டுப் பெறுமதியில் 48.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சி காணப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் நியதிகளில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 2022இல் சுற்றுலா தொடர்பில் மொத்தமாக 363 அறைகளைக் கொண்ட கொள்ளளவுடன் ஐ.அ.டொலர் 36 மில்லியன் பெறுமதியானது 20 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலை வழங்கியது. மேலும், 5,424 அறைகளுடன் கூடிய 95 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் தற்போது நிறைவடைவதற்கான வெவ்வேறுபட்ட மட்டங்களுடன் கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற அதேவேளை 1,623 அறைகளுடன் கூடிய 25 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் 2023இல் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கமைய, 2022இல் மொத்தமாக 25,597 அறைகளுடன் கூடிய 469 தரமிடப்பட்ட நிறுவனங்களும் சிறிய வில்லா இல்லங்கள், பங்களாக்கள், விருந்தினர் இல்லங்கள், மரபுரிமை பங்களாக்கள், மரபுரிமை இல்லங்கள், வீடுகளில் தங்கும் அலகுகள், வாடகைக்கு தொடர்மாடி மனைகள், மற்றும் வாடகைக்கு விடப்படும் இல்லங்கள் என்பன உள்ளடங்கலாக 22,523 அறைகளைக் கொண்ட மொத்த இயலளவுடன் 3,360 துணை நிறுவனங்களும் தொழிற்பட்டன.

கூடுதலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகப் பல்வேறு கொள்கை முன்னெடுப்புக்களும் பல்வேறுபட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் 2022இல் மேற்கொள்ளப்பட்டன. வளம் பெற்றுவரும் உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழிலின் அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் புதிய பெறுமதிமிக்க சந்தைகளைக் கண்டறிந்து கொள்வதும் வலுவான சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதும் இலங்கை சுற்றுலாவிற்கு அவசியமாகும். இதனை எய்தும் விதத்தில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுற்றுலாத் துறையின் மீட்சி மற்றும் எதிர்கால மீளெழுச்சிக்கான நிகழ்ச்சிநிரலொன்றினை நிர்ணயிக்கும் பொருட்டு பிரச்சினைகள், வாய்ப்புக்கள், மற்றும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை அடையாளம் காணும் இலங்கை சுற்றுலாவிற்கான உபாயத் திட்டம் 2022-2025இனை 2022 ஏப்பிறலில் வெளியிட்டது. பயணிகளின் வருகைதரும் நடவடிக்கையினை இலகுபடுத்துவதற்கு உதவும் விதத்தில் இலங்கை பெரும்பாலான நாடுகளிலிருந்து வருகைதரும் பன்னாட்டுப் பயணிகளுக்கு, 2022 சனவரியில் வருகைதரும் பொழுதே விசாவினைப் பெறும் வசதியினை மீண்டும் ஆரம்பித்தது. உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றிற்கு மத்தியில் பல்வேறுபட்ட சுற்றுலாப் பணிகளை வழங்குவோரினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதற்கு அனைத்து வகை சுற்றுலா வழிகாட்டிகளுக்குமான உரிமங்களின் செல்லுபடிக் காலத்தினை நீடித்தமை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பட்டியலிடப்பட்ட அனைத்துச் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்குமான ஆண்டுப் பதிவுக் கட்டணத்தினைத் தள்ளுபடி செய்தமை

அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்


	2018	2019	2020	2021	2022 (அ)	ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2022
சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை)	2,333,796	1,913,702	507,704	194,495	719,978	270.2
வருகையின் நோக்கத்தின் அடிப்படையில்						
பொழுதுபோக்கு	1,979,819	1,592,212	444,328	157,766	428,838	171.8
வியாபாரம்	71,255	70,068	13,946	3,956	30,057	659.8
ஏனையவை	282,722	251,422	49,430	32,773	261,083	696.6
சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000)	25,205	19,902	4,315	2,937	6,725	129.0
தங்கும் அறை குடியிருப்பு வீதம் (%)	72.8	57.1	15.0	18.6	30.4	63.4
மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்)	711,961	646,362	124,189	101,903	338,052	231.7
தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ.)	305,066	337,755	244,609	523,936	469,531	-10.4
மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ)	388,487	402,607	347,751	357,927	386,236	7.9
நேரடி தொழில்நிலை	169,003	173,592	175,990	177,476	190,521	7.4
மறைமுக தொழில்நிலை	219,484	229,015	171,761	180,451	195,715	8.5

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

போன்ற அநேக வழிமுறைகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன. வருகையின் போது தொற்றுப் பீடித்திருக்கவில்லை என்பதனை நிரூபிக்கும் பிசிஆர் அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு உட்பட, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த நோய்த்தடுப்பு வழிமுறைகள் 2022 திசெம்பரில் அகற்றப்பட்டன. அதேவேளை, 2022இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிவுசெய்யப்பட்ட தங்குமிடங்களின் மொத்த எண்ணிக்கை அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் நிலவிய அசாதாரணமான பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு மத்திய வங்கி, சுற்றுலா உட்பட, அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலுமுள்ள பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு, ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து 2022 திசெம்பர் வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு வங்கிகளைக் கேட்டுக் கொண்டது. பொதுநலவாய சுதந்திர நாடுகளின் பிராந்தியத்திலிருந்து கூடுதலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு ருஷியா மற்றும் உக்ரேனிலிருந்தான பயண முகவர்களுக்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஒருவருடன் ஒருவர் பரீட்சயமாகிக் கொள்ளும் பிரச்சாரத்தினை ஒழுங்குசெய்த வேளையில், அத்தகைய முன்னெடுப்புக்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கும் விரிவாக்கப்பட்டது. மேலும், இந்தியச் சந்தையினை இலக்காகக் கொண்டு திரைப்படச் சுற்றுலா மற்றும் வீதியோரக் காட்சிப்படுத்தல் வசதிகள் போன்ற பல்வேறுபட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. அதேவேளை, இலங்கை நலனோம்பு சுற்றுலா ஆர்வலர்கள் செயற்றிட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2022 பெப்புருவரியில் அலுவலக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், இலங்கையிலுள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் ஓய்வுகாலமனைகள் சிலவும் உலகளாவிய சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள பல்வேறுபட்ட ஆய்வரங்குகளில் விருதுகளைப் பெற்றுக்கொண்டன. இதன்

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

அடிப்படையில், இலங்கை "வேர்ள் பக்கேர்ஸ்" இனால் பயணம் செய்வதற்கு உலகிலுள்ள பாதுகாப்பான இடங்களிலொன்று எனவும் "இன்டிபென்டன் "மகஷின்-யு.கே" இனால் "2023இல் பயணம் செய்வதற்கான மிகச் சிறந்த நாடு" எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் தெரிவு விருதின் மூலம் கொன்டே நாஸ்டி ரவலர்ஸ் இனால் பயணம் செய்வதற்கேற்ற முதல் 20 இடங்களில் இலங்கையும் ஒன்று என அங்கீகரிக்கப்பட்டது. சுற்றுலாத் துறையானது, மின்வலுத் தீர்வைகளின் அதிகரிப்பு, சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மீதான வரிகள் மற்றும் தீர்வைகள், அதிகளவு தொழிலாளர் புலம்பெயர்வின் காரணமாக சுற்றுலாவிடுதிகளில் காணப்படும் தேர்ச்சிபெற்ற அலுவலர்களின் பற்றாக்குறை, ருஷியா-உக்ரேன் போரின் காரணமாக பொதுநலவாய சுதந்திர நாடுகளிலிருந்தான குறைவடைந்த வருகைகள், உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் காணப்படும் உயர்ந்த பணவீக்கம், உலகளாவிய மந்த நிலைமைகளின் பயமுறுத்தல், மற்றும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி என்பன உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்நோக்குகிறது. இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு இத்தொழில் துறையிலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகும்.

போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் மற்றும் ஏனைய பணிகள்

5

போக்குவரத்து, கணனி மற்றும் தகவல் பணிகள் போன்றன உள்ளிட்ட சென்மதி நிலுவைப் பணிகளின் கணக்கிலுள்ள பெரும்பாலான துணைத் துறைகள் 2022இல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைந்த செயலாற்றத்தினையே பதிவுசெய்தன. கடல் மற்றும் வான் சரக்குப் போக்குவரத்து துணைத் துறைகள் இரண்டும் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. சரக்குக் கையாளல் உள்ளிட்ட கடற்சரக்கு, மாற்றிக் கப்பலேற்றல், கப்பல் வருகை மற்றும் கொள்கலன் கையாளல் என்பனவற்றின் கீழான அனைத்துக் குறிகாட்டிகளும் இவ்வாண்டுப்பகுதியில், குறிப்பாக 2022இன் பின்னரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்து, எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2022இன் முதற் காலாண்டிற்குப் பின்னர் வணிகப்பொருட்களின் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் படிப்படியாகக் குறைவடைந்தமையே இவ்வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணமாகும். இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வு, படுகடனை நிறுத்தி வைப்பதற்கான அறிவிப்பிற்கு வழிவகுத்த உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட கடுமையான வெளிநாட்டு நாணய திரவத்தன்மைப் பற்றாக்குறை, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அதேபோன்று 2022இன் இரண்டாமரைப்பகுதியில் உலகளாவிய வர்த்தகம் மிதமடைந்தமை என்பன மேற்கூறிய வீழ்ச்சியை தீவிரப்படுத்தின. இது, கொவிட்-19 இடையூறுகளின் காரணமாக

உச்சமட்ட விலைகளிலிருந்து பன்னாட்டு சரக்குக் கட்டண வீதங்கள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமையுடன் இணைந்து, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் கடல் மற்றும் வான் சரக்குப் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சியினைத் தோற்றுவித்தது. எனினும், அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள், மற்றும் வதியும் இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணம் படிப்படியாக மீண்டும் ஆரம்பமாகியமை என்பனவற்றுடன் ஆண்டுப்பகுதியில் வான் பயண போக்குவரத்துப் பணிகளின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் இரண்டும் நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், பயண வெளிப்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டிற்கு ஒத்ததாக 2022இல் மிதமான மட்டங்களில் காணப்பட்டன. தகவல் தொழில்நுட்பவியலை பிரதானமாகக் கொண்ட வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறை 2022ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு சவால்களை எதிர்நோக்கியது. நாட்டில் நிலவிய உறுதியற்ற பொருளாதாரம், துறையிலுள்ள அநேக தொழில்சார்நிபுணர்களை நாட்டிற்கு வெளியே சிறந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு தூண்டியமையானது இத்தொழில் துறையில் அனுபவம் நிறைந்த தொழில்சார்நிபுணர்களின் கணிசமான தட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்தது. மேலும், 2022இன் குறுகியதொரு காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த பணிகளின் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது பாதகமானதொரு விடயமாக தொழில் துறையினால் நோக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் மூலங்களில் பொதுவாக காணப்பட்ட மெதுவானபோக்கு மற்றும் தொழில்நுட்ப மட்டத்திலான ஊழியர்கள் பதவி விலகுதல் என்பனவற்றுடன் இந்நிலைமை தீவிரப்படுத்தப்பட்டது. இம்மோசமான நிகழ்வுகளின் விளைவாக, கணனிப் பணிகள் ஏற்றுமதித் துறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடனும் இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய உறுதியற்ற பொருளாதாரத்துடனும் தற்செயலாக ஒன்றுடொன்று இணைந்து நிதியியல் பணிகள், கட்டடவாக்கப் பணிகள், அரச பணிகள் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய பணிகள் ஏற்றுமதித் துணைத் துறைகளுக்கான உட்பாய்ச்சல்களும் இவ்வாண்டுப்பகுதியில் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

5.2.3 முதலாந்தர வருமானம்

முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. முதலாந்தர வருமானக் கணக்கு வெளிப்பாய்ச்சல்கள், பன்னாட்டு முதலீட்டு நிலைமை கையேடு மற்றும் சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களின் 6ஆவது கைநூலின்படி, கணக்கீட்டின் அட்டுறு தத்துவ அடிப்படையில் 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரச வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான தற்காலிக இடைநிறுத்தல் காரணமாக நிலுவைகளிலுள்ள அத்தகைய வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய, அனைத்து வட்டிக் கொடுப்பனவுகளையும் பிரதிபலிக்கிறது[1]. இதற்கமைய, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 1,959 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,874 மில்லியனாக விளங்கியது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளிலிருந்தான பங்கிலாபங்களின் வெளிப்பாய்ச்சல்களில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது. இதற்கு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகள் கணிசமானளவு பங்கிலாபங்களைப் பிரகடனம் செய்தமையே காரணமாகும். எனினும், வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளின் மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் குறைவடைந்தன. அதேவேளை, நிலுவைகள் உள்ளிட்ட சொத்துப்பட்டியல் முதலீடுகளின் கூப்பன் கொடுப்பனவுகள் 2021 யூலையிலும் 2022 சனவரியிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவின் விளைவாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைப்புடன் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. எனினும், அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்கள் உட்பட, அனைத்துத் துறைகளும் உயர்ந்த வட்டி வீதங்களைச் செலுத்தியதுடன் நிலுவைகள் உட்பட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது. உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து மாறுபடும் வட்டி வீதக் கடன்கள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளும் அதேபோன்று குறிப்பிட்ட சில வெளிநாட்டுப் படுகடன்களின் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் நாட்டின் கொடுகடன் தரமிடல்கள் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக இலங்கை வங்கிகளினாலும் கூட்டுத்தாபனங்களினாலும் எதிர்நோக்கப்பட்ட அதிகரித்த இடர்நேர்வுக் கட்டணங்கள் என்பன வட்டிச் செலவினங்களின் இவ்வுயர்ந்த மட்டங்களுக்கு சாத்தியமான காரணங்களாக இருக்கலாம். அதேவேளை, 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்தது.

5.2.4 இரண்டாந்தர வருமானம்

2022இன் பின்னரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவு மீளெழுச்சியடைந்தபோதிலும் இரண்டாந்தர வருமானக் கணக்கில் காணப்பட்ட மிகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தது. 2022இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021இன் ஐ.அ.டொலர் 5,491 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,789

1 சென்மதி நிலுவைகள் மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை கையேட்டின் 6ஆவது பதிப்பிற்கமைவாக, கணக்கீட்டின் அட்டுறு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

மில்லியனாக விளங்கியது. இது, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இன் 31 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாக விளங்கி இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையை 2021இன் ஐ.அ.டொலர் 5,228 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3,496 மில்லியனுக்கு மட்டுப்படுத்தியது. வங்கித்தொழில் முறைமையினால் வழங்கப்பட்ட செலாவணி வீதத்திற்கும் நாணய மாற்றுநர்களினால் வழங்கப்பட்ட செலாவணி வீதத்திற்குமிடையிலான வேறுபாடு பாரியளவில் காணப்பட்டமைக்கு மத்தியில் வங்கித்தொழில் முறைமைக்கான தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பாக ஆண்டின் முன்னரைப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. 2022 மார்ச்சு தொடக்கத்தில் செலாவணி வீதத்தில் செய்யப்பட்ட சீராக்கம் கணிசமானளவு மிகை நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து வங்கித்தொழில் முறைமைக்கு வெளியிலுள்ளவர்களுடன் வங்கிகளினால் வழங்கப்பட்ட செலாவணி வீதங்களின் படிப்படியான ஒத்திசைவாக்கம் என்பன வங்கித்தொழில் முறைமையினூடாக வழிப்படுத்தப்பட்டு தொழிலாளர் பணவனுப்பல்கள் புத்துயிர்ப்படைய உதவியது. வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு வறிதாகிப் போனமையினால் முறைசாராச் சந்தைகளில் இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கு தொழிலாளர் பணவனுப்பல்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியமும் காணப்பட்டது. மத்திய வங்கியின் கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டதன் மூலம் ஆண்டின் பிற்பகுதியில் பொருளாதாரம் படிப்படியாக உறுதியடைந்தமை, மற்றும் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட பெருமளவு உறுதித்தன்மை என்பனவற்றுடன் சட்டபூர்வமற்ற சந்தைகளில் வழங்கப்பட்ட உயர்ந்த எல்லைகள் மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் தொழிலாளர் பணவனுப்பல்களை அனுப்புவதற்கு வங்கித்தொழில் முறைமைகளைப் பயன்படுத்துவது படிப்படியாக மீண்டும் ஆரம்பமாகியது. இதன் விளைவாக, 2022இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக அமைந்து 2022 சனவரி-செத்தெம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட மாதாந்த சராசரியான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 286 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சராசரியினைப் பதிவுசெய்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து கொண்டு வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்ற புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 311,056 ஆக விளங்கியதுடன், இது 2021இல் 122,264 மற்றும் 2020இல் 53,711 ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் அதிகரித்து காணப்பட்டது. புலம்பெயர் தொழிலாளர்கள் தமது பணத்தினை அனுப்புவதற்கு அலுவல்சார் மார்க்கங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் ஊக்குவிப்புத் திட்டங்கள் உள்ளடங்கலாக அநேக கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டவேளையில் வங்கித்தொழில் துறையும் பணத்தினை அனுப்புவதற்கு அலுவல்சார் மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தது. இலங்கை மத்திய வங்கி வங்கித்தொழில் துறை, லங்கா கிளியர் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடன் இணைந்து, தொழிலாளர் பணவனுப்பல்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பதற்காக "இலங்கை றெமிட்" என்ற டிஜிட்டல் அப்ஸ் இனை அறிமுகப்படுத்தியது.

5.3 மூலதனக் கணக்கு நிலுவை

மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2022இல் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன. அரசாங்கத்திற்கான மூலதனக் கொடைகள் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்பட்டதுடன், அரசாங்கம் மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான மூலதன மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் குறைவடைந்தன. இதற்கமைய, மூலதனக் கணக்கு 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 25 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவுசெய்தது.

5.4 நிதியியல் கணக்கு

சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2022இல் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. 2022இல் நிதியியல் கணக்கின் கொடுக்கல்வாங்கல்கள் முக்கியமாக 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரசாங்கத்தின் குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் மூலமான குணாம்சங்களை முக்கியமாகக் கொண்டிருந்ததுடன் அது பயன்படுத்தத்தக்க மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு குறைவடைந்து போனமையினைப் பிரதிபலித்தது. இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக பிரயோகிக்கத்தக்க நாட்டிற்கான தரமிடல்கள் செலுத்தத் தவறியதாக வகைப்படுத்தப்பட்டதுடன், நாட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்களைக் கவருவதில் குறிப்பிடத்தக்களவு இடர்ப்பாடுகள் ஏற்படவும் காரணமாகியது. படுகடன் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர், ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 2022 சனவரியில் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையுடன்

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான நிதியிடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியிடலைப் பெற்றுக்கொள்வது மிகக் கடினமாக மாறியது. இக்காலப்பகுதியில் பிராந்திய நாடுகள் எரிபொருள், மருந்து, வளமாக்கி போன்ற பல இறக்குமதிகளுக்கு அநேகமான கொடுகடன் தொடர்களுடன் உடனடி உதவியை வழங்கியவேளையில் இருபுடை கொடுகடன் தொடர்கள் மற்றும் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவுத் திகதிகளும் நீடிக்கப்பட்டன. இதன் விளைவாக, அரசாங்கம் 2022இல் வெளிநாட்டுக் கடன்களாக ஐ.அ.டொலர் 2,391 மில்லியனுக்கும் கூடுதலான தொகையினைப் பெற்றுக்கொண்டது. இது, நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலாக காணப்பட்டது. இது, அவசர கால கொடுகடன் வசதிகளையும் அதேபோன்று அவசரகால நிதியிடலூடாக அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிகளைத் திசைதிருப்பி மீள்நோக்கங்களுக்காக வழங்குவதற்கான பல்புடை முகவராண்மைகளின் அவசரகால உதவிகளையும் உள்ளடக்கியிருந்தது.

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் அதிகரித்தன. 2022இல் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் 2021இன் ஐ.அ.டொலர் 2,098 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 2,030 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றை பதிவுசெய்தன. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் நாட்டின் இயலாற்றல் மற்றும் சக நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பன மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டபோதும், 2022இல் முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான முக்கிய பங்களிப்பு, அதிகரித்த மீள்முதலீட்டு வருவாய்கள் வடிவில் கிடைத்ததுடன் இதற்கு, 2022இல் வெளிநாட்டுச் செலாவணியின் பற்றாக்குறையின் காரணமாக பங்கிலாபங்களை வெளிநாட்டிற்கு அனுப்ப இயலாமல் போனமையின் விளைவாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில முக்கிய கம்பனிகள் அவர்களின் இலாபத்தினை மீளமுதலீடு செய்ய விரும்பிக் கொண்டமையே பகுதியளவில் காரணமாகும். மேலும், பங்குடமையாளர் முற்பணங்களிலும் இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளுக்கிடையிலான கடன்களிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. அதேவேளை, முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு தொடர்பற்ற தரப்பினர்களிலிருந்தான சில வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்களானது 2022இல் அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2021இன் ஐ.அ.டொலர் 779 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,181 மில்லியனாகக் காணப்பட்டன. மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஐ.அ.டொலர் 1,076 மில்லியன் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கானதாக இருந்தது. மேலும், வெளிநாட்டு நேரடி

அட்டவணை 5.9 அ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்


விடயம்	2021 (அ) நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	2021 (அ) பொறுப்புக்களின் தேறிய உறப்படல்	2022 (ஆ) நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	2022 (ஆ) பொறுப்புக்களின் தேறிய உறப்படல்
நிதியியல் கணக்கு	**-2,113**	**2,098**	**84**	**2,030**
நேரடி முதலீடு	**17**	**592**	**15**	**898**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள்	13	312	11	289
வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம்	9	23	7	125
வருவாய்களின் மீள் முதலீடு	4	289	3	164
படுகடன் கருவிகள்	5	281	5	610
சொத்துப்பட்டியல் முதலீடு	**-**	**-1,547**	**-**	**355**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்	-	-232	-	137
படுகடன் பிணையங்கள்	-	-1,315	-	218
பொது அரசாங்கம்	-	-1,315	-	212
குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்)	-	-2	-	30
நீண்ட காலம்	-	-1,313	-	183
திறைசேரி முறிகள்	-	-25	-	21
இலங்கை அபிவிருத்தி முறிகள்	-	-2	-	2
நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்	-	-1,285	-	159
வழங்கல்கள்	-	-	-	-
உடமைகளின் முதிர்வுகள்	-	-700	-	-391
இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள்	-	-586	-	-
அட்டுறு வட்டி	-	-	-	551
ஏனைய துறைகள்	-	-	-	6
நீண்ட காலம்	-	-	-	6
அட்டுறு வட்டி	-	-		6
நிதியியல் பெறுமதிகள்	**-**	**-**	**-**	**-**
ஏனைய முதலீடு	**387**	**3,053**	**1,302**	**776**
நாணயமும் வைப்புக்களும்	306	4,016	514	272
மத்திய வங்கி	-	1,375	-	403
குறுங்காலம்	-	1	-	...
நீண்ட காலம்	-	1,374	-	403
பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல்கள்	-	1,374	-	400
அட்டுறு வட்டி	-	-	-	3
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	306	2,641	514	-131
குறுங்காலம்	256	2,641	605	-131
நீண்ட காலம்	50	-	-91	-
ஞாபகார்த்த விடயங்கள்				
வெளிநாட்டு நேரடி முதலீடுகள்				
வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம்		23		125
முதலீட்டுச்சபை கம்பனிகள் (இ)		29		72
கொழும்பு பங்கு பரிவர்த்தனைக் கம்பனிகள் (ஈ)		-6		45
ஏனைய கம்பனிகள்		-1		8
வருவாய்களின் மீள் முதலீடு		289		164
முதலீட்டுச்சபை கம்பனிகள் (இ)		284		153
கொழும்பு பங்கு பரிவர்த்தனைக் கம்பனிகள் (ஈ)		5		-39
ஏனைய கம்பனிகள்		-		50
கம்பனிகளுக்கிடையிலான கடன்கள்		281		610
முதலீட்டுச்சபை பங்குதாரர்களின் முற்பணங்கள்		162		204
முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கிடையிலான கடன்கள்		119		365
ஏனைய கம்பனிகள்		-		41
மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)		**592**		**898**
முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2)		187		282
முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (உ)		**779**		**1,181**
கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்		**-238**		**182**
நேரடி முதலீடுகள்		-6		45
சொத்துப்பட்டியல் முதலீடுகள்		-232		137
ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு		**-27**		**51**
வெளிநாட்டு கொள்வனவுகள்		17		69
வெளிநாட்டு விற்பனைகள்		44		18

பக்கம் 193 இல் தொடர்கிறது.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையுடன் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்
(ஈ) கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட மற்றும் முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்படாத கம்பனிகள்
(உ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு ஏதாவது முறைமைகளிலான வேறுபாட்டினாலானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.11
நிதியியல் கணக்கு



அட்டவணை 5.9 ஆ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)	
	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப் புக்களின் தேறிய உறப்படல்	நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல்	பொறுப் புக்களின் தேறிய உறப்படல்
பக்கம் 192 இலிருந்து தொடர்கிறது.				
ஏனைய முதலீடு				
கடன்கள்	-	-1,503	-	-92
மத்திய வங்கி	-	-57	-	-140
பதா.தி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்	-	-57	-	-140
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	-	-57	-	-140
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	-	-2,152	-	-1,645
குறுங்காலம்	-	-2,169	-	-1,301
நீண்ட காலம்	-	17	-	-344
பொது அரசாங்கம்	-	873	-	1,679
நீண்ட காலம்	-	873	-	1,679
வழங்கல்கள்	-	2,544	-	2,391
அட்டுறு வட்டி	-	-	-	133
மீள் கொடுப்பனவுகள்	-	-1,671	-	-845
ஏனைய துறைகள் (இ)	-	-167	-	13
நீண்ட காலம்	-	-167	-	13
வழங்கல்கள்	-	187	-	332
அட்டுறு வட்டி	-	-	-	16
மீள் கொடுப்பனவுகள்	-	-354	-	-335
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்	257	-426	282	-895
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	-3	-	-27	-
குறுங்காலம்	-3	-	-27	-
ஏனைய துறைகள் (ஈ)	260	-426	310	-895
குறுங்காலம்	260	-426	310	-895
ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்	-176	180	506	1,492
மத்திய வங்கி	-	180	-	1,492
குறுங்காலம் (உ)	-	180	-	1,492
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	-176	-	506	-
குறுங்காலம்	-176	-	506	-
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	-	787	-	-
ஒதுக்குச் சொத்துக்கள்	**-2,517**		**-1,234**	
நாணய தங்கம்	-212		-152	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	123		-118	
பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை	-		-58	
ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள்	-2,428		-906	
நாணயமும் வைப்புக்களும்	1,536		-895	
நாணய அதிகாரசபைகள் மீதான கோரல்கள்	1,055		-526	
ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள்	481		-369	
பிணையங்கள்	-3,967		-11	
படுகடன் பிணையங்கள்	-3,967		-11	
நீண்ட காலம்	-3,967		-11	
ஏனைய கோரல்கள்	3		...	
நிதியியல் கணக்கு (தேறிய)	**-4,211**		**-1,946**	
ஞாபகார்த்த விடயங்கள்				
அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)		873		1,679
வழங்கல்கள்		2,544		2,391
அட்டுறு வட்டி		-		133
மீள்கொடுப்பனவுகள்		-1,671		-845

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல் வாங்கல்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முதலீடுகள் நீங்கலான கடன்கள் 2021இன் ஐ.அ.டொலர் 592 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 898 மில்லியனாக விளங்கின. துறைவாரியான அடிப்படையில், முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முக்கியமாக தொலைத்தொடர்பூட்டல்கள், தயாரிப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி துறைகளுக்கானவையாக இருந்த வேளையில் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்படாத கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்கள் முக்கியமாக ஏற்பாட்டு வசதிகள் மற்றும் எரிபொருள், வாயு மற்றும் பெற்றோலிய துறைகளுக்கானவையாக இருந்தன. மேலும், கொழும்பு துறைமுகத்திலுள்ள மேற்கு கொள்கலன் முனைக்கோடிக்காக பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பெறுகைகளும் 2022இன் பிற்பகுதியில் தேறல் செய்யப்பட்டன. கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம் என்பனவற்றிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் அண்மிய காலத்தில் தேறல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்புப் பங்குப்பரிவர்த்தனைக்கு சிறுபங்கு உடமையாளர்களினால் செய்யப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளை உள்ளடக்கிய சொத்துப்பட்டியல் முதலீடும் அரச பிணையங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளும் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட குறைப்பொன்றுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. வதிவற்றோர் வசமிருந்த ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் படுகடன்கள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தமைக்கு கடந்த ஒரு சில ஆண்டுகளாக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் சாதனங்கள் அதிகளவிற்கு உரித்து நீக்கம் செய்யப்பட்டமையே காரணமாகும். நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு நியதிகளில், அரசாங்கம் 2022இன் தொடக்கத்தில் ஐ.அ.டொலர் 500 மில்லியனை மீளச் செலுத்தியது. 2022 யூலையில் செலுத்தப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அறிக்கையிடுகின்ற சென்மதி நிலவை புள்ளிவிபரங்களின் அட்டுறு கோட்பாட்டின்படி, கூப்பன் கொடுப்பனவுகளைச் செய்யாமையின் காரணமாகவுள்ள நிலுவைகள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள்

மீதான வட்டி என்பன தொடர்பான படுகடன் சாதனங்களின் வெளிநின்ற பொறுப்புக்களுடன் சேர்க்கப்பட்டன. இதற்கமைய, ஐ.அ.டொலர் 551 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகள் வதிவற்றோருக்கான நாட்டிற்கான பன்னாட்டு முறியின் ஒன்றுசேர்ந்த அட்டுறு வட்டியாக பதிவுசெய்யப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 149 மில்லியன் வெளிநாட்டுக் கடன்கள் மீதான ஒன்றுசேர்ந்த வட்டிக் கொடுப்பனவாகப் பதிவுசெய்யப்பட்டது. மேலும், அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட வதிவற்றோருக்கான பன்னாட்டு முறிகளின் அட்டுறு வட்டி ஐ.அ.டொலர் 6 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆண்டு முழுவதும் அதன் வர்த்தக கொடுகடன் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் மீள்கொடுப்பனவு செய்தமையினால் வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் கணிசமான வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தவேளையில், ஆண்டுப்பகுதியில் புதிய வர்த்தக கொடுகடன் வசதிகளைப் பெறமுடியாமல் போயிற்று. வங்கித்தொழில் துறையில் வெளிநாட்டுக் கடன் வெளிப்படுத்துகைகள் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு ஒரு சில புதிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் காரணமாக அமைந்தவேளையில், ஏற்கனவேயுள்ள கடன்பாடுகள், குறிப்பாக, 2022இன் பிற்பகுதியில் வங்கித்தொழில் முறைமையிலுள்ள அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் மூலமாகத் தொடர்ந்தும் செலுத்தப்பட்டன. அதேவேளை, இலங்கை மத்திய வங்கி 2015-2019 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட வசதி ஏற்பாட்டைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியவேளையில், அரசாங்கம், படுகடன் ஸ்தம்பித நிலைக்கு உட்படாத ஏனைய பல்புடை நிறுவனங்களிடமிருந்து பெற்ற வெளிநாட்டுக் கடன்களைத் தொடர்ச்சியாக செலுத்தியது. கம்பனித் துறைகளுக்கான கடன்பாடுகளும் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டுப்பகுதியில் இத்துறைகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கத்தக்கவையாகவே இருந்தன.

நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2022இல் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2021இன் ஐ.அ.டொலர் 2,113 மில்லியன் கொண்ட தேறிய வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 84 மில்லியன் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து படுகடன் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னரான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக வங்கித்தொழில் முறைமைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்க வேண்டிய தேவை என்பனவற்றின் முக்கிய காரணமாக ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1,234 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. எனினும், வங்கித்தொழில் முறைமையிலுள்ள வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் ஏற்பட்ட ஓரளவு அதிகரிப்புடன் வங்கித்தொழில் துறையில் நாணயம் மற்றும் வைப்புக்களின் நியதிகளில் சொத்துக்களின் தேறிய கையேற்பும் பெறத்தக்க ஏனைய கணக்குகளும், குறிப்பாக 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்தது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் அதிகரிப்புடன் இலங்கை ஏற்றுமதியாளர்களினால் வதிவற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன.

5.5 திரண்ட நிலுவை

தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2022ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மிதமடைந்தமை, அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு முன்னதாக செய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் ஆண்டுப்பகுதியில் முக்கியமாக அத்தியாவசிய இறக்குமதிகளின் இறக்குமதிக்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு மத்திய வங்கியினால் செய்யப்பட்ட தேறிய விற்பனைகள் என்பனவற்றின் காரணமாக 2022இல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. ஆண்டுப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், இந்திய நிசேர்வ் வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதிகள் பெறப்பட்டமை அதேபோன்று ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களின் ஒன்றுசேர்ந்த தொகை ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,492 மில்லியனாக விளங்கியமை என்பனவற்றுடன் ஒதுக்கு தொடர்பான பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, 2022 இறுதியளவில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் கணிசமான பற்றாக்குறையினைப் பதிவுசெய்ததன் மூலம் 2021இன் ஐ.அ.டொலர் 3,967 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 2,806 மில்லியன் கொண்ட திரண்ட நிலுவைப் பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது.

5.6 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் அதே மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. நாட்டின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 63,967 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 58,862 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்தப் பொறுப்பு

நிலைமையில் ஏற்பட்ட வீழ்ச்சியே அரசாங்கத்தின் வசமிருந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைந்தமைக்கு காரணமாகும். அதேவேளை, நாட்டின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 8,830 மில்லியனாக விளங்கி, ஒப்பிடுகையில் 2021 இறுதியில் காணப்பட்ட அதே மட்டத்தில் காணப்பட்டது. ஒதுக்குச் சொத்து நிலைமை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தவேளையில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்து மொத்தச் சொத்து நிலைமையினை ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ அதேமட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட வழிவகுத்தது. இதன் விளைவாக, பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 55,210 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 50,032 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் வதிவற்றவர்களுடனான இலங்கையின் வெளிநாட்டு சொத்து நிலைமை அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 3,139 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,898 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.[2] எனினும், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்து நிலைமையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டதுடன் நாணயம் மற்றும் வைப்பு நிலைமைகள் மற்றும் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் நிலைமை 2022 இறுதிப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பின் முக்கிய காரணமாக ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2022 இறுதியிலுள்ளவாறு வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமை 2021 இறுதியில் அவதானிக்கப்பட்ட நிலைமையிலிருந்து அதிகரித்தமைக்கு ஆண்டுப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய வர்த்தகக் கொடுகடன் முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மேலும், வெளிநாட்டு நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை ஆண்டுப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை ஆண்டுப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாக, சந்தைப் பெறுமதி நியதிகளில் பன்னாட்டு முதலீட்டு நிலைமையினைப் பிரதிபலிக்கின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 6,233 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 3,315 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமை விளங்கியது. எனினும், வதிவற்றவர்களினால் வைத்திருக்கப்படும் முகப்புப் பெறுமதி நியதிகளில், வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 11,191 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 10,800 மில்லியனாக விளங்கியது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரசாங்கத்தின் குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக வெளிவந்த அறிவித்தலுடன் இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறியின் சந்தைப் பெறுமதி கணிசமாக வீழ்ச்சியடைந்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையான நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக 2021இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டிய நேரடி முதலீடுகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையானது, 2022இல் வீழ்ச்சியடைந்த பகிரங்கமாக பட்டியலிடப்பட்டக் கம்பனிகளின் சந்தை விலைகளின் காரணமாக குறிப்பிடத்தக்க குறைப்பை பதிவுசெய்தது. இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதி பெறப்பட்டமையுடன் மத்திய வங்கியின் வெளிநின்ற நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமை அதிகரித்தது. மேலும், 2023இல் தீர்ப்பனவு செய்யப்படக்கூடிய ஐ.அ.டொலர் 200 மில்லியன் பரஸ்பர பரிமாற்றல் வசதியினை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கியும் வங்களாதேச வங்கியும் உடன்பட்டன. அதேவேளை, ஆண்டுப்பகுதியில் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமையில் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது. மேலும், வங்கிகள் அவற்றின் வெளிநாட்டுப் பொறுப்பு வெளிப்படுத்துகையினை, குறிப்பாக, ஆண்டின் பிற்பகுதியில் தொடர்ந்தும் குறைத்தமையினால், வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இந்தியாவிடமிருந்து தொடர் கொடுகடன்கள் வடிவில் அவசரகால மனிதாபிமான உதவிகள் கணிசமானளவில் கிடைத்தமையின் காரணமாக, படுகடன்கள் நிறுத்தி வைக்கப்பட்டமை தொடர்பாக அறிவித்திருந்தபோதிலும் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை அதிகரித்தது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தீர்ப்பனவு பிற்போடப்பட்டமையின் காரணமாக மத்திய வங்கியின் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளாகக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கி 2015-2019 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு தொடர்பான வெளிநின்ற பொறுப்புக்களைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் நீங்கலாக தனியார் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுக்

2 ஒதுக்குச் சொத்து நிலைமையின் விரிவான கலந்துரையாடல் பிரிவு 5.6.1 இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.10
பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

வகை	2021 (அ)		2022 (ஆ)	
	சொத்துக்கள்	பொறுப்புக்கள்	சொத்துக்கள்	பொறுப்புக்கள்
நேரடி முதலீடு (இ)	**1,522**	**16,384**	**1,534**	**13,877**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்	1,482	11,050	1,489	7,933
படுகடன் கருவிகள்	40	5,334	45	5,944
சொத்துப்பட்டியல் முதலீடு	**...**	**7,502**	**...**	**5,285**
பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்		1,142		1,251
ஏனைய துறைகள்		1,142		1,251
படுகடன் பினையங்கள் (ஈ)	...	6,360	...	4,035
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	...	-	...	-
நீண்டகாலம்	...	-	...	-
பொது அரசாங்கம்		6,266		3,957
குறுங்காலம்		1		31
நீண்டகாலம்		6,265	...	3,926
ஏனைய துறைகள்		94		78
நீண்ட காலம்		94		78
நிதியியல் பெறுதிகள்	-	-	-	-
ஏனைய முதலீடு	**4,096**	**40,081**	**5,399**	**39,700**
நாணயமும் வைப்புக்களும்	**1,142**	**5,749**	**1,656**	**5,880**
மத்திய வங்கி		1,775		2,037
குறுங்காலம்		1		1
நீண்ட காலம்		1,774		2,036
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	1,142	3,974	1,656	3,843
குறுங்காலம்	878	3,974	1,483	3,843
நீண்ட காலம்	264		173	
கடன்கள்		**30,565**		**29,508**
மத்திய வங்கி		1,265		1,062
ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்		1,265		1,062
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்		3,172		1,527
குறுங்காலம்		2,005		704
நீண்ட காலம்		1,167		823
பொது அரசாங்கம்		21,289		23,562
நீண்ட காலம்		21,289		23,562
ஏனைய துறைகள் (உ)		4,838		3,357
நீண்ட காலம்		4,838		3,357
வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்	**1,211**	**1,915**	**1,493**	**1,020**
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	98		70	
குறுங்காலம்	98		70	
ஏனைய துறைகள் (ஊ)	1,113	1,915	1,423	1,020
குறுங்காலம்	1,113	1,915	1,423	1,020
ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்	**1,744**	**523**	**2,250**	**2,028**
மத்திய வங்கி (எ)		523		2,028
குறுங்காலம்		523		2,028
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	1,744		2,250	
குறுங்காலம்	1,744		2,250	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்		**1,330**		**1,265**
ஒதுக்குச் சொத்துக்கள்	**3,139**		**1,898**	
நாணய தங்கம்	175		28	
சிறப்பு எடுப்பனவு உரிமைகள்	124		2	
ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை	67		4	
ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள்	2,773		1,864	
நாணயமும் வைப்புக்களும்	2,729		1,834	
நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள்	899		373	
ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள்	1,830		1,462	
பினையங்கள்	44		30	
படுகடன் பினையங்கள்	44		30	
மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்	**8,758**	**63,967**	**8,830**	**58,862**
தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை		**-55,210**		**-50,032**
ஞாபகார்த்த விடயங்கள்				
பமுநி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு	8,758	63,967	8,830	58,862
குறுங்காலம்	6,804	9,560	7,091	8,877
நீண்ட காலம்	1,954	54,407	1,739	49,985

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.
(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.
(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.
(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற மீதி

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கடன் பொறுப்பு நிலைமை ஆண்டுப்பகுதியில் அதே மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பொறுப்புக்களினது நியதிகளில், அமைச்சரவை இதுவரை காலமும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை மற்றும் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் "ஏனைய துறைகளின்" கீழ் "அரசாங்கத்தின்" வெளிநாட்டுப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களை மீள்வகைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்கியது. இதற்கமைய, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 2021 இறுதியில் "ஏனைய துறைகள்" இன் கீழ் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2022 இறுதியில் "அரசாங்கத்தின்" கீழ் உள்ளடக்கப்பட்டது.[3]

5.6.1 ஒதுக்குச் சொத்து நிலைமை

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,139 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,898 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. 2021 மற்றும் 2022 இறுதியில் குறுக்கு நாணய அசைவுகளின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் நியதிகளில் முறையே ஐ.அ.டொலர் 1,574 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 1,433 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியை உள்ளடக்கியிருந்தன. இப்பரஸ்பர பரிமாற்றல் வசதி, 2022இல் பூர்த்தி செய்யமுடியாத நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தமையினால் ஆண்டுப்பகுதியில் இதனை அடைந்து கொள்ள முடியாமல் இருந்தது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு முன்னதாக 2022இன் தொடக்கப்பகுதியில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையினை வழங்கியதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பனவற்றின் இணைந்த விளைவாகும். இந்நேரகாலத்துடனான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை முக்கியமாக 2022 சனவரியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவினை உள்ளடக்கியிருந்தது. ஐ.அ.டொலர் 2,716 மில்லியனுக்கும் மேற்பட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்ததன் மூலமாக

3 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஐ.அ.டொலர் 1,427 மில்லியன் 2022 இறுதியிலுள்ளவாறு அரசாங்கப் பொறுப்புக்களாக மீள்வகைப்படுத்தப்பட்டன.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டமையானது ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் வீழ்ச்சியடையப் பங்களித்தது. அதேவேளை, இதில், இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்தான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதி, வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் செலுத்தப்படாது காணப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டிருந்த உட்பாய்ச்சல்கள், மனிதாபிமானடிப்படையில் இந்தியாவிலிருந்தான அவசரகால கொடுகடன் தொடர்கள், மற்றும் பல்புடை நிறுவனங்களிலிருந்தான செயற்றிட்டக் கடன்கள் மற்றும் அவசரகால உதவிகள் தவிர, 2022இல் மிதமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மட்டுமே காணப்பட்டன. இதன் விளைவாக, 2022 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம், 2021 இல் 1.8 மாத வணிகப்பொருள் இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இருந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1.2 மாதங்களுக்குப் போதுமானதாகக் காணப்பட்டது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களைப் போதிமானளவிற்கு அணுகமுடியாமல் போனமை என்பனவற்றின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் தொடர்ந்தும் நெருக்கடியான மட்டங்களில் காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு பற்றாக்குறை, வெளிநாட்டு நிதியிடல் மூலங்களை போதுமானளவில் அணுகமுடியாமை, மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் நெருக்கடி மிகுந்த குறைந்த மட்டம் என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் துறை குறிப்பிடத்தக்களவு அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தது. இப்பின்னணியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் படிப்படியாக கட்டியெழுப்புவதற்காக, மத்திய வங்கி, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து ஒரு பகுதியை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற தேவைப்பாட்டினையும் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கட்டாயமாக மாற்ற வேண்டும் என்ற தேவைப்பாட்டினையும் 2022இல் தொடர்ந்தும் பேணியது. மேலும், விசேடமாக எரிபொருள் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளுக்கான நிதியிடலுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் எரிபொருள் மற்றும் நிலக்கரி நிதியத்தினை நிறுவியதன் மூலம் 2022இல் மத்திய வங்கி தற்காலிக அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியினை வங்கி முறைமையிலிருந்து ஈர்த்துக் கொண்டது. இதற்கமைய, மத்திய வங்கி, எரிபொருள், நிலக்கரி, திரவப் பெற்றோலிய வாயு, மருந்து, மற்றும் அத்தியாவசிய உணவு போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளின் இறக்குமதிக்கு பிரதானமாக வசதியளிப்பதற்காக மத்திய வங்கி ஐ.அ.டொலர் 2,716 மில்லியனை நிரம்பல் செய்தது. இது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டாய விற்பனையூடாக தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும்

அட்டவணை 5.11
இலங்கை மத்திய வங்கி தலையீடு, வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக் கொடுப்பனவு மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

ஐ.அ.டொலர் மில்லியன்

விடயம்	2021	2022(அ)
இலங்கை மத்திய வங்கி உள்ளீர்ப்பு	506	2,148
தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு	213	550
ஏற்றுமதிகளின் பெறுகைகளுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு	214	1,184
சந்தையுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு	79	68
எரிபொருள் பட்டியல்களுக்கு நிதியிடல்	-	68
நிலக்கரி பட்டியல்களுக்கு நிதியிடல்	-	278
இலங்கை மத்திய வங்கி நிரம்பல்	1,253	2,716
தேறிய உள்ளீர்ப்பு	-747	-568
வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பணவுகள் (வட்டி + மூலதனம்)	6,836	3,237
அரசாங்கம் (ஆ)	6,354	3,077
மத்திய வங்கி	481	160
மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள்	3,139	1,898

(அ) தற்காலிகமானது
(ஆ) வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோர்களுக்கான வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக

மூலம் இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிப் பெறுகைகளின் பேரில் மாற்றல் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி, அதேபோன்று எரிபொருள் மற்றும் நிலக்கரி நிதியத்திற்காக ஈர்த்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி என்பனவற்றை பயன்படுத்துவதன் மூலம் பூர்த்திசெய்யப்பட்டது. இவ்வழிமுறைகள், 2022இல் குறிப்பிட்ட நிரப்பு நிதிகள் இல்லாதபோதும் கூட, நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவி, அதன் மூலம் சென்மதி நிலுவை நெருக்கடியின் பாதகமான விளைவை குறிப்படத்தக்களவிற்கு குறைத்தது. மேலும், மத்திய வங்கி 2022 ஏப்பிறலில் படுகடன் இடைநிறுத்தப்படுவது பற்றிய அறிவித்தலுக்கு மத்தியில் 2022இல் கௌரவிக்கப்பட்ட பல்புடை முகவர்களுக்கான வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் உட்பட, ஐ.அ.டொலர் 3,237 மில்லியன் கொண்ட தொகையினை வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவிற்காகத் தொடர்ந்தும் வழங்கியமையானது 2022இல் மொத்த அலுவல்சார் ஒதுக்கிலிருந்தான குறிப்பிடத்தக்க வெளியேற்றமொன்றை தோற்றுவித்தது.

வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில், மொத்த பன்னாட்டு ஒதுக்கு நிலைமை 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக, 2022இன் பிற்பகுதியில் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயம் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டதால் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 2,719 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 3,803 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து உடமைகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தபோதிலும் அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்


இரண்டினையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2022இல் வீழ்ச்சியுற்றன. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 இறுதியின் 3.6 மாத இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 3.9 மாத வணிகப்பொருள் இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டன.

5.7 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுகள்

5.7.1 வெளிநாட்டுப் படுகடன்

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு குறைப்பின் முக்கிய காரணமாக 2022 இறுதியளவில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தது. நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2021 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 51,775 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 49,678 மில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும், சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தொடர்ந்தும் அதே மட்டத்தில் காணப்பட்டது. பல்புடை கடன்வழங்குநர்களுக்குச் சேரவேண்டிய கடன்கள் தவிர, அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள் குறைவடைந்தமையினால் ஓரளவு ஓய்வு கிடைத்தபோதிலும், அரசாங்கம் இருபுடை கடன்கள் வடிவில் இந்தியாடமிருந்து எரிபொருள், மருந்து மற்றும் வளமாக்கி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்காக அவசரகால கொடுகடன் வசதிகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டமை, 2022இல் வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையினால்

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

ஐ.அ.டொலர் மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

விடயம்	2018	2019	2020	2021	2022(அ)
1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள்	817	386	155	177	39
2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள்	6,102	7,256	5,510	2,962	1,858
3. **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)**	**6,919**	**7,642**	**5,664**	**3,139**	**1,898**
4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள்	2,664	2,760	2,856	2,983	3,976
5. **மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)**	**9,583**	**10,402**	**8,521**	**6,122**	**5,874**
6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ)	1,425	1,771	2,121	3,562	5,127
7. **தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)**	**5,495**	**5,871**	**3,543**	**-423**	**-3,229**
8. **திரண்ட நிலுவை (ஈ)**	**-1,103**	**377**	**-2,328**	**-3,967**	**-2,806**
9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி:					
9.1 பொருட்களின் இறக்குமதிகள்	3.7	4.6	4.2	1.8	1.2
9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	3.1	3.7	3.7	1.8	1.2
10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி:					
10.1 பொருட்களின் இறக்குமதிகள்	5.2	6.3	6.4	3.6	3.9
10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	4.3	5.1	5.6	3.4	3.7


(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டு நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தகக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிலுவையிலுள்ள செயற்றிட்டக் கடன்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிக் கூப்பன் கொடுப்பனவுகள் என்பனவற்றின் அட்டுறு வட்டிகள், அவற்றிற்குரிய படுகடன் சாதனங்களின் வெளிநின்ற படுகடனில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.[4] படுகடன் இடைநிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அரசாங்கத்தின் வர்த்தகக் கடன்பாடுகள் குறைவடைந்தபோதிலும், இது வெளிநின்ற அரச வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களில் மேலும் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. நாணயம் மற்றும் வைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியின் பெறுகை மற்றும் "ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்" இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஒன்றுசேர்ந்த பொறுப்புக்கள் என்பனவற்றுடன் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. வர்த்தக வங்கிகள் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் தமது வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகள் என்பனவற்றின் வெளிப்படுத்துகைகளைக் குறைத்துக் கொண்டமையுடன் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையினையடுத்து நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையுடன் வர்த்தக வங்கிகள் கொடுகடன் வசதிகளை அணுகமுடியாமல் போனவேளையில், ஏற்கனவே

4 வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்டவாறு மூலதன மீள்கொடுப்பனவின்மை அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் பொறுப்புக்கூறல் மாற்றத்தை தோற்றுவிக்காது.

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடனின் துறைவாரியான கட்டமைப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

இருந்த படுகடன் பொறுப்புக்களை அவை தொடர்ந்தும் மீளச் செலுத்தியமை வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் படுகடன் குறைவடையப் பங்களித்தது. இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் நியதிகளில் வெளிநின்ற பொறுப்புக்கள் குறைவடைந்ததன் முக்கிய பெறுபேறாக, தனியார் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் குறைவடைந்தது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விதந்துரைப்புடன் அத்தகைய கடன்களை மீள்வகைப்படுத்துவதென்ற அமைச்சரவையின் தீர்மானத்திற்கிணங்க, அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2022 இறுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பலவற்றினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்கள் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களாக மீளவகைப்படுத்தப்பட்டன. இக்கடன்கள் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்தள அம்பாந்தோட்டை சர்வதேச விமானநிலையச் செயற்றிட்டம் மற்றும் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் என்பனவற்றுடன் தொடர்பான கடன்களை உள்ளடக்கியதுடன் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் "ஏனைய துறை" இன் கீழான வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் குறிப்பிடத்தக்க குறைப்பினைத் தோற்றுவித்தது. மேலும், சிறிலங்கன் எயார்லையின்ஸ்சினால் வழங்கப்பட்ட பன்னாட்டுப் படுகடன் பிணையின் மீளச்செலுத்தப்படாத கூப்பன் கொடுப்பனவொன்றுடனும் அட்டுறு வட்டி சேர்க்கப்பட்டது. அதேவேளை, நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2021 இறுதியில் 58.5 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 64.5 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு, ஆண்டுப்பகுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் பெயரளவு பெறுமதி குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தபோதிலும் ஐ.அ.டொலர் நியதிகளில் தெரிவிக்கப்பட்ட பெயரளவு மொ.உ.உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமையில் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2021 இறுதியின் 53.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 55.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. படுகடன் முதிர்ச்சித் தோற்றப்பாட்டு நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடனின் சதவீதமாக நீண்ட காலப் படுகடன் 2021 இறுதியின் 83.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 84.6 சதவீதமாகக் காணப்பட்டது.

5.7.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

நிலுவைகள் நீங்கலாக, 2022இல் மூலதனம் மற்றும் வட்டியின் உண்மையான படுகடன் மீள்கொடுப்பனவுகளின் நியதிகளில் தொகுக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள், 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து

அட்டவணை 5.13 (அ)
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

வகை	2021(அ)	2022(ஆ)
பொது அரசாங்கம்	27,556	27,518
குறுங்காலம்	1	31
படுகடன் பிணையங்கள்	1	31
திறைசேரி உண்டியல்கள் (இ)	1	31
நீண்ட காலம்	27,555	27,488
படுகடன் பிணையங்கள்	6,265	3,926
திறைசேரி முறிகள் (இ)	8	34
இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ)	24	27
நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ)	6,233	3,866
சந்தைப் பெறுமதி		3,315
அட்டுறு வட்டி		551
கடன்கள்	21,289	23,562
வெளிநின்ற வெளிநாட்டு படுகடன்கள்		23,413
அரசாங்க வெளிநாட்டு படுகடன்களின் அட்டுறு வட்டி		149
மத்திய வங்கி	4,892	6,391
குறுங்காலம்	526	2,029
நாணயம் மற்றும் வைப்புக்கள்	3	15
ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்	523	2,014
ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள்	523	2,014
நீண்ட காலம்	4,367	4,362
சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள்	1,330	1,265
நாணயம் மற்றும் வைப்புக்கள்	1,774	2,036
இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு		400
பங்களாதேச வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு	200	200
சீன மக்கள் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு	1,574	1,433
பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான அட்டுறு வட்டி		3
கடன்கள்	1,263	1,062
ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள்	1,263	1,062
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அவசர உதவி	1,263	1,062
வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	7,146	5,370
குறுங்காலம்	5,979	4,547
நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ)	3,974	3,843
வர்த்தக வங்கிகள்	3,974	3,843
கடன்கள்	2,005	704
வர்த்தக வங்கிகள்	2,005	704
நீண்ட காலம்	1,167	823
கடன்கள்	1,167	823
வர்த்தக வங்கிகள்	1,084	823
ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	83	-

பக்கம் 204 இல் தொடர்கிறது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) தனியாள் வெளிநாட்டு நாணயக்கணக்கு வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது

சிறப்புக்குறிப்பு 8

வெளிநாட்டுத் துறை மீதியை வலுப்படுத்துவதற்கான பிந்தைய படுகடன் மறுசீரமைப்பு கொள்கை முன்னுரிமைகள்

அறிமுகம்

இரட்டைப் பற்றாக்குறை நிலைமை எனப் பிரபல்யமாகக் குறிப்பிடப்படும், நாட்டினுடைய இயலாற்றலுக்கு மேலாகவும் அதிகமாகவும் மிதமிஞ்சிய செலவழிப்பினால் ஏற்படும் சமமின்மைகளிலிருந்து வெளிப்படுகின்ற, அரசாங்க வரவுசெலவுத் திட்டத்திலும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலும் ஒரே நேரத்தில் காணப்பட்ட பற்றாக்குறைகள், பல ஆண்டுகளாக, இலங்கையில் முக்கிய அமைப்பியல் சார்ந்த தடையாகவும் பேரண்டபொருளாதாரப் பாதிப்புக்கான முக்கிய மூலமாகவும் காணப்படுகின்றன. வணிக வர்த்தகக் கணக்கிலும் முதலாந்தர வருமானக் கணக்கிலும் ஏற்பட்ட பாரியளவிலான பற்றாக்குறைகளினால் முக்கியமாகத் தூண்டப்பட்டு, இலங்கை பல ஆண்டுகளாக தொடர்ச்சியான வெளிநாட்டு நடைமுறை கணக்குப் பற்றாக்குறைகளை அனுபவித்து வருகின்றது. பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு (முக்கியமாக தொழிலாளர் பணவனுப்பல்கள்) ஆகியன மிகைகளைப் பதிவுசெய்திருந்தபோதிலும், நடைமுறைக் கணக்கில் வணிகப்பொருட்களின் வர்த்தக மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குகள் என்பனவற்றில் எப்போதுமுள்ள விரிவடைந்த பற்றாக்குறைகளின் தாக்கத்தைப் பாதுகாப்பதற்கு இத்தகைய மிகைகள் போதியளவானதாக காணப்படவில்லை. மேலும், அமைப்பியல்சார்ந்த மற்றும் கொள்கைத் தடைகள் காரணமாக போருக்குப் பிந்தைய பொருளாதார காலப்பகுதியிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களளவிற்கு இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற படுகடனல்லாத வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களை கவர்வதற்கு தவறிவிட்டது. மேலும், கடந்த தசாப்த காலப்பகுதியில், நாட்டின் அதிகரித்துவரும் வெளிநாட்டுப் படுகடன் மற்றும் அதன்விளைவாக ஏற்பட்ட பாரியளவான படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் போன்றன வெளிநாட்டுத் துறை சமமின்மைகளை மோசமாக்குகின்ற படுகடன் உறுதிப்பாட்டு கரிசனைகளுக்கு முக்கியமாகப் பங்களித்தன. வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட அமைப்பியல்சார் பலவீனங்களுக்கு மத்தியில், இறைத் துறை மீதான செயற்றிறனற்ற விரைவானதுமான கொள்கை மாற்றங்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவல் மற்றும் தொடர்புடைய நிச்சயமற்றத்தன்மைகள் என்பன அதன் பேரண்டபொருளாதாரப் பலவீனங்களைத் தீவிரப்படுத்தி தொடர்ச்சியான பேரழிவுகளுக்கு வழிவகுத்தன. 2022 ஏப்பிறலில் திரவ இருப்புக்கள் ஏறத்தாழ பூச்சிய மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தமை மற்றும் 2022 மாச்சு தொடக்கத்தில் செலாவணி வீதம் பாரிய மிகைப்படுத்தலுக்குட்பட்டமை என்பனவற்றுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வரலாற்றில் குறைந்தளவிற்கு வீழ்ச்சியடைந்திருந்தன. இப்பின்னணியில், பன்னாட்டு நாணய நிதியத்துடனான நிதியளித்தல் ஏற்பாட்டிற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கிய அதேவேளை, படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை நிலுவையிலுள்ள நிலையில், 2022 ஏப்பிறலில் அரசாங்கம் இடைக்காலப்பகுதியொன்றுக்கு படுகடன் ஸ்தம்பிதமொன்றை அறிவித்திருந்தது. இலங்கையின் படுகடன் நிலையற்றது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியிடல் வசதி ஏற்பாட்டின் வெற்றியானது தற்போதுள்ள படுகடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது. படுகடன் மறுசீரமைப்பு எல்லைகள் இலங்கையின் அலுவல்சார் மற்றும் தனியார் கடன்கொடுநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் சிறிய அளவிலான நீடிக்கப்பட்ட முதிர்ச்சிகளுடன் நாடு படுகடன் தீர்ப்பனவை மீளவும் தொடங்கும். இம்முதல் படுகடன் மறுசீரமைப்பு முயற்சியானது கடந்தகால தவறுகளை சரிசெய்வதற்கும் சில நாடுகள் அனுபவித்தது போல, நாடு மீண்டும் கடன் மறுசீரமைப்பு நிகழ்விலிருந்து பாதிப்படையாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு எதிர்கால நடவடிக்கைகளைத் தீர்க்கமாக திட்டமிடுவதற்கும் நீடித்த வாய்ப்பை வழங்கும். கடன் மறுசீரமைப்பு செயன்முறை மாத்திரமன்றி, மறுசீரமைப்பிற்குப் பிந்தைய பொருளாதாரத்தில் முன்னோக்கிசெல்லும் வழியும் நன்கு திட்டமிடப்பட்டு, நாட்டின் இறை மற்றும் வெளிவாரி நிலைமைகளை வலுப்படுத்தவும் எதிர்வரும் காலத்தில் மீளெழுச்சியைக் கட்டியெழுப்பவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உண்மையை இது வலியுறுத்துகின்றது.

படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைமைகளிலுள்ள சவால்கள்

1950 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில், 95 உலகளாவிய நாடுகளின் ஈடுபாட்டுடன் ஏறத்தாழ 600 நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன (Das, Papaioannou & Trebesch, 2012). பொதுவாக, வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து, நாடு படுகடனை நீடித்து முன்னோக்கி செல்லும் என்பதுடன் படிப்படியாக மீட்டெடுக்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறெனினும், படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு பின்னர் அனைத்து நாடுகளுக்கும் தமது படுகடனை நிலையாக முகாமைச் செய்வதற்கு இயலுமாகவிருக்கவில்லை என்பதுடன் மேலும் செலுத்தத் தவறுதல்களைத் தொடர்ந்தும் பதிவுசெய்துகொண்டிருந்தன. சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் தமது ஆற்றல்வாய்ந்த மட்டத்தை அடைவதற்கு தவறியதற்கும் படுகடன் மறுசீரமைப்பினூடாக வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. **சாதகமற்ற பொருளாதார நிலைமைகள்:** மீள் கட்டமைப்பு கட்டக் காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டுச் சூழல் மற்றும் பரந்தளவிலானப் பொருளாதார நிலைமைகள் என்பன படுகடன் மறுசீரமைப்பின் பெறுபேற்றை நிர்ணயிப்பதில் ஏதுவாக இருக்கக்கூடும். உதாரணமாக, உலகளாவிய பொருளாதாரம் மெதுவடையுமாயின் அல்லது முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் பொருளாதாரச் சுருக்கமொன்றை அனுபவிக்கின்றார்களாயின், நாடானது அதன் வளர்ச்சியின் ஆற்றல்வாய்ந்த மட்டத்தையும் சென்மதி நிலுவையின் உறுதிப்பாட்டையும் அடைவதற்கு சிரமத்தை எதிர்கொள்ளும். இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில், 2023இல் உலகளாவிய பொருளாதார அழுத்தங்கள் அதிகரிக்கலாம் என்பதற்கான சமிஞ்சைகள் காணப்படுகின்றமையானது இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பிற்கு பிந்தைய மீட்சியை சவாலுக்கு இட்டுச்செல்கின்றது.

2. **நடைமுறைப்படுத்தல் சவால்கள்:** வெளிநாட்டு கடன்வழங்குநர்களின் பன்முகத்தன்மை மற்றும் அவர்களின் ஆர்வங்கள் அதேபோன்று புவிசார்அரசியல் கரிசனைகளைக் கருத்திற்கொண்டு, படுகடன் மறுசீரமைப்பின் பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டங்கள் சிக்கல்வாய்ந்ததாக இருக்கலாம். இது, கடன்கொடுநர்களுடன் உடன்படிக்கைகளை

அடைவதை சவாலுக்குட்படுத்தி இதன்மூலம், நீண்ட பேச்சுவார்த்தைகள் காரணமாக ஏற்படும் தாமதங்களின் இடர்நேர்வு அதிகரிக்கின்றது. நீண்ட மறுசீரமைப்புச் செயன்முறையானது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேலும் சிதைவடையச்செய்யலாம் என்பதுடன் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டை மீண்டும் அடைவதற்கு பெரும் இக்கட்டான நிலையாக இருக்கலாம்.

3. **போதியளவற்ற கொள்கை வழிமுறைகள்:** படுகடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் மீட்சியடைவது என்பது பேரண்ட இறைச் சீர்திருத்தங்கள் மற்றும் தேவைப்படும் சீராக்கங்கள் தொடர்பிலான வலியுறுத்தலுடன் குறுகிய மற்றும் நடுத்தரகாலத்தில் நிலையான வளர்ச்சிப் பாதையை நோக்கி பொருளாதாரத்தை தூண்டுகின்ற கொள்கைக் கலவையைப் பின்பற்றுவதில் ஈடுபடுவதாகும். எனினும், கொள்கைப் பதிலிறுப்புக்கள் காத்திரமான விதத்தில் திட்டமிடப்படாவிட்டாலோ அல்லது நடைமுறைப்படுத்தபடுவதில் குறைந்தளவான ஒத்துழைப்பு காணப்படுமாயினோ, விரும்பத்தக்க பெறுபேற்றை அடையமுடியாது போகும். இலங்கையின் வெளிநாட்டுத் துறை எதிர்கொண்ட மரபுரீதியான சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, சீர்திருத்தப் பொதியானது போதியளவு மீண்டெழுதல் வேண்டும்.

4. **அரசியல் உறுதிப்பாடின்மை:** படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியானது கடன்கொடுநர்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட சீர்திருத்தப் பொதியின் நடைமுறைப்படுத்தலின் வெற்றி மற்றும் அதனுடன் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளைப் பின்பற்றுவதில் தங்கியிருக்கின்றது. முக்கிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பிரபல்யமடையாதிருப்பதால், அரசாங்கங்கள் அச்சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கடுமையான அழுத்தத்திற்குட்பட்டு வாக்காளர் தொகுதிகளிலிருந்து அழுத்தத்திற்கு உட்படலாம். முதலீட்டாளர்கள், பல்புடை மற்றும் இருபுடை கடன்வழங்குநர்கள் மற்றும் கடன்கொடுநர்கள் உள்ளடங்கலாக ஆர்வலர்களுக்கு மத்தியில், அரசியல் உறுதிப்பாடானது பொருளாதாரத்தில் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவும். மேலும், அரசியல் உறுதிப்பாடின்மையானது சீரற்றத்தன்மைக்கு வழிவகுத்து நிலைபெறத்தக்க பேரண்டபொருளாதார சீராக்கங்களை அடைவதற்காக முக்கிய பின்னடைவொன்றாக இருக்கலாம். ஆகையினால், மறுசீரமைப்பிற்கு பிந்தைய பொருளாதார மீட்சி மற்றும் மீளெழுச்சி என்பன அரசியல் தீர்மானத்தின் அதேபோன்று சீர்திருத்தங்களுக்கான பொதுமக்களின் ஆதரவின் தொடர்ச்சி மீது நிபந்தனைகுட்பட்டதாக இருக்கலாம்.

5. **பலவீனமான நிறுவனங்கள்:** சட்ட விதியின் வீழ்ச்சி, வெளிப்படைத்தன்மையின்மை மற்றும் பொறுப்பின்மை மற்றும் அதிகரித்த ஊழல் போன்றவற்றுக்கு வழிவகுத்த பலவீனமான நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமற்ற சூழலொன்றை உருவாக்கலாம். அதேவேளை, கொள்கை வழிமுறைகளினதும் முதலீட்டாளர் நம்பிக்கையினதும் காத்திரமானத் தன்மையை மட்டுப்படுத்தலாம்.

இப்பின்னணியில், பொருளாதார நடவடிக்கைகள் விருத்தியடைவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் அதேவேளை, வெளிநாட்டுத் துறையில் உறுதிப்பாட்டை மீட்டெடுத்தலை இலக்காகக் கொண்டு, திடமான கொள்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குவது பொருத்தமானதாக அமையும். இதற்கமைவாக, பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலமான மீட்டெடுப்புக்களையும் எதிர்காலத்தில் படுகடன் மறுசீரமைப்பையும் மீண்டும் அணுகுவதற்கான தேவைப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு, கட்டமைப்பொன்றில் தேவையான அமைப்பியல்சார்ந்த சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் கடன்கொடுநர்களால் வழங்கப்படும் கடன் சட்ட இசைவு தாமதமும் சலுகைகளும் முடிவடையும்போதும் மற்றும் படுகடன் கடப்பாடுகள் செலுத்தவேண்டிய தேவை ஏற்படும்போதும் கடன்கொடுநர்களுக்கு படுகடன் கடப்பாடுகளை மீளச்செலுத்துவதற்கு நிதியளிப்பதற்கும் அரசாங்கத்தினால் தெளிவான மூலோபாயமொன்று இணைக்கப்படவேண்டும். நாட்டின் பேரண்டபொருளாதார மீளெழுச்சியை அடைவதற்கு வெளிநாட்டுத் துறையில் நிரந்தரமான தாங்கிருப்புக்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய கொள்கைத் தூண்டுதல் மற்றும் சீரான நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மூலமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கையும் நிதியியல் கணக்கு மீதிகளையும் வலுப்படுத்தி, வரவுசெலவுதிட்ட பற்றாக்குறைக்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்குமான படுகடனுக்கு நிதியளிப்பதற்கான நோக்குநிலையிலிருந்து விலகியமையின் ஒருங்கிணைந்த விளைவாக இத்தாங்கிருப்புக்கள் இருக்கலாம்.

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

மட்டுப்படுத்தப்பட்ட பன்முகத்தன்மை, குறைந்தளவான பெறுமதி சேர்த்தல் மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கலிகளுக்கான குறைந்தளவான ஒருங்கிணைப்பு மற்றும் வர்த்தகம் செய்யக்கூடிய துறையில் மிகைப்படுத்தப்பட்ட செலாவணி வீதத்திற்கும் போதியளவற்ற முதலீடுகளுக்கும் மத்தியில், போட்டித்தன்மையுடன் இருப்பதற்குத் தேவையான அதிநவீனத்தன்மையின்மை போன்ற மரபுரீதியான சிக்கல்கள் காரணமாக கடந்த சில தசாப்தங்களில் இலங்கையின் ஏற்றுமதிகளில் பாரிய வளர்ச்சி உந்துதலோ அல்லது ஏற்றமோ வெளிப்படவில்லை. அதேவேளை, குறிப்பாக 2011 தொடக்கம், இறக்குமதிகளின் அனைத்து வகைகளுக்குமான செலவினங்களும் விரைவாக அதிகரிக்கப்பட்டு, வர்த்தகப் பற்றாக்குறையை விரிவுப்படுத்துவதற்கு வழிவகுத்ததுடன் முக்கியமாக வெளிநாட்டுத் துறை கடன்பாடுகளூடாக நிதியளிக்கப்பட்டது. இதற்கமைவாக, ஒரேநேரத்தில் பணிகள் கணக்கில் மிகைகளை அதிகரிக்கச்செய்கின்ற அதேவேளை, வணிக எற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கான எந்தவொரு முயற்சியும் வர்த்தகப் பற்றாக்குறையை குறைப்பதற்கான மூலோபாயங்களில் கவனம்செலுத்தப்பட வேண்டும். இறக்குமதிகளைச் சிக்கனப்படுத்துவதன் மூலமான கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளும் இறக்குமதிப் பதிலீடு தொடர்பிலான முயற்சிகளும் பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வழிமுறைகளின் நீண்டகாலப் பின்பற்றுதலானது பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம் என்பதால் தற்காலிக அடிப்படையில் மாத்திரம் அறிமுகப்படுத்தப்படலாம். மேலும், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் புத்தாக்கத்தினூடான உற்பத்தி பன்முகத்தன்மை, செங்குத்தான மற்றும் கிடையான ஒருங்கிணைப்பு, உற்பத்தி பகிர்வு வலையமைப்பின் பங்கேற்பு, மற்றும் கூறு தயாரிப்பின்

மூலம் உலகளாவிய பெறுமதி சங்கலிகளுடன் இணைத்தல் அதேபோன்று புதிய சந்தைகளை ஆராய்வதன் மூலம் ஏற்றுமதி இடங்களான மரபுரீதியான சந்தைகளை அதிகளவில் தங்கியிருப்பதைக் குறைத்தல் போன்றன முக்கிய முயற்சிகளாக கருதப்படுகின்றன. குறிப்பாக, நெகிழ்வான செலாவணி வீதம், நிலையான வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைகள், விலை உறுதிப்பாடு, அதன்மூலம் குறைந்தளவான தளம்பல் வட்டி வீதக் கட்டமைப்பு, மற்றும் அத்தியவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றைப் பேணுவதன் மூலம் ஏற்றுமதித் துறையானது தூண்டுதலளிக்கும் பேரண்டபொருளாதார கொள்கைகளினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். தேசிய நலனில் உத்தேசிக்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விரைவானதும் தடையற்றதுமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். ஏற்றுமதித் துறையில் உள்நாட்டு பெறுமதிச் சேர்த்தலை அதிகரிப்பதற்கு முக்கிய ஏற்றுமதிகளுக்குத் தேவையான இடைநிலைப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு கைத்தொழில்களை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை ஒருங்கிணைப்பினூடாக இறக்குமதிகளைக் காத்திரமான முறையில் மாற்றல்செய்தல் வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினூடாக உருவாக்கப்படும் சமதளமானது கூடுதல் நன்மையளிக்கக்கூடியதாக விளங்கும். மேலும், புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை நோக்கி நகர்வது தொடர்பிலான முயற்சிகளும் நடுத்தர தொடக்கம் நீண்ட காலம் வரையில் புதைவடிவ எரிபொருட்களில் நாடு தங்கியிருப்பதைக் குறைத்து, இதன்மூலம் எரிபொருள் இறக்குமதிகளிலிருந்து தோன்றும் நடைமுறைக் கணக்கு மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கு உதவும்.

அதேவேளை, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையை குறைப்பதில் பணிகள் ஏற்றுமதிகள் முக்கியமானதாக விளங்குகின்றது. ஆகவே, அவற்றின் முழு ஆற்றலையும் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். பாரிய பணி ஏற்றுமதித் துறையாக விளங்கும் சுற்றுலாத் துறையானது மீளெழுச்சியைக் காண்பித்துக் கொண்டிருப்பதுடன் சுற்றுலாத் துறையில் உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெறுவதற்கு, பெறுமதிமிக்க சிறிய மற்றும் மரபுரீதியற்ற சந்தைகள் தொடர்பிலும் ஓய்வு தவிர ஏனைய வேறுபட்ட நோக்கங்களுக்காக வருகைத் தருகின்ற சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலும் அதிக கவனத்தை செலுத்துவதற்கு சுற்றுலாத் துறையைப் பன்முகப்படுத்துவது முக்கியமானதாகும். மேலும், குறிப்பாக, தகவல் தொழில்நுட்ப/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் துறையிலுள்ள சில பணிகள் ஏற்றுமதிகள், தேறிய வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களை நாட்டிற்கு கொண்டுவருவதற்கு கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் துறைகளில் காணப்படுகின்ற வளர்ச்சி வாய்ப்புகள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைத் தொடர்ந்து, பொருளாதாரங்களின் அதிகரித்த டிஜிட்டல்மயமாக்கத்துடன் விரிவடைந்துள்ளன. ஆகையினால், இலங்கையானது தன்னை டிஜிட்டல் நாடாக மேம்படுத்துவதற்கு தேர்ச்சிப்பெற்ற தொழிற்படைகளினதும் அதிநவீன தகவல்தொழில்நுட்ப உட்கட்டமைப்பினதும் கிடைக்கும்தன்மையைப் பயன்படுத்தவேண்டும். மேலும், சந்தை கேள்விகளுக்கு இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர தகவல்தொழில்நுட்ப கல்வித் தேவைகளுக்கு ஏற்றவாறு அணிசேரப்பட வேண்டும் என்பதுடன் இத்துறையின் விரிவாக்கத்திற்கு தேவையான மனித மூலதனத்தின் அபிவிருத்தி நிறைவுசெய்யப்பட வேண்டும். படுகடன் மறுசீரமைப்பில், முதலாந்தர வருமானப் பற்றாக்குறையும் மேம்படுமெனவும் வட்டியல்லா வருமானக் கணக்கில் மிகையை உருவாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தையை பன்முகப்படுத்துவதற்கும், உயர்ந்தளவிலான வருவாய் சாத்தியப்பாட்டுடன் கூடிய அதிகளவிலான வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், குறைந்தளவிலான செலவு, உண்மை நேரம், மற்றும் வசதியான எல்லையைத் தாண்டிய நிதியப் பாய்ச்சல்களை வசதிப்படுத்துவதற்கான அலுவல்சார்ந்த பாய்ச்சல்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் தொழிலாளர் பணவனுப்பலை ஊக்குவிப்பதில் தீவிரமான ஆர்வலர் ஈடுபாடு தேவைப்படுகின்றது. கடந்தகாலங்களில் மத்திய கிழக்கு பிராந்தியத்திலிருந்து பெறப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் மூலம் இலங்கை பயனடைந்துள்ளபோதிலும், குறிப்பாக தென்கொரியா, சிங்கப்பூர், யப்பான், மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் உயர்ந்தளவான ஊதியம் பெறக்கூடிய பரந்தளவிலான தொழில்நிலையை வழங்குகின்ற மாற்றீட்டு இடங்களை அறிவது அவசியமாகும். இதன்மூலம், தொழிலாளர் பணவனுப்பல்களின் அளவு அதிகரிப்படுவதுடன் புவிசார்அரசியலின் மூலம் தூண்டப்பட்ட பணவனுப்பல் பெறுகைகளின் பாதிப்புக்களும் குறைக்கப்படுகின்றன. அதேவேளை, மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் தொழிலாளர் பணவனுப்பல்களிலும் பாதகமான தாக்கத்தையும் அதேபோன்று நீண்டகால பொருளாதாரத்தின் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்துகின்ற இலங்கையிலிருந்து நிரந்தர அடிப்படையில் தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் பாரியளவிலான புலம்பெயர்வு தொடர்பிலான பிரச்சனை உடனடியாக தீர்க்கப்படவேண்டும்.

வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

பரந்தளவிலான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்வதற்கான இலக்கிடப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக, பாரிய வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டையும் மேம்படுத்தப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டையும் நிச்சயப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் சொத்துப்பட்டியல் முதலீடுகளையும் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் செலுத்துவது போன்ற அதிகளவிலான படுகடனல்லா மூலதனப் பெறுகைகளை கவர்வதன் மூலமாக அவற்றுக்கு துணையளிப்பதும் அவசியமாகும். தொடர்ச்சியான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு தேவைப்பாடுகளுக்கும் படுகடன் மீள்கொடுப்பனவிற்கான இறை இடைவெளியின்மைக்கும் மத்தியில், வெளிநாட்டுத் துறையின் நீடித்த உறுதிப்பாட்டை உறுதிசெய்வதில், வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கான படுகடனல்லா கடப்பாட்டு வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களை கவர்வது இன்றியமையாததாக அமையும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கும் உள்நாட்டு முதலீட்டை அதிகரிப்பதற்கும் அப்பால், வெளிநாட்டு நேரடி முதலீடானது தொழில்நுட்பக் கசிவுத் தாக்கங்களை உருவாக்கி, மனித மூலதன மேம்பாட்டிற்கு

ஆதரவளிப்பதுடன், வெளிநாட்டுச் சந்தைகளுக்கான மேம்பட்ட அணுகலின் மூலம் பன்னாட்டு வர்த்தக இணைப்புக்களை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. குறிப்பாக ஒப்பந்த நடைமுறைப்படுத்தல், ஏற்றுமதி இறக்குமதி ஆவணப்படுத்தல், வியாபாரத் தொடக்கங்கள், சொத்து கையகப்படுத்தல் மற்றும் நன்கு மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின்மை என்பனவற்றுடன் தொடர்புடைய கடுமையான தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறைப்படுத்தல்கள், பயன்பாடுகளைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள், சிக்கலானதும் சீரற்றதுமான வரிக் கட்டமைப்புக்கள், மற்றும் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள் போன்ற பல்வேறு சட்ட, அமைப்பியல்சார், மற்றும் நிறுவனம்சார் குறைப்பாடுகள் காரணமாக கடந்த தசாப்த காலங்களில், இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடானது அதன் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இக்காரணிகளைத் தவிர, கொள்கை நிச்சயமற்ற தன்மை, நிறுவன மற்றும் நிர்வாகப் பலவீனங்கள், நாட்டில் காணப்பட்ட ஊழல் மற்றும் ஒருங்கிணைப்புத் தோல்விகள் போன்றன இலங்கையில் சாதகமான முதலீட்டுச் சூழலை உருவாக்குவதற்குத் தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்தியிருந்தன. ஆகையினால், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கு, அனைத்தையுமுள்ளடக்கிய முதலீட்டு கொள்கையொன்றை வெளிப்படுத்தி, கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மனிதத் தேர்ச்சிகளையும் நிறுவனம்சார் இயலாற்றலையும் உருவாக்குவதன் மூலம் வெளிப்படையானதும் காத்திரமானதுமான கொள்கைச் சூழலொன்றை இலங்கை நிறுவுதல் வேண்டும். வர்த்தகம் மற்றும் கைத்தொழில் கொள்கைகள் போன்ற ஏனைய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களுடன் வெளிநாட்டு முதலீட்டு கொள்கையின் இணக்கமும் அதேபோன்று இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தவதிலுள்ள முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பும் சமமாக முக்கியமான விடயங்களாக காணப்படுகின்றன. வளர்ச்சித் தூண்டுதலுக்குப் பங்களிப்பது மாத்திரமன்றி பொருளாதாரத்தின் பரந்தளவான வினைத்திறன்மிக்க இலாபங்களினூடாகவும் பேரண்டபொருளாதார ஏற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடுத்தர தொடக்கம் நீண்ட காலம் வரையில் வெளிநாட்டு நேரடி முதலீடும் அதன் மேலதிக நன்மைகளும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவுவதற்கு ஏதுவாக அமையும். தொடர்புடைய அதிகாரசபைகளினால் இக்கரிசனைகளை சரிசெய்வதற்கு முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டங்களுக்கு திரும்புவதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளை துரிதப்படுத்துவது இன்றியமையாததாகும்.

வர்த்தகரீதியிலான செயற்றிடங்களுக்கு நிதியளிப்பதைக் கட்டுப்படுத்தி படுகடனைத் தீர்ப்பனவுசெய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்ட வர்த்தகத் துறைகளுக்கு நிதியளிப்பதை ஊக்குவிப்பதும் அவசியமாகும். வெளிநாட்டுக் கடன்களுக்கான தெளிவானதும் வெளிப்படையானதுமான மதிப்பீடும் தெரிவுப் பொறிமுறையும் நிறுவப்பட வேண்டிய அதேவேளை, கடன்பாடுகளின் பயன்பாட்டை காத்திரமான முறையில் மேம்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட அழுத்தங்களைக் குறைப்பதற்கு வெளிநாட்டு கடன்பாடு, அவற்றின் பயன்பாடு மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறுதலையும் மேம்படுத்தியது. மேலும், வெளிநாட்டு கடப்பாடுகளுடன் தொடர்புடைய உயர்ந்தளவான இடர்நேர்வு கரிசனைகளைக் குறைப்பதற்கு நாட்டிற்கான தரமிடல்களை மேம்படுத்துவதற்கான மூலோபாயமொன்றைப் பயன்படுத்துவது அவசியமாகின்றது. எவ்வாறெனினும், நாட்டிற்கான தரமிடல்கள் எதிர்வரும் காலப்பகுதியில் மேம்படுவதால், ஒட்டுமொத்தப் படுகடன் சொத்துப்பட்டியலிலுள்ள வர்த்தக ரீதியான கடப்பாடுகளின் பங்கை அதிகரிப்பதற்கான போக்கானது தடுக்கப்பட வேண்டும். வலுசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறைகளிலுள்ளவை போன்ற அத்தியாவசிய செயற்றிட்டங்களுக்கான குறைந்த செலவில் நிதியளிப்பதற்கான தெரிவுகளை ஆராய்வதற்கான வாய்ப்பு வளங்களை ஆராய்வது சாத்தியமாகும். அத்துடன் பசுமை நிதியளித்தல் தெரிவுகளைப் பயன்படுத்துகின்ற அதேவேளை உலகளாவிய ரீதியில் பரவலாகக் கிடைக்கப்பெறும் நிலையான நிதியளித்தல் தெரிவுகளினூடாக காலநிலையைத் தழுவுவது நன்மை பயக்கும். தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியானது அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டமைப்பதற்கு உதவும் வெளிநாட்டு நிதியங்களை நாட்டிற்கு கவர்வதற்காக சந்தை எண்ணப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. அதிகாரசபைகள் நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் படுகடன் உறுதிப்பாட்டு இலக்கிடல்களை மீளக்கட்டமைப்பதற்கு, 13 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைவான தங்கியிருப்பு பொறுப்புக்களை பொருண்மியமாக்குதல், உள்ளடங்கலாக 2032ஆம் ஆண்டளவில் 95 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைவாக பொதுப் படுகடன் மட்டத்தைக் குறைத்தல், 2027-2032 காலப்பகுதியில், சராசரி மத்திய அரசாங்க மொத்த நிதியளித்தல் தேவைப்பாடுகளைக் குறைத்தல், இதனால் அழுத்தத்தின் கீழுள்ள நீடித்த இடர்நேர்வுகளை முகாமைச் செய்தல், 2027-2032 வரையான எந்தவொரு ஆண்டிலும் 4.5 சதவீதம் கொண்ட மொ.உ.உற்பத்திக்கு குறைவாக மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன் தீர்ப்பனவை வைத்திருத்தல், அத்துடன் இறை மற்றும் நிதியளிப்பு இடைவெளிகள் மூடப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்தல் போன்ற நடவடிக்கைகள் அவசியமாக விளங்குகின்றன.

முடிவுரை

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, அமைப்பியல்சார் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தலானது அண்மைக்கால உறுதிப்பாட்டை மீளக்கட்டமைப்பது மாத்திரமன்றி பிந்தைய படுகடன் மறுசீரமைப்பில் போதியளவு பாதுகாப்புடனும் மீளெழுச்சியுடனும் தேசத்தை மீளக்கட்டியெழுப்பவதிலும் கவனத்தை செலுத்துகின்றது. மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை நிரந்தரமாக மீட்டெடுப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் மீட்டெடுத்தலுக்கு பின்னரான நடவடிக்கையானது இன்றியமையாததாக காணப்படுகின்றது. இலங்கை அனுபவித்துவரும் தொடர்ச்சியான இரட்டைப் பற்றாக்குறையின் இக்கட்டான சூழ்நிலையானது தொடர்புடைய ஆர்வலர்களுடனான, ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டதும் மாற்றமடைகின்ற அரசியல் முறைமைகளின் செல்வாக்குகளிலிருந்து பாதுகாக்கப்பட்டதுமான அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய கொள்கைப் பொதியொன்றின் மூலமாக நிலையான அடிப்படையொன்றில் சென்மதி நிலுவை சிக்கல்களைத் தீர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது. மேலும், படுகடனல்லா வெளிநாட்டுச் செலாவணி உருவாக்க

மூலங்கள் ஆராயப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டிய அதேவேளை, வர்த்தக வெளிநாட்டுப் படுகடனிலிருந்து நடைமுறை கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கான தேவையும் குறைக்கப்பட வேண்டும். மேலும், பன்னாட்டு அனுபவங்களின் பிரகாரம், படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதாரத்தின் அடுத்தடுத்த மீட்சிக்குமான விளைவுகளுக்கு சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை நோக்கிய அதிகாரிகள் ஈடுபாட்டு நிலை முக்கியமானதாக அமைகின்றது. மேலும், படுகடன் மறுசீரமைப்பு, மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பேரண்ட இறைச் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலாக பொருளாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தற்போதைய முயற்சிகள் முன்னோக்கிச் செல்வதற்கான தேவையான நிபந்தனைகளாகும். இருந்தபோதிலும், அரசாங்க வரவுசெலவுதிட்டப் பற்றாக்குறைகளினதும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளினதும் நிதியளித்தல் கலவையானது எதிர்வரும் காலத்தில் படுகடனல்லாத நிதியளித்தலை அதிகரித்தாலேயன்றி, இத்தகைய முயற்சிகள் மாத்திரம் நாட்டினுடைய ஆழமான அமைப்பியல்சார் பலவீனங்களுக்கும் பேரண்ட பொருளாதார சிக்கல்களுக்கும் நிரந்தரமான தீர்வொன்றாக அமையாது.

உசாத்துணைகள்:

1. Das, U., Papaioannou, M., & Trebesch, C. (2012). 'Sovereign Debt Restructurings 1950-2010: Literature Survey, Data, and Stylized Facts'. IMF Working Paper, IMF.

குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக, 2022இல் குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது.

அட்டவணை 5.13 (ஆ)

வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

வகை	2021(அ)	2022(ஆ)
பக்கம் 199 இலிருந்து தொடர்கிறது		
ஏனைய துறைகள் (இ)	6,847	4,454
குறுங்காலம்	1,915	1,020
வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஈ)	1,915	1,020
நீண்ட காலம்	4,932	3,435
படுகடன் பிணையங்கள் (உ)	94	78
நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி		72
பன்னாட்டு முறிகளின் அட்டுறு வட்டி		6
கடன்கள்	4,838	3,357
தனியார் துறை கூட்டுத்தாபனங்கள்	2,293	2,372
அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள்	2,545	985
நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஊ)	5,334	5,944
மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை	51,775	49,678
மொ.உ.உ. சதவீதமாக		
மொத்த வெளிநாட்டு படுகடன்	58.5	64.5
குறுங்கால படுகடன்	9.5	9.9
நீண்டகால படுகடன்	49.0	54.6
மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக		
குறுங்கால படுகடன்	16.3	15.4
நீண்டகால படுகடன்	83.7	84.6
வதிவற்றோர்களுக்கான மொத்த அட்டுறு வட்டி		709
அரசாங்கம் - நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்		551
அரசாங்கம் - வெளிநாட்டுப் படுகடன்கள்		149
மத்திய வங்கி - பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல்கள்		3
அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் கூப்பன்கள்		6
ஞாபகார்த்த விடயங்கள்		
வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் படுகடன் பிணையங்கள் - முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு	11,400	11,622
பொது அரசாங்கம்	11,225	11,447
திறைசேரி உண்டியல்கள்	1	34
திறைசேரி முறிகள்	9	36
இலங்கை அபிவிருத்தி முறிகள்	24	27
நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்	11,191	10,800
வதிவற்றோர்களுக்காக செலுத்தவேண்டிய நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் கூப்பன்களின் அட்டுறு வட்டி		551
ஏனைய துறைகள்	175	175
நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்பெறுமதி	13,050	12,550
வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள்	11,191	10,800
வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (எ)	1,859	1,750

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக
(எ) 2019 திசெம்பரிலிருந்து வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களிலிருந்து நீக்கப்பட்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வர்த்தக ரீதியாக கடனீந்தோருக்குச் சேரவேண்டிய இருபுடை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட, பல்புடை நிறுவனங்கள் தவிர்ந்த, வதிவற்றோருக்குச் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் மீளச்செலுத்தப்படாதமையே படுகடன் தீர்ப்பனவில் ஏற்பட்ட இக்குறைப்பிற்கு முக்கிய காரணமாகும். இதற்கமைய, மொத்த வெளிநாட்டு தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 4,597 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 2,471 மில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் மூலதனக் கொடுப்பனவுகள் 2021இல் ஐ.அ.டொலர் 2,377 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,236 மில்லியனாக விளங்கியது. மேலும், 2022இல் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி மீள்கொடுப்பனவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 1,187 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 465 மில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் பின்னர் அரசாங்கத்தினால் பல்புடை நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய வெளிநாட்டுக் கடன்கள் மாத்திரமே மீளச்செலுத்தப்பட்டன. மத்திய வங்கி முன்னைய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்திற்குச் சேர வேண்டியவற்றை தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்தவேளையில் பிராந்திய மத்திய வங்கிகளுடனான தற்போதுள்ள பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளை மீண்டும் பயன்படுத்தத் தொடங்கியது. அதேவேளை, தனியார் துறை வழமை போன்று அவற்றின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களை மீளச்செலுத்தியது. எனினும், வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ள சில அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வெளிநாட்டுப் பொறுப்புக்களை பகுதியளவில் மீளச்செலுத்தியுள்ளதுடன் அரசாங்கத்தினால் படுகடன் இடைநிறுத்தப்பட்டமையினால் பாதிக்கப்பட்டன. இவ்வரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சாரசபை, இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை விமானநிலையம் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகளை உள்ளடக்கியிருந்தவேளையில் மீளச்செலுத்தாத அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன்களில் சில பிரிவு 5.7.1இல் குறிப்பிடப்பட்டவாறு பொது அரச படுகடனாகக் மீள்வகைப்படுத்தப்பட்டன.

5.8 செலாவணி வீத அசைவுகள்

இலங்கை ரூபா, 2022 மேயில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டல் வீச்சைச் சுற்றி நிலைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக உயர் தளம்பலைக் கொண்டிருந்ததுடன் ஐ.அ.டொலருக்கெதிராக வரலாற்றிலேயே பாரிய தேய்வினை 2022இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தார்மீக ரீதியான கடப்பாடுகள் என்பன 2022இன் தொடக்கப்பகுதியில் இலங்கை ரூபாவினை ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.200-203 என்ற வீச்சில் பேணுவதற்கு உதவின. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் திரவத்தன்மையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பற்றாக்குறை, விரிவாக்கப்பட்ட அலுவல்சார் செலாவணி வீதத்திற்கும் "அதிகாரபூர்வமற்ற" வீதத்திற்குமிடையிலான பரவல் மற்றும் மோசமடைந்த உலகளாவிய நிலைமைகள் என்பன செலாவணி வீதத்தின் மீது தொடர்ச்சியாக அழுத்தத்தினைத் தோற்றுவித்தமையானது 2022இன் மார்ச்சு தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்ட செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கத்தினைத் தேவைப்படுத்தியது. எனினும், அதனைத் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் சந்தை விசைகளினால் செலாவணி வீதம் பாரியளவில் மிகைப்படுத்தப்பட்டமை இலங்கை ரூபா 2022 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 41.4 சதவீதத்தினால் கணிசமாக தேய்வடையக் காரணமாகியது. மிகையான ஊகம் மற்றும் பொருளாதாரத்தின் மீதான இதன் மோசமான கசிந்த தாக்கம் என்பனவற்றின் தூண்டல் காரணமாக ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க தளம்பல்களைக் குறைப்பதற்கு செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பல்களை முகாமைப்படுத்துவதற்கான தற்காலிக பொறிமுறையொன்றாக மாறல்களின் வீச்சை மத்திய வங்கி நாளாந்த அடிப்படையில் அறிவித்தது. இது, முன்னொருபோதுமில்லாத சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கிடையில் மிகையான ஊகங்களினால் பெரும்பாலும் தூண்டப்பட்ட செலாவணி வீதத்தின் ஏதேனும் பாரிய தளம்பல்களைக் கட்டுப்படுத்த உதவியது. 2022 மே 13 இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய செலாவணி வீதத்தினை தீர்மானிக்கும் ஏற்பாடுகளுக்கிணங்க, நடுத்தர உடன் செலாவணி வீதத்தில் இருபக்கங்களின் மீதுமான மாறுபடும் அளவுடன் ஐ.அ.டொலர்/ரூபா இலான வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி உடன் சந்தை செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியினால் நடுத்தர செலாவணி வீதமொன்று அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2022 மே 13 இலிருந்து 2022 திசெம்பர் இறுதிவரை இலங்கை ரூபா, ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக சிறிதளவு தேய்வினை மட்டுமே பதிவுசெய்தது. நாட்டின் பொருளாதார நிலைமைகள் பற்றிய சந்தையின் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக தீவிரமற்ற உடன் சந்தையானது இக்காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் பரந்தளவு உறுதித்தன்மையினையும் விளக்குவதாகக் காணப்பட்டது. இதற்கமைய, ரூபாவின் ஆண்டுத் தேய்வு 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 44.8 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கி 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு 2021இல் ஐ.அ.டொலர் 747 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலுடன் ஒப்பிடுகையில் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 568 மில்லியனை வழங்கியது. குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2022 இறுதியில் இலங்கை ரூபா யூரோ (41.4 சதவீதம்), ஸ்ரேலிங்

அட்டவணை 5.14
வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூபா.மில்லியன்

வகை	2021 (அ)	2022 (ஆ)
1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்	**4,597**	**2,471**
1.1 தீர்ப்பனவுகள்	**3,187**	**1,710**
பொது அரசாங்கம்	2,377	1,236
செயற்றிட்டக் கடன்கள்	1,671	845
படுகடன் பிணையங்கள்	706	391
மத்திய வங்கி	457	140
பன்னாட்டு நாணய நிதியம்	57	140
பன்னாட்டு பரிஸ்பர பரிமாற்றல்கள்	400	-
தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	354	335
வெளிநாட்டு கடன்கள்	354	335
1.2 வட்டிக்கொடுப்பனவுகள்	**1,410**	**761**
பொது அரசாங்கம்	1,187	465
செயற்றிட்ட கடன்கள்	394	273
படுகடன் பிணையங்கள்	793	192
மத்திய வங்கி	15	58
பன்னாட்டு நாணய நிதியம்	15	42
பன்னாட்டு பரிஸ்பர பரிமாற்றல்கள்	1	16
தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்	197	207
வெளிநாட்டு கடன்கள்	184	200
படுகடன் பிணையங்கள்	12	6
நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன்	11	31
2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்	**14,974**	**16,169**
3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்	**20,587**	**20,211**
4. படுகடன் பணி விகிதம்		
4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக		
ஒட்டு மொத்த விகிதம்	30.7	15.3
ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக	30.2	14.2
4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக		
ஒட்டு மொத்த விகிதம்	22.3	12.2
ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக	22.0	11.3
5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்		
5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ)	3,564	1,701
5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக	77.5	68.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பவுண் (38.1 சதவீதம்), யப்பானிய யென் (36.4 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (38.6 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்தது. மற்றையவற்றிற்கிடையே, அதிகரித்து வருகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை, பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் இறுதிப்படுத்தல் தொடர்பான சாதகமான அபிவிருத்திகள், குறைவடைந்த நடவடிக்கை மற்றும் இறுக்கமான கொடுகடன் நிலைமைகள் என்பனவற்றிற்கிடையில் இறக்குமதிக் கேள்வி குறிப்பிடத்தக்களவிற்கு மிதமடைந்தமை என்பனவற்றுடன் 2022இன் பிற்பகுதியிலிருந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்யப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் மற்றும் மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் சந்தைத் தூண்டல் செலாவணி வீதத்தினை மீண்டும் எய்தும் நோக்கில் மத்திய வங்கி நாளாந்த மாறுபடும் வீச்சின் படிப்படியான தளர்த்தலை ஆரம்பித்தவேளையில் கட்டாய விற்பனை தேவைப்பாடுகளையும் தளர்த்தியது. இதனைத் தொடர்ந்து, மத்திய வங்கி வங்கித்தொழில் முறைமைக்கு அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையினை அனுமதிப்பதற்கான முதல் நடவடிக்கையாக ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றிலிருந்தான கட்டாய வெளிநாட்டுச் செலாவணி மாற்றல் தேவைப்பாடுகளை 2023 பெப்புருவரி 27இல் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைத்ததுடன், அதனைத் தொடர்ந்து செலாவணி வீதத்திற்கான மாறுபடும் வீச்சை படிப்படியாக விரிவாக்கியது. இவ்வழிமுறைகளுடன் பணிகள் துறைக்கான உறுதியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு இறுதிப்படுத்தலுடன் சந்தை நம்பிக்கை மீண்டும் ஏற்பட்டமை என்பன 2023 மாச்சு தொடக்கத்தில் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைய வழிவகுத்து 2022 தொடக்கப்பகுதியில் காணப்பட்ட மிகையான செலாவணி வீதம் திருத்தப்பட்டது. எனினும், ஒப்பீட்டளவில் குறுகிய காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க உயர்வான அழுத்தங்களுக்கு மத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உயர்வினை அனுமதிக்கும் பொருட்டு மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இதற்கமைய, 2023 மாச்சில் ஒட்டுமொத்த அடிப்படையில் மத்திய வங்கி கொள்வனவு செய்த வெளிநாட்டு செலவாணி ஐ.அ.டொலர் 453 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, மத்திய வங்கி வழிகாட்டல் வீச்சினதும் கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டினதும் முழுமையாக நீக்கலை 2023 மாச்சு 07ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அறிவித்தது. இத்தளர்த்தல் வழிமுறைகள் மற்றும் அண்மைக் காலத்தில் மேம்பட்ட வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடுகள் என்பனவற்றின் இணைந்த தாக்கமொன்றாக, 2023 மாச்சு இறுதியளவில் ஐ.அ.டொலரொன்றிற்கு இலங்கை ரூபா. 327.29 இற்கு 10.9 சதவீதத்தினால் படிப்படியாக உயர்வடைந்தது.

5

அட்டவணை 5.15
செலாவணி வீத அசைவுகள்

நாணயம்	வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா						முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ)			
	ஆண்டிறுதி வீதம்			ஆண்டுச் சராசரி வீதம்			ஆண்டிறுதி		ஆண்டுச் சராசரி	
	2020	2021	2022	2020	2021	2022	2021	2022	2021	2022
யூரோ	229.42	226.86	386.93	212.07	235.10	339.04	1.13	-41.37	-9.80	-30.66
இந்திய ரூபா	2.55	2.69	4.39	2.50	2.69	4.11	-5.33	-38.67	-6.96	-34.56
யப்பானிய யென்	1.81	1.74	2.74	1.74	1.81	2.44	3.91	-36.46	-3.95	-25.93
ஸ்டேர்லிங் பவுண்	254.35	270.60	437.35	238.22	273.51	396.89	-6.00	-38.13	-12.90	-31.09
ஐ.அ.டொலர்	186.41	200.43	363.11	185.52	198.88	324.55	-7.00	-44.80	-6.72	-38.72
சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ.)	268.48	280.53	483.24	258.61	283.18	431.91	-4.29	-41.95	-8.68	-34.43

தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ)	ஆண்டிறுதி சுட்டெண்			ஆண்டுச் சராசரி சுட்டெண்			முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம்			
							ஆண்டிறுதி சுட்டெண்		ஆண்டுச் சராசரி சுட்டெண்	
(2017=100)	2020	2021	2022	2020	2021	2022	2021	2022	2021	2022
பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள்	83.12	79.65	47.32	85.93	78.64	53.99	-4.18	-40.59	-8.48	-31.34
உ.தா.செ.வீ 24 - நாணயங்கள்	88.37	83.31	46.23	91.52	83.58	54.33	-5.72	-44.51	-8.67	-35.00


(அ) இலங்கை ரூபாவிற்கு சமனான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீத உயர்வுக்கு மத்தியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் பலமடைந்தமையுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஐ.அ.டொலருக்கெதிராக மற்றைய முக்கிய நாணயங்களும் தேய்வடைந்தன. இதற்கமைய, 2022 இறுதியில், யூரோ (5.9 சதவீதம்), யப்பானிய யென் (13.2 சதவீதம்), ஸ்டேர்லிங் பவுண் (10.8 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (10.1 சதவீதம்) என்பன ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தன. பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 41.9 சதவீதத்தினால் தேய்வடைந்த போதிலும் 2023இன் முதற் காலாண்டுப்பகுதியில் பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா உயர்வடைந்ததுடன் 2023 மாச்சு இறுதியளவில் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 9.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

5.8.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்


5 நாணயம் மற்றும் 24 நாணயம் இரண்டினதும் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் கணிசமானளவு கீழ் நோக்கிய சீராக்கத்திற்குட்பட்டன. குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுடன் சேர்ந்து குறிப்பிட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவில் தேய்வடைந்தமையினைப் பிரதிபலித்து பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, 2022இல் 5 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 41.1 சதவீதத்தினால் தேய்வடைந்தவேளையில் 24 நாணய சுட்டெண் 40.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, இலங்கையில் வெளிநாட்டு போட்டித்தன்மையினை எடுத்துக்காட்டுகின்ற 5 நாணயம் மற்றும் 24 நாணயச் சுட்டெண்களினால் அளவிடப்பட்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆண்டுப்பகுதியில் முறையே 13.5 சதவீதத்தினாலும் 44.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பொதுவாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 100 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட (2017=100) கீழ் மட்டத்திற்கும் குறிப்பிடத்தக்களவு கீழே தொடர்ந்தும் காணப்பட்டதுடன் செலாவணி வீதம் நாட்டின் வர்த்தக போட்டித்தன்மைக்கு தொடர்ந்தும் ஆதரவாக இருந்தமையினை எடுத்துக்காட்டியது. 2023 மாச்சில் செலாவணி வீதம் அதிகளவிற்கு உயர்வடைந்தமையின் காரணமாக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகிய இரண்டினதும் சுட்டெண்கள் கணிசமாக அதிகரித்து ஐ.அ.டொலருக்கும் நாணயக் கூடையிலுள்ள ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா பெயரளவில் உயர்வடைந்தமையினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, 2023 மாச்சு இறுதியில் 5 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 9.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 15.5 சதவீதத்தினால் குறைவடைந்து 24 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே 10.3 சதவீதத்தினாலும் 10.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

5.8.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

உள்நாட்டுச் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களின் அளவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் மேலும் வீழ்ச்சியடைந்தன. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2021இன் ஐ.அ.டொலர் 12,160 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 9,570 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இல் ஐ.அ.டொலர் 5,852 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 5,479 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 57.3 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இன் ஐ.அ.டொலர் 6,308 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 4,091 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2022இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 568 மில்லியன் நிரம்பல் செய்ததன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. இது, ஐ.அ.டொலர் 2,148 மில்லியன் கொண்ட கொள்வனவு மற்றும் ஐ.அ.டொலர் 2,716 மில்லியன் கொண்ட வழங்கல் என்பன மூலம் ஏற்பட்டது. சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு, முக்கியமாக ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றுவது தொடர்பான வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட கட்டாய விற்பனைகளுடாகப் நடைப்பெற்றவேளையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைகள் அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளை

வரைபடம் 5.15
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான
முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல் அளவுகள்



வசதிப்படுத்துவதன் பேரிலானதாக இருந்தது. மத்திய வங்கி, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தும் அதேவேளை செலாவணி வீதத்தில் மிகையான தளம்பலைத் தணிக்கும் பொருட்டு 2023இன் முதற் காலாண்டுப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில், ஐ.அ.டொலர் 861 மில்லியன் கொள்வனவு செய்ததன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது.

5

6

இறைக்கொள்கையும் அரச நிதியும்

6.1 பொதுநோக்கு

பல தசாப்தங்களாக விடாப்பிடியாகவிருந்த இறைத் துறை சமமின்மைகள் 2022இல் இக்கட்டான நிலையினை அடைந்து, எதிர்பாராத அரசியல் சார்ந்த விளைவுகளுடாக எண்ணற்ற சமூகப் பொருளாதார அழுத்தங்களைத் தோற்றுவித்தன. கொள்கைத் தடுமாற்றங்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என்பவற்றுக்கு மத்தியில் 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவப் பொறுப்புடமைச் சட்டம் மற்றும் அதன் சீர்திருத்தங்கள் அத்துடன் 2018ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் என்பவற்றில் மட்டுப்பாடுகள் பேணப்பட்ட போதிலும் அண்மைய ஆண்டுகளில் காணப்பட்ட நீண்டகால வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் குறிப்பிடத்தக்க இறை நலுவல்கள் என்பன காரணமாக ஒன்றுதிரண்ட பொதுப்படுகடன், நிலைபேறற்ற மட்டத்தினை எட்டியது. பல ஆண்டுகளாக வீழ்ச்சியடைகின்ற அரசிறை மற்றும் உயர்வடைகின்ற படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் என்பன உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார அதிர்வுகளுக்கு நாட்டினது பாதிக்கப்படும் தன்மைகளை தீவிரப்படுத்தின. 2020 சனவரி தொடக்கம் தொடங்கிய அத்துடன் 2021இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து 2022இன் ஆரம்பக்காலப்பகுதியில் தீவிரமடைந்த பன்னாட்டு தரப்படுத்தல் முகவராண்மைகள் மூலம் நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தல் தொடராகத் தரம் குறைக்கப்பட்டமை வெளிநாட்டுப் படுகடனை தீர்ப்பதற்குத் தேவையான வெளிநாட்டு நாணய நிதியிடலைத் திரட்டுவதில் அரசாங்கத்திற்கு அச்சம் விளைவிக்கக்கூடிய சவால்களைத் தோற்றுவித்தது. வெளிநாட்டு நிதியிடலுக்கு பெறுவழி கிடைக்கப்பெறாமை அதேபோன்று உபயோகிக்கத்தக்க அலுவல்சார் ஒதுக்குகள் 2022இன் ஆரம்பத்தில் ஏறத்தாழ பூச்சியம் மட்டத்திற்குத் தேய்வடைந்தமை என்பன அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவை தடைப்படுத்தின. இதன்விளைவாக, 2022 ஏப்பிறல் 12 அன்று தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்தது. 2022 மார்ச்சில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றுக்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியினை அரசாங்கம் ஏற்கனவே நாடியிருந்தது. இருப்பினும், படுகடன் ஸ்தம்பித நிலை தொடர்பிலான அறிவிப்பினைத் தொடர்ந்து இலங்கைப் பொதுப் படுகடன் நிலைபேறற்ற மட்டங்களை எட்டி படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையை முன்னெடுப்பதற்கான வழிமுறைகளைத் தேவைப்படுத்தியிருந்தமையினால் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியொன்றின் மீதான பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. அதனைத் தொடர்ந்து 2022 செத்தெம்பர் முற்பகுதியில் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்று எட்டப்பட்டதுடன் இருபுடை கடன்கொடுனர்களிடமிருந்தான நிதியியல் உத்தரவாதங்கள் பெறப்பட்டவுடன் 2023 மார்ச்சில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை விரிவாக்கப்பட்ட நிதிய வசதி வரவு செலவுத்திட்ட ஆதரவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒப்புதலளித்தது. அதேவேளையில், அண்மைய ஆண்டுகளில் பற்றாக்குறைக்கு நிதியிடலுக்கு உள்நாட்டு மூலங்கள் மீது தங்கியிருப்பதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் நாணய நிதியிடலுக்கான பாரிய பங்கு 2021 காலப்பகுதியில் உச்சமடைந்ததுடன் 2022 முழுவதும் விடாப்பிடியாகவிருந்து குறிப்பிடத்தக்க பணவீக்க அழுத்தங்களை விளைவித்தது. வளர்ச்சியடைகின்ற பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 2022 ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கை இறுக்கமடையச் செய்வதை தேவைப்படுத்தி, அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளின் மேல்நோக்கிய சீராக்கத்திற்கு வழிவகுத்தது. அரசாங்கத்தின் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு பற்றிய உயர்வடைகின்ற நிச்சயமின்மைகள் மூலம் அதனைத்தொடர்ந்து இது வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இறைத் துறை அழுத்தங்கள் 2022 காலப்பகுதியில் உயர்வடைந்தமையினால், அண்மைய காலத்தில் கணிசமான சீராக்கச் செலவுகளுடன் நம்பிக்கையினையும் உறுதிப்பாட்டையும் மீட்டெடுக்கும் நோக்குடன் அரசாங்கம் தனித்தன்மைவாய்ந்த இறைச் சீராக்கங்களையும்


கொள்கை வழிமுறைகளையும் எடுக்கவேண்டியிருந்தது. அரசாங்கமானது முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளால் வழங்கப்படும் சேவைகளுக்கு செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் உபாயங்களை தொடங்குவதுடன் சேர்த்து அரசிறையை அடிப்படையாகக் கொண்ட வலுவான இறைத்திரட்சிப் பாதையில் கால்பதித்தது. எனினும், 2022 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில செலவினச் சீராக்க வழிமுறைகளுக்கு மத்தியிலும் அரசாங்க செலவினம் தொடர்ந்தும் உயர்வடைந்தது. பெயரளவு நியதிகளில் அரசாங்கச் செலவினத்தின் இவ்வதிகரிப்பானது வளர்ச்சியடைகின்ற உள்நாட்டுப் படுகடன் மீதான பாரிய வட்டிக் கொடுப்பனவுகளையும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கடன்வழங்குவதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினையும், உதவுத்தொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினத்தினையும் பிரதிபலித்தது. எவ்வாறிருப்பினும், உயர்வான சுருக்கியுடன் கூடிய பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விரிவடைதலுடன் இணைந்து இறைத்திரட்சி வழிமுறைகள் 2022 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறை நிலுவைகளில் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உதவின. 2021 உடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகள் அதேபோன்று மொத்த உள்நாட்டு உற்பத்தி நியதிகள் இரண்டிலும் ஆரம்பப் பற்றாக்குறை குறுக்கமடைந்ததுடன் முதனிலை நிலுவை மேலும் மேம்பட்டமை எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பொதுப்படுகடன் உறுதிப்பாட்டினை உறுதிசெய்ய வேண்டியதை நியாயப்படுத்தியது. பெறுமதிசேர்க்கப்பட்ட வரி மற்றும் தனியாள் வருமான வரித்தளங்கள் என்பவற்றின் அதிகரிப்பு அத்துடன் தனியாள் மற்றும் நிறுவன வருமான வரி வீதங்களின் அதிகரிப்பு என்பன உள்ளடங்கலாக 2022இன் பிந்திய பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளின் முழுமையான நன்மையினைப் பிரதிபலித்து, அரசிறை 2023இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023இல் இலங்கை படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலம் தொடக்கம் நீண்டகாலத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் படுகடன் நிலைபெறுதன்மை இலக்குகளுக்கிசைவான பொதுப்படுகடன் வீச்சுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. வருவாயை அதிகரித்தல் மற்றும் செலவினத்தை சீரமைத்தல் என்பன மீதான தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் 2024ஆம் ஆண்டில் முதலாந்தர நிலுவையிலுள்ள மிகை எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன் இதனூடாக நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட காலத்தில் பொதுப்படுகடன் நிலைபெறுதன்மை உறுதிசெய்யப்படும். அதேநேரம் தேவையற்ற மற்றும் அத்தியாவசியமற்ற செலவினங்கள் அரசாங்கத்தினால் நீக்கப்பட்டமையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆதரவளிக்கப்பட்ட செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அத்தியாவசியமானதாகும். அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக மறுசீரமைப்புக்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இறைத்திரட்சிப் பாதையை அடைவதற்கு வரவிருக்கும் காலப்பகுதியில் அனைத்து ஆர்வலர்களினதும் ஒன்றுதிரண்ட முயற்சிகளும் பொதுமக்களின் ஆதரவும் மிகவும் முக்கியமானதாகும். எதிர்வரவுள்ள காலப்பகுதியில் நிலையான மீட்சிக்கும் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கும் அத்துடன் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினரைப் பாதுகாப்பதனை உறுதிசெய்வதற்கும் இறைத்திரட்சியினை மறுசீரமைத்தல் இன்றியமையாததாகும்.


6.2 இறைக் கொள்கை வழிமுறைகள்


இறைத்திரட்சி மற்றும் படுகடன் நிலைபெறுதன்மை என்பவற்றை நோக்காகக் கொண்டு, ஏனையவற்றிற்கு மத்தியில் முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டதினால் உதவியளிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மறுசீரமைப்புக்களை 2022இல் அரசாங்கம் தொடங்கியது. அரசிறைக்கும் செலவினத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முறையே 12.0 சதவீதம் மற்றும் 20.8 சதவீதம் கொண்ட பேராவல்மிக்க இலக்குகளை 2022ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் முன்மொழிந்தது. எவ்வாறாயினும், படுகடன் மறுசீரமைப்புக் கரிசனைகள் காரணமாக ஏற்பட்ட உயர் இடர்நேர்வுக் கரிசனைகளினால் பாதிக்கப்பட்டிருந்த உயர்வடைந்த உள்நாட்டுக் கடன்பெறுதல் வட்டி வீதங்களின் மூலம் உருவான பாரிய உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில், பொருளாதார நடவடிக்கை மீதான இடையூறு மற்றும் செலவினம் மிகைப்படுதல் என்பவற்றைப் பிரதிபலித்து, ஆண்டின் முதலரைப்பகுதியில் மந்தமான வருமானச் சேகரிப்புக் காரணமாக இவ்விலக்குகளை அடைவது சவால் மிக்கதாகவிருந்தது. 2022 மார்சு மற்றும் ஏப்பிறலில் அரசாங்கமானது செலவினச் சீரமைப்பு வழிமுறைகளை அறிவித்த அதேவேளை, 2022 மேயில் பல வருமான மேம்பாட்டு வழிமுறைகளுக்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. 2022 செத்தெம்பரில், வருமான மேம்பாட்டு வழிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதை, இலக்காகக் கொண்டு, ஆரம்ப ஒதுக்கீடுகள் போதியளவற்றதாகக் காணப்பட்ட அத்தியாவசிய நடவடிக்கைகள் மீது மேலும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை வழங்குகின்ற அத்துடன் அமைச்சுக்களின் கட்டமைப்பிற்கான மாற்றங்களுக்கிணங்க வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்ற 2022ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத்திட்டத்திற்கு பராளுமன்றம் ஒப்புதலளித்தது. 2022இற்கான இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தின் பிரகாரம், ஆண்டிற்கான அரசிறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8 சதவீதத்திற்குத் திருத்தம்செய்யப்பட்ட அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முறையே 18.6 சதவீதம் மற்றும் 9.8 சதவீதம் கொண்ட குறைவடைந்த செலவினமும் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறையும் எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய, 2022இற்கான ஆரம்பப் பற்றாக்குறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.0 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது.


வரைபடம் 6.1
இறைத்துறையின் செயலாற்றம்


படுகடன் நிலைபெறுதன்மை பிரச்சனைகள் இறைத்திரட்சிப்படுத்தல் மற்றும் பொதுப்படுகடனை மறுசீரமைப்பதனை தேவைப்படுத்துகின்றது...




















6

அரசாங்கத்தின் வரி வருமானத்தில் வீழ்ச்சியடைகின்ற போக்கை திரும்பச்செய்து, அரசாங்க வருவாய்ச் சேகரிப்பில் கட்டமைப்புச் சார்ந்த பலவீனங்களை தீர்க்கும் நோக்குடன் 2022இல் பல அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2022இன் வரவுசெலவுத்திட்டத்திற்கமைவாக, 2020/2021 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக அவர்களது வரி விதிக்கத்தக்க வருமானம் ரூ.2.0 பில்லியனை விஞ்சிய தனிப்பட்டவர்கள், கம்பனிகள் மற்றும் பங்குடமையாளர்கள் மீது 25 சதவீதம் கொண்ட சென்ற காலத்திற்கும் உள்ளிட்ட ஒரு தடவையான மிகைக்கட்டண வரியை அரசாங்கம் விதித்தது. அதேவேளை, நிதியியல் பணிகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 2022 சனவரி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. அதேவேளை 2022 யூன் தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 08 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதுடன் தொலைத்தொடர்புத் தீர்வை 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. 2022 இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டவாறு, 2022 செத்தெம்பர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பொதுவான பெறுமதிசேர்க்கப்பட்ட வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டம் 2022 திசெம்பர் 15 அன்று சட்டமாக்கப்பட்டதன் மூலம் 2022 ஒத்தோபர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஆண்டு புரள்விற்கான பெறுமதிசேர் வரி பதிவின் அடிப்படை அளவு ரூ.300.0 மில்லியனிலிருந்து ரூ.80.0 மில்லியனுக்கு கீழ் கொண்டுவரப்பட்டது. இதனூடாக வரித் தளம் விரிவுபடுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2022 ஒத்தோபர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் புரள்வு மீதான 2.5 சதவீதம் கொண்ட சமூகப் பாதுகாப்பு தீர்வை ரூ.120.0 மில்லியனை விஞ்சுகின்ற வருடாந்தப் புரள்வைக் கொண்ட இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், பணி வழங்குநர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மீது விதிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை குறைவடைந்தமை மற்றும் இறக்குமதி உரிமங்களை வழங்குவதுடன் தொடர்புபட்ட பிரச்சனைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, 2022 யூன் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் மீது அரசாங்கம் மிகைக்கட்டணத்தை அறிமுகப்படுத்தியது. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கு உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்ட மூலத்தில் உள்ள வழிமுறைகள் உள்ளடங்கலாக வருமானவரிக் கட்டமைப்பிற்கு சட்டவாக்கத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இத்திருத்தங்கள் 2023 சனவரியிலிருந்தே நடைமுறைக்கு வந்திருந்தன. 2022இல் அறிமுகப்படுத்தப்பட்ட வருமானம் மேம்படுத்தல் வழிமுறைகளில் பெரும்பாலானவை 2022இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்தும் 2023இன் தொடக்கத்திலும் நடைமுறைக்கு வந்ததனால் அத்தகைய வழிமுறைகளின் அரசிறை மீதான முழுமையான தாக்கம் 2023 தொடக்கத்திலிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றது.


மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளிக்கு மத்தியில், குறிப்பிடத்தக்க சமூக பொருளாதார அழுத்தங்களுக்கிடையில் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினருக்கு உதவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2022 சனவரியில், பொருளாதார நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட உடனடி நிதியியல் இன்னல்களை தளர்த்துவதற்கு அரசாங்கமானது அரசாங்கத் துறை ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுவோர் போன்றோருக்கு ஆதரவளிப்பதற்கு நிவாரணப் பொதியொன்றினை அறிவித்தது. அதற்கமைய, அரசாங்கத் துறை ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோறுக்கும் ரூ.5,000 கொண்ட மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டதுடன் சமூர்த்திப் பயனாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,000 மூலம் அதிகரிக்கப்பட்டது. வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளைவிட அரசாங்கச் செலவினம் உயர்வடைந்ததைப் பரிசீலனையில் கொண்டு, 2022 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட நிவாரணப் பொதியை முன்னெடுப்பதற்கும் ஏனைய செலவினத்திற்கான நிதியங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் 2022 யூனில் ரூ.695.0 பில்லியன் கொண்ட (மொ.உ.உற்பத்தியின் 2.9 சதவீதம்) குறைநிரப்பு ஒதுக்கீட்டிற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்தது. பொருளாதார நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட எதிர்பாராத துன்பங்களை கருத்திற்கொண்டு, உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அரசாங்கம் உதவுவதற்கு நிதியளிக்கின்ற அவற்றின் ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களின் சில நோக்கங்களை மாற்றின. வறுமையான மற்றும் பாதிக்கப்படத்தக்க வகுப்பினருக்கான பண மானியங்களை வழங்குதல், வேளாண்மை நடவடிக்கைகளுக்காக வளமாக்கிகளை வழங்குதல், அத்தியாவசிய மருந்துகள் கொள்வனவு மற்றும் திரவப்பெற்றோலிய எரிவாயுக் கொள்வனவு அத்துடன் நகர் மற்றும் புறநகர் பிரதேசங்களில் திரவப்பெற்றோலிய எரிவாயு சிலிண்டர்களை விநியோகித்தல் என்பன உள்ளடங்கலாக பல்வேறு செயற்பாடுகளுக்கு இந்நிதியங்கள் பயன்படுத்தப்பட்டன.

விரிவடைகின்ற வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை அத்துடன் வரவுசெலவுத்திட்ட நிதியிடுவதற்கான அரசாங்கத்திற்கு வழிகள் மட்டுப்படுத்தப்பட்டமை என்பவற்றின் நோக்கில், 2022 மார்ச் தொடக்கம் பல்வேறு செலவின சீரமைப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தியாவசியமற்ற,

அவசரமற்ற மூலதனச் செலவினத்தை இடைநிறுத்துவதற்கும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள், அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் காகிதாதிகள் மற்றும் அச்சிடல் செலவுகள் போன்றன மீதான மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை அரசாங்கத் துறைக்கு புதிய ஆட்சேர்ப்புக்களை நிறுத்துமாறும் அறிவுறுத்தி அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அரசாங்க நிறுவனங்களுக்கு சுற்றறிக்கையொன்றினை வழங்கியது. மேலும், வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றின் செலவினத்தைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தி 2022 ஓகத்தில் இதேபோன்று சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. நாடு எதிர்கொண்ட சக்தி நெருக்கடியையும் உயர்வடைகின்ற அரசாங்க செலவினத்தையும் கருத்திற்கொண்டு, 2022 மாச்சில் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்நிறுவனங்களின் எரிபொருள் மற்றும் மின்சாரம் மீதான செலவினத்தைக் குறைக்குமாறு அறிவுறுத்தி சுற்றறிக்கையொன்றினை வழங்கியது.

கிரமமான மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலைத் திருத்தங்களில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் இலங்கை மின்சார சபையினதும் தொடர்ச்சியான நிதியியல் நட்டங்களைக் கருத்திற்கொண்டு, அரசாங்கமானது சில்லறைப் பெற்றோலிய விலைகளையும் இறுதிப்பயன்பாட்டாளர் மின்சாரக் கட்டணங்களையும் செலவு மீட்பு மட்டத்திற்கு பல தடவைகள் திருத்தியது. மாதாந்த அடிப்படையில் 2022 யூனிலிருந்து அரசாங்கம் சில்லறை எரிபொருள் விலைகளைச் சீர்செய்ததுடன் சில்லறை விலைகளை நிர்ணயிப்பதற்கு 2018இல் எரிபொருள் விலையிடல் சூத்திரத்தைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்து. அதேவேளை, மின்சாரக் கட்டணங்கள் 2022 ஓகத்திலும் 2023 பெப்புருவரியிலும் மேல்நோக்கி திருத்தம்செய்யப்பட்டன. மேலும் 2022 நவெம்பரில் ஒவ்வொரு ஆண்டும் சனவரியிலும் யூலையிலும் மின்சாரக் கட்டணங்களை செலவு மீட்பு மட்டங்களுக்கு சீர்செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்து. எதிர்காலத்தில் செலவு மீட்பு அடிப்படையில் மின்சாரக் கட்டணங்கள், மின்சார உதவுதொகை மற்றும் மின்சார உதவுதொகை தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கான வரவுசெலவுத்திட்ட மாற்றல்கள் என்பவற்றை நிர்ணயிப்பதற்கு மொத்த வழங்கல் கொடுக்கல்வாங்கல் கணக்கு மேம்படுத்தப்படும். இலங்கை மின்சார சபையினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் நிதியியல் செயலாற்றத்தினை செலவுப் பிரதிபலிப்பு விலைச் சீராக்கங்கள் வலுப்படுத்தி இதன்மூலம் அவசரகாலப் பொறுப்புக்கள் ஊடாக தோன்றுகின்ற சாத்தியமான இறைசார்ந்த சுமைகளை குறைவடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் 6.2
முக்கிய இறை மீதிகள் (அ)
(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)



(அ) நிதி அமைச்சிற்கமைய 2019இற்கான இறைத்துறைப் புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் பெயரளவு நியதிகளில் மொத்த நிதியளித்தல் தேவைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, 2022 இற்கான மொத்த கடன்பெறுதல் வரையறை பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்டு இதன்மூலம் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியிடலுக்கு மத்தியில் உள்நாட்டு நிதியிடலுக்கு மேலதிக இடைவெளி தோற்றுவிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டிற்கான ரூ.3,200 பில்லியன் கொண்ட மொத்த கடன்பெறுதல் வரையறை 2021ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டது. 2022 வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏற்கனவேயுள்ள ஒதுக்கீடுகளைவிட அத்தியாவசிய நடவடிக்கைகள் மீதான அதிகரித்த செலவுகள் அதேபோன்று அதிகரித்த உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பவற்றின் நோக்கில், 2022 செத்தெம்பர் ஆரம்ப காலத்தில் 2022ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டத்தினால் ரூ.3,844 பில்லியனுக்கு இவ்வரையறை மேல்நோக்கி திருத்தம்செய்யப்பட்டது. மேலும், உயர்வடைந்த வட்டி வீதங்களுக்கு மத்தியில் அரசாங்கத்தின் உச்சமடைகின்ற நிதியளித்தல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் பொருட்டு, 2022 நவெம்பரில் 2022இற்கான மொத்த கடன்பெறுதல் வரையறையை ரூ.663 பில்லியனால் ரூ.4,507 பில்லியனுக்கு மேலும் உயர்த்துவதற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்தது. அதேவேளை, 2022 யூனில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் வரையறையை ரூ.3,000 பில்லியனிலிருந்து ரூ.4,000 பில்லியனுக்கு அதிகரித்தது. உயர்வடைந்த சந்தை வட்டி வீதங்களின் காரணமாக முகப்பெறுமதி நியதிகளில் உயர்வடைகின்ற கடன்பெறுதல் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, பாராளுமன்ற ஒப்புதலுடன் இவ்வரையறை 2022 நவெம்பரில் மேலும் ரூ.5,000 பில்லியனுக்கு உயர்த்தப்பட்டது.

படுகடன் ஸ்தம்பிதம் மற்றும் தொடர்ச்சியான நாட்டிற்கான கடன் தரமிடல் குறைப்புக்கள் என்பவற்றுக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழியினை கருத்திற்கொண்டு, சலுகை வெளிநாட்டு நிதியிடலை அணுகும் நோக்குடன், பன்னாட்டு அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து நிதியிடலை பெறுவதன் மூலம் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இலங்கைக்கான தரப்படுத்தலை திருப்புவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. கீழ்மட்ட நாட்டிற்கான கடன் தரப்படுத்தல் காரணமாக புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கியினால் வழங்கப்படும் கடன்களுக்கு இலங்கை இனிமேலும் தகுதிபெறாது. ஆகையினால் அதன் 'கெப்' வசதியூடாக மிகவும் பாதிக்கப்படத்தக்க நாடுகளுக்கு சலுகை நிதியளித்தலை வழங்குகின்ற பன்னாட்டு அபிவிருத்திச் சங்கத்தின் நிதியிடலுக்கு கோரிக்கையொன்றை உலக வங்கிக்கு மேற்கொள்வதற்கு 2022 ஒத்தோபரில் அமைச்சரவை அனுமதியளித்தது. அதற்கமைய, 2022 திசெம்பரில் பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம் நிதியிடலுக்கான இலங்கையின் கோரிக்கைக்கு உலக வங்கி ஒப்புதலளித்தது. பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை பாதிக்கப்படும் வகுப்பினரை பாதுகாப்பதற்கு இது நாட்டை இயலச்செய்தது.

வெறுமையடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் நாட்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் என்பன மூலம் அரசாங்கத்தின் நேரிடப்போகின்ற பாரிய வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை கருத்திற்கொண்டு வெளிநாட்டு பொதுப்படுகடனின் இனங்காணப்பட்ட வகைகளுக்கான இடைக்கால வழிமுறையொன்றாக 2022 ஏப்பிறல் 12 அன்று அரசாங்கம் படுகடன் இடைநிறுத்தத்தினை அறிவித்தது. சமகாலத்தில், அரசாங்கத்தின் வெளிநாட்டு இருதரப்பு மற்றும் வர்த்தகப் படுகடனை மறுசீரமைப்பதற்கான அதன் எண்ணத்தினையும் அரசாங்கம் அறிவித்தது. படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையொன்றினூடாக படுகடன் நிலைபெறுதன்மையினை உறுதிசெய்வதற்கான முயற்சிகளை வேண்டுகின்ற விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றிற்காக அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியினை நாடியது. அதற்கமைய, அரசாங்கத்தின் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்கு நிதியியல் மற்றும் சட்ட ஆலோசகர்களாக முறையே லசாட் வெரஸ் சாஸ், பிரான்ஸ் மற்றும் கிளிபோட் சான்ஸ் எல்எல்பி என்பனவும் நியமிக்கப்பட்டன. விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் துணையளித்த நிகழ்ச்சித்திட்டத்துடனும் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளுடனும் ஒன்றன்பின் ஒன்றாக அண்மைய காலத்திலிருந்து நீண்டகாலத்தில் படுகடன் மற்றும் இறைத் துறை நிலைபெறுதன்மையினை உறுதிசெய்வதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பேரண்ட பொருளாதார நிகழ்ச்சித்திட்டமானது பயன்பாட்டுப் பணிகளை வழங்குவதற்கான செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறைகளை தாபித்தல் உள்ளடங்கலாக அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான நிறுவனசார் மறுசீரமைப்புகளுக்கு மேலதிகமாக வலுவான இறைத்திரட்சிச் செயன்முறையொன்றினை உள்ளடக்குகின்றது. இந்நோக்கில் இலங்கை அரசாங்கமும் பன்னாட்டு நாணய நிதியமும் வரவுசெலவுத்திட்டத்தை ஆதரவளிக்கும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டிற்காக 2022 செத்தெம்பர் ஆரம்பப்பகுதியில் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டன. பரிஸ் கிளப் உறுப்பு நாடுகள், இந்தியா மற்றும் சீனா உள்ளடங்கலாக அனைத்து முக்கிய இருதரப்பு கடன்கொடுநர்களும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டமொன்றிற்கு படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கான அவற்றின் நிதியியல் உத்தரவாதத்தை வழங்கியுள்ளன. 2023 மார்சு 20 அன்று விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு சிறப்பு எடுப்பனவு உரிமை 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகையினை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அனுமதித்தது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி அனுமதிக்கப்பட்டதுடன் இருதரப்பு மற்றும் வர்த்தகக் கடன் கொடுநர்களுடனான படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் 2023ஆம் காலப்பகுதியில் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் முன்கூட்டிய தவணை தவறுதலைத் தொடர்ந்து, பன்னாட்டு கடன் தரப்படுதல் முகவராண்மைகள் இலங்கையின் நாட்டிற்கான கடன் தரப்படுத்தலை 2022இல் குறைவான மட்டங்களுக்கு மேலும் தரம் குறைத்தன. அதற்கமைய, ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் குளோபல் ரேட்டிங்ஸ், இலங்கையின் நாட்டிற்கான கடன் தரப்படுத்தலை 2022 ஏப்பிறல் 13 அன்று 'CCC (எதிர்மறை)' இலிருந்து 'CC (எதிர்மறை)' ஆகத் தரம் குறைத்ததுடன் 2022 ஏப்பிறலில் நாட்டிற்கான பன்னாட்டு முறிக் கூப்பன்களை கொடுப்பனவுசெய்யாமை காரணமாக 2022 ஏப்பிறல் 25 அன்று 'SD (தெரிவாக தவணை தவறியது)' கொண்ட ஆகக் குறைந்த தரப்படுத்தலுக்கு மேலும் தரம் குறைத்தது. மேலும், 2022 ஏப்பிறல் 18 அன்று மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விஸஸ் நிறுவனமும் இலங்கையின் நாட்டிற்கான கடன் தரப்படுதலை 'Caa2 (உறுதியானது)' இலிருந்து 'Ca (உறுதியானது)' ஆகத் தரம் குறைத்தது. 2022 மே 19 அன்று பிச் ரேட்டிங், நாட்டின் நீண்டகால வெளிநாட்டு நாணய வழங்குநர் தவணை தவறுதல் தரப்படுத்தலினை 'C' இலிருந்து 'RD' (மட்டுப்படுத்தப்பட்ட தவணை தவறுதல்) ஆக தரம் குறைத்தது. இதற்கு மேலதிகமாக, 2022 திசெம்பர்

அட்டவணை 6.1

2022 மற்றும் 2023இன் ஆரம்பத்தில் வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய இறைக் கொள்கை வழிமுறைகள் மற்றும் அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான எதிர்வரவுள்ள கொள்கை வழிமுறைகள்

திகதி	வழிமுறைகள்
2022 சன 01	நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதியியல் பணிகள் தொடர்பான பெறுமதிசேர் வரி வீதமானது 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது.
2022 சன 13	ஒய்வூதியத்தினைக் கணிக்கையில் கருத்திற்கொள்ளப்படாத ரூ. 5,000 மாதாந்தப் படியானது அரச அலுவலர்களுக்கும் ஒய்வூதியம் பெறுவோரிற்கும் 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வழங்கப்பட்டது.
2022 மார் 08	மின்சார மற்றும் எரிபொருள் பயன்பாட்டினைக் குறைப்பதற்காக அரச துறைக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.
2022 ஏப் 08	2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்ட ஏற்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் வரிவிதிக்கத்தக்க வருமானமுடைய மற்றும் 2020 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கின்ற வரிமதிப்பீட்டு ஆண்டிற்காக ரூ. 2 பில்லியனை விஞ்சுகின்ற வரிவிதிக்கத்தக்க வருமானமுடைய தனிப்பட்டவர்கள், பங்குடமையாளர்கள் மற்றும் கம்பனிகள் மீது 25 சதவீத பின்நோக்கிய ஒரே தடவையிலான மிகைக்கட்டண வரியொன்றினை விதிக்கும் பொருட்டு 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மிகைக்கட்டண வரிச் சட்டம் இயற்றப்பட்டது.
2022 ஏப் 12	இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை இடைநிறுத்துதல் தொடர்பான இடைக்காலக் கொள்கை அறிவிக்கப்பட்டது.
2022 ஏப் 26	உற்பத்தித்திறனற்ற/அத்தியாவசியமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரச துறைக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.
2022 மே 31	பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்ட அளவீடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பல்வேறு அரசிறை மேம்பாட்டு வழிமுறைகளுக்கான அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்டது.
2022 யூன் 01	பொருட்களினதும் பணிகளினதும் வழங்கல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 யூன் 04	தொலைத்தொடர்பூட்டல் தீர்வை 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 யூன் 07	திறைசேரி உண்டியல்கள் மீதான வரையறையானது ரூ. 3,000 பில்லியனைக் கொண்ட முன்னைய வரையறையிலிருந்து ரூ. 4,000 பில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 ஓக 08	உற்பத்தித்திறனற்ற/அத்தியாவசியமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரசிற்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றிற்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.
2022 செத் 01	பொருட்களினதும் பணிகளினதும் வழங்கல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 செத் 09	2022ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் (திருத்த) சட்டம் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது. மொத்த கடன்பெறுகை வரையறை ரூ. 3,200 பில்லியனிலிருந்து ரூ. 3,844 பில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 செத் 13	அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்கட்டமைக்கின்ற பிரிவினை நிறுவுவதற்கான அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்டது.
2022 ஒத் 01	ரூ. 120 மில்லியனை விஞ்சுகின்ற ஆண்டுப் புரள்வொன்றினைக் கொண்ட இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், பணி வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் ஆகியோருக்கான புரள்வின் மீதான 2.5 சதவீத சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வையினை விதிப்பதற்கான 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வைச் சட்டம் 2022 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இயற்றப்பட்டது.
2022 ஒத் 18	ஒதுக்கீட்டுச் சட்டமூலம் - 2023 பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.
2022 நவெ 21	பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் முன்கூட்டிய நடவடிக்கையொன்றாக செலவு மீட்சியினை அடைகின்ற நோக்குடன் 2018 எரிபொருள் விலையிடல் சூத்திரத்தின் அடிப்படையிலமைந்த எரிபொருள் விலைச் சீராக்கங்களைத் தன்னியக்கப்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்டது.
2022 நவெ 21	பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிச் செயற்றிட்டத்தின் முன்கூட்டிய நடவடிக்கையொன்றாக செலவு மீட்சி மற்றும் அரையாண்டு அடிப்படையொன்றில் மின்வலுத் தீர்வைச் சீராக்கங்களைத் தன்னியக்கப்படுத்துவதற்கான அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்டது.
2022 நவெ 30	மொத்த கடன்பெறுகை வரையறை ரூ. 3,844 பில்லியனிலிருந்து ரூ. 4,507 பில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 நவெ 30	திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மீதான வரையறை ரூ. 4,000 பில்லியனிலிருந்து ரூ. 5,000 பில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 திசெ 08	2022ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.
2022 திசெ 14	பெறுமதிசேர் வரி வீதத்தினை அதிகரித்தல், வரித் தளத்தினை விரிவுபடுத்தல் மற்றும் பெறுமதிசேர் வரி விலக்களிப்புக்களை நீக்குதல் என்பவற்றிற்குச் சட்டபூர்வ விளைவைக் கொண்டுவரும் பொருட்டு 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்த) சட்டம் இயற்றப்பட்டது.
2022 திசெ 19	கூட்டுத்தாபன மற்றும் தனிநபர் வருமான வரிக்கான வரிக் கட்டமைப்பினைத் திருத்தி பிடித்துவைத்தல் வரியினை மீளறிமுகப்படுத்தி 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் (திருத்த) சட்டம் இயற்றப்பட்டது.
2023 சன 01	பெற்றோல், டீசல் மற்றும் சிகரட் என்பன மீதான கலால் தீர்வைகள் திருத்தப்பட்டன.
2023 சன 03	மதுபானம் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது.
2023 ஏப் 04	1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்டத் தீர்வை சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
எதிர்வரவுள்ள கொள்கை வழிமுறைகள்	
2023 மே இறுதியில்	நலன்புரி நலக் கொடுப்பனவுத் திட்டம் மற்றும் நலன்புரி நலக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான குறைந்த வருமானக் குடும்பங்களை அடையாளங்காணும் பொருட்டு புதிய தகைமைப் பிரமாணத்தின் பிரயோகம் என்பவற்றின் பாராளுமன்ற ஒப்புதல்.
2023 யூன் இறுதியில்	இலங்கை மின்சார சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஐந்தொகைகளை மீள்கட்டமைக்கும் பொருட்டு காலக்கெடுகளையும் முறைமைகளையும் எடுத்துக்காட்டுகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய உபாயமொன்றிற்கான அமைச்சரவை ஒப்புதல்.
2023 செத் இறுதியில்	ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவத் தகவல் முறைமையின் நடைமுறைப்படுத்தலினை நிறைவுசெய்து அதன் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தல்.
2023 ஒத் இறுதியில்	பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்ட அளவீடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் முதலாவது வாசிப்பிற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.
2023 திசெ இறுதியில்	பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட அளவீடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் செலவிடல் ஒதுக்கீடுகள் என்பவற்றின் பாராளுமன்ற ஒப்புதல்.
2023 திசெ இறுதியில்	தொடர்புடைய முகவராண்மைகளின் வரவு செலவுத்திட்ட உருவாக்கச் செய்முறை, வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் தகவல் மற்றும் பொறுப்புக்கூறல் தேவைப்பாடுகள் என்பவற்றிற்கு அதிகாரமளிக்கும் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டமூலமொன்றினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.
2023 திசெ இறுதியில்	மின்வலு மானியத்தினைத் துல்லியமாக அளவிடுவதற்கும் மின்வலுத் தீர்வை மற்றும் அரசாங்க மாற்றல் தேவைப்பாடு என்பவற்றின் அடிப்படையிலமைந்த செலவு மீட்சியினை நிர்ணயித்து அதனைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கும் மொத்த நிரம்பல் கொடுக்கல்வாங்கல் கணக்கினை மேம்படுத்தல்.
2024 சன 01	உபாய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் முதலீட்டுச் சபைச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்களின் மூலம் விதிக்கப்பட்ட நேரடிச் செலவுகளை மதிப்பிடுவதற்கும் வெளியிடுவதற்கும் ஆரம்பித்தல்.
2024 சன 01	விலக்களிப்புக்களின் பரந்தளவிலான பெரும்பான்மையினை நீக்குவதன் மூலம் பெறுமதிசேர் வரி முறைமையினை மேம்படுத்தல்.
2024 சன 01	செல்லுபடியாகும் பெறுமதிசேர் வரி மீளளிப்புக்களைக் குறிப்பிடத்தக்களவு விரைவுபடுத்துவதற்கும் எளிமையாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையினை நீக்குவதற்கும் வழிமுறைகளை மேற்கொள்ளல்.
2024 சன 01	பணவீக்கத்திற்கான கலால் தீர்வைகளின் தன்னியக்கச் சுட்டெண்ணாக்கத்தினை அறிமுகப்படுத்தல்.
2025 சன 01	தேசியளவிலான உண்மைச் சொத்து வரியொன்றினை அறிமுகப்படுத்தல்.
2025 சன 01	வரியல்லா சலுகை மற்றும் குறைந்தபட்ச விலக்களிப்புக்கள் என்பவற்றுடன் கொடை மற்றும் வழியுரிமை வரியொன்றினை அறிமுகப்படுத்தல்.

01 அன்று சாத்தியமான 'உள்நாட்டு நாணய படுகடன் தவணை தவறுதல்' நோக்கில் பிச் ரேட்டிங் மூலம் நீண்டகால உள்நாட்டு நாணய வழங்குநர் தவணை தவறுதல் தரப்படுத்தல் 'CCC' இலிருந்து 'CC' ஆகத் தரம் குறைக்கப்பட்டது.

அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் பல படுகடன் கடப்பாடுகள் 2022 இறுதியளவில் மத்திய அரசாங்கப் படுகடனாக வகைப்படுத்தப்பட்டு மத்திய அரசாங்கப் படுகடனில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடமிருந்து (சீன எக்ஸிம் வங்கி) பெற்றுக்கொள்ளப்பட்ட அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான கடன்களாக பதிவுசெய்யப்பட்ட எட்டு கடன்களை மத்திய அரசாங்கப் படுகடனுக்கு உள்ளீர்ப்பதற்கு அமைச்சரவை 2023 சனவரியில் அனுமதியளித்தது. இக்கடன்கள் இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி என்பவற்றின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,427.3 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம், நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மற்றும் மத்தள விமான நிலையம் என்பன தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, ஐ.அ.டொலர் 2,434.8 மில்லியன் தொகையுடைய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பல வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகளும் மத்திய அரசாங்கப் படுகடனின் கீழ் மீள வகைப்படுத்தப்பட்டன.

பேரண்டப் பொருளாதார சமமின்மைகளைத் தீர்த்து பொதுப்படுகடன் நிலைபெறுதன்மையை மீளமைப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக அரசாங்கமானது அதன் இறைத்திரட்சிப் பாதையினை நோக்கி தொடர்ந்தும் அர்ப்பணிப்பாக செயற்படுவதற்கு பல முக்கிய வழிமுறைகளையும் மேற்கொண்டது. 2023இற்காக அனைத்து அரசாங்க நிறுவனங்களினதும் அனுமதிக்கப்பட்ட மீண்டெழும் செலவின மதிப்பீடுகளை 6 சதவீதத்தினால் குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. அதற்கமைய, சம்பளங்கள், ஓய்வூதிய நன்மைகள், மருந்துகள், வாடகை மற்றும் உள்ளூர் வரிகள், வட்டிக் கொடுப்பனவுகள் அத்துடன் கட்டாய நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகள் போன்றன தவிர அவற்றின் மீண்டெழும் செலவினத்தை 6 சதவீதத்தினால் குறைக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மாவட்டச் செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றிற்கு சுற்றறிக்கையொன்றினை வழங்கியது. மேலும், ஒட்டுமொத்த வரி விகிதத்திற்கான நேரடி வரியை உயர்த்துவதன் மூலம் வரிக் கட்டமைப்பின் வளர்விகித அடிப்படையினை அதிகரிக்கும் நோக்குடன் தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்குமான வருமான வரிக் கட்டமைப்புக்களைத் திருத்தி 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் பாராளுமன்றத்தினால் 2022 திசெம்பரில் ஒப்புதலளிக்கப்பட்டது. இச்சட்டவாக்கத் திருத்தங்களானவை ஏனையவற்றிற்கு மத்தியில் தனிப்பட்ட வருமான வரிகளுக்கான வரியற்ற அடிப்படை அளவினைத் ரூ.3.0 மில்லியனிலிருந்து ஆண்டிற்கு ரூ.1.2 மில்லியனிற்கு திருத்துதல், கல்வி, சுகாதாரம் என்பனவற்றின் கணக்கில் உறப்படுகின்ற செலவினம், வீடமைப்புக் கடன்கள் மீதான வட்டிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்புக்கள் என்பவற்றிற்கு வழங்கப்படும் ரூ.1.2 மில்லியன் கொண்ட செலவின நிவாரணத்தை அகற்றுதல், தனிப்பட்ட வருமானவரி வீதங்களை முன்னைய 6 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம், 24 சதவீதம், 30 சதவீதம் மற்றும் 36 சதவீதம் ஆக மேல்நோக்கி அதிகரித்தல், ரூ.1.2 மில்லியன் வரி விலக்கு மட்டத்திற்கு மேலான வருமானத்திற்கான வரி வீச்சினை ரூ.0.5 மில்லியனுக்கு திருத்தியமை, கட்டாய உழைக்கும்போது செலுத்தும் வரி முறைமையினை மீண்டும் அறிமுகப்படுத்தல் அத்துடன் நிறுவன வருமான வரி வீதத்தை 30 சதவீதத்திற்கு மேல்நோக்கித் திருத்துகின்ற அதேவேளை துறை குறித்த அனைத்து நிறுவன வருமான வரி விலக்களிப்புக்கள் மற்றும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட சலுகை வீதங்களை அகற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, 2023 சனவரி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சிகரெட், மதுசாரம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வையினை அரசாங்கம் அதிகரித்தது. மேலும், பல இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வையினை அரசாங்கம் திருத்தியது. வரித்தளத்தை விரிவுபடுத்துவதற்கு இதுவரையிலும் முயற்சிகள்செய்யப்பட்ட போதிலும், வரி ஏய்ப்புக்களைக் குறைத்தல், வரி வலையில் ஏற்கனவே இருக்கின்றவர்கள் மீது கணிசமான சுமையினை விதிக்காது வருமானத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தை இயலச்செய்தல் என்பன மூலம் வரித்தளத்தினை மேலும் விரிவுபடுத்துவதற்கு வரி நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துவதன் மீது அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டிய தேவையுள்ளது. பொருளாதார மந்தநிலை மற்றும் உயர்ந்த சாத்தியமான வரி செலுத்துவோர் புலம்பெயர்தல் விகிதம் என்பவற்றினால் ஈட்டப்படும் வருமானத்தின் குறைப்பு காரணமாக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தால் எதிர்பார்க்கப்பட்ட தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி வருவாய்களை வரும் காலங்களில் அடைவது சவால் மிக்கதாக இருக்கும். உண்ணாட்டரசிறைத் திணைக்களமானது இவ்வருவாய் இடைவெளிகளை நிரப்புவதற்கு நீதித்துறையின்

ஆதரவுடன் நிலுவையிலுள்ள வரி வழக்குகளை தீர்ப்பதனை விரைவுபடுத்துவதுடன் வரி மோசடி செய்தவர்கள் மற்றும் வரி ஏய்ப்பவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

நிலைபேறான வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்கும் நாட்டின் பொருளாதார தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதற்காக நீண்டகால இறைசார் நிலைபெறுதன்மையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் இறைத்திரட்சி வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஏற்றத்தாழ்வுகளைத் தீர்த்து பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை மூலம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினை அனுமதிப்பதற்கு முன்னரான அனைத்து முன்கூட்டிய நடவடிக்கைகளையும் அரசாங்கம் நிறைவேற்றியது. வருவாய் அதிகரிப்பு வழிமுறைகளுக்கான அமைச்சரவை ஒப்புதல், 2022ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத்திட்டத்திற்கான பாராளுமன்ற ஒப்புதல், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்ட நியமங்களுக்கமைவாக 2023 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல், செலவு மீட்பு அடிப்படையில் மாதாந்த சில்லறை எரிபொருள் விலைச் சீராக்கங்களை தன்னியக்கமாக இடம்பெறச் செய்வதற்கும் செலவு மீட்பு அடிப்படையில் ஆண்டிற்கு இரு முறை மின்சார விலைச் சீராக்கங்களை தன்னியக்கமாக இடம்பெறச் செய்வதற்குமான அமைச்சரவையின் ஒப்புதல் என்பவற்றை இந்நடவடிக்கைகள் உள்ளடக்கியிருந்தன. இதற்குமேலதிகமாக, பல்வேறு அளவுசார் செயலாற்றுகை பிரமாணம், குறிகாட்டி இலக்குகள் மற்றும் கட்டமைப்புசார்ந்த அளவீட்டு நியமங்கள் என்பன குறித்த காலப்பகுதியொன்றினுள் அடையப்பெறுவதற்கு பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப மீதி மற்றும் அரசாங்கத்தின் செலவின நிலுவைகளின் இருப்பு என்பன மீதான இலக்குகளை உள்ளடக்குகின்ற அளவுசார் செயலாற்றுகைப் பிரமாணமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலம் ஆண்டிற்கு இருமுறை மீளாய்வுசெய்யப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கிற்கெதிராக நாட்டின் செயலாற்றுகை அளவிடப்படவுள்ளது. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் 0.7 சதவீதம் கொண்ட ஆரம்ப பற்றாக்குறை இலக்கு 2023ஆம் ஆண்டிற்கு அடையப்படவுள்ள அதேவேளை ஏதேனும் நிலுவைகள் அதன் பின்னர் ஒன்றுசேராது, செலவின நிலுவைகள் 2023 யூனவில் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக, பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்க வருவாய், மத்திய அரசாங்கத்தின் மூலமான சமூக செலவிடல், எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான வர்த்தக ரீதியற்ற கடப்பாடுகளின் செலவு மற்றும் திறைசேரி உத்தரவாதங்களுக்கான உச்சவரம்பு போன்ற நியதிகளில் குறிகாட்டி இலக்குகளையும் நிர்ணயித்துள்ளது. அதேவேளை, ஏனையவற்றிற்கு மத்தியில் மாதாந்த அடிப்படையில் செலவு மீட்பு மட்டத்திற்கு சில்லறை எரிபொருள் விலைத்திருத்தங்கள், மின்சார கட்டணத்தை ஆண்டிற்கு இரு முறை அடிப்படையில் செலவு மீட்பு மட்டங்களுக்கு திருத்துதல், செலவு மீட்பு அடிப்படையிலமைந்த மின்சாரக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு மொத்த வழங்கல் கொடுக்கல்வாங்கல் கணக்கின் மேம்படுத்தல், நலன்புரி நலக்கொடுப்பனவுகள் மற்றும் இத்திட்டத்திற்கான பயனாளிகளை இனங்காண்பதற்கான புதிய தகைமைப் பிரமாணத்தைப் பயன்படுத்துவதற்கான பாராளுமன்ற ஒப்புதல், இலங்கை மின்சார சபை, இலங்கை

அட்டவணை 6.2
அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்

விடயம்	2021	2022 (அ)
	ரூ. மில்லியன்	
மொத்த அரசிறை மற்றும் கொடைகள்	**1,463,810**	**2,012,589**
மொத்த அரசிறை	1,457,071	1,979,184
வரி அரசிறை	1,298,019	1,751,132
வரியல்லா அரசிறை	159,052	228,052
கொடைகள்	6,740	33,405
செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**3,521,735**	**4,472,556**
மீண்டெழும்	2,747,512	3,519,633
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	774,223	952,923
இதில் அரச முதலீடு	789,636	1,014,293
நடைமுறைக்கணக்கு மீதி	**-1,290,441**	**-1,540,448**
ஆரம்ப மீதி	**-1,009,542**	**-894,777**
திரண்ட இறை மீதி	**-2,057,925**	**-2,459,967**
மொத்த நிதியிடல்	**2,057,925**	**2,459,967**
வெளிநாட்டு நிதியிடல்	-13,901	424,822
உள்நாட்டு நிதியிடல்	2,071,826	2,035,145
	மொ.உ.உ இன் சதவீதமாக (ஆ)	
மொத்த அரசிறை மற்றும் கொடைகள்	**8.3**	**8.3**
மொத்த அரசிறை	8.3	8.2
வரி அரசிறை	7.4	7.3
வரியல்லா அரசிறை	0.9	0.9
கொடைகள்	0.04	0.1
செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**20.0**	**18.5**
மீண்டெழும்	15.6	14.6
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	4.4	3.9
இதில் அரச முதலீடு	4.5	4.2
நடைமுறைக்கணக்கு மீதி	**-7.3**	**-6.4**
ஆரம்ப மீதி	**-5.7**	**-3.7**
திரண்ட இறை மீதி	**-11.7**	**-10.2**
மொத்த நிதியிடல்	**11.7**	**10.2**
வெளிநாட்டு நிதியிடல்	-0.1	1.8
உள்நாட்டு நிதியிடல்	11.8	8.4

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

6

பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார்லைன்ஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஐந்தொகைகளை மீள் கட்டமைப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய உபாயமொன்றுக்கான அமைச்சரவையின் ஒப்புதல், ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினை அறிமுகப்படுத்தவதை நிறைவுசெய்தல் மற்றும் அதன் செயற்பரப்பை விரிவுபடுத்தல், 2024ஆம் ஆண்டிற்காக வருமான மேம்படுத்தல் வழிமுறைகளுக்கான அமைச்சரவையின் ஒப்புதல், நிகழ்ச்சித்திட்டத்தின் கூறுகளுக்கமைவாக ஒதுக்கீட்டுச் சட்டத்தை சமர்ப்பித்தல் மற்றும் 2024 வரவுசெலவுத்திட்டத்திற்கான பாராளுமன்ற ஒப்புதல் மற்றும் புதிய அரசாங்க நிதி முகாமைத்துவச் சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் ஆகியவற்றை கட்டமைப்புசார்ந்த அளவீட்டு நியமங்கள் உள்ளடக்குகின்றன. இக்கட்டமைப்பு சார்ந்த அளவீட்டு நியமங்களை குறித்துரைக்கப்பட்ட காலவரையறையினுள் நிறைவுசெய்வது பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி துணையளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்கு மிகவும் முக்கியமானதாகும். இக்கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவது வரவிருக்கும் காலப்பகுதியில் இறைசார் நிலைபெறுதன்மையினை எய்தச்செய்கின்ற அதேவேளை, பொருளாதாரத்தை பாதிக்கும் தன்மைகளைத் தோற்றுவிக்கும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நீண்டகாலம் நீடிக்கின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதும் இன்றியமையாததாகும்.

6.3 அரச வரவுசெலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

அரசிறையும் கொடைகளும்

அரசிறை

அரசாங்கத்தின் அரசிறையும் கொடைகளும் விலை மட்டங்களின் சடுதியான அதிகரிப்புடன் ஒன்றிணைந்து ஆண்டுக் காலப்பகுதியில்நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை அடிப்படையிலான இறைத்திரட்சி வழிமுறைகளின் காரணமாக பெயரளவு நியதிகளில் 2022இல் மேம்பட்டன. பெயரளவு நியதிகளில் அரச அரசிறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 35.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, உயர்வான வரி மற்றும் வரியல்லா அரசிறைச் சேகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. வரி அரசிறையானது வருமான வரிகள், பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வை அத்துடன் மதுபானங்கள் மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வைகளிலிருந்து அதிகரித்த அரசிறைத் திரட்டுதலிலிருந்து நன்மையடைந்து 2022இல் 34.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, வரியல்லா அரசிறையின் இலாபம் மற்றும் பங்கிலாபம் தவிர்ந்த

அட்டவணை 6.3
அரசிறையின் சுருக்கம்

விடயம	2021	2022 (அ)
	ரூ. மில்லியன்	
வரி அரசிறை	**1,298,019**	**1,751,132**
வருமான வரிகள்	302,115	534,021
பெறுமதி சேர் வரிகள்	308,213	463,072
கலால் வரிகள்	306,861	342,523
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை	154,125	180,595
இறக்குமதி தீர்வைகள்	64,339	50,009
ஏனைய வரிகள்	162,365	180,912
வரியல்லா அரசிறை	**159,052**	**228,052**
மொத்த அரசிறை	**1,457,071**	**1,979,184**
	மொ.உ.உ இன் சதவீதமாக (ஆ)	
வரி அரசிறை	**7.4**	**7.3**
வருமான வரிகள்	1.7	2.2
பெறுமதி சேர் வரிகள்	1.8	1.9
கலால் வரிகள்	1.7	1.4
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை	0.9	0.7
இறக்குமதி தீர்வைகள்	0.4	0.2
ஏனைய வரிகள்	0.9	0.7
வரியல்லா அரசிறை	**0.9**	**0.9**
மொத்த அரசிறை	**8.3**	**8.2**

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு


அனைத்து துணை வகைகளிலுமிருந்து வருமான சேகரிப்பு உயர்வடைந்தமை ஆண்டுகாலப்பகுதியில் வரியல்லா அரசிறையில் 43.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. ஆண்டுகாலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அநேகமான வருமான மேம்படுத்தல் வழிமுறைகள் 2022இன் இரண்டாமரைப்பகுதியிலும் 2023இன் ஆரம்பத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறையானது பெயரளவு மொ.உ.உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காரணமாக சிறிதளவு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. கொடைகள், 2021இனைவிட 2022இல் ரூ.33.4 பில்லியனுக்கு 395.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறையும் கொடைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் மாற்றமின்றிக் காணப்பட்டன.

அரச அரசிறையில் அதிகரிப்பிற்கு பிரதானமாக பின்னோக்கிய ஒரு தடவை அறவிடப்படும் மிகைக்கட்டண வரி சேகரிப்பினால் தூண்டப்பட்டிருந்த வருமான வரி சேகரிப்பின் வளர்ச்சி பிரதான காரணமாக அமைந்தது. பிரதானமாக ஆண்டுகாலப்பகுதியில் திரட்டப்பட்ட மொத்த வருமான வரியின் ஏறத்தாழ ஐந்தில் ஒன்றிற்கு வகைகூறிய மிகைக்கட்டண வரி காரணமாக பெயரளவு நியதிகளில் வருமான வரிகளிலிருந்தான அரசிறை 76.8 சதவீதம்

கொண்ட ஆண்டிற்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2021இன் 1.7 சதவீதத்திலிருந்து 2022இல் 2.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன்விளைவாக, மொத்த வரி அரசிறைச் சேகரிப்பில் நேரடி வரி வருமானத்தின் பங்கு 2021இல் பதிவாகிய 23.3 சதவீதத்தினைவிட 2022இல் 30.5 சதவீதத்திற்கு மேம்பட்டது. மிகைக்கட்டண வரியினை உள்ளடக்குகின்ற நிறுவன மற்றும் நிறுவனமல்லா வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2021இல் பதிவாகிய ரூ.273.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.488.4 பில்லியனுக்கு 78.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2022 ஏப்பிறல் மற்றும் யூலை மாதங்களில் இரு தவணைகளில் சேகரிக்கப்பட்ட மிகைக்கட்டண வரியிலிருந்தான அரசிறை, ரூ.120.7 பில்லியன் தொகையுடையதாகவிருந்தது. அதேவேளை, தனியாள் முற்பண வருமான வரி மற்றும் பிடித்துவைத்தல் வரி என்பனவற்றிலிருந்தான அரசிறையும் 2021இல் உலகளாவிய நோய்த்தொற்றினால் தடைப்பட்டிருந்த அரசிறைச் சேகரிப்பு நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2022இல் மேம்பட்ட வரி நிர்வாகம் காரணமாக முறையே ரூ.25.5 பில்லியனுக்கும் முறையே ரூ.19.8 பில்லியனுக்கும் ரூ.10.2 பில்லியனாலும் ரூ.7.4 பில்லியனாலும் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன. 2020இன் ஆரம்பப்பகுதியில் இல்லாதொழிக்கப்பட்ட பொருளாதாரப் பணிக்கட்டணங்கள் மீது சேகரிக்கப்பட்ட நிலுவைகள் 2022இல் 0.2 பில்லியனாகக் காணப்பட்டது.

விலைமட்டங்களில் உயர்வினையும் 2022 யூன் மற்றும் செத்தெம்பர் தொடக்கம் பெறுமதிசேர்க்கப்பட்ட வரி வீதத்தில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களினதும் தாக்கத்தினைப் பிரதானமாகப் பிரதிபலித்து, பெறுமதிசேர்க்கப்பட்ட வரியிலிருந்தான அரசிறை 2022ஆம் காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் ஏறத்தாழ 50.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022இன் இரண்டாமரையாண்டு காலப்பகுதியிலிருந்து பொதுவான பெறுமதிசேர்க்கப்பட்ட வரி வீதத்திற்கான திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தமையினால் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர்க்கப்பட்ட வரியிலிருந்தான அரசிறை 2021இல் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து 2022இல் மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதத்திற்கு சிறிதளவு மாத்திரம் அதிகரித்தது. உள்நாட்டு சேவைகள் மீதான பெறுமதிசேர்க்கப்பட்ட வரியிலிருந்தான அரசிறை 2021இன் ரூ.185.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.291.6 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை இறக்குமதிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர்க்கப்பட்ட வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின் ரூ.122.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.171.5 பில்லியனுக்கு அதிகரித்தது. பெறுமதிசேர்க்கப்பட்ட வரி அரசிறையில் பெயரளவு வசதியினைப் பிரதிபலித்து மொத்த அரசிறை மீது பெறுமதிசேர்க்கப்பட்ட அரசிறையிலிருந்து

வரைபடம் 6.3
அரசிறையின் உள்ளமைப்பு - 2022



மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

கிடைத்த அரசிறையின் பங்கு மற்றும் மொத்த வரி அரசிறை என்பன 2021இல் முறையே பதிவாகிய 21.2 சதவீதத்துடனும் 23.7 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 23.4 சதவீதத்திற்கும் 26.4 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

மதுபானம் மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வைகளின் அதிகரித்த சேகரிப்பினால் நன்மையடைந்து கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டைவிட பெயரளவு நியதிகளில் 2022இல் 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதற்கமைய, கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2022இல் ரூ.165.2 பில்லியனுக்கு 19.2 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை சிகரெட் மற்றும் புகையிலை மீதான கலால்வரியிலிருந்தான அரசிறை ரூ.104.2 பில்லியனுக்கு 17.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 நவெம்பர் தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மதுபானம் மற்றும் சிகரெட் மீதான கலால் தீர்வை கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் இதற்குப் பிரதான காரணமாக அமைந்திருக்கக்கூடும். கலால் தீர்வைகளில் அதிகரிப்பிற்கு மேலதிகமாக சிகரெட் விற்பனைகளில் வளர்ச்சியும் சிகரெட்களிலிருந்தான உயர்வான அரசிறைச் சேகரிப்பிற்கு பங்களித்தன. மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன் இணைந்து மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2022இல் ரூ.14.5 பில்லியனுக்கு 19.9 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. மேலும், பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறையும் நாட்டில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மத்தியில் 2022 காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி குறைவடைந்தமையின் காரணமாக 2021இன் ரூ.55.3 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.53.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2021இன் 1.7 சதவீதத்திலிருந்து 2022இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுக்காக பணவீக்கச் சுட்டெண் இடப்பட்ட கலால் தீர்வைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதன்

அவசியத்தினை பிரதிபலிக்கின்றது. கலால் தீர்வைகளை பணவீக்கத்திற்காக சீர்செய்யும் நோக்குடன் சனவரி 2023இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அரசாங்கமானது சிகரெட், வெறியக் குடிவகைகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வையினை அதிகரித்தது.

துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வைகள் தவிர அனைத்து பன்னாட்டு வர்த்தகம் தொடர்புபட்ட வரிகளிலிருந்தான அரசிறையானது சென்மதி நிலுவை அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் பகுதியளவான தாக்கத்தினைப் பிரதிபலித்து மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது வீழ்ச்சியடைந்தது. அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான உரிம முறைமையொன்றினை அறிமுகப்படுத்தல், தேய்வடைந்த செலாவணி வீதம் மற்றும் இறுக்கமான நிதி நிலைமைகளுக்கு மத்தியில் இறக்குமதிகளுக்கான குறைவான கேள்வி உள்ளடங்கலாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை விதித்தமை சுங்கத் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2021இல் பதிவாகிய ரூ.64.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் 50.0 பில்லியனுக்கு 22.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 2021இன் ரூ.55.8 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.40.2 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மேலும், செஸ் வரியிலிருந்தான அரசிறையும் 2021இன் பதிவாகிய ரூ.75.5 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.70.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடுகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு 2021இல் ரூ.154.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.180.6 பில்லியனுக்கு அதிகரித்தது. பெற்றோலிய உற்பத்திகள், சீமெந்து சூலைக்கற்கள், உருக்கு, மூலப்பொருட்கள் மற்றும் நுகரத்தக்க பண்டங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் மீதான பன்னாட்டு விலைகளின் அதிகரிப்பானது இலங்கை ரூபாவின் தேய்மானத் தாக்கத்துடன் இணைந்து துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி தீர்வைகளிலிருந்தான அதிகரித்த சேகரிப்புக்குப் பங்களித்தன.

கட்டணங்கள் மற்றும் அறவீடுகளிலிருந்தான மேம்பட்ட அரசிறைச் சேகரிப்பு மற்றும் 2021இன் நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையிலமைந்த மத்திய வங்கியின் மூலம் மாற்றப்பட்ட இலாபங்கள் என்பவற்றின் பிரதான காரணமாக வரியல்லா அரசிறைச் சேகரிப்பு 43.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதற்கமைய, பிரதானமாக அஞ்சல் மற்றும் புகையிரதத் திணைக்களங்களின் கட்டணங்களின் மற்றும் அறவீடுகளின் திருத்தத்தின் காரணமாக கட்டணங்கள் மற்றும் அறவீடுகளிலிருந்தான அரசிறை 2022இல் 90.1 பில்லியனுக்கு 47.4 பில்லியனால் அதிகரித்தது. மத்திய வங்கியின் மூலம் மாற்றப்பட்ட இலாபங்கள் 2021இல் பதிவாகிய 15.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் 30.0 பில்லியனுக்கு அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்கள் 2021 இனைவிடவும் 2022இல் ரூ.37.4 பில்லியனுக்கு 8.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் முறையே 8.2 சதவீதத்தினால் 28.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த போதிலும் வாடகை மற்றும் வட்டி வருமானம் அத்துடன் இலாபங்கள் என்பவற்றிலிருந்தான அரசிறை ஆண்டுகாலப்பகுதியில் ரூ.13.2 பில்லியனுக்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது.


கொடைகள்

இருதரப்பு மற்றும் பல்தரப்பு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மொத்த வெளிநாட்டுக் கொடைகள், 2021இன் ரூ.6.7 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.33.4 பில்லியனுக்கு அதிகரித்தன. இருதரப்பு மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2021இல் பதிவாகிய ரூ.3.3 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.18.9 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை, பல்தரப்பு மூலங்களிலிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2021இன் ரூ.3.5 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.14.5 பில்லியனுக்கு அதிகரித்தது.

செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

2022இல் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பிரதிபலித்து, அரசாங்க செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகளில் அதிகரித்த அதேவேளை மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2022இல் அறிமுகப்படுத்தப்பட்ட செலவின சீரமைப்பு வழிமுறைகளுக்கு மத்தியில், மீண்டெழும் செலவினமானது 2021இனை விட 2022இல் 28.1 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, அதேகாலப்பகுதியில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகளில் 23.1 சதவீதத்தினால் அதிகரித்தன. அதற்கமைய, மொத்தச் செலவினமும்

வரைபடம் 6.4
அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2022



மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தேறிய கடன் வழங்கலும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் 27.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. எனினும், பெயரளவு மொ.உ.உற்பத்தியில் சடுதியான அதிகரிப்புடன் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் முன்னைய ஆண்டில் பதிவாகிய 20.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 18.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

சம்பளங்கள் மற்றும் கூலிகள் அத்துடன் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினத்தில் அதிகரிப்புடன் இணைந்து பிரதானமாக பாரிய கடன்பெறுதல் தேவைப்பாடுகள் காரணமாக உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும்


அட்டவணை 6.4
செலவினம் மற்றும் தேறிய கடன் வளங்களின் பொருளாதார பகுப்பாய்வு

விடயம்	2021	2022 (அ)
	ரூ. மில்லியன்	
மீண்டெழும் செலவினம்	**2,747,512**	**3,519,633**
பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம்	1,014,612	1,139,066
இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள்	845,680	956,210
வட்டிக் கொடுப்பனவுகள்	1,048,382	1,565,190
வெளிநாடு	253,750	128,621
உள்நாடு	794,633	1,436,569
நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்	684,518	815,376
இதில் வீட்டுத்துறை மற்றும் ஏனைய துறைக்கானது	595,696	719,467
சமூர்த்தி	55,400	120,988
ஓய்வூதியம்	269,827	309,067
வளமாக்கி மானியம்	21,235	56,810
ஏனையவை	249,233	232,602
மூலதனச் செலவினம்	**767,606**	**715,429**
உண்மைச் சொத்துக்களின் கையேற்பு	438,753	445,521
மூலதன மாற்றல்கள்	326,578	268,601
ஏனையவை	2,275	1,307
தேறிய கடன் வழங்கல்	**6,617**	**237,495**
மூலதன செலவினமும் தேறிய கடன்வழங்கலும்	**774,223**	**952,924**
மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**3,521,735**	**4,472,556**
	மொ.உ.உ.இன் சதவீதமாக (ஆ)	
மீண்டெழும் செலவினம்	**15.6**	**14.6**
பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம்	5.8	4.7
இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள்	4.8	4.0
வட்டிக் கொடுப்பனவுகள்	6.0	6.5
வெளிநாடு	1.4	0.5
உள்நாடு	4.5	5.9
நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்	3.9	3.4
இதில் வீட்டுத்துறைகளும் ஏனைய துறைகளும்	3.4	3.0
சமூர்த்தி	0.3	0.5
ஓய்வூதியம்	1.5	1.3
வளமாக்கி மானியம்	0.1	0.2
ஏனையவை	1.4	1.0
மூலதனச் செலவினம்	**4.4**	**3.0**
உண்மைச் சொத்துக்களின் கையேற்பு	2.5	1.8
மூலதன மாற்றல்கள்	1.9	1.1
ஏனையவை	0.0	0.0
தேறிய கடன்வழங்கல்	**0.0**	**1.0**
மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**4.4**	**3.9**
மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்	**20.0**	**18.5**

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை (அடியாண்டு 2015) பயன்படுத்தியுள்ளது.

மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

வரைபடம் 6.5
தொழிற்பாட்டின்படி மொத்த செலவினமும் கடன் வழங்களும் - 2022



மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

உயர்வடைந்த வட்டி வீதங்கள் காரணமாக அரசாங்க மீண்டெழும் செலவினம் 2022இல் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது. உள்நாட்டு படுகடன் மறுசீரமைப்புப் பற்றிய கரிசனைகளுடன் இணைந்த இடர்நேர்வுக் கரிசனைகள், பணவீக்க அழுத்தங்கள் காரணமாக கொள்கை வட்டி வீதங்களில் உயர்வின் எல்லை தாண்டிய தாக்கம் என்பன காரணமாக அரசாங்கப் பிணையங்களின் விளைவுகள் உச்சமடைந்தன. படுகடன் இடைநிறுத்தலுக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியளித்தலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி அத்துடன் அதன் விளைவாக, உள்நாட்டு மூலங்களிலிருந்தான பாரிய கடன்பெறுதல் தேவைப்பாடு என்பன அரசாங்கப் பிணையங்களின் விளைவு மீது மேலதிக அழுத்தத்தினைத் தீவிரப்படுத்தின. அதற்கமைய, மீண்டெழும் செலவினத்தின் 44.5 சதவீதத்திற்கு வகைகூறிய வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம், 2021 உடன் ஒப்பிடுகையில், 2022 காலப்பகுதியில் 49.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை, உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 2022இல் 80.8 சதவீதத்தினால் உயர்வடைந்தன. வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினமானது 2022இல் அரசாங்க வருவாயின் 79.1 சதவீதத்திற்கு வகைகூறியது. எனினும், இடைக்காலப்பகுதியொன்றிற்காக இருதரப்பு மற்றும் வர்த்தகப் படுகடன் மீதான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2022 காலப்பகுதியில் 49.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தன. பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 12.3 சதவீதத்திற்கு அதிகரித்தன. 2022இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 27.2 சதவீதத்திற்கு வகைகூறிய சம்பளங்கள் மற்றும் கூலிகள், 2022 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட நிவாரணப் பொதியின் அடிப்படையில் அரசாங்கப் பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட மேலதிக மாதாந்தக் கொடுப்பனவு அதேபோன்று பொதுவான ஆண்டுப் படியேற்றங்களின் தாக்கம் என்பன காரணமாக ஆண்டு காலப்பகுதியில் 13.1 சதவீதத்தினால்

அட்டவணை 6.5
செலவினங்களின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு

விடயம்	2021	2022 (அ)
	ரூ. மில்லியன்	
மீண்டெழும் செலவினம்	2,747,512	3,519,633
பொதுமக்கள் பணிகள்	499,629	570,918
சிவில் நிர்வாகம்	134,930	170,303
பாதுகாப்பு	257,918	281,643
பொதுக் கட்டளையும் பாதுகாப்பும்	106,782	118,971
சமூகப் பணிகள்	974,821	1,092,615
கல்வி	261,716	328,969
சுகாதாரம்	275,165	279,803
நலன்புரி	397,343	445,635
சமூகக்குழு பணிகள்	40,597	38,208
பொருளாதாரப் பணிகள்	164,590	203,491
விவசாயமும் நீர்வழங்களும்	68,206	109,330
வலு மற்றும் நீர்வழங்கள்	1,385	1,259
போக்குவரத்தும் தொடர்பூட்டலும்	47,255	45,935
ஏனையவை	47,744	46,967
ஏனையவை	1,108,472	1,652,609
இதில் வட்டிக் கொடுப்பனவுகள்	1,048,382	1,565,190
மூலதன செலவினமும் கடன்வழங்களும்	789,636	1,014,293
பொதுப் பணிகள்	61,675	36,100
சிவில் நிர்வாகம்	54,624	30,271
பொதுக் கட்டளையும் பாதுகாப்பும்	7,051	5,829
சமூகப் பணிகள்	189,733	116,818
கல்வி	48,897	38,522
சுகாதாரம்	111,956	43,734
வீடமைப்பு	18,333	25,434
சமூகக்குழு பணிகள்	10,547	9,128
பொருளாதாரப் பணிகள்	537,370	859,835
விவசாயமும் நீர்ப்பாசனமும்	79,463	108,697
வலு மற்றும் நீர் வழங்கல்	96,520	458,295
போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்	263,042	234,408
ஏனையவை	98,346	58,434
ஏனையவை	858	1,540
மொத்த செலவினமும் கடன் வழங்களும்	3,537,148	4,533,926
	மொ.உ.உ.இன் சதவீதமாக (ஆ)	
பொதுமக்கள் பணிகள்	3.2	2.5
சமூகப் பணிகள்	6.6	5.0
பொருளாதாரப் பணிகள்	4.0	4.4
ஏனையவை	6.3	6.9
இதில் வட்டிக் கொடுப்பனவுகள்	6.0	6.5
மொத்த செலவினமும் கடன் வழங்களும்	20.1	18.8

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

அதிகரித்தது. இதேபோன்று ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம், ஓய்வூதியம் பெறுவோருக்கும் சமூர்த்தி பெறுவோருக்கும் கொடுப்பனவுசெய்யப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு அத்துடன் வளமாக்கி உதவுதொகையில் அதிகரித்த செலவுகள் என்பனவற்றைப் பிரதான காரணமாகக் கொண்டு, 2022இல் 19.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு அண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தளர்வடைதலுடன் இலவச மருத்துவம் வழங்கல் மீதான செலவினம் 0.8 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்தது.

பிரதானமாக, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு உயர்வான கடன்வழங்கலின் காரணமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் பெயரளவு நியதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதற்கமைய, பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 23.1 சதவீதத்தினால் அதிகரித்தன. அவசரமற்ற மூலதனச் செலவினத்தை இடைநிறுத்துவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து, அரசாங்க நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கான மூலதன மாற்றல்கள் 2022இல் 17.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், பிரதானமாக எரிபொருள் இறக்குமதிக்காக இந்திய தொடர்கொடுகடன் வாயிலாக அரசாங்கத்தினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன்வழங்கியமை அத்துடன் திரவப்பெற்றோலிய எரிவாயு மற்றும் வளமாக்கி இறக்குமதிக்காக உலக வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கடன்வழங்கியமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் அரசாங்கம் மூலமான தேறிய கடன்வழங்கல் கணிசமாக அதிகரித்தன. அதேவேளை, அரசாங்க முதலீடும் 2022இல் ரூ.1,014.3 பில்லியனுக்கு 28.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சமூகப் பணிகள் மீதான மூலதனச் செலவினமானது பிரதானமாக உலகளாவிய நோய்த்தொற்று தொடர்புபட்ட செலவினத்தில் குறைவின் தாக்கத்தினைப் பிரதிபலித்து 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் நலத்துறை மூலதனச் செலவினத்தின் குறைவின் காரணமாக மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் 38.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பொருளாதாரப் பணிகள் மீதான மூலதனச் செலவினம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான கடன்வழங்கல், இலங்கை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் இலங்கை வங்கி போன்ற அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான மூலதன மாற்றல்கள் காரணமாக 60 சதவீதத்தினால் அதிகரித்தது.

முக்கிய இறை மீதிகளும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளித்தலும்

பெயரளவு மொ.உ.உற்பத்தியில் கணிசமான வளர்ச்சி அதேபோன்று இறைத்திரட்சிப்படுத்தலுக்கான முயற்சிகள் என்பவற்றிலிருந்து நன்மையடைந்து மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அனைத்து முக்கிய இறை மீதிகளும் 2022இல் மேம்பட்டன. அதற்கமைய, ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2021இன் மொ.உ.உற்பத்தியின் 11.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் மொ.உ.உற்பத்தியின் 10.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது

அட்டவணை 6.6
உள்நாட்டு நிதியிடல் மூலங்கள் (தேறிய)

ரூ.மில்லியன்

விடயம்	2021	2022 (அ)
சாதனத்தின்படி	2,071,826	2,035,145
திறைசேரி முறிகள்	1,301,543	1,440,190
திறைசேரி உண்டியல்கள்	635,098	1,608,211
இலங்கை அபிவிருத்தி முறிகள்	-68,324	-380,069
மத்திய வங்கியின் தற்காலிக முற்கொடுப்பனவுகள்	-2,950	85,510
வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன் பெறுகைகள்	-103,547	-52,236
ஏனையவை	310,006	-666,461
மூலங்களின்படி	2,071,826	2,035,145
வங்கி	1,304,287	1,027,721
வங்கியல்லா	767,539	1,007,424

(அ) தற்காலிகமானது

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு இலங்கை மத்திய வங்கி

2021இல் பதிவாகிய ரூ.2,057.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.2,460.0 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேபோன்று, மொ.உ.உற்பத்தி நியதிகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021இல் மொ.உ.உற்பத்தியின் 7.3 சதவீதத்துடன் (ரூ.1,290.4 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022இல் 6.4 சதவீதத்திற்கு (ரூ.1,540.4 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் தற்றுணிவு இறைக்கொள்கைக் கூறை பிரதிபலித்து, ஒட்டுமொத்த பற்றாக்குறையிலிருந்தான வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்காத ஆரம்ப பற்றாக்குறை பெயரளவு நியதிகள் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டிலும் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, ஆரம்ப பற்றாக்குறையானது பிரதானமாக வருவாய் அதிகரிப்பு மற்றும் செலவினக் கட்டுப்பாட்டு நியதிகள் இரண்டிலும் 2022 காலப்பகுதியில் அரசிறை திரட்சிப்படுத்தல் வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, 2021இல் பதிவாகிய 5.7 சதவீதத்திலிருந்து (ரூ.1,009.5 பில்லியன்) 2022இல் மொ.உ.உற்பத்தியின் 3.7 சதவீதத்திற்கு (ரூ.894.8 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டு நிதியளித்தலுக்கான பெறுவழி மட்டுப்படுத்தப்பட்டமைக்கு மத்தியில், 2022இல் அரசாங்கம் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு உள்நாட்டு மூலங்களிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தது. மொத்த நிதியளித்தலில் தேறிய உள்நாட்டு நிதியளித்தல்[1] 2021இன் 100.7 சதவீதத்துடன் (ரூ.2,071.8 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022இன் 82.7 சதவீதத்திற்கு (ரூ.2,035.1 பில்லியன்) பங்களித்தது. தேறிய உள்நாட்டு நிதியளித்தலானது மொ.உ.உற்பத்தியில் 2021இன் 11.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.4 சதவீதத்திற்கு வகைகூறியது.

1 திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவுடான அனைத்து தேறிய கடன்பெறுதல்களையும் உள்ளடக்குகின்றது.

அதேவேளை, வெளிநாட்டு மூலங்கள் ஊடாக தேறிய நிதியளித்தலுக்கான பங்கு 2021இன் 0.7 சதவீதம் (ரூ.13.9 பில்லியன்) கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2022இல் 17.3 சதவீதத்திற்கு (ரூ.424.8 பில்லியன்) அதிகரித்தது. அதற்கமைய, தேறிய வெளிநாட்டு நிதியளித்தலானது 2021இன் மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதம் கொண்ட வெளிநாட்டு மூலங்களுக்கான தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2022இல் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதமாகவிருந்தது.

தேறிய உள்நாட்டு நிதியளித்தலுக்கான விரிவாக்க மூலங்களிலிருந்தான ஒப்பீட்டளவிலான பங்களிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த போதிலும், அத்தகைய மூலங்களிலிருந்தான தேறிய உள்நாட்டு நிதியளித்தல் 2022இல் முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்பட்டது. அதற்கமைய, வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய நிதியளித்தலின் பங்கு 2021இன் 63.0 சதவீதத்துடன் (மொ.உ.உற்பத்தியின் 7.4 சதவீதம்) ஒப்பிடுகையில் 2022இல் 50.5 சதவீதத்திற்கு (மொ.உ.உற்பத்தியின் 4.3 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியிடமிருந்தான தேறிய நிதியளித்தல் 2021இன் ரூ.1,225.2 பில்லியன் கொண்ட தேறிய நிதியளித்தலுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,338.4 பில்லியனுக்கு உயர்வடைந்தது. அத்தகைய நாணய நிதியளித்தலானது அரசாங்கப் பிணையங்களுக்கான குறைவடைந்த சந்தை ஏற்பு அத்துடன் அரசாங்கத்தின் பாரிய மொத்த நிதியளித்தல் தேவைகள், மற்றும் பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கிக்கு நிர்வாக ரீதியாக வழங்குதல் என்பவற்றிற்கு மத்தியில் மத்திய வங்கி மூலம் திறைசேரி உண்டியல்களுக்கான நேரடிக் கோரலின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. எனினும், இக்காலப்பகுதியின் போது மேம்பட்ட அரசாங்க அரசிறைச் சேகரிப்பு அத்துடன் முக்கியமாக, உலக வங்கியின் கீழ் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய தொடர் கடன்கள் ஆகிய பல்தரப்பு மற்றும் இருதரப்பு வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதியளித்தல் கிடைக்கப்பெற்றமை காரணமாக 2022இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நாணய நிதியளித்தல் ஒப்பீட்டளவில் குறைவாகவிருந்தது. மத்திய வங்கியின் நிதியளித்தலானது தற்காலிக முற்பணங்களை உள்ளடக்குகின்றது. இது, முன்னைய ஆண்டில் பதிவாகிய ரூ.3.0 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.85.5 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2022இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தான நிதியளித்தல் தொடர்பில் 2021இன் ரூ.79.1 பில்லியன் கொண்ட தேறிய நிதியளித்தலுடன் ஒப்பிடுகையில் ரூ.310.7 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவைப்

பதிவுசெய்தது. வங்கியல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியளித்தல் 2021இன் ரூ.767.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,007.4 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை, மொத்த தேறிய உள்நாட்டு நிதியளித்தலில் வங்கியல்லாத் துறை நிதியளித்தலின் பங்கு முன்னைய ஆண்டின் 37.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 49.5 சதவீதத்திற்கு வகைகூறியது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வங்கியல்லாத் துறையிலிருந்தான தேறிய நிதியளித்தல் 2021இன் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உள்நாட்டு படுகடன் மறுசீரமைப்புப் பற்றிய நிச்சயமின்மைகளுக்கு மத்தியில், குறுகியகால சாதனங்களுக்கான சந்தை ஏற்பினைப் பிரதிபலித்து, 2022 காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் ஊடான தேறிய நிதியளித்தல் கணிசமாக அதிகரித்தது. சாதனம் அடிப்படையிலமைந்த தேறிய உள்நாட்டு கடன்பெறுதல்கள் 2021இன் ரூ.1,868.3 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.2,668.3 பில்லியனுக்கு அதிகரித்தது. திறைசேரி உண்டியல்களூடான தேறிய கடன்பெறுதல்கள் 2021இன் ரூ.635.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,608.2 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை திறைசேரி முறிகள் ஊடான தேறிய கடன்பெறுதல்கள் 2021இன் ரூ.1,301.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,440.2 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், இலங்கை அபிவிருத்தி முறிகளூடான கடன்பெறுதல்கள் 2021இன் ரூ.68.3 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.380.1 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவை பதிவுசெய்தது. அதேவேளை, சந்தைப்படுத்தப்படாத சாதனங்களிலிருந்தான தேறிய உள்நாட்டுக் கடன்பெறுதல்கள், 2021இன் ரூ.203.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கம் மேலதிப் பற்று நிலுவைகளை தீர்ப்பனவு செய்தமையின் பிரதான காரணமாக 2022இல் ரூ.633.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவைப் பதிவுசெய்தது. 2022 காலப்பகுதியில் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுக்கான தேறிய மீள்கொடுப்பனவு ரூ.52.2 பில்லியனாகவிருந்தது.

வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியளித்தலானது எதிர்பாராத பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பல்தரப்பு மற்றும் இருதரப்பு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியிடல் தாக்கத்தினை பிரதானமாகப் பிரதிபலித்து 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தது. படுகடன் இடைநிறுத்தல் பற்றிய அறிவித்தலுக்கு முன்னர் 2022 சனவரியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் மீள்கொடுப்பனவு காரணமாக நாட்டிற்கான பன்னாட்டு முறி தொடர்பிலான தேறிய மீள்கொடுப்பனவுகள் 2021இன் ரூ.199.9 பில்லியன் (ஐ.அ.டொலர் 1.0 பில்லியன்) கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.100.5 பில்லியன் (ஐ.அ.டொலர் 500 மில்லியன்) தொகையுடையதாவிருந்தது. எனினும், பல்வேறு பல்தரப்பு மற்றும் இருதரப்பு மூலங்களிலிருந்தான நிதியளித்தலை உள்ளடக்குகின்ற வெளிநாட்டு கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் ஊடான தேறிய நிதியளித்தல், 2021இல் பதிவாகிய ரூ.39.3 பில்லியன் கொண்ட தேறிய நிதியளித்தலுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் ரூ.525.3 பில்லியன் தொகையுடையதாகவிருத்தது. மருந்து, வளமாக்கி மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு இறக்குமதிக்காகவும் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினருக்கான பணம் வழங்குதல் போன்ற நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களின் அழுத்தம் கொடுக்கின்ற தேவைகளை நிறைவுசெய்வதற்கு உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஏற்கனவேயுள்ள அவற்றின் கருத்திட்டங்களிலிருந்து நிதியளித்தலுக்கான நோக்கங்களை மாற்றின. அதேவேளை, 2022 காலப்பகுதியில் எரிபொருள், வளமாக்கி, மருந்துப் பொருட்கள் மற்றும் உணவு போன்றவற்றின் இறக்குமதிக்காக இலங்கைக்கான தொடர் கொடுகடன்களை இந்திய அரசாங்கம் வழங்கியது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியா, ஐ.அ.டொலர் 1.0 பில்லியனை வழங்கிய அதேவேளை எரிபொருள் மற்றும் வளமாக்கி இறக்குமதி செய்வதற்காக எக்ஸ்ஸிம் பேங் இந்தியா முறையே ஐ.அ.டொலர் 500 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 55 மில்லியன் கொண்ட குறுகியகால தொடர் கடன்களை வழங்கியது. எரிபொருள் இறக்குமதிசெய்வதற்காக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியாவின் தொடர் கொடுகடனிலிருந்து வரைவு செய்யப்பட்டது.


6.4 அரச படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

மத்திய அரச படுகடன்[2]

படிப்படியாக குறிப்பாக அண்மைய ஆண்டுகளில் நிலைபேறற்ற மட்டங்களுக்குச் சென்ற மத்திய அரசாங்கப் படுகடன், 2022 ஆரம்பப்பகுதியில் தீர்க்கமான தருணத்தை எட்டி அரசாங்கம் படுகடன் இடைநிறுத்தல் பற்றி அறிவிப்பதற்கு வழிவகுத்தது. இலங்கையின் கடன்தரப்படுத்தல் தரக்

2 தற்போது இடம்பெறுகின்ற படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை மற்றும் கொடுப்பனவுகளின் நிலுவைகள் என்பன காரணமாக படுகடன் புள்ளிவிபரங்களைத் தொகுப்பது சவால் மிக்கதாகத் தோற்றம்பெற்றது. படுகடன் இடைநிறுத்தல் பற்றிய இடைக்காலக் கொள்கைத் தீர்மானத்திற்கமைவாகவும் இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பில் பல செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகள் காணப்படுவதனாலும், மூலதனமாக்கப்படுவதற்குக் கருதப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட படுகடனின் செலுத்தவேண்டிய வட்டிக்கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக இப்படுகடன் புள்ளிவிபரங்கள் பல செலுத்தவேண்டிய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உள்ளடக்காமையினால் 2022 இறுதியிலுள்ளவாறான நிலுவையாகவுள்ள மத்திய அரசாங்கப் படுகடன் புள்ளிவிபரங்கள் தற்காலிகமானவையாகும். முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் கீழ், தரவுகளைப் பரப்பும் முயற்சிகளின் பாகமாக அத்தகைய கொடுப்பனவு நிலுவைகளின் விபரங்கள் நிதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், அத்தகைய தகவல்கள் மத்திய வங்கியினால் படுகடன் புள்ளிவிபரங்களை அறிக்கையிடுவதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற தரவு மூலமான பொதுநலவாய செயலக படுகடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமையினுள் இன்னும் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

வரைபடம் 6.6
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்



(அ) திருத்தப்பட்டது

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

குறைப்புகளுக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியளித்தலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி, மொத்த அலுவல்கள் ஒதுக்குகளை வரைவுசெய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான படுகடன் தீர்ப்பனவின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வெறுமையடைவதற்கு வழிவகுத்தது. அதிகரிக்கின்ற வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவு அத்துடன் 2022 ஏப்பிறல் ஆரம்பமளவில் மத்திய வங்கியின் உபயோகிக்கத்தக்க ஒதுக்குகள் அநேகமாக தீர்ந்துபோனமை என்பன மூலம் அரசாங்கம் இடைக்கால வழிமுறையொன்றாக படுகடன் இடைநிறுத்தலை அறிவிக்கவேண்டியிருந்த அதேவேளை, விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றுக்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடியதுடன் அதனைத்தொடர்ந்து எதிர்வரவுள்ள காலப்பகுதியில் படுகடன் நிலைபெறு தன்மையினை உறுதிசெய்வதை நோக்காகக் கொண்ட படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையினைத் தொடங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது.

அரசாங்கத்தின் பாரிய நிதியளித்தல் தேவைகள், செலாவணி வீதத்தின் சடுதியான தேய்மானம் அதேபோன்று தெரிவுசெய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிப் படுகடனை மத்திய அரசாங்கத்திற்கு ஈர்த்தமை என்பவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்து மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் 2021இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற மத்திய அரசாங்கப் படுகடன் இருப்பு[3] 2021 இறுதியளவில் ரூ.17,614.2 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.27,492.0 பில்லியனுக்கு 56.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கப் படுகடன் 2021 இறுதியின் 100.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ரூ.113.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அதேவேளை, உள்நாட்டு நாணயத்தில் பெறுமதி மதிப்பிடப்பட்ட மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பிரதானமாக 2022 காலப்பகுதியில் முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் சடுதியான தேய்மானத்தினைப் பிரதிபலித்து 2021 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 37.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் 51.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்மானத்துடன் 2022 இறுதியளவில் வெளிநாட்டுப் படுகடனின் ஒப்பீட்டுப் பங்கு உயர்வடைந்த அதேவேளை, உள்நாட்டு படுகடனின் ஒப்பீட்டுப் பங்கு 2021 இறுதியின் 63.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 54.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2021 இறுதியில் ரூ.2,270.5 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.4,113.9 பில்லியனுக்கு அதிகரித்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் இருப்பில் அதிகரிப்பினைப் பிரதானமாகப் பிரதிபலித்து வெளிநின்ற குறுகியகால உள்நாட்டுப் படுகடன் 2021 இறுதியிலிருந்து 2022 இறுதியளவில் 35.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுப் படுகடனின் இருப்பின் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2021இன் 20.5 சதவீதத்திலிருந்து 2022இல் 27.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கி மூலமான அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணக் கணக்கின் வெளிநின்ற படுகடன் இருப்பு 2021 இறுதியில் ரூ.150.1 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.235.6 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2022 காலப்பகுதியில் அரசாங்கம் அதன் மேலதிகப்பற்று நிலுவையின் ஒரு பகுதியினை தீர்ப்பனவு செய்வதமையினால் ஏனைய எஞ்சியுள்ள குறுகியகாலப் படுகடன், வங்கி வைப்புக்களைக் கழித்து 2022 இறுதியில் ரூ.81.8 பில்லியன் கொண்ட எதிர்மறையான மீதியினைப் பதிவுசெய்தது. எனினும், நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டுப் படுகடன் இருப்பு 2021 இறுதியளவில் ரூ.7,957.4 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் 24.2 சதவீதத்தினால் அதிகரித்தது. திறைசேரி முறிகள் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 2021 இறுதியில் பதிவாகிய 62.8 சதவீதத்துடன் (ரூ.6,966.2 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022 இறுதியில் மொத்த வெளிநின்ற உள்நாட்டு படுகடன் இருப்பின் 57.9 சதவீதத்திற்கு (ரூ.8,709.1 பில்லியன்) வகைகூறியது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட

3 நிதியமைச்சின் பொதுநலவாய செயலக படுகடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமையிலும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினதும் மத்திய வங்கியின் நாணய அளவீட்டினதும் பதிவேடுகளில் இருந்தும் 2023 மார்சு 09 மற்றும் 10 அன்று பெற்றுக்கொள்ளப்பட்ட பதிவுகளுக்கமைவாக.

அட்டவணை 6.7
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு) (அ)

ரூ. மில்லியன்

விடயம்	2019	2020	2021 (ஆ)	2022 (இ) (ஈ)
மொத்த அரச படுகடன்	**13,031,543**	**15,117,247**	**17,614,181**	**27,492,031**
உள்நாட்டு படுகடன் (உ)	**6,830,260**	**9,065,068**	**11,097,223**	**15,033,876**
முதிர்வு காலத்தின்படி				
குறுங்காலம் (ஊ)	1,270,374	2,197,594	3,139,794	4,267,724
நடுத்தர மற்றும் நீண்டகால (உ) (எ)	5,559,887	6,867,473	7,957,430	9,882,058
ஏனைய உள்நாட்டு (ஏ)	வி.கி.	வி.கி.	வி.கி.	884,093
நிறுவனங்களின்படி (ஐ)				
வங்கி (ஐ)	2,737,223	4,542,155	5,247,919	8,525,718
வங்கியல்லா (ஐ)	3,825,703	4,210,099	4,822,098	6,164,063
மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (ஒ) (ஓ)	267,334	312,814	1,027,207	344,096
வெளிநாட்டு படுகடன் (ஔ) (க)	**6,201,283**	**6,052,179**	**6,516,958**	**12,458,155**
பல்பக்க	1,469,867	1,601,482	1,895,340	3,611,552
இருபக்க மற்றும் வர்த்தக	4,731,415	4,450,697	4,621,618	8,846,603
இதில்				
நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்	2,531,493	2,203,279	2,243,049	3,921,587
வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதி	242,191	279,612	445,521	797,589
திறைச்சேரி உண்டியல்கள் மீதான வதியாதோர் முதலீடுகள்	23,727	670	204	12,476
திறைச்சேரி முறிகள் மீதான வதியாதோர் முதலீடுகள்	80,294	6,204	1,710	13,078
நாணயங்களின்படி				
சி.எ.உ.	927,372	970,714	989,442	1,604,694
ஐ.அ.டொலர்	4,076,588	3,875,950	4,295,194	8,716,938
யப்பானிய யென்	624,956	664,291	623,206	979,567
யூரோ	228,713	251,406	240,974	417,406
ஏனையவை	343,653	289,818	368,142	739,550
மத்திய அரசாங்கம் படுகடன் / மொ.உ.உ. (ங)	81.9	96.5	100.1	113.8
ஞாபகார்த்த விடயங்கள்				
மொத்த நாணயமாற்று வீத வேறுபாடுகள் மீதான	12,401	355,663	499,681	5,617,220
வெளிநாட்டுப் படுகடன்	16,857	329,895	473,796	5,262,420
வெளிநாட்டு நாணயவடிவில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப்படுகடன்	-4,456	25,767	25,884	354,800

(அ) 2014 பன்னாட்டு நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரசாங்கம் படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவிலுள்ள வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் உள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் வதியோர் வசமுள்ளவை உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) திருத்தப்பட்டது

(இ) தற்காலிகமானது

(ஈ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக்கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளினையும் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளினையும் உள்ளடக்கியுள்ளன.

(உ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்குவதுடன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இலும் ரூ. 25,217 மில்லியன் 2022 சனவரி 01இலும் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதி ரூ. 31,446 மில்லியனாகும்.

(ஊ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(எ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமுள்ள திறைசேரி முறிகள் நீங்கலாக

(ஏ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையினை உள்ளடக்குவதுடன் இது 2022 திசெம்பர் தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்டு ரூ. 884,093.4 மில்லியனாக விளங்கியது.

(ஐ) நிறுவன ரீதியிலான வகுப்பாக்கமானது மத்திய வைப்பக முறைமையின் பதிவுகளின் அடிப்படையிலமைந்த 2022 ஆண்டறிக்கையில் திருத்தப்பட்டதுடன் 2019-2021 இற்கான தரவுகளும் அதற்கமைய திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஒ) உண்மையான சொத்துரிமை நிறுவப்பட முடியாதவைகளுக்கான மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளின் கீழான பிணைய இருப்புக்கள் உள்ளடங்கலாக

(ஓ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான வைப்புக்கள் 2022 ஆண்டு காலப்பகுதியில் மாத்திரமே உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தனியான முதலீலை முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஔ) 2021 மற்றும் 2022 இற்கான வெளிநாட்டுக் கடன் படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வகைப்படுத்தல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் பேணப்பட்டு வந்த பொதுநலவாய செயலக படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையிலிருந்து 2023 மார்சு 09 மற்றும் 10 அன்று பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன.

(க) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை என்பன முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(ங) 2023 மார்ச் 15ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு = 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.


மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

தீர்ப்பனவுகள் காரணமாக இலங்கை அபிவிருத்தி முறிகளின் வதிவோர் உரித்துகள் 2021இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.455.2 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 2,271.1 மில்லியன்) ரூ.382.1 பில்லியன்[4] இற்கு (ஐ.அ.டொலர் 1,052.3 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு நாணய நியதிகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வதிவோர் உரித்துக்கள், சடுதியான செலாவணி வீத தேய்மானம் காரணமாக 2021 இறுதியின் ரூ.372.6 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.635.4 பில்லியனுக்கு[5] அதிகரித்த அதேவேளை, ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையுடைய முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான

4 2022 ஏப்பிறலில் படுகடன் இடைநிறுத்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகளில் சில நிலுவைகளை இது உள்ளடக்கவில்லை.

5 படுகடன் இடைநிறுத்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகளின் நிலுவைகளளை இது உள்ளடக்கவில்லை.

வரைபடம் 6.7
மத்திய அரசின் வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பு - 2022இன் இறுதியில் உள்ளவாறு



பன்னாட்டு முறியொன்றின் தீர்ப்பனவு காரணமாக அதன் வெளிநாட்டு நாணயப் பெறுமதி 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 1,859.0 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,750.0 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து கிடைத்த வெளிநின்ற படுகடன் 2021 இறுதியிலிருந்து ரூ.7.9 பில்லியனால் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் இறுதியில் ரூ.131.4 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 361.8 மில்லியன்) குறைவடைந்தது. மேலும், மொத்த உள்நாட்டு படுகடனில் வங்கித்தொழில் துறை படுகடனின் பங்கு 2021 இறுதியில் 47.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 56.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. திறைசேரி உண்டியல்களின் உரித்துகளில் 2021 இறுதியளவில் வைத்திருந்த ரூ.1,391.3 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் ரூ.2,575.7 பில்லியனுக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் மத்திய அரசாங்கப் படுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 2022இல் பதிவாகியது. குறைவடைந்த சந்தைக் கோரிக்கைக்கு மத்தியில், மத்திய வங்கி மூலம் திறைசேரி உண்டியல்களுக்கான நேரடிக் கோரல் மற்றும் மத்திய வங்கிக்கு திறைசேரி உண்டியல்களை நிர்வாக ரீதியாக வழங்குதல் என்பன இவ்வதிகரிப்பிற்குக் காரணமாக அமைந்தன.

பெயரளவு நியதிகளில் மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்[6] 2021 இறுதியின் ரூ.6,517.0 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.12,458.2 பில்லியனுக்கு அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானம், மொத்த வெளிநின்ற படுகடன் இருப்பினுள் வெளிநாட்டு படுகடன் இருப்பின் பங்கை 2021 இறுதியில் அவதானிக்கப்பட்ட 37.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 45.3 சதவீதமாக அதிகரிப்பதற்கு பிரதானமாகப் பங்களித்தது. வெளிநாட்டு படுகடன் சொத்துப் பட்டியலினுள், உள்நாட்டு நாணயத் தேய்மானம் அதேபோன்று பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட ஆதரவளிப்பிற்கான பல்தரப்பு நிதியளித்தலின் கிடைப்பனவு என்பன காரணமாக பல்தரப்பு படுகடன் 2021 இறுதியில் பதிவாகிய ரூ.1,895.3 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.3,611.6 பில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பனவற்றின் பல கடன்கள் மத்திய அரசாங்கப் படுகடனுக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டமை, இந்திய தொடர்கடன் அதேபோன்று நாணயத் தேய்மானம் போன்ற பொருளாதார நெருக்கடிக்கு இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற புதிய கடன் என்பவற்றினைப் பிரதான காரணமாகக் கொண்டு 2021 இறுதியில் ரூ.4,621.6 பில்லியனாகவிருந்த இருதரப்பு மற்றும் வர்த்தகப் படுகடன் 2022 இறுதியளவில் ரூ.8,846.6 பில்லியனுக்கு[7] குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. வர்த்தகப் படுகடனுக்கு மத்தியில் வதியாதோரால் வைத்திருக்கப்படும் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் ரூபா பெறுமதி ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வு காரணமாக 2022 இறுதியளவில் ரூ.1,678.5 பில்லியனுக்கு அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் வதியாதோர் உரித்து 2021இல் முறையே பதிவாகிய ரூ.0.2 பில்லியன் மற்றும் ரூ.1.7 பில்லியனிலிருந்து 2022 இறுதியளவில் முறையே ரூ.12.5 பில்லியனுக்கும் ரூ.13.1 பில்லியனுக்கும் அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் முக்கிய நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை ரூபாவின் சடுதியான தேய்மானத்தினால் தோற்றுவிக்கப்பட்ட சமனிலை வேறுபாட்டின் காரணமாக, வெளிநாட்டு படுகடனின் ரூபாத் தொகை 2022 இறுதியளவில் ஏறத்தாழ ரூ.5,617.2 பில்லியனால் (மொ.உ.உற்பத்தியில் 23.3 சதவீதம்) அதிகரித்தது.

இனங்காணப்பட்ட அரசாங்கப் படுகடன் மறுசீரமைத்தில் 2023 காலப்பகுதியில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, செலுத்தவேண்டிய படுகடன் மட்டங்களை முகாமைசெய்யத்தக்க மட்டத்திற்குக் குறைக்கக்கூடிய படுகடன் மறுசீரமைப்புத் தெரிவுகளை மதிப்பிடும் செயன்முறையினை அரசாங்கம் முன்னெடுக்கின்ற அதேவேளை பன்னாட்டு நாணய நிதியத்தினால் நடாத்தப்பட்ட

6 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிதிக் கையேட்டின் பிரகாரம் மத்திய அரசாங்கப் படுகடனின் வதியாதோர் உரித்துக்கள் வெளிநாட்டு படுகடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

7 படுகடன் இடைநிறுத்தல் அறிவிப்பிற்குப் பின்னர் செலுத்தவேண்டியதாகவிருந்த இருதரப்பு மற்றும் வர்த்தகப் படுகடனின் வட்டிக் கொடுப்பனவுகளிலுள்ள நிலுவைகளைப் பொதுநலவாயச் செயலக படுகடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமையில் மூலதனமாக்கப்பட்ட வட்டியாகப் பதிவுசெய்கின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதனால் இந்நிலுவைகள் வெளிநின்ற நிலுவைகளில் உள்ளடக்கப்படவில்லை.

படுகடன் நிலைபெறுதன்மை பகுப்பாய்விற்கமைவாக படுகடன் நிலைபெறுதன்மை இலக்குகளை நிறைவுசெய்கின்றது. பொதுப் படுகடன் மறுசீரமைப்பின் மூலம் செலுத்தவேண்டிய பொதுப் படுகடனை 2032 அளவில் மொ.உ.உற்பத்தியின் 95 சதவீதத்திற்குக் கீழ் குறைப்பதற்கும், 2027 - 2032 காலப்பகுதியில் சராசரி மத்திய அரசாங்க மொத்த நிதியளித்தல் தேவைகளை மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்திற்குக் கீழ் கட்டுப்படுத்தப்படுவதற்கும், மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2027 - 2032 காலப்பகுதியில் ஏதேனும் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்குக் கீழ் பேணப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

அரசாங்கம் இருதரப்பு மற்றும் வர்த்தக வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான தெரிவுசெய்யப்பட்ட படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை இடைக்கால நடவடிக்கையாக 2022 ஏப்பிறல் 12 முதல் இடைநிறுத்தியது. இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியமை சென்மதி நிலுவை நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்காலிக ஓய்வொன்றினை வழங்கி, வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களின் கணிசமான தொகையினை மீதப்படுத்துவதற்கு அரசாங்கத்தை இயலச்செய்தது. 2022 ஏப்பிறல் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் இருதரப்பு மற்றும் வர்த்தகப் படுகடன் இடைநிறுத்தல் ஊடாக மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணய மீதப்படுத்தல் ஐ.அ.டொலர் 2.8 பில்லியன் தொகையாகவிருந்தது. படுகடன் இடைநிறுத்தலின் காரணமாக 2022 யூலையில் முதிர்ச்சியடைந்திருந்த ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி மீளக்கொடுப்பனவு செய்யப்படவில்லை. இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் படுகடன் இடைநிறுத்தல் காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இலங்கை அபிவிருத்தி முறி படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் ஒரு பாகம் ரூபாய் நியதிகளில் தீர்ப்பனவுசெய்யப்பட்டன. அதேவேளை, பல்புடை கொடுகடன், புதிய கடன் வசதிகள் மற்றும் 2022 ஏப்பிறல் 12 இற்கு பின்னர் ஏற்கனவேயுள்ள கடன் வசதியின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் இவ் இடைக்கால கொள்கை நடவடிக்கையில் உட்படுத்தப்படவில்லை.

அட்டவணை 6.8
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூ.மில்லியன்

விடயம்	2019	2020	2021 (அ)	2022 (ஆ)
படுகடன் பணிக் கொடுப்பனவுகள்	2,022,507	1,941,373	2,380,599	2,997,645
உள்நாடு	1,213,698	1,169,522	1,594,328	2,510,281
வெளிநாடு	808,809	771,851	786,271	487,364
கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்	1,121,155	961,071	1,332,216	1,432,455
உள்நாடு	546,315	455,899	799,695	1,073,712
வெளிநாடு	574,839	505,172	532,521	358,743
வட்டிக் கொடுப்பனவுகள்	901,352	980,302	1,048,383	1,565,190
உள்நாடு	667,383	713,623	794,633	1,436,569
குறுங்காலம்	81,029	77,965	98,668	555,171
நடுத்தர மற்றும் நீண்டகாலம்	586,354	635,658	695,965	881,398
வெளிநாடு	233,970	266,679	253,750	128,621


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு படுகடனுடன் தொடர்புபட்ட படுகடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டி கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காரணமாக பெயரளவு நியதிகளில் மொத்த படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 25.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. வெளிநாட்டு நிதியளித்தல் மூலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி காரணமாக அரசாங்கப் பிணையங்கள் மீதான அதிகரித்த விளைவுகளையும் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு உள்நாட்டு மூலங்களில் பாரியளவில் தங்கியிருப்பதையும் பிரதிபலித்து உள்நாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டைவிட 2022இல் 57.5 சதவீதத்தினால் அதிகரித்து. எனினும், 2022 ஏப்பிறல் தொடக்கம் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் இடைநிறுத்தல் மீதான இடைக்காலக் கொள்கை பற்றிய அரசாங்கத்தின் அறிவிப்புடன் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 38.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

மொத்த படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் 47.8 சதவீதத்திற்கு வகைகூறிய மொத்த தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.5 சதவீதத்தினால் அதிகரித்தன. பிரதானமாக திறைசேரி முறிகளினதும் இலங்கை அபிவிருத்தி முறிகளினதும் அதிகரித்த முதிர்ச்சிகளின் காரணமாக உள்நாட்டு படுகடன் மீள்கொடுப்பனவுகள் 2022இல் 34.3 சதவீதத்தினால் அதிகரித்தன. எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் படுகடன் இடைநிறுத்தலின் விளைவாக வெளிநாட்டு படுகடன் மீள்கொடுப்பனவுகள் 2022இல் ரூ.358.7 பில்லியனுக்கு 32.6 சதவீதத்தினால் குறைவடைந்தன. 2022இல் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இல் நாட்டிற்கான பன்னாட்டு முறி முதிர்ச்சிக் கொடுப்பனவான ரூ.199.9 பில்லியனுடன்

வரைபடம் 6.8
மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(மொ.உ.உ இன் சதவீதமாக)



மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(ஐ.அ.டொலர் 1.0 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022 சனவரியில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் மீள்கொடுப்பனவான ரூ.100.5 பில்லியனை (ஐ.அ.டொலர் 500 மில்லியன்) உள்ளடக்குகின்றது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் மீதான தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இன் 4.5 சதவீதத்திலிருந்து 2022இல் 4.4 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்த அதேவேளை, மொ.உ.உற்பத்திக்கான வெளிநாட்டுப் படுகடனுக்கான தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இன் 3.0 சதவீதத்திலிருந்து 2022இல் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அரசாங்கப் பிணையங்கள் மற்றும் உள்நாட்டு கடன்பெறுதல்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் மத்திய அரசாங்கப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2022இல் 49.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உள்நாட்டு படுகடன் சொத்துப்பட்டியல் பற்றிய சாத்தியமா மறுசீரமைப்பு கரிசனைகளின் காரணமாக விரிவடைந்த இடர்நேர்வு கரிசனைகள் ஊடாக கொள்கை வீதச் சீராக்கங்களையும் விஞ்சி அரசாங்கப் பிணையங்களின் விளைவுகள் அதிகரித்தன. மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியளித்தலுக்கு மத்தியில் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக உள்நாட்டு மூலங்கள் மீது தீவிரமடைந்த அழுத்தமும் அரசாங்கப் பிணையங்களின் விளைவுகளின் உயர்விற்கு வழிவகுத்தன. இதன்விளைவாக, மத்திய அரசாங்க உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் குறிப்பாக, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதானவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 80.8 சதவீதத்தினால் அதிகரித்தன. படுகடன் இடைநிறுத்தலை அனுசரித்து வெளிநாட்டு இருதரப்பு மற்றும் வர்த்தகக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியமை மூலம் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2021இன் நேரொத்த கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.128.6 பில்லியனுக்கு 49.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2021இன் 4.5 சதவீதத்திலிருந்து 2022இல் 5.9 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதத்திலிருந்து 2022இல் மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 6.9
மத்திய அரசின் படுகடன் குறிகாட்டிகள் (அ)

சதவீதம்

குறிகாட்டிகள்	2019	2020	2021	2022 (ஆ)
மத்திய அரச படுகடன்/மொ.உ.உ	81.9	96.5	100.1	113.8
உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ (இ)	42.9	57.8	63.1	62.3
வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ	39.0	38.6	37.0	51.6
உள்நாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன்	52.4	60.0	63.0	54.7
வெளிநாட்டு படுகடன்/ மத்திய அரச படுகடன்	47.6	40.0	37.0	45.3
வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள் (ஈ)	178.6	250.2	218.7	240.1
படுகடன் பணிகள்/மொ.உ.உ	12.7	12.4	13.5	12.4
படுகடன் பணிகள்/அரசிறை	107.0	141.9	163.4	151.5
இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரசிறை	64.2	85.5	109.4	126.8
படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ)	45.4	48.5	49.0	50.8
இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரச செலவினம் (உ)	27.2	29.2	32.8	42.5
வெளிநாட்டு படுகடன் பணிகள்/ஏற்றுமதிகள் (ஈ)	23.3	31.9	26.4	9.4
வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	5.7	6.3	6.0	6.5
வட்டிச் செலுத்தல்கள்/அரச செலவினம் (உ)	20.2	24.5	21.6	26.5
உள்நாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	4.2	4.6	4.5	5.9
வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/மொ.உ.உ	1.5	1.7	1.4	0.5
வட்டிச் செலுத்தல்கள்/அரச மீண்டெழும் செலவினம்	37.2	38.5	38.2	44.5
வெளிநாட்டு வட்டிச் செலுத்தல்கள்/ ஏற்றுமதிகள் (ஈ)	6.7	11.0	8.5	2.5

(அ) 2023 மார்ச் 15ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்தினைக்களத்தால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு = 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளினையும் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன்தொடர்புடைய பல்வேறு நிலுவையில் உள்ள வட்டிக் கொடுப்பனவுகளினையும் உள்ளடக்கியுள்ளன.

(இ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்குவதுடன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இலும் ரூ. 25,217 மில்லியன் 2022 சனவரி 01இலும் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ.31,446 மில்லியனாகும்.

(ஈ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்

(உ) அரச செலவினம் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது.

மூலங்கள்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு விகிதங்கள் அத்துடன் படுகடன் தீர்ப்பனவு வரையறை விகிதங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற படுகடன் தீர்ப்பனவுக் குறிகாட்டிகள் 2022இல் கலந்த செயலாற்றங்களைக் காண்பித்தன. பிரதானமாக அரசிறைச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க பெயரளவிலான வளர்ச்சி அதேபோன்று படுகடன் தீர்ப்பனவு மீதான படுகடன் இடைநிறுத்தலின் தாக்கம் என்பவற்றின் காரணமாக அரசாங்க வருவாயின் சதவீதமாக மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2022இல் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. எனினும், அரசாங்க வருவாய் மற்றும் அரசாங்கச் செலவினம் ஆகியவற்றுடன் தொடர்புடைய உள்நாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் சடுதியான அதிகரிப்பின் சான்றாக, 2022 காலப்பகுதியில் உள்நாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, அரசாங்க வரவுசெலவுத்திட்டம் மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தினை தோற்றுவித்தது. ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் விகிதத்திலும் மொ.உ.உற்பத்திக்கான வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் விகிதத்திலும் பிரதிபலிக்கப்பட்டவாறு, படுகடன் இடைநிறுத்தலின் கீழ் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுச் சுமை 2022இல் தற்காலிகமாகத் தளர்வடைந்தது. முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள், வரவிருக்கும் காலப்பகுதியில் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மீளத்தொடங்குவதற்கு முன்னர் நடுத்தர காலத்தில் மொத்த வெளிநாட்டு நிதியளித்தல் தேவைகளைக் குறைப்பதில் பாரிய நிவாரணமொன்றை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கமானது 2027 - 2032 காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ், மொத்த நிதியளித்தல் தேவைகளையும் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுகளையும் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களில் பேணுவதை உறுதிசெய்ய வேண்டும்.

அட்டவணை 6.10
வெளிநின்ற பொதுப் படுகடன் (ஆண்டிறுதியில் உள்ளவாறு)

	2019	2020	2021	2022 (அ)
	ரூ.மில்லியன்			
மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற படுகடன் (ஆ) (இ) (ஈ)	**13,031,543**	**15,117,247**	**17,614,181**	**27,492,031**
பொது உத்தரவாதமின்றி அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்ட கடன்களின் வெளிநின்ற நிலுவை (இ)	345,453	323,510	311,191	-
வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்	22,317	22,189	21,833	-
இலங்கை மின்சாரசபை	150,418	136,720	128,026	-
இலங்கை துறைமுக அதிகாரசபை	172,717	164,602	161,332	-
பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (உ)	**778,305**	**986,391**	**1,506,743**	**1,180,701**
வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்	16,532	34,801	115,332	59,756
இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	வி.கி.	வி.கி.	36,540	66,889
இலங்கை மின்சாரசபை	25,212	70,559	89,311	139,593
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (ஈ)	297,220	345,500	561,267	100,969
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்	12,613	12,505	12,263	19,959
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்	35,311	35,562	35,738	35,670
வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி	5,398	9,692	13,899	2,080
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	102,339	138,180	200,851	291,526
நெல் சந்தைப்படுத்தல் சபை	11,420	2,023	1,313	759
வீதி அபிவிருத்தி அதிகார சபை	206,563	262,015	349,895	341,736
வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் (ஊ)	32,083	43,530	60,336	72,598
ஏனைய கூட்டுத்தாபனங்கள்	33,615	32,023	29,998	49,164
பொதுப்படுகடன்	**14,155,301**	**16,427,148**	**19,432,115**	**28,672,731**
	மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக (எ)			
மொத்த வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன் (ஆ) (இ) (ஈ)	81.9	96.5	100.1	113.8
பொது உத்தரவாதமின்றி அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்களின் வெளிநின்ற நிலுவை (இ)	2.2	2.1	1.8	-
பொது உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் (உ) (ஊ)	4.9	6.3	8.6	4.9
பொதுப் படுகடன்	**89.0**	**104.8**	**110.4**	**118.7**

(அ) தற்காலிகமானது

(ஆ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ. 78,441 மில்லியன் பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்குவதுடன் இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01இலும் ரூ. 25,217 மில்லியன் 2022 சனவரி 01இலும் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போதைய வெளிநின்ற பெறுமதியானது ரூ.31,446 மில்லியனாகும்.

(இ) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை என்பன முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையானது மத்திய அரச படுகடனின் கீழ் திசெம்பர் 2022இல் உள்ளீர்க்கப்பட்டது.

(உ) அரச உத்தரவாதப் படுகடனை தொகுத்தலானது 2023 மார்ச்சு 10இல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

(ஊ) 2014 யூனில் சிறிலங்கன் எயார்லைன்சினால் வெளியிடப்பட்ட ஐ.அ.டொலர் 175 மில்லியன் பெறுமதியான பன்னாட்டு முறியினை உள்ளடக்கியுள்ளதுடன் இது 2019 யூனில் முதிர்ச்சியடைந்து 5 வருட காலப்பகுதியொன்றிற்கு மீள் வெளியிடப்பட்டது.

(எ) 2023 மார்ச் 15ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (அடியாண்டு = 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.

மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்க

வெளிநின்ற பொதுப் படுகடன்

மத்திய அரச படுகடன், அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள் மற்றும் அரச உத்தரவாதப் படுகடன்[8] என்பனவற்றை உள்ளடக்கிய வெளிநின்ற பொதுப் படுகடன் 2021 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 110.4 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 118.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் மத்திய அரச படுகடனின் அதிகரிப்பு மற்றும் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாய் பெறுமதிகளின் தேய்மானம் இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. உண்மையான நியதிகளில் மொத்த வெளிநின்ற பொதுப் படுகடன் 2021 இறுதியில் ரூ.19,432.1 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.28,672.7 பில்லியனுக்கு அதிகரித்தது. பொதுப் படுகடனின் பாரிய பங்கான வெளிநின்ற மத்திய அரச படுகடன் மொத்த பொதுப் படுகடனின் 95.9 சதவீதத்திற்கு வகைகூறி 2022 இறுதியில் ரூ.27,492.0 பில்லியனுக்கு 56.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் 2021 இறுதியில் ரூ.1,506.7 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.1,180.7 பில்லியனுக்கு 21.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து மொத்த வெளிநின்ற பொதுப் படுகடனில் 4.1 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு கருத்திட்ட கடன்கள் 2022 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினால் முன்மொழியப்பட்டவாறு மற்றும் 2023 சனவரி 30 அன்று அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு மத்திய அரசாங்கப் படுகடனில் உள்ளடக்கப்பட்டன.

6.5. துணைத் தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

துணைத் தேசிய அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைப் பணிப்புரைகளும் வழிமுறைகளும்

சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை எய்தும் நோக்குடன் துணைத் தேசிய மட்டத்தில் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு முதலீடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு, 2022இல் துணைத் தேசிய அரசாங்கங்களுக்கு[9] கொள்கை ஆலோசனை வழங்குவதில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தொடர்ந்தும் முக்கிய பங்காற்றியது. வரவுசெலவுத் திட்ட தடைகளுக்கு மத்தியில், மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு கல்வி மற்றும் நலத் துறைகளை தரமுயர்த்தல் உள்ளடங்கலாக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதற்கமைய, 2022 காலப்பகுதியில் ஆரம்ப நலக் கவனிப்பு முறைமை வலுப்படுத்தல் கருத்திட்டம் மற்றும் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமைச்சு தொடர்ந்தும் முன்னெடுத்தது. மேலும், நகர அதேபோன்று ஏனைய பிராந்திய பிரதேசங்களில் பௌதீக உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் நோக்குடன். உள்ளூராட்சி மேம்படுத்தல் துறைக் கருத்திட்டம் (புறநெகும நிகழ்ச்சித்திட்டம்), வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்மைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் என்பன உள்ளடங்கலாக பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

அனைத்து மாகாணங்களிலும் சமநிலையான அத்துடன் சமத்துவமான சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிசெய்யும் குறிக்கோளுடன் ஆண்டு காலப்பகுதியில் பல கொள்கைசார் வழிமுறைகளை நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது. அதற்கமைய, தேசிய மற்றும் பிராந்திய மட்டங்கள் இரண்டிலும் மூலவளங்களின் நியாயப்படுத்தத்தக்க ஒதுக்கீட்டிற்கு பொறுப்புடைய அதிகாரமிக்க முகவராண்மையொன்றினை தாபிப்பதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது. இம்முகவராண்மை செயல்திறன் வாய்ந்த மூலவளப் பயன்பாட்டினை உறுதிசெய்கின்ற அதேவேளை, உயர்வான பொருளாதார ஆதாயங்களுடன் கூடிய கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு முதலீட்டு முன்மொழிவுகள் பற்றிய சுயாதீன மற்றும் கடுமையான மதிப்பீடுகளை மேற்கொள்ளும். மாகாண மட்டத்தில் நலக் கவனிப்பு பணிகளை மேம்படுத்துவதற்கு வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நலக் கவனிப்பு நிறுவனங்களை அமைப்பதற்கு/ விரிவாக்குவதற்கு கொள்கையொன்றை வகுப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் சுயாதீன ஆய்வொன்றினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது. மேலும், மத்திய அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உயர்வான வருவாய் ஈட்டலுடன் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரமளிப்பதற்கான புதிய வழிகளைக் கண்டறிவதற்கான தேவையினை நிதி ஆணைக்குழு எடுத்துக்காட்டியது. மாகாண சபைகளினால் சேகரிக்கப்படுகின்ற மோட்டார் வாகன உரிமக் கட்டணங்கள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்கள் மீதான உரிமக்

8 அரச உத்தரவாதப் படுகடனை தொகுத்தலானது 2023 மார்ச்சு 10இல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

9 துணைத் தேசிய அரசாங்கங்கள் ஒன்பது மாகாண சபைகளையும் அத்துடன் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள், மற்றும் 276 பிரதேச சபைகளையும் உள்ளடக்கிய 341 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்குகிறன.

அட்டவணை 6.11
மாகாணசபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு

ரூ.மில்லியன்

விடயம்	2019	2020	2021 (அ)	2022 (ஆ)
மொத்த அரசிறை	**91,344**	**52,245**	**63,942**	**73,793**
வரி அரசிறை	81,499	43,096	55,165	59,894
வரியல்லா அரசிறை	9,845	9,149	8,777	13,899
மொத்த செலவினம்	**310,124**	**337,006**	**382,248**	**392,512**
மீண்டெழும் செலவினம்	286,884	289,667	323,762	382,792
இதில் தனியாள் ஊதியம்	219,698	228,561	252,582	300,073
மூலதனச் செலவினம்	23,240	47,339	58,486	9,720
மத்திய அரசின் மாற்றல்கள்	**218,780**	**284,761**	**318,306**	**318,719**
மொத்த கொடைகள்	199,968	265,593	284,602	298,737
பிரமாணங்களை அடிப்படையாக கொண்ட கொடைகள்	2,205	1,752	2,559	745
குறிப்பாக மாகாணத்திற்கான அபிவிருத்திக் கொடைகள்	11,376	11,004	12,632	5,102
சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டு கொடைகள்	5,230	6,412	18,513	14,135

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
பொது நிருவாக, உற்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கட்டணங்கள் என்பன உள்ளடங்களாக பல வரிகளும் கட்டணங்களும் சந்தை நிலைமைகளுக்கமைவாக திருத்தம் செய்யப்படவில்லை. இக்கட்டணங்களையும் வரிகளையும் திருத்துவது உரிய நிரல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வருவதனால் மாகாண மட்டங்களில் அரசிறைத் திரட்டலினை அதிகரிப்பதற்கு அத்தகைய கட்டணங்கள் மற்றும் வரி வீதங்களை நிரல் அமைச்சுக்கள் திருத்துவதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரைத்தது.

மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

மாகாண சபைகளின் வரி மற்றும் வரியல்லா அரசிறைச் சேகரிப்பு இரண்டின் அதிகரிப்புடன் மாகாண சபைகளின் அரசிறைச் சேகரிப்பு 2022இல் தொடர்ந்தும் அதன் சாதகமான உத்வேகத்தை முன்னெடுத்தது. அதற்கமைய, பெயரளவு நியதிகளில் மாகாண சபைகளின் மொத்த அரசிறை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 15.4 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டில் பதிவாகிய ரூ.41.2 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.45.1 பில்லியனுக்கு 9.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த முத்திரைத் தீர்வையிலிருந்து அதிகரித்த அரசிறைச் சேகரிப்பிலிருந்து பிரதானமாக நன்மையடைந்து வரி அரசிறை 2022இல் 8.6 சதவீதத்தினால் அதிகரித்தது. மாகாண சபைகளின் அரசிறையின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்குகின்ற முத்திரைத் தீர்வை 2021இல் பதிவாகிய 74.7 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் 2022இல் மொத்த வரி அரசிறையின் 75.3 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை வரியல்லா அரசிறையானது பிரதானமாக முன்னைய ஆண்டில் பதிவாகிய ரூ.2.2 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.6.5 பில்லியனுக்கு அதிகரித்த வட்டி வருமானம், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான உயர்வான அரசிறைச் சேகரிப்புக் காரணமாக 2022இல் 58.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. அதேவேளை, மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பில் மேல் மாகாண சபையிலிருந்து கிடைத்த அரசிறையின் பங்கு 2021இன் 52.1 சதவீதத்திலிருந்து 2022இல் 54.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஏனைய மாகாண சபைகளுக்கு மத்தியில் வடமேல் மற்றும் தென் மாகாணங்கள் மொத்த அரசிறையின் முறையே 9.6 சதவீதத்திற்கும் 9.3 சதவீதத்திற்கும் வகைகூறின.

அரசாங்கத்தின் செலவினச் சீரமைப்பு வழிமுறைகளுக்கு இசைவாக குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்த மூலதனச் செலவினம் காரணமாக மாகாண சபைகளின் மொத்தச் செலவினத்தின் வளர்ச்சி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 2.7 சதவீதத்திற்கு மிதமடைந்தது. மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 78.4 சதவீதம் கொண்ட பங்கான மீண்டெழும் செலவினத்தின் பாரிய கூறாகவிருந்துவருகின்ற தனியாள் ஊதியம் மீதான செலவினத்தில் அதிகரிப்பினைப் பிரதிபலித்து மீண்டெழும் செலவினம் 2022இல் 18.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, மாகாண சபைகளின் தனியாள் ஊதியத்தின் 87.5 சதவீதம் கல்வி மற்றும் நலத் துறைகளினால் உறப்பட்டிருந்தன. ஆண்டுகாலப்பகுதியில் மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவின நியதிகளில் மத்திய மற்றும் தென் மாகாண சபைகள் உயர்வாக செலவிடும் அதிகாரசபைகளாக மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் முறையே 21.7 சதவீதத்திற்கும் 12.9 சதவீதத்திற்கும் 12.7 சதவீதத்திற்கு வகைகூறின. அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற மூலதன செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செலவினத்தைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மூலம் மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் முன்னைய ஆண்டைவிட இவ்வாண்டுகாலப்பகுதியில் 83.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

மத்திய அரசாங்கத்திடமிருந்து மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.318.7 பில்லியனுக்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. தொகை வடிவிலான கொடைகளின் வகையில் மாத்திரம் மாற்றல்களில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட அதேவேளை ஆண்டு காலப்பகுதியில் ஏனைய அனைத்து

வகைகளின் கீழும் மாற்றல்கள் வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, மொத்த மாற்றல்களின் 93.7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாகாண சபைக்கான தொகைக் கொடைகள் 2022இல் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆண்டுக் காலப்பகுதியில் பிரமாணம் அடிப்படையிலான கொடைகளின் கீழ் மாற்றல்கள், மாகாணம் குறித்த அபிவிருத்திக் கொடைகள் மற்றும் விசேட கருத்திட்டங்களுக்கான மாற்றல்கள் என்பன அரசாங்கத்தின் இறைத்திரட்சிப்படுத்தலினை நோக்கிய அர்ப்பணிப்பினைப் பிரதிபலித்து, 70.9 சதவீதத்தினாலும், 59.6 சதவீதத்தினாலும், 23.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை மத்திய அரசாங்கத்திடமிருந்தான மாற்றல்கள் 2021இன் மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து 2022இல் மொ.உ.உற்பத்தியில் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மாகாண சபைகளின் மொத்த செலவினத்தின் சதவீதமாக மத்திய அரசாங்க மாற்றல்கள் முன்னைய ஆண்டில் பதிவாகிய 83.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் 81.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

7

நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்

7.1 பொதுநோக்கு

உச்சமடைகின்ற விலை அழுத்தங்கள் மற்றும் விடாப்பிடியாக அதிகரிக்கும் பணவீக்கம் என்பவற்றை முறியடிக்கின்ற அதேவேளை பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்தி இதன் அடிப்படையிலான கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, மத்திய வங்கி 2022 காலப்பகுதியில் நாணயக் கொள்கை நிலையினை குறிப்பிடத்தக்களவு இறுக்கமாக்கியது. சுதந்திரப் பொருளாதாரத்திற்கு பின்னர் எதிர்கொண்ட மோசமான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறையில் எதிர்பாராத பாதிக்கப்படும்தன்மைகளை தீர்ப்பதிலும், உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு பற்றி அதிகரிக்கின்ற கரிசனைகளினால் அரசாங்கப் பிணையங்களின் விளைவுகள் மீதான உயர்வடைகின்ற இடர்நேர்வுக் கரிசனைகள் காரணமாக இயல்புக்கு மாறான வட்டி வீதக் கட்டமைப்பின் தாக்கத்தினைக் குறைப்பதிலும் இத்தகைய இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கை தேவையாயமைந்தது. ஏனையவற்றிற்கு மத்தியில், உள்நாட்டு வழங்கல் பக்க இடையூறுகள், உலகளாவிய எரிபொருள் மற்றும் பண்ட விலைகளில் உயர்வுகளுக்கு பதிலிறுத்தும் வகைகளில் நிர்ணயிக்கும் விலைகளுக்கான சரிப்படுத்தல்கள் நீண்ட காலம் செய்யப்படாமை அத்துடன் அவற்றின் கசிவுத்தாக்கங்கள், நாணயத்தின் குறிப்பிடத்தக்க தேய்மானம் விரைவாக ஊடுகடத்தப்பட்டமை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நாணயத் தளர்வின் பிந்திய தாக்கம் என்பன உள்ளடங்கலாக பல காரணிகளின் விளைவாக ஆண்டு காலப்பகுதியில் விலை அழுத்தங்கள் துரிதமாக உயர்வடைந்தன. இறுக்கமான நாணயக் கொள்கையின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, உயர்வடைந்த கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்களுடன் உள்நாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறையாகக் காணப்பட்டு, இதன் மூலம் நாணயம் மற்றும் கொடுகடன் விரிவடைதலைக் கட்டுப்படுத்தியது. விசேடமாக, இறுக்கமான நாணயக் கொள்கையின் துரிதமான ஊடுகடத்தல், பாரியளவான திரவத்தன்மை பற்றாக்குறை மட்டங்கள் மற்றும் உயர்வடைந்த இடர்நேர்வுக் கரிசனைகள் என்பவற்றைப் பிரதிபலித்து சந்தைக் கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் ஒரு சில மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்குள் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தன. இதற்கு பதிலிறுத்தி, 2022 யூன் தொடக்கம் தொடர்ச்சியாக மாதத்திற்கு மாதம் சுருக்கத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு தனியார் துறை மூலம் பெற்றுக்கொண்ட கொடுகடன் அதிகளவில் குறைவடைந்தமையுடன், விரிந்த பண நிரம்பல் மற்றும் கொடுகடன் விரிவடைதல் என்பன குறிப்பிடத்தக்களவு மெதுவடைந்தன. குறைவடைந்த சென்மதி நிலுவை அழுத்தங்களுடன் இணைந்த இறுக்கமான நாணய நிலைமைகளின் தாக்கம் மற்றும் வழங்கல் பக்க மேம்பாடுகள் என்பன 2022இன் பிந்திய பகுதியில் விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவற்கு உதவின. முதன்மைப் பணவீக்கம், 2022 செத்தெம்பரில் உச்சத்தை எட்டியதுடன் அப்போதிருந்து உறுதியான பணவீக்க வேகக்குறைப்புப் பாதையில் இருந்து வருகிறது. எவ்வாறாயினும், குறைவடைந்த அரசாங்க வருவாய், 2022 ஏப்பிறலில் வெளிநாட்டுப் படுகடனை இடைநிறுத்தும் அறிவித்தலைத் தொடர்ந்து வெளிநாட்டு நிதிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி என்பவற்றிற்கு மத்தியில் வங்கித் தொழில் முறைமை மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கொடுகடன் ஆண்டு காலப்பகுதியில் கணிசமாக உயர்வடைந்து காணப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதி ஏற்பாட்டின் வெற்றிகரமான இறுதிப்படுத்தல் பற்றிய மேம்பட்ட சந்தை எண்ணப்பாங்குகளுடன் 2022இன் பிந்திய பகுதியில் சில மிதமடைதல் அவதானிக்கப்பட்ட போதிலும், பாரிய விடாப்பிடியான அரசாங்கத்தின் கடன்பெறுவதற்கான தேவைப்பாடானது உள்நாட்டு படுகடன் மறுசீரமைத்தல் பற்றிய கரிசனைகளுடன் ஒன்றிணைந்து ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் உயர்வடைவதற்கும் அசாதாரணமான உயர் மட்டங்களில் காணப்படுவதற்கும் வழிவகுத்தது. அதேவேளை, அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளுக்கு நிகராகச்சென்ற மிதமிஞ்சிய வட்டி வீதங்களைக் குறைப்பதற்கான தேவைக்கு முக்கியத்துவமளித்த மத்திய வங்கியின் நாணயக் கொள்கை தொடர்பூட்டலுக்கு


இசைவாக சந்தை வைப்பு வட்டி வீதங்களும் குறுகிய கால சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களும் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கின. மேலும், நீண்டகால அடிப்படையில் திரவத்தன்மையினை வழங்கிய அதேவேளை, துணைநில் வசதிகள் மீது அளவுக்கு மீறி வங்கி தங்கியிருப்பதைக் குறைப்பதன் வாயிலாக நாணயச் சந்தையின் திரவத்தன்மை அழுத்தங்களைத் தளர்த்துவதற்கும், இதன் மூலம் இதுவரையிலும் கொள்கை வட்டி வீத இறுக்கமாக்கலின் அளவுடன் ஒப்பிடுகையில் அளவிற்கொவ்வாத மேல்நோக்கிய திருத்தமொன்றுடன் மிகையாக எதிர்வினையாற்றியிருந்த வட்டி வீதக் கட்டமைப்பிற்கு படிப்படியான கீழ் நோக்கிய அசைவினை வசதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கி வழிமுறைகளைத் தொடங்கியது. அதேவேளை, பன்னாட்டு நாணய நிதியத்தின் - விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதி ஏற்பாட்டிற்கான மீதமிருந்த முன்கூட்டிய நடவடிக்கையினை நிறைவுசெய்வதற்கு 2023 மார்ச்சில் மத்திய வங்கியானது கொள்கை வட்டிவீதங்களை அதிகரித்தது. கொள்கை வட்டி வீதங்களுக்கும் சந்தை வட்டி வீதங்களுக்கும் இடையிலான விரிவை மேலும் குறைப்பதற்கு இது உதவியது. கொள்ளை வட்டி வீதங்களில் இவ்வதிகரிப்பு எவ்வாறிருப்பினும், 2022 இறுதியிலிருந்து இலங்கை மத்திய வங்கி வழங்கிய சந்தை வழிகாட்டுதலின்படி சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சிப் போக்குத் தொடர்ந்தது. நாணயக் கொள்கை மற்றும் ஏனைய வழிமுறைகள் என்பவற்றின் தாக்கத்தினைக் பிரதிபலித்து, முதன்மைப் பணவீக்கம் 2023இன் பிந்திய பகுதியில் தனி இலக்க மட்டத்திற்கு திரும்பலடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டத்தினுள் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மிக முக்கியமாக, வீழ்ச்சியடைகின்ற பணவீக்கம் மற்றும் வினைத்திறனான உள்நாட்டுப் படுகடன் தெரிவுகள் மீதான அதிக தெளிவுடன் கூடிய அரச பிணையங்கள் மீதான விளைவுகளுடன் இணைக்கப்பட்ட உயர் இடர்நேர்வு கரிசனைகளின் குறைப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு இதுவரையிலான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கமானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது நாணய நிலைமைகளின் குறிப்பிடத்தக்க இறுக்கமான தன்மையினை எளிதாக்குவதற்கும் தனியார் துறைக்கான கொடுகடனில் படிப்படியானதொரு திரும்பலினை ஏற்படுத்துவதற்கும் துணைபுரியும். இறை ஆதிக்கம் கிடைக்கப்பெறாத நிலைமைக்கு மத்தியில் எதிர்பார்க்கப்படும் மத்திய வங்கிச் சட்டத்தினை இயற்றுதல், நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மேலும் தூண்டுதலளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

7.2 நாணயக் கொள்கை நிலை


பணவீக்க அழுத்தங்களை நிறுத்துவதற்கும் சாத்தியமான பணவீக்க எதிர்பார்க்கைகளைத் தளர்வடையச் செய்யும் நோக்குடனும் 2021 ஓகத்தில் தொடங்கி 2022 முழுவதும் தொடர்ந்தும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினை மத்திய வங்கி முன்னெடுத்தது. வெளிநாட்டு மற்றும் இறைத் துறை சமமின்மைகளுக்கு மத்தியில் நாட்டில் குறிப்பிடத்தக்க பணவீக்கம் துரிதமடைதலையும் கொள்கை வட்டி வீதங்களுக்கும் சந்தை வட்டி வீதங்களுக்கும் இடையில் காணப்பட்ட இயல்புக்குமாறான நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் அதாவது, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வீதம் என்பன 2021 ஓகத்தில் தொடங்கிய நாணய இறுக்கமாக்கல் சுற்றிலிருந்து 2022 இறுதிவரை 10 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டதுடன் அவ்வாறான சீராக்கத்தின் பாரிய பங்கு அதாவது, 7 சதவீதப் புள்ளிகள் 2022 ஏப்பிறலில் இடம்பெற்றன. 2020இன் ஆரம்பத்தில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து நீடிக்கப்பட்ட நாணய தளர்வுக் காலப்பகுதி அத்துடன் 2022 மார்ச்சு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான தேய்மானம் என்பன பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கு கணிசமான மேல்நோக்கிய இடர்நேர்வுகளை விளைவித்து, கொள்கை வட்டி வீதங்களை 2022 ஏப்பிறலில் 7 சதவீதப் புள்ளிகளாலும் 2022 யூலையில் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் உயர்த்துவதற்கு மத்திய வங்கியினை நிர்ப்பந்தித்தது. அத்தகைய நாணய நிலைமைகளை இறுக்கமாக்குதல், கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்கம் கட்டியெழுப்பப்படுவதையும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளின் அதிகரிப்பினை முன்கூட்டியே தடுப்பதற்கும் உதவியதுடன் அதேபோன்று வெளிநாட்டு துறை மீதான அழுத்தங்களைத் தளர்த்திய அதேவேளை, வட்டி வீதக் கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட முரண்பாட்டை சரிசெய்தது. இதற்கு மேலதிகமாக, தெரிவுசெய்யப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதும் வெளிநாட்டு நாணய வைப்புகள் மீதும் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் அகற்றப்பட்டு, இறுக்கமான நாணய நிலைமைகளுக்கான கொள்கை வீத மாற்றங்களின் செயற்திறன்வாய்ந்த ஊடுகடத்தலை இயலச்செய்தது. இறுக்கமான நாணயக் கொள்கை நிலைக்கு ஆதரவளிக்கும் பொருட்டு, நாணயச் சந்தையின் தொழிற்பாடுகளுக்குத் தேவையான திரவத்தன்மை துணைநில் கடன்வழங்கல் வசதியூடாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், 2022 காலப்பகுதியில் உள்நாட்டு பணச்சந்தையில் திரவத்தன்மை எதிர்மறையான மட்டங்களிலேயே பேணப்பட்டது. பிரதானமாக, அத்தியாவசிய இறக்குமதிகள் மற்றும் அரசின் வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதில் மத்திய வங்கி மூலமான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தின் காரணமாக, உள்நாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மையானது 2022 நடுக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு எதிர்மறையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு உதவுவதற்கு மத்திய வங்கி திறைசேரி

வரைபடம் 7.1
நாணயத்துறை அபிவிருத்தி

விலை உறுதிப்பாட்டை மீட்டெடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது



தனியார் துறைக்கான கொடுகடன் தொடர்ந்தும் மெதுவடைந்தது



7

உண்டியல்களை முதனிலைச் சந்தையில் கொள்வனவு செய்தமை மற்றும் கவர்ச்சிகரமான வைப்பு வட்டி வீதங்களினால் வங்கித்தொழில் முறைமைக்கான நாணயத் திரும்பல் என்பவற்றின் விளைவாக பாரிய எதிர்மறைத் திரவத்தன்மை மட்டங்கள் படிப்படியாகக் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது. கொள்கை வட்டி வீதங்களில் சடுதியான அதிகரிப்பு மற்றும் படுகடன் மறுசீரமைப்புக் கரிசனைகளுடன் இணைந்த நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் அரசாங்க பிணையங்களுக்கான உயர்வடைந்த இடர்நேர்வு கரிசனை என்பன மூலம் தூண்டப்பட்டு, அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் 2022 நவெம்பரை அண்மித்த ஆண்டு காலப்பகுதி வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இறுக்கமான நாணய நிலைமைகளின் விரைவான ஊடுகடத்தலைப் பிரதிபலித்து, சந்தை வட்டி வீதங்கள் அனேகமாக வரலாற்றிலேயே உயர்வான மட்டங்களை எய்தி, குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தன. எனினும், ஏனைய சந்தை வட்டி வீதங்கள் மீதான அரசாங்க பிணையங்களுடன் இணைந்த உயர்வான இடர்நேர்வு கரிசனைகளின் செல்வாக்கின் காரணமாக சந்தை வட்டி வீதங்களின் மேல்நோக்கிய இச்சீராக்கமானது கொள்கை வட்டி வீதங்களின் உயர்விற்கு அளவிற்கொவ்வாததாக காணப்பட்டது. இது 2022 நவெம்பர் தொடக்கம் மத்திய வங்கியினால் சில தார்மீகக் கடப்பாடுகளை மேற்கொள்வதனை தேவைப்படுத்தி, கடுமையாக மிதமிஞ்சிய கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு வங்கிகளைக் கோரியது. எவ்வாறிருப்பினும், கொள்கை வட்டி வீதங்களுக்கு மேலான மட்டங்களில் பேணப்பட்ட மிதமிஞ்சிய சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதற்கான தேவைபற்றி மத்திய வங்கி மூலம் மீண்டும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைவாக 2022இன் பிந்திய பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட சில மிதமடைதலுக்கு மத்தியில், 2022 காலப்பகுதியில் சில்லறை சந்தை வட்டி வீதங்கள் உயர்வாகக் காணப்பட்டன. எதிர்பாராத பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாடுகளின் மிதமான தன்மையினைப் பிரதிபலிக்கின்ற வகையில் வங்கித்தொழில் முறைமையினால் தனியார் துறையினருக்கு வழங்கப்படுகின்ற கொடுகடன் வளர்ச்சியானது தொடர்ந்தும் மிதமாக இருந்தது. அதேவேளை, தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடன், 2022 யூன் தொடக்கம் 2023 பெப்புருவரி வரை மாதாந்த அடிப்படையில் சுருக்கமடைந்து, ஒரு நீண்டகால கொடுகடன் மீதான சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது. இதன் விளைவாக, தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியானது 2022 இறுதியில் 6.2 சதவீதத்திற்கு மிதமடைந்து 2023 பெப்புருவரி இறுதியில் 3.0 சதவீதத்திற்கு மேலும் மெதுவடைந்து 2020 யூலை தொடக்கம் ஆகக் குறைந்த வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், ஆண்டு காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையிடமிருந்து அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளால்

அட்டவணை 7.1
அண்மைக்கால நாணயக்கொள்கை வழிமுறைகள்

திகதி	வழிமுறை
2020 சன 30	துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.
2020 மார் 17	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2020 மார் 17	2020 மார்ச 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
2020 மார் 27	கொவிட் 19 என்பதனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ரூ. 50 பில்லியன் கொண்ட சௌபாக்கியா கொவிட் 19 புத்துயிரளித்தல் வசதி (பாகம் 1 மீள்நிதியிடல் திட்டம்) என்பது 4.00 சதவீத வட்டியுடன் ஓர் சலுகையான கடன் செயற்திட்டம் அறிமுகஞ்செய்யப்பட்டது.
2020 ஏப் 03	2020 ஏப்ரல் 03ஆம் நாளின் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2020 மே 06	2020 மே 06ஆம் நாளில் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2020 யூன் 16	2020 யூன் 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நியதி ஒதுக்கு விகிதம் 2.00 சதவீதப் புள்ளியினால் 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
2020 யூன் 16	2020 மார்ச்ச 27 அன்று கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட 4 சதவீதத்துடனான சலுகையான கடன் ரூ.150 பில்லியன் வரை நீடிக்கப்பட்டது. (சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - பாகம் II)
2020 யூலை 09	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.
2021 ஒகத் 19	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.
2021 ஒகத் 19	2021 செத் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்கு விகிதமானது 2.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்குக் அதிகரிக்கப்பட்டது.
2022 சன 20	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.
2022 மார் 04	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.
2022 மார் 07	செலாவணி வீதத்தில் ஓர் சீராக்கம் அனுமதிக்கப்பட்டது.
2022 ஏப் 08	2022 ஏப்ரில் 08 அன்று வர்த்தக முடிவில் நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 700 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 13.50 சதவீதத்திற்கும் 14.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.
2022 மே 12	2022 மே 13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் ஒழுங்கான நடத்தையை வசதிப்படுத்தி செலாவணி வீதத்தில் காணப்படும் தேவையற்ற நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமை செய்வதற்கும் நாளாந்த அடிப்படையில் அறிவிக்கப்படவுள்ள அனுமதிக்கப்பட்ட ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் வேறுபாட்டு எல்லையுடன் ஒன்றுசேர்த்து, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடைய ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் செலாவணி வீதத்தின் நடு வீதத்தை அறிமுகப்படுத்தல்.
2022 யூலை 07	துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன.
2023 சன 02	2023 சனவரி 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளிற்கான துணைநில் வைப்பு வசதியின் கிடைப்பனவு மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து தடவைகளாக மட்டுப்படுத்தப்பட்டது. மேலும், குறித்த உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளிற்கான துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைப்பனவு ஏதேனும் குறித்த நாளொன்றில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளின் நியதி ஒதுக்கு விகிதத்தின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.
2023 மார்ச் 03	2023 மார்ச் 03 ஆம் நாளின் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் துணைநில் வைப்பு வீதமும் துணைநில் கடன் வழங்கல் வீதமும் 100 அடிப்படை புள்ளிகளினால் முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.
2023 மார்ச் 03	2023 மார்ச் 07 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் செலாவணி வீதம் மற்றும் வேறுபாட்டு எல்லைக்கான நடு வித அறிவிப்பின் மூலம் சந்தை வழிகாட்டுதலை வழங்குவது நிறுத்தப்பட்டது.


மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு:
27.04.2020 வட்டி வீதங்கள் மீது விதிக்கப்பட்ட எல்லைகள் பின்வருமாறு விதிக்கப்பட்டது/ திருத்தப்பட்டது :
24.08.2020 உரிமம் பெற்ற வங்கிகளின் அடவுபிடித்தல் முற்பணங்களின் மீது வட்டி வீத உச்ச எல்லைகள் விதிக்கப்பட்டன
26.11.2020 உரிமம் பெற்ற வங்கிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் இறுக்கப்பட்டன.
24.08.2021 உரிமம் பெற்ற வங்கிகளின் பிணையிடப்பட்ட வீட்டு கடன்கள் மீது வட்டி வீத எல்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
30.12.2021 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் மீதான உச்ச எல்லைகள் விதிக்கபட்டன
31.12.2021 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் (364 நாள் திறைசேரி உண்டியல் விளைவுடன் இணைக்கப்பட்டது) மீதான உச்ச எல்லைகள் விதிக்கபட்டன
04.03.2022 உரிமம் பெற்ற வங்கிகளின் பிணையமிடப்பட்ட வீட்டுக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் (சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை வீதமுடன் இணைக்கப்பட்டது) மீதான உச்ச எல்லைகள் திருத்தப்பட்டது.
11.03.2022 உரிமம் பெற்ற வங்கிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் திருத்தப்பட்டன (தளர்த்தப்பட்டன).
21.04.2022 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படும் வட்டி வீங்கள் மீதான உச்ச எல்லைகள் நீக்கப்பட்டன
21.04.2022 உரிமம் பெற்ற வங்கிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீத எல்லைகள் நீக்கப்பட்டன.

வங்கி வீதம், நாணயக் கொள்கை சாதனங்களிலிருந்தான பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதுடன் இது வங்கித் தொழில் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு இறுதிக் கடன் ஈவேள் வீதமாக மத்திய வங்கி பயன்படுத்துகின்ற கொள்கை சாதனமொன்றாக கருத்திற்கொள்ளப்படும். (01.03.2023இல் நடைமுறைக்கு வரும் விதத்தில்)

பெறப்பட்ட கொடுகடன் விரிவடைந்து செலாவணி வீதத் தேய்மானத்தின் பகுதியளவான தாக்கத்தினை பிரதிபலித்தது. மேலும், பாரியளவிலான நாணய நிதியிடலுக்கு மத்தியில், மத்திய வங்கியிடமிருந்தான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டு, வங்கித் தொழில் முறைமையின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2022 காலப்பகுதியில் அதிகரித்தது. சுருக்கமடைகின்ற வெளிநாட்டு நிதியிடல் மற்றும் வருவாய் பற்றாக்குறைகள் என்பவற்றிற்கு மத்தியில் அரசாங்க காசுப் பாய்ச்சல் மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்கான தற்காலிக வழிமுறையொன்றாகவிருந்த அவ்வாறான நாணய நிதியிடலை வழங்குவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. அத்தகைய நாணய நிதியிடலில் பாரிய பாகம் பல்தரப்பு கடன்வழங்கல் முகவராண்மைகளுக்கான வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவை நிறைவேற்றுவதற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கிக்கு மீண்டும் வழங்கப்பட்டது. எனினும், புதிய நாணய நிதியிடலானது வரவிருக்கும் மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் இடம்பெறாது, இதனூடாக வரவிருக்கும் காலத்தில் நாணயக் கொள்கை சுயாதீனம் மேலும் வலிமைப்படுத்தப்படும். அதேவேளை, துணையளிக்கின்ற பணவீக்கமும் பணவீக்க எதிர்பார்க்கையும் போதுமானளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கியானது 2023 வரையிலும் அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்ந்தும் பேணியது. எனினும் உள்நாட்டுப் பணச் சந்தையில் பாரிய பற்றாக்குறை மட்டங்கள் காரணமாக சந்தை வட்டி வீதங்கள் மீதான மிகையான அழுத்தங்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பொருட்டு, மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக நீடிக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு நீண்டகால அடிப்படையில் திரவத்தன்மையை வழங்கியது. மேலும், திரவத்தன்மை

வரைபடம் 7.2
முக்கிய கொள்கை கருவிகள் மற்றும் நடைமுறை இலக்கின் அசைவுகள் (அ)



(அ) வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தை தொழில்புரியாத நாட்களில் சராசரி நிறைவேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் கிடைக்கப்பெறவில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி


பரம்பலில் பாரிய சமச்சீரின்மை காரணமாக இடையூறுகளுக்குள்ளாகியிருந்த உள்நாட்டுப் பணச் சந்தைச் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு, 2023 சனவரி நடுப்பகுதியிலிருந்து செயற்படும் விதத்தில் மத்திய வங்கியின் துணைநில் வசதிகளுக்கான பெறுவழியினை மட்டுப்படுத்தி மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி இதனூடாக துணைநில் வசதிகள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மிகையாக தங்கியிருப்பதைக் குறைத்தது. இதன் விளைவாக, உள்நாட்டுப் பணச் சந்தையில் ஓரிரவு திரவத்தன்மை மற்றும் வங்கிகளுக்கிடையிலான அழைப்பு மற்றும் மீள்கொள்வனவு சந்தைகளின் செயற்பாடு மேம்பட்டன. இவ்வபிவிருத்திகளுடனும் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதிகளின் ஏற்பாட்டின் இறுதிப்படுத்தலுடன் கூடிய முதலீட்டாளர் எண்ணப்பாங்கில் ஏற்பட்ட மேம்படுத்தலுடனும் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளும் ஏனைய சில்லறைச் சந்தை வட்டி வீதங்களும் படிப்படியாக தளர்வடையத் தொடங்கி, இதன் மூலம் நாணய நிலைமைகள் ஓரளவிற்கு தளர்வடைந்த அதேவேளை, சந்தை வட்டி வீதங்களில் ஒழுங்கற்ற மேல் நோக்கிய சீராக்கத்தினை குறுக்கமடையச் செய்தது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினதும் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களினதும் பணவீக்க எறிவுகளின் சில வேறுபாடுகளுக்கு மத்தியில் "முன்கூட்டிய நடவடிக்கைகள்" அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான தேவையினையும் விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதி ஏற்பாட்டின் இறுதிப்படுத்தலையும் முன்னோக்கி முன்னெடுப்பதைக் கருத்திற்கொண்டு, ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகளின் போது எதிர்பார்க்கப்பட்ட சீராக்கல் மட்டத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைந்தளவில் கொள்கை வட்டி வீதத்தை உயர்த்துவதற்கு 2023 மார்ச்சு ஆரம்பத்தில் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது. அதற்கமைய, 2023 மார்ச்சு 03 அன்று தொழில் முடிவிலிருந்து செயற்படும் விதத்தில் கொள்கை வட்டி வீதங்கள் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. இச்சீராக்கமானது, கொள்கை வட்டி வீதங்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை மேலும் குறுக்கமடையச்செய்த அதேவேளை, அரசாங்கத்தின் படுகடன் மறுசீரமைத்தல் உபாயம் தொடர்பில் அதிகளவான தகவல்கள் கிடைக்கப்பெறக் கூடியதாக இருக்கின்றமைக்கேற்ப, வரவிருக்கும் காலத்தில் சந்தை வட்டி வீதங்களின் மிதமடைதல் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. வட்டி வீத கட்டமைப்பில் அத்தகைய கீழ்நோக்கிய திருத்தமானது கடுமையான சவால்மிக்க பொருளாதார சூழ்நிலைகளின் கீழ் இயங்கக்கூடியவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள் மீதான எதிர்பாராத சுமையினைத் தளர்த்துவதற்கு உதவும் வேளையில் பொருளாதார செயற்பாடு ஏற்கனவே வளர்ச்சியின்றிக் காணப்படுவதனால் பணவீக்க அழுத்தங்களை உருவாக்கக்கூடிய மட்டங்களுக்கு நாணய நிலைமைகளைத் தளர்த்துமென எதிர்பார்க்கப்படவில்லை.

2022இல் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் உபாயமானது ஆண்டு முழுவதும் பேணப்பட்ட இறுக்கமான நாணய நிலையுடன் அணிசேர்ந்திருந்த அதேவேளை, வரலாற்றிலேயே உயர்வான பணவீக்கத்திற்கு மத்தியில் விலை உறுதிப்பாட்டினை மீளமைப்பதற்கான மத்திய வங்கியின் கடப்பாட்டினை மீளவும் வலியுறுத்தியது. உயர்வான பணவீக்க காலகட்டத்தின் போது நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலானது குறிப்பாக பொருளாதாரம் மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைவாகக் காணப்படுகின்றமைக்கு மத்தியில் கடுமையான சவால்மிக்கதாகக் காணப்பட்டது. சாத்தியமான மிகைப்பணவீக்கம் தொடர்பான சில குறிப்புகள் நீடித்த பொருளாதார நெருக்கடி போன்றன உள்ளடங்கலாக பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களின் போக்கு தொடர்பில் சில விமர்சகர்களின் தவறான மற்றும் முன்கூட்டிய அறிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தின. 2022 ஏப்பிறலில் கொள்கை வட்டி வீதங்களின் சடுதியான சீராக்கமானது அத்தகைய சீராக்கத்திற்கான தேவை பற்றியும், மோசமடைகின்ற பணவீக்க எதிர்பார்க்கைகளைத் தடுப்பதன் மீதும் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு வினைத்திறன்மிக்க, கொள்கைசார் தொடர்பூட்டலை அவசியப்படுத்தியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதி ஏற்பாட்டின் கீழ் ஏதேனும் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு பற்றிய நிச்சயமின்மையினை பிரதான காரணமாகக் கொண்டு அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் உள்ளடங்கலாக சந்தை வட்டி வீதங்களின் மிகையான சீராக்கம் பொதுமக்களுக்கு தொடர்ச்சியான மற்றும் தெளிவான தொடர்பூட்டலின் முக்கியத்துவத்தைத் தீவிரப்படுத்தியது. மத்திய வங்கி, அதன் தொடர்பூட்டல் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் மரபுசார்ந்த வழிகளையும் அதேபோன்று சமூக வலைத்தளங்கள் அத்துடன் டிஜிட்டல் தளங்கள் என்பவற்றையும் பயன்படுத்தியது. நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் ஊடக வெளியீடு வாயிலாகக் முன்னெடுக்கப்பட்டதுடன் பணவீக்கத் தோற்றப்பாடு பற்றிய பல இடர்நேர்வுகளுக்கும் நிச்சயமின்மைகளுக்கும் மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் பணவீக்க வீச்சு வரைபடத்தை வெளியிடுதல் மீளத் தொடங்கப்பட்டது. சமூக வலைத்தளங்கள் வாயிலாக பாரியளவிலான அவையோருக்கு நேரலையாக ஒளிபரப்பப்பட்ட மாநாடுகளுடாக இந்நாணயக் கொள்கை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிப்படுத்தும் நோக்குடன், பணவீக்க அபிவிருத்திகள் பற்றி மாதாந்த ஊடக அறிக்கைகளில் பணவீக்க வீச்சு வரைபடத்தை வெளியிடுவதை மத்திய வங்கி தொடங்கியது. இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் மூத்த அலுவலர்களும் பல்வேறு செவ்விகள், மாநாடுகள், கருத்தரங்குகள், அழைக்கப்பட்ட விரிவுரைகள், இணையவழி கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்கேற்று இதனூடாக கொள்கைத் தொடர்பூட்டல்களின் வீச்சை அதிகரிப்பதற்கும் கொள்கை நோக்குகள் பற்றிய தவறான எண்ணக்கருக்களை சரிப்படுத்துவதற்கும் முயற்சித்தனர். ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் உள்ளடங்கலாக மத்திய வங்கியின் கிரமமான வெளியீடுகளை மூன்று மொழிகளில் உரிய காலத்தில் நிறைவுசெய்த அதேவேளை, நாணய விதிச் சட்டத்தின் 64ஆம் மற்றும் 68ஆம் பிரிவுகளின் கீழ் செத்தெம்பர் 15 அறிக்கையினை சமர்ப்பிப்பதன் வாயிலாக அவசியமான இறைக் கொள்கை வழிமுறைகளை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கி அரசாங்கத்திற்கு உதவியது. முன்னோக்கிச் செல்கையில், மத்திய வங்கியானது எதிர்வரும் காலங்களில் சட்டமாக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் அதன் வெளியீடுகளை அணிசேர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும். இதில், ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிடுவதும் தொடங்கப்படவுள்ளது.

7.3 பணவீக்கத்தின் அபிவிருத்திகள்

2022 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவு தீவிரமடைந்து கீழ் நோக்கிய போக்கிற்குச் செல்ல முன்னர் வரலாற்றிலேயே உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தின் எதிர்பாராத துரிதமடைதலுக்கு வழங்கல் பக்க இடையூறுகளுக்கு மத்தியில் உணவு விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாய் சடுதியாகக் குறைவடைந்தமை அத்துடன், அதனைத் தொடர்ந்து வந்த சக்தி மற்றும் போக்குவரத்து விலைகள் போன்ற நிருவகிக்கப்படும் விலைகளின் சீராக்கங்கள் மற்றும் அவற்றின் கசிவுத்தாக்கங்கள் மற்றும் கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்ற நாணயத் தளர்வின் பிந்திய தாக்கம் காரணமாக


வரைபடம் 7.3
கொ.வி.நு.சு. அடிப்படையிலான முதன்மை பணவீக்கத்திற்கான கொ.நு.வி.சு. பங்களிப்பு (ஆண்டுக்காண்டு) (அ)



(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது 2023 பெப்புருவரியின் தரவு வெளியீட்டிலிருந்து புதிய தள ஆண்டுடன் 2021 = 100 நுகர்வோர் விலைச் சுட்டெண்களை வெளியிடத் தொடங்கியதுடன் பழைய தள ஆண்டான 2013 = 100 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வெளியீட்டினை இடைநிறுத்தியது. இதற்கமைய, வரைபடங்களில் 2023 சனவரியில் ஆரம்பிக்கின்ற தரவுகள் புதிய தள ஆண்டுடனான தொடர்களின் 2021 = 100 இன் அடிப்படையிலமைந்துள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 7.4
தே.நு.வி.சு அடிப்படையிலான முதன்மை பணவீக்கத்திற்கான பங்களிப்பு (ஆண்டுக்காண்டு) (அ)




(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது 2023 பெப்புருவரியின் தரவு வெளியீட்டிலிருந்து புதிய தள ஆண்டுடன் 2021 = 100 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களை வெளியிடத் தொடங்கியதுடன் பழைய தள ஆண்டான 2013 = 100 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வெளியீட்டினை இடைநிறுத்தியது. இதற்கமைய, வரைபடங்களில் 2023 சனவரியில் ஆரம்பிக்கின்ற தரவுகள் புதிய தள ஆண்டுடனான தொடர்களின் 2021 = 100 இன் அடிப்படையிலமைந்துள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறையாத கூட்டுக் கேள்வி அழுத்தங்கள் என்பன பிரதான காரணங்களாக அமைந்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு, 2013=100) ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு, போக்குவரத்துத் துறை, 2022இன் இரண்டாம் அரைக் காலப்பகுதியில் 100 சதவீதத்துக்கும் மேற்பட்ட ஆண்டுக்காண்டு பணவீக்கத்தினைப் பதிவுசெய்து 2022 செத்தெம்பரில் 150.4 சதவீதத்தில் உச்சம்தொட்ட அதேவேளை, ஆண்டுக்காண்டு உணவுப் பணவீக்கமும் அதே மாதத்தில் 94.9 சதவீதத்தில் உச்சத்தை எட்டியது. எனினும், நாணயக் கொள்கை இறுக்கமடைவதின் பின்தங்கிய விளைவுகளின் காரணமாக கேள்வி அழுத்தங்கள் தளர்வடைந்தமை அதேபோன்று, உணவு மற்றும் சக்தி பணவீக்கம் குறைவடைந்தமையும் 2022இன் பிந்திய பகுதியிலிருந்து முதன்மைப் பணவீக்கம் மெதுவடைய வழிவகுத்தது. கொ.நு.வி.சு (2013=100) இன் ஆண்டுகாண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்றவாறான முன்மைப் பணவீக்கம் 2022இன் இறுதியளவில் 57.2 சதவீதத்திற்கு மிதமடைவதற்கு முன்னர், 2021இன் இறுதியில் 12.1 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 69.8 சதவீதத்திற்கு விரைவடைந்தது. கொ.நு.வி.சு. (2013=100) அடிப்படையிலான ஆண்டுச் சராசரி பணவீக்கம், 2021இன் 6.0 சதவீதத்திலிருந்து 2022இல் 46.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தே.நு.வி.சு (2013=100) அடிப்படையிலான ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமும் இதனையொத்த போக்கினை பின்பற்றி 2022 இறுதியளவில் 59.2 சதவீதத்திற்கு மிதமடைவதற்கு முன்னர் 2021 இறுதியின் 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் 73.7 சதவீத உச்சத்தினை எட்டியது. தே.நு.வி.சு (2013=100) அடிப்படையிலான ஆண்டுச் சராசரி பணவீக்கம், 2021இன் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 50.4 சதவீதமாக பதிவாகியது. 2022 ஒத்தோபரில் தொடங்கிய பணவீக்க வேகக் குறைவு 2023 ஆரம்பம் வரைத் தொடர்ந்தது. மாற்றமடைகின்ற செலவின விதங்களுக்கு இடமளிக்கவும் சந்தையில் கிடைக்கின்ற பொருட்கள் மற்றும் சேவைகளிலுள்ள மாற்றங்களைக் கூட்டிணைப்பதற்கும் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் கொ.நு.வி.சு., தே.நு.வி.சு இரண்டிற்குமான அடிப்படை ஆண்டை 2013இலிருந்து 2021 ஆக மாற்றியது. இவ்வடிப்படை ஆண்டு மாற்றத்திற்கு மத்தியிலும் இரு தொடர்களின் கீழும் பணவீக்க வேகக் குறைப்புப் போக்கு பரந்தளவில் பாதிப்பின்றியே காணப்பட்டது. அதற்கமைய கொ.நு.வி.சு. (2021=100) ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 50.6 சதவீதத்திற்கு வேகங்குறைந்த அதேவேளை, தே.நு.வி.சு (2021=100)இல் இப்பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 53.6 சதவீதமாகக் காணப்பட்டது.

துணையளிக்கின்ற கேள்வியினால் தூண்டப்பட்ட அழுத்தங்களைப் பிரதிபலித்து, 2022 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியின் முதன்மைப் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் அதேகாலப்பகுதியில் அதன் பின்னர் மிதமடைவதற்கு முன்னர், மையப் பணவீக்கமும் மெதுவான வேகத்திலேயே விரைவடைந்தது. மையப் பணவீக்கத்தின் அதிகரிப்பிற்கு கடந்த காலத்தில் நாணயத் தளர்வின் பிந்திய தாக்கத்திலிருந்து தோற்றம்பெறுகின்ற வலுவடைந்த கேள்வி அத்துடன் உணவகங்கள் மற்றும் விடுதிகள், நலம், கல்வி போன்ற உணவல்லா வகைகளின் விலைகளின் அதிகரிப்புடன் ஒன்றிணைந்து இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களின் விலை உயர்வுகள் என்பன பிரதான காரணமாக அமைந்திருக்கக்கூடும். கொ.நு.வி.சு., தே.நு.வி.சு. இரண்டினதும் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம், 2022 செத்தெம்பரில் அவற்றின் உச்ச மட்டங்களுக்கு உயர்வடைந்ததுடன் அதன் பின்னர் மிதமடைந்தன. பணவீக்க வேகக் குறைப்பின் பாரியளவான பாகம் மையப் பணவீக்கத்தை அளவிடுவதில் உள்ளடக்கப்படாத தளம்பல்மிக்க உணவு மற்றும் சக்தி கூறுகளுக்கு சாட்டப்பட்டிருந்தமையினால் மையப் பணவீக்கம் மெதுவடைதல் வேகமானது முதன்மைப் பணவீக்கம்

வரைபடம் 7.5
ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (அ)



(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது 2023 பெப்புருவரியின் தரவு வெளியீட்டிலிருந்து புதிய தள ஆண்டுடன் 2021 = 100 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களை வெளியிடத் தொடங்கியதுடன் பழைய தள ஆண்டான 2013 = 100 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வெளியீட்டினை இடைநிறுத்தியது. இதற்கமைய, வரைபடங்களில் 2023 சனவரியில் ஆரம்பிக்கின்ற தரவுகள் புதிய தள ஆண்டுடனான தொடர்களின் 2021 = 100 இன் அடிப்படையிலமைந்துள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 7.2

பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டுக்காண்டு)

சதவீதம்

		2013 = 100						2021 = 100	
		திசெ - 17	திசெ - 18	திசெ - 19	திசெ - 20	திசெ - 21	திசெ - 22	சன - 23	பெப் - 23
முதன்மை பணவீக்கம்	கொ.நு.வி.சு.	7.1	2.8	4.8	4.2	12.1	57.2	51.7	50.6
	உணவு பணவீக்கம்	14.4	-1.5	6.3	9.2	22.1	64.4	60.0	54.4
	உணவல்லா பணவீக்கம்	4.2	4.8	4.3	2.0	7.5	53.4	47.9	48.8
	தே.நு.வி.சு.	7.3	0.4	6.2	4.6	14.0	59.2	53.2	53.6
	உணவு பணவீக்கம்	12.8	-4.5	8.6	7.5	21.5	59.3	53.6	49.0
	உணவல்லா பணவீக்கம்	2.9	4.7	4.2	2.2	7.6	59.0	52.9	57.4
மைய பணவீக்கம்	கொ.நு.வி.சு.	4.3	3.1	4.8	3.5	8.3	47.7	45.6	43.6
	தே.நு.வி.சு.	2.7	3.1	5.2	4.7	10.8	57.5	52.0	50.1

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

மெதுவடைதல் வேகத்தை விடவும் மெதுவானதாகவிருந்தது. நாணயக் கொள்கை இறுக்கமடைவதின் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட கேள்வியானது மையப் பணவீக்கத்தின் மெதுவடைவிற்கான பிரதான பங்களிப்பாளராக காணப்பட்டது. கொ.நு.வி.சு. (2013=100) அடிப்படையிலமைந்த ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம், 2022 இறுதியளவில் 47.7 சதவீதத்திற்கு மிதமடைவதற்கு முன்னர் 2021 இறுதியின் 8.3 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 50.2 சதவீதத்திற்கு விரைவடைந்தது. கொ.நு.வி.சு. (2013=100) அடிப்படையிலான ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமானது 2021இன் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 34.6 சதவீதமாகப் பதிவாகியது. தே.நு.வி.சு. (2013=100) அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமும் (ஆண்டுக்காண்டு) 2021 இறுதியின் 10.8 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 64.1 சதவீதத்திற்கு விரைவடைந்து, 2022 இறுதியளவில் 57.5 சதவீதத்திற்கு மிதமடைந்தது. தே.நு.வி.சு. (2013=100) அடிப்படையிலமைந்த ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2021இன் 5.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் 43.9 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. கொ.நு.வி.சு. (2021=100) அடிப்படையிலமைந்த ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 43.6 சதவீதத்திற்கு வேகம் குறைந்த அதேவேளை தே.நு.வி.சு. (2021=100) அடிப்படையிலமைந்த ஆண்டுக்காண்டு மையப் பணவீக்கம் 2023 பெப்புருவரியில் 50.1 சதவீதமாகக் காணப்பட்டமையினால் முதன்மைப் பணவீக்கத்தை ஒத்தாற்போன்று, மையப் பணவீக்கமும் 2023 ஆரம்ப காலப்பகுதியில் தொடர்ந்தும் கீழ்நோக்கிய போக்கில் சென்றது.


பணவீக்க எதிர்பார்க்கைகள் உயர்வடைந்து காணப்பட்டமைக்கு மத்தியிலும் உண்மையான பணவீக்கத்தின் போக்கினையே பரந்தளவில் பின்பற்றின. அனேகமாக கடந்தகால தரவுகளின் அடிப்படையில் எதிர்கால விளைவுகளை எதிர்வுகூறும் தன்மையாகவிருந்த நிறுவன மற்றும் வீட்டுத் துறைகள் இரண்டினதும் அண்மைய கால பணவீக்க எதிர்பார்க்கைகளின் போக்கு 2022இல் பரந்தளவில் ஒத்ததாகவே காணப்பட்டன. உண்மைப் பணவீக்கத்தில் வேகக் குறைவிற்கு இசைவாக அண்மைய மாதங்களில் அனைத்துக் காலங்களுக்கிடையிலும் எதிர்பார்க்கைகளின் கீழ்நோக்கிய மாறுதலொன்று அவதானிக்கப்பட்டது. கணக்கெடுப்பில் வழங்கப்பட்ட பதில்களின் பிரகாரம் வரவிருக்கும் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் பணவீக்க மிதமடைதலுக்கு உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகள், இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், உலகளாவிய பண்ட விலைகளில் எதிர்பார்க்கப்படும் தளர்வு, வருமான மட்டங்களில் குறைவு, இறுக்கமான நாணய நிலைமைகள் என்பன பிரதான காரணமாகங்களாக அமையக் கூடும்.

7.4 வட்டி வீத அசைவுகள்

சந்தைத் திரவத்தன்மையும் குறுங்கால வட்டி வீதங்களும்

உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மையானது ஆண்டின் இறுதியை நோக்கி படிப்படியாக மேம்படுவதற்கு முன்னர் 2022இன் முதலரைக் காலப்பகுதியில் பாரிய பற்றாக்குறை மட்டங்களிலேயே காணப்பட்டது. 2022 செத்தெம்பரில் நியதி ஒதுக்கு விகிதத்தில் மேல்நோக்கிய சீராக்கத்தைத் தொடர்ந்து எதிர்மறையான மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்த உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மையானது உயர்வான பணவீக்க வீதங்களுக்கு மத்தியில் இறுக்கமான நாணய நிலைமைகளை பேணுவதற்கான தேவையினைப் பிரதிபலித்து எதிர்மறையான மட்டங்களில் காணப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. பணச் சந்தையில் அத்தகைய பாரிய எதிர்மறையான திரவத்தன்மைக்கு பங்களித்த முக்கிய காரணிகளுக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியை வசதிப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வரைவதன் மூலம் அரசாங்கத்தின் தேறிய வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள், வங்கித் தொழில் முறைமையிலிருந்து

வரைபடம் 7.6
உள்நாட்டு பணச்சந்தையில் ரூபாயின் திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் (அ)



(அ) வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச் சந்தை தொழில்புரியாத நாட்களில் சராசரி நிறைவேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் கிடைக்கப்பெறவில்லை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

பொதுமக்களின் தேறிய நாணய மீளெடுப்பனவுகள், உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணயக் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் முதிர்வுகள் என்பன உள்ளடங்கியிருந்தன. 2022 மே தொடக்கம் உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மையில் படிப்படியான மேம்பாட்டுக்கு பங்களித்த காரணிகளில் மத்திய வங்கி மூலமான அரசாங்க பிணையங்களின் முதனிலைக் கொள்வனவின் தாக்கம், உயர்வான வைப்பு வட்டி வீதங்கள் மூலம் வங்கித் தொழில் முறைமைக்கான நாணய வைப்புகளில் அதிகரிப்பு அத்துடன் சில வங்கிகளின் குறிப்பிடத்தக்க திரவத்தன்மை தடைகளைத் தீர்ப்பதற்கு காலத்திற்குக் காலம் நடாத்தப்பட்ட நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்த ஏலங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. அதற்கமைய, உள்நாட்டுப் பணச்சந்தையின் நாளாந்த சராசரி திரவத்தன்மை 2022 இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஏறத்தாழ ரூ.279 பில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றுடன் ஒப்பிடுகையில் 2022 முதலரைக் காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ.531 பில்லியன் கொண்ட பாரிய நாளாந்த சராசரி பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்தது. எனினும், பணச் சந்தைத் திரவத்தன்மையின் பரம்பலானது சில உள்நாட்டு வங்கிகள் குறிப்பாக அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கிகள் அரசாங்கத்துடன் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுடனும் அவற்றின் கொடுக்கல்வாங்கல்களை பிரதிபலித்து குறிப்பிடத்தக்க திரவத்தன்மைப் பற்றாக்குறையினை பதிவுசெய்த அதேவேளை, வெளிநாட்டு வங்கிகள் பாரியளவு திரவத்தன்மை மிகையினைப் பேணி பாரியளவான சமச்சீரற்ற தன்மையினை எடுத்துக்காட்டி அரசாங்கத்தின் கடன் அளவு மீது முன்மதிமிக்க இடர்நேர்வு கரிசனையினைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக, பல உரிமம்பெற்ற வங்கிகள், வங்கிகளுக்கிடையிலான சந்தையில் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளாது மத்திய வங்கியின் துணைநில் வசதிகள் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தன. உரிமம்பெற்ற வங்கிகளின் துணையளிக்கின்ற ஓரிரவு திரவத்தன்மை கரிசனைகளைத் தீர்க்கும் நோக்குடன், மத்திய வங்கியானது 2023[1] சனவரி நடுப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் துணைநில் வசதிகளை உபயோகிப்பதன் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தீர்மானித்தது. இவ்வொழுங்குபடுத்தல் வழிமுறைகள் மற்றும் தேவையுடைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கு திரவத்தன்மையை வழங்குவதற்கான ஒரே சமயத்திலான நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்த ஏலங்கள் மற்றும் ஏனைய குறைநிரப்பு வசதிகள் என்பவற்றின் பயன்பாட்டினைத் தொடர்ந்து ஓரிரவு உள்நாட்டு நாணயச் சந்தைத் திரவத்தன்மையில் குறிப்பிடத்தக்களவு மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் 16 மாதங்களுக்குப் பின்னர் 2023 சனவரி நடுப்பகுதியில் உள்நாட்டுப் பணச்சந்தைத் திரவத்தன்மை மிகையொன்றுக்குத் திரும்பியது. இதனைத் தொடர்ந்து, உள்நாட்டுப் பணச்சந்தையின் ஓரிரவு திரவத்தன்மையானது தளம்பல்மிக்கதாக இருந்ததுடன் மிகைத் திரவத்தன்மையினைக் கொண்ட வங்கிகளின் துணைநில் வைப்பு வசதியின் பயன்பாட்டின் தாக்கத்தினைப் பிரதானமாக பிரதிபலித்தது. அதேவேளை, உள்நாட்டுப் பணச்சந்தையின் ரூபா திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவு மேம்பட்டமைக்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் மேம்படுதலைத் தொடர்ந்து மத்திய வங்கி மூலமான வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மிதமடைந்தமை மற்றும் இலங்கை மத்திய வங்கி குறிப்பாக 2023 தொடக்கம் மேற்கொண்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பன முதன்மைக் காரணங்களாக அமைந்தன. அதற்கமைய, சராசரி ஓரிரவு திரவத்தன்மைப் பற்றாக்குறை, 2023இன் முதற் காலாண்டுப் பகுதியில் ஏற்றத்தாள ரூ.72 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளுக்கும் தொடர்ச்சியான இறுக்கமான நாணயக் கொள்கைகளுக்கும் பதிலிறுத்தி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது துணைநில் வீத வீச்சின் மேல் எல்லைக்கு அண்மித்து காணப்பட்டது. 2022இன் தொடக்கத்தில் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையை அண்மித்திருந்த சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது பிரதானமாக வங்கித்தொழில் முறைமையில் தொடர்ச்சியான பாரிய திரவத்தன்மை பற்றாக்குறையின் காரணமாக துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையினைத் தொட்டது. 2022 யூலையில் கொள்கை வட்டி வீத சீராக்கத்தைதத் தொடர்ந்து அனேகமான காலங்களுக்கு சந்தை


1 2023 சனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் துணைநில் வைப்பு வசதி (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மிகையான திரவத்தன்மையினை நிறுத்தவதற்கு இயலச்செய்கின்ற ஓரிரவு வைப்பு வசதி) நாட்காட்டி மாதமொன்றுக்கு குறைந்தபட்சம் ஐந்து (5) தடவைகள் என மட்டுப்படுத்தப்பட்டன. அதேவேளை, நாளின் இறுதியில் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளின் ஏதேனும் மேலதிக பற்றாக்குறையினை நிறைவுசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படுகின்ற பிணையஉறுதியளிக்கப்படுகின்ற வசதியான துணைநில் கடன் வழங்கல் வசதியும் தரப்பட்ட ஏதேனும் நாளில் ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

செயற்பாடற்று காணப்பட்டமையுடன் 2022 ஏப்பிறலிலிருந்து தொடங்கி வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையின் நடவடிக்கை படிப்படியான குறைவொன்றினை அனுபவித்தது. வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையின் மந்தமான செயற்பாட்டிற்கு சமச்சீரற்ற திரவத்தன்மைப் பரம்பல் மற்றும் வெளிநாட்டு வங்கிகள் மூலமான இணைத்தரப்பு வரையறைகள் போன்ற முன்மதிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவக் கரிசனைகள் என்பவற்றிற்கு மத்தியில் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு கரிசனைகளிலிருந்து தோன்றிய சந்தை நிச்சயமற்றதன்மை பிரதான காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை கிரமமாக நடாத்துதல் மற்றும் அதனைத் தொடர்ந்து துணைநில் வசதிகளைப் பயன்படுத்துவதன் மீதான கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் மூலம் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் செயற்பாடுகள் படிப்படியாக மீளத் தொடங்குதல் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2023 சனவரி நடுப்பகுதியிலிருந்து தொடங்கி துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையிலிருந்து சிறிதளவான குறைவொன்றினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, 2022 காலப்பகுதியில் கொள்கை வட்டி வீதங்களில் 9.50 சதவீத புள்ளிகளைக் கொண்ட திரண்ட சீராக்கத்திற்குப் பதிலிறுத்தி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2022 காலப்பகுதியில் 9.55 சதவீதப் புள்ளிகளால் உயர்வடைந்தது. அதேவேளை, 2023 மார்ச்சின் 100 அடிப்படைப் புள்ளிகளினால் கொள்கை வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டதன் மூலம் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2023 மார்ச்சு 07 அன்று 16.46 சதவீதத்திற்கு அதிகரித்து 2023 மார்ச்சு இறுதியளவில் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லைக்கு அண்மித்துக் காணப்பட்டது.

அரச பிணையங்கள் மீதான விளைவுகள்

உயர்வடைகின்ற விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி மூலமான கொள்கை வட்டி வீதங்களின் அதிகரிப்புடன் சேர்த்து, உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புப் பற்றிய கரிசனைகள் மற்றும் அரசாங்கத்தின் கணிசமாக உயர்வான கடன்பெறுதல் தேவைப்பாடு என்பவற்றிற்கு மத்தியில் அதிகரித்த இடர்நேர்வுக் கரிசனைகளை பிரதிபலித்து, 2022 காலப்பகுதியில் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி, உள்நாட்டு படுகடன் மறுசீரமைப்புப் பற்றிய தீவிரமடைந்த கரிசனைகள் என்பன காரணமாக உள்நாட்டு சந்தை மூலங்கள் மீது அரசாங்கம் தொடர்ச்சியாகத் தங்கியிருந்தமையினால் குறைவடைந்திருந்த சந்தை எண்ணப்பாங்குகளினால் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு

வரைபடம் 7.7
முதலாந்தரச் சந்தையின் திறைசேரி உண்டியல் விளைவுகள் (அ)




(அ) ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படாமை அல்லது தொடர்பான முதிர்வுக்காலங்களில் வழங்கப்படாமை போன்றவற்றால் சில வரங்களிற்கான விளைவு வீதங்களின் விபரம் கிடைக்கப்பெறவில்லை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தது. கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வு அவதானிக்கப்பட்ட அதேவேளை, ஏனைய சந்தை வட்டி வீதங்கள், அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளின் அசைவுகளுக்கேற்ப உயர்வடைந்தன. முதனிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் 2022 ஆண்டு காலப்பகுதியில் கொள்கை வட்டி வீதங்களின் 9.50 சதவீதப் புள்ளிகள் அதிகரிப்பிற்கெதிராக ஆண்டு காலப்பகுதியில் அனைத்துக் காலங்களுக்கிடையிலும் ஏறத்தாழ 22.30-25.00 சதவீதப் புள்ளிகளால் அவற்றின் உச்ச மட்டங்கள் வரையும் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடு இறுதிப்படுத்தப்படுமென்ற எதிர்பார்ப்புடன் முதலீட்டாளர் எண்ணப்பாங்கு மேம்பட்டதால் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளில் 2022இன் இறுதி மற்றும் 2023 ஆரம்ப காலப்பகுதியை நோக்கி குறிப்பிடத்தக்களவு மிதமடைதல் அவதானிக்கப்பட்டது. துணைநில் வசதிகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்களூடாக திரவத்தன்மையை உட்செலுத்தல் அத்துடன் மத்திய வங்கி மூலமான ஏனைய திரவத்தன்மை வழங்கும் வசதிகள் என்பன உள்ளடங்கலாக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் காரணமாக உள்நாட்டுப் பணச்சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகள், அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளின் வீழ்ச்சிக்குத் துணையளித்தன. அதற்கமைய, 2022 செத்தெம்பர் ஆரம்பப் பகுதியில் 364 நாள் முதிர்ச்சிக்கான முதனிலை சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் உச்சமடைந்ததுடன் 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்ச்சிகளுக்கானவை 2022 நவெம்பர் நடுப்பகுதியில் உச்சமடைந்தன. அதன்படி, திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள், 2023 பெப்புருவரி இறுதியில் அனைத்துக் காலங்களுக்கும் அவற்றின் உச்ச மட்டங்களிலிருந்து ஏறத்தாழ 2.80-3.90 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுப்

வரைபடம் 7.8
அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி



படுகடன் மறுசீரமைப்பு கரிசனைகள் காரணமாக மிகக் குறுகிய முதிர்ச்சியை நோக்கிய அதிகரித்த சந்தை நாட்டம் அவதானிக்கப்பட்ட போதிலும் திறைசேரி உண்டியல்களுக்கான சந்தை நாட்டம் பரந்தளவில் உறுதியாகக் காணப்பட்டது. எனினும், மேம்பட்ட சந்தை எண்ணப்பாங்குகள் காரணமாக 2022இன் பிந்திய பகுதியிலும் 2023 ஆரம்ப காலத்திலும் அனைத்துக் காலப்பகுதிகளுக்குமான நாட்டத்தின் படிப்படியான மேம்பாடு அவதானிக்கப்பட்டது. அதேவேளை, திறைசேரி முறிகள் மீதான விளைவு வீதங்கள் 2022 சனவரி தொடக்கம் நவெம்பர் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் முதனிலைச் சந்தை விளைவுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையுடன் திறைசேரி உண்டியலில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து பின்னர் மிதமடைந்தது. திறைசேரி உண்டியல்களைப் போலன்றி உயர்வான விளைவுகளுடன் கூடிய நீண்டகால திறைசேரி முறிகளுக்கான சந்தை நாட்டம் அதிகமாகவிருந்தது. முதனிலை சந்தை விளைவுகளுக்கேற்ப அரசாங்கப் பிணையங்கள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவுகளும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த போதிலும், முதனிலைச் சந்தையில் அவதானிக்கப்பட்ட போக்கினைப் பின்பற்றி அதன்பின்னர் தளர்வடைந்தன.

வைப்பு மற்றும் கடன்வழங்கல் வட்டி வீதங்கள்

மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமாக்குதல் வழிமுறைகளின் ஊடுகடத்தலையும் உள்நாட்டுப் பணச்சந்தையில் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளையும் பிரதிபலித்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் வைப்பு வட்டி வீதங்கள், 2022இல் கணிசமாக அதிகரித்தன. மத்திய வங்கியினால் கணிசமாக அதிகரிக்கப்பட்ட கொள்கை வட்டி வீதங்கள் அதிகரித்த இடர்நேர்வு கரிசனையால் தூண்டப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளின் ஏற்றம் மற்றும் ஏற்கனவே காணப்படுகின்ற வைப்புக்களைத் தக்கவைப்பதற்கும் புதிய வைப்புகளை ஊக்குவிப்பதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் போட்டியினைத் தீவிரப்படுத்திய உள்நாட்டுப் பணச்சந்தையின் பாரிய அத்துடன் விடாப்பிடியான திரவத்தன்மைப் பற்றாக்குறை என்பன வைப்பு வட்டி வீதங்களை சடுதியாக மேல்நோக்கி சீர்ப்படுத்துவதற்கு வழிவகுத்தன. உள்நாட்டுப் பணச் சந்தையில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மை இறுக்க நிலைக்கு மத்தியில், வங்கிகள் குறிப்பாக குறுகிய சாதனங்களை காலப்பகுதிகளுக்காக உயர்வான வட்டிவீதங்களுடன் கூடிய புதிய வைப்பு உற்பத்திகளை வழங்கின. மேலும், அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளில் பாரிய அதிகரிப்பு வைப்பு வட்டி வீதங்கள் மீது மேல்நோக்கிய அழுத்தங்களை ஏற்படுத்தின. இம்முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, 2022 திசெம்பர் இறுதியளவில் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்[2] 14.06 சதவீதத்தினை எட்டி 1991இலிருந்து அதியுயர்வான மட்டத்தைப் பதிவுசெய்தது. சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமும்[3] இதனையொத்த போக்கினையே பின்பற்றிச் சென்றது. மேலும், சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம்[4] மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம்[5] என்பன 2022 நவெம்பரில் அவற்றின் அதிகூடிய மட்டங்களுக்கான உயர்வினைப் பதிவுசெய்து முறையே 23.63 சதவீதத்திற்கும் 24.05 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. அதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்தினாலும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதத்தினாலும் அளவிடப்படுகின்றவாறான புதிய வைப்புகளுக்காக வழங்கப்படுகின்ற வட்டி வீதங்கள், 2022 காலப்பகுதியில் 9.50 சதவீதப் புள்ளிகளால் கொள்கை வட்டி வீதங்களின் அதிகரிப்பிற்கு விகிதசமமற்று 2022 சனவரி-நவெம்பர் காலப்பகுதியில் ஏறத்தாழ 17 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்து. 2022இல் சந்தை வைப்பு வட்டி வீதங்களில் மிகையான மேல்நோக்கிய சீராக்கத்தினையும் அத்துடன் அதன் விளைவான சந்தை கடன்வழங்கல் மீதான தாக்கத்தினையும் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது வைப்புகளைத் திரட்டுவதில் ஆரோக்கியமற்ற போட்டியினை இல்லாதொழிப்பதற்கான தேவை பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அழுத்தம்கொடுத்த அதேவேளை, உள்நாட்டுப் பணச்சந்தையில் குறிப்பாக 2022இன் பிந்திய பகுதியில் திரவத்தன்மையை மேம்படுத்துவதற்கு வழிவகைகளை எடுத்தது. 2022இன் இறுதியை நோக்கி மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளின் தாக்கத்தைப் பிரதிபலித்து, சந்தை வைப்பு வட்டி வீதங்கள் மிதமடையத் தொடங்கின. மேலும், 2023இன்


2 சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்படும் வட்டியைக் கொண்டிருக்கின்ற அனைத்து செலுத்தவேண்டிய ரூபாய் வைப்புகள் தொடர்பில் வட்டி வீதங்களில் அசைவுகளைப் பிரதிபலிக்கின்றது.

3 சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்படும் வட்டியைக் கொண்டிருக்கின்ற அனைத்து செலுத்தவேண்டிய ரூபாய் நிலையான வைப்புகள் தொடர்பில் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

4 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதமானது குறித்த ஒரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளினால் திரட்டப்பட்ட வட்டியைக் கொண்டிருக்கின்ற அனைத்துப் புதிய ரூபா வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

5 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதமானது குறித்த ஒரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளினால் திரட்டப்பட்ட வட்டியைக் கொண்டிருக்கின்ற அனைத்துப் புதிய ரூபா நிலையான வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

வரைபடம் 7.9
தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 7.3
வட்டி வீதங்களின் அசைவுகள்

ஆண்டுக்கு சதவீதம்

வட்டி வீதம்	2021 முடிவில்	2022 முடிவில்	சதவீதப் புள்ளிகளில் மாற்றம்
கொள்கை வட்டி வீதங்கள்			
துணைநில் வைப்பு வசதி வீதம்	5.00	14.50	9.50
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்	6.00	15.50	9.50
சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்	5.95	15.50	9.55
அரச பிணையங்களின் மீதான விளைவு வீதம்			
முதலாந்தரச் சந்தை (அ)			
திறைசேரி உண்டியல்கள்			
91-நாள்	8.16	32.64	24.48
182-நாள்	8.33	32.20	23.87
364-நாள்	8.24	29.27	21.03
திறைசேரி முறிகள்			
2-ஆண்டு	9.16 (ஆ)	33.01 (இ)	23.85
3-ஆண்டு	9.70 (ஆ)	31.36 (இ)	21.66
4-ஆண்டு	8.55 (ஆ)	-	-
5-ஆண்டு	11.14 (ஆ)	31.78 (இ)	20.64
10-ஆண்டு	8.86 (ஆ)	30.86 (இ)	22.00
இரண்டாந்தரச் சந்தை			
திறைசேரி உண்டியல்கள்			
91-நாள்	7.77	30.75	22.98
182-நாள்	8.07	29.50	21.43
364-நாள்	8.22	28.39	20.17
திறைசேரி முறிகள்			
2-ஆண்டு	8.58	28.19	19.61
3-ஆண்டு	9.55	28.32	18.77
4-ஆண்டு	10.38	27.60	17.22
5-ஆண்டு	10.66	26.78	16.12
10-ஆண்டு	11.71	26.18	14.47
வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்			
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் *(உ)*			
சேமிப்பு வைப்புக்கள்	0.05-6.35	0.25-6.00	-
ஒரு வருட நிலையான வைப்புக்கள் (உ)	0.15-15.00	4.50-30.00	-
சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (ஊ)	4.94	14.06	9.12
சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் (ஊ)	5.94	18.49	12.55
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் (ஊ)	6.45	23.07	16.62
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் (ஊ)	6.67	23.73	17.06
ஏனைய நிதி நிறுவனங்கள் (எ)			
தேசிய சேமிப்பு வங்கி			
சேமிப்பு வைப்புக்கள்	3.50	3.00	-0.50
ஒரு வருட நிலையான வைப்புக்கள்	5.50	12.00	6.50
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ)			
சேமிப்பு வைப்புக்கள்	3.46-4.69(ஐ)	4.63-8.03	-
ஒரு வருட நிலையான வைப்புக்கள்	9.02-10.13	20.48-27.15	-
கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள்			
உரிமம் பெற்ற வங்கிகள் (ஒ)			
ராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன் வழங்கல் வீதம்	10.49	20.73	10.24
ராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன் வழங்கல் வீதம்	10.04	26.91	16.87
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (ச)			
சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் (மாதாந்த)	8.33	28.19	19.86
சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம்	9.87	18.70	8.83
சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம்	9.48	26.20	16.72
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்			
தேசிய சேமிப்பு வங்கி	7.50-11.50	28.00-32.00	-
அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி (ஒ)	7.50-12.50	18.00-27.25	-
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (ஏ)			
நிதிக்குத்தகை	12.77-28.33	21.53-35.37	-
வாடகைக் கொள்வனவு	11.08-27.00	16.94-38.28	-
அசையாச் சொத்துக்களுக்கு எதிரான கடன்கள்	15.29-16.77(ஐ)	26.80-28.43	-
வெளிநாட்டு நாணய வைப்புக்கான வட்டி வீதங்கள் (ஓ)			
சேமிப்பு வைப்புக்கள் (ஐக்கிய அமெரிக்க டொலர்)	0.03-4.60	0.10-7.77	-
சேமிப்பு வைப்புக்கள் (பிரித்தானிய பவுன்)	0.03-3.00	0.20-4.83	-
நிலையான வைப்புக்கள் (ஐக்கிய அமெரிக்க டொலர்)	0.02-7.00	0.02-11.50	-
நிலையான வைப்புக்கள் (பிரித்தானிய பவுன்)	0.02-5.75	0.02-7.00	-
கம்பனிப் படுகடன் சந்தை			
தொகுதிக்கடன்கள்	8.00-12.00	15.42-28.00	-
வர்த்தகப் பத்திரம்	6.00-12.00	11.00-36.00	-

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஏலத்தில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்.
(ஆ) 2021இல் இறுதியான முதலாந்தர ஏலம்: 2 ஆண்டு - 11 நவ, 3 ஆண்டு - 13 திசெ, 4 ஆண்டு - 30 ஒக, 5 ஆண்டு - 12 ஒக், 10 ஆண்டு - 29 யூலை
(இ) 2022இல் இறுதியான முதலாந்தர ஏலம்: 2 ஆண்டு - 13 திசெ, 3 ஆண்டு - 29 திசெ, 5 ஆண்டு - 28 ஒக, 10 ஆண்டு - 11 நவ
(உ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் குறிந்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) உயர்த்தப்பட்ச வீதமானது குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்த வங்கிகளால் வழங்கப்பட்ட சிறப்பு வீதமாகும்.
2018 யூலையிலிருந்து அரசினால் வழங்கப்பட்ட மூத்த பிரஜைகளுக்கான சிறப்பு வைப்பு வட்டி வீதத்தின் தாக்கத்தினை நீக்குவதற்காக சிறப்பு வட்டி வீதமான 15 சதவீதத்திற்குப் பதிலாக தொடர்புடைய சந்தை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி சாதி.வை. வீதமும் சாதி.நி.வை வீதமும் கணிப்பிடப்பட்டுள்ளது. 2018 யூலையிருந்து சாதி.புவை வீதத்தையும் சாதி.புநி.வை வீதத்தையும் கணிப்பிடுவதற்கு இதேமுறை பிரயோகிக்கப்பட்டுள்ளது.
(எ) ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் குறிந்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) தொடர்புடைய மாதங்களுக்காகத் திரட்டப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் குறிக்கப்பட்ட சராசரி உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்களை அடிப்படையாகக் கொண்டது. 2022 இற்கான தரவு தற்காலிகமானது.
(ஐ) திருத்தப்பட்டது
(ஒ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாக கொண்டது.
(ஓ) வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன் வழங்கல் மட்டும்.
(ஔ) வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளால் குறிக்கப்பட்ட உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆரம்பப் பகுதியில் வங்கிகளுக்கிடையே சந்தையை செயற்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் உள்நாட்டுப் பணச்சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்துவதற்கு உதவின. இதன் மூலமும், மற்றும் குறிப்பாக 2023 சனவரியிலிருந்து அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்க மிதமடைதலுடனும் சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைகின்ற போக்கு எதிர்வருகின்ற காலப்பகுதியிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.


இறுக்கமான நாணய மற்றும் திரவத்தன்மை நிலைமைகளுக்கு பதிலிறுத்தி சந்தைக் கடன்வழங்கள் வட்டி வீதங்களும் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, சில கடன்வழங்கல் வட்டி வீதங்கள் 2022 இறுதியை நோக்கி மிதமடையத் தொடங்கின. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களில் எதிர்பாராத அதிகரிப்பு, வைப்பு வட்டி வீதங்களை உயர்வடையச்செய்த உள்நாட்டுப் பணச்சந்தையில் கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறை, பொருளாதார நடவடிக்கை சுருக்கமடைந்ததற்கு மத்தியில் உயர்வடைந்த கொடுகடன் இடர்நேர்வு விலையிடல், அத்துடன் அரசாங்கப் பிணையங்கள் மீதான உயர்வடைந்த விளைவுகள் என்பன 2022இன் பதிவுகளுக்கமைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் உயர்விற்கு வழிவகுத்தன. 2022இல் சில சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் அதிகூடிய மட்டங்களை அண்மித்து காணப்பட்டன. சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம்[6] 2022 இறுதியளவில் ஏறத்தாழ 9 சதவீதப் புள்ளிகளால் 18.70 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம்[7] 2022 திசெம்பரில் 26.20 சதவீதத்தைக் கொண்ட

6 சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதமானது உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்து செலுத்தவேண்டிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

7 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதமானது குறித்த ஒரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்துப் புதிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களைப் பதிவுசெய்தது.

வரலாற்றிலேயே உயர்வான பெறுமதியினைப் பதிவுசெய்து 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 17 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தது. அதேவேளை, முதன்மை வாடிக்கையாளர்களுக்கான கடன்வழங்கல் வட்டி வீதமான மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம்[8] அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளை நெருக்கமாகப் பின்பற்றி 2022 நவெம்பரில் 28.25 சதவீதத்தில் உச்சத்தை எட்டி ஏனைய கடன்வழங்கல் வட்டி வீதங்களையும் விஞ்சியது. இறுக்கமான நாணய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, கடனட்டை முற்பணங்கள், முன்கூட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுகள் மற்றும் அடகு முற்பணங்கள் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் 2022 ஏப்பிறலில் இரத்துச்செய்யப்பட்டு இக்கடன்வழங்கல் சாதனங்களுக்கு ஏற்புடைய வட்டி வீதங்களை ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களுக்கு இசைவாக அதிகரிப்பதற்கு இயலச்செய்யப்பட்டது. சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கொடுகடன் கணக்கெடுப்பில்[9] அளவிடப்பட்டவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்கள் மீதான சராசரி வட்டி வீதங்களும், சேர்க்கப்பட்ட இடர்நேர்வுக் கரிசனைகளுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் ஒட்டுமொத்த சராசரி கடன்வழங்கல் வீதங்களின் போக்கினை பரந்தளவில் பின்பற்றியிருந்தது. அதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கள் வீதம்[10] மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதம்[11] 2022 காலப்பகுதியில் ஏறத்தாழ முறையே 10 மற்றும் 17 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தன. எனினும், 2022 இறுதியில் சந்தைத் திரவத்தன்மையில் மேம்படுத்தல்களுடனும் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய மாறுதல்களுடனும் 2022 இறுதியளவில் சில சந்தை கடன்வழங்கல் வீதங்கள் மிதமடையும் சமிஞ்சைகளைக் காண்பித்தன. குறிப்பாக, மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் 2023 சனவரி - பெப்புருவரி காலப்பகுதியில் 348 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய அசைவுகளும் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றன.

வரைபடம் 7.10
பிணை வகைகளின்படி சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் (%)



மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற வட்டியின் சட்ட வீதமும் சந்தை வீதமும்[12] 2022இன் ஆண்டுக்கு 7.48 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் ஆண்டுக்கு 16.97 சதவீதமாக நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டது. 2023இற்கான சட்ட வீதமும் சந்தை வீதமும் நிலவுகின்ற சந்தை வட்டி வீதங்களை[13] பிரதிபலிக்கும் நோக்குடன் திசெம்பருக்கு முந்திய 6 மாத காலப்பகுதியில் (அதாவது 2022 யூன் தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதிக்கான) நிலவிய உரிமம்பெற்ற வங்கிகளின் மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதத்தின் எளிய சராசரிகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டது.

வெளிநாட்டு நாணய வைப்புகள் மீதான வட்டி வீதங்கள்

வெளிநாட்டு நாணய வைப்புகள் மீதான வட்டி வீதங்கள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மைப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் உலகளாவிய நிதியியல் நிலைமைகள் இறுக்கமடைதல், உயர்வடைந்த நாட்டுக்கான இடர்நேர்வுக் கரிசனைகள் அதேபோன்று வெளிநாட்டு நாணய வைப்புகளைத் திரட்டுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் அதிகரித்த போட்டி என்பவற்றைப் பிரதிபலித்து 2022இல் சடுதியான மேல்நோக்கிய சீராக்கமொன்றைப் பதிவுசெய்தது. உயர்வடைகின்ற

8 சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமானது குறித்த ஒரு வார காலப்பகுதியில் தமது முதன்மை வாடிக்கையாளர்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட குறுகிய கால ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு ஏற்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

9 மாதாந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கொடுகடன் அளவீட்டிற்காக ரூ.1 பில்லியனை விஞ்சாத வருடாந்த புரள்வுடனும் 300 இற்கும் குறைவான ஊழியர்களை தொழிலுக்கமர்த்துவதுடனும் கூடிய தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதைப் பரிசீலிக்குமாறு வங்கிகள் வேண்டப்பட்டுள்ளன.

10 சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வீதமானது அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் மீள் நிதியளித்தல் திட்டங்கள் நீங்கலாக சிறிய, நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்து செலுத்தவேண்டிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களினதும் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டது.

11 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன் வழங்கல் வீதமானது அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் மீள் நிதியளித்தல் திட்டங்கள் நீங்கலாக சிறிய, நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு குறித்த ஒரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்து புதிய ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை பதிவுசெய்கிறது.

12 சட்ட வீதம் என்பது 1990 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க சிவில் நடவடிக்கை முறைக் கோவை (திருத்தம்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதுடன் பணத்தொகையினை அறவிடுவதற்கான ஏதேனும் நடவடிக்கைக்கு ஏற்புடையதாகும். சந்தை வீதம் என்பது 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க படுகடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இணங்கிய வட்டி வீதம் காணப்படாதவிடத்து வர்த்தக ரீதியாக கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற ரூ.150,000 தொகையை விஞ்சுகின்ற படுகடன் அறவீட்டுக்காக கடன்வழங்கும் நிறுவனங்களால் தொடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மாத்திரம் ஏற்புடையது.

13 2022 இல் நிலவிய உயர்வான வட்டி வீதக் கட்டமைப்பைக் கருத்திற்கொண்டு சட்ட வீதம் மற்றும் சந்தை வீதத்தின் கணிப்பு முறையானது திருத்தம்செய்யப்பட்டது. அதற்கமை 2023இற்கான வீதங்கள் 2022 நவெம்பரில் முடிவடைகின்ற 6 மாத காலப்பகுதியில் நிலவிய மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதத்தின் எளிய சராசரியின் கீழ் கணிக்கப்பட்டன.


உலகளாவிய பணவீக்கத்தை முறியடிப்பதற்கும் பணவீக்க எதிர்பார்க்கைகள் தளர்வடைவதைத் தவிர்க்கும் பொருட்டும் அனேகமாக முன்னேறிய நாடுகளிலுள்ள மத்திய வங்கிகள் இறுக்கமான நாணயக் கொள்கைகளைப் பின்பற்றியமை உலகின் அனேகமான பாகங்களில் நிதியியல் நிலைமைகளில் அதிகரித்த இறுக்கத்தைத் தோற்றுவித்தது. ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் இங்கிலாந்து வங்கி என்பன 2022 காலப்பகுதியில் அவற்றின் கொள்கை வட்டி வீதங்களை கணிசமாக அதிகரித்தன. அதேவேளை, குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் வங்கிகளுக்கிடையில் கடுமையான வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை பற்றாக்குறைக்கு பதிலிறுத்தி வெளிநாட்டு நாணய வைப்புகளைத் திரட்டுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்கின. 2021 ஓகத்திலிருந்து இறுக்கமான நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்பு சாதனங்கள் மீது சந்தை வட்டி வீதங்கள் மீதான தொடர்ச்சியான அதிகரிப்புடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி மூலம் வழங்கப்படும் வெளிநாட்டு நாணய வைப்பு வட்டி வீதங்கள் மீது விதிக்கப்பட்ட உச்சம் 2022 மார்ச்சில் அகற்றப்பட்டது. உலகளாவிய மற்றும் உள்நாட்டு சந்தை நிலைமைகள் இரண்டிற்கும் இசைவாக உரிமம்பெற்ற வங்கிகளில் வெளிநாட்டு நாணய வைப்புகள் மீதான வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கிய சீராக்கத்தை இது இயலச்செய்தது. அதற்கமைய, ஏனையவற்றிற்கு மத்தியில் ஐ.அ.டொலர் மற்றும் ஸ்ரேலிங் பவுண் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் அதிகரித்தன.

7.5 பணம் மற்றும் கொடுகடன் கூட்டுகளின் அசைவுகள்

ஒதுக்குப் பணம்

பொருளாதாரத்தின் நாணயத் தளமான ஒதுக்குப் பணமானது 2021 உடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தில் வளர்ச்சி மற்றும் மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பு என்பன மூலம் 2022 காலப்பகுதியில் குறிப்பாக ஆண்டின் பிந்திய பகுதியில் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உயர்வடைகின்ற பணவீக்கம் காரணமாக அதிகரித்த செலவிடல் தேவைப்பாடுகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசிய பண்டங்களின் வழங்கல் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் அவசரகால நோக்கங்களுக்காக பௌதீக ரீதியாக நாணயத்தை வைத்திருப்பதற்கான அதிகரித்த தெரிவு என்பவற்றிற்கு மத்தியில் நாணயத்திற்கான கொடுக்கல்வாங்கலுக்கான பொதுமக்களிடமிருந்து கேள்வி உயர்வடைந்தமையினால் 2022இன் முதலரைப் பகுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் உயர்வடைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க நாணய இறுக்கமாக்கலைத் தொடர்ந்து, 2022 இறுதியை நோக்கி சுற்றோட்டத்திலுள்ள நாணயம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து தொடர்ந்து அதிகரிக்கின்ற சந்தை வட்டி வீதங்களுக்கு மத்தியில் நாணயத்தை வைத்திருப்பதன் உயர்வான சந்தர்ப்பச் செலவினைப் பிரதிபலித்தது. அதற்கமைய, சுற்றோட்டத்திலுள்ள நாணயமானது 2021இல் பதிவாகிய ரூ.170.3 பில்லியன் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் 2020 காலப்பகுதியில் ரூ.156.8 பில்லியன் கொண்ட விரிவடைதல்களை விடவும் 2022 இறுதியளவில் ரூ.1,026.6 பில்லியனுக்கு ஆண்டு காலப்பகுதியில் ரூ.21.5 பில்லியனால் மிதமாக அதிகரித்தது. அதேவேளை, மத்திய வங்கியுடன் பேணப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்புகள் 2022 காலப்பகுதியில் மாற்றமின்றி காணப்பட்ட நியதி ஒதுக்கு விகிதத்தின் மூலம் ஆண்டு காலப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பினையே பதிவுசெய்தன. 2022 இறுதியளவில் மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்புகள் 2021இல் பதிவாகிய ரூ.171.1 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க விரிவடைதலுடன் ஒப்பிடுகையில் ரூ.322.8 பில்லியனுக்கு ரூ.22.1 பில்லியனால் அதிகரித்தன. அதற்கமைய, ஒதுக்குப் பணம், 2021இல் ஆண்டுக்காண்டு 35.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ரூ.1,349.4 பில்லியனுக்கு ஆண்டுக்காண்டு 3.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உண்மையான நியதிகளில், ஒதுக்குப் பணம் 2021இன் ரூ.341.4 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.43.6 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, 2023இன் தொடக்கத்திலிருந்து ஒதுக்குப் பண நிலுவைகளில் நாளாந்த அடிப்படையில் உயர்வான தளம்பல் அவதானிக்கப்பட்டு துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி என்பவற்றிற்கான பெறுவழியினை வசதிப்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூலம் இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வசதிகள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மிகையாக தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட நிருவாக வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலித்தது. அதற்கமைய, துணைநில் வைப்பு வசதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழியானது கிரமமற்ற இடைவெளிகளில் மத்திய வங்கியுடன் மிகையான ஒதுக்குகளை உரிமம்பெற்ற வங்கிகள் பேணுவதற்கு வழிவகுத்து நாளாந்த ஒதுக்குப் பண மீதிகளில் தளம்பலைத் தோற்றுவித்தது.

வரைபடம் 7.11
மத்திய வங்கியின் ஐந்தொகையின் பகுப்பாய்வு (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி


மத்திய வங்கியின் ஐந்தொகையின் சொத்துப்பக்கத்திலிருந்து நோக்குகையில் 2022 காலப்பகுதியில் ஒதுக்குப் பணம் விரிவடைதலுக்கு தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பும் அதேவேளை, தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியும் காரணமாக அமைந்தது. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பானது 2021இன் இறுதியில் ரூ.1,225.2 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ.3,432.5 பில்லியனுக்கு ரூ.1,338.4 பில்லியனால் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. 2022 காலப்பகுதியில் மத்திய வங்கி வைத்திருக்கும் அரசாங்கப் பிணையங்களில் (தேறிய மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்) கணிசமான அதிகரிப்பினை இது பிரதிபலிக்கின்றது. மத்திய வங்கியினால் அரசாங்கப் பிணையங்களின் இருப்புக்களின் மீதான இவ்வதிகரிப்பானது குறைவடைந்த அரசாங்க வருவாய், படுகடன் இடைநிறுத்தல் காரணமாக வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி, உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு கரிசனைகளுக்கு மத்தியில் அரசாங்க பிணையங்களுக்காக குறைவடைந்த சந்தை நாட்டம் என்பவற்றுக்கு மத்தியில் நாணய நிதியிடல் மீது அரசாங்கம் தொடர்ந்தும் தங்கியிருந்தமையினால் ஏற்பட்ட முதனிலைச் சந்தையிலிருந்து தொடர்ச்சியான திறைசேரி உண்டியல்களின் கொள்வனவையும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் நேரடி ஒதுக்கீட்டையும் பிரதிபலித்தது. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் அரசாங்கப் பிணையங்களின் இருப்பு (தேறிய மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்) 2022 இறுதியில் ரூ.3,197.1 பில்லியனுக்கு ரூ.1,251.7 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, தற்காலிக முற்பணங்களாக அரசாங்கத்திற்கு மாற்றல்செய்யப்பட்ட நிலுவைகளும் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்து மத்திய வங்கியின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களுடன் இணைந்த வெளிநாட்டுச் செலாவணி இழப்புகளிலிருந்து தோன்றிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீதான மத்திய வங்கியின் கோரல்களின் வீழ்ச்சி அத்துடன் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளூடாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சலுகைக் கடன்களின் மீள்கொடுப்பனவு என்பன மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பினை ஒடுக்கியது. அதற்கமைய, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள், 2021 காலப்பகுதியின் ரூ.1,255.4 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 2022 இல் ரூ.1,270.2 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, 2021 ஓகத்து தொடக்கம் வெளிநாட்டுச் சொத்துக்கள் எதிர்மறையாவதற்கு வழிவகுத்த முன்னைய ஆண்டு காலப்பகுதியின் ரூ.914.0 பில்லியன் கொண்ட சுருக்கத்தினைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2022 காலப்பகுதியில் ரூ.1,226.6 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தன. 2022 காலப்பகுதியில் குறிப்பாக 2022இன் ஆரம்ப காலப்பகுதியில் பிரதானமாக அத்தியாவசிய இறக்குமதிகளை வசதிப்படுத்துவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு திரவத்தன்மை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களின் பாரியளவிலானதொரு பகுதி பயன்படுத்தப்பட்டமையினால் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. செலுத்தவேண்டிய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களை விஞ்சியிருந்தமையால் ஐ.அ.டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் தேய்மானம் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பை விட வெளிநாட்டுப் பொறுப்புகளின் பாரிய அதிகரிப்புக்கு வழிவகுத்து 2022இல் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்தினை மேலும் சீர்குழைத்தது. மத்திய வங்கியினால் கைச்சாத்திடப்பட்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களுக்கு ஏற்புடைய தீர்ப்பனவுகள் காலம் நீடிக்கப்பட்டமை மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவு தொகையினை பிற்போட்டமை என்பனவும் மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புகள் விரிவடைவதற்கு வழிவகுத்தன. கட்டாயமாக மாற்றவேண்டியமைக்கு உட்பட்டிருந்த நாட்டுக்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் எஞ்சிய தொகையினையும் தொழிலாளர் பணவனுப்பல்களையும் விற்பனைசெய்வதற்கான தேவைப்படுத்தலின் கீழ் உரிமமம்பெற்ற வங்கிகளிலிருந்து மத்திய வங்கி மேற்கொண்ட அதிகளவான வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளின் காரணமாக 2022 இறுதியில் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் திரள்வொன்று அவதானிக்கப்பட்டது.

விரிந்த பண நிரம்பல் (M_{2b}) குறிப்பிடத்தக்களவு விரிவடைந்ததன் விளைவாக விரிந்த பண நிரம்பல் (M_{2b}) மற்றும் ஒதுக்குப் பணம் என்பவற்றிற்கிடையிலான விகிதமான பணப்பெருக்கி, 2022இல் அதிகரித்த அதேவேளை ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கம் மிதமாக காணப்பட்டது. அதற்கமைய, ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தில் மிதமான விரிவடைதலுக்கு மத்தியில் அதிகரித்த அரசாங்கத் துறை கடன் பெறுதல்கள் அத்துடன் ரூபா தேய்மானத்திலிருந்து தோன்றிய பெறுமானத் தாக்கம் என்பவற்றைப் பிரதிபலித்து M_{2b} விரிவடைதல் காரணமாக விரிந்த பணத்தின் அடிப்படையிலான பணப்பெருக்கி 2021இன் இறுதியில் பதிவாகிய 8.15 உடன் ஒப்பிடுகையில் 2022இன் இறுதியளவில் 9.11 இற்கு அதிகரித்தது. அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 காலப்பகுதியில் பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயத்தின் அளவு குறைவடைதல் மற்றும் பொதுமக்களினால் வைத்திருக்கப்படும் கால மற்றும் சேமிப்பு வைப்புகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு என்பவற்றின் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக வைப்புகளுக்கான நாணயத்தின் விகிதம், 2021இன் இறுதியில் பதிவாக 8.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 6.4 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

விரிந்த பணம் (M_{2b}) மற்றும் உள்நாட்டுக் கொடுகடன்

அரசாங்கத் துறைக்கான கொடுகடனின் கணிசமான விரிவாக்கம் மற்றும் செலாவணி வீதத்தின் தேய்வடைதலினை தொடர்ந்து (மீள் பெறுமதிமதிப்பீட்டுத் தாக்கம்) வங்கித் தொழில் முறைமையின் ரூபா நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்கத்திற்கு மத்தியில் தனியார் துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க சுருக்கத்தினால் தூண்டப்பட்டு விரிந்த பணநிரம்பல் (M_{2b}) வளர்ச்சி 2022இல் மெதுவடைந்தது. இறுக்கமான நாணய நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு 2021இன் ஆரம்ப பகுதியிலிருந்து படிப்படியாக மெதுவடைந்த விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா சடுதியாக தேய்வடைந்தமைக்கு மத்தியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கொடுகடனில் மீள் பெறுமதிமதிப்பீட்டுத் தாக்கத்தினை பிரதான காரணமாகக் கொண்டு 2022 ஆரம்ப காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வேகமடைந்து, 2022இன் ஏப்பிறல் இறுதியளவில் 20.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும், அரசாங்க துறைக்கான கொடுகடனில் குறிப்பாக வங்கித்தொழில் முறைமை மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் கணிசமாக விரிவடைந்ததுக்கு மத்தியில், இறுக்கமான நாணய நிலைமைகள் காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன் சுருக்கம் என்பன மூலம் தூண்டப்பட்டு 2022 மே தொடக்கம் விரிந்த பண வளர்ச்சியில் வேகம் குறைந்த போக்கு

வரைபடம் 7.12
விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு - M_{2b} (சொத்துப்பக்கம்) (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஆண்டுக்காண்டு விரிந்த பண வளர்ச்சி, 2022 இறுதியளவில் 15.4 சதவீதத்திற்கு மிதமடைந்தது. ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் தேய்மானம் சீர்செய்யப்பட்டவுடன்[14] ஆண்டுக்காண்டு விரிந்த பண வளர்ச்சி 2022 இறுதியளவில் ஏறத்தாழ 7 சதவீதத்திற்கு மெதுவடைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

விரிந்த பண பொறுப்புக்கள் பக்கத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுடன் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பானது 2022 காலப்பகுதியில் நாணய விரிவடைதலுக்கு ஒட்டுமொத்தமாக பங்களித்தது. 2021இல் பதிவாகிய 77 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் ஒப்பிடுகையில் கால மற்றும் சேமிப்பு வைப்புகளின் அதிகரிப்பானது 2022இல் விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு விரிவடைதலுக்கு ஒட்டுமொத்தமாகப் பங்களித்தது. உரிமம்பெற்ற வங்கிகளுடன் பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகளில் சிறிதளவு விரிவடைதல் 2022 காலப்பகுதியில் பதிவான அதேவேளை, உயர்வான சந்தை வட்டி வீதங்களுக்கு மத்தியில் நாணயத்தை வைத்திருப்பதன் அதிகரித்த சந்தர்ப்பச் செலவு காரணமாக பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம் ஆண்டு காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. இறுக்கமான நாணய நிலைமைகளுக்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட உயர்வான வைப்பு வட்டி வீதங்களின் தாக்கத்தை பிரதிபலித்து உரிமம்பெற்ற வங்கிகளின் கால மற்றும் சேமிப்பு வைப்புகள் 2022இல் ரூ.1,648.6 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2021இல் பதிவாகிய ரூ.958.8 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்காண்டு 17.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, கேள்வி வைப்புகளுக்கான

14 இச்சூழ்நிலையின் கீழ் 2022 பெப்புருவரி இறுதியில் நிலவிய செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிலுவைகளை பெறுமதி மதிப்பீடு செய்வதன் மூலம் பண நிரம்பல் வளர்ச்சி மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2021இன் இறுதியின் 26.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உயர்வான வட்டி வீதங்கள் அத்துடன் சராசரிக்கும் குறைவான பொருளாதார நடவடிக்கை என்பவற்றிக்கு மத்தியில் 2022 இறுதியளவில் 5.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயம், 2021 இறுதியளவில் ஆண்டுக்காண்டு 22.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டுக்காண்டு 5.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

விரிந்த பணச் சொத்துப் பக்கத்தில், 2021இல் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான போக்கு, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விழ்ச்சியினால் தூண்டப்பட்டு 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து பாரியளவில் சுருக்கமடைந்த அதேவேளை, உரிமம்பெற்ற வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஆண்டின் முதலரை காலப்பகுதியில் மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தன. செலாவணி வீதத் தேய்மானத் தாக்கத்துடன் இணைந்து வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை விஞ்சி வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூ.914.0 பில்லியன் கொண்ட சுருக்கத்துடன் தொடர்ந்து 2022 காலப்பகுதியில் ரூ.1,226.6 பில்லியனால் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தன. பிராந்திய இணைத் தரப்புகளுடன் மத்திய வங்கி செய்துகொண்ட பன்னாட்டுப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் தீர்ப்பனவை நீடித்தல் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்திற்கான கொடுப்பனவுகளின் பாரிய திரட்சி என்பவற்றைத் தொடர்ந்து, பன்னாட்டு இணைத் தரப்பினர்களுக்கான வெளிநாட்டு நாணய கொடுப்பனவுகளின் அதிகரிப்பின் காரணமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய பொறுப்புகள் அதிகரித்தன. ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்குத் திருப்பியனுப்புதல் மற்றும் மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டின் கீழ், உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு காரணமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்த போதிலும் குறிப்பாக 2022இன் ஆரம்ப காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்கு வெளிநாட்டு செலாவணியை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கும் இச்சொத்துக்கள் உபயோகிக்கப்பட்டன. எவ்வாறிருப்பினும், சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை படிப்படியாக மேம்பாடடைவதுடன், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கியியுடனான வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் மத்திய வங்கியின் தேறிய

அட்டவணை 7.4
நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள்

ரூ. பில்லியன்

விடயம்	2020 முடிவில்	2021 முடிவில்	2022 முடிவில்(அ)	மாற்றம் 2020 தொகை	2020 %	2021 தொகை	2021 %	2022 தொகை	2022 %
1. வெளிநின்ற நாணயம்	834.8	1,005.1	1,026.6	156.8	23.1	170.3	20.4	21.5	2.1
1.1 பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம்	641.0	784.4	742.0	146.8	29.7	143.4	22.4	-42.4	-5.4
1.2 வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்	193.8	220.6	284.5	10.0	5.5	26.9	13.9	63.9	28.9
2. மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் (ஆ)	129.6	300.7	322.8	-125.0	-49.1	171.1	132.0	22.1	7.4
3. மத்திய வங்கியிலுள்ள அரச முகவர்களின் வைப்புக்கள் (இ)	0.03	0.01	0.01						
4. ஒதுக்குப்பணம் (1+2+3)	**964.4**	**1,305.8**	**1,349.4**	**31.8**	**3.4**	**341.4**	**35.4**	**43.6**	**3.3**
5. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள்	536.1	675.4	711.6	164.9	44.4	139.3	26.0	36.1	5.3
6. குறுகிய பணநிரம்பல், M_1 (1.1+5)	**1,177.2**	**1,459.9**	**1,453.6**	**311.7**	**36.0**	**282.7**	**24.0**	**-6.3**	**-0.4**
7. வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்	7,318.6	8,179.0	9,043.5	1,271.4	21.0	860.4	11.8	864.4	10.6
8. விரிந்த பணநிரம்பல், M_2 (6+7)	**8,495.8**	**9,638.9**	**10,497.1**	**1,583.1**	**22.9**	**1,143.1**	**13.5**	**858.1**	**8.9**
9. சீரமைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் (ஈ)	909.9	1,008.4	1,792.6	198.5	27.9	98.5	10.8	784.2	77.8
10. ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல், M_{2b} (8+9)	**9,405.7**	**10,647.3**	**12,289.6**	**1,781.6**	**23.4**	**1,241.6**	**13.2**	**1,642.3**	**15.4**
பணப்பெருக்கி, M_{2b}	9.75	8.15	9.11						
சுற்றோட்ட வேகம், M_{2b} (உ)	1.84	1.73	2.05						

மூலம்: இலங்கை மத்திய வங்

(அ) தற்காலிகமானது.
(ஆ) மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் மற்றும் மத்திய வங்கியுடனான முதன்மை வணிகர்களின் நிலுவைகள் இரண்டையும் உள்ளடக்குகின்றது.
(இ) மத்திய வங்கியுடனான அரச முகவர்களின் வைப்பு 2020 இறுதியில் ரூ 30.4 மில்லியன், 2021 இறுதியில் ரூ. 5.5 மில்லியன் மற்றும் 2022 இறுதியில் ரூ. 11.6 மில்லியனாக இருந்தது
(ஈ) கரை கடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வதிவோர் வகையிலான வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.
(உ) தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் தினைக்களத்தினால் பணத்தின் வேகமானது M_{2b} இன் ஆண்டுச் சராசரி மற்றும் மீள் தளமிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (அடிப்படை ஆண்டு 2015) மதிப்பீடுகளின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது

வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிப்பதற்கு உதவின. அதேவேளை, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத்தினால் உரிமம்பெற்ற வங்கிகளில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021இல் பதிவாகிய ரூ.141.5 பில்லியன் கொண்ட அதிகரிப்பை விட 2022 காலப்பகுதியில் ரூ.441.8 பில்லியனால் மேம்பட்ட அதேவேளை, உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தன. வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான இருப்புகளில் அதிகரிப்பு அத்துடன் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் வதிவல்லாதோருக்கான கடன்வழங்கல் குறிப்பாக குறுகிய கால பொறுப்புக்களில் தீர்ப்பனவு என்பனவற்றின் பிரதான காரணமாக ஏற்பட்ட சுருக்கத்துடன் வெளிநாட்டு வங்கிப் பிரிவுகளில் தேறிய சொத்துக்கள் 2022இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இதற்கு மாறாக, உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2022 காலப்பகுதியில் சுருங்கின, இதற்கு வெளிநாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய இருப்புகளின் அதிகரிப்பை விஞ்சி வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளில் அதிகரிப்பு வதியாதோரின் வைப்பு பொறுப்பு நியதிகளில் பிரதான காரணமாக இருந்தது.

வங்கித்தொழில் முறைமை மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2022 காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்து தேறிய உள்நாட்டு சொத்தின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தது. 2021இல் அவதானிக்கப்பட்ட அதேபோக்குடன் தொடர்ந்து சென்று, 2022இல் அரசாங்கத்தின் அதிகரித்த நிதியிடல் தேவைப்பாடானது அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவான வருமானம் திரட்டுதல் மற்றும் வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பெறுவழி என்பன காரணமாக உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையூடாக பிரதானமாக மத்திய வங்கி ஊடாகவே பெருமளவில் நிறைவேற்றப்பட்டது. வங்கித்தொழில் முறைமை மூலம் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் சடுதியான அதிகரிப்பானது மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் தனியார் துறை முதலீடுகளில் அரசாங்க செலவின அதிகரிப்பை குறித்துக்காட்டுகின்றது. 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமை மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன், 2021இன் ரூ. 1,284.4 பில்லியன் கொண்ட விரிவடைதலுடன் ஒப்பிடுகையில் ரூ.1,638.7 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மத்திய வங்கி மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2022 காலப்பகுதியில் ரூ.1,338.4 பில்லியனால் அதிகரித்து அரசாங்கத்திற்கான தேறிய

அட்டவணை 7.5
ஒதுக்குப்பணத்தினதும் விரிந்த பணத்தினதும் (M_{2b}) சொத்துப்பக்கம்


ரூ. பில்லியன்

விடயம்	2021 முடிவில்	2022 முடிவில் (அ)	மாற்றம் 2021 தொகை	மாற்றம் 2021 %	மாற்றம் 2022 தொகை	மாற்றம் 2022 %
ஒதுக்குப் பணம்	**1,305.8**	**1,349.4**	**341.4**	**35.4**	**43.6**	**3.3**
மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	-387.3	-1,613.9	-914.0	-173.5	-1,226.6	-316.7
மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	1,693.1	2,963.2	1,255.4	286.8	1,270.2	75.0
அரசிற்கான தேறிய கொடுகடன்	2,094.1	3,432.5	1,225.2	141.0	1,338.4	63.9
வர்த்தக வங்கிகள் மீதான கோரல்கள்	143.2	-11.5	28.7	25.1	-154.6	-108.0
ஏனைய விடயங்கள் (தேறிய) (ஆ)	-544.2	-457.8	1.5	0.3	86.4	15.9
விரிந்த பணம் (M_{2b})	**10,647.3**	**12,289.6**	**1,241.6**	**13.2**	**1,642.3**	**15.4**
தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	-982.0	-1,766.8	-772.5	-368.8	-784.8	-79.9
நாணய அதிகாரசபைகள் (இ)	-387.3	-1,613.9	-914.0	-173.5	-1,226.6	-316.7
வர்த்தக வங்கிகள்	-594.7	-153.0	141.5	19.2	441.8	74.3
தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	11,629.3	14,056.4	2,014.1	20.9	2,427.2	20.9
உள்நாட்டு கொடுகடன்	14,002.0	16,632.3	2,280.8	19.5	2,630.3	18.8
அரசுக்கான தேறிய கொடுகடன்	5,832.4	7,471.1	1,284.4	28.2	1,638.7	28.1
மத்திய வங்கி	2,094.1	3,432.5	1,225.2	141.0	1,338.4	63.9
வர்த்தக வங்கிகள்	3,738.3	4,038.6	59.2	1.6	300.3	8.0
அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன்	1,188.1	1,747.0	185.9	18.6	558.9	47.0
தனியார் துறைக்கான கொடுகடன்	6,981.4	7,414.1	810.5	13.1	432.7	6.2
ஏனைய விடயங்கள் (தேறிய) (ஆ)	-2,372.7	-2,575.8	-266.7	-12.7	-203.2	-8.6

(அ) தற்காலிகமானது
(ஆ) ஏனைய சொத்துக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களுக்கு இடையிலான வித்தியாசம் கணிப்பிடப்பட்டுள்ளது.
(இ) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதேபோன்று அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட அரசிற்கான அரச முகவர் நிலுவைகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7.13
உள்நாட்டு கொடுகடனின் ஆண்டிற்கான மாற்றம் (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.


மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொடுகடனில் ஒட்டுமொத்த விரிவடைதலின் 80 சதவீதத்திற்கு மேல் பங்களித்தது. மத்திய வங்கியானது அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் பற்றாக்குறைகளை நிறைவேற்றுவதற்கும் அதேபோன்று தற்காலிக முற்பணங்களை வழங்குவதற்கும் மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியல்களின் நேரடி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக முதனிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல் ஏலங்களின் குறை ஒதுக்கீடுகளை கொள்வனவு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதியை வழங்கியது. உரிமம்பெற்ற வங்கிகளின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் அதேபோன்று இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றின் முதலீடுகளால் தூண்டப்பட்டு 2022 காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ. 300 பில்லியனால் அதிகரித்தது. ஆண்டுகாலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளுடனான மேலதிகப் பற்று நிலுவைகளை அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு குறைத்துள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுதல்களின் மீள் பெறுமதிமதிப்பீட்டுத் தாக்கத்தின் பிரதான காரணமாக வங்கித்தொழில் முறைமையிலிருந்து அத்தொழில்முயற்சிகள் பெற்றுக்கொண்ட கொடுகடன் 2022இல் விரிவடைந்த அதேவேளை, அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் நலிவான நிதியியல் செயலாற்றுகை உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து தொடர்ச்சியான கடன்பெறுதல்களை அவசியப்படுத்தின. வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் 2021இன் ரூ.185.9 பில்லியன் கொண்ட விரிவடைதலுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.558.9 பில்லியனால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்விரிவடைதலின் 70 சதவீதமானவை கணிசமான நாணயத் தேய்மானத்தின் விளைவாகத் தோன்றிய வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் மீள் பெறுமதிமதிப்பீட்டுத் தாக்கத்தினைக் காரணமாகக் கொண்டிருந்தது. எரிபொருள் இறக்குமதியினை வசதிப்படுத்துவதற்கான அதிகரித்த நிதியியல் தேவையினைப் பிரதிபலித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் 2022 காலப்பகுதியில் ரூ.477.3 பில்லியனால் அதிகரித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனின் ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கும் பெருமளவில் பங்களித்தது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் ரூ.36.5 பில்லியனால் உயர்வடைந்த அதேவேளை இலங்கை மின்சார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் ஆண்டுகாலப்பகுதியில் ரூ.31.9 பில்லியனால் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனும் 2022 காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்துள்ளது. அதேவேளை, கொழும்பு கொமர்ஷல் பேட்டிலைசர், நெல் சந்தைப்படுத்தல் சபை, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பன உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தேறிய மீள்கொடுப்பனவுகளைச் செய்திருந்தன. இதற்கமைய, அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிற்கான வெளிநின்ற கொடுகடன் 2022 இறுதியளவில் ரூ. 1,747.0 பில்லியனிற்கு உயர்வடைந்தது[15].

15 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடனின் ரூ. 884.1 பில்லியன் தொகையிலான வெளிநின்ற நிலுவையினை 2022 திசெம்பர் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மத்திய அரச படுகடனிற்கு மாற்றுவதனைப் பிரதிபலிக்கவில்லை


வரைபடம் 7.14
வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கான கொடுகடன் (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7.15
முக்கிய துறைகளுக்கான தனியார் துறையின்
கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%) (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுக்கமான நாணய நிலைமைகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடு மிதமடைதல் என்பவற்றுக்கு பதிலிறுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட செலுத்தவேண்டிய கொடுகடன் 2022 நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்தும் சுருக்கமடைந்தது. கணிசமாக நாணயம் தேய்வடைந்தமை, கொடுகடனின் இயலளவிற்குட்பட்ட வளர்ச்சி என்பவற்றுக்கு மத்தியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் மீள் பெறுமதிமதிப்பீட்டு தாக்கத்தினைப் பிரதான காரணமாகக் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கிய செலுத்தவேண்டிய கொடுகடன் 2022 ஆரம்ப காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எனினும், நாணயக் கொள்கையை குறிப்பிடத்தக்களவு இறுக்கமாக்குதல் மற்றும் வங்கித்தொழில் முறைமையில் கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை என்பவற்றைப் பிரதிபலித்து, 2022 ஏப்பிறல் தொடக்கம் சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களில் சடுதியான மேல்நோக்கிய சீராக்கத்தின் மூலம் 2022 யூன் தொடக்கம் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தனியார் துறைக்கான கொடுகடன் சுருக்கமடையத் தொடங்கியது. குறிப்பாக, 2022 யூன் - திசெம்பர் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஒன்றுதிரண்ட சுருக்கம் ரூ.340.7 பில்லியன் தொகையாகவிருந்தது. இதன்விளைவாக, உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டு விரிவாக்கம் 2021இல் பதிவாகிய ரூ.810.5 பில்லியன் கொண்ட விரிவடைதலுடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டுகாலப்பகுதியில் ரூ.432.7 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதற்கமைய, தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2021 இறுதியில் பதிவாகிய 13.1 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 6.2 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. செலாவணி வீதத் தேய்மானத்திலிருந்து[16] தோன்றுகின்ற பெறுமதி மதிப்பீட்டுத் தாக்கம் நீங்கலாக தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 3.3 சதவீத சுருக்கத்தினைப் பதிவுசெய்து முன்னைய ஆண்டைவிட 2022இல் ரூ.231.1 பில்லியனால் சுருக்கமடைந்தது.

தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான காலாண்டு அளவீட்டின்படி, ஏனையவற்றுக்கு மத்தியில் இறுக்கமான நாணய நிலைமைகள், குறைவடைந்த பொருளாதார நடவடிக்கை மற்றும் குறிப்பிடத்தக்க இறைசார் மறுசீரமைப்புக்கள் என்பவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்து சகல முக்கிய பொருளாதாரத் துறைகளுக்கான கொடுகடன் வளர்ச்சி 2022ஆம் ஆண்டுப்பகுதியில், குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு மிதமடைந்தது. 2022 முதலரைக்காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடனின் மீள் பெறுமதி மதிப்பீட்டுத் தாக்கத்தினை அடிப்படைக் காரணமாகக் கொண்டு அனைத்து முக்கிய பொருளாதாரத் துறைகளுக்கும் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட செலுத்தவேண்டிய கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி அதிகரித்தது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடனில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் பாரியளவில் வகைகூறுவதனால் அத்துறைகளிலேயே இவ்வதிகரிப்பானது மிகவும் பிரதானமாகக் காணப்பட்டது. எனினும், வழங்கல் பற்றாக்குறைகள், இறுக்கமான நாணய நிலைமைகள் எனபவற்றுக்கு மத்தியில் சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களில் சடுதியான மேல்நோக்கிய சீராக்கம் அத்துடன் 2022 இறுதியளவில் அனைத்து முக்கிய பொருளாதாரத் துறைகளுக்குமான கொடுகடனை வேகம் குறையச்செய்வதற்கு வழிவகுத்த முக்கிய இறைசார் மறுசீரமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து குறைவடைந்த பொருளாதார நடவடிக்கை மூலம் இப்போக்கு 2022இன் இரண்டாம் அரைப்பகுதியில் திரும்பலடைந்தது. துறைசார் கொடுகடன் நியதிகளில் கைத்தொழில் துறைக்கான ஆண்டிற்கு ஆண்டு கொடுகடன் வளர்ச்சி 2021 இறுதியின் 12.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 8.4 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. உயர்வான வட்டி வீதங்களினால் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து கட்டடப் பொருள் பற்றாக்குறை மற்றும் உயர்வான உள்ளீட்டுச் செலவுகள் என்பவற்றிற்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் குறைவடைந்த கட்டடவாக்கம் தொடர்புபட்ட நடவடிக்கைகளைப் பிரதிபலித்து கைத்தொழில் துறையினுள் கட்டடவாக்கத் துணைத்துறைக்கான கொடுகடன் வளர்ச்சி

16 இச்சூழ்நிலையின் கீழ் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியானது 2022 பெப்புருவரி இறுதியில் நிலவிய செலாவணி வீதத்தில் அனைத்து வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுகடனை பெறுமதி மதிப்பீடு செய்வதன் மூலம் மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 7.6
வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைவாரியான பரம்பல் (அ) (ஆ)

ரூ. பில்லியன்

துறை	2021 முடிவில் (இ)	2022 முடிவில் (ஈ)	% பங்கு 2022	% மாற்றம் 2022
வேளாண்மை மற்றும் மீன்பிடி	**551.7**	**601.7**	**7.7**	**9.1**
இதில், தேயிலை	101.2	108.2	1.4	6.9
இறப்பர்	41.4	59.1	0.8	42.7
தெங்கு	33.7	30.0	0.4	-11.0
நெல்	44.4	38.9	0.5	-12.5
மரக்கறி, பழப்பயிர்ச்செய்கை மற்றும் சிறிய உணவுப் பயிர்கள்	30.9	32.2	0.4	4.1
மீன்பிடி	24.0	26.4	0.3	10.0
கைத்தொழில்	**2,860.9**	**3,100.6**	**39.8**	**8.4**
இதில், கட்டடவாக்கம்	1,525.1	1,571.9	20.2	3.1
உணவு மற்றும் குடிபானங்கள்	174.7	214.6	2.8	22.8
துணிகள் மற்றும் ஆடைகள்	273.1	293.8	3.8	7.6
உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக்கருவிகள்	152.8	144.9	1.9	-5.1
பணிகள்	**1,996.5**	**2,079.6**	**26.7**	**4.2**
இதில், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	570.2	563.7	7.2	-1.1
சுற்றுலா	288.2	372.8	4.8	29.4
நிதி மற்றும் வியாபாரப் பணிகள்	437.2	446.6	5.7	2.2
கப்பலேற்றல், வான்போக்குவரத்து மற்றும் சரக்கு பரிமாற்றம்	30.3	32.0	0.4	5.9
தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் (உ)	**1,799.8**	**2,013.0**	**25.8**	**11.8**
இதில், நீண்ட கால நுகர்வு பொருட்கள்	375.0	368.5	4.7	-1.7
அடகுபிடித்தல்	302.4	423.4	5.4	40.0
கடன் அட்டைகள்	144.8	149.3	1.9	3.2
மொத்தம் (ஊ)	**7,208.8**	**7,794.8**	**100.0**	**8.1**

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றின் காலாண்டு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) கடன்கள், மேலதிக பற்றுக்கள் மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சேகரிப்பு நிலையில் உள்ள காசு விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன
(இ) திருத்தப்பட்டது
(ஈ) தற்காலிகமானது
(உ) 'கைத்தொழிலின்' கீழ் வகைப்படுத்தப்பட்ட 'கட்டடவாக்கம்' என வகைப்படுத்தப்பட்ட தனியாள் வீடமைப்பு கடன்கள் நீங்கலாகவும் பாதுகாப்பு வலைத் திட்டங்கள் தொடர்பான கடன்கள் உள்ளடங்கலாக
(ஊ) தொகுத்தல் செயல்முறையிலுள்ள வேறுபாடுகளினால் காலாண்டு அளவீட்டின் அடிப்படையிலான தனியார் துறைக்கான கடன் நாணய அளவீட்டிலிருந்து வேறுபடுகிறது.

2021 இறுதியின் 13.1 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 3.1 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. புடவைகள் மற்றும் ஆடைகள் துணைத் துறைக்கான ஆண்டிற்கு ஆண்டு கொடுகடன் வளர்ச்சியானது குறைவடைந்த உலகளாவிய கேள்வி நிலைமைகள் மற்றும் வழங்கல்பக்க இடையூறுகள் காரணமாக 2021 இறுதியின் 16.1 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 7.6 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியும் 2021 இறுதியின் 16.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் ஆண்டிற்கு 4.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. பணிகள் துறையினுள், உயர்வடைகின்ற உள்ளீட்டுச் செலவுகளுடன் இணைந்து வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் என்பவற்றுடன் தொடர்புடைய குறைவடைந்த நடவடிக்கைகளைப் பிரதிபலித்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் அத்துடன் தகவல் தொழில்நுட்ப துணைத் துறைகள் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 1.1 சதவீதத்தினாலும், 27.1 சதவீதத்தினாலும், 21.8 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. உயர்வடைந்த வட்டி வீதங்களுக்கு மத்தியில் நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகளுக்கான குறைவான கடன்வழங்கல் மட்டங்களினாலும் பணிகள் துறைக்கான கொடுகடனில் மிதமடைதல் ஆதரவளிக்கப்பட்டது. இருப்பினும், படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி நீடிக்கப்பட்டமை அத்துடன் வேறு சலுகை வழிமுறைகள் என்பவற்றுடன் இணைந்து சுற்றுலாவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் படிப்படியான மேம்படுத்தலைப் பிரதிபலித்து சுற்றுலாத் துணைத் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2022 இறுதியளவில் 29.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்து விரிவடைந்தது. வேளாண்மை மற்றும் கடற்றொழில் துறைக்கான கொடுகடன் தொடர்பில் 2021 இறுதியளவில் 12.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 9.1 சதவீதத்திற்கு கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. இத்துறையினுள் தெங்கு மற்றும் நெல் துணைத் துறைகளுக்கான கொடுகடன் பாய்ச்சல்கள் 2022 காலப்பகுதியில் சுருக்கமடைந்த அதேவேளை தேயிலை மற்றும் இறப்பர் துணைத் துறைகளுக்கான கொடுகடன் பாய்ச்சல்களில் ஆண்டுகாலப்பகுதியில் சில மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. அதிகரித்த நுகர்வுடன் தொடர்புடைய கொடுகடனைப் பிரதிபலித்து தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2021இன் இறுதியில் 10.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 11.8 சதவீதத்திற்கு வேகமடைந்தது. அதிகரித்த வாழ்க்கைச் செலவிற்கு மத்தியில் பொதுமக்கள் எதிர்கொண்ட இன்னல்களைப் பிரதிபலித்து அடகுடன் தொடர்புடைய முற்பணங்கள் 2021இல் பதிவாகிய 21.6 சதவீத வளர்ச்சியுடன் உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 40.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து ஏறத்தாழ ரூ.121.0 பில்லியன் தொகையினால் விரிவடைந்தது. நீடித்துழைக்கும் நுகர்வோர் பொருட்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன், 2021 இறுதியின் 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 1.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. கடன் அட்டை, முற்பணங்கள் வளர்ச்சியும் 2021 இறுதியின் 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 3.2 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. அதேவேளை, உயர் வட்டி வீதச் சூழலிற்கு மத்தியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான தனியார் துறைக்கான வெளிநின்ற கொடுகடனின் முதிர்ச்சி வாயிலான பகுப்பாய்வு ஏனைய தவணைகளுக்கான குறுங்கால கடன்களை நோக்கிய அதிகரித்த சந்தை நாட்டத்தினைப் பிரதிபலித்த போதிலும், 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் சகல தவணைகளிற்குமிடையே கொடுகடனின் விரிவாக்கத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான மெதுவடைதலொன்றை பதிவுசெய்தது.

அட்டவணை 7.7
வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடனின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு (அ) (ஆ)

துறை	முதிர்வு	திசெம்பர் 2021(இ)		திசெம்பர் 2022 (ஈ)	
		% பங்கு	% வளர்ச்சி	% பங்கு	% வளர்ச்சி
வேளாண்மை மற்றும் மீன்பிடி	குறுங்காலம்	4.6	17.4	4.8	12.0
	நடுத்தரகாலம்	1.6	9.2	1.6	3.0
	நீண்டகாலம்	1.4	2.4	1.4	6.5
கைத்தொழில்	குறுங்காலம்	12.2	19.5	12.4	9.8
	நடுத்தரகாலம்	8.4	10.8	7.9	1.8
	நீண்டகாலம்	19.1	9.4	19.5	10.4
பணிகள்	குறுங்காலம்	9.3	21.7	9.8	14.1
	நடுத்தரகாலம்	8.8	9.9	7.7	-5.5
	நீண்டகாலம்	9.6	17.5	9.2	3.4
தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்	குறுங்காலம்	9.8	19.4	11.1	23.2
	நடுத்தரகாலம்	5.0	3.5	5.2	11.4
	நீண்டகாலம்	10.2	6.0	9.5	1.2
மொத்தம்	குறுங்காலம்	35.9	19.7	38.1	14.8
	நடுத்தரகாலம்	23.9	8.7	22.3	5.1
	நீண்டகாலம்	40.2	10.1	39.5	6.3

(அ) வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் காலாண்டு அளவீட்டினை அடிப்படையாக கொண்டது.
(ஆ) கொடுகடனின் வகைப்படுத்தலானது ஆரம்ப முதிர்ச்சியினை அடிப்படையாக கொண்டதுடன் அது பின்வருமாறு: ஒரு வருடம் வரை - குறுங்காலம், ஒரு வருடத்திற்கும் ஐந்து வருடத்திற்கும் இடையில் - நடுத்தர காலம், ஐந்து வருடத்திற்கு மேல் - நீண்டகாலம்.
(இ) திருத்தப்பட்டது.
(ஈ) தற்காலிகமானது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாதாந்த சிறிய, நடுத்தர தொழில்முயற்சி கடன் கணக்கெடுப்பு[17] மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட செலுத்தவேண்டிய கொடுகடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் ஒட்டுமொத்த மிதமடைதலுக்கிசைவாக 2022 காலப்பகுதியில் சுருக்கமடைந்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் இரண்டின் மூலமும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021 இறுதியின் 21.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 8.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. ஏனையவற்றுக்கு மத்தியில் இறுக்கமான நாணய நிலைமைகள், குறைவடைந்த கூட்டுக்கேள்வி நிலைமைகள், சில கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, உயர்வடைகின்ற செயலாற்றமற்ற கடன்கள் மூலம் உயர்வடைந்த கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் பின்பற்றப்பட்ட எச்சரிக்கை மிக்க அணுகுமுறை அத்துடன் குறைவடைந்த வியாபார எண்ணப்பாங்குகள் என்பவற்றுக்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது ஏற்புடைய வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் சீர்குலைவிற்குப் பங்களித்தன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான துறைசார் கொடுகடன் நியதிகளில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் செலுத்தவேண்டிய தொகை 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 6.1 சதவீதத்தினாலும் 6.5 சதவீதத்தினாலும் 11.1 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. 2022இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட புதிய கடன்கள் தொடர்பில் 2021 உடன் ஒப்பிடுகையில் கடன்களின் பாரிய பங்கு குறுகிய காலங்களுக்காக வழங்கப்பட்டிருந்த அதேவேளை நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலக் கடன்களின் பங்கில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் புதிய கடன் பகிர்ந்தளிப்புக்கள் தொழிற்படு மூலதன நோக்கங்களை நோக்கியிருந்தமையினையும் முதலீட்டு நோக்கங்களை நோக்கி குறைவாக இருந்தமையினையும் எடுத்துக்காட்டி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கையினைப் பிரதிபலித்தது.

விரிந்த பணம் (M_4)

நிதியியல் அளவீடு[18] மூலம் அளவிடப்பட்டவாறான விரிந்த பண நிரம்பல் (M_4) வளர்ச்சியானது விரிந்த பண நிரம்பலில் (M_{2b}) ஒத்த போக்கினைப் பின்பற்றி 2022 காலப்பகுதியில் விரைவடைந்தது. விரிந்த பண நிரம்பலின் (M_4) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி, 2021 இறுதியில் பதிவாகிய 13.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியளவில் 14.3 சதவீதத்திற்கு

17 உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்படும் கடன்களின் சராசரிச் செலவையும் அளவையும் இனங்காணும் நோக்குடன் 2020 யூலை தொடக்கம் இலங்கை மத்திய வங்கி மூலம் நடாத்தப்படுகின்ற மாதாந்த அளவீடு

18 நிதியியல் அளவீடானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்கும் மேலதிகமாக உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உள்ளடங்கலாக அனைத்து வைப்பு ஏற்கின்ற நிறுவனங்களையும் உள்ளடக்கி பரந்தளவிலான திரவத்தன்மை வழிமுறையொன்றை வழங்குகின்றது.

அட்டவணை 7.8
விரிந்த பணத்தின் (M_4) சொத்துப்பக்கம்
(நிதியியல் அளவீட்டின்படி கணிப்பிடப்பட்டது)

ரூ. பில்லியன்


விடயம்	2021 முடிவில்	2022 முடிவில் (அ)	மாற்றம் 2021 தொகை	2021 %	2022 தொகை	2022 %
நிதியியல் அளவீடு (M_4)	12,985.4	14,839.8	1,523.5	13.3	1,854.4	14.3
உள்ளார்ந்த காரணிகள்						
தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்	-998.6	-1,766.8	-781.5	-360.0	-768.2	-76.9
நாணய அதிகாரசபைகள் (ஆ)	-387.3	-1,613.9	-914.0	-173.5	-1,226.6	-316.7
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	-594.7	-153.0	141.5	19.2	441.8	74.3
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	-16.6	0.0	-9.0	-117.9	16.6	-
தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்	13,984.0	16,606.6	2,305.0	19.7	2,622.6	18.8
உள்நாட்டுக் கொடுகடன்	17,296.4	20,135.8	2,643.9	18.0	2,839.4	16.4
அரசிற்கான தேறிய கொடுகடன்	6,769.3	8,468.6	1,403.6	26.2	1,699.3	25.1
மத்திய வங்கி	2,094.1	3,432.5	1,225.2	141.0	1,338.4	63.9
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	3,738.3	4,038.6	59.2	1.6	300.3	8.0
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	844.5	881.5	102.3	13.8	37.0	4.4
உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	92.4	116.0	16.9	22.4	23.7	25.6
அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்)	1,188.1	1,747.0	185.9	18.6	558.9	47.0
தனியார்துறைக்கான கொடுகடன்	9,338.9	9,920.2	1,054.4	12.7	581.2	6.2
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	6,981.4	7,414.1	810.5	13.1	432.7	6.2
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	1,093.7	1,159.1	157.3	16.8	65.4	6.0
உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்	1,263.8	1,346.9	86.7	7.4	83.1	6.6
ஏனைய விடயங்கள் (தேறிய) (இ)	-3,312.4	-3,529.2	-339.0	-11.4	-216.8	-6.5

(அ) தற்காலிகமானது
(ஆ) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதேபோன்று அரச கணக்குகள் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட அரசிற்கான அரச முகவர் நிலுவைகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது
(இ) ஏனைய சொத்துக்களுக்கும் ஏனைய பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடாகக் கணக்கிடப்படுகிறது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விரைவடைந்தது. சொத்துப்பக்கத்திலிருந்து நோக்குகையில், விரிந்த பண நிரம்பலின் (M_4) விரிவடைதலானது தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவடைதலினால் ஒட்டுமொத்தமாகத் தூண்டப்பட்டிருந்தது. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களினுள் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மூலமான உள்நாட்டுக் கொடுகடன், ரூ.102.3 பில்லியனால் அதிகரித்த அதேவேளை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலமான உள்நாட்டுக் கொடுகடன் 2022 காலப்பகுதியில் ரூ.106.8 பில்லியனால் அதிகரித்தது. விரிந்த பண நிரம்பல் (M_4) அடிப்படையில் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் விரிவடைதலானது ஆண்டு காலப்பகுதியில் ரூ.1,699.3 பில்லியன் தொகையாகவிருந்தது. இதில், ரூ.37.0 பில்லியன் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளூடாகவும் ரூ.23.7 பில்லியன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளூடாகவும் வழங்கப்பட்டிருந்தன. மேலும், குறிப்பிடத்தக்க நாணயத் தேய்மானத்தின் தாக்கத்தினை பிரதானமாகப் பிரதிபலித்து, உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், இறுக்கமான நாணய நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு 2022 ஏப்பிறல் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்து அதன்பின்னர் மிதமடைந்தது. அதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகளாலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினாலும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியானது 2021 இறுதியின் ஆண்டிற்கு ஆண்டு 12.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 6.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தனியார் துறைக்கு உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் 2022இல் ரூ.65.4 பில்லியனுக்கு அதிகரித்து ஆண்டிற்கு ஆண்டு 6.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. அதேவேளை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2022இல் ரூ.83.1 பில்லியனால் உயர்வடைந்து ஆண்டிற்கு ஆண்டு 6.6 சதவீதம் கொண்ட

வரைபடம் 7.16
நாணயக் கூட்டுக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி (அ)



(அ) 2022 மார்ச்சு முதல் மே வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானமானது அந்தக் காலப்பகுதியில் நாணய மற்றும் கடன் திரட்டல்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

7

வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், விரிந்த பண நிரம்பல் (M_4) இற்கமைவான ஒட்டுமொத்த தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2022 காலப்பகுதியில் ரூ.768.2 பில்லியனால் சுருக்கமடைந்து மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியினைப் பிரதிபலித்த அதேவேளை வெளிநாட்டுப் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு காரணமாக ஆண்டு காலப்பகுதியில் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்து ரூ.16.6 பில்லியனால் அதிகரித்தது.

M_4 இன் பொறுப்புக்கள் பக்கத்திலிருந்து நோக்குகையில் உரிமம்பெற்ற வங்கிகளிலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலும் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி 2022 காலப்பகுதியில் அதிகரித்தது. M_4 இன்படி கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது குறிப்பாக ஆண்டின் பிந்திய பகுதிகளில் உரிமம்பெற்ற வங்கிகளினாலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினாலும் வழங்கப்பட்ட உயர்வான வட்டி வீதங்கள் காரணமாக விரைவடைந்தது. அதற்கமைய, M_4 இன்படி கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2021இன் 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் 16.0 சதவீதத்திற்கு விரைவடைந்தது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் வைத்திருக்கப்பட்ட கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 2021இன் 5.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 11.5 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன. எனினும், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுடன் வைத்திருக்கப்பட்ட கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 2021 இறுதியின் 13.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இன் இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 6.8 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சி கண்டது. உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுடன் வைத்திருக்கப்பட்ட கால மற்றும் சேமிப்பு வைப்புக்களின் மிதமான வளர்ச்சிக்கு இறுக்கமான திரவத்தன்மைகளுக்கு மத்தியில் வைப்புகளுக்கான போட்டியிடுதலில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகளும் வழங்கிய ஒப்பீட்டளவில் உயர்வான வட்டி வீதங்கள் காரணமாக இருந்திருக்கக்கூடும்.

8

நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

8.1 பொதுநோக்கு

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் ஏற்பட்ட மிக ஆழமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஊடுகடத்தப்பட்ட தாக்கங்களை எதிர்த்து நிற்கக்கூடியதாக நிதியியல் முறைமையானது 2022 காலப்பகுதியில் காணப்பட்டது. அனைத்து தரமிடல் நிறுவனங்களினாலும் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை, வங்கித்தொழில் துறையின் உயர்ந்த இறையாண்மை வெளிப்படுத்துகைகள், பொருளாதாரச் சுருக்கம், கடுமையான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை மற்றும் உயர்மட்ட பணவீக்கம் என்பனவற்றுடன் 2022 ஏப்பிறலில் இருபுடை மற்றும் வர்த்தகக் கடன்களின் பேரிலான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகளை இடைநிறுத்துவது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலுடன் இணைந்து நிதியியல் துறையின் செயற்பாடுகள் மீதும் குறிப்பிடத்தக்கதும் முன்னொருபோதுமில்லாததுமான மோசமான தாக்கத்தினை உருவாக்கியதுடன் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் சவாலுக்குட்படுத்தியது. எவ்வாறாயினும் கொடுகடனின் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை, திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், உயர்ந்தளவிலான பெறுமதியிழப்புக் காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த மட்டத்திலான இலாபத்தன்மை மற்றும் எதிர்பாராத இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்கான மூலதன தாங்கிருப்புக்கள் தேய்வடையக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தமை போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற அச்சுறுத்தும் சவால்களுக்கு மத்தியில் 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மை பேணப்பட்டிருக்கிறது. அதேவேளை, துறையானது சொத்துக்கள் மற்றும் வைப்புக்களின் நியதிகளில் வளர்ச்சியுற்றதுடன் மத்திய வங்கியின் முன்மதியுடைய இணங்குவிப்புத் தேவைப்பாடுகளுக்கும் பெருமளவிற்கு இணங்கிக் கொண்டது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையானது, 2022 காலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சியில் காணப்பட்ட சுருக்கம், வீழ்ச்சியடைந்து செல்கின்ற இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பனவற்றிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புடன் சொத்து மற்றும் வைப்பு நியதிகளில், தொடர்ந்தும் விரிவடைவதற்கு இயலக்கூடியதாக இருந்தது. 2022 மாச்சு முற்காலப்பகுதியில் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உருவான அழுத்தத்தைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது செலாவணி வீதத்தில் அளவீட்டுச் சீராக்கத்தினை மேற்கொள்வதற்கு அனுமதியளித்தது. இருப்பினும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் சாதகமற்ற சந்தை மனோபாவங்கள் காரணமாக தொடர்ச்சியான காலப்பகுதியில் மிதக்கும் செலாவணி வீதமானது கடுமையான தேய்வொன்றினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, மத்திய வங்கி செலாவணி வீதத்தில் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொடர்பில் சந்தை வழிகாட்டலொன்றினை அறிமுகப்படுத்தியது. 2022இன் முதலரைப்பகுதியில் விடாப்பிடியாக உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட பணச்சந்தைப் பற்றாக்குறை 2022 திசெம்பர் இறுதியில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளே முக்கிய காரணமாகும். அதிகரித்த இடர்நேர்வினைத் தவிர்க்கும் பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் பணச்சந்தை நடவடிக்கைகள்

குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன. நிலையான வருமானப் பிணையங்களுக்கான உயர்ந்த விளைவு வீதங்களையும் அப்போது நிலவிய பேரண்ட பொருளாதார நிலைமைகளின் மோசமான பின்னணியில் எதிர்மறையான சந்தை மனோபாவங்களையும் பிரதிபலித்து பங்குரிமைச் சந்தை 2022 காலப்பகுதியில் மிகக் குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்தது. நிதியியல் உட்கட்டமைப்பு, இச்சவால்மிக்க பொருளாதாரச் சூழலில் நிதியியல் துறையின் தொழிற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்தது. இவ்வனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும், 2023 மார்ச 20 ஆம் திகதி பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி அனுமதிக்கப்பட்டதுடன் மேம்பட்ட சந்தை நம்பகத்தன்மையால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பணச் சந்தைகளில் படிப்படியாக தளர்ந்துவருகின்ற திரவத்தன்மை அழுத்தம் மற்றும் அரச பிணையங்களின் விளைவு வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்கின்ற நியதிகளில், 2023இன் ஆரம்பத்தில் மிதமான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. எனினும், கடன் மறுசீரமைப்பு நிதியியல் துறைக்கு சவால்களை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும் கூட, கடன் மறுசீரமைப்பின் போது நிதியியல் முறைமை உறுதித்தன்மையை அரசும் மத்திய வங்கியும் உறுதிப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் கொடுகடன் தரம், திரவத்தன்மை மீதான கடுமையான அழுத்தம், இலாபத்தன்மையின் குறைந்த மட்டம் மற்றும் தேய்வடைந்து செல்கின்ற மூலதன மட்டங்கள் என்பனவற்றிலிருந்து விளைவிக்கும் சவால்களுக்கு மத்தியிலும் 2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மை பேணப்பட்டது. இருப்பினும் கூட, வங்கித்தொழில் துறை அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணிய வேளையில், முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் தன்மையினையும் பரந்தளவில் பேணியது.

அட்டவணை 8.1
நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)	
	ரூ. பில்	பங்கு (%)	ரூ. பில்	பங்கு (%)
வங்கித்தொழில்துறை	**19,872.5**	**74.6**	**23,926.9**	**76.3**
மத்திய வங்கி	3,046.3	11.4	4,510.3	14.4
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்	14,724.3	55.3	17,225.2	54.9
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	2,101.9	7.9	2,191.4	7.0
வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்	**1,646.2**	**6.2**	**1,830.9**	**5.8**
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்	1,452.0	5.4	1,610.2	5.1
கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ)	193.4	0.7	220.0	0.7
சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம்	0.7	0.0	0.8	0.0
சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்	**369.4**	**1.4**	**328.9**	**1.0**
சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்	35.7	0.1	1.0	0.0
உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள்	8.3	0.0	9.9	0.0
முதனிலை வணிகர்கள்	78.7	0.3	131.7	0.4
பங்குத்தரகர்கள்	36.5	0.1	24.8	0.1
நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள்	198.5	0.7	153.5	0.5
சந்தை இடையீட்டாளர்கள் (ஈ)	11.8	0.0	8.0	0.0
துணிகர மூலதனக் கம்பனிகள்	வி/கி	வி/கி	வி/கி	வி/கி
ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்	**4,758.2**	**17.9**	**5,292.3**	**16.9**
காப்புறுதிக் கம்பனிகள்	881.8	3.3	947.3	3.0
ஊழியர் சேம நிதியம்	3,166.1	11.9	3,459.9	11.0
ஊழியர் நம்பிக்கை நிதியம்	419.1	1.6	468.8	1.5
அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேம நிதியங்கள்	207.6	0.8	330.4	1.1
அரச பணி சேம நிதியம்	83.5	0.3	85.9	0.3
மொத்தம்	**26,646.3**	**100.0**	**31,379.0**	**100.0**

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவு இல்லாமையால் கூட்டுறவு கிராமிய வங்கியின் 2022 3ஆம் காலாண்டு இறுதி சொத்துத்தளம் 2022 இறுதியில் உள்ள சொத்துத்தளத்திற்கு சமமாகக் கொள்ளப்பட்டது.
(ஈ) சந்தை இடையீட்டாளர்களாக பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் நீங்கலாக.

மூலம்: இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
தொழில் திணைக்களம்
ஓய்வூதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சனச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அட்டவணை 8.2
வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்

வகை	2021 முடிவில் (அ)	2022 முடிவில் (ஆ)
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்		
I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை	**24**	**24**
உள்நாட்டு வங்கிகள்	13	13
வெளிநாட்டு வங்கிகள்	11	11
II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை	**6,710**	**6,718**
கிளைகள்(இ)	2,917	2,924
உள்நாட்டு வங்கிகள்	2,871	2,878
வெளிநாட்டு வங்கிகள்	46	46
மாணவர் சேமிப்பு பிரிவுகள்	3,793	3,794
III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்	**5,972**	**6,204**
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்		
I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை	**6**	**6**
தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள்	1	1
வீடமைப்பு நிதி நிறுவனங்கள்	2	2
ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	3	3
II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை	**705**	**706**
கிளைகள் (இ)	705	706
தேசிய மட்ட சேமிப்பு வங்கி	267	268
வீடமைப்பு நிதி நிறுவனங்கள்	64	64
ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	374	374
III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்	**466**	**474**
வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை	**7,415**	**7,424**
தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை	**6,438**	**6,678**


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப் பணிநிலையங்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.1

நிதியியல் துறையின் செயலாற்றம்

சுதந்திரத்திற்கு பின்னரான மிகத் தீவிரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சவால்கள் தோன்றியமைக்கிடையிலும் நிதியில் முறைமையின் உறுதித்தன்மை பேணப்பட்டது...



வங்கித்தொழில் துறை[1], நிதியியல் தொழில்துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன், 2022 இறுதியில் மொத்தச் சொத்துக்களில் 61.9 சதவீதத்திற்கும் வகைகூறியது. மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை மற்றும் சவால்மிக்க பேரண்ட பொருளாதார நிலைமைகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. வைப்புக்கள் நிதியிடலின் ஆதிக்கம் பெற்ற மூலமாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில், நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை மற்றும் ஏப்பிறல் 2022இல் இருபுடை மற்றும் வர்த்தகக் கடன்களின் பேரிலான வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பான அரசாங்கத்தின் அறிவித்தல் என்பனவற்றின் விளைவாக 2022இல் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

வியாபார விரிவாக்கம்

2022 இறுதியில் வங்கித்தொழில் துறையானது 11 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உட்பட 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கி 30 வங்கிகளைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறை, வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தமையின் மூலமும் வங்கித்தொழில் வலையமைப்பினை விரிவாக்கியதன் மூலமும் பொருளாதாரத்தின் நிதியியல் இடையேற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது. எனவே, 2022இல் 11 வங்கிக் கிளைகளும் 327 தன்னியக்கக் கூற்று பொறிகளும் நிறுவப்பட்ட வேளையில் 3 வங்கிக் கிளைகளும் 87 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் மூடப்பட்டன. இதன்படி, 2022 இறுதியில் வங்கித்தொழில் கிளைகளின் மொத்த எண்ணிக்கையும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் முறையே 7,424 இற்கும் 6,678 இற்கும் அதிகரித்தன.

2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை சொத்துத் தள நியதிகளில் தொடர்ந்தும் விரிவடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் துறையின் சொத்துத் தளம் ரூ.2.6 றில்லியனால் அதிகரித்து 2022 இறுதியில் ரூ.19 றில்லியனை விஞ்சியதுடன், 2021இன் இறுதியின் வளர்ச்சியான 15.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மார்சு மற்றும் ஏப்பிறல் மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 44.1 சதவீதத்தினால் தேய்வடைந்தமையானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் வளர்ச்சியில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. எனினும், மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை 2022 இறுதியில் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வளர்ச்சி 2021 இறுதியின் 14.5 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. அதேவேளை, முதலீடுகளின் வளர்ச்சியானது 2021இன் 16.4 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மதிப்பிறக்கச் செலவிலான நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ.1,635.2 பில்லியன் அதிகரிப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்களின் ரூ.29.9 பில்லியன் அதிகரிப்புமே முக்கிய காரணமாகும்.

வைப்புக்கள் நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்குவதுடன் 2022 இறுதியில் மொத்தப் பொறுப்புக்களில் 78.8 சதவீதத்தினைப் பிரதிபலித்த வேளையில் கடன்பாடுகள் மொத்தப் பொறுப்புக்களில் 9.6 சதவீதத்திற்கு வகைகூறின. தவணை வைப்புக்கள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்த வேளையில் மொத்த வைப்புக்களில் இவற்றின் பங்கு 2021 இறுதியின் 61.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 67.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 2022 இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு மற்றும் கேள்வி வைப்புக்கள்

1 வங்கித்தொழில் துறையானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகின்றது. மத்திய வங்கி உள்ளடக்கப்படவில்லை.

அட்டவணை 8.3

வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)		மாற்றம் (%)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2021 (அ)	2022 (ஆ)
சொத்துக்கள்						
கடன்கள் மற்றும் பெறத்தக்கவை	10,726.7	63.8	11,337.9	58.4	14.5	5.7
முதலீடுகள்	4,968.5	29.5	5,934.3	30.6	16.4	19.4
ஏனையவை (இ)	1,131.0	6.7	2,144.3	11.0	15.0	89.6
பொறுப்புக்கள்						
வைப்புக்கள்	12,879.2	76.5	15,299.1	78.8	13.3	18.8
கடன் பெறுகைகள்	2,172.9	12.9	1,872.5	9.6	27.1	-13.8
முதலீட்டு நிதிகள்	1,348.3	8.0	1,593.4	8.2	13.1	18.2
ஏனையவை	425.8	2.5	651.5	3.4	20.4	53.0
மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்	16,826.2	100.0	19,416.6	100.0	15.1	15.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.4

வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)		மாற்றம் (%)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2021 (அ)	2022 (ஆ)
கேள்வி வைப்புக்கள்	888.0	6.9	1,060.0	6.9	25.9	19.4
சேமிப்பு வைப்புக்கள்	4,011.8	31.1	3,713.0	24.3	19.7	-7.4
தவணை வைப்புக்கள்	7,860.4	61.0	10,393.0	67.9	8.6	32.2
ஏனைய வைப்புக்கள்	118.9	0.9	133.2	0.9	80.0	12.0
மொத்த வைப்புக்கள்	12,879.2	100.0	15,299.1	100.0	13.3	18.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக்குறிப்பு 9
ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் நெருக்கடியைத் தடுப்பதிலும் வங்கித்தொழில் துறையில் பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டமைப்பதிலும் மத்திய வங்கிகளின் வகிபாகம்

1. அறிமுகம்

2021ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தச் சொத்துக்களின் 61.9 சதவீதத்திற்கு வகைகூறிய இலங்கையின் வங்கித்தொழில் துறையானது, நிதியியல் துறையில் ஒரு முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளதோடு, நாட்டினுடைய நிதியியல் இடையீட்டேற்பாடுகளில் ஒருங்கிணைந்த பெரும்பங்கை வகிக்கிறது. சமீபகாலத்தில் பன்முக சவால்கள் இருந்தபோதிலும், போதுமான மூலதனத்தாலும் இடர்தாங்கக்கூடிய திரவத்தன்மையாலும் பிரதிபலிக்கப்பட்ட இலங்கையின் வங்கித்துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையோடுயிருந்தது. இருப்பினும், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 பெருந்தொற்றுநோய் சமீபத்தைய பாதகமான பேரண்டப் பொருளியல் அபிவிருத்திகள் ஆகியன உள்ளடங்களான பல்வேறு காரணங்களால் வங்கித்தொழில் துறையில் முன்னெப்போதுமில்லாத மட்டங்களில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் நோக்குகையில், வலுவான நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பொன்று இருக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

2. வங்கியியல் துறையினுடைய உறுதிப்பாட்டின் முக்கியத்துவம் உலகளாவிய நெருக்கடிகளிலிந்து கற்றுக்கொண்ட பாடங்களும்

பொருளாதார வளர்ச்சியினையும் மக்களின் நலனோன்புகையினையும் ஊக்குவிப்பதற்கான வினைத்திறன்மிக்க நிதியியல் இடையேற்பாடுகளை வழங்குவதில் வங்கித்தொழில் துறை இன்றியமையாததாக விளங்குகின்றது. இது பொருளாதார அதிர்வுகளையும் அழுத்தமிக்க சூழ்நிலைகளையும் கொண்ட காலங்களில் மிக முக்கியமானதாகவிருக்கின்றது. எவ்வாறாயினும், வரலாறு முழுவதும் வங்கித்தொழில் துறை அமைப்பில் நம்பிக்கை மீறுவதும், வைப்பாளர்கள் விலகிச்செல்வதும் உலகமுழுவதும் பொருளாதார நடவடிக்கை மீது குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தினை விளைவித்து, ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் நெருக்கடிகளுக்கு வழிவகுத்திருக்கிறது. இவ்வாறான ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நெருக்கடிகளின் பொதுவான காரணங்களாக உயர்வான முடுக்கி, அதிகரிக்கின்ற கொடுகடன், மதிப்பீட்டு தரநியமங்கள் பலவீனமடைதல், ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் குறைபாடுகள், ஆதன மற்றும் ஏனைய சொத்து பணவீக்கம், அரசாங்கத்திற்கான மிதமிஞ்சிய கடன் அளவு, குறைவான மேற்பார்வை, மற்றும் அவ்வப்போது ஏற்படுகின்ற உயர்வான வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை ஆகியன பிரதானமாக இனங்காணப்படலாம். கிழக்காசிய நெருக்கடி (1997), உலகளாவிய நிதியியல் நெருக்கடி (2007-2008) மற்றும் ஐரோப்பிய நெருக்கடி (2010) போன்ற பன்னாட்டு உதாரணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நெருக்கடியிலிருந்து விளைகின்ற நிதியியல் இடர்கள் பொதுவாக பல ஆண்டுகளுக்கு நீடித்து பெருமளவில் கணிசமான பொருளாதார சுருக்கங்களையும் உயர்வான இறைசார்ந்த செலவுகளையும் தோற்றுவித்து ஒட்டுமொத்த சமூகத்தினையும் பாதிக்கின்றன.

உலகளாவிய நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

2007-2008 உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது கடந்த கால நெகிழ்வுகளை ஒத்த பண்புகளை கொண்டிருந்த போதிலும், நேரடியாக பாதித்த நாடுகளையும் தாண்டி எதிர்பாராத விதத்தில் உலகம் முழுவதும் தூர இடங்களுக்கும் துரிதமாக ஊடுகடத்தப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி விரைவான வேகத்தில் தொற்றியமைக்கான பிரதான காரணம், பரந்தளவான நிதியியல் வலையமைப்புக்கள் மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் இணைப்புக்கள் என்பவற்றுடன்கூடிய முன்னேறிய நாடுகளில் நெருக்கடி தோன்றியமையாகும். உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற புதிய மற்றும் கடுமையான சவால்கள், புத்தாக்கமிக்க நெருக்கடி முகாமைத்துவக் கருவிகளை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளை சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகளில் இடைவெளிகளையும் பலவீனங்களைப் புரிந்துகொள்வதற்கு உலக முழுவதுமுள்ள மத்திய வங்கிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் வழிவமைத்தது.

மேற்குறித்த பலவீனங்களைத் தீர்க்கும் நோக்குடன், முறிவடைகின்ற நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்கான முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு இதன் மூலம் நிதியியல் முறைமைக்கு தொற்றுகின்ற தாக்கத்தினையும் உண்மைப் பொருளாதாரத்திற்கான கசிவு தாக்கத்தினையும் தணிப்பதற்கும் வலுவான நிதியியல் பாதுகாப்பு வலையொன்றுடன்கூடிய செயல்திறன்வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பொன்று தேவைப்படுகின்றது என உலகளாவிய தலைவர்கள் ஒருமித்து அபிப்பிராயப்பட்டனர். செயல்திறன்வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பானது பொதுவாக பின்வரும் தூண்களை உள்ளடக்கும் (பன்னாட்டு நாணய நிதியம், 2020):

(i) நெருக்கடிக்கு முன்கூட்டிய தயார்நிலைக்கான நிறுவனசார் கட்டமைப்பு

(ii) மேற்பார்வையின் முன்கூட்டிய தலையீடு

(iii) அவசரகாலத் திரவத்தன்மை உதவி

(iv) நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்பு

(i) நெருக்கடிக்கு முன்கூட்டிய தயார்படுதலுக்கான நிறுவனசார் கட்டமைப்பு

நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பு செயல்திறன்வாய்ந்ததாக இருக்கும் பொருட்டு, நிதியியல் பாதுகாப்பு வலையின் மைய நிறுவனங்களுக்கு இடையிலான செயல்திறன்வாய்ந்த கொள்கை ஒருங்கிணைப்புடன் கூடிய வலிமையான மற்றும் சுயாதீனமிக்க நிறுவனசார் கட்டமைப்பொன்று இன்றியமையாததாகும். நிதியியல் பாதுகாப்பு வலையின் மைய நிறுவனங்களாக மத்திய வங்கி, நிதியியல் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மைகள், தீர்மான அதிகாரி மற்றும் நிதி அமைச்சு என்பன இனங்காணப்படக்கூடியது என்பதுடன் எந்தவொரு

சூழ்நிலையிலும் நெருக்கடி முகாமைத்துவ பணிகளைத் தயாரித்து, ஒருங்கிணைத்து நிறைவேற்றக்கூடியதாக இருப்பதற்கு இந்நிறுவனங்கள் தெளிவான பொறுப்பாணைமைகளையும் போதுமான சுயாதீனத்தையும் கொண்டிருக்கவேண்டும்.

(ii) மேற்பார்வையின் முன்கூட்டிய தலையீடு

வங்கித்தொழில் நிறுவனங்களின் நிதியியல் நிலைமையின் குறைபாடுகளின் எச்சரிக்கை சமிக்ஞைகளை செயலூக்கத்துடன் கண்டுபிடித்து, இதனூடாக அத்தகைய நிறுவனங்களின் நிதியியல் இடர்பாட்டுகளின் நிகழ்தகவையும் செலவுகளையும் குறைப்பதை முன்கூட்டிய மேற்பார்வை நடவடிக்கை இயலச்செய்கின்றது. செயலூக்கமிக்க மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வையினை உறுதிசெய்யும் பொருட்டு, போதுமான வளங்கள், வலுவான சட்ட அதிகாரம் மற்றும் பாதுகாப்பு, வலுவான ஆளுகைக் கட்டமைப்புடன்கூடிய தெளிவான பொறுப்பாணை மற்றும் தொழிற்பாட்டு சுயாதீனம் என்பன மேற்பார்வையாளர்களுக்கு வேண்டப்படுகின்றன.

(iii) மத்திய வங்கியின் மூலம் வழங்கப்படும் அவசரகாலத் திரவத்தன்மை உதவி

நிறுவனங்களின் கடன்தீராற்றலற்ற தன்மைக்கும் ஒட்டுமொத்தமாக நிதியியல் உறுதிபாட்டின்மைக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்ற ஒரு அல்லது சில நிதியியல் நிறுவனங்களின் தற்காலிக திரவத்தன்மையில்லாத இடர்நேர்வினைத் தணிப்பதற்கு அவசரகால திரவத்தன்மை உதவி மத்திய வங்கிகளை இயலச்செய்கின்றமையினால் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பில் இன்றியமையாத பாகமொன்றினை இது வகிக்கிறது. அதற்கமைய, நெருக்கடி தயார்நிலைக் கருவியொன்றாக அவசரகால திரவத்தன்மை உதவிக்கான கட்டமைப்புகள் மத்திய வங்கிகளினால் சிறப்பான முறையில் தாபிக்கப்படவேண்டும். எனினும், அவசரகால திரவத்தன்மை உதவியினை வழங்குதல் மத்திய வங்கிகளின் தற்றுணிபில் அமைந்திருக்கவேண்டும். மேலும், அவ்வாறு திரவத்தன்மை வழங்குவது மத்திய வங்கி ஐந்தொகையினைப் பாதுகாக்கின்ற அதேவேளை நெறிமுறை சார்ந்த அபாயங்களைக் குறைக்கின்ற பாதுகாப்புகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு முன்னர், சிறந்த பிணையுறுதி இல்லாத வங்கி கடன்தீராற்றலற்றது என்ற ஊகத்துடன் அத்தகைய வங்கிகளுக்கு மாத்திரம் மத்திய வங்கிகள் அவ்வாறான பிணையுறுதிகளை கடனாக வழங்கவேண்டும் என்பது அவசரகால திரவத்தன்மை உதவி பற்றி துணையளிக்கின்ற எண்ணக்கருவாகவிருந்தது. அவசரகால திரவத்தன்மை உதவி கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை ஏற்படுத்துவதற்கு மத்திய வங்கிகளுக்கு உதவிய உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட முக்கிய பாடங்கள் பின்வருமாறு தொகுக்கப்படலாம் (பன்னாட்டு நாணய நிதியம் 2020):

(அ) தகைமை - அவசரகால திரவத்தன்மை உதவிக்கு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற முக்கிய வங்கிகள் மாத்திரமின்றி அனைத்து வங்கிகளும் தகைமை பெற்றதாக இருக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிப்பாதுகாப்பதற்கு ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற வங்கியல்லா நிதியியல் கம்பனிகளுக்கும் அவசரகால திரவத்தன்மை உதவியினை வழங்குவதற்கு இயலுமை இருக்கவேண்டும்.

(ஆ) கடன்தீராற்றல் - கடன்தீராற்றல்மிக்கதும் வளம்பெறக்கூடியவையுமாக மேற்பார்வையாளரால் கருதக்கூடிய நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் தற்றுணிபில் அவசரகால திரவத்தன்மை உதவி வழங்கப்படவேண்டும். கடன்தீராற்றல் மற்றும் வளம்பெறக்கூடிய தன்மை மதிப்பீடானது முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய நிபுணத்துவ தீர்மானங்களை ஈடுபடுத்தவேண்டும். கடன்தீராற்றலற்ற நிறுவனங்களுக்கு அவசரகால திரவத்தன்மை உதவி வழங்கப்படுகின்ற விடத்தான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திடமிருந்து நட்டோத்தரவாதம் கோரப்படவேண்டும்.

(இ) பிணையுறுதி - அவசரகால திரவத்தன்மை உதவி வசதிகள், எப்போதும் போதுமானளவு பிணையுறுதியளிக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதுடன் பிணையுறுதிகளாக பலவகையான பொறுப்பளிக்கப்படாத சொத்துகளை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கிகள் இயலுமானதாக இருக்கவேண்டும். இணைத்தரப்பினர் தவணை தவறுகின்ற சந்தர்ப்பத்தில் பிணையுறுதியினைத் தீர்ப்பனவுசெய்து, முகாமைசெய்து, தேறல்செய்வதற்கான ஆற்றல்வாய்ந்த செயன்முறையுடன் ஒன்றிணைந்த முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்புகள் உள்ளடங்கலாக அத்தகைய சொத்துக்களை பெறுமதிமதிப்பீடு செய்வதற்கான முறைமைகளும் நடைமுறையில் இருக்கவேண்டும்.

அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவதில் காணப்படும் முக்கிய சவால்கள் - ஏற்றுக்கொள்ளாத நிலை, அதாவது, சாத்தியமாக பொதுமக்களின் நம்பிக்கை இழப்பு, வெளிநாட்டு நாணயத்தில் அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவது பற்றிய கரிசனைகள் மற்றும் தீர்மானத்திற்கு உட்பட்டுள்ள வங்கியொன்றுக்கு அவசரகால திரவத்தன்மை உதவி வழங்குவதல் போன்றன காரணமாக மத்திய வங்கி திரவத்தன்மை உதவியை அணுகுவதற்கு வங்கிகளின் விருப்பமின்மை என்பன மத்திய வங்கிகளால் எதிர்கொள்ளப்படுகின்ற முக்கிய சவால்களாகும்.

(iv) நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு பங்கம் ஏற்படுத்தாது நலிவான அல்லது முறிவடைகின்ற வங்கிகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் செயல்திறன்வாய்ந்த தீர்மானக்கட்டமைப்பு மிகவும்

முக்கியமானது என்ற காரணத்தினால் வலுவான நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு அவ்வாறான செயல்திறன்வாய்ந்த தீர்மானக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. வங்கித்தொழில் நிறுவனமொன்று கடன்தீராற்றலற்றதாகின்ற சாத்தியமிக்கதாக இனங்காணப்பட்டதுடன் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் கடுமையான மீறுகையிலிருப்பதாக இனங்காணப்பட்டவுடன் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பேணுகின்ற அதேவேளை பாரிய பொருளாதாரத்திற்கான ஏதேனும் கசிவுத்தாக்கங்களைத் தடுக்கும்பொருட்டு ஆற்றல்வாய்ந்த, தீர்க்கமான மற்றும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக சிறந்த தீர்மான நடத்தைகளில் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிக்காக்கின்ற அதேவேளை வைப்பாளர்களின், மற்றும் கடன்கொடுநர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு துரிதமாக செயற்படுவதற்கான அதிகாரங்களையும் கருவிகளையும் அதிகாரிகள் கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்வதை இலக்காகக் கொள்கின்றது.

மிதமிஞ்சிய பணவீக்கம், அதிகரிக்கும் வட்டிவீதம் மற்றும் ஏற்றத்தாழ்வுடனான நிதிச் சந்தைகளால் சுட்டப்படுகின்றவாறு குறிப்பாக கொவிட்-19 பரவத்தொடங்கியதிலிருந்து. உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட உலக நிதி உறுதிப்பாட்டு இடர்பாடுகள் அதிகரிக்கும் போக்கினையே பிரதிபலிக்கின்றன. ஐரோப்பிய சந்தைகளின் நிச்சயமற்ற தன்மைகள் செயற்றிறன் வாய்ந்த நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் அவசியத்தை கோடிகாட்டியபோது கலிபோனிய சிலிக்கன் வலி வங்கி, நியூயோர்க் சிக்நேச்சர் வங்கி போன்றவற்றின் சமீபத்திய முறிவுகள் உலகளாவிய நிதியியல் முறைமைகளில் பாரிய அதிர்வுகளைத் தோற்றுவித்துள்ளது.

3. நிதியியல் முறைமை நெருக்கடியைத் தவிர்ப்பதும், இலங்கை வங்கித்தொழிற்றுறை மீதான பொதுமக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புதலும்

வரலாற்றிலேயே பாரிய சுகாதார மற்றும் பொருளாதார அனர்த்தத்தை ஏற்படுத்திய கொவிட்-19 உலகளலாவிய நோய்த்தொற்று பரவலுடன் 2020ஆம் ஆண்டிலிருந்து கடந்த 3 வருடங்களாக இலங்கை பல கோணங்களைக் கொண்ட சவால்களுக்கு முகங்கொடுத்தது. பொருளாதார நடவடிக்கைகள் மெதுவாக மீளுகின்றமை அத்துடன் அரசியல் ஸ்த்திரமின்மைகள் மற்றும் பொருளாதாரத்தின் கட்டமைப்புசார் பிரச்சனைகள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைதல் நாணயப்பெறுமதி இறக்கம், இறைசார்ந்த துறை சமமின்மைகள், உயர்வான பணவீக்கம், அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் பற்றாக்குறை என்பன உள்ளடங்கலாக அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் தோன்றுவதற்கு இலங்கையில் நோய்த்தொற்றுக்கு பிந்திய இடையூறுகள் வழிவகுத்தன. இவ்வசாதாரண சூழ்நிலைகள் வங்கித்தொழில் மீது எதிர்பாராத அழுத்த மட்டத்தினைத் தோற்றுவித்து பல்வேறு சவால்களுக்கு இட்டுச்சென்றுள்ளது.

3.1 சவால்களுக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் வழிமுறைகள்

கீழ்க்கட்டப்பட்டவாறு சாதாரண சூழ்நிலையின்போது இலங்கை மத்திய வங்கியிடமிருந்து திரவத்தன்மையினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரிமம்பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு (இதற்குப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனப்படும்) பல வகையான மாற்றுவழிகள் காணப்படுகின்றன.

(அ) துணைநில் கடன்வழங்கல் வசதிகள் - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பிணையத் தேவையுள்ள ஓரிரவுக் கடன்கள்

(ஆ) நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகள் - உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கான பிணையத் தேவையுள்ள நாளுக்குள்ளான கடன்கள்

(இ) தவணை மீள்கொள்வனவு வசதிகள் திறந்த சந்தை நடவடிக்கைகள் ஏலம் ஊடாக உரிமம்பெற்ற வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் திரவத்தன்மை

எனினும், இம்மாற்றுவழிகள் கடுமையான பாதகமான பொருளாதார மற்றும் சந்தை அபிவிருத்திகளில் தோற்றம்பெறுகின்ற அசாதாரண சூழ்நிலைகளின்போது வங்கித்தொழில் துறைக்கான போதுமான திரவத்தன்மையினை உறுதிசெய்யதிருக்கலாம்.

3.2 இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் நெருக்கடி முகாமைத்துவக் கருவிகள்

உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவல் தொடங்கியதிலிருந்து இலங்கையில் தொடர்ந்த அண்மைக்கால அசாதாரண பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமை மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் போதிய மட்டங்களுக்கு துறையின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதன் மூலம் வங்கித்தொழில் துறையின் நெருக்கடிக்கு முன்னரான தயார்நிலையினை வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி மூலம் பல்வேறு வழிமுறைகள் தொடங்கப்பட்டன. ஏனையவற்றுக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்கூட்டிய வழிமுறைகளை வங்கித்தொழில் துறைக்கான அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான கட்டமைப்பு வங்கித் தீர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்தல், நெருக்கடி முகாமைத்துவக் குழுவை நிறுவுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகள் என்பன பற்றி இக்கட்டுரை பிரதானமாக விளக்குகின்றது.

3.2.1 இறுதிக்கடன் ஈவோன் - அவசரகாலத் திரவத்தன்மை உதவி மீதான கட்டமைப்பு

தற்போதுள்ள நாணயவிதிச் சட்டத்தின் கீழ், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பேணுதல் எனும் இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோளின் கீழ் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையினை உறுதிசெய்கின்ற அதிஉச்சப் பொறுப்புடமை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில், நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் ஊக்குவிப்பதனூடாக நிதியியல் முறைமையில் தோன்றக்கூடிய எவையேனும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு இறுதிக்கடன் ஈவோனாகச் செயற்படுதல் இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள முக்கிய வகிபாகங்களில் ஒன்றாகும்.

இலங்கை வங்கித்தொழில் துறைக்கான இறுதிக்கடன் ஈவோன் என்ற வகையில் ஏதேனும் ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற நிதியியல் பீதியினைத் தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் பாதகமான அபிவிருத்திகளுக்கு முன்கூட்டியே நாணய விதிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற ஏற்புடைய ஏற்பாடுகளை /வழிமுறைகளை செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டு பொறுப்புடையதாகவிருக்கின்றது. அதற்கமைய, நாணய மற்றும் வங்கித்தொழில் உறுதிப்பாடு மீதான ஏதேனும் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு நாணய விதிச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது 2020இல் கட்டமைப்பொன்றினை இலங்கை மத்திய வங்கி நிறுவியது. பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான கொடுகடன் வழங்களை உறுதிசெய்வதற்கும் வங்கித்தொழில் நிறுவனங்களின் திரவத்தன்மை நிலையினை வலுப்படுத்தி இதனூடாக நிதியியல் முறைமையின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவது அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட முக்கிய வெளிவரும் விளைவாகயிருந்தது.

2022இல் இலங்கை மத்திய வங்கியின் அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பானது பரந்தளவிலான விலைமதிப்பீட்டு முறையுடன்கூடிய பிணையுறுதிகள், திரவத்தன்மை மற்றும் கடன்தீராற்றல் மதிப்பீடு மீதான மூலப்பிரமாணம், மேற்பார்வை நடவடிக்கைகள் அத்துடன் கட்டமைப்பு என்பவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்கள் மத்தியில் மேம்பட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறை என்பவற்றை கூட்டிணைப்பதன் வாயிலாக மேலும் மேம்படுத்தப்பட்டது.

3.2.2 கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள்

(அ) **தகைமையுடைய நிதியியல் நிறுவனங்கள்:** கிடைக்கப்பெறுகின்ற அனைத்து திரவத்தன்மைகளையும் வங்கிகள் பயன்படுத்தியுள்ளவிடத்து, தற்காலிக திரவத்தன்மை இடர்பாடொன்றில் காணப்படுகின்ற அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளும்

(ஆ) **அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பின் வழங்குதல்** இலங்கை மத்திய வங்கியின் தற்றுணிவில் காணப்படும். ஆகையினால், உரிமம்பெற்ற வங்கிகளின் உரிமையாக கருத்திற்கொள்ளப்படாது.

(இ) **நாணயம்:** அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பானது எல்லா நேரங்களிலும் இலங்கை ரூபாவில் மாத்திரம் வழங்கப்படும் என்பதுடன் எவையேனும், சாத்தியமான செலாவணிவீத இடர்நேர்வுகள் நாணய பொருத்தமின்மைகள் மற்றும் அறவீட்டு இடர்நேர்வுகள் என்பவற்றைத் தணிக்கும் பொருட்டு வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படாது.

(ஈ) **வட்டிவீதம்:** நிலவுகின்ற சந்தை வட்டிவீதங்கள் மற்றும் நாணயக் கொள்கை நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையினால் வட்டிவீதம் நிர்ணயிக்கப்படும்.

(உ) **அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பை வழங்குவதற்கான ஏற்றக் கொள்ளத்தக்கதான பிணையுறுதிகள்:** இலங்கை அரச பிணையங்கள், காணிகள் மற்றும் கட்டடங்கள் அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட பிணையுறுதிகளால் பிணையளிக்கப்பட்ட கிடைக்கப்பெறத்தக்க கடன்கள் போன்றவற்றைக் கொண்ட பலவகையான பிணையுறுதிகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) **கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பு கோரிக்கையை மதிப்பிடுதல்:** இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகை மீதான ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தடுக்கும் நோக்குடன் கடன்தீராற்றல்மிக்கதாக கருதப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிக்கு மாத்திரம் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்படும். அவசரகால கடன் உதவி கோரும் வங்கிகள் போதுமான பிணையங்களைக் கொண்டிராத பட்சத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு இலங்கை அரசாங்கத்தால் வெளிப்படையாக வழங்கப்படும் உத்தரவாதத்தோடு, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் ஏதேனும் ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கின்ற இடர்நேர்வுகளைக் தணிப்பதற்கு அசாதாரண சூழ்நிலைகளின் கீழ் எதிர்காலத்தில் கடன்தீராற்றதாகவிருப்பதனை அல்லது எதிர்காலத்தில் கடன்தீராற்றதாக வரக்கூடிய சாத்தியத்தினை மதிப்பிட்டு வங்கியொன்றிற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் வசதி வழங்கப்படலாம்.

(எ) **கடன்கள் மற்றும் முற்பணங்கள்** வசதியைப் பெற்றுக்கொள்கின்ற வங்கிகள் மீதான மேற்பார்வை நடவடிக்கைகைகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வசதியைப் பெற்றுக்கொள்கின்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கியின் தீவிரமான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்ற அதேவேளை கடன்வழங்கல் சொத்துப்பட்டியலை விரிவுபடுததல் மற்றும் தற்றுணிவுக் கொடுப்பனவுகள் என்பன தொடர்பில் அத்தகைய வங்கிகள் மீது பல்வேறு மேற்பார்வை கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

3.2.3 நிதியியல் நிறுவனங்களின் மறுசீரமைப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

வங்கித்தொழில் துறைக்கான சவால்மிக்கத் தோற்றப்பாட்டினையும் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வழிமுறைகளை வலிமைப்படுத்துவதற்கான தேவையினையும் பரிசீலனையில் கொண்டு நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் அவசர முன்னுரிமையொன்றாக உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதை இலங்கை மத்திய வங்கி இனங்கண்டுள்ளது. அதன் பிரகாரம் உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானம், வைப்பு மற்றும் முடிவுறுத்தல் தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளடக்குவதன் மூலம் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திற்கான துணை நிரப்பியாக வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை வரைவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை வரைகின்றபோது நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கான செயல்திறன்வாய்ந்த தீர்மானக் கட்டமைப்புகளின் முக்கிய கூறுகளையும் வைப்புக் காப்புறுதியாளர்களுக்கான பன்னாட்டு அமைப்பினால் வழங்கப்பட்ட செயல்திறன்வாய்ந்த வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான மையக் கோட்பாடுகளையும் இலங்கை மத்திய வங்கி கருத்திற்கொண்டது. முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை 2023 காலப்பகுதியில் இயற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

3.2.4 நெருக்கடி முகாமைத்துவக் குழுவொன்றைத் தாபித்தல்

தற்போது இலங்கையில் எதிர்பாராத மட்டத்தில் காணப்படும் நிதியியல் மற்றும் பொருளாதார இடர்பாடுகள் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் மீதான தகைமைவாய்ந்த அதிகாரிகளுக்கு இடையில் கொள்கை ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துவதற்கான அவசரத் தேவையினை தோற்றுவித்துள்ளன. நெருக்கடி முகாமைத்துவத்திற்கு நிறுவனசார் கட்டமைப்பொன்று இல்லாமை ஒருங்கிணைப்பு தோல்வியடையும் இடர்நேர்வினைக் குறைப்பதற்கும் நிதியியல் நெருக்கடி தாக்கத்தினைக் குறைப்பதற்கும் நெருக்கடி முன்கூட்டிய தயார்நிலைமீது கவனம் செலுத்துவதற்கான இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சிற்கும் இடையிலான கொள்கைசார்ந்த ஒருங்கிணைப்பிற்கான நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவொன்றினை ஏற்படுத்துவதற்கு தூண்டியுள்ளது. முன்மொழியப்பட்ட நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவானது நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் மீதான தொழில்நுட்பக்குழுவொன்றினால் வழங்கப்படும் உதவியினைப் பெற்றுக்கொள்ளும் என்பதுடன் நெருக்கடியான மற்றும் நெருக்கடியில்லாத காலங்கள் இரண்டிலும் தொழிற்படும். நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு ஆளுநரைத் தலைவராகவும் நாணயச் சபை உறுப்பினரொருவர், நிதியமைச்சின் செயலாளர், நிதியமைச்சின் பிரதிச் செயலாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்டது.

3.2.5 இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்படுகின்ற மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகள்

வங்கித்தொழில் துறை மீது அண்மைக்கால பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் காரணமாக வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் தொடர்பில் நாணயச் சபைக்கு அறிக்கையிடுகின்ற அதேவேளை முன்மதிமிக்க தேவைப்பாடுகள் மீதான உரிமம்பெற்ற வங்கிகளின் முனைப்பான கண்காணித்தலையும் மேற்பார்வையையும் தீவிரப்படுத்துவதை அவ்வப்போது மேம்படுத்துகின்றது. நிதிக்குறிக்காட்டிகளை முனைப்புடன் கண்காணித்தல், அடையாளப்படுத்தப்பட்ட வங்கித்தொழில் செயற்பாடுகளுடைய கருத்தாய்வுகளை மேற்கொள்ளல், திரவத்தன்மை மற்றும் மூலதன நிலைமைகள் தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அதிகாரிகளோடும் பிரதான முகாமைத்துவப் பணியாளர்களோடும் கிரமமான சந்திப்புக்களை மேற்கொள்ளல் போன்றன தீவிரப்படுத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுள் அடங்குகின்றன. மேலும், தனிப்பட்ட வங்கிகளின் நிலைப்பாடுகள் மற்றும் நெருக்கடிக்கான அவற்றின் தயார்நிலைமைகளை நன்றாக அறிந்துகொள்வதற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் இயக்குநர் சபைகளுடனும் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்களுடனும் நாணயச் சபை தொடர்ச்சியான சந்திப்புக்களை நடாத்தியது.

3.2.6 தொடர்பாடல் தந்திரோபாயம்:

வங்கித்தொழில் துறையில் பொதுமக்களின் நம்பிக்கைளை உறுதிப்படுத்தலை இலக்காகக் கொண்டு தற்போதுள்ள தொடர்பாடல் தந்திரோபாயமானது நெருக்கடித் தயார்நிலைக்கான பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியதாக விரிவாக்கப்படுகின்றது.

முன்னோக்கிய பாதை: நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் பொதுமக்கள் நம்பிக்கையினையும் பாதுகாக்கும் நோக்குடன் முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை தொழிற்படுத்தி) உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அவசரகால கடன் மற்றும் முற்பணங்கள் வழங்குவதற்கான தயார்நிலையினை உறுதிப்படுத்துவதை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி முனைகின்றது.


உசாத்துணைகள்:

1. International Monetary Fund. (2020). Managing Systemic Banking Crises - New Lessons and Lessons Relearned. Departmental Paper No. 2020/003. International Monetary Fund, Washington D.C.

முறையே 24.3 சதவீதத்திற்கும் 6.9 சதவீதத்திற்கும் வகைகூறின. இதற்கிணங்க, நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு விகிதம் 2021இன் 38.0 சதவீதத்திலிருந்து 2022இல் 31.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் காணப்பட்ட ரூ.462.8 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.300.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்து 13.8 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. 2021இல் இது 27.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு, 55.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் முக்கிய காரணமாக விளங்கி நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் தாக்கத்தினைப் பிரதிபலித்த வேளையில் ரூபாக் கடன்பாடுகள் ரூ.171.5 பில்லியனால் குறைவடைந்து, 2022 காலப்பகுதியில் 11.5 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.

சவால்மிக்க வியாபாரச் சூழலின் காரணமாக ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் ரூ.26.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்து, 2021இன் 2.7 சதவீத சுருக்கமான ரூ.131.5 பில்லியன் கொண்ட குறைப்புடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன. ஏற்றுக்கொள்ளல்கள், ஆவண ரீதியான கொடுகடன், வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பனவற்றில் முறையே ரூ.318.3 பில்லியன், ரூ.204.2 பில்லியன், ரூ.172.4 பில்லியன் மற்றும் ரூ.171.7 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. அதேவேளை, எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள், உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் 2022 காலப்பகுதியில் முறையே ரூ.470.9 பில்லியன், ரூ.122.6 பில்லியன் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

வரைபடம் 8.2
வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2022 இறுதியில் உள்ளவாறு)




வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வுகள்

கொடுகடன் இடர்நேர்வு


2022ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக காணப்பட்ட சாதகமற்ற வியாபார நிலைமைகளின் காரணமாக, குறிப்பிட்ட துறைகளிலுள்ள பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கடன் மீள்கொடுப்பனவுகள் மீது படுகடன் சட்ட இசைவுத்தாமதங்களும் சலுகைகளும் நீடிக்கப்பட்டன. இதன்படி, கடன்களையும் பெறத்தக்கவைகளையும் செயற்படா வகைகளுக்குள் வகைப்படுத்துவது சட்ட இசைவுத்தாமதம்/ சலுகைக் காலப்பகுதியில் முடக்கப்பட்டிருந்ததுடன், சட்ட இசைவுத்தாமதம்/ சலுகைகள் நிறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து வழமையான வகைப்படுத்தல் விதிகள் பிரயோகிக்கப்பட்டன. எனினும், வங்கிகள் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடுகின்ற நோக்கங்களுக்காக இடர்நேர்வுகள் அதிகரித்துள்ள துறைகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தன. சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ், கொடுகடன் வசதிகளை வகைப்படுத்துவது முடக்கப்பட்டுள்ள போதும், கட்டம் 3 கடன்களினால் (எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உட்பட) எடுத்துக்காட்டப்பட்டவாறு செயற்படாக் கடன்கள் 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.20.1 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.447.3 பில்லியனால் அதிகரித்து 53.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து, 2022 இறுதியில் ரூ.1.3 நில்லியனை அடைந்தது.

மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு (எடுப்பனவு செய்யப்படாத தொகைகள் உட்பட) செயற்படாக் கடன் விகிதம் 2021 இறுதியின் 7.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு கட்டம் 3 கடன்களில் ஏற்பட்ட உயர் வளர்ச்சியும் கொடுகடனில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியுமே காரணமாகும். அதேவேளை, மொத்த பெறுமதி இழப்பு இக்காலப்பகுதியில் 60.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2022 இறுதியில் ரூ.909 பில்லியனை அடைந்தது.

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் கட்டம் 3 கடன்கள்



வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான பழுதுறல்



வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் 68.2 சதவீதமான கடன்கள் நுகர்வு, கட்டடவாக்கம், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தயாரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய 5 துறைகளில் குவிந்து காணப்பட்டன. போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், சுற்றுலா, கட்டடவாக்கம், தயாரிப்பு, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், கலைகள், பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம் மற்றும் கல்வித் துறைகளின் மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்களின் விகிதம் (எடுப்பனவு செய்யப்படாத தொகை நீங்கலாக) 2022 இறுதியில் மொத்த வங்கித்தொழில் துறையின் சராசரியான 11.1 சதவீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருந்தது. மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் குறிப்பிட்ட சில துறைகளில் உயர்ந்தளவில் பதிவுசெய்யப்பட்டமையோடு இத்துறைகளில் வங்கித்தொழில் துறையின் உயர்ந்த வெளிப்படுத்துகைகளை எடுத்துக்காட்டுவதனால் வங்கிகள், இத்துறைகள் தொடர்பிலான வெளிப்படுத்துகைகளுக்காக, உள்ளக ரீதியாக மிகக் கடுமையான கொடுகடன் இடர்நேர்வு தணிப்பு பொறிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

சந்தை இடர்நேர்வு

வட்டி வீத உணர்திறன் விகிதம்[2] 2021 இறுதியின் 79.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 76.3 சதவீதத்திற்கு குறைவடைந்தமையின் மூலம் வட்டி வீத இடர்நேர்வுகளுக்கான வெளிப்படுத்துகை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம் ரூ.11.5 பில்லியனாக விளங்கியதுடன் இது 2021 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.4 பில்லியனிலும் பார்க்க உயர்வானதாகும். இதற்கு. இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய அரச பிணையங்கள் மீதான உயர் விளைவுகளின் விளைவாக, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் அரச பிணையங்களை நோக்கி கூடுதலான நிதியங்கள் திசைதிருப்பப்பட்டமையே காரணமாகும்.

வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு 2022ஆம் ஆண்டு முழுவதும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதி மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமான சொத்துப்பட்டியலூடான சந்தைப் பெறுமதியின் கீழும் பட்டியலிடப்பட்ட பங்குரிமைகள் 2022 இறுதியில் முறையே ரூ.7.4 பில்லியனாகவும் ரூ.2.2 பில்லியனாகவும் விளங்கின. மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டிலில் பங்குரிமை முதலீடுகளின் குறைந்த பங்கு, பங்குரிமை விலைத் தளம்பல்கள் காரணமாக வங்கித்தொழில் துறைக்கு ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் குறைவாக இருக்கும் என்பதனை உறுதிப்படுத்தியது.

வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 133.2 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 659.4 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமைக்கு அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்ந்தளவிலான வீழ்ச்சி தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையின் நீண்ட நிலைமை அதிகரிப்பதற்குப் பங்களித்தது. ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் வங்கிகளுடனான கடன்கள் மற்றும் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இதன்படி, வங்கிகளின் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2022 இறுதியில் 4.7 சதவீதமாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறை 2022 காலப்பகுதியில் தேறிய வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபமாக, 2021 காலப்பகுதியின் ரூ.26.3 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.28.1 பில்லியனைப் பதிவுசெய்தது.

2 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் பங்காக வட்டி உழைக்கின்ற சொத்துக்களின் விகிதம் கணிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 8.5
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் துறைசார் உள்ளடக்கம்

துறைகள்	தொகை ரூபில் (அ)	மொத்தக் கடன்களின் பங்கு (%)	மொத்தக் கடன்களுக்கான கட்டம் 3 கடன்கள் (%)
நுகர்வு	1,864.4	16.4	4.7
கட்டடவாக்கம்	1,795.5	15.8	16.1
மொத்த மற்றும் சில்லறை வாணிபம்	1,716.3	15.1	12.8
தயாரிப்பு	1,243.9	11.0	14.7
உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்	1,115.3	9.8	4.8
வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி	920.3	8.1	11.8
வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல்	593.4	5.2	6.1
சுற்றுலா	525.7	4.6	23.4
நிதியியல் சேவைகள்	458.9	4.0	5.5
சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள்	400.2	3.5	7.4
போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்	302.7	2.7	26.1
தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள்	133.2	1.2	7.0
நிதி அமைச்சுக்கான கடன் வழங்கல்கள்	109.2	1.0	-
தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள்	81.0	0.7	10.9
கல்வி	65.1	0.6	12.5
கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு	12.8	0.1	12.7
மொத்தக் கடன்கள்	11,337.9	100.0	11.1


(அ) தற்காலிகமானது
மூலம்: இலங்கை மத்திய வங்கி

திரவத்தன்மை இடர்நேர்வு

2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை திரவத்தன்மையின் மீது கடுமையான அழுத்தங்களைக் அனுபவித்தது. வங்கித்தொழில் துறையின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் குறைந்தபட்சத் தேவைப்பாடான 20 சதவீதத்திற்கும் மேலாக நியதி திரவத்தன்மைச் சொத்து விகிதத்தினைப் பேணிய போதும் இது 2021 இறுதியில் காணப்பட்ட 33.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 29.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில், குறிப்பிட்ட சில உள்நாட்டு வங்கிகள் அவர்களது நாளாந்தத் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்படும் துணைநில் வசதிகளின் மீது பெருமளவிற்கு தங்கியிருந்தன. வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுகடன் விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2022 காலப்பகுதியில் கொடுகடனில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சி காரணமாக அமைந்த வேளையில், மொத்த சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களினதும் வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதமும் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

2022இன் இறுதியில் வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மைக் காப்பு விகிதம் முறையே 237.5 சதவீதமாகவும் 191.2 சதவீதமாகவும் விளங்கி குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான


வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

90 சதவீதத்தினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது. திரவத்தன்மை காப்பு விகிதம் என்பது பிரச்சனைகளேதுமற்ற உயர்தர திரவச் சொத்துக்களின் இருப்பாக விளங்குவதுடன், இது திரவத்தன்மை அழுத்த சூழ்நிலையின் கீழ் 30 நாட்கள் காலப்பகுதிக்கான வங்கிகளின் திரவத்தன்மை தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் மாற்றப்படத்தக்கதாகும். மேலும், போதுமான உறுதிப்பாட்டு நிதியியல் மூலங்களைப் பேணுமாறு வங்கிகளைத் தேவைப்படுத்துகின்ற, 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் 2022 இறுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான 90 சதவீதத்திற்கு மிக மேலே 140.8 சதவீதமாக விளங்கியது. 2022 இறுதியில் மொத்த திரவத்தன்மைச் சொத்துக்கள் ரூ.5.3 நில்லியனாக விளங்கியதுடன் அரச பிணையங்களில் இதன் முதலீடுகள் 62.9 சதவீதமாகக் காணப்பட்டது. முதிர்ச்சி இடைவெளியினைக் கண்காணிப்பதற்கான புதிய பொறிமுறையொன்று 2022இன் ஆரம்பத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, 12 மாத காலப்பகுதிக்கும் குறைவான முதிர்ச்சிக் கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல்களின் சதவீதமாக ஒன்றுசேர்ந்த முதிர்ச்சி இடைவெளி உயர்ந்த

வரைபடம் 8.6
திரண்ட வெளிப்பாய்ச்சல்களின் சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)		மாற்றம் (ரூ.பில்)	
	ரூ.பில்	பங்கு (%)	ரூ.பில்	பங்கு (%)	2021 (அ)	2022 (ஆ)
திறைசேரி உண்டியல்கள்	1,040.6	20.8	982.6	18.5	-109.3	-58.0
திறைசேரி முறிகள்	2,142.3	42.9	1,887.8	35.6	457.1	-254.5
இலங்கை அபிவிருத்தி முறிகள்	577.0	11.5	466.2	8.8	-78.8	-110.9
காசு	231.8	4.6	273.3	5.2	28.7	41.6
அழைப்புப் பணம்	177.2	3.5	385.5	7.3	-160.5	208.4
வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள்	538.9	10.8	1,144.4	21.6	69.0	605.5
ஏனையவை	290.3	5.8	161.6	3.0	-203.3	-128.7
மொத்த திரவச் சொத்துக்கள்	4,998.0	100.0	5,301.4	100.0	2.9	303.4

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி


பெறுமதிகளை எடுத்துக்காட்டியமையானது நீண்டகாலச் சொத்துக்கள் குறுங்கால நிதியிடல் சாதனங்களின் மூலம் நிதியிடப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. வங்கிகள் குறைந்தபட்ச திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியனவாக இருந்த போதும் முதிர்ச்சி இடைவெளியின் மிகையான விரிவு திரவத்தன்மை இடர்நேர்வு அதிகரிப்பதற்கு வழிவகுக்கலாம்.

இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை

இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலாபத்தன்மை குறைவடைந்து போனமைக்கு பெறுமதி இழப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வட்டிச் செலவினங்கள் 106.2 சதவீதத்தினால் அதிகரித்தமையுடன் ஒப்பிடுகையில் 74.7 சதவீதத்தினால் அதிகரித்து தேறிய வட்டி வருமானத்தில் 37.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக தேறிய வட்டி இலாபம் 2021 இறுதியின் 3.5 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானம் ரூ.207.7 பில்லியனால் அதிகரித்த வேளையில் வட்டியல்லா வருமானம் ரூ.124.1 பில்லியனால் அதிகரித்தமைக்கு 2022இல் உயர்ந்த கட்டண மற்றும் தரகு வருமானங்கள் முக்கிய காரணங்களாக அமைந்தன. வட்டியல்லா செலவினங்கள் ரூ.59.1 பில்லியனால் அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் அலுவலர் செலவு ரூ.26.8 பில்லியனால் அதிகரித்தமையாக விளங்கிய வேளையில் கடன்களுக்கான பெறுமதி இழப்புக்களும் ஏனைய இழப்புக்களும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.298.5 பில்லியனால் அதிகரித்தன. இதன் விளைவாக ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி கூட்டாண்மை வரிக்கு முன்னரான இலாபம் 2022இல் ரூ.192.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இலாப மட்டத்திலும் பார்க்க ரூ.35.3 பில்லியன் குறைவானதாகும்.

2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.150.2 பில்லியனாக விளங்கியதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 12.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. வங்கிகளின் நிலையான வருமான சொத்துப்பட்டியல் வட்டி வீத அசைவுகளால் சாத்தியமான நட்டங்கள், முதலீடுகள் அனைத்தையுமுள்ளடக்கிய ஏனைய வருமான சொத்துப்பட்டியலிலிருந்து மதிப்பிறக்கச் செலவிலான சொத்துப்பட்டியலுக்கு கணக்கீட்டு நெகிழ்ச்சித்தன்மை நியதிகளில் ஒருமுறை மறுவகைப்படுத்தப்பட்டமையின் மூலம் ஓரளவு தணிக்கப்பட்டது. இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி சொத்துக்கள் மீதான வருவாயில் - வரிக்கு முன்னர் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது 2021 இறுதியின் 1.4 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 1.0 சதவீதத்திற்கு குறைவடைந்த வேளையில் பங்குரிமை மீதான வருவாய் - வரிக்குப் பின்னர் 2021இன் 13.4 சதவீதத்திலிருந்து 2022இல் 10.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது. மேலும், வினைத்திறன் விகிதம் 2021இன் 38.0 சதவீதத்திலிருந்து 2022இல் 31.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லா வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபம்

விடயம்	2021 (அ)		2022 (ஆ)	
	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்தின் % ஆக	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்தின் % ஆக
தேறிய வட்டி வருமானம்	549.9	3.5	757.6	4.0
வட்டி வருமானம்	1,193.8	7.5	2,085.2	11.0
வட்டிச் செலவினம்	643.9	4.1	1,327.6	7.0
வட்டியல்லா வருமானம்	152.9	1.0	2,77.0	1.5
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	88.6	0.6	127.5	0.7
வட்டியல்லா செலவினம்	266.8	1.7	325.9	1.7
ஊழியர் செலவுகள்	147.0	0.9	173.8	0.9
கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள்	157.6	1.0	456.1	2.4
வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான)	227.5	1.4	192.2	1.0
வரிக்கு பின்னரான இலாபம்	172.1	1.1	150.2	0.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.8
வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்


விடயம்	தொகை (ரூ.பில்)		உள்ளடக்கம் (%)	
	2021 (அ)	2022 (ஆ)	2021 (அ)	2022 (ஆ)
அடுக்கு I மூலதனம்	1,083.8	1,152.0	100.0	100.0
பங்கு மூலதனம்	352.1	366.7	32.5	31.8
நியதி ஒதுக்கு நிதிகள்	66.7	74.3	6.2	6.4
பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம்	480.5	544.5	44.3	47.3
பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள்	250.5	295.2	23.1	25.6
ஏனையவை	21.6	67.2	2.0	5.8
ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்	-87.5	-195.9	-8.1	-16.9
அடுக்கு II மூலதனம்	279.8	278.0	100.0	100.0
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள்	35.3	35.4	12.6	12.7
கீழ்மட்ட தவணை படுகடன்	160.2	135.4	57.2	48.7
பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை	84.7	107.3	30.3	38.6
ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்	-0.4	-0.2	-0.1	-0.1
மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்	1,363.6	1,429.9		

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2022 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் பெருமளவிற்கு இணங்கியொழுகுவதாகக் காணப்பட்டது. எனினும், தற்போது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமையில் புதிய மூலதனங்களைத் திரட்டுவதில் காணப்படும் சவால்களைப் பரிசீலனையில் கொண்டு உள்நாட்டு ரீதியாக கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூ.20.0 பில்லியனையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடான ரூ.7.5 பில்லியனையும் பூர்த்திசெய்வதற்கான கால அவகாசம் 2023 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது. சவால் நிறைந்த வியாபார நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈர்த்துக் கொள்ளக்கூடிய உயர்தரத்திலான மூலதனத்தினைத் திரட்டுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக, வங்கிகள் 2022 ஆண்டுப்பகுதியில் இலாபத்தினைப் பிடித்துவைத்துக் கொண்டதனூடாகவும் (ரூ.64.0 பில்லியன்) ஒதுக்குகளை அதிகரித்துக் கொண்டதனூடாகவும் (ரூ.44.7 பில்லியன்) புதிய பங்குகளை வழங்கியதன் மூலமும் (ரூ.14.6 பில்லியன்) அடுக்கு 1 மூலதனத்தினை அதிகரித்துக் கொண்டன. இவ்வாண்டுப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இது, அடுக்கு 1 மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டது.

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதன விகிதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

2022ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் அபிவிருத்திகள்

2022ஆம் ஆண்டுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி, தற்பொழுது நிலவுகின்ற குழப்பம் நிறைந்த பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணுவதற்காக ஒழுங்குவிதிகளை வெளியிடுவது மற்றும் மேற்பார்வை அணுகுமுறைகளைப் பலப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முன்மதியுடைய கொள்கை தலையீடுகளை மேற்கொண்டது. அதேநேரம், பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலும் திரவத்தன்மையினைப் பேணுவதற்கும் காத்திரமான நிதியியல் இடையேற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கும் வங்கித்தொழில் துறையினை அனுமதிப்பதற்காக, மத்திய வங்கி சில ஒழுங்குவிதிகளை எச்சரிக்கையுடன் தளர்த்தியது.

இதன்படி, தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளைக் கவனமாகப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர், மத்திய வங்கி குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இவை, மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்புக்களின் மீது எடுப்பனவுகளை மேற்கொள்ள

அனுமதித்தல், திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதிப்படுத்தல் நிதியிடல் விகிதங்களுக்கான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைக் குறைத்தல், அரச பிணையங்கள் மீதான சந்தைப்படியான நட்டங்களை இரண்டாண்டு காலப்பகுதிக்குள் படிப்படியாக கணக்கிட உரிமம்பெற்ற வங்கிகளை அனுமதித்தல், மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பதற்காக மிக நவீனத்துவம் நிறைந்த அணுகுமுறைகளை நோக்கி உரிமம்பெற்ற வங்கிகள் நகர்வதற்கு ஊக்குவித்தல், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான கால அவகாசத்தினை நீடித்தல் மற்றும் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மை மதிப்பீட்டுச் செய்முறை ஆவணத்தினைச் சமர்ப்பித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், மறுஅறிவித்தல் வரை, ஒட்டுமொத்த வங்கிக்குமாக, திரட்டப்பட்ட அடிப்படையொன்றின் மீது மொத்த சீராக்கப்பட்ட பொறுப்புக்களில் 20 சதவீதத்திற்கு குறையாததொரு தொகையினை திரவச் சொத்துக்களாக பேணவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற வழிகாட்டல்கள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகள் மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் அடிக்கடி அறிக்கையிடல் என்பனவற்றுடன், 2022 திசெம்பர் இறுதி வரை 90 சதவீதத்திற்குக் குறையாததொரு மட்டத்தில் திரவத்தன்மை காப்பு விகிதத்தினையும் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதத்தினையும் பேணுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

மேலும், தற்பொழுது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளின் காரணமாக உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் ஏனைய முக்கிய செயலாற்ற குறிகாட்டிகளின் மீதும் ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினையும் அத்துடன் திரவத்தன்மையினையும் மூலதனத் தாங்கிருப்புக்களையும் பொருத்தமான மட்டத்தில் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் மீளஅறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் 2022ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு வெளிவாரிக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை ஏற்கனவே பிரகடனப்படுத்தப்படாத காசு பங்கிலாபங்களை வழங்குதல் மற்றும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புதல் என்பனவற்றைப் பிற்போடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீண்டும் வாங்குதல், முகாமைத்துவப் படிகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து இன்றியமையாதன அல்லாத அத்துடன்/ அல்லது அவசரமல்லாத செலவினங்களை ஏற்படுத்தல் என்பனவற்றில் ஈடுபடுவதிலிருந்தும் விலகியிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட வேளையில் 2022 இறுதிவரை மூலதனச் செலவினங்களை மேற்கொள்ளும் போது உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் செலாவணி வீத அசைவுகளைப் பரிசீலனையில் கொண்டு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உட்பட உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்களின் வட்டி மீதான வரையறைகளுக்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக 2022இன் முதலரைப்பகுதியில் 1949இன் 58ஆம் இலக்கமிடப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் பல சட்டக் கட்டளைகள் விடுக்கப்பட்டன. அதன் பின்னர் சந்தை அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை என்பனவற்றின் பின்னணியில் அத்தகைய வரையறைகள் இரத்துச் செய்யப்பட்டன. இதேபோன்று, வெளிநாட்டு நாணயங்களின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் இரத்துச் செய்யப்பட்ட வேளையில் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயத்தின் திரவத்தன்மையினையும் வெளிநாட்டுச் செலாவணி வீத உறுதிப்பாட்டினையும் பேணுவதற்காக இன்றியமையாதனவல்லாத மற்றும் அவசரமல்லாத பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதிகளுக்கெதிராக அளவு வைப்புத் தேவைப்பாடுகள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன.

மேலும், 2022இல் நீடித்துநிலைத்திருக்கும் நிதி தொடர்பில் வங்கிகளுக்குப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் முன்னெடுப்புக்களை ஊக்குவிக்கின்ற தேசிய முக்கியத்துவத்தினையும் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கை தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இலங்கையின் நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் விடுக்கப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினாலும் அதனையடுத்து ஏற்பட்ட அசாதாரண பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளினாலும் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு பொதுவான மற்றும் சுற்றுலா சட்ட இசைவுத்தாமதங்களைத் தளர்த்தும் விதத்தில் பரந்தளவு சலுகைகளை வழங்குமாறு மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக் கொண்டது. உரிமம்பெற்ற வங்கிகள், தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளினாலும் அத்துடன்/ அல்லது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினாலும் வருமானம் அல்லது வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு, தனிநபர்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலாற்றலினதும் வியாபாரத்தின்/ செயற்றிட்டங்களின் இயலாற்றலினதும் அடிப்படையில், தனித்தனி அடிப்படையில் ஆராய்ந்து, 2022 திசெம்பர் இறுதிவரையான ஆறு மாத காலப்பகுதிக்குப் பொருத்தமான சலுகைகளை வழங்குமாறும் அதேவேளை,

வங்கித்தொழில் துறை உறுதிப்பாட்டின் மீதான ஏதேனும் தேவையற்ற அழுத்தங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட, மற்றும் வருமானம் அல்லது விற்பனைக் குறைப்பு, வியாபாரத் தொழிற்பாடுகளின் குறைப்பு அல்லது பெறுமதி இழப்பு அல்லது வியாபாரம் மூடப்பட்டமை போன்ற காரணங்களினால் நிதியியல் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற செயற்பாடு குறைந்த அல்லது செயற்படாத கடன்பாட்டாளர்களை அடையாளம் கண்டு உதவுவதற்காக, கொவிட்-19 இற்குப் பின்னரான புத்துயிர்ப்பு அலகுகளை நிறுவுவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் பொருட்டு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட வழிமுறைகளுக்குப் புறம்பாக, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை, உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனத்தினைத் திருத்துதல், விசேட தேவையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதனை மேம்படுத்துவதற்காக குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, இந்திய ரூபாவினைக் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக நிர்ணயித்தல், 2023ஆம் கலண்டர் ஆண்டிற்கான வருடாந்த உரிமக் கட்டணத்தினை வங்கிகளுக்கு அறிவித்தல் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தலை கட்டாயமாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

8.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

நாடு பொருளாதாரத்தில் கடுமையான சுருக்கத்தினை அனுபவித்தமைக்கிடையிலும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை அதன் விரிவாக்கத்தினைத் தொடர்ந்தும் பேணக்கூடியதாக இருந்தது. சுருக்கமடைந்துவரும் கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியுற்று வருகின்ற இலாபத்தன்மை மற்றும் கட்டம் 3 கடன்களின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றவாறு அதிகரித்துவரும் செயற்படாக் கடன்கள் என்பனவற்றிலிருந்து எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு மத்தியிலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைச் சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் நியதிகளில் வளர்ச்சியடைந்ததுடன் 2022இல் போதுமான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்களையும் கொண்டிருந்தது. வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு நடுத்தர காலத்தில் உறுதியான மற்றும் நிலையான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை நிறுவுவதற்கும் மற்றும் நிதியியல் துறையின் நிலையான தன்மையைப் பாதுகாப்பதற்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அட்டவணை 8.9

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைகளின் பரம்பல்

மாகாணம்	2021 முடிவில்	2022 முடிவில் (அ)	ஆண்டுக்காலப் பகுதியில் அசைவு
மத்திய	184	193	9
கிழக்கு	142	154	12
வடமத்திய	111	120	9
வடமேல்	180	187	7
வடக்கு	119	139	20
சப்ரகமுவ	122	127	5
தென்	178	193	15
ஊவா	82	91	9
மேல்	589	630	41
மொத்தம்	1,707	1,834	127

(அ) திருத்தப்பட்டது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வியாபார விரிவாக்கம்

2022 இறுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,611.2 பில்லியனாக விளங்கி இலங்கையின் நிதியியல் முறைமையில் மொத்தச் சொத்துக்களில் 5.2 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தின. 2022 இறுதியளவில் துறையானது 36 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும்[3] ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியினையும் உள்ளடக்கியிருந்ததுடன் அவை 1,834 கிளைகளையும் கொண்டிருந்தன. இதில் 1,204 கிளைகள் (65.6 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே அமைந்திருந்தன. மேலும், 2022 காலப்பகுதியில் இத்துறையினால் 127 புதிய கிளைகள் நிறுவப்பட்டன.

துறையின் சொத்துத் தளம் ரூ.123 பில்லியனால் விரிவடைந்து 2022 இறுதியில், 2021இல் 6.1 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.3 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்து

3 ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நீங்கலாக

அட்டவணை 8.10

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	2021		2022 (அ)		மாற்றம் (%)	
	ரூ. பில்	பங்கு (%)	ரூ. பில்	பங்கு (%)	2021	2022 (அ)
சொத்துக்கள்						
கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய)	1,142.4	76.8	1,199.2	74.4	9.9	5.0
முதலீடுகள்	167.4	11.3	199.6	12.4	5.4	19.3
ஏனையவை	177.9	12.0	212.4	13.2	-12.4	19.4
பொறுப்புக்கள்						
மொத்த வைப்புக்கள்	783.3	52.7	864.5	53.7	4.6	10.4
மொத்த கடன் பெறுகைகள்	325.9	21.9	322.6	20.0	-0.6	-1.0
மூலதன கூறுகள்	304.0	20.4	364.1	22.6	22.6	19.8
ஏனையவை	74.5	5.0	60.1	3.7	-3.3	-19.4
மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்	1,487.7	100.0	1,611.2	100.0	6.1	8.3

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறப்புக்குறிப்பு 10
இலங்கையில் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையொன்றினை நிறுவுதல்

பின்னணி

இயற்றப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற புதிய மத்திய வங்கிச் சட்டம், நிதியியல் முறைமை உறுதித்தன்மையினை பாதுகாப்பதை மத்திய வங்கியின் குறிக்கோளொன்றாக அங்கீகரித்திருக்கின்ற வேளையில், இலங்கையின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்டிருக்கிறது. எனவே, புதிய சட்டமானது மத்திய வங்கியின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் பொறுப்பாணையினையும் தற்போதைய செயற்பரப்பினையும் விரிவுபடுத்துகிறது. இதற்கமைய, இக்கட்டுரையானது, பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் முறைமைசார் இடர்நேர்வு பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளுக்கும் மத்திய வங்கியின் ஏனைய கொள்கைகளுக்குமிடையிலான ஒன்றிலொன்று செயல்புரியும் பரஸ்பரத்தன்மை, பேரண்ட முன்மதியுடைய கருவிகள் மற்றும் இலக்கிடப்பட்ட அம்சங்கள், இலங்கை பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை என்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் முன்னோக்கிப் பயணித்தல் என்பன தொடர்பில் ஆர்வலர்களுக்கு அறிவூட்டுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.


பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் மற்றும் முறைமைசார் இடர்நேர்வு

மத்திய வங்கித்தொழிலுக்கு பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையின் முக்கியத்துவம் எத்தகையது என்பதனை 2007 - 2009 காலப்பகுதியில் இடம்பெற்ற உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் மூலம் அறியமுடிந்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது, உறுதியான பொருளாதாரச் சூழ்நிலையொன்றிலும் நெருக்கடிகள், தோற்றம் பெறக்கூடும் என்பதனையும் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகள் தனிப்பட்ட நிறுவனங்கள் மீதே கவனத்தினைச் செலுத்துவதனாலும் முறைமைசார் இடர்நேர்வுகளைக் கையாள்வதற்கு கொள்கைகள் இல்லாமையும் அத்தகைய நெருக்கடிகளைத் தடுப்பதற்கு தனியே நுண்பாக பொருளாதாரக் கொள்கைகள் போதுமானவையல்ல என்பதையும் எடுத்துக்காட்டியது. முறைமைசார் இடர்நேர்வென்பது நிதியியல் முறைமை முழுவதும் அல்லது அதன் பகுதிகள் பாதிக்கப்படுவதன் காரணமாக நிதியியல் பணிகளை வழங்கும் போது இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வொன்றாக வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இது உண்மைப் பொருளாதாரத்திற்கு கடுமையான எதிர்மறையான விளைவுகள் ஏற்படவும் காரணமாகிறது (பன்னாட்டு நாணய நிதியம், நிதியியல் உறுதிப்பாட்டுச் சபை மற்றும் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி 2009). எனவே, நிதியியல் முறைமையில் கட்டியெழுப்பப்படும் இடர்நேர்வுகளைத் தடுப்பதற்கு வலுவான பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கட்டமைப்பு அவசியம் என்பதனை உலகளாவிய நிதியியல் நெருக்கடி எடுத்துக்காட்டியது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னைய யுகத்தில், மத்திய வங்கிகள் பேரண்ட பொருளாதாரத்திற்கும் நிதியியல் முறைமைக்குமிடையிலான இணைப்புக்களின் முக்கியத்துவத்தினை அதாவது பேரண்ட - நிதியியல் இணைப்புக்களை அங்கீகரித்திருக்கின்றன. எனவே, பேரண்ட நிதியியல் இணைப்புக்களையும் நிறுவனங்கள் ஒன்றிலொன்று தங்கியுள்ள தன்மையினையும் அடையாளம் காண்பது மிகவும் முக்கியமானதென்பதுடன் அதேவேளை முறைமைசார் இடர்நேர்வுகளை அர்ப்பணிப்பு மிக்க நிதியியல் துறை கொள்கைகளினால் கட்டுப்படுத்துவதும் அவசியமானது என்பதும் தெளிவாகின்றது.

எனவே, 'பேரண்ட முன்மதியுடையதன்மை' என்பது வழக்கமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் பாரம்பரிய நுண்பாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்குமிடையிலான இடைவெளிகளை நிரப்புகின்ற நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தலை அணுகும் ஒரு முறை எனக் குறிப்பிடப்படுகின்றது (எல்லியோட் டி., 2011). இதன்படி, பேரண்ட முன்மதியுடைய கொள்கை 'முறைமைசார் இடர்நேர்வை' மட்டுப்படுத்துவதன் மூலமும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதன் மூலமும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்து இடைவெளியினை நிரப்புகிறது.

முறைமைசார் இடர்நேர்வு படிப்படியாகவும் அவதானிக்கப்படாத விதத்திலும் பெரும்பாலும் தோன்றுவதுடன், நிதியியல் முறைமையில் அத்தகைய இடர்நேர்வுகளானவை மோசமான சூழ்நிலைக்குரிய அல்லது தொடர்ச்சியான மோசமான அபிவிருத்திகளுக்கான வெளிப்படையான அடையாளங்களைக் காட்டுவதுமில்லை. எனவே, அதேநேரத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்றதன்மைகளும் சுழற்சிக் காலத்தின் போது முறைமைசார் இடர்நேர்வின் பரிணாமமடையும் தன்மைகளும் அபிவிருத்திகளின் நிலையான மதிப்பீட்டையும் பேரண்ட முன்மதியுடைய கொள்கைப் பதிலிறுப்புக்களின் போதுமானதன்மை மதிப்பிடப்படுவதனையும்

வரைபடம் சி.கு. 10.1
நிதியியல் சுழற்சி வட்டத்தின் போது சுழற்சி வட்ட இடர்நேர்வுகளின் பரிணாம வளர்ச்சி



மூலம்: ஷெக் நஷனல் வங்கி (2022)

தேவைப்படுத்துகின்றன. இத்தகையதொரு நிலையில், பேரண்ட முன்மதியுடைய கொள்கையானது, வேறுபடும் நிதியியல் சுழற்சி வட்ட காலத்தின் தேவைக்கேற்ப நெகிழ்ச்சித்தன்மையுடன் பதிலிறுத்தக்கூடிய சாதனங்கள் மற்றும் வழிமுறைகளினூடாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை முன்கூட்டியே அணுகுகின்ற முறையினைப் பிரதிபலிக்கின்றது. ஒட்டுமொத்த பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் கலப்பினை ஒன்றுசேர்க்கும்போது தோன்றும் பேரண்ட முன்மதியுடைய நிலைப்பாடானது சுழற்சி

இடர்நேர்வுகள் ஒன்றுதிரளக்கூடிய நிதியியல் சுழற்சி வட்டத்தின்[1] விரிவாக்க கட்டத்தில் இறுக்கமாக்கப்படுவதிலும் வட்டத்தின் பின்னடைவிற்குரிய கட்டத்தில் தளர்ச்சிப்படுத்தப்படுவதிலும் நாட்டம் செலுத்துகின்றது (பார்க்க வரைபடம் சி.கு. 10.1).

பேரண்ட முன்மதியுடைய கொள்கை முறைமைசார் இடர்நேர்வினைக் குறுக்குவெட்டுக் கூறு மற்றும் சுழற்சி வட்டக்கூறு ஆகிய இரண்டு கூறுகளினூடாகக் கட்டுப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. குறுக்குவெட்டுக் கூறானது, தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களின் மீது ஏற்படும் வெளிப்புறக் காரணிகளிலிருந்து தோன்றுகின்ற முறிவுகளின் இடர்நேர்வினையும் நிதியியல் நிறுவனமொன்று நிதியியல் முறைமையின் ஒன்றிலொன்று தொடர்புபட்ட தன்மையிலிருந்து தோன்றுகின்ற முறைமைசார் இடர்நேர்வினையும் தணிப்பதன் மீதும் அதனை தாங்கக்கூடிய முறைகளை அபிவிருத்தி செய்வதன் மீதும் கவனத்தினைச் செலுத்துகிறது. அதேவேளை, சுழற்சி வட்டக்கூறு, காலப் பரிமாணத்தில் காணப்படும் முறைமைசார் இடர்நேர்வினைத் தணிக்கின்ற அல்லது அதைத் தாக்குப்பிடிக்கக்கூடிய அம்சங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சிகளை மேற்கொள்கிறது (ஏட்றியன், 2017). அத்தகைய சுழற்சி வட்ட அச்சுறுத்தல்கள் விரைவாக அதிகரித்து வருகின்ற முடுக்கிகள் மற்றும் கொடுகடன் நிலைமைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்ட சொத்து விலைக் குமிழ்களை உள்ளடக்குகின்றன (எல்லியொட், வெலட்பேர்க் மற்றும் லேநேர்ட், 2013).

மற்றைய கொள்கைகளுடன் பரஸ்பரம் தொடர்புபடுதல்

2009இல் உலகளாவிய நெருக்கடியிலிருந்து அவதானிக்கப்பட்ட பாரிய அதிர்வுகளுக்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில், உண்மைப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்காக கிடைக்கத்தக்க கொள்கைக் கருவிகள் அனைத்தையும் செயற்படுத்துவதற்கான (முன்மதியுடைய கொள்கைகள் உட்பட) நாட்டம் காணப்பட்டது. மேலும், இது கொவிட்-19 உலகளாவிய தொற்றுக் காலப்பகுதியில் மிக வெளிப்படையாக விளங்கியவிடத்து, முன்மதியுடைய கொள்கைகள் பாரம்பரியம் மிக்க இறை மற்றும் நாணயக் கொள்கை வழிமுறைகளுடன் சேர்ந்து முக்கியமான பேரண்ட உறுதிப்படுத்தல் வகிபாகத்தினை ஆற்றியதுடன் மத்திய வங்கிகளின் கொள்கைக் கலப்பிலும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றின (வர்ஜியோ மற்றும் ஜோறோ, 2022). பேரண்ட முன்மதியுடைய கொள்கையினை ஏனைய கொள்கைகளுடன் சேர்த்து நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என்பதனால் நாணயக் கொள்கை மற்றும் நுண்பாக முன்மதியுடைய கொள்கை என்பனவற்றுடன் உயர்ந்த மட்டத்தில் பரஸ்பரம் தொடர்புபட வேண்டியிருக்கும். இதன்படி, நாணயம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களும் கருவிகளும் ஒன்றுடனொன்று முரண்படலாம் அல்லது இணங்கிச் செல்லலாம். எடுத்துக்காட்டாக, நாணயக் கொள்கை குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் கீழ் சமநிலையற்ற தன்மைகள் கட்டியெழுப்பப்படுவதற்கு பங்களிக்கலாம் என்பதுடன் முகவர்களின் இடர்நேர்வேற்பு நடத்தைகளின் மீது செல்வாக்கினையும் செலுத்தலாம். உதாரணமாக, தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை காலப்பகுதியானது சொத்து விலை குமிழ்களுக்கும் மிகையான கொடுகடன் வளர்ச்சி அத்தியாயங்களுக்கும் வழிவகுக்கக்கூடும். இதன் காரணமாக நிதியியல் உறுதிப்பாட்டு இடர்நேர்வுகளை ஒழிப்பதற்கு எதிர் சுழற்சி முறையிலான பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள் தேவைப்படலாம். மறுபுறத்தில், உறுதியான நிதியியல் முறைமையானது நாணயக் கொள்கையின் சுமுகமான ஊடுகடத்தலையும் பொருளாதாரத்தில் மூலவளங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதனையும் இயலுமைப்படுத்துகிறது. இந்நெருக்கமான உறவுகள், நாணய மற்றும் பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் தாக்கத்தினைக் கண்காணிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்குமான தேவையினையும் அத்தகைய கொள்கைக் குறிக்கோள்களை அடைவதன் மீதான வழிமுறைகளையும் தேவையானவிடத்து குறிப்பிட்ட கொள்கைகளிடையே இணைப்புக்களை ஏற்படுத்தவும் முன்கூட்டியே தீர்மானிக்கின்றது. அது மட்டுமன்றி பேரண்ட முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளும் நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வையும் ஒரே தகவல் தளத்தினைப் பயன்படுத்துவதனாலும் தகவல்களின் கணிசமான தொகை நுண்பாக முன்மதியுடைய மேற்பார்வையினூடாகப் பெறப்பட்டாலும் அவை பேரண்ட முன்மதியுடைய கொள்கை வகுப்பின் போது பரிசீலனையில் கொள்ளப்படுவதனாலும் ஒன்றிற்கொன்று துணைநிரப்பியாக விளங்குகின்றன. இணங்கிச் செல்கின்ற தன்மைகளும் முரண்பாடுகளும் மிகக் கவனமாகப் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் ஏற்புடைத்தான வேளையில் ஒன்றுடனொன்று இணைக்கப்படுவதன் பயனுள்ள விளைவுகளும் பயன்படுத்தப்படல் வேண்டும் (வர்ஜியோ மற்றும் ஜோறோ, 2022). மேலும், இக்குறிக்கோள்களை வெவ்வேறாக்குவது கடினம் என்பதனாலும் வலுக் கட்டாயமான விதத்தில் வெவ்வேறாக்குவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனாலும் நெருக்கமான இணைப்புக்களுக்கான தேவை அவசியமாகும்.

பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்பினைத் தொழிற்படுத்தல் - கொள்கைக் கருவிகள் மற்றும் இலக்கிடப்பட்ட அம்சங்கள்

கொள்கை வகுப்போர் முறைமைசார் இடர்நேர்வு இடம்பெறும் கால இடைவெளியையும் அதன் தீவிரத்தினையும் குறைப்பதற்காக பல்வேறுபட்ட பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே, பயன்படுத்தப்படுகின்ற பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பரந்த அடிப்படையிலான கருவிகள், துறைவாரியான (உதாரணமாக வீட்டுத்துறை/ கூட்டாண்மை) கருவிகள், திரவத்தன்மைக் கருவிகள் மற்றும் அமைப்பியல் கருவிகள் என வகைப்படுத்த முடியும்.

பரந்த அடிப்படையிலான கருவிகள் வங்கித்தொழில் முறைமையின் அனைத்துக் கொடுகடன் வெளிப்படுத்துகைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் எதிர் சுழற்சி வட்ட மூலதனத் தாங்கிருப்பு, முடுக்கி விகிதம் மற்றும் மாறுபடும் கடன் இழப்பு ஏற்பாட்டுத் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன (பன்னாட்டு நாணய நிதியம், 2014). துறைவாரியான கருவிகளினால் வீட்டுத் துறை மற்றும் கூட்டாண்மைத் துறைகள் போன்ற குறிப்பிட்ட துறைகளுக்கான மிகையான கொடுகடனிலிருந்து தோன்றுகின்ற பாதிக்கப்படும் தன்மையினைக் கட்டுப்படுத்த முடியும் என்பதுடன், துறைவாரியான மூலதனத் தேவைப்பாடு (இடர்நேர்வு நிறை) மற்றும் அதனுடன் கொடுகடன் வளர்ச்சி, பெறுமதிக்கான கடன் விகிதம் மற்றும் வருமானத்திற்கான படுகடன் தீர்ப்பனவு விகிதம் என்பனவற்றின் மீதான வரையறை ஆகியவற்றை விதித்தல்/ அதிகரித்தல் என்பனவற்றையும்

1 பொருளாதார சுழற்சி வட்டத்தினைப் போன்று நிதியியல் சுழற்சி வட்டம் விரிவாக்கக் கட்டமொன்றினையும் பின்னடைவுக் கட்டமொன்றினையும் மற்றும் திருப்பு முனைக் கட்டங்களான உச்சம் மற்றும் கீழேயுள்ள முனை என்பனவற்றையும் கொண்டிருக்கின்றது. நிதியியல் சுழற்சி வட்டம் சில சமயங்களில் வழமைக்கு மாறான பாதையினைப் பின்பற்றலாம். இதன்போது மேற்குறிப்பிடப்பட்ட கட்டங்களில் சில ஏற்படாமலே போகலாம் அல்லது வழமைக்கு மாறாக மிகக் குறைந்த அல்லது மிகக்கூடிய காலப்பகுதியினைக் கொண்டிருக்கலாம்.

உள்ளடக்குகின்றது. திரவத்தன்மைக் கருவிகள் (உதாரணமாக: அழுத்தம் ஏற்படும் காலப்பகுதியில், குறிப்பிட்ட ஒரு சில வாரங்களுக்கு வெளிப்பாய்ச்சல்களை ஈடுசெய்வதற்குப் போதுமான திரவச் சொத்துக்களை வங்கிகள் வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகின்ற திரவத்தன்மை தாங்கிருப்பு தேவைப்பாடுகள் வங்கிகள் அவற்றின் திரவத்தன்மையற்ற சொத்துக்களுக்கு நிதியிடுவதற்கு அதாவது கடன்கள் போன்றவை உறுதியான பொறுப்புக்களை வைத்திருப்பதனை உறுதிப்படுத்துகின்ற உறுதியான நிதியிடல் தேவைப்பாடுகள் மற்றும் மைய நிதியிடல் அல்லாதவற்றின் மீது தீர்வையை விதிக்கின்ற திரவத்தன்மைக் கட்டணங்கள்) முறைமைசார் திரவத்தன்மை இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றன.

முறைமைசார் இடர்நேர்வின் அமைப்பியல் பரிமாணம், இடைத்தொடர்புத் தன்மை மற்றும் தனிப்பட்ட முறைமைசார் நிறுவனங்களின் முறிவிலிருந்து பரவுகின்ற இடர்நேர்வு என்பனவற்றிலிருந்து தோன்றுகிறது. அமைப்பியல் பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகள் இரண்டு குறிக்கோள்களை இலக்காகக் கொண்டது (1) எப்போதும் முறிவடையக்கூடாத மிக முக்கிய நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரித்தல் மற்றும் (2) நிதியியல் முறைமைக்குள் காணப்படும் மிகையான வெளிப்படுத்துகைகளைக் குறைத்தல். முறைமை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அடையாளம் கண்டு வலுப்படுத்துவதானது எப்போதும் முறிவடையக்கூடாத மிக முக்கியமானவை ஆகக் காணப்படும் நிறுவனங்களின் பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய உபாயமாகத் தோற்றம் பெற்றிருப்பதுடன் அத்தகைய நிறுவனங்கள் மீதான மூலதன மேலதிகக் கட்டணங்கள் விதிக்கப்படுதல் பல நாடுகளிலும் அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்நிதியியல் நிறுவனங்களுக்கான மிகையான வெளிப்படுத்துகைகளை மட்டுப்படுத்துவதற்கு இந்நிறுவனங்களுக்கான வெளிப்படுத்துகைகளை ஊக்கமிழக்கச் செய்வது அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகளை கூடியளவிற்குப் பாதுகாப்புடையதாக்குவது என்பன உபாயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக மத்திய வங்கி

மத்திய வங்கி பேரண்ட முன்மதியுடைய பகுப்பாய்வுகளிலும் அத்தகைய பகுப்பாய்வுகளுக்கான கருவிகளை அபிவிருத்தி செய்வதிலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்காக கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்த போதும், புதிய மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டவுடன் மத்திய வங்கியை நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாகக் குறித்துரைத்து நிதியியல் முறைமை உறுதித்தன்மையினைப் பேணுகின்ற தற்போதைய வகிபாகத்தின் நியதிகளில் அதன் பொறுப்பாணையினையும் செயற்பரப்பினையும் விரிவுபடுத்தும். எனவே, புதிய சட்டம் இயற்றப்பட்டவுடன், பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்துவதற்கான ஒட்டுமொத்த அணுகுமுறையினையும் காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரம் மற்றும் நிதியியல் நிலைமைகளின் கொதிநிலையின் கீழுள்ள போதிலும் கூட நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணும் பொருட்டு பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை நோக்கிச் செயலாற்ற வேண்டிய பொறுப்புக்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்படும். இது, இடைத்தொடர்புத் தன்மைகள் மற்றும் முறைமைசார் முக்கியத்துவம் மிக்க நிறுவனங்கள் முறிவடைவதிலிருந்தும் தோன்றுகின்ற ஏதேனும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நிதியியல் நிறுவனங்களின் ஆரோக்கியத்தைப் பேணும் அதேவேளை, அந்நிறுவனங்களில் எந்தவொரு நிலையற்ற தளம்பல்களுமின்றி ஆரோக்கியமான கொடுகடன் மற்றும் முடுக்கி நிலைமைகள் பேணப்படுதலையும் உள்ளடக்கும். மத்திய வங்கியிடம் ஒட்டுமொத்த நிதியியல் முறைமைகளைக் கண்காணிக்கின்ற, இடர்நேர்வுகளை மதிப்பிடுகின்ற, பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை அறிமுகப்படுத்துகின்ற மற்றும் நிதியியல் துறை அதிகாரசபைகளின் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு விதந்துரைப்புக்களைச் செய்கின்ற அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவுள்ளன.

முன்னோக்கிப் பயணித்தல்

மத்திய வங்கி, இவ்விடயத்தில் பன்னாட்டு நிபுணர்களின் தொழில்நுட்ப உதவியுடன் அதன் பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்புக்களை வலுப்படுத்தத் தொடங்கியிருக்கின்ற அதேவேளையில் இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் சாதனங்களின் அளவிடல் மீதான கட்டமைப்புக்களையும் வலுப்படுத்தியிருக்கின்றது. இயக்கவாற்றல் மிக்க வங்கிக் கடன்தீராற்றல் பற்றிய அழுத்தப் பரீட்சிப்பு, திரவத்தன்மை அழுத்தப் பரீட்சிப்பு, இடைத்தொடர்புத்தன்மை பகுப்பாய்வுக் கட்டமைப்பு மற்றும் அத்தகைய இடர்நேர்வுப் பகுப்பாய்வுகளுடன் தொடர்புபட்ட தரவுச் சேகரிப்புக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல் என்பன ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதுடன் பலனளிக்கின்ற பல சுற்றுக்கள் நிறைவும் பெற்றுள்ளன. மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற நிதியியல் துறை பங்கேற்பாளர்கள் மீது அல்லது அவர்களது வெளிப்படுத்துகை மீது இலக்கிடப்பட்ட, பேரண்ட முன்மதியுடைய கருவிகளின் தொகுதியொன்றினை மத்திய வங்கி தற்பொழுது அபிவிருத்தி செய்து வருகிறது. பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளின் நடைமுறைப்படுத்துதல் மீது ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றும் விதத்திலும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் மத்திய வங்கி, நிதியியல் துறை அதிகாரிகளினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் அத்தகைய துறை பங்கேற்பாபளர்கள் தொடர்பில் நிதியியல் துறை அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படவுள்ள முன்மதியுடைய நியமங்களை அபிவிருத்தி செய்து முன்மொழியும். அவ்வாறு செய்யும் போது, தரவு இடைவெளிகள் அடையாளம் காணப்படுவதுடன் அத்தகைய தரவு இடைவெளிகளைக் குறைப்பதன் மீதும் மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பேரண்ட முன்மதியுடைய கொள்கை வகுப்பிற்காக நன்கு இணைக்கப்பட்ட பொறிமுறையொன்றினை நிறுவுவதற்காக, புதிய சட்டம் இயற்றப்பட்டவுடன் மத்திய வங்கி அதன் பேரண்ட முன்மதியுடைய பொறுப்பாணைக்கு ஆதரவளிக்கின்ற நிறுவன ரீதியான கட்டமைப்பினை வலுப்படுத்த முயற்சிக்கும். இது தொடர்பில், மத்திய வங்கி நிதியியல் உறுதிப்பாட்டு விடயங்களில் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவின் ஈடுபாட்டினை

வலுப்படுத்தும். இது மத்திய வங்கியினால் செய்யப்பட்ட முன்மொழிவுகள்/விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் நிதியியல் முறைமையினை பிரசன்னப்படுத்துகின்ற தொடர்பான நிதியியல் துறை அதிகாரசபைகளுடன் இணைப்புக்களை ஏற்படுத்தும். தற்பொழுது வெளியிடப்பட்டுவரும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத்தன்மை மீளாய்வு மேம்படுத்தப்பட்டு வருடாந்த அடிப்படையில், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் தன்மை மீதான மீளாய்வு அறிக்கையினை வெளியிடுகின்றமை தொடர்பான சட்ட ரீதியான தேவைப்பாடுகளையும் மத்திய வங்கி பூர்த்தி செய்யும். இவ்வறிக்கையானது, மத்திய வங்கியின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான மதிப்பீடு, அத்துடன் அதில் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகள் என்பனவற்றின் மதிப்பீட்டினையும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி மற்றும் ஏனைய நிதியியல் துறை அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பற்றிய பொதுநோக்கு மற்றும் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களுடன் அவற்றை நடைமுறைப்படுத்தலில் காணப்படும் முன்னேற்றத்தின் தற்போதைய மட்டத்தின் பொதுநோக்கினையும் உள்ளடக்குகிறது.

பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை நிறுவப்பட்டதும் நிதியியல் முறைமை உறுதித்தன்மையைப் பாதுகாக்கும் குறிக்கோள் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்வதனை உறுதிப்படுத்தும். இது, நிதியியல் முறைமை உறுதிப்பாடு வலுவடையவும் உதவும்.

உசாத்துணைகள்

1. Adrian, T., 2017, September. Macroprudential policy and financial vulnerabilities. In Speech at the European Systemic Risk Board Annual Conference, September (Vol. 22). Berner, R. (2018). Financial Stability and Regulatory Policy. Cambridge University Press.
2. Czech National Bank. (2022). The CNB's approach to setting the countercyclical capital buffer. Czech National Bank.
3. Elliott, D., 2011. An overview of macroprudential policy and countercyclical capital requirements. Unpublished manuscript, The Brookings Institution, 10.
4. Elliott, D., Feldberg, G. and Lehnert, A., 2013. The history of cyclical macroprudential policy in the United States.
5. International Monetary Fund, Financial Stability Board, and Bank for International Settlements. (2009) Guidance to Assess the Systemic Importance of Financial Institutions, Markets and Instruments: Initial Considerations. Washington: International Monetary Fund.
6. International Monetary Fund. (2014) Staff Guidance Note on Macroprudential Policy. Washington: International Monetary Fund.
7. Warjiyo, P. and Juhro, S.M. (2022) Central Bank Policy Mix: Issues, Challenges, and Policy Responses: Handbook of Central Banking Studies (p. 280). Springer.
8. Yilla, K. and Liang, N. (2022) What are macroprudential tools? [Online]. Available at: https://www.brookings.edu/blog/up-front/2020/02/11 what-are-macroprudential-tools/ (Accessed: 15 January 2023)

ரூ.1,611.2 பில்லியனாக விளங்கியது. சொத்துக்களின் விரிவாக்கத்திற்கு கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சியும் அதனை அடுத்து முதலீடுகள் மற்றும் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் முக்கிய தூண்டுதலாக விளங்கின. கடன்களும் முற்பணங்களும் துறையின் மொத்தச் சொத்துக்களில் 74.4 சதவீதத்திற்கு வகைகூறின. துறையின் மொத்தச் சொத்துக்களில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் நிதிக் குத்தகைகள் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன், 2021 இறுதியில் 48.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 41.6 சதவீதத்திற்கு வகைகூறின. வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்துமொரு வழிமுறையாக உந்து ஊர்திகளின் இறக்குமதிகளின் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தொடர்ச்சியான கட்டுப்பாடுகளின் முக்கிய காரணமாக, குத்தகைக்குவிடும் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட சுருக்கத்தின் விளைவாக மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் குத்தகைக்குவிடும் சொத்துப்பட்டியலின் பங்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் 2021 இறுதியின் 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து 2022 இறுதியில் ரூ.1,199.2 பில்லியனாக விளங்கியது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் வளர்ச்சிக்கு அடகுபிடித்தல்/ தங்கக் கடன்களின் உயர்வு காரணமாக அமைந்ததுடன் இது 2022 இறுதியில் 77.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

2022 காலப்பகுதியில், தற்பொழுது நிலவுகின்ற அசாதாரணமான பேரண்ட பொருளாதார சூழ்நிலைமைகளின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு உதவி வழங்குவதற்காக கடன் மீள்கொடுப்பனவுகள் மீது படுகடன் சட்ட இசைவுத்தாமதமும் சலுகைகளும் வழங்கப்பட்டன. 2022 இறுதியளவில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏறத்தாழ 13.2 சதவீதம் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் இருந்தன.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது பங்குரிமைகள், கம்பனி படுகடன் சாதனங்கள், அரச பிணையங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துக்கள் என்பன மீதான முதலீடுகளை உள்ளடக்கியிருந்தன. 2022இல்

அட்டவணை 8.11
கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு மார்சு 2020 முதல் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் நிலைமை

படுகடன் சட்ட இசைவுத் தாமத கட்டம்	ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள்	படுகடன் சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்படுகையில் மொத்த வெளிப்படு மூலதனம் (ரூ.பில்)	31.12.2022 இல் உள்ளவாறாக மொத்த வெளிப்படு மூலதனம் (ரூ.பில்)
கட்டம் 1 (மார்சு 2020 - செத் 2020)	814,336	312.61	44.58
கட்டம் 2 (ஒத் 2020 - மார்சு 2021)	99,912	59.93	11.82
கட்டம் 3 (ஏப் 2021 - செத் 2021)	492,734	168.14	68.41
கட்டம் 4 (ஒத் 2021 - மார்சு 2022)	54,387	37.63	17.16
கட்டம் 5 (யூலை 2022 - சன 2023)	42,283	20.19	32.62
மொத்தம்	1,503,652	வி.கி.*	174.58


*ஒரே கடன்பாட்டாளர்கள் பல திட்டங்களினூடாக சட்ட இசைவுத் தாமதத்தினை பெற்றுக்கொண்டிருக்கக்கூடும்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2021இன் 5.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.199.6 பில்லியனை அடைந்து 19.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு, குறுங்கால முதிர்ச்சிகளுக்கான வட்டி வீதங்கள் அதிகரித்தமையின் விளைவாக 12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணையங்கள் மீதான அதிகரித்த முதலீடுகளே முக்கிய காரணமாகும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் காசு மற்றும் மீதிகளை முக்கியமாக உள்ளடக்கிய ஏனைய சொத்துக்களும் 2021இன் 12.4 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 19.4 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு குறிப்பாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட அதிகரித்த வைப்புக்களே காரணமாகும்.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் பொறுப்புக்களில் வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்றிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களில் 53.7 சதவீத பங்கிற்கும் வகைகூறின. 2022 காலப்பகுதியில் வைப்புக்கள்

வரைபடம் 8.9
சாதனங்கள் வாரியான (திரண்ட) கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2021 மற்றும் 2022



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

விடயம்	தொகை (ரூ.பில்)		உள்ளடக்கம் (%)	
	2021	2022 (அ)	2021	2022 (அ)
தவணை வைப்புக்கள்	744.3	830.2	95.0	96.0
சேமிப்பு வைப்புக்கள்	38.4	34.3	4.9	4.0
வைப்புச் சான்றிதழ்கள்	0.6	0.0	0.1	0.0
மொத்த வைப்புக்கள்	783.3	864.5	100.0	100.0

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ரூ.81.1 பில்லியனால் அதிகரித்து ரூ.864.4 பில்லியனாக விளங்கி 10.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில், கடன்பாடுகள் ரூ.322.6 பில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் காணப்படும் இடர்நேர்வுகள்


கொடுகடன் இடர்நேர்வு

மொத்தச் செயற்படாக் கடன்கள்/ கட்டம் 3 கடன்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.9 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 66.1 சதவீதத்தினால் அதிகரித்தது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை 2022 ஏப்பிறல் 01 இலிருந்து செயற்படாக் கடன்களின் நேர அடிப்படையிலான வகைப்படுத்தல், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 இனை அடிப்படையாகக் கொண்ட கட்டம் 3இன் மூலம் பதிலீடு செய்யப்பட்டவிடத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முன்னைய உரிய காலம் கடந்த பின்னர் 180 நாள் கொண்ட வகைப்படுத்தலுக்குப் பதிலாக கட்டம் 3 கடன்களின் வகைப்படுத்தலுக்காக 120 நாள் காலப்பகுதியைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு கடன் வகைப்படுத்தல் முறையியலினை மாற்றியதன் விளைவு, காலங்கடந்த படுகடன் சட்ட இசைவுத்தாமதமும் மோசமான பேரண்ட பொருளாதார நிலைமைகளும் துறையின் மொத்தக் கட்டம் 3 கடன்களின் விகிதத்தினை 2021 இறுதியில் அறிக்கையிட்ட 11.0 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 17.5 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது.

தேறிய பெறுமதி இழக்கப்பட்ட கட்டம் 3 கடன்களின் விகிதம் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 2.7 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 12.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. கட்டம் 3 கடன்களுக்கான பெறுமதியிழத்தல் காப்பு விகிதம்[4] 2022 இறுதியில்

4 2022 ஏப்பிறல் தொடக்கம் ஏற்பாட்டுக் காப்பு விகிதமானது கட்டம் 3 கடன்களினால் விடுக்கப்பட்ட கட்டம் 3 பெறுமதி இழப்பாகக் கணிக்கப்பட்ட பெறுமதி இழப்பு காப்பு விகிதத்தினால் பதிலீடு செய்யப்பட்டது.

வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படாக்கடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு



29.6 சதவீதமாக அறிக்கையிடப்பட்டது. வட்டி வீத அசைவுகள், பொருளாதாரச் சுருக்கம், வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமதத் திட்டத்தின் தாக்கம் மற்றும் உயர்ந்த வரிகளின் அறிமுகம் என்பனவற்றை உள்ளடக்கிய அண்மைய சந்தை அபிவிருத்திகள் எதிர்காலத்தில் துறையின் சொத்துத் தரத்தினையும் அதன் செயற்படாக் கடன்களையும் மோசமாகப் பாதிப்படையச் செய்யும்.

வட்டி வீத இடர்நேர்வு

இறுக்கமான நாணயக் கொள்கையும் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் நிச்சயமற்ற தன்மைகள் பற்றிய கரிசனைகளும் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தில் கூடியளவு அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தன. இது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வைப்புக்கள் மீதும் படுகடன் சாதனங்களின் மீதும் வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீதும் கடன்வழங்கல் வீதங்களில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. வட்டி வீத உணர்திறன் விகிதம் (12 மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் பங்கொன்றாக வட்டி உழைக்கும் சொத்துக்கள்) 2021 இறுதியின் 85.6 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 96.8 சதவீதத்திற்கு அதிகரித்து, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 அதிகரித்த வட்டி வீதங்களிலிருந்து தோன்றிய வட்டி வீத இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையில் ஏற்பட்ட குறைப்பினை எடுத்துக்காட்டியது.


சந்தை இடர்நேர்வு

இத்துறையில் பங்குரிமை இடர்நேர்வு 2022ஆம் ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பங்குரிமைச் சந்தைக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை 2021இன் 0.8 சதவீதத்திலிருந்து 2022இன் மொத்தச் சொத்துக்களில் 0.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

திரவத்தன்மை இடர்நேர்வு

கூட்டுத்தொகை அடிப்படையில் துறையானது 2022 காலப்பகுதியில் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கும் மிக மேலே திரவத்தன்மையினைப் பேணியது. 2022 இறுதியில் துறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.98.0 பில்லியனுக்கெதிராக ரூ.184.9 பில்லியனாக விளங்கி 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.66.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ.86.9 பில்லியன் கொண்ட திரவத்தன்மை மிகையைப் பதிவுசெய்தது. எனினும், முதிர்வுக்கு முன்னரான எடுப்பனவுகள், கடன்களை மீளச்செலுத்தத் தவறுதல் மற்றும் மோசமான பொருளாதார நிலைமைகள் நிகழுமிடத்து நிதியிடல் வழிகள் கிடைக்காமல் போகுதல் காரணமாக எதிர்காலத்தில் அதிகரித்த திரவத்தன்மை இடர்நேர்வினை துறையானது எதிர்நோக்கலாம்.

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவக் குறிகாட்டிகள்




இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை


துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தது. துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2021இன் ரூ.55.6 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.43.9 பில்லியனுக்கு 21.0 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு வட்டிச் செலவினங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இலாபத்தன்மையில் ஏற்பட்ட குறைப்பு பங்குரிமை மீதான வருவாய் மற்றும் வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான வருவாய் 2021இன் முறையே 20.2 சதவீதம் மற்றும் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே 12.6 சதவீதத்திற்கு கணிசமாகவும் 3.7 சதவீதத்திற்கும் குறைவடைந்தமையில் பிரதிபலித்தது. 2022இல் வருமானத்திற்கான செலவு விகிதம் 2021இன் 72.6 சதவீதத்திலிருந்து 2022இல் 87.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் வினைத்திறன் விகிதம் 2022 காலப்பகுதியில் 68.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

துறையின் தேறிய வட்டி வருமானம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 18.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.115.2 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, தற்போது நிலவுகின்ற பேரண்ட பொருளாதார சூழ்நிலைகளின் விளைவாக வட்டி வீதங்கள் கணிசமாக அதிகரித்தமையின் காரணமாக வட்டி வருமானம் ரூ.54.7 பில்லியனால் அதிகரித்து 25.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தமைக்கிடையிலும் வட்டிச் செலவினங்கள் ரூ.70.9 பில்லியனால் கணிசமாக அதிகரித்து 82.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமையே காரணமாகும். இதன் விளைவாக, துறையின் தேறிய வட்டி இலாபம் 2021இன் 8.6 சதவீதத்திலிருந்து 2022இல் 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து துறையின் இலாபத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தது.

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்



வரைபடம் 8.13
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்



2022 காலப்பகுதியில் வட்டியல்லா வருமானம் 12.1 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்த வேளையில் வட்டியல்லாச் செலவினம் 0.7 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. செயற்படாக் கடன்களுக்கெதிராகச் செய்யப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் ரூ.4.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு கடன் இழப்பு ஏற்பாடுகள் 2022இன் முதல் ஒரு சில மாதங்களில் மீளத்திருத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

இவ்வாண்டுக் காலப்பகுதியில், கூட்டு மொத்த மட்டமொன்றில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மிக மேலே மூலதனம் பேணப்பட்டமையின் காரணமாக துறை தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் காட்டியது. மூலதனத் தளம் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.251.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ரூ.317.5 பில்லியனுக்கு மேம்பட்டமைக்கு, முன்னைய நிதியியல் ஆண்டில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் பாரிய பல கம்பனிகளினால் இலாபங்கள் பிடித்துவைக்கப்பட்டமை, பாரியளவு எதிர்மறையான தேறிய பெறுமதிகளைக் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின்

அட்டவணை 8.13
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்

விடயம்	2021		2022 (அ)	
	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்துக்களின் சதவீதமாக	தொகை (ரூ.பில்)	சராசரி சொத்துக்களின் சதவீதமாக
வட்டி வருமானம்	217.0	14.2	271.7	15.8
வட்டிச் செலவினம்	85.6	5.6	156.5	9.1
தேறிய வட்டி வருமானம்	131.4	8.6	115.2	6.7
வட்டியல்லா வருமானம்	49.5	3.2	43.5	2.5
வட்டியல்லா செலவினம்	87.1	5.7	87.7	5.1
கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய)	11.1	0.7	6.6	0.4
வரிக்கு முன்னதான இலாபம்	82.7	5.4	64.4	3.7
வரிக்குப் பின்னரான இலாபம்	55.6	3.6	43.9	2.6

(அ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உரிமம் இடைநிறுத்தப்பட்டமை, பல ஒருங்கிணைப்புக் கொடுக்கல்வாங்கல்கள் நிறைவடைந்தமையின் பெறுபேறாக மேம்பட்ட மூலதனம் என்பன காரணங்களாக அமைந்திருந்த போதும் கூட, 6 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்[5] குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகளுக்கு அத்துடன்/அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமல் இருந்தன. துறையின் மைய மூலதன, மொத்த மூலதன விகிதங்கள் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட மட்டமான 15.5 சதவீதத்திலிருந்தும் 17.0 சதவீதத்திலிருந்தும் 2022 இறுதியில் முறையே 20.6 சதவீதத்திற்கும் 22.0 சதவீதத்திற்கும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.

முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பலயீனங்களையும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் கட்டுப்படுத்துவதற்காக 2020இல் முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. முதன்மைத் திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 2022 காலப்பகுதியில் 5 கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாக நிறைவடைந்ததுடன் 2022இல் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட 3 முன்மொழியப்பட்ட இணைப்புக்கள் தற்பொழுது செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இணைப்பதற்கான பங்காளரொருவரைக் கண்டறிய முடியாமல் இருக்கும் கம்பனிகளின் உரிமங்களை இரத்துச் செய்வதன் மூலம் சந்தையிலிருந்து வெளியேறப் பணிக்கப்பட்டதுடன் அத்தகைய இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் தற்பொழுது செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அரச பிணையங்களின் முதனிலை வணிகர் கம்பனிகள்

2022 இறுதியிலுள்ளவாறு அரச பிணையங்கள் சந்தையில் 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 முதனிலை வணிகர் கம்பனிகளும் முதனிலை வணிகர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இருப்பினும், பான் ஏசியா பாங்கிக் கோப்பரேஷன் பிஎல்சியும், பேர்ப்பெட்ஜுவல் ரெசறீஸ் லிமிடெட்டும் முதனிலை வணிகர் வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் கொண்டு நடத்துவதிலிருந்து முறையே 2017.08.15 அன்றும் 2017.07.06 அன்றும் இடைநிறுத்தப்பட்டன. 2017.07.24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்து என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி தடைசெய்யப்பட்டது. இதன்படி, 2022 இறுதியில் 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 5 முதனிலை வணிகர் கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக அரச பிணையங்கள் சந்தையில் செயற்பட்டன.

சொத்துக்கள்

2022இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.131.7 பில்லியனுக்கு 67.4 சதவீதத்தினால் அதிகரித்தன. வர்த்தகப்படுத்தல், விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவற்றை கொண்ட சொத்துப்பட்டியல் 2022 இறுதியில் ரூ.126.1 பில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 79 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022 இறுதியில் வர்த்தகப்படுத்தல் மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை ஆகிய இரண்டு சொத்துப்பட்டியல்களும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட முறையே ரூ.54.9 பில்லியன் மற்றும் ரூ.12 பில்லியனிலிருந்து முறையே ரூ.100.7 பில்லியனுக்கும் ரூ.23.8 பில்லியனுக்கும் அதிகரித்த வேளையில் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் 2021 இறுதியின் ரூ.3.6 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.1.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

இலாபத்தன்மை

2022 ஆண்டு காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள், 2021 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.0.4 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.1.7 பில்லியனைப் பதிவுசெய்து, இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. அரச பிணையங்களிலுள்ள முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும் 2022இல் முதனிலை வணிகர் கம்பனிகளினால் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்த மீள்மதிப்பீட்டு இலாபங்களும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பதிவுசெய்யப்பட்ட இலாபங்களுக்கு பெருமளவிற்குப் பங்களித்தன. மேலும், 2022 இறுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மீதான வருவாயும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 0.7 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வருவாய்களிலிருந்து முறையே 3 சதவீதத்திற்கும் 11.4 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

மூலதனம்

முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை 68.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஈட்டப்பட்ட இலாபமே முக்கிய காரணமாகும். முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச தேவைப்பாட்டுத் தொகையினை விட மிக உயர்வாகக் காணப்பட்ட போதும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப்

5 குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் அத்துடன்/ அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது வைப்பு உச்ச எல்லை, கடன்வழங்கல் உச்ச எல்லை, புதிய வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதனை மற்றும் புதிய கடன்களை வழங்குதலை முடக்கி வைத்தல் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மேலும், முதன்மைத் திட்டத்தின் கீழ் பல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொடுக்கல்வாங்கல்களை நிறைவு செய்யும் செய்முறையில் காணப்படுகின்றன.

போதுமாந்தன்மை விகிதம் 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 42.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 23.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது.

முதனிலை வணிகர் கம்பனிகள் துறையின் இடர்நேர்வுகள்

சந்தை இடர்நேர்வு

முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலுள்ள வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதம் சிறிதளவால் அதிகரித்தது. வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2021 இறுதியில் 77.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 79.8 சதவீதத்தினைப் பதிவுசெய்து இத்தொழில்துறையின் தொடர்பான சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

திரவத்தன்மை இடர்நேர்வு

2022 இறுதியிலுள்ளவாறு முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் காணப்படும் ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை அதிகரித்தது. 2022 இறுதியில் திரவத்தன்மையிலுள்ள ஓரிரவு எதிர்க்கணியமான பொருத்தப்பாடின்மை 2021 இறுதியிலுள்ள ரூ.20.3 பில்லியனிலிருந்து ரூ.78.1 பில்லியனுக்கு 270 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இதற்கு 2022 இறுதியில் 219.9 சதவீதத்தினால் ஓரிரவு பொறுப்புக்கள் கணிசமாக அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். பாரியளவிலான அரச பிணையங்களை உடைமையில் வைத்திருப்பதனையும் ஏதேனும் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளியினை நிரப்புவதற்குப் பிணையாக அத்தகைய அரச பிணையங்களைப் பயன்படுத்துவதற்கான ஆற்றலையும் நோக்குகையில் திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கிய ஒரு முதனிலை வணிகர் கம்பனி தவிர்ந்த, மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளினது திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் ஏற்படக்கூடிய ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு தயார்நிலை எதிர்பாரா நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன. எனினும், சாத்தியமான படுகடன் மறுசீரமைப்புடன் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் கொடுகடன் இடர்நேர்வுகளையும் திரவத்தன்மை இடர்நேர்வுகளையும் அதிகரிக்கலாம் என்பதுடன் முதனிலை வணிகர் கம்பனிகளின் மூலதன மட்டங்களிலும் மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தலாம்.

சந்தை நடத்தை

முதனிலை வணிகர் கம்பனிகளின் முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

2022இல் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்கேற்பு கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. 2022இல் நடத்தப்பட்ட 52 திறைசேரி உண்டியல் ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகளில் முதனிலை வணிகர்களின் காத்திரமான பங்கேற்பு 49.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2022 காலப்பகுதியில் நடத்தப்பட்ட 24 திறைசேரி முறி ஏலங்களில் முதனிலை வணிகர் கம்பனிகளின் காத்திரமான பங்கேற்பு 22.4 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது.

முதனிலை வணிகர் கம்பனிகளின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

முதனிலை வணிகர் கம்பனிகளினால் அரசாங்கப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 2022இல் ரூ.15,423.4 பில்லியனுக்கு 204.3 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இதில் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் 76.4 சதவீதத்திற்கு வகைகூறின. 2022 காலப்பகுதியில், 2021 உடன் ஒப்பிடுகையில் உடனடிக் கொள்வனவுகள் 94 சதவீதத்தினாலும் உடனடி விற்பனைகள் 80.7 சதவீதத்தனாலும் அதிகரித்தன.

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

4 கம்பனிகளை உள்ளடக்கிய உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் துறை 2022 இறுதியில் அதன் சொத்துத் தளத்தில் 18.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டு ரூ.9.9 பில்லியனை அடைந்தது. உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களில் மிகப்பெரும் பங்கிற்கு நுண்பாகக் கடன்கள் வகைகூறி 74.1 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. 2022 இறுதியில் நுண்பாகக் கடன்கள் 2021 இறுதியின் ரூ.6.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.7.4 பில்லியனாக விளங்கி 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டது. 2022 இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் செயற்படாக் கடன்கள் 8.7 சதவீதமாக விளங்கின. 2022இல் துறையின் மொத்த வைப்புத் தளம் 2021இன் ரூ.544 மில்லியனிலிருந்து 2022இல் ரூ.648 மில்லியனுக்கு 19 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. துறையின் மொத்தப் பொறுப்புக்கள் 2021இன் ரூ.5.5 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.7.2 பில்லியனுக்கு 29 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் பங்குரிமைக்கான படுகடன் விகிதம் 2022 இறுதியில் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. துறையின் மைய மூலதன மட்டம் ரூ.2.5 பில்லியனாக விளங்கியதுடன் அனைத்து

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் தொடர்பான குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணைங்கியொழுகி வந்தன.


கூறுநம்பிக்கைகள்

2022 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிட்ட 75 இலிருந்து 80 இற்கு அதிகரித்தது. கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் எண்ணிக்கை 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 16 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது. கூறுநம்பிக்கை நிதியம் பணச் சந்தை நிதியம் மற்றும் வருமான நிதியங்களினால் சமமாக ஆதிக்கம் செலுத்தப்பட்டதுடன் கூறுநம்பிக்கை தொழில் துறையில் தலா 22.5 சதவீதத்திற்கு வகைகூறின. மேலும், நிறைகாப்பு நிதியங்கள், வளர்ச்சி நிதியங்கள் மற்றும் சமநிலைப்படுத்தப்பட்ட நிதியங்கள் என்பன கூறுநம்பிக்கை தொழில் துறையில் முறையே 15.0 சதவீதத்திற்கும் 12.5 சதவீதத்திற்கு 12.5 சதவீதத்திற்கு வகைகூறின.

2022 இறுதியில் கூறுநம்பிக்கைத் துறையின் மொத்த சொத்துத் தளத்தில் சுருக்கமொன்று அவதானிக்கப்பட்டது. 2022 இறுதியிலுள்ளவாறு துறையின் மொத்தச் சொத்துக்கள் 2021 இறுதியிலுள்ளவாறான ரூ.195 பில்லியனிலிருந்து ரூ.150 பில்லியனுக்கு 23.1 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது. வெளியிடப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 7,835 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் 6,283 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. எனினும், கூறு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 59,426 இலிருந்து 2022 இறுதியில் 67,912 இற்கு அதிகரித்தது.

மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக கூறுநம்பிக்கைகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு

வரைபடம் 8.14
நிதியங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கூறு நம்பிக்கை துறையின் வகைப்படுத்தல்



* ஏனையவை: வதியா நிதியம் 3, டொலர் நிதியம் 3, ஆரம்ப பங்கு வழங்கும் நிதியம் 1 மற்றும் வளர்ச்சி மற்றும் நிலையான வருவாய் நிதியம் 1

மூலம்: இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அட்டவணை 8.14
கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம்

விடயம்	2021(அ)	2022(ஆ)
கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை	75	80
உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை	59,426	67,912
வழங்களில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை (மில்)	7,835	6,283
மொத்த சொத்துக்கள் (ரூ. பில்)	195	150
தேறிய சொத்துப் பெறுமதி (ரூ. பில்)	191	143
பங்குரிமை மூலதன்த்திலான முதலீடுகள் (ரூ. பில்)	17.6	11.8
மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%)	9.1	7.9
அரச பிணையங்களிலான முதலீடுகள் (ரூ. பில்)	23.4	84.9
மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%)	12.1	56.7

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

2021 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 12.1 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 56.7 சதவீதத்திற்கு கணிசமானளவிற்கு அதிகரித்தது. அதேவேளை, தேறிய சொத்துக்களின் சதவீதமாக பங்குரிமையில் செய்யப்பட்ட முதலீடுகள் 2021 இறுதியின் 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 7.9 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

காப்புறுதித் துறை

மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் காப்புறுதித் துறை 2022 இறுதியில் சொத்துத் தளம் மற்றும் மொத்தமாக எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆகிய நியதிகளில் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. துறையானது 2022 இறுதியில் தொழிற்பாட்டிலுள்ள 27 கம்பனிகளை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் 14 பிரத்தியேகமாக நீண்ட காலக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 11 பிரத்தியேகமாக பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் விளங்கிய வேளையில் 2 நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களாகக் காணப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்தக் கட்டுப்பணத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட இலங்கையில் காப்புறுதியின் நுழைவு 2021ஆம் ஆண்டிற்கான 1.4 சதவீதத்திலிருந்து 2022ஆம் ஆண்டில் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, உயர் பணவீக்கத்தால் தூண்டப்பட்ட சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி மற்றும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மொத்தமாக எழுதப்பட்ட கட்டுப்பணத்தில் காணப்பட்ட குறைவடைந்து செல்லும் வளர்ச்சி என்பன முக்கிய காரணங்களாகும். இலங்கையில் காப்புறுதியின் நுழைவு அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு தொடர்ந்தும் குறைவாகவே காணப்படுகிறது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி துணைத் துறைகளின் காப்புறுதி நுழைவு முறையே 0.6 சதவீதமாகவும் 0.5 சதவீதமாகவும் காணப்பட்டது.

அட்டவணை 8.15
காப்புறுதித்துறையின் செயலாற்றம்*

ரூ. பில்லியன்


விடயம்	2021(அ)	2022(ஆ)
மொத்தச் சொத்துக்கள்	881.8	947.3
அரச பிணையங்கள்	338.6	413.3
பங்குரிமை மூலதனம்	55.7	47.2
காசு மற்றும் வைப்புக்கள்	132.1	112.5
மொத்த கட்டுப்பணம்	233.5	257.6
மொத்த வருமானம்	299.0	336.1
கட்டுப்பண வருமானம்	233.5	257.6
முதலீட்டு வருமானம்	65.5	78.6
வரிக்கு முன்னரான இலாபம்	42.2	50.3
மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%) - நீண்டகாலக் காப்புறுதி	384.0	303.0
- பொதுக் காப்புறுதி	307.0	210.0
பிடித்து வைத்தல் விகிதம் (%) - நீண்டகாலக் காப்புறுதி	96.0	95.1
- பொதுக் காப்புறுதி	76.4	75.3
கோரல் விகிதம் (%) - நீண்டகாலக் காப்புறுதி	38.5	47.1
- பொதுக் காப்புறுதி	55.6	64.0
இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%) - நீண்டகாலக் காப்புறுதி	81.1	89.5
- பொதுக் காப்புறுதி	95.3	105.3
சொத்துக்கள் மீதான வருவாய் (%) - நீண்டகாலக் காப்புறுதி	3.9	3.6
- பொதுக் காப்புறுதி	8.0	10.1
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) - நீண்டகாலக் காப்புறுதி	17.7	17.1
- பொதுக் காப்புறுதி	16.3	20.8
ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி	24.8	16.9

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

* தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நீங்கலான தகவல்

வரைபடம் 8.15
காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்



மூலம் : இலங்கை காப்புறுதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

வியாபார விரிவாக்கம்

2022 இறுதியில் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் 7.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ.947.3 பில்லியனை அடைந்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளம் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 5.7 சதவீதத்தினால் ரூ.668.7 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளம் 2022 இறுதியில் 11.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.278.6 பில்லியனை அடைந்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துத் தளத்தின் பங்கு காப்புறுதித் துணைத் துறையின் மொத்த சொத்துக்களில் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 71.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் சிறிதளவு வீழ்ச்சியடைந்ததெனினும் 70.6 சதவீதத்தில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சியின் காரணமாக காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் தொடர்பான பங்கு 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 28.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 29.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2021 இறுதியின் ரூ.233.5 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.257.6 பில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் அதிகரித்தது. நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையினதும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையினதும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் மீளாய்விற்குரிய காலப்பகுதியில் முறையே 8.5 சதவீதத்தினாலும் 12.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும், நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறை, துறையின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணத்திற்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் விளங்கியதுடன் இது 2022 இறுதியில் 52.6 சதவீதம் கொண்ட பங்கினை பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் முக்கிய வியாபார துறையாக விளங்கும் வாகனக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் பொதுக் காப்புறுதியில் 53.5 சதவீதப் பங்கினைப் பிரசன்னப்படுத்தியதுடன் 2022 இறுதியில் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது.

துறையின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2022 இறுதியில் ரூ.776.6 பில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.6 சதவீத்தினால் வளர்ச்சியடைந்தது. துறையின் முதலீடுகள் அரச பிணையங்கள் மீது தொடர்ந்தும் உயர்ந்தளவிற்கு குவிந்திருந்ததுடன் அரச பிணையங்கள் மீதான நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் பங்கு 2021 இறுதியின் 46.1 சதவீதம் மற்றும் 45.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் முறையே 53.8 சதவீதத்திற்கும் 51.3 சதவீதத்திற்கும் அதிகரித்து 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்கள் நிலவியமையை எடுத்துக்காட்டியது. அதேவேளை, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் பங்குரிமை மீதான முதலீடுகளின் பங்கு 2021 இறுதியின் 7.5 சதவீதம் மற்றும் 7.8 சதவீதங்களிலிருந்து 2022 இறுதியில் முறையே 6.2 சதவீதத்திற்கும் 5.8 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

இலாபத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை

காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை 2022ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்து வரிக்கு முன்னரான இலாபத்தில் 19.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம், 2022 இறுதியில் மொத்த வருமானத்தில் பதிவுசெய்யப்பட்ட 15.4 சதவீத அதிகரிப்புடன் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 41.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறை வரிக்கு முன்னரான இலாபத்தில் 1.3

சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு 2022 இறுதியிலுள்ளவாறு கோரல்களில் பதிவுசெய்யப்பட்ட 31.5 சதவீத அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

2021 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் என்பன வீழ்ச்சியடைந்த வேளையில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மீதான வருவாயும் அதிகரித்தன. 2022 இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் மற்றும் 17.7 சதவீதங்களிலிருந்து முறையே 3.6 சதவீதத்திற்கும் 17.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.0 சதவீதம் மற்றும் 16.3 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் முறையே 10.1 சதவீதத்திற்கும் 20.8 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

நீண்ட கால காப்புறுதித் துணைத் துறையினதும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையினதும் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2021 இறுதியின் முறையே 21.3 சதவீதம் மற்றும் 49.7 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 20.8 சதவீதத்திற்கும் 47.5 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நீண்ட கால காப்புறுதித் துணைத் துறை மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதங்கள் 2021 இறுதியின் முறையே 384 சதவீதம் மற்றும் 307 சதவீதங்களிலிருந்து 2022 இறுதியில் முறையே 303 சதவீதத்திற்கும் 210 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

ஓய்வுகால நிதியங்கள்

ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியில் ரூ.4,345.0 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டு நிதியியல் துறைச் சொத்துக்களில் 13.8 சதவீதத்திற்குப் பங்களித்தது. எனினும், துறையானது ஊழியர் சேம நிதியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததுடன் இது ஓய்வுகால நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 79.6 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச துறை பொதுப் பணிகள் ஊழியர் சேமலாப நிதியம் என அழைக்கப்படும் இரண்டு பொதுவாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் தொழிற்பாட்டிலிருக்கின்றன. இவை 2022 இறுதியில் ஓய்வுகால நிதித் துறையின் மொத்த சொத்துக்களில் முறையே 10.8 சதவீதத்திற்கும் 2.0 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றன. மேலும், 2022 இறுதியில் தனியார் துறையினால் முகாமைப்படுத்தப்படும் 117 ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் காணப்படுகின்றன.

ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியம் ஓய்வுகால நிதித் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியதுடன் 2022 இறுதியில் இத்துறையின் மொத்தச் சொத்துக்களில் 79.6 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊழியர் சேம நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,166.1 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.3,459.9 பில்லியனுக்கு ரூ.293.7 பில்லியனால் அதிகரித்து 9.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்பு (பெறப்பட்ட பங்களிப்பு மற்றும் மீளளிக்கப்பட்ட நிதியங்களின் தேறிய தொகை) மற்றும் நிதியத்தின் முதலீடுகளினூடாக உருவாக்கப்பட்ட வருமானம் என்பனவற்றின் இணைந்த தாக்கம் பங்களித்தது. உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்கள் 2022 இறுதியில் ரூ.3,380.6 பில்லியனாக விளங்கி 2021 இறுதியின் ரூ.3,066.9 பில்லியனிலிருந்து 10.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்பு ரூ.194.6 பில்லியனுக்கு 17.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2022இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மீளளிப்பின் மொத்தத் தொகை ரூ.163.0 பில்லியானகக் காணப்பட்டதுடன் இது 2021 இனை விட 37.9 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2022இல் இதற்கமைய, நிதியத்திற்கான தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.47.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.31.6 பில்லியனாக விளங்கியது. நிதியத்தின் வருடாந்த இலாபம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.299.1 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.264.1 பில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு பட்டியலிடப்பட்ட பங்குரிமைகளின் மீது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.8 பில்லியன் கொண்ட தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்களுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.40.9 பில்லியன் கொண்ட தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள் ஏற்பட்டமையே முக்கிய காரமணாகும்.

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2021 இறுதியின் ரூ.3,173.3 பில்லியனிலிருந்து 2022 இறுதியில் ரூ.3,466.5 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை உறுப்பினர்களுக்கு இடர்நேர்வு சீராக்கப்பட்ட உகந்த வருவாய் வீதமொன்றினை வழங்குவதனை முக்கிய கவனத்தில் கொண்டிருந்த வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினையும் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் பூர்த்திசெய்யத்தக்க விதத்தில் திரவத்தன்மை போதுமான மட்டத்தில் கிடைப்பதனையும் உறுதிப்படுத்துவதாக இருந்தது. இதற்கமைய, 2022 இறுதியில் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களிலுள்ள 96.9 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனத்திலுள்ள 2.3

சதவீதத்தினையும் கூட்டாண்மைத் தொகுதிக் கடன்களிலுள்ள 0.7 சதவீதத்தினையும் நேர்மாற்றுக் மீள்கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள எஞ்சிய 0.1 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் 2022இல் ரூ.315.9 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.342.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. வட்டி வருமானம், நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக தொடர்ந்தும் விளங்கியதுடன் இது 2021இன் ரூ.293.7 பில்லியனிலிருந்து 2022இல் ரூ.349.3 பில்லியனுக்கு 18.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பங்கு இலாப வருமானம் முன்னர் குறிப்பிட்டதைப்போன்று 2021இன் ரூ.6.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.7.5 பில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. பட்டியலிடப்பட்ட பங்குரிமை சொத்துப்பட்டியல் 2021இல் தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபமான ரூ.41.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டமாக ரூ.40.9 பில்லியனைப் பதிவுசெய்தது.

2022இல் நிதியத்தினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ.316.2 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.342.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் வரிச் செலவினம் என்பனவற்றிற்காக சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் 2022ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூ.264.1 பில்லியனாக விளங்கியதுடன் இது 2021இன் ரூ.299.1 பில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதற்கமைய, 2022இல் ஊழியர் சேம நிதியத்தின் சராசரி முதலீட்டின் மீதான வருமானம் 9.96 சதவீதமாகக் காணப்பட்டது. பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் கணிசமான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டமைக்கிடையிலும் நிதியமானது மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவினத்தின் வீதத்தினை 2022இல் 0.67 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. எனினும், நிதியத்தின் வரிச் செலவினம் 2022இல் வட்டி வருமானமும் பங்கிலாப வருமானமும் அதிகரித்தமையினைத் தொடர்ந்து 2021 உடன் ஒப்பிடுகையில் ரூ.7.3 பில்லியனால் அதிகரித்தது. இருப்பினும்கூட, நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்களுக்காக பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்: 9 பின்பற்றப்படுமிடத்து பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சாதனங்கள் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டமையினாலும் அத்துடன் சந்தையில் காணப்பட்ட சாதகமற்ற நிலைமைகளினாலும் 2022ஆம் ஆண்டிற்கான முதலீட்டு வருமானத்திலிருந்து ரூ.40.9 பில்லியன் கொண்ட தேறிய இழப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. மேலும், 2022 ஏப்பிறல் வரை சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொள்கையில் 2022 மேயிற்கு முன்னைய காலப்பகுதிகளில் முதலீடு செய்யத்தக்க ஒன்றுசேர்ந்த நிதியம் குறைந்த வட்டி வீதங்களில் முதலீடு செய்யப்பட்டமையினால் 2022 மேயிற்கு பின்னர் முதலீடு செய்யப்பட்ட நிதியம் மாத்திரமே உயர்ந்த வட்டி வீத விளைவைப் பெற்றுக்கொண்டது.

அட்டவணை 8.16
ஊழியர் சேம நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்ற சுருக்கம்

விடயம்	2018	2019	2020	2021	2022 (அ)
நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்)	2,289.4	2,540.4	2,824.3	3,166.1	3,459.9
உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்)	2,254.2	2,497.6	2,767.8	3,066.9	3,380.6
மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்)	145.0	157.2	150.7	165.7	194.6
மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்)	108.0	126.3	109.7	118.2	163.0
தேறிய பங்களிப்பு (ரூ.பில்)	37.0	30.9	41.0	47.5	31.6
அங்கத்தவர் மீதிகளுக்கான வட்டிவீதம் (%)	9.50	9.25	9.00	9.00	9.00
அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்)	18.7	19.4	19.8	20.3	20.4
செயற்பாட்டிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்)	2.9	2.9	2.6	2.5	2.4

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேலும், இலங்கை மூலதனம் மற்றும் நிதியியல் சந்தையின் பருமனுடன் ஒப்பிடுகையில் நிதியத்தின் பருமனானது வரையறுக்கப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கியதுடன், ஊழியர் சேம நிதியம் அரச பிணையங்களில் பெரும்பாலும் அதனுடைய முதலீடுகளைச் செய்வதற்கு வழிவகுத்தது. இறையாண்மை மீதான இத்தகைய அதிக தங்கியிருத்தலானது, சாத்தியமான உள்நாட்டுக் கடன் உச்சப்படுத்தலிற்கான சூழலொன்றில் ஊழியர் சேம நிதியத்திற்கு சில இடர்நேர்வுகளை உருவாக்கியுள்ளது. பாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் நிலைமைகள் காணப்பட்டதால், நிதியத்தின் முதலீட்டு தீர்மானம் எடுக்கும் செயன்முறையானது ஆண்டு காலப்பகுதியில் சவாலாக இருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட சவால்களைக் கருத்திற்கொண்டு, ஊழியர் சேம நிதியத் திணைக்களமானது, நாணயச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு (முதலீட்டுக் கொள்கைக் கூற்று, தந்திரோபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள்) மற்றும் நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைக்கு இணங்க, ஒரு உச்சகட்ட இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருமானத்தை அடைதற்கு வலுவான முதலீட்டு தீர்மானங்களை எடுப்பதற்கு அதனுடைய முதலீட்டு தந்திரோபாயங்களை மாற்றியமைத்தது.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஓய்வுகால நிதித் துறையின் சொத்துத் தளத்தில் 10.8 சதவீதத்திற்கு பங்களிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியம், சொத்துத் தளம் மொத்தப் பங்களிப்புக்கள் மற்றும் முதலீட்டு நியதிகளில் 2022 காலப்பகுதியில் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 16.8 மில்லியன் உறுப்பினர் கணக்குகளில் 2.4 மில்லியன் கணக்குகள் மாத்திரமே 2022 இறுதியில் செயற்படும் கணக்குகளாகக் காணப்பட்டன.

நிதியத்திற்கு பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2021 இறுதியின் 44,501 இலிருந்து 2022 இறுதியில் 68,488 இற்கு அதிகரித்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை 2022 இறுதியில் 4.1 சதவீத அதிகரிப்பினைக் காட்டி ரூ.422.9 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.34.8 பில்லியனை அடைந்த வேளையில் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த நன்மைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 26.4 சதவீதத்தினால் அதிகரித்து 2022 இறுதியில் ரூ.25.0 பில்லியனை அடைந்தது.

அதேவேளை, ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2022 இறுதியில் ரூ.468.8 பில்லியனுக்கு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தன. ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் 2022 இறுதியில் ரூ.442.5 பில்லியனுக்கு மேம்பட்டது. இது 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2022 இறுதியில் இம்முதலீடுகளில் 94 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில் 86.7 சதவீதம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. நிலையான வைப்புக்களில் முதலீடுகளின் பங்கு 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 0.1 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியம் 2022இன் அதன் உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது 8.80 சதவீதம் கொண்ட வருமானத்தினை செலுத்தக்கூடியதாக இருந்தது. இது, முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் செலுத்தப்பட்ட 7.30 சதவீதம் கொண்ட வருமானத்தினை விட அதிகமானதாகும்.

ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

ஓய்வுகால நிதித் துறையில் 2.0 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுப் பணிகள் சேமலாப நிதியம் சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் நியதிகளில் 2022 ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்த வேளையில் தேறிய பங்களிப்பு வீழ்ச்சியடைந்தது. நிதியமானது 2022 இறுதியில் சொத்துக்களின் நியதிகளில் ரூ.85.9 பில்லியனை அடைந்து 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நிதியத்தின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2021 இறுதியின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 241,384 உடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 267,367 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, நிதியத்தின் முதலீடுகளும் 2022 இறுதியில் 5.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.85.4 பில்லியனை அடைந்தது. பொதுப் பணிகள் சேமலாப நிதியம் அதன் மொத்த முதலீட்டில் 42.7 சதவீதத்தினை அரச பிணையங்களில் முதலீடு செய்த வேளையில் 2022 இறுதியில் ஏனைய முதலீடுகள் மொத்த முதலீட்டில் 57.3 சதவீதத்திற்கு வகைகூறின. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் தேறிய பங்களிப்பு முன்னைய ஆய்விற்குரிய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.835 மில்லியன் கொண்ட தேறிய பங்களிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.262 மில்லியனாகக் காணப்பட்டது. உறுப்பினர் நிலுவைகளின் மீதான வருவாய் வீதம் 2022இல் மாற்றம் எதுவுமின்றி 8.00 சதவீதத்தில் காணப்பட்டது.

அட்டவணை 8.17
ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்

விடயம்	2021 (அ)	2022 (ஆ)
மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்)	419.1	468.8
மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்)	406.3	422.9
அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்)	14.7	16.8
இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்)	2.1	2.4
பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை	44,501	68,488
மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்)	29.7	34.8
மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்)	19.8	25.0
மொத்த முதலீட்டுப்பட்டியல் (ரூ. பில்)	410.6	442.5
இதில்: அரச பிணையங்கள் (%)	86.7	94.0
இதில்: நிலையான வைப்புகள் (%)	6.9	0.1
மொத்த வருமானம் (ரூ. பில்)	35.5	47.5
பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்)	28.6	38.5
முதலீடுகளிலிருந்தான வருவாய் (%)	8.6	9.2
அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%)	7.3	8.8

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

உள்நாட்டுப் பணச் சந்தை

பணச் சந்தையின் திரவத்தன்மை


2022இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தை விடாப்பிடியாக உயர்ந்த மட்டத்திலான பற்றாக்குறையினை தொடர்ச்சியாகக் கொண்டிருந்த போதும், 2022 திசெம்பர் இறுதியில் அதன் திரவத்தன்மைப் பற்றாக்குறை கணிசமாக வீழ்ச்சியடைந்து 2021 திசெம்பர் இறுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.231 பில்லியனைப் பதிவுசெய்தது. 2021 திசெம்பர் இறுதியில் ரூ.366 பில்லியனாக விளங்கிய திரவத்தன்மைப் பற்றாக்குறை 2022இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்து, 2022 ஏப்பிறல் இறுதியில் ரூ.688 பில்லியன் கொண்ட உச்சமட்டத்தினைப் பதிவுசெய்தது. முதலாந்தர ஏலங்களில் மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்களுக்கான கொள்வனவு அதேபோன்று அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களின் வழங்கல் மற்றும் மத்திய வங்கியினால் செய்யப்பட்ட இலாப மாற்றல்கள் என்பன திரவத்தன்மையினை

உள்ளீடு செய்த போதும், 2022 காலப்பகுதியில் திரவத்தன்மையில் காணப்பட்ட கணிசமான உயர்ந்த பற்றாக்குறை முக்கியமாக உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து நாணய எடுப்பனவுகள், அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், அதேபோன்று முதிர்ச்சியடைந்த வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிக்காக வெளிநாட்டுச் செலாவணி விற்பனை என்பனவற்றிலிருந்து தோன்றியது. எனினும், உயர்ந்த சந்தை வட்டி வீதங்களின் காரணமாக வங்கித்தொழில் துறையில் வைப்புக்கள் அதிகரித்தமை, அரசாங்கத்தின் அவசர காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளுக்கு உதவுகின்ற விதத்தில் சிறப்பு வழங்கல்களூடாக திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கொள்வனவு என்பனவற்றின் காரணமாக 2022 மேயிலிருந்து திரவத்தன்மைப் பற்றாக்குறையில் படிப்படியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் காணப்பட்ட கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறையினைக் குறைக்கும் நோக்குடன் 2022 காலப்பகுதியில் மத்திய வங்கி தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக அவ்வப்போது திரவத்தன்மையினை உள்ளீடு செய்தது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் இறுதியில் திரவத்தன்மை பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2022 யூன் நடுப்பகுதியிலிருந்து மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் ஆரம்பக் கொள்வனவுகளின் காரணமாக ஏற்பட்ட திரவத்தன்மை உள்ளீடுகளின் தாக்கத்தினை ஓரளவு தணிப்பதற்காக, அவசியமானவிடத்து, மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளை மேற்கொண்டது. குறிப்பிட்ட உள்நாட்டு வங்கிகள், குறிப்பாக அரச வங்கிகள் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மைப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தமைக்கு வங்கித்தொழில் துறையிலிருந்தான அரசின் அதிகரித்த கடன்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் வெளிநாட்டு வங்கிகள் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மை மிகைகளைப் பதிவுசெய்தமையால் சந்தை திரவத்தன்மையானது 2022இல் சீரற்ற பகிர்ந்தளிப்பினை எடுத்துக்காட்டியது.


பணச் சந்தை வட்டி வீதங்கள்

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையினை நோக்கி நகர்ந்து துணைநில் வீத வீச்சில் நிலையாகக் காணப்பட்டது. தொடர்ச்சியான இறுக்கமான நாணய கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை 2022 காலப்பகுதியில் நான்கு தடவைகளில் மொத்தமாக 950 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தமையின் மூலம் 2022 இறுதியில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் அதிகரித்தன. இறுக்கமான நாணய நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் தொடர்ந்தும் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் காணப்பட்டதன் மூலம் 2022 திசெம்பர் இறுதியில் 15.50 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. 2023இன் முதல் காலாண்டில் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்தப்பட்டமையால், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் அதற்குச் சமமான அளவால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் ஊசலாடிக் கொண்டிருந்த போதும் அழைப்புப் பணச் சந்தை 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து குறைந்தளவு செயற்பாட்டினைக் கொண்டிருந்தது. குறிப்பாக, இறைத் துறை அபிவிருத்திகள்

வரைபடம் 8.16
பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்களை பாதித்தக் காரணிகள்



வரைபடம் 8.17
திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்கள், துணைநில் வசதி, துணைநில் வீச்சு மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்



பற்றிய ஊகத்தினால் சந்தைகளில் நிச்சயமற்ற தன்மை அதிகரித்தமைக்கிடையில் சந்தைப் பங்கேற்பாளர்களினால் விதிக்கப்பட்ட கடுமையான இணைத்தரப்பு வரையறைகள் காரணமாக ஓரிரவு அழைப்புப் பணச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்கள், ஆண்டின் முதல் ஒரு சில மாதங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிற்கு குறைவாகக் காணப்பட்டன. சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பரந்தளவிற்கு நகர்ந்து, 2022 திசெம்பர் இறுதியில் 15.50 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, பங்கேற்கும் நிறுவனங்கள் துணைநில் கடன்வழங்கல் வசதியூடாக நிதிகளைக் கடன்படுவதற்கு அல்லது மிகையான நிதிகளை துணைநில் வைப்பு வசதியில் வைப்புச் செய்வதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வசதிகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தன. உயர்ந்தளவு திரவத்தன்மைப் பற்றாக்குறைகளைக் கொண்ட பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் அமைப்பியல் சார்ந்த திரவத்தன்மை

அட்டவணை 8.18

திறந்த சந்தை தொழிற்பாடுகள் மற்றும் பணச் சந்தை கொடுக்கல்வாங்கல்களின் சாராம்சம்

கொடுக்கல்வாங்கல்கள்	அளவு (ரூ.பில்)		வருட இறுதியில் உள்ளவாறான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டிவீதம் (குறைந்தது-கூடியது)%	
	2021	2022	2021	2022
சந்தை				
அழைப்புப் பணம் (ஓரிரவு)	7,935	3,746	4.53 - 5.97	5.94 - 15.50
மீள்கொள்வனவு (ஓரிரவு)	3,533	1,568	4.55 - 6.00	5.95 - 15.50
திறந்த சந்தை தொழிற்பாடுகள்				
ஓரிரவு அடிப்படையில்				
மீள்கொள்வனவு	1,183	1,533	5.71 - 5.99	5.96 - 6.49
நேர்மாற்று மீள்கொள்வனவு	-	-	-	-
திரவத்தன்மை ஆதரவு வசதி (அ)	-	-	-	-
குறுங்கால அடிப்படையில்				
மீள்கொள்வனவு	423	22	5.96 - 5.99	5.95 - 6.49
நேர்மாற்று மீள்கொள்வனவு	-	235	-	7.50
திரவத்தன்மை ஆதரவு வசதி (அ)	-	-	-	-
நீண்டகால அடிப்படையில்				
மீள்கொள்வனவு	60	-	6.04 - 6.05	-
நேர்மாற்று மீள்கொள்வனவு	204	955	6.13 - 7.20	7.73 - 33.07
திரவத்தன்மை ஆதரவு வசதி (அ)	-	-	-	-
உடனடி விற்பனை/ கொள்வனவு அடிப்படையில்				
திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு	-	-	-	-
திறைசேரி முறிகளின் கொள்வனவு	-	-	-	-
திறைசேரி உண்டியல்களின் விற்பனை	14	24	7.00 - 7.23	20.75 - 26.97
திறைசேரி முறிகளின் விற்பனை	-	-	-	-
துணைநில் வசதி (கொள்கை வட்டிவீதங்களில்)				
துணைநில் வைப்பு வசதி	29,450	54,528	5.00 (ஆ)	14.50 (ஆ)
துணைநில் கடன் வழங்கல் வசதி	30,095	163,058	6.00 (ஆ)	15.50 (ஆ)

(அ) திரவத்தன்மை ஆதரவு வசதி என்பது தனித்து முதனிலை வணிகர்களாக இயங்கும் நிறுவனங்களுக்கான திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாறு மீள்கொள்வனவு ஏலமொன்றாகும்.
(ஆ) ஆண்டு இறுதி வட்டி வீதங்கள்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தேவைப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சந்தையினை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல் தேர்வுகளைப் புறக்கணிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியின் ஓரிரவு வசதிகளின் மீது அளவுக்கதிகமான விதத்தில் தொடர்ந்தும் தங்கியிருந்தன. குறிப்பாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அத்தகைய நடத்தை பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் செயற்பாட்டையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளின் காத்திரமான தன்மையினையும் பாதித்தது. எனவே, 2023 சனவரி 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளை அவற்றின் மிகையான திரவத்தன்மையினை வைப்புச் செய்து வட்டியை உழைப்பதற்கு அனுமதிக்கின்ற ஓரிரவு வைப்பு வசதியான துணைநில் வைப்பு வசதி கலண்டர் மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் 5 தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேநேரம் ஏதேனும் மேலதிக திரவத்தன்மைப் பற்றாக்குறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய மத்திய வங்கியிலிருந்து ஓரிரவு அடிப்படையில் நாளின் இறுதியில் வழங்கப்படும் வசதியான துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினதும் நியதி ஒதுக்கத் தேவைப்பாட்டில் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. திரவத்தன்மைப் பிரச்சனைகளைச் சரிசெய்வதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினதும் அவற்றினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகளினதும் காரணமாக வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட திரவத்தன்மை மட்டங்களின் முன்னேற்றங்களுடன் இணைந்து பணச் சந்தையில் செயற்பாடு அவதானிக்கப்பட்டது.

உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2021 இறுதியில் ரூ.200.43 இலிருந்து 2022 இறுதியில் ரூ.363.11 இற்கு 44.8 சதவீதத்தினால் கணிசமாகத் தேய்வடைந்தது. ஆண்டின் தொடக்கத்தில் ரூ.200.00 இற்கும் ரூ.203.00 இற்குமிடையில் தளம்பலடைந்த செலாவணி வீதம், 2022 மார்ச்சு 07 முதல் அனுமதிக்கப்பட்ட கூடிய நெகிழ்ச்சித்தன்மையால் விரைவாகத் தேய்வுற்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னர் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய விடாப்பிடியான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறையானது, வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்விக்கு மத்தியில் உலகளாவிய தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து வெளிநாட்டு நிதியிடலைத் திரட்டுவதில் காணப்பட்ட சவால்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையின் காரணமாக மத்திய வங்கியின் பயன்படுத்தத்தக்க வெளிநாட்டு ஒதுக்கு கடுமையாக குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2022இன்

சிறப்புக்குறிப்பு 11

நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அழுத்தமிகு காலப்பகுதியில் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மைப் பிரச்சனைகளை தீர்ப்பதில் மத்திய வங்கியின் தலையீடு

அறிமுகம்

2007 நடுப்பகுதியில் தோற்றம்பெற்ற உலகளாவிய நிதியியல் நெருக்கடியானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கான தேவை பற்றி புத்துயிர்பெற்ற கரிசனைகளைத் தோற்றுவித்து ஒட்டுமொத்த முறைமையினை பாதிக்கக்கூடிய நெருக்கடிகளை முகாமைசெய்து, தடுப்பதில் மத்திய வங்கிகளின் அடிப்படை வகிபாகத்தின் மீது கவனம் செலுத்துவதை மீளப் புதுப்பித்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட கொந்தளிப்புக்குப் பதிலிறுத்தி உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகள், நிதியியல் நிறுவனங்களுக்கும் சந்தைகளுக்கும் அபரிமிதமான திரவத்தன்மையினை வழங்குவதற்கு புதிய அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற இரு வகையான கருவிகளையும் பயன்படுத்தின. 2022 காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரமானது 1948இல் பிரித்தானியாவிடமிருந்து நாடு சுதந்திரமடைவதிலிருந்து மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை அனுபவித்தது. இந்நெருக்கடி நாட்டின் நிதியியல் முறைமை மீது தாக்கத்தினைக் கொண்டிருந்து, நிதியியல் முறைமையின் இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அதிகரித்தது. நாட்டின் பாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றிய பல் கோணங்களிலுமான சவால்களை உள்நாட்டு பணச் சந்தை எதிர்கொண்டது. பணச் சந்தைத் திரவத்தன்மை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டங்களிலேயிருந்த அதேவேளை, கண்டிப்பான எதிர்த்தரப்பு வரையறைகளை கடைப்பிடிப்பதன் காரணமாக சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் திரவத்தன்மைப் பரம்பலில் குறிப்பிடத்தக்க சமச்சீரின்மை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, திரவத்தன்மையினை முகாமைசெய்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்கள் அளவுக்கதிகமாக மத்திய வங்கி வசதிகளை நாடினர். இதனால், நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு, பொருத்தமான கருவிகள் ஊடாக திரவத்தன்மை வழங்குவதில் அதன் வகிபாகத்தினை செயற்படுத்துவதற்கு மத்திய வங்கி பரிகார வழிமுறைகளை எடுத்தது. இலங்கையில் நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அழுத்தமிகு காலப்பகுதியில் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மைப் பிரச்சனைகளை தீர்ப்பதில் மத்திய வங்கியின் தலையீடுகள் பற்றிய விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் அதிகரிப்பதற்கு இக்கட்டுரை முனைகின்றது.

திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கியின் வகிபாகம்

"திரவத்தன்மை" என்ற சொற்பதம் அது பயன்படுத்தப்படுகின்ற சூழ்நிலையைப் பொறுத்து பல பரந்த வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ளது. பொதுவாக, திரவத்தன்மை பற்றிய மூன்று கருத்துக்கள் திரவத்தன்மை முகாமைத்துவத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. முதலாவது, "சந்தைத் திரவத்தன்மை" இது சந்தை விலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்கமொன்றுடன் குறுகிய அறிவித்தலொன்றில் அத்துடன் குறிப்பிடத்தக்க இழப்புகளின்றி நிதியியல் சொத்துக்களை வர்த்தகப்படுத்துவதற்கான இயலுமை ஆகும். எனவே, சந்தைத் திரவத்தன்மை என்பது சந்தையின் விரிவு மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றுடன் தொடர்புபட்டது. இரண்டாவதாக, "நிதியிடல் திரவத்தன்மை" இது சந்தை ஏற்றுக்கொள்ளத்தக்க செலவில் உரியகால விதத்தில் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு சொத்து விற்பனைகள் அல்லது கடன்பெறுதல்கள் மூலம் எவ்வளவு இலகுவாக நிதியியல் நிறுவனங்கள் நிதியங்களைத் திரட்டுகின்றன என்பதனைக் குறிப்பிடுகின்றது. மூன்றாவது, "மத்திய வங்கி திரவத்தன்மை" இது மத்திய வங்கி திரவத்தன்மை நோக்கத்திற்காக குறித்த நாளொன்றில் மத்திய வங்கியொன்றுடன் வைத்திருக்கப்படும் ஒதுக்கு நிலுவைகளின் மொத்தத்தைக் குறிப்பிடுகின்றது. இது, "கூட்டு திரவத்தன்மை" அதாவது நாணயத் தொழிற்பாட்டு நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமைக்கு மத்திய வங்கி வழங்குகின்ற ஒதுக்குகளின் மொத்தத்தை எடுத்துரைக்கின்றது (Cecchetti and Disyatat 2009).

மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவமானது, குறுகியகால வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வர்த்தக வங்கி ஒதுக்குகளின் தொகையினை வழிநடாத்துவதில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற சாதனங்கள் மற்றும் கருவிகளைக் கொண்ட தொகுதியொன்றான கட்டமைப்பு என விவரணம்செய்யப்படுகின்றது. மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவத்தின் முதன்மைக் குறிக்கோள், குறுகிய கால வட்டி வீதங்களை வழிநடத்துதல் அத்துடன் கொடுப்பனவு முறைமையின் தொடர்ச்சியான தொழிற்படுதல் என்பன ஊடாக கொள்கைக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு உதவுவதற்கு வங்கித்தொழில் முறைமையில் மொத்த ஒதுக்குகளின் மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதாகும். எனவே, சந்தை வட்டி வீதங்களும் கொடுகடன் உருவாக்கமும் திரவத்தன்மையுடன் நெருங்கி தொடர்புபட்டுள்ளதனால் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையினை வசதிப்படுத்துவதில் மத்திய வங்கி திரவத்தன்மை முக்கிய மாறிலியொன்றாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பரந்த நோக்கில், முனைப்பான திரவத்தன்மை முகாமைத்துவமானது விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டையும் எய்துவதில் மத்திய வங்கியின் பொறுப்பாணையினுள் அனைத்து மையத் தொழிற்பாடுகளுடனும் ஓரளவிற்கு தொடர்புபடுகின்றது. நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலில் அது முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்ற அதேவேளை, கொடுப்பனவு முறைமையின் சீரான தொழிற்பாடும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பாதுகாப்பும் இன்றியமையாததாக இருக்கின்றது. அதற்கமைய, மத்திய வங்கியின் இரு குறிக்கோள்கள் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கின்ற திரவத்தன்மை முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற மத்திய வங்கியொன்றின் நாணயக் கொள்கைக் கருவிகள் திரவத்தன்மை மற்றும் பணத்தின் விலை (வட்டி வீதங்கள்) என்பவற்றில் தளம்பலைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொள்கின்றது.

உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகளும் நாணய அதிகாரசபைகளும் நிதியியல் முறைமையைப் பாதுகாக்கும் நோக்குடன் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பதிலிறுத்துவதில் திரவத்தன்மை முகாமைத்துவம் மீது மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. விசேடமாக நெருக்கடி காலப்பகுதியில் மத்திய வங்கி திரவத்தன்மை வழங்குதலானது நிதியளித்தல் மற்றும் சந்தைத் திரவத்தன்மை என்பவற்றுடன் சாதகமாக இணைக்கப்படக்கூடியது. மத்திய வங்கியானது, இறுதித் திரவத்தன்மை வழங்குநர் என்ற ரீதியில் அதன் இயலளவில் வங்கித்தொழில் முறைமைக்கு வேறுபட்ட வழிகளில் திரவத்தன்மையை வழங்குகின்றது. அவற்றிற்கு மத்தியில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக கடன் வழங்குதலானது வங்கித்தொழில் முறைமையில் ஒதுக்குகளை முகாமைசெய்வதற்கு முதன்மை திரவத்தன்மை முகாமைத்துவ கருவியொன்றாகக் காணப்படுகின்றது. இதன்மூலம், சாதாரண பொருளாதார நிலைமைகளில் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துகின்றது. தற்காலிக அடிப்படையில் திரவத்தன்மையை வழங்குவதற்கு மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. இதனூடாக மத்திய வங்கியானது, பின்னர் நிதியியல் நிறுவனங்களுக்கு அவற்றை மீளவிற்பனை செய்வதற்கிணங்கி அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. அதேபோன்று நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை வழங்குவதற்கு உடனடி அடிப்படையில் இரண்டாம்தரச் சந்தையில் மத்திய வங்கி பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. போட்டி விலைக்குறிப்பீட்டு ஏலங்கள் ஊடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடாத்தப்படுகின்றமையினால் இவ் ஏலங்கள் குறிப்பான நிதியியல் நிறுவனமொன்றுக்கு திசைப்படுத்தப்படுவதில்லை. அதேபோன்று இத்தொழிற்பாடுகள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைக்கிசைவாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை வீதங்களுக்கான இலக்கினை அடைவதற்கும் மொத்த ஒதுக்கு மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் விருப்பத்தில் நடாத்தப்படுகின்றன.

மேலும், ஒட்டுமொத்தமான சந்தைக்குப் பதிலாக குறித்த நிறுவனங்களை இலக்காகக்கொண்டு மத்திய வங்கிகள் திரவத்தன்மை வழங்கும் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துகின்றன. துணைநில் வசதியானது நிதியிடல் திரவத்தன்மை கிடைக்கப்பெறுவதன் அடிப்படையில் நிதி நிறுவனமொன்றின் மூலம் வேண்டப்படும் போதும், வேண்டப்பட்டவாறும் இடம்பெறக்கூடிய கொடுக்கல்வாங்கல் இவ்வகைக்கு பொதுவான உதாரணமாகும். எடுத்துக்காட்டாக, இலங்கை மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதியானது வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை நிலைமைகள் இறுக்கமடைந்துள்ள போது அல்லது குறித்த நிதியியல் நிறுவனமொன்று குறுகியகால நிதியிடல் அழுத்தங்களை எதிர்கொள்ளுகின்ற போது எஞ்சிய நிதியிடல் தேவைகளை நிறைவுசெய்வதற்கு குறித்த நிதியியல் நிறுவனமொன்றிற்கு நேரடியாக திரவத்தன்மையை வழங்குகின்றது. அதேபோன்று நிதியியல் நிறுவனமொன்று நாளின் இறுதியில் மிகையான நிதியங்களை வைத்திருக்குமாயின் அத்தகைய மிகை துணைநில் வைப்பு வசதியினைப் பயன்படுத்தி மத்திய வங்கியிடம் வைத்திருக்கக்கூடியது என்பதுடன் வட்டி வருமானத்தையும் ஈட்டும். திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கி பயன்படுத்துகின்ற மரபுசார்ந்த கருவிகளாக இக்கருவிகள் கருதப்படுகின்றன. மரபுசார்ந்த கருவிகளையும் திரவத்தன்மை வசதிகளையும் பயன்படுத்துவதற்குப் புறம்பாக, நிதியியல் நெருக்கடிகளும் சந்தை நிச்சயமின்மையும் திரவத்தன்மை தொழிற்பாடுகளை நடாத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைக்கும் மத்திய வங்கி திரவத்தன்மையினை வழங்குவதற்கும் மத்திய வங்கிகள் அவற்றின் கருவித்தொகுதிகளை விரிவுபடுத்துவதற்கு தூண்டுகின்றன.

இலங்கையில் வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மைப் பற்றாக்குறை

2021 செத்தெம்பர் தொடக்கம், வங்கித்தொழில் முறைமையானது வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், நாணய மீளெடுப்புகளால் தூண்டப்பட்ட நிச்சயமின்மை அத்துடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டின் விளைவாக உருவான பற்றாக்குறை என்பவற்றின் பகுதியளவு காரணமாக, ஒட்டுமொத்த முறைமையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றினை படிப்படியாக அனுபவித்தது. பேரண்ட பொருளாதார சமநிலையினை மீளமைக்கும் நோக்குடன் 2022 காலப்பகுதியில் எதிர்பாராத கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. சீர்குலைகின்ற பொருளாதார தோற்றப்பாட்டினை திரும்பச்செய்வதற்கு மத்திய வங்கி கொள்கை வீதங்களை 700 அடிப்படைப் புள்ளிகளால் திருத்தியதுடன் அதனைத்தொடர்ந்து சீராக்கங்களை அறிமுகப்படுத்தியது. எனினும், சந்தைத் திரவத்தன்மை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டத்திலேயே இருந்ததுடன் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் சமச்சீரற்ற திரவத்தன்மை பரம்பல் மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றை அனுபவித்தது. நிறுவனம் குறித்த பற்றாக்குறைகளுக்கெதிராக ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய கூட்டு பற்றாக்குறை என்பதனால் அநேகமான வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு சமகாலத்தில் மத்திய வங்கி திரவத்தன்மை தேவைப்பாட்டினை நிறைவுசெய்வது சவால்மிக்கதாகவிருந்தது (நேர்மாற்றுத் தேவைப்பாடு). அத்தகைய, சந்தை முழுவதுமான திரவத்தன்மை நிலைமை, வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் குறைவான செயற்பாட்டுடன் ஒன்றிணைந்து சாத்தியமான நிதியியல் மற்றும் பேரண்ட உறுதிப்பாட்டு விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும். பொருளாதாரத்திற்கு நிதியளிப்பதில் வங்கிகள் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுவதனாலும் பொருளாதாரத்தின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையில் முக்கிய இடையேற்பாடாக இருந்துவருவதனாலும் நிதியிடல் திரவத்தன்மையினை நிறைவுசெய்வதற்கு ஒரு வங்கி தவறுகின்றமை ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைக்கும் சாத்தியமான தடை ஏற்படுத்தலாம் என்பதுடன் வங்கிகளில் சாத்தியமான மீளெடுப்புகள் ஊடாக

வேறுவகையில் தடுக்கக்கூடிய நிதியியல் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவக்கலாம். வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றுக்கொன்று இணையப்பெற்றுள்ளமை காரணமாக நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கை மீது இறுதியாக பரந்தளவிலான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய அதேபோன்று உண்மைப் பொருளாதாரத்தின் மீது முக்கிய தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய பரவக்கூடிய அத்துடன் கசிவுத் தாக்கங்கள் காணப்படலாம். ஆகையினால், நிதியியல் நிச்சயமின்மைக்கும் ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நெருக்கடியைத் தடுத்து முகாமைசெய்வதில் மத்திய வங்கியின் வகிபாகத்திற்கும் அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கின்ற நீண்டகால ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறைகளைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடு இரண்டையும் உறுதிசெய்வதற்கு பல வகையான மரபுசார்ந்த மற்றும் மரபுசாரா திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகளைப் பயன்படுத்தியது.

திரவத்தன்மை அழுத்தக் காலப்பகுதியின் போது மரபுசார்ந்த கருவிகளின் பயன்பாடு

2022இன் முதலரைக் காலப்பகுதியில் கணிசமாக உயர்வாகக் காணப்பட்ட உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை பற்றாக்குறை, 2022இன் பிந்திய பகுதியில் வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மை அழுத்தத்தினை குறைக்கும் நோக்குடன் மத்திய வங்கியானது தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக திரவத்தன்மை தொழிற்பாடுகளை விரிவுபடுத்தி திரவத்தன்மையினை உட்செலுத்தியதுடன் கிரமமான அடிப்படையில் திரவத்தன்மைத் தேவைகளை முகாமைசெய்வதில் ஆதரவளிக்கும் தெரிவொன்றாக ஏதேனும் வரையறையின்றி துணைநில் வசதிகளுக்கான பெறுவழிக்கு நிதியியல் நிறுவனங்களை இயலச்செய்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியைப் போன்று, மத்திய வங்கி மூலமான சந்தை தலையீடுகளின் உயர்வான அளவு, சந்தைக்கு போதுமான திரவத்தன்மையினை உட்செலுத்தி மற்றும் கடன்பெறுதல் செலவுகளைக் குறைத்து இதனூடாக நிதியியல் சந்தைகளுக்கும் அவை மீளுவதற்கும் ஆதரவளிப்பதனை இலக்காகக் கொண்டு அதிவிசேட அளவு, வேகம் மற்றும் நோக்கெல்லை என்பவற்றுடன் நிதியியல் சந்தைகளில் மத்திய வங்கி தலையிட்டிருந்தமை ஒன்றும் புதிய நடைமுறையல்ல. அதற்கமைய, நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தொழில்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு நிதியளிப்பதற்கு மத்திய வங்கி மிகையான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்தியதுடன் பல்வேறு வகையான பிணைய உறுதிகளை ஏற்றுக்கொள்வதன் வாயிலாக (சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி) சலுகைக் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. எனினும், 2022இன் பிந்திய பகுதியிலிருந்து பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகளில் மேம்படுதல்களுக்கு மத்தியிலும் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தைகளில் குறைவடைந்த செயற்பாட்டின் பகுதியளவான காரணமாக சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டன. அதே சந்தர்ப்பத்தில், பல உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் நிதியிடல் திரவத்தன்மைத் தேவைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சந்தை அடிப்படையிலமைந்த நிதியிடல் தெரிவுகளைக் கருத்திற்கொள்ளாது மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஓரிரவு துணைநில் வசதிகள் மீது தொடர்ந்தும் மிதமிஞ்சித் தங்கியிருந்தன. ஏனைய நிதியளித்தல் தெரிவுகள் அனைத்தையும் பயன்படுத்தியதன் பின்னர் மாற்றுவழித் தெரிவுகளாக பயன்படுத்துவதற்குக் கிடைக்கப்பெறுகின்ற மத்திய வங்கி மூலம் வழங்கப்படும் ஓரிரவு வசதிகள் மீது மிதமிஞ்சித் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் ஏதேனும் சமிக்ஞைகளை அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் எடுத்துக்காட்டவில்லை. உரிமம்பெற்ற வங்கிகளின் அவ்வாறான நடத்தை, பணச் சந்தைகளை, முதன்மையாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையினை மற்றும் மீள்கொள்வனவு சந்தையினை மீளச் செயற்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளை பாதித்த அதேவேளை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தடைபடும் சாத்தியத்துடன் பொருளாதாரத்தில் நிதியங்களின் சீரான வழிப்படுத்தலுக்கு அச்சுறுத்தலொன்றை தோற்றுவித்தன.

அதற்கமைய, நாணய மற்றும் நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்து இடர்நேர்வுகளை தீர்த்தல் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார சமனிலையை மீள நிலைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, 2022 ஏப்பிறல் தொடக்கம் எடுக்கப்பட்ட எதிர்பாராத கொள்கை வழிமுறைகளின் பாகமாக மத்திய வங்கி, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு கிடைக்கப்பெறும் துணைநில் வசதிகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தது. ஆகையினால், 2023 சனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மிகையான திரவத்தன்மையினை வைப்புச்செய்து வட்டி ஈட்டுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை இயலச்செய்கின்ற ஓரிரவு வைப்பு வசதியான துணைநில் வைப்பு வசதி நாட்காட்டி மாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை, நாளின் இறுதியில் மத்திய வங்கியிடமிருந்தான திரவத்தன்மை தேவைப்பாடுகளின் ஏதேனும் மேலதிப் பற்றாக்குறையினை நிறைவுசெய்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் பிணையஉறுதி வழங்கப்பட்ட வசதியான துணைநில் கடன்வழங்கல் வசதியும் ஏதேனும் தரப்பட்ட நாளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியினதும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. இக்கட்டுப்பாடுகளின் விளைவாக, உரிமம்பெற்ற வங்கிகள் விடாப்பிடியான திரவத்தன்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பரிகார வழிமுறைகளை எடுக்கின்ற அதேவேளை பணச் சந்தையிலிருந்து நிதியங்களைத் திரட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமையினால் துணைநில் கடன்வழங்கல் வசதியூடான உரிமம்பெற்ற வங்கிகளின் நாளாந்த கடன்பெறுதல் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. மேலும், மிகையான திரவத்தன்மையினை வைப்புச்செய்வதற்கு துணைநில் வைப்பு வசதி கட்டுப்படுத்தப்பட்டமை மூலம் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை தொழிற்படத் தொடங்கியதுடன் பற்றாக்குறையுடன் கூடிய வங்கிகளுக்கு மிகையுடன்கூடிய வங்கிகளிடமிருந்து திரவத்தன்மை மீள் ஒதுக்கீடுகள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய

கட்டுப்படுத்தலிலிருந்து தோன்றக்கூடிய சந்தை இடையூறுகளைக் குறைக்கும் பொருட்டு, மத்திய வங்கியானது அண்மைய காலத்தில் வங்கி உள்ளக சீர்படுத்தலைத் தொடங்கும் வரை வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு திரவத்தன்மை வழங்குவதற்கு தவணை நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தியது. மேலும், சந்தை திரவத்தன்மை நிலைமைகளை மேம்படுத்துதல் அத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை மீள நிலைப்படுத்துவதற்கு உதவிய அறிந்துகொண்ட இடர்நேர்வுக் கரிசனைகளைக் குறைக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிக்காப்பதுடன் சேர்த்து சந்தை வட்டி வீதக் கட்டமைப்பில் (சில்லறை வட்டி வீதங்கள் மற்றும் அரசாங்க பிணைய விளைவுகள் இரண்டினதும்) மிதமடைதலைத் தூண்டுவதில் இவ்வழிமுறைகள் ஏதுவாகவிருந்தன.

திரவத்தன்மை முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் மரபுசாராக் கருவிகள்

எதிர்கால சாத்தியமான நிதியியல் அதிர்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் முகாமைசெய்வதற்கு மேலதிகமாக, நிதியியல் முறைமையினைப் பாதுகாக்கின்ற அதேவேளை, சமூகச் செலவை மட்டுப்படுத்துவதற்கான முயற்சியெடுத்தலுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவம் வழங்குவதன் கீழ் பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகள் இரண்டையும் மத்திய வங்கி எதிர்பாரத அளவில் பயன்படுத்தியது. நெருக்கடி தயார்நிலையின் பாகமாகவும் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கின்ற திரவத்தன்மை அழுத்தத்தினைத் தீர்ப்பதற்கும் மத்திய வங்கி ஆளுகின்ற சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைகளுக்கும் திரவத்தன்மை வழங்குவதற்கு மரபுசாரா புதுமையான திரவத்தன்மை வழங்கல் கருவிகளை மத்திய வங்கி வடிவமைத்துள்ளதுடன் சில அத்தகைய வசதிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

1. மத்திய வங்கியின் திரவத்தன்மை உதவி வசதியினை அறிமுகப்படுத்தல்

இவ்வசதியானது ஏற்கனவே காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் அதாவது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 82 மற்றும் 83(1)(இ) பிரிவுகளின் கீழ் இயலச்செய்யப்பட்டுள்ளது. இதில், எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வசதி வீதத்தின் செலவில் அரசாங்கப் பிணையங்களை வாக்குறுதியளிப்பதன் வாயிலாக பிணையளிக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களின் மீது 180 நாட்களை விஞ்சாத ஏதேனும் நிலையான காலப்பகுதிக்கு திரவத்தன்மை உதவி வசதியாக கொடுகடனைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கித்தொழில் நிறுவனங்கள் தகைமைபெறுகின்றன. கடன் கோரப்பட்ட வங்கியின் திரவத்தன்மை தேவைப்பாடு பற்றிய மதிப்பீடொன்றின் பின்னர் இவ்வசதியின் கீழ் வழங்கப்படும் கொடுகடன் தொகை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும். இவ்வசதியின் மூலம் ஒப்பீட்டளவில் போட்டி விலையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைவிட நீண்டகாலத்திற்கு திரவத்தன்மையினைப் பெற்றக்கொள்வதற்கு வங்கிகள் வாய்ப்பினைக் பெறுகின்றன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை அழுத்தத்தினை தீர்ப்பதற்கும் வங்கித்தொழில் நிறுவனங்கள் மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்கும் இவ்வசதி பயன்படுகின்றது. ஆகையினால், இவ்வசதி அவசரகால திரவத்தன்மை உதவி வசதியுடன் இணைந்த ஏற்றுக்கொள்ளாத நிலையுடன்கூடிய செயல்திறன் வாய்ந்த கொடுக்கல்வாங்கல் வழியொன்றாகும்.

2. அவசரகால திரவத்தன்மை உதவி வசதியினையும் அதன் தொழிற்பாட்டுக் கட்டமைப்பினையும் வலுப்படுத்தல்

வங்கித்தொழில் துறையின் சாத்தியமான ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுக்கு தயாராவதற்கான கொள்கை கருவித் தொகுதிகளின் ஒரு பாகமாக மத்திய வங்கியானது அவசரகால திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை வலுப்படுத்தியுள்ளது. நாணயவிதிச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் பிரகாரம் நாணய மற்றும் வங்கித்தொழில் உறுதிப்பாட்டினை நேரடியாக அச்சுறுத்துகின்ற அவசரகால நிலையில் அல்லது நிதியியல் பீதி நிகழக்கூடிய காலப்பகுதியில் மத்திய வங்கி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அதிவிசேட கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அவசரகால திரவத்தன்மை உதவி என்பது ஒரு அல்லது சில தனிப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களைப் பாதிக்கின்ற தனிமுரண்பாட்டை (நிறுவனசார் நிறுவனத்திற்குக் குறிப்பான) தீர்ப்பதற்கு திரவத்தன்மையினை வழங்குவதற்கு மத்திய வங்கி பயன்படுத்துகின்ற அதிவிசேட கடன் அல்லது முற்பணம் ஒன்றாகும். அவசரகால திரவத்தன்மை உதவியின் முதன்மைக் குறிக்கோள் கடன்தீராற்றலற்ற தன்மைக்கு வழிவகுக்கின்ற தற்காலிக திரவத்தன்மையற்ற நிலை இடர்நேர்வினைத் தவிர்ப்பதும் தொற்றுகின்ற மற்றும் கசிகின்ற தாக்கங்களைத் தணிப்பதுமாகும். வங்கித்தொழில் நிறுவனமொன்று நிதியிடல் திரவத்தன்மையை நிறைவுசெய்வதில் இன்னல்களை எதிர்கொள்ளுகின்ற போது அது வங்கித்தொழில் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவகுக்கலாம். ஆகையினால், நாணயக் கொள்கையின் கீழ் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துவதற்கு திரவத்தன்மை முகாமைத்துவ ஏற்பாடுகளை நடத்துவதற்குப் புறம்பாக, தற்காலிகத் திரவத்தன்மை பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்ற வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை வழங்கும் விதிவிலக்கான வழிமுறையொன்றாக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அவசரகால திரவத்தன்மை உதவியினை மத்திய வங்கி வசதிப்படுத்துகின்றது. அதற்கமைய, மேற்குறித்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடன்தீராற்றல் மிக்கதாகக் கருத்தப்படுகின்ற ஆனால், தற்காலிகமாக திரவத்தன்மையற்ற நிலையினை எதிர்கொள்ளுகின்ற ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம், அதன் திரவத்தன்மை நிலையினை வலுப்படுத்தவதற்கான மத்திய வங்கியின் தற்றுணிவில் பலவகையான பிணைய உறுதிகளுக்கெதிரான அவசரகால திரவத்தன்மை உதவி வசதிக்குத் தகைமையுடையது. இவ்வசதியானது நிலையான வைப்பு வட்டி வீதத்தில் கிடைக்கப்பெறுகின்றது. இது பொதுவாக வங்கி

வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது. தற்போது எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்தினைப் பயன்படுத்தி இது நிர்ணயிக்கப்படுகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியின் ஒதுக்கு வடிவிலும் இறுதிக்கடன் ஈவோனாகவிருக்கின்ற மத்திய வங்கியின் மைப் பொறுப்பொன்றாகவும் திரவத்தன்மையினை உருவாக்குவதற்கான தனித்துவமான இயலுமையினைப் பயன்படுத்தி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு இவ்வசதி வழங்கப்படுகின்றது. மேலும், வங்கித்தொழில் நிறுவனங்கள், குறைவடைந்த நெறிமுறைசார்ந்த அபாயங்களுக்கு வழிவகுக்கின்ற அத்துடன் நாணயக் கொள்கையினை மேற்கொள்வதற்கான அதன் இயலுமையுடன் சுயாதீனத்தினை அல்லது தலையீட்டினை விட்டுக்கொடுக்கக்கூடிய இழப்புகளிலிருந்து மத்திய வங்கியைப் பாதுகாக்கின்ற வங்கித்தொழில் தொழிற்பாடுகள் நியதிகளில் கண்டிப்பான நிபந்தனைகளை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

மேற்குறித்த திரவத்தன்மை வசதிகளை வழங்குவதன் வாயிலாக, நிதியியல் இடர்பாடு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தீர்க்கமாகச் செயற்படுவதற்கும் நிதியியல் முறைமையின் கடன்தீராற்றலை அச்சுறுத்துகின்ற சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளை இல்லாதொழிப்பதற்கும் முன்கூட்டியே செயற்படுவதற்கான அதன் விருப்பத்தினையும் இயலுமையினையும் மத்திய வங்கி எடுத்துக்காட்டுகின்றது. இது, நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் முறைமை முழுவதுமான நம்பிக்கையினை மீள நிலைப்படுத்தவதுடன் சொத்துக்களை குறைவானவிலையில் விற்பதனைத் தடுத்து ஒட்டுமொத்தமாக நிதியியல் முறைமையின் தொழிற்படு தன்மையினைக் காக்கின்றது.

முடிவுரை

மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவ நடவடிவக்கைகள், மத்திய வங்கியின் பொறுப்பாணையினுள் காணப்படுகின்ற அனைத்து அத்தியாவசியத் தொழிற்பாடுகளுடனும் தொடர்புபட்டவை. நாணயக் கொள்கை ஊடுகடத்தல், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் சீரான தொழிற்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான முக்கிய தூணொன்றை அது உருவாக்குகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்வதில் மத்திய வங்கி திரவத்தன்மை வழங்குதலானது சுதந்திரத்திலிருந்து அதன் மோசமான பொருளாதார நெருக்கடிகாலப்பகுதியை நாடு எதிர்கொண்ட திரவத்தன்மை நெருக்கடிக்கு பதிலிறுத்துவதில் சந்தேகமின்றி இன்றியமையாத பங்காற்றியுள்ளது. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைமைக்கான எதிர்பாராத சவால்களை முகாமைசெய்வதில் உள்நாட்டு நாணயச் சந்தை நிலைமை மீதான சாத்தியமான திரவத்தன்மை அழுத்தங்கள் அதிகரிப்பதைத் தடுப்பதற்கான புத்தாக்கமிக்க கருவிகளைப் பயன்படுத்தவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியில், விலை உறுதிப்பாட்டு குறிக்கோளை எய்துவதற்கு மரபுசார்ந்த மற்றும் நியம திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகள் நாணயக் கொள்கை நிலைக்கிசைவான மட்டத்தில் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடாத்துவதை உறுதிசெய்கின்றன. மேலும், மத்திய வங்கியின் ஐந்தொகையின் வலிமை மீது குறிப்பிடத்தக்க தாக்கமின்றி தீவிரமாக இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளிலும்கூட குறிப்பிடத்தக்க நிதியியல் சந்தைகளை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி மரபுசாரா திரவத்தன்மைக் கருவிகளை செயல்திறன்வாய்ந்த விதத்திலும் உரியகாலத்திலும் பயன்படுத்தி ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கின்ற சாத்தியமான இடர்நேர்வுகளை இல்லாதொழிக்கின்றது.

உசாத்துணைகள்

1. Allen, F., Carletti, E., Krahnen, J.P., and Tyrell, M. (Eds.). (2011). Liquidity and Crises, Oxford University Press.
2. Andrew, H., and Lorie L. (2022). 'Market dysfunction and central bank tools', Markets Committee Working Group paper, Federal Reserve Bank of New York.
3. Bagehot, W. (1873). 'Lombard Street: A Description of the Money Market', London.
4. Cecchetti, S.G., and Disyatat, P. (2009). 'Central bank tools and liquidity shortages' (www.newyorkfed.org/research/conference/2009).
5. Cao, J., and G. Illing (2008). Liquidity shortages and monetary policy, CESifo Working Paper Series No. 2210, Available at: SSRN: http://ssrn.com/abstract1090825.
6. Corbo, V. (2010). 'Financial stability in a crisis: What is the role of the central bank', BIS Papers, 51, pp. 27-30.
7. Douglas, W.D., Raghuram, G.R. (2003). 'Liquidity Shortages and Banking Crisis', NBER WP Series 10071.
8. Holmström, B., and J. Tirole. (1998). 'Private and public supply of liquidity', Journal of Political Economy, 106, pp. 1–40.
9. Praet, P. (2016). 'The ECB and its role as lender of last resort during the crisis', Speech, 10 February.

முற்பகுதியில் முன்னொருபோதுமில்லாத மட்டமொன்றிற்குள் அமிழ்ந்தது. எனினும், தேய்வு அழுத்தங்கள் அந்நேரத்தில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளினால் நிர்ப்பந்திக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மாறுபாட்டு எல்லையுடன் கூடிய நாளாந்த செலாவணி வீத அறிவித்தலின் மூலம் 2022 மே 13ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பெருமளவிற்குத் தணிக்கப்பட்டது. இதன் விளைவாக, செலாவணி வீதம் 2022இன் பின்னரைப்பகுதியில் ஏறத்தாழ ரூ.363.00இல் படிப்படியாக உறுதியடையத் தொடங்கியது.

2022இல் இலங்கை மத்திய வங்கி உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் 2021இனைப் போன்றே தேறிய விற்பனையாளராக விளங்கியது. வெளிநாட்டு ஒதுக்குகள் பெருமளவிற்கு குறைவடைந்தமையின் போதும் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை இன்றியமையாத பொருட்களின் இறக்குமதிக்கு நிதியிடுவதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்தது. இதற்கமைய, மத்திய வங்கி 2022இல் ஐ.அ.டொலர் 2,712 மில்லியனை சந்தைக்கு நிரம்பல் செய்தது. உரிமம்பெற்ற

வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன மீது விதிக்கப்பட்ட கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஐ.அ.டொலர் 2,133 மில்லியன் கொள்வனவுடன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை மத்திய வங்கி முகாமைப்படுத்தியது.

எனினும், உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் 2022இன் பிற்பகுதியில் மேம்பட்டன. மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக, இம்முன்னேற்றங்களுக்கு குறிப்பிட்ட இறக்குமதிகள் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் வங்கிகளின் முன்மதியுடைய வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் எரிபொருள் கேள்விகள் சிக்கனப்படுத்தப்பட்டமையின் காரணமாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி குறைவடைந்தமையுடன் சக்தி தொடர்பான உற்பத்திகள் மற்றும் சமையல் வாயுவிற்கான விலைச் சீராக்கம், செலாவணி வீத தேய்வு மற்றும் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் என்பனவற்றின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த செலவு என்பன வழியமைத்தன. மேலும், 2022இன் இறுதி சில மாதங்களில் பன்னாட்டு நாணய நிதியத்துடனான முன்னேற்றகரமான கலந்துரையாடல்களின் பின்னணியில் செலாவணி வீத உறுதிப்பாடு தொடர்பான சாதகமான மனோபாங்கின் காரணமாக ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதில் படிப்படியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களின் காரணமாக, தொழிலாளர் பணவனுப்பல்கள் தடைசெய்யப்பட்ட சந்தைகளிலிருந்து அலுவல்சார் மார்க்கங்களூடாக அனுப்பப்படுவது அதிகரித்து வருகின்றமை போல் தென்பட்டது. மேலும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் மேம்பட்டன. இதன்படி, இன்றியமையாத இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கியின் உடனடி தலையீடுகளூடாக வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் வழங்கலானது, தொடர்பான அதிகாரிகள் அவர்களது வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளை சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் பெரும்பாலும் முடிவுறுத்தப்பட்டது. எனவே, இவ்வபிவிருத்திகளுடன் தொழிலாளர் பணவனுப்பல்களுக்கும் பொதுமக்களுக்கும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் தொடர்பில் வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்கள் 2022இல் முடிவுறுத்தப்பட்டன.


தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் சராசரி வாங்கும் மற்றும் விற்கும் செலாவணி வீதங்கள் 2022 இறுதியில் ரூ.360.41 ஆகவும் ரூ.371.61 ஆகவும் காணப்பட்ட வேளையில் 2021 இற்கான ஒப்பீட்டு எண்தொகைகள் முறையே ரூ.198.50 ஆகவும் ரூ.203.00 ஆகவும் காணப்பட்டன. அதேவேளை, 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா ஸ்டேர்லிங் பவுண், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் உட்பட அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தையின் வர்த்தகப்படுத்தல் அளவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 21.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2022இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இன் ஐ.அ.டொலர் 12.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனாக விளங்கியது. இவ்வபிவிருத்தியுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சராசரி நாளாந்த அளவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 50 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 40 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ஐ.அ.டொலர் 6.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் உடன் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2021இன் ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 0.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

அரச பிணையங்கள் சந்தை

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட படுகடன் தீர்ப்பனவு முடக்கல், முன்னொருபோதுமில்லாத கொள்கை வீத சீராக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் கணிசமானளவிற்கு உயர்ந்த பற்றாக்குறை நிதியிடல் தேவைப்பாடுகள் என்பன காரணமாக 2022 நவெம்பர் நடுப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் வரலாற்றிலே மிக உயர்ந்த மட்டங்களை அடைந்ததுடன் இது, ரூபாப் பிணையங்கள் மீதான வருவாயில் மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தது. ஏற்றுக்கொள்ளலின் போதான உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை அறிவிக்கும் நிருவாக ஏற்பாட்டின் மூலம் உந்தப்பட்டு நீண்ட காலமாகக் காணப்பட்ட பரந்தளவில் உறுதியான மற்றும் தாழ்வான வட்டி வீதங்கள், மோசமடைந்த சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் பொதுமக்களிடையே ஏற்பட்ட பரந்தளவிலான அமைதியின்மை போன்ற முக்கிய காரணங்களால் நலிவடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் அதனுடன் இணைந்து 2022 ஏப்பிறல் 8 அன்று 700 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்த கொள்கை வீதங்கள் என்பனவற்றால் 2022 ஏப்பிறல் பிற்பகுதியில் அரச பிணையங்களின் விளைவுகள் கூரிய மேல் நோக்கிய திருத்தங்களுக்கு உள்ளாகின. அதேவேளை, 2022 ஏப்பிறல் 12ஆம் நாளன்று படுகடன் தீர்ப்பனவு முடக்கப்பட்டது என்ற அறிவித்தல் மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவு செய்யக்கூடிய அரசாங்கத்தின் இயலாற்றல் தொடர்பாக கட்டியெழுப்பப்பட்ட சந்தை ஊகங்கள் அடுத்து வந்த

வரைபடம் 8.18
திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஆரம்ப சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் (ஆண்டுக்கான சதவீதம்)



மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாதங்களில் தொடர்ந்த சமூகப் பொருளாதார நெருக்கடிகள் என்பன அரசின் கணிசமான நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவித்தன. முதலீட்டாளர்களின் முதலீட்டுத் தீர்மானத்தில் அதிகரித்த இடர்நேர்வு மிகை காரணிப்படுத்தப்பட்டதுடன் நிச்சயமற்ற தன்மைகளின் மூலம் உருவாக்கப்பட்ட மேல் நோக்கிய அழுத்தங்கள் அரச பிணையங்களின் விளைவுகள் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டங்களை அடையச் செய்தது.

திறைசேரி உண்டியல்களின் முதலாந்தர ஏலங்களில் சந்தை முன்னுரிமையானது 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களுடன் ஒப்பிடுகையில் 91 நாள் முதிர்ச்சியை நோக்கிக் காணப்பட்டது.

அட்டவணை 8.19
அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

விடயம்	முதலாந்தரச் சந்தை		இரண்டாந்தரச் சந்தை	
	2021	2022	2021	2022
திறைசேரி உண்டியல்கள்				
91 நாட்கள்	4.69 - 8.43	8.26 - 33.14	4.63 - 8.00	7.84 - 31.37
182 நாட்கள்	4.75 - 8.33	8.30 - 32.53	4.71 - 8.07	8.12 - 30.17
364 நாட்கள்	4.98 - 8.26	8.39 - 30.50	4.94 - 8.33	8.28 - 28.78
திறைசேரி முறிகள்				
2 ஆண்டுகள்	6.19 - 9.36	14.41 - 33.01	5.25 - 8.96	8.59 - 28.29
3 ஆண்டுகள்	6.25 - 9.94	20.30 - 32.63	5.68 - 9.81	9.61 - 28.55
4 ஆண்டுகள்	6.34 - 8.55	-	6.21 - 10.40	10.33 - 28.33
5 ஆண்டுகள்	6.72 - 11.14	11.92 - 31.78	6.43 - 11.03	10.65 - 27.60
6 ஆண்டுகள்	7.44 - 10.90	11.70 - 21.86	6.61 - 11.26	11.04 - 28.02
8 ஆண்டுகள்	7.16 - 11.63	26.51 - 30.85	6.98 - 11.55	11.38 - 27.83
10 ஆண்டுகள்	8.86 - 11.91	12.01 - 30.86	7.44 - 11.80	11.64 - 28.51
15 ஆண்டுகள்	8.44 - 12.06	-	7.76 - 11.85	11.77 - 27.80
20 ஆண்டுகள்	-	-	7.89 - 11.83	11.72 - 25.34
30 ஆண்டுகள்	-	-	8.04 - 11.81	11.78 - 22.96

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.20
திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி முதலாந்தர விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கான சதவீதம்

ஆண்டு	முதிர்ச்சி			திரண்ட ஆண்டுச் சராசரி
	91-நாட்கள்	182-நாட்கள்	364-நாட்கள்	
2018	8.40	8.58	9.68	9.36
2019	8.15	8.44	9.40	9.06
2020	5.93	5.72	6.37	6.09
2021	6.35	6.13	5.33	6.24
2022	23.23	26.85	25.65	23.73

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2022 இறுதியில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.16 சதவீதம், 8.33 சதவீதம் மற்றும் 8.24 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 32.64 சதவீதம், 32.20 சதவீதம் மற்றும் 29.27 சதவீதங்களில் பதிவுசெய்யப்பட்டது. திறைசேரி உண்டியல்களைப் போலன்றி திறைசேரி முறிகளுக்கான சந்தை முன்னுரிமைகள் ஒப்பீட்டு ரீதியில் நீண்ட முதிர்ச்சிகளை நோக்கி சாய்ந்து காணப்பட்டது. உயர்வடைந்த வட்டி வீத அமைப்பினைக் கவனத்திற் கொள்கையில் 5 ஆண்டிற்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகள் ஆண்டின் பின்னரைப்பகுதியின் முதலாந்தர வழங்கலில் வழங்குநரினால் சாதகமானவைகளாக பரிசீலிக்கப்பட்டன. 2022இன் இறுதியில் திறைசேரி முறிகளின் விளைவு வீதங்கள் ஏறத்தாழ 30 சதவீதத்தில் ஊசலாடியதுடன் ஓராண்டிற்கு முன்னர் நிலவிய 12 சதவீதத்திற்கும் குறைவான அளவுடன் ஒப்பிடத்தக்கதாக விளங்கி இவ்வாண்டுப்பகுதியில் அரச பிணையங்களின் விளைவு வீதங்களில் கணிசமான மேல் நோக்கிய சீராக்கங்கள் இடம்பெற்றமையினைப் பிரதிபலித்தன. அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் முதலாந்தரச் சந்தைகளில் அவதானிக்கப்பட்ட விளைவு வீத அசைவுகளை பரந்தளவிற்கு பின்பற்றியிருந்தன.

2021இல் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமான 8.70 சதவீதத்தில் வழங்கப்பட்ட ரூ.1,762.0 பில்லியன் திறைசேரி முறிகளுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமான 21.29 சதவீதத்தில் ரூ.2,373.0 பில்லியன் தொகை கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. மேலும், 2021இல்[6] 6.09 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ரூ.3,821.4 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் 2022இல் 25.21 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினைக் கொண்ட மொத்த நியதிகளில் ரூ.9,942.8 பில்லியன் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன.


6 ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் நிருவாக ரீதியாக அறிவுறுத்தப்பட்ட வழங்கல்களின் செலவுகள் உட்பட, மொத்தச் சராசரிக் கடன்பாட்டுச் செலவுகளையும் உள்ளடக்குகிறது.

அரசாங்கத்தின் நிதியிடல் முக்கியமாக உள்நாட்டு மூலங்களுக்கே வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும், நேர்மறையான அபிவிருத்தியை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள் 2021இன் ஐ.அ.டொலர் 27.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 50.6 மில்லியனாக விளங்கியது.

பங்குரிமைச் சந்தை

2022ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பங்குரிமை மூலதனச் சந்தை மோசமான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் விலைச் சுட்டெண்கள் சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் நாளாந்தப் புரள்வு ஆகிய நியதிகளில் இருண்ட செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், விலைச் சுட்டெண்களில் கணிசமானளவு தளம்பல் அவதானிக்கப்பட்டதுடன் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட சுற்றோட்ட நிறுத்தி பல தடவைகள் செயற்படுத்தப்பட்டது. தற்பொழுது இடம்பெற்றுவரும் பொருளாதாரச் சுருக்கம், உயர் பணவீக்கம் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கான விரைவுபடுத்தப்பட்ட நடவடிக்கைகள், உயர் வரிச் சீராக்கங்களின் காரணமாக கூட்டாண்மை இலாபங்களில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சி, புவிசார் அரசியல் பதற்றங்கள், மோசமான உலகளாவிய பொருளாதார நிலைமைகள் என்பன பங்குரிமைச் சந்தையின் தளம்பல்களுக்குப் பங்களித்தன. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 2022 சனவரி 19 அன்று 13,462.4 கொண்ட வரலாற்றிலேயே மிகவுயர்ந்த பெறுமதியினைப் பதிவுசெய்த போதும் சுட்டெண்கள் 2021 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விரிவடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2022 பெப்புருவரி தொடக்கத்திலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றினைக் காட்டின. இதற்கிணங்க, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணும் இலங்கை ஸ்டான்டட் அன்ட் புவர் 20 சுட்டெண்ணும் 2022இல் முறையே 30.6 சதவீதத்தினாலும் 37.7 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்த வேளையில் 2022 இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் 29.9 சதவீதத்தினால் தேய்வடைந்து 2022 இறுதியில் ரூ.3,847.2 பில்லியனாக அமைந்தது. மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனமயமாக்கல் 2021 இறுதியின் 31.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 15.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2022இல் ரூ.2,972.3 மில்லியன் கொண்ட சராசரி நாளாந்தப் புரள்வினைப் பதிவுசெய்தது. இது 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.4,888.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமான வீழ்ச்சியாகக் காணப்பட்டது.

வரைபடம் 8.19
விலைச்சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்




மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

எனினும், ஒரு சில முக்கிய கம்பனிகளினால் வெளிநாட்டு முதலீடுகள் கவரப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல் நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இதன்படி, 2021இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.52.6 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 264.4 மில்லியன்) கொண்டதொரு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.30.6 பில்லியன் கொண்ட (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 74.3 மில்லியன்) தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை சந்தை பதிவுசெய்தது. மேலும், தனிநபர்களினாலும் நிறுவன ரீதியான வெளிநாட்டு முதலீட்டாளர்களினாலும் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் மற்றும் 2.6 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் முறையே 4.7 சதவீதம் மற்றும் 5.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், உள்நாட்டு தனிநபர்களினாலும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களினாலும் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் அளவுகள், 2022 காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்களுடன் கூடிய நிலையான வருமான முதலீடுகளை நோக்கி முதலீட்டாளர்களின் முன்னுரிமை மாற்றமடைந்தமையின் காரணமாக 2021 இறுதியின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியான 53.3 சதவீதம் மற்றும் 17.8 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 7.2 சதவீதத்திற்கும் 15.1 சதவீதத்திற்கும் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

சந்தை மதிப்பீட்டு குறிகாட்டிகள் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கப் பின்னடைவொன்றினைப் பதிவுசெய்தன. விலை வருவாய் விகிதமும் ஏட்டுப் பெறுமதிக்கான விலையும் 2021 இறுதியில் காணப்பட்ட 13.6 தடவைகள் கொண்ட விலை வருவாய் விகிதத்துடனும் 1.7 தடவைகள் கொண்ட ஏட்டுப் பெறுமதி விலைகளுடனும் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 4.9 மற்றும் 0.9 தடவைகளுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 4 புதிய ஆரம்பப் பங்கு வழங்கல்கள் காணப்பட்டதுடன் அவை 2022இல் ரூ.4.8

வரைபடம் 8.20
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்கேற்பு



பில்லியனைத் திரட்டின. இது 2021இன் 13 ஆரம்பப் பங்கு வழங்கல்களுடன் திரட்டப்பட்ட ரூ.12.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமானதொரு வீழ்ச்சியாகும்.

கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் சந்தை

வர்த்தகப் பத்திரங்கள் சந்தை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் ஒப்பீட்டு ரீதியில் செயற்பாடற்றதாகக் காணப்பட்டது. 2021இல் வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களூடாகத் திரட்டப்பட்ட ரூ.5.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் ஆதரவுடன் வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களூடாக ரூ.2.0 பில்லியன் மட்டுமே திரட்டப்பட்டது. வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.00 இலிருந்து 12.00 சதவீத கொண்ட வீச்சுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் 11.00 இலிருந்து 36.00 சதவீதத்திற்கிடையில் வேறுபட்டன.

கூட்டாண்மை தொகுதிக் கடன் சந்தையின் நடவடிக்கைகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கப் பின்னடைவினைப் பதிவுசெய்தமைக்கு உயர்ந்த வட்டி வீதங்களும் நிலவிய மோசமான பொருளாதார நிலைமைகளும் காரணங்களாக அமைந்தன. 2022 காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள 4 கம்பனிகளினால் கூட்டாண்மை தொகுதிக் கடன்களில் 10 ஆரம்ப பங்கு வழங்கல்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இவை 14 கம்பனிகளின் 27 ஆரம்பப் பங்கு வழங்கல்களினூடாக 2021இல் திரட்டப்பட்ட ரூ.84.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.12.7 பில்லியனைத் திரட்டிக் கொண்டன. 2022 காலப்பகுதியில் நிலையான மற்றும் மிதக்கும் வட்டி வீதங்கள் இரண்டுடனும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்ட வேளையில் நிலையான வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 8.00 இலிருந்து 12.00 சதவீதம் வரையிலான வீச்சுடன் ஒப்பிடுகையில் 15.42 இலிருந்து 28.00 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

8.5 அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறுவதற்கான அணுகு வழிகள்

2022 காலப்பகுதியில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிநபர்களுக்கும் தாங்கக்கூடிய நிதியியல் வசதிகளை வழங்கும் நோக்குடன் மத்திய வங்கி பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை தொடர்ந்தும் இணைத்தும் வசதிப்படுத்தியும் மற்றும் நடைமுறைப்படுத்தியும் வருகின்ற அதேவேளையில், பரந்த வீச்சிலான கொடுகடன் துணைநிரப்புப் பணிகளையும் வழங்கி வருகிறது. இதன்படி, 2022 காலப்பகுதியில் 57.6 சதவீதத்திற்கு வகைகூறும் 17 மீள்நிதியிடல் கடன் திட்டங்களின் கீழும் 42.4 சதவீதத்திற்கு வகைகூறும் 5 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக 63,202 நன்மைபெறுநர்களிடையே ரூ.17,244.4 மில்லியன் கொண்ட மொத்தக் கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் கடன் திட்டங்களை அணிப்படுத்துவதற்காக 2022 காலப்பகுதியில் மத்திய வங்கி முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த வழிமுறைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது. மோசமான பொருளாதார நிலைமைகளையும் சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களையும் பரிசீலனையில் கொண்டு சௌபாக்கிய கடன் திட்டத்தின் வட்டி வீதம் இவ்வாண்டு காலப்பகுதியில் 6.00 சதவீதத்திலிருந்து 9.00 சதவீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. மேலும், உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியத்தினைப் பரிசீலனையில் கொண்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் புதிய கடன்களில் 80 சதவீதத்தினை வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி மற்றும் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டன. மேலும், தற்போதைய பொருளாதார நிலைமைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் கடன் திட்டங்களின் கீழ் படுகடன் சட்ட இசைவுத்தாமதம் வழங்கப்பட்டது. மேலும், நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான வேளாண்மை நடவடிக்கைகளை ஊக்குவித்தல், உணவு இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களைக் குறைத்தல், வேளாண்மை உற்பத்திகளை நோக்கி மக்கள் கூடியளவிற்கு ஆர்வம் கொள்வதற்குச் செய்தல், சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் என்பனவற்றின் பொருட்டான அரசாங்கக் கொள்கைகளையும் பரிசீலனையில் கொண்டு ஏற்புடைத்தான வட்டி வீதங்களையும் நிதி அளவுகளையும் திருத்தியமைப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

மேலும், மத்திய வங்கி நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எய்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் நடவடிக்கைத் திட்டங்களுடன் அணித்தான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கண்காணிப்பினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டத்தின் 82 பரந்தளவு நடவடிக்கைகளில் ஏறத்தாழ 24 சதவீத நடவடிக்கைகள் நிறைவடைந்த வேளையில் ஏனைய நடவடிக்கைகள் முக்கிய நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குடித்தொகை முழுவதற்குமான நிதியியல் அறிவின் தற்போதைய நிலையினைப் புரிந்து கொள்வதற்காக பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் முதல் தடவையாக நாடளாவிய நிதியியல் அறிவு அளவீடொன்று வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. அளவீட்டில் கண்டறியப்பட்ட முக்கியமான விடயங்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் மத்திய வங்கியின் வலைத்தளத்தினூடாக கிடைக்கச் செய்யப்பட்டன. நிதியியல் அறிவு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதற்கான வழிகாட்டலொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனை பெறும் பணித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஏற்றுமதிச் சந்தைகளை பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் காணப்படும் சாத்தியப்பாடுகள் மற்றும் தடைகளை அடையாளம் கண்டுகொள்வதற்காக அளவீடொன்றினை நடத்துவதற்காக முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

மத்திய வங்கி அதன் 6 பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் நிதியியல் அறிவினை அதிகரிக்கும் குறிக்கோளுக்காக இவ்வாண்டுப்பகுதியில் அநேக நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. இதற்கமைவாக, பயிற்சியாளர்களின் பயிற்சி கலந்துரையாடல்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டமொன்று மற்றும் பெரும் எண்ணிக்கையான நிதியியல் அறிவு, தொழில் முயற்சியாண்மை, இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன 2022இல் நடத்தப்பட்டன.

8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

2022 காலப்பகுதியில் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுமூகமாகவும் வினைத்திறனுடனும் தொழிற்படுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் மற்றும் கொடுப்பனவு பணி வழங்குவோர் ஆகிய இருசாராரினாலும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டன. மின்வெட்டு மற்றும் முக்கிய பண்டங்களின் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக சமூக அமைதியின்மை தோன்றிய 2022இன் முதலரைப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்குப் பணியாற்றுவதற்குமாக தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் வினைத்திறனும் பாதுகாப்பானதுமான தொழிற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி அதன் ஊழியர்களுக்காக வீடுகளில் இருந்து கொண்டே பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக அதன் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களைச் செயற்படுத்தல் மற்றும் போன்ற வழிமுறைளை நடைமுறைப்படுத்தியது.

முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையான, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கிய லங்காசெட்டில் 2022இல் மின்வெட்டு போன்ற இடையூறுகளுக்கும் மத்தியிலும் உயர்ந்தளவு கிடைப்பனவுடனும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடனும் தொழிற்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் அளவு பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 42 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 2021இன் ரூ.295 றில்லியனிலிருந்து 2022இல் ரூ.827 றில்லியனுக்கு 181 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2022 காலப்பகுதியில் இடம்பெற்ற துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், பங்கேற்கும் நிறுவனங்கள் பயன்படுத்திய சராசரி நாளாந்த ஒரு நாளுக்குள்ளேயான[7] திரவத்தன்மை வசதி 2021இன் ரூ.208.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.658.5 பில்லியனாக விளங்கி உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் நிலவிய திரவத்தன்மைப் பற்றாக்குறையினை எடுத்துக்காட்டியது. மேலும், 2022இல் லங்காசெட்டிலில் பங்கேற்கும் அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட முதலாவது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தேசிய சேமிப்பு வங்கி மாறியமையானது நிதியியல் சந்தையில் செயற்றிறமான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அதனை இயலுமைப்படுத்தியது.

லங்காசெகுயர் முறைமையானது 2022இல் அனைத்து அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கும் தொடர்ந்தும் உதவியது. 2022 இறுதியில் லங்காசெகுயரின் வசமிருந்த பத்திரங்களற்ற பிணையங்களின் கூட்டுத்தொகை

7 வியாபார நாளின் போது லங்காசெட்டில் கொடுக்கல்வாங்கல்கள் சுமூகமான முறையில் தீர்ப்பனவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை மத்திய வங்கி வழங்குகிறது.

ரூ.12,848.5 பில்லியனாக விளங்கி (முகப்புப் பெறுமதி), முறையே ரூ.4,126.4 பில்லியன் மற்றும் ரூ.8,722.1 பில்லியன் பெறுமதிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. லங்காசெகுயரின் பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையானது 2021 இன் ரூ.262.8 றில்லியன் தொகை கொண்ட கொடுக்கல் வாங்கல்களை ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் ரூ.1,028.6 றில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்திருக்கிறது[8].

பொதுமக்கள் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை அதிகரித்தளவில் பின்பற்றுவது நாட்டில் காணப்படும் சில்லறை டிஜிட்டல் கொடுப்பனவுகள் வலுவாக வளர்ச்சியடைந்து வருவதனை பதிவுசெய்தது. பல்வேறு கொடுப்பனவு மார்க்கங்களினூடாக அதேநேர சில்லறை நிதிய மாற்றல்களை இயலுமைப்படுத்துகின்ற பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பிரபல்யப்படுத்துவதற்கு கணிசமானளவிற்குப் பங்களித்திருக்கிறது. 2022 காலப்பகுதியில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் அளவு 54.7 மில்லியனிலிருந்து 91.8 மில்லியனுக்கு 67.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.4,926.6 பில்லியனிலிருந்து ரூ.8,881.3 பில்லியனுக்கு 80.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்குள் லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளம், லங்காகியூஆர், ஜஸ்ட்பே மற்றும் எண்ணிறந்த செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகள் போன்ற பல புத்தாக்கங்களுக்கான தொழில்நுட்பவியல் தளத்தினை உருவாக்கியிருக்கிறது. 2022 காலப்பகுதியில் லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளம் பொதுமக்கள் அவர்களது நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளிலிருந்து உள்நாட்டு அரசிறை, இலங்கைச் சுங்கம் போன்ற அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதனை இயலுமைப்படுத்தி கொடுக்கல்வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதி நியதிகளில் முறையே 73.5 சதவீதம் மற்றும் 151.4 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்து, அரச நிறுவனங்கள் டிஜிட்டல் கொடுப்பனவுகளை நோக்கி நகர்கின்ற அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதும் கூட 2022இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் கொடுக்கல்வாங்கல் அளவுகளில் சிறிதளவு வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டமையானது கியூஆர் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பில் வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள் இருசாராரினதும் விழிப்புணர்வினை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டுகிறது. மேலும், லங்காபே பிறைவேற் லிமிடெட் மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் 2022இல் "லங்காறெமிட்" என்ற செல்லிடத் தொலைபேசி பணவனுப்பல் செயலியொன்றினை ஆரம்பித்தது. இது, புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு பணம் அனுப்புவதனையும் வெளிநாட்டில் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளூடாக பொதுப் பயன்பாட்டு பட்டியல்களைக் கொடுப்பனவு செய்வதனையும் இயலுமைப்படுத்துகிறது.

ஓய்வூதியம் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் அதேபோன்று அட்டவணையிடப்பட்ட அல்லது அதேநாள் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்ற மற்றைய சில்லறை பெறுமதிக் கொடுப்பனவுகள் போன்ற சிறிய பெறுமதியினைக் கொண்ட தொகை வடிவிலான நிதிய மாற்றல்களுக்கு வசதியளிக்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி மற்றும் அளவு ஆகிய நியதிகளில் மிதமான வளர்ச்சியொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தது. இதற்கமைய, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை 2022 காலப்பகுதியில் ரூ.3,368.4 பில்லியன் தொகை கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தது. 2021 உடன் ஒப்பிடுகையில் இது 17.7 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியாகும்.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுகடன் மற்றும் பற்று அட்டையின் கொடுக்கல்வாங்கல்களின் அளவு முறையே 59.9 மில்லியனுக்கும் 146.5 மில்லியனுக்கும் 18.1 சதவீதத்தினாலும் 35.6 சதவீதத்தினாலும் அதிகரித்ததுடன் கொடுகடன் மற்றும் பற்று அட்டைகளின் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.401.5 பில்லியனுக்கும் ரூ.528.9 பில்லியனுக்கும் முறையே 42.1 சதவீதத்தினாலும் 67.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இவ்வதிகரிப்பிற்கு இ-வர்த்தம், செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுகள் மற்றும் இணையத்தள வங்கித்தொழில் என்பனவற்றின் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான காசோலைத் தீர்ப்பனவு முறைமையாக இருக்கும் காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை வங்கிகளுக்கிடையிலான காசோலைக் கொடுப்பனவுகளை, காசோலை பிம்பப்படுத்தல் முறைமையினைப் பயன்படுத்தி, அடுத்த வியாபார நாள் அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் அண்மைய ஆண்டுகளில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின்

8 லங்கா செகுயர் முறைமையானது முதலாந்தர வழங்கல் கொடுக்கல்வாங்கல், இரண்டாந்தரச் சந்தை வர்த்தகம் (உடனடி, மீள்கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள், பிணையுறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்), திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி உள்ளிட்ட அனைத்து அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்கின்றது.

அட்டவணை 8.21
கொடுப்பனவு முறைமைகளின் மற்றும் கருவிகளின் செயலாற்றம் - கொடுக்கல் வாங்கல்களின் அளவு

கொடுப்பனவு முறைமை	2018 ('000)	2021 ('000)	2022 (அ) ('000)	வளர்ச்சி (%) 2018-22	வளர்ச்சி (%) 2021-22
பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்					
அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை	405.2	449.8	638.7	57.6	42.0
சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் / கருவிகள்					
காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை	50,352.2	33,021.2	33,049.6	-34.4	0.1
இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (நிகழ்நிலை நிதி பரிமாற்றல்கள்)	32,943.3	41,867.7	45,536.4	38.2	8.8
பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி	40,464.4	58,210.5	84,141.2	107.9	44.5
பொது இலத்திரனியல் நிதி பரிமாற்றல் ஆழி (நிகழ்நிலை அதேநேர நிதி பரிமாற்றல்கள்)	7,233.6	54,675.5	91,782.0	1,168.8	67.9
அதில் :					
லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவுத் தளம்	15.4	514.0	891.7	5,690.3	73.5
செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட குறைந்த பெறுமதி கொடுப்பனவுகள் (ஜஸ்ட்பே)	45.6	9,014.7	14,512.4	31,725.4	61.0
லங்கா கியூஆர்*	-	848.9(ஆ)	599.5	-	-29.4
நிகழ்நிலை மற்றும் விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கடனட்டை கொடுக்கல் வாங்கல்கள்	43,599.8	50,689.1	59,843.5	37.3	18.1
விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள்	56,595.1	108,039.7	146,478.6	158.8	35.6

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* லங்கா கியூஆர் 2018 இல் செயற்படுத்தப்பட்டதுடன் தரவு 2020 இலிருந்து கிடைக்கப்பெற்றது.

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றை பதிவுசெய்தது. எனினும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் காசோலைகளின் பெறுமதி 2021 உடன் ஒப்பிடுகையில் 18.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அரசினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளால் வியாபாரங்களை வெற்றிகரமாக தொழிற்படுத்தப்பட முடியாமல் போனமையும் அதனைத் தொடர்ந்து 2022இல் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

2022இல் லங்காபே பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட எந்தவொரு தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்தும் காசு எடுப்பனவுகளையும் நிலுவை விசாரணைகளையும் இயலுமைப்படுத்திய பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல்கள் அளவு 44.5 சதவீதத்தினால் 84.1 மில்லியனுக்கும் பெறுமதி 51.0 சதவீதத்தினால் ரூ.1,012.9 பில்லியனுக்கும் அதிகரிப்பினைக் காட்டியது. 2022 இறுதியில் 30 நிதியியல் நிறுவனங்கள் பொதுவான தன்னியக்கக் கூற்று வலையமைப்புடன் இணைக்கப்பட்டன. அதேவேளை, அவற்றின் சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினை தொழிற்படுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்கு பணிகளை வழங்குவதற்காக 2015இல் தொடக்கப்பட்ட பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் 2022 காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளை சுமூகமாகத் தொடர்ந்தது.

மத்திய வங்கி, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பில் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம் மற்றும் தொடர்பான ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளின் பணிகள் சுமூகமாக தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தலத்திலான மேற்பார்வையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளுடன் சேர்ந்து காணப்படும் ஏதேனும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளை வழங்குபவர்களின் இணங்குவிப்புக்களை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்தது. பொருத்தமான அவசரகால திட்டமிடல்களுடன் கொடுப்பனவுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி தடங்கலற்ற வியாபாரத் திட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்வதன் மூலமும் அனர்த்த மீட்பு அமைவிடங்களுக்கு விஜயம் செய்வதன் மூலமும் லங்காசெட்டில் பங்கேற்பாளர்களின் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளையும் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களையும் தொடர்ந்தும் கண்காணித்தது.

தேசிய கொடுப்பனவுச் சபை[9], கொடுப்பனவு அட்டைகளை இளம்வி[10] நியமங்களுக்கு தரமுயர்த்தியதன் மூலமும் வாடிக்கையாளர்கள் அதேநேர அடிப்படையில் அறிவிப்புக்களை பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்தியதன் மூலமும் புதிய டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மற்றும் கொடுப்பனவு

9 உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள், லங்காபே பிறைவேற் லிமிடெட், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை வங்கியாளர் சங்கம், இலங்கை வெளிநாட்டுச் செலாவணிச் சங்கம், முதனிலை வணிகர் சங்கம், லங்கா பினான்சியல் சேர்விஸஸ் பியூரோ லிமிடெட், இலங்கை கொடுகடன் தகவல் பணியகம், நிதி அமைச்சு மற்றும் இ-பண முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசித் தொழிற்பாட்டாளர்கள் என்பனவற்றிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்குகிறது.

10 இளம்வி என்பது அட்டைக் கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினையும் அவற்றிடையேயான உள்ளகத் தொழிற்பாடுகளையும் அதிகரிப்பதற்கு சிப்பினை அடிப்படையாகக் கொண்ட பற்று மற்றும் கொடுகடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான உலகளாவிய தொழில்நுட்பவியல் நியமமொன்றாகும். இளம்வி என்பது ஆரம்பத்தில் இந்நியமங்களை உருவாக்கிய யூரோ பே, மாஸ்டர் அட்டை மற்றும் விசா ஆகிய மூன்று கம்பனிகளைக் குறிக்கிறது.

அட்டவணை 8.22
கொடுப்பனவு முறைமைகளின் மற்றும் கருவிகளின் செயலாற்றம் - கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி

கொடுப்பனவு முறைமை	2018 (ரூ.பில்)	2021 (ரூ.பில்)	2022 (அ) (ரூ.பில்)	வளர்ச்சி (%) 2018-22	வளர்ச்சி (%) 2021-22
பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்					
அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை	100,473.1	294,602.0	827,105.1	723.2	180.8
சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் / கருவிகள்					
காசோலை பிம்பப்படுத்தல் சுற்றோட்டக் குறைப்பு முறைமை	10,528.4	8,311.5	9,813.8	-6.8	18.1
இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (நிகழ்நிலை நிதி பரிமாற்றல்கள்)	1,972.2	2,862.2	3,368.4	70.8	17.7
பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி	344.6	671.0	1,012.9	193.9	51.0
பொது இலத்திரனியல் நிதி பரிமாற்றல் ஆழி (நிகழ்நிலை அதேநேர நிதி பரிமாற்றல்கள்)	660.3	4,926.6	8,881.3	1,245.0	80.3
அதில் :					
லங்காபே நிகழ்நிலை கொடுப்பனவுத் தளம்	12.5	198.2	498.3	3,886.4	151.5
செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட குறைந்த பெறுமதி கொடுப்பனவுகள் (ஜஸ்ட்பே)	0.1	34.6	67.8	67,700.0	96.0
லங்கா கியூஆர்*	-	1.9	2.0	-	5.3
நிகழ்நிலை மற்றும் விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கடனட்டை கொடுக்கல் வாங்கல்கள்	241.8	282.6	401.5	66.0	42.1
விற்பனை மையக் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள்	158.7	315.9	528.9	233.3	67.4

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* லங்கா கியூஆர் 2018 இல் செயற்படுத்தப்பட்டதுடன் ' தரவு 2020 இலிருந்து கிடைக்கப்பெற்றது.

(அ) தற்காலிகமானது

தொடர்பான மோசடிகள் தொடர்பில் வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தமையின் மூலமும் பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்து அதனூடாக இக்காலப்பகுதியில் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு இன்றியமையாத வகிபாகமொன்றை ஆற்றியது. மேலும், தேசிய கொடுப்பனவுச் சபையானது நாட்டில் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் 2022 - 2024 இனைக் கண்காணித்ததுடன் தேசிய கொடுப்பனவுச் சபையினால் நியமிக்கப்பட்ட பல குழுக்கள் புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்கள், பாதுகாப்பான டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்கள், டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வாடிக்கையாளர் விழிப்புணர்வினை அதிகரித்தல் போன்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான கற்கைகளை மேற்கொண்டன. இது, டிஜிட்டல் முறைகளினூடான நிதி மோசடிகள் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வு மட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வினையும் உள்ளடக்கியிருந்தது. கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்தும் பரந்தளவு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொண்டன.

பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு, இவ்வாண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதன் மையத் தொழிற்பாடுகளை பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடும் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 1,481 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டது. பகுப்பாய்வுகளின் பின்னர் 419 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக விசாரணைகளுக்காக அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களிடமும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளிடமும் பாரப்படுத்தப்பட்டன. அதேவேளை, 605 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்ததுடன் 134 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படாதவை என வகைப்படுத்தப்பட்டன. மேலும், 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளில், நிதியியல் உளவறிதல் பிரிவு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் அறிக்கையிடப்பட வேண்டிய ஆரம்ப மட்டமான ரூ.1 மில்லியனை அல்லது அதற்குச் சமமான வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சியமை தொடர்பில் அறிக்கையிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து 7.6 மில்லியன் (தற்காலிகம்) காசு கொடுக்கல்வாங்கல் 10.8 மில்லியன் (தற்காலிகம்) இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் (உள்முகம் மற்றும் வெளிமுகம்) பெற்றுக்கொண்டது.

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் தொடர்பான வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின்

கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் நிறுவன ரீதியாக இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் நிறுவனங்கள் மீதும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மீதும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது. அறிக்கையிடும் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்புக்களை மதிப்பிடுவதற்காக 03 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களும் 22 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான கூட்டுப் பரீட்சிப்புக்களும் 22 தலத்திற்கு வெளியேயான/ தலத்திலான உடனடிப் பரீட்சிப்புக்களும் நடத்தப்பட்டன. மேலும், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மீது ஐந்து கருத்து விளக்க மீளாய்வுகள் நடத்தப்பட்டன. 2022இல் நடத்தப்பட்ட பரீட்சிப்புக்களின் அடிப்படையில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தினையும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளையும் மீறியமை தொடர்பில் ஆறு உரிமம்பெற்ற வங்கிகளின் மீது ரூ.11.75 மில்லியன் கொண்ட நிதியியல் தண்டங்கள் விதிக்கப்பட்டன. அத்துடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத நிதியியல் நிறுவனங்களுக்கு இவ்வாண்டு காலப்பகுதியில் காரணங்களைக் காட்டுமாறு கோருகின்ற 8 கடிதங்களும் 9 எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டன. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டுப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு பன்னாட்டு பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்களுடன் இணங்கிச் செல்கின்ற விதத்தில் நாட்டின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பின் காத்திரமான தன்மையினை மேம்படுத்துவதற்காக, பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான சட்டக் கட்டமைப்பிற்கு சட்டவாக்க திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களின் விதந்துரைப்பு 1 உடன் இசைந்து செல்லும் விதத்தில் உலக வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையின் பெறுபேறுகளை 2023இன் முதலரைப்பகுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு, தொடர்பான அனைத்து ஆர்வலர்களிடையேயுமான விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற விதத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை செய்முறைகளையும் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களையும் வலுப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு பல்வேறு சுற்றறிக்கைகளை விடுத்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது.

நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

2022 காலப்பகுதியில் மத்திய வங்கியானது நிதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன உள்ளிட்ட பல்வேறு ஆர்வலர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி மசோதாவினை வரைவதில் ஈடுபட்டிருந்ததுடன் இம்மசோதா பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னரான நடவடிக்கையொன்றாக, 2019.01.11ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இலங்கை மத்திய வங்கி மசோதா அத்தகைய தொடர்பான ஆர்வலர்களுடன் சேர்ந்த மத்திய வங்கித் தொழிலுள்ள புதிய பரப்புக்களை உள்ளடக்கியது. இலங்கை மத்திய வங்கி மசோதா அதன் குறிக்கோள்களைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் அதிகரித்த ஆளுகை நியமங்கள், முன்னேற்றகரமான சபை அமைப்பு, மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்கள் என்பனவற்றுடன் மத்திய வங்கியின் சுயநிர்ணயத்திற்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கி மசோதா இயற்றப்பட்டதும் அது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினைப் பதிலீடு செய்யும்.

மேலும், மத்திய வங்கி 2022 காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்குப் பங்களிக்கும் என எதிர்பார்க்கின்ற பல சட்டங்களை வரைவதில் ஈடுபட்டிருந்தது. புதிய சட்டங்கள் வர்த்தகப்படுத்தல், தீர்ப்பனவு செய்தலை தேறல் செய்யும் சட்டம், வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டம் என்பனவற்றை

உள்ளடக்கியிருந்ததுடன் இவை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் தீர்மானங்களின் கட்டமைப்பினை மேம்படுத்தும். மேலும், மத்திய வங்கி நாட்டின் சந்தை அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற பல்வேறு சவால்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டம் என்பனவற்றிற்கு திருத்தங்களை அறிமுகப்படுத்துகின்ற செய்முறையில் ஈடுபட்டிருந்தது.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

2022ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மத்திய வங்கி தொடர்ந்தும் வலுப்படுத்தியது. இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி 5,149 முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் பெற்றுக்கொண்டதுடன் இவற்றில் பெரும்பாலானவை அத்தகைய நிறுவனங்களிடமிருந்த பெற்றுக்கொண்ட நிதியியல் வசதிகள் தொடர்பான சலுகைக்கான கோரிக்கைகள், உயர்ந்த வட்டி வீதங்கள் விதிக்கப்படுகின்றமை, சட்ட இசைவுத்தாமதத்துடன் தொடர்பான விடயங்கள், கோரப்படும் தகவல்கள்/ஆவணங்கள் வழங்கப்படாமை, உயர்ந்த கட்டணங்களும் தரகுகளும் விதிக்கப்படுகின்றமை என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாகக் காணப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் நிதியியல் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகக்கூடிய முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளில் ஏறத்தாழ 75 சதவீதத்தினை மத்திய வங்கி முடித்து வைக்கக்கூடியதாக இருந்தது.

மத்திய வங்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய ஒழுங்குவிதிகளின் அனைத்தையுமுள்ளடக்கிய தொகுப்பு மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதனை இயலுமைப்படுத்தியது. இவ்வொழுங்குவிதிகள் சந்தை நடத்தை மேற்பார்வைகளை வசதிப்படுத்துவதற்கு, மேற்பார்வையாளர்களுக்கான குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வரைவிலக்கணம் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளை, நிதியியல் பணிகளை வழங்குகின்ற அல்லது பெறுகின்றவை எனக் கருதப்படக்கூடிய துறைகள் தொடர்பில் பணி வழங்குவோர் மற்றும் பெறுவோர் இருசாராருக்கும் தெளிவொன்றையும் வழங்குகிறது. ஆர்வலர்களின் ஆலோசனைக்காக ஒழுங்குவிதிகளின் வரைவு தொழிற்துறையினருக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட்டிருக்கின்றதுடன் இறுதி ஒழுங்குவிதிகள் 2023 நடுப்பகுதியில் நடைமுறைக்குவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் நிதியியல் வாடிக்கையாளர் விழிப்புணர்வு தொடர்பில் ஊடகப் பிரச்சாரமொன்றினை அபிவிருத்தி செய்யும் செய்முறையில் ஈடுபட்டிருக்கிறது. இது 2023இன் தொடக்கக் காலத்தில் ஆரம்பிக்கப்படும்.

வைப்புக் காப்புறுதி, தீர்மான நடவடிக்கைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பான புலனாய்வு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்யும் விதத்தில் மத்திய வங்கி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. உரிமம் இரத்துச் செய்யப்பட்ட/இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளான சென்றல் இன்வெஸ்ட்மன்ற அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ரான்டட் கிறெடிட் பினான்ஸ் லிமிடெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசஸ் பிஎல்சி மற்றும் ஈரிஐ பினான்ஸ் லிமிடெட் ஆகிய நிதிக் கம்பனிகளின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் 2022இல் 72,641 வைப்பாளர்களுக்கு ரூ.30,499.24 மில்லியனைச் செலுத்தியது. செலுத்தப்பட்ட இழப்பீட்டின் அளவு மொத்தமாகக் காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதியான ரூ.35,229.22 மில்லியனில் 86.57 சதவீதமாகும்.

உத்தேச வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தில் பொருத்தமான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போது நாட்டிலுள்ள வைப்புக் காப்புறுதி பொறிமுறையின் சட்ட ரீதியான கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருக்கிறது. இவ்வரைவுச் சட்டமும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வரும் உரிமம்பெற்ற வங்கிகள் அதேபோன்று வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மானங்களுக்கான சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்குடனான ஏற்பாடுகளை உள்ளடக்கியது. வரைவுச் சட்டம் வலியுறுத்துகின்ற இங்கேயுள்ள பல விடயங்கள் இலங்கையின் சட்ட உட்கட்டமைப்பிற்கு அறியப்படாதனவாக உள்ளன என்பதனைப் பரிசீலனையில் கொண்டு பன்னாட்டு நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் வழங்கப்பட்ட நிபுணத்துவமும் தொழில்நுட்ப உள்ளீடுகளும் வரைவுச் செய்முறைக்கு மிகப் பயன் நிறைந்தவைகளாகவுள்ளன. 2022

சிறப்புக்குறிப்பு 12

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு : ஒரு முன்னோக்கிய பாதை

அறிமுகம்

மக்கள் மத்தியில் காணப்படும் நிதியியல் அறிவு மட்டமும் செயற்பாட்டிலுள்ள வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களின் வலிமையும், ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியில் முக்கிய அங்கமாகக் காணப்படுகின்ற நிதியியல் வசதிக்குட்படுத்தலை நிர்ணயிக்கின்ற இரு முக்கிய கூறுகளாகும். தொடர்ச்சியான தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நிதியியல் சேவைகளின் அதிகரிக்கின்ற சிக்கல்வாய்ந்த தன்மை அத்துடன் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் வளர்ந்துவருகின்ற போட்டித்தன்மை என்பன வாடிக்கையாளர் விழிப்பூட்டல் மீதும் போதியளவான வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு மீதும் அதிகம் அழுத்தம் கொடுப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநர்களை நிர்ப்பந்தித்துள்ளன. ஏனையவற்றிற்கு மத்தியிலும் இம்முக்கியத்துவமிக்க துறையில் குறைபாடுகள் கணப்படுகின்றன என்பதனை நாம் கடந்து வந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடி வெளிப்படுத்தியமை இதற்கு சான்று பகர்கின்றது. நெருக்கடிமிக்க காலப்பகுதியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு அவசியமான உள்ளீடான பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவதற்கு பங்களிக்கக்கூடிய மிகவும் ஆற்றல்வாய்ந்த வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றிற்கான தேவையினை இது எடுத்துக்காட்டியது. மாறாக, ஆற்றல்வாய்ந்த நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பானது வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளின் எதிர்பார்ப்பு, அடையாளப்படுத்தல் மற்றும் தீர்வு என்பவற்றை உரியகாலத்தில் செயல்திறன்வாய்ந்த விதத்தில் வசதிப்படுத்தி, நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான ஏதேனும் தாக்கத்தினைக் குறைக்கும் என பரந்தளவில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பின்னணியில், நாட்டின் நிதியியல் சந்தையின் உச்சமட்ட நிறுவனமாக இலங்கை மத்திய வங்கியானது நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை அதிகரிப்பதற்கும் நாட்டில் நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் அது ஒழுங்குபடுத்துகின்ற நிறுவனங்களூடாக பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டதுடன் முயற்சிகளையும் ஒருங்கிணைத்தது. இதன் விளைவாக, தற்போதைய வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் மட்டுப்பாடுகளையும் உலகின் ஏனைய நாடுகளில் இடம்பெறுகின்ற அபிவிருத்திகளையும் இனங்கண்டு, அனைத்து ஆர்வலர்களினதும் ஈடுபாட்டுடன் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான தொடக்க முயற்சியொன்றினை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு

இலங்கையின் நிதியியல் துறையானது வேறுபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகளுக்குட்படுகின்ற பல வகையான நிதியியல் சேவை வழங்குநர்களுடன் கூடிய பன்மைத்துவம் மிக்கதொன்றாகும். இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் இலங்கையிலுள்ள நிதியியல் துறைச் சொத்துக்களின் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறுவதனால் இத்துறையில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படவுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள், நாட்டின் நிதியியல் வாடிக்கையாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை இரண்டினதும் நல்வாழ்வின் மீது குறிப்பிடத்தக்க அத்துடன் நீண்டகாலம் நிலைக்கும் தாக்கத்தினைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த பல ஆண்டுகளாக, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் திணைக்களங்கள், அவற்றின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கு ஏற்புடைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.

எடுத்துக்காட்டாக, நிதியியல் வாடிக்கையாளர்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான ஆரோக்கியமான உறவினைப் பேணிவளர்ப்பதனை நோக்காகக் கொண்டு, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் பின்பற்றவேண்டிய நடத்தைக் கோவையொன்றினை உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2021இன் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் முதற்தடவையாக எடுத்துரைத்தது. பணிப்புரையானது வங்கித்தொழில் உற்பத்திகளை மற்றும் சேவைகளை நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், வங்கிகள் மட்டத்தில் முறைப்பாடு கையாளுகின்ற பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல், வங்கித்தொழில் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் புரிந்துகொள்வதை ஊக்குவித்தல், வங்கிகளின் முகவர்களிடமிருந்து பாதுகாப்பை வழங்குதல் அத்துடன் விசேட தேவைகளுடன்கூடிய நிதியியல் வாடிக்கையாளர்களுக்கான விசேட கவனிப்பு மற்றும் சிரத்தை என்பன தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்க்கைகளை அட்டவணைப்படுத்துகின்றது. 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடுதல் சட்டப் பணிப்புரைகள் என்பன அவற்றின் நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதை உறுதிசெய்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பை எடுத்துரைக்கின்றது. வெளிப்படுத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு, பொறுப்புவாய்ந்த தொழில் நடத்தை, முறைப்பாடு கையாளுதல் மற்றும் குறைதீர்த்தல், சமத்துவமாக மற்றும் நியாயமாக நடத்துதல், வாடிக்கையாளர் தரவுகள் மற்றும் இரகசியப் பாதுகாப்பு ஆகிய துறைகளின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான குறைந்தபட்ச தரநியமங்களை இப்பணிப்புரைகள் குறித்துரைக்கின்றன. இவ்வழிகாட்டல்கள் சேமிப்பு, கடன்வழங்குதல் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களையும் அதேபோன்று வேறு வாடிக்கையாளர் தொடர்புபட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன. அதேபோன்று, அரசாங்கப் பிணையங்களைக் கையாளுகின்ற முதனிலை வணிகர்களும் 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும்

8

1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் 2013இல் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனமொன்றைக் கடைப்பிடிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். இத்தகைய அனைத்து முன்னெடுப்புக்கள் வாடிக்கையாளர்கள் அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு இயலுமாகவுள்ளனர் என்றும் வெளிப்படைத்தன்மை மிக்க அத்துடன் நியாயமான நிதியியல் சேவைகளுக்கு பெறுவழிமுறையினைக் கொண்டுள்ளனர் என்றும் உறுதிசெய்வதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கான நியாயமானதும் திடமானதுமான தளமொன்றினை நிர்ணயித்துள்ளன.

எவ்வாறிருப்பினும், இலங்கை மத்திய வங்கியின் தற்போதுள்ள கட்டமைப்புக்களின் துண்டாடப்பட்ட அணுகுமுறை இணக்கமின்மைகளையும் சிக்கல்களையும் தோற்றுவித்து வாடிக்கையாளர் பாதுகாப்புப் பற்றிய ஒட்டுமொத்த குறிக்கோளை அடைவதைத் தடைப்படுத்துகின்றன. இதனால், இலங்கை மத்திய வங்கியானது, அதன் ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழான நிறுவனங்களுக்கு பிரயோகிக்கின்ற நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைக்கப்பட்ட அத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தும் கொள்கைத் தீர்மானமொன்றினை மேற்கொண்டது. இப்பணிப்புரையின் முதற்படியாக அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக, 2020 ஓகத்தில் இலங்கை மத்திய வங்கியினுள் தனியான திணைக்களமொன்றாக நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் நிறுவப்பட்டது. தற்போது, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது நடுத்தரகால இலக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வழங்கி நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் வாடிக்கையாளர்களால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகின்ற அனைத்து வெளிவாரி முறைப்பாடுகளையும் மற்றும் குறைகளையும் பெற்று பரப்புவதற்கான தனியொரு தொடர்பு மையமாகப் பணியாற்றுகின்றது.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான புதிய ஒழுங்குவிதிகள்

பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினதும் உலக வங்கியினதும் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை மத்திய வங்கி வரைவு ஒழுங்குவிதிகளை உருவாக்கியுள்ளது, இது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக 2023இன் நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது. வரைவுச் செயன்முறையை வெளிப்படைத் தன்மைமிக்கதாக்கி ஆர்வலர் ஈடுபாட்டினை வசதிப்படுத்தும் பொருட்டு அவதானிப்புகளுக்காக.். ஆலோசனைகளுக்காக பொதுமக்களுக்கும் தொழில்துறைக்கும் இவ்வரைவு ஒழுங்குவிதிகள் கிடைக்கப்பெறச்செய்யப்பட்டன. முன்மொழியப்பட்ட ஒழுங்குவிதிகள், இலங்கை மத்திய வங்கியினால் தற்போது ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து நிறுவனங்களையும் அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், பணத்தரகர்கள் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே காணப்படுகின்ற வாடிக்கையாளர் பாதுகாப்புக் கோட்பாடுகள், விதிகள் அத்துடன் வாடிக்கையாளர் பாதுகாப்புத் துறைகளில் காணப்படும் தற்போதைய நடைமுறைகள் மற்றும் சாத்தியமான கிட்டியகால அபிவிருத்திகள் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வரைவு ஒழுங்குவிதிகளின் கீழ் பின்வரும் பணிப்புரைகளுக்கு.்துறைகளுக்கு உரிய கரிசனை வழங்கப்பட்டது.

(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீதான 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்.

(இ) ஏனைய நியாயாதிக்கங்களின் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான சிறந்த நடத்தைகளும் ஒழுங்குவிதிகளும்.

(ஈ) இலங்கையில் வாடிக்கையாளர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் இனங்காணப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்களின் தற்காலப் பிரச்சனைகள் மற்றும் இடைவெளிகள்/ போக்குகள்.

அதற்கமைய, இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தி இந்நிறுவனங்களை உன்னிப்பாக மேற்பார்வை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அவசியமான அதிகாரமளித்தலுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கான செயல்திறன்வாய்ந்த வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றிற்குத் தேவையான பின்வரும் முக்கிய துறைகளை இவ்வரைவு ஒழுங்குவிதிகள் உள்ளடக்குகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள், மேற்பார்வை நடவடிக்கைகள் அத்துடன் நிதியியல் சேவை வழங்குநர்களின் ஆளுகை.

(ஆ) வெளிப்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பெறுவழி நடைமுறைகள்.

(இ) பொறுப்புவாய்ந்த தொழில் நடத்தை, முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் குறைதீர்த்தல் பொறிமுறை.

(ஈ) போட்டிச் சூழலும் வாடிக்கையாளர் சொத்துக்களையும் தகவல்களையும் பாதுகாத்தலும்

(உ) வாடிக்கையாளர்களை நியாயமாகவும் சமத்துவமாகவும் நடாத்துதல், நிதியியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு

இவ்வொழுங்குவிதிகள் விசேடமாக இலங்கை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனங்களின் ஏடுகள், பதிவுகள், கணக்குகள், ஆவணங்கள், மேற்பார்வை நடவடிக்கைகள் என்பவற்றை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளித்து வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் சந்தை நடத்தை பற்றிய செயல்திறன்வாய்ந்த கண்காணித்தலை இயலச்செய்கின்றன. மேலும், முன்மொழியப்பட்ட இவ்வொழுங்குவிதிகள் மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனங்களின் சந்தை நடத்தை மேற்பார்வைக்கான அடிப்படையொன்றை வழங்கும் என்பதுடன் அதேபோன்று ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை அமுல்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர்களை, சந்தையினை அல்லது நிதியியல் முறைமையினைப் பாதிக்கின்ற சந்தை தவறான நடத்தைக்காக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையை இயலச்செய்கின்றது. மேலும், இவ்வொழுங்குவிதிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி இரண்டினதும் இரு படிமுறை முறைப்பாடு கையாளுதல் நடைமுறையினை சீரமைத்து நிதியியல் வாடிக்கையாளர்களால் முன்வைக்கப்படும் செல்லுபடியான முறைப்பாடுகளுக்கான நீதிமன்றத்திற்கு வெளியேயான இணக்கப்படாடொன்றாக நிதியியல் நிறுவனங்களை பிணிக்கின்ற தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது. ஒட்டுமொத்தமாக, இவ்வொழுங்குவிதிகள் இலங்கை மத்திய வங்கியின் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை குறிப்பாக, 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், 2018ஆம் ஆண்டின் 01ஆம் நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள், 2018ஆம் ஆண்டின் 01ஆம் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் என்பவற்றின் தற்போதைய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை சர்வதேச தரநியமங்களுக்கமைவாக வலுப்படுத்தி இலங்கை மத்திய வங்கி மூலமான சந்தை நடத்தை மேற்பார்வைக்கான அடிப்படையொன்றினை நிறுவி, இலங்கையில் நம்பத்தகுந்த மற்றும் உறுதியான நிதியியல் முறைமையின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையினை மனதிற்பதியச்செய்யும்.

சவால்களும் முன்னோக்கிய பாதையும்

பல்வகைமைமைமிக்க நிதியியல் சேவை வழங்குநர்களைக் கொண்ட தொகுதியொன்றிற்கு பணியளிக்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவது அளவு, நோக்கெல்லை, உற்பத்தி மற்றும் சேவைகள் அத்துடன் வாடிக்கையாளர் வகுப்பினர் நியதிகளில் பாரியளவான வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு, நிதியியல் நிறுவனங்களுக்கும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கிக்கும் அச்சமூட்டும் கடமையொன்றாக விளங்குகின்றது. இந்நோக்கில், அநேகமான பாரிய நிதியியல் நிறுவனங்கள் புதிய ஒழுங்குவிதிகளினால் எதிர்பார்க்கப்பட்டதன்படி தரநியம பொறுப்பாணைகளை நிறைவேற்றுவதற்கு அவற்றின் தொழிற்பாடுகளையும் நடைமுறைகளையும் பாரியளவில் ஏற்கனவே மேம்படுத்தியுள்ளன. எனினும், புதிய ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் பொருட்டு அவற்றின் ஏற்கனவே காணப்படுகின்ற கொள்கைகளுக்கு, நடைமுறைகளுக்கு, தொழிற்பாடுகளுக்கு, மூலவளங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் முறைமைகளுக்கு முக்கிய மாற்றங்களை வேண்டுகின்ற பல எண்ணிக்கையான நிறுவனங்கள் இருக்கக்கூடும். அத்தகைய நிறுவனங்கள் அவற்றின் நடைமுறைப்படுத்தல் காலவரையறைக்குள் வழங்கப்பட்ட மாறுதலடைவதற்கான காலப்பகுதியினுள் இவ்வொழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நவெம்பர் நடுப்பகுதியில் அமைச்சரவையின் ஒப்புதலைப்பெற்ற இவ்வரைவுச் சட்டம் 2023 தொடக்கத்தில் பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, மத்திய வங்கி 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருக்கிறது எனக் குற்றம் சாட்டப்பட்ட குறிப்பிட்ட திட்டங்கள் தொடர்பில் பல புலனாய்வுளை நடத்தியது. மேலும், இதுவரை முடிவுறுத்தப்பட்ட புலனாய்வுகளில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்ட குற்றம் இழைத்தோரின் வழக்கு தொடுப்புக்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் செய்யப்பட்ட கோரிக்கைகளைப் பின்தொடர்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொதுமக்களின் வேறுபட்ட பிரிவினரின் நிதியியல் அறிவினை மேம்படுத்தும் நோக்குடனும் குறிப்பாக தடைசெய்யப்பட்ட திட்டங்களில் இணைந்து கொள்வதனால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் மத்திய வங்கி இவ்வாண்டுப்பகுதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சாத்தியமான சகல மார்க்கங்களினூடாகவும் நடத்தியது.

வெளிநாட்டுச் செலாவணியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

2022ஆம் ஆண்டுப்பகுதியில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்படி 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு அவற்றின் வெளிநாட்டுத் தாய்க் கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அதே குழுமத்திலுள்ள கம்பனிகளிடமிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் குறுங்கால கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிகளை வழங்குகின்ற ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன. மேலும், வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கும் ஒருவர் ஒன்றில் அவற்றினை வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு அத்தகைய நாணயத் தாளை விற்பதற்கு

அட்டவணை 8.23
2022 ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் மற்றும் இலங்கை ரூபாவுக்கு மாற்றுதல்

ஐ.அ.டொ. மில்லியன்

	கா1	கா2	கா3	கா4	மொத்தம்
திருப்பி அனுப்பப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு (அ)	4,286.15	4,370.37	4,575.14	4,524.20	17,755.85
இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் மொத்த அளவு (அ)	1,164.77	954.27	1,030.93	1,070.20	4,220.18

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இரண்டு மாத கால மன்னிப்புக் காலமொன்று வழங்கப்பட்ட வேளையில் வதிவோரினால் வெளிநாட்டு நாணயங்களை வைத்திருப்பதற்கான ஏற்புடைத்தான உயர்ந்தபட்ச வரையறை ஐ.அ.டொலர் 15,000 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி, மன்னிப்புக் காலத்தில் விற்பனை செய்யப்பட்ட/ வைப்புச் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 35.4 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழ் மத்திய வங்கி விடுத்த பணிப்புரைகள் இத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்தான உள்முகப் பணவனுப்பல்களுக்கு உதவியது. மேலும், சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கான செல்லுபடிக் காலம் நீடிக்கப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள சிறப்பு வைப்புக் கணக்குகள் புதுப்பிக்கப்படுவதற்கும் அனுமதிக்கப்பட்டன. மேலும், குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிமுகப் பணவனுப்பலை இடைநிறுத்த மற்றும் வரையறை செய்ய நிதி அமைச்சரினால் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பத்தில் விடுக்கப்பட்ட கட்டளையொன்று இவ்வாண்டுக் காலப்பகுதியில் மேலும் நீடிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி முதலீடுகள், இருபுடை வர்த்தகம் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு வழிமுறைகளையும் எடுத்தது. கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திலுள்ள முதலீடுகளுக்கும் கொடுக்கல்வாங்கல்களுக்கும் வசதியளிக்கும் பொருட்டு முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டினைப் பெறுபவர்களுக்கும் கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள கம்பனிகளின் ஊழியர்களுக்கும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிகளை வழங்குகின்ற விதத்தில் ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன. மேலும், இந்திய ரூபா வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக நிர்ணயிக்கப்பட்டது. மேலும், இறுக்கமான வெளிநாட்டு நாணய திரவத்தன்மை சூழ்நிலைக்கு மத்தியிலும் முக்கியமாக இன்றியமையாத இறக்குமதிகளின் தடங்கலற்ற வழங்கல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் 29 சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு விசேட அனுமதிகள் வழங்கப்பட்டன. மேலும், ஏற்றுமதிப் பெறுகைகளை 180 நாட்களுக்குள் இலங்கைக்குள் கொண்டு வருவதனையும் ஏற்றுமதிப் பொருட்களின் அத்தகைய பெறுகைகளை மாற்றுவதனையும் கட்டாயப்படுத்துகின்ற விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இதன்படி, தொடர்ச்சியான கண்காணிப்புக்களின் காரணமாக ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதில் அதிகரித்த போக்கொன்று இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட வேளையில் இலங்கை ரூபாவிற்கான மாற்றல்களும் இவ்வாண்டு இறுதியில் மேம்பட்டது. மேலும், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை தீவிரமாகக் கண்காணிப்பதற்காக இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் ஒத்துழைப்புடன் தன்னியக்கப்படுத்தப்பட்ட ஏற்றுமதி பெறுகைகள் கண்காணிப்பு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி முன்முயற்சிகளை மேற்கொண்டது. அதேவேளை, புலம்பெயர் படிகளின் கீழான வெளிமுகப் பணவனுப்பல்களும் இவ்வாண்டுப்பகுதியில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் ரூபாய்க் கணக்கின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்த வேளையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இவ்வாண்டுப்பகுதியில் தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளைப் பதிவுசெய்ததன் மூலம் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

அட்டவணை 8.24
வெளிநாட்டு நாணய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்

ஐ.அ.டொ. மில்வியன்

கணக்கின் வகை	உள்முக பண அனுப்பல்		வெளிமுக பண அனுப்பல்		திசெம்பர் 31இல் உள்ளவாறான இருதி மீதி	
	2021	2022 (அ)	2021	2022 (அ)	2021	2022 (அ)
தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகள்	663.2	601.8	234.1	270.7	2,715.4	2,804.8
வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள்	7,647.9	8,209.4	3,756.9	5,269.7	3,071.7	2,795.0
உள்முக முதலீட்டுக் கணக்குகள்	854.7	862.2	1,221.9	843.2	1,969.2	1,714.1
சிறப்பியல்புவாய்ந்த வைப்புக் கணக்குகள்	207.1 (ஆ)	111.7 (ஆ)	83.0	61.4	585.2	751.6
வெளிமுக முதலீட்டுக் கணக்குகள்	11.2	31.3	6.9	7.4	வி/கி	வி/கி

(அ) தற்காலிகமானது
(ஆ) உள்முகு முதலீட்டு கணக்குகள், கரைகடந்த வங்கிகளின் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாண வைப்புகளிலிருந்து பெறப்படும் நிதிகளைத் தவிர

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.25

ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல்வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிரான வெளிநாட்டு செலாவணி விற்பனையும் கொள்வனவும்

	2021	2022
புலம்பெயர் நிதி மாற்றம்		
புலம்பெயர்வதற்கான கொடுப்பனவை அனுப்புவதற்காக மத்திய வங்கியுடன் பதியப்பட்ட ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்களின் எண்ணிக்கை	787	215
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் ஊடாக அனுப்பப்பட்ட வெளிச் செல்லுகை (ஐ.அமெ.டொ.மில்லியன்)	4.5	0.9
வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் (ஐ.அ.டொ. மில்)		
வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் (படிவம் 1)	11,974.43	11,158.81 (அ)
வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் (படிவம் 2)	12,039.72	12,141.28 (அ)

(அ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டுகாலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் செயலாற்றம் மத்திய வங்கியினால் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டதுடன் செலாவணி வீதத்தின் மீது ஏற்படக்கூடிய ஏதேனும் தேவையற்ற அழுத்தத்தினைக் குறைக்கும் நோக்குடன் உயர்ந்த செலாவணி வீதங்களை வழங்குவதனை தடைசெய்யும் பொருட்டு நாணய மாற்று வியாபாரத்தில் மாத்திரம் ஈடுபடுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன. இதன்படி, இவ்வாண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 159.8 மில்லியன் வங்கித்தொழில் முறைமையில் வைப்புச் செய்யப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் விற்பனை செய்யப்பட்டது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான மேம்பட்ட செயலாற்றமொன்றாக விளங்கியமைக்கு பொருளாதார நிலைமைகள் படிப்படியாக உறுதியடைந்தமையும் ஆண்டின் பிற்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அதிகரித்தமையும் காரணங்களாக அமைந்தன.

கொடுகடன் தகவல்

அநேக பெறுமதிகூட்டல்களுடன் கூடிய அதிநவீன கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமையினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் 2022 ஆண்டுப்பகுதியில் முக்கிய மைல்கல்லொன்றினை அடைந்தது. எனவே, ஒன்பது உறுப்பினர் கடன்வழங்கல் நிறுவனங்களின் பங்கேற்புடன் 2022 மேயில் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய முறைமையின் முன்னோடி பரீட்சிப்பு நடவடிக்கைகள் தொடர்புபட்ட உறுப்பினர்களிடமிருந்தான நேர்க்கணிய பிரதிபலிப்புக்களுடன் 2022 யூலையில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் புதிய முறைமையின் பழைய முறைமையுடனான சமாந்தர நடவடிக்கைகள் 2022 ஒகத்தில் தொடங்கியமையானது உறுப்பினர் கடன்வழங்கல் நிறுவனங்களின் அனைத்து பயன்படுத்துநர்களும் புதிய முறைமையுடன் பரீட்சயமாகிக் கொள்வதற்கு புதிய முறைமையை அணுகுவதனை இயலுமைப்படுத்தியது. கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமை 2022 திசெம்பரில் முழுமையாகத் தொடங்கப்பட்டது. புதிய முறைமையானது கொடுகடன் தகவல் பணியகத்தின் செய்முறைகளுக்கு பெருமளவு வினைத்திறனையும் பன்னாட்டு ரீதியான நடைமுறைகளையும் சாதனச் சொத்துப்பட்டியல்களுக்கு விரிவாக்கத்தினையும் கொண்டு வந்த வேளையில், கடன்வழங்கல் சொத்துப்பட்டியலின் சிறந்த முகாமைத்துவத்திற்காக கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு புரட்சிகரமான இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் கொடுகடன் மதிப்பீட்டு உத்திகளையும் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, இம்முறைமை பாரம்பரியமற்ற தரவு சேகரிப்பிற்கான பணியகத்தின் இயலுமையையும் மேம்படுத்தும்.

அதேவேளை, கொடுகடன் தகவல் பணியகம், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடன்வழங்கல் உறுப்பினர் நிறுவனங்களுக்கு 6.1 மில்லியன் கொடுகடன் அறிக்கைகளை வழங்கியதன் மூலம் தேசிய கொடுகடன் தகவல் பதிவகம் என்ற அதன் சட்டபூர்வமான வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. எனினும், 2021 உடன் ஒப்பிடுகையில் 2022 காலப்பகுதியில் வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகளில் 27 சதவீதம் கொண்ட வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. 2022இல் உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்கள் 5.6 மில்லியன் வாடிக்கையாளர் கொடுகடன் அறிக்கைகளையும் 0.4 மில்லியன் கூட்டாண்மை கொடுகடன் அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டன. மேலும், கொடுகடன் தகவல் பணியகம் "தொகை கோரிக்கை" மாதிரியினூடாக கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு 729,635 கொடுகடன் அறிக்கைகளை வழங்கியது. அதேவேளை, சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வி (ஐ.அறிக்கைகள்) 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 13.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல்

தொடர்பான ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கி 2022 மேயில் இலங்கை பசுமை நிதி வகைப்படுத்தலொன்றைத் தொடக்கியது. வகைப்படுத்தலானது, பசுமை/ சூழல் நிதியிடல் சாதனங்களுக்கும் பணிகளுக்குமான நிதிகளைத் திரட்டிக் கொள்வதில் நிதியியல் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை வழங்கும் நோக்குடன் சூழல் ரீதியான நீடித்துநிலைத்திருக்கக்கூடியது என கருதப்படக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளின் விபரமான பகுப்பொன்றினை வழங்குகிறது. வகைப்படுத்தலானது, ஐரோப்பிய மற்றும் சீன வகைப்படுத்தல்கள் இரண்டினையும் இணங்குவிக்கின்ற நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியின் பொது வகைப்படுத்தலின் பன்னாட்டு தளத்தினை அடிப்படையாகக் கொண்டு 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின்

சிறப்புக்குறிப்பு 13
இலங்கையில் நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்தல்

1. அறிமுகம்

நிதியியல் பாதுகாப்பு வலைகள் என்பது சாதாரண பொருளாதார நிலைமைகளில் வினைத்திறன்மிக்க மற்றும் உறுதியான வங்கித்தொழில் முறைமையை ஊக்குவிப்பதற்கும் நிதி நெருக்கடியின் விளைவுகளை நிர்வகிப்பதற்கும் நாடுகின்ற நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் தொகுப்பாகும், நிதியியல் பாதுகாப்பு வலையானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் நிதியியல் உறுதிப்பாட்டையும் ஊக்குவிக்கும் பரந்த குறிக்கோளுடன் முன்மதியுடைய ஒழுங்குபடுத்தல்கள், மேற்பார்வை, தீர்மானம், இறுதிக்கடன் ஈவோன், வைப்பு காப்புறுதி மற்றும் நிதி அமைச்சின் வகிபாகம் அல்லது திறைசேரியின் தொழிற்பாடுகள் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது. நிதிப் பாதுகாப்பு வலைகளானது நெருக்கடி தடுப்பு பொறிமுறைகளுக்கு ஆதரவளித்தல், நெருக்கடியின் போது நிதியளித்தல் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்குவதன் மூலம் ஆற்றல்வாயந்த பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை ஊக்குவித்தல் என்பவற்றிற்கானதொரு வழிமுறையாக பொருளாதாரமொன்றிற்கு முக்கியமானதாக காணப்படுகின்றன.

எந்தவொரு பொருளாதாரத்தினுடைய தொழிற்பாட்டிலும் நிதியியல் முறைமை முக்கியமான பங்கு வகிக்கின்றது. நிதி நிறுவனங்களானது நிதியியல் இடையேற்பாடடை வழங்குகின்ற அதேவேளை அவற்றின் பன்முகப்படுத்தப்பட்டதும் சிக்கலானதுமான வைப்பு பொறுப்பு கணக்கின் மூலம் அதிக இடர்நேர்வுகளை எடுத்துக்கொள்ள முனைகின்றன. எனவே, நவீன உலகப் போக்கு பற்றிய குறைவான அறிவுடைய வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கு பொருளாதாரமொன்றிற்கு நிதிப் பாதுகாப்பு வலை நடவடிக்கைகள் மிக முக்கியமானதாக விளங்கி வருகின்றது. ஒரு நாட்டின் மேற்பார்வைக் கட்டமைப்பைப் பொறுத்து, நாட்டின் நிதிப் பாதுகாப்பு வலைக்குள் பல நிறுவனங்கள் முக்கிய வகிபாகம் வகிக்கின்றன. இருப்பினும், சில நாடுகளில், மத்திய வங்கிகளானது வங்கி ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகிய பிரத்தியேகமான பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் மேலும் வெளிப்படையான அல்லது மறைமுகமான வைப்புக் காப்பீட்டுப் பாதுகாப்பையும் வழங்குகின்றன.

இலங்கையில், அண்மைய ஆண்டுகளில் நிதியியல் முறைமையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உட்பட்டுள்ளதுடன் நிதியியல் முறைமையின் அதிகரித்து வரும் சிக்கலான தன்மை, நிதியியல் அதிர்ச்சிகள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றிற்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்கியுள்ள அதேவேளை நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும்தன்மையை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் முறைமையில் வைப்பாளர்களினதும் வேறு பங்குதாரர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்கும் ஆற்றல்வாய்ந்த நிதியியல் பாதுகாப்புத் தேவையை வலியுறுத்துகின்றது. நாட்டின் நிதியியல் முறைமையின் வலிமையையும் வினைத்திறனையும் உறுதி செய்வதற்காக, இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நிதியியல் பாதுகாப்பு வலையில் முதன்மை ஆர்வலராக நெருக்கமாக கூட்டிணைந்துள்ளன.

2. மத்திய வங்கியினதும் நிதி அமைச்சினதும் வகிபாகம்

இறுதிக் கடன் ஈவோன், வங்கிகளினதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் மேற்பார்வை அதிகாரி, தீர்மான அதிகாரி மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் காப்புறுதி வழங்குநர் போன்ற தொழிற்பாடுகளூடாக இலங்கை மத்திய வங்கி நிதியியல் பாதுகாப்பு வலை பொறிமுறையில் முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. மறுகரத்தில், நிதி அமைச்சானது சாதாரண பொருளாதார நிலைமைகளின் போது நிதியியல் துறைசார் கொள்கைகளை அமைப்பதற்கு பொறுப்பாகவும் மற்றும் நிதி நெருக்கடிகளான காலப்பகுதியில் நெருக்கடி முகாமைத்துவத்தில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்ற நிதியியல் பாதுகாப்பு வலையில் ஒரு முக்கிய பங்கேற்பாளராகக் காணப்படுகின்றது.

3. இறுதிக் கடன் ஈவோன்

நிதியியல் ரீதியான குழப்பக் காலப்பகுதியில், தமது நாளாந்த தொழிற்பாடுகளுக்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வதில் வங்கிகள் சவால்களை எதிர்கொள்ளலாம் என்பதுடன் அவற்றின் இறுதிக் கடன் ஈவோனான இலங்கை மத்திய வங்கியை அணுகலாம். வங்கிகள் ஒன்றுக்கொன்று கடன் வழங்கத் தயங்கும் சந்தர்ப்பங்களிலும், மற்றும் வைப்பாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து அவர்களது நிதியங்களை மீளெடுக்கின்ற போது இது நிகழலாம். அத்தகைய சூழ்நிலைகளில், நிதியியல் சந்தைகளின் மிதமான தொழிற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் உறுதியான நிதியியல் முறைமையை பேணுவதற்கும் இலங்கை மத்திய வங்கி முக்கிய பொறுப்பாக கொண்டிருப்பதால், இறுதிக் கடன் ஈவோனாக இலங்கை மத்திய வங்கி தொழிற்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி பொதுவாக நிதியியல் பீதியைத் தூண்டுகின்ற, நாணய மற்றும் வங்கி உறுதிப்பாட்டை அச்சுறுத்துகின்ற அவசரகாலப்பகுதியில் இறுதிக்கடன் ஈவோன் தொழிற்பாட்டினை வழங்குகின்றது. அத்தகைய சூழ்நிலையில், அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு வரைவிலக்கணம் செய்யப்பட்ட எந்தவொரு பிணைய உறுதியுடன் பிணையளிக்கப்பட்டு வங்கிகளுக்கு அதிவிசேட கடன்களை அல்லது முற்பணங்களை வழங்க இலங்கை மத்திய வங்கிக்கு தற்றுணிவைக் கொண்டுள்ளதுடன் தேவைக்கேற்றவாறு அத்தகைய கடன்களை அல்லது முற்பணங்களை மீளப்புதுப்பிக்கலாம்.

தற்பொழுது, வங்கிகளானது அவசரகால கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான பெறுவழிக்கான ஏதேனும் விசேட தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டியதில்லை இருப்பினும் ஏற்புடைய வட்டி விகிதங்கள், தவணைக்காலம், புதுப்பித்தல்கள், பிணைய உறுதி மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்கள் போன்றவற்றை தீர்மானிப்பதில் இலங்கை மத்திய வங்கி முழு தற்றுணிவைக் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும், ஒரு உரிமம்பெற்ற வங்கி கடன்தீர்க்கும் ஆற்றல் அல்லது கடன்தீர்க்கவகையற்றதாக வரக்கூடியதாக கருதப்படுமாயின்

அல்லது எதிர்காலத்தில் கடன் தீர்க்கும் ஆற்றலுடையதாவதற்கு நியாயமான வாய்ப்பு இல்லையாயின், விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர அத்தகைய வங்கி அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு தகுதியற்றதாகக் கருதப்படும்.

மத்திய வங்கிகளால் வழங்கப்படும் அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடன்தீராற்றலைக் கொண்ட வங்கிகளில் உள்ள தூய்மையான திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக பொதுவாக பார்க்கப்படுகிறது. இருப்பினும், நடைமுறையில் இத்தகைய நிலைமைகள் அரிதாகவே காணப்படுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வங்கிகள் திரவத்தன்மை பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பாக சில நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் கடன் தீர்க்கும் ஆற்றலை மதிப்பிடுவதற்கு வழமையாக காலமெடுப்பதுடன் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளால் அவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

4. முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்புகள்

முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தலானது, நிதி நிறுவனங்கள் கடைப்பிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தரநியமங்கள் மற்றும் கொள்கைகளை நிறுவுகிறது. மேற்பார்வைக் கட்டமைப்பின் கீழ், நிதித் துறையின் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் குறிக்கோளை அடைந்துகொள்ளல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு இத்தரநியமங்களும் கொள்கைகளும் நடைமுறைப்படுத்துவதை இது கண்காணிக்கிறது.

இலங்கையின் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது 1948ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றில் முதன்மையாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கவும், அவற்றுக்கு முன்மதியுடைய பணிப்புரைகள், தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை உரிமம்பெற்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும், மேற்பார்வை மற்றும் பரீட்சிப்புக்களை நடத்தவும் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவும், பலவீனமான உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை தீர்க்கவும் இலங்கை மத்திய வங்கி அதிகாரம் பெற்றுள்ளது. வங்கி மேற்பார்வைக்காக பாசல் (டீயளநட) குழுவால் நிறுவப்பட்ட சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற மேற்பார்வை தரநியமங்களை இலங்கை மத்திய வங்கி பின்பற்றுகிறது. சாத்தியமான நெருக்கடி நிலைக்குத் தயாராவதற்கு, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் முறிவடைவதை தீர்ப்பதற்குமான வழிமுறைகளை உள்ளடக்கிய அவசரகாலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துமாறு வங்கிகளையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களையும் மேற்பார்வையாளர்கள் கோருகின்றனர்.

5. வைப்புக் காப்புறுதி முறைமை

வைப்புக் காப்புறுதி வழங்குநர் ஒருவரின் வகிபாகமானது விசேடமாக வங்கி முறிவடைகின்ற சந்தர்ப்பத்தில் நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்வதன்மூலம் அதன் உறுதிப்பாட்டினைப் பேணுவதாகும். வைப்புக் காப்புறுதி வழங்குநர், வங்கி மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தோல்வியடைந்தாலும், காப்பீடு செய்யப்பட்ட நிதியங்களை உடனடியாக பெற்றுக்கொள்வதனை வைப்பாளர்களுக்கு உறுதியளிக்கிறார்கள், அதன்மூலம் வங்கி மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்பாளர்களுடைய விலகலிற்கான சந்தர்ப்பங்களையும் மற்றும் இதன்பயனாக, ஒரு பரந்த பொருளாதாரத்தின் மீதான கசிவுத்தாக்கத்தைக் கொண்டிருக்கும் பரவலுக்கான இடர்நேர்வினைக் குறைத்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணி வளர்க்கின்றனர்.

பொதுவாக வைப்புக் காப்புறுதி முறைமைகள் குறுகிய முறைமைகள் (கொடுப்பனவுப் பெட்டி) முதல் பல்வேறு சேர்க்கைகளுடன் இடர்நேர்வு அல்லது நட்டத்தைக் குறைத்தல் போன்ற பரந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள், பல்வேறு கட்டளைகளைக் கொண்டிருக்கும் வைப்புக் காப்புறுதி முகவர்கள் எனப்படும் நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சில வைப்புக் காப்புறுதி முகவர்கள் சில வைப்புக் காப்புறுதி முகவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட "கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணை" என்பதைக் கொண்டிருக்கலாம், இது நிதியியல் நிறுவனம் தோல்வியுறும் சந்தர்ப்பத்தில், காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களின் மீளளிப்புக்களில் கவனம் செலுத்துகிறது. ஏனைய வைப்புக் காப்புறுதி முகவர்கள் சொத்துகளைப் பிரித்தல், பிரிஜ் வங்கியொன்றைத் திறத்தல், திறந்த வங்கி உதவியை வழங்குதல், பிணை எடுத்தல் போன்ற நிதியியல் நிறுவனங்களின் தீர்வு நடவடிக்கைகளுக்கு நிதியியல் உதவியை வழங்குதல் தொடர்பான பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட "கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணையைக்" கொண்டிருக்கலாம்.

'வைப்புக் காப்புறுதி முகவர்கள் நட்டத்தை அல்லது இடர்நேர்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள நேரடியான பொறுப்பாணையொன்றைப் பயன்படுத்தலாம். நட்டக் குறைப்பாளர்கள் தொழிற்பாடற்றுக் காணப்படும் வங்கிகளின் நிலையைத் தீர்ப்பதற்கான செலவைக் குறைக்கும் குறிக்கோளுடன் செயல்படுகின்ற அதேவேளை இடர்நேர்வுக் குறைப்பாளர்கள் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் இடர்நேர்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

6. இலங்கை வைப்புக் காப்புறுதியும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமும்

இலங்கையின் வைப்புக் காப்புறுதி முகவர் என்பது இலங்கை வைப்புக் காப்புறுதியும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் என அழைக்கப்படுகின்றதுடன் இலங்கை மத்திய வங்கியின் கண்ணோட்டத்தின் கீழ் செயற்படுவதாகும். நிதியியல் முறைமையில்

பொதுமக்களுடைய நம்பிக்கையை நிலைநாட்டுவதை நோக்கமாகக்கொண்டு, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது நாணய விதிச் சட்டம், வங்கித்தொழில் சட்டம் மற்றும் தற்போதுள்ள நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் கட்டாய வைப்புக் காப்புறுதி முறைமையாக 2010 இல் நிறுவப்பட்டது. தற்போது, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்ட ஒழுங்குவிதிகளினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது உரிமம்பெற்ற வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் தொழிற்பாடற்ற சந்தர்ப்பத்தில், சிறு வைப்பார்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை எடுத்துக் காட்டியுள்ளது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் எனப்படும் முன்னிருந்த (நுஒ யுவெந கரனெ) நிதியினைப் பேணி வருவதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திற்கான நிதியின் முதன்மை வழக்கமான ஆதாரமாக உறுப்பினர் நிறுவனங்களால் செலுத்தப்படும் கட்டணத்தொகையாக காணப்படுகின்றது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் உறுப்பினர் நிறுவனங்களான இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திற்கு காப்புறுதி கட்டணத்தொகையை முறையே அவற்றின் மூலதன போதுமை விகிதத்தின் அடிப்படையில் காலாண்டிற்கு ஒரு தடவையும் மற்றும் மாதாந்தம் நிலையான விகிதத்திலும் செலுத்த வேண்டும். தற்போது, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் ஒரு கொடுப்பனவுப் பெட்டி பொறுப்பாணையுடன் தொழிற்படுவதுடன் நெருக்கடியைத் தடுப்பிற்கானதும் முகாமைத்துவத்திற்கானதும் கருவியாகவும் செயல்படுகிறது.

7. நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்துதல்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கு நிதியியல் பாதுகாப்பு வலையின் சரியான செயல்பாடு இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் அதனை வலுப்படுத்துவதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் ஆராய்வது கட்டாயமானதாகும். கடந்த கால நிதியியல் நெருக்கடிகள், உலகம் முழுவதும், பிராந்திய மற்றும் தேசியளவில் போதுமான பாதுகாப்பு வலை ஏற்பாடுகளை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளன. நிதியியல் நெருக்கடிகளின் போது சந்தை நம்பிக்கையை அதிகரிப்பதற்கு, நன்கு தொழிற்படும் நிதியியல் பாதுகாப்பு வலையின் அவசியத்தை இது வலியுறுத்திக் காட்டுகிறது. நிதியியல் உறுதிப்பாட்டையும் மீளெழுச்சியையும் நிலைநிறுத்துவதற்கு மேம்படுத்தப்பட்ட பிராந்திய ஒத்துழைப்பு அவசியமான காலங்களில் ஒரு முக்கிய பாதுகாப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் பற்றாக்குறை கடுமையான சிக்கல்களையும் மேலதிக செலவுகளையும் ஏற்படுத்தும். ஆகையினால், தீர்மானமெடுக்கும் அதிகாரசபை தேவையான திரவத்தன்மை வழங்கும் தீர்மான நுட்பங்களை நாடலாம். இதற்கு மேலதிகமாக, போதியளவு நிதியிடல் இல்லாதபோது, தீர்மானமெடுத்தல் செயல்முறையில் தாமதம் ஏற்படுவதற்கு வழிவகுக்கலாம். தீர்மானமெடுக்கும் அதிகாரசபையொன்று நிறுவனத்தின் தீர்மானத்தை பிற்போடும் போது, சொத்துகளின் தரம் தொடர்ந்தும் மோசமடையக்கூடும் என்பதுடன் தார்மீக இடர்நேர்வு பிரச்சனை மேலும் உயர்வடையும்.

நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் அதை ஒழுங்குபடுத்தும் சட்டக் கட்டமைப்பை நெறிப்படுத்துவதும் பலப்படுத்துவதும் அவசியமாகவுள்ளது. சிக்கலான, குழப்பமான மற்றும் பெரும்பாலும் வெளிப்படைத் தன்மையற்ற கட்டமைப்பு காரணமாக தற்போது, வங்கித் தீர்மானத்தை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பு சிதறடிக்கப்பட்டுள்ளது, மேலும், இலங்கையில் பின்பற்றப்படும் வங்கிகளுக்கான நீதிமன்ற உந்துதல் நடைமுறைகள் மெதுவானதாகக் கருதப்படுகிறது, இது வங்கியொன்றின் பங்குதாரர்கள் வங்கியைத் தீர்ப்பதற்கு கட்டுப்பாட்டாளரின் அதிகாரத்தை சவால் செய்தால் தீர்வு செயல்முறையை தாமதப்படுத்தலாம். வங்கி இணைப்புகளில் ஈடுபட்டுள்ள அதிகாரத்துவ செயல்முறையானது வங்கிகளின் தீர்மானத்தை மேலும் சிக்கலாக்குவதோடு நிச்சயமற்ற தன்மையையும் உருவாக்குகிறது, இது நிதியியல் முறைமையை சீர்குலைக்கும். இதற்கு தற்போதைய கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது மற்றும் வங்கி தீர்மானம் மற்றும் இணைப்புகளுக்கு மிகவும் திறமையான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையைப் பின்பற்றுவது அவசியமாகும்.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் சிறந்த செயல்திறனுக்கு வைப்புக் காப்புறுதி முறைமை வலுப்படுத்துவது இன்றியமையாதாகும். கடந்த 10 ஆண்டுகளாக, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமானது "கொடுப்பனவுப் பெட்டி" செயற்பாட்டினை செயலாற்றி வருகின்றது. இருப்பினும், வைப்பாளர்களுக்கு சரியான நேரத்தில் பணத்தைச் செலுத்துவதற்கான அதன் முயற்சிகளில், வைப்பாளர்கள் தொடர்பான போதிய தகவல் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் தனிப்பட்ட அடையாள எண்ணின் கீழ் வைப்புத்தொகையாளரின் தகவலைப் பராமரிக்கத் தவறியதன் காரணமாக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்ட சவால்களை எதிர்கொள்கிறது. இச்சவால்களை எதிர்கொள்வது மற்றும் வைப்புத்தொகையாளர்களுக்கான வலுவான தகவல் பகிர்வு மற்றும் அடையாள அமைப்புகளை செயல்படுத்துவதன் மூலம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதில் நீண்ட தூரம் செல்லவும் மற்றும் இறுதியில், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்தவும் முடியும். உலகளவில், பரந்தளவிலான பொறுப்பாணைகளுடன் கூடிய வைப்புக் காப்புறுதி முறைமைகள், வங்குரோத்திற்குட்பட்ட வங்கிகளுக்குத் தீர்வு காண்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன. இவ்வேற்பாடு, தூய்மையான கொடுப்பனவுப் பெட்டி அமைப்புகளுடன் ஒப்பிடும் போது, காப்பீட்டாளருக்கு செலவுகளை

நிவர்த்தி செய்வதற்கான அதிக திறனை வழங்குகிறது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் தோல்வியுற்ற நிறுவனத்தைத் தீர்ப்பதற்கு "குறைந்த செலவு" அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். இவ்வணுகுமுறையானது அரசாங்கம், ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகள், மத்திய வங்கி மற்றும் வைப்புக் காப்பீட்டாளர் ஆகிய பாதுகாப்பு வலை பங்கேற்பாளர்கள் மத்தியில் நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது. போதுமான அதிகாரங்கள், தொழிற்பாட்டுச் சுதந்திரம் மற்றும் தற்செயல் நிதியளித்தலுக்கான உறுதியான ஆதாரங்களுடன், போதுமான பரந்த பொறுப்பாணைகளைக் கொண்ட வைப்புத்தொகை காப்பீட்டாளர்கள், மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும், பேணுவதிலும் மற்றும் நிதியியல் நெருக்கடிகளை கையாள்வதிலும் மிகவும் திறம்பட செயற்பட்டுள்ளனர் என்பதை அனுபவத்தினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அசாதாரண சூழ்நிலையில் வங்கிகளின் முறைமையில் தோல்வி ஏற்படின், நிதியியல் உறுதிப்பாடு பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, வைப்புக் காப்பீட்டாளர் மட்டுப்பாடற்றதும் மற்றும் விரைவான அணுகலுடன் காப்பு (டியஉமளவழி) நிதியுதவியுடன் இருப்பது அவசியமாகும். ஒட்டுமொத்தமாக, வைப்புத்தொகைக் காப்பீட்டு முறைமையின் வெற்றியானது, வைப்பாளர்களுக்கு நம்பகமான மற்றும் பயனுள்ள பாதுகாப்பை வழங்கும் ஆற்றலில் தங்கியுள்ளது.

நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்துவதில், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளுடன் இணக்குதல் வேண்டும். புதிய வங்கித்தொழில் சட்டத்தின் இறுதிப்படுத்தி பின்பற்றலின் போது, இக்காரணி கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, பாதுகாப்பு வலையின் இருப்பானது தார்மீக இடர்நேர்விற்கு வழிவகுக்கின்றது, இது நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்பவர்களுக்கு மத்தியில் இழப்புகளில் இருந்து பாதுகாக்கப்படும் அதேவேளை, தாம் மேற்கொள்ளும் இடர்மிகு முதலீடுகளினால் ஏற்படும் பலனைப் பெறுவார்கள் என்று நம்பவைப்பதன் மூலம் இடர்மிகு நடத்தையை ஊக்குவிக்கிறது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அனைத்து வகைகளுக்கும் ஒரே மாதிரியான கட்டணத்தை அறவிடுவதன் மூலம் தார்மீக இடர்நேர்வுகள் அதிகரிக்கப்படலாம். இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம், தார்மீக இடர்நேர்வுக்கு இடையேயான பரிமாற்றத்தை நிர்வகிப்பதற்கும், ஏற்கனவே பலவீனமாக இருக்கும் வங்கிகள் மீது உயர்ந்தளவான மிகைகளின் மேலதிக சுமையை இடுவதற்கு ஒரு பொறிமுறையை செயல்படுத்தும்போது, இடர்நேர்வு அடிப்படையிலான மிகைகளை விதித்தல் வேண்டும். இருப்பினும், சந்தை அடிப்படையிலான இடர்நேர்வு மிகைகளைச் சுமத்துவது, உயர்ந்தளவான காப்பீடுகளின் சுமையால் ஏற்கனவே பலவீனமான வங்கிகளின் பங்கு விலைகளை எதிர்மறையாக பாதிக்கலாம். அதற்கமைய, இடர்நேர்வு அடிப்படையிலான மிகைகளை அறிமுகப்படுத்துதல், சில வைப்புத்தொகை வகைகளை காப்பீட்டிலிருந்து விலக்குதல், தீவிர கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை மற்றும் நெருக்கடியான நிறுவனங்களின் சரியான நேரத்தில் தலையீடு மற்றும் தீர்வு போன்ற நிதியியல் உறுதிப்பாடு மற்றும் சந்தை துறை ஆகியவற்றுக்கு இடையேயான சமநிலையை உறுதிசெய்யப் பொருத்தமான கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. கடன்தீராற்றலற்ற நிதியியல் நிறுவனங்களை தோல்வியடைய அனுமதித்து கடன்தீராற்றலற்ற நிலைக்கு அருகில் வரும் செலவுகளைச் சுமத்துதல் நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்பவர்களை ஒழுங்குமுறைப்படுத்தி, பாதுகாப்பு வலையின் வடிவமைப்பிற்குள் தார்மீக இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சந்தைக்கு மிகச் சிறந்த வழியாகும் தார்மீக அபாயம் மற்றும் நிலையான நிதியியல் முறைமை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு நியாயமான சமநிலையானது, சந்தை ஒழுங்குமுறைப்படுத்தும் நடத்தையை அனுமதிக்கும் அதேவேளையில் முறையான இடர்நேர்வை ஏற்படுத்தும் தோல்விகளுக்கு மிகக் குறைந்த விதிவிலக்கை அனுமதிக்கும். ஆகையினால், கடன்தீராற்றலற்ற வங்கிகள் பொதுவாக தோல்வியடைய அனுமதிக்க வேண்டும் என்பதுடன் வங்கி திறந்த நிலையில் இருக்க உதவினால் பங்குதாரர்கள் தமது பங்குகளை இழக்க நேரிடும். விதியொன்றாக நிலையானதொரு நிதியியல் முறைமைக்கும் தார்மீக இடர்நேர்விற்குமிடையிலான இச்சரியான சமநிலை, பாதுகாப்பு வலை என்பது கடன்தீராற்றலற்ற நிறுவனங்கள் வீழ்ச்சியடையக்கூடிய ஒரு வலையாக இருக்கும், மேலும் கடன்தீராற்றலற்ற நிறுவனங்கள் தோல்வியடையும் அளவுக்கு வீழ்ச்சியடைவதைத் தடுக்கும் தளமாக இருக்காது என்பதனை உறுதிசெய்கிறது.

8. நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்தவும், முன்னேற்றவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

தற்போது, இலங்கையின் நிதியியல் பாதுகாப்பு வலையை வலுப்படுத்த இலங்கை மத்திய வங்கியினால் கணிசமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்களை விரிவுபடுத்துவதும், நிதியியல் நிறுவனங்களுக்கான சிறப்புத் தீர்மான முறையை அமைப்பதன் மூலம் தீர்மானக் கட்டமைப்பை மேம்படுத்துவதும், தீர்மானக் கருவிகளை விரிவுபடுத்துவதும், வைப்புத்தொகைக் காப்பீட்டை மேம்படுத்துவதும், அவசரகால திரவத்தன்மை உதவியை மேம்படுத்துவதும் முக்கியமானதாக உள்ளது. புதிய வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் இறுதியாக்கல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் இவ்விலக்குகளை அடைய உதவும். பாரியளவிலான மற்றும் நவீன நிதியியல் நிறுவனங்கள் இறுக்கமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றாலும், வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஒரே மாதிரியான வங்கிச் செயல்பாடுகளை நடத்துவதை உறுதிசெய்வது முக்கியமாகும். ஏற்கனவே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மத்திய வங்கி சட்டமூலம், நிதி நிறுவனங்களின் தீர்வுக்கு பொறுப்பான அதிகாரமாக இலங்கை மத்திய வங்கியை அங்கீகரிக்கும் அதே வேளையில், முன்மொழியப்பட்ட வங்கிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் விரிவான மீட்பு மற்றும் தீர்மான திட்டமிடல் செயல்முறை, தீர்மானத்திற்கான தூண்டுதல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஆகிய இரண்டும் பயன்படுத்தக்கூடிய தீர்மானம்

அதிகாரங்கள் ஆகியவற்றை விபரிக்கின்றது. பாதுகாப்பு வலை நடவடிக்கையாக, நிதி நிறுவனத்தின் தீர்மானம்

i. கொடுப்பனவு, கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் உட்பட நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

ii. உரிமம்பெற்ற வங்கிகளின் முக்கியமான செயல்பாடுகளின் தொடர்ச்சி

iii. பொது நிதியியல் ஆதரவைக் குறைப்பதன் மூலம் பொது நிதிகளைப் பாதுகாத்தல்

iv. அத்தகைய வங்கிகளின் வைப்பாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும்

v. சொத்துக்களின் மதிப்பின் தேவையற்ற அழிவைத் தவிர்ப்பது மற்றும் கடனாளிகளுக்கு ஏற்படும் இழப்புகள் மற்றும் தீர்வுக்கான ஒட்டுமொத்த செலவுகளைக் குறைக்க முயற்சித்தல்.

ஆகியவற்றை உறுதிசெய்யும்.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திலிருந்து நிறுவனமொன்றின் வைப்பாளருக்கு வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை ரூ.200,000 இலிருந்து தற்பொழுது ரூ.1,100,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் சென்றல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்டான்ரட் கிறடிட் பினான்ஸ் லிமிடெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் த பினான்ஸ் கம்பனி பிஎல்சி மற்றும் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் ஆகிய உரிமம் இரத்துச்செய்யப்பட்ட. இடைநிறுத்தப்பட்ட ஆறு நிதி நிறுவனங்களின் காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு இழப்பீடாக செலுத்தி வருகிறது.

முன்மொழியப்பட்ட வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட வைப்புக் காப்புறுதி முறைமை, தற்போதுள்ள "கொடுப்பனவுப் பெட்டி" பொறுப்பாணைக்கு அப்பால் விரிவாக்கப்பட்ட பொறுப்பாணையுடன் கிடைக்கும். மேலும், தற்போது சோதனைக் கட்டத்திலுள்ள வைப்பாளர் வகையான தரவு சேமிக்கும் முறைமையை செயல்படுத்துவதன் மூலம் வைப்புக் காப்புறுதி முறைமையுடைய செயல்பாட்டுத் திறன் மற்றும் செலுத்துதல் தயார்நிலை உறுதிசெய்யப்படுகிறது. வைப்புக் காப்புறுதி முறைமையினால் இடர்நேர்வு அடிப்படையிலான காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துவது, நிதியியல் நிறுவனங்கள் அதிகளவிலான இடர்நேர்வு எடுப்பதைத் தவிர்ப்பதை உறுதிசெய்யும் மற்றும் காப்பீடு செலுத்துவதில் நியாயத்தை பிரதிபலிக்கும். மேலும், பன்னாட்டு நிதி நிறுவனங்களின் மாற்று நிதியியல் ஆதாரங்களுடன் வைப்புக் காப்புறுதி முறைமையின் நிதி போதுமான அளவு உறுதி செய்யப்படும் மற்றும் அரசாங்கத்துடன் காப்பு நிதி ஏற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நிதி தற்காலிக நிதியிடல் தீர்க்கப்படும்.

இதற்கு மேலதிகமாக, புதிய அவசர கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டமைப்புக்கான ஒரு வரைபு இலங்கை மத்திய வங்கியினால் சரியான நேரத்தில் செயல்படுத்தப்படும், இது எந்தவொரு நிதி பாதுகாப்பு தேறிய வழிமுறைகளிலிருந்து எந்தவொரு தார்மீக இடர்நேர்வையும் தவிர்ப்பது மற்றும் இறுதியில் பிணையங்களுக்கு எதிராக கடன் வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையில் எதிர்மறையான தாக்கம் தவிர்க்கப்படுகிறது.

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும், வங்கி தொழிற்பாடுகளைத் தீர்ப்பதற்கான செலவைக் குறைப்பதற்குமாக, மூலதனம் தீர்ந்து போவதற்கு முன்னர், கடன்திராற்றலற்ற வங்கிகளைத் திறந்து வைப்பதை தடுப்பதற்கும் தோல்வியடைந்த வங்கிகளை விரைவாக மூடுவதற்கும், முன்மொழியப்பட்ட விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதை இலங்கை மத்திய வங்கி உறுதி செய்தல் வேண்டும். திரவத்தன்மை பிரச்சனைகளிலிருந்து தப்பிக்கக்கூடிய பிரச்சனையுள்ள வங்கிகளுக்கு மாத்திரமே கடன் வழங்க அனுமதிப்பதன் மூலமும், நிதியியல் நிறுவனங்களை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமும் தள்ளுபடி- தளத்தினூடான கடன்வழங்குவதில் இலங்கை மத்திய வங்கி தற்றுணிபைக் குறைப்பதன் மூலம் இதனை அடையமுடியும்.

நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் வகைப்படுத்தலை அபிவிருத்தி செய்வதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கியதுடன் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, சுற்றாடல் அமைச்சு மற்றும் வேளாண்மை அமைச்சு என்பன உட்பட ஆனால் அதற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிராத பரந்தளவிலான ஆர்வலர்களின் பங்கேற்புடன் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கூடிய வழிகாட்டலை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் மற்றைய அநேக வழிமுறைகளிலும் மத்திய வங்கி ஈடுபட்டிருந்தது. இலங்கையின் பசுமை நிதி வகைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீடித்துநிலைத்திருக்கும் நிதி நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்கான வழிகாட்டல்களை கூட்டிணைக்கின்ற விதத்திலும் அத்தகைய ஏதேனும் நடவடிக்கைகளுக்காகவும் நிதியியல் துறைக்கு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வழங்குகின்ற தேவையினைப் பரிசீலனையில் கொண்டும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரையொன்றையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஒழுங்கு விதியொன்றையும் மத்திய வங்கி விடுத்தது. மேலும், மத்திய வங்கி, நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட நாட்டிற்கான பசுமை முறிகளை வெளியிடுவதற்கான பசுமை முறி கட்டமைப்பொன்றினை அபிவிருத்தி செய்யும் செய்முறையில் ஈடுபட்டிருந்தது. ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார

மற்றும் சமூக ஆணைக்குழு மூலதனச் சந்தைகளின் முன்னேற்றத்திற்காக இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டலில் அடையாளம் காணப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையாகவுள்ள பசுமை முறி கட்டமைப்பிற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. மேலும், மத்திய வங்கி நாட்டில் நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், ஆசிய மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு உள்ளிட்ட பன்னாட்டு முகவர்களுடனும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியான தொடர்பான மற்றைய ஆர்வலர் குழுக்களுடனும் நெருக்கமாகத் தொடர்ந்தும் பணியாற்றுகிறது.

சிறப்புக் குறிப்பு 14
முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

நாணயக் கொள்கை மற்றும் செலாவணி வீதக் கொள்கை

2022 சனவரி 20 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன.

2022 மாச்சு 04 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன.

2022 மாச்சு 07 - செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீரக்கமொன்று அனுமதிக்கப்பட்டது.

2022 ஏப்பிறல் 08 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 2022 ஏப்பிறல் 08 வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முறையே 13.50 சதவீதத்திற்கும் 14.50 சதவீதத்திற்கும் 700 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன.

2022 மே 12 - வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் ஒழுங்கான நடத்தையை வசதிப்படுத்தி, செலாவணி வீதத்தில் காணப்படும் தேவையற்ற நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமைசெய்வதற்கும் நாளாந்த அடிப்படையில் அறிவிக்கப்படவுள்ள அனுமதிக்கப்பட்ட ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் வேறுபாட்டு எல்லையுடன் ஒன்றுசேர்த்து, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைய ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் செலாவணி வீதத்தின் நடு வீதத்தை 2022 மே 13 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அறிமுகப்படுத்தல்.

2022 யூலை 07 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன.

2023 சனவரி 02 - குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றுக்கான துணைநில் வைப்பு வசதியின் கிடைக்கப்பெறும் தன்மை 2023 சனவரி 16 நடைமுறைக்குவரும் வகையில், கலண்டர் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைக்கப்பெறும் தன்மை ஏதேனும் தரப்பட்ட நாளில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்கு தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

2023 மாச்சு 03 - 2023 மாச்சு 03 வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 15.50 சதவீதத்திற்கும் 16.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன.

- ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் ஒரு நடு வீதம் மற்றும் மாறுபாட்டு எல்லை என்பனவற்றின் அறிவிப்பினூடாக மேற்கொள்ளப்படும் சந்தை வழிகாட்டல் வெளியீடானது 2023 மாச்சு 07 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது.

சிறப்புக் கொடுகடன் திட்டங்கள்

2022 பெப்புருவரி 15 - சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம் 2021 நவெம்பர் 01முதல் 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

2022 மே 20 - வட்டி வீதத்தை 9 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு சௌபாக்யா (சுபீட்சம்) கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்ட அதேவேளை குறைந்தபட்சம் 80 சதவீதமான புதிய கடன்கள் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு

1 இது 2022 சனவரி 01 முதல் 2023 மாச்சு 15 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளையும் அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகின்றது.

வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை அறுவுறுத்துகின்றன.

2022 மே 27 - 2021 நவெம்பர் 01 தொடக்கம் 2022 மே 31 வரையிலான காலப்பகுதிக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி ஊக்குவிப்புத்தொகையை 7 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு குறைத்து 2022 யூன் 01 தொடக்கம் 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி உதவுதொகையை 4 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு மீண்டும் அதிகரிப்பதற்கு சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

2022 யூன் 13 - நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல், உணவு இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலை குறைத்தல், வேளாண்மை உற்பத்திகளை நோக்கி மக்களை அதிகம் நாட்டம் கொள்ளச்செய்தல் அத்துடன் சிறியளவிலான விவசாயிகளின் சமூக பொருளாதார நிலைமையை உயர்த்துதல் என்பவற்றுக்கமைவாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு அரசாங்க கொள்கை வழிமுறைகளுக்கிணங்க ஏற்புடைய வட்டி வீதங்களையும் நிதியின் அளவையும் திருத்தும் பொருட்டு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

2022 யூலை 07 - ஆறு மாத கால மீள் கொடுப்பனவு காலப்பகுதிக்கான நீடிப்பொன்றுடன் 2022 யூலை 07 தொடக்கம் 2022 திசெம்பர் 31 வரை காலப்பகுதிக்கு சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சௌபாக்யா (சுபீட்சம்), சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, மற்றும் II, ஆகிய கடன் திட்டங்களின் கீழ் படுகடன் சட்ட இசைவுத்தாமதம் வழங்கப்பட்டது.

2023 சனவரி 01 - 2023 சனவரி 01 தொடக்கம் 2027 திசெம்பர் 31 வரை தொடங்குகின்ற விதத்தில், சுயதொழில்வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டத்தின் (கட்டம் II) தொழிற்பாட்டு காலப்பகுதியை நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இலங்கை அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கையில் கைச்சாதிட்டது.

2023 பெப்புருவரி 15 - சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV, சலுகை நியதிகளின் கீழ் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுப்படுத்துவதற்கான தொழிற்படு மூலதன கடனை வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் திட்டம் என்பன 2023 பெப்புருவரி 15 நடைமுறைக்குவரும் வகையில் முடிவுறுத்தப்பட்டன.

நிதியியல் துறை

உரிமம்பெற்ற வங்கிகள்

2022 மார்சு 11 - பாரிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்களைக் குறைக்கும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட அண்மைய நாணயக் கொள்கை இறுக்கமாக்கல் வழிமுறைகளைப் பரிசீலனையில் கொண்டு, கடனட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள், அடகு முற்பணங்கள் மீதான திருத்தப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிவித்து 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தம் வழங்கப்பட்டது.

- அண்மைய இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள், எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச

		வட்டி வீதங்களை நீக்கி 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தம் வழங்கப்பட்டது.
2022 மார்சு 22	-	உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலமான வெளிநாட்டுச் செலாவணி முன்நோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீது 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை இரத்துச்செய்து வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
2022 மார்சு 24	-	தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் சாத்தியத்துடன் கூடிய இயலுமைமிக்க வியாபாரங்களை புத்துயிர்பெறச்செய்து அதனூடாக நிலைபேறான விதத்தில் படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் தளர்த்தலை வசதிப்படுத்தும் நோக்குடன் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட குறைவாகச் செயலாற்றுகின்ற அத்துடன் செயலாற்றமற்ற கடன் பெறுநர்களை இனங்கண்டு உதவும்பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளில் கொவிட்-19 இற்குப் பிந்திய புத்துயிரளித்தல் பிரிவுகளை தாபிப்பதன் மீதான வழிகாட்டல்களை வழங்கும் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.
2022 ஏப்பிறல் 21	-	கடனட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் அடகு முற்பணங்கள் மீது விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை இரத்துச்செய்து நாணயவிதிச் சட்டக் கட்டளையொன்று வழங்கப்பட்டது. மேலும், இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு போதுமானளவில் வைப்பு வட்டி வீதங்களை மேல்நோக்கி சரிசெய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.
2022 மே 06	-	நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகள், திரவத்தன்மையில் பொருத்தமான அளவுகளைப் பேணுவதன் முக்கியத்துவம் மற்றும் மூலதன தாங்கியிருப்புக்கள் என்பன காரணமாக உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் வேறு முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் மீதான சாத்தியமான பாதகமான தாக்கம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிவுக் கொடுப்பனவுகள் மற்றும் அத்தியவசியமற்ற/அவசரமற்ற செலவினங்களை கட்டுப்படுத்துகின்ற அதேவேளை 2022 திசெம்பர் 31 வரை மூலதனச் செலவினம் ஏற்படுகின்ற போது மிகுந்த முன்மதியினை பிரயோகிப்பதற்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
2022 மே 19	-	உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீத உறுதிப்பாட்டையும் திரவத்தன்மையினையும் பேணிக்காப்பதற்கு அத்தியாவசியமற்ற அத்துடன் அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன், ஏற்றுக்கொள்வதற்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் நியதிகளின் கீழ் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளுக்கான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளினூடாகவும், நாணயக் கடிதங்களின் கீழ் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான நாணய விதிச் சட்டக் கட்டளையொன்றினூடாகவும் குறித்துரைக்கப்பட்ட இணங்குவிப்பு முறைமை குறியீடுகளின் கீழ் இறக்குமதிக்காக 100 சதவீத வட்டியற்ற காசு எல்லைத் வைப்புத் தேவைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது.
2022 மே 23	-	நிலவுகின்ற அசாதாரண பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சில ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, மூலதனப் பாதுகாப்பு தாங்கியிருப்பைக் குறைப்பதற்கும், 2024இன் இரண்டாம் காலாண்டு வரை மூலதனப் போதுமாந்தன்மை விகிதக் கணக்கீட்டின நோக்கத்திற்காக சீர்மதிப்புப்பெறுமதியில் அளவிடப்படும் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் மீது கொள்கை வட்டி வீதங்களின் (2022 ஏப்பிறல் 08 அன்று) மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற ஓரிரவு சந்தைப் பெறுமதி இழப்புக்களை படிப்படியாகப் பரப்புவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்ட அதேவேளை, 2022 செத்தெம்பர் 30 வரை திரவத்தன்மை உள்ளடக்கம் மற்றும் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதங்கள்

		என்பவற்றுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் 100 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாகக் குறைக்கப்பட்டன. மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தைக் கணிப்பதற்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மீதான திருத்தப்பட்ட நடவடிக்கையானது பன்னாட்டு நியமங்களுக்கமைவாக அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கான இறுதித் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டதுடன் தொழிற்பாட்டு இடர்நேர்விற்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிப்பதற்கு 2023 திசெம்பர் 31 வரை தரப்படுத்தப்பட்ட அணுகுமுறைக்கு அல்லது மாற்றுவழி தரப்படுத்தப்பட்ட அணுகுமுறைக்கு நகருமாறு உரிமம்பெற்ற வங்கிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு ஊக்குவிக்கப்பட்டன.
2022 யூன் 08	-	அண்மைய இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளை நோக்காகக்கொண்டு, அதன் 07ஆம் கட்டளை தவிர உரிமம்பெற்ற வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கிகளினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளையை இரத்துச்செய்து நாணயவிதிச் சட்டக் கட்டளையொன்று வழங்கப்பட்டது.
2022 யூன் 22	-	இலங்கையில் நிலைபெறத்தக்க பொருளாதார நடவடிக்கைகளுக்காக நிதியளிப்பதை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியின் நிலைபேறான நிதி வழிகாட்டல்களுக்கிணங்க உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபேறான நிதி நடவடிக்கைகளுக்காக ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபேறான நிதி நடவடிக்கைகள் மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.
2022 யூலை 04	-	விசேட தேவையுடைய வாடிக்கையாளர்களுக்கான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு வழிமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் அத்தகைய வாடிக்கையாளர்களுக்காக வங்கித்தொழில் பணிகள் கிடைக்கும்தன்மையினை மேம்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை விரிவுபடுத்தி உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம் மீது 2011ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கான பின்னிணைப்பு வெளியிடப்பட்டது.
2022 யூலை 07	-	தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகள் அத்துடன்/அல்லது கொவிட்-19 உலகளாவிய நோயத்தொற்று காரணமாக வருமானம் அல்லது வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக பொருத்தமான சலுகைகளை வழங்குகின்ற அதேவேளை வங்கித்தொழில் துறை உறுதிப்பாட்டின் மீது ஏதேனும் தேவையற்ற அழுத்தத்தினைத் தடுக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கோரி சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. தனிப்பட்டவர்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவு மற்றும் வியாபாரங்களின்/கருத்திட்டங்களின் நிலைபேறான தன்மை என்பவற்றின் அடிப்படையில் விடயத்திற்கு விடயம் என்ற ரீதியில் இச்சலுகைகள் வழங்கப்படுகின்றன.
2022 ஒகத்து 26	-	உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களிற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக இந்திய ரூபாவை அடையாளப்படுத்தி வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை வெளியிடப்பட்டது.
2022 ஒகத்து 29	-	உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை பதிவுசெய்வதைக் கட்டாயமாக்குகின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. அதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் 2022 ஒத்தோபர் 01 முதல் அனைத்து புதிய வைப்பாளர்களுக்கும் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதுடன், 2023 திசெம்பர் 31இற்குள் தங்கள் முறைமைகளில் தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்ய வேண்டும்.

2022 நவெம்பர் 03	-	இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய கிடைக்கப்பெறும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு இசைவாக +700 அடிப்படை புள்ளிகளின் ஒரு எல்லையுடன் முற்பணம் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதத்தை (வங்கி வீதம்) சீராக்கும் வகையில் 2022 நவெம்பர் 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2022 நவெம்பர் 18	-	நிலவும் அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, திரவத்தன்மை விகிதங்கள் மீதான சில ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. இதற்கமைவாக, சீராக்கப்பட்ட மொத்தப் பொறுப்புக்களின் 20 சதவீதத்திற்கும் குறையாத ஒரு தொகையை மறுஅறிவித்தல் வரும்வரை ஒட்டுமொத்த வங்கிக்காக ஒன்றுதிரட்டப்பட்ட அடிப்படையொன்றில் திரவச் சொத்துக்களாகப் பேணுகின்ற அதேவேளை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்காகவும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிற்காகவும் தனியான நியதி திரவச் சொத்து விகிதத்தின் அறிக்கையிடலைத் தொடருமாறும் பணிக்கப்பட்டது. மேலும், மேம்பட்ட மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான அறிக்கையிடலுடன் 2022 திசெம்பர் 31 வரை திரவத்தன்மை பாதுகாப்பு விகிதத்தையும் நிகர உறுதித்தன்மை வாய்ந்த நிதியியல் விகிதத்தையும் 90 சதவீதத்திற்கும் குறையாத ஒரு மட்டத்தில் பேணுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.
2022 திசெம்பர் 05	-	2022ஆம் ஆண்டிறுதியில், ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி வங்கிகளின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகளின் 2023 கலண்டர் ஆண்டிற்கான செலுத்தப்பட வேண்டிய வருடாந்த உரிமக் கட்டணத்தை வங்கிகளுக்கு அறிவிக்கும் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது.
2023 சனவரி 02	-	இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய கிடைக்கப்பெறும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்திற்கு இசைவாக +300 அடிப்படை புள்ளிகளின் ஒரு எல்லையுடன் முற்பணம் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதத்தை (வங்கி வீதம்) சீராக்கும் வகையில் 2023 சனவரி 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
	-	குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றுக்கு துணைநில் வைப்பு வசதியின் கிடைக்கப்பெறும் தன்மையை கலண்டர் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் ஐந்து (05) தடவைகளுக்கும் குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றுக்கு துணைநில் கடன்வழங்கல் வசதியின் கிடைக்கப்பெறுவதனை ஏதேனும் தரப்பட்ட நாளில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் நியதி ஒதுக்கு தேவைப்பாட்டின் 90 சதவீதத்திற்கும் மட்டுப்படுத்துவதற்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2023 சனவரி 31	-	பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் மீதான வங்கித்தொழில் பணிப்புரைகளில் வரையறுக்கப்பட்டதற்கமைவாக, நிதியல்லா கூட்டாண்மைப் படுகடன் பிணையங்களை தகுதிப்படுத்தலையும் நிதியல்லா பொது மூலதனப் பங்குரிமை பங்குகளை தகுதிப்படுத்தலையும் தீர்மானிக்கும் வகையில் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் விடுக்கப்பட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் நியதி திரவச் சொத்து விகிதத்தின் கணிப்பீட்டில் திரவச் சொத்துக்களாகக் கருதப்பட வேண்டும்.
2023 பெப்புருவரி 02	-	நிலவும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தும் வகையில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. இதற்கமைய, 2023ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/இடைக்கால நிதியியல் கூற்றுக்களின் வெளியக கணக்காய்வை நிறைவுசெய்யும் வரை, 2023ஆம் ஆண்டிற்கான காசுப் பங்கிலாபங்களினதும் இலாப மீளனுப்பல்களினதும் கொடுப்பனவுகளை பிற்போடுமாறு உரிமம்பெற்ற

வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், அப்பங்கிலாபங்களினதும்/இலாப மீளனுப்பல்களினதும் கொடுப்பனவிற்கு முன்னர், 2022ஆம் ஆண்டிற்கான காசுப் பங்கிலாபங்களினதும் இலாப மீளனுப்பல்பளினதும் கொடுப்பனவுகளை தீர்மானிப்பதில் மேற்கொள்ளப்பட்ட சபை ஒப்புதலளித்த விரிவான மதிப்பீட்டை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன. 2023 திசெம்பர் 31 வரை மூலதனச் செலவினங்களை செய்யும் போது உரிய கவனத்தையும் அவதானத்தையும் கடைபிடிக்கும் அதேவேளை பங்குகளை மீண்டும் வாங்குதலில் ஈடுபடுதல், பணிப்பாளர் சபைக்கான முகாமைத்துவ படிகள் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்தல், அத்தியாவசியமற்ற அத்துடன்/அல்லது அவசரமற்ற செலவினங்களை செய்வது என்பவற்றிலிருத்து விலகியிருக்குமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன. மேலும், வங்கியால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியமற்ற, அவசரமற்ற அத்துடன்/அல்லது மூலதன செலவினத்தை மதிப்பீடு செய்து ஒப்புதலளிப்பதற்கான பொறுப்பை ஒப்படைக்கும் வகையில், 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் செயற்படுத்துவதற்கு சபை மட்டத்திலான துணைக்குழுவை உருவாக்குமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2023 பெப்புருவரி 16 - 2022 மே 19 திகதியிடப்பட்ட கட்டளையினால் உள்ளடக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள இணங்குவிப்பு குறியீடுகளுக்கு மேலதிகமாக, புதிதாக சேர்க்கப்பட்ட 64 இணங்குவிப்பு குறியீடுகளுக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

2023 பெப்புருவரி 17 - இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2022ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தமொன்று 64 புதிய இணங்குவிப்புக் குறியீடுகளுக்கான குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் ஏற்புடைத்தன்மையை நீடிக்கும் வகையில் வழங்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - கடன்வசதியின் உயர்ந்தபட்ச தொகை மீதான திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்

- 2023ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இயற்றப்படும் வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் வரைவு சட்டத்திற்கான அமைச்சரவை ஒப்புதல் கிடைக்கப்பெற்று தற்போது சட்டம், சட்ட வரைஞரினால் வரைவுசெய்யப்பட்டு வருகின்றது.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

2022 சனவரி 05 - பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலனாய்வுகளைத் தொடருவதற்காக 2022 சனவரி 05ஆம் திகதி நடைமுறைக்குவரும் விதத்தில் பெர்பெட்சுவல் ரெஷரீஸ் லிமிடெட் (பிரிஎல்) அதன் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதிலிருந்து முதனிலை வணிகர் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்துமான இடைநிறுத்தத்தினை மேலும் ஆறுமாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

2022 சனவரி 28 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை கட்டமைக்கும் குறிக்கோளுடன் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் மீதான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2022 பெப்புருவரி 08 - வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு ஒரு ஊக்குவிப்புத் தொகையை வழங்கும் நோக்குடன் உள்முக தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் மூலம் ஏற்படும் கொடுக்கல்வாங்கல் செலவை திருப்பிச் செலுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

2022 மார்ச்சு 10	-	கம்பனி ஆளுகை மீதான 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையின் 10 மற்றும் 12 ஆகிய பிரிவுகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக 2024 யூலை 01 வரை இடைக்காலப்பகுதியை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.
2022 மார்ச்சு 18	-	வங்கித்தொழிலை வசதியான முறையில் இயலுமைப்படுத்தி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் வினைத்திறனை விருத்திசெய்வதன் மூலமாக நிதியை எளிதாக அணுகுவதற்கான தீர்வொன்றை வழங்கும் பொருட்டு செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல் பணச் சேவைகள் தொடர்பில் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.
2022 மார்ச்சு 21	-	வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக கொமர்ஷல் லீசிங் மற்றும் பினான்ஸ் பிஎல்சியுடன் சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு சிங்கப்புத்ர பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச் செய்துள்ளது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
2022 மார்ச்சு 31	-	முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் கொமர்ஷல் லீசிங் மற்றும் பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு கொமர்ஷல் லீசிங் மற்றும் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச்செய்துள்ளது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் கொமர்ஷல் லீசிங் மற்றும் பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
	-	கொள்கை வீதங்களின் அதிகரிப்பு காரணமாக வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீது நிலவும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் திருத்தப்பட்டுள்ளன.
	-	தற்போதைய பொருளாதார நிலைமைகள் காரணமாக கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் பணிப்புரையினதும் 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தினதும் 4.3.1.(i)ஆம் பிரிவினை நடைமுறைப்படுத்துவதனை இரு ஆண்டு காலப்பகுதிக்குப் பிற்போடுவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.
2022 ஏப்பிறல் 18	-	கடந்த நான்கு திறைசேறி உண்டியல் முதன்மை ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களின் அசையும் சராசரியை அடிப்படையாகக் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதற்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதற்கும் அனுமதிக்கும் விதத்தில் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் நிலவும் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் திருத்தப்பட்டுள்ளன.
2022 மே 12	-	வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எச்என்பி பினான்ஸ் பிஎல்சியுடன் பிரைம் பினான்ஸ் பிஎல்சியை ஒன்றிணைப்பதைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலை முன்னெடுக்கும் பொருட்டு பிரைம் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கிய உரிமத்தை இரத்துச்செய்துள்ளது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல்

		சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிரைம் பினான்ஸ் பிஎல்சியின் பதிவானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
2022 யூன் 03	-	ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுதல் மற்றும்/ அல்லது முதன்மைதிட்டத்தை கடைப்பிடித்தல் என்பவற்றின் அடிப்படையில் பிம்புத் பினான்ஸ் பிஎல்சி கம்பனி தொழிற்பாடாமையின் காரணமாக, 2022 யூன் 03 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதன் வைப்புத் தளத்தை மீளச்செலுத்துமாறு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பிம்புத் பினான்ஸ் பிஎல்சி கம்பனியை பணித்தது.
2022 யூன் 08	-	சந்தை வட்டி வீதங்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு நுண்பாக நிதிக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதத்தை நீக்குவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டது.
2022 யூலை 05	-	பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புலனாய்வுகளைத் தொடருவதற்காக 2022 யூலை 05ஆம் திகதி நடைமுறைக்குவரும் விதத்தில் பெர்பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் (பிரிஎல்) அதன் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதிலிருந்து முதனிலை வணிகர் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்துமான இடைநிறுத்தத்தினை மேலும் ஆறுமாத காலப்பகுதிக்கு நீடித்துள்ளது.
2022 யூலை 20	-	தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக வருமானம் அல்லது வியாபாரங்கள் மோசமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு, சலுகைகளை வழங்குவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கோரும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.
2022 ஓகத்து 29	-	2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 5(7)ஆம் பிரிவின் நியதிகளில் அசட்லைன் பினான்ஸ் லிமிடெட்டிற்கு (2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்றான அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் என முன்னர் அறியப்பட்ட) நிதித்தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது.
2022 செத்தெம்பர் 02	-	உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களின் பதிவைக் கட்டாயமாக்கும் விதத்தில் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. இதற்கமைவாக, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் 2022 ஒத்தோபர் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அனைத்து புதிய வைப்பாளர்களுக்கான தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதற்கும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களின் பதிவை அவர்களின் முறைமையில் 2023 திசெம்பர் 31இற்குள் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.
2022 நவெம்பர் 29	-	நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தையும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான வழிகாட்டல்களுக்கிணையாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி முன்முயற்சிகளை வசதிப்படுத்தும் நோக்குடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்காக ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை வழங்குவதற்கான தேவையினையும் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

2022 திசெம்பர் 01	-	2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 5(7)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய நிதித்தொழிலில் ஈடுபடுவதற்கு எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சி (முன்னர் எஸ்எம்பீ லிசிங் பிஎல்சி என அறியப்பட்ட 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்ட) உரிமம் வழங்கப்பட்டது.
2022 திசெம்பர் 28	-	2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37(3)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
2022 திசெம்பர் 30	-	கன்றிச் பினான்ஸ் லிமிடெட் எதிர்கொண்ட தொடர்ச்சியான மூலதனப் பற்றாக்குறைகள் காரணமாக 2022 திசெம்பர் 26 தொடக்கம் 2023 பெப்புருவரி 28 வரையான காலப்பகுதியினுள் அதன் பொதுப் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு கன்றிச் பினான்ஸ் லிமிடெட்டினைப் வழிநடத்துவதற்கு 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 25(1)(க) பிரிவின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.
2023 சனவரி 05	-	பதிசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் அத்துடன் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் பொருட்டு 2023 சனவரி 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக முதனிலை வணிகர் ஒருவரின் தொழில் மற்றும் நடவடிக்கைகளை கொண்டுநடாத்துவதிலிருந்து பெர்பசுவல் டெஸரீஸ் (பிரிஎல்) லிமிடெட்டின் இடைநிறுத்தலை நீடிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.
2023 சனவரி 18	-	2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் 9(1)(ஏ) நியதிகளுக்கமைய பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவு இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
2023 சனவரி 31	-	முதன்மைத் திட்டத்தின் பாகமொன்றாக எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சியுடன் எல்ஓஎல்சி டிவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி ஒன்றிணைந்ததைத் தொடர்ந்து, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதி வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு எல்ஓஎல்சி டிவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இரத்துச்செய்துள்ளது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்ஓஎல்சி டிவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பதிவு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.
	-	நிச்சயமற்ற நேரத்தில் எழக்கூடிய பொருளாதார அதிர்வுகளை உள்வாங்குவதற்கும் வாடிக்கையாளர்களின் கடன் தேவைப்பாடுகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கும் போதுமான மூலதனத்தைப் பேணுவதன் மூலம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மீளெழுச்சியையும் இயலாற்றலையும் வலுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு பங்கிலாபங்கள் அல்லது இலாப மீளனுப்பல்களின் பிரகடனம் மீதான வழிகாட்டல் வழங்கப்பட்டது.
2023 பெப்புருவரி 02	-	ஐசிஆர்ஏ லங்கா லிமிடெட் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவராண்மையொன்றாக நீக்கப்பட்டுள்ளதாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.
2023 பெப்புருவரி 08	-	ஸ்டேன்டட் கிறடிட் பினான்ஸ் லிமிடெட்டின் தீர்த்துக்கட்டுநராக, திரு. ஜெராட் ஜீவானந்தன் டேவிட்டை நியமிப்பதற்கு கொழும்பு கொமர்ஷல் உயர் நீதிமன்றத்தினால் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளது.

2023 மார்ச்சு 03	-	நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு பொருத்தமான சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டன.
இனிவரவிருப்பவை	-	நடுத்தர காலத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிதிக் கம்பனிகளின் நீண்டகாலம் நிலைபெறும் தன்மையினை உறுதிசெய்யும் முதன்மைத் திட்டத்தின் கட்டம்[2] II இனை நடைமுறைப்படுத்தல்.
	-	2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக நடப்புச் சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல்.
	-	வங்கியல்லாத் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருதல்.
	-	உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கடன் வழங்குநர்களையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையின் கீழ் கொண்டுவந்து ஒட்டுமொத்த வங்கியல்லாத் துறை வாடிக்கையாளர்களினதும் சந்தை நடத்தையினையும் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பினையும் மேம்படுத்துவதற்கு நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்தினை இயற்றுதல்.
காப்புறுதி		
2022 சனவரி 26	-	அனைத்து காப்பீட்டு நிறுவனங்களுக்கும் 'வருடாந்த வருவாயினதும் கணக்கீட்டு சுருக்கத்தினதும் ஒழுங்குமுறைப்படுத்தலின் அறிக்கையிடல் படிவங்கள் மின்னஞ்சலின் மூலமாக சமர்ப்பிப்பதை வசதிப்படுத்தும் நோக்கத்திற்காக திருத்தப்பட்டன' மீதான 14 மற்றும் 15 ஆகிய நிர்ணயங்களுக்கான திருத்தங்கள் வெளியிடப்பட்டன.
	-	குறியீடுகளை வழங்குவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் குறியீடுகளை மாற்றுவது மீதான கட்டுப்படுத்தல் தொடர்பில் கைத்தொழிலுக்கு 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.
	-	ஒத்த காப்புறுதி காப்பிற்காக அதே பூட்கை உடமையாளருக்கு வேறுபட்ட கூறுவிலைகளை (கட்டுப்பணத்தை குறைத்தல்) வழங்குவதை தடைசெய்தல் தொடர்பில் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.
2022 பெப்புருவரி 03	-	காப்புறுதியாளர்களுக்கான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பில் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.
2022 பெப்புருவரி 25	-	காப்புறுதியாளர்களுக்கான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பில் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரையை திருத்துவதை அறிவிக்கும் விதத்தில் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை (திருத்தப்பட்டது) விடுக்கப்பட்டது.
2022 யூலை 01	-	அனைத்து காப்புறுதியாளர்கள், தரகுக் கம்பனிகள் மற்றும் முகவர்கள் ஆகியோருக்கான விளம்பரங்கள் தொடர்பில் வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டு 2022 யூலை 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அதனுடன் அவை இணங்குமாறு வேண்டப்பட்டன.

2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின் கட்டம் I முழுமையான நிறைவை எட்டுகின்றது.

2022 ஓகத்து 24	-	பொறுதிக் காலப்பகுதி, உத்தரவாதமளிக்கப்பட்டதும் உத்தரவாதமளிக்கப்படாததுமான நன்மைகள் அத்துடன் நீண்டகால காப்புறுதி கொள்கைக்கான ஏற்புடைய திட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய கைத்தொழிலுக்கு 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது
2022 ஒத்தோபர் 06	-	காப்புறுதி கம்பனிகளின் காலாண்டு ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் முன்வடிவங்களை திருத்துவதற்கு தீர்மானம் 12இற்கான திருத்தங்கள் விடுக்கப்பட்டன.
	-	இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீட்டுச் சான்றிதழ், 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 46ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக நியமிக்கப்பட்ட காப்பீட்டு கணிப்பாளரினால் வழங்கப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதற்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.
2022 நவெம்பர் 10	-	தனியான மருத்துவக் காப்பீடுகள் ஐந்து ஆண்டுகளின் அல்லது அதிகமான காலப்பகுதியின் இறுதியில் புதுப்பிக்கப்படுகின்றதாயின், காப்பீட்டின் பின்னரான காலப்பகுதி ஐந்து ஆண்டுகள் அல்லது அதிகமான காலப்பகுதிக்கானதாக இருக்க வேண்டும் என்பதாயின், அத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில், ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டுப்பணம் அதிகரிக்கப்பட மாட்டாது அல்லது நன்மைகள் குறைக்கப்பட மாட்டாது என்பதையும் தெளிவுபடுத்துவதற்கு சுற்றறிக்கை 40இற்கான தெளிவுபடுத்தல் விடுக்கப்பட்டது.
இனிவரவிருப்பவை	-	காப்புறுதி தரகர்களின் காலாண்டு வருவாய் படிவம் தொடர்பான விதிமுறைகளுக்கான திருத்தம்.
	-	காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அனுமதிக்குட்பட்டு பொது காப்புறுதி கொள்கைகளுக்கான கொள்கை கட்டமைப்பு தொடர்பான வழிகாட்டல்கள் விடுக்கப்படும்.

மூலதனச் சந்தை

2022 பெப்புருவரி	-	பங்கிலாப கொடுப்பனவு செயன்முறையை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தவதற்கான வழிமுறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
2022 ஏப்பிறல்	-	பிணையங்கள் கடன்படுதல் மற்றும் கடன்வழங்கலூடாக ஒழுங்முறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பற்ற விற்பனை செய்வது தொடர்பான இறுதி கொள்கை கட்டமைப்பிற்கான அனுமதி வழங்கப்பட்டது.
	-	கம்பனிப் படுகடனை மீள்கொள்வனவு செய்வதற்கு ஏற்புடைய கொடுக்கல்வாங்கல் செலவிற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டது.
2022 யூன்	-	கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் நீல முறிகளை அறிமுகப்படுத்துவதற்கான கொள்கையளவிலான அனுமதி வழங்கப்பட்டது.
	-	சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான விழிப்பூட்டலை ஊக்குவிக்கும் வகையில் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் நிறுவகம் அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது.
	-	மத்திய இணைத்தரப்பினர் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
	-	இலங்கை மூலதனச் சந்தையின் டிஜிட்டல் மயமாக்கலின் மூன்றாம் கட்டத்தை நிறைவுசெய்தது.
2022 ஓகத்து	-	ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலை ஊக்குவிப்பதற்காக பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை என்வற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாதிடப்பட்டது.

2022 செத்தெம்பர் - சுகுக் உற்பத்திகளை வழங்குவதற்காக முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2023 சனவரி - கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய திருத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள் தொடர்பில் நிதி அமைச்சினால் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

- ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புகளுக்கமைய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் பச்சை முறிகளை இயலச்செய்கின்ற விதிகள் நிறைவுசெய்யப்பட்டன.

2023 மாச்சு - கம்பனி படுகடன் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைய திருத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2022 சனவரி 25 - தகைமையுடைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்த பின்னர், தேசிய சேமிப்பு வங்கிக்கு லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் அந்தஸ்து வழங்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியானது லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் அந்தஸ்தைப் பெற்ற முதலாவது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி ஆகும்.

2022 பெப்புருவரி 08 - 2022 பெப்புருவரியில் 'லங்கா ரெமிட்' என்ற தேசிய பணமனுப்பும் செல்லிட செயலியை இலங்கை மத்திய வங்கி தொடங்கி வைத்தது. வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு பணம் அனுப்புவதற்கும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தி பயன்பாட்டுக் கட்டணங்களை செலுத்துவதற்கும் இது பயன்படுகின்றது. மேலும், 'லங்கா ரெமிட்' செயலி பணவனுப்பல் பரிசோதனை வசதியைக் கொண்டுள்ளதுடன் பயனாளர் உள்நாட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் இணைந்து உலகளாவிய பண மாற்றல் தொழிற்பாடுகளை அணுகலாம்.

2022 பெப்புருவரி 28 - இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS), பொதுவான தன்னியக்க கூற்று பொறி ஆளி (CAS), பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி (CEFTS), அத்துடன் பொதுவான விற்பனை மைய ஆளி (POS) போன்றன மீதான பொது பணிப்புரைகள் திருத்தப்பட்டு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளராக மாறிய பின்னர் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்கக் கூற்று பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, அத்துடன் பொதுவான விற்பனை மைய ஆளி போன்றவற்றின் முதன்மை உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதற்கு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை உள்ளடக்குவதற்கு 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

2022 மாச்சு 28 - தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் பற்று அட்டையை வழங்குவது தொடர்பான முன்னோடிச் செயற்றிட்டத்தை மக்கள் வங்கி தொடங்கியுள்ளது. இங்கு பற்று அட்டை அதன் சேமிக்கப்பட்ட பெறுமதி தொழிற்பாட்டின் உதவியுடன் இடமாற்று அட்டையாகவும் தொழிற்படலாம்.

2022 யூன் 20 - லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் அந்தஸ்தையும் பொதுவான தன்னியக்க கூற்று பொறி ஆளியினதும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்று ஆளியினதும் முதன்மை உறுப்புரிமையையும் பெற்றுள்ள தேசிய சேமிப்பு வங்கியை உள்ளடக்கும் பொருட்டு பொதுவான தன்னியக்கக் கூற்று பொறி ஆளிக்கும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்று ஆளிக்குமான பல அடுக்குப் பொறுப்பு முகாமையாளர் வரையறைக் கட்டமைப்பு 2022 சனவரியில் திருத்தம் செய்யப்பட்டது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2022 சனவரி 10	-	பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் தொடர்பாக நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் மீதான 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கையை திருத்தம் செய்யும் விதத்தில் 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.
2022 மாச்சு 22	-	சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகள் தொடர்பில் கோரப்பட்ட மேலதிக தகவல்கள் மீதான 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.
2022 ஓகத்து 25	-	வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வினைத்திறன்மிக்க வங்கித்தொழில் பணிகளை வழங்குவது தொடர்பில் 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.
2022 நவெம்பர் 21	-	குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினூடாக வாடிக்கையாளர் அடையாள விபரங்களை உறுதிப்படுத்தல் மீது 2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.
2023 மாச்சு 03	-	'இணங்குவிப்பு இடைவெளி தொடர்பில் உரிய விழிப்புக்கவனத்திற்கான அழைப்பு' மீது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

2022 சனவரி 19	-	முறையான நிதிய மாற்றல் வழிகளின் மூலம் நாட்டிற்கு அதிகளவிலான தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் மூலம் ஏற்படும் கொடுக்கல்வாங்கல் செலவை திருப்பிச் செலுத்துவது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
2022 சனவரி 21	-	இலங்கைக்கு வெளியே வதிகின்ற நபர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் வழங்கப்படும் பணிகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட மற்றும் அச்சபையினால் உரிமம்பெறப்பட்ட விடுதி பணி வழங்குநர்களை கட்டாயப்படுத்தி, நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2263/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதற்கமைவாக '2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விடுதி பணி வழங்குநர்கள் விதிகளினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியை ஏற்றுக்கொள்ளுதல்' வழங்கப்பட்டது.
2022 சனவரி 31	-	முறையான வழிகளின் மூலம் நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேம்படுத்தும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தாள்கள் முறையான வங்கித்தொழில் முறைமையூடாக அனுப்பப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டும் 'உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்' மற்றும் 'கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச்செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடுசெய்தல்' என்பவற்றுக்கான பொதுமக்களுக்கான ஊக்குவிப்புகள் ஆகிய திட்டங்களின் செயற்பாட்டுக் காலப்பகுதிகளை மறுஅறுவித்தல் வரும்வரை நீடித்தல்.
2022 பெப்புருவரி 24	-	கல்விசார் நிறுவனங்களின் மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள உடனடி குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய வகுப்புக் கட்டணங்களைச் செலுத்தும் நோக்கத்திற்காக கொடுப்பனவை வசதிப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையரின் (புலம்பெயர்ந்தவரை தவிர) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து உள்நாட்டு கல்விசார் நிறுவனத்தின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நிதியைப் பற்று வைப்பதற்கு அனுமதித்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

	-	கல்விசார் நிறுவனங்களின் மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள உடனடி குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புக் கட்டணங்களை செலுத்தும் நோக்கத்திற்காக கொடுப்பனவை வசதிப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையரின் (புலம்பெயர்ந்தவரை தவிர) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து உள்நாட்டு கல்விசார் நிறுவனத்தின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நிதியை வரவு வைப்பதற்கு அனுமதித்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகளர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 மார்சு 08	-	'உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்' மற்றும் 'கைவசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்புச்செய்தல், மாற்றுதல் அத்துடன் முதலீடு செய்தல்' திட்டங்கள் என்பவற்றுக்கான பொதுமக்களுக்கான ஊக்குவிப்புகள் மீது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கமைவாக, தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றுதல் மீது ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூ.8.00 மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்களை மாற்றுதல் மீது ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூ.10.00 கொண்ட மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மேலதிக ஊக்குவிப்புக்களை 2022 மார்சு 09 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் முடிவுறுத்தல்.
2022 மார்சு 11	-	ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் ஏனையவற்றுக்கு மத்தியில் பின்வரும் கட்டாய நிபந்தனைகளை விதிக்கும் வகையில், 2270/66ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டதற்கமைவாக, நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் விடுக்கப்பட்டன: • கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து அல்லது பணிகளை வழங்கிய திகதிகளிலிருந்து நூற்றி எண்பது (180) நாட்களுக்குள் இலங்கைக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் அத்துடன்/அல்லது வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு; • ஏற்றுமதி பெறுகைகளின் ஒவ்வொரு மற்றும் அனைத்து கிடைப்பனவிற்கும் தொடர்புடைய அனைத்து ஆவணச்சான்றுகளையும் இலங்கையில் அத்தகைய பெறுகைகளைப் பெற்றுக்கொள்கின்ற உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சமர்ப்பிப்பதற்கு; அத்துடன் • அதனுடன் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு வழங்குநர் கொடுப்பனவுகள் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (7ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கு.
	-	2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக "தாய் பாட்" ஐக் குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 மார்சு 22	-	நாட்டின் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேலும் மேம்படுத்தும் பொருட்டு 2022 மார்சு 21 இலிருந்து தொடங்குகின்ற வாரத்திலிருந்து 2022 யூலை 29 அன்று முடிவடைகின்ற வாரம் வரை மாற்றல் செய்யப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களினதும் கட்டாயமாக மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கான வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளின் சதவீதத்தை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு தற்காலிகமாக அதிகரித்தல்.

2022 மார்சு 28	-	உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலுள்ள சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கும் உள்முக முதலீட்டு கணக்குகளிலிருந்து அல்லது கணக்குடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்து பரிமாற்றுவதற்கும் வழங்கப்பட்ட 24 ஆரம்ப மாத காலப்பகுதியை மேலும் பன்னிரண்டு மாதங்களால் நீடிப்பதற்கு 2273/06 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டதற்கமைவாக வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழுள்ள ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இதற்கமைவாக, இலங்கைக்கு கிடைக்கப்பெறுகின்ற உள்முகப் பணவனுப்பல்களின் மூலமாக அல்லது உள்முக முதலீட்டு கணக்குகளிலிருந்து அல்லது கணக்குடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்து நிதியைப் பரிமாற்றுவதன் மூலம் தகைமையுடைய ஆட்கள் 2023 ஏப்பிறல் 08 வரை சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்கலாம்.
2022 ஏப்பிறல் 07	-	கணக்குடமையாளருக்கு ஆதரவாக உள்முகப் பணவனுப்பல்களாகக் கிடைக்கப்பெறுகின்ற பெறுகைகளில், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கும் உள்முக முதலீட்டு கணக்குகளிலிருந்து அல்லது கணக்குடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்து பரிமாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட இருபத்தி நான்கு ஆரம்ப மாத காலப்பகுதிக்கெதிராக பன்னிரண்டு மாதங்களினால் நீடிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 ஏப்பிறல் 11	-	நிலவுகின்ற உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமையையும் வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி கடமைப்பொறுப்புக்களையும் கருத்திற்கொண்டு, மாற்றல் செய்யப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் கட்டாயமாக மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கு வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளின் தற்காலிகமாக அதிகரிக்கப்பட்ட சதவீதத்தை 2022 ஏப்பிறல் 11 இருந்து மறுஅறிவித்தல் வரை 50 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைத்தல்.
2022 யூன் 01	-	2021ஆம் ஆண்டின் மார்சு 26ஆம் திகதியிடப்பட்ட 2220/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட "4ஆம் பிரிவின் கீழுள்ள கட்டளையைப்" நீக்கும் விதத்தில் 2282/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழுள்ள கட்டளையொன்று விடுக்கப்பட்டது.
2022 யூன் 03	-	2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் மற்றும் பகுதியிலிருந்து தொழில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுகின்ற இலங்கையில் வதியும் பின்வரும் நபர்கள் உள்ளடங்கலாக செலாவணி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணுவதற்கான தகுதியை மேலும் விரிவுப்படுத்தும் வகையில், 2282/60ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டதற்கமைவாக வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதியொன்று விடுக்கப்பட்டது. • அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியர், • பொருட்கள் அல்லது பணிகளை வழங்கும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருடன் தொழில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள்.
	-	கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்குட்பட்டு, கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடுகளுக்கு நிதியளிப்பதற்கான நிதியாக வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் உள்நோக்கிய பணவனுப்பல்களிலிருந்து

கொழும்பு துறைமுகத்திற்கு முதலீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, இலங்கைக்கு வெளியே வதியும் எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு முழு உரித்துடைய இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட எந்தவொரு கம்பனிக்கு அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட/கூட்டிணைக்கப்பட்ட கூட்டு முயற்சிகளுக்கு (அதாவது முதலீட்டாளர்) அனுமதி வழங்கும் வகையில் 2282/59ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டு 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

2022 யூன் 08 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நிதியிடல் நிலைமையை உயர்த்துவதற்கும் வங்கிகளின் நிதியியல் துறையை முன்னேற்றுவதற்குமான எதிர்பார்ப்பொன்றுடன் பரஸ்பரப் பரிமாற்றல் விலைகளை நிர்ணயிப்பதற்கு சந்தைச் சக்திகளை அனுமதிப்பதன் மூலம் ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா பரஸ்பரப் பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடையதாகவிருந்த ஐ.அ.டொலர் வட்டி வீதத்தின் உச்சவரம்பை நீக்குதல்.

2022 யூன் 15 - மேலதிகமாக பின்வரும் நிபந்தனைகள் உள்ளடங்கலாக, 2020ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றுதல் தொடர்பில் வரையறுக்கப்பட்ட வணிகர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டு நாணயங்களில் வைப்புச் செய்வதற்காக கணக்கு வைத்திருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் மூலம் பணப் பரிமாற்றுநர்களுக்கு வழங்கப்பட்ட செலாவணி வீதங்களை விடவும் வாடிக்கையாளர்களுக்கு பணப் பரிமாற்றுநர்களின் மூலம் உயர்ந்தளவான செலாவணி வீதங்கள் வழங்கப்படுவதை நிறுத்துதல்,

- வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் கோரிக்கையின் பேரில் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு சிசிரிவி பதிவுகளைப் பேணி அப்பதிவுகளை வழங்குவதற்கு, சிசிரிவி முறைமையின் தொடர்ச்சியானதும் தங்குதடையற்றதுமான தொழிற்பாடுகளை உறுதிசெய்வதற்கான தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கு பணப் பரிமாற்றுநர்களை கட்டாயப்படுத்துதல்.

2022 யூன் 16 - இலங்கைக்கு வெளியே வதிகின்ற நபர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் வழங்கப்படும் பணிகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு விடுதி பணி வழங்குநர்களை கட்டாயப்படுத்தி நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 2263/41ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டதற்கமைவாக '2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விடுதி பணி வழங்குநர்கள் விதிகளினால் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணியை ஏற்றுக்கொள்ளுதலானது' 2284/40ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதியினால் நீக்கப்பட்டது.

- பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 2284/34ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கட்டளைக்கான திருத்தமொன்று விடுக்கப்பட்டது:

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் வசம் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத்தின் அளவை ஐ.அ.டொலர் 15,000 இருந்து ஐ.அ.டொலர் 10,000 ஆக அல்லது பிற வெளிநாட்டு நாணயங்களில் அதற்கு சமமானதாகக் குறைத்தல்.

- வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு தனியாள் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட

வணிகரொருவருக்கு உரிய முறையில் விற்பனை செய்வதற்கு, கட்டளை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் 14 வேலை நாட்களுக்கான பொது மன்னிப்புக் காலத்தை வழங்குதல்.

2022 யூன் 28 - கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு, தகைமையுடைய ஆட்களுக்காக கொழும்பு துறைமுக நகர முதலீட்டு கணக்கை - முதலீட்டாளர் அதன் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்காக கொழும்பு துறைமுக நகர முதலீட்டாளர் கணக்கை - முதலீட்டினைப் பெறுபவர் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2022 யூன் 30 - கட்டளைத் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற ஆறு மாதங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துவதற்கு/மட்டுப்படுத்துவதற்கு 2286/27ஆம் இலக்க 2022 யூன் 30ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைக்கமைவாக தனியாள் வெளிநாட்டு நாணய கணக்குகளை திறந்து பேணுவதற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் மற்றும் பகுதியிலிருந்து தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து கணக்குடமையாளரினால் வெளிநாட்டுச் செலாவணியில் கிடைக்கப்பெற்ற வருவாய்களின்/கொடுப்பனவுகளின் வரவுகளை அனுமதிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைக்கமைவாக வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகளை திறந்து பேணுவதற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் மற்றும் பகுதியிலிருந்து தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து கணக்குடமையாளரினால் வெளிநாட்டுச் செலாவணியில் கிடைக்கப்பெற்ற வருவாய்களின்/கொடுப்பனவுகளின் வரவுகளை அனுமதிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2022 யூலை 05 - வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு தனியாள் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு உரிய முறையில் விற்பனை செய்வதற்கு 14 வேலை நாட்களினால் பொது மன்னிப்புக் காலத்தை நீடிக்கும் வகையில், 2284/34ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றின் முடிவுறுத்தலுடன், 2287/16ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளையொன்று வெளியிடப்பட்டது.

2022 ஓகத்து 12 - 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை திருப்பியனுப்புதல் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட மாற்றல் தேவைப்பாடுகளிலிருந்து பணிகளின் ஏற்றுமதியாளர்கள் நீங்கலாக,

2292/50ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளியிடப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க 'ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள்' விடுக்கப்பட்டன.

2022 ஓகத்து 15 - வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு தனியாள் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு உரிய முறையில் விற்பனை செய்வதற்கு ஒரு மாதத்தினால் பொது மன்னிப்புக் காலத்தை நீடிக்கும் வகையில், 2284/34ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றின் முடிவுறுத்தலுடன், 2293/07ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தல்களில் வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ்புதிய கட்டளையொன்று வெளியிடப்பட்டது.

2022 ஓகத்து 25 - 2292/50ஆம் இலக்க 2022 ஓகத்து 12ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமான அறிவித்தலைப் பின்பற்றி மாற்றல்செய்பட்ட பணி ஏற்றுமதிப் பெறுகைகள் மீது இலங்கை மத்திய வங்கிக்கான கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைத் தேவைப்பாட்டினை செயற்படுத்துவதற்கு 2022 ஓகத்து 12ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை ரூபாவாக மாற்றல்செய்யப்பட்ட பணி ஏற்றுமதிக் கிடைப்பனவுகளின்/பெறுகைகளின் 25 சதவீதத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

2022 ஓகத்து 26 - வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக 'இந்திய ரூபாய்களை' நிர்ணயிக்கும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2022 ஓகத்து 31 - நாட்டின் வங்கித்தொழில் முறைமையினூடாக இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை அனுப்புகின்ற வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுதாக மின்சாரத்தில் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளை/உரிமங்களை வழங்கும் வகையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2022 செத்தெம்பர் 08 - அதிகபட்சம் 36 மாதங்களுடன் ஏற்கனவே திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை அத்தகைய வைப்புச் செய்யப்பட்ட ஆரம்பத் திகதியிலிருந்து மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற விதத்தில், 2296/12ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

2022 செத்தெம்பர் 09 - பின்வருமாறு குறித்த தகைமை நிபந்தனைகளை திருத்தும் விதத்தில், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுதாக மின்சாரத்தில் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளை/உரிமங்களை வழங்குவது தொடர்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் விடுக்கப்பட்ட 02/2022ஆம் இலக்க சுற்றறிக்கை திருத்தப்பட்டது:

- இறக்குமதி செய்யப்பட வேண்டிய வாகனங்களின் செலவு, காப்புறுதி மற்றும் சரக்கு விலைப் பெறுமதியின் (CIF) உச்ச எல்லையை நீக்குதல்,
- வாகனத்தின் செலவு, காப்புறுதி, சரக்கு விலைப் பெறுமதியின் 10 சதவீதத்திற்கு சமமான மாற்றல் வரியைச் செலுத்தி இரு ஆண்டுகால அவகாச காலத்திற்கு முன்பு மூன்றாம் தரப்பினருக்கு வாகனத்தை மாற்றுவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களை அனுமதித்தல்.

2022 செத்தெம்பர் 16	-	மூன்று வேறுபட்ட மாதிரிகளில் 3 நாமத்தினாலான புதிய முழு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள தயாரிப்பாளர்களின் முகவரொருவருக்கு/அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தருக்கு அனுமதியை வழங்குவதன் மூலம், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு முழுதாக மின்சாரத்தில் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளை/உரிமங்களை வழங்குவது தொடர்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் விடுக்கப்பட்ட 02/2022ஆம் இலக்க சுற்றறிக்கை திருத்தப்பட்டது.
2022 நவெம்பர் 08	-	குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "தங்க சுவர்க்க விசா நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 10 ஆண்டுகால வதிவிட விசாக்களின் கீழ் இலங்கையில் வதிவதற்கு விரும்புகின்ற வெளிநாட்டவர்கள் என்ற பெயரில் தங்க சுவர்க்க வெளிநாட்டு நாணய கணக்குகளை திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 திசெம்பர் 02	-	மூலப் பொருட்களின் இறக்குமதிகளின் கொடுப்பனவுகளுக்கு நிதியளிக்கும் நோக்கத்திற்கு, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் அதே குழுக்களினுள் தாய்க் கம்பனி அல்லது கம்பனியொன்றிலிருந்து (கடன் ஈவோன்) குறைந்தபட்சம் ஒரு ஆண்டுகால சலுகைக் காலப்பகுதி உள்ளடங்கலாக, மூன்று ஆண்டுகளை விடவும் குறைவான காலப்பகுதிக்கான வெளிநாட்டு நாணய கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் 30 சதவீதத்தின் (கடன்பாட்டாளர்) உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுடன் உற்பத்திகளின் தயாரிப்பிற்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்காக அனுமதியை வழங்கும் வகையில், 2308/51ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு, வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.
2022 திசெம்பர் 09	-	இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் குழுக்களினுள் தாய்க் கம்பனி அல்லது கம்பனியொன்றிலிருந்து, குறைந்தபட்சம் ஒரு ஆண்டுகால சலுகைக் காலம் உள்ளடங்கலாக மூன்று ஆண்டுகளை விடவும் குறையாத காலப்பகுதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைகளில், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் மூலம், உற்பத்திகளின் தயாரிப்புக்களுக்காக மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும் பொருட்டு, சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை - குறுகிய காலம் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
2022 திசெம்பர் 22	-	2286/27ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையின் முடிவுறுத்தல் தொடர்பில், மேலும் ஆறு மாதகாலங்களுக்கு செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் வகையில், 2311/38ஆம் வர்த்தமானி அறிவித்தலில் (அதிவிசேடம்) வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் புதிய கட்டளையொன்று வெளியிடப்பட்டது.
2022 திசெம்பர் 30	-	திறைசேரி செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து, உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றல்செய்தல் தொடர்பில் ஐ.அ.டொலரொன்றுக்கான இலங்கை ரூபா 2.00 ஊக்குவிப்புத் தொகையினை நிறுத்துதல்.
2023 சனவரி 26	-	"உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் - உள்முக முதலீடுகள் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் திட்டம்" மீது விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல்.

- இலங்கை மத்திய வங்கியின் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வாங்குதல்-விற்றல் மற்றும் விற்றல்-வாங்குதல், வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் என்பவற்றில் பங்கேற்பதன் மீது வங்கிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

2023 பெப்புருவரி 24 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சந்தைத் தூண்டல் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மாற்றல் செய்யப்பட்ட உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஏற்றுமதி பெறுகைகளுடன்/ வருவாய்களுடன் தொடர்புடைய மாற்றப்பட்ட பணித் துறையினதும் கட்டாயமாக மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதி பெறுகைகளின் எஞ்சிய பெறுமதியினதும் கணக்கில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் மத்திய வங்கிக்கு வாராந்த கட்டாய வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளின் தற்காலிகமாக அதிகரிக்கப்பட்ட சதவீதத்தை 2023 பெப்புருவரி 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்தல்.

2023 பெப்புருவரி 27 - 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் அல்லது/ மற்றும் வசதிகளின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீள்கொடுப்பனவுகளுக்காக கொடுப்பனவுகளை நிறைவேற்றுவதற்கு முதலீட்டைப் பெறுபவருக்கு எதிர்கால தேவைப்பாடு காணப்படுமாயின், வதிவற்ற முதலீட்டாளரிடமிருந்து கம்பனியின் பங்கு மூலதனத்தினுள் முதலீடொன்றாக, கிடைக்கப்பெற்ற பெறுகைகளில், சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை - முதலீட்டைப்பெறுபவர் திறந்து பேணுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அனுமதிக்கும் வகையில் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2023 மார்சு 03 - "வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமை செய்தல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியால் 2022 மே 12 அன்று விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல்.

- "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" மற்றும் "ஏற்றுமதி பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியால் முறையே 2021 சனவரி 27 மற்றும் 2021 பெப்புருவரி 18 அன்றும் அதனைத் தொடர்ந்தும் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை இரத்துச்செய்தல்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

2022 சனவரி 11 - 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2262/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

  - நீளமான அரிசி வகை மீதான தற்காலிகத் தடையை அகற்றுதல்; அத்துடன்
  - புதிய இணங்குவிப்பு முறைமைக் குறியீட்டிற்கமைவாக மீன் துண்டங்கள் மீதான தடைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்.

2022 மார்சு 09 - இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் வேண்டப்படுகின்ற பொருட்களின் இறக்குமதிப்பட்டியலுடன் 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2270/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2022 ஏப்பிறல் 09 - இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் வேண்டப்படுகின்ற பொருட்களின் இறக்குமதிப்பட்டியலுடன் 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2274/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2022 மே 06	-	2012 சனவரி 02ஆம் திகதியிடப்பட்ட 1739/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சிறப்பு இறக்குமதி உரிமம் மற்றும் கொடுப்பனவு ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதிகளை திருத்தும் வகையில், திறந்த கணக்குக் கொடுப்பனவு நியதிகள் மற்றும் சரக்குக் கணக்கு நியதிகளின் கீழான இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு, 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கொடுப்பனவு நியதிகள் தொடர்பாக இறக்குமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 மே 31	-	2270/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினாலும் 2274/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினாலும் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் தேவைப்பாட்டை நீக்கும் வகையில், 2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2282/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
	-	2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் நடைமுறைக்குவரும் திகதியை நீடிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2282/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 யூன் 24	-	2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளினால் (2278/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தி கருவாடு, பால் மா, உருளைக்கிழங்கு, வெங்காயம், பீஸ், மைசூர் பருப்பு, மிளகாய், அரிசி, கோதுமை மா மற்றும் சீனி என்பனவற்றிற்கு திறந்த கணக்கு கொடுப்பனவு நியதியை மற்றும் சரக்கு கணக்கு நியதியை அனுமதிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இறக்குமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2285/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 ஓகத்து 05	-	'தடை செய்யப்பட்ட' வகையிலிருந்து 'இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம்' என்ற வகையின் கீழ் கிளைபோசேட்டு களைக்கொல்லியை கொண்டுவரும் வகையில் 2022ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2291/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 ஓகத்து 23	-	2022ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2294/29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது): • 'தற்காலிகமாக இடைநிறுத்துதல்' என்ற வகையிலிருந்து 'இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம்' என்ற வகையின் கீழ் உந்துவிசை மற்றும் ஈருருளிகளுக்கான மின்சார மோட்டார் கொண்ட மோட்டார்சைக்கிள்களை கொண்டு வருதல், • சேக், சோச்சு மற்றும் உமேசு தவிர புளிக்கவைக்கப்பட்ட குடிவகைகளின் அத்துடன் பிளாத்திக் பெட்டிகள் மற்றும் பிளாத்திக் தட்டுகள் தவிர பொருட்களை கொண்டுசெல்வதற்கான அல்லது பொதி செய்வதற்கான பொருட்களை இறக்குமதி செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்துதல், • திறந்த கணக்கு கொடுப்பனவு நியதி மற்றும் சரக்கு கணக்கு நியதியின் கீழ் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட சீனி வகையைத் திருத்துதல்.

	-	தற்காலிக இடைநிறுத்தத்தின் கீழ் இறக்குமதிகளின் பட்டியலை திருத்தும் வகையில், 2022ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2294/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 செத்தெம்பர் 09	-	2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2296/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது): • தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை தற்காலிகமாக இடைநிறுத்துதல்/விதித்தல், • சில பொருட்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்கி தொடர்புடைய அதிகாரிகளின் அனுமதியுடன் விலக்களிப்புக்களுக்கான நியதிகளை அறிமுகப்படுத்தல்.
2022 செத்தெம்பர் 16	-	2022ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2297/79ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது): • 2022 ஒத்தோபர் 31 வரை திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கோழித் தீவன உற்பத்தியாளர்களினால் பால் மா மற்றும் மைசூர் பருப்பு (முழு) மற்றும் சோளம் மற்றும் சோயா பீன்ஸ் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தல், • 2022 செத்தெம்பர் 30 வரை திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தல்.
2022 செத்தெம்பர் 23	-	தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 02/2022ஆம் இலக்க 2022 ஓகத்து 31ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 'வாகன இறக்குமதிக்கான அனுமதியைப்' பெற்றுள்ள எவரேனும் ஆளினால்/ ஏதேனும் நிறுவனத்தினால் முழுமையாக மின்சாரத்தினால் இயக்கப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான 2022ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2298/55ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). இவ்வொழுங்குவிதிகள் 2023 திசெம்பர் 31 வரை மாத்திரம் செயற்பாட்டிலிருக்கும்.
2022 ஒத்தோபர் 05	-	வேளாண் விதைகள், வேளாண்இரசாயனம், மற்றும் இரசாயன வளமாக்கிகள் என்பவற்றின் இறக்குமதிக்காக முற்கொடுப்பனவு எல்லையை ஐக்கிய அமெரிக்க டொலர் 250,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வேறு ஏதேனும் நாணயத்திலுள்ள தொகை வரை நீடிக்கும் விதத்தில், 2022ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2300/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 ஒத்தோபர் 21	-	விலங்குத் தீன் தயாரிப்பிற்காக 25,000 மெட்ரிக் தொன்களைக் கொண்ட உயர்ந்தபட்ச மொத்த அளவில் உடைந்த அரிசியை இறக்குமதி செய்யும் விதத்தில், 2022ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2302/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).
2022 ஒத்தோபர் 31	-	2022ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2304/04ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). • திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் இலங்கையிலுள்ள துறைமுகத்தில் அல்லது விமானநிலையத்தில் கோதுமை மாவின் இறக்குமதிச் சரக்கு வந்தடையும் திகதியை 2022 திசெம்பர் 31 வரை நீடித்தல்.

- வங்கியுடன் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து கொடுப்பனவுகளுக்கு எதிரான ஆவணங்களின் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்களின் கீழ் கோதுமை மா இறக்குமதிகளுக்கு விலக்களித்தல்.

2022 நவெம்பர் 23 - தற்காலிக இடைநிறுத்தத்திலிருந்து பொருட்களின் பட்டியலை அகற்றும் விதத்தில், 2022ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டதுடன் (2307/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) குறித்த அதிகாரிகளின் ஒப்புதலுடன் மருத்துவம் மற்றும் சுற்றுலா என்பவற்றுடன் தொடர்புடைய சில பொருட்கள் இறக்குமதிசெய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

2022 திசெம்பர் 01 - திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் இலங்கையிலுள்ள துறைமுகத்தில் அல்லது விமானநிலையத்தில் சோளம் மற்றும் சோயா அவரை உணவு என்பவற்றின் (விலங்குத் தீனை தயாரிக்கும் நோக்கத்திற்காக) இறக்குமதிச் சரக்குவைந்தடையும் திகதியை 2022 திசெம்பர் 31 வரை நிடிக்கும் விதத்தில் 2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2308/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2022 திசெம்பர் 09 - ஓரளவு அரைக்கப்பட்ட அல்லது முற்றாக அரைக்கப்பட்ட அரிசியின் இறக்குமதிக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிம வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்தும் விதத்தில் 2022ஆம் ஆண்டின் 23ஆம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2309/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2022 திசெம்பர் 19 - இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்கள் மற்றும் சக்திமிக்க பானங்கள் என்பவற்றின் இறக்குமதிக்கான தற்காலிகமாக இடைநிறுத்தலை அகற்றும் விதத்தில் 2022ஆம் ஆண்டின் 24ஆம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2311/08ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2022 திசெம்பர் 21 - 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2311/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- கிளிம்போசைற்றின் இறக்குமதிக்கான முற்கொடுப்பனவை ஐ.அ.டொலர் 250,000 வரை அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலுள்ள தொகை வரை நீடித்தல்,

- திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் 2022 திசெம்பர் 21இலிருந்து 2023 யூன் 21 வரையான காலப்பகுதியில் சில கனிமப்பொருட்களினதும் இரசாயன வளமாக்கிகளினதும் இறக்குமதியை அனுமதித்தல்

- பதிவுசெய்யப்பட்ட விலங்குத் தீன் தயாரிப்பாளர்களால் திறந்த கணக்கு அல்லது சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் சோளத்தை இறக்குமதி செய்வதற்கான திகதியை 2023 சனவரி 15 வரை நீடிப்பதுடன் 2022 திசெம்பர் 21இலிருந்து 2023 சனவரி 15 வரையான காலப்பகுதியில் வேறு ஏதேனும் இறக்குமதியாளரை அனுமதித்தல்.

2023 சனவரி 01 - இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமமொன்று தேவைப்படும் இறக்குமதிக்கான ஒன்றுதிரட்டப்பட்ட பொருட்பட்டியலுடனும் மறுஅறிவித்தலின்றி இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் வழங்கல் இடைநிறுத்தப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுடனும் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் (2312/77ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்டன.

- தற்காலிக இடைநிறுத்தலின் இறக்குமதிகளின் கீழும் குறித்த அதிகாரிகளின் ஒப்புதலுடன் விலக்களித்தல்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழும் ஒன்றிணைக்கப்பட்ட இறக்குமதிப் பட்டியலுடன் 2023ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்டன.

2023 சனவரி 19 - திறந்த கணக்கு மற்றும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளின் கீழ் இலங்கையிலுள்ள துறைமுகத்தில் அல்லது விமானநிலையத்தில் கோதுமை மாவின் இறக்குமதிச் சரக்குகவைந்தடையும் திகதியை 2023 சனவரி 31 வரை நீடிக்கும் விதத்தில், 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2315/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2023 பெப்புருவரி 22 - 2023ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவு நியதிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2320/46ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

  - முனைக்கோடி தொழிற்பாடுகளினால் உழைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொழிற்பாடுகளை வழங்குவதற்குத் தேவையாகக் காணப்படுகின்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்காக தமது கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்பவர்களுக்காக திறந்த கணக்கு கொடுப்பனவு நியதிகளையும் சரக்கு கணக்கு கொடுப்பனவு நியதிகளையும் அனுமதித்தல்.
  - 2022ஆம் ஆண்டின் 12ஆம் நியதிகள் மீதான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளால் விடுக்கப்பட்ட 5(ஐ)ஆம் இலக்க ஒழுங்குவிதியை மாற்றீடு செய்தல் (2294/29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- 2023ஆம் ஆண்டின் 02ஆம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளால் (2312/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) விடுக்கப்பட்ட 8(க)ஆம் இலக்க ஒழுங்குவிதியை நீக்கி பதிலீடு செய்யும் விதத்தில் 2023ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2320/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

படுகடன் முகாமைத்துவம்

2022 பெப்புருவரி 01 - நேரடித் தளத்தினூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக முதலீடுகளைக் கொண்டுவருகின்ற பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் உள்ளடங்கலாக, ஏற்பாட்டாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஊக்குவிப்பானது கொடுக்கல்வாங்கலின் தீர்ப்பனவு திகதியன்று ஏற்புடைய குறிகாட்டி செலாவணி வீதத்திற்கமைவாக, இலங்கை ரூபாய்களுக்கு மாற்றப்பட்டு 50 அடிப்படை புள்ளிகளால் (0.5 சதவீதம்) பெருக்கி, கொண்டுவரப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளில் ஒரு ஐ.அ.டொலர் முதலீட்டு தொகைக்குச் சமமாகும். பெயர்குறிக்கப்பட்ட இலங்கை ரூபாய்க் கணக்கிற்கு பெயர்குறிக்கப்பட்ட முகவர்களினூடாக ஊக்கத்தொகைகள் பகிர்ந்தளிக்கப்படும்.

2022 ஏப்பிறல் 12 - இலங்கையின் வெளிநாட்டுப் பொதுப் படுகடனை தீர்ப்பனவு செய்வது தொடர்பில் இடைக்கால கொள்ளையொன்றை நிதி அமைச்சு அறிவித்தது. இடைக்கால கொள்கையொன்றுக்காக கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவற்றிற்கமைவாக பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் பொருளாதார சீராக்கல் செயற்றிட்டத்துடன் ஒத்துசைவான விதத்தில் கடப்பாடுகளின் முறையானதும் ஒருமித்ததுமான மறுசீரமைப்பை ஒத்திவைக்கும் வகையில், பாதிக்கப்பட்ட அனைத்து படுகடன்களுக்கும் சாதாரண படுகடன் தீர்ப்பனவை இடைநிறுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்ளையாக இது இருக்கும்.

2022 ஏப்பிறல் 29 - 2022 ஏப்பிறல் 12 அன்று அறிவிக்கப்பட்டதற்கமைவாக, இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடனை தீர்ப்பனவுசெய்வதில் இடைக்கால கொள்கையின் கீழ் 'பாதிக்கப்பட்ட படுகடன்களிலிருந்து' இலங்கை அபிவிருத்தி முறிகள் நீக்கப்பட்டுள்ளன. எனினும், திரவ வெளிநாட்டு நாணய வளங்களின் கிடைப்பனவில் காணப்படும் தடைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அபிவிருத்தி முறிகளின் தீர்ப்பனவிற்காக மாற்றுவழி பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

1. நாணயக் கொள்கை கரிசனைகளுக்குட்பட்டு இலங்கை ரூபாவில் தீர்ப்பனவுசெய்தல் (இலங்கை ரூபாவின் தீர்ப்பனவுத் திகதியானது பொதுத் திறைசேரியின் நிதிய கிடைப்பனவில் தங்கியிருக்கலாம்).

   அறிமுகத்தின் போது, இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதிர்ச்சிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மிகச் சிறிய பெறுமதிகள் வெளிநாட்டு நாணயத்தில் தீர்ப்பனவுசெய்யப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டன.

2. உண்மை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அதாவது அடிப்படை வழங்கலின் ஒவ்வொரு தனிப்பட்ட விலை குறிப்பீட்டிற்கும் ஏற்புடைய வட்டி வீதங்களுடன் செலுத்தவேண்டிய கொடுப்பனவுத் திகதியிலிருந்து குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் வரை தொடர்புடைய இலங்கை அபிவிருத்தி முறி முதலீடுகளின் முதிர்ச்சியை (வட்டி கொடுப்பனவு உள்ளடங்கலாக) நீடித்தல்.

3. முன்னுரிமையாக, குறித்த முதனிலை ஏலத்திலிருந்து ஏழு வியாபார நாட்களுக்குள் உடனடியாக முன்னுறுகின்ற முதன்மை சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் அரச பிணையங்களை (திறைசேரி முறிகளை) வசதிப்படுத்தல் தேவைப்படுமாறு உடனடியாக முன்னுறுகின்ற முதன்மைச் சந்தையில், முதனிலைச் சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் வழங்கப்படும் முதிர்ச்சிகளைத் தவிர மீதமாக காணப்படும் முதிர்ச்சியுடன் வேறு ஏதேனும் அரச பிணையத்திற்கு இடைக்கணிப்பிடப்படும் அல்லது விரிவுபடுத்தப்படும்.

2022 யூன் 07 - திறைசேரி உண்டியல்கள் மீதான வரையறையை ரூ.3000 பில்லியனைக் கொண்ட முன்னைய வரையறையிலிருந்து ரூ.4,000 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கான தீர்மானத்திற்கு பாராளுமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டது (36ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைப் பத்திரம்).

2022 யூன் 22 - தொடர்புடைய திறைசேரி உண்டியல் ஏலத்தின் தீர்ப்பனவுத் திகதிக்கு முந்திய வியாபார நாளின் பி.ப 3.30 வரை மேலதிக கோரல்களுக்காக திறைசேரி உண்டியல் ஏலங்களுக்கான கட்டம் II அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டம் II இற்காக வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தொகை ஏலத்தில் வழங்கப்பட்ட கூட்டுக்கேள்வி தொகையிலிருந்து 25 சதவீதத்தைச் சேர்த்த ஏலத்தின் பற்றாக்குறையாக இருக்கும். ஏலத்தில் தொடர்புடைய முதர்ச்சிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் வழங்கல் மேற்கொள்ளப்படுகிறது. மிகையான கோரல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், ஏலத்தில் பங்கேற்பாளர்களில் மொத்த வெற்றிகரமான பங்கேற்பின் அடிப்படையில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

2022 நவெம்பர் 30 - 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டத்தின் நியதிகளுக்கமைய திறைசேரி உண்டியல்கள் வழங்கல் மீதான வரையறையை ரூ.4,000 பில்லியனிலிருந்து ரூ.5,000 பில்லியன் வரை அதிகரிப்பதற்கான தீர்மானத்திற்கு பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டது.

2023 பெப்புருவரி 13 - நேரடி வழங்கல் தள ஏற்பாட்டின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது.

விலைத் திருத்தங்கள்

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்ட குறித்த பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

திகதி	விடயம்	திருத்தம்
2022.01.28	உள்நாட்டில் பொதி செய்யப்பட்ட/ போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீர்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன (2264/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.02.28	பரசிட்டமோல் மாத்திரைகள்/ வில்லைகள் (500 மி.கி)	மாத்திரை/வில்லையொன்றிற்கு ரூ. 1.71 இலிருந்து மாத்திரை/வில்லையொன்றிற்கு ரூ. 2.30 இற்கு உயர்ந்தபட்ச சில்லறை விலை அதிகரிக்கப்பட்டது (2269/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.15	பரசிட்டமோல் மாத்திரைகள்/ வில்லைகள் (500 மி.கி) உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட மருந்துபொருட்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன (2271/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.28	உள்விழி வில்லைகள்/ விநியோக முறைமை கொண்ட வில்லைகள் மேற்படலமற்ற உலோக உறை-குழாய், வடிகட்டும் உறைகுழாய், இரத்தக் குளுக்கோசை கண்காணிக்கும் முறைமை, நாடித்துடிப்பை அளக்கும் கருவி உட்பட தெரிவுசெய்யப்பட்ட மருந்துச் சாதனங்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன (2273/04ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.04.29	மாத்திரைகள்/வில்லைகள், ஊசிகள் மற்றும் மூச்சை உள்ளிழுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துப்பொருட்கள் உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட மருந்துப்பொருட்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன (2277/55ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.05.02	வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது - உள்நாடு (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக)	கி.கிறாமொன்றிற்கு ரூ.220 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டது (2278/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது - உள்நாடு (சூதுறு சம்பா நீங்கலாக)	கி.கிறாமொன்றிற்கு ரூ.230 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டது (2278/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	கீரி சம்பா (உள்நாடு)	கி.கிறாமொன்றிற்கு ரூ.260 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டது (2278/02ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.06.10	வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி (உள்நாடு)	கி.கிறாமொன்றிற்கு ரூ.210 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டது (2283/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.08.19	முட்டை (வெள்ளை)	முட்டையொன்றிற்கு ரூ.43 உயர்ந்தபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டது (2293/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	முட்டை (மண் நிறம்/ சிவப்பு)	முட்டையொன்றிற்கு உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூ.45 விதிக்கப்பட்டது (2293/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2022.09.01	உள்விழி/ விநியோக முறைமை கொண்ட வில்லைகள் மேற்படலமற்ற உலோக உறைகுழாய், வடிகட்டும் உறை-குழாய், இரத்த குளுக்கோசை கண்காணிக்கும் முறைமை, நாடித்துடிப்பை அளக்கும் கருவி உட்பட தெரிவுசெய்யப்பட்ட மருந்துச் சாதனங்கள்	உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டன (2295/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)
2023.01.20	முட்டை (வெள்ளை)	வெள்ளை முட்டையொன்றிற்கு உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூ.44 விதிக்கப்பட்டது (2315/57ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)
	முட்டை (மண் நிறம்)	சிவப்பு முட்டையொன்றிற்கு உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூ.46 விதிக்கப்பட்டது (2315/57ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2022 நவெம்பர் 21 - செலவு அறவிடுதலை அடையும் நோக்குடன் 2018ஆம் ஆண்டின் விலை திருத்தங்களுக்கான சூத்திரங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் தன்னியக்க எரிபொருள் விலை திருத்தங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது.

- ஆண்டிற்கு இரு தடவை என்ற அடிப்படையில் செலவு அறவிடல் மீதான தன்னியக்க மின்சார தீர்வை திருத்தங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது. இதற்கமைய, இறுதி நுகர்வோர் மின்சாரத் தீர்வைத் திருத்தங்கள் ஒவ்வொரு ஆண்டின் சனவரி மற்றும் யூலை ஆகிய மாதங்களில் திருத்தப்படுகின்றன.

வரித் திருத்தங்கள்

வருமான வரி

2022 திசெம்பர் 19 - 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டத்தை திருத்துவதற்கான 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் (திருத்தப்பட்ட) சட்டம் சட்டமாக்கப்பட்டது. உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

- தனிப்பட்ட வருமான வரிக்கான விலக்கு மட்டங்களை ரூ.3.0 மில்லியனிலிருந்து ரூ.1.2 மில்லியனுக்குத் திருத்தியமைத்தல்;
- தனிப்பட்ட வருமான வரிக்கான அடுக்குகளை ரூ.3.0 மில்லியனிலிருந்து ரூ. 0.5 மில்லியனுக்குக் குறைத்தல்;
- தனிப்பட்ட வருமான வரிக்கு ஏற்புடைய வரி விதிக்கத்தக்க வருமானத்தைக் கணிப்பிடுகையில் ரூ.1.2 மில்லியன் செலவின நிவாரணத்தை நீக்குதல்;
- தனிப்பட்ட வருமான வரிக்கான வரி வீத வீச்சை 6-18 சதவீதத்திலிருந்து 6-36 சதவீதத்திற்கிடையில் திருத்தியமைத்தல்;
- 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தொழிலாளரின் சம்மதத்தைப் பொருட்படுத்தாது தனியாள் முற்பண வருமான வரியை கழிப்பதைக் தொழில்தருநர்களுக்கு கட்டாயமாக்குதல்;
- 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கம்பனியின் நியம வருமான வரியை 24 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கு அதிகரித்தல்;

- 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கம்பனி வருமான வரியுடன் தொடர்புடைய சலுகை வீதங்களையும் அகற்றுதல்.

- இதற்கமைய, பல்வேறு வரிவிதிக்கத்தக்க மட்டங்களில் தனியாட்களுக்கு (வதிவோர் மற்றும் வதிவற்றோர்) ஏற்புடைய தனிப்பட்ட வருமான வரி வீதங்கள் பின்வருமாறு:

2022/23ஆம் நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்கள்		2022/23ஆம் நிதியாண்டின் மீதமுள்ள மூன்று மாதங்கள்		2023/24ஆம் நிதியாண்டும் அதிலிருந்தும்	
முதல் ரூ.2,250,000 இற்கு	6 சதவீதம்	முதல் ரூ.125,000 இற்கு	6 சதவீதம்	முதல் ரூ.500,000 இற்கு	6 சதவீதம்
அடுத்த ரூ.2,250,000 இற்கு	12 சதவீதம்	அடுத்த ரூ.125,000 இற்கு	12 சதவீதம்	அடுத்த ரூ.500,000 இற்கு	12 சதவீதம்
எஞ்சியவற்றிற்கு	18 சதவீதம்	அடுத்த ரூ.125,000 இற்கு	18 சதவீதம்	அடுத்த ரூ.500,000 இற்கு	18 சதவீதம்
		அடுத்த ரூ.125,000 இற்கு	24 சதவீதம்	அடுத்த ரூ.500,000 இற்கு	24 சதவீதம்
		அடுத்த ரூ.125,000 இற்கு	30 சதவீதம்	அடுத்த ரூ.500,000 இற்கு	30 சதவீதம்
		எஞ்சியவற்றிற்கு	36 சதவீதம்	எஞ்சியவற்றிற்கு	36 சதவீதம்

- 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிறுத்திவைத்தல் வரி பின்வரும் கொடுப்பனவுகள் மீது விடுக்கப்பட்டன.

கொடுப்பனவு	தொடர்பான நிறுத்திவைத்தல் வரி
பின்வருவனற்றுடன் தொடர்பில் கொடுப்பனவாளர்களின் ஊழியர் அல்லாத வதியும் தனியாளொருவருக்கு கலெண்டர் மாதம் ஒன்றிற்கு ரூ.100,000 தொகையை விஞ்சும் பணிக் கட்டணக் கொடுப்பனவுகள்: (அ) கற்பித்தல், விரிவுரையாற்றல், பரீட்சித்தல், பரீட்சையொன்றை கண்காணித்தல் அல்லது என்பவற்றை மேற்பார்வை செய்தலுக்காக, (ஆ) வதிவோர் காப்புறுதிக்கான ஆணைக்குழுவாக அல்லது தரகரொருவராக, விற்பனை அல்லது பிரசார முகவராக; அல்லது (இ) வைத்தியர், பொறியியலாளர்கள, கணக்காளர், சட்டத்தரணி, மென்பொருள் உருவாக்குனர், ஆய்வாளர், கல்வியாளர்கள் அல்லது வேறு ஏதேனும் பணி வழங்குநர் போன்ற சுயாதீனமான பணி வழங்குநரின் இயலாற்றலில் அத்தகைய தனியாள் மூலம் வழங்கப்பட்ட பணி வழங்குநர்களுக்காக	முழுக் கொடுப்பனவில் 5 சதவீதம்
வட்டி அல்லது கொடுத்த கழிவு	5 சதவீதம்
வதிவோருக்கான வாடகைக் கொடுப்பனவுகள் (ஒட்டுமொத்த தொகை ரூ.100,000 தொகையை விஞ்சியிருப்பின்)	முழுக் கொடுப்பனவில் 10 சதவீதம்
விதிப்பனவு, இயற்கை வள கொடுப்பனவு அல்லது கட்டுப்பணம்	14 சதவீதம்
அரசுரிமைப் பணம்	14 சதவீதம்

- 2023 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வதிவுள்ள கம்பனியால் பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபம் மீதான நிறுத்திவைத்தல் வரி இறுதி வரிக் கொடுப்பனவாக இருத்தல் வேண்டும்.

- வருமான வரி விலக்களிப்புக்கள்:

- இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாகவும் அமைச்சரின் எழுத்து மூல ஒப்புதலுக்கு முன்னர் உட்பட்டும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக அத்தகைய இலாபம் மேற்கொள்ளப்பட்டிருப்பின் வியாபாரத்தின் மூலதனச் சொத்து அல்லது பொறுப்பு அல்லது இலங்கை அரசாங்கத்தினால் முற்றாக

சொந்தமாக்கப்பட்ட நிறுவனத்தினமொன்றால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுச் சொத்து என்பவற்றை தேறல் செய்யப்பட்டவற்றிலிருந்து பெறப்பட்ட இலாபத்திற்கு விலக்களிப்பு வழங்கப்பட்டன.

- கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட உண்மைத் துறை முதலீட்டு பொறுப்பாண்மைக்கு விற்கப்பட்ட, பரிவர்த்தனை செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்டப்பட்ட காணியின் அல்லது கட்டடத்தின் தேறலிலிருந்து ஆளொருவரால் மேற்கொள்ளப்பட்ட இலாபத்திற்கான விலக்களிப்பு 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நீக்கப்பட்டது.

- வதிவற்ற ஆளொருவராக காணப்படும் உறுப்பினரொருவருக்கு வதிவோர் கம்பனியால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்களுக்கான விலக்களிப்பு 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நீக்கப்பட்டது.

- உண்மைத் துறை முதலீட்டு பொறுப்பாண்மையிலிருந்து பிரிவு உடைமையாளரொருவரால் மேற்கொள்ளப்பட்ட வியாபாரத்தின் அல்லது முதலீட்டின் மூலதனச் சொத்துக்களின் தேறலிருந்து இலாபங்களாக பெறப்பட்ட பிரிவுகள் அல்லது தொகை என்பவற்றை தேறல் செய்யப்படுகின்ற பங்கிலாபங்களுக்கும் இலாபாங்களுக்குமான விலக்களிப்பு 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் நீக்கப்பட்டது

- பின்வரும் பணிகள்/ நடவடிக்கைகளிலிருந்து ஏதேனும் ஆளொருவரால் உழைக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட இலாபங்களுக்கும் ஆதாயங்களுக்குமான விலக்களிப்பு 2023 ஏப்பிறல் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நீக்கப்பட்டது.

  - தகவல் தொழில்நுட்பத்தையும் இயலுமான பணிகளையும் வழங்குதல்.

  - ஏதேனும் தொழிற்கல்வி நிறுவனங்களின் ஏதேனும் தொழிற்கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்.

  - தங்கம், இரத்தினம், அல்லது ஆபரணம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கின்ற ஏதேனும் வியாபாரம் அல்லது இலங்கைக்கு கொண்டுவரப்படுகின்ற இரத்தினங்களை வெட்டி மெருகூட்டுவதன் பின்னர் அவற்றை ஏற்றுமதி செய்கின்ற வியாபாரம்.

  - 2021 ஏப்பிறல் 01 அன்று அல்லது அதன்பின்னர் ஆரம்பிக்கும் விதத்தில் மீள்சுழற்சிசெய்யப்பட்ட கட்டுமாணப்பொருட்களின் விற்பனைக்காக புதிதாக பொறுப்பேற்றல்.

  - 2021 ஏப்பிறல் 01 அன்று அல்லது அதன்பின்னர் ஆரம்பிக்கும் விதத்தில் இலங்கையில் படகுகள் மற்றும் கப்பல்கள் என்பவற்றை தயாரிக்கும் (வதியும் ஆளொருவரால்) நோக்கத்திற்காக பொறுப்பேற்றல்.

  - 2021 ஏப்பிறல் 01அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற விதத்தில் சூரிய மற்றும் காற்று சக்தியை நூறு மெகா வாட்ஸிற்கும் குறையாமல் தயாரிப்பதற்கான இயலாற்றலுடன் புதுப்பிக்கத்தக்க விதத்தில் நிறுவப்பட்ட ஏதேனும வலு தேசிய கட்டமைப்பிற்காக வழங்கப்பட்டது.

  - 2021 சனவரி 01அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற விதத்தில் இலங்கையில் உள்நாட்டு ஊழியர் அல்லது உள்நாட்டு மூலப் பொருட்கள் என்பவற்றை பயன்படுத்தி தொடர்பூட்டல் கோபுரங்களை கட்டுமாணித்து நிறுவுவதற்கும் அத்தகைய கட்டுமாண அல்லது நிறுவுதலுக்காக தேவைப்படும் தொழில்நுட்ப பணிகளை வழங்குவதற்கும் (வதிவுள்ள ஆளொருவரால்) பொறுப்பேற்றல்.

- 2021 ஏப்பிறல் 01அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற விதத்தில் பிணைக்கப்பட்ட களஞ்சியசாலைகளையும் கரைகடந்த வியாபாரத்துடன் தொடர்புடைய களஞ்சியசாலைகளையும் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அனுமதிப்பதற்குப் பொறுப்பேற்றல்.

- தொழில்நுட்ப கல்வியறிவு வெற்றிகரமாக நிறைவேற்றியமையைத் தொடர்ந்து 2021 ஏப்பிறல் 01 அன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற விதத்தில் ஏதேனும் வியாபாரத்திலிருந்து ஏதேனும் தனியாள் மூலம் உழைக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஆதாயங்களையும் இலாபங்களையும் விலக்களித்தல்.

பெறுமதிசேர் வரி

2022 மார்சு 31 - 2022 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான நிதியியல் பணிகள் வழங்கலில் பெறுமதிசேர் வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் பெறுமதிசேர் வரியிலிருந்து குறித்த பொருட்கள் மற்றும் பணிகளை விலக்களிப்பதற்கும் 2022ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டத்தினால் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் திருத்தப்பட்டது.

2022 மே 31 - பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 08 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு 2022 யூன் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது (2282/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஓகத்து 31 - பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு 2022 செத்தெம்பர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டது (2295/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஒத்தோபர் 06 - 2022 ஒத்தோபர் 07 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சுகாதாரத் துவாய்கள் மற்றும் அடைப்பான்கொண்ட பஞ்சுகள் என்பவற்றின் இறக்குமதி மற்றும்/அல்லது வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி வீதம் 0 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது (2300/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 திசெம்பர் 14 - 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தை திருத்துவதற்கு 2022ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கப் பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம் சட்டமாக்கப்பட்டது. பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

- வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான பெறுமதிசேர் வீதத்தை அதிகரிப்பதற்காக சட்டரீதியாக விளைவைக் கொண்டுவருதல்:
  - 2022 யூன் 01 இலிருந்து 2022 ஓகத்து 31 வரை நடைமுறைக்கு வரும் வகையில் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு அதிகரித்தல்.
  - 2022 செத்தெம்பரிலிருந்து 01 வரை நடைமுறைக்கு வரும் வகையில் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரித்தல்.
- 2022 ஒத்தோபர் 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரிக்கான புரள்வின் பதிவு எல்லையை ஆண்டிற்கு ரூ.300 மில்லியனிலிருந்து ரூ.80 மில்லியனுக்கு குறைத்தல்.
- 2022 சனவரி 01இலிருந்து கூட்டுறுதி வதிவிடத் தொடர்மாடிகள் மீது பெறுமதி சேர் வரி வீதத்தை நீக்குதல்.

2022 திசெம்பர் 31	-	2020 மே 20இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்றை தீர்ப்பதற்கான நலப் பணிகளை வழங்குவதற்கான தேவைப்பாட்டிற்கமைவாக, நலம் தொடர்பான விடயத்துடன் இணைந்துள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரால் மருத்துவ, அறுவைச் சிகிச்சை மற்றும் பல் மருத்துவக் கருவிகள், கருவிகள், பாகங்கள் மற்றும் அதன் பாகங்கள், அதிலிருந்து மருத்துவமனை அல்லது மருத்துவ தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயன மற்றும் ஒத்த பொருட்கள் உட்பட பொறி மற்றும் சாதனத்தின் வழங்கல் அல்லது இறக்குமதி மீது முதலாவது அட்டவணையின் IIஆம் பகுதியின் (அ) பந்தியின் (xxxi)ஆம் பொருளில் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் 2021 திசெம்பர் 31இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் முடிவுறுத்தப்பட்டன. எவ்வாறாயினும், ஏதேனும் நோய்த்தொற்றை அல்லது பொதுமக்களுக்கு அவசர மருத்துவத் தேவையை தீர்த்துவைப்பதற்கு நலப் பணிகளை வழங்குவதற்காக பொறி, சாதனம், மருந்துப்பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் என்பன அரச மருத்துவமனைக்கு அல்லது நல அமைச்சிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருப்பின் மாத்திரம் அத்தகைய விலக்களிப்பை வழங்குவதற்கு நல அமைச்சிற்கான செயலாளரின் விதந்துரைப்பில் நிதி அமைச்சால் ஒப்புதலளிக்கப்பட்ட திருத்தமொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

கலால் தீர்வை

2022 சனவரி 01	-	வெறியக்குடிவகையின் பயன்பாட்டிற்காகப் பிரயோகிக்கப்படுகின்ற உறுதிச்சான்றுக் கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகுப்பு விடுதிகள்; 5 நட்சத்திர விடுதி மற்றும் அதற்குமேற்பட்ட நட்சத்திர வகுப்புக்கள்/ சிறு விடுதிகள் போன்ற சில விடுதிகள் 2022 மார்ச்சு 31 வரை விலக்களிக்கப்பட்டன (2260/78ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	-	சுற்றுலாவிடுதி உரிமம் (FL/7), சுற்றுலாச் சபை ஒப்புதலளித்த மற்றும் அறைகள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளையுடைய ஒப்புதலளிக்காத சுற்றுலாவிடுதிகள், சுற்றுலாவிடுதி குடிபானச்சாலை உரிமம் (FL/8), உணவக உரிமம் (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத உணவகங்களுக்கானவை) (FL/11), வாடிவீட்டு உரிமம் (FL/12) மற்றும் பணிமனைகளிலான நுகர்வு (FL/22B) (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத பணிமனைகளுக்கானவை) என்பவற்றுக்கான வருடாந்த மதுபான உரிமக்கட்டணங்கள் 2022 மார்ச்சு 31 வரை விலக்களிக்கப்பட்டன (2260/79ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022 ஏப்பிறல் 29	-	இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் உரிமம் வழங்கப்பட்ட தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு வழங்கப்படும் கள்ளின் மீதான கலால் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.25 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.50 இற்குக் அதிகரிக்கப்பட்டது. ஆயினும், ஏற்றுமதி செய்யப்படும் எந்தவொரு கள்ளுப் போத்தல் மீதும் தீர்வை அறவிடப்படலாகாது என்று வழங்கப்பட்டது (2277/62 இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல்).
2022 திசெம்பர் 31	-	2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு ஒற்றை பீடி மீதும் ரூ.2.00 வீதத்தில் புகையிலை வரி விதிக்கப்பட்டது (2312/71ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2023 சனவரி 01	-	பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் தீர்வை 2023 சனவரி 03 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் திருத்தப்பட்டது (2312/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

விடயம்	நடைமுறையிலுள்ள வரி	வரித் திருத்தம்
ஒக்ரேன் இல.92 கொண்ட பெற்றோல்	லீற்றரொன்றிற்கு ரூ.27	லீற்றரொன்றிற்கு ரூ.52
ஒக்ரேன் இல.95 கொண்ட பெற்றோல	லீற்றரொன்றிற்கு ரூ.27	லீற்றரொன்றிற்கு ரூ.52
ஏனையவை	லீற்றரொன்றிற்கு ரூ.27	லீற்றரொன்றிற்கு ரூ.52
10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சாமல் கந்தகத்தை உள்ளடக்கும் சிறப்பு டீசல்	லீற்றரொன்றிற்கு ரூ.13	லீற்றரொன்றிற்கு ரூ.38
10 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) விஞ்சி 500 மில்லிகிறாமை/கி.கிறாமை (ஒரு மில்லியனுக்கான பகுதிகள்) கந்தகத்தை உள்ளடக்கும் ஏனைய டீசல்	லீற்றரொன்றிற்கு ரூ.6	லீற்றரொன்றிற்கு ரூ.31
ஏனையவை	லீற்றரொன்றிற்கு ரூ.13	லீற்றரொன்றிற்கு ரூ.38

2023 சனவரி 01 - 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிகெரெட்டுகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2312/68ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

விடயம்	நடைமுறையிலுள்ள வரி	வரித் திருத்தம்
சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.6,750	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.13,360
சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.28,850	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.34,620
சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 67 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.41,100	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.49,320
சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 72 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சி 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சாதவை	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.46,600	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.55,920
சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 84 மில்லி மீற்றர் நீளத்தை விஞ்சுபவை	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.51,800	1,000 சிகரெட்டுக்களுக்கு ரூ.62,160

2023 சனவரி 03 - 2023 சனவரி 03இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில குடிவகைகள் மீதான கலால் தீர்வை திருத்தப்பட்டது (2312/70ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

விடயம்	நடைமுறையிலுள்ள வரி	வரித் திருத்தம்
விசேட சாராயம்	லீற்றரொன்றிற்கு ரூ.4,180	லீற்றரொன்றிற்கு ரூ.5,000
வெல்லப்பாகு, பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம்	லீற்றரொன்றிற்கு ரூ.4,460	லீற்றரொன்றிற்கு ரூ.5,350
நாட்டில் தயாரிக்கப்படும் “வெளிநாட்டு” வெறியக்குடிவகை	லீற்றரொன்றிற்கு ரூ.4,570	லீற்றரொன்றிற்கு ரூ.5,500
சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 5 சதவீதம் மற்றும் அதற்கும் குறைவான மோல்ட் மதுபானம்	லீற்றரொன்றிற்கு ரூ.3,300	லீற்றரொன்றிற்கு ரூ.3,960
சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தில் 5 சதவீதத்தை விடக் கூடுதலான மோல்ட் மதுபானம்	லீற்றரொன்றிற்கு ரூ.3,450	லீற்றரொன்றிற்கு ரூ.4,150
வைன்	லீற்றரொன்றிற்கு ரூ.3,300	லீற்றரொன்றிற்கு ரூ.3,960
சேக்	லீற்றரொன்றிற்கு ரூ.900	லீற்றரொன்றிற்கு ரூ.1,080
நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் சார்ந்த குடிவகை	-	லீற்றரொன்றிற்கு ரூ.2,780
சிட்டையில் குறிக்கப்பட்டவாறு உண்மையான பலத்தின் 4 சதவீதத்திற்கும் அதிகமல்லாமல் நாட்டில் தயாரிக்கப்பட்ட அப்பிள் பழச்சாற்றிலான குடிவகை	-	லீற்றரொன்றிற்கு ரூ.3,000

சுங்கத் தீர்வை

2022 மார்சு 09 - தெரிவுசெய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மீதான சுங்க தீர்வை அதிகரிக்கப்பட்டன (2270/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 மே 31 - 2022 யூன் 01இலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது 25 சதவீதம், 50 சதவீதம், 75 சதவீதம், 100 சதவீதம் மற்றும் 200 சதவீதம் என்ற வீதங்களில் மிகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டது (2282/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஓகத்து 09 - நிவாரணப் பொருட்களாக விநியோகிப்பதற்கு நன்கொடையாக பெறப்படும் பொருட்களை இறக்குமதி செய்வதன் மீதான சுங்க தீர்வை விலக்களிக்கப்பட்டது (2292/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஒத்தோபர் 06 - கைத்தொழில் அமைச்சின் விதந்துரைப்பிற்கமைய, உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் மூலம் தயாரிக்கப்படும் சுகாதார அணையாடைகளின் தெரிவுசெய்யப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதன் மீதான சுங்க தீர்வை விலக்களிக்கப்பட்டது (2300/27ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 நவெம்பர் 15 - இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வினது நன்மைகள் கசிவுகளை தடுப்பதற்கு பெறுமதிக்கமைவான வீதத்துடன் இணங்கும் விதத்தில் சுங்க இறக்குமதி தீர்வையின் நிலையான வீதம் திருத்தப்பட்டது (2306/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டம்

2022 சனவரி 11 - அரிசி, மீன்பிடி உற்பத்திகள், திரவப் பெற்றோலிய எரிவாயுவை மாற்றம் செய்வதுடன் தொடர்புடைய துணைப் பொருட்கள் என்பவற்றுக்கான புதிய இணங்குவிப்புக் குறியீடுகளுக்கமைவாக தற்போதுள்ள பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்ட தீர்வை வீதங்கள் நீடிக்கப்பட்டன (2262/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 மார்சு 10 - புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்ட தீர்வை வீதங்கள் அதிகரிக்கப்பட்டன (2270/59ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஓகத்து 09 - நன்கொடை பெறுநர் அரச நிறுவனங்கள் அல்லது நன்கொடை மற்றும் நிவாரண வழிமுறைகளைக் கொண்ட அரசாங்கம் அனுமதி வழங்கிய நிறுவனம் அல்லது அரசாங்க நிறுவனத்துடன் நேரடியாக கூட்டிணைக்கப்படுகின்ற நிறுவனம் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரின் (முதன்மை கணக்கீட்டு அலுவலர்) விதந்துரைப்பை அடிப்படையாகக்கொண்டு, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில், அத்தியாவசிய நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்கும் அரச பணிகளைத் தொடர்ச்சியாக வசதிப்படுத்துவதற்கும் ஏதேனும் வெளிநாடுகளிலிருந்தும் அத்துடன் வியாபார நிறுவனங்கள், தன்னார்வமிக்க அமைப்புக்கள், மற்றும் ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் மூலமான நலன் விரும்பிகள், அரச ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள், மற்றும் உதவியாக/நன்கொடையாக ஏதேனும் அரச நிறுவனத்துடன் நேரடியாக கூட்டிணைந்து நிவாரண நடவடிக்கைகளில் செயற்படும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஏதேனும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து (அரசாங்கங்கள்) மற்றும் அமைப்புக்களிடமிருந்தும் கிடைக்கப்பெற வேண்டிய அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிகள் பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்ட தீர்வையிலிருந்து நீக்கப்பட்டன (2292/32ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஒத்தோபர் 05 - கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பிற்கமைய, உள்நாட்டுத் சுகாதார தயாரிப்பாளர்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதன் மீதான செஸ் தீர்வை விலக்களிக்கப்பட்டது (2300/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)

2022 நவெம்பர் 14 - 2023ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவிற்கமைவாக, பெறுமானத் தேய்வின் தாக்கத்தையும் 677 இணங்குவிப்புக் குறியீடுகளின் மொத்தத்தின் கீழ் வகைப்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் உலகளாவிய சந்தை விலைகளின்/செலவு, காப்புறுதி மற்றும் சரக்கு ஆகிய பெறுமதியின் தாக்கத்தையும் கருத்திற்கொண்டு, செஸ் தீர்வையின் கலப்பு வீதங்கள் மாற்றப்பட்டன (2306/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

சிறப்புப் பண்டத் தீர்வை

இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வைக்குப் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன:

திகதி	விடயம்	திருத்தம்
2022.01.11	அரிசி மற்றும் சீனி	விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2262/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.03	சோளம்	சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இற்கு ஆறுமாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
		சிறிலங்கா திரிபோஷா லிமிடெட்டின் மூலமான 'திரிபோஷா' உற்பத்திக்கான சோள இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறுமாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	மக்கா சோளம் (ஏனையவை)	கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2269/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	மக்கிறல், உழுந்து, தட்டைப்பயறு, குரக்கன் மற்றும் தினை	சிறப்புப் பண்டத் தீர்வையின் விதித்தல் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2269/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.09	யோகட், வெண்ணெய்க் கட்டி, பாற்பரவற்பொருட்கள், துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), ஆரஞ்சுகள் (உடன்), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் அப்பிள்கள்	சிறப்புப் பண்டத் தீர்வை ஆறுமாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2270/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.03.28	பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை)	பேரீச்சம்பழ இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.200 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஐந்து மாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2273/01ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.04.13	மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை, உறைந்தவை), மாலைதீவு மீன், பச்சைப் பயறு, சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), மங்குஸ்தான் மற்றும் கிவிப்பழம்	2022 ஏப்பிறல் 14 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2275/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2022.05.18	சிவப்பு வெங்காயங்கள், உள்ளி, பீஸ் (முழு மற்றும் உடைத்தவை), சிக்பீஸ் (முழு மற்றும் உடைத்தவை), தோடம்பழங்கள் (உடன் மற்றும் உலர்த்தியவை), எலுமிச்சம்பழங்கள் (உடன் மற்றும் உலர்த்தியவை), குயின்ஸஸ், மிளகாய் (உலர்த்தியவை, நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை), மிளகாய் (நொருக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), சீரகம் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை), சீரகம் (நொருக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), வெந்தயம், நிலக்கடலை (கோதுடன்), மாஜரின், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் முகக் கவசங்கள்	சிறப்புப் பண்டத் தீர்வையை விதித்தல் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2280/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.05.31	யோகட், வெண்ணெய்க் கட்டி, பாற்பரவற்பொருட்கள், அனைத்து வகையான துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), ஆரஞ்சுகள் (உடன்), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் அப்பிள்கள்	2022 யூன் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்பு பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது (2282/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.06.15	உருளைக்கிழங்குகள், பெரிய வெங்காயம், கிளமன்ரைன்ஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை), போமலஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை) உட்பட திராட்சைப்பழம், பியர்ஸ், அப்பிறிகோட், புளிப்பான செறிஸ் *(புறுனஸ் செறஸஸ்)* செறிஸ் (ஏனையவை), பீச்சஸ் நெக்ரறன்ஸ் உட்பட, உலர் திராட்சை மற்றும் சுலோஸ், கொத்தமல்லி (நொறுக்கப்படாதவை மற்றும் அரைக்கப்படாதவை மற்றும் நொறுக்கப்பட்டவை மற்றும் அரைக்கப்பட்டவை), மஞ்சள் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை மற்றும் ஏனையவை), அரிசி, உழுத்தம்மா, மரக்கறிக் எண்ணெய் மற்றும் சீனி	விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வையை விதித்தல் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2284/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.08.09	நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்கும் அல்லது அத்தியாவசிய பொதுப் பணிகளை தொடர்ச்சியாக வசதிப்படுத்துவதற்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசு (அரசாங்கங்கள்) அத்துடன் வியாபார நிறுவனங்கள், தன்னார்வமிக்க அமைப்புக்கள், மற்றும் ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் மூலமான நலன் விரும்பிகள், அரச ஒப்புதல்பெற்ற நிறுவனங்கள் மற்றும் உதவியாக/நன்கொடையாக ஏதேனும் அரச நிறுவனத்துடன் நேரடியாக இணைந்து நிவாரண நடவடிக்கைகளில் செயற்படும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக அமைப்புக்களிடமிருந்தும் கிடைக்கப்பெற வேண்டிய அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகள்.	நன்கொடை பெறுநர் அரச நிறுவனங்கள் அல்லது நன்கொடை மற்றும் நிவாரண வழிமுறைகளைக் கொண்ட அரசாங்கம் அனுமதி வழங்கிய நிறுவனம் அல்லது அரசாங்க நிறுவனத்துடன் நேரடியாக கூட்டிணைக்கப்படுகின்ற நிறுவனம் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரின் (முதன்மை கணக்கீட்டு அலுவலர்) விதந்துரைப்பை அடிப்படையாகக்கொண்டு, ஏற்புடைய சிறப்புப் பண்ட பண்டத்தீர்வையானது விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில், 2022 ஓகத்து 10 இலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2292/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2022.08.10	நெத்தலி, கருவாடு, மதே விதைகள், குரக்கன் மா, கடுகு மற்றும் உப்பு	2022 ஓகத்து 12 இலிருந்து ஆரம்பமாகும் வகையில் சிறப்புப் பண்டத் தீர்வையை விதித்தல் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2292/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	உப்பு	மருந்தாக்கப் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது வர்த்தக நோக்கத்திற்காக அல்லாத மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புத் தொழில்முயற்சிகளின் மூலமான உப்பின் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.40 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஒரு வருட காலத்திற்கு 2022 ஓகத்து 12 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது (2292/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.09.03	சோளம் (ஏனையவை) மற்றும் மக்காச் சோளம் (ஏனையவை)	சிறப்புப் பண்டத் தீர்வையை விதித்தல் 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது (2295/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	சோளம்	சிறிலங்கா திரிபோஷா லிமிடெட்டின் மூலமான 'திரிபோஷா' உற்பத்திக்கான சோள இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை ஆறுமாத காலப்பகுதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (2295/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.09.22	பெரிய வெங்காயம்	2022 செத்தெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்பு பண்டத்தீர்வை மூன்று மாத காலத்திற்கு கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது (2298/51ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	உப்பு	மருந்தாக்கப் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது வர்த்தக நோக்கத்திற்காக அல்லாத மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் மருந்தாக்கப் பொருட்களின் தயாரிப்புத் தொழில்முயற்சிகளின் மூலமான உப்பின் இறக்குமதி மீதுகி.கிறாமொன்றிற்கு ரூ.40 கொண்ட ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை 2022 செத்தெம்பர் 23இலிருந்து ஆரம்பமாகின்ற 2023 ஓகத்து 11 வரை தள்ளுபடி செய்யப்பட்டது (2298/51ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2022.10.13	மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைந்தவை)	தீர்வைத்தொகையில் எது அதிகமானதோ அதாவது கி.கிறாம் ஒன்றிற்கு 10 சதவீதம் அல்லது ரூ.200 இலிருந்து கி.கிறாம் ஒன்றிற்கு 10 சதவீதம் ரூ.400 இற்கு சிறப்புப் பண்ட தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2301/40ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல்)
	மாலைதீவு மீன், பச்சைப் பயறு, சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), மங்குஸ்தான் மற்றும் கிவிப்பழம்	2022 ஒத்தோபர் 14இலிருந்து ஆரம்பமாகின்ற ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை நீடிக்கப்பட்டது (2301/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	மெக்கரல், ஜக் மற்றும் கோஸ் மெக்கரல்	மீன்பிடி பொருட்கள் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை உற்பத்திசெய்பவர்களால் மேற்கோள்ளப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன்களின் தயாரிப்புக்காக இணங்குவிப்புக் குறியீட்டு அறிமுகம் 03.03இன் வகைப்படுத்தப்பட்டு இணங்குவிப்புக் குறியீடு 0303.54 எனும் வகைப்படுத்தலைக்கொண்ட மெக்கரேலினதும் இணங்குவிப்புக் குறியீடு 0303.55 எனும் வகைப்படுத்தலைக் கொண்ட ஜக் மற்றும் கோஸ் மெக்கரலினதும் இறக்குமதி மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.400 கொண்ட 10 சதவீத ஏற்புடைய சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.6 சேகரிப்பிற்குப் பின்னர் மீதித்தொகை தள்ளுபடி செய்யப்பட்டது (2301/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022.11.30	யோகட், வெண்ணெய்க் கட்டி, பாற்பரவற்பொருட்கள், அனைத்து வகையான துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), ஆரஞ்சுகள் (உடன்), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் அப்பிள்கள்	2022 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்பு பண்டத்தீர்வையின் விதித்தல் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2308/17ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	பெரிய வெங்காயம்	2022 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்பு பண்டத்தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.50 இலிருந்து கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.10 இற்குக் குறைக்கப்பட்டது (2308/17ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
	அயலை, கெண்டை சூடை, மத்தி மீன் மற்றும் சாளை அல்லது நெத்தலி, சூரை, சிறுசூரை, பளையா, மக்கேறேல், கீரி மீன், விலாங்கு, வேறு தயாரிக்கப்பட்ட அல்லது பதப்படுத்தப்பட்ட மீன்	2022 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்பு பண்டத்தீர்வை ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.100 இலிருந்து கி.கிறாம் ஒன்றிற்கு ரூ.200 இற்கு அதிகரிக்கப்பட்டது (2308/17ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2023.01.04	யோகட், தகரத்திலடைக்கப்பட்ட மீன் (சூரை, சிறுசூரை மற்றும் பளையா) மற்றும் சீனி	2023 சனவரி 05 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்புப் பண்டத் தீர்வையின் விதித்தல் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2313/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

திகதி	விடயம்	திருத்தம்
2023.01.25	சோளம் (ஏனையவை)	2023 சனவரி 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.10/- ஒரு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2316/28ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2023.02.20	ஏனைய உடனடி முட்டைகள்: காலஸ் டொமஸ்டிகஸ் இனத்தின் கோழிகள்	2023 பெப்புருவரி 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சிறப்புப் பண்டத் தீர்வை ரூ.50/- மூன்று மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2320/04ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை

2022 சனவரி 06 - சுகாதார விடயத்துடன் குறித்துரைக்கப்பட்ட அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது, நிதி விடயத்துடன் குறித்துரைக்கப்பட்ட அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் நோய்த்தொற்றை அல்லது பொது சுகாதார அவசரகால நிலைமைகளை கையாள்வதற்கு அரசாங்க வைத்தியசாலையொன்றுக்கு அல்லது சுகாதாரப் பணிகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சுக்கு நன்கொடையளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள், சாதனங்கள், துணைப்பொருட்கள் மற்றும் அதன் பாகங்கள், வைத்திய தளபாடம், மருந்துப்பொருட்கள், அல்லது இரசாயனங்கள் என்பன துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன (2261/58ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 சனவரி 11 - புதிதாக உருவாக்கப்பட்ட இணங்குவிப்புக் குறியீடுகளின் துணைப் பிரிவிகளின் கீழ் பல்வேறு பொருட்களுக்கான விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை வீதங்கள் வழங்கப்பட்டன (2262/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஓகத்து 22 - நன்கொடை பெறுநர் அரச நிறுவனங்கள் அல்லது நன்கொடை மற்றும் நிவாரண வழிமுறைகளைக் கொண்ட அரசாங்கம் அனுமதி வழங்கிய நிறுவனம் அல்லது அரசாங்க நிறுவனத்துடன் நேரடியாக கூட்டிணைக்கப்படுகின்ற நிறுவனம் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரின் (முதன்மை கணக்கீட்டு அலுவலர்) விதந்துரைப்பை அடிப்படையாகக்கொண்டு, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில், அத்தியாவசிய நிவாரண வழிமுறைகளை வழங்குவதற்கும் அரச பணிகளைத் தொடர்ச்சியாக வசதிப்படுத்துவதற்கும் ஏதேனும் வெளிநாடுகளிலிருந்தும் அத்துடன் வியாபார நிறுவனங்கள், தன்னார்வமிக்க அமைப்புக்கள், மற்றும் ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் மூலமான நலன் விரும்பிகள், அரச ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள், மற்றும் உதவியாக/நன்கொடையாக ஏதேனும் அரச நிறுவனத்துடன் நேரடியாக கூட்டிணைந்து நிவாரண நடவடிக்கைகளில் செயற்படும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஏதேனும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து (அரசாங்கங்கள்) மற்றும் அமைப்புக்களிடமிருந்தும் கிடைக்கப்பெற வேண்டிய அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிகள் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன (2294/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2022 ஒத்தோபர் 05 - சுங்கத்தின் பொதுப் பணிப்பாளர் ஒப்புதலிற்குட்பட்டு, கைத்தொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்பின் மீது சுகாதாரத் தூவாய்களின் உள்நாட்டு தயாரிப்பாளர்கள் மூலம் இணங்குவிப்புக் குறியீடுகள் 3920.10.20, 3920.10.90, 3926.90.99, 4811.59.10 மற்றும் 5603.11.00 என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து 2022 ஒத்தோபர் 06 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விலக்களிக்கப்பட்டன (2300/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

ஏனைய வரிகளும் மற்றும் தீர்வைகளும்

2022 மார்ச்சு 27	-	கொழும்பு பன்னாட்டு விமானநிலையம் இரத்மலானையிலிருந்து வான்படகுகள் மூலம் இலங்கையைவிட்டு வெளியேறுகின்ற ஆட்களுக்களில் ஒவ்வொரு ஆளுக்கும் கப்பலேற்றும் தீர்வை ஐ.அ.டொலர் 30 இற்கு 50 சதவீதத்தால் 2022 மார்ச்சு 27 இலிருந்து 2023 மார்ச்சு 26 வரையான காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2272/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022 ஏப்பிறல் 08	-	தனிப்பட்டவர்கள், பங்குடமைகள் மற்றும் கம்பனிகளின் வரிவருமானம் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி கணிப்பிடப்பட்டு, 2020 ஏப்பிறல் 01இலிருந்து தொடங்குகின்ற விதத்தில், அவர்களின் வரிவருமானம் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு ரூ. 2 பில்லியனை விஞ்சுகின்றது தொடர்பில் ஒரு தடவை பிற்போடப்பட்ட 25 சதவீத மிகைக் கட்டண வரியை விதிப்பதற்கு 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மிகைக் கட்டண வரிச் சட்டம் இயற்றப்பட்டது.
2022 ஏப்பிறல் 29	-	மத்தளை மகிந்த ராஜபக்ஷ பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புதிய பன்னாட்டு எயர்லைன்ஸ் மூலம் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளின் ஆரம்ப திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு விதிக்கப்பட்ட கப்பலேற்றும் தீர்வை நீடிக்கப்பட்டது (2277/63ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).
2022 யூன் 04	-	தொலைத்தொடர்பூட்டல் தீர்வை 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
2022 செத்தெம்பர் 20	-	ஆண்டிற்கு ரூ.120 மில்லியனை விஞ்சுகின்ற புரள்வைக் கொண்ட இறக்குமதியாளர்கள், தயாரிப்பாளர்கள், பணி வழங்குநர்கள், மொத்தவியாபரிகள் மற்றும் சில்லறைவியாபாரிகள் ஆகியோருக்கான புரள்வின் மீது 2.5 சதவீதத்தில் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வையை விதிப்பதற்கான 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தீர்வைச் சட்டம் 2022 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இயற்றப்பட்டது.
2022 நவெம்பர் 02	-	யாழ்ப்பாண பன்னாட்டு விமான நிலையத்தில் ஒவ்வொரு வானூர்தியும் தரையிறக்கம் செய்வதற்கும் தரித்து நிற்பதற்குமான விமானத் தளங்களை பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் விதிக்கப்பட்டன (2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்).
2022 திசெம்பர் 09	-	ஒரு இன்ரநஷனல் ஏயார்லைன்ஸ் மூலம் தொழிற்பாடுகள் ஆரம்பமாகும் திகதியிலிருந்து இரு ஆண்டுகளுக்கு மத்தளை மஹிந்த ராஜபக்ஷ பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து இலங்கையை விட்டு புறப்படுகின்ற ஆட்களுக்கு கப்பலேற்றலை தீர்வையை விதித்தலாகாது (2309/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்).
2022 திசெம்பர் 31	-	கொழும்பு நகரத்தில் நிறுத்தப்படுகின்ற ஊர்திகளுக்கு கொழும்பு மாநகர சபையால் விதிக்கப்படும் தரிப்பிட கட்டணம் 2022 திசெம்பர் 31இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேல் நோக்கித் திருத்தப்பட்டது (2312/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்).
